RES... 94. R. H. ROAD. MADRAS-4

32209

வான்மீகி முனிவர்

அருளிச்செய்த

[illegible]

ஆனந்தராமாயணம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] பதிப்பு.

All Rights Reserved

உ

ஆநந்தராமாயணம்.

முகவுரை.

"வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா, ஓதலுறும்" வித்தைகளுள் இராமாயணம் பாரதமென்னு மிதிகாச மிரண்டும் ஸ்மிருதியுள் (தர்மசாஸ்திரத்துள்) அடங்குவனவாம். தருமார்த்த காம மோட்சமென்னும் புருஷார்த்த நான்கினையும் போதிப்பதாயும், முன்னடந்த சரித்திரத்தைக் கூறுவதாயு மிருப்பது இதிகாசமாம். இவ்விரண்டிதிகாசமும் வேதார்த்தங்களை மிகு தெளிவாக விளக்கிக் கூறுகின்றமைபற்றி, வைதிகர் யாவராலும் பொன்னே போற் போற்றப்பட்டு வருகின்றன. இராமாயணத்தி னாசிரியர் வான்மீகி முனிவரென்பதும், பாரதத்தி னாசிரியர் வியாச பகவானென்பதும் மிகு பிரசித்தமாம். நமது தேசத்தில் இராமாயணம் பாரதம் என்பவற்றின் கதைகளை யறியாதார் மிகச்சிலரேயாவர். இராமாயணத்தையும் பாரதத்தையும் நம் தேசத்தார் மிகு விருப்பமாகப் படித்தோ கேட்டோ வருதலின், அவை சம்ஸ்கிருதத்தினின்றும் தமிழ் முதலிய பாஷைகளில் செய்யுள் வடிவமாகவும் வசன வடிவமாகவும் பண்டிதர் பலரால் பலதிறத்தனவாக மொழிபெயர்க்கப்பட்டுப் புஸ்தகவடிவமாக நம் தேசமுழுவதும் நிலவப்பெற்று வருகின்றன.

இராமாயணத்தையும் பாரதத்தையும் முறையே வான்மீகி முனிவரும் வியாச பகவானு மருளிச் செய்தனரென்பதனோடு நில்லாது வேறு முனிவரும் அருளிச்செய்தன ரென்பது அத்யாத்மராமாயணம், ஜைமினி பாரதம் என்றற்றொடக்கத்து நூல்க ளிருப்பதால் விளங்குகின்றது. இராமாயண பேதத்துள் ஆநந்த ராமாயணமென்பது மொன்றாம். இது வான்மீகி முனிவர் பிரம

"இறுவ ரம்பி ஸிராமவென் ரேறரும்பர், நிறுவ ரென்பது நிச்சயம்" என்று கம்பராமாயணம் ராம நாமத்தின் மகிமையை விளக்குவதைக் கவனிப்பவர் இராமாயணத்தைப் புறக்கணித்துப் பேசுவதிலராவர். எண்ணில்லாத மகிமையுடைய ராமசரித்திரத்தைக்கூறும் நூல் யாதாயினும் அது படிக்கத்தக்கதேயாம்; கேட்கத்தக்கதேயாம்; சிந்திக்கத்தக்கதேயாம். இந்த ஆநந்த ராமாயணம் யாத்திரையின் பயன், இராமாயணத்தின் தத்வார்த்தம், உலகத்தோடொட்ட வொழுகல், அரசர்நீதி முதலியவற்றை விரித்து, தத்துவஞானத்தை யடையும்வகையைத் தக்கவாறு விளக்கி, தீயோர் கேடடைவது தவறாதென்பதை வற்புறுத்திக் கூறுதலின், இஃதொவ்வொருவரும் இன்றியமையாது படித்துணர்தற்குரியதாம். இதனைப் படித்துணர்பவர் வேதாந்த தத்துவங்களை யெளிதிலறிந்துய்தற்குரியவ ராவரென்பது சிதையாத சித்தாந்தமாம்.

இந்த ஆநந்த ராமாயணத்திலுள்ள விஷயத்தி னருமை பெருமைகள் இப்புஸ்தகத்தி லமைத்துள்ள அட்டவணையைப் படித்தல் மாத்திரத்து விளங்குவனவாம்.

இராமபிரான் அரசாண்டகாலத்தில் வாசனையில்லாதமலரும வாசனை யடைந்தது என்று இந்நூல் ஸாரகாண்டத்தில் கூறுவது ஆநந்தராமாயணத்தை பன்போடு படிப்பவர்க்கு எல்லா நன்மையு முண்டாவனவாமென்பதை விளக்குவதாக விருத்தலின், இதனை நம்மனோர் அன்புடன் படித்து நன்மை யுறுவாராக.

கோமளேசுவரன்பேட்டை,
சென்னை,
1-11-17.

கோ-வடிவேலு செட்டியார்,
"லோகோபகாரி"
பத்திராதிபர்-பத்திராசிரியர்.

ஆனந்தராமாயண அட்டவணை.

ஸார காண்டம்.

ஸருக்கம்		பக்கம்
1	கௌஸல்யா ஸ்வயம்வரமும் கௌஸல்யை முதலியவர்களுடைய விவாகமும்.	
2	ராமர் பரதர் லக்ஷ்மணர் சத்ருக்னர்களின் அவதாரம்.	11
3	மிதிலாநகரில் நடந்த ஸீதையின் ஸ்வயம்வர வரலாறும் ராமர் ஸீதையை மணம் செய்து கொண்டதும்.	14
4	ஸீதாராமர்களின் விவாஹத்தால் கோபங்கொண்டு யுத்தத்திற்கு வந்த பரசுராமரை ராமர் ஜயித்ததும் முத்கலமுனிவர் கூறிய விருத்தாந்தம் முதலியனவும்.	50
5	தசரதனையும் கைகேயியையும் பூர்வ ஜன்ம சமாசாரம்.	65
6	ராமர் வனத்திற்குப் பிரயாணமான கதை.	76
7	விராதன், ஜடாயு, மாரீசன் இவர்களுடைய வதமும் வரலாறும் சொல்லப்படுகின்றன.	87
8	ராமர் சுக்ரீவனோடு ஸ்நேகம் செய்து கொண்டதும் வாலியை வதம் செய்ததும்.	102
9	அனுமான் ஸீதையைக் கண்டதும் இலங்காதகனமும்.	114
10	ஸேதுமாஹாத்மியம் காசி விச்வேச்வரர் வருகை.	144
11	ராகவன் செய்த ராவண கும்பகர்ணாதிகளின் வதம்.	166
12	ராமச்சந்திரன் ஸீதையுடன் அயோத்திக்கு வந்து அரசாண்டது.	194

13 அகஸ்திய ராம சம்வாதம் ராவணன் கும்பகர்ணன் விபீஷணன் முதலியவர்களின் உற்பத்தி, வாலி சுக்ரீவன் அனுமான் இவர்களின் உற்பத்தி, இவைகள் கூறப்படுகின்றன.

யாத்திரா காண்டம்.

1 வான்மீகி முனிவரிடம் சுலோகம் உண்டானதைக் கூறுகிறது. 241

2 ராமாயண விபாகம் செய்தது. 247

3 ஸீதை யாத்திரை செய்ய ராமரைப் பிரார்த்தித்தது. 254

4 ராகவன் கங்கையை உத்தேசித்து யாத்திரை செய்தது. 261

5 முனிவரின் வசனப்படி யாத்திரை செய்ய நிச்சயித்தது. 270

6 கிழக்குத் தேசங்களிலுள்ள தீர்த்த யாத்திரையை விஸ்தாரமாகக் கூறியது. 280

7 தென்றிசையிலுள்ள தீர்த்த யாத்திரை விவரம். 293

8 மேற்றிசையில் தீர்த்த யாத்திரை செய்தது. 300

9 வடதிசையில் யாத்திரை செய்த வரலாறு. 305

யாக காண்டம்.

1 வசிஷ்ட முனிவர் யாக சாமான்களைக் கூறுவது. 311

2 ராமச்சந்திரன் அசுவமேதயாகம் செய்ய ஆரம்பம் செய்தது. 316

3 அசுவமேதக் குதிரை பூமியை வலம் வந்தது. 322

4 அகஸ்தியருக்கும் ராமருக்கும் சம்வாதம். 325

5 ராம நாமங்கள் நூற்றெட்டைக் கூறியது. 331

6 அசுவமேதத்தில் எல்லோருடைய ஆன்ஹிகத்தைக் கூறியது. 340

7 துவஜாரோஹணம். 345

8 அவபிருத ஸ்நானம். 354

9 அசுவமேத யாகத்தின் முடிவு. 362

விலாஸ காண்டம்.

1 ராம ஸ்தோத்திரம் 371

2 ரதசாலையையும் ஸீதையையும் வர்ணித்தல். 386

3 ரகூத்தமன் தேகராபாபரைப் கூறியது. 392

4 திரிசரியையும் ஸீதையின் ஆபரண வரலாறும். 400

5 ராமபிரானும் ஸீதாபிராட்டியும் ஜலயந்திரத்தில் கிரீடை செய்ததும் அன்னதானம் செய்த வரலாறும். 405

6 உப்பரிக்கையிலிருக்கும் பிராமண பத்தினிக்கு அலங்காரம் செய்த வரலாறு. 410

7 மூர்த்திகளைத் தானம் செய்ததும் தேவ ஸ்திரீகளுக்கு வரம் கொடுத்ததும். 414

8 குணவதிக்கும் [illegible]ங்களுக்கும் வரம் கொடுத்தது. 418

9 குருக்ஷேத்திர யாத்திரையில் ஜானகிக்கு ஜயம் கிடைத்தது. 425

ஜாம காண்டம்.

1 கர்ப்பிணியாகிய ஸீதை தோட்டத்தில் அன்னமுடன் கிரீடை செய்தது. 431

2 அநேக விளையாட்டுகளும் ஸீமந்தோந்நயன மஹோத்ஸவமும். 435

3 வண்ணான் சொல்லைக்கேட்டு ஸீதையைத் தியாகம் செய்தது. 440

4 குசலவர்களின் உற்பத்தி. 445

5 ராமரக்ஷை. 454

6 தாமரைப் பூவைக் கொண்டு வரும் பொழுது லவன் ஜயம் பெற்றது. 465

7 இராமருக்கும் அவர் புத்திரர்களாகிய குசலவர்களுக்கும் யுத்தம் நடந்த வரலாறு. 471

ஸீதை முதலியவர்களுக்கு மண்டபத்தில் கிடைத்த பெருமை. 482

9 பாலர்களுக்கு உபநயனம் முதலிய உற்சவங்கள். 490

விவாஹ காண்டம்.

1 சம்பிகை சாந்தி இவர்களின் சுயம்வரத்திற்கு ராமர் செல்லுதல். 501

2 சம்பிகையின் சுயம்வரம். 506

3 சாந்தியின் சுயம்வரம். 511

4 குசலவர்களின் விவாஹம். 517

5 கந்தருவ கன்னிகைகளுக்கும் நாககன்னிகைகளுக்கும் ராமபோதனம் செய்தது. 521

6 கந்தர்வர்கள் நாகர்கள் இவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களுடைய பெண்களின் விவாஹ நிச்சயம் செய்தல். 526

7 பளிரன்றி விவாஹங்களைக் கூறியது. 530

8 சத்ருக்னரின் குமாரரான சுபாகுவின் பராக்கிரமத்தை வர்ணித்தல். 534

9 நீபகேது மதனகந்தியை விவாஹம் செய்து கொண்ட வரலாறு. 541

ராஜ்ய காண்டம்.

1	ராமஸஹஸ்ரநாமம்.	544
2	தேவ விருக்ஷங்களிரண்டையும் பூமியில் வரவழைத்தது.	575
3	ராமோபாஸகனுக்கும் கிருஷ்ணோபாஸகனுக்கும் சம்வாதம்.	582
4	நூறு ஸ்திரீகளுக்கும் நித்திரைக்கும் வரமளித்தல்.	592
5	ஸீதையின் பிரிவால் உண்டாகும் உபத்திரவம்.	601
6	மூலகாசுரவதமும், ராஜீயக்கணக்கும் கூறியிருக்கின்றது	606
7	பரதகண்டத்தை ராமர் ஜயித்தது.	614
8	ராமச்சந்திரன் ஜம்பூத்வீபத்தை ஜயித்தது.	618
9	ராகவன் ஆறு தீவுகளையும் ஜயித்தது.	623
10	சன்னியாசி ருத்திரர்கள் கழுகுகள் இவர்களுக்குச் செய்த சிக்ஷை.	629
11	ராமர் நான்கு ஸ்திரீகளுக்கு வரங்கொடுத்தது	638
12	ராமர் பதினாறுயிரம் ஸ்திரீகளுக்கு வரங்கொடுத்ததது.	643
13	ராமர் ஹாஸ்யம் கூடாதென்று ஆக்ஞைசெய்தது.	652
14	வான்மீகிமுனிவர் தன் ஜன்மத்தின் வரலாற்றைக் கூறியது.	660
15	விஸ்தாரமாக ராம ராஜ்யத்தைப்பற்றி வர்ணித்தல்	569
16	ஸ்ரீராகவன் ராஜ நீதியை வர்ணித்தல்.	675
17	குசன்கன்னிகையின் சுயம்வரம்.	679
18	அந்தணர்களுக்கு ராமநாதபுரத்தைத் தானமாகக் கொடுத்தது.	689
19	ராமச்சந்திரன் தினசரியையின் வர்ணனை	696
20	ராஜாக்களுக்கு அவதாரங்களில் இந்த அவதாரம் சிறந்தது என்பதைக் கூறியது.	704
21	ராமர் தாசிக்கு இரண்டு வரம் கொடுத்தல்	612

22 ஸீதை துளசிதளத்தைச்சேர்ந்தது. 717
23 ஆனந்தராமாயணத்தின் பலசுருதி. 723
24 யமனுடைய சிக்ஷை. பூமியில் தருமசிக்ஷை. 727

மனோகர காண்டம்.

1 இலகு ராமாயணம். 733
2 நகரி னுள்ளோருக்கும் தாய்மார்களுக்கும் உபதேசம் செய்தது. 746
3 ராமபூஜை உபாஸனை இவைகளின் விஸ்தாரமிருக்கிறது. 757
4 ராமஸ்தோபத்திரத்தின் விஸ்தாரம் 780
5 ராமலிங்கங்களின் பேதங்கள் 806
6 நவமீ விருதத்தின் விரிவும் அதன் கதையும் 839
7 ராம நாம லக்ஷத்தின் உத்தியாபனம் 864
8 வேதம்முதலிய எல்லாவற்றின் பலனைக்கூறியது 876
9 இரண்டரைமாதம் வரையில் செய்யும் பூஜையின் விதி. 887
10 சைத்திரமாஸத்தின் மகிமை. 902
11 சைத்திரஸ்னானம் செய்பவர்களின நல்லகதியைக் கூறியது. 914
21 ஸ்திரிகளின் கூட்டத்திற்கு ராமன் அத்வைதம் காட்டியது. 940
13 அனுமான் ராமர் இவர்களின் இரண்டு கவசங்களுங் கூறியிருக்கின்றன. 947
14 ஸீதையின் கவசம் முதலியவைகள். 973
15 லக்ஷுமணர் முதலியவர்களின் கவசங்கள். 991
16 அனுமானுடைய பாதகாவிருதம். 1017
17 ஸாரராமாயணம். 1022
18 அனுமான் சரஸேதுவை உடைத்தது. 1034

பூர்ண காண்டம்.

1 வான்மீகி முனிவர் ஸோமவம்சத்தரசர்களின் வரலாற்றைக் கூறியது. 1037

2 ராமச்சந்திரன் அத்திருபுரிக்குப் பிரயாணமானது. 1044

3 சூரியவம்சத்தவர்கள் ஸோமவம்சத்தார்களின் யுத்த சமாசாரம். 1051

4 இருவம்சத்தார்களுக்கும் சிநேகமான வரலாறு. 1056

5 ஸீதாபதி குசன் முதலியவர்களை அவரவர்களிருப்பிடத்துக் கனுப்பியது. 1062

6 கங்கையில் வைகுண்டாரோஹணம் செய்தது. 1067

7 சூரியவம்சத்தரசர்களைப் பற்றிய வர்ணனை. 1075

8 சருக்கங்களின் வரிசையைக் கூறுதல். 1078

9 கிரந்தங்களின் கணக்கு, சிரவணம்செய்யும் பலன். 1084

ஸீதா லக்ஷ்மண பரத சத்துருக்ன ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்திராய பரப்பிரஹ்மணேநம:

ஆனந்தராமாயணம்.

ஸாரகாண்டம்.

விநாயகர் துதி.

ஆனந்த ராமா யணமென்னு மாந்தமிழ்த்
றனந்த மாயோங்கத் தந்திமுகத்—தானந்த
மாதியிலா னென்னகமே யாலயமாக் கொண்டருள்வான்
தீதறவே யென்னாளுந் தேர்ந்து.

ஸ்ரீராமர் துதி.

ஸீதாதேவியைத் தனது வாமபாகத்திலும், அநுமந்தரை ஸந்நிதானத்திலும், லக்ஷ்மணரைப் பின்புறத்திலும், பரத சத்துருக்னர்களைப் பக்கங்களிலும், சுக்கிரீவனை வடமேற்குமூலையிலும், விபீஷணனை வடகிழக்கு மூலையிலும், யுவராஜனாகிய அங்கதனைத் தென்கிழக்கு மூலையிலும், ஜாம்பவனைத் தென்மேற்கு மூலையிலும் அமர்ந்துகொண்டு, மத்தியில் எழுந்தருளியிராநின்ற ஸகல லோகசரண்யனாகிய ஸ்ரீராமபிரானை வணங்குவாம்.

முதற் சருக்கம்.

ஸ்ரீராமபிரானிடத்தில் அதிபக்தியுள்ள பார்வதி தேவியார் கைலயங்கிரியில் எழுந்தருளியிருக்கும் சங்கரரை அன்போடு நமஸ்கரித்து, "ஸ்வாமிதேவ! எனக்கு அநேக புராணங்களைச்சொல்லியிருக்கிறீர்கள்; இப்பொழுது இரகுராமருடைய ஜனனம் அவர் திருவிளையாடல் முதலியவைகளை அடியேனுக்குத் திருவாய்மலர்ந்

தருளும்; ஸ்ரீராமபிரானது திருவிளையாடல் எனக்கு அதிக அன்பைப் பெருக்குவது; ஆனந்தத்தைக் கொடுப்பது—என்று சொல்ல, சர்வலோக சரண்யராகிய பரமசிவன் மனமுவந்து என் பிரிய நாயகியே! நீ கேட்டது மிகவும் நன்று; சர்வ மங்களங்களையுந் தந்தருளும் ஸ்ரீராமசந்திரனது சரித்திரத்தை உனக்கு விவரித்துச் சொல்லுகிறேன் கேள்.

பரமசிவன் கூறுகிறார்.

ஆதி நாராயணரிடத்தினின்று பிர்மதேவரும், பிர்மதேவரிடத்திலிருந்து மரீசியும், மரீசியிடத்தில் கசியபரும், கசியபரிடத்தில் சூரியனும், சூரியனிடத்தில் சிராத்த தேவரென்கிற வைவஸ்வத மனுவும், இவரிடத்தில் பிரதாபசாலியாகிய இட்சுவாகுவும், இட்சுவாகுவினிடத்தில் விருட்சி யென்பவரும், விருட்சியிடத்தில் புரஞ்சயரென்கிற ககுஸ்தரும், ககுஸ்தரிடத்தில் இந்திரவாகரும், இந்திரவாகரிடத்தில் விசுவராந்தியென்பவரும், விசுவராந்தியிடமிருந்து சந்திரரும், சந்திரனிடமிருந்து பிரதாபசாலியான யுவநாஸ்வரும், யுவநாஸ்வரிடமிருந்து சாபஸ்தரும், சாபஸ்தரிடமிருந்து பிரசித்தராகிய பிரகதஸ்வனும், பிரகதஸ்வனிடமிருந்து குவலயாஸ்வரும், குவலயாஸ்வரிடமிருந்து திடாஸ்வரும், திடாஸ்வரிடமிருந்து அரியஸ்வரும், அரியஸ்வரிடமிருந்து நிகும்பரும், நிகும்பரிடமிருந்து மருகணஸ்வரும், மருகணஸ்வரிடமிருந்து கிருதாஸ்வரும், கிருதாஸ்வரிடமிருந்து சேனசித்தும், சேனசித்தினிடமிருந்து யுவநாஸ்வரும், யுவநாஸ்வரிடமிருந்து, மாந்தாதாவும், மாந்தாதாவிடமிருந்து புருகுத்ஸனும், புருகுத்ஸனிடமிருந்து திரஸ்யதஸ்ய என்கிற பெயர் பெற்ற அநரண்ணியரும்; அநரண்ணியரிடமிருந்து அரியஸ்வரும் அரியஸ்வரிடமிருந்து அருணரும் அருணரிடமிருந்து திரிபந்தனரும், திரிபந்தனரிடமிருந்து திரிசங்கு வென்கிற சத்திய விரதரும், சத்தியவிரதரிடமிருந்து பிரதாபம் பெற்ற அரிச்சந்திரரும், அரிச்சந்திரரிடமிருந்து லோகிதரும், லோகிதரிடமிருந்து அரிதரும், அரிதரிடமிருந்து சம்பரும், சம்பரிடமிருந்து சுதேவரும், சுதேவரிடமிருந்து விஜயரும், விஜயரிடமிருந்து பருகரும், பருகரிட

மிருந்து விருகரும், விருகரிடமிருந்து பாருகரும், பாருகரிடமிருந்து சகரரும், சகரரிடமிருந்து அசமஞ்சரும், அசமஞ்சரிடமிருந்து அம்சுமானும், அம்சுமானிடமிருந்து திலீபரும், திலீபரிடமிருந்து பகீரதனும், பகீரதனிடமிருந்து சுருதனும், சுருதனிடமிருந்து நாபரும், நாபரிடமிருந்து சிந்துத் துவீபரும், சிந்துத்துவீபரிடமிருந்து அயுதாயு என்பவரும், அயுதாயுவிட மிருந்து ருதுபர்ணரும், ருதுபர்ணரிடமிருந்து கல்மாஷபாதரென்கிற சுதாசரும், சுதாசரிடமிருந்து அஸ்மகரும், அஸ்மகரிட மிருந்து நாரீகவசரென்கிற மூலகரும், மூலகரிடமிருந்து தசரதரும், தசரதரிடமிருந்து ஐடபிடரும், ஐடபிடரிடமிருந்து விஸ்வசகரும், விஸ்வசகரிடமிருந்து கட்வாங்கரும், கட்வாங்கரிடமிருந்து நீண்ட கைகளையுடைய திலீபரும், திலீபரிடமிருந்து ரகுவும், ரகுவினிடமிருந்து அஜரும், அஜரிடமிருந்து தசரதரும், தசரதரிடமிருந்து பரமேச்வரரான ஸ்ரீராமரும் பிறந்தார்கள்.

அந்த ராமருடைய கணக்கற்ற திருநாமங்களை முனிவர்கள் எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டு மகிழ்கின்றார்கள். இவ்விதம் விஷ்ணு முதல் அறுபத்தொரு தலைமுறைக்கும், பின் அறுபத்தொரு தலைமுறைக்கும் நடுவில் விளங்கும் ஸ்ரீராமருடைய சரித்திரம் முழுவதும் உனக்குச் சுருக்கிச் சொல்லுகின்றேன். சரயு நதியின்கரையில் விளங்காநின்ற அயோத்தியாபுரி பட்டணத்தில் மூவுலகங்களிலும் கீர்த்தி பெற்றவரும், மகாபலசாலியும், இட்சுவாகு வம்ச சிரேஷ்டரும், மகா சம்பத்துள்ளவருமான தசரத மகாராஜன் அரசுசெலுத்திக்கொண்டு ஐம்புத்வீபம் முழுவதும் தமது ஆக்ஞைக்குள்ளாகும்படி ரதகஜ துரகபதாதிகளுடன் நீதியாக ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார்.

அக்காலத்தில் அயோத்திக்கு அருகாமையில் கோசலதேசத்திலிருக்கும் கோசலமென்ற பட்டணத்தில் மகா புண்ணியம் பெற்ற கோசலராஜன், யௌவனமடைந்த கௌஸல்யை என்கிற தனது கன்னிகைக்கு தசரத மகாராஜனை வரனாக வரிப்பதற்குத் தகுந்த முகூர்த்த நாள் நிச்சயஞ்செய்துகொண்டு தூதர்களை தசரத மகாராஜாவிடம் அனுப்பினான். தூதர்கள் அவரிடம்சென்று, சங்கதி தெரிவித்து விவாகத்தை நிச்சயித்துக்கொண்டு திரும்பி

விட்டார்கள். இப்பொழுது தசரதர் மந்திரிமார்களுடனும், தமது பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும், மாகதர், வந்திகள் முதலியவர்கள் துதிசெய்யவும், தாசிகள் பாடவும், இரத்தின தீபங்கள் பிரகாசிக்கவும், சேனைகள் காவல் செய்யவும், சரயுநதியில் இராத்திரியில் ஓடம் ஏறி ஜலக்கிரீடைசெய்து கொண்டிருந்தார். இதே தருணத்தில் லங்கேசுவரனுன இராவணன் இலங்கையில் பிரமதேவரை வரவழைத்து, அவரைப்பார்த்து எனக்கு யாரால் மரணம் சம்பவிக்குமென்பதை உண்மையாகச் சொல்லுமென்று வினவினன். அதைக்கேட்ட பிரமதேவன் தசரத மகாராஜனுக்கும் கௌஸல்லியைக்கும் ஆதிநாராயணர் இராமலக்ஷ்மண பரத சத்ருக்கனர்களாக அவதரிப்பார். அவர்களுள் இராமனால் உனக்கு மரணமென்றும் ஏ இராவணா! இன்றைக்கு ஐந்தாவதுநாளில் கோசலராஜன் வேதியர்களைக்கொண்டு, கௌசல்லியைக்கும் தசரதமகாராஜாவுக்கும் விவாகம் நடத்த நிச்சயித்திருக்கிறனென்றும் கூறி பிரம்மலோகம் சென்றார்.

அதைக்கேட்ட இராவணன் அப்பொழுதே புட்பக விமானமேறி, அநேக இராட்சதர்களுடன் அதிவேகமாக அயோத்தியாபுரி சென்று, அங்கே ஜலக்கிரீடை செய்யும் தசரதரைக் கண்டு அகோரமான யுத்தஞ்செய்து அவரை ஜயித்து அவ்வோடத்தை காலாலுதைத்துத் தள்ளி உடைத்து விட்டான். அக்காலையில் அவ்வோடத்திலிருந்த யாவரும் ஜலத்தில் விழுந்து முழுகி இறந்துபோக, தசரத மகாராஜனும் அவருடைய மந்திரி சுமந்திரனும் உடைந்த ஓடத்தின் ஒரு பலகையைப் பிடித்து அதின் மீதேறிக்கொண்டு, மெதுவாக சரயுநதியின் பிரவாகத்தின் வழியே கங்காநதிக்குப் போய் அவ்விடமிருந்து சமுத்திரஞ்சென்று ஈசுவர கடாட்சத்தால் அதன் மத்தியில் உயிரோடு பிழைத்திருந்தார்கள். இதற்குள் இராவணன் கோசலராஜனிடம் சென்று அவனிடம் போர் செய்து ஜயித்து அவனுடைய குமாரத்தி கௌஸல்யையென்பவளை அபகரித்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சந்தோஷத்துடன்லங்காபட்டணம்போகும்வழியில், அங்கேசமுத்திரத்தில் வசிக்கும் ஒரு திமிங்கிலத்தைக் கண்டு, தேவர்கள் நமக்குச்சத்துருக்களாகையால்மறைந்துவந்து இவ்விதமாவதுஇப்

பெண்ணைக் கொண்டு போய் விடுவார்கள்; ஆகையால் இத்திமிங்கிலத்தினிடத்தில் நாம் கேட்டபோது கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டு, இப்பெண்ணைக் கொடுப்போமென்றெண்ணிப்பெண்ணை ஒரு பேழையிலடக்கஞ்செய்து அதனிடம் கொடுத்துத்தன்பட்டணம் சென்றான். அத்திமிங்கிலமும் அப்படியே தன் வாயில்கௌவிக்கொண்டு சுகமாக சமுத்திரத்தின் மத்தியில் சஞ்சரிக்கும்போது தன்னிடம் போர்செய்ய எதிர்த்துவரும் வேறொரு திமிங்கிலத்தைப் பார்த்து அதனோடு போர்செய்ய எண்ணி அப்பெட்டியை அருகிலிருக்கும் தீவில் வைத்துப் போர்புரிந்து கொண்டிருந்தது. இதன் மத்தியில் ஓடப் பலகையைத் தெப்பமாகக்கொண்டு வரும் தசரதமகாராஜாவும் மந்திரியும் அத்தீவுக்கு வந்து, அப்பெட்டியைப்பார்த்து, அதைத்திறந்து அதனுள் இருப்பவள் கௌஸல்யை என்றுகண்டு ஆச்சரியமுற்று ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து, அப்பெண்ணைக் காந்தர்வவிவாகஞ் செய்து சந்தோஷமடைந்து, மூவருமாக அப்பெட்டியினுட் புகுந்து முன்போலவே மூடிக்கொண்டார்கள். பின், முன் நடந்த வரலாற்றை ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டார்கள். இவர்கள் காந்தர்வ விவாகம் செய்துகொண்ட வேளை, முன் ஏற்படுத்திய முகூர்த்தவேளையாகவே இருந்தது. அத்திமிங்கிலம் போரில் ஜயமடைந்த பின் முன்போல் அப்பெட்டியை வாயிற் கௌவிக்கொண்டது. அப்பொழுது இராவணன் பிரமதேவரை வரவழைத்து, சபையில் வைத்துக்கொண்டு "பிரமதேவரே! நீர்சொன்ன வார்த்தை பொய்யாய் விட்டது. தசரதனைக் கொன்றுவிட்டேன். கௌஸல்யையும் இரகசியமாக மறைத்துவிட்டேன் என்று கூறினான். அதைக் கேட்ட பிரமதேவன் நகைத்து இது புண்ணியதினம் என்று உரக்கத் தெளிவாகச் சொல்லவே, இராவணன் பரபரப்புடன் நீர் என்ன கூறினீர்" என்று கேட்டான். அதற்குப்பிரமதேவர் "தசக்ரீவனே! தசரதருக்கும் கௌஸல்யைக்கும் முந்தியே விவாகம் நடந்தாய் விட்டதென்று கூறினார்.

இப்படிச் சொல்லக்கேட்டதும் இராவணன் பிரமதேவனுடைய வார்த்தையைப் பொய்யாக்க கருதி, உடனே திமிங்கிலத்தினிடமிருந்து அப்பெட்டியைத் தூதர்கள் மூலமாக வரவழைத்து

பிர்மதேவன் முன்னிலையில் வைத்துத்திறந்தான். திறந்ததும் அதனுள் மூன்று பேரிருக்கக் கண்டு திடுமென்று பயந்து கோபங்கொண்டு, அவர்களை வெட்டிவிடுவதற்குக் கையில்கத்தியை எடுத்தான். அதைப்பார்த்த பிர்மதேவன் அவசரமாக "தசானனா! என்ன காரியம் செய்கிறாய்? இப்பொழுது சாகசஞ் செய்யாதே. ஒரு பெண்ணை அடைத்து வைத்தபெட்டியில் இப்பொழுது மூவரிருக்கிறார்கள் இவர்கள் கோடிக்கணக்கான மனிதர்களாக ஏன் ஆகமாட்டார்கள் அவர்களுக்குள் இராமனும் ஏன் உண்டாகமாட்டான். இப்பொழுதே ஏன் அவன் உன்னைக் கொல்லமாட்டான்? உனக்கு இருக்கும் ஆயுளையும் இப்பொழுதே ஏன் அழித்துக்கொள்ளுகின்றனை? வரப்போகிறதை பின்னே பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது வேண்டாம். ஆகையால் இப்பெட்டியைத் தூதர்கள் மூலமாக சாகேதநகரத்துக்கு அனுப்பிவிட்டு நீ சுகமாயிரு. என் வார்த்தை ஒருகாலத்திலும் பொய்யாகாதென்று நிச்சயமாயறிந்துகொள். கருமகதியை அறியமுடியாதாகையால் நடக்கப்போவது கட்டாயமாய் நடந்தேதீரும்" என்று சொன்னார்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட தசானனன், பயந்து அதை உண்மையென்றெண்ணி அப்பெட்டியைத் தூரிதமாக சாகேதநகரத்துக்குக்கொண்டுபோகத்தூதர்களுக்கு உத்தரவுதந்து அனுப்பினான். அவர்கள் அப்பெட்டியை எடுத்துக்கொண்டு சாகேதநகரம்போய், அவ்விடத்தில் அதைஎறிந்துவிட்டு, திரும்பிஇராவணனிடம்வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அயோத்திய நகரத்தில் வசிக்கும் மனிதர்கள், தசரத மகாராஜனைப்பார்த்து, சந்தோஷங்கொண்டார்கள். இதைக்கேட்ட கோஸலராஜனும் சந்தோஷங்கொண்டு, தன் பெண்ணைத்தசரதமகாராஜனுக்குக்கலியாணம்செய்துகொடுத்துத் தன் ராஜ்ஜியத்தையும் அவனுக்கே தந்து பட்டாபிஷேகமுஞ் செய்துமுடித்தான். அதுமுதல் சூரியவம்சத்தாருக்கு கோசலேந்திரரென்கிற பெயர்வந்தது. பிறகு தசரதமகாராஜன் மகதராஜன் குமாரத்தியாகிய சுபத்திரையையும், அதன் பிறகு கேகய ராஜன் புத்திரியாகிய தாமரைமலர்போன்ற கண்களையுடைய கைகேயியையும் விவாகம் செய்துகொண்டு, பின் எழுநூறு பெண்

களைக் களத்திரங்களாகக் கொண்டு, அநேக போகங்களை யனுப வித்தும், அநேக தானங்களைச் செய்தும் சுகமாக அரசுபுரிந்தும், விருத்தாப்பிய தசையடைந்தும், சந்ததியில்லை யென்கிற ஒரு குறைவுட னிருந்தார்.

ஏ பார்வதி! நற்குலத்திலுதித்து அழகு, யௌவனம், பாக்கியம் இவைகள் வாய்க்கப்பெற்ற மனைவிமார்களுடன் சுகித்துக் கொண்டு அயோத்தியாபுரியைத்தசரதர் அரசுபுரிந்து வருங்காலத்தில், தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இராஜ்ஜிய நிமித்தமாக அகோரமான யுத்தம் நடந்தது. அப்போது "உமக்கு ஜயமுண்டாவதில் சந்தேகமில்லை யென்ற" அசரீரிவாக்கொன்று தசரதனிருக்கு மிடத்தில் கேட்டது. இச்சமையத்தில் பவனென்பவன் அரசனிடம்வந்து வணங்கி, தாங்கள் யுத்தத்திற்குப் புறப்படவேண்டுமென்று பிரார்த்திக்க, அரசன் உடனே கைகேயியோடு புறப்பட்டு யுத்தகளத்திற்குச் சென்று, யாவரும் பயப்பட அகோர யுத்தஞ்செய்தார். அப்போது ரதத்தின் அச்சு முறிந்து போயிற்று. அதை யுத்த ஆவேசத்தில் நின்ற தசரதர் கவனிக்கவில்லை. இதைக்கண்டு பக்கத்திலிருந்த கைகேயி தனது கணவன் போரில் ஜயமடையக் கருதி, தான் முன் ஒரு தவமுனிவரிடம் பெற்ற வரமகிமையால் தனது இடதுகையை முறிந்த அச்சுக்குப் பதிலாக உபயோகிக்கவே, தசரதர் அவ்வசுரர்களைவென்று ஜயமடைந்து சந்தோஷங்கொண்டு தமது மனைவியினது சாமர்த்தியத்திற்கு மெச்சி, ஏ கைகேயி! உனது சாமர்த்தியமே சாமர்த்தியம்! வெகு சந்தோஷமென்று சொல்லி உனக்கு இரண்டு வரம் தந்தேன்? கேள் என்று சொல்ல, கைகேயி அவ்வரங்களை எனக்குத் தேவையானபோதுவிவரமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுகொடுக்கவேண்டுகிறேன் என்றாள். தசரதர் அதற்குச் சம்மதித்து அயோத்திக்குத் திரும்பினார் என்று பரமசிவன் கூறினார். இதைக்கேட்ட பார்வதிதேவியார் ஏ நாதா! ஒரு ஸ்திரீயினுடைய கரத்துக்கு இரதத்தை அச்சாகத்தாங்கத்தக்க வல்லமை எவ்விதம் உண்டாயிற்று; காரணம் யாதென வினவினார். பரமசிவன் ஏ பிரிய நாயகி! கைகேயி தனது வாலிபப் பருவத்தில்,

தவஞ்செய்துகொண்டிருந்த ஒரு முனிவர் முகத்தில் கரியை அரைத்துப் பூசினாள். அம்முனிவர் கோபங்கொண்டு, உலகத்தில் பிற்காலத்தில் உனக்கொரு அபவாதமுண்டாகி உன் முகம் யாரும் பார்க்க யோக்கியமில்லாமல் போகக் கடவதெனச் சபித்து அம் முனிவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அதைக்கண்ட கைகேயி பயபக்தியோடு முனிவர் முன்சென்று அவரிடம் ஒரு தடியைக் கொடுக்க, அதனால் முனிவர் சந்தோஷமடைந்து " உன்னுடைய இடது கை வச்சிரம்போல் திடமாய் எக்காரியத்திலும் கெடாம லிருக்கக் கடவதென " ஒரு வரங் கொடுத்தார். அதைக்கொண்டு இப்பொழுது கைகேயி இவ்விதம் தனது நாயகனுக்கு உதவிபுரிந் தாளெனச் சொல்லிப் பரமசிவன் பின்னுங் கூறுகிறார்.

ஒரு நாள் இரவில் தசரத மகாராஜன் வேட்டைக்குச் சென்று அநேக மிருகங்களைக் கொன்று அங்கிருந்த ஒரு ஆற்றில் அணை கோலி விளையாடிக்கொண்டிருந்தார். அவ்விடத்திற் கருகில் காசிக் குப் போகுமார்க்கத்தில், வயது சென்றவர்களும் அந்தகர்களு மான தாய்தந்தையர்களை இரண்டு பெட்டிகளில் வைத்து தோளிற் சுமந்துகொண்டு காசி யாத்திரை போய்க்கொண்டிருந்த சிர வணனென்ற வைசியனொருவன், அங்கே வந்ததும் இருட்டின மையாலும் தாகத்திற்கு ஜலம் வேண்டுமென்று தாய்தந்தையர்கள் கேட்டமையாலும் அப்பெட்டிகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அருகிலிருந்த குளத்திற்குச் சென்று ஜலத்தில் குடத்தைக் கவிழ்த்து ஜலமெடுத்தான். ஜலம் குடத்திற்குள் செல்லும்போது ஒரு யானை ஜலம் குடிப்பதுபோல் சப்திக்கக் கேட்ட தசரதர், காட்டில் சஞ்சரிக்கும் யானையைக்கொல்லக்கூடாதென்கிற நீதி தெரிந்திருந் தும், அச்சப்தம் யானையினுடையதென்று நினைத்து அவ்வைசியன் மீது பாணத்தை யெறிந்து அவனுடைய மார்பைப் பிளக்க, வைசி யன் ஆ! என்று சப்தமிட்டு ஐயோ இவ்விதம் என்னையார் அடித்த தென்று கதறியழுதான்; இதைக் கேட்ட தசரத மகாராஜன் திடுக் கிட்டுப் பயந்து, மனங்கலங்கி, சப்தத்தின் வழியே அவ்வைசிய னிருக்குமிடஞ்சென்று சீக்கிரமாக அவனை ஜலத்திலிருந்து கரை யேற்றி, அவன் மூலமாக அவனுடைய வரலாறு முழுவதையும்

அறிந்து, அவன் மார்பில் தைத்திருக்கும் பாணத்தைப்பிடுங்க, அதையறிந்த அவனுடைய தாய் தந்தையர், அரசனைக்கொண்டே காஷ்டத்தை அடுக்குவித்துப் "புத்திரசோகத்தால் நாங்கள் மடிவதுபோல நீயும் மடிவாய்" என்ற சாபத்தைக் கொடுத்து பிள்ளையுடன் அக்கினிப்பிரவேச மாயினர்.

பிறகு தசரதமகாராஜன் அயோத்தியாபுரி சென்று நடந்த விருத்தாந்தத்தை வசிஷ்ட முனிவருக்குத் தெரிவிக்க, முனிவர் அத்தோஷ சாந்திக்காக சரயு நதியின் கரையில் அசுவமேத யாகஞ் செய்வித்தார்.

ஒரு காலத்தில் தசரத மகாராஜன் தம்மிடம் வந்து வேண்டிய ரோமபாதனென்னும் அரசனுக்குத் தன் குமாரத்தி சாந்தை என்பவளைப் புத்திரியாகக் கொடுத்தார். அவர் அப்பெண்ணை யழைத்துக்கொண்டு தம் தேசஞ்சென்று வளர்த்துவரும் நாளில், மழையில்லாமற்போய் தேசத்தில் க்ஷாமமுண்டாயிற்று. அந்த க்ஷாம நிவர்த்திக்காக, விபண்டக முனிவருக்கும் ஒருமானுக்கும் பிறந்த ரிசியசிருங்க முனிவரை யழைத்துவரும்படி தேவ மாதர்கள் சிலரை யனுப்பினான். அவர்கள் விபண்டக முனிவருடைய ஆசிரமஞ்சென்று ரிசியசிருங்க முனிவரைக்கண்டு, நாட்டியம் கீதம் வாத்தியம் ஆலிங்கனம் பூஜை முதலியவைகளைச்செய்து அவரை மயக்கித், தங்களோடுகூடப்பட்டணத்துக்குள் அழைத்து வந்தார்கள். வரும்பொழுதே அந்த முனிபுங்கவருடைய மகிமையால் மழை பொழிந்தது. பின் தேசமும் செழிப்படைந்தது. அரசனுக்குப் புத்திர பாக்கியமுண்டாயிற்று. இந்த மகிமைகளைக் கண்டு அரசன் வியப்படைந்து முனிபுங்கவரின் தபோமகிமைக் குகந்து, தனது வளர்ப்புப் பெண்ணாகிய சாந்தையை விவாகம் செய்து கொடுத்தான்.

நெடுநாளாய்ப் புத்திரபாக்கிய மில்லாத தசரத மகாராஜனுக்கு இச்சம்பவம் ஞாபகம் வரவே, அந்த ரிசியசிருங்க முனிவரைத் தமது பட்டணத்துக்கு வரவழைத்து, அவரைக்கண்டு இந்திராதி தேவர்கள் திருப்தியடைய ஒரு யாகஞ் செய்தார்.

அந்த யாகாக்நி குண்டத்தினின்றும் அக்நி பகவான், பாயசக் குடத்துடன் ஆவிர்ப்பவித்து, அரசனுக்கு முன்பாக வந்து அதை அரசனிடங்கொடுத்து அந்தர்த்தான மாயினார். அதைத் தசரதர் மூன்று பத்நிமார்களுக்கும் பாகித்தார். அப்பொழுது கைகேயி தன் மனத்தில் வேறெதையோ நினைத்துக் கொண்டு, அதில் ஒரு பாகத்தை யெடுத்து, அருகே யிருந்த அஞ்சனி என்கிற மலையின்மீதெறிந்தாள்.

அந்த மலையின் மீது, ஒரு காலத்தில் பிரமதேவனுடைய சபையில் நடனஞ்செய்து அவராலே கழுகாகும்படி சபிக்கப்பட்ட, சுவர்ச்சலை என்னும் ஒரு பெண் கழுகு ரூபத்தோடிருந்தாள். அப்பெண்ணுடைய சாபநிவர்த்தி, கைகேயியினுடைய கைப்பாயசத்தினால் என்று பிரமதேவரால் குறிக்கப்பட்டிருந்தமையால், பாயசம் தன்மேற்பட்டதும் அப்பெண் சாப விமோசனம்பெற்று ஸ்வர்க்கலோகம் போய்ச்சேர்ந்தாள்.

இதன் பிறகு கௌஸலை, சுமித்திரை இவ்விருவரும் தங்கள் பங்கில் கைகேயிக்கும் கொஞ்சம் கொடுத்து, மூவருமாக அப்பாயஸத்தைக் குடித்து கர்ப்பம் அடைந்தார்கள். அப்பொழுது அவர்களுக்குள் தோன்றிய கர்ப்பக்குறியினால் பிறக்கும் பிள்ளைகள் உத்தமமான குணங்களோடு விளங்குவார்களென ஜனங்கள் அறியலானார்கள்.

1-வது சருக்கம் முற்றிற்று.

2-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

அப்பொழுது இராவணனால் தொந்தரவடையும் தன்னுடைய ஜனங்களுக்காக பூமிதேவியானவள், பிர்மலோகஞ் சென்று பிர்மதேவனிடம் பிரஜைகளுடைய வருத்தத்தைத் தெரிவித்தாள். அவர் விஷ்ணுவினிடம் போகவேண்டுமென்று கூற, பூமிதேவி பிர்மதேவரோடு விஷ்ணுவினிடஞ் சென்று தெரிவிக்க விஷ்ணு, "பயப்படவேண்டாம், நான் பூலோகத்தில் அவதாரம் செய்கிறேன். தேவர்கள் வானரங்களாகப் பிறக்கட்டும். துந்துபி என்கிற அப்ஸர ஸ்திரியானவள், பூமிதேவியினுடைய கருத்து நிறைவேறுவதற்காக, இராமருடைய பட்டாபிஷேகத்தைத் தடுக்கும் மந்தரையாகப் பிறக்கட்டும். அவளே துவாபர யுகத்தின் கடைசியில் கம்ஸனுடைய வீட்டில் கூனியாகப் பிறப்பாள்" என்று கூறி பிர்மதேவரையும் பூமிதேவியையும் அனுப்பினார்.

பிறகு மகாவிஷ்ணுவானவர் தாம் பிர்மதேவனுக்குக் கொடுத்த வாக்குப்படியே சித்திரை மாதத்தில், நவமிதிதியில், சூரியன் உச்சமான காலத்தில், சதுர்புஜத்துடன் பீதாம்பரதாரியாய், நீலமேக வர்ணராய், மிகுந்த அழகோடு கௌஸல்யா தேவியின் பிரஸவ அறையில் அவள் முன்பாக ஆவிர்ப்பவித்தார். கௌஸல்யா தேவியும் மகா விஷ்ணுவென்றறிந்து, பயபக்தி விசுவாசத்துடன் வணங்கி, "குழந்தை ரூபத்தைத் தரிக்கவேண்டும்" என்று அவரை வேண்ட, அப்பொழுதே பகவான் சுவர்ணமான காந்தியால் பொன் வர்ணமேனியும் தாமரை போன்ற கண்களும், சந்திரன் போன்ற முகவிலாசமும், சூரியன் போன்ற காந்தியுமுடைய குழந்தை ரூபங்கொண்டு விளங்கினார். சுமித்திராதேவியின் முன் ஆதிசேஷன் குழந்தை ரூபமுடையவராய் அவதரித்தார். கைகேயின் முன்பு சங்கு சக்ரங்கள் இரண்டும் இரட்டைப் பிள்ளைகளாக அவதரித்தன.

இந்த மங்களகரமான வேளையில் இவ்விதமாக நான்குகுழந்தைகளும் ஜனனமாயினர். இச்சமையத்தில் தேவதைகள் வாத்தியகோஷஞ் செய்து மலர்மாரி பொழிந்து மகிழ்ந்தார்கள். கௌஸல்யையின் குமாரனான மூத்தவனுடைய முகாரவிந்தம் தரிசிப்பவர்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தமையால், அவனுக்கு இராமனென்றும், சுமித்திரையின் குழந்தை மிகுந்த அழகாயிருந்தமையால் அக்குழந்தைக்கு இலட்சுமணனென்றும், கைகேயியின் குழந்தைகளில் மூத்தவன் இராஜ்யபாரத்தை வகிக்கத் தக்கவனாக விளங்கினமையால் அவனுக்குப் பரதனென்றும், இளையவன் சத்துரு பயங்கரனாக விளங்கினமையால் அவனுக்குச் சத்துருக்னனென்றும், வசிஷ்டமகா முனிவரைக் கொண்டு தசரதர் தமது குழந்தைகளுக்குச் சாஸ்திரோக்தமாக நாமகரணஞ் செய்வித்தார்.

குழந்தைகள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நாளில் இலட்சுமணர் இராமனுடனும், சத்ருக்னன் பரதனுடனும் சேர்ந்து விளையாடினார்கள். அப்பொழுது தசரதர் தமது குழந்தைகளின் மீது பிரியங்கொண்டு சுவர்ணாபரணங்களும் ரத்னாபரணங்களும் பூட்டி அவர்கள் விளையாடுவதைப் பார்த்து மகிழ்ந்தார். இவ்விதம் நடந்துவரும் காலத்தில், ஒரு நாள் தசரதர் போஜனஞ் செய்வதற்கு உட்கார்ந்த போது, இலையில் அன்னம் பரிமாறினதும், இராமன் ஓடிவந்து அந்த அன்னத்தில் ஒருபிடி யெடுத்துக்கொண்டு வெளியே ஓடினான். அவனைப் பிடிப்பதற்காக தசரதர் சொற்படி கௌஸல்யை தொடர்ந்தோடினாள். ஸ்ரீராமன் யோகிகளுடைய மனதுக்கும் எட்டாத மகானானதால், அவள் கைக்கு அகப்படாமல் திரும்பித் தசரதரிடம் ஓடிவந்து, தன் கையிலிருந்தும் அன்னத்தைத் தசரதருக்கும் கௌஸல்யைக்கும் கொடுத்துஸந்தோஷமுண்டாக்கினான். குழந்தைகளுக்கு இயற்கையான இவ்வித விளையாட்டுகளாலும், மழலைச் சொற்களாலும், ஒருவருடன் ஒருவர் செய்யும் விளையாட்டுச் சண்டைகளாலும் ஓடுவதாலும், ஒருவர்கொருவர் முத்தங்கொடுத்துக் கொள்வதாலும் குதிரை முதலிய வாகனங்களிலேறிச் சவாரி செய்வதாலும் தாய் தந்தையர்

களுக்கு ஸந்தோஷமுண்டாக்கிக்கொண்டு வந்தார்கள். ஒரு சமயத்தில் ஸிம்மாதனத்தின்மீதிருந்து அரசாளும் தசரத மகாராஜனுடைய சமீபத்தில் இக்குழந்தைகள் சென்று சபையில் அரசனுக்கு வணக்கஞ்செய்து, அச்ஸிம்மாதனத்தின் மீதேறி அரசனுடன் சமமாக உட்கார்ந்தார்கள். பிரமதேஜஸை விரும்புகிற வேதியர்கள் ஐந்தாவது வயதிலும், புஜபலத்தை விரும்புகிற அரசர்கள் ஆறாவது வயதிலும் தனலாபத்தை விரும்புகிற வைசியர்கள் எட்டாவது வயதிலும் உபநயனஞ் செய்யலாமென்கிற சாஸ்திர விதிப்படி தசரத மகாராஜன், கர்ப்பகாலக் கணக்குப்பிரகாரம் ஆறாவது வயதும், ஜனனகால கணக்குப் பிரகாரம் ஐந்தாவது வயதும் நடக்கும்பொழுது இராம லட்சுமண பரத சத்ருக்னர்களுக்கு வஸிஷ்டர் முதலிய பெரியோர்களைக்கொண்டு உபநயனஞ் செய்வித்தார். பிறகு சுப முகூர்த்தத்தில் குருவைக்கொண்டு அவர்களுக்கு வேதாத்தியயனஞ் செய்வித்து, நான்கு வேதங்களுக்கும் அங்கங்களுடன் அர்த்த விசாரஞ் செய்வித்தார். இவ்விதம் பிரமசரியம் முடிந்த பின் சேனைகளோடு, வஸிஷ்டமுனிவரையுங் கூட்டி ஆறுமாத காலம் தீர்த்த யாத்திரை செய்துவரும்படி செய்வித்தார். அவர்கள் தீர்த்த யாத்திரை முடித்துக்கொண்டு தங்கள் பட்டணம் வந்து சேர்ந்து, அரசனிஷ்டப்படி நடந்து சக்திசாலிகளென்று பெயர் பெற்று, தாய்தந்தையர்களையும் பிரஜைகளையும் ஸந்தோஷப் படுத்தி வந்தார்கள்.

2-வது சருக்கம் முற்றிற்று.

3 - வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இவ்விதம் இராமர் முதலிய நான்கு குழந்தைகளும் சுகமாக வாழ்ந்துவருங்காலத்தில், விசுவாமித்திர முனிவர் அயோத்தியா பட்டணம் வந்து தசரத மகாராஜனைப் பார்த்து அவரை ஆசீர்வதிக்க, அரசன் அவருக்குத்தக்க மரியாதைசெய்து, "தாங்கள் விஜயஞ்செய்த காரியத்தை எனக்கு அருளிச்செய்து என்னைக் கிருதார்த்தனாக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதன்மேல் விசுவாமித்திர முனிவர், "நாம் நடத்தும் யாகங்களை நிறைவேற்றும்பொருட்டு, தங்கள் குமாரர்களாகிய இராம லட்சுமணர்களை, நம்முடைய ஆசிரமத்தில் சில தினங்கள் வசிக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்" என்று கூறியருளினார். அதைக்கேட்ட தசரத மகாராஜன் தம்முடைய ராஜகுருவாகிய வஸிஷ்ட முனிவருடன் ஆலோசனைசெய்து, அவர் சம்மதம்பெற்று, இரதத்தை வரவழைத்து, அதன்மேல் விசுவாமித்திர முனிவருடன் இராம லட்சுமணர்களை ஏற்றி யனுப்பினார். அப்பொழுது விசுவாமித்திர முனிவர் மிகுந்த ஸந்தோஷத்துடன் இரதத்தை நடத்திக் கொண்டு போகையில், சாயங்காலமானதால் வழியிலுள்ள காமாசிரமத்தில் தங்கி, இராக்காலத்தைச் சுகமாக அவ்விடத்தில் கழித்துக் காலையி லெழுந்திருந்து, இராம லட்சுமணர்களுடன் ஸ்நானஞ்செய்து, நித்திய கருமானுஷ்டானம் முடிந்தபிறகு இராம லட்சுமணர்கள் மகிமையடைவதற்காக மாகேச்வரி வித்தை, தநுர்வித்தை, சஸ்திரவித்தை, அஸ்திரவித்தை, லௌகிகவித்தை, இரதவித்தை, கஜவித்தை, அசுவவித்தை, கதாவித்தை மந்திரங்களை அழைப்பதும், விடுவதுமான மந்திரவித்தை, பசிதாகங்களை யடக்குகிற பலை அதிபலை யென்கிற வித்தை முதலிய சகல வித்தைகளையும் அவர்களுக்கு உபதேசித்து, பிறகு அவர்களைக் கொண்டு, வனத்தில் சஞ்சரிக்கும் முனிவர் முதலானவர்களை இம்சிக்கும் இராட்சதர்களை அழித்தும் வழிப்போக்கர்களைமிகுந்த தொந்தரவு செய்துவரும் தாடகை யென்கிற இராட்சஸியை ஒரு

பாணத்தினால் கொன்றும் காட்டில் வசிப்பவர்களெல்லோர்க்கும் மிகுந்த சுகத்தை உண்டாக்கினார். இறந்த தாடகையானவள், தன் நிஜரூபமாகிய அப்ஸரஸ்திரீயின் ரூபமடைந்து, "நான் ஒரு முனிவரைத் தொந்தரை செய்யுங்காலத்தில் அம்முனிவர், "நீ இராட்சஸப் பிறப்பையடைந்து, சுந்தனென்ற அசுரனை மணந்து, மாரீசன், சுபாகு என்கிற இரண்டு பிள்ளைகளைப் பெறக்கடவாய் என்று சபித்தபின், இராமபாணத்தால் கொல்லப்பட்டு நற்கதி பெறுவாய்" என்று அநுக்கிரகித்தமையால். "ஏ இராமா! உம்மால் நான் நற்கதியடைந்தேன்" என்றுகூறி அவரை வணங்கி ஸ்வர்க்க லோகஞ் சென்றாள்.

பிறகு இராமலட்சுமணர்களுடன் விசுவாமித்திரர் தமது ஆசிரமத்தை யடைந்து யாகஞ்செய்யத் தொடங்கினார்; ஸ்ரீராமனும்ரணயக்கியஞ்செய்யத்தொடங்கி யாகத்தைக்கெடுத்த இராட்சஸர்கள் யாவரையும், பாணங்களாலே சங்கரித்து மாரீசனென்பவனை ஒரு பாணத்தால் துன்புறாத வழிக்கு அப்பாலிருக்கும் சமுத்திரத்தில் ஆழ்த்திவிட்டு, மற்றொரு பாணத்தால் சுபாகுவையுங்கொன்று முற்றும் பெறச்செய்து தம்முடைய ரணயக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினார்.

இவ்விடத்தில் மகா முனிவர்கள் கூட்டங்கூடிப்பல தேசவர்த்தமானங்களைப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் மிதிலாபட்டணத் தரசனாகிய ஜனக மகாராஜன் தமது குமாரத்திக்கு வரன் பெறுவதன்பொருட்டுச் சுயம்வரம் நாட்ட ஒருநாள் நிச்சயித்திருக்கிறா னென்று பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட விசுவாமித்திர முனிவர், இராம லட்சுமணர்களுடன் மிதிலைக்குப் போகப் புறப்பட்டார்.

போகும் வழியில் பெண்ணுருவங்கொண்ட ஒரு கற்சிலையை இராமனுக்குக் காண்பித்து அதன் வரலாற்றைக் கூறுகின்றார்.

பிரமதேவன் பிரஜைகளைப் படைத்து வருகையில் அற்புதமான ஒரு பெண்ணுருவத்தைப் படைத்து அகலிகை யென்று பெயரிட்டு அவளுக்குத் தகுந்த புருஷனைத் தேட ஸ்வர்க்கலோகஞ் சென்று, அங்கு யாவரையும் பார்த்துவிட்டுப் பூலோகத்

திற்கு வருவதாகத் திரும்புஞ்சமயத்தில், இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் அப்பெண்ணைத் தங்களுக்குக் கொடுத்தருள வேண்டுமென்று, வேண்ட அவர்களுக்குக்கொடுக்க மனமில்லாமல், பூலோகஞ்சென்று, கௌதம முனிவரைப்பார்த்து, இவர் தகுந்தவரென நிச்சயித்து அவருக்கு மணஞ்செய்து கொடுத்துத் தமது உலகஞ்சேர்ந்தார். பின் கௌதமர் அகலிகையுடன் கிருகஸ்தாசிரமம் பெற்று நித்தியகர்மம், யாகம், தபம் முதலியவைகளைச் சாஸ்திரவிதிப்படி நடத்திக்கொண்டு வந்தார். ஸ்வர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரன், பிரமதேவர் அப்பெண்ணைத் தனக்குக் கொடாமற் போனது முதல் அப்பெண்ணைத் தான் எவ்விதமாவது அநுபவிக்க வேண்டுமென்கிற ஆவல்கொண்டிருந்தான். அவன் தக்கசமயம் பார்த்திருந்து கௌதம முனிவருடைய ஆசிரமத்திற்குச் சென்று இராக்காலத்தில் அவருக்குத் தெரியாமல் அவரைப்போல வேடங்கொண்டு அகலிகையிடம் போய் அவளுடன் சுகித்து வெளியே வந்தான். அச்சங்கதியை ஞானதிருஷ்டியாலறிந்த கௌதமர், மிகக் கோபங்கொண்டு தேவேந்திரனைப் பார்த்து "நீ ஒரு லோகத்துக்கு அரசனாயிருந்து இப்படிப்பட்ட கெட்ட செய்கையைச் செய்தது நியாயமல்லவென்று சொல்லி, நீ ஒரு யோனிக்கு ஆசைப்பட்டதால் உன் தேகத்தில் ஆயிரம் யோனி உண்டாகக்கடவனென்று சபித்தார். அச்சாபம்பெற்ற தேவேந்திரன் ஸ்வர்க்கலோகஞ் சென்று தனக்கு மந்திரியுங் குருவுமான பிரகஸ்பதி பகவானை வரவழைத்து அவருக்கு வந்தனம் முதலிய மரியாதைகள் செய்து நடந்த சங்கதியைத் தெரிவித்தான். பிரகஸ்பதி பகவான் மகா முனிவரிட்ட சாபம் மீறாததாகையால், வேறுவிதமாக மாற்றவேண்டுமென்று கருதி, உன் தேகத்தில் தோன்றுவதெல்லாம் பார்ப்பவர்களுக்குக் கண்களாகவே தெரியக்கடவன" என்று அநுக்கிரகஞ் செய்தார். அதுமுதல் அவன் ஸகஸ்ராக்ஷனென்கிற பெயரை யடைந்தான்.

கௌதம முனிவர் தேவேந்திரனுக்குச் சாபங்கொடுத்தபிறகு, அகலிகையையும் நோக்கி 'நீ இதுமுதல் கற்சிலையாகக்கடவாய்' என்று சபிக்க, அகலிகை மனவருத்தமடைந்து, தெண்டனிட்டு "மறுபடி, நான் தங்களுக்குப்பணிவிடை செய்யும் பாக்கியத்தை எப்பொழுது

அடைவேனென்று அநேகவிதமாய்ப் பிரார்த்திக்க, பின் னொரு காலத்தில் மஹாவிஷ்ணுவானவர் இராமாவதாரஞ் செய்து இவ்விடம் வருவார். அப்பொழுது அவருடைய பாததூளிபட்டு நீ சுயரூபமடைவாய்; பின் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்" என்று கௌதமர் கூறித் தவஞ்செய்ய மேருமலைக்குச் சென்றார் என்று விசுவாமித்திரர் கூற இதைக் கேட்ட கருணை நிதியாகிய இராமசந்திரன் அக்கற்சிலையைத் தமது பாதத்தாலே பரிசித்து அவளுடைய பாவங்களை விலக்கவே. அகல்யை தன் அற்புதமான சுயரூபமடைந்து இராமச்சந்திரனை வணங்கி கௌதம முனிவரிடஞ் சென்றாள்.

[முன்னொரு கற்பத்தில் கௌதமர் அகல்யையை "நீ ஆறாகப் போகக்கடவாய்" என்று சபித்திட அவள் ஆறாகப் பிரவகித்து ஜனஸ்தானத்தின் வழியாகச் சமுத்திரஞ் செல்ல, அப்பொழுது ஸ்ரீராமன் அரணிய வாசத்துக்கு வந்து, அவ்வாற்றைக் கடக்க அவ்வாற்றில் பாதத்தை வைத்தபோது அகல்யை சாபநிவர்த்தியடைந்து தன் கணவராகிய கௌதம முனிவரிடம் சேர்ந்தாளென்று சில முனிவர்கள் சொல்லுகிறார்கள். இது ஒரு கற்பாந்தர பேதம்.]

பிறகு கந்தர்வர்களும் தேவர்களும் இராமலட்சுமணர்களின் மீது புஷ்பங்களை வருஷிக்கச் சகோதரனுடன் கங்கைக் கரைக்கு வந்து அதைத்தாண்டி அக்கரை செல்வதற்காக ஓடக்காரனை அழைத்தார்கள். ஓடக்காரன் ஸ்ரீராமனைப் பார்த்து "லோகநாதா! தங்களை ஓடத்தில் ஏற்றி அக்கரைக்குக் கொண்டுபோய்விட மிகுந்த பயமுள்ளவனாயிருக்கிறேன்; ஆயினும் ஒரு விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். தங்கள் பாததூளிக்குக் கல்லைப் பெண்ணாக்குஞ் சக்தி இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் தங்கள் பாதத்தைக் கங்கா ஜலத்தால் நன்றாய்ச் சுத்தஞ்செய்து, என்னுடைய கைகளால் தங் கள் பாதங்களைத் தூக்கி ஓடத்தில் வைக்க விரும்புகிறேன். இப் போது எனக்கு ஒரு மனைவி இருக்கிறாள். கல்லுக்கும் மரத்துக் கும் வித்தியாசமில்லையாகையால் தங்கள் பாததூளியால் நான் ஜீவனஞ் செய்வதற்காக வைத்திருக்கும் இவ்வோடமும் பெண்

ணைய்விட்டால் நான் என்னசெய்வேன்" என்று வணங்கிச் சொல்ல, அதைக்கேட்டு, மகிழ்ந்தார். பின் அவ்வோடக்காரன் கங்கா ஜலத்தால் ஸ்ரீராமருடைய பாதங்களைச் சுத்தஞ்செய்ய யாவரும் அவ்வோடமேறி அக்கரை சேர்ந்து மிதிலா பட்டணம் போயினர்.

அச்சமயத்தில் சுயம்வரத்திற்காகப் பலதேச மன்னர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டிருந்தார்கள். இராவணன் தனக்குச் சொல்லாமலிருந்தும் கேள்விப்பட்டு மந்திரிகளோடும் சேனைகளுடனும் சுயம்வரத்திற்காகப் புஷ்ப விமானத்திலேறி மிதிலா பட்டணம் வந்து சேர்ந்தான். ஜனக மகாராஜன் தசரதனை விநயத்தோடு அழைத்தும், அவர் தம் குமாரர்கள் சமீபத்தில் இல்லாததாலுண்டான விரகதாபத்தால் சுயம்வரத்திற்கு வரவில்லை. அப்போது விசுவாமித்திர முனிவர் இராம லட்சுமணர்களுடனும் முனிவர்களுடனும் மெதுவாக மிதிலா நகரத்தினருகாமையிலிருக்கும் ஓர் உபவனத்துக்குட் பிரவேசித்தார். விசுவாமித்திர முனிவர் வரவை யறிந்த ஜனகமகாராஜன் அவரை அழைத்துவர மந்திரிகளுடன் புறப்படுஞ் சமயத்தில், அவ்விடத்திற்கு விசுவாமித்திர முனிவருடைய சீடர் ஒருவர் வந்தார். அவரை அரசன் வணங்கிச்செய்தி விசாரிக்க, அவர், அரசனது கைகளைப் பிடித்துக்கொண்டு இரகசியமான இடத்திற்குச்சென்று "அரசனே! தசரத மகாராஜருடைய பிள்ளைகளும் மகா வீரர்களுமாகிய இராமலட்சுமணர்களைச் சுயம்வரத்திற்காக அழைத்து வந்திருக்கிறோம். தங்களுடைய பிரதிக்ஞைப் பிரகாரம் சிவதநுசை ஸ்ரீராமனே முறித்து ஸீதாதேவியைக் கலியாணஞ்செய்து கொள்ளப் போகிறான். அவன் தம்பியாகிய லட்சுமணன் ஊர்மிளை யென்கிற குமாரத்தியைக் கலியாணஞ் செய்துகொள்ளப் போகின்றான். ஆகையால் இவர்களை, மிக அலங்கிருதமாக நீர் உம்முடைய அரண்மனைக்கு அழைத்து வரவேண்டும்; வில்லை முறிக்கும் பரியந்தம் இச்சங்கதியை வெளியிடாமல் மனதில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்; என் குருவாகிய விசுவாமித்திர முனிவர் இவற்றைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி அனுப்பினாரென்றுகூறி, அவரிடம் அநுமதிபெற்றுத் தம்

முடைய குருவினிடஞ் சீக்கிரமாகச் சென்றார். பிறகு ஜனக மகாராஜன் அதிக ஸந்தோஷங்கொண்டு மகரதோரணம் முதலியவைகளாலே பட்டணத்தை அலங்கரிக்கச்செய்து, மந்திரிகள், சேனைகள் முதலியவர்களோடும், வந்திருக்கும் சில அரசர்களோடும் மனோஹரமான பலவித வாத்தியங்களோடும், பட்டஸ்திரிகளோடும், அவர்களுடன் வரும் சுமேதை முதலிய ஸ்திரீகளுடனும், பட்டத்து யானைகளை முன் நடத்திக்கொண்டு, விசுவாமித்திர முனிவரிடஞ் சென்று, வணங்கி அவரைப் பூஜை செய்து, தாம் ஒன்றுமறியாதவர்போல இராம இலட்சுமணாருடைய யோக க்ஷேமங்களை விசாரித்து, பீதாம்பரம், ஆபரணம் முதலியவைகளால் அவர்களுக்கு மரியாதைசெய்து, அவர்களை இரண்டு யானைகளின் மீதேற்றிக்கொண்டு சாமரம் முதலிய உபசாரங்களுடன் விசுவாமித்திர முனிவரையும் அழைத்துக்கொண்டு, தம் பட்டணத்து இராஜவீதியில் நடனமாதர்கள் நர்த்தனஞ் செய்யவும் வந்திமாகதர்கள் துதிக்கவும் பலவித வாத்திய கோஷங்கள் முழங்கவும் பாடகர்கள் பாடவும் ஊர்வலமாகச்சென்றனர். அவர்களைப் பார்ப்பதற்காக பட்டணத்து ஸ்திரிகள் தத்தம் வீட்டுமெத்தைகளின் மீதேறிப் பலகணிவழியாக நீலோற்பலம் போன்ற கண்களால் பார்த்து மகிழ்வடைந்து மலர் மாரி பொழிந்து இராமன் ஸீதாதேவிக்குத் தகுந்த வரனென்றும் ஊர்மிளைக்கு லட்சுமணன் தகுந்த வரனென்றும், ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு தெய்வ சங்கற்பத்தாலும், நம் பூர்வபுண்ணிய வசத்தாலும் இவர்களுக்கே விவாகம் நடந்து நாம் பார்க்கவேண்டும்; இவர்கள் உத்தம புருஷர்களாயிருக்கிறார்களென்றும் கூறி மகிழ்ந்தார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்ட இராம லட்சுமணர்கள் தலை நிமிர்ந்து, அவர்களைப் பார்த்து ஸந்தோஷப்படுவதைக் கூட வரும் அரசர்கள் கண்டு ஒரு கூட்டங்கூடி, இந்த ஜனகராஜன் நமக்கு இவ்விதமான மரியாதை செய்யவில்லை; இவர்களுக்கு மாத்திரம் இவ்வித மரியாதை செய்வதால், இவ்வரசன் ஸீதையை இராமனுக்குக் கொடுப்பதென்றே நிச்சயித்துக் கபடமாக நம்மையெல்லாம் வரவழைத்து இந்தச் சுயம்வரத்தில் அவமதிக்க எண்ணங் கொண்டிருக்கிறானென்று ஒருவர்க்கொருவர்

பேசிக்கொண்டார்கள். இவ்வார்த்தைகளை இராமலட்சுமணர்கள், விசுவாமித்திர முனிவர், ஜனகமகாராஜன் இந்நால்வரும் கேட்டுக்கொண்டே யாகசாலைப்பக்கத்தினருகிற் சென்றனர். அந்த இராமலட்சுமணர்கள் பல்லக்கினின்றுங் கீழே இறங்கி, விசுவாமித்திர முனிவரும் அவர் பின்னே இராமலட்சுமணருமாக முனிவர்கள் நிறைந்திருக்கும் சாலைக்குச் சென்று அங்கே விசுவாமித்திரர் உட்கார, அவர் முன்னிலையில் இராமலட்சுமணர்களும் உட்கார்ந்தார்கள்.

பார்வதி! பின் ஜனகமகாராஜனும் உள்ளே சென்று கனம் பொருந்திய அரசர்களே! என் கன்னிகையின் விவாகத்தின் பொருட்டு நான் பிரதிக்ஞை செய்துகொண்டபடி வில்லை வளைப்பதற்கு இது தருணமாயிருக்கிறது; முன் பரசுராமர் பரமசிவனிடத்தில் தனுர்வித்தை அப்பியாசஞ் செய்து, முப்புரஞ் சமயத்தில் அவருக்குத் தனுர் வித்தையிலுண்டாயிருக்கும் அறிவைக் கண்டு, பரமசிவன் மகிழ்ந்து திரிபுரங்களைத் தகித்து ஜயமடைந்த இத்தனுவை அவருக்கு வெகுமதியாகக் கொடுத்தார். அவர் இவ்வில்லைக்கொண்டு இருபத்தொரு முறை பூப்பிரதட்சிணஞ் செய்து க்ஷத்திரியர்களை அழித்தொழித்து, தமது தகப்பனைக் கொன்றதன் நிமித்தம் ஆயிரம் கைகளுடைய கார்த்தவீரியனைக் கொன்று [illegible] கொன்று. பிறகு [illegible]யடைந்து தபஞ் செய்ய விரும்பி, இந்த வில்லை முன் போவதற்கு என் அரண்மனையில் வைத்துவிட்டுச் சென்றார். பின் என்னுடைய கன்னிகையாகிய ஸீதை விளையாடுந் தருணத்தில் அந்த இத்தனுவையுங் கையிலெடுத்து விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து பரசுராமர், ஸீதை இலட்சுமியின் அவதாரமாயிருக்கவேண்டுமென்று மனதில் கருதி, என்னை வரவழைத்து எவனாலும் வளைக்க முடியாத இத்தனுவை வளைப்பவன் எவனோ அவனே ஸீதையை விவாகஞ் செய்ய உரியவன். ஸீதையின் கலியாணத்திற்கு [illegible]ச பாக இத்தனுவை வைத்துக்கொண்டிரு என்று எனக்குக் கொடுத்தார். [illegible] அதுகாலையிலிருந்தும் அச்சிவதனுவை ஐந்நூறு எருதுகள் கட்டப்பட்ட பெரிய வண்டியில் ஏற்றிச் சபையின் நடுவில் கொண்டுவந்து வைத்து, சபையிலுள்ள மகா

வீரர்களாகிய அரசர்களை நோக்கி, "இந்தத் தனுசை எவர்கள் வளைத்து நாணேற்றுகிறார்களோ அவர்களுக்கே இந்தப் [illegible]வாள்; சக்தியுள்ளவர்கள் நாணேற்றலாம்" என்று பலரும் கேட்கச் சொன்னார்.

இதைக்கேட்ட அரசர்கள் பலரும் [illegible] தங்களுக்கு முன்பாக இருக்கும் தனுசைப் பார்த்துத் தத்தளித்தார்கள். அவர்களிலே சிலர் அந்தத் தனுசின் சமீபத்திற் சென்று அதை எடுத்து நிறுத்துவதற்காகக் கைகளால் அசைத்துப் பார்த்து அசைக்க முடியாமல் நின்றுவிட்டார்கள். சிலர் தூக்கிப் பார்த்து நிறுத்தமுடியாமல் நின்றுவிட்டார்கள். இவ்வில்லை எடுத்து நிறுத்துவதே கஷ்டமாயிருக்க, இதை நிறுத்தி நாணேற்றுவது பற்றியேனும் எண்ணக் கூடாததாயிருக்கிறதென்று சிலர் பிரமித்து நின்றார்கள். அச்சமயத்தில் லங்காதிபதியாகிய இராவணேசுவரன் அரசர்கள் பலரும் பயந்து நிற்பதைக்கண்டு, கர்வத்துடன் வில்லின் அருகேசென்று, சிரித்துக்கொண்டு "ஏ ஜனகமகாராஜனே! என்னுடைய இருபது கைகள் தேவர்கள் முதலானவர்களைச் சண்டையில் தோற்கும்படி செய்து மூவுலகங்களையுந் தமதாக்கிப் பிடித்துக்கொண்டன; கைலாயமலையைத் தூக்கி விளையாடின. அக்கைகளுடைய திறமையை இவ்வரசர்கள் முன் துரும்புபோன்றிருக்கும் இத்தநுசினிடமா நீர் பார்க்க விரும்புகிறீர்?" என்று கம்பீரமாய்ச் சொல்லிக்கொண்டே வில்லைத் தொட்டு அதை எடுப்பதற்காகத் தன்னிடது கைகளிலொன்றினால் அதை அசைத்துப் பார்த்து முடியாமல் பிறகு வலது கைகளிலொன்றினால் அசைத்துப் பார்த்தும் முடியாமல், ஆச்சரியமடைந்து இருகைகளாலசைத்துப் பார்த்தும் முடியாமல், ஒன்றன்பின் ஒன்றாக இருபது கைகளையுங் கொண்டு அசைத்து ஒரு முனையைப் பிடித்துத் தூக்கி நிறுத்திக்கொண்டு பத்தொன்பது கைகளால் வில்லைக்கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பூமியில் இருக்கும் நாண்கயிற்றை எடுப்பதற்காகக் குனிந்து ஒரு கையால் கயிற்றை எடுக்கும்போது, அந்தத் தனு இவன்மேற் சாய, கயிற்றை எடுப்பதைவிட்டு அக்கையா[illegible]லையைப் பிடித்துத் தள்ளினான். அது தள்ளப் படாமல் அவன் [illegible] முதுகு பூமியிற்படும்படி விழுந்தான். அப்பொழுது [illegible] சிரித்தனர். [illegible]

ரங்கள் அவிழ்ந்தன. கண்கள் சுழன்றன. வாய்களிலிருந்து ஜலம் பெருகிற்று. இவ்விதம் இராவணன் படும் பிராணாவஸ்தையைப் பார்த்து அச்சபையிலுள்ள அரசர்கள் யாவரும் சிரித்தார்கள். இதைக்கண்ட அவன் மந்திரிகளும் இராட்சஸர்களும் இராவணேச்வரனிடம் வந்து அவனைச் சுற்றிக்கொண்டு அவனுடைய மார்பிலிருந்து அத்தநுவைக் கீழேதள்ளுவதற்காக அசைத்துப் பார்த்தனர்; முடியாமற் போயிற்று. இராவணன் அரையில் அணிந்திருக்கும் பீதாம்பரங்கள் மலஜலங்களால் நனைந்துபோயின. அச்சமையத்தில் ஜனகமகாராஜன் இராவணனுக்கு நேரிட்டிருக்கும் அவஸ்தையைப் பார்த்து "பூலோகத்தில் வீரர்கள் ஒருவருமில்லையா? இச்சபையில் அரசர்கள் இருப்பார்களானால் அவர்கள் இவ்வரசர்கள் பார்க்க இராவணனுக்குப் பிராணபிச்சைக் கொடுக்கட்டும்" என்று, யாவரும் கேட்க, உரக்கச் சொன்னான். அவ்வார்த்தைகள் பாணங்கள்போல இராமலட்சுமணர்களுடைய காதிற்படவே அவர்கள் கோபத்துடன் புருவந் துடிக்க விசுவாமித்திர முனிவருடைய முகத்தைப் பார்த்தார்கள்

அப்போது விசுவாமித்திர முனிவர் "ஏ இராகவா! இப்போது அச்சபையின் மத்தியில் இராவணனுடைய பிராணாவஸ்தையைப் பார்த்துக்கொண்டிருப்பது நீதியாகுமா? எழுந்திருந்து அவனைப் பிழைக்கும்படி செய்து வில்லையும் நாணேற்று" என்று அநுமதிகொடுத்தார். அதைக்கேட்ட இராகவன் "அப்படியே செய்கிறேன்" என்றெழுந்திருந்து முனிவரை வணங்கிக் கழுத்திலணிந்து கொண்டிருக்கும் முத்தாரம் முதலியவைகளைக் கழற்றிவைத்து விட்டு இடுப்பிலுள்ள வஸ்திரத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு கிரீடமுதலியவைகளைச் சரிவர வைத்துக்கொண்டு புறப்பட்டுச் சபையில் வந்தார். அதைப் பார்த்த சபையோர்கள் மனநொந்து இராமன் சிறுபிள்ளை நம்மால் நாணேற்ற முடியாத வில்லினிடம் சென்று அவன் என்ன செய்யப் போகிறானென்றும், இராவணனைப் பார்ப்பதற்காக, இராமன் வருகிறானென்றும், சிறுபிள்ளையானதால் சிறுபிள்ளைத் தன்மையைக் காண்பிக்கிறானென்றும், ஆரம் முதலியவைகளைக் கழற்றி வைத்ததின் கருத்தென்னவென்றும், வில்லை எடுத்து

நாணேற்றும்படி விசுவாமித்திரமுனிவர் இவனை அனுப்பினா ரென்றும் இவனுடைய பலத்தைப் பார்ப்பதற்காகவே முனிவர் அனுப்பினாலும் இவ்வளவு பெரிதான இவ்வில்லினிடஞ் சென்று என்னசெய்யப் போகிறானென்றும் பலவிதமாக ஒருவர்க்கொரு வர் பேசிக்கொண்டார்கள். அப்போது ஜனகமகாராஜனும் இராம னைப் பார்த்துவிட்டு "மகா முனிவரே! இச்சபையில் இச்சிறுபிள் ளையை எதற்காக அனுப்பினீர்? இராவணேச்வரன் முதல் சபை யிலுள்ள யாவரும் வில்லை அசைக்க முடியாமல் பலமிழந்து போனார்களே! அப்படிப்பட்ட வில்லை இந்தப் பையனால் நாணேற்றமுடியுமா? தங்கள் சீடன் மூலமாக சொல்லியனுப்பிய சங்கதியெல்லாம் இத்தநுஸின் முன்பாகப் பொய்யாகிவிட்டன. மிருதுவான சரீரமுடைய இப்பையனுக்கும் எடுக்கமுடியாதஇவ் வில்லுக்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறதே! ஒரு சாதக பட்சி தாகவெறி கொண்டால், சமுத்திரத்தை வற்றச்செய்யுமா?" என்று கூறினார்.

இங்கு இப்படியிருக்க, சுமேதைமுதலிய அந்தப்புர ஸ்திரீ கள் சுயம்வர மகோற்சவத்தைப் பார்ப்பதற்காக அரண்மனையின் மீதேறி அங்குள்ள பலகணிகளிலுஉட்கார்ந்து,மிருதுவாயும்,சுவர் ணம் போன்ற காந்தியுமுடைய தாமரை போன்ற கண்கள், பூர ணச் சந்திரன் போன்ற முகம், அழகான புஜம், சுவர்ண தண் டைக்கொலுசு இவைகளணிந்த காலின் அழகு, கிரீட குண்டலங் களினால் மகாசூரனெனக் காண்பிக்கும் சிரம், அழகானமுழங் கால், கணைக்கால், பாதங்கள், சங்கம்போல் மூன்று மடிப் புள்ள கழுத்து, மிருதுவான உதடு, அழகான மூக்கு, அழகிய சுருட்டைமயிர், இவைகளமையப்பெற்றுச் சபையில் உட்கார்ந் திருந்த இராமனைப் பார்த்தார்கள்; அவர் முத்துமாலை, ரத்ன மாலை முதலிய மாலைகளையும் வஸ்திரங்களையும் களைந்துவைத்து விட்டு இடுப்பில் பீதாம்பரத்தை இறுகக் கட்டிக்கொண்டு கோ

தண்டத்தைக் கீழேவைத்துவிட்டு, வில்லினருகிற்சென்று மோதிரங்கள் அணிந்த கைகளால் அவ்வில்லை எடுக்கப்போகும் சமயத்திலும் பார்த்தார்கள்; "ஆடை ஆபரணாதிகளைக் களைந்திருக்கும் இப்போதும் சொல்லமுடியாத அழகுள்ளவராயிருக்கும் அந்த இராமனை நமது ஸீதாதேவிக்கு மணாளனாக வேண்டும்" என்று அந்த ஸ்திரீகள் நினைத்து, ஜகதீசனைப் பிரார்த்திப்பதற்காக, ஆகாசத்தைப்பார்க்க, அங்கு அவர்கள் கண்ணுக்கு பிரம விஷ்ணு ருத்திரர்களாகிய திரிமூர்த்திகளும் தோன்ற ஸ்ரீராமனை சாக்ஷாத் நாராயணனென்றறியாத அவர்கள், "ஏ விதே! ஏ ரமாகாந்த! ஏ சம்போ! நாங்கள் பல ஜன்மங்களிலும் செய்த விரதம் தானம் முதலியவைகளால் இராமன் வில்லைநாணேற்றுவதற்கு அதைத்தொடும்போது அவ்வில் புஷ்பமாலைபோல் மிருதுவாயிருக்க அநுக்கிரகித்தால், இராமனுக்கு ஸீதை மாலையிடுவாள். அதை எங்கள் கண்களால் கண்டு ஆனந்திப்போம். அவ்விருவரும் கலியாண மணமேடையில் இருக்கப்பார்த்த யாவரும் சந்தோஷிப்பார்கள்" எனப் பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது சகிகளோடு கூடியிருந்த ஸீதாதேவியானவள் இராமனைப்பார்த்து ஆனந்தக்கண்ணீர் பெருக, ஆசனத்தினின்று சீக்கிரம் எழுந்திருந்து தாதி யென்கிற தோழியின் தோளின் மீது தனது கொடிபோன்ற கையைப் போட்டுக்கொண்டு, அன்புடன் அவனைப்பார்த்து "இப்போது என் கலியாணத்திற்காக கடினமான பரீட்சையை ஏற்படுத்திய என்தந்தையே எனக்கு விரோதியாய் விட்டார்! ஏனென்றால் இராமர் மிகவும் மிருதுவான தேகமுடையவர். இந்த சிவதநுஸோ மலைபோல் கடினமாயிருக்கிறது. இவ்வில்லை அவரால் எவ்வாறு நாணேற்ற முடியும்? ஏ தெய்வமே! நீ என்னசெய்யப் போகிறாயோ? உன்னுடைய மனதில் என்ன எண்ணம் இருக்கிறதோ நான் அறியேன். நான் கலியாணம் பண்ணிக்கொள்ளும் விஷயத்தில் இராமரைத் தவிர வேறொருவரையும் மனதில் நினைக்கவில்லை. இதற்கு விரோதமாக என் தந்தை வேறொருவருக்கு என்னைக் கொடுப்பாரேயானால், இந்த மெத்தையிலிருந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளுவேன். ஏ சங்கரா! ஏ பிர-

மஹாதேவா! துர்க்காதேவி! ஏ காயத்திரீ! ஏ ஸாவித்திரீ! ஏ ஸரஸ்வதீ! ஏ இந்திரா! ஏ யமா! ஏ வருணா! ஏ குபேரா! ஏ அக்கினீ! ஏ லட்சுமிதேவி! ஏ விஷ்ணு! ஏ கருடா! ஏ ஆதிசேஷா! ஏ சந்திராதி சமஸ்த தேவர்களே! உங்கள் யாவரையும் நான் பிரார்த்திக்கின்றேன். உங்கள் கைகளால் இவ்வில்லைத் தொட்டு பூமாலைபோல் மிருதுவாகும்படி செய்து உங்கள் சக்தியை இராமருடைய புஜங்களில் ஆவிர்ப்பிக்கச் செய்து, வில்லை நாணேற்றும்படி அநுக்கிரகியுங்கள். பிற்காலத்தில் ரிஷிபத்தினிபோல் பதினான்கு வருஷ காலம் காட்டில் நான் வாசம் பண்ணப்போகிறேன். இது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகையால் அதற்குத்தகுந்தபடி நீங்கள் எல்லோரும் என்னுடையகருத்து நிறைவேற அநுக்கிரகஞ் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

இவ்விதம் சபையிலுள்ள மன்னருடைய வார்த்தைகளையும் ஸீதை முதலிய அந்தப்புரஸ்திரீகளுடைய வார்த்தைகளையுங் கேட்டுப் புன்சிரிப்படைந்த இராமன், சிவதநுஸின் அருகே சென்று, அதற்குப் பிரதட்சிண நமஸ்காரஞ் செய்து பரமசிவனையும் தன் தந்தையாகிய தசரதரையும் தாயாகிய கௌஸல்யையையும் குருவாகிய விசுவாமித்திரரையும் மனதில் தியானித்துக் கொண்டு இடதுகையால் வில்லைப் பிடித்து வலது கையால் நாண் கயிற்றை யெடுத்துக்கட்டி வளைத்தார். அக்காலத்தில் வாத்தியங்கள் முழங்கின. வந்திமாகதர்கள் துதித்தார்கள். இழுத்து வளைக்கும்போது அவ்வில் மூன்று துண்டாக ஒடிந்து விழுந்தது. அவ்வில் முறிந்த சப்தமானது ஆகாயமளவும் பரவியது. அதனால் பூமியும் சமுத்திரங்களுங் கலங்கின. பத்துத் திசைகளிலும் பிரதித்தொனி தொனித்தது. நட்சத்திரங்கள் பூமியில் விழுந்தன. ஆதிசேடன் சிரக்கம்பமுற்றான். காற்றுவாசனையுடன்சுகமாக்வீசியது. தேவர் முதலியவர்கள் ஆகாயத்திலிருந்து நந்தன வனத்திலுள்ள புட்பங்களைக்கொண்டு வந்து இறைத்து வாத்தியகோஷஞ் செய்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். சுயம்வர மண்டபத்தில் துந்துபி முதலான வாத்தியங்களை முழங்கச் செய்து ஜயபேரிகை அடித்தார்கள். தாசிகள் நடனமாடினார்கள்.

வந்திமாகதர்கள் துதித்தார்கள். அரண்மனையின் மீதிருக்கும் ஸ்திரீகள் பலகணிகளின் வழியாக ஸ்ரீராமன் மீது புஷ்பங்களை வாரி இறைத்தார்கள்.

அச்சமயத்தில் வெட்கத்தால், கிரீடம்விலகிய தலைகளைக் கவிழ்த்துக்கொண்டு, அவிழ்ந்த வஸ்திரத்துடனிருந்த ராவணேசுவரன், ஒரு நிமிஷநேரமாவது அச்சபையில் நிற்காமல் துரிதமாக லங்கைக்குச்சென்றான். ஸ்ரீராமன் வில்லை முறித்ததைப்பார்த்த ஸ்திரீகள் மிக மகிழ்ச்சியுடன் ஜயசப்தங்கூறி, கை கொட்டி ஆரவாரித்தார்கள். அதைப்பார்த்த ஸீதா தேவியும் அதிக ஸந்தோஷத்தால் புளகாங்கிதமடைந்தாள்; நீலோற்பலம் போன்ற தனது கண்களால் பிரியத்துடன் இராமனை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டு, இந்த மகானை நாம் எப்போது அடைவோமென்கிற ஆவலுடனிருந்தாள். அப்பொழுது ஜனகமகாராஜன் தனது மந்திரிமார்களைப் பார்த்து " மந்திரிகளே! நம்முடைய குழந்தையாகிய ஸீதையை யானையின் மீதேற்றுவித்து, நான்கு புறமும் நம்முடைய சேனைகள் காவல்செய்ய மகோற்சவத்துடன் இவ்விடத்திற்கு வரவழையுங்கள் " என்று கட்டளையிட்டார். அதைக்கேட்ட மந்திரிமார்கள் "நல்லது தங்களுடைய உத்தரவின்படி நடக்கிறோம்" என்று கூறிவிட்டு, வேகமாக ஜானகியிடஞ் சென்று அஞ்சலியஸ்தர்களாய் நின்று, " நீலோற்பலம் போன்ற கண்களையும், பிடியானை போன்ற நடையினையுமுடைய ஸீதா தேவியே! நீ மகா புண்ணிய சாலி; இப்பொழுது சூரிய வம்சத்திற்பிறந்த தசரதனுடைய பிள்ளையாகிய இராமர் பல தேச வரசர்கள் கூடிய இச்சபையில் சிவ தநுஸை முறித்து விட்டார். ஆகையால் சீக்கிரமாக எழுந்திருந்து இதோ வந்திருக்கும் பெண்யானையின்மீதேறிக்கொண்டு, இராமரிருக்குமிடத்திற்கு வரவேண்டும்; இரத்தினங்களாலாகிய இம்மாலையைச், சந்தோஷத்துடன் அவருடைய கழுத்திலணிய வேண்டும்."—என்று இனிமையாகக் கூறினார்கள். ஸீதாதேவி தன் தாய்மார்களை வணங்கித் தோழிகளுடன் யானையின் பிடரியின் மீதேறிச் சந்தோஷமாய் உட்கார்ந்தாள். அந்த யானையின் முன்னும்,

பின்னும் இனிமையான பலவித வாத்தியங்கள் கோஷித்தன. நூற்றுக் கணக்கான கஞ்சுகிகள் நல்ல பிரம்புகளைக் கைகளிலே பிடித்துக்கொண்டும், விசித்திரமான உருமாலைகளை யணிந்துகொண்டும், யானையின் முன்பாகப் போய்க்கொண்டும், ஸீதையின் ஊர்வலத்தைப் பார்க்கவரும் ஜனக்கூட்டத்தை உரத்த சப்தமிட்டு விலக்கினார்கள். அக்காலையில் தாசிகள் நர்த்தனஞ் செய்தார்கள். மாகதர்கள் துதித்தார்கள். நடர்கள் பாடினார்கள். ஸீதையினுடைய தாசிகள் நல்ல அலங்காரத்துடன் குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு யானையைச் சுற்றி நின்று சாமரம் முதலிய உபசாரங்களைச்செய்து வந்தார்கள். ஸீதையினுடைய நூற்றுக்கணக்கான வயது சென்ற செவிலித்தாய்மார்கள் கைகளில் சஸ்திரங்களையும், தங்கத்தடிகளையுங்கொண்டு குதிரைகளின் மீதேறிக்கொண்டு யானையைச் சூழ்ந்து வந்தார்கள். இன்னும் சில ஸ்திரீகள் புருஷ வேஷத்துடன் நல்ல ஆபரணங்களை யணிந்துகொண்டு புடைசூழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் கஞ்சுகி ஸ்திரீகள் குதிரைகளின் மீது முகத்தை மறைத்துக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் மந்திரிமார்கள் யாவரும் தங்கள் தங்கள் வாகனங்களின்மீது சைன்னியங்களுடன் யானையைச்சூழ வந்தார்கள். ஸீதையுடன் யானையின்மீது உட்கார்ந்திருக்கும் தோழிமார்கள் சாமரங்களை இடைவிடாமல் வீசிக்கொண்டிருந்தார்கள். இவ்விதம் ஊர்வலம் வந்த ஸீதையின் மீது, பட்டணத்திலுள்ள ஸ்திரீகள் பலகணிகளின் வழியாகப்புஷ்பங்களை வருஷித்தார்கள். மின்னலைப்போன்ற அழகுடைய ஸீதை இரத்தினமாலையைக் கையிலெடுத்துக்கொண்டு கோலாகலத்துடன் ஊர்வலமாக வந்து சபையின் தலைவாயில் வந்ததும், யானையின் மீதிருந்திறங்கி, இராமனைக்கடைக்கண் பார்வையால் பார்த்துக்கொண்டு, முகமலர்ச்சியுடன் சபைக்குள் நடந்து சென்று, இராமனருகில் வந்து, அம்மாலையைஇருகைகளாலும் எடுத்து அவருடைய கழுத்திலணிந்து அவருடைய திருவடிகளில் சிரசைவைத்து வந்தனஞ்செய்து எழுந்திருந்து, வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றாள். மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மார்பினையுடைய ஸீதையை இராமன்

பார்த்து ஸந்தோஷங்கொண்டு பின் விசுவாமித்திர முனிவருக்கு வந்தனம் புரிந்தார்.

அப்பொழுது விசுவாமித்திர முனிவர், சபையில் ஜயம் பெற்ற இராமரைத் தழுவித் தமது மடியிலுட்காரவைத்துக் கொண்டு அன்புடன் உச்சிமோந்து மகிழ்ந்தார். பின் ஜனகமகாராஜன் திவ்வியமங்கள சொரூபியாகிய தன் கன்னிகை ஸீதாதேவியை இராமருடைய அருகில் உட்காரவைத்தான். அவ்விருவரும் பரம அலங்காரமாய் விளங்கினார்கள். விசுவாமித்திர முனிவர் அவ்விருவரையும்ஸந்தோஷத்துடன் ஆசீர்வதித்துத்தமதுபிறப்பு பலனடைந்ததாக மனதில் நினைத்தார். ஜனகமகாராஜன் அச்சபையில், "ஸ்வாமி விசுவாமித்திர முனிவரே! தங்களுடைய பிரசாதத்தால் நான் தந்யனானேன். என்வம்சம் தந்யமாயிற்று. என் தாய் தந்தையரும் தந்யராயினர். ஸ்ரீராமசந்திரனுக்கு நான்மாமனார் என்கிற பெயரையும் இவ்வுலகத்தில் பெற்றேன்" என்று கூறி விசுவாமித்திர முனிவரை வணங்கினார். சபையிலுள்ள அரசர்கள் யாவரும் மின்னற்கொடிபோன்ற பிரகாசமும், கோவைப் பழம்போன்ற உதடழகும், சந்திரன்போன்ற முகவிலாசமுமுள்ள ஸீதாதேவியின் கண்களாகிற பாணங்களால், அடியுண்டு மயங்கி, தேகம் மெலிந்து, நமக்குத் துரதிர்ஷ்டமென்று சிலர் கூறினர்; சிலர் மூர்ச்சையடைந்தார்கள். இவ்வாறு வருத்தப்பட்டுக்கொண்டும், வெட்கத்தினால் தலை குனிந்தவர்களாயும், முகம் வாடினவர்களாயுமுள்ள சபையிலுள்ள அரசர்களிடஞ் சென்று, அவர்களைப்பார்த்து, தங்கள் சிநேகிதனான நான் என் கன்னிகையாகிய ஸீதைக்கு விவாகம் நடத்துகிறபடியால், அதை நடத்திவிட்டுப் பிறகு தங்கள் தங்கள் பட்டணங்களுக்குப் போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேனென்றுஜனகர் வேண்டினார். அதைக்கேட்ட அரசர்கள் யாவருமொன்று கூடி, மந்திராலோசனை செய்து நாம் நல்லவேளையில் புறப்பட்டுவாராததனால் அவமானமடைந்திருக்கிறோம். இக்காலத்தில் நாம் இராமனுடன் போர்செய்தாலும் நமக்கு ஜயம் கிடைப்பது கஷ்டம். ஆகையால் நாம் நமது பட்டணங்களுக்குச் சென்று நல்ல வேளை பார்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து இராமனுடன் போர்செய்து யுத்த

களத்தில் பாணங்களினால் அவனைப் பிளந்து தள்ளுவோமேயா னால், அப்பொழுது நாம் கிருதகிருத்தியர்களாகி, அம்புபோல் நம்மனத்திற் பாய்ந்திருக்கும் அவமானத்தினின்றும் நீங்கியவர்க ளாவோம். ஆகையால் இப்போது ஏன் நாம் நம்முடைய விரோதத் தைக் காண்பிக்க வேண்டும். என்றாலோசனை செய்து, ஜனக மகா ராஜனைப்பார்த்துத் "தாங்கள் கேட்டுக்கொண்டபடி நாங்களிருந்து கலியாணத்தை நடத்தி விட்டு எங்கள் பட்டணங்களுக்குச் செல்லுகிறோம்" என்று கூறினார்கள். அதனைச் செவியுற்ற ஜனக மகாராஜன் ஸந்தோஷமடைந்து அவரவர்களுக்குத்தக்கபடி விடுதி களும் வேண்டிய சாமான்களும் திட்டஞ் செய்தனுப்பினார் அது போலவே விசுவாமித்திரர் முதலியவர்களுடைய இடங்களுக்கும் சாமான்களை வேண்டியபடி கொடுத்தனுப்பினார்.

பிறகு ஜனக மகாராஜன் விசுவாமித்திர முனிவருடைய சொற்படி, தசரத மகாராஜனை வரவழைப்பதற்காக, தமது மந் திரிமார்களை யனுப்பி, அவருடைய வரவை எதிர்பார்த்தார். அம் மந்திரிகளும் அயோத்தியா பட்டணத்திற்குச் சென்று தசரத மகாராஜனைப்பார்த்து வணங்கி, விநயத்துடன் முன்னின்று, ஜனக மகாராஜனுடைய சுயம்வர மண்டபத்தில் இராமருக்குண்டான ஜயத்தையும், ஸீதாதேவியை இராமருக்குக் கன்னிகாதனஞ் செய்து கொடுக்க முகூர்த்தம் ஏற்படுத்தியுள்ளதையும் விவர மாகக் கூறி, அதற்குத் தாங்கள் பரிவாரங்களுடன் விஜயஞ்செய்ய வேண்டுமென்று அழைக்க, தசரத மகாராஜன் அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்து தமது பட்டண வாசிகளான குடிகளுடனும், சைன்னியங்களுடனும், ஸ்திரீகளுடனும், தம் தேசத்தாருட னும், புறப்பட்டு அதிசீக்கிரமாக மிதிலா பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார். ஜனக மகாராஜன் தசரத மகாராஜனை ஊர்வலத்துடன் பெருமையாகத் தமது பட்டணத்திற்குள் அழைத்து வருவதற் காக, ஒரு யானையை அலங்கரித்துக்கொண்டு, சில அரசர்களோடு தசரத மகாராஜனிடஞ் சென்று அவரைப்பார்த்தார். அவரைப் பார்க்கும்போது அவருடைய முன்னிலையில் இரண்டு வாலிபர்கள்

நிற்பதைக்கண்டு அவர்களை இராம லட்சுமணர்களென்றே சந்தே கித்து, இவர்கள் இவ்விடம் வந்திருக்கவேண்டிய காரணமென்ன வென்று மனதில்ஆலோசித்துத் திரும்பிப் பார்க்க விசுவாமித்திர முனிவருடன் இராம லட்சுமணர்கள் இருப்பதைக்கண்டு ஆச்சரிய மடைந்தார். பிறகு தசரத மகாராஜனையும் வஸிஷ்ட முனிவரையும் நமஸ்கரித்துத் தமக்கருகே நிற்கும் விசுவாமித்திர முனிவரைப் பார்த்து, "இராம லட்சுமணர்களைப் போலவே இங்கு நிற்கும் இக்குமாரர்கள் யாவர்" என்று கேட்டார். அதற்கு விசுவாமித் திரமுனிவர் பரதனைக்காட்டி இவன் இராமனுடைய அம்சமென் றும், சத்துருக்னனைக்காட்டி, இவன் லட்சுமணனுடைய அம்ச மென்றும்,பரத சத்துருக்னனென்கிற பெயர்களை யடைந்த இக் குமாரர்கள், தசரத மகாராஜாவினுடைய மூன்றுவது தாரமாகிய கைகேயினுடைய பிள்ளைகளென்றும் தெரிவித்தார். அதைக் கேட்ட ஜனகமகாராஜன் தசரத மகாராஜனையும், விசுவாமித்திர முனிவரையும் சதாநந்த முனிவரையும் பார்த்துப் பின் வருமாறு சொல்லுகிறார்—

அயோநிஜையாக பூமியிலிருந்தவதரித்து எனக்குக்குமாரத்தி யாயிருக்கிற ஸீதையை இராமனுக்கும், இரண்டாவது குமாரத்தி யாகிய ஊர்மிளைஎன்பவளை இலட்சுமணனுக்கும்,கன்னிகாதானஞ் செய்துகொடுக்க நிச்சயித்திருக்கின்றேன். என் சகோதரன் குசத்துவஜனுக்கு நல்ல அழகு பொருந்தியவர்களாயும்,யௌவன பருவமுடைந்தவர்களாயும், ஸீதை ஊர்மிளை இவர்களைப்பார்க்கி லும் அதிக செல்வத்துடன் வளர்த்து வரப்பட்டவர்களான, மாண்டவி சுருதகீர்த்தி என்கிற பெயர்களையுடைய இரண்டு குமா ரத்திகளிருக்கின்றார்கள். அவர்களில் மாண்டவி யென்பவளைப் பரதனுக்கும், சுருதகீர்த்தி யென்பவளைச் சத்துருக்னனுக்கும் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறேன். தாங்கள் கலியாணத்தைநடத்தி என்னைக் கௌரவப்படுத்தவேண் டும்—என்று கூறி, "இந்நான்கு பெண்களையும் மருமக்களாகத் தாங்கள் அடைய வேண்டும்" எனச்சொல்லி வணங்கினார். தசரத மகாராஜன் "அப்படியே நடக்கட்டும்"என்று ஜனக மகாராஜனைப் பார்த்துக்கூறி விட்டு, அவருடைய பக்கத்திலிருக்கும் அகல்யி

யையின் புத்திரராகிய சதாநந்தரென்னும், ஜனக மகாராஜனுடைய புரோகிதரைப்பார்த்து, "ஸீதை அயோநிஜை யென்றும், பூமியி லிருந்து பிறந்தவளென்றும் ஜனக மகாராஜன் கூறியதை எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்க சதாநந்த முனிவர் தசரத மகாராஜனைப் பார்த்து, "இது கேட்க வேண்டிய விஷயந்தான்; இதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான்; நான்கூறும் வரலாற்றைக் கவனித்துக் கேட்க வேண்டும்" என்று கூறிச்சொல்லுகிறார்—

முன்னொரு காலத்தில் பத்மாட்சனென்னும் பேர் பெற்ற ஓர் அரசன் இருந்தான்; அவன் ஒரு சமயத்தில் உலகத்தின் நடவடிக் கைகளை யோசித்துப்பார்த்து, யாவரும் இலட்சுமி கடாட்சத் தையே விரும்புகிறார்களென்பதையறிந்து, நாம் தவஞ்செய்து லட்சுமியைப் பெண்ணாகவடைந்து, அக்குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு இடைவிடாமல் சந்தோஷிக்க வேண்டுமென் றெண்ணி, அப்பொழுதேபுறப்பட்டுக் காட்டுக்குச்சென்று லட்சுமி தேவியைக்குறித்து உக்கிரமான தவஞ்செய்து லட்சுமி தேவி பிரத்தியட்சமானதும் வணங்கி "அம்மணீ! நீர் எனக்குப் பெண் ணாக அவதரித்து என்னைக் கிருதார்த்தனாக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க, லட்சுமி தேவி "அரசனே! நான் மகாவிஷ்ணுவின் ஆதீனத்திலிருப்பவளானதால், அவருடைய தயவு பெற்றால், உன்கோரிக்கையை அவர் நிறைவேற்றுவார்" என்று கூற, அதன் பின் அரசன் மகா விஷ்ணுவைக்குறித்து அகோரமான தவஞ் செய்ய, விஷ்ணு அரசன் தவத்திற்குகந்து அவன் முன் தோன்றி, அரசனைப்பார்த்து, "உனக்கு வேண்டியவரத்தைக் கேள்" என, அரசன் அவரைப் பிரதட்சிண நமஸ்காரஞ் செய்து வணங்கி, பக்தி விநயத்துடன் எதிரில் நின்று "லட்சுமிதேவி எனக்குப் பெண்ணாக அநுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். உடனே விஷ்ணு சிரேஷ்டமான ஒரு மாதுளங்கனியை அவன் கையில் கொடுத்து மறைந்தார். அரசன் அக்கனியைப்பிட் டுப்பார்க்க அதன் ஒரு பாதியில் விரையும் மற்றொரு பாதி யில் சுவர்ணச்சாயலுள்ள ஒரு பெண் குழந்தையும் இருக்கப் பார்த்து ஆச்சரியப்பட்டு, மிகுந்த ஆசையுடன் நாம் விரும்பிய

படி சுபமான பெண் குழந்தை கிடைத்ததென்று சந்தோஷித்துக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு மகிழ்ந்தான். அப்பெண் பார்ப்பவர்களுடைய மனதைக் கவரத்தக்க அதிக அழகுள்ளவளாயிருந்ததனால், அவளை உலகத்தார் பத்மை யென்று பெயரிட்டழைத்தார்கள். அப்பெண் சுக்கிலபட்சத்துச் சந்திரகலைபோல் வளர்ந்து மங்கைப்பருவமடைந்த காலத்தில், அரசன் அவளுக்குத் தகுந்தவரன் யாவன்? எங்கேயிருக்கிறான்? யாருக்குக்கொடுக்கலாமென்று மனதில் நினைத்து, தனது மந்திரிமார்களையழைத்து, அவர்களுடன் மந்திராலோசனை செய்து, சுயம்வரம் ஏற்படுத்தி, தக்கவரனைச் சம்பாதிக்க நிச்சயித்து, சுயம் வரத்துடன் யாகத்தையும் செய்ய யத்தனித்துப் பல தேச அரசர்களுக்கு நிருபம் எழுதினான். நிருபங் கண்ட அரசர்கள் தங்களுக்குரிய பலவித ஆபரணங்களை யணிந்துகொண்டு பத்மையினுடைய சுயம் வரத்திற்குவந்தார்கள். இந்தச் சுயம்வரத்தைப் பார்ப்பதற்காக முனிவர்களும், தேவகந்தர்வர்களும், யட்சர்களும், கின்னரர்களும், இராவணன் முதலிய இராட்சஸர்களும் வந்தார்கள். தேவாமிசங்களான பறவைகளும், மலைகளும், ஆறுகளும் சமுத்திரங்களும், கற்பகவிருட்சங்களும் தங்கள் இஷ்டப்படி ரூபங்கொண்டு வந்தன. இவர்கள் யாவரும் சுயம்வர மண்டபத்தில் அவரவர்களுடைய ஆசனத்தில் உட்கார்ந்த பின் அரசன் அவர்கள் யாவரையும் பார்த்து, "இந்த ஆகாயத்தில் தெரிகிற நீலநிறத்தை எடுத்து உடலில் பூசிக்கொள்ளுகிறவனுக்கு என் பெண்ணாகிய பத்மை என்பவளைக்கன்னிகாதானஞ்செய்து கொடுப்பேன். இது ஸத்தியமான வார்த்தை" என்று உரக்கச்சொன்னான். அதைக்கேட்ட அரசர்கள், இவன் சொல்வது ஆகாதகாரியமென்றெண்ணி, பத்மையின் சௌந்தரியத்தில் மயங்கி, அவ்விடம் விட்டுப்போக மனமில்லாமல் யாவரும் ஒன்று கூடி அப்பெண்ணை அபகரித்துக் கொண்டுபோக யத்தனித்தார்கள். அப்பொழுது பீத்மாட்சன் அவர்களுடன் கொடிய போர் தொடங்கி யெதிர்த்து மாரியாகப் பாணப் பிரயோகஞ்செய்ய அதைப்பொறுக்கமாட்டால், தேவர் முதலிய அநேகர் ஓடிப்போய்விட்டார்கள். அசுரர்கள் ஒன்று

சேர்ந்து போர்செய்து பத்மாட்சனை யுத்தகளத்தில் கொன்று, பத்மையை அபகரிப்பதற்காக அவளிடஞ்செல்ல, அதைக் கண்ட பத்மை யென்பவள் திடரென்று அக்நிப்பிரவேசமானாள். அது தெரியாத சில அசரர்கள் அப்பெண்ணைக் கண்டுபிடிக்கப் பட்டணத்திற்குட் சென்று தேடிப்பார்க்க, அவளகப்படாமையால், அரண்மனை முதலியவைகளை இடித்துத்தோண்டி நிமிஷ நேரத்திற்குள்ளாக அப்பட்டணத்தை மயானத்திற் கொப்பாகச்செய்து விட்டார்கள். அக்காலையில் அங்கிருக்கும் சில விவேகிகள் லட்சுமியைப் பெண்ணாக வடைந்த பத்மாட்சவரசனுடைய கதி இவ்விதமாயிற்றல்லவா? ஆகையினாற்றான் தெரிந்த முனிவர்கள் லட்சுமியை விரும்புகிறதில்லை. லட்சுமியானவள் பிராணிகளுடைய மனதுக்குச் சஞ்சலமுண்டாக்கிப் பயம், சோகம், வதம் முதலிய பல கஷ்டங்களைக் கொடுப்பதால் லட்சுமியை விரும்புகிறவன் விவேகமற்றவனென்று சொல்லிக் கொண்டார்கள். பத்மாட்சவரசன் யுத்தகளத்தில் மரித்தபிறகு அவனுடைய பத்தினிமார்கள் யாவரும் உடன்கட்டை யேறிமரித்தனர். தைத்தியர்கள் யாவரும் தங்கள் தங்களிடங்களுக்குச் சென்றார்கள்.

பத்மை என்கிற பெண் மகாவிஷ்ணுவினுடைய அழிவற்ற சக்தியாகையால் அக்நி குண்டத்தில் வெகுநாள் வசித்திருந்து பிறகு ஒருநாள் அவ்வக்நி குண்டத்தினின்றும் வெளிப்பட்டு அதனருகில் உட்கார்ந்திருந்தாள். இப்பொழுது தசானனன் திக்குவிஜயம் செய்யும் பொருட்டுப் புட்பகவிமானமேறி, ஆகாயமார்க்கமாய் வருகையில் அவனுடைய மந்திரியாகிய சாரணனென்பவன் அக்நி குண்டத்தினருகி லுட்கார்ந்திருக்கும் பத்மையைப் பார்த்து "மகாராஜா!, முன் சுரர்கள் அசுரர்கள் முதலியவர்கள் எப்பெண்ணை அபகரிப்பதற்காகப் பலவித வருத்தமடைந்து பார்த்தனரோ அப்பெண் உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள்! இப்பெண் தான் பத்மாட்சவரசனுடைய குமாரத்தியாகிய பத்மை யென்பவள்" என்று கூறினான். அதன்மேல் இராவணன் பத்மையைப் பார்த்து காமவெறியடைந்து, அவளைக்கொண்டு போகவெண்ண விமானத்தை வேகமாகச் செலுத்திச் சமீபத்தில் நெருங்கி, அவளைப் பிடிக்குஞ் சமயத்தில் அவள் முன்போலவே அக்நிகுண்டத்தில் மறைந்து விட்டாள். அதைப் பார்த்த

"தசானனன் அந்த இடத்தைக்குறிப்பாகப் பார்த்து "பத்மை! நீ இருக்குமிடத்தை நான் அறிந்தேன். நீ இவ்விதம் இவ்விடத்தில் மறைந்து தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மிகுந்த தொந்தரையை உண்டாக்குவதால், இவ்விடத்தைப் பரிசோதித்துப்பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு, இராட்சஸர்களைக்கொண்டு குடங்களிலே ஜலமெடுத்துவரச் செய்து அவ்வக்நி குண்டத்தில் ஊற்றி அதை அணைத்துச் சாம்பரைக் கிளறிப் பார்த்தான். அதில் அதியற்புதமான ஐந்து இரத்தினங்கள் அகப்பட்டன. அவைகளை யெடுத்து ஒரு பெட்டியிலடக்கஞ்செய்து விமானத்தின் மீதேற்றிக்கொண்டு லங்காபட்டணம்போய்த்தன்னரண்மனைக்குள்ளிருக்கும் பூஜை அறையில் வைத்துவிட்டான். அன்றிராத்திரி மண்டோதரியுடன் இராவணன் மஞ்சத்தின் மீது இருக்கும்பொழுது "மண்டோதரீ! நீ பார்த்து ஆச்சரியப்படத்தக்க ஐந்து திவ்விய இரத்தினங்களைச் சாம்பாதித்துப் பூஜை அறையில் பெட்டியில் வைத்திருக்கிறேன். அவைகளை நீ எடுத்துக் கொள்ளலாம்" எனக்கூற மண்டோதரி பூஜையறைக்குச் சென்று அப்பெட்டியைப் பார்த்து அதைத் தன் கணவன் முன்னிலையில் கொண்டு வந்து திறந்து ரத்தினங்களை எடுத்துக்கொள்ளலாமென்று நினைத்துப் பெட்டியை அசைக்க அது அசைக்க முடியாமலிருந்தது. அதனால் அவள் வெட்கமடைந்து கணவனிடஞ் சென்று செய்தி தெரிவித்தாள். இராவணன் சிரித்துத் தான் எடுத்துக்கொண்டு வருவதாக அவ்வறைக்குச்சென்று அப்பெட்டியை எடுத்தான். அது அவனாலும் அசைக்க முடியவில்லை. அதனால் அவன் தனது இருபது கரங்களையும் கொண்டு எடுத்துப் பார்த்தும் எடுக்க முடியாமலிருந்தது. அதைக்கண்டு ஆச்சரியமடைந்த இராவணன் பயங்கொண்டு அவ்விடத்திலேயே அப்பெட்டியைத் திறந்தான். அதற்குள் சூரியப்பிரகாசம்போன்ற பிரகாசத்துடன், தான் முன் கண்டபெண்விளங்குவதைக்கண்டான். அப்பெண்ணை இராவணேச்வரனும்மற்றராட்சஸர்களும்பார்த்துவியந்தனர். அவர்களுடைய கண்கள் அந்தப்பிரகாசத்தால் மழுங்கின: அப்பெண்ணைப்பார்ப்பதற்காக இராவணனைச்சேர்ந்த யாவரும் வந்து கூடினார்கள். அப்பொழுது இராவணேச்வரன் மண்டோதரியைப் பார்த்து "மண்டோதரீ! இப்பெண்பத்மாட்ச அரசனுடையகுமாரத்தி; இவ

ளுடைய பெயர் பத்மையென்று கூறுவார்கள். இவள்பொருட்டு இவர் தகப்பனார் ஏற்படுத்திய சுயம்வரத்தில் பூலோக வாசிகளும் சொர்க்கலோக வாசிகளும் கூடிப் பத்மாட்சவரசனுடன் போர் புரிந்து, அவனையும் அவனுடையபட்டணத்தையும் நாசஞ்செய்து இவளைப் பிடிக்கப்போகவே இவள் அக்நிப் பிரவேசமாய் விட்டாள். அவ்வக்நியைத் தண்ணீரால் அணைத்துச் சாம்பரைப்பரிசோதிக்குங்காலத்தில் அதில்ஐந்து,இரத்தினங்களிருக்கக்கண்டு, அவைகளைப்பெட்டியில் அடக்கஞ்செய்துநான்,எடுத்துக்கொண்டு வந்தேன்" என்று கூறினான். அதைக்கேட்ட மண்டோதரி பயந்து நடுங்கி அதிக சோகங்கொண்டு "நாதா! பிப்பலாதருடைய கன்னிகையாகிய கிருத்தியாதேவிபோல் உக்கிரமாய்த் தன்குலத்தை நாசப்படுத்தினவளான இவள் இக்குழந்தைப் பருவத்திலேயே இக்காரியஞ்செய்தாள். தகுந்த வயது வந்தபோது எக்காரியஞ் செய்யமாட்டாள். இவளை ஏன் இவ்விடம் கொண்டுவந்தீர்? இவள் மூலமாகவே உமக்கு மிருத்தியு வரப்போகிறதென் றெண்ணுகிறேன். ஆகையால் நிமிஷமும் தாமதம் செய்யாமல் இன்றைய தினமே இவளைப்பெட்டியுடன் காட்டில் எறிந்துவிடச் செய்யும்" என்று கூறினாள். இராவணன் இவள்கூறுவது நியாயமென்றெண்ணி தன் மந்திரிமார்களுடன் ஆலோசனைசெய்து தூதர்களை வரவழைத்து "தூதர்களே! இப்பெட்டியை ஜாக்கிரதையாக எடுத்து விமானத்தின் மீதேற்றிக்கொண்டு வனாந்தரத்தில் எறிந்துவிட்டு வாருங்கள். தாமதிக்கவேண்டாம். சீக்கிரமாகப் புறப்படுங்கள்" என்று கட்டளையிட்டான். அதைக் கேட்ட இராட்சஸர்கள் கூட்டங்கூடி அப்பெட்டியைப் புட்பக விமானத்தின் மீதேற்றிக் கொண்டு ஆகாயவழியே புறப்பட்டனர். மண்டோதரி அவர்களைப் பார்த்து "தூதர்களே! இப்பெட்டியிலிருக்கும் பெண் பார்க்கிறவர்களுடைய குலத்தை உடனே நாசஞ் செய்யக்கூடிய தன்மையுடையவளாதலால், இப்பெட்டியை வெளியில் எங்கும் எறியாமல் பூமிக்குள் புதைத்துவிடுங்கள். இவள் சில நாளைக்குப் பிறகு கிரகஸ்தாசிரமத்தில் சரிவரக் கருமங்களை நடத்துபவராயும் இந்திரிய நிக்கிரகஞ் செய்தவராயும் சராசரப் பொருள்களை ஆத்ம சொரூபமாகப் பார்க்கும் ஞானியாகவுமுள்ள ஒருவ

ருடைய வீட்டில், வளரப்போகிருள்" என்றுகூறி அனுப்பினுள். அதைக் கேட்ட தூதர்கள் விமானமேறுஞ் சமயத்தில் பெட்டியி லிருக்கும பெண்ணுனவள் யாவரும் கேட்கச் சொல்லுகிருள். "இராவணண் முதலிய சகல இராட்சஸர்களேயும் கொல்லுவதற் காக மறுபடி நான் லங்கைக்கு வருவேன். அப்புறம் நிகும்பனு டைய மகனுகிய பௌண்டரகன், நூறுதலை இராவணன் இவர்க ளைக் கொல்லுவதற்காக வருவேன். பின்னொருதரம் மகாசூரனுன மூலகாசுரனேயும் கும்பகர்ணன் மகனுகிய சூரனென்பவனேயும் கொல்வதற்காக இப்பட்டணத்திற்கு வருவேன்" என்று கூறி னுள். அதைக்கேட்ட இராவணன் மனங்கலங்கி மயங்கினுன். அங்கிருந்த இராட்சஸர்கள் யாவரும் பயந்து பிணம்போல் உணர் வற்றிருந்தார்கள். இராவணன் எழுந்திருந்து இப்பொழுதே இப்பெண்ணைக்கொன்று விடுகிறேனென்று மனதில் நினைத்துக் கூர்மையான ஒரு கத்தியை எடுத்து வெட்டுவதற்காக அப்பெட் டியினிடம் செல்வதைக் கண்ட மயன்மகளாகிய மண்டோதரி, "நாதா! உமக்கு நெடுங்காலமிருக்கும் ஆயுளை இப்பொழுதே ஒழித்துக் கொள்ளவேண்டாம், இந்த ஸாகஸகாரியத்தைச்செய்ய வேண்டாம். இவளாலே தான் உமக்கு நாசம் வரப்போகிறது; இவளுடைய வார்த்தை பொய்யாகாது. பின்னுல் வரப்போகிற காரியத்தை இப்பொழுதே ஏன் வரவழைத்துக் கொள்கின்றீர்! ஆகையால் இப்பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் எறிந்து விடச் செய்யுங்கள்" என்று கூறினுள். இவ்விதம் கூறியமனைவி யின் வார்த்தையைக்கேட்ட இராவணன் கோபந்தணிந்தான். தூதர்கள் விமானமேறி வேகமாய்ச் சென்று, காடு, மலை, வனம், வனுந்தரம் முதலியன கடந்து, மிதிலா பட்டணத்திற் கருகே உழவு செய்திருந்த பூமியைத் தோண்டி அதில் பெட்டியை வைத்துப் புதைத்துவிட்டு, லங்காபட்டணஞ் சென்று இராவ ணேசுவரனிடம் தெரிவித்தனர்.

அப்பூமியை விதேகமகாராஜன் சூரியக் கிரகண புண்ணிய காலத்தில் ஒரு வேதியருக்குத் தானஞ்செய்தார். அவ்வேதியர் அப்பூமியை உழுவதற்காக முகூர்த்தம்பார்த்தார். அநேக வருஷங் களாக நல்ல முகூர்த்தம் கிடைக்காமல், பிறகு பெரும்பயனைக்

கொடுக்கக் கூடிய ஒரு முகூர்த்தங்கிடைத்தது. அதில் விவசாயஞ் செய்வதற்காக ஒரு குடியானவனைக்கொண்டு அப் பூமியை அவர் உழுதார். அப்பொழுது கலப்பையின் நுனியில் அப்பெட்டி வெளிப்பட்டது. அக்குடியானவன் அப்பெட்டியை எடுத்துக்கொண்டு, தன் எஜமானனாகிய வேதியனிடஞ் சென்று, "வேதியரே! தாங்கள் பார்த்த முகூர்த்தம் மிகவும் மேலானது; இப்பொழுது மகாபாக்கியம் ஒன்று கிடைத்திருக்கின்றது. கலப் பையின் நுனியில் பூமியிலிருந்து கிடைத்த நிதி நிறைந்து அதிக கனமாயிருக்கும் இப்பெட்டியை மிக வருத்தத்துடன் சுமந்து கொண்டுவந்தேன். இதைப் பெற்றுக் கொள்ளும்" என்று அப் பெட்டியைக் கொடுத்தான். வேதியன் பெட்டியை வாங்கிக் கொண்டு, விதேகராஜனுடைய அரண்மனைக்குச் சென்று, மந் திரி, பிரதானி முதலியவர்கள் நிறைந்த சபையின் மத்தியில் வைத்து, அப்பெட்டி கிடைத்த வரலாற்றைத் தெரிவித்தான்.

விதேகராஜன் "வேதியரே! உமக்குத் தானங் கொடுத்த பூமியில் இருப்பதெதுவும் உம்மைச் சேர்ந்தவைகளேயாம். ஆகை யால் இப்பெட்டியை நீரே உம்முடைய கிரகத்திற்கு எடுத்துக் கொண்டு செல்லும்" என்று கூற, வேதியர் "அரசனே! பூமியை எனக்குத்தானஞ் செய்யுங்காலத்தில், இப்பெட்டி அப்பூமியிலி ருப்பது தெரியாமல், தானஞ் செய்து விட்டீர். ஆகையால் அதில் அகப்பட்ட நிதி நிறைந்த இப்பெட்டி உமக்குத்தான் சொந்தமா கும். எனக்குச் சம்பந்தமல்லாத பொருளை நான் பெற்றுக்கொண் டால், எனக்குப் பாவம் நேரிடுமாகையால், அந்தப் பாவத்தினின் றும் நான் நீங்கும் பொருட்டு நீங்கள் இப்பெட்டியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்ல, அரசன் "நான் பெற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூற, இருவருக்கும் விவாதம் நடந்தது. இப் பொழுது சபையார், அரசனைப்பார்த்து, "இப்பெட்டியைத் திறந்து இதற்குள்ளிருக்கும் வஸ்து இன்னதென்று அறிந்து கொண்ட தன்மேல் விவாதத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்று கூறினார் கள். பின் அரசன் தூதர்களை வரவழைத்து, அப்பெட்டியைத் திறக்கும்படி கட்டளையிட, அவர்கள் திறந்தார்கள். அப்பெட்டி

யில் கோடி சூரியப்பிரகாசம் பொருந்திய ஒரு கன்னிகை யிருக் கக்கண்டு, அரசன் அதிக ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந் தான். அதைக்கண்ட வேதியர் பெட்டியை அரசனிடம் ஒப்பு வித்து விட்டு வீட்டுக்குச் சென்றார். அரசன் அப்பெண்ணைப் பெட்டியினின்றெடுத்துக் கொண்டு, அந்தப்புரத்துக்குப் போகும் பொழுது, தேவர்கள் வாத்தியங்களை முழக்கினார்கள்; புஷ்பங்களை வருஷித்தார்கள். கந்தருவர்கள் கானஞ்செய்தார்கள். அப்ஸரஸ்தி ரீகள் நர்த்தனஞ்செய்தார்கள். அப்பெண்ணைத் தான்பெற்றபெண் ணைப் பாவித்துத் தன் புரோகிதரையும், வேதியர்களையும் வர வழைத்து, ஜாத கர்மம்முதலிய சுப கர்மங்களைச்செய்து, வேதி யர்களுக்குப் பலவித தானங்களையும் அரசன் கொடுத்தான். இப் பெண் ஆதியில் மாதுளம் பழத்தினின்றும் வெளியானதால் மாது ளங்கியென்றும், சிலநாள் அக்கி குண்டத்தில் வாசஞ் செய்ததால் அக்கி கர்ப்பை யென்றும், இரத்தினரூபமா யிருந்ததால் இரத் தினவதி யென்றும், பூமிலிருந்து வெளியானதால் பூபுத்திரி யென்றும், ஜனமகாராஜாவால் வளர்க்கப்பட்டு வந்தமையால் ஜானகி யென்றும், பத்மாட்சவரசன் தவஞ்செய்து மாதுளம் பழத்தையடைந்து, அதிலிருந்து இப்பெண்ணை யடைந்ததனால் பத்மை யென்றும், கடைசிபாகப் பூமிக்குள்ளிருந்து கலப்பையின் நுனியில் வெளிப்பட்டதால் ஸீதையென்றும் பலபேர்கள் ஏற் பட்டன.

தசரத மகாராஜனே! ஆகாயம் போல நீல நிறமான தேகத் தையுடைய உமது குமாரனாகிய இராமன், பத்மாட்சவரசன் ஆதி காலத்தில் பிரதிக்ஞை செய்தபடி இப்பொழுது ஸீதையை மனை வியாக அடைந்தான். ஆகையால் தாங்கள் கேட்டதைத் தெரி வித்தேன். இந்நான்கு பெண்களையும் மருமக்களாக அடையத்தக் கவர் நீரேயாகிறீர்-என்று சதாநந்தர் கூறி முடித்தார். தசரத மகாராஜாவால் கலியாணத்திற்கு வரவழைக்கப்பட்ட மாமன் மார்களாகிய, கோசலேச்வரன், மகதேச்வரன், கேகயவரசன், மச் சினனாகிய யுதாஜித்து இவர்கள், சைன்னியங்களோடும், பந்துக் களோடும் மிதுலா பட்டணம் வர, ஜனகமகாராஜன் அவர்களுக்

குச் செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்து அழைத்துப் பின்பு எல்லோர்க்கும் ஆடையாபரணாதிகள் கொடுத்து, மரியாதை செய்து ஊர்வலத்துடன் அவர்களைப் பட்டணத்திற்குள் வரவழைத்தார். அப்பால் இராமர் முதலியவர்களை யானைகளின் மீதேற்றி ஊர்வலம் வர நிச்சயித்து, யானைகளை வரவழைத்த சமயத்தில் ஸ்ரீராமர் தசரதரை நமஸ்கரிக்க அவர் பலதரம் ஆலிங்கனம் செய்து மகிழ்ந்தார். பிறகு வஸிஷ்டர், விசுவாமித்திரர் கௌஸல்லியை முதலான தாய்மார்களையும் ஸ்ரீராமர் வணங்கினர். அப்பால் எல்லாரும் யானைகளின்மீது ஏறிக்கொண்டு ஸ்ரீராமர் முன்னும் மற்றவர்கள் பின்னுமாக, பாடகர்கள் பாடவும் வாத்தியங்கள் முழங்கவும் தாசிகள் நர்த்தனம் செய்யவும் பட்டணப்பிரவேசஞ் செய்தனர். ஊர்வலத்தையும் இராமனையும் பார்ப்பதற்காகப்பட்டணத்து ஜனங்கள் உப்பரிகைகளின் மீதேறி யிருந்துகொண்டு அவர்மீது புஷ்பங்களை வருஷித்தனர். இவ்வித மகோற்சவத்துடன் தசரத மகாராஜன் தமக்கென்று மகரதோரணங்களால் அலங்கரித்துச் சகல பதார்த்தங்களும் வஸ்திரம் முதலிய பலவித வஸ்துக்களும் சேகரித்துவைத்திருக்கும், மனோகரமான விடுதிக்குச் சென்றார்.

பிறகு ஜனகமகாராஜன் தக்கசோதிடர்களை வரவழைத்து மங்களகரமான கலியாண நாளையும், லக்கினத்தையும் நிச்சயித்துக்கொண்டு, மந்திரிகளை அழைத்து, நகரை யலங்கரிக்கும்படி ஆக்ஞாபிக்க, மந்திரிகள் தோரணங்களாலும், பதாகைகளாலும் துவஜங்களாலும் மண்டபங்களை யலங்கரித்து வீதிகளில் சந்தனத் தண்ணீர் தெளித்து மகரதோரணங்கள் முதலியன கட்டி மங்கள வாத்தியங்கள் முழங்கும்படி செய்ய மிதிலாபட்டணம் மிகுந்த அழகுடன் விளங்கியது.

முகூர்த்த தினத்தின் விடியற்காலத்தில் சுபமுகூர்த்தத்தில் இராம லட்சுமண பரத சத்ருக்னர்களைக் கௌஸல்லியை முதலிய தாய்மார்கள் ஆசனங்களில் உட்காரவைத்து நீராஞ்சன முதலிய உபசாரங்கள் செய்து, சுகந்த தைலந்தேய்த்து நான்கு பக்கங்களி

னும் அலங்காரமான தீபப்பிரதிமைகள் ஜலம் நிறைந்த குடங்களைக் கைகளிலேந்திக்கொண்டு பிரகாசத்தைத்தரும் இடத்தினடுவில் மங்களவாத்தியங்கள் முழங்க, மங்கள ஸ்நானஞ் செய்வித்தார்கள்; பிறகு கௌஸல்லியை முதலிய தாய்மார்களும் மங்கள ஸ்நானம் செய்தார்கள்; பிறகு இராமலட்சுமண பரத சத்ருக்னர்களை நல்ல வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்துத் தாங்களும் அலங்காரஞ் செய்துகொண்டார்கள். தசரத மகாராஜனும் அப்பியங்கனஞ் செய்துகொண்டு மங்கள ஸ்நானஞ் செய்து அலங்கரித்துக் கொண்டார். வசிஷ்டமுனிவர், தசரதனையும் இராமர் முதலிய நான்கு குமாரர்களையும் கௌஸல்லியை முதலிய பட்டமகிஷிகளையும் வரவழைத்து மண்டபத்தின் நடுவில் திவ்ய ஆசனத்தில் முதலில் தசரதரை யுட்காரவைத்து அவருக்கு இடது புறத்தில் இராமலட்சுமண பரத சத்ருக்னர்களையும் அவர்களுக்குப் பின்புறத்தில் கௌஸல்யை முதலாய ஸ்திரீகளையும் உட்காரவைத்தனர். குங்குமம் முதலிய அலங்காரங்களினால் இராஜ ஸ்திரீகளும் இராமர் முதலிய நான்கு குமாரர்களும் அநேகம் வேதியர்களோடு கூடிய வசிஷ்டமுனிவரும் அச்சபையில் அலங்காரமாக விளங்கினார்கள். அப்போது வசிஷ்ட முனிவர் தசரத மகாராஜனைக்கொண்டு விக்கினேசுவர பூசைசெய்வித்து புண்ணியாகம் முதலிய மூவகைச் சடங்குகளையும் சாஸ்திரப்படி நடத்தி, தேவகப்பிரதிஷ்டையுஞ் செய்வித்து கிராமாசாரம் குலாசாரம் விருத்தாசாரம் தேசாசாரம் பிராமதாசாரம் முதலியவைகளையும் நடத்தினார். பூர்ண கும்பங்களை எடுக்கச்செய்து மண்டப பூஜை முதலியவைகளைச் செய்தார். கௌஸல்யை முதலிய பட்ட மகிஷிகள் பச்சைநிறம் சிவப்புநிறம் மஞ்சள் நிறமுள்ள புடவைகளையும் சரிகைப் புடவைகளையும் தரித்துக் கொண்டு மண்டப அங்கணத்தில் விளங்கினார்கள். இப்பொழுது ஜனகமகாராஜன் அநேக வாத்தியங்களோடும் அரசர்களோடும் கூடி இராமர் முதலியவர்களைக் கலியாண மண்டபத்திற்கு அழைத்துவரப் புறப்பட்டு, அவ்விடம் வந்து சரிகை வஸ்திரம் இரத்தினாபரணங்கள் முதலியவைகளால் இராமர் முதலியவர்களைப் பூஜிக்க, அவைகளை

இராமர் முதலிய நால்வரும் தரித்துக்கொண்டு சந்தோஷ மடைந்தார்கள்.

பிறகு ஜனகர், இராமர் முதலான நால்வரையும் யானைகளின் மீது ஏற்றி வைத்துச் சில மாதர் பக்கங்களிலிருந்து வெண்சாமரம் வீசவும் சிலமாதர் பெண் யானைகளின் மீதேறிக்கொண்டு மங்களகரமான முத்துக்கள் கலந்த சோபனட்சதைகளை வாரி இரைக்கவும் பலவித வாத்திய கோஷங்கள் முழங்கவும், முன்னே தாசிகள் நர்த்தனஞ் செய்யவும் ஊர்வலமாக அழைத்து வந்தார். அப்பொழுது பட்டணத்திலுள்ள மாதர்கள் தத்தம் வீடுகளின் உப்பரிகைகளின் மீதேறிப் பலகணிகளின் வழியாக வெண்பொரிகளை இரைத்துக் கண்குளிரப் பார்த்துச் சந்தோஷித்தார்கள். வேலைக்காரர்கள் அழகிய மண் தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும் பூச் செடிகளைத் தலைமீது தூக்கிக்கொண்டு வரிசை வரிசையாக வந்தார்கள். பலவிதமான தெட்டிகளாலும், தக்கைகளாலும், செய்த பூச்செடிகள் கொடிகள் மரங்கள் முதலியவைகளைப் பலர் எடுத்து வந்தனர். கும்பங்களையும் கொடிகளையும் பலர் எடுத்துக்கொண்டு வந்தனர். புருசு மத்தாப்பு ஆகாயபாணம் நக்ஷத்திரபாணம், கம்பபாணம், சுழல்பாணம், சந்திரன்போற் பிரகாசிக்கும் பாணம் முதலிய பலவித பாணவேடிக்கைகள் நடந்தன. வீதிகளெல்லாம் சிறு சிறு தீபங்களாலும், விருக்ஷம் போன்ற தீபங்களாலும், சந்திரன்போன்ற தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சூத்திரங்களால் அமைக்கப்பட்ட சிங்கம், புலி முதலிய மிருகங்களும், மயில், சக்கரவாகம் முதலிய பறவைகளும், வேடிக்கைகளைச் செய்துகொண்டு வந்தன.— தேவர்கள் தமது விமானங்களில் ஏறிக்கொண்டு, ஆகாயத்தில் வந்து சந்தோஷமாக ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இவ்விதமாக இராமர் முதலிய நால்வரையும் வெகு ஆடம்பரத்துடன் ஊர்வலமாக அரண்மனை வாயிலுக்குக்கொண்டு வந்து, யானைகளின் மீதிருந்திறக்கி, அலங்காரஞ் செய்யப்பட்டிருந்த ஒரு மண்டபத்தின் கண் எழுந்தருளச் செய்தார்.

தசரத மகாராஜாவினுடைய குருவாகிய வஸிஷ்டரும், ஜனக மகாராஜாவினுடைய குருவாகிய சதாநந்தரும் வான்மீகி முதலிய முனிகணங்களுடன் கூடி மனங்களி கூர்ந்து,மதுபர்க்க விதிப்படி கிரமமாக ஆசனம் முதலியவைகளை அவர்களுக்குக்கொடுத்து உபசரித்தார்கள். வஸிஷ்டர் சொற்படி அம்மண்டபத்திலுள்ள மாதர்களுக்கு வேண்டிய மரியாதைகளைத் தசரதர் செய்தார். பின் சுப லக்கினத்தில், இராம லட்சுமண, பரத சத்ருக்னர்களை, ஸீதை, ஊர்மிளை, மாண்டவி, சுதகீர்த்தி என்கிற கன்னிகைகளுடன் முறையே பட்டு வஸ்திரங்களால் மூடிக் கலியாண வேதிகைகளின் மீது உட்கார வைத்தார்கள். அக்கலியாண மண்டபத்தில் நிறைந்திருக்கும், புருஷர்களும், ஸ்திரீகளும் மங்கள வாத்தியங்களைக் கேட்டுக்கொண்டு, வேறு வார்த்தைகளொன்றும் பேசாமல், புஷ்பங்களாலும் சோபனுக்ஷதைகளாலும் நான்கு தம்பதிகளையும் ஆசீர்வதித்து, "பார்வதிதேவியின் திருக்குமாரர்களாகிய கணபதியும், சுப்பிரமண்ய சுவாமியும் மங்களத்தைத் தரும் சங்கரரும், சூரிய சந்திரர்களும், ஆதிசேஷன் முதலிய நாகங்களும், சிங்கம், முதலிய மிருகங்களும், கங்கை முதலிய புண்ணிய நதிகளும், மானஸம் முதலிய சரோவரங்களும் புண்ணிய தீர்த்தங்களும், சமுத்திரங்களும், நதங்களும் இந்திரன் முதலிய தேவர்களும் பிரமதேவரும் தம்பதிகளுக்கு மங்களத்தை யுண்டாக்கவேண்டும்" என்று வாழ்த்தினார்கள். காசி க்ஷேத்திர பதியாகிய பரமசிவத்தின் ஸ்மரணஞ் செய்யும் சமயமே உத்தம லக்கினமென்றும் சுதினமென்றும், நக்ஷத்திர பலமுள்ளதென்றும், தெய்வ பலந்தருவதென்றும் கூறினார்கள். வஸிஷ்ட முனிவரும், சதாநந்த முனிவரும் தம்பதிகளை மூடியிருந்த பட்டு வஸ்திரங்களை நீக்கிப் பிரணவ பூர்வகமாக இவர்களுக்குப் புண்ணிய முண்டாக வேண்டுமென்று அநுக்கிரகஞ் செய்து, அந்த லக்கினத்தில் விதிப்படி, அந்நான்கு குமாரர்களைக்கொண்டு ஸீதை முதலிய நான்கு கன்னிகைகளுக்கும் பலவிதமான மங்களவாத்தியங்கள் முழங்க, பாணிக்கிரகண மஹோற்சவம் செய்வித்து லாஜ ஹோமம் முதலிய ஹோம காரியங்களையும் செய்வித்தார்கள்.

அச்சமயத்தில் தாசிகள் நர்த்தனஞ் செய்தார்கள். வந்தி மாகதர்கள் துதித்தார்கள். நடர்கள் மங்கள கீதம் பாடினார்கள். தசரதமகாராஜனும், ஜனகரும் வேதியர்களுக்குப் பலவிததானஞ் செய்தார்கள். இராமர் முதலிய நான்கு தம்பதிமார்களையும் பட்டுப் பாய்களின் மீது உட்காரவைத்துச்சந்தனம், தாம்பூலம் முதலிய சோபன திரவியங்களால் உபசரித்து, ஆலாத்தி யெடுத்துக் கௌஸல்லியை முதலிய மாதர்களுடன் போஜன சாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

பார்வதீ! போஜன சாலையில் இராமர் முதலிய நால்வரும் ஆநந்தமடைந்திருக்கும் அவர்கள் பத்தினிகளோடு உன்னையும் என்னையும் பூஜித்து மாவிலைகளைக் கொண்டு ஜலம் தெளித்துச்சுத்தம் செய்து அநேக சுமங்கிலிகள் சூழ்ந்திருக்க, ஸந்தோஷத்துடன் போஜனம் செய்தார்கள் தசரதரும் முனிவர்கள், ராஜ சிரேஷ்டர்கள், நகரவாசிகள், தேசவாசிகள் இவர்களோடு ஜனகருடைய கிரகம் சென்று சந்தோஷமாகப் போஜனம் செய்தார். கௌஸல்லியை முதலிய தேவிமார்களும் தங்கள் இஷ்ட மித்திரர்களுடன் ஜனகர் கிரகத்திற்குச்சென்றார்கள். அங்கே சுமேதை யென்பவள் பலமுறை வணங்கி அவர்கட்கு வேண்டிய உபசாரம் செய்தாள். அங்கு அவர்கள் உத்தமமான போஜனஞ் செய்தார்கள். இவ்விதமாக ஜனகர், தசரதர் முதலிய யாவருக்கும் பரமானந்த முண்டாகும்படி உபசரித்தார். பிறகு ஸ்ரீராமர் முதலிய நால்வரும் தத்தம் மனைவிகளுடன் பெரியோர்கள் சொற்படி கௌஸல்லியை முதலிய தங்கள் தாய்மார்களுடைய பாதபங்கஜங்களைச்சிரமேற் கொண்டு மனமகிழ்ச்சியோடு நமஸ்கரித்தார்கள். இப்படி வணங்கியவுடன் கௌஸல்லியை முதலிய தேவிகள் மூவரும் தம்பதிகளை ஆசனத்தில் உட்காரவைத்து மருமக்களுடைய பாதங்களுக்குக் குங்குமாதிகளால் நலங்கிட்டு, அவர்களை அவரவர் நாயகனது பக்கத்து வீற்றிருக்கச்செய்து, பார்த்து ஆநந்தமடைந்தார்கள். திவ்யபீதாம்பரதாரியாய், கருணை கடாட்ச முடையவராய், ஜகமுழுதும் தாமேயான அழகிய திருமேனிகொண்ட திரிலோக்ய சூடாமணியாய் விளங்கும் ஸ்ரீராமபிரான், ஜகதீசுவரியாகிய லக்ஷ்மிதேவியின் அம்சமான ஸீதா

பிராட்டியை இவ்வாறு மணந்து மூவுலகத்திலும் ஒப்பிடற்கரிய பெருமையை யடைந்தார். பிறகு நான்காம்நாள் இரவு மூங்கிலினாற் செய்த பாத்திரங்களில் தீபங்கள்வைத்து தம்பதிகளுக்கு நீராஞ்சனம் செய்தார்கள். ஜனக மகாராஜன் தம்பதிகளுக்கு வெகுமதியாக கணக்கற்ற வேலையாட்கள், தாதிமார், லட்சக் கணக்கான ரதகஜதுரகபதாதிகள் யாவுங்கொடுத்து மகிழ்ந்தார். இந்த வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு தசரதர், ஸ்ரீராமர் முதலானவர்களோடு பலவித வாத்திய கோஷங்கள் முழங்க யானையின் மீதேறித் தங்கள் விடுதிமண்டபத்திற்குப்போய், அந்த மிதுலா பட்டணத்திலேயே ஜனக மகாராஜனுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஒரு மாதகாலம் வசித்திருந்து, பின் சேனைகள் புடைசூழ வாத்தியங்கள் முழங்க, ஸ்ரீராமர் முதலானவர்களோடும் மருமக்கள் மார்களுடனும், அயோத்திக்குப் புறப்பட்டார். அப்பொழுது ஸீதை முதலானவர்கள் தங்கள் தாய்தந்தையர்களைப் பிரிவதால் மனவருத்தங்கொண்டார்கள். அவர்களைச் சுமேதை பெண்பவள் ஆலிங்கனஞ் செய்து தேற்றிச்சந்தோஷப்படுத்தி யனுப்பினாள். தசரத மகாராஜன் தம்மை வழியனுப்பக் கூடவந்த ஜனகமகாராஜனை அவருடைய பட்டணத்திற்குத் திரும்பும்படி விடைகொடுக்க, அவர் மனங்கலங்கிக் கண்களினின்று நீர்ததும்ப நின்று சிறிது முகம் வாட்டமுற்றுத் தசரதரைப் பார்த்து, "இதுவரையில் ஸீதை முதலானவர்களை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தேன்; இனிமேல் தமது கருணையை அவர்கள் மேல் வைத்து, ஆதரிக்க வேண்டுகிறேன்" என்று உபசார வார்த்தைகூறி அவரிடம் விடைபெற்றுத்திரும்பினார்.

தசரதர் தமது மக்கள், மனைவிகள் மருமக்கள் இவர்களுடன் சேனைகள் புடைசூழ, ஸ்ரீராமபிரானை முன்னிட்டுக்கொண்டு மிதுலா நகரத்தைவிட்டு மூன்று காத தூரம் வந்ததும், அநேக அபசகுனங்களுண்டாயின. இதைக் கண்டதும் தசரதர் மனதிற் கிலேச முற்று அருகில் வீற்றிருந்தும் வஸிஷ்ட மகா முனிவரைப் பார்த்து வணங்கி "சுவாமி! கெட்ட சகுனங்கள் உண்டாகின்றனவே! இப்படி உண்டாவதற்குக் காரணம் யாது?"—என்று வினவ, வஸிஷ்டர் "தசரத! இந்தக்கெட்ட சகுனங்கள் இனிவரப்போகின்றதீங்கைத் தெரிவிக்கின்றன. ஆயினும், இதோ! மான்

முதலியவைகள் உம்மைச் சுற்றிப் பிரதட்சிணமாகப் போகின்றன வல்லவா? இதனால் அத்தீங்கிலிருந்து க்ஷேமமுண்டாகுமென ஊகிக்கவேண்டும்" என்று கூறினர். உடனே பிரசண்டமாருதம் போன்ற ஒரு பெருங் காற்றானது ஆகாயமும் பூமியும் ஒன்றாகு மாறு மண்களை வாரி யிறைத்துக்கொண்டு வீசியது. இதனால் தசரதர் முதலிய எல்லோரும் தங்கள் கண், காது, மூக்கு முதலியவைகளில் மண்படிந்து தொந்தரவடைந்து பின் இதென்ன விபத்தோ தெரியவில்லையென மலைத்தனர். உடனே திடீரென்று தசரதர் முன் கார்த்தவீரியார்ச்சுனனைக்கொன்றவரும் மதங்கொண்ட அரசர்கள் யாவரையும் இருபத்தொரு முறை அழித்தவரும் அசகாய சூரருமான பரசுராமர், மகாதேஜஸோடு கூடிய நீலமேகத்தை யொத்த நிறமுடையவராய் ஜடா மண்டலதாரியாய் ஒரு கையில் பரசும், ஒரு கையில் தநுஸுங் கொண்டு பிரமிக்கத்தக்க உயரமான திருவுருவத்தோடு கண்களில் தீப்பொறிபறக்க, முகத்தில் கோபாக்கினி ஜொலிக்க, யமதர்ம ராஜனெனத் தோன்றி நின்றார். அவரைப் பார்த்ததும் தசரதர் பயந்து நடுக்கங்கொண்டு அவ்ருக்குச்செய்யவேண்டிய அர்க்கிய பாத்திய ஆசமனீயாதி உபசாரங்களைமறந்து, "என்னைரக்ஷிக்கவேண்டும் ரக்ஷிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே நீண்ட மரம்போலச் சாய்ந்து தரையில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து "என் மக்களுக்குப் பிராண பிச்சை தரவேண்டும்" என்று அஞ்சலிபஸ்தராய் நின்று வேண்டினார். இப்படிப்பயந்து வணங்கி நின்ற தசரதரை இவர்பொருட்படுத்தாமல்,பஞ்சேந்திரியங்களுந் துடிக்கக்கோபங்கொண்டு இராமரிடம் சென்று அவரைப்பார்த்து "க்ஷத்திரியர்களுக்குள் அதமனே! இராமனென்ன எனது நாமத்தையே நீயும் புனைந்து, கர்வமடைந்திருக்கின்றாய்! நீ உத்தம அரசனாயின் என்னோடு இப்பொழுதே மல்யுத்தஞ் செய்யவா" என்றுகூறி, "வலுவற்ற பழைய தநுஸை முறித்தேதாமென்று கர்வங்கொள்ளாதே; இதோ என் கையிலிருக்கும் விஷ்ணு தநுஸை நீ நாணேற்றி, உன் புஜபலத்தைக் காட்டு பார்ப்போம். பிறகு யுத்தஞ் செய்வோம்; நீ இந்த வில்லை நாணேற்றுவிடின், நான் க்ஷத்திரியாந்தகனானதால் இந்த

க்ஷணத்தில் உங்களெல்லாரையுங் கொன்று விடுவேன்" என்றார்; இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் ஸ்ரீராமர் பரசுராமரைப் பார்த்து, தேவர்கள், பசுக்கள், ஸ்திரீகள், பிராமணர் இவர்களை எதிர்த்து, ஆயுதம் ஏந்துவது ரகுவம்சத்தவராகிய எங்களுக்கு வழக்கமல்ல; நாங்கள் பூஜிக்கத்தக்கவராகிய பிராமணோத்தமரே! உம்முடைய பாதார விந்தத்தில் எங்களெல்லோருடைய பிராணன்களையும் அர்ப்பணம் செய்துவிட்டோம். இஷ்டப்படி செய்யலாம், நாங்கள் வில் எடுக்கமாட்டோம்" என்று சொல்ல பரசுராமருக்கு மிகுந்த கோபம் உண்டாய்விட்டது. அந்தக் கோபத்தால் பூமி நடுங்கிற்று. சப்தசாகரங்களும் கலங்கின. எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. இதைக் கண்ட தசரதராமரும் மிகக் கோபங்கொண்டு பரசுராமரை விழித்துப் பார்த்து, அவர்கையி லிருக்கும் தநுஸைப் பிடுங்கி நாணேற்றி, அம்புறாத் தூணியி னின்று ஒரு அம்பை எடுத்து அதை வில்லிற் பூட்டி, இழுத்து "பிராமணோத்தமரே! இராமன் தொடுத்த அம்பு வீணாய்ப்போகாதாதலால், தமது பாதார விந்தத்தையோ அல்லது பரலோகத்தையோ இதற்கு இலக்காகக் காண்பியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார்.

இப்படிச் சொல்லவே பரசுராமர் முக வாட்டமுற்றுத் தமது பூர்வவிர்த்தாந்தங்களை நினைத்து, ஸ்ரீராமரைப்பார்த்து, 'மகா வீரராகிய இராமா! உம்மை ஈசுவரனென்றும் அநாதி புருஷராகிய விஷ்ணுவென்றும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய மூன்றுக்கும் காரணமானவரென்றும் யான் அறிவேன்; கார்த்த வீரியார்ச்சுனனைக்கொல்வதற்காகவும் பூபாரத்தைக் குறைப்பதற்காகவும் அவதரித்த ஸ்ரீமந் நாராயணனுடைய அம்சமாகிய யான் அந்த நாராயணனைப் பிரத்தியட்சமாய் அடைய, எனது வாலிபத்திலே கௌதம நதியில் நாக தீர்த்தத்தில் அருந்தவம் புரிந்தேன். எனது அருந்தவத்திற்கு மகிழ்ந்து நாரயண மூர்த்தி, சங்கு சக்கர கதாதாரராய் முகமலர்ச்சியோடு என் முன் பிரஸன்னமாகி, "அந்தண! உனது தவம் பலித்தது, நீ எனது அம்சமாகையால் உனது தந்தையைக் கொன்ற கார்த்த வீரியனைக் கொன்று, பிறகு இருபத்தொரு முறை க்ஷத்திரியக் கூட்டத்தை அழித்துப் பூமி முழுவதும் உனது சுவாதீனமாக்

கிக்கொண்டு, பின் இப்பூமியைக் கசியபருக்குத் தானஞ்செய்து, நீ ஒழிவைப்பெறுவாய்; வரும் திரேதாயுகத்தில் நான் தசரத ராமனுகப் பூமியில் அவதரிப்பேன். அப்பொழுது நீ என்னைப் பக்தியோடு பார்ப்பாய். உன்னிடத்தில் வைத்திருக்கும் எனது சக்தியை அச்சமயம் மீண்டும் யான் எடுத்துக்கொள்வேன். பிறகு நீ தவஞ்செய்துகொண்டு பிரமனுடைய ஆயுட்காலத்தில் ஒருநாளிருப்பாய்"—என்று அநுக்கிரகித்து, அந்தர்த்தானமாயினர். ஆகையால் அவருடைய கட்டளைப்படி யான் நடத்தி விட்டேன். பிரமதேவனுடைய பிரார்த்தனையினுல் அவதரித்த, விஷ்ணுவே நீர் ஆகையால், முன் என்னிடத்தில் வைத்திருந்த உமது சக்தியை நீர் பெற்றுக்கொண்டது யுக்தமே; இப்பொழுதுதான் என் ஜன்மம் சபலமடைந்தது. என்னிலும் நீரே பேர்பெற்றவர், நீரே உலக நாயகர், நீரே பக்த பராதீனர், நீரே பரமகாருண்ய மூர்த்தி, உமக்கு அநேக வந்தனம் தருகின்றேன்! இராமசந்திரா! புண்ணியலோகத்தை யடைவதன் பொருட்டு யான் இயற்றிய தவமுழுதும் உமது பாணத்திற்கே அர்ப்பணஞ் செய்து விட்டேன்" என்று கூறினுர். பிறகு ஸ்ரீராமர் பரசுராமருடைய சத்கர்மங்கள் யாவையும் தமது பாணத்திற்கு இரையாகக்கொண்டு கருணை கூர்ந்து முகமலர்ச்சி யடைந்து உமக்கு வேண்டிய வரங்களைக் கேளுமென்று பரசுராமரைப் பார்த்துக் கூறினுர். பரசுராமர் மனமுவந்து "இராமா! எனது பக்தியானது உமது பாதத்திலும் எனது நேசமானது உமது பாதபக்தர்களிடத்திலும் சாஸ்வதமாக இருக்கவேண்டுகிறேன்" என்று பிரார்த்தித்தார். ஸ்ரீராமர் அவ்விதமே ஆகுகவென அநுக்கிரகிக்க, அவரை வலம் வந்து நமஸ்காரஞ் செய்து அவரிடம் மரியாதை பெற்றுக்கொண்டு அநுமதி கொடுத்த பின் மகேந்திர பர்வதஞ் சென்றுர். ஏ பார்வதி! சமஸ்த தேவர்களையும் ஜயித்துக் கர்வங்கொண்டிருந்த இராவணனைக் கட்டிய ஆயிரங் கைகளுடைய கார்த்த வீரியனைப் போரில் ஒரு நிமிஷத்தில் வென்ற பரசுராமனுடைய கையில்லை வாங்கி நாணேற்றி அதில் ஒரு அம்பு தொடுத்து அவரை ஜெயித்த ஸ்ரீராமனுடைய சாமர்த்தியத்தை யான் என்னென்று சொல்வேன்! பிறகு தசரதர் இந்தப் பெரும் ஆபத்திற்குத் தப்பிப்

பிழைத்த இராமனை, இறந்தவன் மீண்டும் உயிர் பெற்றதுபோலப் பாவித்துக் கட்டித் தழுவி மனக்கலக்கமொழிந்து, கண்களினின்று ஆநந்த பாஷ்பம் சொரிய சந்தோஷமடைந்து அவ்விடமிருந்து அயோத்திக்குப் புறப்பட்டார்.

தசரதர் முதலானவர்கள் அயோத்தியாபுரிக்குச் சமீபமாய் வந்ததும், அதை யறிந்த தசரதருடைய மந்திரி சுமந்த்ரன், அயோத்தியைக் கொடிகளாலும் தோரணங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கும்படி செய்து, தான் பட்டத்து யானைகளுடனும் வாத்திய கோஷத்துடனும் புறப்பட்டு அவர்களை எதிர்கொண்டழைக்கச் சென்றான். தசரதர் தமது மந்திரி சுமந்த்ரன் அலங்கரித்துக் கொண்டுவந்த பட்டத்து யானைகளில் இராமர் முதலிய நால்வரையும் அவர்கள் பத்தினிகளுடன் ஏற்றி வைத்துக்கொண்டு, மங்கள வாத்தியங்கள் முழங்கவும் வந்தி மாகதர்கள் துதிக்கவும் பாடகர்கள் பாடவும் பட்டணப் பிரவேசஞ்செய்து ஊர்வலம் வந்து, தமது அரண்மனைக்குச் சென்று அரண்மனையில் லக்ஷ்மி தேவிக்குப் பூஜைசெய்வித்து, வேதியர்களுக்குப் பலவிதமான தானங்கள்செய்து மகிழ்ந்தார். அப்பொழுது அவ்விடம் வந்திருந்த தசரத மகாராஜனுடைய மித்திரர்களாகிய அரசர்கள் வஸ்திராபரணங்களைத் தசரதர், இராமர் முதலிய நால்வருக்குங் கொடுத்து, மரியாதை செய்தார்கள். அவர்கள் மரியாதைகளைத் தசரதர் மனமுவந்து ஏற்றுக் கொண்டு, பின் அவரவர்களுக்குத் தக்கபடி பதில் மரியாதைகளைத் தாமுஞ் செய்தார். அவ்வரசர்கள் அந்த மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் பட்டணங்களுக்குச் சென்றார்கள். தசரதர் தமது மைத்துனனுகிய யுதாஜித்தை மட்டும் அனுப்பாமல் நிறுத்திக்கொண்டார். பின் ஸ்ரீராமர் முதலிய நால்வரும் அவரவர் மனைவிமார்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்விதமாகப் பரமசிவன் பார்வதிதேவிக்கு ஸ்ரீராமருடைய ஜனன காலமுதல் விவாகம் வரையில் கூறியருளியதும், பார்வதி தேவியார் தமது நாயகனைப்பார்த்துப் "பிராணேசா! பரசுராமர் மகாவிஷ்ணுவினுடைய அம்சமென்றீர், அதுபோல் ராகவரும் அந்த மகா விஷ்ணுவினுடைய சித்அம்சந்தானோ என்பதை விளக்கி என் சங்கையைத் தீர்த்தருளும்" என்று கேட்டார். பரமசிவன் மனமுவந்து "பார்வதி! விஷ்ணுவினது அவதாரங்களில் எட்டு அவதாரங்கள் அவருடைய சில அம்சங்களேயாம். மற்ற இரண்டு அவதாரங்களாகிய இராமகிருஷ்ண அவதாரங்களே பூர்ணவதாரமாம். ஆகையால் இவ்விரண்டு அவதாரங்களே அவைகள் எல்லாவற்றிலும் மேன்மையானவை. அந்த இராம கிருஷ்ணர்களுள் இராமரே ஸத்தியஸந்தரும் ஜிதேந்திரியருமானதால், அவரே அவ்விருவருள் மேலானவரென் றறிவாய்! மற்ற யாவரும் அவருக்கு ஒப்பாகார். கிருஷ்ணன் கறுத்த நிறமுள்ளவர். ஸ்ரீராமர் ருக்மநிறமுள்ளவர். பார்வதி! இந்தச் சருக்கத்தைக் கேட்டவர்கள் சர்வமங்களங்களையும் பெறுவார்கள்.

3-வது சருக்கம் முற்றிற்று.

4-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

ஸ்ரீராமர் அயோத்தியில் தசதராருக்குவேண்டிய பணிவிடை செய்துகொண்டு ஸீதாதேவியுடன் பலவிதமான போகங்களை அனுபவித்துக்கொண்டு சுகமாக வாழ்ந்து வரும் நாளில், ஜனக மகாராஜன் சரத்ருதுவில் ஐப்பசி மாதத்தில் வரும் தீபாவளி மகோற்சவத்திற்கு தசரதமகாராஜாவை யழைத்து வருவதற் காகத் தமது மந்திரிகளை யனுப்பினார். அவர்கள் அயோத்தியா பட்டணம் சென்று தசரதரைக் கண்டனர். தசரதர் அவர்களுக் குத் தக்க மரியாதை செய்து, "நீங்கள் வந்த காரணம் என்ன" வென்று கேட்க, அதற்கு அவர்கள் "வருந் தீபாவளி உற்சவத் திற்குத் தங்கள் மித்திரராகிய ஜனகர் தங்களைத்தங்கள் குடும்ப சகிதமாயும் இஷ்டமித்திர பந்துஜனங்களுடனும் அழைத்துவரச் சொன்னார்" என்றனர். தசரதர் தூதர்களை வரவழைத்து "நாம் தீபாவளி உற்சவத்திற்கு மிதுலா பட்டணம் போகிறோம் என் பதை நமது பட்டணத்துள்ள ஜனங்களுக்கும் தேசமன்னர்களுக் கும் தெரிவித்து அவர்களும் நம்மோடு புறப்பட வேண்டுமென் பதையுந் தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டார்.

பிறகு ஒரு நல்லமுகூர்த்தத்தில் தசரதர் ரதகஜ துரகபதாதி களுடன் தமது நகர வாசிகளும் தேசமன்னர்களும் புடைசூழ யானையின் மீதேறி மிதுலைக்குப் பிரயாணப்பட்டார். அவருக்குப் பின்னை இராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்களும் அலங்கரித் துக்கொண்டு யானைகளின் மீதேறிப் பிரயாணப்பட்டார்கள். இவர் களுக்குப் பின்னால் கௌஸல்யை முதலிய பட்ட மஹிஷிகளும் ஸீதை முதலிய மருமக்களும் திவ்விய அலங்காரஞ்செய்த பெண் யானைகளின் மீதேறிக்கொண்டு தாதிகள் புடைசூழப் புறப்பட் டார்கள். இவர்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு தசரதர் மிதுலா பட்டணத்துக்குச் சமீபம் வர, அதையறிந்த ஜனகர் தமது பட்டணத்தாருடனும் வாத்தியகோஷத்துடனும் தசர தரை எதிர்கொண்டுசென்று வரவேற்றுப் பட்டணப் பிரவேச மாக அழைத்துச் சொன்றனர். அப்போது, தெருக்களில் தாசி

கள் நர்த்தனஞ் செய்தார்கள். பாடகர் பாடிப்புகழ்ந்தார்கள். பட்டணத்து மாதர்கள் தத்தம் வீட்டு மேல் மாடிகளிலிருந்து, புஷ்பமாரி பொழிந்தார்கள். இவ்வித கோலத்துடன் ஜனகர் தசரதர் முதலானவர்களைத் தமது நகரத்துக்குள் அழைத்து வந்து அவர்களுக்கென்று திட்டப்படுத்திச் சகல வஸ்துக்களும் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும் மாளிகையில் அவர்களை எழுந்தருளச்செய்து யாவருக்கும் ஸந்தோஷத்துடன் திவ்யபோஜனம் செய்வித்து, வஸ்திராபரணங்களளித்துரத்னதீபங்களால்,நீராஞ்சனம் செய்து உபசரித்தார். பிறகு அன்றிரவு தசரதர் முதலிய யாவர்க்கும் மங்கள ஸ்நானமும் விருந்துஞ் செய்வித்து, இராமர் முதலிய மருகர்களுக்கு இரதகஜதுரகபதாதிகளையும் வெகுமதியாகக்கொடுத்து, எல்லாரையும் ஸந்தோஷப்படுத்தினார். இவ்விதமாகவே கௌஸல்யாதி தேவிமார்களுக்கும் ஸீதைமுதலிய தமது பெண்களுக்கும் அயோத்தியிலிருந்து வந்திருக்கும் மற்றவர்களுக்கும் வஸ்திராபரணாதிகள் அளித்துச் சந்தோஷப்படுத்தினார். ஆதிகாலத்தில் மகாபலி இராஜ்யத்தில் கொண்டாடின உலகத்துக்கு ஆநந்தகரமான இந்தத் தீபாவளி மகோற்சவத்தை பட்டணத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் மங்களகரமாக அனுஷ்டித்து மிதிலையை மகாபலியின் ராஜ்யத்திற் கொப்பாகச் செய்தார்கள்.

இந்த மகோற்சவமுடிந்ததும் தசரதர் தமது சேனைகளுடனும் மித்திரர்கள் இராமர் முதலிய எல்லோருடனும் மிதிலையிலிருந்து புறப்பட்டு வரும் வழியில், முன் ஸீதையினுடைய சுயம்வரத்தில் அவமானமடைந்த அரசர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, சைன்னியங்களுடன் புறப்பட்டுவந்து, தசரதரை எதிர்த்தார்கள். இதைக் கண்டதும் தசரதர் தமது மந்திரிமார்களிடம் கவலை கொண்டு யோசிக்க, அப்பொழுது ஸ்ரீராமர் தமது தந்தை கவலை கொண்டு வருத்தப்படுகிறார் என்பதை யறிந்து, அதிசீக்கிரத்தில் லக்ஷ்மணருடன் அவரிடஞ்சென்று, அவரை வணங்கி "பிதாவே! நானிருக்கும்போது உமக்கேன் மனக்கவலை? நிமிஷத்தில் இவர்கள் யாவரையும் அதமாக்கிவிடுகின்றேன்: என் தைரியத்தை நீர்

பாரும்" என்றுசொன்னார். இப்படிச்சொன்ன ஸ்ரீராமரைத் தசரதர் மகிழ்ச்சியொடுஆலிங்கனஞ்செய்துகொண்டு "அப்பா! நீ ஆறு வயது குழந்தையல்லவா? இவர்களுடன் நீ யுத்தம் செய்ய விரும்புவது தகுமோ? இக்காட்டில் துஷ்டர்களாகிய அரசர்கள் என்னை எதிர்த்திருக்கிறார்கள். ஆகையால் நானே அவர்களோடு யுத்தம் செய்கிறேன். நீ சேனை முதலியவைகளைக் காத்துக்கொண்டிரு" என்று சொன்னார். இதைக் கேட்டதும் இராமர் தந்தையைப்பார்த்து, "நானே யுத்தம் செய்கிறேன். அப்பொழுது என் சக்தி குறைந்ததாக உமக்குத் தோன்றுமாயின் நீர் வந்து உதவிசெய்யலாம். அதுவரையில் நீர் இவ்விடத்திலேயே என் சொற்படி உம்முடைய சேனைகளையும் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொண்டிரும்" என்று சொல்லித் தமது தந்தையை வணங்கி, வில்லை இழுத்துக் கட்டிக்கொண்டு இரதமேறி யுத்தத்திற்குப் புறப்பட்டார். இதைப்பார்த்து லட்சுமணனும் அவனைப்பார்த்து பரதனும் அவனைப்பார்த்து சத்ருக்னனும் அவரவர் ரதமேறி யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள்.

இவர்கள் புறப்பட்டுப்போய் எதிரிகளைச் சந்தித்த உடனே ஸ்ரீராமர் அவர்களை எதிர்க்கத் தமது சைன்னியங்களில் பதினாயிரக்கணக்காக முன் செலுத்தினார். இவர்களைப்பார்த்த எதிரிகள், "இதோ இராமன் தன் தந்தையினுடைய இரதத்திலேறி வந்துவிட்டான், இதோபெரிய உயர்ந்தமரமொன்று கிளைகளோடு தெரிகிறதே, அதுதான் தசரதனுடைய ரதத்தின் மேலிருக்கும் கோவிதாரத்துவஜம், அவ்விரதத்தில் தசரதருடைய உத்தரவுப்படி அநேக ஆயுதங்கள் நிறைந்திருக்கின்றன பாருங்கள்; அந்த உயர்ந்ததுவஜத்தில்கொடிகள் அநேகம்பறக்கின்றன பாருங்கள்" என்று இவ்விதம் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு யுத்தத்திற்கு ஆரம்பித்தனர். பின்னர், இருவர் சைன்னியங்களும் அஸ்திரம் சஸ்திரம் பிண்டிபாலம் சதக்னி முதலிய ஆயுதங்களைக்கொண்டு அகோரமான யுத்தஞ்செய்ய, அரசர்கள் யாவரும்ஸ்ரீராமரை எதிர்த்து ஆகாசமெங்கும் பரவச்சரமாரி பொழிந்தார்கள். அதைக் கண்டதும் லட்சுமண பரத சத்ருக்னர்கள் மூவரும் இராமரிடம் அதிவேகமாக வந்து அவருடன்சேர்ந்தனர். பின் இருதிறத்தாரும் ஸ்ரீ சுப்ரமண்யருக்கும் தாரகனுக்கும் நடந்த அகோர

யுத்தம் போல் யுத்தம் செய்தார்கள். பிறகு எதிரிகள் யாவரும் பரதனுடன் எதிர்த்து அவனைச் சஸ்திரங்களால் அடித்து மூர்ச்சையடையச்செய்ய அவன் இரதத்திலிருந்து கீழே விழுந்தான். அப்பால் சத்துருக்னனுடன் போர் செய்து அவனையும் இரதத்தை விட்டு வீழ்த்தி, லட்சுமணனை எதிர்த்துப் பாணங்களால் அடித்து அவனை மனங்கலங்கும்படி செய்து விட்டுக் கடைசியில் ஸ்ரீராமனை எதிர்த்துப் பாணப் பிரயோகஞ் செய்தார்கள். இவைகளனைத்தையும் கௌஸல்யாதி தேவிகளும் ஸீதை முதலியவர்களும் சேனைகளுக்கிடையே காணும் சந்துகளின் வழியே பார்த்துக்கொண்டிருக்க, ஸ்ரீராமபிரான் தமது வில்லைக்குனாத் தொனிசெய்து, அதில் வாயுவாஸ்திரத்தைப் பூட்டிப்பிரயோகித்தார். அந்த அஸ்திரமானது, பிரசண்டமாருதமாகக் கிளம்பி, பகை யரசர்கள் யாவரையும் காய்ந்த சருகுகள்போல் ஆகாசத்திற்குக் கொண்டுபோய், அங்கிருந்து சமுத்திரக் கரையில் சேர்த்துவிட்டது. எஞ்சிய சைன்னியங்களையும் மோகனாஸ்திரம் விடுத்து மூர்ச்சை படையச்செய்ய; அவைகள் கீழேகிடந்து புரண்டன.

இப்படி யிருக்கையில், மூர்ச்சை போயிருக்கும் பரதனைப் பார்த்த கைகேயி பானையிலிருந்து திடீரென்று குதித்து, பரதனிடம் சென்று, அவனை மடியில் வைத்துக்கொண்டு பிரலாபித்தாள். அதைப்பார்த்து தசரதர் கௌஸல்யை முதலானவர்களும் பரிதபிக்க, ஸ்ரீராமர் அவர்களுக்குச் சமாதானஞ் சொல்லி லட்சுமணனை யழைத்து, "இதோ கொஞ்ச தூரத்தில், மூத்கல முனிவருடைய ஆசிர மிருக்கின்றது அங்கே அம்முனிவருடைய மகிமையால் சஞ்சீவினி முதலியகொடிகளிருக்கின்றன. அவைகள் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியவைகள். அவைகளைச் சீக்கிரம் எடுத்துக்கொண்டுவா" என்று சொல்ல, லட்சுமணர் "ஆகா! அப்படியே ஆகட்டும்" என்று முனிவர் ஆசிரமத்திற்கு வேகமாகச் சென்று, அம்முனிவருடைய சிஷ்யர்களை விசாரித்தார். அவர்கள் "இப்பொழுதுமுனிவர் சமாதியிலிருக்கின்றார். அவர் எழுந்திருந்தும் அவருடைய உத்தரவுபெற்று வேண்டியதைக்கொண்டுபோ;

நாங்கள் அதை உனக்குக் கொடுக்கச் சுதந்தரர்களல்லர்" என்று தடுத்தனர். அப்பொழுது லட்சுமணர் "அந்தோ! பொழுதாகிறதே, என்று எண்ணித் திரும்பவும் இராமனிடம் சென்று, சங்கதி தெரிவிக்க, அதற்கு இராமர் "தம்பி இலட்சுமணா, நீ அவ்விடம் சென்று அந்த முனிவர்க்கேனும் அவருடைய மாணவர்களுக்கேனும் யாதொரு தொந்தரவும் கொடுக்காமல், கொடிகளை மட்டும் பறித்துக்கொண்டுவா" என்று கூறி அனுப்பினார். இலட்சுமணர் மறுபடியும் அவ்வனமடைந்து சீடர்களுக்குச் சமாதானங் கூறிக் கொடிகளைப் பலாத்காரமாக எடுத்துக்கொண்டு இராமரிடம்வந்து சேர்ந்தார். அக்கொடிகளைக்கொண்டு ஸ்ரீராமர் பரத சத்ருக்கனர்களை மூர்ச்சை தெளிவித்தார்.

இதைக்கண்டதும் கைகேசி தசரதர் முதலிய யாவரும் சந்தோஷமடைந்து, இராமரைத் தழுவி அவரைப் புகழ்ந்து பின் பரதனையுங் கட்டிக்கொண்டு மகிழ்ந்து வசிஷ்டரையும் பிராமணர்களையுங்கொண்டு, அங்கே ஒரு மகோற்சவம் வெகு விமரிசையாக நடத்தினார்கள்.

இது இங்ஙனமிருக்க, முத்கல முனிவருடைய மாணவர்கள் தங்கள் முனிவர் சமாதியினின்று எழுந்ததும், லட்சுமணன் ஓஷதிகளைக்கொண்டுபோன சங்கதியை ஆரவாரித்துக்கொண்டு அவருக்குத் தெரிவித்தனர். அதைக்கேட்ட முத்கல முனிவர், ஆச்சரியமடைந்து மாணவர்களைப்பார்த்து, "இலட்சுமணனென்பவன் யாவன்? அவன் யாருடைய ஆக்ஞையை மேற்கொண்டு நமது ஆசிரமம் வந்தான்; எதற்காக நமதனுமதியின்றி ஓஷதிகளைக் கொண்டுபோனான். என்பதை சீக்கிரமாகச் சென்று விசாரித்து வாருங்கள்" என்றனுப்பினார். மாணவர்கள் "ஆகா! அவ்விதமே செய்கிறோம்". என்று முனிவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தசரதரிடம் வந்து, "நீர்யார்? எதற்காக எமதாசிரமத்திலுள்ள கொடிகளை லட்சுமணன் மூலகாகத் தருவித்தீர், காரணங்கூறும்" என்றுகோபத்துடன் கேட்க தசரதர் அவர்களைப் பார்த்துச் சிறிது ஆலோசித்து, "அந்தணர்களே! நான் தசரதன், பரதனுக்காகக்கொடிகள் வரவழைக்கப்பட்டன. இந்தச் சங்கதி

யை முனிவர்க்கு வணக்கத்துடன் தெரிவியுங்கள்; நானும் முனிவரைத் தரிசனம்செய்யச் சீக்கிரம் வருகிறேன்" என்று கூற, சீடர்கள் திரும்பவும் முனிவரிடம் சென்று, சங்கதி தெரிவித்தார்கள். முனிவர் ஸ்ரீராமருடைய தந்தை தசரதரால் மூலிகைகள் கொண்டு போகப்பட்டிருக்கின்றனவென அறிந்து, உடனே கோபந் தணிந்து, அவர்களைப்பார்க்க வேண்டுமென்று மனதில் நினைத்தார். நினைத்த அப்பொழுதே தசரதரும் முனிவர் முன்னே வந்து அஞ்சலியஸ்தராய் நின்று, பிரார்த்தித்து பின் நமஸ்க்ரிக்க, முனிவர் அவரை எழுப்பி, அவருக்குத் தக்க மரியாதை செய்து ஆசனத்திலிருக்கச்செய்தார். பிறகு இராமர் முதலியவர்களும் முனிவரை வணங்கித் துதித்து ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். கௌஸல்யாதி தேவிமார்களும் முனிவரையும் சுமதி என்னும் அம்முனிவர் பத்னியையும் நமஸ்கரித்து அவருடைய மரியாதைகளை வணக்கத்துடன் ஏற்று, ஆசனத்திலமர்ந்தார்கள். இப்பொழுது தசரதர் முனிவரை வணங்கி "சுவாமி! யான் செய்த குற்றத்தைப் பொறுத் தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். முனிவர் தசரதரைப் பார்த்து, "எனக்கு நல்ல உபகாரம் செய்தீர், நீர் இப்படிச் செய்யாவிடில், யான், மாயையால் உமக்குப் பிள்ளையாகப் பிறந்த ஸ்ரீராமரை ஸீதையுடன் காண்பது எவ்வாறேற்படும்?" என்றார். முனிவர் கோபந்தணிந்து சந்தோஷமடைந் துள்ளதைக்கண்ட தசரதர் "அடியேன் தங்களிடம் ஒருவிஷயம்பேசவிரும்புகிறேன்" என்று விநயத்துடன் தெரிவித்தார். முனிவர் சற்று யோசித்துத் தசரதருடைய விருப்பம் இன்னதெனவறிந்து, அவரைமாத்திரம் தனியே அருகிலிருந்த ஒரு துளசிக்காட்டுக்கு அழைத்துச் சென்று, அவ்விடம்உட்கார்ந்து "உமது விருப்பத்தைத் தெரிவித்தால், உடனே அதற்கு விடைதருவே"னெனக்கூறினர். தசரதர் "சுவாமி! இராமனுக்கு இனிவரப்போகும் நன்மை தீமைகள் இவைகளென்று அடியேன் அறியவிரும்புகிறேன்" என முனிவர் கூறுகிறார்.—

முத்கலர் கூறுகிறார்.

ஏ தசரத மகாராஜனே! ஸர்வவியாபகரான ஸ்ரீமந் நாராயண மூர்த்தி, உமக்கு குமாரந்திருப்பதாலும், பூபாரந்தீர்க்கக் கருதிய

தாலும் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்வதற்காகவும், அதர்மத்தை யொழித்துத் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் உமது பூர்வ புண்ணிய வசத்தால் உமக்கு அவரே ஸ்ரீராமனுகப் பிறந்திருக்கிறூர். நீர் ஸ்வர்க்கலோகஞ் சென்ற பிறகு இராமர் மகாமகிமையோடு பதினோராயிர வருஷகாலம் ஏக சக்ராதிபதியாயிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வருவார்; சப்ததீவுகளுக்கும் அதிபதியாய் விளங்குவார்; அவருக்கு இரண்டு சத் புத்திரர்கள் பிறப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு மனைவிகளை விவாகஞ் செய்துகொண்டு, 24 பிள்ளைகளையும், 12 கன்னிகைகளையும் பெறுவார்கள். இந்த 24 பிள்ளைகள் மூலமாய்க் கணக்கற்ற வம்சத்தவர் உற்பத்தியாவர். இன்னும் சிலநாட்களுக் கெல்லாம் பிருந்தையினுடைய சாபத்தை அனுபவிப்பதற்காகத் தண்டகாருண்ய வாசஞ்செய்துபிறகு மேற்கூறியபடி ராஜ்யபரிபாலனஞ் செய்வர்" என்று முத்கலமுனிவர்கூற, தசரதர் அவரைப்பார்த்து "முனிபுங்கவரே! பிருந்தை யென்பவளார்? அவள் யாருடைய மனைவி விஷ்ணுவுக்கு அவளுடைய சாபம் ஏன் சம்பவித்தது? இவைகளை எனக்குச் சொல்லியருளும்" என்று கேட்டார்.

முன்னொரு காலத்தில் பரமசிவனுக்கு ஜலந்தராசுரனுக்கும் ஒரு யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் பரமசிவன் பலவாறாக அவனை இம்சித்தும் அவன் பிழைத்திருக்க, அதைக் கண்ட பார்வதிதேவியார், விஷ்ணுவைப்பார்த்து, "இவ்வசுரன், இவனுடைய மனைவி பிருந்தை யென்பவளுடைய பாதிவிருத்திய மகிமையால் இன்னும் ஜீவித்திருக்கிறுன்" என்று குறிப்பிக்க, விஷ்ணுவானவர் உடனே, ஜலந்தராசுரனுடைய பட்டணம் சென்று பிருந்தையுடன் சுகித்து, அவள் பாதிவிருத்தியத்தைக்கெடுக்க வேண்டுமெனக் கருதினுர். அச்சமயத்தில் தன்னரண்மனையில் சுகமாக நித்திரைசெய்து கொண்டிருந்த பிருந்தை, தன் கணவன் எண்ணெய்தேய்த்துக்கொண்டு நிர்வாணத்தோடு ஓர் எருமைக்கடாவின் மீதேறிக்கொண்டு தெற்குமுகமாகச் செல்வதாகவும், அப்பொது அவன் தலையில்லாமுண்டமாகத்தோன்றி இருளில்மறைந்ததாகவும்ஒருகனவுகண்டு, திடீரென்றுவிழித்துக்கொண்டுபெருங்

கவலைகொண்டு, அக்கவலை ஒழிவதன் பொருட்டு உப்பரிகை முதலிய பல விடங்களில் உலாவினாள். உலாவியும் அக்கவலையினாலுண்டான வருத்தம் நீங்கப்பெறாமல் இரண்டு தோழிகளோடு, பட்டணத்திற் கருகாமையிலிருக்கும் உத்தியானவனஞ்சென்று, அங்கிருந்துவேறொரு வனத்திற்குச்சென்றுஇப்படிப் பலவனங்கடந்து போய்க் கொண்டிருக்கும் பொழுது, சிங்கம்போல் கர்ச்சித்துக் கொண்டுவரும் இரண்டு ராட்சஸர்களைக்கண்டு, அவர்கள் கோரப் பல்லையும் குரூரமான கண்களையும் பார்த்து மனங்கலங்கி, அவ்விடம் விட்டு வேறு பக்கம் ஓட அவ்விடத்தில் ஒரு மரத்தடியில் ஒருமுனிவர் தமது சிடன் ஒருவனோடு உட்கார்ந்திருந்தார். அவர் வெகு சாந்தமுடையவராக விருந்தமையால், பிருந்தை அவரிடம் சென்று அவரைத் தன்னுடைய கொடிபோன்ற கையால் தழுவிக் கொண்டு, "முனிபுங்கவரே! அடியேன் உம்மைச் சரணமடைந்தேன், கருணைகூர்ந்து ஏழையைக் காத்தருளவேண்டும்" என அதைக் கேட்ட அம்முனிவர், தமது தியானத்திலிருந்து எழுந்து கண்ணைத் திறந்து பிருந்தையைப் பார்த்து "குழந்தாய்! நீ பயப்பட வேண்டாம். இவ்விடம் உட்காரு" என்று கூறியவுடன், அம்மாதைத் துரத்திக்கொண்டுவரும் இரண்டுஇராட்சஸர்களையும் பார்த்துக் கோபங்கொண்டு ஹூம்! ஹூம்! என்று மிரட்ட, அவர்கள் அதற்குப் பயந்து ஓடிவிட்டார்கள்.

இப்பொழுது பிருந்தையானவள் அம்முனிவருடைய மகிமையைக் கண்டு பரமாச்சரியமடைந்து, பூமியில் விழுந்து நமஸ்கரித்துப் பின் எழுந்து "முனிபுங்கவரே! கிருபா நிதியே! அடியேனை இப்பெரும் ஆபத்திலிருந்து மீட்டு ரக்ஷித்தீர். இப்பொழுது ஒரு விண்ணப்பஞ் செய்ய விரும்புகிறேன். அதைத் தயவுடன் கேட்டுப் பதிலளிக்க வேண்டுகின்றேன்" என்று சொல்லி, "சுவாமி! எனது பர்த்தா ஜலந்தராசுரர் பரமசிவனுடன் யுத்தத்திற்குச் சென்றிருக்கிறார். அவர் யுத்தத்தில் என்ன ஸ்திதியிலிருக்கிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றாள். முனிவர் உடனே கருணைகூர்ந்து, ஆகாசத்தைப்பார்க்க, அங்கிருந்து இரண்டு வானரங்கள்இறங்கிஅவர் முன்னால் வந்துவணங்கி நிற்க, அவைகளுக்கு ஒருவித புருவசமிஞ்ஞைசெய்தார். அவை

கள் இரண்டும் அதை அறிந்து, பழையபடி ஆகாசத்தில் கிளம்பி மறைந்து, அரைக்ஷணத்திற்குப் பிறகு, கீழேவந்து முன்போலவே எதிரில் நிற்க, அவைகளின் பக்கத்தில் ஜலந்தரனுடைய தலையும் இரண்டு கைகளும் முண்டமும் கிடக்கப்பார்த்த, பிருந்தை தன் கணவன் மரணமடைந்தானென அறிந்து வருந்தித் திடீரென்று கீழேவிழுந்து மூர்ச்சையானாள். இப்பொழுது முனிவர் அவள்பேரில் தன் கைக்கமண்டல ஜலத்தைத் தெளிக்கவே,பிருந்தை மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து, கொஞ்ச நேரம் அழுதுவிட்டு, அம்முனிவரைப் பார்த்து "முனிவரே! தாங்கள் கருணைகூர்ந்து என்னாயகனைப் பிழைப்பிக்கவேண்டும், தங்களுக்கு இந்த ஜீவனைப் பிழைப்பிக்கக்கூடிய சக்தி யிருக்கின்றதென்று எனக்குத் தோன்றுகிறது" என வேண்ட அம்முனிவர், அவளைப்பார்த்து பெண்ணே! யுத்தத்தில் ருத்திரனால் கொலையுண்டவனை யாராலும் பிழைப்பிக்க முடியாது. ஆயினும் உன்பேரில் எனக்கு இரக்கம் உண்டாகிறது; ஆகையால் உன் புருஷனை உயிர்ப்பிக்கின்றேன்" என்று சொல்லி உடனே மறைய, ஜலந்தராசுரன் உயிர்பெற்றெழுந்து பிருந்தையைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டான். பிருந்தையும் தன் புருஷனைப்பார்த்து, சந்தோஷமடைந்து, அவனுடன் வெகு நாள்கூடி மகிழ்ந்திருந்தாள்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் அவனுடன் சுகமநு முடிந்த சமயத்தில், அவனை மகாவிஷ்ணு வென்றறிந்து, மிகக் கோபங்கொண்டு "விஷ்ணுவே! உன் சித்தங்கெட்டது; அதுபிறர் மனையாளை விரும்புவதிலேயே செல்லுகிறது! முன் சீடனோடு இவ்விடமிருந்த மாயாமுனியும் நீதான்; உன்னுடைய கருடனே அச்சீடன்; அதையும் நான் அறிவேன். உனக்கு முன்னால் ஆகாயத்திலிருந்து வந்திறங்கின குரங்குகளும்உன்மாயமேயாம்.அவர்கள்புண்ணியசீலன் சுசீலன்என்கிற உன்னுடைய தாசர்களென்று யானறிவேன். முன்வந்தஇராட்சஸர்களும் உன்னுடைய மாயமேயாம். அவர்கள் ஜயன் விஜயன் என்ற உன்னுடைய தாசர்களேயாவர். அவர்கள்,பூமியில்இராட்சஸர்களாகப் பிறந்துஉன்னுடைய மனைவியை அவர்கள் அபகரிப்பார். அதன் பொருட்டு நீ பலவித

மான தொந்தரையடைந்து, நீ சர்வேசுவரனாக ...ம்போது உம் குரங்குகளைச் சகாயமாகக் கொள்ளக்கடவாய், அப்பொழுது உனக்குச் சகாயமாகுங் குரங்குகளாகப் புண்ணியசீலன், சுசீலன் என்பவர்கள் பூமியில் பிறக்கக்கடவர்"—எனக் கடுஞ்சாபமிட்டுத் தன் நாயகன் ருத்திரனால் கொல்லப்பட்டா னென்பதையும் அறிந்து, உடனே அக்நிப்பிரவேசமாயினள்.

தசரத மகாராஜனே! அந்தப்பிருந்தையினுடைய சாபத்தின் படியே ஜயன், விஜயன் என்பவர்கள் இராவண கும்ப கர்ணர்களென்கிற இராட்சஸர்களாகப் பிறந்து, சமுத்திர மத்தியிலிருக்கும் இலங்காபுரியில் இப்போது வசித்து வருகிறார்கள். ஸ்ரீராமர் இனித் தண்டாகாரண்ய வாசஞ் செய்யுங் காலத்தில் பஞ்சவடி தீரத்திலிருந்து, ஜனகராஜன் புத்திரியாகிய ஸீதையை அவ்விராட்சதர்கள் கொண்டுபோய்த் தாய்போல் ஆறு மாதகாலம் பாதுகாத்து வைத்திருந்து பின், இராம பாணங்களால் அவர்கள் கொலையுண்டு அழிவார்கள். அதற்காக, இராமர் வாலியைக் கொன்று அவன் சகோதரன் சுக்ரீவனை கிஷ்கிந்தாபுரிக்கு அரசனாக்கி, அவனுடைய நட்பை யடைந்து, சமுத்திரத்தில் சேது பந்தனஞ் செய்து, அவ்வழியே இலங்கைக்கேகி அங்கிருக்கும் துஷ்ட இராட்சஸர்கள் யாவரையும் அழித்து, ஸீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்கு வருவார். பிறகு ஸ்ரீராமர் யாத்திரை, யக்ஞம் முதலியவைகளைச் செய்து சப்தத் தீவுகளையும் ரக்ஷித்து, தமது மனைவி ஸீதாதேவியுடனும் தம்பிமார்களுடனும் பந்துக்களுடனும் இராஜ்ய பரிபாலனஞ் செய்துசுகமாகவாழ்ந்துவருவார். யான் கூறிய இவ்விஷயங்கள் யாவும் இரகசியமாக உமது மனதிலேயே இருக்கட்டும். ஒருவருக்கும் வெளியிட வேண்டாம்" என்று முத்கல முனிவர் கூறினார். இப்படிச் சொல்லக்கேட்ட தசரதர் மனமகிழ்ந்து, முனிபுங்கவரைப் பார்த்து "சுவாமி! சந்தோஷமாயிற்று; எனது முன்ஜன்மம் என்ன? ஸ்ரீமந்நாராயண மூர்த்தியே எனக்குப் புத்திரனாகவும், சாட்சாத் லக்ஷ்மிதேவியான ஸீதை எனக்கு மருமகளாகவும்வர யான் செய்த புண்ணியமென்ன? இவைகளை எனக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன்" என்றார்.

முனிவர் கூறுகிறார்:—சஹ்ய மலையினருகிலுள்ள தேசத்தில் கரவீரம் என்கிற நகரத்தில், சகல தர்மங்களையு மறிந்த தர்மதத்த னென்னும் பேர்கொண்ட ஒருவேதியர் இருந்தார். அவர் அநேக விஷ்ணு விரதங்களை அனுஷ்டித்து அக்காலத்தில் விஷ்ணுவை நன்ருய்ப் பூஜித்து, துவாதசாட்சரவித்தை என்கிற வாசுதேவ மந்திரத்தை எப்பொழுதும் ஜபித்துக்கொண்டு அதிதி பூஜையும் செய்து வந்தார். அப்பொழுது ஒருநாள் கார்த்திகை மாசத்தில் ஏகாதசி தினத்தில் உபவாச மிருந்து, இரவில் கண் விழித்துவிடி யற்காலம் கோவிலிற்குப் போய் பூஜை செய்வதற்காக, பூஜைக்கு வேண்டிய உபகரணங்களோடு புறப்பட்டுப்போனார். வழியில் கோரப்பற்களோடும் குழிந்து சிவந்த கண்களோடும் தொங்கு கிற உதடு நாக்குகளுடனும் தேகாத்தியந்தமும் எலும்பு மய மான உருவத்தோடுங்கூடிய ஒரு ராக்ஷஸி கர்! கர்! என்று பயங் கரமாகச் சப்தித்துக் கொண்டு நிர்வாணமாக எதிரேவருவதைக் கண்டார். பயந்து நடுக்கங்கொண்டு, கையிலிருக்கும் பூஜை சாமான்களை அவள்பேரில் வரிசையாக எறிந்து, கடைசியாக ஹரி நாமத்தை மனதில் தியானித்துத் துளஸி தீர்த்தத்தை வீசித்தெ ளித்தார். அத்தீர்த்தம் அவ்விராட்சஸி தேகத்தில் பட்டமாத்தி ரத்தில் அவள் பாவங்களிலிருந்து விடுபட்டுத் தன் பூர்வ ஜன்ம விருத்தாந்தத்தை யறிந்து வேதியரைப் பார்த்து "ஐயா! முன் ஜன்மங்களிற்செய்த கர்மவினையால் யான் இக்கதி யடைந்தேன். இனிநற்கதி எவ்வாறு பெறுவேன்?" என்று கேட்க வேதியர் தர்மதத்தர் கருணைகூர்ந்து, துளஸிதீர்த்தத்தின் மகிமையை யுணர்ந்து, வியந்து அவ்வரக்கியைப் பார்த்து, "ஏ பெண்ணே! நீ இக்கதியை யடைந்ததற்கு எக்கருமம் புரிந்தாய்? நீ எங் கிருந்து வருகிறாய்? நீ எவ்விதமான ஒழுக்கமுள்ளவள்? இவை களனைத்தையும் எனக்குத் தெரிய விஸ்தரித்துக் கூறுவாய்— என்றுகேட்டார்.

கலகை கூறுகிறாள்.

ஐயா! சௌராஷ்டிர தேசத்தில் பிக்ஷுவென்ற பிராமண ரொருவரிருந்தார். அவரை நான் நாயகனாக அடைந்தேன். என்

பெயர்கலகை. நான் என் கணவனதுபேச்சுக்கு எதிரிடையாய் நடந்து வந்தேன். நான் ஒரு பொழுதும் என் கணவனோடு இன்பமாகப் பேசிச் சிறிதும் நன்மை செய்ததில்லை. ஒரு வேளையேனும் அன்புடன் அவருக்குத் திருப்தியாக அன்னமிட்டவளல்லள். ஒவ்வொரு நாளும் நான் பலவிதமாயும் இனிமையாகவும் பாகம் செய்வதுண்டு. ஆனால் அவைகளை நான் முந்தித் திருப்தியாகப் புசித்து விட்டுப் பிறகுதான் அவருக்குப் போஜனமிடுவது வழக்கம். இப்படி யிருக்க, ஒரு சமையத்தில் என் கணவன் தமது மித்திரனிடஞ் சென்று, அவனை, "என்னுயிர்த்தோழனே! என் மனைவி என் வார்த்தை கேளாம லிருக்கிறாளே, இதற்கு யான் என்ன செய்வேன், அதற்கொரு உபாயஞ் சொல்" என்று கேட்க, அவன் "உன் மனைவி உன் சொற் கேளாமல் என்னென்ன செய்கிறாள், அதை எனக்கு விவரிப்பாய்" என அதற்கவர் "நண்பனே! யான் எதைச் செய்கின்றேனோ அதற்கு முற்றும் விரோதமாகவே செய்து வருகிறாள்" என்று கூறினான். மித்திரன், ஒரு க்ஷணப்போது ஆலோசித்து, "நண்பனே! நீ அவளிடமிருந்து எதைவிரும்புகிறாயோ அதைச்செய்யவேண்டாமென்று எதிரிடையாகவே சொல், அப்பொழுது நீ எது விரும்புகின்றாயோ அதைச் செய்வாளென நான் நினைக்கிறேன்; அப்படியே நீ செய்" என்று ஒரு யுக்தி சொல்லியனுப்பினான். என் கணவன் "மித்திரனே! அப்படியே செய்கிறேன்" எனக்கூறிவிட்டு, எனதுகிரகம் வந்து என்னைப்பார்த்து "கலகை! இன்றையதினம் நமது கிரகத்திற்கு யாரையும் போஜனத்திற்கழையாதே! என் மித்திரன் மிகப்பொல்லாதவன்" என்று சொல்ல, நான் என் கணவனைப்பார்த்து "உமது மித்திரன் சாதுசம்மதன். ஆகையால் இன்றைக்கு அவரை அவசியம் விருந்துக்கழைப்பேன்" என்று சொல்லி விட்டு என் நாயகனது மித்திரன் வீடுசென்று அவரை விருந்துக்கழைத்து அன்று அவருக்குத் திருப்தியாக விருந்து செய்வித்தேன். அது முதல் என் கணவர் தாம் எதை விரும்புகிறாரோ அதற்கு விரோதமாகவே எனக்குக் கட்டளையிட்டுத் தம் எண்ணம் நிறைவேறப்பெற்று வருங் காலத்தில், ஒரு நாள் என் கணவனது தந்தைக்குச் சிராத்தம் வந்தது. அன்று அவர் என்னை யழைத்து "கலகை! இன்றைக்கு

எனது பிதாவுக்குச் சிராத்தம்; அதை நான் நடத்தேன்" என்று சொல்ல, நான் உடனே சிராத்தத்திற்கு யோக்கியமான பிராமணர்களை யழைத்துவிட்டு, என் கணவனைப் பார்த்து, "உமக்கு ஏன் புத்தி இவ்விதமாயிற்று? பிள்ளையாகப் பிறந்தது எதற்காக? பிதுர் சிராத்தத்தை விடத்துணிந்த நீர் எக்கதியடைவீரோ" என்று சொன்னேன். அதற்கு என் கணவன் "ஏ கலகை! இன்றையதினம் பக்குவமாக எதையும் சமையாதே; பிராமணர்களை அதிகமாக அழைக்காதே; ஒருவரே போதும்" என்று சொன்னார். நான் உடனே யோக்கியமான பதினெட்டுப் பிராமணர்களை அழைத்துவிட்டு, ஸ்நானஞ் செய்து நேமநிஷ்டையுடன் சுத்தமாயிருந்து, தகுந்த பாக்குவான்னங்களைச் செய்து சித்தப்படுத்தினேன். அச்சமையத்தில், "கலகை! இன்று நாமிருவரும் முன்னால் திருப்தியாகச் போஜனம் செய்வோம்; பிறகு மிஞ்சினதைப் பிராமணர்களுக்குப் போடுவோம்" என்று புருஷன் கூறினான். நான் அவரை நிந்தித்து, தந்தையினுடைய சிராத்தத்தன்று எவன்தான் முன்பு போஜனம் செய்து, பின் மீந்ததைப் பிராமணர்களுக்கு இடுவான், என்று சொல்லிச், சிராத்தத்தை விதிப்படி முடித்து வைத்தேன். பிறகு சிராத்த முடிவில் என் கணவன் பிண்டப்ரதானம் தர்ப்பணம் முதலியவைகளைச் செய்துவிட்டு என்னைப் பார்த்து, "கலகை! இன்றைய தினம் யான் போஜனம் செய்யேன்; பட்டினியாகவே யிருப்பேன்" எனக் கூற, நான் அவரைப் பார்த்து "சிராத்தஞ் செய்து விட்டுப் பட்டினியாயிருந்தால் திரும்பவும் சிராத்தம் செய்யவேண்டு மென்பது விதியாயிற்றே! ஆகையால் அவசியம் நீர் போஜனம் செய்ய வேண்டும்" என மன்றாடி, அவருக்குத் திவ்யான்ன போஜனஞ் செய்வித்தேன். பிறகு என் கணவன் சிராத்த பிண்டங்களை நல்ல தீர்த்தத்தில் போட்டுவாவெனத் தெய்வச் செயலாய்த் தாம் சொல்ல வேண்டிய விதத்தை மறந்து எனக்குக் கட்டளையிட்டார். நான் அப்பிண்டங்களை சௌசகூபத்திலே கொண்டுபோய்ப் போட்டுவிட்டுத் திரும்பி வந்தேன். இதை யறிந்ததும் என் கணவன் மிக வருத்தப்பட்டு, ஆ! ஆ! எனச் சொல்லி பிரமித்து நின்று ஒரு க்ஷணம் ஆலோசித்து, மறுபடி என்னைப்

பார்த்து 'அப்பிண்டங்களை அக்கிணற்றிலிருந்து எடுக்க வேண்டாம்' என்று சொல்ல, உடனே நான் அப்பிண்டங்களை அக்கிணற்றிலிருந்து எடுத்து வர, அப்பொழுது என் கணவன் "கலகை! இதை நல்ல தீர்த்தத்திலே போட வேண்டாம்" எனக் கூற உடனே நான் அன்புடன் அதைக்கொண்டு போய் நல்ல தீர்த்தத்தில் போட்டுவிட்டேன். இவ்வாறு நான் கணவன் சொல்லுக்கு எதிரிடையாகவே செய்து வர, அவர் அதைப் பொறுமல் இவள் எப்பொழுதும் கலகப் பிரியையாயிருந்து மனவருத்தமுண்டுபண்ணுகின்றுளாதலால், நாம் வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொள்வோம் என நினைத்து முயற்சி செய்தார். அதை யறிந்த நான் உடனே விஷத்தை யுண்டு பிராணனை விட்டுவிட்டேன். பிறகு எமதூதர்கள் என்னைக்கட்டி இம்சித்துக்கொண்டு போய், தர்மராஜனருகில் விட, அப்பொழுது தர்மராஜன் என்னைப் பார்த்து சித்ரகுப்தனை யழைத்து, "சித்திரகுப்தா! இவள் செய்த பாப புண்ணியங்களைத் தெரிவி" எனச்சித்திரகுப்தன் "ஏ தர்மராஜ! இவள் சிறிதும் புண்ணியமென்பதே செய்யவில்லை. இவள் தினம் சமையல் செய்வதும் முந்தித்தான் புசிப்பதுமாகவேயிருந்தாள். கணவனுக்குப் பிறகுதான் அன்ன மிடுவள். அப்பாபத்திற்காகத் தன் மலத்தையே புசிக்கும் வல்கு என்னும் பிராணியாகப் பிறக்கவேண்டும். இவள் கணவன் சொற்கேளாமல் கலகம் செய்து வந்தபடியால், மலம்புசிக்கும் பன்றியாகப் பிறக்கவேண்டும். மேலும் சமையல் செய்த பாத்திரத்திலேயே இரகசியமாக இவள் புசித்துவந்தமையால், பெற்ற சிசுக்களைப் புசிக்கும் தன்மையுள்ள பூனையாகப் பிறக்கவேண்டும். தன் கணவன் வேறொரு பெண்ணைக் கல்யாணஞ் செய்ய யத்தனித்த நிமித்தம் இவள் பிராணத்தியாகம் செய்து கொண்டமையால், பிரேத சரீரமாகவே சிலகாலம் இருக்கவேண்டும். பிறகு நமது தூதர்களைக்கொண்டு இவளை ஒரு பாலைவனத்திலே தள்ளிவிடச் செய்யவேண்டும். அங்கேயும் இவள் பிரேத சரீரத்தோடு அநேக நாளிருந்து, பின் மூன்று ஜன்மமடைந்து? அந்த ஜென்மங்களிலும் பாபமே புரிந்து வரவேண்டும்"—என்று கூறினன். ஆகை

யால் அவ்விதமே எனக்குப் பிரேத சரீரத்தைக்கொடுத்து, ஒரு பாலைவனத்தில் தள்ளிவிட்டுத் தூதர்கள் எமலோகம் சென்றார்கள். அப்பாலைவனத்தில் என் பாபகர்மத்தாலேற்பட்ட பிரேத சரீரத்தோடு பதினைந்து வருஷகாலம் பசிதாகங்களால் மிகுந்த வருத்தமடைந்து, பின் அங்குச்செத்துக்கிடந்த செட்டி ஸ்திரீயின் சரீரத்தில் பிரவேசித்து, தென்தேசம் சென்று கிருஷ்ணை, வேணி, என்கிற இந்நதிகளின் சங்கம ஸ்தலத்தை யடைந்து அந்நதிக் கரையில் வசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சில வைஷ்ணவர்களும் சைவர்களும் சேர்ந்து என்னை அச்சரீரத்தை விட்டு விலகும்படி செய்து வெகுதூரம் துரத்திவிட்டார்கள். பிறகு பசித் தொந்தரவோடு, பூமியில் திரிந்துகொண்டு இவ்விடம் வர, உம்மைக்கண்டேன். உமது திருக்கரத்தினால் வாரித் தெளித்த துளஸிதீர்த்த மகிமையினால், நான் சகல பாபத்தினின்றும் விடுபட்டேன். இப்பொழுது எனக்கிருக்கும் இப்பிரேத சரீரம் எவ்வாறொழியும்? இனி மூன்று ஜன்மங்களும் என்னைத் தொடர்ந்திருக்கும் வகை என்ன? உம்மைச் சரணமடைந்த அடியேனைக் கிருபைகூர்ந்து, காத்தருள வேண்டும்" என்றாள். இது கேட்டுத் தர்மதத்தர், அவ்வரக்கியினுடையபாபகர்மங்களை நினைத்துப் பயந்து ஆச்சரியமடைந்து, அவள் வருந்துவதைப் பார்த்து மனமிரங்கிச் சற்று ஆலோசித்துப் பின் வருமாறு சொல்லுகிறார்.

4 வது சருக்கம் முற்றிற்று.

5-வது சருக்கம்

தர்மதத்தர் கூறுகிறார்.

தீர்த்தம் தானம் விரதம் முதலியவைகளால் பாபம் யாவும் நசித்துவிடும். ஆனால் நீ இப்பிரேத சரீரத்திலிருப்பதால் அவைகளைச் செய்ய உனக்கு அதிகாரமில்லை. நீ வருந்துவதைப் பார்த்தால், எனக்கு மனம் வருந்துகின்றது. உன் வருத்தத்தைத் தீர்க்கும் வரையில் எனக்கு மனக்கலக்கம் ஒழியாது. உன் பாபமோ மூன்று ஜன்மம் கொடுக்கத்தக்கது; மகா உக்கிரமானது. மிக்க இகழ்ச்சியான இப்பிரேதத் தன்மையானது உன்னுடைய அற்ப புண்ணியத்தால் தீராது. ஆகையால், நான் பிறந்தது முதல், கார்த்திகை விரதம் செய்து வந்திருக்கின்றேன். அந்தப் புண்ணியத்தில் பாதியை உனக்கு அளிக்கின்றேன். அதைக்கொண்டு நீ நற்கதியடை. கார்த்திகை விரத புண்ணியத்துக்கு ஒப்பானது எதுவுமில்லை. யக்ஞம், தானம், தீர்த்தம் இவைகளைக் காட்டிலும், கார்த்திகை விரதமே சிலாக்கியமானது—என்று கூறி வாசுதேவ மந்திரத்தை அவ்வரக்கி செவியிற்பட ஜபித்துக்கொண்டு துளஸி தீர்த்தத்தினால் அவளை ஸ்நானஞ் செய்வித்தார். அவள் பிரேதத்தன்மையினின்று விடுபட்டு, அக்நிஜ்வாலை போன்ற திவ்ய ரூபமும் ஊர்வசிபோன்ற லாவண்ணியமு மடைந்து தர்மதத்தரைத் தரையில் விழுந்து வணங்கி, "உத்தமமான வேதியரே! கிருபாநிதியே! உம்முடைய கிருபையினால் அடியேன் நரகாநுபவத்திலிருந்து விடுபட்டேன். பாபசமுத்திரத்தில் மூழ்கிக் கரைகாணாமல் தவித்த எனக்கு இப்போது பிடித்துக் கரையேற நீர் தெப்பமானீர்" என்று கலகி சொல்ல, உடனே ஆகாசத்தில், விஷ்ணு சாரூப்பியம் பெற்ற கணங்களேறிவரும் அழகிய விமானத்தைக் கண்டாள். அப்பொழுது அவ் விமானத்தில் வந்த புண்ணிய சீலர் சுசீலர் முதலிய விஷ்ணு கணங்கள், அப்ஸரஸ்திரீகள் சூழ இந்தக் கலகியின் பக்கத்தில் வந்து அவளை விமானத்திலேற்றி வைத்துக்கொண்டார்கள். இதனைப் பார்த்துத் தர்மதத்தர் ஆச்சரியமடைந்து புண்ணிய ரூபிகளான அவர்களை நமஸ்கரிக்க, அவர்கள் அப்பிராமணோத்தமரை எழுப்பிப் புகழ்ந்து

"பிர்ம குலசிரேஷ்டரே! நல்ல காரியஞ் செய்தீர். நீர் விஷ்ணுவை நன்றாகப் பூஜித்திருக்கிறீர்; ஏழைகளிடத்தில் இரங்கும் குணமுடையவர்; தர்ம மறிந்தவர்; அநேக விஷ்ணு விரதங்களைச் செய்து விஷ்ணுவைத் திருப்திசெய்தவர்; நீர் உமது வாலிபப் பருவமுதல் அனுஷ்டித்த கார்த்திகை விரதத்தின் புண்ணியத்தில் பாதியை இவளுக்குக் கொடுத்து இவளை நற்கதி சேர்த்த புண்ணியம் உமக்கு இரட்டித்தது. இவள் பல ஜன்மங்களிலும் புரிந்த பாப முழுவதும் உமது புண்ணிய தானத்தால் விலகிற்று. துளஸி தீர்த்த ஸ்நானத்தால் இவளுக்கு இனிவரும் பாப பலன்களும் ஒழிந்தன. நீர் செய்த ஹரிஜா கரணம் முதலியவைகளால் தான், இந்த விமானம் இவ்விடம் வந்தது. நீர் கார்த்திகையன்று தீபதானஞ்செய்த புண்ணியத்தாலே தான் இவளுக்குத் தேஜோமயமான ரூபங் கிடைத்தது. நீர் துளஸி பூஜைசெய்த புண்ணியங்களால் விஷ்ணு ஸந்நிதிக்கு இவள் வரவேண்டிய பாக்கியம் பெற்றாள். கருணை நிறைந்த சாதுவே! ஆகையினாலே தான் இவளைச் சகலபோக பாக்கியத்துடன் வைகுண்டத்துக்கு அழைத்துப் போகிறோம். நீரும் இப்பிறப்பின் முடிவில் உமது பாரியைகளுடன் விஷ்ணு சாரூப்பியத்தை யடைந்து வைகுண்டம் வருவீர். ஆகையால் உம்மைப்போலவே விஷ்ணுவைப் பக்தியுடன் பூஜித்த யாவரும் தன்னியர்களாகிப் புண்ணியம் பெறுவார்கள். அவர்கள் பிறப்புத்தான் நல்ல பலனை யடையும். தன்னை ஆராதித்த பக்தர்களுக்கு விஷ்ணுவானவர் எல்லாப பலனையுந் தருவார். உத்தானபாத அரசன் புத்திரனுக்கு ஐந்தாவது வயதில் துருவ பதத்தைத் தந்தனரன்றோ? அப்படிப்பட்ட விஷ்ணுவை நீர் ஜனனகால முதல் இடைவிடாத பக்தி செலுத்திப் பூஜித்து வந்தமையால், உமது இரண்டு மனைவிகளுடன் அவர் ஸந்நிதானமடைந்து அங்கு எண்ணாயிர வருஷகாலமிருந்து அவரைச் சேவித்து, அப்புண்ணிய பலன் முடிவாகும் சமயத்தில், சூரியவம்சத் தரசனாகப் பிறந்து தசரதனென்னப் பேர் பெற்று, இரண்டு மனைவிகளை யடைவீர், பின் உமது பாதி புண்ணியத்தால், நற்கதியடைந்த இவள் (கலகை) கேகய மகாராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்து, உமக்கு மூன்றாவது தாரமாக ஆவாள். அப்பிறப்பிலும் உமக்கு மகாவிஷ்ணுவானவர் தரிசனந்

தருவார். அவரோடைக்குப் புத்திரராக அவதரித்துத் தேவானுகூலராயிருந்து, இராமரென்னும் பெயர்பூண்டு இராவணன் முதலிய இராட்சதர்களைக் கொன்று இராஜ்யபரிபாலனஞ் செய்வார். நீர் உமது ஜனனகால முதல் செய்த திருப்திகரமான விஷ்ணு விரதங்களைக் காட்டிலும் யக்ஞம் தானம் தீர்த்தம் இவைகள் பெரிதல்ல. ஆகையால் தர்ம மறிந்த தர்மதத்தரே! பிற்காலத்திலும் நீர் விஷ்ணு விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டு மாற்சரியம் டம்பம் முதலியவைகளுக்கு இடங் கொடாமல், யாவரையும் சமமாகப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும். கார்த்திகம், மாகம், சைத்திரம், வைசாகம் இந்நான்கு மாதங்களில் ஒவ்வொரு வருஷத்திலும் ப்ராதஸ்நானம் விடாமல் செய்து வரவேண்டும். ஏகாதசி விரதத்தை இடைவிடாமல் நடத்திக்கொண்டு துளஸீ பூஜை செய்து வருவதோடு துளஸி வனமும் வைத்துப் பாதுகாக்கவேண்டும். வேதியர்கள், பசுக்கள் விஷ்ணு பக்தர்கள் இவர்களை எப்பொழுதும் சேவிக்கவேண்டும். சுரைக்காய், கத்திரிக்காய், கஞ்சி இவைகளை உபயோகிப்பது கூடாது. இவ்வாறிருந்து கடைசியில் நீரும் எங்களைப்போல் விஷ்ணுவினுடைய பரமபதத்தைப் பக்தியினால் பெறுவீர். பிராமண சிரேஷ்டரே! நீர் விஷ்ணு பக்தராயிருந்து அடைந்த புண்ணியத்தில், பாதியை இவளுக்குக் கொடுத்தமையால் இவளை விஷ்ணுலோகம் இதோ கொண்டுபோகிறோம்; ஆகையால் நீர் மகா தன்னியர்—என்று சொல்லிப் புகழ்ந்து உபதேசம் செய்துவிட்டு விமானத்தைச் செலுத்திக்கொண்டு வைகுண்டம் சென்றார்கள்.

முத்கலர் கூறுகிறார்.

அரசனே! தர்மதத்தனும் அவ்வுபதேசப்படி நாளதுவரையும் விஷ்ணு விரதங்களை நடத்திக்கொண்டு, அந்தியகாலத்தில், தமது இரண்டு பாரியைகளுடன் வைகுண்டஞ் சென்று அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான வருஷமிருந்து விஷ்ணுசேவை செய்துவிட்டு அவர் செய்த புண்ணியபலம் முடியும் சமயத்தில், விஷ்ணுவினுடைய சேவகர்களாகிய புண்யசீலன், சுசீலன் இவர்கள் சொன்னபடியே அயோத்தியில் சூரியவம்சத்தில் ஜனனமாயினர். அவர்தாம் நீர்! அப்படிப்பட்ட உமக்கு உமது மூன்று மனைவிகளிடத்தி

னும் மகாவிஷ்ணு இராமராகவும், ஆதிசேஷன் இலட்சுமணராகவும், சங்கு சக்ரம் பரத சத்ருக்னர்களாகவும் அவதரித்திருக்கிறார்கள். சாட்சாத்விஷ்ணுவே உமக்குப் புத்திரனாக அவதரித்ததனால் நீர் தன்னியரானீர்—என்று சொல்லி அரசனுக்கு மரியாதை செய்து அனுப்பிவிட்டார்.

பரமசிவன் கூறுகிறார்.

பிறகு தசரதர் இராம லக்ஷ்மணரை ஆலிங்கனம் செய்து கொண்டு கிருதார்த்தனானதை நினைத்துச் சந்தோஷமடைந்தார். இதன்பின் அயோத்தியா பட்டணத்திற்குத் தசரதர் தமது பரிவாரங்களுடன் புறப்பட்டுவர, அச்செய்தியறிந்த மந்திரிமார்கள் பதாகை தோரணம் முதலியவைகளால் பட்டணத்தை அலங்கரித்து வீதிகளில் சந்தனக் குழம்புகளைத்தெளித்து மங்களவாத்தியங்கள் முழங்கத் தசரதரை எதிர்கொண்டழைத்து வந்து பட்டணப் பிரவேசஞ் செய்வித்தார்கள். அப்பொழுது இராமர் மகோத்ஸவத்தோடு வருகின்றாரென்பதை யறிந்த ஸ்திரீகள், அவரவர் வீட்டு மாடிகளில் தங்கள்குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு நின்று ஸ்ரீ ராமர் பேரில் ஸ்வர்ணபுஷ்பம் முதலிய பலவிதமான புஷ்பங்களைப் பொழிந்தார்கள். சில மாதர்கள் தசரதர் முதலானவர்கள் முன்பு வந்து திருஷ்டி தோஷம் முதலியவைகள் நீங்க, நீராஜனம் கும்பதீபம் முதலியவைகள் எடுத்து உபசரித்தார்கள். இப்படிப்பட்ட மகோற்சவத்துடன் தசரதர் தமது அரண்மனைக்குச் சென்றார். அரண்மனையில் தசரதர், தம்மோடு கூடவந்த ஜனகருடைய மந்திரிமார்களுக்குத் தக்க மரியாதை செய்து, விருந்து நடத்தி மிதிலைக்கு அனுப்பிவிட்டார். இவ்வாறாகவே வருஷந்தோறும் வரும் பண்டிகைகளுக்கு ஜனகர் தமது கிரகத்திற்குத் தசரதர் முதலியவர்களை யழைத்துவந்து மரியாதை செய்து அனுப்பி மகிழ்ந்தார். ஸ்ரீ ராமரும் தசரதரைத் தமதுவிளையாட்டுகளாலும்நடக்கைகளாலும் திருப்திசெய்வித்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில், சில வருஷஞ் சென்ற பிறகு, இராமருக்கு ஆறுமாதம் இளையவளான ஸீதாதேவி விவாக

மான பதினோராவது வருஷத்தில், ருதுவாகி மங்களஸ்நானஞ் செய்தாள். இச்செய்தியைஜனகருக்குத் தசரதர் தமது மந்திரிகள் மூலமாகத்தெரிவிக்க, அதைக்கேட்ட ஜனகர் தமது பத்தினிகளுடனும் மந்திரி மார்களுடனும் அயோதிக்குவர, அவரைத் தசரதர் எதிர் கொண்டுசென்று ஆலிங்கனஞ்செய்துகொண்டு வரவேற்று மகிழ்ச்சியடைந்து மங்களவாத்திய கோஷத்துடன் தமது அரண்மனைக்கு அழைத்து வந்தார்.

இதன்பிறகு தசரதர்இராமருக்கு ருதுசாந்திமுகூர்த்தம்நடத்த நிச்சயித்து உற்சாகத்துடன் பட்டணத்தை வாழை, கரும்பு, மாவிலை, புஷ்பம், கண்ணாடி மணிகள் முதலியவைகளால் அலங்கரித்துப் பிறகு முகூர்த்த மண்டபம் ஏற்படுத்தி அம்மண்டபத்தையும் அலங்கரித்து வஸிஷ்டர் முதலியவர்களைக்கொண்டு நல்ல லக்னத்தில் ஸ்ரீராமரால் ஸீதைக்குக் கர்ப்பாதானம் செய்வித்து மகிழ்ந்தார். முகூர்த்தகாலத்தில், ஜனகர் தசரதருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் தமது பெண்களுக்கும் வஸ்திராபரண முதலியவைகளளித்து மரியாதை செய்து, அயோத்தியிலேயே ஒரு மாதகாலம் தசரதரோடு சுகமாக வசித்திருந்துபின் தமது பரிவாரங்களோடு மிதிலைக்குச் சென்றார். இராமரும் ஸீதையும் திவ்ய அலங்காரமமையப் பெற்ற ஸ்வர்ணமயமான தங்களுடைய கிரகத்தில் சுகபோகாதிகளை அநுபவித்துக்கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். பிறகு அந்தந்தக் காலங்களில் லட்சுமண பரத சத்ருக்னர்களுக்கும் ஜனகர் முதலானவர்களை வரவழைத்து கர்ப்பாதான முகூர்த்தங்களை நடத்தித் தசரதர் பரமானந்த மடைந்தார். இதுமுதல் அயோத்தியாபட்டணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் மங்களம் பெருகி வந்தது. தரித்திர மென்பது எல்லோரையும் விட்டு நீங்கிற்று. எல்லோரும் புத்திர மித்ராதி செல்வத்தோடு யாதொரு குறைவுமின்றித் தேகவியாதி மனோவியாதியற்றுச் சுகமாக வாழ்ந்துவந்தார்கள். இராமர் முதலிய நால்வரும் தத்தம் அரண்மனையில் தமது பத்தினியோடிருந்து இல்லற வாழ்வை நடத்திவந்தார்கள்.

இராமர் நாடோறும் அதிகாலையில் எழுந்திருந்து சுத்தி செய்து கொண்டு பல்லக்கேறி ஸ்நானம் செய்யச் சரயுநதிக்குச்

சென்று, அந்நதிக்கரையில் பல்லக்கை நிறுத்திவிட்டு மந்திரிக ளுடன் சரயுநதியின் மணற்பாங்கான இடத்திற்குச் சென்று அந்நதியை அங்கிருந்து வணங்கிப் பின் நதியிலிறங்கி சாஸ் திரோக்தமாக ஸ்நானஞ் செய்வார். பிறகு அநேகம் பிராமணர்க ளுடன் ஸந்தியாவந்தனாதி நியமநிஷ்டைகளைச் செய்துமுடித்து அந்தப் பிராமணோத்தமர்களுக்குப் பசு பூமி தானியம் முதலிய வைகளைத் தானங்கொடுத்து அவர்களையும் சரயுநதியையும் பக்தி யுடன் பூஜிப்பார். அப்பால் தங்கக்கயிறுகள் தங்கக் கட்டுகள், பட்டு கள், மணிகள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டு, திவ்யாலங்கார மான குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்திலேறிக்கொண்டு, சரயு நதியில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தனை, ஸாரதி ரதத்தைச் செலுத் தப் புறப்பட்டு, ரதத்திலுள்ள மணிகளும் கிங்கிணிகளும் கல கலவென்று சப்திக்கவும், தங்கத்தடி பிடித்த சேவகர்கள் முன் னே வழி காட்டிக்கொண்டு செல்லவும், மாதர்கள் தங்கள் தங்கள் கிருகத்திலிருந்து புஷ்ப வருஷம் வருஷிக்கவும் நீராஜனம் செய்ய வும் வீதி விலாசம் வந்து சூரிய கோடிப் பிரகாசம் பொருந்திய தமது அரண்மனைவாசலில் இரதத்தை விட்டு இறங்குவார். அங்கு ஸீதை கொடுக்கும் பாதார்க்கியம் ஆசமனீயம் முதலியவை களைப் பெற்றுக்கொண்டு தங்கப்பாதுகையின்மேலேறி கிரகத்துக்குச் சென்று அக்னிஹோத்திர சாலை செல்வர். அங்குள்ள திவ்யாச னத்திலே தேவியுடனமர்ந்து சாஸ்திரோக்தமாக அக்னிஹோத் திரம் செய்வார். பிறகு உலகத்தவர் யாவரும் ஈசுவராராதனை செய்ய வேண்டுவது அவசியமென்பதை அறிவிக்கத் தாம் ஸ்படிக லிங்கத்தில் பரமசிவனை ஆவாகனஞ்செய்து கர்மகாண்டப்படி வில் வம், துளஸி, புஷ்பம் முதலியவைகளால் அர்ச்சித்து, ஸீதா தேவி தனது கையால் கொண்டுவரும் பக்குவான்ன முதலியவை களை நிவேதனஞ்செய்து வேதியர்களுக்குத் தானங் கொடுத்துப் பூஜித்து, அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்றுப் பின்பு துளஸி, குரு, பசு குதிரை முதலியவைகளைப் பூஜிப்பார். சூரியநமஸ்காரம் பிர்ம்மயக்ஞம் முதலியன செய்து முடித்து ஸீதையுடன் குருமுக மாக புராண சிரவணஞ் செய்வார். அதன்பின் புராணிகரைப் பக்தியுடன்பூஜித்து, தமதுபந்துக்களோடும் பிராமணர்களுடனும் தேங்காய், விளாம்பழம், மாம்பழம், மாதுளம்பழம், வாழைப்பழம்,

பலாப்பழம், முதலிய கனிகளையும் சுத்தமான நெய்யில் பக்குவம் செய்த பக்ஷியங்களையும் உபாகாரமாகச் செய்து பின் தாம்பூலம் எடுத்துக்கொண்டு தமது முகத்தைக்கண்ணுடியில் பார்த்துவிட்டு, ஸீதை கண்டு ஆனந்தமடைய ரதாரூடராய் மந்திரி பிரதானிகள் சூழ வாத்தியகோஷங்கள் முழங்கத் தமது தாய்மார்கள் கிரகஞ் சென்று, அவர்களைச் சாஷ்டாங்கமாக வணங்கிப் பிரதட்சிணமாக வந்து தசரதரது கிரகம் சென்று சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அவரை வணங்கி அவரிடம் உத்தரவுபெற்று, ஆசனத்தில் உட்கார்ந்து, ராஜ்ய நிர்வாகங்களைக் கவனித்து வருவார். இங்ஙனே சிறிது நேரம் கழித்துப் பிறகு, தந்தையிடம் விடைபெற்று அவரைப் பன்முறை வணங்கி, இரதத்தின் மீதேறி வாத்திய கோஷத்தோடு வாரஸ்திரீ நர்த்தனஞ் செய்யத் தமது கிரகஞ் சென்று ரதத்திலிருந்திறங்கி, பூமி புத்திரியாகிய ஸீதையினுடைய உபசாரணையைப் பெற்றுக்கொண்டு தாம் கிரகத்திலிருந்து புறப்பட்டது முதல் திரும்பி வந்த வரையில் நடந்த சங்கதிகள் முழுமையும் அன்புடன் தெரிவித்து ஹாஸ்யம், கீதம் முதலியவைகளால் தமது பத்தினியை ஆனந்தமடையச் செய்து தாமும் மகிழ்ச்சியடைவார்.

மத்தியான வேளையில் சரயு நதியிலோ, தமது கிரகத்திலோ, ஸ்நானஞ் செய்து மாத்தியான்னிகம் செய்து முடிப்பார். இவ்வாறு சரயு நதியில் நாடோறும் எவ்விடத்தில் ஸ்ரீராமர் ஸ்நானஞ் செய்து வந்தாரோ அவ்விடத்திற்கு இராமதீர்த்தமென்னும் பெயருண்டாயது. அதில் சித்திரை மாதத்தில் ஸ்நானம் ஜபதபாதிகள் செய்கிறவர்களுக்கு விசேஷமான பலனுண்டாகும் என்னும் மகிமையும் ஏற்பட்டது. மாத்தியான்னிகம் முடிந்ததும் ஸ்ரீராமர் தமது இஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் ஸ்வர்ண பாத்திரங்களில், திவ்ய பக்குவான்னங்களை ஸீதை கதிலாகவத்துடன் தன்னுடைய கங்கணம் தண்டை சதங்கை இவைகளிலிருந்து மனோகரமான சப்தமுண்டாகும்படி நடந்துகொண்டு பரிமாற அதனைக் கேட்டுக்கொண்டு மனமகிழ்ச்சியோடு போஜனஞ் செய்வார். பிறகு இஷ்டமித்திரர்களுக்குத் தாம்பூலமளித்துத் தாமும் தாம்பூலந் தரித்துக்கொண்டு நூறடி தூரம்

அப்பால் நடந்து, ஸீதை யருகிலிருக்கச் சற்றுநேரம் நித்திரை செய்து எழுந்து உடைதரித்துக்கொண்டு சஸ்திரம் தனுசு பாணம் இவைகளோடு இரதத்தின் மீதேறி இஷ்டர்களுடனும் பந்துக்களுடனும் பூந்தோட்டம் உத்தியானவனம் இவைகளுக்குச் சென்று அங்குள்ள விநோதங்களைப் பார்த்துவிட்டு, நர்த்தனம் வாத்தியம் இவைகளுடன் தமது கிரகம் வருவார். பிறகு சாயங்காலத்தில் சந்தியா வந்தனம் அக்நி ஹோத்திரம் முதலியவைகளைச் செய்து மறுபடியும் பரமசிவ பூஜைசெய்து, போஜனம் செய்வார். இதன் பின் உப்பரிகையின் மேல் இரத்தினம் ஸ்வர்ணம் மாணிக்கம் முதலியவைகளாலே அமைக்கப்பட்ட அழகிய மஞ்சத்தின் மீது ஸீதையோடு சயனஞ் செய்வார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் கிரமப்படி நடத்தி வருவார்.

இப்படிப் பன்னிரண்டு வருஷம் கடந்தன. அப்பால் தசரதர் ஸ்ரீராமருடைய அமாநுஷிகமான நடத்தைகளையும் வஸிஷ்டர் முதலியவர் இவர்களுடைய வசனங்களையும் கவனித்து ஸ்ரீராமரை நாராயணனென்றே நிச்சயித்துக்கொண்டு அவரை அழைத்து ஓர் இரகசியமான இடத்தில் உட்காரவைத்துக் கொண்டு வணக்கத்துடன் "இராமா! நீ பூபாரந் தீர்க்க அவதரித்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தியல்லவா? உலகத்தவர் அறியாமையால் உன்னை எனது குமாரனென்று கொண்டிருக்கிறார்கள். பெண்டு பிள்ளை வீடு முதலியவைகளில் ஏற்பட்ட பற்றுனது ஒழியாதாகையால் அந்தப பந்தத்தினின்றும் விடுபட உன் மாயையால்மயங்கிய நான் உன்னிடம் ஞானோபதேசம்பெற விரும்புகின்றேன்" என்றார். இராமர் "பிதாவே! தாங்கள் கேட்டபடி நான் கூறுகின்றேன். என் மாதாவாகிய கௌஸல்லியையும் அதைக் கேட்கட்டும்" என்று சொல்லி, "கிளிஞ்சலில் வெள்ளியும் பழுதையில் பாம்பும் கானலில் ஜலமும் தோன்றுவதுபோல் உலகமும் மாயா காரியமானதால் பொய்யே யாம்! இவ்விதமே ஒவ்வொருவரும் தங்கள் ஆத்ம சொரூபத்திலேயே தேகாதிகளை அக்ஞானத்தால் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஞானிகள் தேகம் முதலியவைகளைப் பொய்யெனத்தேறி அக்ஞானமொழிந்து உண்மையான தங்கள் ஆத்ம சொரூபத்தையே பார்ப்பார்கள். ஆத்மா பரிசுத்தமானது.

சச்சிதானந்த சொரூப முடையது. உலகங்களுக்கு ஈசர்களான பிர்மாமுதலிய நாம் யாவரும் அந்த ஆத்மாவின் அம்சமேயாவோம். உலகங்கள் பிறந்து இருந்து இறந்தொழிவதற்காக மாயையின் மூலமாய் ஆத்மா வேஷதாரிபோல் பல ரூபங்கொண்டாலும் அம் மாயை தாமரை இலை நீர்போல், நித்யானந்தவிக்கிரகமும் அழிவற்றது மான ஆத்மாவோடு சம்பந்தப்படுகிறதில்லை. மக்கள் மனைவி மனை யாக்கை இவைகள் நமதென்றுமதிக்கும் மதியைத் தன் விவேகத் தால் ஒடுக்கி சித்கனமான பிர்மத்தினிடத்தில் அதைச் செலுத்தி வைத்துத் தான் காணும் எவையும் ஸ்ரீமந்நாராயண சொரூப மென்றே கருதுகிறவன் ஸம்ஸாரதுக்க நிவாரணம் பெறுவான். அதற்கு ஸத்தியம் தயை சாந்தம் செளசம் சாந்தி இந்திரிய நிக்ர கம் அஹிம்சை பகவத்பக்தி வேதமார்க்கா நுஷ்டானம் முதலிய நற்குணங்களை இடைவிடாமல் அனுஷ்டிக்க வேண்டும். இவைக ளுக்கு எதிரிடையான திருட்டு சூது விவாதம் மாற்சரியம் டம்பம் கொடூரம் லோபம் பயம் கோபம் துக்கம் இகழ்ச்சியான காரியங்க ளிற் பிரவேசிப்பது வேதம் விப்பிரர்கள் சாதுக்கள் யதிகள் இவர் களுக்குக் குறைவு செய்தல், பிறர் நிந்தை, கோட் சொல்லல் முத லிய இவைகளை ஒரு பொழுதுங் கொள்ளலாகாது. நீர் முன் ஜன் மத்தில் தவம் புரிந்து, என்னை உமக்குப் பிள்ளையாக வேண்டு மென வேண்டினமையால், அவ்விதமே நான் அவதரித்திருக்கின் றேன். நான் உமக்குச் சொல்லிய அக்ஞானபந்த நிவாரண மார்க் கத்தை வெளியிடவேண்டாம்"—என்று கூறினர். இப்படிக்கூறிய ஸ்ரீராமபிரானுடைய வசனாமிர்தத்தைக் கேட்டுத் தசரதர் தமது மாயாபந்தம் நீங்கி, ஸத்பாவ பரிபூர்ணராகி, புளகாங்கிதமுற்றுத் திடமான பக்திபெற்று, இராமருக்கு வந்தனஞ் செய்ய, ஸ்ரீராமர் உடனே "பிதாவே! நான் குழந்தையானதால், இப்படிச்செய்வது யுக்தமல்ல. இப்பொழுது மாயையினால் நரவேடம் கொண்டிருப் பதால், நீர் செய்வது உபாஸக காரணமாகும். ஆகையால் பக்தி யுடன் என்சொரூபத்தை எப்பொழுதும் தியானம் செய்யும். என் னிடத்திலேயே உமது ஆவி மனம் முதலியவைகள் யாவையும் அர்ப்பணம் செய்யும்" எனக்கூறி எழுந்திருந்து, தாய்தந்தையிரு

வருக்கும் வந்தனமளித்து அவர்களிடம் விடைபெற்று, இரதமே றித் தம் கிரகம் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீராமர் சிலநாள் தமது தாய்மார் கிரகங்களிலும் சில நாள் சகோதரர்கள் கிரகத்திலும் சிலநாள் தந்தையினுடைய பந்தியிலும் போஜனம் செய்வார். சில நாள் தமது கிரகத்திற்குத் தம்முடைய தாய்மார்கள், சகோதரர் கள் பிதா இவர்களையும் பட்டணத்திலிருக்கும் வேதியர்களையும் அன்போடு அழைத்துத் தம்முடைய பந்தியில் வைத்துக் கொண்டு போஜனம் செய்வார்.

இப்படியிருக்குங்காலையில் ஸ்ரீராமதரிசனத்திற்காக தபோ வன வாசிகளாகிய முனிவர் கூட்டங்கள் ஒவ்வொருநாளும் அயோத்திக்கு வந்து, இராமர் அரண்மனைக்குச் சென்று அவ ரைப் பார்த்துப் பலவிதமாகத் துதித்து, அவருடைய ஆதித்தியம் பெற்று, மனமகிழ்ந்து செல்வார்கள். அவர்களிற் சிலர் இரண் டொருநாள் அரண்மனையிலேயே வசித்து, ஸ்ரீராமருக்குப் புண் ணிய கதைகளைச் சொல்லி அவரைச் சந்தோஷப் படுத்திப் பின் தங்கள் தங்கள் ஆசிரமம் அடைவதுண்டு. சாத்வியும் இங்கிதஞ் ஞையுமான ஸீதாதேவி ஹாஸ்யம் கிரீடை முதலியவைகளில் எந் தெந்த சமையத்தில் எவைகளை இராமர் விரும்புகிறாரோ அவை களை அவரிஷ்டப்படி நடத்தி விவாகமான வருஷமுதல் பன்னி ரண்டு வருஷகாலம் வரையில் ஸ்ரீராமர் மகிழும்படி நடந்துவந் தாள். கிருத யுகத்தின் ஒரு வருஷமானது, த்ரேதாயுகத்தின் பத்து வருஷத்திலும் துவாபரயுகத்தின் நூறு வருஷத்திலும் கலியுகத்தின் ஆயிர வருஷத்திலும் சிரேஷ்ட மானதால் ஸ்ரீராமர் அநுபவித்த சுகமானது, தேவேந்திர போகத்திற் கும் மேலானதாகும். ஸ்ரீராமர் காலத்தில் பருவ நியமங்க ளின்றி எக்காலத்தும் பூ காய் பழம் முதலியவைகள் யாவும் கிடைத்துக் கொண்டிருந்தன. அநாவிருஷ்டி, தஸ்கரபயம், பிராணி ஹிம்சை முதலியவை கிடையா. இப்படியிருக்கையில், கைகேயியின் சகோதரனாகிய யுதாஜித்து, தன் மருமக்களாகிய பரத சத்துருக்னர்களைத் தசரதர் உத்தரவின் பேரில் அழைத்துக்

கொண்டு தன் பட்டணமாகிய கேகயதேசம்சென்றான். ஏ பார்வதி! மனோகரமும் மங்களகரமுமான இராமருடைய இப்படிப்பட்ட பாலசரிதத்தைப் பக்தியுடன் கேட்பவர்கள் சர்வமங்களங்களையும் பெறுவார்கள். நீ கேட்ட நிமித்தம் இதைச் சுருக்கமாகக் கூறினேன்—என்றார்.

5-வது சருக்கம் முற்றிற்று.

6-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இவ்விதம் திரேதாயுகத்தில் ஸ்ரீராமர் சுகத்தை யனுபவித்துக்கொண்டிருக்கையில் ஆகாசத்தில் நாரதமுனிவர் போகக் கண்டு, அவரை ஸீதை இலட்சுமணர் இவர்களுடன் வணங்கிப் பூஜைசெய்தார். நாரதர் ஸ்ரீராமரைப் பார்த்து "இராமா! நீர் இராவணனைக் கொன்றுவிட்டு இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டுமென்பது தேவர்களுடைய விண்ணப்பமாகையால், அதைத் தெரிவித்தேன்" என்றார். அது கேட்ட இராமர் "முனிவரே! நான் அப்படியே செய்கிறேன்" என்று பதிலளிக்க, நாரதர் விடைபெற்றுக்கொண்டு சென்றார். பின்பு இராமர் ஸீதையைப் பார்த்து "ஸீதா! எனது தந்தை எனக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய விரும்பியிருக்கின்றார். அதைத் தடுத்து, இராவணஸம்ஹார நிமித்தம் நான் தண்டகாரண்யத்திற்குத் தம்பி இலட்சுமணனுடன் போக உத்தேசித்திருக்கின்றேன். நீ அயோத்தியில் கௌஸல்யையும் என் தந்தையையும் சேவித்துக் கொண்டு வசித்துவா" என்று கூற, அதைக் கேட்டதும் ஸீதாதேவி அவரை நமஸ்கரித்து "ரகுபுங்கவா! நீர் என்னையும் காட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதற்குக் காரணங்கள் மூன்றுள்ளன. நான் குழந்தையாயிருக்குங்காலத்தில் ஒரு வேதிய சிரேஷ்டர் என்னிடம் வந்து என்கை ரேகையைப் பார்த்து, "நீ உன்னுடைய பர்த்தாவுடன் சிலகாலம் வனவாசஞ் செய்வாய்" என்று கூறினார். அவர் வாக்குப் பொய்யாகாததலால் தங்களோடு நானும் கூட வர இதொரு காரணம். மற்றொன்று யாதெனில், தாங்கள் எனது சுயம் வரத்தில் வில்லை இறுக்கச் சென்ற காலையில், தங்களுக்கு அவ்வில் பூமாலைபோல் ஆகவேண்டுமென்பதைக்கோரி சகல தேவர்களையும் பார்த்து "உங்கள் அனுகூல நிமித்தமாக நான் இராமருடன் பதினான்கு வருஷம் கானகவாசம் செய்கிறேன்" என்று செய்துகொண்ட பிரதிக்ஞை மற்றொரு காரணமாம். இப்பொழுது நான் கூறிய இந்தப் பிரதிக்ஞை நிறை

வேறும்படி செய்யவேண்டும். இன்னொரு காரணம், நான் கற்பாந்தர இராமாயண சிரவணஞ் செய்தபோது, ஸீதையை விட்டு இராமர் வனவாசஞ் செய்ததாகக் கேட்டறியேன். ஆகையால் என்னுடன்கூடவே தாங்கள் வானவாசத்திற்குப் புறப்படவேண்டும்” என்று கூறியதைக் கேட்டு, ஸ்ரீராமர் ஸீதையை ஆலிங்கனஞ் செய்துகொண்டு மகிழ்ந்து அப்படியே செய்கிறேன்” என்று கூறினார்.

பிறகு ஒரு நாள் தசரதர் ஸ்ரீராமருக்கு இளவரசுப் பட்டம் கட்டவேண்டுமெனக் கருதி, தமது குருவாகிய வஸிஷ்டரை வரவழைத்து வணங்கி “நமது இராமருக்குத் தாங்களிருந்து பட்டங் கட்டி வைக்கவேண்டும்” என்று கூற, வஸிஷ்டர் அவரை அழைத்துக்கொண்டு கௌஸல்யையினுடைய கிரகஞ் சென்று கௌஸல்யை சுமித்திரை இவர்கள் பக்கமிருக்கத் தசரதரைப் பார்த்து, “நீங்கள் எல்லோரும் கேளுங்கள்; கைகேயின் வரத்தின்படி ஸ்ரீராமன் இலட்சுமணனுடனும் ஸீதையுடனும் நாளைய தினம் புறப்பட்டுத் தண்டகாரண்யம் சென்று, பிறகு இராவண வதம் செய்வான். ஆகையால் நீங்கள் யாவரும் ஒன்றுந் தெரியாதவர்கள்போல் அபிமானமற்றிருங்கள். தசரதரே! மந்திரி சுமந்திரன் மூலமாகத் தேசமன்னர்களை வரவழையும். முன் முனிவரிட்ட சாபத்தாலும் இராம விரகத்தாலும் நீர் அதிசீக்கிரத்தில் சொர்க்கலோகம் அடைவீர். பிறகு இராமர் இராஜ்யாபிஷேக மகோற்சவத்தை விருப்பமுடன் கௌஸல்யைபார்த்துச் சந்தோஷிப்பாள். நீரும் விமானத்தின்மீது ஆகாசத்திலிருந்து அம்மகோற்சவத்தைப் பார்த்து மகிழ்வீர். வரும் விதியை, பிர்ம்மாதிகளாலும் தடுக்க முடியாதன்றோ?” என்று வஸிஷ்டர் கூறவே, தசரதர் சபைக்குச் சென்று மந்திரிகளை வரவழைத்துத் தூதர் மூலமாய்ப் பல தேசமன்னர்களையும் முனிபுங்கவர்களையும் யாவரையும் வரவழைக்கும்படி கட்டளையிட்டுப் பட்டண அலங்காரம் செய்யும்படிக்கும் உத்தரவிட்டார் அவ்விதமே மந்திரிமார்கள் தூதர்களுக்கு ஆக்ஞாபித்து, அயோத்தியெங்கும் மகர தோரணங்கள் பதாகைகள் ஸ்வர்ண கும்பங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கச் செய்தார்கள்.

இப்பொழுது வஸிஷ்டர் அரசனுடைய மந்திரியாகிய சுமந்திரனைப் பார்த்து, நாளைக்காலையில் நம்முடைய நடுப் பிராகாரத்தில் அலங்கரித்த சில கன்னிகைகளும் அலங்கரித்த பதினாறு யானைகளும் ஐராவதத்தின் வம்சத்திலே பிறந்த சதுர்த்தந்தமென்ற யானையும் சித்தமா யிருக்கட்டும். பல தீர்த்தங்கள் நிறைந்த ஆயிரக்கணக்கான தங்கக்குடங்களும் நல்ல புலித்தோல் மூன்றும் முத்தாரம் புனைந்து, தங்கக் காம்பினையுடைய வெண்குடையொன்றும் திவ்யமான மாலைகள் வஸ்திரங்கள் பூஷணங்கள் முதலியயாவும் சித்தமாயிருக்கட்டும். மேலும் நர்த்தனம் செய்யும் வாரஸ்திரீகள் பாடகர்கள் வாத்தியக்காரர்கள் முதலியவர்கள் அவரவர் தொழிலைச் சந்தோஷமாகச் செய்யட்டும். அதற்கு வெளிப் பிராகாரத்தில் ரதகஜ துரக பதாதிகள் ஆயுதங்களுடன் தயாரா யிருக்கட்டும். நமது பட்டணத்திலிருக்கும் தேவாலயங்கள் முழுமையிலும் தேவதைகளுக்குப் பூஜை முதலானவைகள் சிரத்தையுடன் விமரிசையாக நடத்தப்படவேண்டும். பட்டாபிஷேகத்திற்காகவரும் மன்னர்கள் யாவரையும் விருதுகளை யெடுத்துக்கொண்டு சீக்கிரம் முகூர்த்தத்திற்கு வரும்படி செய்யுங்கள்”—என்று இவ்வாறு கட்டளையிட்டார். பிறகு வஸிஷ்டர் இரதமேறி இராமரிடஞ் சென்று அவருடைய மரியாதையைப் பெற்று அவரைப்பார்த்து “இராமா! இவ்வுற்சவங்களுக்கு நீ நிமித்த மாத்திரமே யாவாய்! நாளைய தினம் புறப்பட்டு ஸீதை இலட்சுமணர்களுடன் தண்டகவனஞ் சென்று அவ்விடத்தில் பதினான்கு வருஷம் வாசஞ்செய்து, பிறகு இராவணனைச் சங்கரித்துப் பின்பு இராஜ்ய பரிபாலனம் பண்ணப் போகிறாய். உலகஸ்திதியை அநுசரித்து உன் தந்தை நாளைய தினம் செய்ய யத்தனித்திருக்கும் இந்தப் பட்டாபிஷேகத்தை ஒப்புக்கொள். அதற்காக இன்றையதினம் நீயும் ஸீதையும் ஜிதேந்திரியர்களாகவும் பரிசுத்தர்களாகவும் உபவாச மிருந்து இரவில் பூமியில் சயனஞ் செய்ய வேண்டும்” என்று சொல்லிவிட்டு, இவ்விஷயத்தைச் ஸீதைக்கும் இலட்சுமணருக்கும் தெரிவித்து இரதமேறித் தசரதரது மாளிகை வந்து சேர்ந்தார்.

இச் சமையம் கௌஸல்யையும் சுமித்திரையும் குருமுகமாக இராமருடைய இராஜ்யாபிஷேகம் பொய்யென்பதை

யறிந்திருந்தும், இராமரிடங்கொண்ட அன்பினால் அவருடைய பட்டாபிஷேகத்திற்கு நேரிடவிருக்கும் இடையூறுகள் நீங்க வேண்டுவதைக் கோரி தேவபூஜை முதலியவைகளைச் செய்தார்கள். முனிவர்களை வைத்துக்கொண்டு பலிதானங் கொடுத்துச் சாந்தி ஜபஞ்செய்வித்தார்கள்.

இப்படியிருக்க அன்று சுமார் இருபது நாழிகைக்கு மேல் தாதியின் மகளாகிய மந்தரை என்பவள் மேல் மெத்தையின் மீதேறி நகரம் வெகு அழகாக அலங்கரிக்கப்படுவதைப் பார்த்து, இப்பட்டணம் அலங்கரிக்கப்படுவது யாது காரணம் பற்றியென வீதியில் நிற்கும் ஒரு கிழவியை விசாரிக்க, அவள் ஸ்ரீராமருடைய பட்டாபிஷேக நிமித்தமென்று கூற, மந்தரை உடனே கைகேயியிடஞ் சென்று, அவளிடத்தில் இச்சங்கதியைத் தெரிவிக்கலானாள். இதைக்கேட்டு கைகேயி மகிழ்ச்சியடைந்து, அவளுக்கு ஒரு இரத்னாபரணத்தை வெகுமதியாகக் கொடுத்தாள். இந்தச் சந்தோஷ வேளையில். ஆகாசத்திலிருந்து ஓர் அசரீர வாக்குண்டாயிற்று. அதைக்கேட்டு மந்தரை மயங்கி, மகிழ்ச்சியடைந்திருக்கும் கைகேயியைப்பார்த்து, "புத்தியில்லாதவளே! உன்பாக்கியம் ஒழிந்தது. இப்பொழுது நீ சந்தோஷிக்கிறாய், இராமனுக்குப் பட்டாபிஷேகமாய் விட்டால், நீ கௌஸல்யைக்குத் தாதியாய் விடுவாய்; ஆகையால் யான் சொல்வதைக் கேட்டு அந்தப்படி செய். நீ தசரதரிடமிருந்து பெறவேண்டிய இரண்டு வரங்களில், ஒன்றால் பரதனுக்கு இப்பட்டாபிஷேகமாக வேண்டுமென்றும், மற்றொன்றால் இராமன் கால்நடையாய்க் காட்டுக்குச் சென்று அங்குப் பதினான்கு வருஷகாலம் வசிக்கவேண்டுமெனவும் கேள். அதற்காக இப்பொழுது நீ கோபகிரகத்தில் படுத்துக் கொள்" என்று சொன்னாள். அதைக்கேட்டுக் கைகேயி, மந்தரை சொன்னது தனக்கு அநுகூலமாயிருக்கிறதென்று நினைத்து அவ்விதமே செய்தாள்.

அன்றிரவு தசரதர் கைகேயி கோபகிரகத்தில் சயனித்திருக்கிறாளென்பதையறிந்து, அவ்விடம் அதிவேகமாகச்சென்று அவள் கூந்தலை விரித்துக் கொண்டு ஆபரணங்களைக் களைந்து

விட்டுத் தரையில் படுத்துக் கொண்டிருக்கும் அலங்கோலத்தைக் கண்டு, நாம் கொடுத்திருக்கும் இரண்டு வரங்களுள் ஒன்றைப் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டு மென்பதற்கும், மற்றொன்றை இராமன் காட்டிற்கேக வேண்டு மென்பதற்கும், உபயோகிக்கக் கருதியிருக்கிறா ளென்பதைத் தெரிந்து உடனே மூர்ச்சைபோய் விட்டார். இச்சங்கதி மந்திரி சுமந்திரன் கேட்டு, அரசனிடஞ்சென்று, அவர் பக்கத்திலிருக்கும் கைகேயியைப் பார்த்து சங்கதி யாதெனக் கேட்க, அதற்கவள் இப்பொழுது அரசன் இராமனைப்பார்க்க விரும்புகிறதனால், அவனை இவ்விடத் திற் கழைக்கவேண்டுமெனக் கூற, மந்திரி "அரசனது உத்தர வின்றி யான் அழைக்க நியாயமில்லை" என்றார். உடனே தசரதர், ஈனசுவரத்தோடு "அப்பா! மந்திரி! சீக்கிரம் இராகவனை இவ்வி டம் அழைத்து வா" என்றார். மந்திரி உடனே சென்று இராமனை யழைத்துவர, இராமர் வந்து தமது தந்தையைப் பார்க்கும்போது கைகேயி இராமனைப்பார்த்து "அப்பா! உமது தந்தை முன்கொ டுத்த வரத்தின்படி உன்னைத் தண்டகாரண்யம் இன்றையதினமே அனுப்பக்கேட்டேன்" என்று கூற, "இராமர் நல்லது அம்மா! அப்படியே செய்கிறேன்" எனப் பகர்ந்து தசரதரைப் பார்த்து "அன்புள்ள பிதாவே! நீர் சிறிதும் வருத்தப்பட வேண்டாம்; எனது சிறியதாயின் மனக்கவலை தீர. யான் தண்டகாரண் யம் செல்லுகிறேன்" என்று கூறினார். இதைக் கேட்டதும் "ஆ! குழந்தாய்! என்னை விட்டுப் பிரிந்து கடும்புலி வாழும் காட்டிற்குப்போக உன் மனம் எப்படி விரும்பியது" என்றுகூறிப் பயந்து அக்ஷணமே பழையபடி மூர்ச்சை யடைந்தார். உடனே இராமர் தமது தந்தையை மூர்ச்சை தெளிவித்து, "நான் இப் பிரதிக்ஞையை நிறைவேற்றிவிட்டுச் சீக்கிரம் உமது பக்கம்வந்து விடுகிறேன். நான் இப்பொழுது புறப்படாவிட்டால், என்சிறியதா யினுடைய மனக்கவலை தீராதாகையினால், என் தாய், முதலியவர் களைச் சமாதானஞ் செய்துவிட்டு இப்பொழுதே உமக்கு வந்தனந் தந்து சுகமாகக் காட்டிற்குச் செல்லுகிறேன்" என்று சொல்லி, அவ்விடமிருந்து தமது தாய் கௌஸல்யை கிரகஞ் சென்று அவ ளைப் பார்த்துச் சமாதானஞ் சொல்லிப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்

செய்து, அவ்விடமிருந்து தமது கிரகம் சென்று ஸீதைக்குச் சகல விஷயங்களையுந் தெரிவித்தார். இச்சங்கதி கேட்ட லட்சுமணர் ராமர் பக்கம் சென்று "அண்ணு! தாங்கள் தனியே போவது சரியல்ல; எங்களிருவரையுங் கட்டாயமாய் அழைத்துக் கொண்டு போகவேண்டும்" என்று பிரார்த்திக்க, ராமரும் "சரி, சீக்கிரம் புறப்படுங்கள்" என்று வேதியர்களை யழைத்து யாத்திரா தானஞ்செய்து, அக்நிஹோத்தராக்நி ஸீதை லட்சுமணர் இவர்களுடன் கால்நடையாகத் தமது தந்தையைப் பார்க்கப் புறப்பட்டு வர, அதைப் பார்த்த, பட்டணத்து ஜனங்கள், மிக வருத்தமடைந்து எல்லாரும் வீதியில் சூழ்ந்துகொண்டிருக்க, ராமர் தந்தையிடஞ் சென்று வணங்கினர். பின் கைகேயியைப் பார்த்து, "அம்மா! காட்டுக்குப்போக உத்தரவு தாரும்" என்று சொல்ல, கைகேயி மரவுரி முதலியவைகளைக் கொடுத்தாள். அவைகளை ராமர் வாங்கி முதலில் தாம் தரித்துக்கொண்டு பிறகு ஸீதைக்குக் கொடுத்தார். ஸீதை அதனைத் தரித்துக்கொள்ளத் தெரியாமல் மயங்கும்போது, ராமர் இவ்விதம் தரித்துக் கொள்ளென்று சொல்ல, அதை அருகிலிருந்து கேட்ட வஸிஷ்டர், மிகவும் கோபங்கொண்டு கைகேயியைப் பார்த்து,"புத்திகெட்ட பாபியே! ராமன்மட்டு மல்லவோ காட்டுக்குப் போகவேண்டுமென்பது உன் வரம்; அவனுக்கு மரவுரி கொடுத்தது நியாயமே. ஏ துஷ்டே! ஸீதைக்கும் மரவுரி கொடுத்தது யாது காரணம்பற்றி" எனச் சினந்து, திவ்ய வஸ்திரங்களை வரவழைத்து ஸீதைக்குக் கொடுத்தார். இப்போது தசரதர் தமது மந்திரியை யழைத்து, "மந்திரீ! இம்மூவரும் காட்டுக்குச் செல்ல இரதத்தைச் சித்தப்படுத்து" என்று கட்டளையிட்டார். பிறகு ராமர் தமது தாய் தந்தையரை வலம் வந்து அவ்விடமிருந்து வெளியே வந்து அங்குத் தயாரா யிருக்கும் இரதத்தில் ஸீதை லட்சுமணருடன் ஏறி, ஸாரதியைப் பார்த்து "ஏ ஸாரதி! சீக்கிரம் இரதத்தைச் செலுத்து" என்று உத்தரவிட்டு, அருகிலிருந்த கௌஸல்யை, சுமித்திரை, தசரதர், பட்டணத்து ஜனங்கள் யாவருக்கும் சமாதானங்கூறி, புறப்பட்டு வெகு சீக்கிரத்தில் தமஸா நதியின் கரைக்கு வந்து சேர்ந்தார். இப்பொழுது மகாநுபாவராகிய ராமருக்கு வயது பதினெட்டு.

இது மாசிமாதம் சுக்கிலபட்சம் பஞ்சமி திதி கூடிய சிரேஷ்டமான நாளில் நடந்தது.

இங்ஙனம் ராமன் வரும்போது வழியில் நல்ல சகுனங்களாயின. இந்திரன் முதலிய தேவர்கள் ராமர் முதலிய மூவர்க்கும் வழியில் சிறிதும் சுகக் குறைவுண்டாகா வண்ணம் வேண்டிய சௌகரியங்களைச் செய்தார்கள். தமஸா நதிக்கரையில் ஒருநாள் தங்கி, பிறகு அவ்விடமிருந்து சிருங்கிபேரபுரம் சென்று அப்பட்டண அரசனாகிய குகனுடைய உபசாராதிகளைப் பெற்று அன்றிரவை அவ்விடம் கழித்தார். பின் அவ்வரசன்மூலமாக ஆலமரத்துப் பால் வரவழைத்து, ஜடை தரித்துக்கொண்டு ஸீதை லக்ஷ்மணருடன் ஓடமேறினர். பின் சுமந்திரனுக்கு இரதத்துடன் அயோத்திசெல்ல விடைகொடுத்தார். இப்பொழுது குகன் தன் ஞாதிகளைக்கொண்டு கங்கையில் ஓடத்தைச் செலுத்த அவ்வோடம் கங்காநதியின் மத்தியில் வரும்போது ஸீதை "ஏ கங்காதேவி! உன்னை வணங்குகிறேன். நாங்கள் மூவரும் வனவாசத்தை முடித்து க்ஷேமமாகத் திரும்பி வரும்போது, உன்னை மது, மாமிசம், பலி முதலியவைகளால் நான் பூஜிக்கிறேன்" என்று பிரார்த்திக்க, ஓடமும் விரைவில் அக்கரை போய்ச் சேர்ந்தது. உடனே ராமர் முதலிய மூவரும் ஓடத்தைவிட்டிறங்கி, குகனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, அன்றிரவு அந்நதிக்கரையிலிருந்து மறுநாட்காலையில் மெதுவாக நடந்து பரத்வாஜ ஆசிரமம் போய்ச்சேர்ந்து, அம்முனிவருடைய பூஜையை ஏற்றுக்கொண்டு அவ்விடங் கொஞ்சநேரந் தங்கியிருந்து, பிறகு பிரயாகை க்ஷேத்திரத்திற்குச்சென்று அங்குள்ள யமுனா நதியை வணங்கி, அதைத் தாண்டி மகாவனம் சென்று அங்கிருந்து வான்மீகாசிரமம் போய், அவருடைய பூஜையை ஏற்றுக்கொண்டு, அங்கே கொஞ்சநேரந் தங்கினர்கள். பிறகு சித்ரகூட பர்வதம் அடைந்தார்கள். அவ்விடத்தில் லக்ஷ்மணரால் மனோகரமான பர்ணசாலை ஏற்படுத்திக்கொண்டு, மிருகமாமிசத்தை வரவழைத்து, வாஸ்துபலி கொடுத்தார் ராமர். சயனம், ஆசனம், பாகம், அக்நிஹோத்திரம் தேவபூஜை முதலியவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒவ்வொரு ஆசிரமம் மரம் கொடிகளாலடைத்துக் கொண்டார். அவ்வாசிரமங்களில்

மூவரும் அயோத்தியிலிருப்பதுபோலவே வசித்து வந்தார்கள். அப்பொழுது அங்குவரும் முனிவர்களுக்கு, கந்தமூலம் மாமிசம் பழம் முதலியவைகள் கொடுத்து அதிதி பூஜை செய்தார்கள்.

இப்படியிருந்துவருஞ் சமயத்தில், ஒருநாள் ராமர் ஸீதையின் மடியில் தமது சிரசை வைத்துப் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார். இதைப்பார்த்த இந்திரன் புத்திரனாகிய ஜயந்தன் ஒரு காக்கை உருவங்கொண்டு, அவ்விடம் வந்து, மிருதுவும் சிவந்ததுமான ஸீதையினது * பெருவிரல் மாமிசத்தைப் புசிக்கக் கருதி, தன் நகத்தாலும் மூக்கினாலும் கீறிக் கொத்தினான். ஸ்ரீராமருடைய நித்திரைக்குப் பங்கம் வருமென்று பயந்து, அக்காக்கையை ஸீதை தடுக்கவில்லை. ஸ்ரீராமர் நித்திரை தெளிந்து எழுந்து ஸீதையினது பெருவிரலிலிருந்து இரத்தம் பெருகுவதையும் காக்கையானது தன் வாயில் இரத்தம் ஒழுக ஓடுவதையும் பார்த்து, அவ்வாயாசத்தின்பேரில் இஷீகாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்தார். அந்த அஸ்திரமானது காக்கையைத் தொடர்ந்து வெகு தூரம் துரத்திச்சென்றது. இந்தப் பிரம்மாண்ட கோளத்திற்குள் அந்த அஸ்திரத்தினின்றும் அவ்வாயசத்தைக் காப்பவர் யாருமில்லாததனால் கடைசியாக அது ராமரையே சரணம் புகுந்தது. ஸ்ரீராமர் நாரதமுனிவர் கூறியபடி அக்காக்கையினுடைய ஒரு கண்ணைமட்டும் நிமிஷநேரத்தில் இரையாகக் கொள்ளும்படி அந்த அஸ்திரத்திற்கு ஆஞ்ஞாபித்தார்; இவ்விதம் பல சந்தோஷகரமான காரியங்களைச் செய்துகொண்டு சுகமாக இருந்துவந்தார்.

இங்கு இப்படியிருக்க, சுமந்திரன் இரதத்தோடு அயோத்திக்குச்சென்று தசரதரிடம் ராமர் காட்டுக்குச் சென்றதைத் தெரிவித்தான். அதைக்கேட்டதும் அரசன் "ஏ ராகவா!" என்று சொல்லிக்கொண்டு பிராணனை விட்டார். இதையறிந்த வஸிஷ்டர் தசரதரது சரீரத்தைத் தைலகடாரத்திற் போட்டுப் பாதுகாக்கச் செய்து, கைகேயியின் புத்திரர்களாகிய பரத சத்ருக்னர்களை யுதாஜித்தினுடைய நகரத்திலிருந்து தூதர்களைக் கொண்டு சீக்கிரம்

* பிரசித்த ராமாயணத்தில் ஸ்தனமென்று கூறியுளது. இது கற்பாந்தரபேதம்.

அழைத்துவரச்செய்தார். அவர்கள், அயோத்திக்கு வந்ததும் தங்கள் தாய் கைகேயி, செய்த துஷ்டச் செய்கைகளைக் கேட்டு இவளை மிகவும் அவமதித்துப் பிறகு, தந்தை தசரதரது சரீரத்துக்குச் சரயூ நதியில் வஸிஷ்டர் கூறிய விதிப்படி அக்நி ப்ரதானம் செய்தார்கள். வீரர்களுக்குத் தாய்மார்களாகையால் கௌஸல்யை முதலிய மூவரும் பர்த்தாவுடன் உடன்கட்டை யேறவில்லை. பரதன் பின்நடக்கவேண்டிய காரியங்களையும் சரிவர முடித்துவிட்டு, தன்தாய் கைகேயியின் முன்பாக மந்தரை என்பவளைத் தக்கபடி தண்டித்தான். தன் தாய் தன்னைப்பலதாம் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி பிரார்த்தித்தும் அதற்குச் சம்மதிக்காமல், ஸ்ரீராமரை வனவாசத்திலிருந்து திருப்பி நகரத்துக்கழைத்துவரும்பொருட்டு மந்திரிபிரதானிகளோடு தன் தாய்மார்களையும் அழைத்துக்கொண்டு நகரவாசிகள் சூழ்ந்துவர, அயோத்தியாபட்டணமிருந்து பிரயாணமாகி, கங்கைக் கரைக்குச் சென்று, அவ்விடத்தில் குகனுடைய பூஜையை ஏற்றுக்கொண்டு உடனே பரத்வாஜாசிரமம் போய்ச்சேர்ந்தான். இங்கு பரத்வாஜ முனிவர் தாமிருக்குமிடத்தையே தபோபலத்தால் சொர்க்கமாகச்செய்து, வந்திருக்கும் சைன்னியங்கட்கெல்லாம் உபசாரங்கள் செய்தார். பரதன் அந்த முனிவரை வணங்கி அவர்கூறியவழியேசென்று சித்திரகூட பர்வதம்போய் ஸீதையுடனும் லட்சுமணனுடனும் பர்ணசாலையில் வசித்துவரும் தன்னுடைய தமையனாராகிய ராமரைக் கண்டு வணங்கினன். ஸ்ரீராமரும் பரதனைக் கட்டித்தழுவ, அவன் நடந்த சங்கதிகள் முழுவதையும் அவருக்குத் தெரிவித்தான். ஸ்ரீராமர் தமது தந்தை இறந்ததைக்கேட்டு,கங்கைக்குச் சென்று ஸ்நானம் திலதர்ப்பணம் முதலிய கர்மங்களைச் செய்து,முடித்துப் பர்ணசாலையை அடைந்தார். பிறகு பரதன், குருவாகிய வஸிஷ்டரோடு ஸ்ரீராமரைப்பார்த்துப் பட்டணத்துக்குவந்து பட்டாபிஷேகஞ் செய்துகொள்ள வேண்டுமென வேண்ட, ஸ்ரீராமர் அது முடியாதென்று மறுத்து விட்டார். பரதன் இதைக்கேட்டதும் தர்ப்பையை விரித்து, அதில் 'இனியான் ஆகாரம் புசிப்பதில்லை' எனக் கூறிப் படுத்துவிடவே, ஸ்ரீராமர் அவன் பிடிவாதத்தைக் கண்டு,அவனைச்சமாதானம் பண்ணும்படி குருவாகியவஸிஷ்டருக்

குச் சொன்னார். வஸிஷ்டர் பரதனுக் கருகில்வந்து "ஏபரதா! மகாவிஷ்ணுவே ராமராகப் பூபாரந்தீர்க்க அவதரித் திருக்கிறார். அவர் ராவணாதி ராட்சஸர்களைக் கொல்வதற்காகப் புறப்பட்டிருக்கிறார். ஆதலால் இவ் விஷயத்தில் நீ பிடிவாதம் செய்வது சரியல்ல" என்று ஸ்ரீராமருடைய உண்மையைப் போதித்தார். பின்பு பரதன் ஸ்ரீமந் நாராயணரே ராமரென்று அறிந்து, அவரைப் பார்த்து "அண்ணா! தங்களுடைய ராஜ்யபாரம் ஏற்கவும் நாள்தோறும் யான் வணங்குவதற்கும் தங்கள் பாதுகைகளை எனக்குக் கொடுக்கவேண்டும். நானும் ஜடாவற்கல தாரியாய் இந்தப் பதினான்கு வருஷ காலமும் தங்களை எதிர்பார்த்த வண்ணமாகப் பட்டணத்துக்கு வெளியிலேயே யிருந்து, ராஜ்யத்தை நடத்திவந்து பதினைந்தாவது வருஷத்து முதல் நாள்சூரிய அஸ்தமனம் வரையில் காத்திருந்து, பிறகு தங்களைக் காணாவிடில், அக்நிப்பிரவேசஞ் செய்து விடுவேன். இது என்னுடைய ஸத்தியமான பேச்சு" என்று கூறினான். அதைக் கேட்டதும் ராமர், "அங்ஙனமே ஆகட்டும்" என்று கூறி, இரத்தினங்களால் அலங்கரித்த தமது பாதுகைகளை ராஜ்ய பரிபாலன நிமித்தம் பரதனிடம் கொடுத்து, அவன் அயோத்திக்குப் போக உத்தரவளித்தார். பரதன் அந்தத் திவ்ய பாதுகைகளைப் பெற்று அவைகளைத் தனது சிரசில் வைத்துக்கொண்டு, தான் கிருதார்த்தனாகி விட்டதாக நினைத்து, ராமரைப் பன்முறை வலம்வந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தாய் மார்களுடனும் சேனைகளுடனும்அயோத்திக்குப் புறப்பட்டான், இப்பொழுது கைகேயி ஸ்ரீராமரைப் பார்த்து "ஏ ராமா! நான் செய்தது தவறு; அதை நீ மன்னிக்க வேண்டும்" என்று பலதடவை பிரார்த்தித்தாள். அதற்கு ராமச்சந்திரர் "அன்புள்ள தாயே! நீங்கள் ஒரு அபராதமும் செய்தவரல்லர். இனி வரப்போகும் சம்பவத்தின் காரணமாக எனது இஷ்டப்படி மந்தரையும் ஆகாசவாணியும் உங்களை மயங்கச் செய்தார்கள். ஆகையால் உங்களிடத்தில் எனக்குச் சிறிதும் கோபங் கிடையாது. சுகமாகப் பட்டணத்துக்குப் போங்கள்" என்று சொல்லவும், கைகேயி பரதனோடு அயோத்திக்குப் புறப்பட்டாள், பரதன் எல்லாருடனும் வந்தவழியே போய் அயோத்

தியின் எல்லேக்குவந்து, நாரதர் யாவரையும் அவருடைய கிரகத்தில் சுகமாக இருக்க உத்தரவிட்டு, வெளியில் நந்திகிராமம் எனத் தானிருக்கும் இடத்துக்குப் பெயரிட்டு, அங்கே ஸிம்மாசனம்ஏற்படுத்தி ஸ்ரீராமருடையஇரத்தினப்பாதுகைகளை அச்சிம்மாசனத்தில் ஏற்றித் தான் காய் கனி கிழங்குகளைப் புசித்துக்கொண்டு ராஜகாரிய முழுவதையும் அப்பாதுகைகளின் ஸந்நிதானத்தில் தெரிவித்து, சதாகாலமும் முனிவர் பரபிர்மத்தைத் தியானிப்பதுபோல், ஸ்ரீராமரைத் தியானித்துக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தான்.

ஸ்ரீ ராமர் சித்திரகூடபருவதத்தில் அநேக முனிவர்கள்சூழ வசித்தார். அப்போழுது ஸீதையின் பிறைபோன்ற நுதலில்சுந்தரத்திலகமிட்டு, கன்னத்தில் பலவித வர்ண புஷ்பரசங்களால் கொடியெழுதிக்கொண்டுவிநோதமாக விருந்தார். இப்படி இருக்கையில் பட்டணத்து ஜனங்கள் அடிக்கடி அவ்விடம்வந்து, அன்புடன் தம்மைத் தரிசித்துப் போவதைக் கண்டு, அத்தொந்தரவி னின்றும் விலக, அம்மலையை விட்டு அத்திரி மஹரிஷி ஆசிரமஞ்சென்று அவரை வணங்கி அவருடைய உபசரணைபெற்று, அவரிட்ட ஆசனத்தில் உட்கார்ந்தார். பிறகு ஸீதை அத்திரிமஹரிஷியின் சொற்படி, அவருடைய பத்தினியாகிய அநசூயையைப் பார்த்து வணங்க, அநசூயை ஸீதையைத் தழுவித் தனது மடிமீது உட்காரவைத்து, விசுவகர்மாவினால் செய்யப்பட்ட இரண்டு கர்ண குண்டலங்களும் இரண்டு வெண்பட்டுகளும் அங்கராகமும் கொடுத்து உபசரித்து " ஏ ஸீதே! இவ்வங்கராகத்தைச் சரீரத்தில் தரித்துக்கொண்டால் அழகு எப்பொழுதும் மாறாது. பாதிவிருத்தியத்தைப் பாதுகாத்து ஸ்ரீராமபிரானிடம் உன்னை அடையும்படி செய்யும். ராமர், லட்சுமணருடனும் உன்னோடும் சுகமாக வனவாசஞ்செய்து முடித்துத் தமது ராஜ்யத்துக்குப் போய்ச் சேர்வார்" என்று அநுக்ரகித்தாள். இப்பொழுது அத்திரிமுனிவர் ராமர் முதலிய மூவருக்கும் தக்கபடி போஜனம் செய்வித்தார். இங்கே ராமர் மூன்று நாள் வசித்திருந்து பின் முனிவரை வணங்கி, மற்றொரு வனம் சென்றார். இவ்விதமாக வருஷம் ஒன்றைக் கழித்தார். ஏ பார்வதி! ராமருடைய பாலசரித்திரமானது உனக்குச் சிறிது விளக்கப்பட்டதென்று பரசிவன் கூறினர்.

6-வது சருக்கம் முற்றிற்று.

7-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பார்வதி! பிறகு ராமர் வில்லை நாணேற்றிக்கொண்டு தண்டகாவனத்தில் ஸீதா லட்சுமணர்களுடன் பிரவேசித்து வழியில் தாம் முன்பும், தமக்குப் பின்னால் ஸீதையும், ஸீதைக்குப்பின்னால் நாணேற்றின வில்லைக் கையிற்கொண்ட லட்சுமணனுமாக நடந்து சென்று, அவ்வனத்தில் ஒரு தடாகத்தைப் பார்த்து அதிலிறங்கிச் சுகமாக ஸ்நானஞ்செய்து, தீர்த்தபானம் பண்ணி அத்தடாகக் கரையிலிருந்த மரங்களில் பழுத்திருந்த பழங்களைப் பறித்துப் புசித்துவிட்டு, அங்கே சற்று நின்றார்கள்.

இச்சமயத்தில் விராதனென்னும் ஒரு ராட்சஸன், கண்டவர் அஞ்சத்தக்க, பூதாகிருதியான சரீரத்தோடு வாயில் கோர தந்த முடையவனாய், யாவரும் பயப்படத்தக்க பெருஞ்சத்தமிட்டுக்கொண்டு தன்தோளில் அநேக மானுடர்களை ஒரு சூலாயுதத்தில் குத்திக் கோத்துக்கொண்டு வழியில் தன் எதிர்ப்படும் புலி, யானை, எருமை முதயவைகளைக் கொன்றுதின்று கொண்டு தங்களை நோக்கி வருவதைப் பார்த்தார்கள். இப்பொழுது ராமர் "ஏ லட்சுமணா! நீ ஸீதையைக் காத்துக்கொண்டிரு. நான் இதோ வரும் இவ்வரக்கனைச் சங்கரிக்கப் போகிறேன்" என்று கூறினார். இதற்குள் விராதனென்னும் அவ்வசுரன் இவர்களை நெருங்கி, ஒவ்வொருவரையும் தனித்தனியே "நீங்கள் யார்" என்று கேட்க, ராமர் தாம் இன்னாரென்றும் தாம் காட்டுக்கு வந்த காரணம் இது வென்றும் சொன்னார். விராதன் உடனே சிரித்து "யான் உலகப் பிரசித்தனான விராதனென்பதை உணராய்போலும்? எனக்குப் பயந்து இக்காட்டின்கண் வசித்த அநேக முனிவர்கள் இருந்த இடந் தெரியாமல் ஓடிவிட்டார்கள். நீங்களிருவரும் உயிர் பிழைக்க வேண்டுமானால், உங்கள் ஆயுதங்களை இவ்விடம் எறிந்துவிட்டு வேகமாக ஓடிவிடுங்கள், இல்லாவிடில் இதே நிமிஷத்தில் உங்களிருவரையும் புசித்து விடுவேன்" என்று சொல்லிவிட்டு, உடனே தன் பெருங் கரங்களை நீட்டிக்கொண்டு ஸீதையைத் தூக்கப்போனான். அந்தக்ஷணமே ஸ்ரீராமர் ஒரு பாணம் எய்து, அவனுடைய இரண்டு கரங்களையும் துண்டு செய்து விட்டார். பிறகு விராதன் மிகவும் கோபமடைந்து, வாயைக் குகைபோல்

திறந்துகொண்டு ராமரிடம் எதிர்த்து ஓடி வர ராமர் மற்றொரு பாணம் விடுத்து வேகமாக ஓடிவரும் அவனுடைய இரண்டு கால்களையும் வெட்டித் துண்டாக்கினார். இப்பொழுது விராதன் தரையில் விழுந்து புரண்டு தன்னுடைய பூதாகாரமான உடலைப் பாம்புபோல் வளைத்து வளைத்து நகர்ந்து முன்போல் வாயைத் திறந்துகொண்டு, ராமர் முன்வந்து எதிர்த்தான். இதைக் கண்டதும் ராமர் ஆச்சரியப்பட்டு, ஓர் அர்த்த சந்திரபாணத்தைப் பிரயோகித்து அவன் உயிரை மாய்த்து விட்டு ஸீதையிடம் சென்றார். ஸீதை தன் நாயகனைக் கண்டதும் ஸந்தோஷமடைந்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு புகழ்ந்தாள். கருணையங்கடலாகிய ராமபிரான் இப்படி விராதவதஞ் செய்ததைப் பார்த்த, தேவ கணங்கள் மகிழ்ந்து வாத்தியங்களை முழக்கினார்கள். பிறகு விராதனுடைய தேகத்திலிருந்து திவ்விய புருஷரூபத்துடன் ஒருவன் கிளம்பி ராமரிடம் சென்று வணங்கி அவரைப் பார்த்து, "கருணாநிதியே? முன் நானொரு வித்யாதரனாக இருந்தேன்; துர்வாச மகரிஷியின் சாபத்தை யடைந்து, ராட்சஸனானேன். இப்பொழுது தங்களால் அச்சாபம் விமோசனமாயிற்று" என்று கூறி அவரைத் துதித்துவிட்டு, அப்பொழுது தேவலோகத்திலிருந்து வந்திருந்த விமானமேறிச் சொர்க்கலோகம் சென்றான்.

இவ்விடத்திருந்து ராமர் ஸீதையுடனும் லட்சுமணருடனும் சர்வசுக நிதியாகிய சரபங்காசிரமமடைந்து, அவரை வணங்கி அவருடைய உபசாரணைகள்பெற்று, அங்கே ஓரிரவு தங்கினார்கள். மறுநாள் விடிந்ததும் சரபங்கர் ராமருக்குத் தமது புண்ணியத்தைச் சமர்ப்பித்துத் துதித்து மகிழ்ந்து ஜொலிக்கும் சிதையில் பிரவேசித்து, ஸ்தூல சரீரத்தைத் தகித்துவிட்டு, விஷ்ணுகணங்களால் கொண்டு வரப்பட்ட விமான மேறி வைகுண்டம் அடைந்தார். பிறகு அவ்விடமிருந்து ராமர் முதலிய மூவரும், சுதீக்ஷண முனிவருடைய ஆசிரமம் சென்று அவரை வணங்கி, அவருடைய உபசாரணைகளை ஏற்றுக்கொண்டு சுகமாக வசித்து வந்தார்கள்.

இப்படி வசித்துவரும் நாளில், அவ்வனத்திலுள்ள ஆசிரமங்களிலிருந்து அநேக முனிவர்கள் ராகவரைத்தரிசிக்கவந்து கூடி

அவரை வணங்கித் துதித்து அவரை ஸீதை லக்ஷ்மணருடனும் தத்தம் ஆசிரமங்களுக்கு அழைத்துச்சென்று சிலர் ஒருநாளும் சிலர் மூன்று நாளும் சிலர் ஐந்து நாளும் சிலர் ஏழு நாளும் சிலர் ஒரு பக்ஷகாலமும் சிலர் ஒரு மாதகாலமும் சிலர் ஒன்றரை மாத காலமும் சிலர் மூன்று மாதகாலமும் சிலர் ஐந்து மாதமும் சிலர் ஆறு மாதமும் சிலர் எட்டு மாதமும் சிலர் பதினொரு மாதமும் சிலர் வருஷகாலமுமாக தங்களோடு அவர்கள் வசிக்கும்படிசெய்து ஒருவரைவிட ஒருவர் மென்மேலும் விசேஷமாக உபசரித்துத் திருப்திகரமாகப் பூஜித்து அனுப்பினார்கள். ராமர் தமது தண்டகாரண்ய வாசத்தில் ஒன்பது வருஷங்களை இவ்விதம் சுகமாகக் கழித்தார். அப்பொழுது ராமர் ஸீதா லக்ஷ்மணருடன் சஞ்சரித்துக் கொண்டு வருகையில் அங்கங்கே தென்படும் ராக்ஷஸர்களைக் கொன்று அங்கங்கேயுள்ள முனிபுங்கவர்களுடைய ஆசிரமங்களிலும் பூந்தோட்டங்களிலும் உபவனங்களிலும் ஆறு தடாகம் மலை மலையினுச்சி இவைகளிலும் நாகை, வாழை, மா முதலிய மரங்களின் அடிகளிலும் கைலாய பருவதத்தில் பரமசிவனும் பார்வதி தேவியும் விநோதமாக இருப்பதுபோல் ஸீதையுடன் சுகமாக வசித்து வந்தார்.

பிறகு ஸ்ரீராமர் அகஸ்தியருடைய தம்பியாகிய சுமதிமுனிவருடை ஆசிரமமடைந்து, அவருடைய உபசரணையைப் பெற்று, அங்கிருந்து பலவித விருக்ஷங்கள் நிறைந்த அகஸ்தியாசிரமம் செல்ல, அவர் முனிவர்களுடனும் மாணுக்கர்களுடனும் எதிர் கொண்டு வந்து ஸ்ரீராமரை ஆலிங்கனஞ்செய்து மகிழ்ந்து தமது ஆசிரமத்திற்கு அழைத்துவந்து உபசரித்தார். ஸ்ரீராமர் அகஸ்தியருடைய பூஜையைப் பிரியத்துடனேற்றுக் கொண்டு, அங்குச் சிலகாலம் வசித்தார். அப்பொழுது அகஸ்தியர் தம்மிடத்தில் முன்னொருசமயம் தேவேந்திரன் ஸ்ரீராமருக்குக் கொடுக்கும்படி தந்திருந்த தநுசையும், குறைவுறாது வளரும் இரண்டு அம்புறாத் தூணிகளையும், இரத்தினப்பிடியமைந்த ஒரு கத்தியையும் அவர்க்குத்தந்து அவரைப் புகழ்ந்து வாழ்த்தினார். பிறகு ராமர் அம்முனிவர் சொற்படி பஞ்சவடிக்குப் போகப் புறப்பட்டு கௌதமியாற்றின் வடகரையின் வழியே சென்றார். அவ்விடத்தில் ஒரு மலை

போல் எதிர்ப்பட்ட அருணனுடைய பிள்ளையாகிய ஜடாயுவைக் கண்டு "தாங்கள் எனது தந்தை தசரதருக்குப் பரமமித்திரரல்லவா"? என்று கேட்டு, அவருடன் சற்றுச் சம்பாஷித்துப் பிறகு அவ்விடமிருந்து பஞ்சவடிக்குள் பிரவேசித்து, ஆங்கோரிடத்தில் சித்திரகூட பர்வதத்தில் அமைத்துக்கொண்டது போல் ஆசிரமங்களை அமைத்து, மிருக மாம்ஸங்களால் வாஸ்து பலி செய்து சுகமாக வசித்துவரும்போது, ஜடாயுவும் அங்குச்சென்று அவர்களைப் பாதுகாத்து வந்தார். ஏ பார்வதி! இங்கு ஸ்ரீராமர் மூன்றரை வருஷகால மிருந்தார்.

இக்காலத்தில் சூர்ப்பணகை யென்னும் ராக்ஷஸியின் பிள்ளையாகிய சாம்பவன் என்பவன் ஒரு காட்டில் வெகு உக்ரமாகத் தவம் புரிந்து வந்தான். பிர்மதேவர் அவன் தவத்துக்கிரங்கி, அவனுக்கு ஒரு கத்தியைக் கொடுத்து விட்டுப் பிர்மலோகம் போனார். அவன் அதை மறந்து, தவத்திலேயே யிருந்தான். அவ்விடத்தில் கொஞ்சநாளைக்கொல்லாம்செடிகொடிகள் அடர்ந்து அவனை மூடிக்கொண்டன. அங்கே தற்செயலாய் வந்து சேர்ந்த லட்சுமணருடையகையில் அக்கத்தி கிடைக்கவே, அதையெடுத்து அப்புதரை வெட்டினார்; அதிலிருந்த சாம்பனும் வெட்டுண்டான். அதை யறிந்த லட்சுமணர் பயந்து ராமரிடஞ் சென்று, "ஏ அண்ணா! யான் இன்று ஒரு பிர்மஹத்தி செய்து விட்டேன். அதற்கு ஒரு பிராயச்சித்தம் விதியுங்கள்" என்றுகேட்க, இராமர் "லட்சுமணா நீ பயப்படாதே! கொலையுண்டவன் முனிவனல்ல, சாம்பனென்ற ராட்சஸன்" என்று சொல்ல அதைக் கேட்டு, லட்சுமணர் பயமொழிந்து சந்தோஷமடைந்தார். இச்சங்கதி சூர்ப்பனகை யறிந்து, மிகவும்வருந்திக் கோபாவேசத்தால் காமரூபம் பெற்றுத் தன் கண்ணுக்கெதிர்ப்படும் ஒவ்வொரு பிராணியையும் இம்சித்துக்கொண்டு சஞ்சரித்து வருகையில் ஒருநாள் பஞ்சவடிதீரஞ்சென்று அவ்விடத்தில் ராமலட்சுமணர்களிருப்பதைப்பார்த்து தன் பிள்ளையை நினைத்து வருத்தப்பட்டு, இவர்களைக் கபடமாகக் கொல்ல வேண்டுமெனக் கருதி, உடனே திவ்யவஸ்திராபரணம் பூண்ட ஒருமனோகரமான ஸ்திரீ வேடங் கொண்டு, ராமரிடஞ்சென்று "நீங்கள் யார்? இவள்(சீதை) யார்?

இக்காட்டுக்கு வந்த காரணம் யாது? எங்கிருந்து வந்தீர்கள்? இனி எங்கேபோகப் போகிறீர்கள்" என்று வினவினாள். அதற்கு ராமர் தாம் இன்னாரென்பதையும் நகரம் விட்டுக் காட்டுக்கு வந்ததின் வரலாற்றையும் விவரமாகக் கூறினார். இதைக்கேட்ட சூர்ப்பனகை "ஐயா! நீர் எனக்குப் பர்த்தாவாகவேண்டும்' என்று கேட்டாள். ராமர் யான் ஒரு பத்தினியை ஏற்கனவே அடைந்திருக்கிறேன். அதோ லட்சுமணனிருக்கிறான் என்று சொல்ல, சூர்ப்பனகை லட்சுமணரிடஞ் சென்று, அவரையும் தனக்குப் பர்த்தாவாக வேண்டும்" என்று வேண்ட, லட்சுமணர் "யான் ராமபிரானுக்குத் தாஸன்; என்னை நீ அடைவாயானால் நீயும் தாஸியாக வேண்டும்" என்று விடை பகர்ந்தார். இதைக் கேட்டுச் சூர்ப்பனகை வேகமாக ஸீதையிடஞ்சென்று, அவளை எடுக்கப்போனாள். அப்பொழுது ராமர் "ஏ சூர்ப்பனகே! இங்குவா! இங்குவா!" என்று அவசரமாகக் கூப்பிட்டு " இந்தா இந்த அம்பைக் கொண்டுபோய் இலட்சுமணரிடம் அடையாளமாகக் காட்டு; பிறகு உன் மனோபீஷ்டம் நிறைவேறும்" என்று ஓர் அம்பை அவள் ஸகயில் கொடுத்தார். ராமர் இப்படிச் சொன்னதை சூர்ப்பனகை நம்பி, அந்த அம்பை எடுத்துக்கொண்டு, சென்று லட்சுமணருக்குக் காட்டினாள். அதைப்பார்த்து, லட்சுமணர் தமது தமையனுடைய கருத்தை அறிந்துகொண்டு, அந்த அம்பைத் தநுசில் பூட்டி, அவள் பேரில்விட, ராமநாமம் வரைந்துள்ள அந்தப்பாணம் அதிவேகமாகச்சென்று சூர்ப்பனகையினுடைய மூக்கு காது உதடு ஸ்தனம் முதலியவைகளை அறுத்தெறிந்து க்ஷணநேரத்தில் ராமருடைய அம்புறாத் தூணியை அடைந்துவிட்டது. இவ்விதம் அறுப்பட்ட ராக்ஷஸி யானவள் ஆ! ஆ! என்று பெருங் கூச்சலிட்டுக் கொண்டு, தன் சகோதரர்களாகிய கரதூஷணர்களிடம் சென்றாள். இவ்விதமான அவளுடைய கோலத்தைப் பார்த்த கரன் தூஷணன் திரிசிரசு மூவரும் அதன் காரணத்தை அவள் மூலமாகத் தெரிந்து, கோபங்கொண்டு ராமலட்சுமணர்களைக் கொல்லும்படி குரூரர்களான பதினான்கு ரக்ஷஸர்களை அனுப்பினார்கள். அவர்கள் ராமரிடம் வர, ராமர் அப்பதினன்கு பேர்களையும் சுலபமாகப் பதினன்கு பாணங்களால் எமனுக்கு நிவேதித்துத் தமதுலகுக்கு அனுப்பிவிட்டார். இந்தப்பதி

ளுன்கு பேரும் ராமராற் கொல்லப்பட்டதையறிந்த கரதூஷணர்கள் மிகவுங்கோபங்கொண்டு, பதினாலாயிரம் சைன்னியங்களுடன் ராமருடன் போர் செய்யப் புறப்பட்டார்கள். இதையறிந்த ராமர் ஸீதையையும் லட்சுமணரையும் அருகிலிருந்த ஒரு குகையில் பத்திரமாக விருக்கச்செய்து, தாம் தமது வில்லை நாணேற்றி எடுத்துக்கொண்டு ராக்ஷஸர்கள் முன்வந்து, அவர்களோடு சஸ்திர அஸ்திரங்களைக் கொண்டு சிறிதுநேரம் யுத்தம் செய்து பிறகு அந்த ராக்ஷஸர்கள் பதினாலாயிரம் பேர்கள் முன்னும் பதினாலாயிரம் ராமராக நின்று யுத்தஞ்செய்து அவர்களை அதமாக்கிவிட்டு, உடனே கரனோடு யுத்தஞ்செய்து அவ்வனைக்கொன்று, பின் தூஷணன் திரிசிரஸ் இவர்களோடும் யுத்தஞ்செய்து கொன்று யாவரையும் தமது பதவிக்கு அனுப்பி விட்டார். இவ்வளவும் கௌதம ஆற்றின் கரையில் ஒரு முகூர்த்த காலத்திற்குள் நடைபெற்றது. கரன் முதலிய மூவரும் எந்த இடத்தில் இறந்தார்களோ அந்த இடத்திற்கு த்ரிகண்டகமென்னும் பெயர் வழங்கிவந்தது. பிறகு அந்த இடமானது திரியம்பக க்ஷேத்திரமென்னும் பேர்கொண்டு விளங்குகிறது. இந்த ஜனஸ்தானத்தை ராமர் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து, சுகமாக வசிக்கச்செய்தார். இவ்விதம் யுத்தத்தில் ஜயமடைந்து ராகவர் ஜயலட்சுமியுடன் ஸீதையிடம் வர, ஸீதை மகிழ்ந்து ராமரை ஆலிங்கனஞ்செய்து கொண்டாடினாள்.

இச்சமயம் ஸ்ரீராமர் ஸீதையைத் தனியான ஓரிடத்திற்கு அழைத்துச்சென்று "ஏ ஸீதா! நீ இந்தவேளை முதல் மூன்றுவிதமாகப்பிரிந்து, அக்நியில் ரஜோரூபமாக வாசஞ்செய்; எனது வலது புறத்தில் சத்வரூபமாக விருந்து வசி; இப்பஞ்சவடியில் தசக்ரீவனை மயக்குவதற்காகச் சாயாரூபமாக வசி" என்று அன்புடன்கூற, ஸீதை அவ்விதமே மூன்றுருவங்கொண்டு மூவிடங்களிலும்வசித்துவந்தாள். மூக்கறுபட்ட சூர்ப்பனகை லங்காபட்டணஞ்சென்று, ராவணனைப்பார்த்து "ஏ அண்ணா! நீ பரமமூட்டாள்; உலகத்தில் அரசர்கள் அங்கங்கே நடக்கும் சங்கதிகளைச் சாரர்களைக்கொண்டு உடனுக்குடனே தெரிந்துகொள்ளவது வழக்கம். அதை நீ சிறிதும் அனுஷ்டிக்கவில்லை. ராமனென்ற ஒரு மனி

தன் ஜனஸ்தானத்தில் பதினாலாயிரம் சேனைகளையும் உன் சகோதரர்களையும் கொன்று எமலோகம் சேர்த்துவிட்டான்" என்று சொன்னாள். இதை இராவணன் கேட்டு அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவள் மூக்கு முதலிய அங்கங்கள் அறுபட்டிருப்பதைக் கண்டு, திடுக்கிட்டு நடுங்கித் தன் சிம்மாசனத்தினின்று இறங்கி அவளைப் பார்த்து "நீ இக்கதியை யடைந்ததற்கும் யுத்தத்திற்கும் காரணம் யாதென" சூர்ப்பனகை "ஏ அண்ணா! யான் ஜனஸ்தானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், அவ்விடத்தில் ஜானகியைப் பார்த்தேன். அவள் மிக அழகாக இருந்தமையால் அவளை நமது தமையன் இராவணனுக்காகக் கொண்டுபோவோ மென்று கருதிக் கிட்டநெருங்கி அவளையெடுக்கப் போகும் தருணத்தில் லட்சுமணன் விட்ட ஒருபாணத்தால், இக்கதியடைந்தேன். இராமனுடைய உத்தரவுப்படி லட்சுமணன் தவம் புரிந்துகொண்டிருந்த சாம்பனை நிஷ்காரணமாகக் கொன்றுவிட்டான். என் நிமித்தம் கரன் முதலியவர்களும் அவர்களிடம் போர்செய்து மாண்டார்கள். ஆகையால் நீ சாமர்த்தியவானானால் சீதையைக் கொண்டு வந்து சேர்; இல்லாவிடில் பதியை யிழந்த ஸ்திரீபோல் தலை குனிந்து கொண்டிரு" என்று சொன்னாள். இதைக்கேட்டு ராவணன் சூர்ப்பனகையைப் பார்த்து "அம்மா சூர்ப்பனகே! உன்னைச்சின்னப்படுத்தினார்களென் றுவருந்தாதே; இந்தக்ஷணம் அவர்களைக் கொன்றுவிட்டு அந்தக் கையால் உன் கண்ணீரைத் துடைக்கிறேன்" என்று பலவிதமாக அவளுக்குச் சமாதானங் கூறிவிட்டு, உடனே இரதமேறித் தனக்கு இதஞ் சொல்லுபவனும் தபசு செய்து வருகிறவனுமான தன்மாமன் மாரீசனிடஞ் சென்று, அவனுக்கு இச்சங்கதிகளைத் தெரிவித்தான். மாரீசன் "ஏ ராவணா! இலங்கைக்கே ஹானியுண்டாக்கத்தக்க இந்த உபதேசம் உனக்கு எந்த இதசத்ரு செய்தாள்? விசுவாமித்தூர் யாகத்தில் யான் ராமருடைய ஒரு பாணத்தால் சமுத்திரத்தில் விழுந்து, தப்பிப் பிழைத்தது அரிதாய்ப் போயிற்றே. அன்றுமுதல் ரதம், ரத்நம், ரஜதம், ருக்மம் முதலியவைகளைக் கேட்கும்போது அவைகளின் முதலெழுத்தான ர எனக்கு ராமரை ஞாபகமூட்டிப் பீதியுண்டாக்குகின்றது. நீ அந்த இராம

ரைப் பார்ப்பாயாகில், அந்தக்ஷணத்தில் எமலோகம் போய் விடு வாய்; ஆகையால் ராமரைப்பற்றி நினையாதே" என்று பல தடவை கூறிப் பயமுறுத்தினான். இதைக் கேட்டதும் ராவணன் மிகவுங் கோபங்கொண்டு மாரீசனைப் பார்த்து "நீ என்னோடு இப்பொழுது வராவிடில், உன்னைக் கொன்றுவிடுவேன்; ஆகையால் யான் சொல்வதைக்கேட்டு உடனே புறப்படு, நீ ஒரு மானுருவங் கொண்டு அவ்வனத்தில் ராமன் முன்னிலையில் விளையாடு; அப்பொழுது ராமன் உன்னைப்பிடிக்க எண்ணித் தொடர்வான்; அப்படித் தொடர்ந்து கிறிதுதூரம் சென்ற பிறகு ஏ லட்சுமணா! ஏ ஸீதை! என்று ராமன் குரல்போல் உரத்துச் சத்தமிடு. அதைக் கேட்டு லட்சுமணன் ஸீதையை விட்டுப்பிரிந்து விடுவன்; அச்சமயத்தில் ஸீதையை யெடுத்துக்கொண்டு யான் இலங்கைக்கு வந்து விடுகிறேன். பிறகு நான் உன் சிரமத்திற்காக இந்த இலங்கா ராஜ்யத்தில் பாதியை உனக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்று வாக்குத்தத்தம் செய்து அழைத்தான். மாரீசன் இவன் பிடிவாதத்துக்குட்பட்டு, இந்தப் பாவிகையில் நாம் ஏன் மரணமடைய வேண்டும்; ஸ்ரீராமர் கையில் மரணமடைந்தால் நமக்கு நற்கதி கிடைக்கும் என்று மனதில் உறுதி செய்து கொண்டு, பின் "ஏ ராவணா! உன் இஷ்டப்படியே செய்கிறேன்" என்று சொல்லி விட்டு அவருடன் ரதமேறிப் பஞ்சவடிசென்று நவரத்தனவர்ணம் பொருந்திய ஒரு தங்கமானாகி அங்கிருக்கும் ஸீதையை மயக்கினான். சாயா ஸீதை அந்த மானைப் பார்த்து "பிராணநாதா! இந்த மானை எனக்குப் பிடித்துக் கொடுக்கவேண்டும். இம்மான் உயிருடன் கிடைத்தால் அதனோடு விளையாடலாம். கொன்று பிடித்தால் அந்த மானின் தோலைக்கொண்டு கஞ்சுகம் முதலியவைகளைச் செய்து கொள்ளலாம் என்று சொன்னாள். ராமர் நடக்கப் போகும் சங்கதிகளை யறிந்துகொண்டு, லட்சுமணனை யழைத்து "ஏ லட்சுமணா! நீ ஸீதையினிடம் இரு, யான் இந்த மானைப் பிடித்துவருகிறேன்" என்று சொல்லி,உடனேமானைத் தொடர்ந்தார். மானானது ராமரை வெகு தூரம் கொண்டு போவதற்காகச் சில இடம் மறைந்தும் சில இடம் வெளிப்பட்டும் விளையாடிக் கொண்டே வெகு தூரம் செல்ல இராமர் சற்று யோசித்து உடனே பா

ணத்தை அம்மானின்மேலெய்ய, மான் "லட்சுமணா! ஏ ஸீதா! நான் இறந்தேன்" என்று ராமர் குரல்போல் கத்திவிட்டு இரத்தங்கக்கிக்கொண்டு பிராணனை விட்டது. இச்சப்தம் ஜானகியின் செவிக்கெட்டியதும் ஜானகி "ஏ லட்சுமணா! நீ உடனே போய் ராமரைப்பார்த்து வா" என்றாள். லட்சுமணர் "ஸீதா! இது ராமர் குரலல்ல. நீ அஞ்சவேண்டாம்" என்று சொல்ல, ஸீதை "ஏ லட்சுமணா! உன் நடத்தை எனக்குத் தெரியும்; நீ இப்படிச் சொல்வது பரதனுடைய உபதேசத்தால் ராமருடைய மரணத்தை விரும்பியோ அல்லது என்னையடைய விரும்பியோ தெரியவில்லை, அப்படியானால் இப்போதே நான் பிராணனை விட்டுவிடுகிறேன்" என்றாள். இந்தக் கொடிய வார்த்தையைக் கேட்டதும் லட்சுமணன் அந்தப் பயங்கரமான இடத்தில்ஸீதையைத் தனியே விட்டுப்போக மனமில்லாமல் "ஏ அம்மா! யான் சொல்வதைக் கேள்; ராகவன் உத்தரவுப்படி உன்னைக் காத்துவரும், என்னைப் பார்த்து அம்புபோன்ற கொடிய மொழிகளைப் பேசினதற்குச் சீக்கிரம் உனக்குப் பலன்கிடைக்கும். ஆயினும் இப்போது நான் சொல்லும் இதத்தைக்கொள். எந்தத்துஷ்டர்களும்உன்னை அணுக முடியாதபடி பாதுகாப்பதற்காக இந்தத் தநுசால் உன்னைச்சுற்றி ஒரு ரேகை கீறுகிறேன். எவ்வித ஆபத்து உனக்கு வருவதாயிருந்தாலும் நீ அதைவிட்டு வெளியேறுமலிருந்து வரவேண்டும்" என்று சொல்லித் தநுசின் நுனியால் பஞ்சவடியைச் சுற்றிலும் அகழிபோல் கோடு கிழித்துவிட்டு, ஸீதையை வணங்கி வேறொன்றும் பேசாமல் ராமரிருக்குமிடத்திற்கு வேகமாகச் சென்றார்.

முன்னதாகவே அங்குவந்து மறைந்திருக்கும் ராவணன் அந்தச் சமயம் ஒரு ஸந்நியாசி வேடங்கொண்டு, அவ்வாச்சிரமத்திற்கு அருகில் சென்று லட்சுமணனால் வரையப்பட்டிருக்கும் ரேகையைத் தாண்டிப்போக முடியாததனால், ஆசிரமத்தின் கடைவாயிலுக்கு வெளிப்புறமே "நாராயணா" என்று சொல்லி நின்றான். இதைக்கேட்டு ஸீதை அந்த ஸந்நியாசிக்குப் பிக்ஷைகொடுப்பதற்காக பிக்ஷையெடுத்து வாசலினருகிற் சென்று, இரேகைக்குட்புறமே நின்றுகொண்டு கையை நீளமாக அந்த ஸந்நியாசியிருக்கும் இடம் வரையில் நீட்டிப் பிக்ஷையை வாங்கிக் கொ

ள்ளுமென்று சொல்ல, சந்நியாசி தாமரைப் பூவெனத் திகழும் நேத்திரங்களுடைய ஸீதையைப் பார்த்து "இவ்வளவு தூரத்திலிருந்து நீ பிட்சை கொடுப்பதும் நான் அதைப் பெற்றுக் கொள்வதும் சரியல்ல; ராமருடைய கிரகஸ்த தர்மத்தைப் பாதுகாக்க உனக்கு விருப்ப மிருக்குமானால், இந்த இரேகையை விட்டு இவ்விடம் வந்து பிக்ஷை கொடுப்பதே உனக்குத் தகுதி" என்று கூற, சீதை 'தர்மத்துக்கு விரோதமாவானேன்' என்று நினைத்து சஞ்சலப் பட்டுக்கொண்டே இரேகைக்கு வெளியில் இடதுகாலை வைத்து முன்போலவே கையை நீட்டி "இதோ இந்தப் பிட்சையைப் பெற்றுக்கொள்ளு" மென்று கூறினாள். ராவணன் உடனே ஸீதையைப் பிடித்துக்கொண்டு சந்நியாசி வேடத்தை விட்டு, தன்னுடைய நிஜரூபமெடுத்துக் கோவேறுகழுதை பூட்டின தனது ரதத்தில் அவளை வைத்துக்கொண்டு, இலங்கா பட்டணஞ் செல்வதன் பொருட்டு, வேகமாகத் திரும்பி, சிறுதூரம் போனான். அப்பொழுது அவ்வழியில் தற்செயலாய் வந்த ஜடாயுவானவர் ராவணன் ஸீதையை அபகரித்துப் போவதை யறிந்து, அவனிடம் அமர்புரிந்து, தன கால்களாலும் மூக்கினாலும் அவனுடைய சிரேஷ்டமான இரதத்தைச் சின்னாபின்னப் படுத்தி, அதில் பூட்டியிருக்கும் எட்டுக் கோவேறு கழுதைகளையும் கொன்று தரையோடு தரையாய்த் தேய்த்துவிட்டு, அவனுடைய மகத்தான தநுசையும் ஒடித்து, பத்துக் கிரீடங்களையும் தள்ளி உடைத்து அவனுடைய சரீரங் கட்டு விட்டுப்போக நகங்களால் பிறாண்டி, அவனையும் மூர்ச்சையடையச்செய்து, ஸீதையை எடுத்துக் கொண்டு திரும்ப, உடனே ராவணன் மூர்ச்சை தெளிந்து கோபங்கொண்டு மறுபடி ஜடாயுவினிடம் வந்து அதனோடு யுத்தம் புரிந்து ஜடாயுவை இரத்தங்கக்க அடித்துத் தள்ளிவிட்டு ஸீதையை எடுத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாக இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது ஸீதை சொல்லமுடியாத வருத்தமடைந்து, தரையை நோக்கின வண்ணமாகவே இருந்து, தனது நகைகளிற் சிலவற்றை உத்தரீயத்தில் முடிந்து வைத்துக் கொண்டு, வழியில் ஒரு மலையின்மீது ஐந்து வானரங்கள் கூடி உட்கார்ந் திருப்பதைக் கண்டு, இந்த ஆபரணம் ராமருக்கு நாம் செல்லும் வழியைக் காண்பிக்குமென்று கருதி, அவைகளுக்கு மத்தியில் விழும்படி அம் முடிச்சைப் போட்டாள். பிறகு இவ்

வஞ்சகனான ராவணன் வேகமாக இலங்கைக்குச்சென்று அசோக வனத்தில் ஸீதையை வைத்துவிட்டு, அவளைக்காக்க ஆயிரக்கணக் கான ராட்சதர்களைத் திட்டப்படுத்திவைத்து, ஸீதையைப் பல விதமாகத் தான் பிரார்த்திக்க, அப்பொழுது ஸீதை தன் முகத் தைப் பார்க்காமலும் விடைகொடுக்காமலுமிருப்பதையும் பார்த்து விட்டுப் பிறகு பார்த்துக்கொள்வோம் என்று நினைத்துத் தன் அரண்மனைக்குச் சென்றான்.

அப்பொழுது பிரமதேவன் உத்தரவுப்படி, புசித்தவர்க்கு வருஷபரியந்தம் பசியாதிருக்கும்படியான பாயசத்தைத் தேவேந் திரன் இரகசியமாக ஸீதைக்குக் கொண்டுவந்து கொடுக்க, ஸீதை சந்தோஷமாய்ப்பெற்று அதிற்கொஞ்சமெடுத்து ஆகாசத்தில் சஞ் சரிக்கும் தேவர்களுக்கும் ராமர் லட்சுமணர் அதிதி தேறு இவர்களுக்கும் சமர்ப்பித்துவிட்டு, திரிசடைக்கும் கொஞ்சம் கொடுத்து மிகுந்ததைத் தானும் புசித்துவந்தாள். அப்பொழுது ராவணன் மந்திராலோசனை செய்து ராம லட்சுமணர்களைக் கொல் வதற்காகப் பதினாறு அரக்கர்களை யனுப்ப, அவர்களை வழியில் கபந்தன் என்னும் மற்றொரு அசுரன் கொன்றுதின்று விட் டான்.

மாரீசனாகிய மான் ராமபாணத்துக்குப் பயந்து திரிந்து நின்ற இடங்களெல்லாம் சமஸ்தானங்க ளாகவும் நகரங்களாக வும் ஆயின. அந்தமான் தன்னுடைய காலில் ஒரு நூபுரம் அணிந் திருந்தது. அது கௌதமி ஆற்றங்கரையில் விழுந்தது. அந்த இடம் இப்பொழுதுகூட நூபுரக்கிராமம் என்னும் பெயர்கொண்டு விளங்குகிறது. அந்தமான் ராமபாணத்தால் அடிபட்டுச் சபாலா க்ஷமாக எவ்விடத்தில் விழுந்ததோ, அவ்விடத்துக்குச் சாபல்ய கிராமமென்று பெயராயிற்று. இவ்விடம் இப்பொழுதும் பிரத்தி யட்சமாக விளங்குகின்றது. லட்சுமணன் பஞ்சவடியைச் சுற்றிச் செய்த இரேகை இப்பொழுதும் பயங்கரமான ஆறாகத்தெரிகிறது. ஏ பார்வதி! இப்பொழுது அந்த இடங்களில் ராமலட்சுமணர்கள் ஞானமுடைய சாதுக்களுடைய கண்ணுக்குப் பிரத்யட்சமாகிறார் கள். அவர்களை ஆக்ஞானதிருஷ்டி யுடையவர்களுக்குச் சிலா

ரூபமாகக் காணப்படுகிறார்கள். அந்தக் கௌதமியாற்றில் ராமர் லட்சுமணர் ஸீதை இவர்கள் ஸ்நானஞ்செய்த தீர்த்தங்கள் இப்பொழுதும் அவரவர்களுடைய பேரால் அழைக்கப்படுகின்றன. ராமரும் ஸீதையும் எந்த மலையினுடைய உச்சியில் படுக்கை போட்டுச் சயனித்தார்களோ, அந்த மலை ராம சையாகிரி என்னும் பேர்கொண்டு விளங்குகிறது. இன்னும் அம்மலையில் பலவிடங்களில் புற்றரைகள் படுக்கைகள் போலவே காணப்படுகின்றன.

இனி ராமரிடஞ் சென்ற லட்சுமணரைக் கவனிப்போம். ராமர் தம்மை நோக்கி ஓடிவரும் லட்சுமணரைப் பார்த்து அவர் தெரிவித்த ஸீதையினுடைய கொடூரவார்த்தைகளைக் கேட்டுக் கோபம் கொண்டார். கண்களில் நீர்விட்டு மனதில் ஆச்சரியங்கொண்டார். தம்மைச் சுற்றி நடக்கும் அபசகுனங்களையும்பார்த்தார். உடனே லட்சுமணனுடன் பஞ்சவடி வந்து ஆச்சிரமத்தில் ஸீதையைக் காணாமையால் தாமெடுத்த மானிட அவதாரத்துக் கேற்ப, வருந்தி "ஏ லட்சுமணா! ஸீதையைக் காணோமே! எங்கே போயிருப்பாள்; நம்மைவிட்டுப் பிரியுஞ் சுபாவம் அவளுக்குக் கிடையாதே!" என்று சொல்லிக் கண்டவிடமெல்லாம் இருவரும் தேடிக்கொண்டு வரும் வழியில், பக்ஷிராஜனாகிய ஜடாயுவைக் கண்டார்கள். ஜடாயு ராமரைப் பார்த்து "ஏ ராமா! ஸீதையை ராவணன் இலங்கைக் கெடுத்தேகினன். அதை யான்கண்டு ஸீதையை மீட்க அவனுடன் போர்புரிந்து, இக்கதி யானேனெனக் கூறித் தம்முயிரை விட்டார். பிறகு ராமர் அவருக்கு அக்நி ஸம்ஸ்காரங்கள் செய்து, கௌதமிநதியில் தீர்த்தமாடிக் காட்டுமிருகங்களினுடைய மாம்சத்தால் அவருக்குத் திருப்தி செய்வித்து, பிறகு தட்சிண திசையைநோக்கிப் பித்தன்போல் ஸீதையைத் தேடிக்கொண்டு சென்று, தங்குமிடங்களிலெல்லாம் தருப்பையால் ஸீதையைச் செய்துவைத்து அக்நி ஹோத்திர முதலிய கிரகஸ்த தர்மங்களை நடத்தி வந்தார். அக்காலத்தில் பரமசிவன் பார்வதியைப் பார்த்து "ஏ பார்வதி முன்னொருதரம் நீ என்னைப்பார்த்து எந்த ராகவருடைய மந்திரத்தை நீர் ஜபித்துவருகிறீரோ அந்த

ராகவர் மனைவியை விட்டுப் பிரிந்ததனால் வருத்தமடைந்து பித்தன்போல் இக்காட்டில் திரிகிறாரே என்று கேட்டாய். ராமர் சாக்ஷாத் மகாவிஷ்ணு ; உலகத்தவர், ஸ்திரீகளினிமித்தம் உண்டாகும் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுடைய சங்கையை விலக்க வேண்டுமென்பது கருதி, ஸ்ரீராமர் தாம் மானிடராக அவதரித்து, ஒரு ஸ்திரீயை மணந்து அதனால் நேரிடும் கஷ்டங்களைத் தாமே ஜனங்களுக்குப் போதிப்பதற்காகவே இவ்விதம் அபிநயம் செய்கிறாரென்று நான் உனக்கு விடையளித்தேன் ; உடனே நீ அதைப் பரீக்ஷிப்பதற்காக ராகவர் சஞ்சரிக்கும் வனத்திற்குச் சென்று ஸீதையுருவங் கொண்டு ராமரைப்பார்த்து "ஏ ராமா! ராஜீவபத்ராக்ஷா! நீர் ஏன் வருத்தப்படவேண்டும்? இதோ ஜானகியானிருக்கிறேன். என்னுடன் நீர் விளையாடிச் சுகியும். வாரும் போவோம்" என்றுசொல்ல, அதைக்கேட்ட ராமர் சிரித்துக் கொண்டு உன்னைப்பார்த்து 'நீயார்! நீயார்! நீ ஸீதையல்ல, உன்னையானறிவேன். நீ இக்காட்டில் ஸீதை வேடங்கொண்டு என்னை மயக்கவல்லவோ வந்திருக்கிறாய்" என்று பலதடவை சொல்ல, நீ யான் சொன்ன அவருடைய உண்மையை அறிந்து, அவரை வணங்கிப் பலதடவை பிரார்த்தித்துத் திரும்பவும் கைலாசமலைக்கு வந்து என்னை யடைந்தாய் ; ராமர் உன்னை எவ்விடத்தில் "நீயார்" என்று பலதடவை விசாரித்தாரோ அந்த இடத்தில் நீ இப்பொழுதும் த்வங்காம்பிகை என்கிற நாமங் கொண்டு விளங்குகிறாய். ஸ்ரீராமர் உன்னைவெட்கப்படும்படி செய்தவிடத்தில் த்வம்லஜ்ஜாபுர மென்றொரு பட்டணம் விளங்குகிறது" எனச்சிவபெருமான் பார்வதிக்கு ஸ்ரீராமபிரானுடைய உண்மையைக் கூறி யருளினார்.

பிறகு ராம லக்ஷ்மணர்கள் தாங்கள் எதிர்ப்படும் கோரரூபமான பல ராட்சதர்களைச் சம்ஹரித்துக்கொண்டு, தெற்கு நோக்கிச் செல்லுகையில், ஒரு காதவழி நீண்ட கைகளையுடைய கபந்தன் என்னும் அசுரன் அவர்களை மறித்துக்கொண்டான். ராமலட்சுமணர் அவன் யார் என்று பார்த்து, அவனுக்குக் காலும் தலையு மில்லாததை யறிந்து, தலைக்கொரு பாணமாக எய்து அந்தக் கபந்தனுடைய இரண்டு கைகளையும் அறுத்தெறிந்தார்கள்.

உடனே அவன் அச்சரீரத்திலிருந்து ஒரு திவ்ய ரூபம்பெற்று எதிர்தோன்றி ராமரை வணங்கி அவரைப்பார்த்து "ஏ ராகவா! நான் முன்னொரு கந்தர்வராஜன்; பிர்மாவினிடத்திலிருந்து ஒரு வராலும் எனக்கு இம்சை ஏற்படக்கூடாதென்கிற ஒரு வரம் பெற்று அந்தக் கர்வத்தால் அஷ்டாவக்ர முனிவரைப் பரிகசித்தேன். அம்முனிவர் கோபங்கொண்டு நீ ராட்சதனாகக் கடவதெனச் சபிக்க யான் அவரை வேண்டினதின் பேரில் திரேதா யுகத்தில் ஸ்ரீராம லட்சுமணர்கள் உன்னுடைய நீண்ட கைகளை யறுத்துத் தள்ளி விடுவார்கள். அப்பொழுது உன் சாபம் விடுபடுமென அநுக்கிரகித்துச் சென்றார். அம்முனிவர் சாபப்படியே யானொரு ராட்சதனாகித் தேவேந்திரனைத் துரத்த, அவர் கோபங்கொண்டு வஜ்ராயுதத்தினால் என் சிரசில் அடிக்க, சிரசும் கால்களும் என்னுடைய தேகத்துக்குள் அடங்கிவிட்டன. பிரமதேவன் கொடுத்த வர மகிமையால், வஜ்ராயுதத்தால் அடிபட்டும் எனக்கு மரணம் நேரிடவில்லை. அப்பொழுது இந்திரன் என்னைப் பார்த்து முகமில்லாதவன் எப்படி பிழைப்பானென்று இரக்கங்கொண்டு "உனக்கு உன் வயிற்றில் முகம் உண்டாகும்; கைகள் காதவழி தூரம் நீளும்" என்று அநுக்கிரகித்துச் சென்றார். அதுமுதல் இவ்வனத்தில் என் கைக்கெட்டும் பிராணிகளைக் கொன்று தின்று ஜீவித்து வந்தேன். இதோ அந்த வனத்தில் மதங்கர் முதலிய முனிவர்களுக்குக் கைங்கரியம் புரிந்து வரும் சபரியென்பவள் தங்களைத் தரிசிக்க வேண்டுமென்கிற ஆவல் கொண்டு வெகு நாளாகக் காத்துக்கொண்டிருக்கிறாள். ஏ ரகுநந்தனா! அவள் ஸீதையை மீட்டு வரும் மார்க்கத்தைத் தங்களுக்குத் தெரிவிப்பாள்" என்று சொல்லி ராமரை நமஸ்கரித்துத் துதித்துப் பின் சொர்க்கலோகம் சென்றான்.

ராம லட்சுமணர்கள் அவ்வரக்கன் கூறியவாறே, சபரியிடஞ் சென்றார்கள். சபரி இவர்களைக் கண்டதும் வணங்கி வெகு நாளாய்ச் சேர்த்து வைத்திருந்த கனிவர்க்கங்களை அவர்களுக்குச் சமர்ப்பித்துத் திருப்தி செய்வித்துப் பின், ஸீதைக்கு அருகிற் சென்று மனக்களிப்புடன் "ஏ ராகவா! ருசியமுகம் என்னும் மலையின் உச்சியில் சுக்ரீவன் மந்திரிகளுடன் வசிக்கிறான். அவனை நீர்

மித்திரனைக் கொண்டால் ஸீதையை மீட்டு வரலாம். இதோ உங்களுக்கு முன்னால் பம்பை யென்கிற ஒரு பெருந் தடாகமிருக்கிறது. அந்தத் தடாகத்தைச் சுற்றிலும், ருசியான பழங்களைக் கொடுக்கக் கூடிய மரங்களிருக்கின்றன. அவைகளிலுள்ள பழங்களைப் புசித்துவிட்டு, தாகசமனஞ் செய்துகொண்டு சுகமாக சுக்ரீவனிடஞ் செல்லுங்கள்" என்று மார்க்கத்தைக்காட்டி வணங்கி உடனே அக்நிப்பிரவேசஞ் செய்து, ராமபிரானுடைய தரிசனத்தால் வைகுண்ட பதவியை அடைந்தாள்.

பிறகு ராமர் மிக மெதுவாக நடந்து பம்பாசரஸுக்குச் சென்று அதன்கரையிலிருக்கும் இனிமையான கனிகளைப்புசித்து தீர்த்தபானஞ்செய்து அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டு ருசிய மூக பர்வதத்தை நோக்கிச் செல்லுகையில், வழியில் காணும் விநோதமான வனங்களின் வனப்பைக் கண்டு ஸீதையை நினைத்துக்கொண்டு கண்ணுக்கெட்டின வரையில் பார்த்துக்கொண்டே சென்றார்.

7-வது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

பிறகு ராம லட்சுமணர்கள் இருவரும் நாலா பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு ருசியமூக பர்வதத்தின் அருகிற் செல்லுகையில் அம்மலையின் உச்சியிலிருக்கும் சுக்ரீவன் மலை அடிவாரத்தில் வரும் இவ்விருவர்களையும் பார்த்து இவர்கள் யாராயிருக்கக் கூடுமெனச் சற்றாலோசித்துப் பின் தன் மந்திரி ஹநுமாரை நோக்கி "ஏ ஹநுமந்த! இதோ அடிவாரத்தில் வரும் இவ்விருவரும் வாலியால் என்னைக்கொல்ல அனுப்பப்பட்டவர்கள் போற் காணப்படுகிறார்கள். ஏனெனில் இவ்விருவரும் தனுசு பாணம் இவைகளோடு வருகிறார்களல்லவா? ஆகையால் இவ்விடத்தை விட்டு நாம் தப்பி ஓடிப்போய் விடவேண்டும். அதற்கு நீர் ஒரு பிரமசாரி வேடங்கொண்டு அவர்கள் அருகிற்சென்றவர்களோடு பேசி உள்ளக் கருத்து யாதெனத் தெரிந்து அவர்கள் கெட்ட எண்ணமுடையவர்களாயிருந்தால், அங்கிருந்து எனக்குக் கை சமிக்ஞை செய்யும்; நல்லபிப்பிராய முடையவர்களாயிருந்தால் சிரித்த முகமாயிரும்" என்று சொல்லி யனுப்பினான். அவ்விதமே ஹநுமார் ராம லட்சுமணரிடஞ் சென்று அவர்களை வணங்கி புருஷ சிரேஷ்டர்களே! தாங்கள் யார்" என்று கேட்க, அதற்கு லட்சுமணர் தங்களுடைய விருத்தாந்தங்களைச் சவிஸ்தாரமாகக் கூறி, இப்பொழுது சபரியின் சொற்படி சுக்ரீவனிடம் சிநேகஞ் செய்வதற்காக ராமர் வந்திருக்கிறார் என்று சொல்ல ஹநுமார் தன்னுடைய உண்மையான உருவத்தைக் காண்பித்து தங்களுடைய விர்த்தாந்தங்களையும் ராமருக்குத் தெரிவித்து அவர்களைப் பார்த்து "நீங்களிருவரும் இனி நடந்து மலையேறுவது தகுதியல்ல; என் தோளில் ஏறி உட்காருங்கள். நான் மலையினுச்சிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்று சொன்னார். ராம லட்சுமணர்கள் இருவரும் ஹநுமாருடைய தோளில் ஏறிக்கொண்டவுடன், அநுமார் ஒரு பெரிய உருவங்கொண்டு ஒரே தாவில் மலையினுச்சிக்குச் சென்று அவர்களை ஒரு மரத்தின் நிழலிலிறக்கி, உட்காரச்செய்து விட்டுப் பின் சுக்ரீவனிடம் சென்று, ராம லட்சுமணர்கள் இன்னாரென்பதையும் அவர்கள் மித்திர பாவத்தைக் கருதி வந்தார்களென்றுந் தெரிவித்தார்.

உடனே சுக்ரீவன் ராம லட்சுமணர்களை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் அக்நிவளர்த்து அந்த அக்நி சாட்சியாக அவரோடு சிநேகஞ் செய்துகொண்டு ஆலிங்கனஞ் செய்து மரத்தின் கிளைகளைப் பரப்பி ஆசனமமைத்து அவ்வாசனத்தில் அவர்களை வீற்றிருக்கச் செய்து தானும் மந்திரிகளுடன் உட்கார்ந்தான். இப்பொழுது ஒருவர்க் கொருவர் தங்கள் விருத்தாந்தங்கள் முழுவதையும் தெரிவித்துக் கொண்டார்கள். சுக்ரீவன் லட்சுமணரைப் பார்த்து "முன் வாலியினால் யான் அடைந்த துன்பங்களைக் கூறுகிறேன். தயைசெய்து கேட்டருளும்; மயன் பிள்ளையாகிய துர்மதன் என்ற ஓர் அசுரன் ஒரு காலத்தில் கிஷ்கிந்தைக்கு அருகில் வந்து உரக்கச் சத்தமிட்டு வாலியை யுத்தத்துக்கு அழைத்தான். வாலி அவனை எதிர்த்து ஒரே குத்தில் கீழே வீழ்த்தினான். அவன் பயந்து ஓடிப்போய் தன் குகைக்குள் நுழைய அவனைத் துரத்திக்கொண்டு வாலியும் அக்குகைத் துவாரத்தினருகே சென்றான். நானும் அங்கே சென்றேன். அப்பொழுது என்னைப் பார்த்து, 'நீ வெளியிலேயே யிரு, நான் குகைக்குள் சென்று வருகிறேன்' என்று சொல்லிவிட்டுக் குகைக்குள் சென்று பின் ஒரு மாதகாலம் வரையில் வாலி வெளிவரவில்லை; அதன் பிறகு அந்தக் குகைத் துவாரத்திலிருந்து இரத்தம் வெளிவரக் கண்டு பயந்து வாலியைத் துர்மதன் கொன்றுவிட்டானென நிச்சயித்து, விசனமுற்றிருந்தேன். இந்த நேரம் பார்த்து கிஷ்கிந்தையைச் சத்துருக்கள் சூழ்ந்துகொண்டார்களெனக் கேட்டு அக்குகைத் துவாரத்தை ஒரு பெரிய மலையைக்கொண்டு மூடிவிட்டுக். கிஷ்கிந்தை போனேன். சத்துருக்கள் என்னைப் பார்த்ததும் பயந்து ஓடிவிட்டார்கள். அப்பொழுது மந்திரிமார்கள் என்னை 'அரசனாகவிருந்து ராஜ்யபரிபாலனம் செய்துவர வேண்டுமென்று வேண்ட நான் பிரியப்படாமலிருந்தும் கட்டாயப்படுத்தி அவர்கள் என்னை அரசனாக்கினார்கள். பின் சிலநாட் சென்றபின், வாலி துர்மதனைச் சங்கரித்துவிட்டு, திரும்பிக் குகைத் துவாரத்துக்கு வந்து அது அடைபட்டிருக்கக் கண்டு கோபங்கொண்டு ஓர் உதையில் அம்மலையைத் தள்ளிவிட்டு வெளியே வந்து கிஷ்கிந்தை சென்றான். அங்கு அவனுடைய ஸிம்மாசனத்தில் யானிருக்கக் கண்டு மோசஞ்

செய்துவிட்டதாக எண்ணி என்னை அடித்துத் துரத்திவிட்டது மன்றி, யாராவது சுக்ரீவனுக்குப் பரிந்து நின்று அவனைக் காப்பார்களாயின் அவர்களையும் கொன்று விடுவேனென்று எல்லாத் தேசங்களிலும் பறையறையும்படி செய்வித்தான். பிறகு யான் லோகமெங்கும் சுற்றி எங்கும் தங்க முடியாமல் இந்த இருசிய மூகம் வந்தடைந்தேன். இங்கு அவனுடைய தொந்தரவு கிடையாது. ஏனெனில், முன்னொரு சமயம் துந்துபி என்ற ஓர் அசுரன் பயங்கரமானமகிஷரூபங்கொண்டு இராத்திரிவேளையில் கிஷ்கிந்தையின் அருகில் வந்து வாலியை யுத்தத்துக்கு அழைத்தான். வாலி உடனே அவனை எதிர்த்து ஒரு கையால் ஒரு கொம்பைப் பிடித்துத் தூக்கி கரகரவென்று சுற்றித் தரையில் தாக்கிப் பின் இரு கைகளாலும் கொம்பைத் திருகித் தலையைப் பிடுங்கி வெகுதூரம் இரத்தம் தெறிக்க வீசியெறிந்தான். அது வெகுதூரத்துக்கப்பாலிருந்த மதங்காசிரமத்தின் முன்போய் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு விழுந்தது. இதனை யறிந்த மதங்க முனிவர் வெகு கோபங்கொண்டு " ஏ வாலி! என் மலைக்கு இனி நீ தலைகாட்டுவாயானால், அந்த க்ஷணமே நீ மரணமடைவாய் " என்று சாபமிட்டாராதலால் அதுமுதல் வாலி இங்கு வருவதில்லை; நான் ஸீதையை வரவழைத்துத் தங்களிடஞ் சேர்ப்பிக்கிறேன். இது என் பிரதிக்ஞை. ஆகாயமார்க்கமாய் ராவணன் ஸீதாதேவியை எடுத்துக் கொண்டு சென்றதை நான் கண்டேன். அப்பொழுது ஸீதை தன் உத்தரீயத்தில் முடிந்து எங்களிடத்திற்போட்ட ஆபரண முடிப்பைப் பாருங்கள்: இதோ இருக்கிறது " என்று அதை எடுத்துக் காட்ட, ராமர் அதைக் கையில் வாங்கி "லட்சுமணா! இந்த ஆபரணங்களை ஸீதை அணிந்திருக்கப் பார்த்ததுண்டா? இவை அவளுடையதென்பது நிச்சயந்தானா தெரிவிப்பாய் எனக் கேட்க, லட்சுமணர் "அண்ணா! பிராட்டியாருடைய பாதங்களில் அணிந்திருக்கும் நூபுரங்களைமட்டும் யான் பிரதிதினமும் பிரதட்சிணஞ் செய்து வணங்குங் காலையில் கண்டிருக்கிறேன். மற்ற எந்த ஆபரணங்களையும் யான் கண்டதில்லை" என்று கூறி, அதைக்கேட்டு ராமர் தாம் இப்பொழுது ஸீதையை அடைந்ததுபோல் எண்ணி மகிழ்ந்தார். பின் சுக்ரீவன் தமது பராக்கிரமத்தைக் காட்டுவதின் நிமித்தம் அங்கிருந்த துந்துபியின் சிரசைத் தமது பெரு விரலால் எற்ற அது பத்துக் காதவழி தூரஞ் சென்று விழுந்தது.

இஃதன்றி மகானுகிய ராமர் அங்கோர் இடத்தில் சக்ராகார மாக நின்ற ஏழு பனைமரங்களைக் கண்டு, அம்மரங்கள் பூமிக்குள் ளிருக்கும் ஒரு பாம்பின் உடலிலிருந்து முளைத்திருப்பதாகவும் தெரிந்து பக்கத்திலிருக்கும் லட்சுமணருடைய பாதத்தைத் தமது பாதப் பெருவிரலால் சிறிது அழுத்தி, ஆதிசேஷ அம்சமான அப் பாம்பை ஒழுங்குப்படுத்தி மரங்கள் யாவையும் வரிசைக் கிரமத்தி லிருத்தி, ஒரு பாணத்தால் அவைகளைத் துளைத்து வீழ்த்தி ஞர். அப்பாம்பில் மரங்கள் முளைக்க வேண்டிய காரணம் யாதெ னில், முன்னொரு சமயம் தற்செயலாய் ஏழு பனம் பழங்களை ஒருவன் கொண்டுவரக்கண்டு, வாலி அவைகளைத் தன் குகையில் வைக்கும்படி சொல்லிப் பின் அவைகளைத் தான் சென்று பார்க் கையில், அந்தப் பழங்களேழும் ஒரு சர்ப்பமாகக் காணப்பட்டன. அதைப் பார்த்தவுடன் வாலி உன் உடலின்மேல் ஏழு மரங்கள் முளைக்கக் கடவதெனச் சாபமிட்டான். உடனே சர்ப்பமானது "அம்மரங்களை வெட்டுகிறவனே உன்னைக் கொல்லுகிறவனுவான்; அதற் கையமில்லை" எனப் பிரதி சாபங் கொடுத்தது.

இப்படிப்பட்ட ராமசாமர்த்தியங்களைச் சுக்ரீவன் கண்டு மகி ழ்ச்சியடைந்து "ஏ ராமா! நான் இன்னொரு விசேஷங் கூறுகி றேன். தேவர்களுக் கதிபதியாகிய இந்திரன் முன் ஒரு மாலையை வாலிக்குக் கொடுத்திருக்கிறான். அந்த மாலையை அணிந்திருப்ப வனை யுத்தமுகத்தில் எவன்பார்க்கிறானே அவனுக்குஅவனுடைய புஜபலம் முழுமையும் போய்விடும். அம்மாலை வாலிக்குக்கிட்டித்த தெப்படியெனில், கசியப்பிரஜாபதி முன்னொரு காலத்தில் உக்ர மான தவஞ்செய்து பரமசிவனிடத்திருந்து அம்மாலையையடைந்து தமது புத்திரனுகிய இந்திரனுக்குக் கொடுத்திருந்தார். இந்திரன் தன்னுடையபுத்திரன்வாலிக்கு அன்புடன்கொடுக்க, அம்மாலையை இப்பொழுது வாலி தன்கழுத்தில் அணிந்திருப்பதால், அவனை நீர் பார்த்தவுடன் உமது பலம் ஒழிந்துவிடும். ஆகையால் அதிலிரு ந்து ஜயம்பெற உபாயம் ஒன்று யோசித்துக்கொள்ளும்" என்று சொன்ஞன். ராமர் உடனே அருகிலிருந்த ஸர்ப்பத்தைப் பார் த்து "உன் உடலில் முளைத்திருந்த மரங்களேழையும் வெட்டி

உனக்குப் சாபவிமோசனந் தந்தேனல்லவா ? ஆகையால் நீ என் சொற்படி இப்பொழுதே கிஷ்கிந்தாபுரி பட்டணஞ்சென்று இரவில் வாலி நித்திரை செய்யும் சமயம் நோக்கி, அவன் கழுத்தில் அணிந்திருக்கும் மாலையைக் கொண்டுவா" என்று கட்டளையிட்டார். அந்தப்படி அச்சர்ப்பம் கிஷ்கிந்தைக்குச்சென்று வாலியின் அந்தப்புரத்தில் மஞ்சத்தின்பேரில் வைத்திருக்கும் அம்மாலையை எடுத்துக்கொண்டு அங்கிருந்து திரும்பி ராமரிடம் வந்து அதைக் கொடுத்து வணங்கிச்சென்றது. ராமர் மாலையைப்பெற்றதும் வாலியோடு அமர்புரியச் சுக்ரீவனுக்குக்கட்டளையிட, சுக்ரீவன் உடனே கிஷ்கிந்தாபட்டணம் சென்று வாலியை யுத்தத்துக் கழைத்தான். பின் இருவரும் யுத்தஞ்செய்தார்கள். ராமர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தோல்வியடையாத பலங்கொண்டவராயும் வித்தியாசமில்லாத ரூபமுடையவராயும் இருப்பதைக் கண்டு இச்சமயத்தில் நாம் பாணம் எய்வோமாகில், அது சுக்ரீவனைக்கொன்றாலும் கொல்லும்; அப்படி அவனைக் கொன்றுவிடுவோமானால், நமக்கு மித்திரத் துரோகமல்லவா வந்துசேரும். ஆகையால் இச்சமயம் நாம் பாணம்விடுவது யுக்தமல்ல என்று நினைத்துச் சும்மாவிருந்தார். சுக்ரீவன் வெகுநேரம் போர்செய்து களைப்படைந்தமையால் யுத்தத்தைவிட்டுப் பிரிந்து ராமர்பக்கம் வந்து அவரைப் பார்த்து "ஏ ராமா ஏன் என்னை வாலியினுடைய கைக்கு இரையாக்குகிறீர். என்னைக் கொல்ல உமக்கு விருப்பமிருக்குமானால் நீரே கொன்றுவிடும்" என்று சொல்ல, ராமர் லட்சுமணரைக்கொண்டு சுக்ரீவன் கழுத்தில் கொடிகளால் செய்த மாலை ஒன்றைப் போடச்செய்து அவனை யுத்தத்துக்கு மறுபடியும் அனுப்பினர். அவன் முன்போலவே வாலியை யுத்தத்துக் கழைத்தான். உடனே வாலி யுத்தத்துக்குப் புறப்பட அதைக் கண்ட அவன் மனைவி தாரை "ஏ நாதா ராமர் என்றொருவர் இவ்விடம் வந்து சுக்ரீவனிடம் சினேகங் கொண்டிருப்பதாகக் குழந்தை அங்கதன் என்னிடம் கூறியுள்ளானாதலால் நீர் இப்பொழுது யுத்தம் செய்வதை யொழித்து ராமரிடம் சென்று நமஸ்கரித்து, தம்பி சுக்ரீவனை அன்புடன் அழைத்து வந்து, யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைக்கவேண்டும்; நான் சொல்வதைத் தட்டவேண்டாம்"? என்று பிரார்த்தித்தாள். வாலி

"ஏ தாரே! நான் சொல்வதைக்கேள்; ஸாக்ஷாத் நாராயணரே நரவேஷம் பூண்டு ராகவராக வந்திருப்பதை நானறிவேன். அவர் கையால் நான் மரணமடைந்து, பரமபதமடைய வேண்டிய விதி எனக்கு இருக்கிறது. நீ இவ்விடத்தில் சுக்ரீவனைச் சேவித்துக் கொண்டு சுகமாக இரு. சுக்ரீவன் உன்மேல் ஒரு சமயம் விருப் பங்கொள்வான். அப்பொழுது அவன் மனத்துக்கு விரோத மின்றி அவனுடன் சுகித்திருப்பாயானால் அவன் பத்தினியை நான் அநுபவித்த கடன் தீர்ந்துவிடும். நான் மரணமடையக்காலம் வந்தமையாற்றான் ஒருபோதும் என்னை விட்டகலாத என்மாலை என்னை யறியாமலே மறைந்திருக்கிறது. இன்று ராமபாணத் தால் அடிபட்டு யுத்தகளத்தில் மரணமடையப் போகிறேனாதை லால், நான் தன்னியனானேன். என் தாய் தந்தையரும் தன்னிய ரானார்கள். ஆகையால் யான் யுத்தத்திற்குப் போகிறேன். நீ வருத்தமுற வேண்டிய அவசியமில்லை" என்று அவளுக்குச் சமாதானங்கூறி, சண்டைக்குப் புறப்பட்டுச்செல்ல, மார்க்கத்தில் மகோத்பாதங்களைக்கண்டு சந்தோஷமடைந்து ரணகளம் சென்று தம்பி சுக்ரீவனுடன் கொடூரமான யுத்தம் புரிந்தான். அப்பொ ழுது ஸ்ரீராமர் ஒரு மரத்தில் மறைந்துகொண்டு ஒரு பாண மெய்து வாலியை யடித்து வீழ்த்தினார். இதைக்கேட்ட தாரை ஓடிவந்து ரணகளத்தில் ராமபாணத்தினால் அடிபட்டு விழுந்து கிடக்கும் வாலியைப்பார்த்து மிகவும் வருந்தினாள். பிறகு வாலி ரமாநாதனாகிய ஸ்ரீராமரைப் பார்த்து "நீர் வீரராக விருந்தும் என்னை ஒரு மரத்தில் மறைந்து மார்பில் பாணமெய்ததினால் உம் முடைய கீர்த்திக்குப் பெருங்குறை நேரிட்டது. எனக்கு வெகு நன்மைகிடைத்தது. இவ்விதம் என்னை அடித்துத்தள்ளும்படியாக நான் தங்களுக்குச் செய்த அபகாரம் யாது?" என்று வினவினான். ராமர் "ஏ வாலி! உன் சகோதரனாகிய சுக்ரீவனுடைய மனைவியை நீ உன் மனையில் வைத்துக்கொண்டதுமன்றி, அவனையும் துரத் தித்துரத்தி யடித்துக்கொன்றுவிட நீ விரும்பிய குற்றமே, உன் மேற் கோபங்கொண்டு கொன்றதற்குக் காரணமாகும். நீ சுக்ரீ வன் பத்தினியை இந்நாள் வரையில் அநுவிபவித்ததற்காக, இனி உன்னுடைய பத்தினி தாரையை என் அநுமதியில் சுக்ரீவன்

அநுபவிப்பன். உன் துர்நடக்கையின் நிமித்தம் நான் உன்னைக் கொன்றேனாயினும் நீ அதற்குப் பிரதியாக துவாபரயுகத்தின் கடைசியில் ஒரு வேடனாகப்பிறந்து பிரபாஸமென்கிற க்ஷேத்திரத்தில் என்னுடைய காலில் ஒரு பாணம் எய்து இப்பழியைத் தீர்த்துக்கொண்டு, அப்பிறப்பிலேயே முத்தியடைவாய்'' என்றுகூறினார். வாலி ''ஏ ராகவா!எனக்கு அப்படி நேரப்போவது உண்மையே. ஆனால் ஸீதையை ராவணன் எடுத்துப்போன விஷயத்தை எனக்கு முன்னாலேயே தெரிவித்திருப்பீரேயானால், ஒரு நிமிஷத்தில்ராவணனைக் கொண்டே அந்த ஸீதையை உம்மிடம் திரும்பக் கொண்டுவந்து விடும்படி செய்திருப்பேன்; இனி என் குமாரன் அங்கதனை நீர்தான் பாதுகாத்து வரவேண்டும்'' எனப்பிரார்த்தித்து, யுத்தகளத்திற் பிராணனை விட்டான். பிறகு ராமர் அங்கதனைக்கொண்டு வாலிக்கு உத்தரகிரியை நடத்தி முடித்தார்.சுக்ரீவன் ராமரை வணங்கி 'ராமா! இக்கிஷ்கிந்தா நகரத்திற்கும் தாங்களே அரசனாக விருக்கவேண்டும்'' என்று வேண்ட, ராமர் லட்சுமணரைக்கொண்டு சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார்; அச்சமயம் மாரிகாலம் ஆரம்பமானதால், இந்த நான்கு மாதமும் சுகமாக வசிக்கத்தகுந்த இடம் எது வென்று விசாரிக்க, அருகிலிருக்கும் பிரவர்ஷணகிரியின் உச்சியில் ஸ்படிகமயமான ஒரு குகையிருப்பதாகத் தெரிந்துகொண்டு அங்குச்சென்றார். அந்தக் குகையைச்சுற்றிலும் வாசனை மலர் நிறைந்த மரங்களும் இனிமையான கனிவர்க்கங்கள் கொடுக்கத்தக்கமரங்களும் நிறைந்திருந்தமையால், அதுவே வசிக்க யோக்கியமானதெனக் கண்டு அங்கே அவர் லட்சுமணருடன் வாசஞ்செய்தார்.

இங்கு வாசஞ்செய்து வருங்காலத்தில் ஒருநாள் லட்சுமணர் ஸ்நானஞ்செய்துவிட்டு ராமர் சமீபம் வந்து ராமரைப் பார்க்க, அப்பொழுது ராமர்பக்கம் சாத்விகாம்சமான ஸீதை யிருக்கக் கண்டு, வந்தனம் செய்தார். உடனே ஸீதை ராமருடைய வலது பாகத்தில் ஐக்கியமானாள். ஏ பார்வதி! ஆகையால் ராமர் ஸீதையை விட்டு ஒருகாலும் பிரிந்தவராகார்—என்றார்.

ராமரும் லட்சுமணரும் அம்மலையில் ஸ்நானஞ் செய்து வந்த தீர்த்தங்களுக்கு ராமதீர்த்தமென்றும் லட்சுமண

தீர்த்தமென்றும் பெயருண்டாயின. கிஷ்கிந்தாநகரத்தில் ராஜ்ய பரிபாலனம் செய்துவருகிற சுக்ரீவன் தன்னுடைய மந்திரி ஹநுமார் கூறிய ஆலோசனைப்படி உலகத்தில் பலவிடங்களிலிருக்கும் தன் வானரசேனைகளை வரவழைக்க, ஒற்றர்களுக்கு உத்தரவளித்தான். இப்பொழுது மாரிகாலம் மாறி சரத்காலம் வந்தது. இதை ராமபிரான் அறிந்து சுக்ரீவன் தமது காரியத்தில் சிறிது மெதுவா யிருப்பதினிமித்தம் கோபங்கொண்டு லட்சுமணரை யழைத்து "நீ சுக்ரீவனிடம் சென்று வா" என்றனுப்பினர்.

லட்சுமணர் அவர் உத்தரவுப்படி கிஷ்கிந்தாபுரி சென்று வானரங்களைப் பயமுறுத்த, அதை யறிந்த சுக்ரீவன் அவரைச் சமாதானம் பண்ணி அழைத்துவரத் தன் மந்திரி ஹநுமாரை யனுப்பினன். ஹநுமார் லட்சுமணரிடஞ்சென்று இனிமையாகப் பேசி அவரைச் சமாதானப்படுத்தி, அழைத்துக்கொண்டு கோட்டையின் நடுப்பிரகாரத்தினருகே வந்தார். இங்கே மறுபடியும் சுக்ரீவனால் லட்சுமணரைச் சமாதானஞ்செய்ய அனுப்பப் பட்ட தாரையும் வந்து, லட்சுமணரைப் பார்த்து, "மைத்துனரே! இதோ வெகு தொலைவிலிருந்த வானர சைன்னியங்களெல்லாம் சுக்ரீவன் உத்தரவுப்படி வந்துகொண்டிருக்கிறார்கள். கோபஞ்செய்யவேண்டாம்" என்று சாமதானப்படுத்தி, அவர் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சுக்ரீவனுடைய அந்தப்புரஞ் சென்றாள். சுக்ரீவன் லக்ஷ்மணரைக்கண்டதும் ஆசனத்திலிருந் தெழுந்து உபசரித்தான். லட்சுமணர் "ஏ சுக்ரீவா! ரகுசிரேஷ்டராகிய ராமரை நீ மறந்துவிட்டாய். வாலியைக்கொன்ற ராம பாணம் உன்னை எதிர்பார்க்கிறது, நீ என்னால் கொலையுண்டு வாலியினுடைய வழியைப் பின் பற்றுவாய்" என்று கூறினர். இவ்விதம் கடுமையாகப்பேசிய லட்சுமணரைப்பார்த்து ஹநுமார் "ஐயா தாங்களேன் இப்படிப்பேசவேண்டும்? எங்கள் மன்னன் சுக்ரீவன் ராமரை மறக்கவில்லை. அவர் காரியத்தில் எப்பொழுதும் கண்ணுயிருந்துவருகிறார்" என்று சொல்லி, சுக்ரீவனைக் கொண்டு அவர்க்குப் பூஜைசெய்வித்துச் சமாதனஞ்செய்தார். பிறகு சுக்ரீவனும் பிரதானமான வானரசிரேஷ்டர்கள்சூழ சேனை

களுடன் ராமரிடஞ் சென்று வணங்கி "ஐயா! இதோ வந்திருக்கும் என்னுடைய சைன்னியங்களைப் பாருங்கள். பதினெட்டுப் பத்ம யூகாதிபதிகள் வந்திருக்கிறார்கள்" என்று தன் சேனு சமுத்திரங்களைக் காட்டிப் பிறகு அவர் உத்தரவுப்படி அச்சைன்னியங்கள் முழுவதையும் பிரித்து, ஜாம்பவான், அங்கதன், ஹநுமான், நளன், சுஷேணன், சரபன், மைந்தன் இவர்களைப் பரிவாரங்களுடன் தெற்குத் திக்கிற்கும் மற்றவர்களை மற்ற மூன்று திக்குகளுக்கும் போக உத்தரவிட்டு ஸீதையிருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து ஒருமாத காலத்திற்குள் திரும்பி வராவிட்டால் நீங்கள் வதைசெய்யப் படுவீர்களென்று ஆஞ்ஞாபித்தனுப்பினன். இவ்விதம் உத்தரவுபெற்றுச் செல்லும் ஹநுமாரிடம் ராமர் தமது நாமம் வரைந்துள்ள கணையாழியைக்கொடுத்து "இதை ஸீதையினிடத்தில் ரகசியமாகக் கொடு" என்று சொல்லித் தன்னுடைய மந்திரத்தை அவருக்கு உபதேசஞ்செய்து அனுப்பினர். ஹநுமார் அம்மந்திரத்தை உடனே லட்சம் ஆவர்த்தி ஜபித்து அதைலட்சம் ஆவர்த்தி எட்டிலும் வரைந்து அம்மந்திரசித்தியினால் இலங்காபட்டணம் போய்வர இணையற்ற சாமர்த்தியமடைந்து ராமபிரானைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து வணங்கி வானர சைன்னியங்களுடன் புறப்பட்டார். அப்பொழுது ராமர் "ஏ ஹநுமந்த! சித்திரகூடப் பர்வதத்தில் ஸீதையினுடைய கன்னங்களில் மனோசிலை என்கிற ஓஷதிபால் நான் கொடி எழுதினதை ஸீதைக்கு அடையாளமாகச் சொல்லென்று கூறியனுப்பினர்.

சுக்ரீவன் கட்டளைப்படி யாவரும் அவரவர்களுடைய திக்குகளுக்குச் சென்று தேடியதில் மேற்கு வடக்கு கிழக்கு இத்திசைகளை நோக்கிச் சென்றவர்கள் அத்திக்குகளில் ஒருமாத காலத்திற்குள் ஸீதையைக்காண முடியாமல் திரும்பிவந்து சுக்ரீவனிடம் சங்கதியைத் தெரிவித்துவிட்டார்கள். தெற்குநோக்கிச் சென்ற அங்கதன் முதலியவர்கள் காடுகாடாகச்சென்று ஸீதையைத் தேடிப்போகையில், வழியில் ஒரு அரக்கனைக்கண்டு அவனை ராவணனெனச் சந்தேகித்துக்கொன்றார்கள். இவ்விதமே தங்கள் மார்க்கத்தில் சந்திக்கும் ராக்ஷதர்கள் யாவரையும் ராவணனென்று நினைத்துச் சங்கரித்தார்கள்.

இப்பொழுது இவர்களுக்குத்தண்ணீர் குடிக்கவேண்டுமென்கிற அவாவுண்டாயது. அதன்பொருட்டு அவர்கள் சுற்றிலும் பார்த்தார்கள். அப்பொழுது அருகிலிருந்த ஒரு மலையின் குகைத் துவாரத்திலிருந்து அநேக பட்சிகள் நனைந்த மூக்குடன் வெளிப்படுவதைப் பார்த்து, இந்தக் குகையில் நல்ல தீர்த்தம் இருக்கவேண்டுமெனக் கருதி யாவரும் அக்குகையினுட் பிரவேசித்தார்கள். அக்குகையினுள் அந்தகாரமாக இருள் சூழ்ந்திருந்தமையால் திரும்பிவர வழிதெரியாமல் அங்கேயே ஒருவரோடொருவர் பேசாமல் பதினெட்டுநாள் வரையில் அங்குமிங்கும் திரிய, அவ்விடத்தில் இரத்தினமயமாகவிருந்த ஒரு கிரகத்தைக் கண்டு, அதனுட் பிரவேசித்து அங்கே வசிக்கும் மங்களகரமான ஒரு ஸ்திரீயைப் பார்த்து, தங்கள் விர்த்தாந்தங்களை அந்த ஸ்திரீக்குத் தெரிவித்து, அவளுடைய விர்த்தாந்தங்களைத் தாங்களுமறியக் கேட்டார்கள். அந்த யோகினியானவள் அவர்களுக்குத் தக்க உபசாரஞ் செய்து, தன் விர்த்தாந்தத்தைப் பின்வருமாறு கூறுகிறாள்.—

விசுவகர்மாவினுடைய பெண்ணாகிய ஹேமை என்பவள் பரமேசுவரனைத் தன்னுடைய நர்த்தனத்தால் ஸந்தோஷப்படுத்த பரமசிவன் அவளுக்கு இப்பட்டணத்தை மனமுவந்தளித்தார். இந்தப் பட்டணத்தில் ஹேமை வெகுகாலம் வசித்து வருகையில் நான் அவளுக்குப் பரிசாரிகையாக இருந்துவந்தேன். இதைவிட்டு அவள் சொர்க்கமடையுங் காலத்தில் என்னைப் பார்த்து, 'சிறிது காலத்திற்குப் பிறகு ராமபிரான் இவ்விடம் வரப்போகிறார், நீ அவரைத் தரிசித்துப் பூஜைசெய்து வணங்கிவிட்டு, என்னிடம் வந்து சேர் என்று கூறிவிட்டுச் சென்றனள். எனக்குச் சுயம்பிரபை என்றுபேர். உங்களுக்கு நான் இப்பொழுது எவ்விதமான பணிவிடை செய்யவேண்டும்'' என்றுகேட்டாள். அதுகேட்ட அங்கதன் முதலியவர்கள், நாள் புலகழிந்ததைநினைத்து, ''எங்களை இக்குகையைவிட்டுவெளியேற்றவேண்டும். இதுவே நாங்கள் வேண்டுவது'' என்றுகூற, சுயம்பிரபை ''நீங்களனைவரும் கண்ணை மூடிக்கொள்ளுங்கள்'' என்று சொன்னாள். அப்படியே அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஒரு க்ஷண நேரத்திற்குப் பிறகு கண்ணைத் திற

ந்துபார்க்க, அவளுடன் யாவரும் வெளியிலிருக்கக்கண்டு தாங்கள் வெளிக்குக் கொண்டு வரப்பட்ட வழியையும் அறியாமல் ஆச்சரியப்பட்டார்கள். பின்பு சுயம்பிரபையும் ராமபிரானருகிற் சென்று அவரை வணங்கிப் பூஜைசெய்து அவர் அநுமதிபெற்றுத் தேகத்தியாகஞ் செய்து சொர்க்கலோகஞ் சென்றாள்.

பிறகு ஜாம்பவான் முதலியவர்கள் குகையில், காலம் கழிந்ததை நினைத்து, அருகிலிருக்கும் சமுத்திரத்தையும் பார்த்து மிகவும் வருத்தமடைந்து, ஸ்ரீராமபிரான் விர்த்தாந்தத்தை உரக்கச் சொல்லிக்கொண்டு பிரயோபவேசஞ் செய்தார்கள். இப்படி இவர்கள் ராமருடைய விர்த்தாந்தத்தைப் பேசிவரும் வேளையில், ஜடாயுவினுடைய மரணத்தை அங்கு அருகில் ஒரு மலைச்சந்திலிருந்து கேட்ட, அவர் சகோதரர் சம்பாதி கோபங்கொண்டு இவர்களைக்கொல்ல, அருகில் வந்து, பின் தமது தம்பி மரணத்தின் காரணத்தையறிந்து, அவர்க்குத் தர்ப்பணம் முதலியவை செய்துவிட்டு, இவர்களுடைய வரவைத் தெரிந்துகொண்டு "இதோ நூறுகாதவழி விஸ்தாரமான சமுத்திரத்துக்கப்பாலுள்ள இலங்கையில் அசோகவனத்திலிருக்கும் ஸீதையைச் சாமர்த்தியமுள்ளவர்கள் இச்சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று பார்த்து வரலாம். எனக்கு இறக்கைகளில்லாமையால், என்னால் செல்லவொண்ணாது. நான் வெகுதூரம் பார்க்கக்கூடிய கழுகினத்தைச் சேர்ந்தவனாகையால், இம்மலையிலிருந்தே ஸீதையைப் பார்க்கிறேன். முன்னொரு சமயம் சொர்க்கத்தை எட்டிவரக்கருதி, நானும் என் தம்பியும் ஆகாசத்தில் பறந்து சூரியன் அருகிற்செல்ல, சூரியகிரணங்கள் எங்கள் இறக்கைகளை எரிக்கவே, நான் என் தம்பியை எனது இறக்கைகளால் மறைத்துக்கொண்டேன். அதனால் என் இறக்கைகள் தகிக்கப்பட்டுப்போயின. தம்பி இறக்கைகளுடன் பிழைத்துத் தேசாந்திரம் போய்விட்டான். நான் இம்மலையில் விழுந்து, இறக்கையில்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் சந்திரசர்மா என்னும் முனிவரைக்கண்டு வணங்கி, என் கஷ்டங்களைத் தெரிவித்துக்கொண்டேன். அம்முனிவர் 'ஏ சம்பாதியே! பிற்காலத்தில் ஸீதையைத் தேடிக்கொண்டுவரும் வானரங்களுக்கு நீ ஸீதையிருக்குமிடத்தைச் சொல்லப்போகிறாய்; அப்பொழுது

உனக்கு இறக்கைகள் முளைக்கும்" என்று அநுக்கிரகித்தபடியே இதோ பாருங்கள் க்ஷணத்திற்குள் இறக்கை முளைக்க ஆரம்பித்து விட்டது. ராவணன் ஸீதையை ஆகாச மார்க்கமாகக் கொண்டு போகும் காலையில், என் பிள்ளை பார்த்து என்னிடம் வந்து அச் சங்கதியைத் தெரிவித்தான். உடனே நான் என் பிள்ளையைப் பார்த்துச் சினங்கொண்டு ஏ பரமமூடா! நீ கண்டதும், ராவணனை அதமாக்கி ஸீதையை விடுவிக்காமல், இங்கு வந்து தெரிவிக்கிறாய், பேதாய்! என் முன் நில்லாதே! ஓடென்று நான் அவனைத் துரத்தினேன். "அப்போது கோபத்தோடு ஓடினவன் இன்னும் என் பக்கம் வரவில்லை" என்று கூறிவிட்டு அங்கதன் முதலியவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

பின் அங்கதன் முதலியவர்கள் ஒவ்வொருவரும் சமுத்திரத்தைத் தாண்டுவதில் அவரவர்களுக்குள்ள பலத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அப்பொழுது முத்தவராகிய ஜாம்பவான், இவர்கள் ஒருவருடைய பலமும் சமுத்திரத்தைத் தாண்டவல்லதல்லவென வறிந்து, ஹநுமாரிடஞ் சென்று, அவர் ஜனன கால முதல் செய்த பராக்கிரமங்களை அவர் செவிக்கேற எடுத்துக் கூறிப் பின் இக்காரியத்தை முடிக்கத் தக்கவன் நீதான் என்று சொல்லிச் சென்று வாவெனக் கட்டளையிட்டார். ஹநுமார் இதைக் கேட்டவுடன் புறப்பட்டு அங்கிருந்த மகேந்திரபர்வதம் ஏறி மலையைத் தரையோடு தரையாகும்படி அழுத்தி ஸ்ரீராமபிரானை நினைத்து ஆகாசத்திற் கிளம்ப முயற்சி செய்தார்

8-வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

பிறகு ஹநுமார் மலையிலிருந்து தாவி ஆகாச மார்க்கமாய்ச் செல்லுகையில், தேவதைகள் ஹநுமாருடைய பலத்தைப் பரீக்ஷிப்பதின் நிமித்தம் தங்கள் தாயாகிய சுரஸை என்பவளை அனுப்ப அவள் வேகமாகச்சென்று அவர் முன்புவந்து, அவரைப் பார்த்து, "ஏ ஹநுமந்த! நீ என் வாயிற்புகு" என்று கூற ஹநுமார் "ஸ்ரீராமபிரானுடைய காரியத்தை நிறைவேற்றிப் பிறகு உன் இஷ்டத்தை நிறைவேற்றுகிறேன்" என்றார். சுரஸை அதற்குச் சம்மதிக்காமல், முன்போலவே தொந்தரை செய்ய, ஹநுமார் தம் உடலை அவள் வாய் பிடியாமலிருக்கும்படி பெருகச் செய்துகொண்டார். அதைக்கண்டு சுரஸையும் தன்வாயை அவர் உடலைவிடப் பெரிதாகச் செய்துக்கொள்ள, அச்சமயத்தில் ஹநுமார் அங்குஷ்டப் பிரமாண உருவங்கொண்டு, அவள் வாய்க்குட் புகுந்து அப்புறம்போனார். சுரஸையும் அவர் பலத்தைப்பார்த்து, ஆச்சரியமடைந்து அவரை மெச்சிச் சொர்க்கலோகம் சென்றாள்.

இதன்பின் ஹநுமார் முன்போலவே ஆகாச மார்க்கமாய்ச் செல்லுகையில், மைநாகமலையானது சமுத்திர ராஜன் உத்தரவுப்படி ஹநுமாருக்குச் சிரமபரிகாரஞ் செய்விக்கக் கருதி, ரத்னமயமான சிகரங்களுடன் ஜலமத்தியிலிருந்து கிளம்பி, அச்சிகரத்தின்மேரில் ஒரு மானிடனாய்த் தோன்றி, ஹநுமாரைப் பார்த்து "ஏ ஹநுமந்த! நான் மைநாகமென்ற ஒரு மலை; என்னிடத்தில் அமுதத்துக்கொப்பான கனிகளிருக்கின்றன; அவைகளைப் புசித்து க்ஷணநேரமிருந்து சிரமபரிகாரஞ் செய்துகொண்டு பிறகு சுகமாகச் செல்லுங்கள்" என்று கூறி, பின் முன்னொருகாலத்தில் இந்திரனுக்கும் மலைகளுக்குங் கொடூரமான யுத்தம் நடந்தது. அப்பொழுது தசரத மகாராஜா அவ்வாபத்திலிருந்து என்னை விடுவித்தார். அது முதல் நான் இச்சமுத்திரத்தில் வசித்து வருகிறேன். ஆதலால் ஸ்ரீராமபிரான் ஏவலைக் கொண்டேகும் உமக்குச் சிரம பரிகாரஞ் செய்விப்பதாகிய பிரதியுபகாரம் புரிந்து கிருதார்த்தனாக விரும்புகிறேன் என்று கூறிற்று.

ஹநுமார், "ஏ மைநாக! ராமகாரியத்தில் எனக்குச் சிரமமென்ப தில்லை. சுவாமி காரியம் முடியும் வரையில் யான் ஒன்றையும் புசிப்பதில்லை" என்று கூற, மைநாகம், "நல்லது என்னைத் தொட்டுப் பரிசுத்தனாகுக" என வேண்ட, ஹநுமார் தம் கையால் அம்மலையின் சிகரத்தை "அப்படியே ஆகுக" எனத்தொட்டு உடனே புறப்பட்டார். அப்பொழுது, சதாகாலமும் நீரிலேயே வசித்துக்கொண்டு மேலே பறக்கும் பிராணிகளின் நிழல்களின் வழியே அவைகளை யிழுத்துப் புசித்து வருவதால், சாயாக்கிரகம் எனப்பேர்கொண்ட, கோரரூபியான ஸிம்மகி என்ற ஓர் அரக்கி, ஹநுமாருடைய நிழலையும் பிடித்துக்கொண்டாள். அச்சமயத்தில் ஹநுமார் சுற்றிலும் பார்த்து ஒன்றையுங் காணாமல் நம்முடைய வேகத்தைத் தடுத்தவன் யாரென நினைத்துச் சற்றுயோசித்துக் கீழே நோக்க, அவ்விடத்தில் வாயைத் திறந்துகொண்டிருக்கும் ஸிம்மகி என்னும் அரக்கியைப் பார்த்து அவள் வாயில் திடீரென விழுந்து, தமது தேகத்தைப் பெருகச்செய்து, அவ்வரக்கியின் தேக நரம்பு பொடிபட அவளைப் பிளந்து கொன்றுவிட்டு, அங்கிருந்து கிளம்பி, இலங்கைக்கு ஒரு புறமாகிய சமுத்திரத்தின் தென்கரையிற் குதித்தார். அங்கே எதிர்தோன்றின ராவணன் தங்கையாகிய கிரௌஞ்சை என்கிற அரக்கியைச் சமுத்திரமத்தியில் எதிர்த்த ஸிம்மகியைக் கொன்றதுபோல் கொன்று விட்டுச் சூரியாஸ்தமன மானபின் இலங்கைக்குட் செல்ல அப்பொழுதிலங்கணி என்னும் பேர்கொண்ட அரக்கி யொருத்தி அவரைப் பயமுறுத்த, அவ்வரக்கியை ஹநுமார் அலட்சியமாகத் தமது இடதுகை முஷ்டியால் தாக்கிக் கீழே தள்ளினார். இப்பொழுது அவ்வரக்கிக்கு முன் பிர்மதேவன் கொடுத்திருந்த வரம் ஞாபகம் வரவே, அவள் ஹநுமாரைப் பார்த்து "ஐயா! எப்பொழுது உன்னை ஒரு குரங்கானது அவமதித்து ஜயம்பெறுகிறதோ, அப்பொழுது ராவணனைக் கொல்ல ராமர் வருவார்" என்று பிர்மதேவன் எனக்கு வரங்கொடுத்திருப்பதால், இப்பொழுது ராமர் ராவணனைச் சங்கரிப்பது நிச்சயம். நீ ஜயமடைவாய்; இலங்கைக்குட்சென்று அசோகவனத்தி லிருக்கும் ஸீதையைச் சுகமாகப்பார்" என்று கூறினாள். பின்பு ஹநுமான்

திரிகூட மலையினுச்சியில் அலங்காரமாயிருக்கும் லங்காபட்டணத்துக்குட் பிரவேசித்து, அங்கு அழகிய கோபுரங்கள் மேன்மாடிகள், நாற்சந்திகள் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு ஒவ்வொருவர் வீடுகளிலும் ஸீதையைத் தேடிப் பார்த்துக்கொண்டே போனார். பின் ஒரு குகைபோன்ற வீட்டுக்குள் நித்திரைசெய்யும் பயங்கரரூபியாகிய கும்பகர்ணனைப் பார்த்துவிட்டு வேறொரு வீட்டுக்குச்செல்ல அவ்விடத்தில் ஸ்ரீராமபிரானைப் புகழ்வதில் ஸந்தோஷமடைந்திருக்கும் விபீஷணனையும் அவர்மனைவி சுலோசனையையும் பார்த்துவிட்டு வேறொரு வீட்டுக்குச்சென்றார். இங்கே நித்திரைசெய்யும் மேகநாதனாகிய இந்திரஜித்தைப்பார்த்து, பிறகு ராவணன் அரண்மனைக்குச் சென்றார். இப்பொழுது நடுராத்திரி வேளையானமையால், ராவணன் ஒரு கட்டடத்தினடுவில் சயனித்திருக்கப்பார்த்து, அங்கே பிரகாசிக்கும் தீபங்களை அணைத்துவிட்டு, ராவணன் முதலியவர்களை நிர்வாணர்களாக்கி, ஒரு கொள்ளிக்கட்டையால் ராவணன் மீசையைக் கொளுத்திப் பின் அங்கு கோடிக்கணக்காக இருக்கும் அரக்கிகளையும் நிர்வாணிகளாக்கி, அங்கே வைத்திருந்த தண்ணீர்க்குடங்களையும் உடைத்துவிட்டுக் காவலாளிகளைத் தமதுவாலைக்கொண்டு பயமுறுத்தினார். உடனே காவலாளர்கள் பயந்து எழுந்திருந்து, "இப்பொழுது ஜானகி கோபங்கொண்டிருக்கிறாள். இதுநிச்சயம்; இது நமக்குப் பிராணஹானிகரம்" என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்வதை ஹநுமார்கேட்டுச் சந்தோஷமடைந்து, அருகிலிருக்கும் மற்றொரு கிரகத்திற்குட் பிரவேசித்தார். இங்கேயும் ஜானகியைத் தேடிக் காணாமையால் அருகேயிருந்த புட்பகவிமானமேறிச் சுற்றிலும் பார்த்தார். இப்பொழுது மறுபடியும் ராவணன் அநேக ஸ்திரீகள் கூட்டத்தின் மத்தியில் நித்திரை செய்வதையும் அவனருகில் அவன் மனைவி மண்டோதரி நித்திரை செய்வதையும் பார்த்து, ஸீதையோவெனச் சந்தேகித்து, தமக்கு லட்சுமணர் கூறியிருந்த ஸீதாதேவிக்குரிய அடையாளங்கள் அவளிடத்தில் உள்ளனவோவென உற்றுப்பார்க்க, அவ்வடையாளங்களைக் காணாமலிருந்தும், ஸீதையெனச் சந்தேகித்துச் சஞ்சலமடைந்தார் ஹநுமாரென்று, பரமசிவன் கூறினார். உடனே பார்வதி, "நாதா! மண்டோதரி

ஒரு ராக்ஷஸியாயிற்றே; அவள் எப்படி ஸீதைக் கொப்பா வாள்? ஆனால் உலகத்தில் பிறக்கும் மாதர்களெல்லாம் ஸீதையி னுடைய அம்சாம்ச பாவமென்று சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்றாள். பரமசிவன் ஸீதை விஷ்ணுவினுடைய சிருஷ்டியே. மண்டோதரியும் விஷ்ணுவினுடைய சிருஷ்டியே. முன்னொரு சமயம் ராவணன் தாயாராகிய கேகயி என்பவள் ராவணனைப் பார்த்து, "நான் பூஜைசெய்து வரும் லிங்கமானது, ஆதிசேஷனுடைய சுவாசத்தின்வழியே இன்று பாதாள உலகம் போய்விட்டது. நீ பரமசிவனிடஞ்சென்று ஓர் ஆத்மலிங்கம் அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு வா" என்று கூறினாள். ராவணன் அப்படியே ஆகட்டுமென்று கூறிப் புறப்பட்டுச் சாமகானத்துக்கு மகிழ்ந்து வரங்களைக் கொடுக்கும் என்னிடம் வந்து வணங்கி, சாமகானஞ்செய்து "ஏ சம்போ! கைலாசபதே! நான் தங்களிடமிருந்து இரண்டு வரம்பெற விரும்புகிறேன். என்தாய் பூஜிப்பதற்கு ஒரு ஆத்மலிங்கம் கொடுப்பதொன்று, மற்றொன்று உமது வாமபாகத்திலிருக்கும் பெண்ணை எனக்கு மனைவியாகக் கொடுப்பது" என்று கேட்டான். நான் அப்பொழுது அவன் கேட்ட வரங்களின்படியே உன்னையும் ஆத்மலிங்கம் ஒன்றையும் கொடுத்து, "ஏ ராவணா! இவ்வாத்மலிங்கத்தை மார்க்கத்தில் கீழே வைப்பாயானால் அங்கேயே ஸ்திரமாகிவிடும்" என்று சொல்லியனுப்பினேன். ராவணன், உன்னையும் லிங்கத்தையும் எடுத்துக்கொண்டு போகையில் நீ வழியில் விஷ்ணுவை ஸ்மரித்தாய்; அவர் அதை யறிந்து உடனே தமது சரீரத்தில் பூசியிருக்கும் சந்தனத்தைத் திரட்டி ஒரு பெண்ணுருச் சிருஷ்டித்து மண்டோதரியெனப் பெயரிட்டு, அவ்வணங்கை மயன் கையில் கொடுத்தார். மயன் அப்பெண்ணை யெடுத்துக்கொண்டு சீக்கிரமாய்ப் பாதாளலோகஞ் சென்று தன் கிரகமடைந்தான். அப்பொழுதே மகாவிஷ்ணுவானவர் ஓர் அந்தணர்வேஷம்பூண்டு ராவணன் செல்லும் வழியில் எதிர்தோன்றி, அவனைப் பார்த்து, "ஏ ராவணா! பரமசிவன் தமது பத்தினி பார்வதியைப் பாதாளலோகத்தில் மயன் கிரகத்தில் வைத்து ஒளித்துவிட்டு, உனக்கு வேறொரு பெண்ணைத் தூர்க்கையாகக்காட்டி உன் கையிற்கொடுத்து ஏமாற்றிவிட்டார். உலகி

லும் ஸ்வர்க்கத்திலும் நீ சென்று தேடக்கூடும், பாதாளலோகம் உனக்குச் சொந்தமானதால் நீ அங்குச் சென்று தேடமாட்டாய்" என்று நினைத்து, அங்கே கொண்டுபோய்த் தன் மனைவியை வைத்துவிட்டார். ஆகையால் நீ இப்பொழுதே பாதாளலோகம் சென்று மயனுடைய கிரகத்திலிருக்கும் கிரிராஜன் பெண்ணை மனைவியாகப் பெற்றுச் சுகம்பெறு" என்று சொல்ல ராவணன் மறுபடியும் இவ்விடம் வந்து என்னைப்பார்த்துச் சிரித்துவிட்டு, "உமது மனக்கருத்தை யானறிந்தேன்; பாதாளலோகத்தில் உமது மனைவியை யொளித்துவைத்துவிட்டு எனக்கு வேறொரு பெண்ணைக்கொடுத்து ஏமாற்றிவிட்டீர். இவள் இவ்விடமே யிருக்கட்டும். நான் இப்பொழுதே பாதாளலோகஞ்சென்று அங்கிருக்கும் பெண்ணை அழைத்துச் செல்லுகிறேன்" என்றுகூறி உன்னை என்னிடம் விட்டுப் பாதாளலோகத்துக்குப் போனான். வழியில் அற்ப சங்கையின் தொந்தரவுண்டாயிற்று. அப்பொழுது அங்கிருந்த ஒரு பிராமணரைப்பார்த்து, "ஏ அந்தணசிரேஷ்டரே! இந்த ஆத்ம லிங்கத்தைச் சற்று உமது கரத்திலேயே வைத்துக்கொண்டிரும்; அற்பசங்கபாதையைத் தீர்த்துக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன்" என்று சொல்ல, அதற்குப் பிராமணரூபங் கொண்டிருந்த விஷ்ணு "லிங்கத்தை ஒரு முகூர்த்தம் வரையிலேதான் வைத்துக் கொண்டிருப்பேன். அதற்குள் நீ வராவிடில் கீழேவைத்துவிட்டுப் போய்விடுவேன்" என்றுகூற, ராவணன் ஆகட்டும் அப்படியே செய்யும் என்றுசொல்லி லிங்கத்தை அவர் கையில் கொடுத்து விட்டு அற்பசங்கைக்குச் சென்றான். அவனுக்குத் தான் பிராமணரிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி வரமுடியாமற் போனதினால், அந்தப் பிராமணர் லிங்கத்தை மேற்குச் சமுத்திரக்கரையாகிய அவ்விடத்தில் வைத்துவிட்டுத் தன்பதிக்கேகினார். பிறகு ராவணன் விதிப்படி காரியத்தை முடித்துக்கொண்டு அவ்விடம் வந்து லிங்கம் பூமியில் வைத்திருப்பதைப் பார்த்து, அதை யெடுக்க முயன்றான். அது பூமியில் வேரூன்றிப் போனபடியால், அதை அசைக்க அவனால் முடியவில்லை. லிங்கத்தின்மேலே செவித்துவாரம்போல் ஒரு துவாரமிருந்தது. அதைக்கண்டு துவாரத்தில் உற்றுப் பார்த்தான். அதில் செவியின் ஐவ்வுபோல் ஒன்றிருந்தது.

அது பூமிக்கு ஒரு செவிபோற் காணப்பட்டமையால், அது முதல் அந்த லிங்கமிருக்கு மிடத்துக்கு கோகர்ண க்ஷேத்திரமெனப் பேர்வழங்கி வருகிறது. இதனால் ராவணன் மிகவும் வருத்தப் பட்டுப் பாதாளலோகம் சென்றான்.

அங்கு மயன்வீட்டில் மாதுசிரோமணியாகிய மண்டோதரி யிருக்கக்கண்டு, அவளைத் தனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டு மென்று மயனைப் பிரார்த்திக்க, மயன் உடனே சம்மதித்து விவா கஞ்செய்துகொடுத்தான். மயன் தன் பெண்ணுக்கு ஸ்திரீதனமாக அநேகபொருள்களையும்ஆபரணங்களையுங்கொடுத்து, அவற்றுடன் சத்துருக்களைக் கொல்வதில் பழுதுபடாத ஒரு சக்தி ஆயுதத்தை யுங்கொடுத்தான். ராவணன் மண்டோதரியின் இடை சிறுத்திருப் பதைநோக்கி, மண்டோதரி என்கிறபெயர் இவளுக்கேதகுமெனக் கருதி மகிழ்ச்சியடைந்து அவளுடன் இலங்கைக்குச் சென்றான். தான்கேட்டுக்கொண்டபடி லிங்கங் கொண்டுவராமையைக்கண்டு அவன்தாய், அவனைக்கோபித்து வெறுக்க, ராவணன் உடனே புறப்பட்டுக் கோகர்ண க்ஷேத்திரமடைந்து, அங்கு உக்கிரமான தவஞ்செய்து பிர்மதேவனிடத்தில் வரம்பெற்று மூவுலகங்களையும் தன் சுவாதீனப்படுத்திக்கொண்டு மறுபடி லங்கைக்குச் சென்று அங்கே ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். இந்தவிசேஷத்தினால் தான் மண்டோதரி ஸீதைக்கொப்பாய் ராவணன்பக்கம் விளங்க ஹநுமார்கண்டு ஸந்தேகங் கொண்டார். மயனும் லங்கைக்கேகி அங்கே வீடுகட்டிக்கொண்டு வசித்துவந்தான். மயனுடைய தம்பி கயன் என்பவன் மகாவீரனும் பிரதாபமுள்ளவனும் பிர்ம தேவன் வரத்தால், ராத்தூக்கத்தை ஒழித்தவனுமிருந்துவந் தான். அவனுக்கு ராவணன்கையால் மரணமென்று விதித்திருப் பதையறிந்த ஹநுமார் முன்னொருசமயம் கயன் தன்சபையிலிருக் கும்போது காற்று எடுத்துக்கொண்டுபோய் ஓரிடம் போட்டிருந்த அவனுடைய வஸ்திரத்தை எடுத்து ராவணனுடைய சொர்ணமய மான படுக்கையில் இப்பொழுது போட்டுவிட்டார். விபீஷணனு டைய படுக்கையில் ராவணன் வஸ்திரத்தை எடுத்துப் போட்டு விட்டு ஸீதையைத் தேடிச்சென்றார். கடைசியாக உயர்ந்த விரு

கூடங்களும் அழகான மாடிவீடுகளும் நிறைந்த அசோகவனஞ் சென்று அங்கோரிடத்தில் உயர்ந்து செழித்த சிம்சுபாமரத்தைக் கண்டு அதனடியில் அநேக அரக்கிகளின் கூட்டத்தி னடுவில் ஒரே பின்னலான கூந்தலோடு, அழுக்கடைந்த ஆடையணிந்து தரையில் படுத்து ராமா ராமாவென்று உச்சரித்து வருந்தும் ஒரு கன்னிகையைக் கண்டார். கண்டதும், இவள் ஸீதைதானென நினைத்து நாம் கிருதார்த்தனானேமென அம்மரத்தின் கிளைகளின் நடுவில் மறைந்து ஸீதையின் தேகத்தை உற்றுப்பார்த்து ருசிய முக பர்வதத்தில் சுக்ரீவனோடிருக்கும்போது ஆகாசத்திலிருந்து முடிப்பாக விழப்பெற்று ராமபிரான் முன்னிலையில் அவிழ்த்து அவர்கையில் கொடுக்கும்போது தான் பார்த்த நகைகள் அப் பெண்ணரசியின் அங்கங்களில் இல்லாமலிருக்கவும் பார்த்தார்.

இப்படியிருக்கையில், ராவணன், ஒரு குரங்கு இலங் கைக்குள் வந்து அசோகவனத்திலிருக்கும் ஸீதையைக்கண்டதா கக் கனவுகண்டு விழித்துக்கொண்டு, ஸ்ரீராமபிரான் கையால் நாம் சீக்கிரம் மரணமடைந்து நற்கதிபெறவேண்டும். ஆகையால், இப் பொழுது ஸீதையினிடம் சென்று அவளை நாம் விரும்பினதாகக் காண்பிப்போம். குரங்கு அதைப்பார்த்து ராமருக்குத் தெரிவிக் கட்டும். உடனே ராமர் இவ்விடம் வந்து நம்மோடு யுத்தம்புரிந்து நம்மைச்சங்கரிப்பாரென்றுதன் மனத்தில்நினைத்து உடனே அநேக மாதர்கள் சூழக் கோலாகலமாகப் புறப்பட்டுக் குதூகலங்கொண்டு ஸீதையிடஞ் சென்றான். இப்படி ராவணன் வரும்போது அவ னோடு வந்த மாதர்களுடைய நூபுரம் முதலிய ஆபரணங்களின் சத்தங்கேட்டு ஸீதை மனங்கலங்கி வருத்தப்பட்டாள். இச்சம யம் ராவணன் ஸீதை முன் நின்றுகொண்டு வந்து "ஏ ஜானகி! நீ ஏன் என்னைப்பார்த்து மிக்க வெட்கங்கொள்கிறாய்? ராமன் ராஜ்ய பிரஷ்டனாய்த் தன்னுடைய பந்து மித்திரர்கள் தாய் தந்தையர் களையுமிழந்து ஜடாவல்கலதாரியாய் ஏகாங்கியாக வசித்துக்கொ ண்டு உன்னிடத்தில் சிறிதும் அன்பில்லாதவனாய் இருக்கிறான். நீ அவனை ஒழித்துவிட்டு, திரிலோகாதிபதியாயும் மகா பராக்ரம சாலியாயும் தேவமாதர்கள் பணிவிடைசெய்யும் பாக்கியம்பெற்று உத்தம பதவியிலிருப்பவனுமான என்னை அடைந்து சுகமா யிரு. இதுமுதல் மண்டோதரி முதலிய யாவரையும் உனக்குப் பணிவிடைப் பெண்களாகச் செய்கிறேன்; என் ராஜ்யத்தையும்

என் உயிரையும் உனக்குச் சுதந்தரமாக்கி விடுகிறேன்” என்று பற்பலவிதமாகப் பேசிப் பிரார்த்தித்தான். ஸீதை எழுந்து தலை குனிந்து நின்று ஒரு துரும்பை ராவணனுக்கு முன்னே எறிந்து அத்துரும்பைப் பார்த்து, “ஏ நீசா! நீ ராமனுக்குப் பயந்து ஸந்நியாசி வேஷங்கொண்டு, ராம லட்சுமணராகிய அவ்விரு வீரரும் என்னருகில் இல்லாத சமயம் நோக்கி, ஆசிரமம் வந்து யாசித்து, யாகசாலையிலிருக்கும் ஹவிஸ்ஸை ஒரு பெண் நாய் கௌவிச் செல்வதுபோல், என்னைக் கபடமாக அபகரித்து வந்தாய்; அதன் பலனை நீ சீக்கிரம் பெறுவாய்; லோகநாதனாகிய ஸ்ரீராமபிரான் இவ்விடம் வந்து உன்னோடு யுத்தம் செய்து உன் சரீரத்தைப் பாணங்களால் சின்னாபின்னமாகப் பிளந்து கொல்லும்போது, ராமனை மானுடனென்று எண்ணியிருப்பது தெரியும்” என்றாள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ராவணன் மிகவும் கோபங் கொண்டு, “ஸீதா! லங்கையில் (எனது ஏவலாளராக விருக்கும்) தேவர்களுடைய முகம் சீக்கிரத்தில் வாட்டமுறும்; ராமர் லட்சுமணர் இவ்விருவரும் சேர்ந்து ஏக காலத்தில் எதிர்த்தபோதிலும் யுத்தத்தில் என்னை வெல்லமுடியாது. ஆகையால் அந்த யுத்தத்தில் ராமன் தன் தம்பியுடன் பெரிய ஆபத்தை யடைவான். ஜயம் ராமனுக்குக் கிடையாது! எனக்குத்தான்! பிறகு நான் வெகு சந்தோஷத்தையடையப் போகின்றேன்” என்ற இப்பொருளடங்கிய,

ஹவிர்த்ருமாகாயா ஜ்ஞபஸவ நஷ்டா நிரவீராஃ
ஸ ராவணோஸவி ஸுதா நயாஸிவாரதேஹக்ஷணஸவஃ
தயா யாவஸ்த்யேவிஷ்வவநாஜேநாத்ருஜஷ்டிஃ
ஜயஸ்ரீராமஸேவ்யா நஸவஹாதேஷோத்ருதாஹவேஃ

இச்சுலோகத்தைக் கூறினான். இதை ஸீதை கேட்டு “ஏ மூடா! நீ சொல்லிய சுலோகத்தின் நான்கு பாதங்களிலும் ஆறாவது எழுத்துக் கப்பாலுள்ள ஓர் எழுத்தைத் தள்ளி (ஏழாவது எழுத்தை)ப் படித்துப்பார்; அப்பொழுது சுலோகம் எவ்விதம் பொருள்படுமோ அவ்விதமே தான் நடக்கும்” என்று கூறினாள்.

முதற் பாதத்தில் தி என்ற எழுத்தைத் தள்ள, தச வதனனுக்குக் கெடுதலென்றும், இரண்டாவதடியில், ந என்றதைத் தள்ள, ராமர் யுத்தத்தில் எதிர்ப்பரென்றும், மூன்றாவது பாதத்தில், வி என்ற எழுத்தைத் தள்ள, ராமருக்கு மேன்மையான பதவி கிடைக்குமென்றும், நான்காவது பாதத்தில் ந என்பதைத் தள்ள ராமர் ஜயம் பெறுவர் என்றும் பொருள் படுவது காண்க.

இவ்விதம் ஸீதை தன்னுடைய வார்த்தைகளாகிய பாணங்களால் ராவணனை ஜயிக்க, ராவணன் அந்தக்ஷணத்தில் மிகச் சினமடைந்து கத்தியை உருவி யெடுத்துக்கொண்டு வேகமாக ஸீதையினருகே ஓட, அப்பொழுது அவனருகிலிருந்த மண்டோதரி அவன் கையைப் பிடித்துத் தடுத்து, "ஏ நாதா! நானும் என்னைப் போன்ற அழகான ஸ்திரீகள் அநேகம் பேர்களும் உமக்கிருக்க, துரும்புபோல் இளைத்தும் ஏழையாயுமிருக்கிற இந்த ஸீதையை நீர் ஏன் விரும்புகிறீர்; விட்டு விடும்" என்று சமாதானஞ் செய்தாள். பிறகு ராவணன் ஸீதைக்குக் காவலாக அங்கிருக்கும் அரக்கிகளைப் பார்த்து "இந்த ஸீதை என்னை விரும்பும்படியாகவும், எனக்குச் சுவாதீனப் படும்படிக்கும் நயத்திலும் பயத்திலும் முயற்சி செய்யுங்கள்; இன்னும் இரண்டு மாதத்திற்குள் இவள் என்விருப்பத்தை நிறைவேற்ற இணங்காவிடில், இவளைக்கொன்று எனக்குக் காலைநேரத்திற் புசிக்க ஆகாரமாக்குங்கள்" என்று ஆஞ்ஞாபித்தான். இவைகளைக்கேட்டதும் ஸீதை மறுபடியும் "ஏ மூடாத்மா! நீ என்னை ஒரு பெட்டியில் இரத்தினமாகக் கொண்டு வந்து. இவ்விடத்தில் திறந்து பார்த்தபொழுது நான் ஒரு குழந்தையாகி, உன்னைப்பார்த்து,'நான் இப்போது புறப்பட்டுப்போய்க் கொஞ்ச காலத்திற்குப் பிறகு, உன்னை வம்சத்துடன் அழிப்பதற்காக இன்னொருமுறை வரப்போகிறேன்'என்று சொல்லியமொழிகளை உண்மையாக்குவதன் பொருட்டே இப்பொழுது வந்திருக்கிறேன். அதி சீக்கிரத்தில் ராமபிரானுடைய திருக்கரத்திற்கு உன்னையும் உன்பந்துக்களையும் உன் சந்ததிகளையும் இரையாக்கிப் பின் அயோத்திக்குச் செல்வேன். அப்பொழுது தன் பாட்டன் வீட்டில் வசித்து வரும் நிகும்பன் புத்திரனாகிய பௌண்டரகன், தீபாந்தரவாசியாகிய சதானன ராவணனைத் தனக்குத் துணையா

கக்கொண்டு இந்த இலங்கையில் அரசாட்சி செய்வான். அக்காலத்தில் நான் மூன்றாவது தடவையாக இவ்விலங்கைக்கு வந்து, அவ்விருவரையும் கொன்றுவிட்டு மீண்டும் அயோத்திக்குச் செல்வேன். பின் சின்னாட்சென்றதன்மேல், நாலாவது தடவையாக இலங்கைக்குப் புஷ்பகவிமானத்தில் வந்து கும்பகர்ணன் குமாரன் மூலகன் என்பவனை நானே யுத்தரங்கத்தில் எதிர்த்துப் போர் புரிந்து கொல்லப்போகிறேன். இவைகளனைத்தையும் நான் முன்னரே உனக்குத் தெரிவித்திருக்கிறேன். நினைத்துப்பார். இஃதன்றி முன் பிரமதேவன் உன் மரணத்தைப்பற்றித் தெரிவித்த காலையில், கௌஸல்யை எடுத்துவந்து ஒரு பேழையிற்பூட்டி உன் சுவாதீனத்தில் வைத்திருந்து, பிறகு அப்பெட்டியைத் திறந்து பார்க்கும்போது அதிற் கௌஸல்யை அயோத்தியாதிபதியுட னிருக்கக்கண்டு, உடனே அப்பேழையை எறிந்து விடத் தூதர்களுக்குக் கட்டளையிட்டனுப்ப, அது சாகேத நகரத்தையே யடைந்தது; இது தெய்வகதியென நீ நினை; உன்மரணத்தை உத்தேசித்தே நீ என்னை யபகரித்து வந்திருக்கிறாய்; உன் கிரகம் சென்று சுகமநுபவி. சீக்கிரம் ராமபிரான் வந்து உன்னைக் கொல்வர்" என்று கூறினாள். ஸீதையினுடைய இவ்வார்த்தைகளனைத்தும் ராவணன் மார்பில் பாணம்போற்பாய, அவன் வாய்பேசாமல் வெட்கமடைந்து, தன் அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

ராவணன் சென்றபிறகு அவன் உத்தரவு செய்தபடி காவலாயிருக்கும் அரக்கிகள் சிலர் ஸீதையிடஞ்சென்று, கொடூரமான வார்த்தைகளை அடிக்கடிபேசியும், சிலர் வாயைத்திறந்துகொண்டு நீ ராவணன் விருப்பத்துக் கிணங்காவிடில் உன்னை விழுங்கி விடுவோமென்று சொல்லியும் சிலர் கத்தியை உருவிக்கொண்டும் சிலர் கைகளை ஓங்கி அடிக்கப்போயும் பயமுறுத்தினார்கள். இதைக் கண்ட விபீஷணனுக்குப் பிரியையான திரிசடை அவர்களைத் தடுத்து, "நீங்கள் ஸீதையைப் பயப்படுத்த வேண்டாம்; அவளுக்கு வணங்குங்கள்; இப்பொழுது, ஸ்ரீராமபிரான் சேனைகளுடன் இவ்விடம் வந்து இலங்கையைக் கொளுத்தி ராவணனைக்கொன்று ஸீதையை விடுவித்துக்கொண்டு போனதாகவும் ராவணன்

என்னைத் தேய்த்துக்கொண்டு நிர்வாணியாய்ச் சாணிக்குழியில் விழுந்து கிடப்பதாகவும்" நான் ஒருகனவுகண்டேன். ஆகையால், இவளுக்கு ஹிதமாக நடந்து வருவோமாகில், நமக்கு ஸ்ரீ ராம பிரானிடமிருந்து அபயம் கிடைக்கும். இவளைத் தொந்தரை செய்வோமாகில் நம்மையும் அவரைக்கொண்டு அழித்து விடுவள். ஆகையால் சாகஸகாரியம் செய்யாதேயுங்கள்" என்று அவ்வரக்கிகளுக்குப் போதித்தாள். அரக்கிகள் திரிசடையின் சொற்படி ஸீதைக்கு யாதொரு தொந்தரவுஞ் செய்யாமலிருந்தார்கள்.

இச்சமயம் ஸீதை சொல்லற்கரிய வருத்தமுற்று, "நாம் இப்பொழுதே மரணமடையவேண்டும்; அதற்கு உபாயம் யாது? நமது கூந்தல் வெகு நீளமாயிருக்கிறது; அதைக்கொண்டு கழுத்திற் சுருக்கிட்டுக் கொள்வதுதான் தக்க உபாயம்; முன் பஞ்சவடியில் நிரபராதியான லட்சுமணனைக் கடுஞ்சொற்களாகிய அம்புகளால் எய்து தொந்தரை செய்தோம். இப்பொழுது இவ்வரக்கிகளால் தொந்தரையடைவது அதன்பயனேயாம். கௌதமி யாற்றங்கரையில் குற்றமற்றலட்சுமணனை மனவருத்தமடையச் செய்த பாபத்தைப் போக்க இப்பொழுதே துர்மரணமடைந்து பிராயச்சித்தம் பெறவேண்டும்" என்று இவ்வாறு தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

இவ்விதஞ்சொல்லி மரணமடையத்துணிந்தஸீதையின்வருத்தத்தைக்கண்ட வாயு புத்திரனாகிய ஹநுமார், இனி நாம் க்ஷணமும் தாமதிக்கலாகாதென்று கருதி உடனே மிக மெதுவாக, ஸீதையின் தலைக்கு அருகாமையிலிருக்கும் கிளையில் வந்து மறைந்துகொண்டு சற்றாலோசித்து, இதுதான் இச்சமயத்துக்குத்தக்க உபாயமென நினைத்து, ஸ்ரீராமபிரான் சாகேத நகரம் விட்டுப் புறப்பட்டதுமுதல், தாம் ஸீதையைக் கண்டது வரையில், நடந்த விர்த்தாந்தத்தை முறையே கேட்டு ஸீதை மனமகிழத் தெரிவிக்கலாயினர். ராமபிரான் விருத்தாந்தம் செவிபிற்பட்டதும் ஸீதை மனத்தில்ஆச்சரியங்கொண்டுஇஃதென்னதெரியவில்லையே! இராக்காலமானதாற் சொப்பனமோ! இது மாயையின்றி உண்மையாக இருக்குமாகில் அமுதமாரியாக இவ்வார்த்தைகளைப் பொழிந்த

அந்தமகாபாக்கியவான் என்முன்னிலையில்வரட்டும்" என்று சொன்னாள். உடனே ஹநுமார் மரக்கிளையிலிருந்து ஸீதை முன்வந்து வணங்கித்துதித்து, மறுபடியும் ராமபிரான் விருத்தாந்தத்தைச் சுருக்கமாகக் கூறி, அவர் தம்மிடத்தில் கொடுத்திருந்த கணையாழியைக் கொடுத்தார். ஸீதை தன் பிராணநாதருடைய கணையாழியைப் பெற்றதும் உற்றுப்பார்த்து முத்தமிட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு வணங்கி அவரைப் பார்த்து நீர் ராமரைக் கண்டது முதல் விஸ்தாரமாக இன்னொருமுறை கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள்.

ஹநுமார் மனமுவந்து தாம் ராமரைக் கண்டதுமுதல் நடந்ததைக் கூறிவிட்டுப் பின் "தாயே! ஸ்ரீராமபிரான் எனது தோள்மீ தேறிக்கொண்டு வானர சைன்னியங்களுடன் இங்கு வந்து ராவணனுடன் யுத்தம்புரிந்து அவனைக்கொன்று உம்மைச் சீக்கிரம் மீட்டுக்கொண்டு போவார்; நான் சொல்வதை நம்புங்கள் பயத்தை ஒழியுங்கள்" என்று சமாதானங்கூறி நம்பிக்கைஉறுதிப்படுவதினிமித்தம் ஸீதைக்குத் தமது விசுவரூபத்தையுங் காட்டித் "தாயே! முன்சித்ரகூட பர்வதத்தில் ஸ்ரீராமபிரான் உமது கபோலத்தில் மனோசிலையென்ற ஒஷதிபால் பொட்டிட்டதையும்உமக்கு ஞாபகமூட்டும்படி கூறியிருக்கின்றார்" என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஸீதை சங்கைகளொழிந்து பரமானந்தமடைந்தாள். உடனே ஹநுமார். "தாயே! நான் இதைவிட்டு ராமரிடம் போகவேண்டும். அநுமதி தந்து நான் தங்களைக்கண்டதற்கு ஓர் அடையாளமுங்கொடுக்கவேண்டும்" என்றார். உடனே ஸீதை மகிழ்ந்து தன்னுடைய தந்தையிடம்பெற்றுச் சிரசில் மறைவாகச் சூட்டிக்கொண்டிருக்கும் சூடாமணியைக் கரத்தால் உருவி ஹநுமாருடைய கையிற்கொடுத்து, சித்ரகூடபர்வதத்தில் ஒரு காகத்தால் தனக்கு நேரிட்டதையும் ஸ்ரீராமபிரானுக்குத் தெரிவிக்கும்படி கூறியருளினாள். ஹநுமார், ஸீதையை மறுபடியும் வணங்கி நின்று தமது மனதிற்குள் "சுவாமி! காரியம் நிறைவேறிவிட்டது, இன்னுமொரு விளையாட்டுச் செய்யவேண்டும்" என்று நிச்சயித்து மறுபடியும்ஸீதையைப்பார்த்து "அம்மா! அடியேனுக்கு இப்பொழுது பசிக்களைப்புண்டாயிருக்கிறது. இந்தப்

பொழிலில் இனிமையானதும் கிடைத்தற் கரியதுமான பழங்கள் அநேகம் இருக்கின்றன. அதை நான் உண்ணத் தங்கள் அனுமதி வேண்டும்'' என்றார், இதைஜானகி கேட்டதும் தன்கையிலிருந்து ஒருகங்கணத்தையுருவி இதை நீர் பெற்றுக்கொண்டு அரண்மனையிலிருக்கும் பண்டசாலை சென்று அங்குள்ள கனிகளை யெடுத்துப் புசித்து விட்டுத் தாகசமனம் செய்துகொண்டு பின் புறப்பட்டுப் போம்; இவ்வனத்திலுள்ள பழங்களைப்பறிக்கவேண்டாம்'' என்றனள். மாருதி ''நான் பிறர்கையிலிருந்து எதையும் வாங்கிப்புசிப்பதில்லை; இது என் விரதம்; நான்போய்வருகிறேன்'' என்றுசொல்லிப் புறப்பட அவரைப்பார்த்து மறுபடியும் ''ஏ வானரசிரேஷ்டா! ஏ பாலக! இவ்வனத்துக்கு அதிபதி தசக்ரீவன்; ஆகையால் இதிலுள்ள கனிகளைப் பறிக்க உமக்குத்திறமை போதாது, உம்மால் முடியாது; நீர் எவ்வாறு பறித்துப் புசிப்பீர்'' என்றனள், மாருதி ''தாயே! எனது இதயத்தில் ராம என்ற பரமமந்திரமானது சஸ்திரமாகவிளங்குகிறது. ஆகையால் அரக்கர்கள்யாவரும் இச்சமயம் எனக்கு ஒரு துரும்புமாத்திரம்'' என்றார். ''ஜானகி சரி வாய் பேசாமலும் கனிகளை மரத்திலிருந்து பறிக்காமலும் தரையில் விழுந்துகிடக்கும் பழங்களைமட்டும் புசியும்'' என்றாள். மாருதி ''ஆகா அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லிவிட்டு உடனே தமதுவாலை உயரத்தூக்கி மரத்தின் கிளைகளைச் சுற்றிப் பிடித்துக் குலுக்கினார் கிளைகளிலிருந்து அநேகங் கனிகள் உதிர்ந்தன. அவைகளைப் பொறுக்கிப் புசித்துவிட்டுப் பிறகு அங்கிருக்கும் மரங்களை வாலைக்கொண்டு பிடுங்கி மற்றுமுள்ள மரங்களின்மேல் எறிந்தார். அவைகளிலிருந்து தரையில் உதிர்ந்த பழங்களையும் புசித்தார். இவ்விதமாக மரங்களிலுள்ள பழங்கள் யாவற்றையும் ஒரு நிமிஷ நேரத்தில் உதிர்த்துப் புசித்துவிட்டார். இதையறிந்த அவ்வனக் காவலாளிகள் ஹநுமாரைப் பிடிப்பதற்காகத் துரத்தினார்கள். இப்படித்துரத்தும் காவற்காரர்களை மாருதி அவ்வனத்திலுள்ள மரங்களைப் பிடுங்கி அடித்துக் கொன்றார். இதனால் ஸீதையிருக்கும் மரமொன்றைத் தவிர மற்ற எல்லா மரங்களையும் பிடுங்கி வனத்தை மைதானமாக்கிவிட்டார். பின்பு அவர் சைத்தியப் பிரஸாதம் என்னும் கட்டடத்தை இடித்து அங்கிருந்த காவலாளிகளையும் கொன்றார்.

இப்படி வனம் அதமாக்கப்பட்டதைப் பார்த்த அரக்கிகள் யாவரும் ஸீதையிடம் சென்று "ஸீதே! இவன் யார்? இவன் யாருக்குரியவன்? எங்கிருந்து இங்கு வந்தான்" என்று கேட்டார்கள். ஸீதை "நான் பஞ்சவடியிலிருக்கையில் ராவணன் ஸந்நியாசி வேடம்பூண்டு அவ்வனத்திலிருந்து என்னை யபகரித்து வந்தது முதல் அரக்கர்கள் களிப்படைந்து, தங்கள் இஷ்டப்படி ரூபந்தரித்தும் பூமியில் சஞ்சரிக்கிறார்களென்பதை யானறிவேன். ஆகையால் இதன் விபரம் உங்களுக்குத்தான் தெரியவேண்டும். இவன் யாரென்று என்னை ஏன் கேட்கிறீர்கள்" என்றாள். உடனே அரக்கிகள் பயந்து மனங்கலங்கி இச்சங்கதியைச் சீக்கிரம் ராவணனுக்குத் தெரிவிப்போமென்று அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்கள். அக்காலநேரத்தில் ராவணன் தன்னுடைய மஞ்சத்தில் கயனுடைய வஸ்திரமிருக்கக்கண்டு அவன் மண்டோதரியை அநுபவித்திருப்பானெனக் கருதிச் சினமடைந்து கத்தியை யுருவிக்கொண்டு அவனைக் கொல்வதற்காகப்போனான். அப்பொழுது அங்கிருந்த ராட்சஸ ஸ்திரீகள் "ஸ்திரீ ஹத்தி" யுக்தமல்ல என்று கூறித் தடுக்க, உடனே ராவணன் அக்கோபத்தோடு கயன் கிரஹஞ்சென்று நித்திரைசெய்யும் வீரனாகிய கயனை வெட்டிவிட்டுத் தன் கிரகமடைந்தான். இதே சமயத்தில் விபீஷணனும் தன் படுக்கையில் தன் தமையன் இடுப்பு வஸ்திரமிருக்கக் கண்டு அவனும் தன் மனைவியின்மேல் கெட்ட அபிப்பிராயப்பட்டுக் கோபங்கொண்டு அவளைக் கொல்வதற்காக அவளருகில் செல்ல அங்கிருந்த ராக்ஷஸஸ்திரீகளும் "ஸ்திரீ ஹத்தி" மிகவும் இகழ்வானது" என்று நியாயம் கூறித் தடுத்தார்கள். அன்றுமுதல் விபீஷணன் தன்னுடைய தமையனிடம் சந்தேகங்கொண்டவனாகவிருந்தான். மாருதி செய்த கிருத்திரமம் இவ்வாறாய் முடிந்தது.

அசோகவனராக்ஷஸிகள் வெகு வேகமாகவந்து சபையிலிருக்கும் ராவணனைக்கண்டு அசோகவனத்தில் நடந்த சங்கதியை பயத்தினால் வாய்குளறி நின்று தெரிவித்தார்கள். அதைக்கேட்டு ராவணன் கோபங்கொண்டு "ஆ! நமக்குப் பிரியமான அசோகவனம் இவ்விதமாயிற்றா? என்று சொல்லிச் சினந்து காவற்றலைவனாகிய ஜம்புமாலியை வரவழைத்து ஏ! ஜம்புமாலி நீ இருபதாயிரம் ராட்

சஸர்களுடன் சென்று நமது அசோகவனத்தை அழித்தஅக்குரங்கைப் பிடித்து வாவென உத்தரவளித்தான். ஜம்புமாலி ஆகா! உத்தரவுப்படியே! ஆகட்டுமென்றுகூறிப் பரிவாரங்களுடன் வேகமாக அசோகவனம் சென்றான். அப்படி அதிவேகமாகத் தன்னுடன் யுத்தம்புரியவரும் ராட்சஸக் கூட்டங்களைப் பார்த்ததும் மாருதி தீர்க்கமாகச் ஸிம்மநாதம்செய்தார். உடனே ராட்சஸர்கள் வானர சிரேஷ்டராகிய ஹநுமந்தர்மேல்பாணங்களைப்பிரயோகித்தார்கள். ஹநுமார் அவ்விடமிருந்து அருகிலிருந்த தோரணஸ்தம்பத்தைப் பிடுங்கி யானைகள் கொசுக்களைத் தேய்ப்பதுபோல் ஒரு நிமிஷத்திற்குள்ளாக அவர்கள் யாவரையும் தரையில்தேய்த்துக் கொன்றுவிட்டார். பின் வேகமாக ஓடி ஒரு பனைமரத்தைப் பிடுங்கி வந்து, காவற்றலைவனாகிய ஜம்புமாலியையுங் கொன்றுவிட்டார். இவர்கள் யாவரும் யுத்தத்தில் மடிந்ததைக்கேட்ட ராவணன் லட்சம் ராட்சஸர்களுடன் பஞ்ச சேனாதிபதிகளை ஹநுமாருடன் யுத்தஞ்செய்ய அனுப்பினான். அவர்களையும் ஹநுமார் அத்தோரணத்தைக்கொண்டே கொன்றுவிட்டார். அவர்கள் மடிந்ததைக்கேட்டு ராவணன் தன் புத்திரனாகிய அட்சகுமாரனைச் சைன்னியத்துடன் அனுப்பினான் அவனையும் அவன் சேனையையும் முத்கராயுதத்தால் ஹநுமார் கொன்றுவிட்டார். தன் பிள்ளை அட்சகுமாரன் இறந்ததைக்கேட்டு ராவணன் மகா கோபங்கொண்டு, தன் மற்றொரு பிள்ளையாகிய இந்திரஜித்தை அநேக சேனா சைன்னியங்களோடு அனுப்பினான். இந்திரஜித்து இரதமேறிக் கோடி ராட்சஸர்களுடன் அனுமாரிருக்குமிடஞ் சென்று பிழைபடாத அஸ்த்ர சஸ்த்ரங்களை வரிசை வரிசையாக அவர் பேரில் பிரயோகித்தான். ஹநுமான் தமது வாலால் அந்தக்கோடி சைன்னியங்களையும் அரண்போல் வளைத்துக்கொண்டு க்ஷணநேரத்தில் முழுவதையும் கைத்தோரணத்தால் அதமாக்கிவிட்டு ஒரு மரத்தைப் பிடுங்கி மேகநாதனையும் புடைத்தார். அவ்வடியால் மேகநாதன் அவயவங்கள் நொருங்கிப்போயிற்று; உடனே ஒரு குகைக்குட் பிரவேசித்து மறைந்தான். இச்சமயத்தில் பிரமதேவன் வந்து ஹநுமந்தரைப் பார்த்து, "ஏ! மாருதி! நீ இன்று என் அஸ்திரத்துக்கடங்கி, ராவணனைப்பார்" என்று கூற ஹநுமார் ஆகா அப்படியே ஆகட்டும் எனக்கூறி வணங்கினார்; பிரமதேவன் மேகநாதனிடஞ்சென்று அவனைப்பார்த்து உன் பராக்ரமம் இன்று

எங்கே போயிற்று; மறுபடியும் ஹநுமாரை எதிர்த்து எனது அஸ்திரத்தால் அவனைக்கட்டி உன்பிதாவின் முன் கொண்டுபோய் விடு' என்றார். இதைக் கேட்டதும் மேகநாதன் ஹநுமாரிடம் மறுபடியுஞ்சென்று அமர் புரிந்து அவரை பிர்ம்மாஸ்திரத்தினற் கட்டிப்பிடித்து ராவணனிடங் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

ராவணன் உடனே தன் மந்திரி பிரஹஸ்தனைப்பார்த்து "நீ இவனை யாரென்று விசாரி" என்று சொல்ல அம்மந்திரி ஹநுமாரைப் பார்த்து "நீயார்? எங்கிருந்து இவ்விடம் வந்தாய்? உன்னை அனுப்பினவன் யார்?" என்று வினவினான். வாயுநந்தனன் அம்மந்திரிக்கு ராமருடைய விர்த்தாந்தத்தை விஸ்தாரமாகக கூறி, ராவணன் முகத்தைப் பார்த்து 'ஏ தசானன! உம்முடைய மூர்க்கத் தன்மையையும் சத்ருபாவத்தையும் அறவே யொழித்து, சரணமடைந்தவர்களிடத்து அன்புள்ளவராகிய ராமபிரானிடம் ஸீதையைச்சமர்ப்பித்து உமது மக்கள்மனைவி பந்துக்கள் மித்திரர்கள் இவர்களோடு அவரைச் சரணமடைந்து வணங்கும். இப்படி வணங்குவீராயின், உமக்குப் பயமில்லை. அன்றேல் பற்கள் நகங்கள்இவைகளையே ஆயுதமாகக்கொண்டு யுத்தம்புரியும் சிங்கம் மலைகள்போன்ற வானர வீரர்கள் இந்த இலங்காபட்டணத்தை ஆக்ரமித்துக்கொண்டு அழித்துவிடுவார்கள். ஆகையால் இதற்கு முன்னமே அதி சீக்கிரத்தில் ஸீதையை ரகுநாதரிடம் சேர்த்துவிடும். இல்லாவிடில் சுரேந்திரன் சங்கரன் இவர்கள் உம்மைக் காத்தபோதிலும் நீர் ராமருக்குத்தப்பி ஜீவிப்பது அரிது. இந்திரன் யமன் இவர்கள் உம்மை மடியில் வைத்துக் காத்தபோதிலும் நீர் பாதாளலோகஞ்சென்று ஒளித்துக்கொண்ட போதிலும் தப்பமாட்டீர்" என்று இதமாகக் கூறினார். சுபமும் ஹிதமும் சுத்தமுமான ஹநுமாருடைய இவ்வசனங்கள், இறக்கப் போகிறவனுக்கு ஔஷதம்பிரயோஜன மாகாததுபோல், ராவணனுக்குப் பயனற்றதாயின. ஆகவே இராவணன் ஆஞ்சநேயரைப் பார்த்து,"தேவர்கள் யாவரையும் ஜயித்த என் வல்லமையை நீ யறியாய்; ஆதலாலே தான் இவ்வாறு பிதற்றுகிறாய்; அதில் உனக்குச் சிறிது தெரிவிக்கிறேன். இதோ பார் பிர்மா பஞ்சாங்கம் படிக்கிறான்.

சூரியன் எனது கடைவாசலைக் காத்துக்கொண்டிருக்கிறான். சந்திரன் எனக்குக் குடை பிடிக்கிறான். வருணன் தண்ணீர் கொண்டு வருகிறவனாயிருக்கிறான். அநேகா. வாயு எனது அரண்மனையை நிமிஷந்தோறும் விளக்கிக்கொண்டிருக்கிறான். அக்நி வெளுக்கும் வண்ணானாக விருக்கிறான். இந்திரன் மாலைதொடுக்கிறான். இதோ யமன் தண்டதரனாகவிருந்து காக்கிறான். அப்ஸரஸ்திரீகள் அடிமைகளாக விருந்து வருகிறார்கள். மார்த்தாண்டன் நாவிதனாக விருக்கிறான். கணபன் காரக்ஷகனாக விருக்கிறான். மங்களன் முதலிய ஏழு கிரகத்தவர்களும் எனது சிங்காசனத்துக்குப் படிகளாக இருக்கிறார்கள். சஷ்டிதேவி குழந்தைகளைப் பாதுகாப்பவள். கைலாசமலையை ஊஞ்சலாக ஆட்டினேன். குபேரனை ஜயித்தேன். இவ்விதமான சாமர்த்தியமுள்ள என் முன் சிறிதும் அச்சமின்றிப் பிதற்றும் நீ வானரங்களுள் அதமன். உனது புத்தி சரியல்ல. காட்டிலலையும் ராமன் எனக்கு எம்மாத்திரம்? ...தர்களுக்குள் கீழ்ப்பட்டவனான ராமனை நிமிஷத்தில் கொன்றுவிடுவேன்" என்று கூறி அநுமாரைக் கொல்லக்கருதிச் சபையில் எழுந்திருந்து நின்றான். இதை அருகேயிருந்து பார்த்த விபீஷணன் "சத்துருக்களுடைய தூதனைக் கொல்வது அதர்மம், என்பதைப் பலவிதத்திலும் எடுத்துக்காட்டி ராவணனைத் தடுத்தான். பிறகு லோக ராவண (உலகத்தைக் கதறும்படி செய்கிறவ)னாகிய ராவணன் கோபாவேசமடைந்து, தன் தூதர்களைப் பார்த்து இக்குரங்கின் வாலை அறுத்து முடிக்குங்கள்" என்று உத்தரவளித்தான். உடனே தூதர்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து கோடாலி ரம்பம் முதலிய அநேக ஆயுதங்களை எடுத்துக்கொண்டுவந்து, மாருதியினுடைய வாலைவெட்ட, ஆயுதங்கள் மழுங்கிப் பொடிபொடியாயினவேயன்றி அவருடையவாலுக்கு யாதொருகெடுதியும் உண்டாகவில்லை, அதிலிருந்தொருமயிரும் உதிரவில்லை. இந்தஆச்சரியத்தை ராவணன்பார்த்து,',வ குரங்கே! இப்பொழுது உன்வாலைச்சேதிக்க உபாயம்யாது? வீரர்கள் தங்களுடைய மரணத்தையும் கேட்பவர்களுக்கு ஒளிபார்கள்" என்று கூற; அநுமார் தாம் சிரஞ்சீவியென்பதைத் தெரிவித்தார். இதை ராவணன் நம்பாமல் ஹநுமாரைப் பார்த்து "நீ பொய் பேசுகிறாய்; உண்மையைக் கூறு" என்று கேட்

டான். வாயுநந்தனன் தம்மனத்திற்குள் "அக்நி நமது தந்தைக்கு மித்திரன். ஆகையால் நாம் அதனிடம் பயப்பட வேண்டியதில்லை. நமது வாலில் நெருப்பைக்கொளுத்தும்படிசொல்லி, பின் அதைக் கொண்டு லங்கையை எரித்து விடுவோம்" என நிச்சயித்துச் சபையில் வெகுதைரியமா யிருந்து ராவணனைப்பார்த்து, "என் வாலில் நெருப்பிட்டால், அது கொளுத்தப்படும்; சந்தேக மில்லை" என்றனர். ராவணன், உடனே தன்னருகே நிற்கும் கிங்கரர்களைப் பார்த்து, "இக்குரங்கின் வாலில் தகுந்த பிரயத்த னஞ்செய்து தீமூட்டுங்கள். பிறகு அதை இந்தஇலங்கா பட்டணத் தில் வீதிதோறும் இழுத்துச்சென்று யாவருக்கும் காட்டுங்கள்! இப்படிச்செய்தால் பகைவர் நம்மிடம் அச்சத்துடனிருப்பார்கள்" எனக் கட்டளையிட்டான். உடனே கிங்கரர்கள் எண்ணெயைக் குடங்குடமாகத்தருவித்து ஏராளமான சணல் பட்டைகள் துணி கள் இவைகளை அவ்வெண்ணெயில் தோய்த்து, ஹநுமாருடைய வாலில் அவைகளைச் சுற்றினார்கள். அப்பொழுது ஹநுமார் தமது வாலை, எவ்வளவு துணிகளைச் சுற்றுகிறார்களோ அவ்வளவு போ தாதென்னும்படி வளர்த்தினர். இதனால் முதலில் எண்ணெயில் தோய்க்கப்பட்ட துணிகள் முழுதுந்தீர்ந்து விடவே, அந்தக் கிங் கரர்கள் யாவரும் ஜவுளிக்கடைகளி லிருக்கும் துணிகள் யாவை யும் வரவழைத்துச் சுற்றினார்கள். இவையும்போதாமற்போகவே, ஜவுளிக்கிடங்குகளி லிருக்கும் துணிகளையும் கொணர்ந்து சுற்றி னார்கள். இவையும் போதாமற் போகவே அவரவர் வீடுகளிலிருக் கும் வஸ்திரங்கள் யாவையும் கொணர்ந்து சுற்றினார்கள். இவை யும் போதாமற்போகவே இச்சங்கதியை, ராவணனிடம் தெரி விக்கலானார்கள். ராவணன் உடனே இலங்காபட்டணத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களுடைய வஸ்திரங்களையும் பலாத்காரமாகப்பிடுங் கிச் சுற்றுங்களென்று ஆஜ்ஞாபிக்க, கிங்கரர்க ளப்படியேசெய்து இலங்கா பட்டணத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் யாவரையும் நிர்வாணமாக்கினார்கள். பிறகு படுக்கைகள் ரவிக்கைகள் கஞ்சுகங் கள் முதலியவைகளைப் பலபேர்களுடைய வீடுகளிலிருந்தும் கொ ணர்ந்து சுற்றினார்கள். இவையும் போதாமற் சபையிலிருக்கும் ராஜ ஸ்திரீகள், அரசர் இவர்களுடைய வஸ்திர முதலியவை

களையும் எடுத்துச் சுற்றினார்கள். இவையும்போதாமல் கொடியில் உலர்த்தியிருக்கும் துணிகள் தலைப் பாகைகள் பிராமணர்களின் வஸ்திரங்கள் மண்டோதரி முதலிய பட்டமகிஷிகளுடைய வஸ்திரங்கள் எல்லாவற்றையும் கொணர்ந்து சுற்றினார்கள். இச்சங்கதி சாரர்களால் ஸீதைக்குத் தெரிவிக்கப்பட்டதென்பதை, ஹநுமார் அறிந்ததும், தமதுவாலை வளர்த்துவதை நிறுத்திக் கட்டி முடிந்ததாகக்காட்டினார். இப்பொழுது அரக்கர்கள் யாவரும் கோலாகலத்துடன் நல்லெண்ணெய் நெய் முதலிய எரிமூட்டத்தக்க சாதகங்களை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் குடங் குடமாகக் கொணர்ந்து ஹநுமார் வாலில் ஊற்றி நனைத்தார்கள். இன்றிரவுஇலங்கையில் தீபம் கொளுத்தவும் எண்ணெயில்லாமற்போயிற்று. குழந்தைகளுக்குக்கூட நெய்யில்லாமலும் போயிற்று. ஸ்திரீ புருஷர்களெல்லாம் நிர்வாணர்களாகி வெட்கத்தையும் இழந்தார்கள். பிறகு கிங்கரர்கள் ஹநுமார்வாலில் தீயைமூட்டி இலங்கையிலுள்ள முறம் விசிறி முதலியவைகளெல்லாவற்றாலும் விசிறினார்கள். விசிறியும் தீ பிடிக்கவில்லை. இப்பொழுது ஹநுமார் "ஏ கிங்கிரர்களே! உங்கள் தலைவன்வந்து வாயிட்டு ஊதினால் தீபிடித்து எரியும்" என்றுசொல்ல, அதைக்கேட்டுக்கிங்கரர்கள் ராவணனுக்குத்தெரிவிக்க, ராவணனுடனே தன் ஸிம்மாசனம் விட்டெழுந்து மாருதியிடம்வந்து, அவருடைய பிரஷ்டபாகத்தில் முகத்தை வைத்துக்கொண்டு ஊதினான். உடனே குபீலென்று ஜ்வாலைகிளம்பி ராவணனுடைய பத்துத் தலைகளிலிருக்கும் மயிரையும் மீசைகளையும் எரித்துவிட்டது. ராவணனுடைய இருபது கைகளும் இப்பொழுது அவனுடைய பத்து முகத்திலெரியும் தீயை அவிக்கச் சாதகமாயின. இப்படி இருபதுகைகளாலும் ராவணன் தன்மீசைத்தீயை அவிப்பதைக்கண்ட, ராட்சஸர்கள் யாவரும் நகைத்தார்கள். இப்பொழுது மாருதியும் சிரிக்கக்கண்ட ராவணன், கோபமடைந்து "சீ! இக்குரங்கைக்கொண்டுபோங்கள்" என்றுதூதர்களுக்குக்கட்டளையிட்டான். உடனேகிங்கரர்கள் அவரைச்சங்கலிகளாற்கட்டிவாத்தியகோஷத்துடன் அநேகப் சஸ்த்ரதாரிகள் சூழ, இலங்காபட்டணத்தில் வீதிகள்தோறும் இழுத்துச்சென்றார்கள். இவ்விதம் இழுத்

துச் செல்லுகையில் மாருதி பகலில் இலங்காபட்டணம் முழுமையும் நன்றாகப் பார்த்துக்கொண்டே சென்று, கடைசியில் தமது தேகத்தைச் சிறுக்கச்செய்து கட்டுகளின் பலத்தைக் குறைத்துக்கொண்டு பிர்மாஸ்திரம் முன்னமே தம்மைவிட்டு விலக்கினதை யறிந்து, மேற்குக் கோட்டைவாசலைச் சேர்ந்ததும் அங்கிருந்த தோரண ஸ்தம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு கோட்டைக் காவலர்களையும் தம்மை இழுத்துச் செல்லுகிறவர்களையும் நையப் புடைத்து அங்கிருந்த கிரகங்களின் மேன்மாடிகளுக்குத் தாவி, அங்கங்கு தமது வாலிலிருக்கும் தீயை வைத்துப் பட்டணம் முழுதும் எரியும்படி செய்தனர்.

இப்படி இலங்கை முழுதும் பற்றி எரிகையில், ஒவ்வொரு வீட்டிலுள்ள அரக்கிகளுடைய தலைமயிரிலும் ஆடையிலும் தீப் பிடித்துக்கொண்டது. அதனால் அவர்கள் தங்கள் உயிர் பிழைத்தாற்போதுமென நினைத்து, நித்திரை செய்யும் தங்கள் சிசுக்களைக்கூட எடுக்காமல் படுக்கையிலேயே கிடத்திவிட்டு வெளியே வந்து பெருங் கூச்சலிட்டார்கள். பிறகு மாருதி ராவணன் முதலியவர்களுடைய கிரகங்களையும் அவர்களது அதிகாரசபைகளையும் தீயிட்டெரித்தார். அப்பொழுது அவரை எதிர்க்கும் அரக்கர்களை வாலாலடித்து யமனுக் கிரையாக்கினர். அநேககோடி அரக்கர்கள் தீயின் வாய்ப்பட்டு வாயில் அடித்துக் கொண்டு மூலை மூலையாய் ஓடினார்கள்.

இலங்கை இப்படி அலங்கோலப்படுவதையும் தன் அலங்கார சபை முழுதும் பற்றி எரிவதையும் கண்ட ராவணன், கடுஞ்சின மடைந்து, பத்துக்கோடி அரக்கர்களுடன் ஹநுமாரை எதிர்த்தான். அவர் தமது வாலால் அவ்வரக்கர்களைச்சுற்றி ஒன்றுசேர்த்துத் தடுத்துக்கொண்டு தோரண ஸ்தம்பத்தால் அடித்துக் கொன்றபின் ராவணனுடைய தலைகளில் வாலாலடித்து அவன் மேல் அக்கினியை இறைத்தார். அவ்வக்கி ராவணனுடலிற் பற்றி எரிக்கவே, அவன் அது பொறுக்கமாட்டாமல் களைப்படைந்து கீழே விழுந்து மூர்ச்சையானான். ராவணசங்காரத்தினால் உண்டாகும் கீர்த்தியானது, ராமருக் குண்டாகவேண்டு மென்று

கருதி, மாருதி இப்பொழுது ராவணனைக்கொல்லாமல் விட்டு விட்டார். பின் எதிர்க்கவந்த இந்திரஜித்து, அரக்கர்கள் யாவரும் பஸ்மமாயிருப்பதையும், தன் தந்தை மூர்ச்சைபோய்க்கிடப்பதையும், பார்த்துப் பயந்து தன்னுயிர் காப்பதின் நிமித்தம் ஒரு குகைக்குட் புகுந்து மறைந்தான். இந்திரஜித்தைக் கொல்லுங் கீர்த்தி லட்சுமணர்பாலடைய விரும்பி, மாருதி அவனையுங் கொல்லாமல் விட்டார். இவ்விதம் இலங்காபட்டணங்களிலுள்ள மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் யாவையும் எரித்துவிட்டுக் கடைசியில் கடற்கரையடைந்து, கடலிலுள்ள ஜலஜந்துக்களுக்கு உபத்திரவம் உண்டாகாதிருக்கும்படிக்கு, வாலினுடைய நீயைத் தனை யில் தேய்த்துதறிவிட்டு, வாலின் உஷ்ணாந்தணிபச் சமுத்திரஅலைகளில் நனைத்தார். தமது கழுத்தில் படிந்திருக்கும் புகைக்கட்டிகளை எடுத்துச் சமுத்திரத்தி லெறிந்தார்.

இங்கு மாருதி சற்று நேரம் மௌனமாயிருந்து பின் ஸீதையை நினைத்துக்கொண்டு, "ஓகோ! நமது சுவாமி ராமருக்கு இன்ப நாயகியாகிய ஜானகியம்மாளைச் சற்றும் நினைக்காமல் இலங்கை முழுவதிலும் தீயிட்ட நமது குரங்குப்புத்தியை என்னென்பது! நாம் மகா மூடனேனும். நிந்தைக்காளானேனும். சிறிதும் யோசிக்கவில்லையே! இந்த அவிவேகத்தைபாருக்குச்சொல்வது? இப்படிப்பட்ட நிந்தைக்காளான நம்முடைய முகத்தை இனி ராமருக்கு ஏன் காட்டவேண்டும்? ஆகையால் இட்சணமே நமது வாலைக்கொண்டு கழுத்திற் சுருக்கிட்டுப் பிராணனை மாய்த்துக் கொள்வோம். ஸீதை அக்கிக் கிரையான சங்கதி ராமர் செவியிற் படின் உடனே ராமர் இறப்பர். அவ்வருத்தத்தால் சகோதரன் ஸௌமித்திரி(லட்சுமணன்) உடனே மரித்துவிடுவர். இதிற் சந்தேகமில்லை. இவ்விருவருடையமரணத்தையும் சுக்ரீவன் கேட்பானாகில் அவனும் உயிர்விடுவர். அதைப்பார்த்து அவர் பத்னி ருமையும், யுவராஜன் அங்கதனும் அவன் தாய் தாரையும், அரசன்போன்வருத்தத்தால் வானரங்கள் யாவும் இம்மண்ணுலகவாழ்வை ஒழிப்பார்கள். பதினைந்தாவது வருஷம் பிறந்த தினமே பரதனும் ராமனைக் காணுமல் மரணமடைவான். புத்திர துக்கத்

தால் கௌஸல்யையும் சுமித்திரையும் உயிரிழப்பார்கள். இவ்வளவு அநர்த்தங்களுக்கும் காரணமான கைகேயும் இக்கதியேயடைவாள். சத்துருக்னன் தன் சகோதரருடைய துக்கத்தால் இறந்துவிடுவான். இன்னும் ரகுவம்சத்தாரும் ராமருடைய பக்தர்களும் அவர்மந்திரிகளும் மித்திரர்களும் இவ்வாறே யாவார்கள். ஸீதையினுடைய தந்தையாகிய ஜனகவம்சத்தாரும்கௌஸல்யையின் பிதாவாகிய கோஸல வம்சத்தாரும், சுமித்திரையின் தந்தைவம்சமும் கைகேயியின் தந்தையாகிய கேகயவம்சமும்அவ்வம்சத்தின் பந்து மித்திரர்களும் பிராணனை விடுவார்கள். ராஜகுலம் இவ்வாறு நாசமடைந்தால், ஜனங்களும் சுதந்தரர்களாகி நாசமடைவார்கள் இதில் ஐயமில்லை; பிறகு ஸ்தாவரஜங்கமங்களும் நாசமடையும். இப்படிப்பூவுலகுநாசமுறுமாயின்,ஹௌவியகௌவியங்கள்(பிதுர் கர்மம் தேவகர்மம்)அற்றுப்போம். இதனால்தேவர்கள்நாசமானவர்களுக்கு ஒப்பாய்த்துன்புறுவார்கள். தமதுஸ்ருஷ்டிக்குட்பட்ட உலகங்களுக்கு நேரிடும் அகாலநாசத்தினால், பிரம்மதேவரும் வெறுப்படைந்து, பரிதாபமுற்று நாசமடைவார். இவ்விதம் கிரமமாக பிர்ம்மாண்டத்துக்கே கேடு நேரிடும். இதற்காகவா நாம் ஜனனமெடுத்தோம்" என்று தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டு, தமது பிராணனை மாய்த்துக்கொள்ள எத்தனிக்கையில் "ஏ குரங்கே! வருந்தேல்; ஜானகி சுகமா யிருக்கிறாள். நீ அவளிடம்சென்று உன்னை அவளுக்குக் காண்பித்துவிட்டு, ரகுபுங்கவரிடஞ் செல்" என்னும் மகிழ்ச்சியைச்கொடுக்கத்தக்க ஆகாசவாக்குண்டாயிற்று. இதைக்கேட்ட மாருதி பரமஸந்தோஷமடைந்து விரைவில் ஸீதையைப் பார்ப்பதற்கு அசோக வனஞ் சென்றார்.

பார்வதி! மாருதி ஸீதையைப்பார்க்கப் போகுங்காலையில் தரைமுழுதும்,சொர்ணமுருகிப் பெருகுவதைப்பார்த்தார். அவ்விதம் பெருகிய காரணத்தைக் கூறுகிறேன்கேள்—தேவி! பாற்கடலின் மத்தியில் பதினாயிரம் காததூர உயரமும் பதினாயிரங்காதம் சதுர அளவுமுள்ள திரிகூடமென்றொரு பர்வதம் தங்கம்வெள்ளி இரும்பு ஆகிய இம்மூன்று லோகங்களாலாய மூன்று சிகரங்களையுடையதாய், திக்குகள் ஆகாயம் எங்கும்பிரகாசம்வீசப்பரவிநின்றது. அப்பருவதத்தின்மத்தியில்மகாத்மாவாகியவருணனுக்குரிய

ருதுமது என்னும் பெயர்கொண்ட ஓர் உத்தியானவனமிருந்தது. அங்கே விஸ்தாரமான தடாகம் ஒன்றிருந்தது. அதன்கண் சொர்ண மயமான தாமரை, நீலோத்பலம், குமுதம், செங்கழுநீர், சதபத்திரம்முதலிய புஷ்பங்கள் அழகாய்மலர்ந்திருந்தன. செய்ந்நன்றி கொன்றவர்கள் ஜீவஹிம்சை செய்பவர்கள், நாஸ்திகம் பேசித்திரிபவர்கள் இவரால், இத்தடாகத்தைக்காண முடியாது. இந்தத்தடாகத்தினுள்கெட்ட எண்ணம், குரூபம் மகாபலமுள்ள யானைகளையுமிழுக்கத்தக்க பலம் இவைகளோடு கூடிய ஒரு முதலை வசித்துக்கொண்டிருந்தது. இம்முதலை எவருடையகையிலும் அகப்படுவதில்லை. ஒருகாலத்தில் அழகான தந்தங்களையுடைய யூதபதியாகிய ஒரு மதயானை தாகசமனஞ்செய்துகொள்ள அநேகபெண்யானைகளோடு அத்தடாகத்திற்குவந்து அதிலிறங்கித் தண்ணீர் குடித்தது. அப்பொழுது அதிலிருந்த முதலை யூகபதியாகிய யானையின் காலைப் பிடித்து இழுத்து தண்ணீர்க்குள்ளே கொண்டுபோய்விட்டது. உடனே யானையானது தன் முழுபலத்தாலும் முதலையைக் கரைக்கிழுத்தது. முதலைதண்ணீர்க்குள்ளிழுத்தது. இவ்விதமாக ஒன்றுக்கொன்று தோல்வியடையாமலிழுத்தது. வெளியில் தன் உருவத்தைக்காட்டாமல் ஜலத்திற்குள்ளிருக்கும் ஒரு முதலையால் தங்கள் யூதபதி இழுக்கப்படுவதைநோக்கிய மற்றயானைகள் 'விசனமடைந்து எல்லாம் ஒன்றுசேர்ந்து தங்கள்யூகபதியின் துதிக்கையைப் பிடித்து இழுத்துக் கரையேற்ற முயன்றன. அப்படி முயன்றும் அது முடியாமற்போயிற்று. பின் யூகபதியாகிய யானையும் முதலையும் தேவவருஷத்தில் ஆயிரவருஷகாலம் அகோர யுத்தம் புரிந்தன. அத்தடாக அதிபதியாகிய வருணன் முதலைக்குச் சகாயமாய் நின்று, கொடூரமான தன் பாசங்களைக்கொண்டு யானையைக் கட்டினான்; அதன் பின் யானை யுத்தம் புரியச் சக்தியற்றுப் போயிற்று. முதலை மறுபடியும் இப்பொழுது ஜலத்திற்குள் இழுக்க, யானை அந்த இடத்திலேயே திடமாய்நின்று தன் ஆபத்தைநினைத்து வருந்திச்சற்று யோசித்துப்பின் ஆபத்பாந்தவனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை ஏகாக்ர சித்தமாயிருந்து "இவ்வாபத்து வேளையில் இந்தப் புருஷோத்தமன்தான் நம்மை ரக்ஷிப்பவன்" என்று கருதி, பரிசுத்தமான அந்தராத்மாவால்,

தியானஞ்செய்து, அத்தடாகத் தாமரை மலரைத் தன் துதிக்கையாற் பறித்து அவரை அர்ச்சித்து மானஸ நைவேத்தியம் ஸமர்ப்பித்து இவ்வாபத்திலிருந்து அடியேனைக் கரையேற்ற வேண்டுமென்று பலவாருகத் துதித்தது. இவ்வாறு பரவசமாய் நின்று துதிபுரியும் யானைக்கு சுரோத்தமராகிய பரமேசுவரர் மனமிரங்கி உடனே கருடவாகனமேறித் தடாகத்திற்கு வந்து, அங்கு முதலையால் வருத்தப்படும் யானையைக் கண்ணுற்று, அட்சணமே தம்முடைய சக்ராயுதத்தால் அம் முதலையைப் பிளந்து யானையைக் கரையேற்றி, வருணபாசத்தினின்றும் விடுவித்தார்.

ஏ பார்வதி! யானை முதலை இவைகளின் பூர்வவிருத்தாந்தத்தைக் கூறுகிறேன் கேள்—இந்த யானை முன்ஜன்மத்தில் இந்திரத்யும்னன் என்னும் பேர்கொண்ட பாண்டியதேசத் தரசனுயிருந்தது. இந்திரத்யும்னன் ஒரு சமயம் பகவத்தியானம் செய்ய விரும்பி தபோநிஷ்டையிலிருந்தான். அச்சமயம் தற்செயலாய் அகஸ்தியமுனிவர் அவன் பக்கஞ்சென்ருர். அவன் தபோநிஷ்டையிலிருந்ததனுல் முனிபுங்கவர் வந்திருப்பதை யறியவில்லை. அகஸ்தியர் இந்திரத்யும்னன் எழுந்து மரியாதை செய்யாததைக் கண்டு, கோபங்கொண்டு ஏ இந்திரத்யும்ன! என்றழைத்து "நீ தபோமதங்கொண்டு என்னைக்கண்டதும் எழுந்து மரியாதை செய்யாதபடியால் நீ ஒரு யானையாகப் பிறந்து மதம்பிடித்து அநேக காலம் காட்டில் அலைந்து திரியக்கடவாய்" என்று சபித்தார். அவ்வசனத்தைக்கேட்டதும் திடுக்கிட்டுப் பயந்து எழுந்திருந்து அம் முனிவரைப் பலமுறை வணங்கி! சாபவிமோசனத்தைக் கேட்க, முனிவர், "உன்னை ஒருகுளத்தில் ஒரு முதலைபிடித்து இழுக்கும்; அப்பொழுது பகவான் நாராயணர் உன்னை ஸ்பரிசிப்பர். அப்பொழுது சாபவிமோசனமாகும்" என்று கூறித் தம்மிருப்பிடம் சென்ருர்.

முதலையானது பூர்வஜன்மத்தில் ஹூஹூ என்ற ஒரு கந்தர்வனுயிருந்தது. அக்கந்தர்வன் ஒரு சமயம் அநேக அப்ஸரஸ்திரீகளுடன்ஜலக்ரீடை செய்வதற்காக இத்தடாகக் கரைக்கு வந்து தடாகத்தை நோக்கும்போது, அதில் தேவலர் என்னும் ஒரு முனிவர் அகமருஷண விதிப்படி ஸ்நானம் செய்து கொண்

டிருப்பதைப் பார்த்தான். தன்னுடைய ஜலக்ரீடைக்குத் தடையா யிருக்கும், அம்முனிவரை வெளியேற்றக்கருதி, வேறொரு பக்கம் சென்று, ஜலத்தில்மூழ்கி அம்முனிவருடைய காலைப்பிடித்துஇழு த்தான். முனிவர் அதனையறிந்து "ஏ கந்தர்வ! நீ என்னை முதலை போல் ஜலத்திலிருந்து இழுத்தமையால் நீ முதலையாகக் கடவா" யென்று சாபமிட்டார். உடனே அவன் பயந்து சாபவிமோசனங் கேட்டுக, முனிவர் "ஏ கந்தர்வ! உனக்கு ஒருகாலத்தில் நாராயண ரால் சாபவிமோசன மாகு" மென்றருளிச் சென்றனர். இவ்விதம் முனிவர்களுடைய சாபமேற்று இச்சங்கடத்திலாழ்ந்த, அவ்விரு வருக்கும் ஸ்ரீமன் நாராயண மூர்த்தி சாபவிமோசனஞ் செய்து முத்திகொடுத்து அவர்களுடன் வைகுண்டம் சென்றார்.

நாராயணமூர்த்தி வைகுண்டபதவியை யடைந்தும் கருட பகவான் தமக்குமிக்கப் பசியாயிருக்கிறதென்று தெரிவித்து, அவரை ஆகாரம் கொடுக்கும்படி வேண்டினர். நாராயணர் "ஏ கருடா! பூலோகத்தில் இப்பொழுது நாம் போய்வந்த, தடாகக்கரை யில்கிடக்கும் யானை, முதலை இவ்விரண்டினுடைய சரீரங்களையும் புசித்து உன்பசியை ஆற்றிக்கொள்" எனக் கட்டளையிட்டனர். கரு டன் அப்படியே அத் தடாகத்தினருகிற் செல்ல, அதற்கு முன்பே அங்குவந்து அப்பிணங்களைக்கொத்தித்தின்னக் காத்துக்கொண் டிருக்கும் ஒரு கழுகரசைக்கண்டு அதனுடன் போர்செய்து, அதைக்கொன்று தமது ஒருகாலில் அதையும் முதலை யானை இவ் விரண்டின் சரீரங்களை மற்றொருகாலிலும் தூக்கிக்கொண்டு, ஆகாசமார்க்கமாக, இவைகளைப்புசிக்கத்தக்க சுத்தமான இடம் யாதெனத் தேடிச் சென்று அந்த க்ஷீரசாகரத்தின் மத்தியில் ஆயிரங் காதவழி உயரம் வளர்ந்து அவ்வளவு காதவழிக்குக்கிளை கள் பரவிய ஒரு சொர்ண மரத்தைக் கண்டு விஸ்தாரமான அம்மரத்தின் ஒரு கிளையில் உட்கார்ந்தனர். அந்தக் கிளையில் ஏற்கனவே அறுபதினாயிரம் வாலகில்லியர்கள் தலை கீழாகத் தொ ங்கிக்கொண்டு தவம் புரிந்து கொண்டிருக்கிறபடியால் கருடன் வந்து உட்கார்ந்ததும் அக்கிளை பாரந் தாங்கமாட்டாமல் முறிந்து சமுத்திரத்தில் விழ ஆரம்பித்தது. உடனே கருடன் அக்கிளையை உற்றுநோக்கி, அதில் வாலகில்லியர்கள் தவம் புரிவதைக்கண்டு

அந்தோ! இந்தரிஷிகள் சமுத்திரத்தில் விழுந்துவிட்டால், சாபம் வந்து சம்பவிக்குமேயெனப்பயந்து தமது மூக்கில் அக்கிளையைக் கௌவிக்கொண்டு ஆகாச மார்க்கமாகச்சென்று வட்டமிட்டார். அப்பொழுது தமது தந்தை கசியபமுனிவரைக் கண்டு, அவரை வணங்கிப் "பிதாவே! இவ்வாகாரங்களைப் புசிக்கத்தக்க இடம் ஒன்றைத் தெரிவியும்" என்று விஞ்ஞாபனம் செய்துகொண்டார். கசியபமுனிவர் இதோ இந்தச் சமுத்திரத்தில் நூறு காதவழிக் கப்பால், லங்கை என்ற ஒரு சுத்த பூமியிருக்கிறது. அங்கே சென்று நீ போஜனம் செய்" என்று தெரிவித்தார். அட்சணமே கருடன் லங்கைக்குச் சென்று அங்கோரிடத்தில் உட்கார்ந்து கொண்டு, சொர்ணக்கிளையைத் தமது இறக்கையை உயர்த்தி அதன்மேல் வைத்துக்கொண்டு; அம்மூன்று சரீரங்களையும் புசித்தார். புசிக்கும்போது எறிந்த அப்பிராணிகளின் எலும்புக் குவியல் மூன்று சிகரங்களையுடையதாயிற்று. பிற்காலத்தில் திரிகூடமென்ற பெயரைப்பெற்ற ஒரு பெரிய மலையாயிற்று. சிகரத்தில் கருடன் தாம் கொண்டு வந்த சொர்ணக்கிளையை வைத்துவிட்டுச் சென்றனர். பிறகு அக்கிளையிலிருந்த வாலகில்லியர்கள் தங்கள் தவம் முடிந்தபின் விஷ்ணுலோகத்தை யடைந்தார்கள். இலங்கையில் அச்சிகரங்களின்மேலிருந்த அச்சொர்ணக்கிளையானது நாளடைவில் சிலையாக மாறி, பாசத்தால் மறைக்கப்பட்டிருந்தது. இந்த ரகசியத்தை ராக்ஷசஸர்கள் அறியவில்லை. மாருதி லங்கையைக் கொளுத்தினதும் அவ்வனல் தாக்கினபடியால், சொர்ணக்கிளை உருகி லங்கை முழுதும் ஓடிற்று. அதனால் அநேக பிராணிகள் நாசமடைந்தன. அப்பட்டணத்துத் தரை சொர்ணமயமாயிற்று. ஏ பார்வதி! இதுதான் லங்கை இப்பொழுது சொர்ணமயமாய்க் காணப்படுவதன் காரணம்—என்று பரமசிவன்கூறினர்.

இனி ஸீதையைப் பார்க்கச் சென்ற மாருதியைப் பற்றிப் பேசுவோம். அவர் அசோகவனம் நோக்கிச் செல்லுகையில், லங்கை சொர்ணமாக உருகி வருவதைக் கண்டு பயந்து வியப்படைந்து, உடனே வேகமாக அவ்வனம் சென்று ஸீதையைப் பார்த்து வணங்கி, "அம்மா! ஜானகி! இனி நீங்களேன் கஷ்டப்படவேண்டும்? என் தோளில் உட்கார்ந்து கொள்ளுங்கள், இப்

பொழுதே ராமரைப் பார்க்கலாம்'' என்றார். ஸீதை "மாருதி! என்னை யார் விடுவித்தபோதிலும் ராமபிரான் சம்மதியார்; இக் கணையாழியையும் அவரிடம் சேர்த்துவிடும்'' என்று சொல்லி, ராமபிரானுடைய கணையாழியை ஹநுமந்தரிடம் கொடுத்து விட்டாள். ஹநுமார் அக்கணையாழியைப் பெற்று அதற்கு வணங்கி, அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, சுவேல மலையி னுச்சிக்கு வந்து, அங்கிருந்து தாண்ட யத்தனித்தார். ஹநுமார் காலா லழுத்தியதும் அம்மலை பொடியாயிற்று. பிரமதேவர், மாருதி லங்கையில் செய்த காரியங்கள் முழுவதையும் பத்திரிகையில் விஸ்தாரமாக வெழுதி எடுத்துக் கொண்டு, இச்சமயம் அவர் முன் தோன்றி, "ஏ ஹநுமந்த! இந்த லிகிதத்தை ஸ்ரீராமபிரானிடம் கொடு'' என்று சொல்லி அவர்கையில் கொடுத்தார். மாருதி அப்பத்திரியையைப் பெற்றுக்கொண்டு பிரம்ம தேவரை நமஸ்கரித்து, அவரிடம் விடைபெற்று உடனே அங்கிருந்து கிளம்பி, பெருங் கூச்சலிட்டுக்கொண்டு ஆகாசமார்க்கமாகச் சென்று வட திசையில் சமுத்திரக் கரையிலிருக்கும் வானரக் கூட்டங்களுக்கு நேரே உயரவந்து, அவர்கள் அருகில் குதித்து அங்கே சில குரங்குகளையும் ஒரு முனிபுங்கவரையுங்கண்டார். மாருதி அந்த முனிபுங்கவரைப் பார்த்து, "ஏ முனிவரே! நான் ராமகாரியத்தைச் செய்து முடித்தேன். எனக்கு இப்பொழுது மிகுந்த தாகமாயிருக்கிறது. ஆகையால் தாகசமனஞ் செய்துகொள்ள இப்பொழுது தடாகம் காண்பியுங்கள்'' எனக் கர்வத்துடன் கேட்டார். முனிவர், தமதாட்காட்டி விரலை நீட்டி, ஒரு தடாகத்தைக் காட்டினார். ஹநுமார் தமது கையிலிருக்கும் ஸ்ரீ ராமபிரான் கணையாழி, ஸீதாபிராட்டியின் சூடாமணி, பிர்ம்மதேவன் கொடுத்த பத்திரிகை இம்மூன்றையும் முனிவர் முன்னிலையில் வைத்துவிட்டுத் தீர்த்த மருந்தத் தடாகத்தை நோக்கிச் சென்றார். இச்சமயத்தில் ஒரு குரங்கு முனிவர் ஸந்நிதியிற் றோன்றி, கணையாழியை எடுத்து அவர் முன்பிருக்கும் கமண்டலத்துள் போட்டுவிட்டது. மாருதி தீர்த்தபானஞ் செய்து விட்டு முனிவர் சந்நிதிக்கு வந்து, தாம் வைத்துவிட்டுப்போன மூன்று வஸ்துவில் இரண்டு இருக்கக்கண்டு, அவைகளைக் கையிலெடுத்துக்

கொண்டு, கணையாழியைக் கேட்டார். முனிவர் தமது கமண்டலத்தை நோக்கும் புருவ சமிக்ஞை செய்தார். மாருதி உடனே வாயைப் பொத்திக்கொண்டு கமலண்டலத்தை நோக்கினார். அதனுள் ஆயிரக்கணக்கான ராமநாம சின்னமுள்ள கணையாழிகளிருக்கக்கண்டு, பயந்து ஆச்சரியப்பட்டு, "முனிவரே! இவ்வளவு கணையாழிகள் இங்கு எப்படி வந்தன? இவைகளில் நான் கொண்டுவந்த கணையாழியெது" என்று வினவ; முனிவர் எவ்வளவோ வாயு நந்தனர், எவ்வளவோ ராகவர்களாலனுப்பப்பட்டு லங்கையை யடைந்து, எவ்வளவோ ஸீதைகளிடமிருந்து எவ்வளவோ கணையாழிகள் பெற்று என் முன் வைத்திருக்கிறார்கள். அவைகளை எவ்வளவோ குரங்குகள் எவ்வளவோ முறை இக் கமண்டலத்துள் எடுத்துப் போட்டிருக்கின்றன. ஆகையால் நீ கொண்டுவந்த கணையாழியை நீ அடையாளம் பார்த்து எடுத்துக் கொள்" என்றார். ஹநுமார் ஆச்சரியப்பட்டு, "ஏ முனிவரே! இப்படி எத்தனை ராமர் இப்பூவுலகின்கண் உதித்திருக்கிறார் என்பதை அடியேன் அறியவேண்டுகிறேன்" என்றார். முனிவர், "மாருதி! இக்கணையாழிகளை வெளியே எடுத்துப்போட்டு எண்ணிப் பார்த்துக்கொள்" என்றனர். மாருதி கணையாழிகளை இரண்டு கையிலும் வாரி வாரி எடுத்துப்போட்டும் முடிவில்லாமல் வளர்ந்ததை நோக்கி, மறுபடியும் கணையாழிகளை அக்கமண்டலத்துள் எடுத்துப் போட்டுவிட்டு, முனிவரை வலம் வந்து நமஸ்கரித்து "ஓகோ! எவ்வளவோ மாருதி இம்மாதிரி ஸீதையைக் கண்டு கணையாழி வாங்கி வந்திருக்க, நாம் கண்டு வந்தது ஒருகணக்கா" எனத் தமது மனத்திற்குள் நினைத்து, கர்வமொழிந்து பின் அங்கிருந்து கரைவழியே சென்று, ஹநுமாரைக் காண்கிறவரையில் புசிப்பதில்லையென பிராயோபவேச விரதத்திலிருக்கும் அங்கதன் முதலியவர்களுடைய கூட்டத்திற்சேர்ந்தார். அவர்கள் அவரைக் கண்டதும் சந்தோஷமடைந்து, ஆலிங்கனஞ்செய்து கொண்டார்கள். மாருதி தாம் லங்கையில் அசோக வனத்தில் ஸீதையைக் கண்டதாகத் தெரிவித்தார். அதைக் கேட்டதும் அவர்கள் பரமானந்த மடைந்து, கவலை ஒழிந்து ஒன்று சேர்ந்து சீக்கிரமாக ராமபிரானுக்கு இச்சுபச்செய்தி

யைத் தெரிவிக்க வேண்டுமென்று கருதி எல்லோரும் புறப்பட்டு வேகமாக வரும்வழியில், சுக்ரீவனுடைய ஆஞ்ஞையால் பாதுகாக்கப்பட்டுவரும் மதுவனத்தைக் கண்ணுற்று, அங்கதன் உத்தரவின்பேரில் அவ்வனத்திலுள்ள இனிய கனிவர்க்கங்களைப் புசித்தார்கள். அவ்வனக் காவற்றலைவன் ததிமுகன் அவர்களைத்தடுக்க, அவன் சுக்ரீவனுக்கு மாமனென்பதை யறிந்தும் அவனை அடித்துத் துரத்திவிட்டு மதுவைக் குடித்துக் கனிகளைப் புசித்தார்கள். அத்ததிமுகன் சுக்ரீவனிடம் சென்று எல்லாவற்றையுந் தெரிவித்தான். சுக்ரீவன் "அவர்கள் ஸீதையைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், உத்தரவின்றி நமது காவலிலிருக்கும் மதுவனக்கனிகளைப் பறிக்கத்துணியார்" என்றுநினைத்து "ஏ ததிமுக! அவர்களைத் தடுக்கவேண்டாம், சீக்கிரம் என்னிடம் வரும்படி அவர்களுக்குத் தெரிவி" என்று அனுப்பிவிட்டான். பிறகு சுக்ரீவன் உத்தரவுப்படி ததிமுகன் அங்கதன் முதலியவர்களுக்குத்தெரிவிக்க உடனே அவர்கள் சுக்ரீவனிடம் வந்து ராமபிரானை வணங்கி, அவர் ஸந்நிதியில் நின்றார்கள். ஹநுமான் தம்மிடம் பிரம்மதேவர் கொடுத்த பத்திரிகையையும் ஸீதை தந்த சூடாமணியையும் கொடுத்து, ஸீதை அடையாளமாகத் தெரிவிக்கும்படி கூறிய காக விர்த்தாந்தத்தையுங் கூறினார்.

ஸ்ரீராமபிரான் அதைக் கேட்டு மகிழ்ந்து, அப்பத்திரிகையைப் படித்துப்பார்த்து, லங்கையில் மாருதி செய்த செய்கைகளை யறிந்து, அவரை ஆலிங்கனஞ் செய்து "ஏ மாருதி! இவ்வுபகாரஞ் செய்த உனக்கு யான் செய்யத்தக்க உபகாரம் வேறு யாதுளது? இவ்வுலகத்திற்கு நீயே தன்னியன். ஆனால் பரமாத்மாவாகிய என்னுடைய ஆலிங்கனம் கிடைப்பதரிது. ஆகையால் கபிபுங்கவ! நீ தான் எனக்குப் பிரியமான பக்தன்" என்று சொன்னார். ஏ பார்வதி! துளசீதளங்களால் பூஜிப்பவர்களுக்கு வைகுண்ட பதவியைக் கொடுக்கும் பாதபத்மங்களையுடைய ஸ்ரீராமனது திவ்ய ஆலிங்கனம் பெற்ற வாயு நந்தனன் வெகு புண்ணியம் செய்தவனென்பதற்கு ஐயமேது! ஏ பார்வதி! பிறகு மாருதி பயந்து நடுங்கி "சுவாமி! யான் ஓர் அபராதஞ் செய்தேன்.

அதை மன்னிக்கவேண்டும்" என்று ஒரு முனிவரிடம் தாம் கணை யாழியைக் கொடுத்ததினால், நேரிட்டதை ராமருக்குத் தெரி வித்தார். ராமசந்திர மூர்த்தி அதைக் கேட்டு நகைத்து "நீ கர்வ மடைந்ததை அறிந்து, நான்தான் அங்கு ஒரு முனி ரூபமாக விருந்து அந்த வேடிக்கையைச் செய்தேன். இதோ பார் நீ அங்கு விட்டுவந்த கணையாழி என்கைச் சுண்டுவிரலிலிருக்கிறது" என்று காட்டினார். மாருதி ராமருடைய கைவிரலில் அக்கணை யாழி யிருப்பதைக் கண்டு, அவரைச் சாட்சாத் விஷ்ணுவென்றே நினைத்து, வணங்கிக் கர்வமடங்கி, நாம் லங்கையில் காட்டிய சாமர்த்திய முழுதும் இந்த ராமபிரானுடைய கிருபையினா லேயே யன்றி வேறல்லவென நினைத்து மகிழ்ந்தார்.

8-வது சருக்கம்

முற்றிற்று.

10-வது சருக்கம்.

பார்வதீ ரமணர் கூறுகிறார்.

ரகு குலோத்தமர் மாருதியைப் பார்த்து, "ஏ வாயுநந்தன! லங்கையின் விவரத்தை எனக்கு விஸ்தரித்துக்கூறு; பிறகு அதற்குத் தக்கபடி செய்வோம்" என்றார். ஆஞ்சநேயர் மனமகிழ்ந்து "தேவ சிரேஷ்ட! லங்கையானது திரிகூடமலையி னுச்சியில், சொர்ண மயமான பிரகாரங்களுடனும், சொர்ணமயமான மாளிகைகளுடனும் மகாசுத்தமான நீர் நிரம்பிய அகழிகளால் சூழப்பட்டுப் பலவிதமான உபவனங்கள், திவ்ய தடாகங்கள், நவரத்நங்களிழைத்த ஸ்தம்பங்கள் நாட்டிய கிரகங்கள் முதலியவைகளோடு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதன் மேற்குக் கோட்டை வாசலில் யானைப்பாகர்கள் யானைகளுடனும் வடக்குக்கோட்டை வாசலில் குதிரை வீரர்கள் குதிரைகளுடனும் அநேகம் காலாட்படைகளுடனும் இருக்கிறார்கள். இன்னும் இவ்விதமே அநேக இடங்களில் அற்புதக் கணக்காக, யானைகள் குதிரைகள் அஸ்த்ர சஸ்த்ரங்களில் தேற்சிபெற்றவர்கள் இரத வீரர்கள் முதலியவர்களிருந்து லங்கையைக் காத்துவருகிறார்கள். சதக்நி முதலிய ஆயுதங்கள் நிறைந்தஆயுதசாலைகள் அநேகமிருக்கின்றன. ஏதேவேச! இவ்வளவு காவல்கள் ஏற்படுத்தப்பட்ட லங்கையில், தங்கள் தாஸன் செய்த செய்கையைக் கேட்கவேண்டும். தசானனுடைய சைன்னியங்களில் நாலிலொரு பங்கை அழித்து விட்டேன். சொர்ணமயமான லங்காபட்டண முழுமையும் கொளுத்தப்பட்டது. ஆயுத சாலைகளிலுள்ள அநேக ஆயுதங்கள் முறிக்கப்பட்டன. இனித் தங்கள் பார்வையால் மிகுந்திருப்பது பஸ்பமாகப் போகிறது. லங்கைக்கு வடக்கே சுவேலமலை யிருக்கிறது. மேற்குத்திக்கில் பரலங்கையும், தெற்கில் நிகும்பிலேயும் அந்த நிகும்பிலேயில் யோகினிவடமென்ற ஓர் ஆலமரமுமிருக்கின்றன. கிழக்குத்திக்கில் லகுலங்கை யிருக்கிறது. இவைகளின் மத்தியிலிருக்கும் லங்காபுரியானது என்னுடைய வால் நெருப்பால் கொளுத்தப்பட்டது. ஆகையால் தாங்கள் சீக்கிரம் புறப்படவேண்டும். சமுத்திரத்திற்குச் செல்வோம்" என்று கூறினார். ராமர் இவைகளைக்கேட்டதும் சுக்ரீவனைப்பார்த்து "ஏ சுக்ரீவ! இப்பொ

ழுது விஜயமென்கிற முகூர்த்தகால மாகையால், இச்சுபமுகூர்த்தத்தில் உனது சைன்னியங்களைப் பிரயாணப்படுத்து. ஆசுவயுஜ மாஸம் சுக்லபக்ஷம் சிரவண நக்ஷத்திரம் தசமிதிதி இவைகள் கூடிய இன்றையதினம் மிகச் சுபகரமானது. ஆகையால், இன்றே நாம் யாவரும் லவண சமுத்திரம்போய்ச் சேரவேண்டும். சேனைகளை முன்னும் பின்னும் புறங்களிலும் அணிவகுத்து நிறுத்தி, சேனாதிபதிகள் பாதுகாக்கட்டும். அவர்களில், நமக்கு முன்னே நளனும், பின்னே நீலனும், இடது புறத்தில் ஜாம்பவானும், அக்கினி திக்கில் கஜனும், நிருதி திக்கில் கவாக்ஷனும், வாயு திக்கில் கவயனும், ஈசான திக்கில் மைந்தனும் இருந்து வரட்டும். துவிவிதன் முதலிய யூதபர்களும் மற்றவர்களும் சேனையைக் காத்துக்கொண்டு எதிர்ப்படும் சத்துருக்களைக் கொல்லச் சித்தமாய்ச் செல்லட்டும். நான் மாருதியின்மீது ஏறிக்கொண்டு வருகிறேன். லட்சுமணர் அங்கதன்பேரில் ஏறிக்கொண்டு என் முன்னால் செல்லட்டும். நீ என்னுடன் கூடவே வா” என்று கட்டளையிட்டு இவ்வித ஒழுங்குப்படியே பிரயாணப்பட்டு தட்சிணதிசை நோக்கிச் சென்றார். இப்பொழுது வானர சைன்னியங்கள், எதிரிகள் அஞ்ச பூ! பூ! என்று சத்தஞ்செய்துகொண்டு பணகம், ஆனகம், கோமுகம் முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு, க்ஷணநேரங்கூட வழியில் தங்காமல் இராப் பகலாகச் சென்றார்கள். இப்பொழுது ராமருக்கு நல்ல சகுனங்கள் ஆயின. பிறகு அவர்கள் யாவரும் சகியம், மலயம் இவ்விருமலைகளையுங் கடந்து, தக்ஷிண சமுத்திரக்கரைக்குச் சென்றார்கள். இங்கே சமுத்திர மணலில், ராமர் சேனைகளோடு தங்கினார். வானர சிரேஷ்டர்கள் யாவரும் இப்பொழுது சமுத்திரத்தைக்கடக்க யோசனை செய்தார்கள்.

மாருதியின் வாலின் தீயால் சுடப்பட்டு மூர்ச்சைபோன, ராவணன் கதி யாதாயிற்றென்று பார்ப்போம். ராவணன் மூர்ச்சைபோய்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் தெளிந்து தன் மந்திரி பிரஹஸ்தன் முதலியவர்களைப் பார்த்து நமது கண்கானே ஒரு சிறிய குரங்கு இலங்கையைக் கொளுத்தி இவ்வித அலங்கோலத்துக்குள்ளாக்கி ஸீதையையும் கண்டு பேசிவிட்டு அருமையான

அசோகவனத்தை ஹதமாக்கியது மன்றி நமது செல்வக்குமாரன் அக்ஷனையும் கொன்றுவிட்டது. இனி நடக்கப்போவது யாதோ தெரியவில்லையே" என்றான். அப்பொழுது மந்திரிமார்கள் அரசனைப் பார்த்து "அரசே! நாங்கள் சற்று உபேட்சையா யிருந்தமையால், குரங்கு தப்பிப்போயிற்று. தாங்கள் உத்தரவு கொடுத்தால் இவ்வுலகத்தில் வானரப் பூண்டில்லாமலே ஒழித்துவிடுகிறோம்" என்றார்கள். அருகிலிருந்த கும்பகர்ணன் ராட்சஸேந்திரனாகிய ராவணனைப் பார்த்து "நீர் ஜானகியை அபகரித்து வந்தது சிறிதும் தகாது; ஆனால் அறியாமையினால் இந்த அனுசிதமான செய்கையை நீர் செய்துவிட்டீர். ஆயினும், உமது கவலையை ஒழிக்க நான் முயற்சி செய்கிறேன். எனக்குத்தரவு கொடும். ஒரு நிமிஷத்தில் ராமன் லட்சுமணன் சுக்ரீவன் மற்றுமுள்ள வானரங்கள் யாவரையும் கொன்றுவிட்டு வருகிறேன்" என்றான். ஸ்ரீமானும் மஹாபாகவதனும் ராமபக்த சிரேஷ்டனுமான விபீஷணன், மஹாகர்வியாகிய கும்பகர்ணன், மத்தன், பிரமதத்தன் முதலிய ராட்சஸ பிரமுமர்களை ஆச்சரியத்துடன் பார்த்து, காமாதுரனாகிய ராவணனை அண்ணாவென்றழைத்து"யுத்தத்தில்ஸ்ரீராமர்முன் கும்பகர்ணன், இந்திரஜித்து, மகாபார்சவன்,மகோதரன், நிகும்பன், கும்பன் அதிகாயன் இவர்களில் யாவரும் நின்று அவரை எதிர்க்கமுடியாது. ஆகையால் ஸீதையை ஸ்ரீராமரிடம் கொடுத்துச் சுகமாய் வாழ்; அன்றேல், சுரேந்திரன் ஈசுவரன் இவர்கள் உமக்குத்துணைநின்று காத்தபோதிலும் நீர் அவரிடமிருந்து தப்புவதரிது' என்று நியாயங் கூறினான். இவ்விதம் விபீஷணன் கூறிய ஹிதவசனங்கள் கால வித்தியாசத்தினால் ராவணனுக்கு ஆத்மசுக சாதனமாகத்தோன்றவில்லை; ராவணன் தன் சகோதரன் விபீஷணனைப் பார்த்து "அடே! நீ எனக்கு சத்ருவாகப் பிறந்திருக்கிறாய், இதில் சிறிது மையமில்லை. இன்னும் எவனேனும் இவ்விதம் கூறியிருப்பானாயின், அவனை உடனே கொன்றிருப்பேன். இராட்சஸகுலாதம! சீ! என்முன் நில்லாதே. ஓடு! எழுந்திரு! சீக்கிரம்" என்று கோபித்தான். இப்படிப்பட்ட ராவணனுடைய கொடூரமொழிகளைக் கேட்ட விபீஷணன் உடனே எழுந்திருந்து தன் மந்திரிமார்கள் நால்வருடன் ஸ்ரீராமபிரான் ஸந்நிதியை

யடைந்தான். ஸ்ரீராமர் விபீஷணனைப் பார்த்து சங்கதிகளை அறிந்து அவனுடன் சிநேகித்து அச்சமுத்திர மணலிலேயே மாருதியைக்கொண்டு மணல்மயமான இலங்காபட்டணமொன்று செய்வித்து தமது மித்திரனாகிய அவனை அவ்விலங்கையில் வீற்றிருக்கச்செய்து அவனுக்கு வானரங்களைக்கொண்டு இலங்கா ராஜ்யாபிஷேகம் செய்வித்து, அவனைப் பார்த்து நகைத்து “மித்ரா! நான் ராவண சங்காரம் செய்யும்வரையில் இந்த இலங்கையை உன்னிடம் நியாஸமாக வைத்திருக்கிறேன். இது மாருதியினுடையது. இச்சமுத்திரக் கரையில் மாருதிலங்கை என்னும் பெயர் இதற்குண்டாகப் போகிறது” என்று சொன்னார். பார்வதீ! ராவணனைக் கொன்ற பின் விபீஷணனுக்குச் சொந்தமாகச் செய்திருக்கும் இவ்விலங்கையின் சுதந்தரத்தை மாருதிக்குரிமை யாக்கியதால், இப்பொழுதும் அவ்விடம் மாருதிலங்கையென்று அழைக்கப்படுவது காண்க. இத்தருணத்தில் ராவணனுடைய ஏவலை மேற்கொண்ட சுகன் சார்த்தூலனென்ற மந்திரிகள் ஆகாசமார்க்கமாக வந்து அவர்களிற் சுகனென்பவன் சுக்ரீவனைப் பார்த்து, “ஏ சுக்ரீவ! எமது இறைவன் ராவணேசுவரன் உனக்குக் கூறியதை கேள். அதாவது:—நான் ராஜபுத்திரனுடைய பத்னியை அபகரித்து வந்ததனால் உனக்கு நஷ்டமான பொருளென்ன? ஆகையால் உடனே உன் சைன்னியங்களுடன் கிஷ்கிந்தைபோய்ச் சேர். என்னுடன் விரோதங்கொள்ளாதே” என்பதே என்று தமது இறைவன் ஆஞ்ஞையைத் தெரிவித்தான். உடனே வானரர்கள் ஆகாசத்திற்கிளம்பி சுகனென்பவனைப் பிடித்துக்கொண்டு வந்து இருப்புச் சங்கிலிகளால் கட்டிவிட்டார்கள். கூடவந்த சார்த்தூலன் வானரசைன்னியங்களின் நிலைமையைப் பார்த்து அச்சமடைந்து உடனே ராவணனிடஞ் சென்று சங்கதியைத் தெரிவித்தான். ராவணன் இதைக்கேட்டுத் தீர்க்காலோசனை செய்யலானான்.

ஸ்ரீராமபிரான் தாமிருக்குமிடத்தை ஏகாந்தஸ்தலமாக்கி, விபீஷணன் சுக்ரீவன் மாருதி இவர்களுடன் ஒரு க்ஷணநேரம் ஆலோசித்துப் பிறகு, லட்சுமணரை மட்டும் தனியே அழைத்துச் சென்று, வானரக்கூட்டங்களுக் கப்பாலிருக்கும் ஒரு புதருக்குள்

மறைந்து சைன்னியங்கள் பேசிக்கொள்வதைக் கேட்க விரும்பி அங்கே சற்றுநேரமிருந்தார். பிறகு இவ்வளவு நேரமாயும் சமுத்திரராஜன் தம்மிடத்தில் வராமையை நினைத்து, அவனைத் தமது இடதுகையை உதறிச் சினந்து, மேகநாதம்போல் கர்ச்சித்து. உடனே தர்ப்பையைப் பரப்பி அதிற் படுத்துப் பிராயோபவேசமிருந்தார். இவ்விதம் இரண்டுநாள் இருந்து மூன்றாவது தினத்தில் தர்ப்பசயனத்திலிருந்து எழுந்து "லட்சுமணா! இங்கு வந்திருக்கும் நம்மைக் கேவலம் மனிதரென்றெண்ணி, இவ்வானரங்களைக்கொண்டு இவர்கள் யாது செய்ய வல்லவர்கள் என அலட்சியஞ்செய்து ஸமுத்திரராஜன் வராமலிருக்கிறான். இதோ பார் இந்த நிமிஷத்தில் இந்த வாரிதியை வற்றச்செய்து வானரங்கள் கவலையற்றுக் காலால் நடந்துசெல்லும்படி செய்கிறேன்" என்று சொல்லித் தமது தநுசை எடுத்து இழுத்துக் கட்டி, அதிற் சிரேஷ்டமான பாணத்தைப் பொருத்தினார். உடனே பூமி நடுங்கிற்று. திக்குகள் இருண்டன ; சமுத்திரம் கலங்கிக் கரையைவிட்டுக் காதவழிக்கப்பாற் சென்றது. திமிங்கிலம், மீன், முதலை, ஜஷம் முதலிய ஜலஜந்துக்கள் தவித்துப் பயமடைந்தன. இத்தருணத்தில் சமுத்திரராஜன் ஒரு திவ்ய ரூபந்தரித்து அநேக ரத்தினங்களை உபாயனமாகக் கொண்டுவந்து ராமரிடம் சமர்ப்பித்து வணங்கித் துதித்து "ஏ தீனசரண்ய ! எனக்கபயமருளும், இதோ இலங்கைக்கேக வழிவிடுகிறேன்" என்று ராகவரைப் பிரார்த்தித்தான். அப்பொழுது ராமர் சமுத்திரராஜனை நோக்கி "வில்லில் இப்பொழுது பொருத்தியபாணம் வீணாகாது ; ஆகையால் இதற்கொரு குறி காண்பி ; எவ்விடத்திற் பிரயோகிப்பது?" என்று கேட்டார். சமுத்திரராஜன் "ஏ ரகுசிரேஷ்டரே ! வடதிசையில் சமுத்திரத்தினருகில் துருமகல்பம் என்ற பிரசித்தமான பிரதேசம் ஒன்றிருக்கிறது. அதில் அநேக பாபிகளிருக்கிறார்கள். அவர்கள் இரவும் பகலும் என்னைத் தொந்தரவு செய்கிறார்கள். ஆகையால் இந்தப் பாணம் அங்குப் பிரயோகம் செய்யப்படட்டும்" என்று தெரிவித்தான். உடனே ராமபிரான் பாணத்தை அங்குப் பிரயோகிக்க அந்தப்பாணம் அங்கிருக்கும் ஆபீரமண்டலத்தை (இடையர் கூட்டம்) அழித்துவிட்டு மறுபடி ராமரிடம் வந்து அம்புறாத்தூணியடைந்து முன்போலிருந்தது.

பின்பு சமுத்திரராஜன் ராமரை வணக்கத்துடன் பார்த்து, "இந்த நளனைக்கொண்டு என்மீது அணைகட்டுவியுங்கள். இவன் விசுவகர்மாவினுடைய புத்திரன். இவன் முன்னொரு காலத்தில் கங்கைக் கரையில் பூஜை செய்து கொண்டிருந்த ஒரு வேதியருடைய சாளிக்கிராமத்தைகங்கையிலெறிய, அவர் உடனே அவனைப் பார்த்து உன் கையாலெறியப்பட்ட பாஷாண முதலியவைகளும் தண்ணீரில் மிதக்கக் கடவதெனச் சாபமிட்டிருக்கிறார்; அது சாபமாயினும் நமக்கு இனி நடக்கவேண்டிய காரியத்துக்குச் சாதகமாய் முடிகிறபடியால், அது வரமே" என்று சொல்லிவிட்டு ராமரைப் பன்முறைவணங்கி விடைபெற்று மறைந்தான். உடனே ராமர் நளனைவரவழைத்து, சமுத்திரத்தில் சேதுபந்தனம் செய்யக் கட்டளையிட்டார். சேதுகட்ட ஆரம்பிக்கும் காலத்தில் அவ்விடத்தில் ஒரு விக்நேசுவரரை ஸ்தாபித்து, பூஜைசெய்து பிறகு நவக்கிரகங்களைப் பூஜிப்பதற்காக மகோததியில் ஒன்பது பாஷாணங்களை (கல்லை) நளன் கையால் நடுவித்துப் பூஜித்தார். பிறகு இவ்விடத்தில் தமது பெயரால் ஒரு சிவலிங்கம் ஸ்தாபிக்க நிச்சயித்து மாருதியை யழைத்து "நீ இப்பொழுதே வாரணாசியை அடைந்து அகிலலோக சரண்ணியனாகிய சிவபெருமானை வணங்கி அவரிடமிருந்து ஒரு சிவலிங்கம் பெற்று இப்பொழுது நான் குறித்திருக்கு முகூர்த்தகாலத்திற்குள் கொண்டுவர வேண்டும்" என்று உத்தரவிட் டனுப்பினார்.

ஏ நாராயணி! அப்படி ராமருடைய உத்தரவுபெற்ற மாருதி "நல்லது அப்படியே நடக்கிறேன்" என்று கூறி உடனே கிளம்பி ஆகாசமார்க்கமாக நிமிஷ நேரத்தில் நமது காசி க்ஷேத்திரமடைந்து என் ஸந்நிதியில் வந்து என்னை வணங்கி ராமகாரியத்தைத் தெரிவிக்க, நான் உடனே இரண்டு திவ்ய லிங்கங்களை ராமருக்காகக் கொடுத்து "ஏ மாருதி! இதற்கு முன்னமே அகஸ்தியர் வேண்டுகோளின்படி தெற்குத் திக்கில் வருவதாக நிச்சயித்தேன். இப்பொழுது ராமருடைய கருத்தை நிறைவேற்றுவதற்காகவும் அவ்விடம் வருகிறேன்" என்று சொன்னேன். மாருதி பார்த்து "தாங்கள் எப்பொழுது இவ்விதம் நிச்சயித்தது? அந்தக் கும்பமுனிவர் எப்பொழுது தங்களை இவ்விதம்

வேண்டியது. இவைகளை என்னிடம் கருணைகூர்ந்து தெரிவிக்க வேண்டு''மெனக் கேட்டார். "ஏ மாருதி! நான் முன் நடந்தவைகளை உனக்குக் கூறுகிறேன், கவனமாய்க்கேள்" என்று கூறிப் பின்வருமாறு சொன்னேன்.

முன்னொரு காலத்தில் ஸ்ரீமன் நாரதமுனிவர் நருமதைநதியில் ஸ்நானஞ்செய்து, சகலர்களுக்கும் சர்வ மனோரதங்களையும் அருளும் ஸ்ரீமத் ஓங்காரேசுவரரை அர்ச்சித்து விட்டுச்செல்லும் வழியில் விந்தியபருவதத்தைக்கண்டார். ஸம்ஸாரதுக்க நிவாரணஞ்செய்யும் நருமதா நதிக்கரைக் கலங்காரமாயும் தராதரம் என்கிற தன் பெயருக்கேற்ப, விசாலமான இப்பூமியைத் தாங்கிக் கொண்டிருப்பதுமானவிந்தியபர்வதம் தன் தாவரசரீரத்தின்மேல் ஒரு ஜங்கம சரீரமெடுத்து, நாரதரைப் பார்த்து அவரை எதிர்கொண்டு வந்து தமது கிருகம் அழைத்துச்சென்று, சாஸ்திரோக்தமாகப் பக்தியுடன் பூஜித்து அவர் சிரம நிவர்த்தியடைந்ததாகத் தெரிந்ததும் வணக்கத்துடன் சிறிது சம்பாஷித்தது. "தங்கள் பாததூளியால், எனது பாபங்கள் யாவும் பரிகாரமாயின. உமது சரீரத்தின் தேஜஸைப் பார்த்ததும் என் அந்தக்கரணத்தி லிருக்கும் அஞ்ஞானமாகிற இருள் நீங்கிற்று. இன்று சகல சம்பத்துங் கொடுக்கத் தக்க சுதினமாயிற்று. முன் அநேக ஜன்மங்களில் யான் செய்த புண்ணியங்களின் பலனை இன்று அடைந்தேன். இனி நானே மலைகளைக் காட்டிலும் மேன்மை பெற்றவன்" என்றது. இதைக் கேட்டதும் முனிவர் பெருமூச்சுவிட்டார். உடனே விந்திய பர்வதம் பரபரப்புடன் அவரைப் பார்த்து, "சர்வஞ்ஞராகிய தாங்கள் பெருமூச்சுவிடக் காரணம் யாது? அதைத் தெரிவித்தால், உடனே நிவர்த்திசெய்கிறேன். மேருவாகிய பர்வதங்கள் மலைகளுக்குள் சிறந்தனவென்று முன்னோர்கள் புகழ்ந்திருக்கின்றார்கள். நான் ஒருவனே இப்பூவுலக முழுவதையும் தாங்குகிறவன். ஹிமவான் மலைகளுக்கு அதிபதியானதாலும், பசுபதியாகிய சிவபெருமானுக்கு மாமனாராதலாலும் கௌரிக்குத் தந்தையாதலாலும் அவனை மலைகளுக்கு மேலென்பார்கள். மகாமேருமலை சொர்ணமயமானதாலும் ரத்நமயமான அடிவாரங்களையுடைய தாதலாலும் தேவதைகளுக்கு இருப்பிடமான

தாலும் அதுவும் எனக்குச் சில அம்சத்தில் மேன்மை பெற்ற தென்பதும் என்சம்மதமே; இப்பூமியின் கண் இன்னும் மேன்மை பெற்றமலைகளும் சாமான்யமான மலைகளும் பல இருக்கின்றன. உதயகிரியானது மந்தேகாள் முதலிய அசுரர்களுக்கு இருப்பிடமாயிருக்கிறது. நிடத மலையானது ஒஷதிக்கு இருப்பிடம். அஸ்தமன கிரியானது எப்பொழுதும் ஒளியற்றது. நீல மலையானது நீலவர்ணமுடையது. மந்தரம் மந்தலோசனமுடையது. மலயம் ஸர்ப்பங்களுக்குஇருப்பிடம். ரைவதமென்னுமலை திரவியமற்றது. ஹேமகூடம் திரிகூடம் முதலிய மலைகள் உச்சியில் கூடமென்கிறதைப் பெற்றிருக்கிறதே அப்பெருமைதான்; கிஷ்கிந்தை கிரௌஞ்சம் சகியம் முதலியவை பூமியைத்தாங்கும் சக்தியுடையனவல்ல" என்று மற்றப் பர்வதங்கள் யாவற்றையும் இகழ்ந்ததைக் கேட்ட நாரதர் தம்மனத்திற்குள் "ஒகோ! இவ்வளவு கர்வமடைந்தவன் மகத்வம் பெற அருகனல்லன்; சிகரங்களைத் தரிசித்தமாத்திரத்தில் முத்தி கொடுக்கக்கூடிய மகிமையுள்ள ஸ்ரீசைலம் முதலிய மலைகள் பூமியிலில்லையா? இதன் பலத்தை நாம் அறிய வேண்டுமென்றுகருதி, "ஏ விந்தியபர்வதமே! நீ கூறியது யாவும் உண்மையே' அவைகளில் மேருமலையானது உன்னைமிகவும் அவமதிக்கின்றது. அதை நினைத்துத் தான் நான்பெருமூச்செறிந்தேன். இப்பொழுது அதையும் தெரிவித்துவிட்டேன்! ஆனல் எங்களைப்போலொத்த உலகப்பற்றற்றவர்களுக்கு இவைகளைப்பற்றிய சிந்தை தான் எதற்கு? ஆயினும் உனக்கு மங்கள முண்டாகக்கடவது" என்று சொல்லிவிட்டு ஆகாசமார்க்கமாகச் சென்றூர். நாரதர் சென்ற பிறகு விந்திய பர்வதம் பயந்து மனங்கலங்கி தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டு, தன்மனத்திற்குள் மேருவுக்கு மேன்மைகிடைத்தது எவ்விதம்? ஆனல் இச்சூரியன் நாள் தோறும் அதை வலம் வருகிறது. இவைகளன்றோ அது பெருமைபேசியதற்குக் காரணம்" என்று நினைத்து அதனுடன் அமர்புரியக்கருதி சூரியனுடைய கதிக்குத் தடையுண்டாம்படி வளர்ந்து நின்றது. மறுநாட்காலையில் சூரியன்மகாமேருவை வலமாகவந்துவழக்கப்படி தென்புறத்தில் உதயமாய்வர, அங்கு வழிதடைபட்டிருப்பதைக்கண்டு, தான் அரைநிமிஷத்தில் 2202 யோசனைதூரம் செல்லுகிற சுபாவமுள்

ளவனாயினும் அவ்விடத்திலேயே வெகுகாலம் தங்கிவிட்டான். அச்சமயத்தில், கிழக்குத் திக்கினுள்ளவர்களும் வடக்குத் திக்கினுள்ளவர்களும் சண்டரஸ்மி (உக்ரமான கிரணமுடையவர்) யினுடைய கிரணக் கூட்டங்களால் தகிக்கப்பட்டு வருந்தினார்கள். தெற்குத் திசையிலும் மேற்குத் திசையிலுமுள்ளவர்கள் இருள் அந்தகாரமாக மூடியிருந்தமையால் மூடினகண்ணைத் திறக்காமல் நித்திரைபோய்க் கொண்டிருந்தார்கள். ஆகாசத்திலுள்ள கிரகம் முதலிய நட்சத்திரங்கள் வருத்தமுற்றன; இவ்வுலகத்தில்சுவாஹா சுவதா வஷட்காரம், பஞ்சயக்ஞக்கிரியைகள் முதலிய சத்கிரியைகள் லோபமடைந்தன; அதனால் மூவுலகங்களும் நடுங்கின; பிறகு தேவர்கள் ஒன்றுகூடிப் பிரமதேவனை யடைந்து அவரிடத்தில் இச்சங்கதியைத் தெரிவிக்க, அதற்கவர் விந்திய பர்வதத்துக்குக் குருவாகிய அகஸ்தியரிடஞ் சென்று பிரார்த்தியுங்கள்" என்று சொல்லக்கேட்டு உடனே அகஸ்தியமுனிவரிடம் சென்று அவரை வணங்கிச்சங்கதியைத்தெரிவித்தார்கள். அவர் அதைக்கேட்டதும் மனங்கலங்கினார். ஏ பார்வதி அப்படி வருந்திய அகஸ்தியரைப் பார்த்து "நீரேன் இவ்விதம் வருத்தமுறவேண்டும். நான் கூறுகிற படி விந்தியபர்வதத்தை ஒருவார்த்தையால் அடக்கிவிட்டு தட்சிண திக்குக்குச் சென்று அங்கு என்னைப்பூஜித்துக் கொண்டிரு; நானும் அதிசீக்கிரதில உன் வருத்தத்தைத் தீர்ப்பதற்காகவும் சேதுவில் ஸ்ரீராமர் என்னைப்பூஜிப்பதற்காகவும் தட்சிணதிக்கிற்கு வருகிறேன்" என்று அவருக்கு அநுக்கிரகஞ் செய்து அனுப்பினேன்; உடனே அகஸ்தியர் மனமகிழ்ச்சிகொண்டு அவர் பத்னி லோபாமுத்திரையுடன் புறப்பட்டு, விந்தியபர்வதத்தின் அருகிற் சென்றார். அப்பொழுது விந்தியபர்வதமானது பத்னியுடன் வரும் அகஸ்தியரைப்பார்த்து நடுங்கி, பூமிக்குள் புகுந்து செல்லுகிறவன்போல் அதி சீக்கிரத்தில் தரையோடு தரையாய்த்தாழ்ந்து வணங்கி, "தங்களுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டவனாகிய நான் தங்களுக்கு இச்சமயம் செய்யவேண்டுவதைக் கட்டளை யிட்டருளும்" என்றது. "ஏ விந்திய! நீ மிகவும் பிராக்ஞன், சாது; என்னை நன்றாய் அறிவாய்; நான்மறுபடி திரும்பி வரவேண்டுமென்ற கருத்து உனக்கு இருந்தால் நான் வரும் வரையில் இவ்விதமாகவே இரு" என்று சொல்லித் தென் திசை சென்றார். இப்படி

அகஸ்தியர் சொல்லக்கேட்ட விந்தியமலை நடுங்கி, தான் மறுஜன்மமடைந்ததாக எண்ணித் தலையைமட்டும் உயரத் தூக்கிக்கொண்டு தட்சிண திக்கை நோக்கிக்கொண்டே முனிவர் வரவை இன்று வருவர் நாளைவருவர் என்று எண்ணிப் பன்னிரண்டு வருஷகாலம் எதிர்பார்த்திருந்து வாராமை கண்டு, அதனால் உண்டான மனக் கவலையாகிய பாரத்தினால் அழுத்தப்பட்டவனுக் கொப்பாய், எப்போதும்போல் தாழ்ந்திருந்தது. ஆகையால் இன்னும் அகஸ்திய முனிவர் வடக்குத் திக்குக்கு வரவில்லை மலையும் வளரவில்லை. சூரியசாரதியாகிய அருணன் இதையறிந்து குதிரைகளை ஓட்ட, உலகத்தில் சூரிய சஞ்சாரமுண்டாய் நாற்றிசையிலுள்ளவர்களும் க்ஷேமமடைந்தார்கள். பிறகு அகஸ்தியமுனிவர் தண்டகாரண்யம் சென்று அவ்விடத்தில் எனது வரவை எதிர்பார்த்து வருவதால், நான் சீக்கிரம் அவ்விடம் வருகிறேன். நீ ராமரிடம் செல்லென்று சொல்லி மாருதியைக் காசியிலிருந்து அனுப்பினேன். உடனே மாருதி கர்வமடைந்து இவ்விரண்டு லிங்கங்களையும் எடுத்துக் கொண்டு, ராமரிடம் செல்ல, ஆகாசமார்க்கமாகப் புறப்பட்டார்.

ஸ்ரீராமபிரான் மாருதி கர்வமடைந்ததை அறிந்து சுக்ரீவன் முதலானவர்களைப் பார்த்து, முகூர்த்தவேளை தப்பிப்போகும்போலிருக்கிறது. ஆகையால் இவ்விடத்தில் இப்பொழுதே ஒரு மணல் லிங்கம் செய்து அதைச் சேதுபந்தனத்திற்கு ஆரம்பஞ் செய்யுமிடத்தில் ஸ்தாபிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வானரங்களும் முனிவர்களும் சூழ்ந்திருக்க, லிங்க ஸ்தாபன விதியை அனுசரித்து ஸைகத லிங்க ஸ்தாபனம் செய்துவிட்டு, உடனே தமது திருவுள்ளத்தில் கௌஸ்துப மணியைச் சிந்தித்தார். அக்கணமே கௌஸ்துபமணி கோடிசூரிய ப்ரகாசம்போல் ஆகாசத்திலிருந்து அவர் முன்னில் வர, அக்கௌஸ்துப மணியை லிங்கத்தின் கழுத்தில் அணிந்தார். உடனே அம்மணியின் மகிமையால் ஐசுவரியம் வஸ்திரம் ஆபரணம் பசுக்கள் திவ்யான்ன பாயசங்கள் யாவும் சித்தமாயின. அவைகளை ராமபிரான் முனிவர்களுக்குச் சமர்ப்பித்து மரியாதை செய்வித்தார். பிறகு முனிவர்கள் களிப்புடைந்து அவரவர் ஆசிரமத்திற்குச் செல்லும் வழியில் ஹநுமார்

அவர்களைப் பார்த்து "முனிவர்களே! யாருடைய பூஜைபெற்று வருகிறீர்க"ளென்று கேட்க, முனிவர்கள் ராமபிரான் சேதுபந்தனம் தொடங்குமிடத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். அதை நாங்கள் யாவருங்கண்டு தரிசனஞ்செய்து வணங்கினோம். அப்பொழுது ராமரால் செய்யப்பட்ட பூஜையை ஏற்றுக்கொண்டு இப்பொழுது எமதாசிரமம் செல்லுகிறோ"மென, அதைக் கேட்ட ஹநுமார் மிகவும் கோபங்கொண்டு "ஓகோ! ராமபிரான் நம்மை மோசஞ்செய்துவிட்டார்" எனச் சொல்லிக்கொண்டேஒருநொடிப்பொழுதில் ரகுபுங்கவர் முன்னிலையில் தமது கால்கள் தரையிற் பதியத் திடீரென்று குதித்து ராமபிரானைப் பார்த்து "அடியேனை மறத்தல் தகுமோ? நான் இலங்கைக்கேகி ஸீதையைக்கண்டு தங்களுக்குத் தெரிவிக்கவில்லையா? அவ்விதம் செய்த என்னை லிங்கத்துக்காகக் காசிக்கனுப்பி, யாவரும் சிரிக்கும்படி செய்துவிட்டீர்களே! இப்படிப்பட்ட எண்ணம் தங்கள் சித்தத்தில் இருக்க, ஏன் என்னைச் சிரமப்படுத்தவேண்டும்? தங்கள் எண்ணம் இப்படிப்பட்டதென்பதை யான் அறிந்திருப்பேனானால், காசிக்குச் சென்று ஏன் லிங்கம் கொண்டு வருகிறேன்? தங்களுக்கொன்றும் எனக்கு ஒரு ஆத்மலிங்கமும் கொண்டுவந்திருக்கிறேன். இனி என்ன செய்வேன்" என்றார். ராமபிரான் இன்னும் ஹநுமந்தரின் கர்வம் அடங்கவில்லை என்பதை யறிந்து, அவரைப் பார்த்து "நீ சத்தியவந்தன்தான். நான் இந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துவிட்டேன். நீ உன் பலத்தைக்கொண்டு இங்குப் பிரதிஷ்டை செய்திருக்கும் லிங்கத்தைப் பிடுங்கிவிடு; நீ காசியிலிருந்து கொண்டுவந்திருக்கும் விசுவநாத லிங்கத்தை அதில் ஸ்தாபித்து விடுகிறேன்" என்றார். மாருதி நல்லதென்று சொல்லி, அந்த மணல் லிங்கத்தைத் தமது வாலாற் சுற்றி வால் நுனியைத் தமது சிரசில் வைத்துப் பிடித்துக்கொண்டு பன்முறை வலித்து இழுத்தார். அப்பொழுது இழுத்த வேகத்தால், வாலறுந்து கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தார். லிங்கம் சிறிதும் அசையவில்லை. வானரர்கள் அதைக்கண்டு நகைத்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஹநுமார் மூர்ச்சை தெளிந்து எழுந்து கர்வத்தைவிட்டு ராகவரைப் பணிந்து "ஏ கிருபாநிதியே!

நான் செய்த குற்றத்தைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும்" எனப் பன்முறை பிரார்த்தித்தார். ராமர் "ஏ மாருதி! யான் ஸ்தாபித்த லிங்கத்துக்குச் சற்று வடக்கே நீ கொண்டுவந்திருக்கும் விசுவநாத லிங்கத்தை இப்பொழுது ஸ்தாபி" என்றார். அவ்விதமாகவே ராமர் குறித்த இடத்தில் வாயுநந்தனர் தாம் கொண்டுவந்த விசுவநாத லிங்கத்தை ஸ்தாபித்தார். ராமர், "ஏ மாருதி! இங்குஉன்னால் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்ட விசுவநாதலிங்கத்துக்குப் பூஜைசெய்யாமல் யான்ஸ்தாபித்த ராமேசுவரலிங்கத்தை முதலிற் பூஜை செய்கிறவர்களுக்குப் பலன் கிடைக்காதென்று வரங்கொடுத்தார்; பிறகு "ஏ மாருதி! இங்கு எனக்காக நீ கொண்டுவந்த விச்வநாதலிங்கம் இந்த ராமநாதருடைய ஆலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்படாமலும் பூஜிக்கப்படாமலும் பூமியிலேயே யிருக்கட்டும். பின் ஒரு காலத்தில் அதையும் நான் பிரதிஷ்டை செய்யப்போகிறேன்" என்றார். ஏ கௌரி! அஃது இப்பொழுதும் விசுவேசுவரருடைய சமீபத்தில் பிரதிஷ்டை பண்ணப்படாமலே யிருக்கிறது. ஒருவரும் பூஜிப்பதுமில்லை. ராமர் மறுபடியும் ஹநுமாரைப் பார்த்து "நீ இந்த ஸ்தலத்தில், உனக்குக் கர்வத்தால் நேரிட்டதை நினைந்துக்கொண்டு அறுந்த வாலோடும் பூமியிற் புதைந்த காலோடும் ஒருரு வெடுத்திரு" என்று சொன்னார். மாருதி உடனே அந்த ஸ்தலத்தில் தம்முடைய ஒரு அம்சத்தினால், அவ்விதமே உருக்கொண்டார். அவ்வுருவினின்றும் இந்த ராமேசுவர ஸ்தலத்திலிருப்பது பிரத்தியக்ஷம். மாருதி மூர்ச்சித்து விழுந்த இடம் பாபவிமோசன கரமான ஒரு புண்ணிய தீர்த்தமாயிற்று. அதற்கு ஹநுமத் தீர்த்தமென்றும் பேருண்டாயிற்று. அப்பொழுதே ஸ்ரீராமரும் ஒரு புண்ணிய தீர்த்தத்தைஉண்டாக்கி அதனைத் தமது பெயரால் பிரசித்தியடையும்படி செய்து, அக்கரையில் தமது மூர்த்தமும் ஸ்தாபித்தார். இக்காலத்தும் அம்மூர்த்தம் சேது மாதவரென்கிற பெயரோடு விளங்குகிறது. அவ்விதமே லட்சுமணரும் ஓர் உத்தமமான தீர்த்த முண்டாக்கித் தமது பெயரால் பிரசித்தியடையச் செய்தார். பிறகு மாருதி தமது வால் அறுபட்டுப்போனமைக்கு வருந்தி, ஸ்ரீராமரிடம் குறையிரக்க, அவர் அவருக்கு இரங்கித் தமது கையால் அவ்வாலைத் தொட்டார். தொட்டதும் வால் முன்போலாகி முன்னிருந்த பலத்திலும் அழகிலும் மேம்பட்டுவிளங்கிற்று.

ராமநாத லிங்கத்தை மாருதி வாலிற் சுற்றி யிழுக்கும்போது, அவ்விலிங்கத்தின் தலை சற்றுச் சிறிதாயிற்று. அஃது இன்றைக்கும் அவ்விதமே தெரிகிறது. அன்றுதொட்டு மாருதி ராமர் விஷயத்தில் கர்வங்கொள்வதை ஒழித்தார்.

ஏ பர்வதராஜபுத்திரியே! ராமர் பூஜித்த அந்த ராமநாதலிங்கத்தில் நான் ஆவிர்ப்பவித்து அவர்க்குச்சொன்ன விஷயங்களைத் தெரிவிக்கிறேன் கேள்.—

"ஏ ராகவேந்திர! முன்னொரு சமயத்தில் நான் இப்பூவுலகில் பிராமணவேடம் பூண்டு அழுக்கு வஸ்திரமுடுத்து முனிவர்களாசிரமந்தோறும் சென்று பிச்சையெடுப்பதற்காகத் திரிந்தேன். அப்படித் திரியும்போது எனது சௌந்தரியத்தைப் பார்த்து மயங்கிய முனிவர் பத்னிகள் ஆயிரக்கணக்காக என்னைப் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் தங்கள் கணவர்களால் தடுக்கப்பட்டும் நிற்கவில்லை. அப்பொழுது முனிவர்கள் மனங்கலங்கிக் கோபங்கொண்டு என் உண்மையறியாமல் என்னைப் பார்த்து "ஏ பிராமணஅதமனே! நீ ஆசிரமம் வந்து எங்கள் பத்னியை மோகிக்கச் செய்ததால் அதற்குச் சாதகமான உன் அவயவம் எங்களுடைய ஸத்தியவாக்கால் பூமியில் விழக்கடவதெனச் சாபங்கொடுத்தார்கள். பிராமணனுக்க கபடரூபங்கொண்ட எனக்கு முனிவர்கள் சாபம் பலிதமாயிற்று. உடனே நான் மறைந்தேன். நான் மறையவே ரிஷிபத்னிகள் அவரவர் வீட்டுக்கு மனவருத்தத்துடன் சென்றார்கள். பின் அவயவம் பூமியில் வெகுதூரம் பரவி ஆகாசமளவும் அளாவியது. அதைப்பார்த்த பிர்ம்மதேவர் பயந்து உடனே கைலாசமலைக்கு வந்து என்னைப் பார்த்து வணங்கி அப்பிரமேயா! இதனால் அகாலப் பிரளயமுண்டாகும், என முறையிட்டார். நான் பிரமாவுக்கு நடந்த விருத்தாந்தங்களை விவரித்து அவ்வுருவத்தைச் சேதிப்பதற்காக ஒரு திரிசூலங் கொடுத்தேன். அதற்குப் பிர்மதேவர் 'யான் தங்கள் அவயவத்தைச் சேதிக்கத் துணியேன்; தாங்களே அக்காரியஞ் செய்யுங்கள்" என்றார். ராகவ! பின் யானே அவ்வவயவத்தைப் பன்னிரண்டு பாகமாகப் பிரித்தேன். அந்தப் பிரிவுகள் பன்னிரண்டும் பன்னிரண்டு ஜோதிலிங்கங்கள் ஆயின. அவைகளிற்பதினொருபிரிவுகள்ஓங்காரேசுவரர்

சோமநாதேசுவரர் திரியம்பகேசுவரர் மல்லிகார்ச்சுனேசுவரர் நாகேசுவரர் வைத்தியநாதேசுவரர் காசி விசுவேசுவரர் கேதாரேசுவரர் மாகாளேசுவரர் பீமேசுவரர் குஸ்ருணேசுவரர் என்பனவாதிப் பெயர்களை யடைந்தன. பன்னிரண்டாவது கந்தமாதனேசுவரர் என்னும் பெயரை யடைந்து அது மேரு மலையின் ஈசானிய திக்கிற் சென்றிருந்தமையால், வெகுகாலம் மனிதர் யாவர்க்கும் தென்படாதிருந்தது. இப்படியானதைக்கண்டதும் முனிவர்கள் என்னைப் பரமேசுவரனென வறிந்து "ஏ ஜகதீசா! நினது தத்வத்தை யுணராமல், சாபங்கொடுத்த எங்களை மன்னிக்கவேண்டும்; அவயவம் முன் போலவே ஆகட்டும்" என்று சாபவிமோசனமுஞ் செய்தார்கள். மகாமேருவுக்கு வடபாரிசத்தில் ஒரு சிகரமாக விருந்த அக்கந்தமானத்தைச் சிலநாட் சென்றபின் கிளம்பின பிரளய மாருதமொன்று அங்கிருந்து எடுத்து வந்து இவ்விடத்தில் (இந்த ராமேசுவரத்தில்) போட்டுவிட்டது. இந்த தக்ஷிண ஸமுத்திர ஸந்நிதியிலிருக்கும் இதுதான் கந்தமாதனமெனப் பெயர்பெற்ற பன்னிரண்டாவது ஜோதிலிங்கம். அஃதிருக்குமிடம் நீர் பிரதிஷ்டைசெய்த இந்த ராமநாதலிங்கத்துக்கு ஈசானிய பாகத்தில் இருக்கின்றது. அதை இது வரையில் ஒருவரும் அறியார்கள். அஃது உங்கள் கண்களுக்குத்தென்பட்டது. இப்பொழுது பிரதிஷ்டை செய்த இந்த ராமநாதருடைய மகிமையாலேயே ஏ ரகு புங்கவ! இந்தக் கந்தமாதன லிங்கம் ஜோதிலிங்கமெனப் பிரசித்தி பெற்றிருப்பதால், இதிற் பிரகாசிக்கும் எனது ஜோதியானது எனது வரத்தால் இன்றைக்கே இந்தசைகதமான சேதுலிங்கத்தில் வந்து சேரப்போகிறது. ஆதலால் ராமநாதலிங்கமானது பன்னிரண்டாவது லிங்கமேயாம். இனிஜனங்கள் யாவரும் இதை எனது பன்னிரண்டாவது லிங்கமாகக் கொண்டு பூஜை உற்சவம் முதலியவைகளை நடத்திவருவார்களாக. நானும் உமது வார்த்தைக்கும் அகஸ்தியருடைய வேண்டுகோளுக்கும் இணங்கிக் காசியைவிட்டு இங்கேயே வந்துவிட்டேன். இனிமேல் நான் வசிப்பது இவ்விலிங்கத்திலே தான். ஆகையால் இச்சேதுபந்தத்தில் ராமநாதலிங்கத்தை வணங்கினவன் எனது அநுக்கிரகமடைந்து பிர்ம்மஹத்தியாதி பாபவிமோசனம் பெறுவான். ஏ ராகவ! மணிகர்ணிகாகட்டத்திலிருந்து கங்காதீர்த்தத்தைக்கொண்டு

வந்து இந்த லிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்கிறவனுக்கு நீர் வரங் கொடும்" என்றேன். இதைக் கேட்டதும் ராமர் களிப்படைந்தார். ஒருவன் சேதுவில் ஸ்நானஞ்செய்து ராமேசுவரத்தைத்தரிசித்து, அவ்விடத்திற் சங்கற்பஞ் செய்துகொண்டு நியமத்துடன் சேதுவி லிருந்து மணலெடுத்துப் பெட்டிகளில்நிரப்பிக்கொண்டு வாரணாசி சென்று பிரயாகை திரிவேணியில் அம்மணலைப் போட்டுவிட்டுப் பெட்டியையும் எறிந்துவிட்டுக் கங்காதீர்த்தத்தை எடுத்துக்கொண்டு ராமேசுவரம்வந்து ராமநாதருக்கு அபிஷேகம்செய்து சங்கற்பத்தை முடித்தானாயின் பிரமலோகஞ் சேர்வான். சந்தற்பமில்லாமல், காசியிலிருக்கும் கங்கை ராமநாதருடைய அபிஷேகத்துக்கு வராதென்பது நிச்சயம். அப்படிவருமாயின், அதுபூர்வஜன்ம சங்கற்பமென்று என்னுடைய சொல்லால் நம்பவுமெனப் பலவாறான வரங்களைக் கொடுக்குங் காலையில், அகஸ்திய முனிவர் அவ்விடம் வந்து ராமநாதேசுவரரை வணங்கி ராமரையும்வணங்கினார். அவரை ராமரும் வணங்கினார். அப்பொழுது முனிவர் ராமரைப் பார்த்து, "ஏ ராகவ! உமது அநுக்கிரஹத்தால் இடையில் நெடுநாளாயில்லாயிருந்த விசுவேசுவரருடைய தரிசனம் இன்றுகிடைத்தது. இன்று நான் அடைந்த சந்தோஷத்திற்கு அடையாளமாக இங்கு ஒரு லிங்கம் ஸ்தாபிக்கிறேன்" என்றுகூறி, ஒருலிங்க ஸ்தாபனஞ் செய்து, அகஸ்தீசுவரர் எனப்பெயரிட்டார். அஃது ராமேசுவர லிங்கத்துக்கு ஆக்நேய திக்கில் அமைந்தது. அகஸ்தியர் தாம்ஸ்தாபித்த லிங்கத்தைப் பூஜித்துப் பிறகு விசுவநாதரையும் வணங்கித் துதித்து ராமரையும் ராமேசுவர லிங்கத்தையும் வணங்கி விட்டுக் கடைசியாகக் கந்தமாதனமென்ற புராண லிங்கத்தையும் வணங்கி மகிழ்ச்சியுற்றுத் தமதாசிரமம் சென்றார். ஆகையால் ஏ தேவி! சேது க்ஷேத்திரத்தில் ராமேசுவர லிங்கமிருக்கும் ஆலயத்தில் ஆக்நேய திக்கில் அகஸ்தீசுவரலிங்கமும் ஈசானியத்தில் கந்தமாதனலிங்கமும் இருப்பது இப்பொழுதுபிரத்தியக்ஷம். இதை ஜனங்கள் ஊகித்தறியவேண்டும். அதுமுதல் சொர்க்கம், பூமி, பாதாளம் இம்மூன்றுலகங்களிலும் ராமேசுவரர் பிரசித்தியடைந்தார்.

பின்பு நளன் ராமர் உத்தரவுபெற்று சேதுபந்தஞ் செய்யத் தொடங்கி அதனால் சிறிது கர்வங்கொண்டான். இதை ராகவர்

அறிந்தார். நளன் மலைகளைப்பிடுங்கி சமுத்திரத்திற் போடப் போட அலைகள் அவைகளை அடித்துக் கொண்டுபோகக் கண்டு, மனம்வருந்திக் கர்வத்தைவிட்டு ராமரிடம் தெரிவித்தான். அப்பொழுது ராமர் நளனைப்பார்த்து, "ஏ நளனே! மலைகள் ஒன்றோடொன்று சேரவேண்டுமென்ற விருப்பத்துடன், அம்மலைகள் சேருமிடங்களில் ஒவ்வொரு மலையிலும் ராம என்ற என்னுடைய நாமத்தைஎழுது; அப்பொழுது அவைகள் திடசந்திகளாய்விடும்" என்று சொல்லியனுப்பினர். நளன் அப்படியே செய்கிறேனென்று கூறிவிட்டு மலைகளைக் கொணர்ந்து சமுத்திரத்திற் போட்டு ராமபிரான் கூறியபடி ராம மந்திரமெழுதி இணக்கி (12) யோசனை தூரம் அகலம் வைத்துச் சேதுபந்தஞ் செய்துவந்தான். முதல் தினத்தில் (14) யோசனை தூரங் கட்டிமுடிந்தது.

இரண்டாவது தினத்தில் இருபதுயோசனை தூரமும் மூன்றாவது தினத்தில் இருபத்தொரு யோசனை தூரமும் நான்காவது தினத்தில் இருபத்திரண்டு யோசனை தூரமும் ஐந்தாவது தினத்தில் இருபத்துமூன்று யோசனை தூரமுமாகக் கட்டி ஆக ஐந்து நாளைக்குள் நூறுயோசனைதூரமும் கட்டிமுடித்தான். ஏ ஈசுவரி! சேதுபந்தத்தில் நளன் சமுத்திரத்தில் கொண்டுவந்து போடும் மலைகள் மிதப்பதும் அவைகளின் மேற்போடப்படும் மலைகள் அவைகளை அமிழ்த்துவதும், தாண்டற்கரிய சமுத்திரத்தில் இவ்விதம் நூறு யோசனை வழிதூரம் சேதுபந்தஞ் செய்துமுடித்ததும், அதன்வழியே வானர சேனைகள் தாண்டுவதுமாகிய இவைகள் மலைகளின் சக்தியல்ல; சமுத்திரத்தின் சக்தியல்ல; வானரங்ளின் சக்தியல்ல; மகாநுபாவனாகிய ஸ்ரீ ராமச் சந்திரனுடைய பிரதாபத்தின் மகிமையே அவ்வளவுக்குங் காரணமாம்.

அப்படிக் கட்டி முடிந்த சேது வழியாக ராமர் ஹநுமந்தர் மீதும் லட்சுமணர் அங்கதன்மீதும் ஏறிக்கொண்டு சேனை சமுத்திரத்தோடு வாயுவேகமாகச்சென்று இலங்கைக் கருகே போய்ச் சேர்ந்தார்கள். வானரவீரர்களனைவரும் அங்கிருக்கும் சுவேல மலைக்குச் சென்று அதன்மீதேறி லங்கையைப் பார்த்தார்கள். பிறகு ராமரும் லங்கையைப் பார்க்கவிரும்பி சைன்னியங்களோடு

அம்மலை மீதேறி லங்கையைப் பார்த்தார். லங்கை வெகு விஸ்தார மாகவும் பலவிதமான கொடிகள் பலவிதக்கோட்டைகள் சொர்ண மயமான தோரணங்கள் அகழிகள் சதக்னிமுதலிய ஆயுதங்கள் நிறைந்த ஆயுதசாலைகள் முதலியவைகள் நிறைந்து விளங்கு வதைக் கண்டார். அங்கு ஒரு விஸ்தாரமான மேன்மாடியின் மேலிருந்துகொண்டு வானரசைனியங்களைப் பார்த்துக்கொண் டிருக்கும் ராவணனை ரகுபுங்கவர் பார்த்தார். இப்பொழுது ராமர் சுகனைக் கட்டவிழ்த்துவிடும்படி கட்டளையிட்டார்.

பிறகு சுகன் உடனே பிழைத்தேனென்று சொல்லிக் கொண்டே தசானனிடம் சென்று அவனை வணங்கி வானரசைன் னியத்தைப் பார்க்கச் சொல்லி "ஏ ராவணேசுவர! விபீஷணனை இந்த லங்காதிபதியாகச் செய்துவிட்டு ஸீதையை ராமபிரானிடம் சேர்ப்பித்து அவரைச் சரணமாக அடையும். அன்றேல் அவர் உம்மைவிடமாட்டார், தப்புவதரிது" என்றான். அதைக் கேட்ட ராவணன் மிகவும் கோபங்கொண்டு அவனைப் பலவாறாகத் திட்டித் தூதர்களைக் கொண்டு ஊரைவிட்டுத் துரத்தி வானரசேனையை மறுபடியும் பார்த்துக்கொண்டிருந்தான்.

சுகன் என்பவன் பூர்வ ஜன்மத்தில் பிர்மஞானமுள்ள ஒரு பிராமணனாகவிருந்தான். அவன் பலயாகங்களைச் செய்து வான வர்களைத் திருப்திசெய்துவந்தான். அது நிமித்தம் அவனுக்கு அரக்கர்களுடைய விரோதமுண்டாயிற்று.

இச்சமயத்தில் அகஸ்தியர் அவனிடம் சென்று மாம்சான்ன போஜனம் வேண்டுமென யாசித்தார். இதையறிந்த வஜ்ரதம்ஷ்ட ரன் என்னும் பேர்கொண்ட ஓர் அரக்கன் சுகனுடைய பார்வை போல் ரூபங்கொண்டு அகஸ்திய முனிவருக்கு நரமாம்ச போஜன மிட அகஸ்தியர் கோபங்கொண்டு "நான் மாம்சங்கேட்க நீ நரமாம் சங் கொடுத்தமையால் நீ அரக்கனாகக்கடவா"யென்று சுகனுக்குச் சாபமிட்டுப் பின் இப்படி நடந்ததற்குக் காரணம் யாதென்பதை ஞானதிருஷ்டியாற் கவனித்து, இது சுகன் சுயபுத்தியைக்கொ ண்டு செய்ததல்ல, ஒரு ராட்சஸன் செய்த மோசமெனவறிந்து, சுகன் பிரார்த்தித்ததற்கிரங்கி, ஸ்ரீராமரைத் தரிசித்து ராவண

னுக்கு நற்புத்தி போதித்தவன்றே நீ சாப நிவர்த்தி யடைந்து உன் சுயரூபம் பெறுவாயென அநுக்கிரகித்துத் தமதாசிரமம் சென்றனர். பிறகு சுகன் முன்போல் பிராமணனாப் விட்டான்.

ஸ்ரீ ராமபிரான் சுவேலமலையின்மீது சுகமாக இருந்து கொண்டு வானரங்களோடு கூடி ஆலோசனை செய்து தாம் யுத்தத்திற்குச் சித்தமாயிருப்பதைப் பகைவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அங்கதனை இலங்கைக்குத் தூதனுப்பினர். வாலி தனயனாகிய அங்கதன் ராமபிரானது உத்தரவுப்படியே இலங்கைக்குச் சென்று ராவணன் சபையில் தன் வாலையே ஒரு ஆசனமாக அமைத்துக்கொண்டு அதில் உட்கார்ந்து, மனத்திற் சிறிதும் அச்சங்கொள்ளாமல் தைரியமாயிருந்து பல நீதிகளைக் கூறி, "ஏ ராவண! நான் ஒரு நன்மை உனக்குக் கூறுகிறேன். அதைக் கேள். சீக்கிரத்தில் வெகுமானங்களுடன் ஸீதையை ராமபிரானிடத்தில் ஒப்புவித்து விடு. ஸ்ரீராமபிரானை நாராயணரென்று அறி; அவர் மீது கொண்டிருக்கும் துவேஷத்தை ஒழி; ஞானிகள், தமது பக்தியினால் ஸம்சாரமாகிற ஸாகரத்தைக் கடக்கும் தெப்பமாக அடையும் பாதபத்மங்களையுடைய ஸ்ரீராமரை மனிதரென்று நினைப்பது தகுமோ? உன்குலம் சுகமடைய வேண்டுமாயின் நான் கூறுவதற்குச் செவி கொடுத்து அங்ஙனம் நட" என்று அங்கதன் பலவாறாகப் போதித்தான். அங்கதனுடைய இந்நீதி வாக்கியங்களுக்கு ராவணன் சிறிதும் செவி கொடுக்காமலிருந்ததுமன்றி, மகா கோபங்கொண்டு அங்கதனை நோக்கி, "ஏ குரங்கே! லோகராவணனாகிய என்னைநீ பயப்படுத்துகிறாயா? தேவர்கள் யாவரையும் நான் ஜயித்தவன். கைலாய மலையைக் கரத்திலெடுத் தாட்டினவன். இப்படிப்பட்ட பராக்ரம சாலியாகிய என்முன் இப்பொழுது வீணாக ஏன்பிதற்றுகிறாய்; இதோபார் ஒரு நொடிக்குள் ராம லட்சுமணர்களைக்கொன்றுவிட்டுப் பிறகு சுக்ரீவன் மாருதி விபீஷணன் இவர்களையும் உன்னையும் கொன்று மற்ற வானரங்களையும் பக்ஷித்து விடப்போகிறேன்" என்றான். இப்படிக் கூறியதும் அங்கதன், "மகாபலியால் கட்டுண்டு தொந்தரவடைந்தவனே! உன் பராக்ரமத்தை யானறிவேன். பரமசிவன் தமது பாதப்பெருவிரலால் கை

லாய பர்வதத்தை அழுத்தியபோது அதனடியிலகப்பட்டுத் தொந்தரவடைந்ததையும் நானறிவேன். கார்த்த வீரியார்ச்சுனனுடைய புத்திரனுக்கு விளையாட்டு மிருகமாக இருந்ததையும் என்மனமறியும். சுவேதத்தீவிலிருக்கும் மாதர்கள் தங்கள்கரங்களால் உன்முகத்தில் அடித்ததையும் யானறிவேன். மகா விஷ்ணுவினுடைய புத்திரன் பிர்மதேவர், அவருடைய புத்திரன் மரீசி, அவருடைய புத்திரர் கசியபர், அவருடைய பிள்ளை தேவேந்திரன், அவருடைய புத்திரன் வாலி; இந்த வாலியுடன் நீ ஒருசமயம் யுத்தம் செய்து அவரால் சிறைப்பட்டிருந்தபொழுது ஒரு நாள் உன்னை என் தந்தையாகிய அவர் நான் படுத்திருக்கும் மஞ்சத்திற்கு நேரே கொண்டுவந்து கட்டித்தொங்கவிட்டு விளையாட்டுக் காட்டினாரன்றோ? அந்தச் சமயத்தில் நான் ஜலமோசனம் செய்து, உன் முகத்தைக் கழுவியதை யான் அறியேனோ?" என்று கூறினான். பாணங்கள்போன்ற இப்படிப்பட்ட வார்த்தைகளால் பயமுறுத்திய அங்கதனை முகத்திலடித்துத் துரத்தும்படி ராவணன் தன்னுடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டான். உடனே ஆயிரக்கணக்கான ராட்சஸ தூதர்கள் நல்லதென்று எழுந்திருந்து சஸ்திரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அங்கதனை எதிர்த்துத் துரத்தினார்கள். அங்கதன் அவர்கள் யாவரையும் தன்னுடைய வாலால் அடித்து ஒரு நிமிஷநேரத்தில் தரையோடு தரையாய்த் தேய்த்துவிட்டான். பின் ராவணனிடத்திற்சென்று அவனுடைய கைகால்களைத் தன் வாலால் கட்டி, பத்துமுகங்களிலும் தன் கைகளால் அறைந்துவிட்டு, அங்கிருந்து அதிவேகமாகக் கிளம்பி, ஒரு வீட்டின் மேல்மாடியைப் பிடுங்கித் தலையில் வைத்துக்கொண்டு சுவேலமலையிலிருக்கும் ராமபிரானிடம் ஆகாசமார்க்கமாக வந்து சேர்ந்தான்.

இப்படி வரும் அங்கதனை ராமபிரான் பார்த்து, "அடே சிறுவனே! இந்தக்காரியம் நீ யேன் செய்தாய்? இதைக்கொண்டு வரலாமா; இந்த இலங்காபுரியை எனது மித்திரன் விபீஷணனுக்கல்லவா யான் கொடுத்திருக்கிறேன்; ஆகையால் நமது மித்திரனுடையவஸ்துவை நாம் எடுத்துவரக்கூடுமோ?" என்று கேட்டார்.

உடனே அங்கதன் பயந்து, அந்த வீட்டின் மாடி தன் சிரசிலிருக்கும் வண்ணத்திலேயே ராமரைப்பார்த்து "சுவாமி! இதை யானறியேன். வருகிற வேகத்தில் இதைப்பிடுங்கித் தங்களிடத்திற்குக் கொண்டுவந்து விட்டேன். மறுபடியும் இதைக்கொண்டு போய் அவ்விடத்திலேயே வைத்துவிடுகிறேன்" என்று சொல்ல, ராமர் அப்படியே செய்யென்று கட்டளையிட்டார். உடனே அங்கதன் அதிவேகமாகச் சென்று அந்தமாடியை முன்இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுத் திரும்பி சுவேல பர்வதத்துக்கு வந்து தனக்கும் ராவணனுக்கும் நடந்த சங்கதிகளையெல்லாம் ராமரிடத்தில் கூறினான். ஸ்ரீ ராமர் அங்கதனைப்பார்த்துச் சிரித்து ஆலிங்கனம் செய்துகொண்டார். ராமபிரான் அப்பொழுது சுவேலமலையிலிருந்து கொண்டே, விளையாட்டாக ஒரு தநுசை எடுத்து, அதில் சிறந்த பாணத்தைப் பூட்டிப் பிரயோகித்து இலங்கையில் ஓர் அரண்மனையின் உச்சியில் பல பேர்களுடன் இருந்து பார்க்கும் ராவணனுடைய கிரீடங்கள் பத்தையும் ஆயிரக்கணக்கான அவனுடைய குடைகளையும் வானரங்கள் கண்டு களிக்க, அரை நிமிஷத்தில் கீழே தள்ளிவிட்டார். இப்போது ராமர் ஸந்நிதானத்திலிருந்த மகானும், வானரத்தலைவனுமான சுக்ரீவன், ஸீதையைக்கொடுக்க ராவணனுக்கு மனமில்லையென்பதை அங்கதன் மூலமாக அறிந்ததும் மகாகோபங்கொண்டு உடனே அங்கிருந்து கிளம்பி, ராவணனிருக்கும் மாடியிற் குதித்து, யுத்தத்துக்குத் துணிந்திருக்கும் அவனருகிற் சென்று, அவனைத் தன் கைமுஷ்டியால் குத்தி, சிங்காசத்தினின்று தரையில் தள்ளினான். உடனே இருவரும் மல் யுத்தத்துக்கு ஆரம்பித்து புஜம் தொடை மார்பு இவைகளில் ஒருவர்க்கொருவர் குத்திக் கொண்டார்கள். அப்பொழுது ராவணன் சுக்ரீவனுடைய இடியால் மிகத் தொந்தரவடைந்து யுத்தத்தைவிட்டுப் பின்னிட்டு ஓடித் தன்வீட்டையடைந்தான். ராவணன் தப்பி ஓடியபோது சுக்ரீவன் அவனுடைய கிரீடத்தைப் பிடுங்கிக்கொண்டு ராமபிரான்சமீபம்வந்து வணங்கி நடந்த சங்கதியைத் தெரிவித்தான். ராகவர் அவனைத் தழுவிக்கொண்டு "ஏ சுக்ரீவ! என்னிடம் தெரி

விக்காமல் நீ இவ்விதம் ராவணனிடம் செல்வது தகுமா? உனக்குப் பிராணஹானி நேரிட்டிருக்குமாகில் யான் ஸீதையால் பெறத்தக்க சௌக்கியம் யாது? ஆகையால் இனி அவ்விதமான காரியமொன்றும் செய்யாதே" என்றார்.

பிறகு வானரர்கள் பேரி, மிருதங்கம் முதலிய வாத்தியங்களை முழக்கியவாறே லங்கைக்குச் சென்று சூழ்ந்துகொண்டு நான்கு கோட்டை வாசல்களிலும் நிறைந்திருந்தார்கள். ராமபிரான் இப்பொழுது ராவணனுடைய கிரீடத்தைச் சேனாதிபதியாகிய அங்கதனுக்கு மனமகிழ்ச்சியுடன் கொடுத்து, அவனைத் தெற்கு வாசலிலும், ஹநுமானை மேற்கு வாசலிலும், நளனைக் கிழக்கு வாசலிலும், ஸுஷேணனை வடக்கு வாசலிலும் அவரவர் சைன்னியங்களுடனிருந்து இலங்கையை முற்றுகை போடும்படி ஆஞ்ஞாபித்தார். உடனே அவர்கள் ராகவரை வணங்கி அவரவர் சேனாசமுத்திரத்துடன் இலங்கைக்குச் சென்று முற்றுகை போட்டார்கள்.

சுக்ரீவனால் தொந்தரவடைந்து இரகசியமாக வீட்டிற்குள் உட்கார்ந்திருக்கும் ராவணன், தன்னுடைய பராக்ரமங்களை நினைத்து நினைத்து மனம் ஏங்கினான். அவன் அப்படியிருக்க, அவனுடையஉறவினர்களும் தாயைப்பெற்றபாட்டன்மார்களானமாலி, சுமாலி, மாலியவான் இம்மூவரும் சேர்ந்து தனியே ஆலோசனை செய்து ராவணனுக்கு நற்புத்தி போதிக்கவேண்டுமெனநினைத்து அவர்களில் புத்திசாலியும் ராவணனிடத்தில் அன்புள்ளவனுமான மாலியவான் என்பவன் ராவணனிடம் சென்று, அமரிக்கையுடன் அவனைப்பார்த்து 'ஏ ராவணா! இப்பொழுது நான் சொல்வதைக்கேள். பிறகு உன் இஷ்டப்படி நட. ராமருடைய மனைவியாகிய ஜானகி என்பவள் இலங்காபட்டணத்திற்குள் கால் வைத்தது முதல் கொடூரமும் நாசகரமுமான அபசகுனங்களை காணப்படுகின்றன. மேகங்கள் பயங்காரமாகச்சப்திக்கின்றன. இடிகளும் விழுகின்றன. இரத்த மழை அதியுஷ்ணமாகப் பொழிகின்றது. கோவில்களிலிருக்கும் தேவலிங்கங்களெல்லாம் வேர்த்து வாருந்திநடுங்குகின்றன. நமது காளிகாதேவி வெளுத்த தந்தங்களு

டன் நம் முன் நகைக்கிறாள். பசுக்களுக்குக் கழுதைகள் பிறக்கின்றன. எலிகள் பூனைகளுடனும், கீரிகளுடனும் சண்டையிடுகின்றன. பாம்புகள் கருடனுடன் அமர்புரிகின்றன. எமன் உக்ரமாயும் வக்ரமாயும் முண்டனாயும் கிருஷ்ண பிங்கள நிறமுடையவனாயும், எல்லாருடைய வீடுகளையும் அவ்வப்போது நோக்குகிறான். இவ்விதமான இன்னும் பல அபசகுனங்கள் நடந்து வருகின்றன. ஆகையால் நான் கூறுவதற்குச் செவிகொடு. ஏ தசானன! நமதுகுலத்தை ரக்ஷிப்பதின் நிமித்தம் ஒரு சாந்திபுரியவேண்டும். ஆகையால் ஸீதையை வெகுமதியுடன் ராமரிடம் சீக்கிரம் கொடுத்துவிடு' என்று கூறினான். இப்படித் தன்னுடைய பாட்டன் கூறியவைகளைக்கேட்ட ராவணன் அவனைப்பார்த்து, 'நீர் ராமருடைய ஏவலாளாகவந்து இவ்வளவு துணிகரமாய்ப் பேசுவதாகத் தெரிகிறது. நீர் கிழவரானதாலும் பந்துவானதாலும் உமது வார்த்தையைப் பொறுத்தேன். இப்பொழுது உமது வார்த்தைகள் எனதுசெவிகளைத் தீயைப்போல் பற்றி எரிக்கின்றன. நீர் உமது அலுவலை நோக்கிச்செல்லும்' என்றான். மால்யவான் உடனே தன் வீடு சென்றான்.

ராவணன் பின்பு சபைக்குவந்து ராக்ஷதர்களைப் பார்த்து கிழக்குவாசலில் தூம்ராக்ஷனையும் மேற்கு வாசலில் வஜ்ரதம்ஷ்ட்ரனையும் தெற்கு வாசலில் நராந்தகனையும் வடக்கு வாசலில் மஹோதரனையும் அவரவர்கள் சைன்னியங்களுடனும் ஆயுதங்களுடனுமிருந்து யுத்தம் புரியும்படி கட்டளையிட்டு, அவர்களுக்குச் சந்தோஷமுண்டாக வெகுமதி கொடுத்தனுப்பினான். அந்நால்வரும் ராவணனை வணங்கிவிட்டு அவ்விதமே தத்தமக் குரிய வாசலுக்குச் சென்றார்கள். பிறகு ராமராவணர்களுடைய சைன்னியங்கள் அவரவர்களுக்கு நேரான எதிரிகளுடன் யுத்தம் புரியலானார்கள்.

ராம ராவண சேனா சையோகமாகிய
10-வது சருக்கம் முற்றிற்று.

11-வது சருக்கம்.

பிறகு அந்தந்த வாசல்களில் இருக்கும் மகாகாத்திரமுடைய வரும் மகாபலமுடையவருமான ராக்ஷஸர்கள் யாவரும் மிகவும் கோபங்கொண்டு பிண்டி, பாலம், சூலம், கத்தி, பரசு, குந்தம் சதக்னி, சங்கரமம், சக்தி முதலிய ஆயுதங்களையும் பாணங்களையும் எடுத்துக்கொண்டு கிளம்பி வானரசைன்னியங்களை யடித்தார்கள். உடனே வானரவீரர்களும் வெகு கோபமடைந்து மரங்களாலும் மலைகளாலும் முஷ்டிகளாலும் கரதாடனங்களாலும் அரக்கர்களை யடித்தார்கள். அரக்கர்கள் மறுபடியும் ஆக்ரோஷமடைந்து சொர்ணமயமான இரதங்களின்மேலேறிப் பத்துத்திக்குகளிலும் எதிரொலி உண்டாகச் சப்தித்துக்கொண்டு அகோரமான யுத்தம் புரிந்தார்கள். இவ்விதம் வானரசேனைகளும் ராக்ஷஸசேனைகளும் யுத்தம் புரிந்துவர, நளன் தூம்ராக்ஷனையும், மாருதி வஜ்ரதம்ஷ்ட்ரனையும், அங்கதன் நராந்தகனையும் சுஷேணன் மகோதரனையும் எதிர்த்துக்கொன்று விட்டார்கள். இப்பொழுது ராவணன் சைன்னியங்களில் முக்கால் பாகம் ஒழிந்தது. அங்கதன் முதலிய நால்வரும் மகா வாத்தியங்களுடன் ராமரை வணங்கிவிட்டு ஜயபேரி முழக்கினார்கள்.

இதற்குப் பின் மேகநாதனாகிய இந்திரசித்து, தங்கள் சைன்னியங்களில் ஏராளமாக மடிந்ததை நோக்கி, உடனே சர்ப்பாஸ்திரத்தைப் பிரயோகித்து, வானரர்களுடன் ராம லட்சுமணர்களையும் மயக்கினான். இதைக்கண்ட ஸ்ரீ ராமபிரான் உடனே கருடனை நினைக்க, கருடன் அட்சணமே அவ்விடம் வந்து அந்த ஸர்ப்பாஸ்திர மயக்கத்திலிருந்து யாவரையும் தெளிவித்தான். இதனை யறிந்த சர்வாஸ்த்ரசமர்த்தனாகிய இந்திரஜித்து பிர்மதேவனது வரப்பிரஸாத மகிமையால், ஆகாசத்தில் மறைந்து நின்று பிர்மாஸ்திர ப்ரயோகஞ்செய்து எதிரிகளைக்கட்டிய பாணங்களை அவர்கள் மேல் மாரியாகப்பொழிந்தான். ஸ்ரீராமபிரான் அந்த பிர்மாஸ்திரத்துக்கு வணங்கித் தம்பி லட்சுமணனுடனும் வானரங்களுடனும் க்ஷணநேரம் அமைதியோடிருந்து, பிறகு தம் நிலைமையுற்றுத் தமது சைன்னியங்கள் யாவும் பிர்மபாசத்தால் மூர்ச்சையடைந்து கிடப்பதை நோக்கி, அருகிலிருந்த லட்சுமணரையழைத்து "ஏ ஸௌமித்திரரே! தநுசைக் கொண்டுவா; நிமிஷத்திற்குள்

அரக்கர்கள் யாவரையும் சாம்பலாக்கி விடுகிறேன்” என்றார். இவ் வார்த்தையைக் கேட்ட இந்திரஜித்து பயந்து உடனே லங்காபட்டணத்துக்குட் புகுந்து விட்டான். பிறகு ஹநுமார் விபீஷணன் இவ்விருவரும் தமக்கு எதிரில் வந்து வருந்தியழுவதைக் கண்ட ராமபிரான் இவர்கள் பிரம்மாவினுடைய வர மகிமையால் பிழைத்தார்களென்பதை யறிந்து அவர்களைப் பார்த்து, ஜாம்பவான் உயிரோடிருப்பானேயாகில், அவரிடம் சென்று, வானரங்கள் பிழைக்கும் உபாயத்தைக் கேளுங்களென்று அவர்களுக்குக்கூறி யனுப்பினார். விபீஷணனும் மாருதியும் அந்த அர்த்த ராத்திரி வேளையில் கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு யுத்தகளமெங்குந்தேடி ஜாம்பாவனைக் கண்டு பிடித்து, சங்கதி தெரிவித்தார்கள். ஜாம்பாவான் ராமபிரானது வாக்கியத்தைக் கேட்டு மகிழ்ச்சியுற்றுக் கண்களை மூடிக்கொண்டபடியே அவர்களைப் பார்த்து “நீங்கள் யார்;இந்த யுத்தத்தில் வாயுநந்தனனாகிய மாருதி உயிரோடிருப்பானாகில், வானரங்கள் யாவும் பிழைப்பதில் ஐயமில்லை” என்றார். இதைக் கேட்டதும் விபீஷணன் அங்கதன் முதலியவானரங்களிருக்க, அவர்களை விட்டு, வாயுபுத்திரனாகிய ஹநுமாரைமட்டும் அப்படிச்சிறப்பித்துப்பேசியகாரணம் யாதென, ரிஷிசிரேஷ்டராகிய ஜாம்பவான் “ஏ விபீஷண! வாயுபுத்திரனும் பிரதாபவானுமான ஹநுமான் ருத்திராம்சத்தோடுஜனித்தவன். அவனைச்சாமான்யக் குரங்குகளில் ஒருவனாகக் கருதக்கூடாது. ஆகையால்,நீ அவனைத் தேடிப்பார்” என்றார். அப்பொழுது அருகிலிருந்த ஹநுமான் ஜாம்பாவனை வணங்கி, “தாங்கள் கேட்கும் ஹநுமான்யான் இதோ வருகிறேன்” என்றார். ஜாம்பவான் உடனே களிப்படைந்து “ஏ ஆஞ்சநேய! நீ இவ்விடமிருந்து பாற்கடலுக்கு அதிவேகமாய்ச் சென்று அதன் மத்தியிலிருக்கும் துரோண பருவதத்தை இவ்விடம் கொண்டு வரவேண்டும்” எனக் கூறினார். இதைக் கேட்டவுடன் ஹநுமார் புறப்பட்டு, பாற்கடல் சென்றுபார்க்க, அம்மலைகந்தர்வர்களால் மறைக்கப்பட்டிருந்தமையால் இவர் கண்ணுக்குத் தென்படவில்லை. அப்பொழுது அங்கே காமதேனு எதிர்ப்பட்டு, ஹநுமாருடையகண்களைத்தன் வேர்வை ஜலத்தால் துடைக்க, அம்மலை ஹநுமார் கண்ணுக்குத் தென்பட்

டது. உடனே அம்மலையைப் பிடுங்கி ஒரு மலரை எடுத்து வருவதுபோல் வெகு சுளுவாக எடுத்துக்கொண்டு அதிகவேகமாய் லங்கைக்கு வந்து சேர்ந்தார். அமுதத்துக் கொப்பான அந்தப் பர்வதத்திலுள்ள ஓஷதிகளின் வாசனை பட்ட மாத்திரத்தில் செத்துக் கிடக்கும் அரக்கர்கள் உயிர்பிழைத் தெழுவார்களென்றெண்ணி, விபீஷணனும் தார்க்ஷியனும் ராமரிடந் தெரிவிக்க, ராமர் அவ்வரக்கச்சவங்களைக் கடலிலிழுத்துப் போடுங்களென்று உத்தரவிட, உடனே க்ஷணநேரத்தில் அவர்களிருவரும் அவ்விதமேசெய்தார்கள். அப்பொழுது வைத்திய சிரேஷ்டனாகிய சுஷேணன் அம்மலைகளிலிருக்கும் ஓஷதிகளைக்கொண்டு வானரர்கள் யாவரையும் பிழைக்கும்படி செய்தான். பிறகு வானரங்கள் யாவரும் எழுந்து குதூகலங் கொண்டார்கள். மாருதி அந்தத் துரோணபர்வதத்தைக் கொண்டுபோய் இருந்த இடத்தில் வைத்துவிட்டார்.

இச்சமையத்தில் ராமர் குபேரனிடமிருந்து பெற்ற திவ்ய தீர்த்தத்தைத் தம் கண்ணில் தடவிக்கொண்டு மற்றவர்களுக்கும் அவ்விதமே செய்வித்தார். இதனால் ராமரும் மற்றுமுள்ள வானரங்கள்யாவரும் மறைந்து யுத்தம் புரிபவர்களைக் கண்டு பிடிக்கும் பார்வையை யடைந்தார்கள். பிறகு ராவணன் தன் மந்திரிகளாகிய அதிநாதன், மகாநாதன், பிரஹஸ்தன், ததீமுகன், தேவசத்ரு, நிகும்பன், தேவாந்தகன், நராந்தகன், சாரணன் முதலியவர்களை யுத்தத்திற்கனுப்பினான். அவர் தங்கள் தங்கள் சைன்னியங்களுடன் யுத்தகளத்திற்குச் சென்று வானரர்களை யெதிர்த்து அமர்புரிய, அங்கதன் முதலிய வானரசிரேஷ்டர்கள் அவர்கள் யாவரையும் கொன்றுவிட்டு கர்ச்சித்தார்கள். இதனை யறிந்த ராவணன் கும்பகர்ணனுடைய புத்திரர்களாகிய கும்பன் நிகும்பன் இவ்விருவரையும் யுத்தத்திற்கு அனுப்ப, கும்பன், ஜாம்பவானை எதிர்த்து அவனால் கொல்லப்பட்டான். நிகும்பன் அங்கதனோடு அமர்புரிந்து அழிந்தான். பிறகு தசானனன் தன் புத்திரன் அதிகாய னென்பவனை யுத்தத்திற்கனுப்பினான். அதிகாயனை லட்சுமணர் எதிர்த்து அவனோடு அகோரயுத்தம் புரிந்து ஒரே பாணத்தில் அவன் தலை லங்கையில் ராவணன் முன்னிலையில் விழும்படி அடித்தார்.

பிறகு இராவணன் தானே யுத்தம் புரிவதாக நிச்சயித்துத் தன் பட்டணவாசிகள், மித்திரர், பந்துக்கள், சேனு சமுத்திரங்கள் யாவரும் சூழ, யுத்த அரங்கத்தை யடைந்து, அங்கே யிருந்த விபீஷணனைக்கண்டு கோபங்கொண்டு, அவன்மீது சக்தி ஆயுதத்தைப் பிரயோகம் பண்ணினுன். இதைக்கண்டதும் லட்சுமணர் விபீஷணனைத் தனக்குப் பின்னே மறைத்துக் கொண்டு அந்தச் சக்தி ஆயுதத்துக்கு இலக்காக நின்று எதிர்த்து அதைத் தமது மார்பிற் றுங்கித் தரையில் விழுந்தார். இப்படிக் கீழேவிழுந்த லட்சுமணரைப் பார்த்த ராவணன் அவரைத் தன்னுடைய நகரத்துக்குள் எடுத்தேக நினைத்து, அதிவேகமாக அவர் அருகில் ஓடி வந்து, அவரை அசைத்துப் பார்க்கையில், ஆதிசேஷாவதாரமாகிய அவருடைய ஒரு கையையும் அவனுல் அசைக்க முடியவில்லை. இப்பொழுது ராவணன் கருத்தை யறிந்த ஹநுமார், தமது முஷ்டியால் அவனை இடித்தார். ராவணன் அந்த முஷ்டி இடியைத் தாங்கச் சக்தியற்று, ரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழுந்தான். உடனே மாருதி லட்சுமணரைத் தூக்கிக்கொண்டு தமது சைன்னியங்களுக்குட் சென்று விட்டார். பிறகு ராவணன் எழுந்து கோபங்கொண்டு ரதமேறி மாருதியைப் பாணங்களால் அடித்தான். இதைப்பார்த்த ராமபிரான் சினமுற்று, ஒரு பாணப்பிரயோகஞ் செய்து, அவன் மார்பைத் துளைத்துப், பின் அவனுடைய அசுவம், ரதம், துவஜம், பதாகை, ஸாரதி, தநுசு, குடை இவைகளையும் பாணங்களால் சேதித்து ஒரு அர்த்தசந்த்ர பாணப் பிரயோகத்தால் சூரியப்பிரகாசம்போல் ஜொலிக்கும் அவனுடைய கிரீடத்தை வீழ்த்தினுர். இப்பொழுது ராவணன் வியாகுல மடைந்து நிற்க, ராமர், அவனைப்பார்த்து "ஏ ராவணு! இப்பொழுது நீ இலங்கைக்குச் சென்று சிரமபரிகாரஞ் செய்து கொள். நாளையதினம் என்னுடைய பலத்தைக்காண்" என்று கூறி யனுப்பினுர். இதன் பின் தசானனன் வெட்கத்தினுல் தலை குனிந்து கொண்டு லங்கைக்குட் பிரவேசித்தான். ராமர் லட்சுமணரையும் இன்னும் சில வானர வீரர்களையும் மூர்ச்சையினின்று தெளிவிக்கக் கருதி, மாருதியைப் பார்த்து, "ஏ மாருதி! துரோணமலையைக் கொண்டுவந்து இவர்களைப் பிழைப்பி" யென ஆஞ்

ஞாபித்தார். மாருதி நல்லதென்று கூறி உடனே வேகமாகப் புறப்பட்டுப் போனார். அதை அறிந்த ராவணன், காலநேமி என்ற தனது மித்திரனை அழைத்து ஹநுமந்தரைத் தடுக்கும்படி பிரார்த்தித்து அனுப்பினான். காலநேமி இமயகிரியினருகிற் சென்று அங்கு ஒரு தபோவனமியற்றித் தான் ஒரு முனிவேடம் பூண்டு பலமாணாக்கர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க வீற்றிருந்தான். மாருதி அங்கே சென்று, அவ்வாச்சிரமத்தைக் கண்டு தீர்த்தபானஞ் செய்யக்கருதி அதனுட் பிரவேசிக்க, அப்பொழுது அந்தக் கபடமுனி, தீர்த்தம் நிறைந்த ஒரு குடத்தை அவருக்குக் காண்பித்தான். அதைப்பார்த்து ஹநுமார் இந்தத் தீர்த்தத்தால் எனக்குத் திருப்தி யேற்படாதெனக் கூற, அதற்கு அம்முனி அருகிலிருக்கும் ஒரு தடாகத்தை அவருக்குக்காட்டி "அங்குச் சென்று நீர் உமது கண்களை மூடிக்கொண்டு உமது இஷ்டப்படி தீர்த்தம் அருந்திப் பிறகு என்னிடம் வந்து சுகமாக இங்கு வசியும்; எனது ஞானதிருஷ்டியால், நீர் உத்தேசித்துவந்த காரியத்தையானறிந்தேன். லட்சுமணர் சுகமாக எழுந்திருந்துவிட்டார். துரோண பர்வதத்தை நீர் கண்டுபிடிக்க என்னிடம் சிலமந்திரோபதேசம் பெற்றுக்கொள்ளும். அதைக் கந்தர்வர்கள் மறைத்திருக்கிறார்கள். வானரங்களைப் பிழைப்பிப்பதின் நிமித்தம் அம்மலையை லங்கைக்கு அதிசீக்கிரமாக எடுத்தேக விரும்புகிறீர். என்னிடத்தில் மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு எனக்குக் குருதட்சிணை கொடும்" என்று கூறினான். அதைக்கேட்டு மாருதி நல்லது அப்படியே செய்கிறேனென்று கூறித் தடாகத்துக்குச்சென்று, கண்களை மூடிக்கொண்டு தீர்த்தபானஞ்செய்ய, அக்குளத்திலிருக்கும் ஒரு பெண்முதலை அவரைப் பிடித்து இழுத்து விழுங்கிற்று; அப்படி விழுங்குகையில், ஹநுமான் தன் தேகத்தை அம்முதலை பிளவுபடும்படி பெருக்கச்செய்து கொண்டார். அது அநுமந்தரைக் கௌவியிருந்தபடியே மரித்து விட்டது. பிறகு அம்முதலையிலிருந்து திவ்யரூபத்தோடு ஓர் உருவம் உண்டாய், ஆகாயத்திற்குச் சென்று, மாருதியைப்பார்த்து "முன் ஜன்மத்தில் நான் மாலினி என்ற பெயரையுடைய ஒரு அப்ஸரஸ் ஸ்திரீயாயிருந்தேன்,

அப்பொழுது ஒரு நாள் ஒரு முனிவர் என்னுடன் சுகிக்க விருப்பங்கொண்டு என் அநுமதி கேட்டார்; அவ்வேளையில் ஸ்பரிசிக்கத் தகாதவளா யிருந்தமையால், நான் சம்மதிக்கவில்லை. அதற்கு அம்முனிவர் கோபங்கொண்டு என்னை "நீ முதலையாகக் கடவாய்" என்று சபித்துவிட்டார். அதன்பின் நான் அம்முனிவரைப்பார்த்து வணங்கி சாபவிமோசனமளிக்க வேண்டுமெனக் கேட்க, அவர் உம்மால், என் சாபம் நிவர்த்தியாகுமெனக் கூறி அநுக்கிரகித்தார். அவ்விதமே நான் இப்பொழுது உம்மைக் கண்டு சாபவிமோசனமடைந்தேன். தங்களுக்கு ஓர் இரகசியம் கூறுகின்றேன் கேளுங்கள்; நீர் இங்கிருந்து செல்லும் மார்க்கத்தில் இராவணனுடைய ஏவலைக்கொண்ட காலநேமி யென்ற ஓர்மகா அசுரன் உமது காரியத்துக்கு விக்நமுண்டாக்க உத்தேசித்து இவ்வனத்திலிருக்கிறான். அவனைச்சீக்கிரத்தில் கொன்று விடு" மென்று கூறி அவருடைய அநுமதிபெற்றுத் தன்னிருப்பிடம் சென்றாள். மாருதி அட்சணமே அதிவேகமாகக் கபட முனிவன் பக்கம் வந்துதிடமான முஷ்டி பந்தனம் செய்துகொண்டு, "முனிவனிரே! உமது விருப்பப்படி நான் இப்பொழுது குருதக்ஷிணை யளிக்கிறேன்; பெற்றுக்கொள்ளும்" என்று கூறி, அக்காலநேமியின் மார்பில், பலமாய் இடிக்க, காலநேமி அப்பொழுதே இரத்தத்தைக் கக்கிக்கொண்டு கீழேவிழுந்து உயிர்துறந்தான். பிறகு ஹநுமார், அங்கிருந்து பாற்கடல் சென்று, அங்கு துரோணமலையைக் காத்துவரும் கந்தர்வத் தலைவர்களை ஜயித்து, அம்மலையை எடுத்துக் கொண்டு ஆகாசமார்க்கமாகப் புறப்பட்டு அதிவேகமாக வரும் வழியில், அயோத்தியா பட்டணத்துக்கு நேரேவர, அதைப் பார்த்த பரதன் ஒரு பாணம் எய்து அம்மலையைக் கீழே தள்ளிவிட்டான். மாருதி பரதனைப் பார்த்ததும் ராமபிரான் எங்கே இங்கு வந்தாரென ஐயமுற்று மனங் கலங்கி, நீர் ராவணனுக்குப் பயந்து ஓடிவந்து விட்டீராவென்ன வென்று கேட்க, அவ்வார்த்தையைக் கேட்டதும் பரதன் மாருதியை ஓர் ராட்சஸனென்றே கருதி, மறுபடியும் வில்லில் பாணத்தைப் பூட்டினான். அதைக் கண்ட ஹநுமார் பூ! பூ! என்று கத்தி, அவனை ராகவனல்லவென்று

கண்டு தமது மனத்தில் ஒரு நிமிஷ நேரம் ஆலோசித்து, மறுபடியும் பரதனைப்பார்த்து "யான் ராமதூதன்; என்பலத்தைப் பார்க்கிறாயா" என்று கேட்டார். பரதன் "தண்டகாரண்ணிய வாசியாகிய எனது சகோதரர் ஸ்ரீராமருடைய சினேகம் உனக்கு எவ்விதம் கிடைத்தது; அதை ஸவிஸ்தாரமாகக் கூறு" என்றான். பிறகு ஹநுமார் பரதன் கேட்டபடியே தமக்கும் ராமபிரானுக்கும் சினேகம் ஏற்பட்டதை ஐயமறத் தெரிவித்தார். பரதன் பின்பு ஒரு பாணத்தால் அம்மலையைத்தூக்கி ஆகாசத்திலெறிய, அதை ஹநுமார் பிடித்துக்கொண்டு, உடனே லங்கைக்கேகி, அம்மலையின் ஒஷதிகளைக்கொண்டு லட்சுமணரையும், வானரர்களையும் எழுப்பி வழியில் பரதனுக்கும் தமக்கும் நடந்ததை ராமருக்குக் கூறினார். மறுபடியும் ஹநுமார் அத்துரோணமலையை எடுத்துக் கொண்டுபோய்ப் பாற்கடலில்வைததுவிட்டு அதிவேகமாகத் திரும்புகையில் பரதனைக்கண்டு லட்சுமணர் மூர்ச்சை தெளிந்தெழுந்த நற்செய்தியைத் தெரிவித்துவிட்டு லங்கைக்கு வந்து சேர்ந்தார்.

இங்கு இப்படியிருக்க, ராமபிரான் ராவணனுடன் அமர் புரிவதைக் கேட்ட பரதன், தான் அவருக்குச் சகாயஞ்செய்யக் கருதி பல தேசமன்னர்களை வரவழைத்தான். இச்சமயத்தில் ராவணன் தன் சபையில் வீற்றிருந்து ராட்சஸர்களைப் பார்த்து "ஏ தூதர்களே! பாதாளஉலகத்தில் எனது நண்பர்களும் மகா பலசாலிகளுமான ஐராவணன், மைராவணன் என்கிற இரண்டு ராட்சஸ சிரேஷ்டர்களிருக்கிறார்கள். நீங்கள் இங்கிருந்து வேகமாகச் சென்று அவர்களிடத்தில் நான் ராமனுடன் அமர் புரிந்து வருவதைத் தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்கள் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, உடனே வேகமாகப் பாதாள லோகஞ்சென்று சங்கதியை அவ்விருவருக்குந் தெரிவித்தார்கள். அவர்கள் இச்செய்திகேட்டதும் மனங்கலங்கி உடனே புறப்பட்டு லங்கைக்கு வந்து, ராவணனுடன் ஆலோசித்து ஹநுமாருடைய வாலால் அமைக்கப்பட்ட கோட்டைக் குள்ளிருக்கும் ராம லட்சுமணர்களை இன்றிரவு அபகரித்துக் கொண்டுபோய் விடுவதெனத் தீர்மானித்து, அங்கிருந்து ஆகாச

மார்க்கமாகக்கிளம்பி வானர சைன்னியங்களுக்குள்ளே குதித்தார்கள். அப்பொழுது ராமலட்சுமணர்கள் யுத்தம் செய்த சிரமத்தால் ஒரு பாறையிற் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். இப்படி நித்திரைசெய்யும் ராமலட்சுமணர்களை அவ்விரு ராட்ஸசர்களும் அவர்கள் படுத்திருந்த பாறையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு பாதாள லோகம் சென்று தங்கள் கிரகத்துக்குள் வைத்து விட்டார்கள்.

பிறகு தமது வால் கோட்டைக்குள் ராமலட்சு மணர்கள் இல்லதிருப்பதைக் கண்ட மாருதி, உடனே அவர்களைத்தேடிக் கண்டுபிடிக்கப் புறப்பட்டு, கால்நடையாகத் தெற்குநோக்கிச் சென்று திரும்பலை யென்னும் ஸ்தலத்தை யடைந்தார். அங்கு இரண்டு புறாக்கள் ஒன்றுக்கொரு பேசிக்கொள்வதைக்கேட்டார். அவைகளில் சூல்கொண்டிருந்த பெண்புறாவானது ஆண் புறாவைப்பார்த்து, "ஏ நாதா! இன்று அடியேன் மனம் நரமாம்சம் புசிக்க இச்சிக்கிற" தெனக் கூறிற்று. அதற்கு ஆண்புறாவானது நல்லது, ராம லட்சுமணர்களை இரண்டு அசுரர்கள் பாதாள லோகத்திற்குக் கொண்டுபோய்க் காளிகாதேவிக்குப் பலிகொடுப்பதாக வைத்திருக்கிறார்கள். நாளையதினம் காலமே அவர்களைப் பலிகொடுப்பார்கள். அதற்குப் பிறகு நான் அவர்களுடைய மாம்சங்களை உனக்குக் கொண்டுவந்து கொடுத்து, உன் இச்சையை நிறைவேற்றுகிறேன், என்றது. இப்படிப்புறாக்கள் பேசிக்கொண்டதை மாருதி கேட்டுக் சந்தோஷமுற்று, உடனே வாயுவேகமாகப் பாதாள உலகஞ் சென்று, அவ்வசுரர்கள் பட்டணத்துக் கோட்டை வாசலுக்குட் புகுந்தார். அங்கே அவ்வாசற் காப்போனாகிய மகரத்துவஜன் என்பவன் ஹநுமாரைக்கண்டதும் அவரைத் தன் இரண்டு கையாலும் பிடித்துக்கொண்டு, "நீ யார்? எங்கிருந்து வருகின்றாய்?" என வினவினான். மாருதிகான் ராமதூதன். "லங்கையில் எனது காவலில் நித்திரைசெய்து கொண்டிருந்த ராம லட்சுமணர்களை உன்னுடைய எஜமான்களாகிய இரண்டு அசுரர்களும் இன்று தூக்கிவந்து இவ்விடம் வைத்திருக்கிறார்கள். அவர்களைத் தேடிக் கொண்டுபோக வந்தேன். நீ

அறிவாயேயாகில் அவர்களிருப்பிடத்தை எனக்குக்காண்பி" என்றார். இதைக்கேட்டதும் மகரத்வஜன் "ஓய்! லங்கையில் எனது தந்தை ஆஞ்சனேயர் இருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அவர் சுகமாயிருக்கின்றனரா" என்றான். அவ்வார்த்தையைக்கேட்டதும் ஹநுமார் ஆ! ஆ! என்று ஆச்சரிய முற்று மகரத்துவஜனைப் பார்த்து, அப்பா! ஹநுமாருக்குப் பத்தினியேயது? ப ந தாலல்லவா புத்திரன் உண்டென்பது நிச்சயமாம்" என்றார். மகரத்வஜன் "எனது தந்தை ஆஞ்சனேயர் இலங்கையை எரித்துவிட்டு, தமது வாலை உஷ்ணசமனத்துக்காகச் சமுத்திரத்தில் நனைக்கும்பொழுது தமது காழுத்தில் அடைந்திருந்த புகைக்கரியை எடுத்து வெளியிலெறிய அது சமுத்திரத்தில் விழுந்தது. அதை ஒரு மீன் விழுங்கிற்று. அது அம்மீனுக்கு ஒரு குழந்தையாகப் பிறந்தது. அக்குழந்தை தான் நான்" என்றுகூறினான். உடனேமாருதி "அப்பா! நான் தான் அந்த ஆஞ்சனேயர்" என்று தெரிவிக்க மகரத்வஜன் உடனே அவருக்கு வணக்கஞ்செய்து "பிதாவே! தாங்கள் கூறியது உண்மையே ராம லட்சுமணர்களை அவ்வசுரர்கள் காளிக்குப் பலிகொடுக்க நிச்சயித்து லங்கைக்குச் சென்று அங்கிருந்து அவர்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நாளைபதினட் காலையில் அவர்களைப் பலிகொடுப்பது நிச்சயம். ஆகையால் அந்தத் தேவாலயம் சென்று அங்கிருக்கும் ராமலட்சுமணர்களை யெடுத்துச்கொண்டு போகலா" மெனக் கூறினான். உடனே ஹநுமார் அணுரூபமாகி அக்கோட்டைக்குட் பிரவேசித்து அங்கிருக்கும் தேவாலயத்துக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டார். அப்பொழுது ஐராவண மைராவணர்கள் காளிகாதேவியினுடைய ஆராதனைக்குரிய சாமக்கிரியைகளுடன் கோவில் வாசலுக்கு வந்தார்கள். அதைக் கண்ட ஹநுமந்தர் காளியின் குரல்போலவே அவ்வசுரர்களை "அன்பர்களே!" என்று அழைத்து ராம லட்சுமணர்கள் உயிருடனிருக்கிறார்களா?" எனவினவி, இந்தச் சாளரத்தின் வழியே இன்று எனக்கு நீங்கள் பூஜை நடத்துங்கள்" என்று கூறினார். அவ்வசுரர்களிருவரும் ஹநுமார் கூறியவற்றைக் காளியின் ஆஞ்ஞையாகக்கொண்டு

கனிவர்க்கங்களையும் மலர்களையும் சாளரத்தின்வழியாகப் போட்டு அர்ச்சித்தார்கள். ஹநுமார் அவர்கள் பூஜையை ஏற்றுக்கொண்டு மறுபடியும் காளிகாதேவி கூறுவது போலவே "அன்பர்காள்! எனக்குப் பலியாகக்கொடுக்க உத்தேசித்தவர்களை மலர்களா லலங்கரித்து அவர்களுக்குக் கோதண்டம் அம்புறாத்தூணி இவை களிரண்டையும் கொடுத்து, எனது ஸந்நிதானக் கதவை மெது வாகக்கொஞ்சம் திறந்து எனக்குப்பலியாக அனுப்புங்கள். அப் பொழுது என்னை நீங்கள் பார்ப்பீர்களாயின் உங்கள் கண்கள் அவிந்து விடும். இது நிச்சயம்" என்றார். இதைக் கேட்டதும் அவ்வசுரர்கள் காளிகாதேவி தங்கள் மீது கருணைபுரிந்திருக்கிறா ளென நினைத்து, மகிழ்ச்சியுற்று, அவ்விதமே சாளர மார்க்க மாகப் பக்குவான்ன உருண்டைகளையும் குடங்குடமாகப் பாயஸம் பஞ்சாமிருதங்களையும் பலவிதமான பலவர்க்கங்களையும் கோடிக் கணக்காகச் சமர்ப்பித்து நிவேதித்தார்கள். ஹநுமார் அவைக ளனைத்தையும் புசித்துவிட்டு, மறுபடியும் "பக்தர்களே! நீங்கள் நிவேதித்தயாவும் எனக்கு ஒரு கவளத்துக்கே போதுமானதா யிருந்தது. இன்னும் என்பசி தீரவில்லை" என்றார். இதையும் தேவி யின் வசனமென்றே எண்ணி, அசுரர்கள் மிகவும் ஆச்சரியமடை ந்து உடனே தூதர்களை அனுப்பி, தங்கள் பண்டசாலையில் சேமி த்து வைத்திருப்பவைகளையும், தங்கள்பட்டணங்களில் ஒவ்வொரு வீடுகளிலிருக்கும் பதார்த்தங்கள் யாவையும் வரவழைத்து முன் போலவே நிவேதனம் செய்தார்கள். இச்சமாசாரத்தை அப்பட்ட ணத்துள்ளவர்கள் யாவரும் அறிந்து, கோலாகலமடைந்தார்கள். பிறகு அவ்வசுரர்கள் ராமலட்சுமணர்களுக்குக் காட்டுப் பூக் களைக் கொண்டு அலங்கரித்து, கோதண்டம் அம்புறாத்தூணி இவைகளையும் கொடுத்து, தேவியின் உத்தரவுப்படியே மெது வாக ஆலயத்தின் கதவைக்கொஞ்சம் திறந்து, அவர்களைத் தேவிக்கு அர்ப்பணம் செய்து விட்டு வெளியேவந்து விட்டார்கள்.

மாருதியானவர் ராம லட்சுமணர்களைக் கண்டதும் ஆனந் தங்கொண்டு வணங்கி ஆலிங்கனஞ் செய்து உடனே கோயிற் கதவுகளைத்திறந்து கொண்டு வெளியே வந்தார்.

பிறகு ராமலட்சுமணரும் வெளியே வந்து அங்கிருந்த அவ்வசுரர்களுடன் அமர் புரிய ஆரம்பித்து வில்லை நாணேற்றிப் பாணப்பிரயோகஞ்செய்து அவர்களைக்கொன்று விட்டு அவர்களுக்குத் துணையாக வந்த அவர்கள் மித்திரர்களையும் சைந்யங்களையும் கொன்று விட்டார்கள். மறுபடியும் அவ்விரு அசுரர்களும் உயிர் பிழைத்து எழுந்து யுத்தத்துக்குவர, ராமர் மறுபடி தமது வில்லில் பாணங்களைப் பூட்டி எய்து கீழே வீழ்த்தினர். இவ்விதம் பல தடவை அவர்களை வீழ்த்தியும் அவ்வசுரர்கள் மரணமடையாததைக் கண்ட அனுமார் ஆச்சரியமடைந்து அங்குமிங்கும் திரியும் போது, ஓரிடத்தில் ஐராவணனுடைய போகபத்தினி யிருக்கக் கண்டு அவளைப் பார்த்து 'ஏ பெண்ணே! நீ யார்? ஏன் கவலையுற்றிருக்கின்றனை' என்று கேட்டார். அம்மாது "ஐயா நானொரு நாக கன்னிகை. என்னை ஐராவணன் பலாத்காரமாக எடுத்து வந்துவிட்டான். மைராவணன் என்னை அடிக்கடி கெட்ட எண்ணத்துடன் பார்த்து வருகிறான். இருவருக்கும் பத்னியாகவிருக்க என்மனம் ஒப்பவில்லை; அவர்களில் ஒருவன் மித்திரனாகவிருக்கிறான், ஒருவன் சத்ருவாக விருக்கிறான். இதனால் தான் நான் வருத்தமுற்றிருக்கின்றேன். அவ்விருவரும் இறந்தால் எனக்குச் சம்மதமே" எனக் கூறினள். உடனே அனுமார் இவளைக்கொண்டு அவ்வசுரர்களின் உயிர்நிலைகளை அறியலாமென்று கருதி, அவளைப் பார்த்து "ஏ மாதரசே! உனக்கு அவ்வசுரர்கள் இறப்பதில் சம்மதமிருக்குமாயின் அவர்களுடைய உயிர்நிலைகளைத் தெரிவி. நான் உன் இஷ்டத்தை இந்தக்கணமே நிறைவேற்றுகிறேன் என்றார். அம்மாது, "ஐயா! அந்த ராமபிரான் என்னை மனைவியாகக் கொள்வாராகில் அவர்களின் உயிர்நிலைகளை உமக்கு இப்பொழுதே தெரிவிக்கிறேன்" என்றாள்.

அனுமார்:—அம்மா! உனது மஞ்சம் அந்த ராமபிரானைத் தாங்கவல்லதாயின் நீ கூறியபடியே அவரை உன் கணவனாகச் செய்கிறேன்.

மாது:—நல்லது அப்படியே யாகட்டும். முன்னொரு சமயத்தில் சில சிறுவர்கள் சில வண்டுகளைப் பிடித்து அவைகளை முட்களில் கோர்த்து விளையாடுவதை இவ்விரு அசுரரும் கண்டு அவை

களுக்கிரங்கி அவ்வுபத்திரவத்திலிருந்து அவைகளை விடுவித்தார்கள். அவ்வண்டுகள் அவர்களைப் பார்த்து "ஐயன்மீர்! நீங்கள் இவ்விதம் எங்களை ரக்ஷிக்காவிட்டால் நாங்கள் மரணமடைந்திருப்போம். அவ்வுபகாரத்துக்குப் பிரதியாக உங்களுக்கு மரணம்நேரிடாமல் உங்கள் ஜீவனை இன்றுமுதல் காத்துவருகிறோம்." என்று சொல்லி "அன்று முதல் அவ்வண்டுகள் இவர்களுக்கு ஹானியுண்டாகும் போதெல்லாம் அமுதத்தைக் கொண்டுவந்து இவர்களுடைய சரீரங்களின் இரத்தத்தில் கலந்து பிழைக்கும்படி செய்து வருகின்றன. அவைகள் யாவையும் பிடித்து நசுக்குவீரேயாகில் உமது கருத்து நிறைவேறும்" எனக்கூறினாள்.

மாருதி அக்கணமே மகிழ்ச்சியுடன் இவ்வசுரர்களின் அந்தப்புரம் சென்று அங்கே கூட்டங்களாக விருக்கும் வண்டுகளைக் கண்டுபிடித்து ஒன்றையும் விடாமல் யாவையும் நசுக்கினார். கடைசியாகத் தம்மைச் சரணமடைந்த ஒரு வண்டைப்பார்த்து "உன்னை யான் இப்பொழுது விட்டுவிடுகிறேன்; நீ இப்போது இவ்வசுரர்களது போகபத்தினியின் மஞ்சத்தைக்குடைந்து அதிற் புகுந்து அதை ஒருயானை விழுங்கின விளாங்கனிக் கொப்பாகத் துளைத்துவிடு" எனக்கூறினார். வண்டு அப்படியே செய்கிறேனெனக் கூறி உடனே மஞ்சத்தைக்குடைந்து அதிற்புகுந்து அவ்விதமே செய்துவிட்டது.

ராமர் இதன்பின் அவ்விரு அசுரர்களையும் கொன்றுவிட்டு அவர்களது சிங்காசனங்களில் மகரத்வஜனை வீற்றிருக்கச் செய்து அந்தப்பாதாள இலங்கைக்கு அவனை அரசனாக்கினார். பிறகு ராமர் அவ்விடம் விட்டுப் புறப்பட யத்தனிக்கையில் மாருதி தாம் நாககன்னிகைக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி ராமரை வேண்டினார். ராமபிரான் அதற்கிணங்கித் திவ்யாலங்கார மமைப்பெற்ற நாககன்னிகையின் வீடு சென்று சுந்தரவதனாலங்கார பூஷிதையான அக்கன்னிகையைப் பார்த்து தமது செந்தாமரை மலர்போன்ற திருக்கரத்தால் அம்மாதின் கரத்தை ஸ்பரிசித்து அவளுக்கு மகிழ்ச்சியுண்டாக்கி மஞ்சத்திலேறினார். ஏறியவுடன் அந்த மஞ்சமானது முறிந்து விழுந்துவிட்டது. உடனே அம்மாது ஸ்ரீராமபிரானைப் பார்த்து "ஐயா! எனது

கோரிக்கை நிறைவேறாமற் போய்விட்டதே" என்று வருந்திப் பிரார்த்தித்தாள். ராமர் அம்மாதின்மீது இரக்கங்கொண்டு "நீ இச்சரீரத்தையொழித்துப் பூலோகத்தில் ஒரு வேதியனுக்குப்பெண்ணாகப்பிறந்து அப்பொழுது என்னைக்குறித்து நெடுநாள் தவமிருந்து பிறகு அப்பிறப்பை ஒழித்து துவாரபயுகத்தில் ஒரு பெண்ணாக அவதரித்து எனக்கு மனைவியாகக்கடவது" என்று அநுக்ரகித்தார். உடனே அவள் அக்நிவளர்த்து அதிற்பிரவேசித்துப்பிறகு தென் சமுத்திரக்கரையில் ஒரு வேதியர்க்குப்பெண்ணாகப்பிறந்து கன்னியாகுமரி யென்னும் பேரையடைந்தாள்.

இதற்குப் பிறகு ராமபிரான் மகிழ்ச்சியடைந்து மகரத்வஜனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவனுக்கு லட்சுமணரை மந்திரியாக்கினர். பிறகு யாவரும் லங்கைக்குச் செல்ல வேண்டுமென்பதை ராமர் தெரிவிக்க, உடனே மாருதி தமது தோளில் ராமரைத் தூக்கிக்கொண்டார். மகரத்வஜன் பிர்ம்மாண்டத்தைத் தாங்கும் ஆதிசேஷாவதாரமான லட்சுமணரைத் தன் தோளில் தூக்கிக்கொண்டான். பிறகு நிமிஷநேரத்தில் யாவரும் லங்கைக்கு வந்து சேர்ந்தார்கள்.

இங்கே மிக்க விசனமுற்றிருந்த சுக்ரீவன், ஜாம்பவான் முதலிய வானரசிரேஷ்டர்கள் ராமலட்சுமணர்களைக் கண்டதும் பன்முறை வணங்கித் தழுவி மகிழ்ந்தார்கள். ராமபிரானும் நடந்த சங்கதிகள் யாவையும் சுக்ரீவன் முதலானவர்களுக்குத் தெரிவித்து மகிழ்ந்தார்.

இப்படித் தனது மித்திரர்களான ஐராவண மைராவணர்கள் இறந்ததை அறிந்த ராவணன் மனங்கலங்கிச் சபையிலிருக்கும் அரக்கர்களைப் பார்த்து "முன்னொரு சமயம் பிர்ம்மதேவன் எனக்கு ஓர் மனிதனால் மரணமுண்டாகுமெனக் கூறியிருப்பதால், சாட்சாத் நாராயணரே தசரதனுக்கு ராமனென்கிற மனிதனாகப் பிறந்து என்னைக் கொல்ல இப்பொழுது இங்கு வந்திருக்கிறார். அதில் ஐயமில்லை. அன்றியும் முன் ஒரு சமயம் யாகதீட்சையிலிருந்த அனரண்யனென்னும்ஓர் அரசனை அமருக்கழைத்துக்கொல்லும் போது சூரிய வம்சத்திற் பிறந்தவனாகிய அவ்வரசன் என்

லைப் பார்த்து எனது வம்சத்தில் அவதரிக்கப்போகும் பரமாத்மா வாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி உன்னைப்புத்திர பௌத்திர பந்துக்கள் சகிதமாக அழிக்கப் போகிறாரெனச் சாபங்கொடுத்து சுவர்கத்துக்கேகினான். ஆகையால் இப்பொழுது என்னுடன் அமர் புரிய வந்திருக்கும் மனிதன் அவனே யாவன். இதுவே அச்சமையம்; யுத்தத்தில் என்னை அவர் கொல்லப்போகிறார். ஆகையால் அதி சீக்கிரத்தில் கும்பகர்ணனிடம் சென்று அவனை நித்திரையிலிருந்து எழுப்பி அழைத்து வாருங்கள்" எனக் கட்டளையிட, உடனே அவர்கள் கும்பகர்ணனிருக்கும் குகையின் முகத்துவாரத்திற் கருகே செல்ல, அவனுடைய சுவாசக் காற்றானது அவன் சுவாசிக்கும்பொழுது அவர்களனைவரையும் உள்ளே இழுத்துப் பின் அவன் சுவாசத்தை விடும்போது வெளியே தள்ளிற்று. இப்படிப் பன்முறை உள்ளே இழுத்து வெளியே தள்ளவே, அத்தூதர்கள் யாவரும் அம்முகத்துவாரத்தை விட்டு வேறிடம் சென்று அங்கு ஒன்று சேர்ந்து ஒருவரையொருவர் கைளால் பலமாகக் கட்டிக் கொண்டு குகைக்குட் பிரவேசித்து, கும்பகர்ணன்மேல் கற்களை வீசி யெறிந்தும், மரங்களைப் போட்டும், தங்கள் காலால் துவைத்தும் எழுப்பினார்கள். அவன் அப்பொழுதும் எழாதது கண்டு, பிறகு குதிரைகளையும் ஒட்டகங்களையும் அவன்பேரில் ஓட்டிப் பார்த்தார்கள். அப்படியும் அவன் எழுந்திருக்கவில்லை. பிறகு ராவணன் உத்தரவுப்படி அவன்பேரில் கட்டைகளைக் குவித்து நெருப்புவைத்தார்கள். கும்பகர்ணன் உடனே விழித்துக் கொண்டு எதிர் தோன்றிய பன்றிகளையும் எருமைகளையும் கோடிக் கணக்காக ஆகாரமாகக் கொண்டு, அநேக தடாகங்களிலுள்ள நீரைக்குடித்துத் தாகசமனஞ் செய்துகொண்டு ராவணனிடம் வந்து பின் வருமாறு போதிக்கலானான்.

"அண்ணா! நான் முன்னொரு சமயம் வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தேன். அங்கு முனிபுங்கவராகிய நாரதர் வந்தார். அவரை நான் வணங்கி 'ஐயா! முனிவரே! நீர் எங்கிருந்து வருகிறீர். எங்கேபோகிறீர்' என்று விசாரித்தேன். அவர் 'அப்பா! நான் தேவலோகத்திலிருந்து வருகிறேன். இப்பொழுது அயோத்

திக்குச் செல்கிறேன், என்றார். நான் அவரைப்பார்த்து 'நீர் இப்பொழுது அயோத்திக்குச் செல்வது யாது காரணம் பற்றி' என்று வினவினேன். அவர் 'அப்பா! ராவணாதி ராட்சஸர்களை யழிக்க மகாவிஷ்ணுவானவர் தசரதனுடைய தனயனாய் அயோத்தியில் அவதரித்திருக்கிறார். இதை அறிந்த தேவர்கள், அக்காரியத்தைச் சீக்கிரம் நிறைவேற்றும்படி தசரத தனயனுக்குத் தெரிவிக்க, என்னை வேண்டினர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி யான் இப்பொழுது விரைவாகச் செல்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றனர். அவர் தான் இப்பொழுது இங்கே தசரத தனயனாகிய ராமனை அனுப்பியிருக்கிறாரென்பதையும் கேள்விப்பட்டேன். நான் இப்பொழுது அதை உனக்குச் சொல்லிவிட்டேன். ஆகையால் பிரபுவே! ஸீதையை ராமனிடம் கொடுத்து அவரை மித்திரராக்கிக்கொண்டால், உமக்கு க்ஷேமமுண்டாகும்" என்று இதங்கூறினான். அதைக்கேட்ட ராவணன், "தம்பீ! உனக்கு உன் நித்திரை மயக்கம் இன்னும் தெளியவில்லை யெனத்தெரிகிறது. உன் கண்கள் சுழல்வதே அதைத் தெரிவிக்கிறது. ஆகையால் நீ சுகமாக நித்திரை செய்து கொண்டிரு. இப்பொழுது என் எதிரில் நில்லாதே! போ!" என்று கடிந்து பேசினான். தன் சகோதரனுடைய கோர வசனங்களைக் கேட்ட கும்பகர்ணன் ராவணனை வணங்கி, வேகமாகப் புறப்பட்டு உயர்ந்த மதிலை ஒரே தாண்டாகத் தாண்டி யுத்த அரங்கம் சென்று ராமனை யுத்தத்திற்கு அழைத்தான். இதைக் கண்ட வானர வீரர்கள் யாவரும் பயந்து மனங்கலங்கி அதிவேகமாக ஓடிப்போய் ஸ்ரீ ராமபிரான் பக்கம் அடைந்தார்கள்.

இப்போது, விபீஷணன் தன் தமையனாகிய கும்பகர்ணன் வந்திருப்பதைப் பார்த்து, அவனருகிற் சென்று வணங்கி, "அன்றே யான் என்னால் இயன்றவரையில் ஸீதையை ராமபிரானிடம் கொடுத்து, சுகம்பெறு என்று பலவாறு நமது தமையனுக்குப் போதித்தேன். அதற்குச் சிறிதும் செவிகொடுக்காமல், என்னைச்சினந்து ஊரை விட்டுத் துரத்தி விட்டான். உடனே நான் மனத்தில் ஆலோசித்துப்பார்த்து அண்ணனே நம்மைத்தள்ளிவிட்

டான் இனி யாது செய்வதென மயங்கி, ராமராக அவதரித்திருக்கும் மகாவிஷ்ணுவிடம் சரணம்புகுவது நமக்கு நன்மை பயக்குமென்று தீர்மானித்து, அவரைச் சரணம் புகுந்தேன்" என்று கூறினான். இதைக்கேட்டதும் கும்பகர்ணன் மகிழ்ச்சியுற்று, "தம்பி! நீ நல்லகாரியம் செய்தாய். ஆனால் பின்னால் நாங்கள் நற்கதியடைவதற்காக, நீ யாவது பிழைத்திருக்கவேண்டியது அவசியமாதலால், இச்சமையத்தில் நீ என் முன் ஒரு க்ஷணமும் நில்லாதே. இது யுத்த சமயமாதலால் இப்பொழுது தன்னைச்சேர்ந்தவன், அன்னியன் என்கிற முறைமை கொள்வது கூடாது, ஆகையால் சீக்கிரம் இவ்விடம்விட் டப்புறம் செல்" என்றான். உடனே விபீஷணன் அவனுக்கு வணங்கி, ராமபிரான் அருகிற் சென்றான். கும்பகர்ணன் பிறகு யுத்தத்துக்கு ஆரம்பித்து அங்கிருக்கும் வானர சைன்னியங்களை வளைத்து வளைத்துக் கைகளாலும் கால்களாலும் குத்தியும், உதைத்தும், தேய்த்தும் அதிகவேகமாகச் சுழன்று வருகையில், அங்கே சுக்ரீவனைக்கண்டு திரிசூலத்தால் அவனைத்தாக்கிக் கீழே வீழ்த்தித் தூக்கிக்கொண்டு லங்காநகருள் வந்தான் வரும் வழியில் சுக்ரீவன் களைதெளிந்து, கும்பகர்ணன் மூக்கையும் செவிகளையும் நகங்களால் பிறாண்டி அவன் கையிலிருந்து திமிறிக்கொண்டு, கிளம்பி அதிவேகமாக ராமபிரான் பக்கத்துக்கு வந்து சேர்ந்தான். இப்பொழுது பட்டணத்தார் யாவரும் கும்பகர்ணனைப் பார்த்துப் பரிகசிக்க அவன் உடனே திரும்பி யுத்தம்புரிய வந்தான். இதையறிந்து இரகுநந்தனர் அவன்பேரில், கூர்மையான பாணங்களைப் பிரயோகித்து அவன் சரீரத்தைத் துளைத்தார். கும்பகர்ணனும் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி, ராமபிரான் மேல் வீசியெறிந்தான். ராமர் சில பாணங்களைப் பிரயோகித்து அவைகள் யாவையும் பொடியாக்கி, உடனே வாயுவாஸ்த்ரப் பிரயோகஞ்செய்து ஆயுதங்கள் தரித்திருக்கும் அவன் கரங்களை அறுத்துத் தள்ளினார். அவன் கைகளிழந்த பின்னும் மேகநாதம்போல் சப்தித்துக்கொண்டு ராமரை எதிர்க்க அவர் கூர்மையான இரண்டு அர்த்தசந்திரபாணங்களையெய்து அவனுடைய இரண்டு

கால்களையும் சேதித்தார். அக்கால்கள் பேரிரைச்சலோடு லங்கையின் கோட்டை வாசலிற்போய் விழுந்தன. அப்படியிருந்தும் கும்பகர்ணன் தன் வாயை வடவாக்கினிபோல் திறந்து பெருங்கூச்சலிட்டுக்கொண்டு ராகு சந்திரனைப்பிடிக்கத் துரத்துவதுபோல் ராமபிரானைத் துரத்தினான். அப்பொழுது ராமபிரான் அநேக பாணங்களைப் பிரயோகஞ்செய்து அவன் வாய் முழுதும் பாணமயமாகச் செய்தார். அவன் தன் வாய் பாணங்களால் நிறைக்கப்பட்டும் அதை லட்சியஞ் செய்யாமல் பயங்கரமாகக் கூச்சலிட்டான். பின் ராமபிரான் சூரியப் பிரகாசம் பொருந்திய சிரேஷ்டமான ஒரு சரத்தை யெடுத்து ஐந்த்ராஸ்த்ர மந்திர உச்சாரணம் செய்து கும்பகர்ணன் கண்டத்திலெய்து பிரமாண்டமான அவன் சிரசைத்துண்டித்தார். அதைப்பார்த்த தேவர்கள் வாழ்த்தி வாத்திய முழக்கம் செய்து புஷ்பமாரி பொழிந்து ராமரைப் பலவாறு துதித்தார்கள்.

கும்பகர்ணன் இறந்ததை யறிந்த ராவணன் மனங்கலங்கி மிகவும் துக்கப்பட்டான். இப்பொழுது அருகே யிருந்த இந்திரஜித்து, ராவணனைப்பார்த்து "நீர் துக்கப்படவேண்டாம்- நானிருக்கிறேன். இதோ இப்பொழுது என் பலத்தைக் காட்டுகிறேன் பாரும்" என்று கூறிவிட்டு, தனக்கு ஜயந்தரும்படியான சஸ்திரம் ரதம் முதலியவைகளைக் கொடுக்கும் ஆபிசார ஹோமம் புரியக்கருதி, அருகிலிருந்த நிகும்பிலைக்குச் சென்று அங்கிருக்கும் யோகினிவடமென்கிற ஆலமரத்தடியிலிருந்த குகைக்குட் பிரவேசித்து, ஒரு ஹோமகுண்டம் ஏற்படுத்தி, அதன்மேல் ஒரு கிருஷ்ண சர்ப்பத்தைத் தொங்கவிட்டு, அக்குகையைச்சுற்றி முதலில், முட்களையும், இரண்டாவது ராட்சஸர்களையும், மூன்றுவது ஸர்ப்பங்களையும், நான்காவது புலிகளையும், ஐந்தாவது நெருப்பையும், ஆறாவது வாயுவையும், ஏழாவது தண்ணீரையும் எதிரிகள் உள்ளே பிரவேசியாதவாறு அரணாகக்கொண்டு, தான் ரத்தவர்ணமான மலர்மாலை, ரத்தவர்ணமான வஸ்திரம், ரத்தவர்ணமுள்ள சந்தனம் இவைகளைத் தரித்துக்கொண்டு ஹோமகுண்டத்துக்கு நேரே உட்கார்ந்து, ரத்தவர்ணமான

புஷ்பம்; ரத்தவர்ணமான அட்சதை, சிவப்புக் குந்துமணி, சிவப்புக்கடுகு, சிவப்புச்சந்தனக்கட்டை, சிவப்புக்கரும்புகள் இவைகளினாலும், மா, பலா, அத்தி, இவைகளின் சமித்துகளாலும், கருங்காலிச் செருகுகளாலும், மாம்சம், உளுந்து, கருங்காலிப் பழம் விளாங்கனி, எருக்கங்காய், வேப்பங்காய், மாதுளம்பழம், கருஊமத்தங்காய், கோரோசனை, நாயுருவி, லந்தை இவைகளாலும், மனிதர்களுடைய கவந்தங்கள், ஊன் தண்ணீர், நரம்புகள், இவைகளாலும், சர்ப்பங்களின் துண்டுகள், தவளைகள், இன்னும் சில பிராணிகளின் தோல், நரம்பு பல்லு, மயிர்கள் இவைகளாலும் அதநனுக்குரிய மந்திரங்களைச் சொல்லிக் கண்ணை மூடிக்கொண்டு இரகசியமாக ஹோமம் புரிந்து வந்தான்.

இப்படிப் பிரமாதமான ஆர்ப்பாட்டத்துடன் ஹோமஞ்செய்யும் இந்திரஜித்தினுடைய ஹோமகுண்டத்தினின்று கண்டவர் மனங்கலங்கக் கிளம்பிய புகையைப் பார்த்த விபீஷணன் உடனே ராமபிரானிடத்தில் இந்திரஜித்து ஹோமம் புரிகிறனென்பதைத் தெரிவித்து "வ ரகுநாத! இப்பொழுது இந்திரஜித்து செய்யும் இந்த ஹோமம் சமாப்தியாகுமேயாயின், அந்தஇந்திரஜித்தைத் தேவாசுரர்களில் எவரும் ஜயிக்க வொண்ணாது. ஆகையால் அதிசீக்கிரத்தில் லட்சுமணனைக்கொண்டு அவன் ஹோமகுண்டத்தை அதமாக்கி அவனையுங்கொன்று விடுகிறேன்; அவன் சாமான்னியர்களால் கொல்லத்தக்கவனல்லன். அவனைக் கொல்லுகிறவர்கள், பன்னிரண்டு வருஷகாலம் ஆகாரத்தையும் நித்திரையையும் ஒழித்த வர்களாக விருக்கவேண்டும். இப்படிப்பட்டவராலேதான் அந்தத் துஷ்டனுக்கு மரணம் நேரிடுமென்பதுபிரம்மதேவன் கொடுத்தவரம். நமது லட்சுமணர் அயோத்தியிலிருந்து வனவாசத்துக்குப் புறப்பட்டநாள் முதல்தங்கள்பணிவிடையின்நிமித்தமாக இதுவரையில் ஊணும் உறக்கமுமின்றி இருந்து வருகிறார். இவைகளை யான் நன்றாய் அறிவேன். ஆகையால் நமது லட்சுமணரே அவனைக் கொல்லத்தக்கவ" ரென்று கூறி அவரை யுத்தத்துக்கு அனுப்பும்படி வேண்டினன். உடனே ராமர் லட்சுமணருக்கு உத்தரவு கொடுக்க, லட்சுமணரும் விபீஷணனும் மாருதி முதலிய

யூதபதிகள் சூழப் புறப்பட்டு நிகும்பலைக்குச்சென்று பார்க்க, அங்கே முதலாவதாக அமைத்திருந்த முள்கோட்டையை லட்சுமணர் ஆக்நேயாஸ்த்ர ப்ரயோகஞ்செய்து எரித்துவிட்டு, இரண்டாவதான ராட்சஸக்கூட்டங்களை பாணங்களை எய்து கொன்றுவிட்டு, மூன்றாவதாய ஸர்ப்பக் கோட்டையை கருடாஸ்திரத்தினால் அழித்து, நான்காவதாய புலிக்கோட்டையை பர்வதாஸ்திரத்தால் தொலைத்துவிட்டு, ஐந்தாவதாய அக்நிக்கோட்டையை மேகாஸ்திரத்தால் அவித்து விட்டு, ஆறாவதாய வாயுக்கோட்டையை தாம் உட்கொண்டு, ஏழாவதாய ஜலக் கோட்டையை வாயுவாஸ்திரத்தால் வற்றவடித்து, அதற்கப்பாற்சென்று பார்த்தார்கள். அங்கு அவர்களுக்கு இந்திரஜித்தைப்பற்றிய தொன்றும் தென்படவில்லை. இதைக்கண்ட அனுமார் கோபங்கொண்டு அங்கேயிருந்த யோகினிவடத்தைப் பிடுங்கிப் பார்க்க நினைத்துப் பிடுங்கப் போனார். அப்பொழுது அம்மரத்திலிருந்த யோகினியானவள் அனுமாரைப் பார்த்து "ஐயா! மரத்தைப் பிடுங்கவேண்டாம். இதோ இங்குக் கல்லைக்கொண்டு மூடியிருக்கும் குகைக்குள் இந்திரஜித்திருக்கிறான். அங்குச் சென்று பாருங்கள்" என்றுதெரிவித்தாள். உடனே அனுமார் சிலையைத் தமது பாதங்களால் சின்னாபின்னப் படுத்திக் குகையினுட்சென்று இந்திரஜித்தை மிரட்டினார். இதைக் கண்ட மேகநாதன் திடுக்கிட்டு ஹோமத்தை விட்டெழுந்திருந்து கோபாவேசத்துடன் வெளியே வந்து ரதமேறி லட்சுமணரை எதிர்த்து, அவரை மர்மங்கள் நோகப் பேசி அஸ்த்ரசஸ்த்ரங்களாலும் பலை முதலியவைகளாலும் யுத்தம்புரிந்தான். லட்சுமணரும் உடனே பல பாணங்களை எய்து அவனது ரதம் அசுவம் தேர்ப்பாகன் தநுசு அவனது திடமான கவசம் இவைகளை க்ஷணநேரத்தில் சின்னாபின்னமாக்கினார். பின்பு மேகநாதன் வேறொருதனுசைக் கையிலேந்தி தரையில் நின்றுகொண்டு ஆயிரக்கணக்காகப் பாணங்களைப் பிரயோகஞ்செய்து லட்சுமணருடைய கவசத்தைச் சேதித்தான். உடனே லட்சுமணர் மிகக் கோபங்கொண்டு சிரேஷ்டமான ஒரு பாணத்தைப் பிரயோகஞ் செய்து அம்புகளைத் தாங்கிக்கொண்டிருந்த இந்திரஜித்தினுடைய வலதுகையை அறுத்தெறிந்து அது அவன்

கிருகத்திற்போய் விழும்படி செய்தார். பிறகு மேகநாதன் மனங் கலங்கி இடது கையில் ஒரு சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு லட்சுமணரைத் துரத்தினான். அவர் உடனே சிரேஷ்டமான ஒரு பாணத்தைப் பிரயோகித்து, அவனுடைய இடது கரத்தை யும் அறுத்து அதனைச் சூலாயுதத்துடன் ராவணன் முன்னிலை யில் விழும்படி செய்தார். அக்கை அப்படியே ராவணன் முன் னிலையில் விழுந்து யாவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. இதன் பின் இந்திரஜித் வாயைத் திறந்துகொண்டு லட்சுமணரை எதிர்த்தான். லட்சுமணர் ராமநாம அடையாளமுள்ள ஒரு திவ்ய சரத்தை எடுத்து ராமரை மனத்தில் தியானித்துக்கொண்டு இந்திரஜித்தின் பேரில் பிரயோகித்தார். இந்தப் பாணமானது அழகிய குண்டலங்களோடும் கிரீடத்தோடும் இந்திரஜித்தி னுடைய தலையை அறுத்துக் கீழே வீழ்த்திற்று. இதைக் கண்ட தேவர்கள் மிகக் களிப்படைந்து லட்சுமணர்மேல் மலர்மாரி பொழிந்து வாழ்த்தினார்கள். லட்சுமணர் சிறிதுநேரம் அங்கி ருந்து சிரம பரிகாரம் செய்துகொண்டு பிறகு ஜயசங்கம் ஊதி னார். அச்சங்கநாதத்தை ஸீதை கேட்டு அது யாருடைய சங்க நாதம் என்று தெரிந்துவரத் தன்னருகி லிருந்த திரிசடையை அனுப்பி அவளால் லட்சுமணர் இந்திரஜித்தைச் சங்கரித்துச் சங்கம் முழக்கினார் என்பதைக் கேட்டு மனமுவந்தாள். பிறகு மாருதி மேகநாதனுடைய தலையை எடுத்துக்கொண்டு போய் ஸ்ரீராமபிரானுக்குக் காட்டவேண்டுமென்று லட்சுமணரைத் துரி தப் படுத்தினார். உடனே அவர் அங்கதன்மே லேறிக்கொண்டு விபீஷணனுடன் புறப்பட்டு வாத்திய கோஷங்கள் முழங்க ஸ்ரீராமபிரான் முன்பு சென்று அவரை வணங்கி மேகநாதனது தலையைக் காட்டினார். ராமபிரான் அதைப் பார்த்து மகிழ்ந்து தம்பி லட்சுமணரைத் தழுவிக்கொண்டார்.

இங்கிவ்வாறிருக்க, ராவணன் சபையில் தன் முன்னிலையில் இந்திரஜித்தினுடைய கரம் அறுந்து வந்து விழக்கண்டதும் மகா துக்கமடைந்து தரையில் விழுந்து மூர்ச்சை யடைந்தான். பிறகு

சிறிது நேரத்திற்கெல்லாம் ராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்து ஒரு கத்தியை உருவிக்கொண்டு ஸீதையைக் கொல்வதற்காக மிகக் கோபத்துடன் ஓடினான். இதைப் பார்த்த மகா புத்திசாலியாகிய சுபார்சுவன் என்ற மந்திரி ராவணனுடைய கத்தியேந்திய கையைப் பிடித்துத் தடுத்து "ஐயா! எல்லாந் தெரிந்த மகா பிரபுவாகிய தாங்கள் ஒரு ஸ்திரீயை இவ்விதம் கோபங்கொண்டு கொல்லச் செல்வது நீதியாமா? ஆகையால் நாம் யாவரும் யுத்தத்துக்குச் சென்று ராமலட்சுமணர்களைக் கொன்றுவிடுவோம். பிறகு ஸீதையை நீர் அடையலாம். சீக்கிரம் புறப்படும்" என்று சொல்ல ராவணன் கோபந்தணிந்து திரும்பினான். சுலோசனை யென்ற இந்திரஜித்தின் மனைவி அங்குப் பாணத்துடன்விழுந்துகிடந்த இந்திரஜித்தின் கரத்தை நோக்கி அவனுடைய பராக்ரமங்களை நினைத்துக்கொண்டு மிகவும் வருந்தி யழுதாள்.

அந்தக் கரமானது மிகவும் பிரலாபித்து அழுது வருத்தப்படும் சுலோசனைக்கிரங்கி, தன்னுடன் வந்த பாணத்தை இரத்தத்தில் தோய்த்து தரையில்—"ஏ மாதரசே! நீ சிறிதும் வருத்தப்பட வேண்டாம். சாக்ஷாத் ஆதிசேஷாவதாரமாகிய லட்சுமணருடைய சரப்பிரயோகத்தால் அறுபட்டு இப்பொழுது யான் முத்திக்குப் பாத்திரவானானேன். நீயும் ராமபிரானை யடைந்து உனது பர்த்தாவின் சிரசை யாசி; அதை உடனே உனக்குக் கொடுத்து அதனுடன் நீயும் அக்நிப் பிரவேசஞ்செய்து என்னை அடையென அநுக்கிரகிப்பார்" என்று எழுதிற்று. இதைச் சுலோசனைபடித்துப் பார்த்து மகிழ்ச்சியுற்று, ராவணனிடமும் மண்டோதரி யிடமும் அநுமதிபெற்று அலங்காரஞ்செய்துகொண்டு பல்லக்கிலேறி ராமரிடம் சென்றாள். இவள் இப்படி வருவதைப் பார்த்த வானரசைன்னியங்கள் இதோ ஸீதையை ராவணன் நமக்குப் பயந்து அனுப்பிவிட்டான் பாருங்களென்று சொல்லிக்கொண்டு அவளைப் பார்த்து ஓடிவந்து பல்லக்கைச் சூழ்ந்துகொண்டு பார்க்க அங்கே ஸீதையில்லாதிருக்கக் கண்டு பல்லக்குப்போகிகளை இவள் யாரென்று விசாரித்து அவர்கள் மூலமாகச் சுலோசனை யென்றறிந்து,

திரும்பி ராமபிரானிடம் சென்றன. சுலோசனை பிறகு ராமரிடம் சென்று பல்லக்கை விட்டு இறங்கிச் சிரங்குனிந்து பன்முறை வணங்கி, தன் பர்த்தாவின் சிரசை யாசித்தனள். ராமர் அவளைப் பார்த்து "ஏ பெண்ணே! இப்பொழுது உனக்கிரங்கி உன் பர்த்தாவைப் பிழைப்பிக்கின்றேன். நீ அக்நிப்பிரவேசம் செய்யவேண்டாம்; இது உனக்குப் பிரியமா?" என்றனர். அவள் "பிரபுவே! அப்படி என் பர்த்தா பிழைப்பாரே யாயின் மோக்ஷஹேதுவான லட்சுமணருடைய கையால் மரண முண்டாகாதாகையால், அவரைப் பிழைப்பிக்க வேண்டாம்" என்று கூறி மகிழ்ந்து ராகவரை வணங்கி வானரங்களின் மூலமாகத் தன் கணவனுடைய சிரசைக் கண்டு, அதற்கு வணங்கி அதை யெடுத்துக் கொண்டு லங்காபட்டணத்திலிருந்த இரண்டு கரங்களையும் வரவழைத்து, இவைகளோடு நிகும்பலைக்குச் சென்று அங்கிருந்த தன் கணவனுடைய சரீரத்தில் அவைகளைச் சேர்த்து அக்நி வளர்த்து, அதில் அந்தத் தேகத்தைப் போட்டு அதனுடன் தானும் பிரவேசித்தாள். உடனே இருவரும் திவ்யதேகம் பெற்று வைகுண்ட பதவியை யடைந்தார்கள்.

இதன்பின் ராவணன் தன் மித்திரர்களுடனும் சைன்னியங்களுடனும் புறப்பட்டு ராமர் முன் வந்து அவரை எதிர்த்தான். உடனே ராமர் பாணங்களைப் பிரயோகித்து, கூட வந்த அரக்கர்கள் யாவரையும் ஒழித்துவிட்டு, ராவணன் பேரில் ஒரு பாணத்தைப் பிரயோகிக்க, அவனை, அப்பாணம் தூக்கிக்கொண்டு போய் லங்கையின் மத்தியில் போட்டுவிட்டது. இப்படி விழுந்த ராவணன் எழுந்து தன்னுடைய கிருகத்திற்குச் சென்று சற்றுச் சிரமபரிகாரஞ் செய்துகொண்டபின், தூதர்களை அனுப்பித் தன் மாமனார் மயனை வரவழைத்து, அவனைக்கொண்டு மாயையால் ஸ்ரீராமபிரானன் சிரசொன்றைச் செய்வித்து, அதைக் கையிலெடுத்துக்கொண்டு ஸீதைக்குக் காட்டுவதற்காக அசோகவனம் சென்றான். இச்சூழ்ச்சியை அறிந்த பிரம்மதேவன்; ஸீதாபிராட்டியிடம் சென்று, "ஏ ஜானகி! உன்னை மோசம் பண்ணுவதற்கு ராவணன் தன் மாயையால் ராமபிரானது சிரசொன்று செய்து அதை இப்பொழுது இங்குக் கொண்டுவந்து உனக்குக்

காட்டுவான். அதைப் பார்த்து நீ சிறிதும் சஞ்சலப்படவேண்டாம்" என்று தெரிவித்துவிட்டு மறைந்தார். இவர் மறைந்த அந்த க்ஷணமே ராவணன் ஸீதையின் அருகே வந்து, ராமர் சிரசைக் காண்பித்து, "ஏ ஸீதா! இதோபார் உன் கணவனுடைய சிரசு, அவன் இறந்தான்; இனி என்னைச் சேர்" என்றான். இதைக் கேட்டதும் ஸீதாபிராட்டி தலை குனிந்துகொண்டு "ஏ துஷ்டா! அதி சீக்கிரத்தில் உன்னுடைய தலைகள் ராம பாணத்தாலடிபட்டு யுத்தகளத்தில் விழப்போகின்றன. அதை நான் பார்க்கப்போகின்றேன்" என்றாள். அம்புகளுக்கொப்பான இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டதும் ராவணன் வெட்கமடைந்து, தலைகுனிந்து, தன் கிருகஞ் சென்றான்.

இப்படியிருக்க வானரவீரர்கள் ராமபிரானிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கோடிக்கணக்கான தீப்பந்தங்களை யெடுத்துக் கொண்டு க்ஷணநேரத்தில் லங்கைக்குட் சென்று, கண்டவிடங்களிலெல்லாம் தீயிட்டு, லங்கையை எரித்தார்கள். இப்பொழுது லங்கையானது முன் மாருதி எரியூட்டிய காலத்தில் எப்படி அலங்கோலமடைந்ததோ அப்படியே அலங்கோலமடைந்தது. இவ்விதம் தன் அரண்மனைகளும் பட்டணமும் எரிவதைப்பார்த்த ராவணன் ஒரு மேகாஸ்திரப் பிரயோகஞ் செய்தான். உடனே ஆகாசத்திலிருந்து மழை பொழிந்து தீயை அவித்தமையால், வானர வீரர்கள் வெளியே ஓடிப்போய் விட்டார்கள்.

பிறகு ராவணன் தனக்கு சுக்ராசாரியர் போதித்தபடி ஆபிசார ஹோமம் செய்ய நிச்சயித்து, லங்காபட்டணத்தின் கோட்டைவாசல்களை மூடிவிட்டு, உள்ளே ஒருவரும் பிரவேசியாதபடி காவல்கள் அமைத்து, நிகும்பலையில், நடந்த ஹோமத்திற்கு இந்திரஜித்து கொண்டுபோனபடியே ஹோம திரவியங்களை எடுத்துக்கொண்டு, இரத்தத்தில் ஸ்நானஞ் செய்துவிட்டு முண்டமாலை தரித்து, இரகசியமான ஒரு குகைக்குட் சென்று, அங்கிருந்த ஹோமகுண்டத்தின் எதிரே பிரேதாசனமிட்டு அதிலுட்கார்ந்து கூட வந்தவர்களை வெளியே காவலாகவிருக்கச் செய்து, குகைத் துவாரத்தை ஒரு பெரிய கல்லைக்கொண்டு மூடி, தான் ஏகாங்கியா

யும் மௌனமாயுமிருந்து ஹோமகுண்டத்தில் அக்நிவளர்த்து அதற்கு நாற்புறங்களிலும் சதுரமாக சஸ்திரங்களைப்பரப்பி, சத்ரு சங்கார சங்கற்பஞ் செய்து பத்து வயதிற் குட்பட்ட குழந்தைகளின் தலை, மாம்சம் இரத்தம் இவைகளால் ஹோமஞ்செய்தான்.

இப்படி ராவணன் செய்த ஹோமகுண்டத்திலிருந்து ஏராளமாகப் புகை கிளம்பி வெளியே பரவிற்று. இதைப் பார்த்த விபீஷணன், சற்று யோசித்துப்பார்த்து, அதனுண்மை இன்னதென வறிந்து, ராமரிடஞ் சென்று, அவரைப்பார்த்து, "மகாபிரபுவே! இப்பொழுது லங்கையில் ஓர் இரகசியமான இடத்தில் ஓர் ஆபிசார ஹோமம் நடக்கிறது. இந்த ஹோமம் நிறைவேறுமாயின், ராவணனை யாரும் வெல்லுவதரிது" எனத் தெரிவித்தான். உடனே ஸ்ரீராமபிரான் வானரசிரேஷ்டர்களை வரவழைத்து, விபீஷணனுடைய சொற்படி நடவுங்கள், என ஆஞ்ஞாபித்தார். உடனே வானரங்கள் விபீஷணனது சொற்படியே லங்கையின் கோட்டைவாசலுக் கருகேசென்று அக்கோட்டை வாசல் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மதிலைத் தாண்டிக் குதித்து ராவணனுடைய அரண்மனைசென்று அங்கே காவலாயிருந்த அரக்கர்கள் யாவரையும் அதமாக்கிவிட்டுக் குகையைத் தேடினார்கள்; குகை அகப்படாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். இதைப்பார்த்த விபீஷணன் மனைவி சரமை யென்பவள் குகையிருக்கும் இடத்தைக் கையால் சூசிப்பித்தாள். இதைக் கண்ட அங்கதன் உடனே அவ்விடம் சென்று, குகைத் துவாரத்தில் மூடியிருக்கும் சிலையைத் தன் கால்களால் உதைத்துப் பொடியாக்கிவிட்டு, உள்ளே புகுந்து ஹோமகுண்டத்தினருகிலிருந்து தியானித்துவரும் ராவணனைக் கைமுஷ்டியினாலே குத்தினான். மற்ற வானரங்களும் வெளியிலிருக்கும் மரங்களைப் பிடுங்கிக் கொண்டு குகையினுட் பிரவேசித்து ராவணனை அடித்தன. இவைகள் ஒன்றுக்கும் ராவணன் அசையாமல் தியானத்திலிருப்பதைக்கண்டு, உடனே ராவணன் மனைவி மண்டோதரியைத் தலைமயிலைரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ராவணன் முன்னே நிறுத்தினார்கள். வானரங்கள் பிடித்திழுத்து வந்த வேகத்தினால் மண்டோதரியினுடைய ஆடை, கஞ்சுகம் முதலியவைகள் நழுவிப்போய் விட்டமையால், நிர்வாணமாக நின்று

அழுதாள். அதைக் கேட்டவுடன் ராவணன் ஹோமத்தியா னத்திலிருந்து திடுக்கிட்டெழுந்தான். ராவணன் எழுந்தவுடன் வானரங்கள் யாவும் தாங்கள் வந்தகாரியம் நிறைவேறியதென்று, நினைத்து ஸ்ரீராமரிடம் போய்ச்சேர்ந்தன.

பிறகு மண்டோதரி மிகவும் விசனத்துடன் ராவணனைப் பார்த்து, "ஏ நாதா! ஸீதையை ராமரிடம் விட்டுவிடுங்கள். இலங் கைக்கு விபீஷணனை அரசனாக்கிவிடுங்கள். நாமிருவரும் வனத் துக்குச் சென்று சுகமாகத் தவம் புரிவோம், தயைசெய்து நான் சொல்வதைக் கேட்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். ராவ ணன், "ஏ பிரிய நாயகியே' என் கருத்தைக்கேள். இப்பொழுது வந்திருக்கும் ராமர் சாக்ஷாத் மகாவிஷ்ணுவே. ஸீதை லட்சுமி தேவியே! இவைகளை நான் நன்றாய் அறிவேன். நான் ஸீதையை அபகரித்துவந்திருப்பது ராமர் கையால் மரணமடைய வேண்டு மென்றேயாம்.நான் இதன் மூலமாய்த்தேகத்தை யொழித்துபரம பதத்தை அடையப்போகிறேன். நீ எனக்குச் செய்யவேண்டிய கர்மங்களை விதிப்படி நடத்திப் பிறகு நீயும் அக்நிப்பிரவேசம் செய்து என்னுடன் பரமபதத்தை யடையக்கடவாய்" என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளிப்புறப்பட்டு இரதமேறி யுத்தத்திற் குப் புறப்பட்டான். வழியில் மொட்டையனைச் சந்தித்தான்; உடனே அவன் தலையிலிருக்கும் விசித்திரமான கிரீடங்களில் ஒன்று தலையிலிருந்து கீழே விழக்கண்டான். இவைகளைக் கண் டதும் அச்சத்துடன் யுத்தகளஞ்சென்று பாணங்களை வருஷித்து வானர சைன்னியங்களை மிகவுந் தொந்தரவு செய்தான். அப் பொழுது தன் ரதத்தில் வைத்திருந்த மயனால் செய்யப்பட்ட மாயா ஸீதையை வானரங்கள் யாவும் பார்க்க ரதத்திலிருந்தபடி யே கத்தியை எடுத்து வெட்டிக்கொன்றான். இதைக் கண்ட வானரங்கள் யாவும் பயந்து ஆ! ஆ! வென்று கூச்சலிட்டு மிகவும் வருத்தமடைந்து ராமரிடந் தெரிவிக்க ஓடின. இப்பொழுது பிரமதேவர் ஸ்ரீராமபிரான் முன்வந்து"ராவணன் ரதத்திலிருந்து கொன்றது மாயா ஸீதை ஆகையால் நீங்கள் யாவரும் வருத்தப் படவேண்டாம்" என்று கூறி மறைந்தார். ஸ்ரீராமபிரான் முத லிய யாவரும் இதைக்கேட்டு விசனத்தைவிட்டு ஸந்தோஷமடை ந்து ராவணனுடன் யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள்.

இப்பொழுது இந்திரனுடைய உத்தரவுப்படி அவனுடைய இரதசாரதியாகிய மாதலி என்பவன் அநேக சஸ்த்ரங்கள், அஸ்த்ரங்கள், அசனித்வஜம், பரந்துயர்ந்த குடை இவைகளோடு கூடிய ரதத்துடன் ராமபிரான் முன்வந்து வணங்கி "சுவாமி! இச்சமயத்தில் எங்கள் அரசன் இந்திரன் இந்த ரதத்தைத் தங்களுக்குக் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்தார். தயைசெய்து ரதத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்" எனக் கூறித் தான் கொண்டுவந்த ரதத்தை அளித்தான். ராமபிரான் அந்த ரதத்தை மகிழ்ச்சியுடன் பெற்று அதிலேறிக்கொண்டு, ராவணனுடன் பலவிதமாக யுத்தம் புரிந்தார். இப்பொழுது ராவணன் ராமபிரான் மீது ஆக்நேயாஸ்த்ரத்தையும் தெய்வாஸ்த்ரத்தையும் பிரயோகித்தான். ராமரும் அவ்வஸ்திரங்களையே பிரயோகித்து, அவைகள் தம்மீது படாதபடி தடுத்தார். பிறகு ராவணன் ஒரு ஸர்ப்பாஸ்திரப் பிரயோகஞ் செய்தான். ஏராளமான சர்ப்பங்கள் தம்மை எதிர்த்து வருவதைப் பார்த்த ராமர், கருடாஸ்திர பிரயோகஞ்செய்து அவைகளை யொழித்தார். இப்படித் தான் பிரயோகித்த அஸ்திரங்கள் யாவும் பயனற்றுப் போனதைப் பார்த்த தசானனன், மேகாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதை ராமர் ஒரு வாயுவாஸ்திரப் பிரயோகஞ்செய்து தொலைத்து உடனே ஒரு ஆக்நேயாஸ்திரப் பிரயோகஞ் செய்தார். அந்த அஸ்திரத்தைராவணன் ஒரு மேகாஸ்திரம் விடுத்து அவித்தான். பதினாயிரம் யானைகளும், இருபதினாயிரம் குதிரைகளும், நூற்றைம்பது ரதங்களும், நூறுகோடி காலாட்படைகளும் ராமபிரான் யுத்தம் செய்யும்போது மாண்டு போனால், அப்பிணக் குவியல்களுக்கிடையே ஒரு கவந்தம் எழுந்து கூத்தாடுவது வழக்கம்? இப்படி ஒரு கோடி கவந்தம் கூத்தாடினால், ராமபிரான் கோதண்டத்திலிருக்கும் மணிகளில், ஒரு மணி ஒரு தரம் சத்தமிடுவது வழக்கம். இப்பொழுது இந்த யுத்தத்தில் ராமபிரான் கோதண்டத்திலிருக்கும் இருபது மணிகளும் அரை ஜாமநேரம் கலகலவென்று சத்தமிட்டன. அச்சமயத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் முதலிய யாவரும் தங்கள் தங்கள் விமானங்களின்மேலேறி மனமகிழ்ச்சியோடு யுத்தவேடிக்கை பார்க்க ஆகாசத்தில் வந்து நின்றார்கள். அப்பொழுது ராவணன், பலபாணங்களைப் பிரயோகித்து, ஸ்ரீராமபிரானது ரதத்திலிருக்கும் அசனித்வஜத்தை அறுத்துத் தள்ளினான். உடனே ராமபிரான் தமது ரதத்தின் கொடியறுந்து போனதைக் கண்டு அருகிலிருக்கும் மாருதியை யழைத்து 'நீ ரதத்தின் பேரில் ஒரு க்ஷணநேரம் த்வஜமாக இரு" என்று

ஆஞ்ஞாபித்தார். மாருதி, “நல்லது அப்படிச்செய்கிறேன்” என்று ஒரு பனைமரத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்து ரதத்தில் நாட்டி அதன்பேரில் ஸந்தோஷத்துடன் ஏறிநின்றார். இதைக்கண்ட ராவணன் ஒன்பது பாணங்களைப் பிரயோகித்து, ரதத்தில் நாட்டியிருந்த பனைமரத்தை மாருதியுடனும், சாரதியாகிய மாதலியையும், ரதத்தில் பூட்டியிருந்த குதிரைகளையும், ராமபிரான் கையிலிருக்கும் இந்திர தநுசையும், குடையையும் அறுத்துக் கீழே தள்ளிவிட்டான். மாதலியும் மாருதியும் மூர்ச்சித்துப் போனார்கள். பிறகு க்ஷணநேரத்திற்கெல்லாம் ஹநுமார் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். ஸ்ரீராமபிரான் அவருடைய தோளில் ஏறிக்கொண்டு ராவணனோடு பயங்கரமான யுத்தம் புரிந்தார். ராவணன் பரிகாயுதத்தை எடுத்து மாருதியின் மார்பில் விடுத்தான். அனுமார் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டார்! ஸ்ரீராமபிரான் அந்தட்சணமே தமக்குச் சொந்தமான ரதத்தை நினைத்தார். உடனே அந்த ரதமானது நான்கு குதிரைகள் பூட்டப்பெற்று தாருகன் என்ற சாரதியுடன் ஆகாசத்திலிருந்து வந்து ராமர் முன் நின்றது. அதில் பல சஸ்திரங்களும், கதை பத்மம், அழகிய கழுத்தையுடைய ஸைப்பியன், ஒரு மேகம், தங்கத்தடி, இரண்டு சாமரங்கள், சார்ங்கம் என்னும் பேர்கொண்ட தநுசொன்று இவைகள் நிறைந்திருந்தன. இந்த ரதத்தைக் கண்டதும் ராமர் அதை வலம் வந்து வணங்கிச் சந்தோஷத்துடன் அதன் மேலேறி நின்று தமக்குரித்தான சார்ங்கம் என்னும் தநுசைக் கையிலெடுத்து, அதில் சிரேஷ்டமான பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து ராவணனுடைய ரதத்தைப் பொடியாக்கி, அவனைப் பயமுறுத்தினார். உடனே ராவணன் மற்றொரு தேரிலேறிக்கொண்டு ராமபிரானை எதிர்த்தான். உடனே ராமர் கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகித்து, ராவணனுடைய சிரங்களை அறுத்துத் தள்ளினார். அத்தலைகள் ஆகாசத்திற் கிளம்பி, ஓகோ!, நமக்கும் தசரதநந்தனது கையால் மரணங் கிடைத்ததே என நினைத்து மகிழ்ந்து அவருடைய பாதபத்மங்களில் வணங்க விரும்பி யுத்தகளத்தை நோக்கிச் சிரித்துக்கொண்டு வந்தன. கோரப்பற்களைத் திறந்துகொண்டு தம்மை நோக்கி வரும் அத்தலைகளை ராமபிரான் பார்த்து, இவைகள் நம்மை இம்சிக்க வருகிறதென்று எண்ணிப் பயந்து, அத்தலைகள் சின்னபின்னமாகும்படி பாணப்பிரயோகஞ் செய்தார். அப்படிச் சின்னபின்னமான அத்தலைகள் நூற்றொரு பாகங்களாகப் பிரிந்தன. சதமுக ராவணனுடைய தலைகளும் யுத்தகளத்தில் ஆயிரத்தொரு பிரிவுக

ளாக அறுபட்டனவென்பது கற்பபேதமென்று சிலர் கூறுகிறார்கள். ஸ்ரீராமபிரான் இவ்விதம் ராவணனுடைய தலைகளைச் சேதித்தும் அவன் மரணமடையாமல் முன்போலவே நிற்பதைப்பார்த்து சந்தேகங்கொள்ள, அதைக்கண்ட விபீஷணன் ராவணனது நாபியில் குண்டலாகாரமாக அமுதம் நிலைபெற்றிருக்கிறதென ராமருக்குத் தெரிவித்தான். இதைக்கேட்டதும் ராமபிரான் ஓர் ஆக்நேயாஸ்திரப் பிரயோகஞ்செய்து, அந்த அமுதத்தை வற்ற வடித்து மீண்டும் சில கணைகளைப் பிரயோகித்து, அவனுடைய சிரங்களையும், புஜங்களையும் அறுத்துத்தள்ளினார். பிறகு ராவணன் தன் பிரதான சிரசுடனும் இரண்டு கைகளுடனும் யுத்தரங்கத்தில் நின்றான். அந்தட்சணமே ராமருக்கும் ராவணனுக்கும் கண்டவர்கள் மனம் அஞ்சக் கொடூரமான யுத்தம் நடந்தது. இந்தச்சமயத்தில் ரதசாரதியாகவிருந்த தாருகன் ராமருக்கு ராவணனது மர்மஸ்தானத்தைக் குறிப்பிட்டுக் காட்டினான். உடனே ரகுசிரேஷ்டர் தசகந்தரன் மர்மஸ்தானத்தைக் குறிப்பிட்டு பிர்மாஸ்திரத்தால் அடித்தார். அந்தப் பிர்மாஸ்திரம் ராவணனது இருதயத்தைப் பிளந்து அவனையுங் கொன்றுவிட்டு ஸ்ரீராமபிரான் அம்புறாத் தூணியிற்புகுந்து தான் கிருதார்த்தனானதாக நினைத்து மகிழ்ந்தது. பின் ராவணனது தேகத்திலிருந்து ஆதித்தன்போற் பிரகாசிக்கும் ஒரு ஜோதி கிளம்பி விண்ணோர்கள் காண ரகுசிரேஷ்டரிடம் ஐக்கியமாயிற்று. இதைப்பார்த்த தேவர்கள் பரமானந்தமடைந்து ராவணாந்தகனாகிய ராமபிரான்மீது மலர்மாரி பொழிந்து, வாத்தியகோஷங்கள் செய்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் புரிந்தார்கள். அப்பொழுதே மண்டோதரியும் மரணமடைந்து தனது பர்த்தாவாகிய ராவணனுடன் வைகுண்டமடைந்தாள். பிறகு ராமபிரான் விபீஷணனைக்கொண்டு ராவணனுக்கு அபரக்கிரியை நடத்திமுடித்து அவனை லங்கைக்குள் அழைத்தேக லட்சுமணருக்கு உத்தரவுகொடுத்து, அவர் மூலமாக அவனுக்கு லங்கா ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்து, தாம் அவனிடம் நியாஸமாக வைத்திருந்த ஹநுமன் லங்கையைமீட்டு அதை ஹநுமந்தருக்குச் சொந்தமாக்கினார்; பிறகு விபீஷணன் முதலியவர்களுடன் மாருதியை அசோகவனத்துக்கனுப்பி ஸீதைக்குச் சகல விருத்தாந்தங்களையும் தெரிவிக்கச் செய்தார்.

ராவண வதமாகிய

11-வது சருக்கம் முற்றிற்று.

12-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பார்வதி! அசோகவனத்தில் சுக்ரீவன் முதலிய வானர சிரேஷ்டர்கள் அதி சீக்ரமாக ஸீதாபிராட்டிக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து, ஆடையாபரணங்களா லலங்கரித்து, பல்லக்கிலேற்றி வைத்து அநேக காவலர்களால் சூழப்பட்டுப் பற்பல வாத்திய கோஷங்கள் முழங்க, தேவதாஸிகள் நர்த்தனஞ் செய்ய, ஸ்ரீராம பிரான் முன்பு அழைத்து வந்தார்கள். உடனே ஸீதை பல்லக்கி லிருந்து கீழே இறங்கி, ராமபிரானை வணங்கி, வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றாள். ஸ்ரீராமபிரான் ஸீதை கற்புநிலை தவறாதவ ளென்பதைத் தாமறிந்திருந்தபோதிலும், உலகத்தவர்க்கு நம்பிக் கை யுண்டாக்குவதற்காக, பிராட்டியைப் பார்த்து, "ஏ வைதேகி சத்துருவினுடைய கிருகத்தில் வசித்தவளே! இனி நான் உன்னைப் பிரமதேவன் பிரார்த்தித்தபோதும் ஒப்புக்கொள்ளேன். உன் னிஷ்டப்படி நீசெல்" என்றுகூறினார். இதைக்கேட்டதும் ஸீதை வருத்தமுற்று லட்சுமணரைக்கொண்டு ஒரு சிதை அடுக்குவித்து அதில் தீமூட்டி, அதன் முன்னின்று, "அக்நிபகவானே! ராம பிரானைத் தவிர வேறுபுருஷனை நான் என் மனத்திலும் கருதிய தில்லை. இது என்பால் உண்மையாயின், நீர் சீதளமாயிருந்து என்னை ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று சபதங் கூறிவிட்டு, அக்நியில் பிரவேசித்தாள். அப்பொழுது அதை ஆகாயத்திலிரு ந்து பார்த்த தேவர்களும் தசரதரும் அவிடம் வந்து, ராமரைப் பார்த்து, "ராமா! ஸீதை கற்பிற்சிறந்த மகா உத்தமி, நீ இதில் சிறி தும் சந்தேகங்கொள்ளாதே" என்று கூறினர். இதன்மேல் ராமர் ஸீதையை ஏற்றுக்கொண்டார். அக்நிபகவான், முன் பஞ்சவடி யில் தம்மிடத்தில் ஒப்புவித்திருந்த ராஜஸ அம்சமான ஸீதையை திவ்யாலங்காரத்துடன் ராமபிரானிடம் கொடுத்தார். ராமபிரான் மனமகிழ்ச்சியுடன் ஸீதையை ஏற்றுக்கொண்டு தமது மடியில் வைத்துக்கொண்டார். ராவண சங்கார நிமித்தமாகப் பஞ்சவடி நிரத்தில் சாத்விக, ராஜஸ, தாமஸமாகப் பிரிந்த மூன்று அம்சங் களும் இப்பொழுது சேர்ந்தன. பிறகு தேவர்கள் ஸ்ரீராமபிரா

னைத் துதித்தார்கள். அப்பொழுது அவர் தேவேந்திரனைப்பார்த்து இந்த யுத்தத்தில் இறந்த வானரர்கள் யாவரும் இப்பொழுதே உயிர் பிழைத்தெழுந்திருக்க வேண்டுமென்றார். அப்பொழுதே இந்திரன் அமுத மழை பொழியச்செய்து, யாவரையும் எழுப்பினான். பிறகு ஸ்ரீராமபிரான் உயிர்பிழைத்தெழுந்த வானரவீரர்களையும் மற்றவர்களையும் பார்த்தார். அந்த வானரவீரர்களில் ஒருவன் இல்லாமலிருக்கண்டு, மாருதியை யழைத்து "ஏமாருதி! வானரவீரர்களில் ஒருவனைக் காணோமே! அவனெங்கே" என்று வினவினார். மாருதி "சுவாமி! அவனைக் கும்பகர்ணன் விழுங்கிவிட்டான். இந்த யுத்தகளத்தில் அவ்வானரத்தின் நகம், மயிர், இரத்தம், எலும்பு இவைகளில் ஏதாவதொன்று இருக்குமாயின், பொழிந்த அமுத மழையால் அவன் ஜீவித்திருக்கவேண்டும். இது நிச்சயம். ஆனால் அமுதமழை பொழிவதற்குமுன் இறந்த அரக்கர்களும் பிழைத்து விடுவார்களென்று கருதி அவர்கள் யாவரையும் இழுத்துச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டோம். அதனாலேதான் இப்பொழுது அவனை இங்குக்காணவில்லை" என்றார். இதைக்கேட்டதும் ஸ்ரீராமபிரான், அங்கு அப்பொழுது வந்திருந்த தர்மராஜனது முகத்தைப்பார்த்தார். தர்மராஜன் பயந்து அவ்வானரத்தை அப்பொழுதே அவர்முன்பு உயிர்பெற்று நிற்கச் செய்தான். இதைப்பார்த்து ராகவர் மகிழ்ச்சியுற்றார். பின் இந்திரன் ரதசாரதியாகிய மாதலியை யழைத்து, "இனி நீர் உம்முடைய ரதத்துடன் ஸ்வர்க்கலோகம் போய்ச்சேரும்" என ஆஞ்ஞாபித்தார். மாதலி அவரை நமஸ்கரித்துவிட்டுத் தன் ரதத்துடன் தேவேந்திரலோகம் சென்றான். அப்பொழுது விபீஷணன் ஸ்ரீராமபிரானைப் பார்த்து, "பிரபுவே தாங்களும் இன்று மங்கள ஸ்நானம் செய்யவேண்டும்" என்று பலவாறு பிரார்த்திக்க, ராமர் பரதனுக்குத் தாம் கூறியிருந்த உறுதி வாக்கியத்தைநினைத்து அதற்குச் சம்மதியாமல் உடனே புஷ்பக விமானத்தை வரவழைத்து வானரசேனைகளுடன் அதில் ஏறினார். பிறகு இவர்களுடன் கூட தாருகன் கருடன் மகரத்வஜன் இவர்களும் புஷ்பக விமானத்தின்மேலேறினார்கள். கடைசியாக விபீஷணன் ஸ்ரீராமபிரான் உத்தரவு

பெற்று அவனும் விமானத்திலேறினன். அங்கு வந்திருந்த தேவர்களும் தசரதரும் ராமரிடம் விடை பெற்றுக்கொண்டு தத்தம் பதிக் கேகினர்.

இப்பொழுது விமானத்திலிருந்த விபீஷணன் ராகவரைப் பார்த்து, தங்களை நான் ஒருவிஷயம் கேட்க விரும்பியுள்ளேன். அதன் உண்மையை அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கூறி "சுவாமி! பாதாள லோகத்திலிருந்துவந்த மைராவண மைராவணர்கள் உங்களிருவரையும் எடுத்தேகுங் காலத்தில் தாங்கள் மௌனமாயிருந்ததின் காரணம் யாது? அங்குச் சென்று மகாபல சாலிகளாகிய அவர்களை க்ஷணநேரத்தில் கொன்றது எவ்விதம்" என்று கேட்டான். தசரதநந்தனர் இதைக்கேட்டதும் நகைத்து "ஏ விபீஷண! மைராவண பைராவணர்களுடைய உயிர்நிலைகளாகிய வண்டுகளுக்கு மாருதியினுடைய கையால் மரணமுண்டாமென்பது பிரமதேவருடைய வரம். ஆகலால் அதை யனுசரித்து ஆஞ்சநேயரின் வருகையை நோக்கித் தாமதித்தேன். இரண்டாவது பாதாள லோகவாசிகளும் மகாபலசாலிகளுமான மைராவண பைராவணர்களிடமிருந்து ராமபிரானை மீட்டுவந்தான் மாருதி என்கிற பௌருஷம் உலகத்திலெங்கும் பரவவேண்டு மென்பதேயாம். இக்காரணங்கள்கொண்டே அவ்வரக்கர்கள் எங்களை யபகரிக்குங் காலத்தில் அவர்களைக் கொல்லவில்லை. முன் ஒரு காக்கை உருவங்கொண்டு வந்தவனை ஒரு இஷீகாஸ்திரப் பிரயோகத்தில் கண்ணை யிழக்கும்படி செய்யவில்லையா? விசுவாமித்திர யாகத்தில் என்னுடன் அமர்புரிய வந்த மாரீசனை ஒருபாணத்தால் நூறு காத வழிக்கப்பாலுள்ள சமுத்திரத்திற் கொண்டுபோய்த் தள்ளவில்லையா? அப்படிப்பட்ட என்னுடைய சௌரியம் இப்பொழுது குறைந்துவிட்டதா? ஒரு ஹுங்கார சப்தமாத்திரத்தில் அவர்களையான் கொல்ல வல்லவனன்றோ? பாதாள உலகத்தில் அவர்களோடு யான் யுத்தம் புரியுங்காலத்தில் அஸ்திரசஸ்திரங்களையும் எதிர்ப்பார்க்கவில்லை. ஆகையால் மாருதியின் சாமர்த்தியம் உலகில் பரவவேண்டுமென்பதற்கே நான் இவ்விதம் செய்தேனென்பதை அறி" என்று கூறினர். இப்படிச் சொன்னதும் மாருதி விபீஷண

னைப் பார்த்து நகைத்து " விபீஷணா! மறந்துவிட்டாய்போலும்! சேதுபந்தனஞ்செய்த காலத்தில் யான் கர்வமடைந்து இலிங்கத்தைப் பிடுங்க யத்தனித்து வாலறுபட்டதை யறியாயோ? எல்லாம் ஜகதீசனாகிய ராமபிரானுடைய திருவருளேயன்றி வேறல்லவென்பதை உணர். ஆகையால் அவ்வசுரர்களைக் கொல்வது ராமபிரானுக்கு எம்மாத்திரம்? தமது பக்தனுக்குக் கீர்த்தியுண்டாக்க வேண்டுமென்பதே ராமபிரானுடைய கருத்து" எனக் கூறினர். விபீஷணன் இதைக்கேட்டதும் ராமபிரானிடத்தில் மகோத்தமமான பக்தியை யடைந்து நமஸ்கரித்து அவரைப் பூஜித்தான்.

• பிறகு ஸீதாபிராட்டி தனது பிரிய நாயகனைப் பார்த்து "பிராணநாதா! அசோகவனத்தில் என்னிடத்தில் பரிபூரணமான அன்புவைத்து எனக்குச் சகாயமாயிருந்த திரிசடைக்குத் தாங்கள் அநுக்ரகஞ் செய்யவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். இதைக் கேட்டதும் ராமர் உள்ளம் பூரித்து ஸீதையின் வார்த்தையை மதித்து உடனே திரிசடைக்கு வஸ்திரம் திவ்யாபரணம் முதலியவைகளை யளித்து " ஏ திரிசடே! சர்வமங்களங்களையும் தந்தருளும் என் வாய்மொழியைக் கேள். கார்த்திகை, மாசி, சித்திரை, வைகாசி இந்த நான்கு மாதங்களிலும் பிராதஸ்நானஞ்செய்யும் வேதியர்களின் முதல் மூன்று தினங்களின் ஸ்நானபலனை நீ பெற்றுச்சர்வ பாக்கியங்களையும் பெறுவாய். மனிதர்களில் எவர்கள் மேற்குறித்த நான்கு மாதங்களிலும் பௌர்ணமைக்குப் பிறகு மூன்றுதினங்களில் ஸ்நானஞ் செய்யத் தவறுகிறார்களோ அவர்களுடைய ஒரு மாதப் புண்ணியத்தை என்சொற்படி நீயே கிரகித்துக்கொள்; பின்னும் இன்னொரு வரங் கூறுகிறேன் கேள். கிருக சுத்தி செய்யாமல் நடத்தும் புண்ணிய காரியத்தின் பலமும் கிருகசுத்தி செய்யாமல் செய்யும் சிராத்தபலமும் பிதிர்க்களின் கடனை விதிப்பிரகாரம் செய்து கோபிப்பானாகில் அந்தப் பலனும் காலில்நெய் தடவாமல் பாதப்ரக்ஷாளனஞ் செய்பவர்களின் பலனும் எள்ளில்லாமல் தர்ப்பணம் செய்கிறவர்களுடைய பலனும் தக்ஷிணை யில்லாமல் சிராத்தம் செய்கிறவர்களுடைய பலனும் உன்னையடையும்' என்று இவ்விதம் வரங்களைக் கொடுத்துவிட்டு அவளையும், சரமையையும்

அழைத்துக்கொண்டு விபீஷணன் சுக்ரீவன் மகரத்வஜன் முதலிய எல்லோருடனும் ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டு "ஏ ஸீதே இதோ இலங்கையைப் பார். இதுதான் சமுத்திரத்தின் மேல் சிலைகளால் கட்டிய அணை" என்று ஒவ்வொன்றாகக் காட்டி இராமேசுவரத்துக்கு நேரே வந்ததும் இதுதான் சேதுகட்ட ஆரம்பித்த இடமென்றும் இதுதான் சேது தீர்த்தம் என்றும் காட்டி விபீஷணனுடைய பிரார்த்தனைப்படி விமானத்திலிருந்து ராமர் அங்கு இறங்கிச் சேதுவைத் தமது கைக்கோதண்டத்தால் உடைத்துவிட்டார். அவ்விடத்துக்குத் தனுஷ்கோடி என்கிற பேர் உண்டாய் உலகெங்கும் பரவியது. ஆகையால் அத்தீர்த்தமும் ஸ்நானஞ் செய்கிறவர்களுக்குக் கைவல்லிய பலனைக் கொடுக்கும் மகிமையை யடைந்தது அன்று முதல் அவ்விடத்தில் கோதண்டபாணி யென்கிற ஸ்ரீராமமூர்த்தி ஆலயமேற்பட்டு பூஜிக்கப்பட்டு வருகின்றது.

இச்சமயத்தில் சம்பாதி ராமரிடம் வந்தார். ராமச்சந்திரர் அவரைத்தழுவிக்கொண்டு ஸந்தோஷமடைந்து இந்தச் சேது பந்தத்தில் உம்முடைய சகோதரன் ஜடாயுவின் பேரில் ஓர் உத்தமமான தீர்த்தமுண்டாக்குமென அதற்குச் சம்பாதி அவர்சொற்படி ஜடாயுவின் ஸந்தோஷ நிமித்தமாக ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினார். அன்று முதல் அதற்கு ஜடாயுதீர்த்தமெனப் பேர் வழங்கி வருகிறது. அதன் பிறகு ராமர் உத்தரவின் பேரில் சம்பாதியும் விமானத்தின்மேரி லேறினர். ராமர் புஷ்பகவிமானத்தி லேறிப் புறப்பட்டு ராமேசுவரத்துக்கு வந்து அங்கு ராமநாதலிங்கத்தைப் பூஜித்துவிட்டு ஸீதையைப் பார்த்து "ஏ ஸீதே! முன் இரகசியமாயிருந்து இங்கு வெளியா யிருக்கும் மந்திரார்த்தத்தைப் பார்; ஏ விதேக புத்திரி! இங்கேதான் யான் தர்ப்பசயனஞ் செய்து கொண்டேன்; இவ்விடத்தில் நவக்கிரக பூஜைக்காகச் சமுத்திரத்தின் ஒன்பது கற்கள் நாட்டப்பட்டன. இதோ சமுத்திரமும் எனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அலைகளை யடக்கிக்கொண்டு அமைதியா யிருக்கிறது பார்" என்று இவ்விதமான பற்பல ஆச்சரியங்களை ஸீதைக்குக் காண்பித்துக்கொண்டு கிஷ்கிந்தை சென்றார். அங்கே தமது வரவைக் கண்டு மகிழ்ந்து வணங்கின

வானர ஸ்திரீகள் யாவரையும் ஸீதைக்குக்காட்டி, அவர்களையும் விமானத்தி லேற்றிக்கொண்டு அங்கிருந்து பிரவர்ஷணகிரிக்குச் சென்று அதையும் ஸீதைக்குக் காண்பித்துப் பின் இருசியமூக பர்வதத்துக்குச் சென்று, அதையும் ஸீதைக்குக் காட்டி அவ்விட மிருந்து பம்பா ஸரஸை யடைந்து சுபகரமான கிருஷ்ணா நதியை யும் பீம நதியையும் காண்பித்து அங்கிருந்து கோதாவரி நதியை யடைந்து அந்நதிபால் அழகுவாய்ந்த பஞ்சவடி தீரத்திற்குச் சென்று அதையுங் காண்பித்துப் பிறகு அகஸ்திய முனிவர் சுதீக்ஷண முனிவர் அத்திரி முனிவர் இவர்களுடைய ஆச்ரமங்களை யும் காண்பித்துப் பின்னர், சித்ரகூடபர்வதஞ்சென்று, அங்குள்ள யமுனை கங்கை முதலிய புண்ணியநதிகளையும் காட்டி அப்பால் பரத்வாஜாசிரமத்திற்கு நேரே செல்ல, அம்முனிவர், பிரார்த்த னைப்படி அங்கு இறங்கிச் சுகமாகஇருந்தனர். அன்றே மாசிமாதம் சுக்லபட்சம் சதுர்தசி திதிகூடிய பதினாலாவது வருஷத்தின் கடைசிநாள். பரத்வாஜர் தமது தவமகிமையால், பூலோகத்தில் ஸ்வர்க்கத்தைச் சிருஷ்டித்து சமஸ்த வானரவீரர்களுக்கும் ஸீதா தேவியுடன் ஸ்ரீராமச்சந்திரருக்கும் தக்க பூஜை செய்தார். அப் பொழுது ரகுநந்தனர் தமது சித்தத்தில் ஆலோசித்து மாருதி யைப் பார்த்து. "ஏ மாருதி! நீ இப்பொழுதே அயோத்திக்குப் புறப்படு; போகும்வழியில் சிருங்கிபேர புரத்திலிருக்கும் எனது நண்பன் குகனுக்கு நமது வருகையைத் தெரிவி" என்று கட் டளையிட்டார். ஆஞ்சநேயர் நல்லது அவ்விதமே செய்கிறேன் எனக்கூறி ராமபிரானை வணங்கிச் சிருங்கிபேரபுரம் சென்று குகனுக்குச் சங்கதிகளைத் தெரிவித்துவிட்டு உடனே அயோத்திக் குப் புறப்பட்டார். குகனும் உடனே பரமானந்தங்கொண்டு, ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்கப் புறப்பட்டு அவரிடம் வந்துசேர்ந்தான்.

பதினான்காவது ஆண்டின் கடைசிநாள் முடிவாகப் போவ தைக்கண்டு நந்திக்கிராமத்திலிருந்த பரதன், தன் தமையன் ராமபிரான் அவரது வாக்குப்படி வாராமைக்கு வருந்தி, அக்னிப் பிரவேசஞ்செய்ய நிச்சயித்து சத்ருக்னனைப் பார்த்து, "அப்பா! யுத்தத்தில் ராமரையும், லட்சுமணரையும், ராவணன் கொன்று விட்டதாகத் தெரிகிறது. இல்லாவிடில் அவர்கள் இன்று வாரா திருக்கமாட்டார்கள். அந்த யுத்தத்தின் சகாயத்திற்காகப் பல அரசர்களை வரவழைத்தேன். நான் இன்று சூரியாஸ்தமனம்

வரையில் பார்த்துவிட்டு அக்நிப்பிரவேசம் செய்துவிடப்போகிறேன். இவ்வரசர்களுடன் நீ லங்கைக்குச் சென்று போர்செய்து ராவணனைக் கொன்று ஜனக புத்திரியாகிய ஸீதையை மீட்டுவந்து அதன் பிறகு உனது சகோதரராகிய எங்கள் மூவருக்கும் பரலோகக்கிரியையை நடத்து" என்று கூறி, சூரியனது அஸ்தமனத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இச்சொற்களைக் கேட்ட பட்டணத்து ஜனங்களும் தேசமன்னர்களும் ஊர்மிளை முதலானவர்களும் சுமந்திரன் முதலிய மந்திரிமார்களும் மற்றுமுள்ள பட்டணத்து ஸ்திரீகளும் மனங்கலங்கி வருத்தமுற்று, பரதனைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுது பரதன் அவர்கள் யாவரையும் சமாதானப்படுத்தி, தான் சரயுநதிக்குச்சென்று, அக்கரையில் சிதையடுக்கி, தீமூட்டி, ஸ்நானஞ்செய்து பற்பல தானங்களைப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்து அவ்வக்நியை ஏழுமுறை வலம்வந்து அக்நி, ரகுநாதர், ஸீதை, லக்ஷ்மணர் இவர்களுக்கு அநந்தகோடி நமஸ்காரஞ்செய்து, பின் தாய்மார்களையும் தன் குலகுரு வஸிஷ்ட முனிவரையும் வணங்கிவிட்டு, குலதேவதையைத்தியானித்துச் சாயங்காலத்தில் நதியை நோக்கியவண்ணமே வடக்கு முகமாக நின்றான். இச்சமயத்தில் அங்கிருந்த ஸ்திரீ புருஷர்கள் யாவரும் கோலாகலத்துடன் ஆரவாரித்தார்கள். ஆகாசமார்க்கமாக வந்த வாயுநந்தனர், பரதன் அக்நிப் பிரவேசஞ்செய்யச் சித்தமாயிருப்பதைப் பார்த்தவுடன், அதிவேகமாகப் பரதனருகில் வந்து வாய்தடுமாற நின்று 'ஏ பரத! நீ அக்நிப்பிரவேசம் செய்யவேண்டாம். ராமபிரான் ஸீதையுடனும் லக்ஷ்மணருடனும் பரத்வாஜாசிரமத்திற்கு வந்திருக்கிறார். வானரர்களுடன் நீ அவர்களை நாளையதினம் நிச்சயமாய்ப் பார்ப்பாய்; ராமரும் உன்னைப்பார்க்கமிகவும் ஆவல்கொண்டிருக்கிறார்" என்று அமுதத்தைச் செவிகளில் புகட்டுவதுபோல் இனிமையாகக் கூறினார்.

இவ்விதம் அமுதினுமினிய மொழிகளைக் கேட்டதும் பரதன் பரமானந்தமடைந்து, அவ்வக்நியை வலம் வந்து வணங்கிப் பின் வாயுநந்தனரைப்பார்த்து அவரையும் நமஸ்கரித்தான். மாருதியும் பரதனை வணங்கி ஆலிங்கனஞ்செய்து சந்தோஷகரமான ராவண சங்காராதி விருத்தாந்தங்களைத் தெரிவித்தார். அவற்றைச் செவியுற்ற பரதன் உள்ளம் பூரித்து மனக்கவலை யொழிந்து உடனே

பட்டணங்களைப் பதாகைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கும்படி மந்திரிகளுக்கு ஆஞ்ஞாபித்துவிட்டு, மாசி மாதம் சுக்கில பட்சம் பஞ்சமிதிதிகூடிய பதினைந்தாவது வருஷத்தின் முதல் நாளாகிய அத்தினத்தில் அதிகாலையில் ஸ்நான ஸந்தியாவந்தனாதி நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு ரகுகுல சிரேஷ்டருடைய பாதுகைகளைத்தன் சிரமீது வைத்துக்கொண்டுபட்டத்து யானை, மந்திரி முதலானவர்களுடன் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் செல்லுகையில், கோலாகலத்துடன் வரும் புஷ்பகவிமானத்தைக் கண்டான்; கண்டதும் பரமாநந்தங் கொண்டு அதிக வேகமாக எதிர்கொண்டு சென்று ராமபிரானைப் பார்த்துச் சாஷ்டங்கமாக நமஸ்கரித்தான். ராமர் தமது இரண்டுகரங்களாலும் பரதனை எழுப்பி ஆலிங்கனஞ் செய்துகொண்டதுமன்றி அக்கணமே அநந்தமான ராமரூபங்கொண்டு அங்கு வந்திருந்த யாவரையும் ஏககாலத்தில் தழுவிக்கொண்டு மகிழ்ந்தார். இப்படி அநந்தமான ராமமூர்த்திகளைப் பார்த்து, ஜனங்கள் யாவரும் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு ராமர் கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரியப் பரதனைப்பார்த்துச் சமாதானப்படுத்தி, உடனே தமது தாயார் மூவரையும் நமஸ்கரித்து, பிறகு வஸிஷ்டர் அருந்ததி இவர்களையும் நமஸ்கரித்து. பற்பல வாத்திய கோஷங்களுடன் வாரநாரிகள் நர்த்தனம் புரிய நந்திக்கிராமஞ் சென்றார். அங்குத் தமது சகோதரர் மூவர்களுடன் தீட்சா நிவர்த்தி செய்துகொண்டு சுகந்த வஸ்துக்களால் மங்கள ஸ்நாநஞ் செய்தார். அப்பொழுது, மனோகரமான நவவாத்தியங்களும் முழங்கின. குலஸ்திரீகள் யாவரும் ரத்ந தீபங்களைக் கொண்டு ராமபிரான் முதல் நால்வருக்கும் நீராஜனம் செய்தார்கள். அப்பொழுது ஸீதையும் கௌஸல்யை முதலான மாமிமார்களையும் அருந்ததி வஸிஷ்டர்களையும் வணங்கி, மற்றுமுள்ள பிராமணர்களையும் பெரியோர்களையும் கிரமப்படி வணங்கி மகிழ்ந்தாள். பிறகு கௌஸல்யை முதலியவர்கள் ஸீதையைத் தழுவிக்கொண்டு, வாத்திய கோஷத்துடன் மங்கள ஸ்நானஞ் செய்வித்து வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்தார்கள். பரதன் ஸ்ரீராமபிரான் பாதுகைகளைப் பூஜித்து, அவைகளைப் பக்தியுடன் அவருடைய பாதபத்மங்களிற்

சேர்த்து வணங்கி, அவரைப்பார்த்து "ஜகதீசா! உமது மகிமையால், என்னிடத்தில் நியாஸமாக வைத்திருந்த இந்த ராஜ்யத்தில் சைன்னியபலம் பொக்கிஷம் தானியம் முதலியவைகள் ஒன்றுக்குப் பத்தாக விருத்தியாயிருக்கின்றன. அவைகளுடன் ராஜ்யத்தைத் தங்களிடம் ஒப்புவித்தேன். அது தங்களுக்கு உரிமையானதால், அதை ஏற்றுக்கொண்டு பரிபாலிக்கவேண்டும்" என, ராமபிரானும் அப்படியே யாகட்டும் என்று மனமகிழ்ச்சியுடன்கூறிப் பரதனைத் தமதருகில் உட்காரவைத்துக்கொண்டார். பிறகுரகுநந்தனர் திவ்விய வஸ்திராபரணமணிந்து, ஸீதாதேவியுடன் ரதத்திலேறி வாத்தியகோஷங்களும் ஜயகோஷங்களும் முழங்க நாரிகள் நர்த்தனம் செய்ய, அயோத்தியாபட்டணத்திற்குள் பிரவேசித்தார். அப்பொழுது அப்பட்டணத்து மாதர்கள் யாவரும் அவரவர் வீட்டு உப்பரிகை மீதிருந்து இவர்கள் பேரில் புஷ்பங்களை வருஷித்து உடனே அவ்விடமிருந்து கீழே இறங்கி, திருஷ்டி பரிகாரமாக நீராஜனஞ் செய்தார்கள். ராமர் தமது அரண்மனை வாசலுக்கு வந்ததும் ஸீதையுடன் ரதத்தை விட்டிறங்கி ஸீதையை அந்தப்புரத்துக்கு அனுப்பி விட்டு விமானத்தைப் பார்த்து "ஏ புஷ்பகமே! நீ குபேரனிடஞ்சென்று அவருக்குச் சொந்தமாயிரு" என்று ஆஞ்ஞாபித்தனுப்பினர். புஷ்பகம் நல்லதென்று கூறி விட்டுக் குபேரனிடம் சென்றது.

ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

பிறகு ராமபிரான் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து வானரவீரர்கள் ஒவ்வொருவருக்கும் சுகமாக வசிக்கத்தக்க வீடுகளை ஏற்படுத்தும்படி மந்திரிகளுக்கு ஆஞ்ஞாபித்தார். அப்பொழுது குலகுருவாகிய வஸிஷ்டமுனிவர், ஸ்ரீ ராமபிரானுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்விக்கக் கருதி ஒரு நல்லமுகூர்த்தம் நிச்சயித்து மாருதி முதலிய நான்கு வானர சிரேஷ்டர்களைக் கொண்டு

நான்கு சமுத்திரங்களின் தீர்த்தங்களை வரவழைத்து, அநேக மங்களவாத்தியங்கள் முழங்க, அங்கு வந்திருக்கும் அரசர்களைக் கொண்டு பட்டாபிஷேக மகோற்சவத்தை நடத்தி முடித்தார்.

லட்சுமணர் ராமபிரான் பின்னாலிருந்து சந்திரப்பிரகாசம் போன்ற வெண்குடை பிடித்தார். பரதன் வலதுபக்கத்திலும் சத்ருக்னன் இடது பக்கத்திலும் நின்று இரண்டு திவ்வியசாமரங்களை யெடுத்து வீசினார்கள். மாருதி ராமருடைய ஸந்நிதானத்திலிருந்து அவரது திவ்விய பாதுகைகளைச் சிரமீது தாங்கி நின்றார். மகாபலசாலியான சுக்ரீவன் தனது கையில் ஜலபாத்திரத்தை வைத்துக்கொண்டு ஆக்நேய திக்கிலிருந்து ராமரைத் தரிசித்து வந்தான். விபீஷணன் திவ்யமான ஒரு கண்ணாடியைப் பிடித்துக் கொண்டு ஈசானிய திக்கில் நின்றான். வாலிபுத்திரன் அங்கதன் தனதுகையில் தாம்பூலபாத்திரத்தை வைத்துக்கொண்டு ஆக்நேய திக்கிலிருந்து ராமரைத் தரிசித்து வந்தான். மகாவிவேகமுள்ள ஜாம்பவான் நூதன வஸ்திரங்களை அடுக்காகக் கையிலேந்திக்கொண்டு நிருதிதிக்கிலிருந்து ராமரைத் தரிசித்து வந்தார். இவ்விதமான வைபவத்துடன் ராமபிரான் திவ்விய சாய்மானமமையப் பெற்ற சிங்காதனத்தில் வீற்றிருந்தார். லட்சுமணருக்கு இடது புறத்தில் சம்பாதியும், பரதனுக்கு இடது புறத்தில் குகனும் சத்ருக்னனுக்கு இடதுபுறத்தில் மகரத்வஜனும், ஹநுமந்தருக்கு இடதுபுறத்தில் கருடாழ்வாரு மிருந்து ராமபிரானைத்தரிசித்து வந்தார்கள். சுக்ரீவன் முதலிய நால்வருடைய இடது புறங்களிலும் சித்ரரதன், சுமந்தரன், விஜயன், தாருகன் இந்நால்வருமிருந்து தரிசித்து வந்தனர். அப்பொழுது தேவாசுரர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள் இவர்கள் ராஜாக்களுக்குரிய வெகுமானங்களைக் கையிலெடுத்துக்கொண்டு வந்து, ராமபிரானைத் தரிசித்தார்கள். ருஷிகள், மலைகள், புண்ணிய விருக்ஷங்கள், சப்த சமுத்திரங்கள் பல புண்ணிய நதிகள் இவைகள் யாவும் தங்கள் தேவரூபங்களோடு பட்டாபிஷேக மகோற்சவத்தில் ஸ்ரீராமபிரானைத் தரிசிக்க வந்தன. இப்பொழுது தேவேந்திரன் ரஞ்சனமாலை ஒன்றை வாயுபகவான்மூலமாக ராமருக்குக்கொடுத்

தனுப்ப, அவர் அதைக்கொண்டுவந்து பட்டாபிஷேகமுகூர்த்தத்தில் ராமபிரான் கழுத்தில் அணிந்தார். பிறகு தேவேந்திரனும் நவரத்னங்களிழைத்தவொரு சொர்ண ஹாரத்தை எடுத்துக்கொண்டு வந்து ஸ்ரீராமபிரானுடைய கழுத்தில் மனமகிழ்ச்சியுடன் அணிந்து தரிசித்தான். தேவர்கள் துந்துபி வாத்தியம் முழக்கினார்கள். கந்தர்வர்கள் பாடினார்கள். வாரநாரிகள் நர்த்தனஞ்செய்தார்கள். ஆகாசத்திலிருந்து ஒரு ஜாமநேரம் இடைவிடாமல் மலர் மாரி பொழிந்தது.

ஏ கார்த்தியாயனீ! ஸ்ரீராமபிரான் அரண்யவாச விரதத்தை நிறைவேற்றிய பிறகு அயோத்திக்கு வந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டு பூபரிபாலனஞ் செய்யவிரும்பி, நந்திகிராமத்திலிருந்த பரதன் என்னைப் பரம பக்தியுடன் பூஜித்தான்; அவனுக்கிரங்கி யான் ஸ்ரீராமபிரானை அவ்விதமே கொண்டுவந்து சேர்த்து அவன் எண்ணத்தை நிறைவேற்றி ராமனைப் பின்வருமாறு துதித்தேன்.

॥ ஶ்ரீஶிவ: ॥

ஸாந்த்³ரீ விசித்ரம் வாஸம் பவித்ரம்
ஸீதாகலத்ரம் ப⁴வப⁴யமாத்ரம் ।
காருண்யபாத்ரம் ஶதபத்ரநேத்ரம்
ஶ்ரீராமசந்த்³ரம் ஸததம் நமாமி ॥ 1

ஸம்ஸாரஸாரம் நிக³மப்ரசாரம்
த⁴ர்மாவதாரம் ஹ்ருதபூ⁴மிபா⁴ரம் ।
ஸதா³விகாரம் ஸுக²ஸிந்து⁴ஸாரம்
ஶ்ரீராமசந்த்³ரம் ஸததம் நமாமி ॥ 2

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌿𑌲𑌾𑌸𑌂 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑌂
𑌲𑌙𑍍𑌕𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌭𑍁𑌵𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑍍 ।
𑌭𑍂𑌦𑍇𑌵𑌵𑌾𑌸𑌂 𑌶𑌰𑌦𑌿𑌨𑍍𑌦𑍁𑌹𑌾𑌸𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 … … 𑌨𑌮𑌾𑌮𑌿 3

𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌮𑌾𑌲𑌂 𑌵𑌚𑌨𑍇 𑌰𑌸𑌾𑌲𑌂
𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌹𑌤𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌲𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌕𑌾𑌲𑌂 𑌸𑍁𑌰𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 … … 𑌨𑌮𑌾𑌮𑌿 4

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑌾𑌨𑌂 𑌸𑌕𑌲𑍈𑌃 𑌸𑌮𑌾𑌨𑌂
𑌹𑍃𑌤𑌾𑌰𑌿𑌮𑌾𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑌾𑌨𑌂 𑌵𑌿𑌗𑌤𑌾𑌵𑌸𑌾𑌨𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 𑌨𑌮𑌾𑌮𑌿

𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌨𑌯𑌨𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌗𑍁𑌣𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌵𑌚𑌸𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌂 𑌕𑍃𑌤𑌭𑌕𑍍𑌤𑌕𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 … … 𑌨𑌮𑌾𑌮𑌿 6

𑌲𑍀𑌲𑌾𑌶𑌰𑍀𑌰𑌂 𑌰𑌣𑌰𑌙𑍍𑌗𑌧𑍀𑌰𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑍈𑌕𑌸𑌾𑌰𑌂 𑌰𑌘𑍁𑌵𑌂𑌶𑌹𑌾𑌰𑌮𑍍 ।
𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌨𑌾𑌦𑌂 𑌜𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌦𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 … … 𑌨𑌮𑌾𑌮𑌿 7

𑌖𑌲𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑍇 𑌵𑌿𑌨𑍀𑌤𑌂
𑌸𑌾𑌮𑍋𑌪𑌗𑍀𑌤𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌮𑍍 ।
𑌰𑌾𑌗𑍇𑌣 𑌗𑍀𑌤𑌂 𑌵𑌚𑌨𑌾𑌦𑌤𑍀𑌤𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 … … 𑌨𑌮𑌾𑌮𑌿 8

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌰𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌮𑌯𑍇𑌰𑌿𑌤𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌮𑌨𑍋𑌹𑌰𑌂 𑌯𑍇 ।
𑌪𑌠𑌨𑍍𑌤𑌿 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾
𑌤𑍇 𑌸𑍍𑌵𑍀𑌯𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌲𑌭𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

॥ ஸ்ரீ சிவ: ॥

ஸுக்ரீவமித்ரம் பரமம் பவித்ரம்
ஸீதாகளத்ரம் நவமேககாத்ரம்
காருண்யபாத்ரம் சதபத்ரநேத்ரம்
ஸ்ரீ ராமசந்த்ரம் ஸததம் நமாமி 1

ஸம்ஸாரபாரம் நிகமப்ரசாரம்
தர்மாவதாரம் ஹ்ருதபூமிபாரம்
ஸதாவிகாரம் ஸுகஸிந்துஸாரம்
ஸ்ரீ ராமசந்த்ரம் ஸததம் நமாமி 2

லக்ஷ்மீவிலாசம் ஜகதாம் நிவாசம்
லங்காவிநாசம் புவனப்ரகாசம்
பூதேவவாசம் சரதிந்துஹாஸம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி 3

மந்தாரமாலம் வசனே ரஸாலம்
குணைர்விசாலம் ஹதஸப்ததாலம்
க்ரவ்யாதகாலம் ஸுரலோகபாலம்
ஸ்ரீ ராமசந்த்ரம் ஸததம் நமாமி 4

வேதாந்தகானம் ஸகலைஸ்ஸமானம்
ஹதாரிமானம் த்ரிதசப்ரதானம்
கஜேந்த்ரயானம் விகதாவஸானம்
ஸ்ரீ ராமசந்த்ரம் ஸததம் நமாமி 5

ச்யாமாபிராமம் நயனாபிராமம்
குணாபிராமம் வசனாபிராமம்
விச்வப்ரணாமம் க்ருதபக்தகாமம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி 6

லீலாசரீரம் ரணரங்கதீரம்
விச்வைகஸாரம் ரகுவம்சஹாரம்
கம்பீரநாதம் ஜிதஸர்வவாதம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி 7

கலௌ ஹ்ருதார்த்தம் ஸஹஜைர் விநீதம்
ஸாமோபகீதம் மனஸா ப்ரதீதம்

ராகேணைகிதம் வசனாதீதம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி 8

ஸ்ரீராமசந்த்ரஸ்ய வராஷ்டகம் த்வாம்
மயேரிதம் தேவி மனோஹரம் யே
படந்தி ஸ்ருண்வந்தி க்ருணந்தி பக்த்யா
தே ஸ்வீயகாமாந் ப்ரலபந்தி நித்யம். 9

பரமசிவன் கூறுகிறார்.

சுக்ரீவனுக்கு மித்திரரும் மிகப் பரிசுத்தமானவரும் ஸீதையை நாயகியாகக் கொண்டவரும் நவமேகம்போன்ற சரீரமுடையவரும் காருண்ய பாத்திரரும் தாமரைப் பூப்போன்ற நேத்திரமுடையவருவான ஸ்ரீராமசந்திரரே உமக்கு வந்தனம். 1

ஸம்ஸாரத்தைக் கடந்தவரும் வேதங்களை பிரகாசம் செய்பவரும், பூமிபாரத்தை தீர்த்துத் தர்மபரிபாலனஞ் செய்கிறவரும், திரிகாலங்களிலும் விகாரமற்றவரும், சுகசாகரஸாரமுமான ஸ்ரீராமசந்திரரே உமக்கு வந்தனம். 2

லக்ஷ்மீ விலாசமமைந்தவரும் உலகங்களுக் கிருப்பிடமானவரும் இலங்கையை யழித்தவரும் உலகங்களை உற்பத்தியாக்கினவரும் வேதியர்களுடைய கஷ்டநிவர்த்தி செய்து சுகப்படுத்துகிறவரும் சரத்கால சந்திரன்போன்று பிரகாசிக்கும்மந்தஹாஸவதனமுடையவருமான ராமச்சந்திரரே உமக்கு வந்தனம். 3

மந்தாரமாலை பூண்டவரும் தேமாங்கனிக் கொப்பான வாய்மொழியை யுடையவரும் நற்குண நிறைந்தவரும் ஏழுபனைமரங்களை யறுத்தவரும் அரக்கர்குல அந்தகரும் ஜகலோக பாலகருமான ராமச்சந்திரரே உமக்கு வந்தனம். 4

வேதாந்த நாதரும் எல்லாருடனும் சமனாயிருப்பவரும் கர்வத்தை யடக்குகிறவரும் தேவர்களுக்கு ப்ரதானமானவரும் பக்ஷியை வாகனமாகக் கொண்டவரும், முடிவில்லாதவருமான ராமச்சந்திரரே உமக்கு வந்தனம். 5

நிறத்திலும் குணங்களிலும்பேச்சுக்களிலும் மேன்மையான வரும் அழகான கண்களை யுடையவரும் உலகம் வணங்கத் தக்க வரும் பக்தர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிறவரு மான ராமசந்திரரே உமக்கு வந்தனம். 6

விளையாட்டுக்காகச் சரீரமெடுப்பவரும் யுத்தகளத்தில் அதி தீரமானவரும் உலகங்களின் ஸாரமானவரும் இரகு வம்சத்துக்கு ஹாரம் போன்றவரும் கம்பீரமான குரலுடையவரும் வாதத்தில் யாவரையும் அடக்கவல்லவருமான ராமசந்திரரே உமக்கு வந்த னம். 7

துஷ்டனுக்கு யமன் போன்றவரும் சுவஜன வணக்க முடையவரும் சாமவேதத்தால் துதிக்கப்பட்டவரும் எப்போதும் தெளிவான மனமுடையவரும் பாடல்களால் துதிக்கப்பட்டவரும் வாசாமகோசராருமான ராமச்சந்திரரே உமக்கு வந்தனம். 8

ஏ ராமசந்திரா! மனோகரமாய் இப்பொழுது நான்செய்த உமது துதியாகிய இந்த அஷ்டகத்தைப் பக்தியுடன் படிப்பவர்க ளும் கேட்பவர்களும் இஷ்டார்த்தசித்திகளைப் பெறுவார்களாக என்று ராமசந்திரரைத் துதித்துவிட்டு அச்சபையின் கண் இருந் தேன். அச்சமயத்தில் மகானுகிய தசரதர் தேவசேனைகள் சூழ ஓர் ரதத்திலேறிக்கொண்டு சூரியப்பிரகாசம்போன்ற ரூபத்துடன் ராமபிரான் சபைக்கு வந்து, தமது சகோதரருடனும் ஸீதா பிராட்டியுடனும் பட்டாபிஷேகமகுடஞ் சூட்டப் பெற்றுச் சிங்கா தனத்தில் வீற்றிருக்கும் ராமரைப் பார்த்து பரமாத்மாவாகிய அவரைத் துதித்து மகிழ்ந்து பின்வருமாறு கூறினர். 9

தசரதர் கூறுகிறார்.

ஏ மகா பாகுவே! நீ பதினான்கு வருஷகாலம் வனவாசத்தை முடித்து அயோத்திக்கு வந்து இப்பொழுது பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு பந்துக்களுடன் சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்ட நான் தன்னியனானேன். எனது தாய் தந்தையரும் தன்னிய ரானார்கள். நமது குலமே தன்னியமாயிற்று. நம்தேசமும் தன்

னிய மாயிற்று. இம்மஹோத்சவத்தைப் பார்த்து மகிழும் உன் தாய் கௌஸல்யையும் தன்னியையாளுள் என்று சொன்னார்.

இவ்விதம் கூறிய தசரத மகாராஜனை ராமபிரான் வணங்கினார். லட்சுமணன் பரதன் சத்ருக்னன் மந்திரிமார்கள் கௌசல்யை முதலிய பட்ட மஹிஷிகள் யாவரும் ரதத்தின் பேரிலிருக்கும் தசரதமகாராஜனை மகிழ்ச்சியுடன் வணங்கினார்கள். அப்பொழுது தசரதர் அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே க்ஷேமம் விசாரித்துவிட்டு ராமசந்திரனது பூஜையை ஏற்றுக் கொண்டு என்னுடன் அவ்விடம் விட்டுத்திரும்பினார். பிறகு எல்லாரும் அவரவரிடம் போய்ச் சேர்ந்தார்கள். நானும் இந்தக் கைலயம் பதிக்கு வந்து சேர்ந்தேன். இவ்விதமான மஹோத்சவத்துடன் சர்வலோக சுககரரான ஸ்ரீராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடந்தபின், பூமி செழிப்புற்றது. மரங்கள் எல்லாம் பூத்துக் காய்த்தன. வாசனையில்லாத புஷ்பமும் வாசனையை யடைந்தது. இச்சமயம் ராமபிரான் பணங்களைக் கோடிக் கணக்காகவும் அசுவங்கள் பசுக்கள் விருக்ஷங்கள் இவைகளை லட்சக்கணக்காகவும் வேதியர்களுக்குத் தானம் செய்தார். பிறகு சூரியகாந்திக்குச் சமமான ஒளியுள்ள நவரத்னமயமான ஒரு மாலையை எடுத்து மகிழ்ச்சியுடன் சுக்ரீவனுக்குக் கொடுத்தார். விபீஷணனுக்கு ஒரு சிரோ பூஷணத்தைப் பரிசளித்தார். அங்கதனுக்கு இரண்டு புஜ கவசங்களைப் பரிசளித்தார். கோடிசந்திரப் பிரகாசம் பொருந்திய ஒரு ரத்னமாலையை ஸீதாதேவியிடம் கொடுத்து "ஏ பிரியநாயகி! இந்த மாலையை உனக்குப் பிரியமானவனுக்குக் கொடு" என்று கொடுக்க, அதை ஸீதாதேவி அன்புடன்வாங்கி முன்னேயிருந்த ஹநுமந்தருக்கு மனமுவந்தளித்தாள். மாருதி அதை வாங்கித் தமது கழுத்தில் அணிந்துகொண்டு மகா கௌரவம் பெற்று விளங்கினார். அப்பொழுது ராமர் ஹநுமாரைப் பார்த்து "ஏ மாருதி! உன் விஷயத்தில் எனது மனம் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறது. உனக்குவேண்டிய வரங்களைக்கேள், அவைகளைக் கொடுக்கிறேன்" என்றார்.

இதைக்கேட்ட ஹநுமார் 'ஏநாதா! உமதுநாமத்தைஸ்மரித்து
நான் இன்னும் திருப்தியடையவில்லை; ஆதலால் இவ்வுலகத்தில்
உமது திருநாமம் பிரசாரமாய் உள்ளமட்டும் அடியேன் உமது
நாமோச்சாரணத்தைச் சலிப்புறாமல் செய்துகொண்டிருக்க
வேண்டும். எனது சரீரமும் அதுவரையிலிருக்கவேண்டும். எங்
கெங்கே உமது சரித்திரம் நடைபெறுகிறதோ அங்கங்குத்தவறா
மல் யான் சென்று அதைச்சிரவணம் செய்யவேண்டும். தேவால
யம் நதிதீரம் தடாகம் நடைவாவி முதலிய இடங்களிலன்றி, மற்ற
இடங்களில் நடக்கும் உமது சரித்திரத்தின் மகிமை ஆறுநாழிகை
வழிக்கப்பாலும் விளங்கவேண்டும். இவைகளேயான் விரும்பிய
வரங்கள்' என்று தெரிவித்தார். உடனே ராமபிரான் 'நீ கேட்டப
டியேயாவும் நடை பெறும். நீ முக்தனாகி இந்தக் கற்பகாலம்
முழுவது மிருந்து இதன் முடிவில் எனது சாயுஜ்யம் பெறுவாய்;
இதிற் சிறிதும் ஐயமில்லை" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிறகு ஸீதாபிராட்டி ஹநுமந்தரைப்பார்த்து 'ஏ மாருதி!
நீரிருக்கும் கிராமம் தோட்டம் பட்டணம் பசுக்கொட்டடி தேவா
லயங்கள் நதிதீரம் க்ஷேத்திரங்கள் தீர்த்தங்கள் தடாகக்கரைகள்
நந்தவனங்கள் அரசமரம் ஆலமரம் பிருந்தாவனம் முதலியவைக
ளில் உலகத்து ஜனங்கள் உம்மை வணங்கித் தாங்கள் இடையூறு
நீங்கும்பொருட்டு உமது மூர்த்தியைப் பூஜிப்பார்கள். உம்மை
நினைத்தவர்களுக்குப்பூதம் பிரேதம் முதலிய துஷ்டகிரகங்களின்
தோஷம் சிறிதும் அணுகாது' என்று அன்புடன் வரமளித்தாள்.
அங்குவந்திருக்கும் மற்றவானரவீரர்கள் யாவருக்கும் மதிப்பிடற்
கரியஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலியவைகளை ராமர் பரிசளித்
தார். பிறகு சுக்ரீவன் முதலிய வானரர்கள் விபீஷணன் மகாத்
வஜன் சம்பாதி குகன் மற்ற அரசர்கள் முதலியவர்கள்யாவருக்
கும் அவரவர்களுக்குத் தக்கபடி வஸ்திராபரணங்களை வெகுமதி
யாகக் கொடுத்து மகிழ்ந்தனர்.

இதன் பின் ராமபிரான் எல்லாருடனும் போஜன சாலைக்குச்
சென்று போஜனம் செய்தார். ராமர் போஜனம் செய்து முடியும்
தருணத்தில் மாருதி எழுந்திருந்து அவர்முன்பு சென்று மூக்

காலியின்மேல் வைத்திருக்கும் பக்குவான்னங்கள் நிறைந்த சொர்ணபாத்திரத்தைத் தமது இடதுகையால்எடுத்துத் தூக்கிப்பிடித்துக் கொண்டு ராமரது போஜன சேஷத்தைத் தாம் புசித்துவிட்டு மீந்ததை மற்ற வானரவீரர்களுக்குங் கொடுத்தார். அப்பொழுது விபீஷணன் முதலியவர்களும் தங்கள் தங்கள் போஜனஸ்தானத்தை விட்டு உடனே எழுந்திருந்து, மாருதியைப்பார்த்து 'ஏ மாருதி! நீ நல்ல காரியம் செய்தாய்' என்று அவரைத் துதித்து விட்டு அவர் கையில் வைத்திருக்கும் ராமபோஜன சேஷத்தை எடுத்துப் புசித்தார்கள். மற்றவர்களும் அந்தப் போஜனத்தை விரும்பி ஓடிவந்தார்கள். இது ஒரு கோலாகலமாக இருந்தது. இதை ராமரும் ஸீதையும் பார்த்து மகிழ்ந்து நகைத்தார்கள். சுக்ரீவன் முதலியவர்கள் இவ்விதமாகப் பல கோலாகலங்களைச் செய்துகொண்டு சுகமாகச் சிறிதுகாலம் ராமபிரானோடு வசித்தார்கள்.

இப்படி யிருந்து வருகையில் புஷ்பக விமானமானது மறுபடியும் ராமபிரான் முன்வந்து வணங்கி "ஏ மகாபிரபுவே! நான் இப்பொழுது குபேரன் உத்தரவுப்படி இங்கு வந்திருக்கிறேன். அவர் எனக்குச்செய்த உத்தரவாவது—"ஏ விமானமே! நீ முன் ராவணனால் ஜயிக்கப்பட்டு, அவனிடமிருந்தாய்; இப்பொழுது ராவணனை ராமர் ஜயித்து விட்டபடியால் நீ அவரிடம் சென்று அவர் பூவுலகத்திலுள்ள வரையில் நீ அவர் சுவாதீனத்திலிருந்து வரவேண்டும். அவர் வைகுண்டத்துக்குச் சென்றபின் நீ என்னிடம் வரவேண்டும். ஆகையால் நீ ராமபிரானிடம் செல் என அஞ்ஞாபித்தார்" என்று விமானங் கூறியது. உடனே ராமர்விமானத்தைப்பார்த்து 'நீ சுக்ரீவாதி வானரங்களை அவரவர்களிருப்பிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு பின், இந்த அயோத்தியா பட்டணத்துக்கு வெளியில் வாசஞ்செய்து வா' எனக் கட்டளையிட்டார். அக்கட்டளைப்படியே புஷ்பகம் சுக்ரீவன் முதலியவர்களை அவரவர்களிருப்பிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, அயோத்தியா பட்டணத்துக்கு வெளியே வாசஞ்செய்து வந்தது. அன்று முதல் விபீஷணன் லங்காபட்டணத்திலிருந்து தருமநெறிதவறாமல் ராஜ்ய பரிபாலனஞ்செய்து வந்தான்.

மகரத்வஜன் பாதாளலோகத்தைத் தர்மமாக ஆண்டுவந்தான். அப பொழுது கருடன் சம்பாதிக்கு யுவராஜ்யபட்டாபிஷேகஞ்செய்து தன் ராஜ்யத்தில் வைத்துக்கொண்டான். வானராதிபதியாகிய சுக்ரீவன் கிஷ்கிந்தா ராஜ்யத்தை நீதி தவறு தாண்டுவந்தான். குகன் சிருங்கி பேரபுரத்தில் ஸந்தோஷத்துடன் அரசாண்டு வந் தான். வாயுநந்தனராகிய மாருதி ராமரை வணங்கிவிட்டுத் தவம் புரிய இமயமலைச் சாரலுக்குச் சென்றார். விபீஷணன் முதலிய யாவரும் ஐந்து, ஏழுநாட்களுக் கொருதடவை ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்க அயோத்திக்கு வருவதும் அங்கு வந்து ஐந்து ஏழுநாள் ராமருடன் வசித்து விட்டுப் பிறகு தங்கள் தங்கள் பட்டணஞ் செல்வதுமாக இருந்துவந்தார்கள். லட்சுமணர் பிரியங்கொள் ளாதிருந்தும் ராமர் அவருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வித்து, தாம் பிரஜைகளிடத்தில் மிக்க அன்புபாராட்டி அவர்களுக்குச் சந்தோஷமுண்டாகும்படி ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார். லட்சுமணர் ராமரிடத்தில் மிக்க பக்தி செலுத்திக்கொண்டு அவருடைய பணிவிடையிலேயே புத்தி செலுத்திவந்தார்.

ஏ தேவி! முன் விசுவாமித்திரர் யாகஞ்செய்தகாலையில் அவர் யாகத்தை நடத்த * அவபிருத ஸ்நானம் செய்து முடித்தாரென் றும், ஸ்ரீராமபிரான்யுத்தயாகத்தைஅப்பொழுதே ஆரம்பித்து, முடிக்காமல் நிறுத்தினரென்றும் கூறியிருக்கிறேன் அல்லவா ? அந்த யுத்தயாகத்தை ஸ்ரீ ராமபிரான் பட்டாபிஷேகம் பெற்றுத் தமது பதவியிலிருந்து இப்பொழுது முடித்தார். இந்த ரணயா கத்தை விஸ்தாரமாக உனக்குக்கூறுகிறேன் கேள்-இந்த ரணயாகத் துக்கு அக்நிகுண்டம் யுத்த பூமியில் சத்ருக்களுக்குப் பின்னிடா மல் தைரியமாய் எதிர்த்து நிற்பது தான்(1) வேதவிதி என்றும் பிர்மஸத்வம் என்றும் சொல்லப்படும். யுத்தத்தில் உண்டாகும்

---

* தீட்சையை வகித்து, அதன் முடிவில் செய்யும் ஸ்நானம்.

1 ஓர்பிடி தர்ப்பையை முறுக்கி ஒன்றாய்க் கட்டியிருப்பது.

பிர்மஸத்வம்—பிர்மதேவருக்கு முக்கியமானது.

ஆயுதங்களின் சப்தமே (2) கடாடோபம்; பாணங்களைக் கற்களிற் றீட்டுவதே (3) சுருக் சுருவங்களைத் துடைப்பதாகும். பாணங்களைச் சுத்திசெய்வதற்காகத் தரையில் பரப்புவதே (4) பரிஸ்தரணம்; யுத்தத்தில் ஒவ்வொருவர் மனத்திலும் உண்டாகும் தைரியமே(5) பரிசமூஹனம். யமனே யகாக்நி. மாம்சத்தை அக்நியில் ஆகுதிபண்ணச் சாதகமான (6) சுருவம் பாணமே. சத்ருக்களுடைய தேகத்தை அறுப்பதினால் பெருகும் ரத்ததாரையே (7) வசோர்த்தாரை. யுத்தகளத்திலுண்டாகும் பயங்கரமான ஹாஹா காரமே(8) ஓங்காரமும்(9) வஷட்காரமுமாம். சஸ்திரங்களின் காந்தியே யகாக்நியின் ஜ்வாலை. சரீரங்களிலிருந்து உண்டாகும் வேர்வையே புகை. யாக குண்டத்திலிருந்து கிளம்பி ஓங்கி எரியும் ஜ்வாலையைத் தணிக்கும் (10) பிரஷதாஜ்யஸேசனமானது இங்கு உத்தமாஸ்திர ப்ரயோகமேயாம். தீப பலியென்பது இங்கு உணர்வுடன் உயிரை இழப்பதே. பலி தீபங்களை யாககுண்டத்துக்கு எடுத்து வருகிறவர்கள் தேகாபிமானம் வைத்தவர்களேயாம். சிரங்களை அறுத்துக்குவிப்பதே பூர்ணாகுதி. ஜயவீரர்கள் இடசாரி வலசாரியாக வருவதே பிரதக்ஷிணங்கள். ஸ்ரீராமபிரான் தமது பதவியையளிப்பதே யாகதக்ஷிணையாம். தேவர்கள் பொழியும் மலர்மாரியே வேதியர்களுடைய ஸ்நானம். யுத்தத்தில் ஜயம் பெறுவதே யாகசிரேயஸ் பெறுவது. ஸ்ரீராமரைச் சேர்ந்தவர்கள் ஆனந்திப்பதே சராசர ஆனந்தமாம். யுத்தத்தில் மாண்டவர்களைத் தின்று பூதங்கள் திருப்தியடைவதே பிராமணபோஜன

2 யகடாம் பீகம்.
3 ஹோம நெய் விட்டிருக்கும் பாத்திரம்.
4 அக்நிக்கு நாற்புறமும் சதுரமாகத் தர்ப்பங்களைப் பரப்புதல.
5 அக்நிக்குச் செய்யும் அலங்காரம்.
6 நெய்யை எடுக்கும் மரக்கரண்டி.
7 மந்திரோச்சாரணம் முடியும்வரையில் ஹோமகுண்டத்தில் இடையறா தொழுகும் நெய்த்தாரை.
8 ஓம்—ஆரம்பம்.
9 வௌஷட் முடிவு.
10 அக்நியில் நெய் பொட்டுப் பொட்டாய் விடுதல்.

மாம். யாகபலியைப் புசித்த தோஷமுடையவனை தேகாபிமான மேலிட்டு ராமபிரான் திருக்கரத்தில் மரணமடையப் பயந்து ஓடிப்போய் பந்தத்திலுழலுகிறவனும். சுபாகுவுடன் ராமர் யுத்த யாகத்தை ஆரம்பித்ததும் விசுவாமித்திரர் யாகம் ஆரம்பித்ததும் ஒரே தருணத்திலாயினும் விசுவாமித்திரர் அப்பொழுதே தாம் ஆரம்பித்த யாகத்தை முடித்துவிட்டார். ஸ்ரீ ராமபிரான் கலாக்நி திருப்தியடையாமலிருந்ததைக்கண்டு அவனை மறுபடியும்திருப்தி செய்து வைப்பதற்காகத் தாம் ஆரம்பித்த ரணயாகத்தைப்பூர்த்தி செய்யாமல் நிறுத்தினர். ராமபிரான் இந்த ரணயாகத்தில் சித்ராகுதி செய்யக்கருதி பூமியைப் பாத்திரமாக்கி, அதை விராதனுடைய ரத்தத்தால் பாத்திர புரோக்ஷணைசெய்தார். சூர்ப்பநகையினுடைய மூக்கையும் செவியையும் அறுத்ததே பவித்திர தர்பையின் சேதம். ஐந்து பிராமணுகுதிகளுக்குப் பதிலாக கரன் தூஷணன் திரிசிரஸ் மாரீசன் கவந்தன் இவ்வைந்து பேர்களையும் க்ஷணத்தில் கொன்றார்.

முடிந்த சிகையை அவிழ்ப்பதற்குப் பதிலாகச் சபரிக்குப் பந்தத்தை யொழித்து முத்தியளித்தார். பிறகு சுத்த ஜலத்தை ஸ்பரிசிப்பதற்குப் பதிலாக வாலியின் நேத்திரத்திலடித்து அந்த ரத்தத்தை ஸ்பரிசித்தார். லங்கையாகிய அடுப்பில் தீமூட்டி, அதில் கும்பகர்ணன் இந்திரஜித்து இவர்களாகிற அன்னம் பக்குவம் பண்ணப்பட்டது. அரக்கர்கள் யாவரும் சாக பதார்த்தமாகச் சேதிக்கப்பட்டார்கள். சரணன் முக்கியமான அன்னமானன், பிரகஸ்தன் வடகமானன், நிகும்பன் அப்பளமானன், கும்பன் லவணமானன், காலநேமி என்பவன் பாயஸமானன், அதிகாயன் சர்க்கரையானன், ஐராவணன் பாலானன், மைராவணன் நெய்யானன், ராவணன் யுத்தயாகத்தின் சமாப்தியில் ததியோதனமானன். இவைகளைப் பூமியாகிற பாத்திரத்தில் வைத்துக் காலனாகிற அக்நிக்கு நிவேதித்தார். அங்கு மிஞ்சிய தோல் மயிர் எலும்பு முதலியவைகளே பலி போடுவதாயின. இவ்விதம் யமனாகிற அக்நி திருப்தி யடைந்ததின்மேல், ராமபிரான் அயோத்தியில் பிரவேசித்ததே ரணயாகத்தின் முடிவாம்.

பிறகு பட்டாபிஷேகம் செய்து கொண்டதே ரணயாகத்தின் அவப்ருத ஸ்நாநனமாம். சகல உலகங்களுக்கும் மங்கள முண்டாகவேண்டு மென்பதைக் கோரி ஸ்ரீ ராமபிரான் இந்த ரணயாகத்தை உலகமறிய நடத்தி முடித்தார். ஏ பார்வதி! இந்த ரணயாக வைபவத்தை நீயும் அறிய உனக்குக் கூறினேன். ஸ்ரீராமர் பரமாத்மா, அதிநிர்மலர், நான் என்னும் அகங்காரம் அற்றவர், நிர்விகாரர், தமக்குத்தாமே தமது ஆனந்தத்தை அநுபவிப்பவர், ஆயினும் அவர் உலகரக்ஷண நிமித்தமாக அவதரித்து, கிரகஸ்த தர்மத்தை ஆச்ரயித்துப் பற்பல தர்மங்களை நடத்தி ஹிதோபதேசம் செய்து ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தார். அக்காலத்தில் ஸ்திரீகள் அமங்கலையானதில்லை. சர்ப்பங்கள் தீண்டுவதில்லை. ஒருவரையும் நோய் அணுகுவதில்லை. உலகத்தில் ஒரு தந்தை தன் குழந்தைகளைப் பரிபாலிப்பதுபோல் பிரஜைகளைத் தமது குழந்தைகளாகவே பாவித்து, அவர்களை ரக்ஷித்து ஸீதையுடனும் சகோதரர்களுடனும் சாகேத நகரத்தில் சுகமாக வசித்துவந்தார்.

ராமர் ராஜ்ய பட்டாபிஷேகமாகிய

12-வது சருக்கம் முற்றிற்று.

13-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பார்வதி! இப்படிச் சர்வ மங்களங்களும் உலகத்தில் குறைவற விளங்க ராஜ்ய பரிபாலனம் நடாத்தி வரும் ராமசந்திரனைத் தரிசிப்பதற்காக அநேக முனிபுங்கவர்களோடு கும்பமுனிவர் புறப்பட்டுச் சாகேத நகரத்துக்குவந்து, சபையில் ஆனந்தமாக வீற்றிருக்கும் ராமபிரானைக் கண்டார். ராமபிரான் ரிஷிகளைக் கண்டதும் என்று மடையாத மகிழ்ச்சியை யடைந்து சிங்காஸனத்தை விட்டெழுந்திருந்து, அவர்களுக்கு அர்க்கிய பாத்தியாதி உபசாரங்களைச் செய்து ஆசனங்களளித்து அவைகளில் வீற்றிருக்கச்செய்து வணங்கினார். முனிவர்கள் ராமபிரான் செய்த பூஜையால் மனமகிழ்ச்சி யடைந்து அவர் வினவிய குசல பிரச்னைகளுக்குப் பதிலளித்துவிட்டு, ராமருடைய யோகக்ஷேமம் விசாரிக்கலானார்கள். ஏ மகாபாகோ! ரகுநந்தனா! யாவற்றினும் உமக்கு க்ஷேமந்தானா? மேகநாதன் முதலிய அசுரர்களை நீர் கொன்றது எங்களதிர்ஷ்டவசமேயாம். அரக்கர்கள் யாவரையும் கொன்று கிருதார்த்தராகிச் சுகமாக வசித்துவரும் உம்மை நாங்கள் இன்று தரிசிப்பதும் மகிழ்வதும் எங்களுடைய அதிர்ஷ்டமேயாம்''—என்று கூறினார்கள். இப்படி முனிபுங்கவர் கூறிய சந்தோஷ வசனங்களைக் கேட்ட ராமர் புன்சிரிப்புக் கொண்டு ''முனிபுங்கவர்களே! தாங்கள் மேகநாதனை முன்வைத்துக் கூறியதற்குக் காரணம் யாது'' எனவினவினார்.

மேகநாத ஜனனம்.

அதைக்கேட்ட அம்முனிவர் யாவரும் அகஸ்திய முனிவருடைய திருமுகத்தை நோக்க, அவர், ரகுநந்தனரைப் பார்த்து, 'ஏ ராமா! மேகநாதனுடைய ஜனனம், கிருத்தியம், வரப்பிராப்தி முதலியவைகளைச் சுருக்கமாய்க் கூறுகிறேன் கேளும். முன் கிருதயுகத்தில் பிரம்ம புத்திரராகிய புலஸ்தியர் என்பவர் இருந்தார். அவர் திரணபிந்துஎன்பவருடைய புத்திரியைமணந்து அவளிடத்

தில் மூவுலகமும் புகழத்தக்க விச்ரவசு என்னும் புத்திரனைப்பெற்றார். அவர் பிரமசரிய விரதந்தரித்து நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்து நன்குணர்ந்து, பரத்வாஜ முனிவருடைய பெண்ணை மணந்து, அவளிடத்தில் வைச்ரவணன் என்கிறபிள்ளையைப்பெற்றார். அந்த வைச்ரவணன் நெடுங்காலம் பிர்மதேவனை நோக்கி அரியதவம் புரிந்தான். அவனுடைய தவத்துக்கிரங்கி, பிர்ம்மதேவன் அவனுக்குத் தரிசனந்தந்து, நினைத்த இடங்கட்கு அக்கணமே செல்லும்படியான புஷ்பகம் என்ற ஒரு விமானத்தையும் குறைவற்ற செல்வ ஸம்பத்தையும் கொடுத்து நிதிபதியாக்கி ஆசிர்வதித்துச் சென்றனர். அந்த வைச்ரவணன் தனக்கு பிர்மதேவன் கொடுத்த ஜோதிர்மயமான புஷ்பகவிமானமேறித் தன் தந்தையைத் தரிசிக்கச்சென்று அவரை வணங்கி, “பிதாவே! பிர்ம்மதேவர் எனக்குச் செல்வ சம்பத்தைக் கொடுத்து வாசஸ்தலம் ஒன்றைக் குறிப்பிடாமல் சென்றனர். அவர் கொடுத்ததை வைத்துக்கொண்டு நானெங்கிருப்பது? தாங்கள் விசாரணை செய்து எனக்கு ஓரிடம் குறிப்பிடுங்கள்” என்று கேட்டான். விச்ரவசுதமது புத்திரனுடைய வேண்டுகோளுக் கிரங்கி “ஏ மைந்த! விசுவகர்மாவாகிய தெய்வதச்சனால் நிர்மாணஞ் செய்யப்பட்டுத் தெற்குச் சமுத்திரத்தையே தனக்கு அகழியாகக் கொண்ட லங்கை யென்றொரு பட்டணமிருக்கிறது. அதில் வசித்த தைத்தியர்கள்யாவரும் விஷ்ணுவினுடைய தொந்தரவுக்குப்பயந்து, அப்பட்டணத்தைவிட்டுப் பாதாள உலகஞ்சென்றுவிட்டனர். அங்குச் சென்று நீ சுகமாக வசித்து வா” என்றுகூறியனுப்பினார். இதைக் கேட்டதும் வைச்ரவணன் தன் தந்தையை வணங்கி அவருடைய அநுமதிபெற்று லங்கைக்குச்சென்று அங்குக்குடியேறி நெடுங்காலம் வசித்து வந்தான். பின்னொரு காலத்தில் சுமாலி என்ற அரக்கன், கேகசி யென்ற தன் புத்திரியுடன் பூலோகத்தில் சஞ்சரித்து வருகையில், வைச்ரவணன் புஷ்பகவிமானமேறி வருவதைக்கண்டான். அப்பொழுது சுமாலி, அரக்கர்கள் யாவருக்கும் ஒருநன்மைபுரியவிரும்பிச் சற்று யோசித்துப்பார்த்து, “ஏ பெண்ணே! இங்கு விச்ரவசு என்ற முனிவர் இருக்கிறார். அவரிடம் சென்று அவரை வணங்கி, அவருக்கு மகிழ்ச்சியைத்தந்து “எனக்

குப் புத்திர பாக்கியம் தந்தருளும்" என்று பிரார்த்திப்பாயேயா னால், அவர் அவ்விதமே அநுக்கிரகிப்பார். அப்படி உனக்குப்பிறக் கும் புத்திரர்களால் அசுரர்குலத்துக்கு நன்மையுண்டாம்" என்று கூறியனுப்ப, அந்தக்கேகஸி உடனே விச்ரவசு முனிவரிடம் சென்று, அவரை நமஸ்கரித்து, அவர் எதிரில் தன் கால் பெருவிர லால், தரையில் கீறிக்கொண்டு தலை குனிந்து நின்றாள். அப்பொ ழுது அந்திநேரமாயிருந்தது. இப்படி நிற்கும் கேகஸியை அம் முனிவர் சற்றுநேரத்திற் கெல்லாம் கண்விழித்துப் பார்த்து, "மாதே! நீயார்? இங்கு யாதுகாரணம்பற்றிவந்தனை?" என்று வினவ, அவள் "சர்வக்ஞ! எல்லாம் தங்கள் சித்தம் அறிந்ததே?" என்று கூறிவிட்டு மௌனமாயிருந்தனள். முனிவர் சற்றுநேரம் தியானத்திலிருந்து "உன் உள்ளக் கருத்தை யானறிந்தேன். நீ என்னிடம் புத்திரபாக்கியம் பெற விரும்புகின்றாய்! சிறுத்த இடை யுள்ளவளே! நீ விரும்பி வந்திருக்கும் வேளை கொடூரமான சந்தி காலமானதால் உனக்கு இரண்டு பிள்ளைகள் கொடூரமான அரக்கர்களாகப் பிறப்பார்கள்" என்று அநுக்கிரகித்தார். இதைக் கேட்டதும் கேகஸி அந்தமுனிவரைப்பார்த்து, "ஏ மகாநுபாவ! பரமசாந்த சீலராகிய தங்களை யடைந்த அடியேனுக்கு அப்படிப் பட்ட புத்திரர்கள் உண்டாகுமெனக் கூறுவதைக்கேட்க என் மனம் வருந்துகிறது" என்றாள். முனிவர் "ஏ பெண்ணே! நீ வருந் தேல். உனக்கு மூன்றாவதாக ஒருபுத்திரன் பிறப்பான். அவன் சாந்தசீலனும் மகாபுத்திசாலியாயும், பரமபக்தசிரோமணியா யும் இருப்பான்" என்று அநுக்கிரகித்தனுப்பினார். பிறகு கேகஸி அந்தப்படியே காலக்கிரமத்தில் முதலில் ராவணன் கும்பகர்ணன் என்கிற இரண்டு பிள்ளைகளையும் பிறகு கிரௌஞ்சை,சூர்பணகை, கும்பீநஸி என்னும் மூன்று பெண்களையும் கடைசியில் விபீஷணன் என்கிற புத்திரனையும் பெற்றாள். அவர்களில் முதலிரண்டு பிள்ளை களும் மூன்று பெண்களும் பிராணி பட்சணம் செய்துகொண்டு முனிவர்களை ஹிம்சித்து வந்தார்கள்.

இப்படியிருந்து வருகையில், ஒரு நாள் கேகஸி தான் ஆத்ம லிங்க பூஜைசெய்யக்கருதி, அதைக்கொண்டுவருவதற்குப்பரமசிவ னிடம் போய் வரும்படி ராவணனை யனுப்பினாள். ராவணன்

புறப்பட்டுக் கைலாய பர்வதஞ்சென்று அங்குத் தான்பரமசிவனைப் பிரத்தியட்சத்தில் தரிசிக்கவிரும்பி ஒரு அசாத்தியமான செய்கையைச் செய்தான். அதாவது—வீணாகானம் செய்து பரமசிவனுக்குத் திருப்தியுண்டாக்கக் கருதி தன்தலையை வீணைக்கிணக்கமாக அறுத்துத் திருப்பிக்கொண்டு தன் தேகத்தை வீணைக்குப் பீடமாக்கி, தன் பாதங்களை வீணையின் நுனிப்புறமாகக்கொண்டு விரல்களை அதன் மூளைகளாக அமைத்து, நூறுயிரக் கணக்கான தன் தேக நரம்புகளை அதற்குக் கம்பிகளாகப் பொருத்திச் சுருதி சேர்த்து அந்தச்சுருதிக்கொத்தபடி தன்வாயால் சுகமான கந்தர்வ கானத்தைப் பாடி ஸ்தோத்திரஞ்செய்தான். இதையறிந்த சர்வக்ஞரான சங்கரர், நந்தியை யழைத்து "ஏ நந்தி! நீ ராவணனிடம் சென்று அவன்சிரஸை ஸ்பரிசித்து, "நீ ராட்சஸனானகையால் உனக்குப் பரமசிவன் ஆத்மலிங்கத்தைக் கொடுக்கமாட்டார். நீ உன்னிருப்பிடம் செல் என்று கூறி வா" என்று கட்டளையிட்டார். நந்தி உடனே ராவணனிடம் சென்று அவன் சிரஸை ஸ்பரிசித்து பரமசிவன் உத்தரவைத் தெரிவித்தார். அதைக்கேட்டும் ராவணன் அவ்விடத்தைவிட்டசையாமலும் பாடுவதைநிறுத்தாமலும் அன்று இரவைக்கழித்து மறுதினமும் முன்தினம்போலவே கானம் செய்தான். சங்கரரும் முன்போலவே நந்தி மூலமாய்த் தெரிவித்தார். இவ்விதம் பத்து நாள் நடந்துவந்தது. பிறகு சங்கரர் அவனுடைய கானத்துக்குகந்து பிரஸன்னராகி "ஏ ராவண! நீ விரும்பியவரனைக் கேள்" என்றுகூறினார். உடனே ராவணனது அறுபட்ட சிரசு தேகத்தில் முன்போலவேபொருந்திற்று. பிறகு ராவணன் எழுந்து ஈசுவரனை வணங்கி, தன் அன்னைக்கு ஒரு ஆத்மலிங்கமும் தனக்குப் பார்வதி தேவியையும் தந்தருளும்படி வரங்கேட்டான். அவ்விதமே அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அப்பொழுது அவனைப்பார்த்து, "ஏ, ராவண! நீ எனதுதிருப்திக்காக உனதுதலையைப் பத்துத்தடவை கத்தியால் அறுத்தமையால் உனக்குப் பத்துச் சிரங்களும் அதற்கேற்ப இருபதுகரங்களும் என்சொற்படி உண்டாகும்" எனவும் வரங்கொடுத்தார். பின் ராவணனுக்குப் பத்துத்தலைகளும் இருபது கைகளு முண்டாயின. இதுபோலவே கற்பாந்தரங்களில்

ராவணன் நூறு தடவை தலையை அறுத்ததினிமித்தம் நூறு தலைகளும் இருநூறு கைகளும் உண்டாயின என்றும் சொல்லு கிறார்கள். ராவணன் இப்படி உக்ரமான தவம்புரிந்து இலிங்கத் தையும் பார்வதியையும் பெற்றுக்கொண்டு தன்னிடத்துக்குச் செல்லும் வழியில் அவனை மகாவிஷ்ணு சந்தித்து முற்கூறிய உபாயத்தால் ஏமாற்றி உன்னை (பார்வதியை) மீட்டு வந்தார். * நீயன்றோ ராவணனிடமிருந்து ஆத்மலிங்கத்தை வாங்கிச் சமுத்தி ரக்கரையில் ஸ்தாபித்தது? பிறகு அவ்விடம் கோகர்ண க்ஷேத்திர மென ஆனதும் உன்னாலன்றோ?

பிறகு ராவணன் தன் கிருக மடைந்து தன் தாயாரின் கோரிக்கை நிறைவேறாமைக்கு வெட்கமடைந்து வருந்தினான். இதன் பின் விஷ்ணுவின்சொற்படி மயன்மகள் மண்டோதரியை மணந்து சுகமாக இருந்தான். [ராவணன் ஆத்மலிங்கம் பெறப் பரமசிவனிடம் சென்றானென்பது முற்கூறியுள்ளதெனினும் இங்குமீண்டும் கூறியது ராவணன் தன் தேகத்தை வீணையாக் கிப் பரமசிவனைத் துதித்தானென்பதையும் அவன் பத்து சிரங்க ளும் இருபதுகைகளும் அதன் மூலமாகப் பெற்றானென்பதை யும்விளக்குவதற்கேயாம்.]

இப்படி ராவணன வாழ்ந்துவரும் நாளையில் அவன் தாயார் கேகஸி வைச்ரவணன் புஷ்பகவிமானத்தில் சஞ்சரிக்கும்போது அவனைப் பார்த்து அவன் வாழ்க்கையில் பொறாமை கொண்டு தன் பிள்ளையை யழைத்து, "உங்கள் ஸபத்நீ மாதாவின் பிள்ளை யாகிய ஞாதியின் வாழ்வைப்பார்த்துச் சிறிதும் வெட்கமடையாத நீங்கள் நபும்ஸகர்களோ? அல்லது பிணத்துக்கு ஒப்பானவர் களோ?" என்று திட்டி அவமதித்தாள். உடனே அம் மூவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தவம் செய்யக் கோகர்ணக்ஷேத்தி ரம் சென்றார்கள்.

---

* முன் மகா விஷ்ணு அந்தணர் வேஷம் பூண்டு ராவணன் முன் தோன்றி அவனிடமிருந்து ஆத்மலிங்கத்தை வாங்கி ஸ்தாபித்தாரென்று கூறினவர், இங்குப் பார்வதியென்று கூறினமையால் விஷ்ணுவுக்கும் பார் வதிக்கும் அபேதம் பெறப்பட்டது.

இங்கே கும்பகர்ணன் பதினாயிரம் வருஷகாலம் கடுந்தவம் புரிந்தான். விபீஷணன் தர்ம சிந்தனையுடன் சத்தியபரனாயிருந்து, கால் பெருவிரலில் நின்று ஐயாயிரம் வருஷம் அருந்தவம் புரிந்தான். தசானனன் புகையை ஆகாரமாக அருந்தி தேவ வருஷத்தில் ஆயிர வருஷம் தவம்புரிந்தான். ஆயிரம் வருஷத்திற்கு ஒரு தரம் தன் தலை ஒன்றை அறுத்து அக்கினியில் ஹோமம் செய்தான். இவ்விதம் ஒன்பதினாயிரம் வருஷம் கழிந்ததன் மேல், பத்தாவதாயிர வருஷத்தின் முடிவில், பத்தாவது தலையை அறுக்க விரும்பிய போது, அவனது தவத்துக் கிரங்கிய பிர்மதேவர் அவன்முன் தோன்றி "ஏ ராவண! நின்தவத்தால் யாம் மகிழ்ந்தோம். நீகோரிய வரங்கள்யாவை" எனக்கேட்டார். ராவணன் அகிலநாதா! சுபர்ணன், நாகர்கள், யக்ஷர்கள், தேவர்கள், அசுரர்கள், சங்கரர், விஷ்ணு, நீர் இவர்கள் யாவராலும் எனக்கு மரணமுண்டாகக்கூடாது. மனிதர்கள் எனக்குத்திரணத்துக் கொப்பானவர்களாதலால், அவர்களைப்பற்றிக் கவலையில்லை" என்று கூறி வரங் கேட்டான். பிர்மதேவர் "நல்லது நீ விரும்பியவாறே ஆகுக" எனக் கூறிஅவனது ஒன்பது சிரங்களையும் முன்போலவே உண்டாக்கினர். பிறகு விபீஷணனிடஞ்சென்று அவன் தவத்துக்கு மன மகிழ்ந்து உத்தமமானபுத்தியையும் அமரத்வத்தையும் அளித்தார். இதன்பின் தேவேந்திரபதவியை யடையவேண்டுமென்று விரும்பிய கும்பகர்ணனைப்பற்றி, சற்றுயோசித்துத் தன் பத்தினி சரஸ்வதியைக்கொண்டு அவன்புத்தியைமயக்கி, அவனிடம் சென்று "கும்பகர்ண!உனக்கு வேண்டிய வரம் யாது?" எனவினவினர். கும்பகர்ணன் "ஜகத்கர்த்தாவே! ஆறுமாதகாலம் சுகமாக நித்திரைசெய்ய வேண்டும்" என்றுகேட்டான். பிர்மதேவர் அவன் கேட்டபடியே ஆறுமாதத் தூக்கத்தையும் கொடுத்து அதற்குள் ஒருநாள் நித்திரை தெளிந்து எழுந்து வசிக்கவும் வரங்கொடுத்து மறைந்தனர்.

ராவணாதி மூவரும் இப்படி வரங்களைப் பெற்றுக்கொண்டு தங்களிடம் சென்றார்கள். அவன் பாட்டனாகிய சுமாலியென்பவன் இவர்கள் பெற்று வந்த சிரேஷ்டமானவரங்களுக்குச் சந்தோஷித்துப் பயமொழிந்து தன்பேரன்மார்களுடனும் பிரஹஸ்தன்முதலிய மந்திரிகளுடனும் பாதாளலோகத்திலிருந்து பூலோகத்துக்கு

வந்து, சுகமாகச்சஞ்சரித்தான். இப்படிச் சஞ்சரித்துவருகை யில் தாங்களிருக்க ஒரு வாசஸ்தலத்தை நாடி யோசித்தார்கள். அப்பொழுது பிரஹஸ்தன் லங்காபட்டணத்தைத்தகுந்த வாசஸ் தலமாகக் கூற, உடனே ராவணன் லங்காபட்டணம் சென்று அங் கிருக்கும் வைச்ரவணனைப் பாலாத்காரமாகத்துரத்திவிட்டு, அங்கே குடியேறி ராட்சஸர்களுடன் லங்கையை யாண்டுவந்தான். வைச்ரவணன் உடனே அங்கிருந்து புறப்பட்டுத் தன் தந்தையை யடைந்து நடந்ததைத்தெரிவித்தான். தந்தை விச்ரவசு, "வைச் ரவண! நீகைலாசமலை சென்று அங்குத்தவம்புரிந்து சிவனிடத்தில் உன்கோரிக்கைகளைத் தெரிவி" யெனக்கூறினர். வைச்ரவணன் அவர் சொற்படியே கைலாசமலைசென்று அருந்தவம் புரிந்து பரம சிவனுக்கு மகிழ்ச்சி யுண்டாக்க, அவர் அவனைத் தமக்கு மித்திர னகக் கொண்டார். பிறகு தமதிருப்பிடத்திற் கருகே, விச்வகர் மாவைக்கொண்டு அளகை என்கிற ஒரு பட்டணத்தை நிர்மாணஞ் செய்வித்து, அதை அவனுக்குச் சொந்தமாக்கி வடதிசையின் ஆதிபத்தியத்தையு மளித்துக் குபேரனெனப் பெயரிட்டார்.

ராவணன தன தங்கை சூர்ப்பணகையை வித்யுஜ்ஜிஹ்வன் என்பவனுக்கு மணஞ்செய்து கொடுத்துத் தண்டகாரண்யத்தை அவளுக்கு ஸ்திரீதனமாக அளித்து, தன் தாய்வழிச்சிற்றன்னை யின் மக்கள்களாகிய கரன் தூஷணன் திரிசிரஸ் இவர்களையும் அவர்களுக்குத் துணையாக வைத்தான். பிறகு சில நாளைக்கெல் லாம் வித்யுஜ்ஜிஹ்வன் என்பவன் இறந்துபோனமையால், சூர்ப்ப ணகை வைதவ்யத்தை யடைந்தாள். இதன்பின் ராவணன் தன்மற் றொரு ச்கோதரியாகிய கும்பீநசி என்பவளைமது என்ற தைத்திய னுக்கு மணஞ்செய்துகொடுத்து அவளுக்குச் சிரேஷ்டமான மது வனத்தை ஸ்திரீதனமாக அளித்தான். மற்றொரு சகோதரியாகிய கிரௌஞ்சை என்பவளைக் கட்கஜிஹ்வன் என்பவனுக்கு மணஞ் செய்து கொடுத்து பாலங்கை என்னும் பட்டணத்தை அவளுக்கு ஸ்திரீ த்னமாக அளித்தான். பிறகு வைரோசனன் என்பவனுடைய பேத்தி விருத்திரஜ்வாலை என்பவளை அவனுடைய பிரார்த்தனைக் கிணங்கி கும்பகர்ணனுக்குமணஞ்செய்வித்தான். சைலூஷன் என்

...ITUTE,
14. R. H. ROAD. MADRAS-4

கிற கந்தர்வராஜனுடைய பெண் சரமை என்பவளை விபீஷண
னுக்கு மணஞ்செய்வித்தான்.

இப்படி யிருக்கையில் மந்தோதரிக்கு ஒரு புத்திரன் பிறந்
தான். அவன் பிறந்த அக்கணமே மேகம்போல் கர்ச்சித்தமை
யால், அவனுக்கு மேகநாதனெனப் பெயரிட்டனன். கும்பகர்ணன்
ஒரு குகையைத் தனக்கு நித்திரை ஸ்தானமாக்கிக் கொண்டு
அதில் சுகமாகத்தூங்கினான். ராவணன் தேவர்கள் கின்னரர்கள்
கந்தர்வர்கள் ரிஷீசுவரர்கள் நாகர்கள் இவர்களையெல்லாம் இம்
சிப்பதும் அவர்கள் மனைவிமார்களை அபகரிப்பதுமாக இருந்துவந்
தான். இப்படி ராவணன்செய்யும் அக்ரமங்களையறிந்த வைச்ரவ
ணன் ஒரு தூதன்மூலமாய் அக்ரமஞ் செய்வது உனக்குத்தகா
தென இதங்கூறினான். இதைக்கேட்டதும் ராவணன் அதிக
கோபங்கொண்டு உடனே அளகாபுரிக்குச்சென்று வைச்ரவணனை
யெதிர்த்து யுத்தம்புரிந்து அவனிடமிருந்தபுஷ்பகவிமானத்தைப்
பிடுங்கிக்கொண்டு அங்குச் சிலநாள் வசித்தான். இதற்குமுன்
பொருநாள், வைச்ரவணன் பிள்ளையாகிய நளகூபரன் தன்னை
விரும்பிப்பிரார்த்தித்தற் கிணங்கிய தேவலோகமாதாகியஇரம்பை,
அவன் குறிப்பிட்ட தினமாகிய ஓரிரவு ராவணன் அளகைக்குவந்து
வசிப்பதை அறியாளாதலால் தன் பாதச்சிலம்பு கலகலவென்று
ஒலியிட வேகமாக நளகூபரனது கிருகத்துக்குவந்தாள். இந்தச்
சிலம்பொலி ராவணன் செவியிற்பட்டதும் அதன் வழியே இரம்
பையையறிந்து அவளையழைத்துத் தான் அவள்மேற்கொண்ட
காதலைத்தெரிவிக்க, அவள் அதற்கிணங்காததினால், அவளைப்
பலாத்காரமாகப் புணர்ந்தான். பிறகு ரம்பை நளகூபரனிடஞ்
சென்று ராவணனுடைய அக்ரமத்தைத்தெரிவித்தாள். நளகூபரன்
அதைக்கேட்டதும் மிகக்கோபங்கொண்டு இனி அவன் தன் இச்
சைக்கிசையாதமாதை பலாத்காரஞ்செய்து சுகிப்பானாகில், உட
னே மரிக்கக்கடவன் என்று கடுஞ்சாபமிட்டான். ராவணன் சா
ரர்கள் மூலமாய்த் தனக்கு நளகூபரனிட்ட சாபத்தையுமறிந்து,
அன்று முதல் தன் இச்சைக்கிசையாதமாதை பலாத்கரிப்பதில்லை
யெனத் தீர்மானித்தான். பிறகு அங்கிருந்து யமலோகஞ்சென்று
யமனை யுத்தத்தில் வென்று அங்கிருந்து வருணலோகஞ் சென்று

வருணனையும் வென்று இந்திரனை இம்சிக்கவிரும்பி சொர்க்க லோகம்போய் அவனை எதிர்த்தான். இந்திரன் ராவணனுடன் உக்ரமான யுத்தம் புரிந்து அவனைக் கட்டிச் சிறையிட்டன். இச் செய்தியை ராவணன் புத்திரன் மேகநாதன் அறிந்து உடனே சொர்க்லோகம்வந்து இந்திரனுடன் கொடூரமான யுத்தம் புரிந்து தனது தந்தை ராவணனை விடுவித்து இந்திரனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு லங்கைக்கு வந்தான். இச்சங்கதி யறிந்த பிரமதேவர் உடனே லங்காபட்டணத்துக்கு வந்து மேகநாதனைப்புகழ்ந்து அவன் விரும்பிய வரங்களை யளித்து, இனி இவ்வுலகில் உன்பெயர் இந்திரஜித்தென வழங்கக்கடவ தென்றுகூறி, இந்திரனை விடுவித்துத்தமது லோகஞ்சென்றார். ஆகையால்ராவணனைவிட இந்திரஜித்தே பலசாலி யென்பதும் யுத்தப் பிரியனென்பதும் பெறப்படுவதால், அவனை முதலில்வைத்துக் கூறினேமென்று முனிபுங்கவர் ராமபிரானுக்குத் தெரிவித்தார்.

பிறகு ராவணன்கிரமமாக பூலோகத்தில் யாவரையும் ஜயித்துத் திக்பாலகர்களாகிய அக்கி நிருதி வாயு ஈசானன் இவர்களையும் ஜயித்து கைலாசமலையைக் கம்பீரமான புஜங்களால் அசைத்தான். அப்பொழுது உமாதேவியானவள் பயந்து கைலாசபதியைக் கட்டிக்கொண்டாள். இதையறிந்த கைலாசபதி தமது இடதுகாற் பெருவிரலை அம்மலையின் சிகரத்தில் அழுத்தினர். உடனே மலையானது கீழ் அழுந்தி கொடிபோல் நீண்ட ராவணனுடைய இருபதுகைகளையும் நசுக்கிற்று. அப்பொழுது ராவணன் ஒரு தூணிற் பிணிக்கப்பட்ட திருடன்போற் கதறியழுதான். அங்கிருந்த நந்திதேவர் ராவணனைப்பார்த்து "ஏ ராவண! நீ குரங்கு போல் சஞ்சலமான கர்மத்தைப்புரிந்தமையால், அச்சுபாவமுள்ளகுரங்குகளாலும் மனிதர்களாலுமே உனக்கு நாசமுண்டாகக் கடவது" என்று சபித்தார். பிறகு வெகுகாலங் கழிந்தபின் கைலாசபதிக்கு இரக்கம்வந்து அவனை அக்கஷ்டத்தினின்றும் விடுவித்தனர். இவ்விதம் நந்தியால் சபிக்கப்பட்டும் ராவணன் சிறிதும் மனக்கவலை கொள்ளாமல் அங்கிருந்து ஹைஹயபட்டணஞ் சென்று அந் நகரத்து அரசன் கார்த்தவீரியார்ச்சுனனை அமருக்கழைத்தான். அவன் நகரத்துக்கு வெளியே சென்றிருப்பதாகத் தெரிந்து

அச்சமயம் மத்தியான்ன வேளை யானதால் அப்பட்டணத்திற் கருகே ஓடும் நருமதை நதிக்குச் சென்று அந்நதியில் ஸ்நானம் செய்து அங்கே பரமசிவ பூஜை செய்தான். அந்த இடத்திற்குச் சற்றுக் கீழ்ப்புறத்தில் கார்த்தவீரியார்ச்சுனன் ஜலக்ரீடை செய்யும் பொருட்டு வந்தான். இங்கே ஜலக்ரீடைக்குப் போதுமான ஜலமில்லாமையால், தன் ஆயிரங் கைகளில் ஐந்நூறு கைகளைப் பரப்பி ஆற்றைத் தடுத்து ஜலத்தைத் தேக்கிக்கொண்டு மற்ற ஐந்நூறு கைகளாலும் பதினாயிரக் கணக்கான ஸ்திரீகளுடன் கிரீடை செய்தான். இதனால் சற்று மேற்கே தியானத்திலிருந்த ராவணன் முழுதும்படி ஜலம் பெருக, ராவணன் உடனே தியானத்தைவிட்டு எழுந்து, இது கார்த்தவீரியார்ச்சுனனுடைய காரியந்தானென்று கருதி, அவனிருக்குமிடஞ் சென்று அவனை அமருக்கழைத்தான். கார்த்தவீரியார்ச்சுனன் ராவணனுக்கு இருபது கைகளிருப்பதைக் கண்டு தன் கைகளில் இருபது கைகளால் அவனை கையப்புடைத்து அவன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அவனைத் தன் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பதுமையாக அனுப்பிவிட்டான்.

இவ்வாறு சிலநாட் சென்றபின் ராவணன் பாட்டனாகிய புலஸ்திய முனிவர், இச்சங்கதியைக் கேட்டு வெட்கமடைந்து கார்த்தவீரியார்ச்சுனனிடம் வந்து, அவனுக்குத் தக்கவிதம் சொல்லி ராவணனை விடுவித்தார். அப்படியிருந்தும் தன்னைவிட எவ்வளவோ மடங்கு பலசாலியான வாலியைக் கொல்லக் கருதி, அவன் கீழ்ச்சமுத்திரத்தினின்று தியானஞ்செய்துகொண் டிருக்கும்போது, அவனுக்குப் பின்புறமாகச் சென்று அவன் சரீரத்தைப் பிடித்தான். வானரசிரேஷ்டனாகிய வாலி, தச்கந்தரனைத் தன் கைகளால் தன் சரீரத்தோடு சேர்த்து இடுக்கிக்கொண்டு நான்கு சமுத்திரங்களிலும் சுற்றியடித்து, வேகமாகக் கிஷ்கிந்தைக்குவர, அப்போது அவனுடைய குழந்தையாகிய அங்கதன் தன் தந்தையைப் பார்க்க விரும்பி வேகமாக ஓடிவந்தான். வாலி அக்குழந்தைக்கு முத்தங்கொடுக்க எண்ணித் தன் கைகளை விரித்துக் குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டான். வாலி கையை விரித்ததும் ராவணன் அவனுடைய கட்கத்திலிருந்து

தரையில் பொத்தென்று விழுந்தான். அப்படி விழுந்த ராவணனைத் தன் குழந்தைக்கும் தன் பத்தினிக்கும் பட்டணத்து ஜனங்களுக்கும் காண்பித்தான். பிறகு ராவணனைத் தன் குழந்தை அங்கதனுடைய தொட்டிலிற்கு மேலே தலைகீழாகத் தொங்கவிட்டு விளையாட்டுக் காட்டினன். அப்பொழுது அக்குழந்தை ஜலமோசனம் செய்ய, அது ராவணனது முகங்களைக் கழுவிற்று. இப்படி அநேக காலம் சென்ற பிறகு, வாலி தனக்கே சலிப்புண்டாய் ராவணனை விடுவித்தான். ராவணனும் வாலியைத் தனக்கு மித்திரனுக்கிக்கொண்டு புஷ்பக விமானமேறிச் சுகமாகச் சஞ்சரித்து பூலோகத்திலுள்ள மற்ற வீரர்களையும் வென்றுவிட்டுப் பாதாள உலகம் செல்ல, அங்குக் கோடிசூரியப் பிரகாசம்போன்றிருந்த மகாபலிபுரத்தின் காந்தியால் புஷ்பக விமானத்தின் ஒளி மங்கிப்போன படியால், அது இருந்த இடம்விட் டசையாமல் நின்றுவிட்டது. அப்பொழுது ராவணன் தன் விமானத்தைவிட்டிறங்கிக் கால்நடையாய்த் தனியே வாய்பேசாமல் கோட்டை வாயிலுக்கருகே சென்றான். அங்கே கோடிசூரியப் பிரகாசமாய்ப் பீதகௌசேய வஸ்திரதாரியான நான்கு புஜமுள்ளவராய்ப் பக்கத்தில் பத்தினியுடன் வாமனவதாரங்கொண்டு துவார பாலகராயிருந்து வரும் உம்மைப் பார்த்து, "இந்நகரத்து அரசன் யார்? அவன் எங்குள்ளான்? உடனே தெரிவி" என்றான். அதற்கு நீர் பகைவனுகிய அவனுக்கு யாதொரு பதிலும் கூறாமல் மௌனமாக விருந்தீர். அப்பொழுது அவன் உம்மைச் செவிடனென்று எண்ணி அரண்மனைக்குட் புகுந்து, அங்கே தன் பத்தினியுடன் காய்விளையாடிக் கொண்டிருக்கும் மகாபலியைக் கண்டு, அவ்விளையாட்டையும் அவனுடைய லக்ஷ்மிஸம்பத்தையும் பார்த்தான். அச்சமயத்தில் பலியினுடைய கையிலிருந்து ஒரு காய் நழுவிக் கீழே விழுந்தது. அதை யெடுத்து வரும்படி அங்கே நின்ற ராவணனுக்கு மகாபலி ஆஞ்ஞாபித்தான். ராவணன் அதை யெடுக்க அதிவேகமாய்ச் சென்று, அக்காயைக் கையால் அசைக்க, அது அசைக்கமுடியாமலிருக்கக் கண்டு, கிரமமாக இருபது கைகளையும் உபயோகித்துத்தூக்க, அவன் கைகளின் விரல்கள் அக்காய்க்கும் பூமிக்கும் இடையே அகப்பட்டு நசுங்கி இரத்தம்பெருகிற்று. இப்படி வெகுநேரம் அவஸ்தைப்பட்டு அழுதுகொண்டிருந்தான்.

இதைப் பார்த்த மகாபலி நகைத்துத் தன் வீட்டுப் பணிவிடைக் காரிக்கு அக்காயை எடுத்துவர உத்தரவிட்டான். அவள் உடனே அக்காயை அலட்சியமாக எடுத்துவந்து கொடுக்கப் பெற்றுக் கொண்டு மகாபலி ராவணனைப் பலவாறு திட்டி, அரண்மனையி லிருந்து அவனை வெளியே துரத்தினான். வெளியே வந்ததும், அங்கிருந்த ராஜதூதர்கள் அவனைப்பிடித்துத் தங்கள்வசம் வைத் துக்கொண்டு அவனுக்குத் தாங்கள் புசித்து மீந்ததை ஆகார மாகக்கொடுத்து அங்கேயிருக்கும் குதிரைக் கொட்டிலுள்ள குப்பைகளை வாரி வெளியே எறியும்படி வேலையிட்டார். இப்படி யிருக்கும்போது ஒருநாள் ராவணன் உம்மிடம் வந்து உம்மைப் பன்முறைவணங்கி என்னை இவர்களிடமிருந்து விடுவிக்கவேண்டு மென்று பிரார்த்திக்க, நீர் அவனை உமது பாதப்பெருவிரலால் உந்தித்தள்ளி லங்காபட்டணம் சேர்த்தீர். அவன் லங்கையை யடைந்து தான் மறுஜன்ம மடைந்ததாக நினைத்து மகிழ்ந்தான்.

ராவணன் யாவரையும் தனக்குக் கீழாக்கக்கருதி, இவ்விதம் பலதடவை புஷ்பகவிமானமேறி உலகங்களில் சஞ்சரித்து வந் தான். இக்காலத்தில் இந்த சாகேத நகரத்தில் உமது முன்னோ ரில் ஒருவராகிய அநரண்யரென்பவர், யாகஞ் செய்துகொண் டிருந்தார். ராவணன் அவரைக்கண்டு அவருடன் அமர்புரிந்து அவரைக்கொன்றான். அவர் இறக்குந் தருவாயில் ராவணனைப் பார்த்து, "அடே ராவணா! நீ யாகஞ் செய்துகொண்டிருக்கும் என்னை அகாரணமாய்க் கொன்றமையால், இனி என் வம்சத்தில் ஜனனமாகும் ரகுநந்தனனால் குடும்பத்துடன் அழிக்கப்படுவாய்" என்று சபித்துவிட்டு ஸ்வர்க்கலோகம் சென்றார். பிறகு ராவ ணனும் இந்த ஸன்மானத்தைப் பெற்றுக்கொண்டு லங்கைக்குச் சென்றான்.

பின்னொரு காலத்தில் பிரம புத்திரராகிய சநத்குமார முனி வர் ஏகாந்தமாக இருக்கக்கண்டு, அவரை வணங்கி "ஏ பகவானே தேவர்களுக்குள் ஸ்ரேஷ்டமானவர்" என்று ராவணன் பக்தி யுடன் கேட்டான். அதற்கு அவர் மகாவிஷ்ணுவென்று கூறி னர். உடனே அவன் யுத்தத்தில் அவரால் மரணமடைந்த ராட்ச ஸர்களுக்கு எக்கதியுண்டாம்?" என்று வினவினான். அவரால் மரண

மடைந்தவர்கள் என்றும் அடைதற் கரிதான மோக்ஷத்தைப் பெறுவார்களென்றார் முனிவர். ராவணன் இதைக் கேட்டதும் அவரை மறுபடியும் வணங்கி, அப்படிப்பட்ட விஷ்ணுவின் கையால் நாம் மரணமடையவேண்டும்; அஃதெப்படி எனக்குக் கிடைக்குமெனக் கேட்டான். அதற்கு அம்முனிவர், "வரும் திரேதாயுகத்தில் விஷ்ணு அயோத்தியா பட்டணத்தில் மனிதனாக அவதரிக்கப் போகிறார். அவருடன் நீ அப்பொழுது கொடூரமான பகைகொண்டு யுத்தம்புரிந்து மரணமடை. அப்பொழுது உனக்கு முத்திகிடைக்கும்" என விடையளித்தார். அதனால் ராவணன் உம்முடைய விரோதத்தையடைய பஞ்சவடிக்கு வந்து ஸீதையை யபகரித்து லங்காபட்டணத்தில் அசோகவனத்தில் வைத்து மாதாவைப்போல், பாதுகாத்துவந்தான். பின்னொரு காலத்தில் தற்செயலாய் ஆகாசத்தில் சஞ்சரித்துவரும் நாரதரைக் கண்டு அவரை வணங்கி, "ஏ முனிபுங்கவரே! நான் மிக்க பலசாலியுடன் அமர்புரிய விரும்புகிறேன். தாங்கள் திரிலோக சஞ்சாரியானதால் அப்படிப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்கள்? அதை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று வினவினான். முனிவர் சற்று யோசித்துப்பார்த்து, "ஏ ராவண! சுவேத தீபத்தில், மகாபலமுள்ளவர்களும் விடகாத்திர தேகமுடையவர்களுமாகப் பலபேர்களிருக்கிறார்கள். அவர்கள் யாவரெனில், விஷ்ணுவைப் பக்தியுடன் ஆராதித்தவர்களும் அவருடையகையால்மரணமடைந்தவர்களுமேயாவர். அவர்கள் மகா பலசாலிகளானதால், சுராசுரர்களில் எவரும் அவர்களைஜயிக்க வல்லவர்களல்லர்" எனக் கூறிச் சென்றனர். இதைக் கேட்டதும், ராவணன் லங்கைக்குச் சென்று தன் மந்திரிமார்களுடன் புஷ்பகவிமானமேறி, சுவேதத் தீவினருகிற் செல்ல, அந்தத் தீவின் காந்தியால், புஷ்பகவிமானத்தின் ஒளிமழுங்கி, இருந்த இடத்தை விட்டசையாமல் நின்று விட்டது. இதைக்கண்டதும் ராவணன் கால் நடையாக நடந்து சுவேதத்தீவிற்குள் சென்றான். அப்போது மலர்கொய்ய உத்தியானவனத்திற்குப் போய்க்கொண்டிருக்கும் ஒரு தாஸியானவள், ராவணனைத் தன் கையால் பிடித்துக்கொண்டு, " அவனை நீ யார்? உன்னையார் அனுப்பினது?" எனக்கேட்டு நகைத்துவிட்டு, அவள்

தனனுடன் கூடவந்த தேர்ழிகளுக்கும் அவனைக் காண்பித்து முகங்களிலடித்து, அவனது ஒரு காலைப் பிடித்துத் தலைகீழாகச் சுற்றி ஒருவர்க்கொருவர் எறிந்துகொண்டு பலவாறு விளையாடிக் கடைசியாக, ஒருத்தி அவனைத் தன் ஒரு கையால் தூக்கி வீசி யெறிய, அவன் பரலங்கையில் கிரௌஞ்சையின் சௌசகூபத் திற் போய்விழுந்தான். ராவணன் தான் இப்படி விழுந்ததைப் பொருட்படுத்தாமல், தான் அம்மாதர்கள் கையிலிருந்து தப்பிய தையே மேலாகக் கருதி, அவர்களுடைய பலத்தை நினைத்து நினைத்து ஆச்சரியமுற்று, ஓஹோ! இவர்கள் மகாவிஷ்ணுவின் கையால் மரணமடைந்ததாலல்லவா இவ்விதமான பலத்தையடைந்திருக்கிறார்கள்; ஆகையால் இப்பூவுலகில் நாம் எவ்விதமாவது விஷ்ணுவினுடைய கையால் மரணமடைந்து சுவேதத்தீவில் ஜனனமாக வேண்டுமெனத், தன் மனத்தில் நினைத்து, அந்த விஷ்ணுபகவானுக்குத் தான் மிகக் கோபமுண்டாக்க நிச்சயித்தே, ஸீதையை எடுத்துச் சென்றான். பிறகு தான் இவ்விதம் வதமடையக் கருதியே ஜானகியை லக்ஷ்மிதேவி யென்றறிந்து தாயைப் போல் பாவித்துப் பாதுகாத்தான்'' என்று அகஸ்தியர் கூறினார்.

ஸ்ரீராமச்சந்திரர் கூறுகிறார்.

முனிவர் பிரானே! இதுவரையில் தாங்கள் கூறிவந்தவைகளைக் கேட்டு மனமுவந்தேன். இன்னும் சிலவற்றைத் தமது முகமாகக் கேட்க விருப்பியுள்ளேன்'' என்றுகூறி, "ஏ முனிவரே! இந்திரனும் சூரியனுமே பூவுலகில் வாலி சுக்ரீவர்களாகப் பிறந்தார்களெனச் சொல்லப்படுகிறதே; அதெப்படி? என்றார். உடனே அகஸ்தியர் ராமபிரானைப் பார்த்து "ஏ ரகுநந்தனு! முன்னொரு காலத்தில் மேருமலையிலிருக்கும் சத்தியலோகத்தின் கண்ணுள்ள சொர்ணமயமான சபையில், வீற்றிருந்த பிர்மதேவருடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருக, அதை அவர் தமது கையிலேந்திச் சற்றுநேரந் தியானித்துப் பின் கீழே விட்டார். அந்த ஜலமானது பூமியில் விழுந்து உடனே ஒரு பெரிய வானரமாயிற்று. அதைப் பிர்மதேவர் அறிந்ததும் தன்னருகில் வரவழைத்து, "ஏ குழந்தே! நீ இவ்விடத்திலேயே எப்போதும் வசித்து வா'' என்று கட்டளையிட்டார்.

வாலி ஜனனம்.

இந்த ஸத்திய லோகத்தில் வெகு காலம் வசித்து வந்த பின் யுக்திசாலியாகிய அந்த ரிக்ஷவிரஜஸ் என்கிற வானரமானது ஒருநாள் கந்த மூலாதிபலங்களைப் புசித்துக்கொண்டு மேருமலையில் சஞ்சரித்து வருகையில் அங்கு இரத்னமயமான கற்களால் படிகளமைக்கப்பட்டுப் பரிசுத்தமான தீர்த்தம் நிறைந்த ஒரு வாவியைக் கண்டு, அதில் தீர்த்தபானம் செய்ய விரும்பி, இறங்கித் தீர்த்தம் அருந்தியபின் கரையிலுட்கார்ந்து அந்தத் தெளிவான நீரை எட்டிப் பார்த்து, அதில் தன்னிழலைக் கண்டு, ஓகோ! நமக்கு எதிரியாக இங்கொரு குரங்கு வந்திருக்கிறதெனநினைத்துக் கோபங்கொண்டு தண்ணீர்க்குள் விழுந்து அதன்மேற் பாய்ந்து அப்பொழுது உள்ளே ஒன்றுமில்லாததைக் கண்டு வெட்கி, அதைவிட்டு வெளியேறி, தரையில் நடந்து வருகையில், தான் திவ்யசுந்தரரூபமமைந்த ஒரு மாதாயிருப்பதைப் பார்த்து வியப்படைந்து பிரமித்து நின்றது. அப்பொழுது அங்கே தற்செயலாய் வந்த இந்திரன் அம்மாதைக் கண்டதும் அவள்மேற் காதல்கொள்ள, அதனால் அவனிடத்து ஜனித்த வீரியத்தை அம்மாதின்மீது செலுத்த அது அவளுடைய சரீரத்திற்படாமல் முன் அவளுடைய வால் படிந்திருந்த தரையில் விழுந்தமையால், உடனே ஒரு குரங்காயிற்று. அக்குரங்குக்குத்தான் வாலியென் கிறபேர் உண்டாயிற்று. அவன் இந்திரனுக்குச் சரியான புஜபல பராக்ரமங்கள் உள்ளவனானன்.

சுக்ரீவ ஜனனம்.

இதே சமையத்தில் சூரியன் அம்மாதைக் கண்ணுற்றுக் காம வசத்தனாகித் தன் வீரியத்தை அவள் கழுத்திற் செலுத்த, அது உடனே ஒரு மகாபலசாலியான வானரமாயிற்று. அவனுக்குச் சுக்ரீவனெனும் பேருண்டாயிற்று. அக்குழந்தைகளிரண்டையும் அம்மாது தன்கையில் எடுத்துக்கொண்டு ஓரிடஞ்சென்று, அன்றிரவு தங்கி நித்திரை செய்து பிறகு அதிகாலையி லெழுந்திருந்து தன் தேகத்தைப் பார்க்கத் தான் முன்போல் வானர ரூபமாக இருக்கக் கண்டு ஆச்சரியமடைந்தனள். இந்த அதிசயத்தைப் பிர்மதேவர்

அறிந்து இவர்கள் சுகமாகவசிக்க, ஓரிடம் கற்பிக்கவேண்டுமெனக்கருதிக் கிஷ்கிந்தை யென்னும் பட்டணத்தைப் பூலோகத்தில் உண்டுபண்ணி அதை அந்தரிக்ஷவிரஜஸ்ஸுக்குக் கொடுக்க, அதுதன் இரண்டு குழந்தைகளுடன் அப்பட்டணத்தில் சுகமாக வசித்து வந்தது. சிலகாலம் சென்றபின் அந்த ரிக்ஷவிரஜஸ் இறக்க வாலியானவன் வானரங்களுக்கதிபதியாகி கிஷ்கிந்தையை யாண்டுவந்தான்—என்று அகஸ்திய முனிவர் கூறினர்.

ஸ்ரீராமச்சந்திரர் வினவுகிறார்.

ஏ முனிவரே! சுக்ரீவன் தன் தமையனாகிய வாலியால் எப்பொழுது கிஷ்கிந்தையைவிட்டுவெளியேற்றப்பட்டான்? ஹநுமான் அவனுக்கு எப்பொழுது மந்திரியானது? வாலிக்குச் சமானமான பராக்ரமமுடைய ஹநுமானுக்கு அவன் பலம் தெரியாமற்போனதற்குக் காரணம்யாது? என வினவினர்.

அகஸ்தியமுனிவர் கூறுகிறார்.

ஏ ராமச்சந்திரா! அஞ்சனமென்கிற மலையில் கேசரியென்கிற பேர்கொண்ட ஒரு வானரவீரனிருந்தான். அவனுக்கு இரண்டு பத்னிகளிருந்தார்கள். அவர்களில் மூத்தவளுக்கு அஞ்சனை என்றுபெயர். ஒரு நாள் அம்மலைக்குமேல் ஆகாசத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த ஒரு கழுகின் மூக்கிலிருந்து அமுதமயமான பாயஸபிண்டமொன்று அந்த அஞ்சனையின் முன்னிலையில் விழுந்தது. அதாவது யாதெனில், முன் தசரதர் செய்த புத்திரகாமேஷ்டி யாகத்திலுண்டான பாயசத்தை கைகேயி எடுத்து அஞ்சனமலைமீது எறிந்ததாகக் கூறப்பட்டதே அது தான். அஞ்சனி என்பவள் தன்முன் விழுந்த அந்தப் பாயஸபிண்டத்தை எடுத்துப்புசித்தாள். பிறகு மார்ச்சாரமுகி யென்கிற மற்றொரு ஸ்திரீ அவளிடம் வந்தாள். வந்தவுடன் இருவரும் சேர்ந்து விளையாடினார்கள்; இச்சமயத்தில் ஒரு பெருங் காற்றடித்து அவ்விருவருடைய ஆடைகளையும் விலக்கிற்று. அதைப் பார்த்துக் காதல் கொண்ட வாயு தன்னுருக்கொண்டு அஞ்சனையின் எதிர்தோன்றி அவளுடன் சரசவார்த்தைகளாடி அவளைப் புணர்ந்தான். அப்பொழுது தற்செயலாய் அங்குவந்த நிருதி என்பவன் மார்ச்சாரமுகியின்மீது காதல்கொண்டு அவளைப் பிரார்த்

இத்துப் புணர்ந்தான். அதன்பின் அவ்விருவரும் கர்பந்தரித்து இரண்டு பிள்ளைகளைப் பெற்றார்கள். அஞ்சனைக்குப் பிறந்தவனே மாருதி, மார்சாரமுகிக்குப் பிறந்தது பிசாசாயிற்று. சித்திரை மாதம் சுக்லபட்சம் ஏகாதசி திதி மகா நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் மாருதி பிறந்தமையால், அவன் சத்ருசங்கார சூரனுனான். அவர் பௌர்ணமியன்று பிறந்தாரென்பது கற்பபேதம். அவர் தமது குழந்தைப்பருவத்திலேயே ஜோதி சொரூபமாகக் கிளம்பும் சூரியபகவானை ஒரு கனியெனநினைத்து அதைப் பறிக்கக்கிளம்பி ஐந்நூறு காதவழிதூரம் வாயுவேகமாகச் சென்றார். அமாவாசியையாகிய அத்தினத்தில் ராகு சூரியனைப் பிடிப்பதற்காகச்சென்றான். அப்பொழுது சூரியன் முன் ஒரு குரங்கு அவனைப் பிடிக்கக் காத்திருப்பதைக்கண்டு, பயந்து உடனே தேவேந்திரனிடத்திலோடிவந்து சங்கதியைத் தெரிவித்து அடியேனுக்குச் சூரியனைப் பிடிக்க உத்தரவு கொடுத்ததற்கு இன்று ஒரு தடை நேரிட்டது; அதற்குப் பதிலாய் உம்மைப் பிடிப்பேன்; ஆகையால் சீக்கிரம் அத்தடையை நிவர்த்தி செய்யும்" என்று கூறினான். இந்திரன் பலதேவர்களோடு ஐராவதத்திலேறிக்கொண்டு சூரியனிடஞ்சென்று அவரருகிலிருக்கும் குரங்கைப்பார்த்து அதன் பேரில் வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். அவ்வஜ்ராயுதத்தால் அடிபட்ட மாருதி ஆகாயத்திலிருந்து ஒரு மலையின்மீது விழுந்தமையால் மாருதியின் ஹநு (கபோலத்தின் மேற்புறம்) உடைந்து போயிற்று. பிறகு அவருக்கு ஹநுமார் என்கிறபேர் உண்டாயிற்று. அதைக் கண்ட வாயுபகவான் மிகக் கோபங்கொண்டு தமது புத்திரனுக்குச் சமாதானங் கூறிவிட்டு உடனே தான் ஸ்தம்பித்துவிட்டார். அந்த வாயு ஸ்தம்பனத்தாற் பிராணிகள் யாவும் உணர்விழந்து தரையில் வீழ்ந்தன. மூவுலகங்களும் சவமயமாயின. அப்பொழுது பிர்மா அவ்விடம் வந்து இந்திரனை அவமதித்து வாயுபகவானை வணங்கி, "வாயுபகவானே! தேவேந்திரன் செய்த குற்றத்தை க்ஷமிக்கவேண்டும். உமது குழந்தைக்கு அநந்தமான வரங்களைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றுகூற,வாயுதேவன் கோபந்தணிந்துமகிழ்ச்சியுற்று ஸ்தம்பனத்தைவிட்டுச் சஞ்சரித்தார். பிறகு எல்லாப் பிராணிகளும் க்ஷணநேரத்திற்குள்ளாகப் பிழைத்தெழுந்திருந்து சுகமாக

பிர்மதேவர் மாருதியைப் பார்த்து "ஏ மாருதி ! நீ சிரஞ்சீவியாய் இருப்பாய்; உன் தேகம் வஜ்ரத்திலும் திடங்கொள்ளும். அஞ்சனா புத்திர ! உன்னுடைய ஸஞ்சாரத்திற்கு எங்கும் தடையேற்படாது. உனக்கு ஹரிபக்தியானது விசேஷமாக உண்டாகும்; என் வரபலத்தால் விஷ்ணுவுக்கு நீ சகாயம் செய்வாய் என்று கூறிவிட்டுத் தமது பதிக்குச் சென்றார். பிறகு ராகுவும் சூரியனைப்பிடிக்கப் போனான் என்று அகஸ்தியர் கூறினார். இதைக் கேட்டதும் ராமபிரான் "முனிவரே! சூரியனைப் பிடிக்க ராகுவுக்கு இந்திரன் அதிகாரம் கொடுத்த சங்கதியை எனக்குக் கூற வேண்டும்" என்றார். அகஸ்தியமுனிவர் "ரகுநந்தன ! ராகு ஓர் அரசன். அவன் அமிர்தபானத்தால் தானும் அமரனானான். நவக்கிரகங்களில் அவன் எட்டாவது கிரகமானான். அவன் தேவர்கள் யாவரையும் இம்சித்துவந்தான். அப்பொழுது தேவர்கள் ஒன்று சேர்ந்து சூரிய சந்திரர்களைமட்டும் அவனுடைய இம்சைக்குள்ளாக்கித் தாங்கள் தப்பிக்கொண்டார்கள். சூரிய சந்திரர்களுக்கு ராகுவால் இவ்விதம் தொந்தரவேற்பட்டதை ஜனங்கள் யாவரும் பார்த்து அச்சமையத்தில் பல தானதர்மங்களைச்செய்து ராகுவைத் திருப்தி செய்வித்து சூரிய சந்திரர்களை அவனிடத்திலிருந்து விடுவித்தார்கள். அன்றுமுதல் அப்பருவகாலங்களில் ராகு சூரிய சந்திரர்களைப் பிடிக்கும்போதெல்லாம் பூலோகத்தில் ஜனங்கள் யாவரும் பக்தியுடன் தானதர்மங்களைச்செய்து அவனுக்குத் திருப்தி செய்து வருவது வழக்கமாயிற்று. ஏ ராமசந்திர ! நீர் கேட்டபடி மாருதியினுடைய ஜனனம் பலம் வரம் இவைகளைக் கூறினேன். ஆகையால் அந்த மாருதியின் பலம்காத்மியம் யாரால் அறியத்தக்கது. இனி அவருடைய சேட்டைகளை விவரிக்கிறேன் கேளுங்கள். மாருதியானவர் குழந்தைப் பருவத்தில் மகாமுனிவருடைய ஆசிரமங்களிற் பிரவேசித்து, அவர்களுடைய ஆசனம் முதலியவைகளை அங்குமிங்கும் தூக்கியெறிந்து அங்குள்ள முனிவர்களுடைய குழந்தைகளையும் பத்னிகளையும் பயமுறுத்திக்கொண்டு வந்தார். முனிவர்கள் அவரைக்கண்டு நல்ல வார்த்தை சொல்லியும் பயமுறுத்துவதை நிறுத்தவில்லை. இதைக்

கண்ட முனிவர்கள் மாருதியைப் பார்த்து "வகபிச்ரேஷ்ட! இன்று முதல், உனது பலம் உனக்குத் தெரியாமற் போகக்கடவது" என்றும், "மற்றொருவன் உன்னைத் துதிக்கும்போது உனக்கு உன் பலத்தின் திறமை தெரியக்கடவது" என்றும் சாபமிட்டனர். ஆகையாற்றான் அந்த மாருதி தமது பலத்தை யறியாமல் சுக்ரீவனிடம் மந்திரித்வம் செய்துவருகிறார். முன் சமுத்திரக்கரையில் பிராயோபவேசம் செய்தகாலத்தில், ஜாம்பவான் அவரைத்துதித்த பின்னரே அவருடைய பலம் அவருக்குத் தெரிந்து சமுத்திரத்தைத் தாண்டினார்—என்று அகஸ்தியமுனிவர் கூறிமுடித்தார்.

அகஸ்தியர் ராமரைத் துதிக்கிறார்.

𑌰𑌾𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌸𑌿 𑌸𑌕𑌲𑌂
𑌜𑌾𑌨𑌾𑌸𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍃𑌕𑍍
𑌭𑍂𑌤𑌂 𑌭𑌵𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌕𑌲𑌨𑌾
𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌃 ‖
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑌾𑌯 𑌸𑌕𑌲𑌾𑌂
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌂𑌹𑍃𑌤𑌿𑌂 |
𑌚𑌾𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍 𑌮𑌨𑍁𑌜𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌮 𑌵𑌚𑍋
𑌭𑌾𑌸𑍀𑌶 𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌃 ‖

ராம த்வம் பரமேசுவரோஸி ஸகலம்
ஜாநாஸி விஜ்ஞான த்ருக்
பூதம் பவ்யமிதம் த்ரிகால கலநா
ஸாக்ஷீ விகல்போ ஜ்ஜித:
பக்தாநா மனுவர்த்தனாய ஸகலாம்
குர்வன் க்ரியாஸம்ஹ்ருதிம்
சாசிருண்வன் மனுஜாக்ருதிர்மம வசோ
பாஸீச லோகார்சித:

ஏ ராம! நீரே பரமேசுவரர். யாவையும் நீர் அறிந்தவர். நீர் விஞ்ஞானமுள்ளவர். முக்காலங்களையும் நடத்துவதில் நீர் சாக்ஷியாக விளங்குகிறீர். நீர் விகற்பமற்றவர். நீர் பக்தர்களுக்கு வழி

காட்டுவதினிமித்தம் உலகத்தில் மானிடராக அவதரித்து,கிரியைகள் யாவையும் செய்துகொண்டு, இவ்விதம் யான் கூறும் கதைகளையும் சிரவணம் செய்துகொண்டு சமஸ்த ஜீவராசிகளாலும் பூஜிக்கப்பட்டு விளங்குகிறீர்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பார்வதி! அகஸ்தியமுனிவர் இவ்விதம் ராமரைத் துதித்து அவர்செய்த உபசாரணையையும் பெற்றுக்கொண்டு தம்மோடு வந்த முனிவர்களுடன் தமதாசிரமம் சென்று, சுகமாகவிருந்தார். தமது உருவத்தைக் காணுமேயாகில் விந்தியபர்வதம் முன்போல் உயர்ந்துவிடுமெனக்கருதிஇன்றும் அவர்தமது உருவத்தை, அதற்கு மட்டும் மறைத்துக்கொண்டே இருக்கிறார். ஸ்ரீராமபிரானும் ஸீதாதேவியுடனும் சகோதரர்களுடனும் மந்திரிமார்களுடனும், கூடிஒரு பெரிய சம்ஸாரிபோல் காண்பித்துக்கொண்டு ஒன்றிலும் பற்றுதலின்றித் தமது மனைவியுடன் சகல போகங்களையும்அநுபவித்து வந்தார். அநுமார்முதலியவர்களும்அப்போதைக்கப்போது ராமரைத் தரிசித்து மகிழ்ந்து வந்தார்கள். ராமநாதனும் லோகநாதனுமாகிய ராமபிரான் ராஜ்யபரிபாலனம் செய்யும்பொழுது பூமி செழிப்படைந்து நற்பலனைத்தந்தது. மரம் செடிகள் நன்றாய் பூத்துக் காய்த்தன. ஜனங்கள் யாவரும் தர்மநெறி தவறாதிருந்து வந்தார்கள். ஸ்திரீகள் யாவரும் பதிபக்தியிற் சிறந்து விளங்கினார்கள்.ராம ராஜ்யத்தில்குழந்தைகளின் மரணத்தைப்பெரியோர்கள் பார்த்ததில்லை. ராமபிரான் தம் பத்னி, வானரர்களுடனும் சகோதரர்களுடனும் புஷ்பகவிமானத்தின் மீதேறி பூமியிலெங்கும் சஞ்சரித்து யாவருக்கும் தமது ஆச்சர்யகரமான காரியங்களை நினைப்பூட்டிவந்தார். கோடிக்கணக்காக பூலோகத்தில் சிவலிங்கஸ்தாபனம் செய்து, அவைகளுக்குப் பூஜை நைவேத்தியங்களையும் ஏராளமாகத் தக்ஷிணைகளையுங் கொடுத்து நடத்தி முடித்தார். தாம் மானுடராக இருந்தபோதிலும் தேவ போகங்களைச் சீதையிடம் அநுபவித்தார். இவ்விதம் தர்மமாக ராஜ்யபரிபாலனம் செய்து வந்து, தமது சரித்திரத்தை உலகங்களின் பாப நிவர்த்திக்காகப் பரவச்செய்தார். திரேதாயுகக் கணக்குப்படி பதினொ

ராயிரவருஷகாலம் ராஜ்ய பரிபாலனம் பண்ணி லோகமுழுதும் தம்மை வணங்கும்படி விளங்கினர். அப்பதினோராயிர வருஷங்களும் கலியுகக் கணக்குப்படி பதினோரு லட்சங்களாயின. அப் பதினோராயிர வருஷகாலமும் ஏக பத்நீவிரதம் தவறாமல் பரிசுத்தராக விருந்து வந்தார். ராமபிரானுக்குப் பத்நியும் ஒன்று. அதுபோல் பேச்சும் ஒன்று. பாணமும் ஒன்று. அவர், ஜனங்களுக்குப் போதிப்பதின் நிமித்தமாக கிரகஸ்த தர்மங்கள் யாவையும் நடத்திவந்தார். ஸீதையும் ஸ்ரீராமபிரானிடத்தில் அன்பு, ஒற்றுமை, வணக்கம், அடக்கம், வெட்கம், பயம், இவைகளைச் சமயத்துக் கேற்றவாறு உபயோகித்து அவர் மனதைத் திருப்தி செய்தாள். ஏ பார்வதி! இப்படிப்பட்ட ராமபிரானுடைய சரித்திரத்தை நீ கேட்டபடி உனக்குக் கூறினேன். இந்த ராமசரிதத்தைக் கேட்பவர்களுக்குச் சகல பாபங்களும் நீங்கி மங்களங்கள் பெருகும். இந்த ஸாரகாண்டத்தைக் கேட்பவர்கள் தங்கள் மனோரதங்களைக் குறைவறப் பெறுவார்கள்.

அகஸ்திய ராம சம்வாதமாகிய

13-வது சருக்கம் முற்றிற்று.

ஸாரகாண்டம்

முற்றிற்று.

யாத்ராகாண்டம்.

1-வது சருக்கம்.

பார்வதி வினவுகிறாள்.

மகா புண்ணிய முண்டாக்கத்தக்க ஸாரகாண்டத்தை அடியேன் கேட்கக் கூறினீர்கள். மற்றவைகளையும் எனக்குக் கூறும்படி பிரார்த்திக்கின்றேன். மகா பல பராக்ரமசாலியான ஸ்ரீராமபிரான் அசுவமேதயாகஞ் செய்த விதத்தையும் இராம லட்சுமண பரத சத்ருக்னர்களுக்கும் அவர்களுடைய பந்துக்களுக்கும் உண்டான சந்ததிகளின் விவரத்தையும் கூறவேண்டுகிறேன். அவர்களுடைய மக்களும் பந்துக்களுடைய மக்களும் அவரவர் பத்னிகளுடன் சேர்ந்து எவ்விதம் இல்லற தர்மத்தை நடத்தினார்கள். திரேதாயுகத்தில் பதினோராயிரத்துப் பதினொரு வருஷங்கள் ஸ்ரீராமபிரான் இராஜ்ய பரிபாலனம் செய்தாரென்று கூறினீர்கள். அவர் செய்த இராஜ்ய பரிபாலன விசேஷத்தை எனக்கு விவரமாகக் கூறுங்கள். இராமர் செய்த அற்புதங்களையும் விவரியுங்கள் என்று பார்வதி தேவி கேட்க, பரமசிவன் கருணைகூர்ந்து சொல்லுகிறார்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ தேவி! நீ இராகவனது திவ்யசரிதம் கூறும்படி கேட்டது நல்லது. அதைக்கூறும் விஷயத்தில் எனக்கு மிகச் சந்தோஷம்; சொல்லுகின்றேன் கேள்.

இராகவனுடைய சரித்திரமானது நூறு கோடி கிரந்த விஸ்தாரமுள்ளது. அவருடைய சரித்திரத்தில் ஓர் அக்ஷரத்தை ஒருவன் கூறுவானாயின், அவனுடைய மகா பாதகமும் அகலும்.

முன் வான்மீகி முனிவர் அவருடைய சரித்திரத்தைக் கூறியிருக்கின்றார். அதில் சிறிது உனக்குக் கூறுகின்றேன்.

ஒரு சமயம் வான்மீகி முனிவர் தமது சிஷ்யர்களுடன் ஸ்நானஞ் செய்வதற்காகத் தமஸாநதி சென்றார். அந்நதிக்கரையில் தமது கைக்கமண்டலத்தை வைத்துவிட்டு, தமக்குத்தேவையானவைகளைச் சேகரித்துக்கொண்டு சௌசம் முதலியவைகளையுஞ் செய்து விட்டுக் கையில் தர்ப்பையை எடுத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யப் போனார்.

யாவத்ஸ்ருஷ்டி ஸ்நாநாய ச ஊர்த்வபாணீ ஸமவேஷ்டித: |
தாவத்தத்ர ததர்ஸாத தீரே க்ரௌஞ்சத்வயம் ஸுபம் |
க்ரௌஞ்சம் வ்யாதேந ஹத: க்ரௌஞ்சோ வா நிஷாதேந பதத்ரிணா |
க்ரௌஞ்சீ ஸோகஸமாவிஷ்டா விலலாபாதிது:கிதா |
வ்யாகுலா பதிநா தேந த்விஜேந ஸஹசாரிணா ||
தாம்ரஸீர்ஷேண மத்தேந பத்ரிணா ஸஹ தேந வை |
ததாவிதம் த்விஜம் த்ருஷ்ட்வா நிஷாதேந நிபாதிதம் ||
ருஷேர்தர்மாத்மநஸ்தஸ்ய காருண்யம் ஸமபத்யத |
தத: காருண்யயாவிஷ்ட: ஸ்வயமேவாப்யசிந்தித த்விஜ: ||
நிஸாம்ய ருததீம் க்ரௌஞ்சீமிதம் வசநமப்ரவீத் ||

அப்பொழுது அவர் அந்தத் தமஸாநதிக்கரையில் ஓர் ஆச்சரியத்தைக்கண்டார். அஃதாவது அங்கே ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்திருந்த கிரௌஞ்ச பட்சிகளில் ஆண்பறவையை ஒரு வேடன் வில்லாலடித்துக் கொன்றான். இதனால், பெண் பறவையானது சிவந்த இறக்கை நுனியை யுடையதும் கொழுப்படைந்ததும் இப்பொழுது இறந்துவிட்டதும் எப்போதும் தன்னுடன் சஞ்சரித்ததும் தனக்குப் பதியாயிருந்ததுமான அந்த ஆண் பறவையின் பிரிவாற்றாமையால் மிகதுக்கத்தையும் சோகத்தையுமடைந்து பிரலாபித்தது. இதைக் கண்ணுற்ற மகாத்மாவான வான்மீகி முனிவர் கருணைகொண்டு இது அதர்மமெனக்

கருதி அங்கு வருந்தும் பெண் பறவையைப் பார்த்து விட்டுக் கூறுகிறார்.

மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகம: சாச்வதீ: ஸமா: |
யத்க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம் || ||௮||
தஸ்யைதத் ப்ருவதச்சிந்தா பபூவ ஹ்ருதி வீக்ஷத: |
சோகார்த்தேநாஸ்ய சகுநே: கிமிதம் வ்யாஹ்ருதம் மயா ||
சிந்தயந் ஸ மஹாப்ராஜ்ஞச்சகார மதிமாந் மதிம் |
சிஷ்யம் சைவாப்ரவீத் வாக்யமிதம் ஸ முநிபுங்கவ: ||௧௦||
பாதபத்தோऽக்ஷரஸமஸ்தந்த்ரீலயஸமந்வித: |
சோகார்த்தஸ்ய ப்ரவ்ருத்தோ மே ச்லோகோ பவது நாந்யதா

“ஏ வேடா! நீ அநேக வருஷம் ஜீவித்திருக்க மாட்டாய், ஏனென்றால், காமமோகிதமாயிருந்த கிரௌஞ்ச பட்சிகளில் ஆண் பறவையைக் கொன்றாயல்லவா!” என்று கூறினார். பட்சியைப் பார்த்துவிட்டு இவ்விதம் கூறிய வான்மீகி முனிவருக்கு இப்பொழுது ஓர் ஆலோசனை யுண்டாயிற்று. சோகாவஸ்தையி லிருந்த இப்பறவையைப் பார்த்ததும் நாம் என்ன சொன்னோம் என்று ஆலோசித்து சிஷ்யனை யழைத்து சோகத்தை யடைந்த பட்சியின் பொருட்டு வெளிப்பட்டதும் நான்கு பாதங்களோடு கூடியதும் சரிசமானமான அக்ஷரங்களோடு கூடியதும் செய்யுட்கிசைந்தும் ராக தாளமெட்டுக் கொத்ததுமான இது சோகநிமித்தமாக வெளிப்பட்டதாயினும், சுலோகமே யல்லது வேறல்ல என்று கூறினார்.

இவ்விதங் கூறிய மகரிஷியின் உத்தமமான வாய்மொழியைக் கேட்ட சிஷ்யன் சந்தோஷத்துடன் அந்தச் சுலோகத்தைக் கிரகித்துக்கொண்டு மகிழ்ந்தான். அதனால் முனிவரும் சந்தோஷித்தார். பிறகு முனிவர் சாஸ்திரோக்தமாக அந்நதியில் ஸ்நானஞ்செய்து அந்த சுலோகத்தின் பொருளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு திரும்பினார். அவருடைய சிஷ்யனான பரத்வாஜனும் குரு சொல்வதை வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு தீர்த்தம் நிறைந்த கடத்தையு மெடுத்துக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் பின் சென்றான். தர்மத்தை அறிந்தவரான அந்த வான்மீகி முனிவர் தமது சிஷ்யனோடு அநேக கதைகளைச் சொல்லிக்கொண்டே ஆசிரமத்தை யடைந்து பிறகு உட்கார்ந்து வேறு சில கதைகளையுஞ் சொல்லி முடித்துத் தியானிக்கலானார்.

தத்ராஜகாம லோகாநாம் கர்த்தா ப்ரஹ்மா ஸ்வயம் ப்ரபு:|
சதுர்முகோ மஹாதேஜா த்ரஷ்டும் தம் முநிபுங்கவம்||

சுயம்பிரபுவும் மகாதேஜஸ் உடையவரும் லோக கர்த்தாவுமான சதுர்முக பிர்மதேவர் வான்மீகிமகா முனிவரைப் பார்ப்பதற்காக, அப்பொழுது அங்குவந்தனர். அவர் வரவை யறிந்த வான்மீகிமுனிவர் உடனே எழுந்து அஞ்சலி பந்தஞ் செய்து கொண்டு வணக்கத்துடன் மிகவும் ஆச்சரிய முற்று, சற்று மௌனமாய் நின்று, பிறகு அர்க்கிய பாத்திய ஆசமனீய உபசாராதிகளால் பூஜித்து, சாஸ்திரோக்தமாக நமஸ்கரித்து, குசலபிரச்னஞ் செய்தார். இதன் பின் இவ்வாறு பூஜையை ஏற்றுக்கொண்ட பிர்மதேவர் வான்மீகி ரிஷியைப் பார்த்து ஆசனத்தி லுட்காரும்படி சொன்னார். அவர் ஆக்ஞைப்படி வான்மீகி முனிவர் ஆசனத்தி லுட்கார்ந்து கிரௌஞ்ச பட்சியைப் பற்றியசிந்தையாகவேயிருந்தார். பகையையே மேற்கொண்ட புத்தியையுடைய பாபாத்மாவான வேடனால் இனிய குரலையுடைய பட்சியானது, அகாரணமாக வதஞ்செய்யப் பட்டது. இது சகித்தற்கரிய கஷ்டம்! என்று பெண் கிரௌஞ்சபட்சியை நினைத்து மறுபடியும் முன் பாடிய சுலோகத்தையே பாடினார். மறுபடியும் அதே நினைவுகொண்டு துக்கித்தார்.

தமுவாச ததோ ப்ரஹ்மா ப்ரஹஸந் முநிபுங்கவம்|
ச்லோக ஏவ த்வயா பத்தோ நாத்ர கார்யா விசாரணா||
மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ |

அப்பொழுது பிர்மாவானவர் முனிவரைப் பார்த்து புன்னகை கொண்டு "ஏமகாரிஷியே! நீர் சொல்லியது சுலோகந்தான். அவ் விஷயத்தில் வேறு யோசனை வேண்டாம். என்னுடைய ஆக்ஞையினாலேயே சரஸ்வதியானவள் சுலோக ரூபமாக உமது வாயினின்று வெளிக்கிளம்பினாள்.

ஏ ரிஷிசிரேஷ்டனே! தர்ம சொரூபியும் குணக்னரும் மகா புத்திமானும் தீரனுமான இராமபிரானுடைய திவ்ய சரித்திரத்தை நாரதரிடமிருந்து கேட்ட பிரகாரம் செய்யும்.

ராகவஸ்ய சரிதம் க்ருத்ஸ்நம் குரு த்வம்ருஷிஸத்தம ||
தச்சாப்யவிதிதம் ஸர்வம் விதிதந்தே பவிஷ்யதி |

ஸ்ரீராமபிரான் இரகசியமாகச் செய்தவைகளும் பிரகாசமாகச் செய்தவைகளும் லக்ஷ்மணருடன் அவர் வசித்தவிதமும் குரங்குகள் இராக்ஷசர்கள் இவர்களுடைய சரித்திரங்களும் சீதை இரகசியமாகச் செய்தவைகளும் பிரகாசமாகச் செய்தவைகளும் உமக்குப் புலப்படாமலிருந்தபோதிலும் இப்பொழுது அவைகள்யாவும் உமது சித்தத்தில் பிரகாசிக்கும். அவ்விதமே ராமசரித்ரத்தைக் காவியமாகச் செய்யும்.

ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி ||
குரு ராமகதாம் புண்யாம் ச்லோகபத்தாம் மநோரமாம் |
யாவத்ஸ்தாஸ்யந்தி கிரய: ஸரிதச்ச மஹீதலே ||
தாவத்ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி |
யாவத்ராமாயணகதா த்வத்க்ருதா ப்ரசரிஷ்யதி
தாவதூர்த்வமதச்ச த்வம் மல்லோகேஷு நிவத்ஸ்யஸி ||

காவியஞ் செய்யும் விஷயத்தில் உமது வாக்கானது எந்த இடத்திலும் பொய்யில்லாமல் வெளிப்படட்டும். பொய் வராமலிருப்பதுடன் இராமசரித்திரம் முழுவதிலும் உமக்குத் தெரியாத தொன்றுமிராது. நீர் சுலோகரூபமாகச் செய்யும் இராமர் கதையானது இந்தப் பூமியில் மலைகள் நதிகள் இவைகளுள்ள வரையில் சாசுவதமாக பிரகாசிக்கக்கடவது. இந்த இராமாயண கதை உலகத்தில் உள்ளகாலம் வரையில் நீர் இந்த உலகத்திலும் பாதாளத்திலும் தேவலோகத்திலும் எனதுலகத்திலும் வசித்து வருவீர் என்று கூறிப் பிரமதேவர் தாமும் ஸ்ரீராமசரித்திரத்தை புண்ணியகரமான வேதவாக்கியங்களுடன் வான்மீகருக்கு உபதேசித்தார். மறுபடியும் பிரமதேவர் வான்மீகி முனிவர் பூஜையை ஏற்றுக்கொண்டு களிப்புடன் அந்தர்த்தானமானார்.

பிறகு வான்மீகி முனிவர் தமது சிஷ்யர்கள் பாடுக்கும் தாளத்துக்கும் ஒத்துவரும் அந்தச் சுலோகத்தை அடிக்கடி பாடக்

கேட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது வான்மீகி முனிவர் ஸ்ரீராமசரித்திரத்தை நாம் இவ்வாறு செய்ய வேண்டுமென்று மனதில் ஆலோசித்துக் கொண்டு மகா கீர்த்தி பெற்ற ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தை மனோரம்யமான விருத்தப் பாக்களில் எளிய நடையில் சதகோடிக்கணக்கான சுலோகங்கள் அமைந்த ஒரு காவியமாகச் செய்தனர்.

யாத்ரா காண்டம்

சுலோகபக்தியைக் கூறும் முதலாவது சருக்கம்

முற்றிற்று.

2 - வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்:

இவ்வாறாக வான்மீகி முனிவர் செய்த இராமாயணத்தை அவ் வாசிரமத்திலுள்ள முனிவர்கள் யாவரும் அவரிடத்தி லிருந்து உபதேச மூலமாகப் பெற்று, அவரவர் ஆசிரமத்தில் வீற்றிருந்து, ஓதி யுணர்ந்து அதிலுள்ள சரித்திரங்களை யாவரும் ஒன்று சேர்ந்து பேசிப்புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இவ்விதம் நடந்துவரும்கதைகளைக் கேட்பதற்காக தேவலோகத்திலிருந்த தேவர்கள், அவரவர் விமானமேறி ஆசிரமத்தருகில் வந்து, அற்புதமான செய்யுட்களால் பாடப்பட்ட ராமசரித்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து வான்மீகர் செய்தாரென்பதை யறிந்து அவரைப் புகழ்ந்து, அவர் மீது புஷ்பமாரி பொழிந்து ஜயசப்தங்களால் அவரைவாழ்த்தினார்கள். பிறகு தேவர்கள் யக்ஷர்கள், கந்தர்வர்கள் நாகர்கள், முனிவர்கள், குஹ்யகர்கள் அசுரர்கள் இவர்களும் பிரம தேவரும் இந்தஇராமாயண காவிய நிமித்தமாகக் கலகம் செய்து கொண்டார்கள். பிரமதேவர் முதலிய வானவர்கள், பன்னகர்களையும், அசுரர்களையும் மனிதர்களையும் பார்த்து "இந்த இராமாயண காவியத்தை எங்கள் உலகத்துக்குக்கொண்டு போகப் போகிறோம்" என்றார்கள். அது கேட்ட அசுரர்களும் பன்னகர்களும் இந்தக் காவியத்தைப்பாதாள உலகமாகிய எங்கள் உலகத்துக்குக் கொண்டுபோகப்போகிறோம்" என்றார்கள். இவைகளைக் கேட்ட முனிவர்களும் அரசர்களும் மங்களகரமும் பரிசுத்தமுமான இராம கதையாகிய காவியத்தை எங்களுலகம் விட்டு சொர்க்கத்துக்காவது பாதாளத்துக்காவது கொண்டுபோக நாங்கள் விடமாட்டோம்" என்றார்கள். இவ்விதம் மூவுலகத்தவரும் ஒருவர்க்கொருவர் வாதாடிக்கொள்ள யான் அவர்களுக்கு இனிமையாகச் சமாதானங்கூறி அவர்களை யழைத்துக்கொண்டு க்ஷீரசாகரம்சென்று ஆதிசேஷசயனராகிய விஷ்ணுவை வேதங்களாலும் மந்திரங்களாலும் பலவிதமான பூஜோபசாரங்களாலும் உபசரித்து, கீதம் வாத்தியம் முதலிய கோஷங்கள் செய்தோம்; அவர் கண் விழித்துக் கொண்டார். அப்பொழுது மகா

விஷ்ணு என்னைப் பார்த்து, என்னை எழுப்பிய காரணம் யாதெனக் கேட்க, நடந்த செய்தி முழுவதையும் தெரிவித்தேன். பக்தவத்ஸலராகிய மகாவிஷ்ணு, காரிய நிமித்தமாக இவர்கள் சச்சரவு செய்து கொள்ளுகிறார்களென்பதை யறிந்து, நகைத்து, உடனே அக்காரியத்தை ஒரு பாகத்துக்கு முப்பத்து மூன்றுகோடியே முப்பத்து மூன்று லட்சத்து முப்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று கிரந்தங்களாகப் பிரித்து மூன்று பிரிவினைகளாகச் செய்தனர். அந்தக்காரியத்தில் அடங்கி யிருந்தஒரு மந்திரத்தையும் ஒரு பாகத்துக்குப் பத்து அக்ஷரங்களாகப் பிரித்து மூன்று பாகமாக்கினார். இவைகளன்றி மீதியான வற்றில் இரண்டு எழுத்துக்களை மாத்திரம் நான் கேட்க எனக்குக் கொடுத்தார். அவ்விரண்டு எழுத்துக்களையும் காசியில் மரணமடையும் பிராணிகளின் செவியில் உபதேசித்து வருகின்றேன். அது ராம என்ற மந்திரமென்றறிந்துகொள். அச்சமையத்தில் லக்ஷ்மிதேவி கருடன் ஆதிசேஷன் இம்மூவரும் இந்த மூன்று மந்திரங்களைத் தங்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்று வணங்கிப் பிரார்த்தித்தார்கள். அதைக் கேட்டதும் விஷ்ணுவானவர் மகிழ்ந்து அவர்களுக்குத் தனித்தனியே உபதேசஞ் செய்தருளினார். ஆதிசேஷன் இவ்வாறு உபதேசம் பெற்று, தம்முடைய உலகமாகிய பாதாளலோகஞ் சென்று, அங்குள்ள வாசுகி முதலிய நாகங்களுக்கும் அம்மந்திரத்தை உபதேசித்துப் பிரசித்தப் படுத்தினார். லக்ஷ்மிதேவி வைகுண்டலோகஞ் சென்று வானவர்கள் யாவரையும் வர வழைத்து, அவர்களுக்கு அம்மந்திரத்தை உபதேசித்து, சொர்க்கலோகத்திலும் பிரசித்தப் படுத்தினார். கருடன் பூலோகம் வந்து இங்குள்ள யாவருக்கும் இவ்வாறே அம்மந்திரத்தை உபதேசித்தார்.

ஏ கிரிராஜ புத்திரியே! அம்மந்திரங்களின் இரகசியமான உண்மையை மந்திர சாஸ்திரங்களிலேயே யறியவேண்டும். ஆதியில் மூன்றாக வகுத்த பிரிவுகளில், ஒரு பாகத்தை வானவர்களுக்கும் மற்ற பாகத்தை முனிவர்களுக்கும்இன்னொரு பாகத்தைநாகர்களுக்கும் அளித்தார். பிறகு தேவர்கள் தங்களுக்குக்கிடைத்த பாகத்தைப் பெற்றுக்கொண்டு சொர்க்க லோகஞ் சென்று மகிழ்ந்

தார்கள். இவ்வாறே நாகர்களும் பாதாள உலகம் சென்று மகிழ்ந்தார்கள். முனிவர்களுக்குக் கிடைத்த பாகமானது பூலோகத்தின் கண் பரவிற்று. அந்த பாகத்தை மறுபடியும் சப்தத்தீவுகளிலும் பரவும்படி ஏழுபாகங்களாகப் பிரித்தார். அது பாகமொன்றுக்கு நான்கு கோடியே எழுபத்தாறு லக்ஷத்து பத்தொன்பதினாயிரத்து நாற்பத்தேழு கிரந்தங்களாக ஏற்பட்டுக் கடைசியாக நான்கு சுலோகங்கள் மீந்தன. அவைகளைப் பிரமதேவர் தமக்குக் கொடுக்கும்படி வேண்ட, பக்தியிற்சிறந்தவரான அவருக்கு, மகா விஷ்ணுவானவர் மனமகிழ்ச்சியுடன் யளித்தார். அத்தீவுகளுக்குள் புஷ்கரமென்னுந் தீவு இரண்டு பாகமாகப் பிரிந்திருந்தமையால், அதற்குரிய கிரந்தங்களை இரண்டு பாகமாகப்பிரித்தார். அதில் பாகமொன்றுக்கு இரண்டு கோடியே முப்பத்தெட்டு லட்சத்து, ஒன்பதினாயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்று கிரந்தங்கள் பிரிந்தன. சாகத்தீவு முதலிய ஐந்து தீவுகளும் ஒவ்வொன்று எவ்வேழு பிரிவுகளாக இருந்தமையால், அவற்றுக்குத்தக்கபடி பாகங்கள் ஒவ்வொன்றையும் பிரித்தார். இப்படிப் பிரிக்கப்பட்டதில் பாகம் ஒன்றுக்கு, அறுபத்தெட்டு லட்சத்து இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொன்றாகப் பிரிந்தது. கடைசியாகிய ஜம்பூத்தீவானது ஒன்பது பிரிவாக இருந்தமையால் அதற்கொத்து, அதற்குரிய பாகத்தை ஒன்பது பிரிவுகளாகப்பிரிக்க, பாகமொன்றுக்கு ஐம்பத்திரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்றேழாயிரத்தைந்து கிரந்தங்களாகிக் கடைசியில் ஸ்ரீ என்ற எழுத்து மீந்தது. அதைப் பொதுவாக ஒன்பது பிரிவுகளிலும் சேர்த்துவிட்டார்.

இவ்வாறு சதகோடி இராமாயண கிரந்தத்தைத் தசகபடி பிரித்து விட்டு மகாவிஷ்ணு அந்தர்த்தானமாயினர்.

ஏ கார்த்தியாயனி! பின்னொருகாலத்தில் புத்திசாலிகளுக்குள் சிறந்தவனான இராவணன், கலியுகத்தில் வேதியர்கள், மந்தபுத்தியுடையவர்களாயும் குறைந்த ஆயுளை யுடையவர்களாயும், இருப்பார்களென்று தன்புத்தி விசேஷத்தாலறிந்து, அவர்களுக்கு இணக்கமாக நான்கு வேதங்களையும் தன்னுடைய புத்தி

சாமர்த்தியத்தால், சுளுவாகவும் நூற்றுக்கணக்கான பிரிவுகளாகவும் வகுப்பான். ஏ தேவி! கிருஷ்ணன் பூலோகத்தில் வியாசராக அவதரித்து, மனிதர்களின் நன்மைக்காக, இந்த இராமாயணத்தின் சில பாகங்களைக் கொண்டு பதினேழு புராணங்களைப் பலவேறுவிதமாகச் செய்யப்போகின்றார். பாரதமென்னும் சிரேஷ்டமான இதிகாசத்தை விரிவாகச் செய்யப்போகின்றார். இவற்றில் பாரத வருஷத்துக்குள்ளடங்கிய ஒரு பாகத்தைப் பற்றி விசேஷமாகச் சொல்லப்படும். அவ்வியாச முனிவர் இவ்வனந்தம் புராணங்களைச் செய்தும் மன ஒப்புவுபெறாமல் ஸரஸ்வதி நதியின் கரையில் இன்னும் எதைச் செய்யலாமென்னும் யோசனையிலிருக்கப்போகின்றார். அந்தச் சமயத்தில், பிரமதேவர் ஸ்ரீமகாவிஷ்ணு தமக்கு உபதேசித்திருக்கும் நான்கு சுலோகங்களை நாரத முனிவர்க்கு, உபதேசிக்கப்போகின்றார். அவ்வுபதேசம் பெற்றபின் நாரத முனிவரும் தமது வீணையை மீட்டி இந்தச் சுலோகங்களை இனிமையாகப் பாடிக்கொண்டே சத்தியவதிசுதராகிய வியாச முனிவர்க்கருகில் சென்று, அச்சுலோகங்களை அவருக்கு உபதேசிக்கப்போகின்றார். இராமாயணத்திலடங்கிய அச்சுலோகங்களை வியாசமுனிவர் உபதேசமூலமாகப் பெற்றபின், மனவொழிவடைந்து, அவைகளின் கருத்தைத் தாம் விவரித்து அக்கருத்தைக் கொண்டே பதினெண்ணாயிரம் கிரந்தம் அடங்கிய ஸ்ரீமத் பாகவதமெனும் பதினெட்டாவது புராணத்தை சர்வஜன மனோஹரமாகச் செய்வார். அதனாலே தாம் பாகவதத்தை இயற்றியதானது மற்ற புராணங்களிட வேறுவிதமாகவே இருக்கின்றது. ஏ பிரியே! இப்புராணங்கள் யாவற்றிலும் வான்மீக முனிவர் இயற்றியது மிக்க இனிமையாகவிருக்கும். வியாச முனிவரும் இந்த இராமாயணத்தை நூறு மடங்கதிகமாக விவரிக்கப்போகின்றார். இன்னும் பற்பல ஸாரங்களையும் அடக்கி உபபுராணங்கள் யாவையும் செய்யப்போகின்றார். பாரதகண்டத்திற்குரிய இராமாயணத்தின் மூலமாக முனிசுவரர்கள் ஆறு சாஸ்திரங்களைச் செய்யப்போகின்றார்கள். பூலோகத்தில் இன்னும் பலபேர் சுலோகரூபமாகச்செய்யும் கதைகளுக்கு இந்த இராமாயணமே மூலமாகும்.

பார்வதி கூறுகிறாள்.

ஏ நாதா! நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நாரதமுனிவர் பிரம தேவரிடத்திலிருந்து தாம் அறிந்தவாறு மகா பாதகங்களையும் போக்கடிக்கும் அந்த நான்கு சுலோகங்களை வியாசமுனிவருக்கு உபதேசம் செய்யப் போவதாயும் அந்த உபதேசமூலமாய் அந்த முனிவர் பாகவதம் செய்யப்போவதாயும் கூறினீர்களே; அந்நான்கு சுலோகங்களையும் தங்களிடம் கேட்கவிரும்புகிறேன்; தயவு செய்து கூறவேண்டும்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பிரியே! நீ நல்ல கேள்வி கேட்டாய்! நான் சொல்வதைக் கவனித்துக் கேள். ஆதியில் நாராயணன் பிரம தேவருக்கு உபதேசஞ் செய்தார். அவர் வியாச முனிவர்க்கு உபதேசஞ் செய்தார். அவைகளை உனக்குக் கூறுகின்றேன்.

|| ஸ்ரீ பகவாநுவாச ||

அஹமேவாஸமேவாக்ரே நாந்யத்யத்ஸதஸத்பரம் |
பஸ்சாதஹம் யதேதச்ச யோऽவசிஷ்யேத ஸோऽஸ்ம்யஹம் ||
ருதேऽர்த்தம் யத்ப்ரதீயேத ந ப்ரதீயேத சாத்மநி |
தத்வித்யாதாத்மநோ மாயாம் யதாபாஸோ யதா தம: ||௨||
யதா மஹாந்தி பூதாநி பூதேஷூச்சாவசேஷ்வநு |
ப்ரவிஷ்டாந்யப்ரவிஷ்டாநி ததா தேஷு ந தேஷ்வஹம் ||௩||
ஏதாவதேவ ஜிஜ்ஞாஸ்யம் தத்வஜிஜ்ஞாஸுநாத்மந: |
அந்வயவ்யதிரேகாப்யாம் யத்ஸ்யாத் ஸர்வத்ர ஸர்வதா |

மகாவிஷ்ணு கூறியவை.

சிருஷ்டிக்கு முன் நான் ஒருவனாகவே யிருந்தேன். என்னைத் தவிர சதசத்பரமான வஸ்து வேறொன்றில்லை. சிருஷ்டிக்குப் பிறகு நான் காணும் இவ்வுலகமும். அதன் முடிவில் மிஞ்சியிருப்பவனும் நானே. (க)

ஒரு வஸ்துவில் இல்லாதது உள்ளதுபோல் காணப்படுவதும், இருட்டைப் போலவும் உண்மையின்றித் தோன்றுவதும் ஆத்மாவினிடத்தில் உண்மையாகத் தோன்றாமலிருப்பதுமே மாயை. (உ)

மகா பூதங்களைந்தும் பஞ்சபூதங்களில் கலந்தும் கலவாதது போல் தோற்றுவதுபோலவே, நான் மகா பூதங்களில் கலந்திருப்பேனாயினும் கலவாதவனே. (௩)

பொய் மெய் என்பவைகளில் எது இல்லாதபோது எது பிரகாசிக்கிறதோ அது மெய்; எது பிரகாசிக்கும்போது எது இல்லையோ அது பொய். ஆத்மதத்துவத்தை அறியவிரும்புகிறவன் அறியத்தக்கன இவைகளே. (௪)

ஏ தேவி! இவைகளே மகாவிஷ்ணு பிரமதேவனுக்கு உபதேசித்த நான்கு ராமாயண சுலோகங்கள். இவைகள் அதிபவித்திரங்கள். மனிதர்களுடைய பாவங்களை ஒழித்து அஞ்ஞானத்தை அழித்து, உடனே ஞானத்தைக் கொடுப்பன. விவேகிகள் எப்பொழுதும் பாராயணஞ்செய்வது, நீ கேட்டபடி விவரித்தாயிற்று. இனி நான் முன் கதையைச் சொல்லுகின்றேன் கேள்.

பிறகு நாளடைவில் இராமாயண கதையை முனிவர்கள் சிறிது சிறிதாக மறந்து விட்டார்கள். இதையறிந்த வியாஸ முனிவர், மிஞ்சின இராமாயண அம்சங்களை ஆராய்ந்து பார்த்து, ஒன்று சேர்த்து, இருபத்து நாலாயிரம் கிரந்த மடங்கிய ஏழுகாண்டங்களாக வகுத்து, அவைகளைக் காத்து வந்து கதையின் ஆதியிலும் அந்தத்திலும் சில மங்களகரமான சுலோகங்களைச் சேர்ப்பர். பர்வத புத்திரியே! அதன் மூலமாக அகஸ்தியர் முதலிய முனிவர்கள் பலவித இராமாயணங்களை வெவ்வேறாகச் செய்து, பரதகண்டத்தின் பிரிவுகளில் பிரசித்தப்படுத்துவார்கள். இப்படிப் பிரசித்தப்படுத்துவது நூற்றுக்கணக்காக வாயினும் அவைகள் முழுவதும் வான்மீகி மகரிஷியினுடைய இராமாயணமென்றே புத்திமான்கள் கொள்வார்கள். ஏ தேவி! உனக்கு நான் கூறிய ஸாரகாண்டத்தின் கதையும் வான்மீகி யியற்றிய இராமாயணத்தின் ஸாரமே. சதகோடிக் கணக்கான இராமாயண கதையை ஐந்து முக

முள்ள யான், தேவ வருஷங்களில் அற்புதக் கணக்கான வருஷங்கள் கூறினும் முடியாது. வான்மீகி முனிவர் தமது தபோமகிமையால், அநந்தமாகச் செய்த இராம சரித்திரத்தின் ஸாரங்களையெடுத் தெடுத்துச் சுருக்கி, உனது பிரியத்தை முன்னிட்டு, இராமதாஸ், விஷ்ணு தாஸர்களுடைய சம்வாத ரூபமாக ஏற்பட்ட மங்கள கரமான யாத்திரா காண்டத்தை ஞான திருஷ்டியால் அறிந்து யான் கூறுகின்றேன்.

இராமாயண விரிவைக் கூறும் இரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

பார்வதி கூறுகிறாள்.

பிராண நாதா! தாங்கள் கூறிய இராமதாஸர், விஷ்ணுதாஸர் என்பவர்கள் யாவர்? அவர்கள் எங்கிருந்தனர்? அவர்களில் குருவாகிய ஒருவர் தமக்கு மாணாக்கராகிய மற்றவர்க்குக்கூறியது யாது? அதை எனக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன் என்றனள்.

பரமசிவன் கூறுகிறார்.

பாரத வருஷத்தின் ஒரு பாகமாகிய தண்டகாரண்யத்துள், கோதாவரி நதியின் நடுவில் விளங்கும் அப்ஜகம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில், நரசிம்மமென்னும் பேர்கொண்ட முனிவர் இருந்தார். அவருக்கு இராமனென்னும் ஒரு புத்திரன் பிறந்தான். அந்த இராமனுக்கு விஷ்ணுவென்கிற மாணாக்கன் ஏற்பட்டான். அவ்விருவரும் நாள்தோறும் விஷ்ணு பக்தியில் சிறந்தவர்களாகி அவரைத் தொழுது வந்தார்கள். அவ்விரு பிராமணோத்தமர்களும் ஸ்ரீராம பிரானுடைய பக்தியில் மூழ்கி இடைவிடாமல் சேவிப்பார்களாதலால், இராமன் என்பவனுக்கு இராமதாஸனென்றும் விஷ்ணு என்பவனுக்கு விஷ்ணுதாஸனென்றும் பெயர் உலகத்தில் பரவிற்று. அவர்களில் ராமதாஸன் என்பவன் கயா க்ஷேத்திரஞ் சென்று அங்குத் தனது பிதிர் திருப்திக்காக கயா சிராத்தம் செய்து, பிறகு பூமியிலுள்ள சகல தீர்த்தங்களுக்கும் சென்று கிரமப்படி யாத்திரையை முடித்துக் கொண்டு மறுபடி கோதாவரி நதிதீரம் அடைந்து, கிரகஸ்தாச்ரமம் பெற்று, பல மாணாக்கர்களுக்குக் கல்வி போதித்து வந்தான். அப்படிப் போதித்து வருங் காலையில் விஷ்ணுதாஸனென்பவன், இராமதாஸரது முகார விந்தத்தின் மூலமாகப் பலவிதமான கதைகளையும் இராமாயணத்தில் ஸாரகாண்டத்தையுங் கேட்டுப் பிறகு சில சந்தேகங் களையும் கேட்டான்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்:

ஆசாரிய! எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றை எனக்குத் தெரிவிக்கவேண்டுகின்றேன். தங்கள் மூலமாக இரா

மாயணத்தில் ஸாரகாண்டத்தின் கதையை நான் கேட்டேன். அதில் இராமபிரானுக்காவது ஜானகிக்காவது, சிறிதும் சௌக்கிய மேற்பட்டதாகத் தெரியவில்லை. இராமருடைய ராஜ்ய பரிபாலனத்தைப் பற்றியவைகளும் தெரியவில்லை. அவர் யாகஞ் செய்தவிதமென்ன? அவர்க்குண்டான சந்ததிகள் எவ்வளவு? அவருடைய சகோதரர்களுக்குப் புத்திரர்கள் எவ்வளவு பேர்கள்? அந்தப் பிள்ளைகளுக்கு எவ்விடங்களில் விவாகம் நடைபெற்றிருக்கிறது? இவைகளனைத்தையும் நான் கேட்க விரும்புகின்றேன். ரம்மியமானதும், பரிசுத்தமானதும், ஆனந்தமுண்டாக்குவதும் பாபங்களைப் போக்கக் கூடியதுமான ஸ்ரீ ராமபிரானுடைய சரித்திரத்தை எனக்குக் கூறியருளுமென்றார்.

இராமதாஸர் கூறுகிறார்.

மாணவா! நீ கேட்கவிரும்பிய இராம பிரானுடைய சரித்திரமானது உள்ளபடியே பாபவிமோசனந்தரத்தக்கதும் மங்களகரமுமானதால், அதைக் கூறுவதில் எனக்கு மிகவும் சந்தோஷம். அதைநான் கேட்டபடி உனக்குக் கூறுகின்றேன்.

ஸ்ரீ ராமபிரான் இராவண சங்காரஞ் செய்து, இவ்வுலகத்தைச் சத்ருபயத்தினின்றும் விடுவித்து, முத்தியை அளிக்கத்தக்க பட்டணங்களுள் முதன்மையான அயோத்தியா பட்டணத்திலிருந்து நீதி தவறாமல் இராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார்.

இராமர் இவ்விதம் இராஜ்யபரிபாலனஞ் செய்து வருங்காலத்தில் பஞ்சம் திருட்டு அகாலமரணம் அதிவிருஷ்டி அநாவிருஷ்டி வெட்டுக்கிளிகள் எலிகள் இராஜாக்கள் பேராசைப் படுவது முதலிய ஈதிபாதைகள் எதுவுங் கிடையா; தரித்திரம் மனக்கவலை, நோய்கள் இவைகள் கிடையா; பிச்சை யெடுப்பவன் துஷ்டன் இரக்கமில்லாதவன் கோபக்காரன் நன்றி மறந்தவன் இவர்களைக் காண்பதரிது.

ஒரு காலத்தில், அழகான நாசியையுடைய வதனும்பொருகமும் திவ்யாலங்கார பூஷிதையுமான சீதாதேவி ஏகாந்தமாகவிருக்கும் தனது பர்த்தா இராம பிரானருகே சென்று

திவ்ய சாமரங்களை எடுத்து வீசி உபசரித்து, தலை வணங்கி நின்று நாணத்துடன் வினயமாய் அவர் திருமுகநோக்கிக் கூறலாயினள்.

ஏ இராமா! இராஜீவபத்ராக்ஷா! இராவண சங்காரஞ் செய்த எனது பிரபுவே! அனுமதி தந்தால் தர்ம மூலராகிய தங்களிடத்தில் நான் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன் என்றாள். உடனே ஸ்ரீராம பிரான் "ஏ சீதே! தாமரை தளம் போன்ற நேத்திரமுடையவளே! உன் மனதிலிருப்பதைச் சீக்கிரம் தெரிவி; அதை உடனே நான் நிறைவேற்றுகின்றேன்" என்றார். ஒரு சம்மான மளித்ததற் கொப்பான ஸ்ரீராம பிரானுடைய மொழியமுதத்தைச் செவியிலருந்திய சீதாபிராட்டி சந்தோஷ ப்ரவாகத்தில் மூழ்கினவளாகி, "ஏ நாதா! இரகுபுங்கவா! நீர் உமது பிதிர்வாக்ய பரிபாலன நிமித்தம் என்னுடனும் ஸௌமித்ரியுடனுங்கூடி தண்டகவனம் போவதற்காக நமது அயோத்தியா நகரத்தைப் விட்டுப் புறப்பட்டு, சிருங்கபேர புரஞ் சென்று, அங்கிருந்து காங்கா நதியைத் தாண்ட ஓடமேறிச் செல்கையில், உங்களிருவர் முன்பாக நான் சங்கற்பம் செய்து கொண்டதை இப்போது தங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். "ஏ கங்கா தேவி! உன்னைப் பலவாறு வணங்கிப் பிரார்த்திக்கின்றேன். பதினான்கு வருஷகால வனவாஸ விரதத்தை முடித்து, இராமர் இலட்சுமணர் இவர்களுடன் க்ஷேமமாகத் திரும்பிவரும் போது, மதுமாம் சோபகாரம் முதலிய வைகளைக் கொண்டு பக்தியுடன் உன்னை நான் பூஜிக்கின்றேன்' எனக் கங்காதேவியை நான் பிரார்த்தித்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம். பிறகு அந்தப் பதினான்கு வருஷமும் சென்று புஷ்பகவிமானமேறி நமது பட்டணம் வருகையில் பரதன் சத்ருக்னன் கௌசல்யை இவர்களைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலினால், அதை நான் மறந்துவந்து விட்டேன். இப்பொழுது அதை நினைத்துக் கொண்டேன். அந்த என் கோரிக்கை நிறைவேறுவதற்காகத் தாங்கள் தாய்மார்களுடனும் சகோதரர்களுடனும் அவ்விடம் போகவேண்டு"மெனப் பிரார்த்திக்கின்றேன். இது தங்கள் மனதிற்குத் திருப்தியாயிருக்குமானால், செய்யலாம். செய்ய

வேண்டுமென்று கட்டளையிடவில்லை" என்றாள். இவ்வாறு சீதை கூறியதைக் கேட்டதும் இரகுராமர் சந்தோஷமடைந்து நகைத்துச் சீதையைத்தழுவிக்கொண்டு "ஏ மைதிலி! இவ்வளவு சாதுர்யமான வார்த்தைகளைப் பேச நீ எவ்விதம் கற்றாய்? நீ கங்காதேவியைக் குறித்து அப்போது சங்கற்பம் பண்ணியது உனக்குமட்டு முரியதன்று. உன்னுடன் கூட வனவாஸத்துக்கு வந்த எங்களுக்கும் பாத்தியப்பட்டதே. நீ சொல்லியபடியே உன் கோரிக்கையை நிறைவேற்ற நாளையதினமே புறப்படுவோம். ஆனால் கங்கா நதியைப் பூஜிப்பதற்கு எவ்விடத்துக்குச்செல்லவேண்டுமென்று நீ உத்தேசித்திருக்கின்றாய். அதைத்தெரிவித்தால் அங்கே போவதற்கு மார்க்கத்தை யுண்டாக்கவும் இறங்குமிடத்தைச் சுத்தகரிக்கவும் தூதர்களுக்குக் கட்டளையிடுகின்றேன். அதுகேட்ட சீதை ஸ்ரீராமபிரானை "ஏ ரகுகுல சிரேஷ்டரே! கங்காநதியும் சரயூநதியும் சங்கமமாகும் இடத்தில் கங்கையின் வடகரைக்குச் செல்லவேண்டுமென்று என்மனம் விரும்புகிறதென்றாள்" பிறகு இராமர் "சீதே! அப்படியேசெய்வோம்" என்று சொல்லிச் சீதையை வஸ்திரத்தால் மறைத்து விட்டுத் தன் துவாரபாலகர்களை வரவழைத்து, அவர்களைப்பார்த்து, நீங்கள்சீக்கிரம் இலட்சுமணனிடம் சென்று நான்சொல்லும் விஷயங்களைவிவரித்துக்கூறுங்கள். அதாவது—"உன்னுடனும் தாய்மார், மந்திரிகள், மித்திரர்கள் பரதசத்ருக்னர்கள் பட்டணத்து ஜனங்கள் வேதியர்கள் இவர்களுடனும் நானும் சீதையும் சரயூ கங்காசங்கமம் சென்று, அவ்விடத்தில்கங்காபூஜைசெய்ய உத்தேசித்திருப்பதால் அங்கே அரைக்காத வழி விஸ்தீரணத்துக்கு சேனைகளுக்கிருப்பிடமும், அதனருகில் நம்மெல்லாருக்கும் தனித்தனியே அன்னபானாதி சகல வஸ்துக்களும் வைக்கத்தக்க அறைகளும் ஏற்படுத்தவேண்டியது. நாளையதினம் வேடிக்கையாகப் புறப்படத் தயாராயிருக்கவேண்டும்" என்று தெரிவியெனத் துவாரபாலகர்களுக்கு ஆக்ஞாபித்தார். ஆக்ஞையைக்கேட்ட உடனே துவாரபாலகர்கள் "தங்கள்உத்தரவுப்படியேசெய்யக்காத்திருக்கிறோம்" என்று அவரைப்பலவாறு வணங்கி ஸௌமித்ரியிடம் சென்று இராமபிரான் கூறிய விஷயமுழுவதையும் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட

யுவராஜ்ய பதவியிலிருக்கும் இலட்சுமணர், மந்திரிகளுடையமுகங்களைப்பார்த்துவிட்டுத் தூதர்களைப்பார்த்து, "தூதர்காள்! அவரது உத்தரவை ஏற்றுக்கொண்டதாக ஸ்ரீராமபிரானிடம் தெரிவியுங்க" ளென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் உடனே இராமபிரானிடம் வந்து, அவ்வாறே தெரிவித்தார்கள்.

பிறகு இலட்சுமணர் தங்கத தடிபிடித்தவர்களும் பலவிதமான தலைப்பாகைகள் அணிந்தவர்களுமான தூதர்களைப்பார்த்து "நீங்கள் யாவரும் சீக்கிரம் பட்டணத்துக்குட் சென்று பட்டணத்துஜனங்கள் யாவருக்கும் நாளையதினம் ஸ்ரீ ராமபிரான் யாத்திரை புறப்படப்போவதைத் தெரிவியுங்க" ளென்றுஆக்ஞாபித்தார். அத்தூதர்கள் நல்லது அப்படியே செய்கிறோமென்று சொல்லிவிட்டு உடனே இராஜ வீதிகள் தோறும் சென்று அங்கே தங்கள் கரங்களை உயரத் தூக்கிக்கொண்டு உரத்து "ஏ ஜனங்களே! சுகமாகக் கேளுங்கள். நாளைதினம் இராமபிரான் சீதையுடன் கங்கா பூஜைசெய்வதற்காக, கங்காஸரயூசங்கமத்திற்குச் சந்தோஷமாகப் புறப்படப் போகிறார். இதை நீங்கள் அறியுங்கள்" என்று யாவருக்கும் தெரிவித்துவிட்டு, இலட்சுமணரிடஞ்சென்று தங்கள் உத்தரவுப்படியே ஜனங்கள் யாவருக்கும் தெரிவித்துவிட்டோமென்று கூறிச்சென்றார்கள். இலட்சுமணர் சபையில் தமது சேவகர்களைக் கொண்டு தச்சர்கள், செங்கலப்பவர்கள் கன்னார், சக்கிலியர்கள், மண் ஒட்டர்கள், கடைக்காரர்கள், விறகு வெட்டிகள், குடியிருப்புக் கிரகங்கள் அமைப்பதில் கைதேர்ந்தவர்கள், பொதிமாட்டு மூலமாகத் தண்ணீர் கொண்டு வருகிறவர்கள், மற்ற வேலைகளையும் நடத்தத் தக்க வேலைக்காரர்கள் இவர்கள் யாவரையும் வரவழைத்து, அவர்களுக்கு வஸ்திர பணங்களை அளித்துச் சந்தோஷப் படுத்தி அன்புடன் "வேலையாட்களே! ஸ்ரீ ராமபிரான் சீதா பிராட்டியுடன் சைன்னியங்கள் சூழ நாளையதினம் யாத்திரை புறப்படுகிறாராதலால், நீங்கள் மார்க்கத்தை மேடு பள்ளங்களில்லாமல் ஒழுங்குபடுத்தி நடையாய்ப் போவதற்கும் இரதஞ் செல்வதற்கும் சரியானபடி வைக்கவேண்டியது. மார்க்கத்தில் இடையூறாக விருக்கும் மலைகளையும் மரங்களையும் வெட்டி ஒழுங்குப்படுத்த வேண்டியது. வழியிலிருக்கும் வாவிகள்

கிணறுகள் குளங்கள் தடாகங்கள் இவைகளைச் சுத்தப்படுத்தி இல்லாத விடங்களில் நூதனமாக உண்டுபண்ணி, எல்லா இடங்களிலும் ஜலம் சுகமாகக் கிடைக்கும்படி செய்யுங்கள். சேனைகள் இறங்குவதற்காக ஒன்றரைக் காத வழி விஸ்தீரணமுள்ள இடமேற்படுத்தி, அங்கே சகல சாமான்களும் நிறைந்திருக்கும்படி செய்ய வேண்டியது. நல்ல சுவர்களெழுப்பிச் சமயல் வீடுகளையும் அங்கு அடுப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். வீடுகளின் மேல் புற்களைப் போட்டு வெய்ந்து உட்புறங்களில் வஸ்திரங்களைக்கட்டி அலங்கரியுங்கள். இன்னும் சில கிருகங்களேற்படுத்தி அவைகளைச்சிவப்பு வஸ்திரங்களால் அலங்கரித்து அங்கே சாமான்களைச் சித்தப் படுத்துங்கள். மார்க்கத்தில் அங்கங்கே பூந்தோட்டங்களேற்படுத்தி, அவைகளின் சுற்றுச் சுவர்களில் சித்திரங்களை வரைந்து அழகு செய்யுங்கள். மனிதர்கள் தங்கள் சிரசில் தூக்கிக் கொண்டு செல்லும் படியாகச் சித்திரப் படங்களைத் தயார் செய்யுங்கள். குளிர்ச்சிக் காகவும் வாசனைக்காகவும் மண் பாத்திரங்களில் பூஞ்செடிகளை வைத்துத் தயார் செய்யுங்கள். வழியில் அங்கங்கே பாட்டுக் காரர்கள் சுகமாகப் பாடிக்கொண்டிருக்கத் தக்க வசதிகளை யேற்படுத்துங்கள். யானை குதிரை தேர் இவைகளுக்கு ஆயிரக் கணக்கான சாலைகள் ஏற்படுத்தி, அவைகளில் புல் முதலியவைகளை நிறைத்து வையுங்கள். மார்க்கங்களில் சந்தனக் குழம்புகளைத் தெளித்து இரதங்களின் சக்கரங்கள் பதியாமலிருக்கும்படி செய்யுங்கள். அங்கங்கே கூடாரங்களை யடித்து அவைகளைப் புஷ்பங்களாலலங்கரியுங்கள். யானை ஒட்டகம் குதிரை இரதம் இவைகளுக்கு வஸ்திரங்கள் கட்டி மணிகள் தொங்கவிட்டு அலங்கரியுங்கள். வண்டிகள் இரதங்கள் ஒட்டகங்கள் யானைகள் இவைகளில் சதக்னி, பரிகம், பாணம், சக்தி, விற்கள் இவைகளை நூற்றுக் கணக்காகவே வைத்து அனுமான் கருடன், கோவிதாரம், பாணம் முதலிய சுபாகாரமான அடையாளங்களமைந்த கொடிகளை நாட்டுங்கள். அவைகள் பச்சை, வெண்மை, சிவப்பு, நீலம் இந்நிறங்கள் உள்ளவைகளாயிருக்கட்டும். ஸ்ரீ ராமபிரான் ஏறிச் செல்லும் யானையின்மீது, சொர்ணம், மாணிக்கம் இவைகளால் செய்யப்பட்ட பச்சை நிறமான ஆசனத்தை அமைத்து, அதைச் சுற்றிலும் முத்துச் சரங்களைக் கட்டித்

தொங்க விட்டு, அதன்மேல் சந்திர வட்டக் குடையை நாட்டுங்கள். சீதாபிராட்டி ஏறிச் செல்லும் பெண் யானையைச் சொர்ணம் பவளம் வைடூரியம் முத்து இவைகளால் அலங்கரித்து நீல வர்ண முள்ளதான ஓர் ஆசனத்தை ஏற்படுத்தி அதில் சொர்ண கும்பத்தையும் வையுங்கள். வழியில் புஷ்ப மாலைமயமான தோரணங்களைக் கட்டுங்கள். இரதங்களில் அவ்விடத்துக்கு வேண்டிய வஸ்திரங்கள் தோரணங்கள், பலவிதமான பாத்திரங்கள் இவைகளை எடுத்து வையுங்கள். இன்னும் பல விஷயங்கள் கூறவேண்டியிருக்கின்றன. ஆயினும் புத்திசாலிக ளாகிய நீங்கள், யாத்திரைக்கு வழியில் வேண்டியவைகளை யோசித்துப் பார்த்து சித்தப்படுத்தி இராமபிரானைத் திருப்தி செய்விக்க வேண்டும்" என்றிவ்வாறு இலட்சுமணர் கட்டளையளித்துச் சாயங்கால வேளை வந்தமையால், சந்தியாவந்தனஞ் செய்யச் சென்றனர்.

இலட்சுமணர் கூறிய கட்டளைப்படியே தூதர்கள் இராமபிரான் சந்தோஷமடைய வேண்டுமென்னும் எண்ணத்துடன் யாவற்றையும் சரிவர நடத்தி வந்தார்கள். இராமபிரான் சீதையுடன் நவரத்ன மயமான தமது கிருகத்தில் புஷ்பப் படுக்கையில் சயனித்து, திவ்விய சொர்ணாபரண பூஷிதையான பல தாதிகள் சாமரம் வீசிவர அன்றிரவு சுகமாக நித்திரை செய்தார்.

தூதர்களுக்குக் கட்டளையிட்ட மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

அன்றிரவு விடியற் காலத்தில் வந்திகள் சுகமாகப் பாடினார்கள். மங்கள வாத்தியங்கள் இனிமையாக முழங்கின. இதைக் கேட்டு இராமபிரான் சீதையோடெழுந்திருந்து, நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பற்பல தானதர்மங்களைச் செய்து விட்டு, கோபாலன் என்னும் பேர்கொண்ட ஒரு ஜோதிட பிராமணரை யழைத்து, அவரை வணங்கி, தக்க மரியாதை செய்து பூஜித்து, அவரைப் பார்த்து "ஏ மகா புத்திசாலியாகிய கோபால கணிகரே! பிராமணோத்தமரே! கங்கா பூஜை செய்வதன் நிமித்தம் இப்பொழுது யாத்திரை செய்ய விரும்புகிறேன். அதற்காக ஒரு முகூர்த்தம் திட்டமாய் யோசித்து வைத்துக் கொடும்" என்றார். அது கேட்டவுடன் கோபால ஜோஸியர் தமது முன்னிலையில் பஞ்சாங்க படத்தை விரித்து, அதில் நவக்ரகங்களின் பலாபலன்களைச் சோதித்துப் பார்த்து, தமது மனதில் நன்றாய் நிச்சயஞ் செய்து கொண்டு "ஏ இராஜீவ பத்ராக்ஷ! இன்று முதல் யாமத்தில் பூசநக்ஷத்திரங் கூடிய ஒரு உத்தமமான முகூர்த்த மிருக்கின்றது; அதன் பலனைக் கூறுகின்றேன். தாங்கள் கவனித்துக் கேட்கவேண்டும். இங்குவந்திருக்கு முனிவர் யாவரும் கேட்கட்டும். தமது குருவாகிய வசிஷ்டரும் செவிசாய்க்கட்டும், பூசநக்ஷத்திரந் தரும் பலனை போகங்களாவது லக்நமாவது மற்ற நக்ஷத்திரங்களாவது சந்திரனாவது குருவாவது ராகுவாவது யோகினியாவது கொடுக்கத் தக்கதன்று. அப்பூச நக்ஷத்திரமானது அக்காலத்தில் சகலமான நற்பலனையுமளிக்கும். ஏ இரகுநாயகா! யாத்திரைக்காக நான் வைத்துக் கொடுத்த இம் முகூர்த்தத்தில் தாங்கள் சீதாபிராட்டியுடன் புறப்படுங்கள்" என்றார். இவ்வாறு ஜோதிடர் கூறியதைக் கேட்ட இராமர், இலட்சுமணனைப் பார்த்து, "ஏ இலட்சுமணா! நல்ல முகூர்த்தத்தில் நாம் புறப்படப் போவதால், இப்பொழுது நம்முடன் சேனைகளும் புறப்படுவதற்கு முதல் அடையாளமாகப் பேரி மிருதங்கம் பணவம் காகளம் ஆனகம் கோமுகம் தாளம் கர்கரம் துந்துபி என்னும் இவ்வொன்

பது மங்கள வாத்தியங்களும் முழங்கட்டும்" என்றார். உடனே இலட்சுமணர் தூதர்களை யழைத்து அவ்விதஞ் செய்ய உத்தரவிட்டார், அக்கட்டளையைப் பெற்ற தூதர்கள் அவ்வாறே செய்தார்கள். புரோகிதராகிய வசிஷ்ட முனிவர் சொற்படி அநேகம் வேதியர்களைக் கொண்டு நாந்தி சிராத்தம் செய்து புத்ருக்கு நெய்வார்த்து அன்னமிட்டு அவர்களுக்குத் திருப்தி யுண்டாக்கினார். அதன்பிறகு கணேசர் முதலிய தேவபூஜை செய்து வசிஷ்டர் கூறியபடி யாத்திரைக்குச் செய்யத் தக்க விதிகளையும் முடித்துக்கொண்டு, அவரைப் பார்த்து "ஏ பரமகுருவே! நமது புஷ்பக விமானத்தில் நமது பந்துக் களுடனும் வேதியர்களுடனும் என் முன்பாக அக்னி ஹோத்திரங்களை எடுத்து வையுங்கள். நீங்களே அவைகளை யெடுத்துச் சொல்லத் தக்கவர்கள். சீதை ஏறி வரப்போகும் புஷ்பமாலை அலங்காரத்தோடு கூடிய பெண் யானையானது, நானேறிவரும் யானையினருகிலேயே வரட்டும்" என்று கூறினார்.

பிறகு சீதையிடஞ் சென்று "ஏ சீதே! எந்த வாகனத்தில் நீ ஏறிவர உனக்குப் பிரியம்; அதை எனக்குத் தெரிவி; அந்தப்படி யான் திட்டஞ் செய்கிறேன்" என்றார். சீதை ஒரு நிமிஷநேரம் மனதி லாலோசித்து "ஏ இரகுநாயகா! நான் பெண்யானையின் மேல் ஏறி வருகிறேன். அது உமக்குப் பிரியமானால் அப்படியே நடக்கட்டும்" என்றாள். பிறகு இராமபிரான் இலட்சுமணருக்கு அவ்வாறு உத்தரவு செய்துவிட்டு, சீதைக்குத் திவ்ய வஸ்திரங்களை யர்ப்பித்து, தமது தாய்மார்களுக்கும் சோதரபத்னிகளுக்கும் குரு பத்னிகளுக்கும் வசிஷ்டருக்கும் வேதியர்களுக்கும் வஸ்திரங்களை யளித்துப் பிறகு தமது சகோதரர் களுக்கும் வஸ்திரங்களை யளித்து, தரித்துக் கொள்ளும்படி செய்து, தாமும் நூதன வஸ்திரம் உடுத்துக் கொண்டார். இதன்பின் பலவிதமான சஸ்திரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு சீதையைச் சீக்கிரம் புறப்படும்படி அவசரப் படுத்தி விட்டு, தாய்மாரையும் பெரியோரையும் வணங்கிப் பின் மந்திரிகள் சூழ சிவிகையிலேறிச் சபைக்கு வந்தார். அங்கே சிங்காதனத்தில் வீற்றிருந்து இலட்சுமணனைப் பார்த்து, "ஏ இலட்சுமணா! இரண்டாவது

அடையாளமாக மறுபடி நவவாத்தியங்களும் முழங்கும்படி உத்தரவு செய்யெனக் கூறினார். அவ்வாறு இலட்சுமணர் கட்டளையிடத் தூதர்கள் வாத்தியங்களை மேகநாதம் போல் முழக்கினார்கள். மறுபடியும் இலட்சுமணரைப் பார்த்து அன்புடன் "ஏ சௌமித்திரே! எனது உத்தரவுப்படி சுமந்திரர் அயோத்தியா பட்டணத்தைப் பாதுகாத்து வரட்டும். எனக்குமுன் பரதனும் என்பின் நீயும் உனக்குப்பின் சத்ருக்னனும் அவனுக்குப் பிறகு சீதையும் அவளுக்குப் பிறகு உனது பத்னியுமாகிய ஊர்மிளையும் அவளுக்குப்பிறகு பரதன் பத்னியாகிய மாண்டவியும் அவளுக்குப் பிறகு சத்ருக்னன் பத்தினியாகிய சுதகீர்த்தியுமாகப் புறப்படவேண்டும். பட்டணத்து ஸ்திரீகளுடன் நமது தாய்மார்களும் விமானமேறிப் புறப்படட்டும். இப்பொழுது சீதை முதலியவர்கள் பெண்யானைகளின்மீது சீக்கிரம் இவ்விடம் வரட்டும். அதன் பிறகு நான் யானையின் மீதேறிக்கொள்கிறேன்" என்றார். உடனே இலட்சுமணர் அவ்வாறே சீதை முதலியவர்களை யானைகளின் மீது ஏற்றி வைத்துக்கொண்டு, வெகு சீக்கிரத்தில் வந்தார். இராமர் உடனே சுமந்திரனுக்குத் திவ்ய வஸ்திரங்களைக் கொடுத்து நான் யாத்திரை செய்துவரும் வரையில், அயோத்தியாபட்டணம் உன் ஆதீனத்திலிருக்கவேண்டியதென்று கூறி, இராஜ்யத்தை அவன்வசப்படுத்தினார். அப்பால் இராமர் முகூர்த்த காலம் வந்ததையறிந்து, இலட்சுமணர் கரத்தைப் பிடித்துக்கொண்டு, சிம்மாசனத்திலிருந்து எழுந்து பட்டத்துயானையின் பக்கம் சென்று, அதை வலமாக வந்து யானைத் தந்தங்களால் அமைத்திருந்தபடியில் பாதமலரை வைத்து மெதுவாக ஏறி அதன்மேல் சுகமாக உட்கார்ந்தார். அச்சமயத்தில் இராஜதூதர்கள் துந்துபி முதலிய நவவாத்தியங்களையும் இனிமையாக முழக்கினார்கள். அப்பொழுது வாரநாரிகள் நர்த்தனஞ் செய்தார்கள். யானை குதிரை இரதம் இவைகளில் பெரிய பெரிய வாத்தியங்களை வைத்துக்கொண்டு முழக்கினார்கள். குண்டு முதலிய யந்திர சப்தங்களைச் செய்தார்கள். வேதியர்கள் ஜபசப்தங்களையும் வேத கோஷங்களையும் செய்தனர். விஜயன் என்பவன் இராமபிரானுடைய ஒரு பாரிசத்தில் நின்றுகொண்டு இரத்தினப்பிடியமைத்த மயில் தோகையாற் செய்யப்பட்ட சாமரத்தை வீசி வந்தான். இன்னொருவன் அவருக்குப் பின் புற

யிருந்து மான் விசிறியை வீசினான். நூறாயிரம் கலசங்களமைந்துச்
சுற்றிலும் முத்துமாலை தொங்கவிட்டு இரத்தினப்பிடி போட்ட
விஸ்தாரமான குடையை மற்றொருவன் பிடித்தான். இதற்குப்
பிறகுஇலட்சுமணர்ஒரு யானையின் பேரில் ஏறிக்கொண்டு அதிவே
கமாக வந்து, இராமபிரானுக்குப் பின்னே நின்றார். சீதை முதலா
னவர்களும் இலட்சுமணருடைய யானைக்குப் பின்னால், தங்கள் தங்
கள் யானையின்பேரிலிருந்து சுற்றிலும் நடக்கும் வேடிக்கைகளைப்
பார்த்துக்கொண்டு வந்தார்கள். புஷ்பகவிமானமும் மெதுவாக
ஆகாயமார்க்கத்தில் வந்துகொண்டிருந்தது. அதிலிருக்கும் பட்
டணத்து ஸ்திரீகளும் ஸ்ரீராமபிரானையும் யாத்திரோற்சவத்தை
யும் பார்த்துக்கொண்டே மலர்மாரி பொழிந்தார்கள். பிறகு முன்
சொன்னவர்கள் யாவரும் கஜங்களின்மேலும் அசுவங்களின் மே
லும் இரதங்களின் மேலும் ஏறிக்கொண்டு ஸ்ரீராமபிரானுக்கு இரு
பக்கங்களிலும் இரத சக்ரகாரைபோல் ஒழுங்காக விருந்து கொ
ண்டும் வழிப்பிரயாணஞ் செய்பவர்களுக்கு ஆகாரமெப்படிச் சந்
தோஷங் கொடுக்குமோ அப்படித் தங்கள் அருகேயிருந்து சந்
தோஷமளிக்கும் இராமபிரானை வணங்கிக்கொண்டும் வந்தார்கள்.
ஸ்ரீராமபிரானும் தமது கமலம் போன்ற கைகளால் அவர் வந்த
னங்களைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தார். இவ்வாறு ஸ்ரீராமபிரான்
மெதுவாகப் பிரயாணஞ்செய்து வரும்போது, சில நடர்கள்யானை
களின் பேரிலேறிக்கொண்டு வீணை முதலிய வாத்தியங்களை வாசி
த்தார்கள். இராமர் இவ்வாறு வழியில் நடக்கும் வேடிக்கைகளை
யும் வாரநாரிகளுடைய நர்த்தனங்களையும் பார்த்துக்கொண்டு,
இனிமையான வாத்திய சப்தங்களையுங்கேட்டுக்கொண்டு அங்கங்கு
ஏற்படுத்தியிருக்கும் பண்டசாலைகளையும் பார்த்துக்கொண்டு சது
ரங்கசேனைகள் சூழ, சேனைகள் இறங்க ஏற்படுத்தியிருக்கும் இட
த்துக்குச் சென்று, அவ்விடம் அயோத்தியைப்போலிருப்பதைப்
பார்த்து மகிழ்ந்து யானையிலிருந்து கீழே யிறங்கினார். அச்சமை
யத்தில்பல வீரர்கள் செய்யும் வணக்கங்களைப்பெற்று, இலட்சு
மணருடைய கையைப்பிடித்துக்கொண்டு அங்கே அமைத்திருக்
கும் கூடாரத்துக்குட்சென்று,சிங்காஸனத்திலமர்ந்தார்.சீதைமுத
லியபட்டஸ்திரீகளும்அவரவர்களுக்கமைக்கப்பட்டிருந்த கூடாரத்

துக்குட் சென்றார்கள். பிறகு இராமர் இலட்சுமணனைப்பார்த்து, "ஏ இலட்சுமணா! இரண்டு மைல் விஸ்தார முள்ள இவ்விடத்தின் எல்லையில் நான்கு திக்குகளிலும் நூற்றுக் கணக்கான தூதர்களைத் தனித் தனியே நின்று காக்கும்படி செய். காதவழிக் கப்பால் எட்டுத்திக்குகளிலும் நூற்றுக் கணக்காகக் குதிரை வீரர்களிருந்து காத்து வரட்டும்" என்று கட்டளை யிட்டார். இலட்சுமணரும் நல்லது அப்படியே செய்கிறேன் என்று சொல்லிவிட்டு இவர் ஆக்ஞைப்படி காவலாளர்களை நியமித்தார். பிறகு இராமபிரான் மித்திரர்களுடனும் வேதியர்களுடனும் நாந்தி சிராத்த சேஷமான நெய்யை மனோகரமான அன்னத்தோடு கலந்து புசித்தார். பிறகு வேதியர்களுக்குத் தாம்பூலமுந் தட்சிணையுங் கொடுத்து விட்டு, முக சுத்தி செய்துகொண்டு மறுபடியும் சிங்காஸனத்திலமர்ந்து வேதாந்த சாஸ்திர சிரவணஞ் செய்தார். பிறகு சந்தியாகாலம் வந்தவுடன், சந்தியா வந்தனாதிகளை முடித்துக் கொண்டு விதிப்படி அக்நிஹோத்திர ஹோமஞ் செய்தார். இதன்பின் சபைக்கு வந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்து வாரநாரிகள் நர்த்தனஞ் செய்வதையும், காயகர்கள் பாடுவதையும் இரண்டு யாமம் கேட்டுக் கொண்டிருந்து பிறகு படுக்கை அறைக்குச் சென்று அங்கு ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் சீதா தேவியுடன் நித்திரை செய்தார். மறுநாளையும், அவ்விடத்திலேயே வேடிக்கையாகவிருந்து கழித்து, மூன்றாவது தினத்தில் முன்போலவே வாத்திய கோஷத்துடன் வேறிடம் சென்றார். இவ்வாறு சில விடங்களில் ஒரு நாளும் சில இடங்களில் இரண்டு நாளும் இருந்து அங்கங்கு நடக்கும் வேடிக்கைகளைப்பார்த்துச் சந்தோஷமடைந்து சேனைக்கும் காட்டி, அவளைச் சந்தோஷப்படுத்தி, மார்க்கத்தில் மிகவும் மெதுவாகச்சென்று ஒரு மாதகாலத்தில், முன்முத்கலமுனி வாசஞ் செய்ததும் இப்பொழுது ஜீர்ண மடைந்திருப்பதுமான உத்தம ஆசிரமத்தை யடைந்தார். அவ்வாசிரமத்திற்கு இராமர் வந்திருக்கும் செய்தியை பாகீரதியின் தென்கரையில் வசித்துவரும் முத்கலர் அறிந்து, உடனே அவிடமிருந்து புறப்பட்டு வந்து இராமபிரானைத் தரிசித்தார். இராமபிரான் அவரைக் கண்டதும் ஆசனத்தி லிருந் தெழுந்திருந்து வணங்கி

மரியாதை செய்து, தமது வாசகிரகத்தில் அவருக்கு ஆசனமளித்து அதில் வீற்றிருக்கச் செய்து வினயத்துடன் முனிவரை வினவுகிறார்.

ஏ முனிபுங்கவரே! இவ்வாசிரமத்தைத் தாங்கள் விட்டு வேறிடம் ஆசிரமமேற்படுத்திக் கொண்டு வசிக்கக் காரணம் யாது? அதன் உண்மையை ஸவிஸ்தாரமாக எனக்குச் சொல்லியருள வேண்டுமென்றார். இதைக் கேட்டதும் முத்கல முனிவர், "ஏ இராமா! பதினான்கு வருஷகால வனவாஸவிருதத்தை முடித்து, அயோத்தியா பட்டணத்தை யடைந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டு சுகமாக ராஜ்ய பரிபாலனஞ் செய்து வரும் உம்மை ஏதோ ஒரு காரண நிமித்தமாக இவ்விடத்தில், வெகு காலமான பின் இன்று தரிசித்ததால், யான் தன்னியனானேன். முன் பரதனுடைய பிராண நிமித்தம் எனது ஆசிரமத்திலிருந்து திவ்ய ஓஷதிகளைக் கொண்டுபோன தினத்தன்றோ யான் தம்மைத் தரிசித்தது? இவ்வாசிரமத்தை விட்ட காரணத்தை நான் உமக்குக் கூறுகிறேன். ஸ்நானமுதலிய அனுஷ்டானங்களைச் செய்வதற்கு வசதியான கங்கையேனும், சரயூவேனும் இல்லாததால் இதைவிட்டு நான் கங்காதீரம் சென்றேன். ஆனால் இது மகா உத்தமமான ஆசிரமம். முன் காலத்தில் இங்கு நூறாயிரங் கணக்கான முனிவர்கள் தவஞ் செய்து சித்தி யடைந்திருக்கிறார்கள். ஆதலால் நானும் சிலகாலம் இங்கிருந்து தவஞ் செய்தேன். நீர் கேட்டபடியே இவ்வாசிரமத்தைவிட்ட காரணங் கூறியாயிற்று. உமது மனதில் இன்னும் ஏதாகிலும் கேட்க வேண்டுமென்ற கருத்திருந்தால், அதை நான் அறிய விரும்புகிறேன்" என்றார். உடனே இராமபிரான் "ஏ முனிபுங்கவரே! இங்கு என்ன ஏற்பாடு செய்தால் இந்த இடம் தங்களுக்கு முன்போல வாச யோக்கியமாயிருக்கும். தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றார். அதற்கு முத்கல முனிவர் "இவ்விடத்தில் சரயூ நதியானது கங்கையுடன் கலக்குமானால் இந்த இடம் எனக்குச் சுகமான வாசஸ்தலமாகும்" என்றார். அதற்கு இராமபிரான் முனிவரைப் பார்த்து "ஏ முனிசிரேஷ்டரே! இந்தச் சரயூ நதியைத் தாங்கள் அவ்வளவு முக்கியமாய் விரும்புவதற்குக் காரணம் என்ன? அது எங்கு உற்பத்தியாயிற்று.

விவரமாக எனக்குக் கூறியனுப்புங்கள்" என்றார். அதற்கு முத்கல முனிவர் "ஏ இராமா! உமது சரித்திரத்தையே என் முகமாக நீர் கேட்க விரும்புகிறீர். ஆயினும் கூறுகிறேன் கேளும்—

முன் கிருதயுகத்தில் சங்கனென்னும் ஒரு தைத்தியன்வேதங்களை யபகரித்துக்கொண்டு போய் சமுத்திரத்தி லெறிந்துவிட்டு அவனும் அங்கேயே மறைந்துவிட்டான். அந்த அசுரனைக் கொல்வதற்காக அளவிட்டுச் சொல்வதற்கு அரிய ஒரு மச்சரூபந் தரித்து அவனைக்கொன்று அவ்வேதங்களை எடுத்துப் பிரமதேவருக்குக் கொடுத்துவிட்டுப் பின் முன்போலவே சுயரூபத்தை எடுத்துக்கொண்டீர். அப்பொழுது தங்களுக்குண்டாகிய மகிழ்ச்சியால் தங்கள் கண்களினின்று ஆநந்தபாஷ்பம் பெருகி இமய பர்வதத்தின் உச்சியில் விழுந்தது. அது ஓர் புண்ணியநதியாகிச் சுபகரமான தீர்த்தமாகப் பெருகி மெதுவாக ஓடிவந்து பிந்து ஸரஸில் கலந்தது. அந்த பிந்து ஸரஸிருந்து மானஸமென்னும் ஸரஸை யடைந்தது. இத்தருணத்தில் மகா பூஜிதரான தங்கள் முன்னோராகிய வைவஸ்வதமனு வென்பவர் தாம் யாகம்செய்யக்கருதி அதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டு தமது குருவைப் பார்த்து, "ஏ ஆசார்ய! இவ்வயோத்தியானது அநாதிசித்தமானதாலும் நான் சுகமாக வாசஞ் செய்ய வேண்டுவதன் நிமித்தம் மிக்கவசதியாகச் செய்திருப்பதாலும் இங்குயான் யாகம் செய்யவிருக்கின்றேன். இது தங்கள் மனதிற்கும் திருப்திதானா"வென்று கேட்டார். அதற்கு குருவானவர் "ஏ மகா ராஜா! இங்கு சிரேஷ்டமான நதியுமில்லை. உத்தமமான தீர்த்தமுமில்லை. ஜலசௌக்கியமில்லாத இவ்விடத்தில் யாகம் செய்ய உன்மனது கருதினால் மானஸ ஸரஸிலிருந்து பாதகங்களைப் போக்கும் ஓர் நதியை இதனருகே ஓடும்படிசெய்" என்றார். இப்படி குரு சொல்லியதும் வைவஸ்வதமனு உடனே வில்லையெடுத்து நாணேற்றிடணத்காரஞ் செய்து, அதில் ஓர் உத்தமமான அம்பைப் பொருத்தி வடதிசை நோக்கி எய்தார். அந்த அம்பானது மானஸ ஸரஸில் ஒருபக்கத்தைப் பிளந்து அதிலிருந்த தீர்த்தத்தை ஓர் நதியாகப் பிரவகிக்கச்செய்து அங்கிருந்து அயோத்திக்கு வந்து அதன் அருகே ஓடிற்று. அந்நதியானது அவர் எய்த சரத்தின் வழியே வந்ததனால்

சரயூ என்கிற பெயரையும் மானஸமென்னும்ஸரஸிலிருந்து உண்டானதால் ஸரயூ என்கிற பெயரையும் அடைந்து பிரசித்தமாயிற்று.

இதற்குச் சிலகாலதிற்குப் பின் கபில முனிவர் கோபாக்னியால் சாகரர்களாகிய உமது முன்னோர் அறுபதினாயிரம் பேர்களும் பஸ்மமாயினர். அவர்கள் சொர்க்கமடைவதன் பொருட்டு உமது முன்னோராகிய பகீரத மகாராஜன் அருந்தவம் புரிந்து பரமசிவனைத் திருப்திசெய்வித்து அவருடைய அநுக்ரகத்தால் ஆகாசகங்கையைப் பூலோகத்தில் பிரவகிக்கச் செய்து இச்சரயூநதியுடன் கலக்கச்செய்தார். சங்கருடைய வரப்பிரஸாதத்தால் பெருமைவாய்ந்தமையால் கங்கையானது நதிகளுக்குள் மிக்க சிரேஷ்டமெனப் பெயர் பெற்றது. சமுத்திரத்தில் கலக்கின்றமையால் இச்சரயூநதியையும் கங்கையென்றே கொள்வார்கள். உமது பாதத்தில் பிறந்த கங்கா நதியானது உலக முழுவதையும் சுத்தப்படுத்தி வரும்போது உமது நேத்திரங்களிலுண்டான இச்சரயூ நதியினுடைய மகிமையை நான் என்னென்று கூறுவேன். மகா வல்லமையுள்ள ஒருவன் இச்சரயூநதியின் மகிமையை ஆயிரத்து நூறு கோடிவருஷங்கூறின போதிலும் முழுமையும் அவனால் சொல்வது அசாத்தியம். ஏ இரகுபுங்கவா! நீர் கேட்டபடியே சரயூநதியின் மாகாத்மியத்தை உமக்குக் கூறினேன்"என்று முத்கலர் கூறினார்.

ஸ்ரீ ராமபிரான் இவ்வாறு முத்கலர் கூறியதைக்கேட்டு இலட்சுமணனைப் பார்த்து "ஏ இலட்சுமணா! எனது ஆக்ஞையின் சாமர்த்தியத்தைக்கொண்டொரு பாணம் எய்து சரயூநதியை இவ்விடங்கொண்டுவா" என்றார். உடனே இலட்சுமணர் ஆகா அப்படியே செய்கிறேன் என்று கூறிவிட்டு இராமபாணங்களிலொன்றை எய்து சரயூநதியின் கரையையுடைக்க, அச்சரயூநதியானது அதன் வழியே ஒரு பாகமாகப் பிரிந்து முத்கல முனிவருடைய ஆசிரமத்தின் அருகில் பிரவகித்தது. மறுபடியும் கங்கையுடன் கலந்தது. ஸ்ரீ ராமபிரான் "அதைப்பார்த்து நமது இலட்சுமணன் இவ்விடமிருந்து பாணம் எய்து சரயூநதியின் கரையைப் பிளந்தமையால் இவ்விடத்தில் ஒரு நகரம் ஏற்பட்டு அதற்குத் தத்திரி என்கிறபெயர்

பிரசித்தமாகப்போகிறது. தந்திரி என்னும் நகரமானது மகா மகிமை பெற்ற உமது வாசவிசேஷத்தால் பூலோகத்தில் பிரசித்தமான பதரிகாசிரமத்தைக்காட்டிலும் அதிகமான மகிமை பெறப் போகிறது'' என்றார்.

இதன்பின் இராகவர் சீதா தேவியை யழைத்து "ஏ சீதே! இந்த முத்கலமுனிவருடைய ஆசிரமத்தில் நமது இலட்சுமணன் எனது நாமம் எழுதியுள்ள பாணத்தை எய்து சரயூநதியை இவ்விடம் பிரவகிக்கச் செய்திருக்கிறான். ஆகையால் சரயூ கங்காசங்கமத்திற்கு நமது தாய்மார்கள் நம் கூடவந்திருக்கும்பட்டணத்து ஸ்திரீகள் இவர்களுடன் புஷ்பகவிமானத்தி லேறிச்சென்று நமது குரு, வேதியர்கள் இவர்கள் கூறியபடி உனது சங்கற்ப பிரகாரம் கங்கையை நன்றாய் பூஜித்துவிட்டுச் சீக்கிரம் இங்கு வந்து சேர்'' என்று கூறினார். பிறகு புதிதாய் உண்டான சரயூநதி கங்கையில் சேருமிடத்தில் முத்கலமுனிவருடைய ஸந்நிதியில் என்னுடன் நீ கங்காபூஜை செய்வாய் என்று கூறி யனுப்பினார். விதேகபுத்திரியாகிய சீதாபிராட்டியானவள் நல்லது அப்படியே செய்கிறேனென்று அவர் திருவுளக்கருத்தை ஏற்றுக்கொண்டு பூஜாசாமக்கிரிகளைச்சேகரித்துக் கொள்வதற்காக கூடாரத்திற்குள் நுழைந்தாள்.

சரயூ நதி இரண்டு பிரிவானதைக் கூறும்

4-வது சருக்கம்

முற்றிற்று.

5-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ஜனகமகாராஜாவின் புத்திரியாகிய சீதாபிராட்டி பூஜைக்கு வேண்டிய சாமக்ரிகளை பெறுத்துக்கொண்டு, கௌஸல்யை முதலிய யாவருடனும் புஷ்பக விமானமேறிச் சென்று க்ஷணநேரத்திற்குள்ளாக கங்கையுடன் விருத்த சரயூ சேருமிடத்தை படைந்தாள். தீக்ஷிதபத்னியாகிய ஒருத்தி, தன் கணவனையும் அக்நிஹோத்திரத்தையும் விட்டுப் பிரிந்து தாங்களிருந்த இடத்தின் எல்லையைத் தாண்டக்கூடாதெனச் சாஸ்திர மேற்பட்டிருக்கிறது. இப்பொழுது சீதாதேவி புஷ்பகவிமானமேறி ஆகாயமார்க்கமாய் வந்தமையால், எல்லையைக் கடந்தாள் என்னும் தோஷமேற்படவில்லை யென்றறிக.

சீதாபிராட்டி விமானத்திலிருந்து சங்கமஸ்தலத்தி லிறங்கி அதற்குவணங்கி, புரோகிதர் கூறியபடி சகல வாயனங்களுடனும் தேங்காய் பழமுதலியவைகளைச் சமர்ப்பித்து, விதிப்படி அங்கு ஸ்நானஞ்செய்து, பிறகு விதிப்படி, பூஜைசெய்து மது மாம்சங்கள் பக்குவான்னங்கள், பலிகள், பட்டுவஸ்திரங்கள், முத்துமாலைகள், சந்தனங்கள், திவ்யமான பலவித ஆபரணங்கள்,வாயனங்கள் இன்னும் பலவித உபஸ்கரங்களைச் சமர்ப்பித்து, அதன் பிறகு சுமங்கலிகளைச் சகலோபசாரங்களால் பூஜித்து, அருந்ததி வசிஷ்டர்களையும், நன்குய்ப் பூஜித்து யாவருக்கும் திவ்யபோஜனம் அளித்துத் திருப்திசெய்து வைத்தாள். யாவரும் புசித்த பிறகு அவர்களுக்குத் தாம்பூலங் கொடுத்து மறுபடியும் பட்டுவஸ்திரங்கள் திவ்யாபரணங்கள் அளித்து சந்தோஷப்படுத்தினாள். தானும் அன்று சிறிது உப ஆகாரம் செய்துகொண்டு இராமருடைய க்ஷேமத்திற்காக உபவாஸமிருந்து பிறகு சீக்கிரமாக எல்லாருடனும் விமானமேறி இராமபிரானருகில் போய்ச் சேர்ந்தாள். பிறகு ஸ்ரீராமசந்திரரும் ஆசாரியர்களையும் வேதியர்களையும் அழைத்துக்கொண்டு சீதையுடன் சகல சாமக்கிரிகளையும் சேகரித்துக் கொண்டு புறப்பட்டு கங்காசங்கமத்தை யடைந்து சீதை செய்த

பூஜைக்கு நூறுமடங்கு அதிகமாக விதிப்படி பூஜைசெய்தார். ஆயிரக்கணக்கான வேதியர்களுக்குப் பசு பூமி குதிரை இரதம் இவைகளைத் தானமளித்து, அவர்களுக்குச் சிரத்தையுடன் திவ்யபோஜனமளித்துத் திருப்தி செய்வித்துப் பின் தாம் சீதையுடனும் சகோதரர்களுடனும் இன்னும் மற்ற பந்துக்களுடனும் திவ்யபோஜனம் செய்துவிட்டுச் சிங்காசனத்தமர்ந்து இலட்சுமணரைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர்.

ஏ இலட்சுமணா! "இவ்விடத்தில் எனது வாஸம் ஒன்பது நாள் என்றறி. இவ்விடத்திற்கு எல்லைகளைக் குறிப்பிட்டு காவற்காரர்களை ஏற்படுத்து. யான் இப்பொழுது கூறும் உத்தரவுப்படி செய். வழிப்போக்கர்களில், பிரமசாரிகளாயினும், கிரகஸ்தர்களாயினும், வானப்பிரஸ்தர்களாயினும், சந்நியாஸிகளாயினும், வேறு யாராகிலும் இவ்விடம் வருவார்களாயின், அவர்கள் என்னைப் பாராமலும் எனது பூஜையைப்பெறாமலும் போகக்கூடாது. அப்படி என்னைப் பாராமல் எவரேனும் போவார்களாயின் உங்களுக்கு சிக்ஷை விதிக்கப்படும்" என்று கட்டளையிட்டார். இலட்சுமணர் அவர் உத்தரவுப்படியே செய்துவந்தார். பிறகு சியவனர் என்னும் ஒரு முனிவர் ஸ்ரீராமபிரான் இவ்விடம் வந்திருக்கும் செய்தியை யறிந்து அவரைத் தரிசிக்க விரும்பி அதி சீக்கிரமாக அவர் சமீபத்திற்கு வந்தார். இராமபிரான் அவரைக் கண்டதும் வணங்கி, தக்கபூஜை செய்து ஓர் ஆசனமளித்து அதில் வீற்றிருக்கப் பிரார்த்தித்தார். அம்முனிவர் அவ்வாசனத்தில் வீற்றிருந்து இராமபிரானைப் பார்த்து, "ஏ இராமா! இராஜீவ பத்ராக்ஷ! கங்காநதியின் தென்கரையில் கிகடம் என்னும் தேசத்தில் பரம சுபகரமான ஓர் ஆசிரமம் எனக்கிருக்கின்றது. அவ்விடத்தில் எங்களுக்கு வேண்டிய கந்தமூல பலாதிகளை வளரவொட்டாமல் பாதகர்கள் தடைசெய்கிறார்கள். தங்கள் தூதர்களைக்கொண்டு அதை நிவர்த்தி செய்து பாதுகாக்கவேண்டும்" என்றார். உடனே இராமபிரான் ஒரு தனுசை எடுத்து குணத்தொனி செய்து அதில் ஒரு பாணத்தைப் பூட்டி அவ்வாசிரமத்திற்கு நேரே எய்து, அதைச் சுற்றிலும் துஷ்டர்கள் உட்செல்லா வண்ணம் அகழிபோன்ற ஒரு ரேகையை யுண்டாக்கினார். இராமபாணத்தா லுண்டாகிய

ரேகையிருந்த அந்த இடத்தில்இராமரேகை என்று ஒருபட்டண மும் அந்த பெயர்கொண்ட ஒரு நதியும் உண்டாயின. இவ் வாறு உண்டானதை யறிந்த சியவன முனிவர் ஸ்ரீராமபிரானைப் பார்த்து "பிரபு! வெகு நாளாய் இழிவடைந்திருந்த அந்தக் கீகட தேசத்தில் உமது வாக்கியத்தால் அநேகம் புண்ணிய ஸ்த லங்கள் ஏற்படப்போகின்றன. இப்போது எனக்குச் சுகமுண்டா கும்படி ஒரு வசனுக்கிரகம் செய்யக் கோருகிறேன்" என்றார். இவ்வாறான முனிவருடைய வசனத்தைக் கேட்டதும் இராம பிரான் "ஏ முனீசுவா! இந்தக் கீகட தேசத்தில் புண்ணியகரமான கயாக்ஷேத்திரமும் புனப்புனா என்னும் ஒரு நதியும் புண்ணியகர மான ராஜவனம் என்கிற ஒரு சிரேஷ்டமான வனமும் உண்டாய் உமது ஆசிரமம் மகா புண்ணியகரமாக விளங்கட்டும். சந்தேகிக்க வேண்டாம்" என்றார். இவ்வாறு இராமபிரானுடைய வசனுக் கிரகத்தைப் பெற்ற சியவன முனிவர் மிகச் சந்தோஷமடைந்து அவர் அனுமதி பெற்றுத் தமது ஆசிரமம் சென்றார். அக்காலத் தில் ஸ்ரீராமபிரான் ஏற்படுத்தியிருக்கும் சத்திரத்தில் நாள்தோ றும் கோடிக்கணக்காக சந்நியாசிகளுடன் வேதியர்கள் போஜ னம் செய்து வந்தார்கள். இப்படியிருக்கையில், கங்கா யாத் திரை மூலமாக கயாக்ஷேத்திரம் செல்வதற்கு பிரயாகையிலிருந்து புறப்பட்டுவரும் கும்போதரர் என்னும் ஒரு முனிவர், இவ்விடம் வந்து எல்லைக்காவற்காரர்களைப் பார்த்து, "ஏ தூதர்களே! நீங்கள் யாருடைய கட்டளைப்படி இந்த காவல்செய்கிறீர்கள். ஆகாசத்தை யளாவி விசித்திரமாக எதிரில் அனுமான், கோவிதாரம், கருடன், பாணம் இந்த அடையாளங்களோடும் வெண்மை, நீலம், பசுமை, மஞ்சள் இந்நிறங்களோடும் விளங்கும் கொடிகளும் துவஜஸ்தம் பங்களும் இங்கு கேட்கும் ஜயசப்தங்களும் யாருக்குச் சொந் தம். இதற்குப் பதில் கூறுங்கள்" என்றார். தூதர்கள் கும் போதர முனிவரைப் பார்த்து "ஏ முனிசிரேஷ்டரே! அயோ த்தியாதிபதியாகிய இராஜீவ பத்ராக்ஷரான இராமபிரபு, யாத் திரையாக வந்து இங்கே, உமக்கு முன் தெரியும் கூடாரத் தில் வசிக்கின்றார். அந்த பிரபுவின் ஆக்ஞா கிங்கரர்கள் நாங் கள். அந்த பிரபு இந்த இடத்தில் அன்ன சத்திரங்கட்டி வைத்

திருக்கிறார். நீங்கள் பசியடைந்து களைத்திருப்பதாகத் தெரிகிறது. சுகமாக அவ்விடஞ் சென்று போஜனஞ் செய்து தாக சமனஞ் செய்துகொண்டு புறப்பட்டுப் போங்கள் என்றார்கள். இதைக் கேட்டதும் கும்போதர முனிவர், வந்த வழியைப் பார்த்துத் திரும்பிச் சென்றார். அப்படித் திரும்பிச் செல்லும் அம்முனிவரைப் பார்த்த தூதர்கள் பரபரப்புடன் அவருக்கு முன் சென்று அவர் போகும் மார்க்கத்தைத் தடுத்துக்கொண்டு, அவரைப் பார்த்து "ஏ முனிவரே! இவ்விடம் வந்த நீர் இதனுட்செல்லாமல் வந்த வழியிலேயே திரும்பிப் போகக் காரணமென்ன? அதனுண்மையைக் கூறும்" என்று கேட்டார்கள். உடனே அம்முனிவர் சற்றுநின்று இவர்களுடைய நிர்ப்பந்தத்தை மனதிலெண்ணி க்ஷண நேரம் ஆலோசித்துப் பின் வருமாறு நிச்சயம் செய்து கொண்டார்.

இராமபிரான் இந்த யாத்திரையை முடித்துக்கொண்டு அயோத்திக்குச் செல்லப்போகிறார். அவர் இங்கிருந்த வண்ணத்திலேயே திரும்பி விடுவாராகில், பலதேசஜனங்கள் இவரைத்தரிசிப்பது எங்ஙனம்? தவிர அங்கங்கே அவருடைய பேரால் மகா பாதகங்களைப் போக்கத் தக்க திவ்யதீர்த்தங்கள் ஏற்படக்காரணம் எப்படியுண்டாகும்? இன்னும் அவரையே ஈசுவரனாகக்கொண்டு பக்தி புரிந்து மற்றவர்களையும் பரகதி யடையச் செய்யும் ஹரிபக்தர்கள் பூலோகத்தில் பரவுவதெங்ஙனம்? ஆகையால் இந்த இராமபிரான் சீதாபிராட்டியுடன் பூலோகத்தில் சகலதேச யாத்திரை செய்யும்படி ஓர் உபாயஞ்செய்வோம். இதன் மூலமாக உலகத்தில் பல பேருக்கும் பல நல்ல பழக்கம் ஏற்படும். இதில் ஐயமில்லை" என்று உறுதிகொண்டு தூதர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து, "ஏ தூதர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். சதுர்முகப்பிரம்மதேவருக்குப் பேரனாகிய, தசானனனை சகோதரர்களுடனும் மக்களுடனும் சங்கரித்து, பிறகு தீர்த்த சேவை செய்யாமலும் அவர்களுக்குரிய யாகங்களைச் செய்யாமலுமிருப்பதால், அவருடைய அன்னம் நாங்கள் புசிக்கத்தக்கதல்ல. எனக்கு வழி விடுங்கள். நீங்கள் நான் கூறியதை இராமருக்குத் தெரிவியுங்கள். பிறகு அவர் யாத்திரைகளையும் யக்ஞங்களையும் செய்வர்" என்றார். இவ்விதமான கும்போதர முனிவருடைய வார்

த்தைகளைக்கேட்டு அவர் சாபத்துக்குப் பயந்து ஆச்சரியம் கொண்டு, அவர் மார்க்கத்தைத் தடுப்பதினின்றும் விலகி, உடனே இராமபிரானிடம் சென்று, வணங்கி, முனிவர் சொன்ன வார்த்தைகளை மெதுவாகச் செவியிலோதித் தெரிவித்தார்கள். ஸ்ரீ ராமபிரானும் கும்போதர முனிவருடைய உத்தமமான கருத்தைத் தெளிவாயறிந்து, சிறிது நகைகொண்டு சபா மத்தியில் முனிவருடைய கருத்தை வெளியிட்டு யாவருக்குந் தெரிவித்தார். பிறகு புரோகிதராகிய வசிஷ்டர், இலட்சுமணர் முதலிய சகோதரர்கள், இவர்களுடன் மந்திராலோசனை செய்து, முனிவர் கருத்துப்படியே செய்ய நிச்சயித்தார். பிறகு வசிஷ்டரைப் பார்த்து ஸ்ரீ ராமபிரான், "ஏ ஆசார்ய சிரேஷ்ட! இப்போது முதலில் தீர்த்த யாத்திரைகளைச்செய்து அதன் பிறகு யாகங்கள்செய்யத்தக்க"தென்று கூறிவிட்டு அங்கிருக்கும் தூதர்களைப் பார்த்து, "ஏ தூதர்காள்! நாம் யாத்திரை புறப்படும் சங்கதியை சுமந்திரனுக்குச் சீக்கிரம் தெரிவியுங்க"ளென்று கட்டளையிட்டார்; உடனே தூதர்கள் அங்கிருந்து புறப்பட்டு அயோத்தியா பட்டணஞ்சென்று, மந்திரி சுமந்திரனிடத்தில் சங்கதியை விஸ்தாரமாகக் கூறினார்கள். சுமந்திரனும் சங்கதி தெரிந்துகொண்டு உடனே ஒட்டகைகள் குதிரைகள் இரதங்கள் யானைகள் இவைகளின்மேல் வஸ்திரம் தனம் முதலியவைகளை ஏராளமாக ஏற்றி, இராமரிருப்பிடத்துக்கு அனுப்பினான். ஸ்ரீராமபிரான் புஷ்பகவிமானத்தைப்பார்த்து "ஏ விமான சிரேஷ்டமே! இயற்கையாக உனக்கு அதிக சக்தி இருக்கிறது; ஆயினும் யாத்திரா சாமாக்கிரிகளைக் கொண்டுவரும் ஒட்டகங்கள் இரதங்கள் யாவும் உனக்குள்தான் அடங்கவேண்டும். ஆகையால் அதற்குத் தக்கபடி நீ இடத்தை உண்டாக்கிக்கொள்; எனது அநுக்கிரகத்தால் இவைகளனைத்தையும் வகிக்கச் சக்தி பெற்றுச் சுகமே சஞ்சரிப்பாய். இன்னும் உன்னிஷ்டப்படி சூட்சும ரூபத்தையும் மகா ரூபத்தையும் எடுத்துக்கொள்ள உனக்கு சக்தியுண்டாகும், இதில் ஐயமில்லையென்றும் அநுக்கிரகித்தார். பத்துக் காத வழி அகலமும் இருகாத வழி உயரமுமாக விமானம் விஸ்தரித்தது. சொர்ணமயமாகவும் இரத்தினமயமாகவும் படிகளமைந்த நூற்றுக்கணக்கான உக்ராண வீடுகளுண்டாயின. அவை

களின்மேல் ரத்ன மயமான திவ்ய கலசங்கள் ஆயிரக்கணக்குக ளாகப் பிரகாசித்தன. அவ்வாறான சாளரவாயில்களும் அநேகம் உண்டாயின. பளிங்கு மயமான கவாடங்களும் ஜலயந்திரங்களும் உண்டாயின. அநேக பூந்தோட்டங்கள் ஏற்பட்டு, அங்கங்கே பலவிதமான பறவைகள் விநோதமாகச் சப்தமிடவும் ஆரம்பித்தன. நாகமணிகள் விமானத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்காக பதிக்கப்பட்டுப் பிரகாசியாநின்றன. ஆகாசத்தை அளாவிய கோபுரங்கள் ஆயிரக்கணக்காகப் பிரகாசித்தன.

இவ்வாறு விமானமானது பஞ்ச லோகங்களாலாகிய கட்டுகளுடன் கோடி சூரியப் பிரகாசம் பொருந்தி விளங்கிற்று.

புஷ்பகவிமானத்தில் நூறு கட்டுகள் ஏற்பட்டன.

அந்நூறு கட்டுகளையும் ஸ்ரீ ராமபிரான் உபயோகித்த விவரம்.

முதற்கட்டு:—இதில், யானை, குதிரை இரதம், ஒட்டகம் இவைகளை ஏற்றி அதற்குரிய வீரர்களையும் அவைகளின் மேலிருக்கக் கட்டளையிட்டார்.

2 ,, :—விறகு, புல், உரல், உலக்கை, அம்மி, எந்தரம் இவைகளை இக்கட்டில் ஏற்றும்படி ஆக்ஞாபித்தார்.

3 ,, :—பலவித தானியராசிகளை நிரம்பும்படி செய்தார்.

4 ,, :—கரிகாய் இலைகள் இவைகளை ஏற்றும்படி செய்தார்.

5 ,, :—சதக்னி, குத்தால முதலிய பெரிய ஆயுதங்கள் ஏற்றப்பட்டன.

6 ,, :—பாணங்கள் முதலிய சிறு ஆயுதங்களை நிரப்ப ஆக்ஞாபித்தார்.

7 ,, :—யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் முதலிய அரசர்களுக்குரிய வாகனவர்க்கங்களிருக்கக் கட்டளையிட்டனர்.

8 ,, :—நூதன வஸ்திர மூட்டைகளும் அரிசிமூட்டைகளும் இவ்வாறான பலவேறு மூட்டைகளும் நிரப்பப்பட்டன.

9 ,, :—பலசாமான்கள் அடங்கிய பண்டசாலையாயிற்று.

10 ,, :—ஸ்திரீ புருஷ வேலையாட்களின் இருப்பிடமாகக் கொண்டார்.

11 ,, :—படர்களுக்கும் அவர்களைச்சேர்ந்தவர்களுக்கும் இருப்பிடமாக்கினர்.

12 ,, :—வாரநாரிகள் தங்கியிருக்க ஆக்ஞாபித்தார்.

13 ,, :—யுத்த வீரர்களையும் அவர்களுக்குரிய காலாட்களையும் வரும்படி ஆக்ஞாபித்தார்.

14 ,, :—சேனாதிபதிகள் தங்கினார்கள்.

15 ,, :—குதிரை வீரர்கள் ,,

16 ,, :—இரத வீரர்கள் ,,

17 ,, :—யானை வீரர்கள் ,,

18 ,, :—இராஜ்யபோக்யாதிகாரிகள் ,,

19 ,, :—மாண்டலிக அரசர்கள் அவர்களைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்கு இருப்பிடமாக்கினர்.

20 ,, :—அயோத்தியா பட்டண வாசிகளும் மற்றுமுள்ள இராம மித்திரர்களும் நிறைந்தார்கள்.

21-40 ,, :—போஜன சாலைகளாயின.

41-45 ,, :—பாகசாலைகளாயின.

46-55 ,, :—ஸ்திரீ போஜனசாலைகளாயின.

56 ,, :—கௌஸல்யாதி மாதுர்வர்க்கங்கள், இலட்சுமணர் முதலிய சகோதரர்கள் தங்களுக்கு இருப்பிடமாகக் கொண்டனர்.

57 ,, :—ஸ்ரீ ராமபிரானுடைய சிம்மாஸனம் அமைக்கப்பட்ட சபையாயிற்று.

58 ,, :—சகிகள் யாவருடனும் கூடி சீதா பிராட்டியார் தங்குமிடமாயிற்று.

59 ,, :—ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியுடன் விளையாடும் சாலையாயிற்று.

60 ,, :—இராம மித்திரர்களுடைய பத்தினிகள் வசிக்கும் சாலையாயிற்று.

61-67 ,, :—ஸ்திரீகளுடைய சபா மண்டபங்களாயின.

68-79 ,, :—சித்ரசாலைகளாயின.
80-84 ,, :—பலவித விநோதமான பறவைகளிருந்து விளையாடும் சாலைகளாயின.
85-89 ,, :—பூந்தோட்டங்களாயின.
90 ,, :—நாழிகைகாட்டுங் கருவிகள் நிரப்பப்பட்டன.
91 ,, :—விஸ்தாரமானதும் அழகானதுமான புலி முதலிய மிருகங்களடங்கிய கண்காட்சி சாலையாயிற்று.
92 ,, :—ஸ்ரீராமபிரானுடைய அக்நிஹோத்திர சாலையாயிற்று.
93 ,, :—சுபகரமான சிவபூஜா சாலையாயிற்று.
94 ,, :—பிராம்மணர்கள் தங்கும் சாலையாயிற்று.
95 ,, -வித்தியார்த்திகளுடைய சாலையாயிற்று.
96 ,, -யதிசாலையாயிற்று.
97 ,, -வாத்திய சாலையாயிற்று.
98 ,, :—ஜலசாலையாயிற்று.
99 ,, :—ஜலயந்திரசாலையாயிற்று.
100 ,, -சாவஸ்திரங்களுலர்த்து மிடமாயிற்று.

இவ்வாறாக விமானத்தி லேற்பட்ட நூறு கட்டுகளையும் இராமபிரான் உபயோகித்துக்கொண்டார்.

இவ்விதம் ராமசேவகர்கள் இந்நூறு சாலைகளையும் இராமபிரான் ஆக்ஞைப்படி அமைத்தார்கள். ஸ்ரீராமபிரானும் அந்த நூறுசாலைகளையும் நன்றாய்ப் பார்த்துவிட்டு, விமானத்திலேறினார். அப்பொழுது மங்கள வாத்தியங்கள் முழங்கின: மாகதர்கள் துதித்தார்கள். வாரநாரிகள் நர்த்தனஞ் செய்தார்கள். கொடிகள் அசைந்தன. பிறகு புஷ்பகவிமானமானது ஸ்ரீராமபிரான் உத்தரவுப்படி பத்துத் திக்குகளிலும் சூரியன்போல் ஜோதியை வீசிக்கொண்டு கிழக்கு திக்கிலிருந்து வடதிசையை நோக்கி, ஆகாசமார்க்கமாகப் புறப்பட்டு கிண்கிணிகள் கணகணவென்று ஒலியிட வாயுவேகமாகச் சென்று ஸ்ரீராமருடைய துவஜ அடையாளத்துடன் பிரயாகை க்ஷேத்திரத்தை யடைந்தது.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஏ பரமகுருவே! இதற்குமுன் ஸ்ரீராமபிரானுக்கு நான்கு துவஜங்க ளிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். அப்படி நான்கு துவஜங்கள் ஏற்பட்டதற்குக் காரணங்களை விஸ்தாரமாகக் கூற வேண்டுகிறேன்.

இராமதாஸர் கூறுகிறார்.

இராமபிரான் சிறு பிள்ளையாயிருக்கும்போது தமது தந்தையினுடைய இரதத்தில் ஏறி வந்தமையால், அவர்க்குக் கோவிதாரத்துவஜனென்று பெயர் ஏற்பட்டது. பாணத்வஜ அடையாளமுள்ள இரதமேறி அடவிக்குச் சென்று அங்கு தாடகை என்னுமோர் அதிகொரோமான அரக்கியைக் கோதண்டத்தில் ஒரு பாணத்தைப்பூட்டி எய்து சங்கரித்தார். ஆதலால் அவருக்குப் பாணத்துவஜரென்னும் பேருண்டாயிற்று. இராவணனுடன் போர்புரியுங்காலத்தில் தமது இந்திரத்துவஜத்தை அவன் அறுத்தமையால் அனுமாரை அப்பொழுது துவஜமாகக் கொண்டார். அதனால் அவருக்கு அனுமத்துவஜனென்னும் பேருண்டாயிற்று. அத்தருணத்திலேயே இராவணன் மாதலியை மூர்ச்சையடையச் செய்வித்தான். அப்போது இராமர் உடனே தமது இரதத்தை மனதில் நினைத்தார். அது வைகுண்டத்திலிருந்து வர, அதிலேறிப் போர்செய்தமையால், கருடத்வஜரென்னும் பேருண்டாயிற்று. இப்பதாகைகளில் வெள்ளை நிறமுள்ளதற்கு கோவிதார அடையாளமும், நீலவர்ணமுள்ளதற்கு சுபமான பாண அடையாளமும் பச்சை நிறமுள்ளதற்கு மாருதியின் அடையாளமும் மஞ்சள் நிறமுள்ளதற்கு கருடனுடைய அடையாளமும் அமைந்தன. ஆதலால் ஸ்ரீ ராமபிரானுக்கு கோவிதாரத்வஜரென்றும் பாணத்துவஜரென்றும் கபித்வஜரென்றும் கருடத்வஜரென்றும் இம்மாதிரியாகவே அநந்தமான பேர்கள் ஏற்பட்டன. இதனால் தான் ஸ்ரீ ராமபிரானுக்கு நான்கு துவஜங்கள் உள்ளனவென்று கூறினேன். பின்னும் முன்னொரு சமயம் அமர் புரியுங் காலத்தில் இந்திரன் அனுப்பிய இரதத்தில் ஏறிப் போர்புரிந்தமையால், அசனித்துஜரென்னும் பேர் அமைந்துள்ளது. ஆகை

யால் ஸ்ரீ ராமபிரானுக்கு இதுதான் துவஜமென்று கூறுவதற்கில்லை. ஏ சிஷ்யனே! முன் சொன்ன நான்கு துவஜங்கள் தான் ஸ்ரீ ராமபிரானுக்குப் பிரியமானவைகள். கோவிதாரத்வஜமுள்ள ரதத்துக்கு சுமந்திரன் சாரதி. பாணத்துவஜமுள்ள இரதத்திற்குச் சித்திராதன் சாரதி. அனுமத்துவஜமுள்ள இரதத்துக்கு விஜயன் என்பவன் ஸாரதி. கருடத்துவஜமுள்ள இரதத்துக்கு தாருகன் ஸாரதி. நீ கேட்டபடியே நான்கு துவஜங்களின் விவரத்தையும் அவைகளுக்குரிய சாரதிகளின் விவரத்தையுங் கூறினேன்.

கும்போதர முனிவருபாக்கியானமாகிய

ஐந்தாவது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு இராமர் புஷ்பகவிமானத்தைச் சிறிது தென்றிசை நோக்கிச் செலுத்தி, திரிவேணி யென்னும் பிரசித்தமான ஸ்தல மகிமையோடு விளங்கும் பிரயாகை க்ஷேத்திரத்திற்கு வெளியே ஒரு குரோச தூரத்தில் விமானத்தை நிறுத்தி, அதிலிருந்து கீழே யிறங்கிக் கால்நடையாகச் சீதையுடன் மெதுவாகச் சென்று திரிவேணி சங்கமத்தை யடைந்து, வாயனத்துடன் நாரிகேள பலத்தை அங்கு நிவேதித்து, சீதையின் கூந்தலில் அலங்காரத்துடன் நாலு விரற் கடை யளவு தாமே சேதித்து, திருவேணிக்குச் சமர்ப்பித்து, பிறகு தமது சகோதரர்களுடன் க்ஷௌரஞ் செய்து கொண்டு அன்று தமது மாதுர் வர்க்கங்களுடன் உபவாச மிருந்தார். மறுநாட் காலையிலெழுந்திருந்து ஆந்ஹிகங்களை முடித்துக்கொண்டு தர்ப்பணமும் செய்து, பிறகு பிராமண போஜனஞ் செய்வித்தார். இது மாசி மாதமானதால், அம்மாத முழுவதும் அந்த க்ஷேத்திரத்தில் வசித்துப் பிறகு அஷ்ட தீர்த்த யாத்திரை செய்து அங்கு வேதியர்களுக்கு அநேக தானங்களை யளித்தார். பிறகு பிரளயகாலத்திற்குப் பின் தமது நித்திரா ஸ்தானமாகக் கொள்ளும் அக்ஷயவடத்தையும் தரிசித்து, அங்குச் சிறிது நகைத்து, சீதாதேவியுடனும் தம்பிகளுடனும் மறுபடியும் திரிவேணியைப் பலவித பூஷணங்களால் பூஜித்து விட்டு, அதற்குப் பிறகு நூறுபிரக்கணக்கான காசகும்பங்களில் (சீஸாக்கள்) சுத்த கங்கா தீர்த்தத்தை நிரப்பி புஷ்பகவிமானத்தில் அவைகளை எடுத்து வைத்துக்கொண்டார். பிறகு அங்குள்ள தீர்த்த புரோகிதர்களைப் பக்தியுடன் நன்றாய்ப் பூஜித்து அவர்களைப் பன் முறை வணங்கி, விடைபெற்றுக்கொண்டுபுஷ்பக விமானத்திலேறி அவ்விடமிருந்து ஆகாசமார்க்கமாகப்புறப்பட்டு, விந்திய பர்வதம் வந்துவிமானத்திலிருந்து இறங்கி, அங்கொரு பக்கத்திலிருந்த துர்க்காக்ஷேத்திரத்தையடைந்து, அங்குள்ள தீர்த்தத்தில் விதிப்படி நீராடி, தீர்த்த சிராத்தம் முதலியவைகளைக் கிரமமாகச்செய்து விந்திய பர்வத வாசியாகிய துர்க்காதேவியை வஸ்திராபரணம் முத

வியவைகளால் பூஜித்து, அங்கு பலதானங்களை அத்தீர்த்த புரோகிதர்களுக்குப் பக்தியுடன் அளித்து, அவர்களுக்குத் திருப்திசெய்வித்து, அங்கிருந்து விமான மீது புறப்பட்டுச் சுகமாகக் காசி க்ஷேத்திரம் சென்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் காசியிலிருக்கும் ஜனங்கள் யாவரும் மேற்குத் திக்கிலிருந்து கோடி சூரியப் பிரகாசம் போல் ஜ்வலித்துக்கொண்டு வரும் விமானத்தைப்பார்த்து, இவ்விதம் நமது பட்டணத்தை நோக்கிவரும் இவ்வளவு பிரகாசம் பொருந்திய இந்த விமானம் யாருடையதென்று யோசித்து அவரவர் வீட்டின் மேன்மாடிகளின்* மேலேறிக் கூட்டங்கூட்டமாக நின்று கொண்டு அதைப்பற்றித்தர்க்கவிதர்க்கங்கள் செய்தார்கள். அவர்களுடைய தர்க்கவிதர்க்கங்களாவன—இந்தப்பிரகாசம் மலையினுச்சியில் எரியும் காட்டுத் தீயே என்று சிலரும், சூரியன் திரிந்துகொண்டே இருப்பவனாதலால், அவன் பிரமித்து வழிதப்பி வருகிறானென்று சிலரும், நாரதமுனிவர் வருகிறாரென்று சிலரும் சூரியன் சொர்க்கத்திலிருந்து விழுகிறானென்று சிலரும் வாயு புத்திரனாகிய அனுமான் துரோணாசலத்தைக்கொண்டு வருகிறானென்று சிலரும் சந்திரனிடத்திலிருந்தமான், சந்திரனை சொர்க்கத்திலிருந்து தள்ளிவிட்டதென்று சிலரும் இவர் விசுவேசுவரர் என்று சிலரும் இது மகா மேரு பர்வதம் என்று சிலரும்வசிஷ்டபத்னியாகிய அருந்ததி யென்று சிலரும் கருடனென்று சிலரும் பிரளயகாலாக்னி யென்று சிலரும் இவைகளொன்று மல்ல; யாரோ ஒருவன் எங்கேயோ பிரயோகித்த ஆக்நேயாஸ்திரமிது வென்று சிலரும் இரத்தினங்கள் பிரகாசிக்கும் ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷரென்று சிலரும் இவ்வாறாகத் தர்க்கவிதர்க்கங்களைச் செய்துகொண்டு விமானத்தைப்பார்த்தார்கள். பிறகு அது வரும் கோலாகலத்தை யுற்றுப்பார்த்து, ஓகோ! அயோத்தியாதிபதியாகிய ஸ்ரீ ராமபிரானல்லவா யாத்திரை செய்வதன் பொருட்டுத் தமது பட்டணவாசிகளுடன் வருகிறாரென்று கூறித் தெளிந்தார்கள்.

காசிபதியாகிய விசுவேசுவரர் ஸ்ரீ ராமபிரான் புஷ்பகவிமானத்தில் வருவதை யறிந்து விசாலாட்சியம்மையுடன் விருஷபவாகன

மேறிக் காசிவாசிகள் சூழ்ந்துவர, பல உபாயனங்களோடு எதிர்கொண்டு சென்றார். அத்தருணத்தில் ஸ்ரீ ராமபிரான் விமானத்தைவிட்டிறங்கி, முதலில் தேகளி விநாயகரைப் பூஜித்துப்பின்பு எதிர்கொண்டுவரும் விசுவேசுவரரைத் தரிசித்துச் சிரங்குனிந்து வணங்கினர். உடனே விசுவேசர், வணங்கி நிற்கும் இராமபிரானைத் தழுவித் தாம் கொண்டு வந்த உபாயனங்களைக்கொடுக்க, இராமபிரான் பெற்றுக் கொண்டு மகிழ்ந்தார். பிறகு விசுவேசுவரரை வஸ்திராபரணாதிகளால் உபசரித்துப் பூஜித்துக் காசிநாதராகிய அவருடைய கரத்தைத் தமது கரத்தால் பிடித்துக்கொண்டு, இருவரும் தங்கள் வாகனங்களை அபேக்ஷிக்காமல் கால் நடையாகவே மணிகர்ணிகைக்குச் சென்றார்கள். பிறகு ஸ்ரீராமபிரான் சீதையுடன் சக்ரபுஷ்கரணீ தீர்த்தம் சென்று அதில் வில்வப்பழங்களைப் போட்டுவிட்டு, அங்கே க்ஷௌரம் செய்து கொண்டு சசேல ஸ்நானம் செய்து வஸ்திரமுடுத்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு ¶ நித்திய யாத்திரைசெய்தார். பிறகு அன்று இருவரும் உபவாஸமிருந்தார்கள். மறுநாள் தீர்த்த சிராத்தத்தை விதிவத்தாகச்செய்து பஞ்சதீர்த்தங்கள் மானஸ தீர்த்தங்கள் இவைகள் கூடிய அந்தர்க்கிரக மகாயாத்திரையும் செய்து நாற்பத்திரண்டு சிவலிங்கங்களையும் பிறகு வேறு எட்டு லிங்கங்களையும் எட்டு பைரவர்களையும் அறுபத்து நான்கு யோகினிகளையும் ஒன்பது துர்க்கைகளையும் எட்டுத்திக்குப்பாலகர்களையும் ஒன்பது கிரகங்களையும் தரிசித்துப் பூஜை செய்து, காசிக்ஷேத்திரப்பிரதக்ஷிணமாகிய பஞ்சக்ரோச யாத்திரையும் செய்தார்—இவ்வாறு பதிநான்கு யாத்திரைகளையும் செய்து முடித்துக்கொண்டு, காசியின் வாயுதிக்கில் வருணா நதியின் கரையில் இராமலிங்கம் என்னும் ஒரு மகா லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, கங்கையில் இராமதீர்த்தமென ஒரு தீர்த்தத்தையும் உண்டாக்கினர்.

¶ விசுவேசர், மாதவர், டுண்டி, தண்டபாணி, பைரவர், காசி, குகர், ஆதிகங்கை, பவானி, மணிகர்ணிகை இவர்களைக் கிரமப்படி நாள்தோறும் தரிசித்து வருவது நித்திய யாத்திரை யெனப்படும்.

இப்படியிருக்கையில், வாயு புத்திரனாகிய அனுமார், இராமபிரானைப் பார்ப்பதற்காக அயோத்தியா பட்டணஞ் சென்றார். அங்கே போனதும் ஸ்ரீராமபிரான் யாத்திரை போயிருப்பதாகத் தெரிந்துகொண்டு, உடனே புறப்பட்டுக் காசிக்ஷேத்திரத்திற்கு வந்து, சீதாபிராட்டியுடன் ஸ்ரீராமபிரானைக்கண்டு வணங்கி, கங்கா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அங்கே தமது பேரால் ஒரு லிங்க ஸ்தாபனஞ் செய்து அதனருகேயிருக்கும் கங்கா தீர்த்தத்திற்கு அனுமந்த தீர்த்தமென்று பெயரிட்டு, அத்தீர்த்தத்திற்குக் கற்களைக்கொண்டு படிகட்டி ஒரு புண்ணிய கட்டமாகச்செய்தார். அது இப்பொழுதும் காசியில் அனுமந்த கட்டமென்னும் பெயரொடு விளங்குகிறது. அவ்விதமே ஸ்ரீராமபிரானும் ஒரு கட்டம் ஏற்படுத்தினார். அங்கே சீதையுடன் ஸ்ரீராமரை நாள்தோறும் ஜனங்கள் தரிசித்து வருகிறார்கள். பிறகு ஸ்ரீராமபிரான் கார்த்திகை மாதத்தில் பஞ்சகங்கா கட்டத்தில் ஸ்நானஞ் செய்தார். இவ்விதம் காசியில் ஒரு வருஷகாலம் பல தர்மங்களைச் செய்துகொண்டு வசித்து வந்தார். அவர் செய்த தர்மங்களாவன—தீர்த்தவாஸம் செய்வதாக வந்து வசிக்கும் வேதியர்களுக்குத் தனித்தனியே ரத்தினங்கள் சுவர்ணங்கள் வஸ்திரங்கள் ஆபரணங்கள் பசுக்கள் குதிரைகள் இவைகளைத் தானஞ்செய்தார். பிறகு தங்கத்தினாலும் வெள்ளியினாலும் விசித்திரமாகச் செய்யப்பட்ட போஜன இலைகள் அவர்களனைவருக்கும் போட்டு அமுதத்துக்கொப்பான பக்ஷ்வான்னம், சர்க்கரை கலந்த பாயஸம், நெய், பால், தயிர் இவைகளைப் பரிமாறித் திருப்தியாக போஜனம் செய்வித்து திவ்யகந்த சந்தனம் பூசி கர்ப்பூர தாம்பூலங் கொடுத்து திவ்யசாமரங்கள் வீசி, அவைகளை அவர்களுக்கேயுதவி பஞ்சணை மெத்தைகள் தீபங்கள், கண்ணாடிகள், ஆசனங்கள், பல்லக்குகள், தாஸதாஸர்கள் பசுக்கள், விசித்ரமான துவஜங்களோடு கூடிய வீடுகள் இவைகளைத் தானம் செய்தார். இன்னும் பெரியோர்களுக்கு துவஜாரோபணம் செய்த கிரகங்களை சமஸ்த சாமகிரிகளுடன் தானம்செய்து அவர்களுக்கு ஒவ்வொரு வருஷத்துக்கும் வேண்டிய அன்னபானாதி சௌகரியங்களையும் ஏற்படுத்தினார். இன்னும் யதிகளுக்கும் தவசிகளுக்கும் யோக்கியமான பட்டு வஸ்திரங்கள் மெது

வான சித்ரக்கம்பளங்கள் தண்டகமண்டலங்கள், மான்தோல்கள், கௌபீனங்கள் இவைகளை யளித்தார். பின்னும் வித்தியார்த்திகளுக்குச் சொர்ணமயமான மடங்கள் கட்டி, அதில் அவர்களுக்கும் அதிதிகளுக்கும் அன்னதானம் நடந்துவரத் திட்டப்படுத்தினார். பின்னும் வைத்தியர்களுக்குப் பலவிதமான ஔஷதங்களைக்கொடுத்து ஜீவனம் செய்யும்படி செய்தார். புத்தகம் எழுதி ஜீவிக்கிறவர்களுக்குத் திரவியங்களை ஏராளமாகக்கொடுத்து புத்தகங்களை எழுதி வெளியிடும்படி அளித்தார். கிரீஷ்மகாலத்தில் ஏராளமாகத் திரவியச் செலவு செய்து தண்ணீர்ப் பந்தர்களை ஏற்படுத்தி அவைகளில் சிரேஷ்டமான ரஸாயனங்களைக் கொடுத்துவரும்படி திட்டப்படுத்தினார். வருஷ ருதுவில் குடை, போர்வை இவைகளை அதிதிகளுக்குக் கொடுக்கும்படி திட்டப்படுத்தினார். ஹேமந்த ருதுவில், சீதளசமனத்துக்கு வேண்டிய சாதகங்களை ஏற்படுத்திக்கொடுத்தார். மாணாக்கர்கள் இராக்காலங்களில் படிப்பதற்காகத் தீபங்களையேற்படுத்தினார். அவர்கள் பாதங்களில் எண்ணெய் தடவிக்கொண்டு உஷ்ணசமனம் செய்துகொள்ளத்தக்கவசதிகளையும் உண்டாக்கினார். தேவாலயம் ஒவ்வொன்றிலும் புராணங்களோதுகிறவர்கள் புராணங்களைப் படித்து யாவருக்கும் போதிக்கும்படி ஏற்பாடு செய்தார். நர்த்தனம் கீதம் வாத்தியம் இந்த உபசாரங்கள் தேவாலயங்களில் நடந்துவரவும் பழைய ஆலயங்களையும் புது ஆலயங்களையும் புதுப்பிக்கவும் அவைகளிற் சித்திரம் வரையவும் தரையில் அழிவுறாதகோலங்கள் போடவும் திட்டப்படுத்தினார். தூபதீப தசாங்க திரவியங்களுக்கு மானியங்களளித்து அவைகள் குறைவின்றி நிறைவேறச் செய்தார். பஞ்சாமிருத ஸ்நானமும் வாசனைத் திரவியங்கலந்த ஸ்நானமும் ஆலயங்களில் கிரமமாய் நடந்துவரவும் பூஜை புரிவதற்கு வேண்டிய புஷ்பங்களுக்காகவும் மாலைகளுக்காகவும் ஏராளமாகப் புஷ்பங்களைக் கொடுக்கும் நந்தவனங்களை ஏற்படுத்தவும் அந்தப் புஷ்பங்களை எடுத்து மாலை தொடுத்து முக்காலங்களிலும் ஆலயங்களுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கிற ஆண்டிகளை ஏற்படுத்தவும் பூஜா காலங்களில் சங்கம் பேரி மிருதங்கம் முதலிய பல வாத்தியங்கள் ஆலயங்களில் முழங்கி

வரத்தக்க திட்டங்களைச் செய்யவும் வசதிகளை உண்டாக்க ஆக்ஞாபித்தார். பின்னும் ஆலயங்களில் ஸ்நானவசதிக்காக தண்டுகம் கும்பகம் முதலிய பாத்திரங்களையும் யக்ஷகர்த்தம மென்னும் ஸ்நானவாசனைத் திரவியங்களையும் தலைதுடைக்க வெண்மையான வஸ்திரங்களையும் ஏராளமாகவாங்கியளித்தார். ருத்ரம் முதலியமகா மந்திரங்களை ஜபிக்கவும் ஹோமங்கள் செய்யவும் தேவதாஸ்தோத்திரங்கள் படிக்கவும் சிவநாமோச் சாரணத்தை உச்சத்தொனியாகக்கூறவும் அந்தணர்களை ஏற்படுத்தி அவர்களுக்குத் திருப்தியானவசதிகளையும் உண்டாக்கினார். பிரதக்ஷிணமாகத்தெப்போற்சவங்கள் நடந்துவரவும் ஏற்பாடு செய்தார். இப்படியாக அநந்தமான தானதர்மங்களையும் தேவகாரியங்களையும் செய்துகொண்டு ஒருவருஷகாலம் வரை, அந்த காசிக்ஷேத்திரத்தில் வசித்துவந்து அங்கு அநேக புண்ணிய தீர்த்தங்களையு மேற்படுத்தினார். தீனர்களுக்கும் அநாதர்களுக்கும் ஏராளமான திரவியங்களை யளித்து திருப்திசெய்வித்து நாள்தோறும் விசுவேசுவரனைத் தரிசித்துத் தொழுதுவந்தார். ருதுஸ்நானமுதல் குறிப்பிடப்பட்ட நாட்களிலன்றி, மற்றநாட்களில் பத்னிமுகம் பாராமலிருக்கும் பிரமசரிய விரதத்தையும் சத்தியசம்பாஷண விருதத்தையும் அனுஷ்டித்து அடிக்கடி விசுவநாதர் காலபைரவர் கணேசர் தண்டபாணி அன்னபூர்ணி இவர்களைத் தரிசித்து, வணங்கித் துதித்து, விசுவேசுவரரது அனுமதிபெற்று புஷ்பகவிமானமேறிக் கங்கைக்குத்தென்கரை வழியாக ஆகாசமார்க்கத்தில் புறப்பட்டார்.

அப்படிப் புறப்பட்டு வருகையில் வழியில் கர்மநாசை என்னும் ஒரு நதியைக்கண்டு, அதன்கரையிலிருந்து தவமியற்றிவரும் சியவன முனிவருடைய ஆசிரமஞ்சென்று விமானத்திலிருந்து இறங்கி, அந்நதியில் ஸ்நானஞ்செய்து முனிவரை வணங்கி, அங்கு ஒரு புண்ணிய தீர்த்தத்தை யுண்டாக்கி, இராமேசுவரர் என்னுமோர் இலிங்கப் பிரதிஷ்டையும் செய்தார். அம்முனிவருடைய ஆசிரமத்தைச் சுற்றிலும் தமது பாணத்தாலேற்பட்ட இரேகையை யாவருக்குங் காண்பித்து அவ்விடத்தில் காசியில் செய்ததைவிட அதிகமான பலதானங்களைச் செய்தார்.

சியவனுசிரமத்திலிருந்து புறப்பட்டு சுவர்ணபத்திர கங்கா சங்கமத்திற்குவந்து, அங்கு முன்னிரண்டு தடவைகளைவிட அதிகமான தானங்களைச்செய்து, அநேக புண்ணிய தீர்த்தங்களையும் உண்டாக்கினர். இவ்வாறு ஸ்ரீராமபிரான் தாம் சீதையுடன் செல்லும் க்ஷேத்திரங்கள் யாவற்றிலும் மேலும்மேலும் அதிகமாகவே தானதர்மங்களைச் செய்துகொண்டு, அங்கங்கு பல புண்ணிய தீர்த்தங்களையும் உண்டுபண்ணி யாத்திரை செய்யலானர். இவ்வாறு இராமபிரான் தரிசித்த க்ஷேத்திரங்களில் செய்த தானங்களையும் உண்டாக்கின புண்ணிய தீர்த்தங்களையும் ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரவாயினுற் கூறிக்கணக்கிடினும் முடியா. அவைகளில் சிரேஷ்டமான தீர்த்தங்கள் ஆறு என்று பெரியோர்கள் கூறுவார்கள். அவைகளின் விவரமாவன 1. இராமதீர்த்தம் 2. இலட்சுமணதீர்த்தம் 3. பரததீர்த்தம் 4. சத்ருக்னதீர்த்தம் 5. சீதாதீர்த்தம் 6. அனுமத்தீர்த்தம் இந்த முக்கியமான தீர்த்தங்கள் ஆறும் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் ஏற்பட்டன. ஸ்ரீராமபிரான் சுவர்ணபத்ரகங்கா சங்கமத்தில் ஸ்நானஞ்செய்து சந்தோஷமடைந்து, மூன்றிராத்திரி அவ்விடம் வசித்து, அங்கிருந்து புறப்பட்டு, தண்டகீ சங்கமம் சென்றார். இவ்விதமாக க்ஷேத்திரங்கள் தோறும் சென்று சில க்ஷேத்திரங்களில் மூன்றுநாட்களும் சிலவற்றில்ஏழு நாட்களும் சிலவற்றில் ஒருபக்ஷமும் சிலவற்றில் பதினெட்டுநாட்களும் சிலவற்றில் இருபத்தொரு நாட்களும் சிலவற்றில் மூன்று மாதங்களுமாக வசித்துப்பல தானதர்மங்களையும் செய்து, அங்கிருந்து நேபாளதேசம் சென்றார். அங்கு ஜகதீசுவரரைத்தரிசித்துப் பிறகு ஹரிஹர க்ஷேத்திரம் சென்றார். அவ்விடமிருந்து இன்னும் பல க்ஷேத்திரவாசம் செய்துகொண்டு கங்கையின் தென்கரையிலிருக்கும் புனப்புன சங்கமத்துக்குச் சென்று பிறகு ஜராசந்தபுரமாகிய வைகுண்ட நகரத்தை யடைந்து, அங்கு ஓடும் வைகுண்டா நதியில் ஸ்நானம் செய்து, சிறிது காலம் அங்கேயே வசித்துப் பிறகு கயாக்ஷேத்திரம் போய் அங்கே பல்கு நதியின் கீழ்க்கரையில் விமானத்தை நிறுத்திவிட்டுக் கால்நடையாகக் கயாக்ஷேத்திரத்துக்குட் சென்று திவ்யமான விஷ்ணு பாதத்தை

வணங்கி, மறுபடியும் விமானத்திற்கு வந்து அங்கு அன்றிரவு வசித்தார்.

மறுநாட் பொழுது புலர்ந்ததும், அநேகமான பிராமணர்களுடன் ஸ்நானஞ் செய்வதற்காக பல்குநதிக்குச் சென்றார் அத்தருணத்திலேயே சீதாபிராட்டியும் பல்குநதியில் ஸ்நானம் செய்வதற்காகத் தனது சகிகள் யாவருஞ் சூழப் புறப்பட்டு நதிக்குச் சென்று அங்கு ஸ்நானம் செய்து சுமங்கலிகளைப் பூஜித்தாள். அந்த ஆற்றின் மணலில், மஹேசுவரியை ஆராதிக்கக் கருதி க்ஷணநேரம் நின்றாள். பிறகு அவ்விடத்தில் ஐந்து மணலுருண்டைகளைக் கொண்டு தர்க்காபிம்பத்தைச் செய்யவேண்டி, தனது இடது கரத்தில் ஈரமணலை யெடுத்து, வலது கரத்தில் வைத்துப் பிண்டமாக உருட்டி, தரையில் வைக்கையில், பூமியிலிருந்து வந்திய வண்ணமாகத் தோன்றிய கை ஒன்று தெரியக் கண்டு, உற்றுப் பார்த்து அதனைத் தன் மாமனாராகிய தசரதருடைய சுபகரமான வலதுகரமெனத்தெரிந்து கொள்ளும் அந்த நிமிஷத்திலேயே அக்கை அப்பிண்டத்தைப் பெற்று பூமிக்குள் மறைவதைக் கண்டு, ஆச்சரியமடைந்தாள். மறுபடியும் இரண்டாவது பிண்டத்தை யெடுத்து, உருட்டி முன்போலவே வைக்க, அவ்விதமாகவே அந்தக்கை கிளம்பி வாங்கி மறைந்தது. அவ்வாறு சந்தோஷத்துடன் நூற்றெட்டுப் பிண்டங்களை வைத்து அதனால் சிறிது களைப்படைந்து நின்றாள்.

பிறகு சிறிது நேரம் சென்ற பின் களைதெளிந்து, தர்க்காதேவியை மனதால் பூஜித்துவிட்டு விமானத்தினருகே சென்றாள். இவ்வாறு சீதை செய்ததைக் கூடவந்திருக்கும் சகிகளும் அறியவில்லை. இராமபிரானும் அறியவில்லை. சீதை தான் செய்ததை இராமருக்குத் தெரிவித்தால், கோபிப்பாரோ வென்னச் சந்தேகித்து அவருக்கும் சொல்லவில்லை.

பிறகு இராமபிரான் பஞ்சதீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்துவிட்டு, பிரேத பர்வதத்துக்குப்போய், அங்கு பிண்டம் போடுவதற்காகத் தமது நாமம் வரைந்ததான தமது கைச் சுண்டுவிரல் மோதிரத்தைக் கழற்றி, தெற்கு முகமாக நின்றுகொண்டு

அபஹூதா என்னும் மந்திரத்தை உச்சரித்துப் பூமியில் மூன்று ரேகைகளைக் கீறினர். அது அங்கு இன்றைக்கும் தெளிவாகத் தெரிகிறது. அந்த ரேகைகளில் குசங்களைப் பரப்பி, அவைகளில் எள், நெய், தேன் இவைகளோடு சத்மயமான பிண்டங்களை வலது கையால் எடுத்து வைக்க, உத்தேசிக் கையில் தமது தந்தையின் கரம் பூமியிலிருந்து வெளிவராதிருக்கக்கண்டு, மலைத்து நின்றார். அதை அருகேயிருந்து பார்த்த தீர்த்த வாசிகள் ஆச்சரியமடைந்து, "ஏ இராமா! இந்த இடத்தில் பிண்டம் போடும்போதெல்லாம் அதற்குரிய பிதிர்க்கள் வலதுகையைக் காண்பித்து அதை வாங்கிக்கொள்வது வழக்கம். இன்று தங்கள் தந்தையினுடைய கரம் காணப்படவில்லை. இதன்காரணம் எங்களுக்குத்தெரியவில்லை" என்று சொன்னார்கள். இப்பொழுது இராமபிரானும் ஆச்சரியமும் பயமுமடைந்து, அருகே யிருந்த இலட்சுமணரைப் பார்த்து "ஏ இலட்சுமணா! இதன் காரணத்தை நீ யறிவாயோ" வெனக்கேட்டார். அதற்கு இலட்சுமணர் "அண்ணா! கோதாவரி நதிக்கு நாம் போயிருக்குங் காலையில், அந்த இங்குதி பலங்களைப் பொடி செய்து அதில் பிண்ணாக்கைச் சேர்த்துப் பிண்டம் பிடித்து வைக்கும்போது, ஏந்தி வாங்கிக்கொண்ட நமது தந்தையின் கை இங்குவராததன் காரணம் எனக்கும் புலப்படவில்லை. அது எனக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது. சீதாபிராட்டியைக் கேட்டால் அதன் காரணம் ஒருவேளை வெளியாகு"மென்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜானகி தேவி திடுக்கிட்டுப் பயந்து இராமலட்சுமணர்களைப் பார்த்து, "இவ்விஷயத்தில் நான் ஒரு அபராதம் செய்துவிட்டேன். க்ஷமிக்கவேண்டு"மென்றாள். உடனே இராமபிரான் சீதையைப்பார்த்து "ஏ சீதே!என்ன நடந்ததோ அதை இப்பொழுது தெரிவி. பயப்படவேண்டாம்"என்றார். உடனேசீதாபிராட்டி நடந்ததை உள்ளபடியே ஸ்ரீராமபிரானுக்குத் தெரிவித்தாள். பிறகு இராமபிரான்,"சரி,நீ அவ்விதம்செய்ததற்குச்சாட்சியார்"என்றார். சீதை,"இதோ இந்த மாமரம் சாட்சி" யென்று அங்கிருக்கும் ஒரு மாமரத்தைக்குறிப்பிட்டாள். இராமர் மரத்தைக்கேட்டார். அம்மரம் நானறியேன்" என்று கூறிவிட்டது. இதைக்கேட்ட சீதா

பிராட்டி, உடனே அம்மாமரத்தைப் பார்த்து "நீ பொய் கூறினமையால், இனிமேல் நீ நிஷ்பலமாகப்போவதுமன்றி உன் இலைகளைப் பூக்கள் அரிக்கக்கடவது" என்றுசபித்துவிட்டு, "ஏ இராகவேந்திர! இந்த பல்குநதி ஒரு சாட்சி" யென்றாள். பல்குநதியைப்பார்த்து இராமர் நீ கண்டாயாவெனக் கேட்க, அதுவும் நானறியேனென்றது. உடனே சீதாதேவி நதியைநோக்கி, "நீ சத்தியத்தை மறைத்தமையால், அந்தர்வாகினியாகப் போகக்கடவது" என்று சபித்து, இங்கிருக்கும் தீர்த்தவாசிகளாகிய வேதியர்கள் சாட்சியென்றனள். அவர்களை இராமர் கேட்க, அவர்களும் இப்பொழுது நாம் சாட்சிகூறின், அப்படிச் செய்த சீதையை நீங்களென் தடுக்கவில்லை யென்று கோபித்து இராமர் நம்மைச் சபித்துவிடுவாரென்றெண்ணிப் பயந்து "நாங்களறியோம்" என்று பொய்மொழி கூறினார்கள். சீதை அவர்களைப்பார்த்து, "நீங்களிப்பொழுது பொய்கூறினமையால், இதுவரையில் ஆசையற்றவர்களாகவிருந்த நீங்கள் இனிப்பேராசைகொண்டு இங்கு உங்களுக்கு எவ்வளவுதானங் கொடுத்தபோதிலும் அவைகளைக்கொண்டு திருப்தியடையாமல், ஏழை வேடங்கொண்டு திரவியங்களுக்காகத் தேசமெங்கும் திரிந்துவரக் கடவீர்க"ளென்று சாபமிட்டாள். பிறகு ஒரு பூனையைக்காட்டி இதுசாட்சியென்று ஜானகி கூறினள். அதையும் இராமர் கேட்க, அதுவும் நானறியேன் என்று கூறிவிட்டது. உடனே சீதை அதைப்பார்த்து, "நீ உன் வாலை முன்னே நீட்டிக்கொண்டு என்னருகில் உட்கார்ந்திருந்து பார்த்திருந்தும் பொய்கூறினமையால், உன்வால் அசுத்தமாகப்போகக் கடவ"தென்று சபித்தாள். இதோ நிற்கும் இந்தப்பசு எனக்குச் சாட்சிகூறுமென்றாள். அதையும் இராமர் கேட்க அதுவும், நானறியேனென, சீதை அதைப்பார்த்து, "ஏ பசுவே! நீயும் பொய்கூறினமையால் உன் முகம்தரிசனத்திற்கு யோக்கியமில்லாமற்போகக்கடவ"தென்றனள். பிறகு ஓர் அரசமரத்தைச்சாட்சியாகக்காட்டினள். அதுவும் இராமருக்கு அவ்விதமேகூற, சீதை அதைப்பார்த்து, "ஏ அரசமரமே! நீயும்பொய்கூறினமையால், உன் இலைகள்சலித்துக்கொண்டிருக்கக்கடவ" தென்று சபித்து, மறுபடியும் இராமபிரானைப்

பார்த்து "இதோ சர்வசாட்சியாகவிளங்கும் பாஸ்கரன்தான் சாட்சி" யென்றனள். இராமபிரான் அவரைக்கேட்க, அவர் உண்மையைச் சொல்லி, "இராமா! உனது தந்தை திருப்தியடைந்தார்" என்றுங் கூறினர். இத்தருணத்தில் தசரதர் சூரியன்போல் பிரகாசிக்கும் ஒரு விமானத்தில் அங்கு வந்து, இராமனை ஆலிங்கனஞ் செய்து கொண்டு "வ இராமா! தாண்டமுடியாத நரகத்திலிருந்த என்னை நீ கரையேற்றிவைத்தாய், மிதிலாதிபதியின் புத்திரியாகிய சீதாதேவியின் பிண்டதானத்தால் எனக்கு உத்தமமான திருப்தியுண்டாயிற்று; ஆயினும் லோகத்தாருடைய ஒழுக்கத்துக்காக, நீ கயா சிராத்தம்செய்" என்றார். அதற்கு இராமபிரான் தமது தந்தையைப்பார்த்து "அப்பா! நான் இங்கே கயாசிராத்தம் முதலியவைகளைச் சிரத்தையாகச்செய்து தமக்குத் திருப்திசெய்யக் கருதியிருக்க, அதற்குள் அவசரப்பட்டு சீதைகொடுத்த மணற்பிண்டத்தை எதற்காக ஏற்றுக்கொண்டீர்கள். அப்படி ஏற்றுக்கொள்ளக் காரணமென்ன" என்று கேட்டார். தசரதர், இந்த கயாக்ஷேத்திரத்தில், கயாசிராத்தம் பண்ணுகிறவர்களுக்குப் பலவிதமான இடையூறுகள் நேரிடுவதுவழக்கம். ஆதலால், நான் அவசரப்பட்டு சீதை கொடுத்ததைப்பெற்றுக் கொண்டேன்" என்று சொல்லி, இராமரிடமிருந்து, அப்பொழுது அவர் கொடுத்த கவ்யத்தை (பிண்டத்தை)ப் பெற்றுக்கொண்டு விமானமேறிச் சொர்க்கலோகம் சென்றார். இராமபிரானும் பிரேத கிரியில் பிண்டதானம் செய்தபிறகு அங்கிருந்துபிரேதசிலைக்குச்சென்று, அங்கே காகபலி கொடுத்துவிட்டு, அங்கிருந்து நைமாரண்யம் சென்று, அங்கே சில இடங்களில், எள், நெய், பாயஸம், சர்க்கரை, இவைகளோடு பத்தொன்பது சத்துப் பிண்டங்களைத் தனித்தனியாக வைத்து வட சிராத்தம் செய்தார். அங்கே எட்டுத்தீர்த்தங்களையும்பெண்ணி, மூன்று இடங்களில், சந்தியா வந்தனாதிகளைச் செய்தார். பல தானங்களையுஞ் செய்தார். பிறகு கதாதரரைத் தமது வைபவத்துக்குத் தக்கபடி பூஜித்து அவ்வபிஷேக தீர்த்தத்தால் சீதையினது சாபமேற்றுப் புழுமலிந்திருக்கும் மாமரத்தின் வேரைநனைத்தார். பிறகு இராமர் விஷ்ணுபாத பூஜையைச் செய்து அதற்கு விமானத்தை யேற்படுத்தினார். இந்தப்படி மூன்று மாத

காலம் வரையில் வசித்து ஜனங்களைச் சந்தோஷப்படுத்திவிட்டுப், புஷ்பகவிமானமேறிக் கிழக்குத் திக்கிற் சென்று பல்கு நதியின் கிழக்கரையில் ஓரிடத்தில் தங்கினார். அந்த இடத்தை வேதியர்கள் இராமகயை என்று கூறுகிறார்கள். அங்கு இராமேசுவரலிங்கமும் இராமதீர்த்தமு மிருக்கின்றன. பிறகு இராமர் பல்குநதி கங்கையில் சேருமிடத்துக்குச் சென்றார். கயாக்ஷேத்திரத்திற்கு வெளியேயல்லை மகாநதியாகிய பல்குவென்றே அறியத்தக்கது. அதன்பிறகு ஸ்ரீராமபிரான் முத்கலருடைய நூதன ஆசிரமத்துக்குச் சென்றார். அவ்விடத்தில் பாபநாசகரமான கங்கையானது வடக்குமுகமாகச் செல்கிறது. இந்த இடத்தை ஸீதை சொர்க்கமாக இனிச் செய்யப்போகிறாளாதலால், அந்த இடத்தில் இராமபிரான் தம்பேரால் ஒருதீர்த்தம் உண்டுபண்ணிச் சகோதரர்கள் பேர்களாலும் தீர்த்தங்களை உண்டுபண்ணினார். ஸீதைபேரால்மட்டும் தீர்த்தம் ஏற்படவில்லை. பிற்காலத்தில் இந்த இடம் என்னால் மகிமையை அடையப்போகிறது. அப்பொழுது என்பேரால்இங்கு தீர்த்த மேற்படுமென்று ஸீதை கூறினாள். இதன்பின் இராமபிரான் உத்தரவாஹினியான கங்கைக்கரைவழியே சென்று, கங்கையின் நடுவில் ஒருமலையையும் அதன்பேரில் விச்வேசுவரம் என்னகிற சிவஸ்தலமும், புரி என்னும் ஒரு பட்டணமு மிருக்கும் இடத்தை யடைந்து, அங்கிருந்து இராவணனால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட வைத்தியநாதேசுவர க்ஷேத்திரமடைந்து அவரைத் தரிசித்து வணங்கி அங்கிருந்து புறப்பட்டு அநேக ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு பிரயாகையிலிருந்து நூறுகாதவழி யளவில் கங்கையானது வெண்மை நிறத்தை யடைந்து தனியே பிரியுமிடத்துக்குச் சென்றார். பிறகு கங்கையானது ஆயிரமுகமாகப் பிரிந்து சமுத்திரத்திற் கலக்குமிடமாகிய கங்கா சாகர சங்கமத்திற்கு ஸ்ரீராமபிரான் புஷ்பகவிமானத்துடன் சென்று அங்கு ஸ்நானம் செய்தபிறகு யமுனாசாகரசங்கமத்திலும் ஸ்நானம்செய்தார். அங்கிருந்து புறப்பட்டு மத்தியிலிருக்கும் அநேக புண்ணிய ஸ்தலங்களையும் புண்ணிய தீர்த்தங்களையும் தரிசித்துக்கொண்டு கீழ்சமுத்திரக்கரையிலிருக்கும் புருஷோத்தமமாகிய ஜகன்னாதரைத் தரிசித்து, அங்கே பலதானங்களைச்செய்தார். தேவதைகளையுந் தரிசித்

தார். பிறகு அதைவிட்டுப் புறப்பட்டுப் பலதேசங்களையும் பலநதிகளையும் தாண்டிக் கோதாவரி தீரத்துக்குவந்து சேர்ந்தார். அங்கே இராமகிரி என்கிற ஒரு மலையை உண்டுபண்ணினார். இதன்பின் கோதாவரி நதி ஏழுபிரிவுகளாகப் பிரியுமிடத்திலும் பிரிந்து சமுத்திரத்தில் சங்கமமாகுமிடத்திலும் ஸ்நானஞ் செய்து அங்கிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டு கிழக்குத் தேசத்துக்கு வந்தார். அங்கே இருக்கும் அரசர்கள் தங்கள்தங்கள் கப்பங்களையெடுத்துக்கொண்டு வந்து ஸ்ரீராமபிரானிடம் செலுத்தி வணங்கினார்கள். ஸ்ரீராமபிரான், அவைகளை பெற்றுக்கொண்டு அவர்களுடன் விமானத்திலேறிப் புறப்பட்டுத் தென்தேசத்திலுள்ள அநேக தீர்த்தங்களைத் தரிசிப்பதற்காகத் தென்திசை நோக்கிப் புறப்பட்டார்.

கீழ்ப்பாக யாத்திரையாகிய
ஆறாவது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ஸ்ரீராமபிரான் சில தேசங்களையும் மனோரம்மியமான மத்ஸிய தீர்த்தத்தையுங் கடந்து மகா நதியாகிய கிருஷ்ணா நதியையும் அதனருகிலிருக்கும் புண்ணிய ஸ்தலங்களையும் தரிசித்து அங்கிருந்து பானக நரசிம்மரைத் தரித்துப் பின் கிருஷ்ணா சாகர சங்கமஞ்சென்று அங்குத் தீர்த்தமாடிப் பல தானங்களை விஸ்தாரமாகச் செய்தார். இதன்பின் அங்கிருந்து புறப்பட்டு அநேகமான புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீ சைல பர்வதத்துக்கு வந்து அதனருகே பிரவகியாநின்ற நீலகங்கையில் ஸ்நானஞ் செய்து ஸ்ரீ மல்லிகார்ச்சுனரைத் தரிசித்தார். நீலகங்கை யென்பது அங்கு பிரவகிக்கும் கிருஷ்ணா நதியென்றே யறியத்தக்கது. மறு பிறப்பை ஒழிக்கும் ஸ்ரீ சைலசிகரத்தைத் தரிசித்து விட்டு அங்கிருந்த பிரம குண்டம் பீமகுண்டம் நிவர்த்தி சங்கமம் துங்கபத்திரா சங்கமம் பவநாசினி இவைகளில் ஸ்நானஞ் செய்து அஹோபில க்ஷேத்திரஞ்சென்று அங்கு நரசிம்மரைத் தரிசித்து வணங்கி ஸ்தம்பப் பிரதக்ஷிணங்களைச்செய்தார். பிறகு புஷ்பகிரி சென்று அதனருகிலோடும் பிநாகினி நதியில் ஸ்நானம் செய்து அதன் பக்கமிருக்கும் புண்ணிய ஸ்தலங்களையும் ஈசாலயங்களிலுள்ள பரமசிவ மூர்த்திகளையும் தரிசித்து அங்கிருந்து பம்பாஸரஸுக்கு வந்து அதைப்பார்த்துவிட்டு, கிஷ்கிந்தைக்குச் சென்றார். இராமபிரான் வந்து தமது ராஜ்யத்தில் விஜயஞ்செய்திருப்பதைக் கண்ட சுக்ரீவன் பரமானந்தமடைந்து அவரை நமஸ்கரித்து பூஜோபசாரங்கள் செய்தான். ஸ்ரீராமபிரான் சுக்ரீவாதி வானரசிரேஷ்டர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு விமானமேறி ஆகாச மார்க்கமாக பிரவர்ஷணகிரி சென்று அங்கு முன் தாம் வசித்த ரம்மியமான குகையைச் சீதாபிராட்டிக்குச் சந்தோஷத்துடன் காண்பித்துச் சிறிது நகைத்து இரண்டாவது பீமகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து அங்குச் சுப்பிரமண்யக் கடவுளைத் தரிசித்து அங்கிருந்த அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார். பிறகு அநேக தீர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டு கனக

கிரி சென்று அங்கு மகாதேவரையும் வீரபத்திரரையும் தரிசித்தார். பிறகு வேங்கடம் சென்று வெங்கடேசுவரரை வணங்கி அங்கு அடிவாரத்தில் திருப்பதிப் பட்டணத்திலிருக்கும் கோவிந்தராஜப் பெருமாளைத் தரிசித்துக்கபிலதாரையில் ஸ்நானஞ்செய்து அங்குத் தீர்த்தசிராத்தத்தையும் நடத்தினர். பிறகு சேஷாசலத்துக்குச்சென்று அப்புஷ்கரணியில் தீர்த்தமாடி வெங்கடேசுவரரைப்பூஜித்து அங்குள்ள பஞ்ச தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தார். பிறகு சுவர்ணமுகி நதியின் கரையிலிருக்கும் ஸ்ரீ காளத்தீசுவரரைத் தரிசித்து பூஜித்து சிவ விஷ்ணுக்களுக்குப் பிரியஸ்தலமான காஞ்சீபுரம் சென்று ஏகாம்பரேசுவரரைப் பூஜித்து அங்குள்ள சர்வ தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து காமாக்ஷி என்னும் ஜகதம்பிகையை வணங்கி வேகவதிநதி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பிறகு வரதராஜப்பெருமாளை வணங்கி அங்கிருந்து பக்ஷிதீர்த்தம் சென்று ஸ்நானம் செய்து அங்கு பூஷா விதாதா என்னும் இரண்டு பக்ஷி சிரேஷ்டங்களை சீதையுடன் பூஜித்து, அங்கிருந்து புஷ்பகத்தை வேகமாகப் பாலாறுக்குச் செலுத்தி அங்கு ஸ்நானஞ் செய்து திரிவிக்ரமனை வணங்கி, பிறகு எண்ணின மாத்திரத்தில் முத்தியருளும் அருணாசல க்ஷேத்திரமடைந்து அங்கு அருணாசலேசுவரரை வணங்கி, பிறகு மணிமுத்தா நதியின்கரையிலிருக்கும் விருத்தாசல க்ஷேத்திரஞ் சென்றார். அங்கு விருத்தாசலேசுவரரைப் பூஜித்து அதன்பின் வடபாகஞ் சென்று வடபாலேசுவரரைப் பூஜித்தார். அங்கிருந்து ஸ்ரீமுஷ்ணம் வந்து அங்கு எழுந்தருளியிரானின்ற ஜகதீசராகிய யக்ஞவராகப் பெருமாளைத் தரிசித்து பிறகு தரிசன மாத்திரத்தில் முத்தியுதவும் சிதம்பரம் வந்தார். அத்தேசத்தில் ஆதிகாலத்தில் ஆதிசேஷர் ஒரு சிலையில் எழுதியிருந்த தாண்டவ மூர்த்தியின் ஆகிருதியைத் தரிசித்தார். அங்கிருந்து காவேரி நதியைத் தாண்டி சிம்மக்ஷேத்திரம் சென்று அங்கு பிரம்மபுரேசனையும் வைதீசுவரரையும் வணங்கி, அவ்விடமிருந்து, சுவேதாரண்யம் சென்று அங்குள்ள சங்கமுகியென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, பிறகு சாயாவனஞ் சென்று அங்கிருந்து கௌரீ மயூர (மாயூர) த்திற்குவந்து பின் வேதாரண்ய மத்தியார்ச்சன க்ஷேத்திரங்களுக்குச் சென்று,

அங்குள்ள மஹாலிங்கேசுவரரைத் தரிசித்து, விருத்த காவேரியில் ஸ்நானம் செய்து பிறகு கும்பகோணத்துக்குச் சென்று ஸ்ரீநிவாஸனையும், அங்குள்ள பிருந்தா வனத்தையும் தரிசித்துப் பிறகு சாரங்கபாணியைத் தரிசித்து அவரிடத்துள்ள ஸ்ரீவத்ஸ மணியையும் பார்த்தார். பிறகு பிரயாகை மாதவனை வணங்கிவிட்டு அப்ரகிரஸ்ஸு ஸ்தலத்தைத் தரிசித்தார். அதன்பின் ஆகாசம்போல் நீல நிறம்பொருந்திய கமலாலயத்தையடைந்து அங்கு தியாகேசனைப் பூஜித்து, அங்குக்கயா தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, பிறகு தக்ஷிண துவாரகைக்குச்சென்று அங்கு கோவிந்தனை வணங்கி, பின் ஜயபாலபட்டணம் சென்று, அபயதேசுவரரையும் தாம் முந்திபிரதிஷ்டை செய்த விக்னேசுவரரையும் வணங்கி அங்கிருந்து நவபாஷாணம் சென்று, பிறகு தேவீ பட்டணமடைந்து அங்குள்ள வேதாள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, பின் சமுத்திரத்தைக்கடந்து பைரவதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, தமக்குச் சொந்தமான இராமேசுவரம் சென்று விமானத்தைவிட்டிறங்கி யாவருடனும் கால்நடையாக நடந்து, லட்சுமண தீர்த்தத்துக்குச்சென்று அங்கு இராமகுண்டமாகிய தமது சொந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தார். பிறகு தனுஷ்கோடியிலும் ஜடாயு தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து பின் கந்தமாதனத்துக்குச்சென்று அங்கு அனுமான் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்திருக்கும்விசுவநாதனை முதலில் வணங்கி, பிறகு இராமேசுவரரைத்தரிசித்து அவர்க்குக் கங்காபிஷேகம் செய்வித்து காசகுப்பங்களை தனுஷ்கோடியிலெறிந்துவிட்டு அங்கே வில்நுனியில் கோடி தீர்த்தமென்னும் ஓர் உத்தமமான தீர்த்தமுண்டுபண்ணி, க்ஷேத்திரங்களின் பாபசாந்திக்காக சேது மாதவனைத் தரிசித்து அங்கே பல தானங்களைச் செய்துகொண்டு ஒரு மாதகாலம் வசித்திருந்து அங்குள்ள தேவதைகள் யாவருக்கும் பலவிதமான வாகனங்களைச் செய்து வைத்து வாகனமகோற்சவங்களையுஞ் செய்வித்தார். பிறகு நடந்த க்ஷேத்திர பாபசாந்திக்காகக் கோடி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தார். பிறகு கோபுரவாயிலிலிருக்கும் கணபதியைத் தரிசித்து மறுபடியும் கடலைக்கடந்து விமானமேறித்தர்ப்பசயனம் சென்றார். பின் தாம்பிரபர்ணீ சமுத்திர சங்கமத்திற்குச்சென்று

அங்கு ஸ்நானம் செய்து பல தானங்களை அளித்து, அக்கரையிலிருக்கும் கந்தபிரானைப் பூஜித்து தாம்பிரபர்ணீ நதிக்கரை வழியே சென்று, அங்கங்குள்ள புண்ணிய ஸ்தலங்கள் யாவையும் தரிசித்து வேங்கடநாதனையும் வணங்கி அவ்வழியாய்த் தோதாத்திரி சென்று, அங்குச் சமுத்திரக்கரையில்வசிக்கும் கன்னியா குமாரியைக்கண்டார். புஷ்பமாலையை வைத்துக்கொண்டு நெடுநாளாகத் தமது வரவை நோக்கிக் காத்துக்கொண்டிருக்கும் அவளைப்பார்த்து "விரதானுஷ்டான சீலமுடையவளே! உனக்கு வேண்டிய வரலைக்கேக" என்றார். நெடுநாளாய் விரதம் அனுஷ்டித்து வரும் அவள் "ஏ இரகுகுலோத்தமா! யான் ஒரு முனிவருடைய புத்திரி. எனது தந்தை என்னைச் சுசேஸந்திரர் என்பவருக்குக் கன்னிகாதானஞ்செய்து கொடுப்பதாக நிச்சயித்து அவரை வரவழைத்தார். நான் தாங்கள் தீர்த்தயாத்திரைசெய்து வருவதைக்கேட்டு, தாங்கள் இவ்விடம் வரும்பொழுது தங்களை வரனாக வரிக்கவேண்டுமென்று எண்ணி, இந்த விரதத்தை அனுஷ்டித்து இவ்விடம் வசித்து வருகிறேன். நான் இப்படி நிச்சயித்திருப்பதையறிந்தே எனது தந்தை, சுசேஸந்திரர் என்பவரை அவரிருப்பிடத்துக்குச் செல்லும்படி யனுப்பினார். அவர் இதோ ஒரு காதவழிதூரத்தில் மனவருத்தத்துடனிருந்து வருகிறார். எனது தந்தை இதனால் மனவருத்தமும் கோபமுமடைந்து எனது தாய், விவாகத்திற்காகச் சேகரித்திருந்த சாமான்கள் யாவற்றையும் சமுத்திரத்திற் கொட்டிவிட்டு, அவரும் ஒரு காதவழி தூரத்தில் வசிக்கிறார். இதோ பாருங்கள் சமுத்திரத்தின் அலைகள் அந்தச் சாமான்களைக் கரைக்குச் சிறிது சிறிதாகக் கொண்டுவருகின்றன. ஆதலால் தாங்கள் என்னைத் தாஸியாகக் கொண்டு காப்பாற்றவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். இரகுநந்தனரும் அவள் கருத்தையறிந்துகொண்டு "ஏ குமாரியே! நீ கேட்டபடி வரந்தர எனக்கும் பிரியமே" ஆனால் யான் இப்பிறப்பில் ஏகபத்னீவிரதமென்ற ஒரு விரதத்தை மேற்கொண்டிருக்கிறேன். இந்தப் பிறப்பில் உனது கோரிக்கைநிறைவேறாது; இனியான்செய்யவிருப்பியகிருஷ்ணாவதாரத்தில் உனது தபோபலத்தால் நீ ஜாம்பாவனுக்கு ஜாம்பவதி யென்கிற

பெயர்கொண்ட புத்திரியாகப்பிறப்பாய். அப்பொழுது கிருஷ்ணனுக்குப் பத்னியாவாய்" என்று வரமளித்தார். பிறகு அவள் இராமர்புவியிலிருக்கும் வரையில் அவருடைய வார்த்தையை நம்பி இயமநியமங்களைச்செய்துவந்தாள். பிறகு இராமபிரான் அவ்விடமிருந்து சுஸேந்திரனிருக்கும் இடத்திற்குவந்து, அவ்விடத்திலுள்ள பயோஷ்ணியென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து அங்கிருந்து தாம்பிரபர்ணீ நதிக்கரையிலிருக்கும் ஆதி அனந்த ஸ்தலத்துக்குச்சென்று அங்கு இலட்சுமி கருடர் இவ்விருவரும் சேவிக்கச் சேஷசயனராகவிருக்கும் அனந்தனைத் தரிசித்து வணங்கினார். அங்கு மேற்கு நோக்கி ஒரு ஆறு போய்க்கொண்டிருக்கிறது. அதனை வேறொரு தாம்ரபர்ணீயென்றே கொள்ளவும். அங்கிருந்து புறப்பட்டு அநந்தசயனஞ்சென்று அங்குள்ள பத்மதீர்த்தம் மச்சதீர்த்தம் சங்கதீர்த்தம் இவைகளில் சீதையுடன் பிரபுவாகிய இராமர் ஸ்நானம் செய்தார். பிறகு விமானமேறி தர்மாதர்ம ஸரோவரத்திற்குச் சென்று அங்கு ஸ்நானஞ்செய்து அங்கிருந்து மேற்குச் சமுத்திரக்கரையிலிருக்கும் ஜனார்த்தன க்ஷேத்திரமடைந்து அங்குள்ள கங்காதாராசமுத்திர சங்கமத்தில் அமாவாசையிலும் பௌர்ணமியிலும் ஸ்நானஞ்செய்து ஜனார்த்தனரைப் பூஜித்து பெண்மலையாளத்தினருகே சென்று அதைப் பார்த்துவிட்டு லோகத்திற்கு நல்வழியைப் போதிப்பதன் நிமித்தம் அதனுள் பிரவேசிக்கவில்லை. அதைவிட்டுத் திரும்பிக் கிருதமாலை ஸிந்து நதி இவைகளுக்கு வந்து ஸ்நானம்செய்து அங்கிருந்து தாம்பிரபர்ணி நதியின் கரையின்கண்ணுள்ள கஜேந்திர க்ஷேத்திரத்துக்குச் சென்றார். பிறகு தாம்பிரபர்ணி உற்பத்தியில் ஸ்நானஞ்செய்து அங்கிருந்து மயிராள தீர்த்தஞ்சென்று பிறகு சந்திரகுமாரம் என்னும் மலையையடைந்து தென்காசிக்குச்சென்று காசி விசுவநாதரை வணங்கிச் சம்பகாரண்யம் அடைந்தார். இதன்பின் சித்ரகங்கா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அங்கு ஹரிஹரர்களை வணங்கி, பிறகு விமானத்துடன் மதுராபுரிக்குச் சென்று, வேகவதி நதியில் ஸ்நானஞ்செய்து அங்கு மீனாட்சி சுந்தரேசுவரரைத் தரிசித்து வணங்கி, திராவிடகிரியிலுள்ள வேங்கடேசுவரரையும் வணங்கிப் பிறகு, உபயகாவேரி மத்திய க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கம்

வந்து, அங்கிருந்து, மாதுரு பூதேசுவராலயம் போய் அவரை வணங்கிப் பின், ஜம்புகேசுவரத்துக்குச்சென்று அவரையும்வணங்கிக் கடைசியில், ரங்கனாதரைத் தரிசித்து வணங்கினார். இதற்குப்பின் அவினாசிக்குச் சென்றார். இங்கிருந்து ஸ்ரீரங்கபட்டணம் சென்று அங்குள்ள ஹைமவதீ தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சாளிக்ராமத்துக்கு வந்தனமளித்து இராமநாதபுரம் சென்றார். அங்கிருந்து குமாரதாரைக்குச் சென்று, அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சுப்பிரமண்யரைப் பூஜித்து, உடுப்பியில் பிரஸித்தமாயிருக்கும் கிருஷ்ணபகவானை வணங்கி, அங்கிருந்து சிருங்காசிரமம் சென்று அங்கே துங்காநதிக்கரையிலிருக்கும், சிருங்ககிரியில் சாரதாம்பாளை வணங்கி, அங்கிருந்து கும்பகாசிக்குச்சென்று, பின் கோடீசுவர சிவக்ஷேத்திரத்தை யடைந்து அங்கு மிருடேசுவரர் மூகாம்பிகாதேவி இவர்களைத் தரிசித்து, வணங்கி, குணவந்தேசுவரர், தாரேசுவரர், கௌரேசுவரர், சர்ஜேசுவரர் இவர்கள் நால்வரையும் வணங்கி, பிறகு கோகர்ண க்ஷேத்திரஞ் சென்று அங்கு மகாபலேசுவரரை வணங்கி ஹரிஹரேசுவரஞ் சென்று அங்குள்ள அநேக தீர்த்தங்களைத் தரிசித்தார். பின்மஹேந்திரபர்வதத்திலிருக்கும் ஜாமதக்னிய முனிவரை (பரசுராமரை) வணங்கி, பின் பீமேசுவரஞ் சென்று அங்குள்ள தௌமமகாபலேசுவரரை வணங்கிவிட்டுக் கோலாபுரஞ்சென்று, பின்கரவீரபுரமடைந்தார். அங்கே கிருஷ்ணாவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்து கதாலட்சுமீசுவரரை வணங்கி, கடப்பிரபா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அதன்பின் அநேகமானபுண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு பிறகுமகாதேவர் மல்லாரீசுவரர் இவர்களைவணங்கி, கராநதிக்கரையிலிருக்கும் வக்ரதுண்டவிநாயகரைத்தரிசித்து, நீராநதியில் ஸ்நானஞ்செய்து நரஸிம்மரைப்பூஜித்து, பாண்டுரங்கரை வணங்கி, சந்திரபாகையில் ஸ்நானஞ்செய்து பிறகு பீமாசங்கமம் சென்றார். அங்கிருந்து சந்தல்லா க்ஷேத்திரம் சென்றார். பிறகு பிரேமபுரம் சென்று அங்குள்ள மார்த்தாண்டேசுவரரை வணங்கி பின் நளதுர்க்கையைத்தரிசித்து அதனருகிலுள்ளபலஸ்தலங்களையும்தரிசித்துவிட்டு, பிறகுதுளஜாபுரத்திலிருக்கும் தேவியைவணங்கி, மாணிக்காம்பிகையையும் தரிசித்து, அங்குள்ள தீர்த்தங்

களில் ஸ்நானஞ் செய்து விட்டுப் பின் அம்பாபுரஞ் சென்று அங்கே யோகீசுவரீ யென்னும் அம்பிகையைத் தரித்து வைத்தினாதனை வணங்கி, வஞ்சரா சங்கமஞ்சென்று அங்கு நாகேசுவரனைத் தரிசித்தார். இதற்குப் பிறகு கோதாவரிக்கு வடகரையாகிய பூர்ணசங்கமத்தில் ஸ்நானஞ் செய்து, அங்குத் தமது பெயரால் ஒரு பட்டணத்தை யுண்டுபண்ணிப் பின் முத்கலாசிரமம் வந்து சேர்ந்தார்.

அப்பால் பாணதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விட்டுப் பேணுசமுத்திர சங்கமத்தில் ஸ்நானஞ்செய்தார். இதன்பின்மாலை போல வரும் கோதாவரி நடுவிலிருக்கும் அப்ஜகமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அங்கே திரிவிக்ரமனை வணங்கி, அக்கரையில் தமது பெயரால் ஒரு சிரேஷ்டமான பட்டணத்தை யுண்டு பண்ணினார். பிறகு சண்டிகாம்பிகையைப் பூஜை செய்து, ஆத்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அங்குள்ள விக்நேசுவரனை வணங்கி, மகா லட்சுமியைத்தரிசித்து, பின் வடவா சங்கமம் சென்றார். பிரதிஷ்டா நகரதரிசனஞ் செய்துவிட்டு,விருத்தைலா சங்கமத்திலும் சிவ நந்தா சங்கமத்திலும் ஸ்நானஞ்செய்து நரசிம்மனைப் பூஜித்து அங்குத் தமது பேரால் ஒரு தீர்த்தத்தை யுண்டு பண்ணிப் பிறகு பிரவரா சங்கமம்சென்றார். அங்கே சித்தேஸ்வரனை வணங்கி அதன்பின் நிவாஸபுரத்துக்கும் நாபுரபுரத்துக்கும் சென்று அதனருகேயுள்ள பல ஸ்தலங்களைத் தரிசித்து கோதாவரிக் கரையிலிருக்கும் புண்ணிய ஸ்தலம் சென்றார். அப்புறம் கத்ருவிநதா சங்கமங்களில் ஸ்நானம் செய்து ஜனஸ்தானமடைந்து திரியம்பகேசுவரனைத் தரிசித்துத் தங்கினார். அங்குத்தென்தேசத்தரசர்கள் யாவரும் வந்து ஸ்ரீராமபிரானைத்தரிசித்து வணங்கி தங்கள் கப்பங்களைச் செலுத்தி மகிழ்ந்தார்கள். இராமபிரான் அவர்களையும் அழைத்துக் கொண்டு மறுபடியும் யாத்திரைக்குப் புறப்பட்டார்.

தக்ஷிணதேச தீர்த்த யாத்திரை வர்ணனையாகிய

7-வது சருக்கம்.

முற்றிற்று.

8-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் கூறுகிறார்.

குருவே! அடியேன் மனதில் ஒரு சந்தேகம் ஜனித்திருக்கிறது. அதனைத் தாங்கள் நிவர்த்தி செய்யவேண்டும். சாதுக்கள் கிருபையுள்ளவர்களல்லவா? வாகனமேறி யாத்திரை செய்யக்கூடாதென சாஸ்திரங் கேட்டிருக்கின்றேன். இராகவர் புஷ்பக விமான மேறி யாத்திரை செய்தாரெனத் தாங்கள் கூறினீர்கள். அதன் காரணமென்ன? அதை நிவர்திக்க வேண்டுகிறேன் என்றார்.

இராமதாஸர் கூறுகிறார்.

திவுக்கு அதிபதியும் சத்திர சாமர உபசார யோக்கியனுமான மண்டலாதிபதி, காலால்நடந்து யாத்திரைசெய்யக்கூடாது. இன்னும், ஒரு தேசத்தரசனும் லக்நம் நிச்சயித்து விவாகஞ்செய்து கொள்ளச்செல்லும்வானும் ஒரு பெரியமடாதிபதியும்காலால் நடக்கக்கூடாது. ஆதலால் ஸ்ரீ ராமபிரான் விமானத்துடன் யாத்திரை செய்ததில் நீ சிறிதும் சந்தேகங்கொள்ளாதே. இராமருடன் கூடவருகிறவர்களோவெனில், அவர்கள் யாவரும் அம்மகானுடைய உத்தரவின்பேரில் உட்கார்ந்து வருவதால், அவர்களுக்குந் தோஷமில்லை. ஈசுவரனுடைய செயலை யாரால் அறியமுடியும்? இராமச்சந்திரருடைய கதையை இன்னும் சொல்லுகிறேன் கேள். இராமர் திரியம்பக க்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்டு முன் சீதையோடு தாம் சுகமாக நித்திரை செய்த, பர்வதத்துக்குச்சென்று அங்கு மூன்று தினம் வசித்திருந்து அப்பால் சப்த சிருங்கமலைக்குச்சென்றார். பிறகு அகஸ்தியர், சுதீக்ஷ்ணர் இவர்களுடைய ஆசிரமம் சென்றார். இதன் பின் சைலபுரஞ்சென்று அங்கு கிருஷ்ணேசுவரனை நமஸ்கரித்து அங்குள்ள சிவ தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பின் தேவகிரியைத் தரிசித்துவிட்டு விராஜ க்ஷேத்திரமடைந்தார். அங்கே மாதாபுரத்திலிருக்கும் தேவியை வணங்கி அதனருகே யிருக்கும் ஸ்தலங்களைத் தரிசித்து தேவவடத்தில் நரசிம்ம சுவாமியை, சீதாதேவியுடன் நமஸ்கரித்து, பிறகு பயோ

க்ஷணி யென்னும் தீர்த்தத்தில் சகோதரர்களுடன் சாஸ்திரோக்தமாக ஸ்நானஞ்செய்தார். பிறகு தாபி யென்னும் நதியின் உற்பத்தி ஸ்தானத்தில் ஸ்நானஞ்செய்து தமது பெயரால் விளங்கும் இராம பர்வதத்தை யடைந்து, அதனருகே ஓடிக்கொண்டிருக்கும் நருமதையில் ஸ்நானம் செய்து ஓங்காரேசுவரரைப் பூஜித்தார். பிறகு மேற்றிசைச் சென்று அங்குப் பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து, தாபிசாகர சங்கமத்திலும் நர்மதா சங்கத்திலும் மகா நதி தீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்து பிறகு பிரபாஸ க்ஷேத்திரஞ்சென்று அங்கே பஞ்ச சரஸ்வதி நதிகளின் சங்கமத்தில் ஸ்நானஞ் செய்து, இதன் பின் ஸௌராஷ்டிர தேசத்திலிருக்கும் சோமநாதேசுவரரைத் தரிசித்து ஸாப்ரமதி நதியையும் இன்னும் பலதீர்த்தங்களையும் தரிசித்துக்கொண்டு சங்கோத்தார ஸ்தலத்தை யடைந்தார். அப்புறம் கோமதி நதியில் விதிப்படி ஸ்நானஞ் செய்துவிட்டு அநாதி தொடங்கியிருக்கும் முக்திபுரிகளுக்குள் பிரசித்தமாகிய துவாரவதி யென்னும் பட்டணத்துள் பிரவேசித்து, தீர்த்த சிராத்தத்தையும் அநேக தானங்களையும் செய்து, அங்கிருக்கும் பல புண்ணிய தீர்த்தங்களையும் தரிசித்தார். இங்கே மேற்றேச மன்னர்கள் இராமபிரானைத் தரிசித்து கப்பங்களைச் செலுத்தி வணங்கிப் பூஜித்தார்கள். இராகவர் அவர்களுடைய கப்பங்களை ஏற்றுக்கொண்டு அவர்களுடன், ஸரஸ்வதி நதியின் கரை வழியாகச்சென்று, அங்கிருக்கும் பல புண்ணிய ஸ்தலங்களையும் தரிசித்து, அங்கு புஷ்பகவிமானத்தை மெதுவாகச் செலுத்திக்கொண்டே அங்கங்குள்ள விநோதங்களை சீதைக்குக் காண்பித்துக்கொண்டு பல தேச மன்னர்கள் சூழப் புஷ்கர க்ஷேத்திரம் சென்றார். இராமபிரான் தாம் க்ஷேத்திர யாத்திரை செய்யத் தொடங்கிய நாள்முதல் ஒவ்வொருநாளும் கோடிக் கணக்கான பிராமணர்களுக்குத் திவ்யான்ன பாயஸபோஜனஞ் செய்வித்து வந்தார். இஃதன்றி, விமானத்தில் வசித்துவரும் அயோத்தியா பட்டண வாசிகள் கீழ்த்தேச மன்னர்கள் தென் தேச மன்னர்கள் மேற்றேச மன்னர்கள் இவர்களுக்கும் இவர்களுடைய சேனைகளுக்கும் வாகனங்களுக்கும் அன்னம், வஸ்திரம் ஆபரணம் முதலியவைகளை அதிதிகளுக்குக் கொடுப்பது போலவே

அளித்து, மரியாதை செய்து பெருமைப் படுத்தினர். அவர்களும் மனமகிழ்ச்சி யடைந்து பக்தியுடன் சுகமாக வசித்தார்கள். இவ்வளவனந்த கோடிக்கணக்கான ஜனங்களில் ஒருவரேனும் தனியே சமையல் செய்து கொள்வதில்லை. அந்த புஷ்பகவிமானத்தில் புல், விறகு, தீர்த்தம் இவைகளைப் பற்றிய கவலை யாருக்கும் ஏற்படவில்லை. ஏ விஷ்ணுதாஸ! அங்கிருப்பவர்களுக்குப் பசி எப்படியுண்டாகிற தென்பதைப் பற்றிய சிந்தை யொன்றே எனக்குள்ளது. அவர்கள் பசி யெடுக்கச் சாதகமான சூர்ணங்களைக் கொடுக்கத் தக்க வைத்தியர்களையுங் கூடவே வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றெண்ணுகிறேன். இடைவிடாமல் வாத்திய கோஷங்கள் நடந்து வருவதால் நித்திரைக்குமட்டும் எப்பொழுதும் தாரித்திரியம். அந்த விமானத்தில் எந்தப் பாகத்திலும் இரத்ன தீபங்கள் இரவு பகல் இவ்விரண்டின் பேதத்தை யறிய முடியாவண்ணம் இடைவிடாமல் பிரகாசிப்பதால், அங்குள்ள வாரநாரிகள் தங்களுடைய கானம், கண்களின் அபிநயம், வசனங்கள், விளையாட்டுகள் இவைகளில் மயக்க மடைவார்கள். அவர்களுக்கு, விமானம் இரவில் சஞ்சரிக்கிற தென்பதும் பகலில் சஞ்சரிக்கிற தென்பதுங்கூடத் தெரிகிறதில்லை.

இப்படி யிருக்கையில், புஷ்கர க்ஷேத்திர வாசிகள் காதுக்கு இனிமையும் ரம்மியமுமான சப்தங்களைக் கேட்டார்கள்.

இவ்வித சப்தங்களுண்டானதின் விவரம்.

(1) வாரநாரிகளின் தண்டைகள் கங்கணங்கள் காதாடனங்கள் வாய்ப்பாட்டுகள் இவைகளாலுண்டாவது (2) மிருதங்கம் பணவம் முதலாய நவ வாத்தியங்களாலுண்டாது (3) யாத்திரைக்காக வந்திருக்கும் யானைகளின் மணிகளாலுண்டாவது (4) பதாகைகள் அசைவதாலுண்டாவது (5) வாராங்கனைகளின் இடையிலணிந்திருக்கும் கிங்கிணிகளாலுண்டாவது (6) யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், மயில்கள், குரங்குகள் இவைகளால் ஏற்படுவது (7) வீரர்கள் ஆர்ப்பது (8) வேதியர்கள் சிஷ்யர்கள் இவர்களுடைய வேத கோஷங்கள் (9) நடர்கள் வந்திகள் இவர்கள் செய்யும் நடனங்களாலேற்படுவது (10) பசுக்கள், எருமைகள் வெள்ளாடுகள்

இவைகளிலிருந்து பால் கறக்கும் சப்தம் (11) தயிர் கடையுஞ் சப்தம் (12) குழந்தைகளின் ரோதனங்கள் (13) குழந்தைகளைத் தொட்டிலி லிட்டு ஆட்டுவதாலாகும் சங்கிலியின் சப்தம் (14) பேரி, தூரியம் முதலிய வாத்திய கோஷங்கள் (15) மாவரைக்கும் யந்திரம் முதலியவைகளின் சப்தங்கள் (16) நெய்யில் அன்னத்தைப் பக்குவஞ் செய்வதாலுண்டாவது (இது கேசரிபாத் தென்றுசொல்லப்படுவது) (17) நாரதர் முதலிய முனிபுங்கவர்களுடைய வீணை முதலிய வாத்தியங்களாலுண்டாவது (18) புராணங்களை வாசித்து அவைகளின் கதைகளை விவரிப்பதாலுண்டாகும் சப்தம் (19) ஹரிகீர்த்தனத்தால் உண்டவது (20) ஸ்ரீராமஸஹஸ்ர நாமாவளி முதலிய ஸ்தோத்திரங்களின் சப்தம் (21) ஸ்திரீகள் வேலைகள் செய்யுங்காலத்தில் உண்டாகும் கங்கண சப்தம் (22) வேதியர்கள் போஜன சமயத்தில் கால் அலம்புதல் முதலியவைகளால் உண்டாவது—இவைகள் முதலிய இன்னும் பல காரணங்களால் உண்டாகிய பலவித சப்தங்களை புஷ்கரவாசிகள்உதயகாலத்தில் கேட்டு மேற்குத் திசையை நோக்கி ஏதோவென்று பயந்து கலங்கிப் பின்வருமாறு சங்கித்தார்கள். இச்சப்தம் சிவபிரானது இடப வாகனத்தின் கழுத்தில் அணிந்திருக்கும்மணிகளினுடைய தென்று சிலரும், இந்திரன் விமானத்துடன் சொர்க்கம்செல்கிறானென்று சிலரும், ரம்பை முதலான அப்ஸர ஸ்திரீகள் யாவரும் ஆகாசமார்க்கமாக வருகிறார்கள் என்று சிலரும், இது மேகத்தின் சப்தமென்று சிலரும், இது ஐராவதத்தின் சப்தமென்று சிலரும், பிரளயகாலத்தை எதிர்பாராமல் சமுத்திரந் தான் வருகிறதென்று சிலரும், அனுமாருடைய சப்தமென்று சிலரும், கருடனுடைய சப்தமென்று சிலரும், கந்தர்வசிரேஷ்டர்கள் விமானமேறி ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறார்கள் என்று சிலரும், நாக கன்னிகைகள் பாடுகிறார்கள் என்று சிலரும் இப்படிப் பலவிதமாக ஒருவர்க்கொருவர் தர்க்கம் செய்து கொண்டிருக்கையில் அது கிட்ட நெருங்கிற்று. அதைப் புஷ்பகவிமானமென்றும்அதில்இராமபிரான்தமது பரிவாரங்களோடும் அயோத்தியா பட்டண வாசிகளோடும் வருகிறானென்றுங்கண்டு, சந்தோஷ பரிதராஞர்கள். உடனே அவர்கள் தங்கள் உபாயனங்களைச் சேகரித்துக்கொண்டு மன மடங்காத

அன்புடன் ஸ்ரீ ராமபிரானை எதிர்கொண்டுவந்து, அவரை வணங்கித் தாங்கள் கொண்டு வந்த உபாயனங்களைச் சமர்ப்பித்தார்கள். இராகவர் அவைகளைப்பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியடைந்தார். அவர்கள் அம்மகிழ்ச்சியையே தக்க சம்மானமாகக்கொண்டு தங்கள் ஜன்மம் சாபல்யம் பெற்றதாகக் கருதி மகிழ்ந்தார்கள். ஸ்ரீ ராமபிரானும் விமானத்தை விட்டிறங்கி அவ்வேதியர்களை வணங்கி, அவர்களுக்குப் பதில் மரியாதைகளைச் செய்து, அவர்களையும் விமானத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு, அங்குள்ள ஒரு திவ்விய தீர்த்தத்திற்குச் சென்று, ஸசேல ஸ்நானம் செய்து தீர்த்த சிராத்தத்தையும் விதிவத்தாக முடித்து, காசியில் செய்ததைக் காட்டிலும் கோடிமடங்கதிகமான தானங்களைச் செய்து வேதியர்களுக்குத் திரவிய வஸ்திரா பரணம் அன்னம் இவைகளை அவர்கள் விரும்புமளவும் அளித்துச் சந்தோஷமுண்டாக்கினார். பிறகு அவர்களுடைய அனுமதி பெற்று, ஸ்ரீ ராமபிரான் விமானமேறி மறுபடியும் புறப்பட்டார்.

ஸ்ரீ ராமபிரானுடைய மேற்றேச யாத்திரையைக் கூறும்

௮-வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீராமபிரான் புஷ்கர க்ஷேத்திரத்திலிருந்து வடதிசையை நோக்கிப் புறப்பட்டு பர்வததீர்த்தம், ஜ்வாலாமுகி, தப்தை, ஸ்ரீமணிகர்ணிகை முதலிய பல புண்ணிய க்ஷேத்திரங்களையும் தீர்த்தங்களையும் தரிசித்துக்கொண்டு கரதோயாநதியில் ஸ்நானஞ் செய்தார். அதைத்தாண்டிச் செல்வதில் தோஷம் சம்பவிக்குமென்று கேட்டுத் திரும்பிவிட்டார். கர்மநாசாநதியை ஸ்பரிசிப்பதாலும் கரதோயாநதியைத் தாண்டுவதாலும் தண்டகியை நீந்திக் கடப்பதாலும் தான்செய்த தானத்தை வாயிட்டுக்கூறுவதாலும் தர்மத்துக்கு லோபமுண்டாகுமெனவறிக. பிறகு இராமபிரான் தேவபிரயாகத்துக்குச்சென்று அங்கிருந்து அளகநந்தையெனும் நதியின் கரைவழியே பார்த்தமாத்திரத்தில் முத்தியை யளிப்பதான நரநாராயணாசிரமஞ் சென்று, அங்கிருந்து பதரிகாசிரமஞ் சென்று அங்கு கேதாரேசுவரரைத்தரிசித்து, பின் கந்தர்வர்கள் வசிக்கும் இமயகிரிக்குச்சென்று மகாபதத்தின் வழியே மானஸம் என்னும் தடாகத்துக்குப்போய்ச் சேர்ந்தார். அந்தமானஸ ஸரஸிலிருந்தே கங்கை, சரயூ இவ்விரண்டு நதிகளும் உற்பத்தியாயின. அதில் சொர்ணத்தாமரைப் பூக்கள் மலர்கின்றன. அங்கே முகம், கைகால் இந்த அவயவங்கள் சிவந்துள்ள அன்னப்பட்சிகள் முத்துக்களை ஆகாரமாகப் புசித்து ஆயிரக்கணக்காக வசிக்கின்றன. அப்பிரதேசத்தில் ஆச்சரியகரமான ஓர் இடமிருக்கிறது. அங்கே தேவர்கள், கின்னரர்கள் கந்தர்வர்கள் இவர்கள் அப்ஸர ஸ்திரீகளுடன் இராப்பகலாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மானஸ ஸரஸில், இராமபிரான் சீதாதேவியுடன் ஸ்நானஞ் செய்துவிட்டு, அங்கிருந்து பிந்து ஸரஸுக்கு வந்து அங்கு ஸ்நானதானங்களைச் செய்து, அந்த இமயகிரியில் மகாமேருவிலிருக்கும் ஸபைக்கொப்பான பிரமஸபையைப் பார்த்தார். உடனே சீதை முதலிய யாவருடனும் விமானத்திலிருந்து அங்கு இறங்கினார். அவரைக்கண்ட பிரமதேவர் இந்திரன் முதலிய தேவர்களுடன்

வணங்கினார். இராமர் அவரைத்தழுவிக்கொண்டு அவர்கள் யாவருக்கும் தக்கமரியாதை செய்தார். பிரமதேவரும் ஸ்ரீராமபிரானுக்குத் தக்க பூஜைசெய்து அவருக்குத் தமது காமதேனுவையும் அளித்தார். ஸ்ரீராமபிரான் அந்தக் காமதேனுவை விமானத்தில் வைத்துக்கொண்டு, பிரமா இந்திரன் முதலியவர்களையும் கூடவே யழைத்துக்கொண்டு விமானமேறிக் கைலாஸ மலைசென்றார். அக்கைலாஸத்தில் வஸிக்கும் கிரிராஜ பதியாகிய சிவபெருமான், பார்வதியுடன் விருஷபவாஹனாரூடராகி, இராமருக்கு எதிர்கொண்டுவந்தார். தம்மை எதிர்கொண்டுவரும் சிவபெருமானை இராமர் பார்த்து விமானமிருந்திறங்கி, அவரை வணங்கினார். சிவபிரான் இராமபிரானைத் தழுவிக்கொண்டு மகிழ்ந்தார். உமாதேவியும் சீதாதேவியைத் தழுவிக்கொண்டு சந்தனம் பூசி, கோடிசூரிய ப்ரகாசம் பொருந்திய ஆபரணங்கள், திவ்யவஸ்திரங்கள், ஓலைகள், தண்டைகள், கேயூரங்கள், கடகங்கள் இவைகளை யளித்து, கிங்கிணிகள் கட்டின மேகலாபரணத்தைச் சீதையின் இடுப்பில் பூட்டி, தலையில் சிறந்த பூஷணங்களைச் சூட்டி, கழுத்தில் நவரத்னமயமான ஹாரங்களை அணிந்து மகிழ்ந்தாள். ஜனகநந்தினியும் அவ்வாபரணங்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டாள். பிறகு சிவபெருமானும் இராகவனைத் தமது வைபத்துக்குச் சரியாக உபசரித்து, "ஏ இராமா! உமது நாபிகமலத்தில் பிரமதேவர் பிறந்தார். அவரிடத்திலிருந்து ஏகாதச ருத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் உமது பௌத்திரர்கள். அவர்கள் சங்கார அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் சிருஷ்டிஸ்திதிசங்காரம் என்கிற முத்தொழிலுக்கும் மூலகாரணமாகிய உமக்கு இராவணனைக்கொன்றதால், பாபமென்பதேது? அதற்காக நீர் தீர்த்தயாத்திரை செய்துவருவது ஒரு விளையாட்டாக வல்லவா இருக்கின்றது. சுகமாக சீதையுடன் விளையாடும் இந்தவிளையாட்டானது லோகோபகாரமாச் செய்யப்படுகிறதென்பதை யானறிவேன்" என்று அவருடைய சரித்திரத்தைக் கூறிவிட்டு, அவருக்கு க்ஷத்திரம், சாமரம், மஞ்சம், பானபாத்திரம், தங்கமயமான போஜனபாத்திரம், கங்கணங்கள், குண்டலங்கள், தோள்வளைகள் உத்தமமான கிரீடமொன்று இவைகளை யளித்து, அவருடையமார்பில் சிந்தாமணி யொன்றைக்கட்டி, பய

ணப்படுத்தி அனுப்பினர். விதேக புத்திரியாகிய சீதாபிராட்டி இராமபிரானுடைய மார்பில் சிந்தாமணியைக் கண்டதும் சிறிது வெட்கத்துடன் அவரைப்பார்த்து, “ஏ நாதா! சிந்தாமணி உமக்கு, காமதேனு எனக்கு” என்றாள். அதற்கு இராமபிரான் அப்படியே யாகட்டுமென்று கூறிவிட்டு, யாவருடனும் பரமசிவனை வணங்கித் தாம் யாகம்பண்ணப் போவதையும் சூசிப்பித்து, பிறகு அங்கு பிர்மாவை வரவழைத்து ஒரு மாதத்துக்குள் தாம் யாகம் நடத்தப்போவதாயும் தெரிவித்து விட்டு, அங்கிருந்து கங்கைக் கரை வழியே ஹரித்துவாரத்துக்கு வேகமாகச் சென்று, பிறகு குரு க்ஷேத்திரம் இந்திரப்பிரஸ்தம் இவைகளைப் பார்த்துக்கொண்டு பின் ரம்மியமான மதுவனஞ் சென்றார். இதன்பின் பிருந்தா வனம் கோகுலம் இவைகளைப் பார்த்துக்கொண்டு மெதுவாகக் கோவர்த்தனகிரி சென்றார். பிறகு க்ஷிப்ரா நதியின் கரையிலிருக்கும் புண்யகரமான அவந்திகாபுரிக்குச் சென்று அந்த மகா காளேசுவரரை நமஸ்கரித்து, அங்குள்ள தீர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்து அஸ்தினபுரம் வந்தார். அங்கே ஸாகரம் என்னும் பேர்கொண்டு விளங்கும் ஒரு கிணற்றைப்பார்த்துவிட்டு, பிறகு நைமிசாரண்யம் சென்றார். அங்கே கோமதி நதியில் ஸ்நானஞ் செய்து, சூதபுராணிகரையும் சௌனகர்முதலிய முனிவர்களையுந் தரிசித்துப் பூஜித்து, பின் பிர்மவைவர்த்த மென்னும் தடாகத்திலும் தமஸா நதியிலும் ஸ்நானஞ் செய்து பிறகு தமது பட்டணமாகிய அயோத்தியா பட்டணத்தினருகே வந்தார்.

இவ்வாறு ஸ்ரீ ராமபிரான் யாத்திரை செய்துகொண்டு நகரத்தினருகே வருவதைபறிந்த விவேக சீலனாகிய சுமந்திரன் வெகு வேகமாக அயோத்தியா பட்டணத்தை உன்னதமான அநேக துவஜங்கள், பதாகைகள், தோரணங்கள் பூமாலைகள் இவற்றாலலங்கரித்தான். மார்க்கங்களை ஒழுங்குபடுத்தி, சந்தனக்குழம்புகள் தெளித்துக் குளிர்ச்சி செய்தான்; பூமலர்களைப் பொழிந்தான்;மணி தீபங்கள் ஏற்படுத்தினன். பின்பட்டத்துயானையை முன்னிட்டுக் கொண்டு சேனைகள் சூழப் புஷ்பகவிமானத்திலிருக்கும் ஸ்ரீராமபிரானை எதிர்கொண்டு சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து உபா

யனங்களைச் சமர்ப்பித்தான். ஸ்ரீ ராமபிரான் அவ்வுபாயனங்களை யேற்றுக்கொண்டு சுமந்திரனைத் தழுவி மகிழ்ந்தார். சுமந்திரனும் மனமகிழ்ச்சியடைந்து தான் கிருதார்த்தனானதாக எண்ணினன்.

இப்பொழுதும் பற்பல வாத்தியங்கள் முழங்கின. வாரநாரிகள் நர்த்தனம் செய்தனர். வேதியர்கள் வேத கோஷங்கள் செய்தார்கள். இந்த வைபவத்தோடு இராமர் நித்திய கர்மானுஷ்டானத்துக்காக சரயூ நதியில் முன் தாம் ஏற்படுத்தியிருக்கும் புண்ணியகரமான இராமதீர்த்தம் சென்று, அங்கு ஸ்நானம் செய்து வசிஷ்டர் கூறிய விதிப்படி ஓர் உபவாசமிருந்து ததிசிராத்தம் செய்து பிறகு, பல தானங்களைச் செய்தார். பின் மூன்றாவது தினத்தில் விமானமேறி ஆகாச மார்க்கமாக, சொர்ணங்களாலும் இரத்தினங்களாலும் செய்யப்பட்ட பிராகாரங்களைத் தாண்டி, ஒளி பொருந்தியதாயும், கோபுரம் அட்டாலம் இவைகளால் அலங்காரமாகவும், நாற்சந்திப் பாறைகளால் அழகாகவும் விளங்குவதான அயோத்தியாபட்டணத்துக்குட் புகுந்து, அவ்விநோதங்களைப் பார்த்துக்கொண்டு தமது ராஜ சபை வாயிலருகிற்செல்ல, அப்பொழுது விமானமானது பூமியிலிறங்கிச் சுகமாக நின்றது. உடனே சுமந்திரன் முதலியவர்களுடைய மந்திரிபத்னிகள் வெண்கலப் பாத்திரங்களில் பலியன்னத்தையும், தயிர்க்குடம் தீர்த்தக்குடம் இவைகளையும் எடுத்துவந்து, இராமர் சீதை இவ்விருவர்களுடைய சரீரங்களை நூறுதடவைச் சுற்றியிறக்கி, பின் அவைகளை வெகு தூரத்திற் கொண்டுபோய் எறிந்து விட்டு அங்கு ஸ்நானஞ் செய்து நூதனவஸ்திராபரணமணிந்து கொண்டு மறுபடி ஸ்ரீராமபிரானிடம் வந்தார்கள். இதன் பின் இராமர், தமது சகோதரர்கள், நாகர்கள் அரசர்கள் இவர்களுடன் விமானத்திலிருந்து கீழேயிறங்கி, சபைக்குட் பிரவேசித்து, சிம்மாஸனத்தில் வீற்றிருந்து கௌஸ்துப, சிந்தாமணிகளுடன் விளங்கினார். அரசர்களும் ஸ்ரீராமபிரான் உத்தரவின்பேரில் உட்கார்ந்தார்கள். சீதாபிராட்டியும் தனது காமதேனுவை முன்னிட்டுக்கொண்டு நவரத்ன நிர்மிதமான தனது சித்ர கிருகத்தை மகிழ்ச்சியுடன் அடைந்தாள்.

இதன் பின் இராமபிரான் காமதேனுவால் உண்டாக்கப்பட்ட பால், நெய் இவைகளால் பக்குவமான பரமான்னத்தை ஷட்ரஸோபேதமாக வேதியர்களுக்கிட்டுத் திருப்தி செய்வித்தார். பிறகு எல்லா வருணத்தவர்க்கும் போஜனஞ் செய்வித்தார். பிறகு அங்கிருக்கும் அரசர்கள் யாவரையும் புஷ்பக விமானத்தில் படுத்துச் சுகமாக நித்திரை செய்யும்படி ஆக்ஞாபித்து விமானத்துக்கும் இடந்தரும்படி ஆக்ஞாபித்தார். இவ்விதம் அரசர்களை ஐந்து நாள் வரையில் தம்முடன் கூடவே யிருக்கும்படி உத்தரவு செய்து, பிறகு அவர்களுக்கு வஸ்திராபரண பூஷணங்கள், குதிரைகள் இவைகளைக்கொடுத்துச் சந்தோஷமுண்டாக்கினார். அப்போது அஞ்சலியஸ்தர்களாகத் தம் முன்னிலையில் நிற்கும் அரசர்களைப் பார்த்து "அரசர்களே! யாகக் குதிரைபுறப்படப்போகிறது. அதைப் பார்த்தவுடன் நீங்கள் யாவரும் சைன்னியங்களுடனும் பட்டணத்தாருடனும் வரவேண்டிய"தெனக் கட்டளையிட, அது கேட்ட அரசர்கள் அக்கட்டளையை யங்கீகரித்துக்கொண்டு அவரிடம் விடைபெற்றுத் தத்தம் சைன்னியங்களுடன் தங்கள் தங்கள் பட்டணத்துக்குச் சென்றார்கள். பிறகு இராமபிரான் சுக்ரீவாதி வானரசிரேஷ்டர்களைப் பார்த்து யாம் செய்யும் அசுவமேத யாகம் முடிந்தபிறகு பரிவாரங்களுடன் உங்கள் தேசத்துக்கு உங்களை அனுப்பிக்கொடுக்கிறேனென்று சொல்லி, அவர்களுக்குத் தமது அரண்மனைக்குப் பக்கத்தில் வீடுகளை ஏற்படுத்தி வசிக்கச் செய்தார். பிறகு இன்று முதல் நமது பட்டணத்தில் வசிப்பவர்களும் அதிதிகளும் நாம் இந்த பூமியில் சீதையுடனிருந்துஇராஜ்ய பரிபாலனம் நடத்தும் வரையில் தனியே சமையல் செய்யக்கூடாது. சுயம்பாக விருத மனுஷ்டித்து வரும் பிராமணோத்தமர்கள் மட்டில், எனது நிர்ப்பந்தமின்றி அவரவர் கிருகத்தில் சுகமாகப் பாகம் செய்து வரட்டும்:—என்று பறையறைவிக்கும்படி ஆக்ஞாபித்துச், சீதையுடன் சுகமாக விருந்தார். அயோத்தியா பட்டணத்தில் வீடுகள் தோறும் வேத கோஷமும் மங்கள வாத்தியங்களும் மகோத்ஸவங்களும் நடந்து வந்தன. இவ்விதம் அயோத்தியா பட்டணம் என்று மடையாத மகிழ்ச்சியை யடைந்திருந்தது.

ஏ சிஷ்ய! இவ்வாறு இராமபிரானுடைய யாத்திரா காண்டத்தை உனக்குக் கூறினேன். இதைப்பக்தியுடன் கேட்கும் மனிதர்கள் இந்த யாத்திரையின் பலனைப்பெறுவார்கள். மேலும், யாத்திரை, திரவிய மீட்டல், உத்தியோகஞ் செய்தல் முதலிய இவைகளை விரும்புகிறவர்கள் இந்த யாத்திரா காண்டத்தைப் படித்தால் அவர்கள் இச்சித்த பலனைச் சுகமாகப் பெறுவார்கள். ஒருவன் பிரமஹத்தி யாதிமாகா பாபங்களை ஒருதரம் செய்வானேயாகில், அவன் இந்த யாத்திராகாண்டத்தைப் படித்தால் பாபங்களொழிந்துபரிசுத்தனுவான்; இதைக்கேட்பவர் பூலோகத்திலுள்ள சர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்த பலனைப் பெறுவார்கள். இந்த யாத்திரா காண்டத்தைக் கேட்பதால் தனத்தை விரும்புகிறவர்கள் தனத்தையும் காமங்களை விரும்புகிறவர்கள் காமங்களையும் அடைவார்கள். பாபம் செய்தவன் பாபத்தினின்று உடனே விடுபடுவன். ஒருவன் காலையிலெழுந்து விதிப்படி சௌசாதிகளைச் செய்துகொண்டு ஆந்ஹியங்களை முடித்த பிறகு தீர்த்தங்கள் யாவற்றுக்கும் சிரேஷ்டமாகிய இந்த யாத்திரா காண்டத்தைப் படிப்பானேயாகில், ஸ்ரீராமபிரான் சந்துஷ்டராகி, அவனது கோரிக்கைகள் யாவற்றையும் பூர்த்தி செய்வதுமன்றி, சமஸ்த தீர்த்த ஸ்நான பலனையும் கொடுப்பார். இப்பிறப்பிலும் முற்பிறப்புகளிலும் செய்த பாபங்கள் முழுதும் யாத்திரா காண்டத்தைக் கேட்பதால் ஒழியும். இதில் ஐயமில்லை.

இராமபிரான் உத்தர யாத்திரை செய்து
அயோத்தியா நகரம் பிரவேசித்ததைக் கூறும்
9-வது சருக்கம்
முற்றிற்று.

யாககாண்டம்.

1-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீராமபிரான் ஒருதருணம் சபையில் வீற்றிருந்து தமது குரு வசிஷ்டரைப்பார்த்து, கும்போதர முனிவருடைய சொற்படி தீர்த்தயாத்திரையைச்செய்துமுடித்தேன். இனியவர் கூறிய அசுவமேதயாகத்தை யான் செய்யவேண்டும். யாகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகளைச் சேகரிக்கும்படி இலட்சுமணனுக்குக் கட்டளையிடுங்கள். செவி, பாதம், வால் இந்த அவயவங்கள் கறுத்த ஒரு சிரேஷ்டமான குதிரையை, திவ்யவஸ்திர முதலியவைகளால் அலங்கரித்து சுபலக்நத்தில், சுபமுகூர்த்தத்தில், பூப்பிரதக்ஷிணத்திற்காக விடவேண்டும். சத்ருக்னன் பதினாயிரக்கணக்கான சேனைகள்சூழச் சுமந்திரனுடன் அதன் பிறகே செல்லவேண்டுமென்றார்.

இதைக்கேட்டதும் வசிஷ்டர் சோதிடர்களை வைத்துக்கொண்டு சுபமானதும் க்ஷேமாபிவிருத்தியைத் தருவதுமான ஒரு முகூர்த்தத்தை நிச்சயஞ்செய்து, இராமபிரான் சந்நிதியில் இலட்சுமணனைப்பார்த்து, "ஏ சௌமித்ரே! இன்றைக்கு ஏழாவது தினத்தில் ஸ்ரீராமபிரான் அசுவமேதயாகஞ் செய்யத் தொடங்குகிறார். இராம தீர்த்தக்கரையில் யக்ஞ பூமி ஏற்படவேண்டும்; ஆதலால் வேதியர்களை வைத்துக்கொண்டு அவ்விடத்தை சொர்ணக் கலப்பையால் உழுது சீக்கிரம் ஒழுங்குபடுத்தவேண்டும். அயோத்தியா பட்டணத்தைச் சுற்றிலும் இருபது மைல் விஸ்தீரணத்துக்கு கல்முள் மேடு பள்ள மில்லாமல் ஒழுங்குபடுத்தி சந்தனக் குழம்புகளால் மெழுகி, அவ்விடமுழுதும் இடைவிடாமல் பந்தல் போட்டு பெரிய மண்டபமாக்கவேண்டியது. அப்பந்தலில், நாகக்கிளைகள், மாங்கிளைகள், அதன் தளிர்கள், பூக்கள் இவைகளால் தோரணங்கள் விசித்திரமாகக் கட்டிச் சுற்றிலும் வாழைமரங்களை நாட்டவேண்டும்; இன்னும் பூமாலைகள் பலவிதமான பழக்குலைகள் இவைகளையும் கட்டி அலங்கரிக்கவேண்டும். ஆயிரக்கணக்கான வேதிகைகளைச் சுண்ணாம்பு, செங்கல்களைக்கொ

ண்டு கட்டவேண்டும். தவிர என்முன்பாக ஒரு அழகான மண் குண்டம் ஏற்படுத்தவேண்டும். அக்குண்டத்தின் மேல் கருங்காலிமரத்தால் மனோரம்மியமான கோமுகம் ஒன்று ஏற்படுத்தவேண்டும்' வெள்ளை, கறுப்பு, நீலம், மஞ்சள், இந்த நிறமுள்ள கோலக்கற்களைப் பொடி செய்து, அவைகளால், சுவஸ்திகம், கமலம், அஷ்டதளம், சங்கம், சக்ரம், கதை, பத்மம் பூக்கள் முதலிய பலவிதக் கோலங்களை ஆயிரக்கணக்காக வரையும்படி செய்து யக்ஞ பூமி முழுமையும் அலங்கரிக்கவேண்டும். பின்னும் 24யக்ஞ ஸ்தம்பங்களை சொர்ணத்தால் மிக உன்னதமாகச் செய்து முத்து மாலைகளா லலங்கரித்து, அங்கங்கே நாட்டவேண்டும். இதுவன்றி சர்வதோபத்ரம் என்னும் ஒரு குண்டமுண்டாக்கி, அதன் நடுவில். அசுவதேவதா சொரூபத்தை வரைந்து அக்குண்டத்தின் மேல் பல வர்ணப்பொடிகளால் விசித்ரமாகக் கோலமிட்டு அலங்கரிக்கவேண்டும். யக்ஞத்துக்காக வேண்டிய பாத்திரங்கள் முழுமையும் செய்து எனக்குக் காண்பிக்கவேண்டும். வருணனுடைய யாகத்தில் நடந்தது போல உபகரணங்களைச் சொர்ணத்தாலேயே செய்யவேண்டியது. முனிவர்கள் உட்காருவதற்கும் நித்திரை செய்வதற்கும் ஆயிரக்கணக்கான ஆசனங்க ளமைக்க வேண்டும். கூடாரங்களைப்பதினாயிரக்கணக்காகஏற்படுத்தவேண்டும். புற்களாலும் இலைகளாலும் துணிகளாலும் கிருகங்களை ஏற்படுத்தவேண்டும். பாகசாலைகள் போஜனசாலைகள், ரிஷிசாலைகள், ஸ்திரீசாலைகள் இவைகளைத் தக்கவாறு ஏற்படுத்தவேண்டும் யக்ஞோபகரணங்களை வைப்பதற்காக யக்ஞசாலையினருகே சுந்தரமான ஒரு சாலை ஏற்படுத்தவேண்டும். அரசர்கள் சுகமாகக் கூடியிருக்கும் படியான சபைகள் ஏற்படுத்தி அவைகளின் மேல் வஸ்திரங் கட்டி அலங்காரம் பண்ண வேண்டும். அவர்கள் உட்காருவதற்காக, விஸ்தாரமான கம்பளங்களைத் திண்டு தலையணைகளுடன் விரிக்க வேண்டும். அத்திண்டு தலையணைகள் பட்சிகளின் அடி இறகுகளாலும் பஞ்சுகளாலும் செய்யப்பட்டு மெதுவாகவிருக்க வேண்டும். ஏ இலட்சுமணா! விசித்ரமும் விலையுயர்ந்ததுமான பெரிய பெரிய திண்டுகளைச் சபையில் சித்தப்படுத்தவேண்டும். தாக சமனத்துக்காக, நன்றாய்ப் பழுத்த பழங்கள், சுகந்தத்ரவி

யங்கள், இனிப்பும் வாசனையுமுள்ள மதுவர்க்கங்கள், போஜன வஸ்துக்கள் இவைகளை அநேக பாத்திரங்களில் சித்தப்படுத்த வேண்டியது. சுகந்த திராவகங்கள் கலந்த சந்தனத்தை அநேகமான கண்ணாடிப் பாத்திரங்களில் நிறைத்து வைக்கவேண்டும். சகல சாமக்ரிகளடங்கிய தாம்பூலபாத்திரங்களைச் சேகரித்து வைக்கவேண்டும். பலவிதமான கண்ணாடிகள், அரசர்கள் விளையாடுவதற்குரிய கருவிகள் இவைகளை விசித்திரமாகச் சேகரித்து வைக்கவேண்டும். மண்பாத்திரங்களில் அநேகவிதமான புஷ்பச்செடிகளும் அதற்கு வேண்டிய ஜலயந்திரங்களையும் ஏற்படுத்த வேண்டியது. சொர்ணம், முத்து, பவளம், வர்ணத்துணிகள் இவைகளைக்கொண்டு அழகிய பஞ்சரங்களைச் செய்து அவைகளில், இனிமையான குரலுடைய விசித்ரமான அநேக பக்ஷிகளை அடைத்து யாகப் பந்தல்களில் எங்குங் கட்டித் தொங்கவிட்டு அப்பறவைகளுக்குக்காலந்தவறாமல் ஆகாராதிகளைக்கொடுத்துப் பாதுகாத்து வரச் செய்யவேண்டும். அதில் தூபங்கள் ஏற்படுத்தி எங்கும் வாசனை வீசும்படி செய்யவேண்டியது. பாடகர்கள் ஆங்காங்கு நின்று பாடவேண்டியது. அப்ஸரஸ்திரீகள் நர்த்தனஞ் செய்யவேண்டும். பலவிதமான வாத்தியங்கள் சதாகாலமும் முழங்கி வரவேண்டும். பின்னும் பூஜைக்கு வேண்டிய உபகரணங்கள் நிறைந்த பாத்திரங்கள் தனித்தனியாகச் சபையில் வைத்திருக்கவேண்டும். முனிவர்களின் சபையில் தர்ப்பங்கள் சமித்துக்கள், தண்டகமண்டலங்கள், கௌபீனங்கள், வல்கலங்கள், மான்தோல்கள், கிருஷ்ணாஜினங்கள், பூஜா திரவியங்கள் ஹவ்யங்கள், ஜல கும்பங்கள். சௌசத்திற்காக சுத்தமான மண்கள், பல் குச்சிகள், பாதுகைகள், முகசுத்திக்காகும் மலைமண்கள் இவைகளனைத்தும் சித்தமாயிருக்க வேண்டும். இவ்விதமே ஸ்திரீகள் சபையிலும் சௌபாக்கியத் திரவியங்கள் (குங்குமம்) சுகந்தங்கள் இவைகள் நிறைக்கப்பட்ட பூஜா பாத்திரங்கள், விசித்திரமான வாயனங்கள் இவைகளையும் சித்தப்படுத்த வேண்டும். சவரிகள் கண்மைச் சிமிழ்கள் பிரகாசமான பூஷணப்பெட்டிகள் மஞ்சள் முதலிய சோபனத்திரவியங்கள், ரவிக்கைகள், ஆடைகள், விசிறிகள் இவைகள் யாவற்றையுஞ் சேகரித்து வைக்க

வேண்டும். சிநேகிதர்கள் யாவருக்கும் பத்திரிகைகள் எழுதி இராமபிரான் முத்திரையுடன் அனுப்பவேண்டும். ஜனக மகா ராஜன் கேகய மகாராஜன் கோஸல மகாராஜன் சுமித்திரையின் தந்தை இவர்களுக்கும் மகாவேகமுள்ள தூதர்களை இன்றே அனுப்பவேண்டும்.

மேற்கூறிய அங்க அடையாளமுள்ள அசுவமேதக் குதிரையை விலைபெற்ற ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் சாமரங்களாலும் அலங்கரித்து, திவ்ய வீராஸனமமைத்து, சொர்ணச் சங்கிலிகள் கட்டி வேணி பூஷணங்களையும் பூட்ட வேண்டும் ஒரு பெரிய விசாலமான தங்கப்பட்டத்தில்,

கோஸலேந்த்³ரஸ்ய ராமஸ்ய யஜ்ஞார்த²ம் மோசிதோ ஹய: ।
ஜேதும் விஶ்வம் ந்ருபைர்பு⁴க்தாம் க்ஷ்மாம் ஸமஸ்தாம் ப்ரத³க்ஷிணம் ॥

யஸ்யாஸ்தி ஸாரம் தேனாஸௌ ப³த்⁴னீயாத்³ஹயோத்தம: ।
நோசேத் கோஶாம்ஸ்த்யக்த்வா நஜாநுஹி பாத³ஸஹஸ்ரத்ய பரேஶஹ ॥

ஸகுடும்ப³ம் ஸபௌரைர்மஸ்ய ததா² ஜானபதை³ஸ்ஸஹ ।
ஆக³ந்தவ்யம் ந்ருபதிபி⁴: யஜ்ஞாஜ்ஞாஶானுவர்திபி⁴: ॥
யஜ்ஞஸம்பா⁴ரயோக்³யானி யானி வஸ்தூனி ஸந்தி தே ।

இக்குதிரையானது கோஸலேந்திரராகிய ஸ்ரீராமருடையது, அஸ்வமேதயாக நிமித்தம் பூப் பிரதக்ஷிணம் செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இதை அரசர்கள் யாவரும் அறியத்தக்கது. பலமுள்ளவன் இந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டலாம். இல்லாவிடில் அரசர்கள் யாவரும் அவரவர் பொக்கிஷங்களை எடுத்துக் கொண்டு தங்கள் தங்கள் சைனியங்களுடனும் குடும்பங்களுடனும், பட்டணத்தாருடனும் தேசத்தாருடனும் புறப்பட்டு யாக அசுவத்துடன் கூடவே வந்து நடுவில் யுத்தத்துக்கு வரும் சர்விஷ்டர்களை ஜயித்து யாக பூமிக்கு வரவேண்டியது என்று— இவ்விதம் ஸ்பஷ்டமாக எழுதி அப்பட்டத்தைச் சுற்றிலும் முத்து மாலைகளா லலங்கரித்து, குதிரையின் நெற்றியிற்கட்டித்

தலையலங்காரங்களையுஞ்செய்துமண்டபத்தில்சித்தமாகக்கொண்டு வந்துநிறுத்தவேண்டும். அதனருகில் சத்ருக்னன்தனது சைன்னியங்கள் சூழ இரதமேறி சுமந்திரனுடன் இவ்வசுவத்தைப் பாதுகாக்கச் சித்தமாயிருக்க வேண்டும். சத்ருக்னனைக் கொண்டு ஆயிரக்கணக்கான நானாவித புண்ணிய தீர்த்த கும்பங்களையும், பல தேச மண்களையும் வரவழைக்க வேண்டும். அயோத்தியா பட்டணத்தைப் பதாகை தோரணம் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும். தேவாலயங்களிலும் அரச உப்பரிக்கைகளிலும் சுண்ணும்பு பூசிப் பிரகாசப்படுத்த வேண்டும். தேவாலயங்களுக்குள் மனோகரமான சித்ரசாலைகள் ஏற்படுத்தவேண்டும். தவிர அங்கு எப்பொழுதும் பிரகாசம் குன்றாதிருக்கும் இரத்ன தீபங்களையும் வைக்க வேண்டும். தேவாலயங்கள் முழுவதும் பூஜோபகரணங்கள் சேகரித்து வைக்கவேண்டும் அங்குச்சகலவாத்தியங்களும் முழங்கும்படி உத்தரவு செய்யவேண்டும் இராஜமார்க்கங்களைப் பரிசோதித்து அவைகளில் சந்தனக் குழம்புகளைத் தெளித்து குளிர்ச்சியுண்டாக்க வேண்டும். மேன்மாடிகளில் எங்கும் பலவித சித்ரங்கள் எழுதி முத்து மாலைகள் பவளமாலைகள் வைடூரிய மாலைகள், காஷ்மீர ஸ்படிக மாலைகள், பலவித புஷ்ப மாலைகள் இவைகளைக் கட்டி அழகு செய்ய வேண்டும். இவ்விதமே சாளர வாயில்களும் அலங்கரித்திருக்கவேண்டும்—இவ்விதம் யான் சொன்னபடி முழுவதையும் சங்கோசங் கொள்ளாமல் செய்து முடி யென்று கட்டளை யிட்டார்.

இப்படிப் பரம குருவாகிய வசிஷ்டர் கூறியதைக் கேட்ட இலட்சுமணர் நல்லது அப்படியே செய்கிறேன் என்று அங்கீகரித்துக்கொண்டு, அவர் சொன்னதற்கு நூறு மடங்கு அதிகமாகச் செய்தார்.

அசுவமேதயாக உபகரணங்களைக் குறிக்கும்

முதலாவது சருக்கம்.

(முற்றிற்று)

2-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஏ விஷ்ணுதாஸ! பிறகு ஸ்ரீ ராமபிரான் ஏழாவது தினமாகிய முகூர்த்த தினத்தில் சீதையுடன் ஆசனத்திலுட்கார்ந்து வெண்ணெய்ப்பூச்சு முதலியவைகளோடு மங்கள ஸ்நானஞ் செய்து, கண்ணில் மை தீட்டிக்கொண்டு, தூரியவாத்தியம் முழங்க வேதியர்கள் விசேஷமாக வேதகோஷஞ் செய்ய, பட்டணத்து ஸ்திரீகள் இனிமையாகப்பாடி, ஜபசப்தம் செய்து வரப் புறப்பட்டு, மண்டபஞ் சென்று சித்ராஸனத்தில் வீற்றிருந்தார்.

இச்சமயம் தமது குருவுக்கும் அவரது பத்னி அருந்ததியம்மாளுக்கும் திவ்யமான வெண்பட்டுகளை அளித்து, பிறகுபட்டணத்தார், அவர்களுடைய மனைவிமார்கள் சுமங்கலிகளாகிய அவர்களுடைய தாய்மார்க்ள், வேதியர்கள் மாமிமார்கள் மித்திரர்கள் இவர்களுக்கு திவ்ய வஸ்திரங்களை யளித்து, பிறகு ஜனகர், லட்சுமணர் முதலிய சகோதரர்கள் அவர்களுடைய பத்தினிகள் இவர்களுக்கும் நூதன வஸ்திரங்களளித்து, பின் மந்திரிகள், வீரர்கள் தாஸதாஸிகள், கடர்கள், நடகர்கள், வந்திமாகதர்கள், வார நாரிகள் இவர்களுக்கும், பிறகு சண்டாளன் வரையில் யாவருக்கும் நூதன வஸ்திரங்களை யளித்தார். சொர்ணச்சரிகையால் செய்து, முத்துமாணிக்கங்கள் கோர்த்து, இபத்நம் காஷ்மீர நீலம் இவைகளால் நடுவில் அநேக சித்ரமெழுதி, முத்து பவளம் கோமேதகம் முதலியவைகளால் நான்கு பக்கங்களிலும் கரைகட்டிக் கண்ணாடியைப்போல் பிரதிபிம்பந் தோன்றத் தக்கதாயும் மின்னல் போல் பிரகாசம் வீசத்தக்கதுமான பட்டு வஸ்திரத்தைச் சீதாபிராட்டிக்குக் கொடுத்தார். பிறகு இராமச் சந்திரர் உத்தமமான சொர்ணச்சரிகையால் கரைகளமைத்து, கொடி, மலர் இவைகள் போன்ற சித்ரம் வரையப்பட்ட வெண்பட்டைத் தாமுடுத்துக்கொண்டு அவ்விதமான உத்தரீயத்தையும் அணிந்துகொண்டார். பின் எல்லா அவயவங்களிலும் அததற்குரிய ஆபரணங்களை யணிந்துகொண்டு கௌஸ்துப, சிந்தாமணிகளையும்

கேயூரம் குண்டலம் முத்தாரம் கடகம் இவைகளையும் அணிந்துகொண்டு விளங்கினார். பிறகு ஆசாரிய சிரேஷ்டராகிய வசிஷ்ட முனிவர் இவ்வாறு திவ்யாலங்கார பூஷிதாராக விளங்கும் இராமபிரானை முத்துமயமான சௌஸ்திகாசனத்தின் மேல் வீற்றிருக்கச்செய்து, தமது சிஷ்யவர்க்கத்தாரில் பாலர்களை யனுப்பி, சீதாபிராட்டியை வரவழைத்து ஸ்ரீ ராமபிரானது இடது பாகத்திலுட்கார வைத்துத் தாம் பல முனிவர்கள் சூழ அவர் பக்கமிருந்து, ஸ்ரீ ராமபிரானைக்கொண்டு விக்நேசுவர பூஜை செய்வித்தார். பிறகு புண்ணியாகம் முதலிய மூன்று செய்கைகளையுஞ் செய்வித்து ஸீதாராமதம்பதிக்குத் தீக்ஷைசெய்வித்தார். துவஜாரோப விதானப்படி துவஜங்களை நாட்டி, ஸ்ரீராமபிரானைக் கொண்டு சகலகர்ம விக்ஞாதாவாகிய வசிஷ்ட முனிவர்தம்மை "அத்வர்யூ" வாகவும், சதுர்முகபிர்மாவை "பிர்மாவாகவும்" விசுவாமித்திரரை "ஹோதாவாகவும்" ஜனகராஜருடைய குருவாகியசதாநந்தரை "உத்காதா" வாகவும் தர்மராஜரை "சமிதா" வாகவும் கசியபர் முதலியோரை மிருதியான இன்னும் பதினொரு ரித்விக்குகளாகவும் வரித்தார். இவ்விதம் இந்த அசுவமேதயாகத்துப் பதினாறு முனிசிரேஷ்டர்களை பதினாறு ரித்விக்குகளாக வரிக்கும்படி செய்தார். இன்னும் மற்ற கர்மங்களைச் செய்ய நூற்றுக் கணக்கான முனிவர்களைத் தனித்தனியே வரிக்கும்படிசெய்தார். பிறகு குண்டத்தில் அக்னி ஸ்தாபனஞ் செய்து, அதனருகே விஸ்தாரமாக யக்ஞபாத்திரங்களை வைக்கச்செய்தார். பிறகு அசுவமேதக் குதிரைக்கு விதிப்படி பூஜை செய்வித்து, பூலோகத்தில் ஸய்யபிரதக்ஷிணம் செய்து வர அனுப்பினார். அதனைப் பின்தொடர்ந்து காத்துவர, சத்ருக்னனைச் சுமந்திரனுடனும் சேனைகளுடனும் இரதாரோகணஞ் செய்வித்து அனுப்பினார். பிறகு வசிஷ்ட முனிவரும் வைதிகர்களுடன் ஏகமாக விருந்தார். இராமபிரானும் சரயூ நதிக்கரையில் முனிகணங்கள் நிறைந்த யக்ஞகுண்டத்தினருகில் கிருஷ்ணாஜினம் தரித்துக் குசத்தைக் கரத்தில்வைத்துக்கொண்டு அமரிக்கையாயிருந்து புராணபடனத்தைச் செய்வித்து அதன் கதைகளைச் சீதையுடன் கேட்டுக்கொண்டு வசிஷ்டாதி முனிவர்கள் ஸந்நிதியில் கோடிய சூரியப்பிரகாசம் பொருந்தியவராய் விளங்கினார்.

இராமபிரான் தீக்ஷை பெற்றிருக்கும்போது சகோதரர்கள் வஸ்திரமுடுத்துக்கொண்டு புஷ்கரமாலைமுதலிய அலங்காரஞ் செய்துகொண்டிருந்தார்கள், அவர்களும் அவர்கள் மனைவிகளும் ஸ்நானஞ் செய்து உத்தமமான ஆடைதரித்து, வாசனைச்சந்தனங்கள் பூசி மங்களவஸ்துக்களைக் கையில் வைத்துக்கொண்டு கழுத்தில் தங்கக்காசு மாலைகள் பிரகாசிக்கதீக்ஷாசாலைக்கு வந்தமர்ந்தார்கள். அத்தருணம் சகல மங்கள வாத்தியங்களும் முழங்கின. வாரநாரிகள் நர்த்தனஞ் செய்தனர்.

இவ்விதம் ஸ்ரீராமபிரான் அசுவமேத யாகஞ் செய்ய ஆரம்பித்திருப்பதை அவ்வப்போது கேட்டுவந்த முனி சிரேஷ்டர்களிற் சிலர் யாகசாலையை யடைந்தார்கள், அவர்கள் யாவரெனில், கசியபர், அத்திரி, பாரத்துவாஜர், விசுவாமித்திரர், கௌதமர், மார்கண்டேயர்' மிருகண்டர், சியவனர், முத்கலர் அசிதர், ஜாமதக்னியர், தேவலர், வியாஸர், நாராயணர், கிரது, விபண்டகர், நாரதர், தும்புரு, காலவர், சிவதாஸர், பானுதாஸர், ஹரிதாஸர், மகாதயாஸ், சிவவர்மா, ருத்ரவர்மா, ஏக சிருங்கர், சதுசிருங்கர், திரிசிருங்கர் திலபாண்டர், பிருகு, பார்க்கவர், வாக்பதி, சௌம்மியர், கண்வர், ஏகபாதர், திரிபாதர், ஊர்த்வபாத, ஊர்த்வபாதர், ஊர்த்வ நேத்திரர், ஊர்த்துவமுகர், திரிசிரஸ், விருத்த கௌமதர், பர்ணுதர், நிசாகரர், ருசிபசிருங்கர், மதங்கர், ஜாபாலி, கும்பசம்பவர், ததீசி, சௌனகர், சூதர், சுதீக்ஷ்ணர், லோமசர், வான்மீகி, துர்வாசஸ், வேதநிதி இவர்களும் இவர்களுடைய பத்னிகள், சிஷ்யர்கள் இன்னும் சில முனிவர்களுமேயாம். இம்முனிவர்களிற் சிலர்பர்ணாசிகள் (சருகைப்புசிப்பவர்கள்) சிலர் வாதாசிகள் (வாயுபட்சணஞ்செய்பவர்கள்) சிலர் குசாக்ர ஜலபாயிகள் (குசத்தின் நுனியிலிருந்து விழும் ஜலத்தைக் குடிப்பவர்கள்) சிலர் அனசனர்கள் (அன்னம் புசியாதவர்கள்) சிலர் பிக்ஷாசனர்கள் (பிக்ஷையெடுத்துண்பவர்கள்) இன்னும் சிலர் பரதத்தாசனர்கள்(பிறர்கொடுக்கும் அன்னத்னத யுண்பவர்கள். இவர்களுக்குஅயாக்ஞாவிரர்கள் என்று பெயர் கூறுவதுண்டு. பசிக்காகப் பிறரை யாசியாதவர்கள். சிலர் நியக்த சம்பாஷணர்கள். (வாய்பேசாதவர்கள்) சிலர் வல்கலதாரிகள்

மரவுரி தரிப்பவர்கள் சிலர். காஷாயதாரிகள் சிலர். கிருஷ்ணாஜின தாரிகள் சிலர். ஆகாசவஸ்திரதாரிகள் (நிர்வாணர்கள்) சிலர். விருக்ஷ பல்லவதாரிகள் (மரங்களிலுள்ள பெரிய இலைகளை தரித்துக் கொள்ளுகிறவர்கள்,) சிலர். பஞ்சாக்னிஸாதகர்கள், (காருகபத்திய ம் ஆஹவநீயம் தக்ஷிணாக்நி ஸப்யம் அவஸத்தியம்முதலிய ஐந்து அக்நி உபாசகர்கள்) சிலர். ஹோமதூம பானவிரதிகள் (ஹோமப் புகையை உண்பவர்கள்,) சிலர். த்யக்தேஷணர் (மண் பொன் பொருள் இவைகளின் பற்றுதலையொழித்தவர்கள்) சிலர். இப்படிப்பட்டவர்களன்றிப் பலவிதமான வனம் தோட்டம் மலை துர்க்கம் யாவருஞ் செல்லக்கூடாத அரண்) ஆசிரமம் இவைகளில் வசிப்பவர்களும் தங்கள் பத்தினிகளுடனும் சிஷ்யர்களுடனும் வந்து சேர்ந்தார்கள். இவ்விதம் ஸ்ரீராமபிரானுடைய அசுவமேதயாகவைபத்தைப் பார்க்க ஆவல் கொண்டு பத்துத்திசைகளிலிருந்தும் நாள்தோறும் கோடிக்கணக்காக முனிசிரேஷ்டர்கள் யக்ஞமண்டபத்துக்கு வந்துகொண்டிருந்தார்கள்.

ஸ்ரீராமபிரான் எழுந்திருந்து அவர்களுக்கு ஆசனமளித்து மதுபர்க்கம் முதலியவைகளால் பக்தியுடன் பூஜித்து சந்தோஷப் படுத்தினார். அக்கருணத்தில் ஸ்ரீராமபிரான் யக்ஞ மண்டபத்துக்குக் காமதேனுவை வரவழைத்து அதை விதிப்படி வஸ்திராபரணம் முதலியவைகளால் பூஜித்து கொம்புகளுக்குத் தங்கத் தொப்பிகள் கட்டி அவைகளில் சிறு மணிகளைத் தொங்கவிட்டு பாதங்களுக்குத் தங்கத்தண்டைகள் பூண்டு அதை வணங்கி "ஏ, சாகர சம்பூதே! ஏ தேனுவே! ஜகதம்பிகையே! யான் ஆரம்பித்திருக்கும் அசுவமேதயாகத்திற்கு வந்திருக்கும் முனிவர்கள் வேதியர்கள் முதலிய பல ஜனங்களுக்கும் திவ்யான்னபானங்களை அளித்து அவர்களைத் திருப்தி செய்துவைப்பது உன்கடமை" யெனப் பிரார்த்தித்தார். பிறகு யாகசாலைக்குக் கொண்டுபோய் அங்கே பட்டுமயமான ஒரு மெத்தையைவிரித்து அதனருகிற்கட்டினார். இப்பொழுது காமதேனுவானது சந்தோஷமடைந்து ஜானகிக்கு பக்தியுடன் ஷட்ரஸோபேதமான போஜனத்தை விரும்பிய போதெல்லாம் அளித்து வந்தது. இந்த அசுவமேத யாகத்தின்

பாகசாலையில் அக்கினிபயமே கிடையாது. முனிவராதியர்கள் யாவரும் அவரவர்கள் விரும்பியபடி விரும்பிய போதெல்லாம் போஜனம் செய்து திருப்தியடைந்தார்கள். இராமபிரான் சிந்திக்குமனைத்தையும் கௌஸ்துபம், சிந்தாமணி இவ்விரண்டும் அவ்வப்பொழுது அளித்து வந்தன. சீதாபிராட்டி சிந்திப்பவைகள் திரிலோகங்களில் கிடைப்பதற் கரிதாயினும் அவ்வப்பொழுது காமதேனுவானது கொடுத்து வந்தது.

இவ்வாறு யாதொரு குறைவுமின்றி, காமதேனு கொடுக்கும் பற்பல விதமான திவ்யான்னபாயஸம் முதலியவைகளையும் லோகோத்ரமான பக்ஷியவர்க்கங்களையும் ஷட்ரஸோபேதமாக, யாகமண்டபத்தில் பந்தி பந்தியாக வீற்றிருக்கும் வேதியர்களுக்குச் சீதையும் ரிஷி பத்தினிகளும் சந்தோஷத்துடன் எடுத்து திருப்தியாகப் பரிமாறினார்கள். இப்படி அம்மாதர்கள் பரிமாறுங் காலத்தில் அவர்கள் கரங்களில் அணிந்திருந்த கங்கணங்களின் சப்தங்கள் செவிக்கினிமையாகக் கேட்டன. பிறகு ஸ்ரீ ராமபிரான் லட்சுமணனை யழைத்து "ஏ ஸௌமித்ரே! வானபிரஸ்தர்கள் சன்னியாசிகள், பிரமசாரிகள், கிருகஸ்தர்கள் இவர்களில் யாவர் நமது யாகமண்டபத்துக்குள் வந்தபோதிலும் அவர்களை ஒருவரும் தடுக்கக் கூடாது. சிறிதும் அவர்கள் பேரில் கோபங்கொள்ளக் கூடாது. அவர்களை உள்ளே விடுவதற்காக எனது ஆக்ஞையையும் நீங்கள் கவனிக்கவேண்டியதில்லை. இவைகளனைத்தையும் தலைவாசற் காவற்காரர்களை வரவழைத்துக் கூறு. அவ்விதம் செய்து வரக் கட்டளையிடு" என்றார். இராமபிரானுடைய இப்படிப்பட்ட கட்டளையைக் கேட்ட இலட்சுமணர் 'உடனே காவலாளரை யழைத்து "ஏ சுமித்ரானந்தன! பிரமசாரிகள், கிருகஸ்தர்கள், வானப்பிரஸ்தர்கள், யதிகள் இவர்களைச் சேர்ந்தவர்கள், சிஷ்யர்கள் குழந்தைகள், பத்தினிகள், பட்டணத்தார், இவர்கள் பந்துக்கள், தாஸிதாஸர்கள் இவர்களுக்குள் யாரார் எதை விரும்புகிறார்களோ அவைகளை எனது ஆக்ஞையை எதிர்பாராமலும் கொடுத்துவர வேண்டும். சண்டாளஜாதி பரியந்தம்

எல்லாருடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றி அவர்களைச் சந்தோஷப்படுத்தவேண்டும். எவருடைய கோரிக்கையையும்வீணாக்குதல் கூடாது. தவிர, அயோத்தி, காமதேனு, ஜானகி, கௌஸ்துப மணி, சிந்தாமணி, புஷ்பகம், இராஜ்யம், பொக்கிஷம் இவைகளில் எவன் எதைக் கேட்டபோதிலும் உடனே கொடுத்துவிட வேண்டும். அப்படிச் செய்யவில்லை யென்பதை நான்கேட்பேனே யாயின் உன்பேரில் எனக்குக் கோபம் ஏற்படும். ஆகையால், என்னிடம் பயம் வைத்தே சிறிதும் யோசியாமல், கேட்டதை அளித்து விடு. கேட்டதை நீ கொடுக்க மறுப்பாயே யாயின் என்தலையை வெட்டின தோஷம் உனக்குச் சம்பவிக்கும். நான் கூறியதை நீ சிறிதும் மறவாமலிருந்து வரவேண்டும்'' என்றார். இவ்வாறு ஸ்ரீ ராமபிரான் செய்த ஆக்ஞையை இலட்சுமணர் அங்கீகரித்துக் கொண்டு, அவரிஷ்டப்படியே யாவற்றையும் நடத்திவந்தார்.

இராமபிரான் இலட்சுமணருக்குச்

செய்த ஆக்ஞையை விவரித்துக் கூறும்.

இரண்டாவது சருக்கம்.

முற்றிற்று.

3-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீ ராமபிரான் பூப்பிரதக்ஷிணத்துக்காக அனுப்பிய சியாம கர்ணம் என்னும் அசுவமேதக் குதிரையானது மகாதேசமாகிய பிரம்மாவர்த்தமிருக்கும் திசையை நோக்கிச் செல்லாமல் கிழக்கு நோக்கிச்சென்று கங்கைக்கரையை யடைந்தது. சத்ருக்னனும் குதிரையைப் பின்தொடர்ந்து சென்று கங்கையை அடைந்தான். இங்கு இத்தருணம் ஸ்ரீ ராமபிரான் தமது பிரபாவத்தை வெளியிடும்நிமித்தம் சத்ருக்னன் முன்பாக ஒரு வேடிக்கைசெய்தார். அதாவது, அத்தருணம் மழைகால மில்லையாயினும், ஓடமேறியுந் தாண்டிச்செல்லமுடியாத பெரும்வெள்ளமானது கங்கையிற்பெருகிற்று. சத்ருக்னன் தனது ப்ரயாணத்துக்கு இடையூறாகத் தோன்றியிருக்கும் பிரவாகத்தையும் காலம் அதிகரிப்பதையும் பார்த்து, போஜனத்தில் முதற்கவளத்திலேயே ஈ கலந்ததுபோல், இப்போது நமது ப்ரயாண ஆரம்பத்திலேயே இடையூறு நேரிட்டிருக்கிறது, ஆயினும் நமக்குச்சம்பவிக்கும் இடையூறுகள் யாவும் ஸ்ரீ ராமசந்திரனுடைய பிரதாபமகிமையால், விலகி நமது ப்ரயாணம்செவ்வனே நடைபெறும் என்று தன்மனதில் உறுதிகொண்டு கங்கைக்கரையில் இருந்தபடி வாறே கங்காதேவியை விதிப்படி நன்றாய்ப் பூஜித்து, அங்கிருந்த தேவமுனி கணங்களின் செவியிற்பட "ஏ கங்காதேவி! மகா புண்ணியவதியே! உத்தமராகிய இராமசந்திரரிடத்தில் சத்தியமிருக்குமாயின் சைன்னியத்துடன் புறப்பட்டுவரும் எனக்குச் சீக்கிரம் நீ வழி தரவேண்டும்" என்று பிரார்த்தித்தான். இவ்வாறு சத்ருக்னன் பிரார்த்தித்ததும் ஜான்ஹவி (கங்கை) நதியானது தனது பிரவாகவேகத்தை நிறுத்திக்கொண்டு, தனது உதரத்தின் தலத்தைக் (தரையை) காண்பித்தது. உடனே அசுவமேதக் குதிரையானது ஆற்றில் இறங்கி நடந்து சென்று க்ஷணநேரத்தில் அக்கரை சென்றது. உடனே சத்ருக்கனனும் சுமந்திரனுடன் சைன்னியங்களை யழைத்துக்கொண்டு அக்கரைசென்று மகாதேசமாகிய மகததேசமடைந்தான். அது தான் கீகடதேச மெனச் சொல்லப்படுவது. இங்கும் கங்கையாற்

றில் முன்போலவே பிரவாகமுண்டாயிற்று. அதைக்கண்டு, இந்த மகா அற்புதமும் இராமசந்திரருடைய பிரதாபமென்றே யாவரும் மனதிலுறுதிகொண்டு ஜய ஜய சீதாராம்! ஜய ஜய சீதாராம்! என்று அடிக்கடி உரத்துக் கூச்சலிட, உடனே யாகக் குதிரையாகிய சியாம கர்ணம் கங்கையில் இறங்கி, அக்கரையை நோக்கிச் செல்ல முன்போலவே சத்ருக்னனும் சேனைகளுடன் அக்கரை சென்றான். அசுவமேதக் குதிரை வந்திருப்பதைக்கேட்ட மகததேசமன்னன் தனது பட்டத்துயானையை முன்னிட்டுக்கொண்டு சைன்னியத்துடன் எதிர்கொண்டு குதிரையின் அருகிற்சென்று, அதன் நெற்றியிற்கட்டியிருக்கும் பட்டத்தைப்படித்துப்பார்த்து, அக்குதிரையைச்சத்ருக்னன் முதலியவர்களுடன் தனது பட்டணத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்ப் பக்தியுடன் தனது வைபவத்துக்குத் தக்கபடி பூஜித்து, தனது பொக்கிஷத்திலிருக்கும் திரவியங்களைச் சத்ருக்னனுக்குச் சமர்ப்பித்து உடனே தன்பட்டணத்தார், தேசத்தார், ஸ்திரீகள், மித்திரர்கள், மந்திரிகள், பட்டணத்துஸ்திரீகள், தேசத்து ஸ்திரீகள், வைதிகர்கள், தனதுபுரோகிதர்கள் இவர்கள் யாவரையும் அவரவர்களுக்குத் தக்கவாகனத்தில் ஏற்றி வைத்து அயோத்தியாபட்டணத்தில் நடக்கும் யாகத்துக்குச் செல்லும்படி யனுப்பிவிட்டான். தானும் தனது சைன்னியத்துடன் அசுவமேதக் குதிரையின் அடியின் அடையாளங்களை யநுசரித்துச் சென்று, சத்ருக்கனனுடைய வார்த்தை கடவாமல் கைகூப்பியவாறு அவன் கூடவேவந்தான். இவ்வாறே சகல தேசத்துமன்னர்களும் குதிரையைப்பின்றொடர்ந்து பாதுகாத்து வந்தார்கள். சியாமகர்ணம் என்னும் அசுவமேதக் குதிரையை அரசர்கள் ஒருவரும் பிடித்துக்கட்டவில்லை. இவ்விதமாகவே இந்திரன் முதலிய தேவர்களிலும் அசுரர்களிலும் ஒருவரும் அதைப் பிடித்துக்கட்டவில்லை. பிறகு அக்குதிரையானது அங்கம், வங்கம், கலிங்கம் முதலிய அநேகமான கிழக்குத் தேசங்களைக்கடந்து, சமுத்திரத்தின் கரையைக்கண்டு அரசர்களுடன் தென்றிசையை நோக்கிச்சென்று கோதாவரி நதியைக்கடந்து ஆந்திரதேசம், திராவிடதேசம், ஆரவார தேசம் இவைகளையுந்தாண்டி, சுபகரமான

காஞ்சி முதலிய அநேக தேசங்களைப்பார்த்துக்கொண்டு காவேரி நதியைக்கடந்து சோளதேசஞ்சென்று, பிறகு சேதுவுக்குப் போய்த் தநுஷ்கோடியைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டது. அதன்பின் தாம்பிரபரணீ நதியைத்தாண்டி பனிரண்டு பிரிவுகளுள்ள சோளதேசத்தையுங் கடந்து, கோகர்ணக்ஷேத்திரஞ் சென்றது. பின்னும் அந்தக் குதிரையானது, கிருஷ்ணாதீரம் போய் அதையுங்கடந்து கர்நாடகமென்னும் மகாதேசத்தையுந் தாண்டி வேகமாகக்கொங்கண தேசஞ்சென்று அத்தேசத்தரசர்களுடன் பீமாபிரதேசமுதலியவைகளைக் கடந்து மகாராஷ்டிர தேசங்களைத் தரிசித்துக்கொண்டு கௌதம நதியையுங் கடந்து விதர்ப்பதேசஞ் சென்று ஆபீரமண்டலம் சென்றது. பிறகு மாளவதேசத்தையும் புண்ணியகரமானமகாநதி, ஸாப்ரமதி இந்நதிகளையும் தாண்டி கூர்ஜரதேசம் பிரபாஸம் இவ்விரண்டையுங் கடந்து, ஆனர்த்தம், ஸௌவீரம், ஸௌராஷ்டிரம் இவைகளையுந்தாண்டி ஒரு விஸ்தாரமான மைதானத்தை யடைந்தது. அங்கிருந்து தன்வதேசம், ஸாரஸ்வதம் மத்ஸியம், மாடரம், சூரஸேனம் இவைகளையுங் கடந்து பாஞ்சாலதேசம் சென்று, அங்கிருந்து குருக்ஷேத்திரம் போய், பின் குருதேசம் ஜாங்கல தேசம், கேகயதேசம், காஷ்மீர தேசம் பில்லதேசம் கௌடதேசம் சகதேசம்,யவனதேசம் தாம்பிரதேசம் இவைகளை வெகுசீக்கிரத்தில் தாண்டி, அப்பால் அநேக தேசங்களைப் பார்த்துக்கொண்டு கரதோயா நதியின்கரை வழியே வாயுவேகமாகச் சென்று ஜ்வாலாமுகியை யடைந்தது. கரதோயா நதியைக் கடப்பதாலும், கர்மநாசாநதியை ஸ்பரிசிப்பதாலும் கண்டகீநதியை நீந்திக் கடப்பதாலும் தான் செய்த தர்மத்தைக் கூறுவதாலும் தர்மத்துக்கு லோபம் வருமென்கிற நியாயத்தை இக்குதிரையுமறிந்து கரதோயா நதியைக் கடவாமலே ஹரித்வாரம் சென்று அங்கிருந்து கங்கைக் கரைவழியே இமயகிரியின் அருகேயிருக்கும் பலதேசங்களையும் கடந்து,பதரிகாசிரமத்தைத் தரிசித்து அங்குக் கலாப கிராமவாசிகள் செய்த வெகுமானத்தையும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து மானஸஸரஸுக்குச் சென்று, ஹரிஹரக்ஷேத்திரத்தைத் தரிசித்துக்கொண்டு சேனைகளுடன் மிதுலாபட்டணத்தை யடைந்தது.

பிறகு அங்கிருந்து புறப்பட்டுப் பலதேசங்களைப் பார்த்துக்கொண்டு ஆரியாவர்த்தம் போய், அங்கு, காசி, திரிவேணி இவைகளைத் தரிசித்துக்கொண்டு வேகமாக அந்தர் வேதிக்குச் சென்றது. அங்கிருந்து சிருங்கிபேரபுரமடைந்து பிறகு தமஸா நதியைத்தாண்டி, நைமிசாரண்யத்தில் பிரவசிக்கும் கோமதிநதியையும் தாண்டிற்று. பிறகு பிரம்மா வர்த்தத்தை யடைந்து அங்குள்ள மனோரம்மியமான தேசங்களைத் தரிசித்துக்கொண்டு கோசல தேசமடைந்தது. இவ்வாறாக ஆறுமாத காலத்துக்குள் பலதேசமன்னர்களும் புடைசூழ்ந்துகாக்க, சத்ருக்னனுடன் சாகேத நகரத்தின் யாக மண்டபத்துக்கருகில் வந்தது.

* * *

* * * * * *

இப்பொழுது சீதாபதியானவர், சியாமகர்ணமாகிய அசுவமேதக்குதிரை பூப்பிரதக்ஷிணம் செய்து கொண்டு வந்து சேர்ந்ததை யறிந்து, அதைக்கொண்டுவரும்படி இலட்சுமணருக்குக் கட்டளையிட்டார். இலட்சுமணர் உடனே பட்டத்து யானையுடன் எதிர்கொண்டுபோய்த் துந்துபி வாத்திய முழங்க, வாரநாரிகள் நர்த்தனஞ்செய்ப, வேதியர்கள் வேதங்களைக் கோஷிக்க; சியாமகர்ணக் குதிரையை நன்றாய்ப் பூசித்து, பின் அதைக்காத்து வந்த அரசர்களுக்கும் தக்க உபசாரஞ்செய்து, குதிரையை மெதுவாக யாகமண்டபத்துக்குக் கொண்டுவந்தார். அச்சமயத்தில், அசுவமேதக் குதிரையை யாவரும் பார்ப்பதே பெருந்த உற்சவமாகவிளங்கிற்று. அயோத்திபா பட்டணத்தைச் சுற்றிலும் வெளியில் பத்துக்காதவழி தூரமுள்ள இடமெங்கும் பல தேசத்தரசர்களும் அவர்கள் சைன்னியங்களும் நிறைந்தார்கள். இப்போது அசுவமேதக் குதிரையைத் தொடர்ந்து காத்துவந்த மன்னர்கள் யாவரும் தாங்கள் முன்னமேயே அயோத்திக்குச் சொல்லும்படி அனுப்பிய தங்கள் குடும்பத்தார் பட்டணத்தார் தேசத்தார் இவர்களைக்கண்டுபிடிக்க, வண்டுகள்போல் கூட்டத்தில் சுற்றிப்பார்த்தும் தங்கள் தங்கள் ஜனங்களைக் கண்டுபிடிப்பது அரிதாகி மயங்

கினார்கள். இப்படித் திரிந்து கொண்டே தங்கள் ஜனங்களை மறு நாட் சிலரும் மூன்றும் நாட் சிலரும் ஐந்தா நாட் சிலரும் கண்டு பிடித்தார்கள். அவர்களுக்குள் சிலர் இவ்வாறு தேடியுமகப்படாமையால், துக்கத்தோடு சுற்றிப் பதினைந்து தினங்களுக்குமேல் சிலரும், ஒருமாதத்துக்கு மேற் சிலரும் கண்டுபிடித்தார்கள். சிலர் தங்கள் ஜனங்களைப் பாராமலே திரிந்து வருத்தமடைந்தார்கள். இதனையறிந்த இராமபிரான் இலட்சுமணனையழைத்து "இலட்சுமணா! இக்கூட்டத்தில் விட்டுப்பிரிந்த ஜனங்களில் அவரவர் ஜனங்களை அவரவர் பார்க்க ஓர் உபாயஞ் சொல்லுகிறேன் கேள். தமஸாநதியின்கரையில் பெரிய ஒரு சாலைகட்டி, அச்சாலையில் இந்த யாகக் கூட்டத்தில் பிரிந்த ஜனங்களை அவரவர் பார்க்கலாமென்று பறைசாற்றுவித்து அவ்வருத்தத்தை விலக்கெனக் கட்டளையிட்டார். குதிரை மாடு முதலியவைகளும் வேறு எந்தப் பொருளும் உரியவரை விட்டுப் பிரிந்ததாகத் தெரிந்தால், அவைகளை அச்சாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்து, பின்புபெற்றுக்கொள்ளுமாறு பறை யறைவித்துத் தெரிவி என்று கட்டளையிட்டார். இலட்சுமணர் இராமருடைய உத்தரவுப்படி எல்லாவற்றையும் நிறைவேற்றினார். அதற்குப் பிறகு பிரிந்தவர்கள் யாவரும் அச்சாலை சென்று தங்கள் தங்கள் ஜனங்களுடன் கலந்தார்கள். பொருளை யிழந்தவர்களும் அச்சாலையில் தங்கள் பொருள்களை மீண்டும் பெற்றார்கள். இவ்வாறே குதிரை முதலிய பிராணிகளைப் பிரிந்தவர்களும் தங்களுடைய பிராணியை மீண்டும் அச்சாலையில் பெற்றார்கள். ஸ்ரீராமபிரானுடைய அசுவமேத யாகத்தைப் பார்க்க இவ்வாறாகக் கூடிய கூட்டத்தில் உண்டாகும் பேரிரைச்சலினால் ஒருவரோடொருவர் காதுக்குள் பேசிக்கொள்ளினும் ஒருவர் பேச்சை ஒருவர் அறிவது அரிதாயிற்று. மன்னர்கள் யாவரும் கூடாரங்களில் சுகமாய் வசித்துவந்தார்கள்.

அசுவமேதக் குதிரை பூமண்டலப் பிரதட்சிணம்

செய்து வந்ததைக் கூறும்

மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ரித்விக்குகள் யாவரும் பற்பலவித மங்கள வாத்தியங்களுடன் அசுவமேத யாகத்தை விதிப்படி நடத்திவந்தார்கள். அவர்கள் யாவரும் இந்த யாகத்தில், இந்திரனுடைய யாகத்திலிருந்ததுபோல் சதஸ்யர்க (யாககார்ய நிர்வாகிகள்) ளுடன் இரத்னமயமான வெண் பட்டாடை புனைந்துக்கொண்டு விளங்கினார்கள். இத்தருணம் இராமபிரான் வேண்டுகோளின்படியே மகாதேவரானவர் விக்னராஜருடனும் சுப்பிரமண்யருடனும் பார்வதிசமேதராய் வ்ருஷபவாகனமேறி பிரமதகணங்கள் இந்திரன்முதலிய தேவர்கள் யாவருஞ் சூழப் புறப்பட்டு அசுவமேத மண்டபம் வந்தார். இதனை யறிந்த இலட்சுமணர் பட்டத்து யானையை முன்னிட்டுக் கொண்டு பதாகை, துவஜம், தோரணங்கள், பற்பல வாத்தியங்கள், வாரநாரி நர்த்தனங்கள் இவைகளுடன் எதிர்கொண்டு சென்று சங்கரரைப் பக்தியுடன் பூஜித்து, உள்ளே யழைத்துவந்தார். ஸ்ரீராமபிரானும் எழுந்திருந்து ஐந்து ஏழு அடிகள் முன் சென்று சங்கரரை வணங்கி, கிரிஜாசகிதராக அவரைத் தழுவி மகிழ்ந்து, கனகாசனத்தில் வீற்றிருக்கச் செய்து, ஒரு திவ்ய சொர்ணபாத்திரத்தில் அவர் பாதங்களை வைத்துப் பிடித்துக் கொண்டு, நவரத்ன கசிதமான ஜர்ஜரி யென்னும் பாத்திரத்தில் தீர்த்தத்தை யெடுத்துத் தீர்த்த தாரையை ஜானகி உசிதமாய் விட, தமது கரங்களால் அவருக்குப் பாத ப்ரக்ஷாளனம் செய்தார். இவ்வாறு பரமசிவனுக்கு உபசரிக்கும் ஸ்ரீராமபிரானையும் சீதா பிராட்டியையும் தேவகணங்கள் தாமரைப் பூப்போன்ற நேத்திரங்களால் இமைகொட்டாமல் பார்த்துத் தங்களைமறந்து சித்திரப்பதுமைபோல்நின்றார்கள். அப்பொழுது அவர்களிற் சிலர் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு மகிழ்ச்சியுடன் இராகவரைத் துதித்தார்கள். சிலர் ஜானகி தேவியைத் துதித்தனர். கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒப்புயர்வற்று விளங்கும் சீதா இராமர்களுடைய திவ்விய தேஜஸ்ஸைப் பார்த்து இவ்வாறு தேவகணங்கள் சந்தோஷமடைந்தனர். ஸ்ரீரா

மபிரான் சீதையுடன் சங்கரரைப் பூஜித்துவிட்டுப் பிறகு தேவர்கள் யாவரையும் தாமே பூஜித்து, ஸௌமித்திரியைக் கொண்டு ரிஷிகள் யாவருக்கும் பூஜை செய்வித்துப் பிறகு சங்கரரைப்பார்த்து "ஏ மகாதேவா! இன்று தமது தரிசனத்தால் நானும் சீதையும் தன்னியரானோம். இந்தச் சூரிய வம்சத்தில் என் பிறப்பு இன்று சாபல்யம் பெற்றது" என்று கூறிப் பிரார்த்தித்தனர். இவ்வாறு கூறியதைக் கேட்டதும் சிவபூஷணராகிய பரமசிவன் சிறிது நகைத்து, "ஏ இராகவா! உமது மாயையை நானறிவேன். உமது நாபீகமலத்தில் பிரமதேவர் பிறந்தார். அவரிடத்தி லிருந்து மரீசி முதலிய ஏழு முனிவர்கள் உமக்குப் பேரன்மார்களாகப்பிறந்தார்கள். அவர்கள் மகா தேஜஸ்விகள். அந்தமரீசி முனிவருக்கு சிருஷ்டி உற்பத்தி விதாயகராகிய கசியப முனிவர்பிறந்தார். அவருக்கு சவிதா (சூரியன்) பிறந்தான். அவர் உமக்குப்பேரனுக்குப்பேரன். அவரிடத்தி லிருந்து சூரியவம்சம் உற்பத்தியாயிற்று, அவ்வம்சத்தில் நீர் பிறந்திருக்கிறீர். உமது வம்சத்தில் சூரியன் பிறந்திருக்கிறான். ஆகையால் பிரபுவே! இதைக்கொண்டு என்னை யேன் மயக்குகிறீர். தேவதைகளுடைய காரிய சித்திக்காக மாயையைக் கொண்டு நீர் அவதரித்திருக்கிறீர். ஆதலால் யாத்திரை யாகம் முதலிய வேடிக்கைகளால் உமது இச்சைப்படி நீர் விளையாடும், உமது விளையாட்டானது லோக சிக்ஷார்த்தமேயாம்" என்று ஆச்சரியமாக விடையளித்தார். இவ்வாறுபரமசிவன் கூறியதைக் கேட்ட சீதா ராமர்கள் சிறிது நகைத்துக்கொண்டே யாககுண்டத்திற்கருகே சென்று தங்கள் குருவினுடைய ஸந்நிதியில் உட்கார்ந்தார்கள். இத்தருணம் அந்த அசுவமேத மண்டபத்துக்கு அநேக ஆயிரக்கணக்காக, கந்தர்வர்கள், கின்னரர்கள், சித்தர்கள், அப்ஸரோகணங்கள், லோகபாலர்கள், திக்பாலர்கள் இவர்களும் நவக்கிரகங்கள், ஆறு ருதுக்கள், அறுபது வருஷங்கள், இருபத்தேழு நக்ஷத்திரங்கள், பதினாறு திதிகள், வாரங்கள், யோகங்கள், கரணங்கள் இவைகளும் பூலோக வாசிகளும் கூட்டங் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். பின்னும் விருக்ஷங்கள், மலைகள் சமுத்திரங்கள், நதிகள், தடாகங்கள், கிணறுகள், இவைகள்

வும் ஜங்கம ரூபந் தரித்துக்கொண்டு யாகமண்டபம் அடைந்தன. பின்னும் சம்பாதி, குகன், மகரத்வஜன் இவர்களும், இலங்கையி லிருந்து இராட்சதர்களுடன் விபீஷணனும் யாகமண்டபம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் யாவரையும் ஸ்ரீராமபிரான் குசல ப்ர ச்னஞ் செய்து மரியாதையுடன் ஆசனத்தில் வீற்றிருக்கச் செய் தார். இவர்கள் யாவருக்கும் முந்தியே வானரங்களுக்குத் தமது பக்கத்தில் வீற்றிருக்க இடங்கொடுக்க, அவர்கள் அவ்விடத்திலே யே அமர்ந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் அயோத்தி பட்டணத்துக்குக் கும்போ தர முனிவர்வந்தார். அவரது வருகையை அறிந்து எல்லைக் காவ லர் ஒருவர்க்கொருவர் பின்வருமாறு பேசிக்கொண்டார்கள். ஏ அண்ணன்மார்களே! நமக்கு மறுபடியும் ஒரு கஷ்டம்சம்பவித்து விட்டது. இதோ பாருங்கள், முன் வந்த கும்போதர முனியை! இவர் நிமித்தமாக வல்லவா நமது இறைவனுகிய ஸ்ரீ இராமபிரா னுக்குப் பூலோக யாத்திரை செய்யும் சிரமம் நேர்ந்தது. இப்பொ ழுது அசுவமேத யாகம்நடப்பதும், இவ்வசுவமேதயாகக் குதிரை பூப்பிரதக்ஷிணம் செய்யும்போது, அதைக்காத்துவரும் அனைவர்க் கும் எவ்வளவோ சிரமம் உண்டானதும் இவர் வாய்மொழியாலல் லவா? இப்பொழுதும் வந்திருக்கிறரே! இன்னமும் இராமபிரானு க்கு என்ன செய்யக் கருதியிருக்கின்றனரோ தெரியவில்லையே'' என்று பேசிக்கொண்டார்கள். இவ்வாறு அவர்கள் பேசுவதைச் கேட்டுக்கொண்டே கும்போதர முனிவர், யாகமண்டபத்தை நோக்கிப் புறப்பட்டு வந்தார். அவர் புறப்படும் முன்னமே அக்கா வலாளிகள் வேகமாக முன்சென்று யாகமண்டபத்தின் அருகே நடுக்கத்துடன் நின்று இராம இலட்சுமணர்களைப் பார்த்து பிரபுவே! கேளுங்கள் இப்போது நடந்த பூமண்டல யாத்திரைக் குக் காரணமானவரும் தங்களிடத்திலும் கடின சித்தம் படைத் தவருமான கும்போதர முனிவர் இதோ மறுபடியும் வந்திருக் கிறர். அதைத் தெரிவித்தோம் என்றனர்.

கும்போதர முனிவர் வருகையைக் கேட்ட ரித்விக்குகள்யாவ ரும் தங்கள் தங்கள் காரியத்தைநிறுத்திவிட்டு, அவரைப்பார்க்கக்

கருதிப் பயந்து எழுந்திருந்தனர். ஸீதாராமர்கள் மாத்திரம் பய மற்றிருந்தார்கள். மண்டபத்துள்ள யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில், கும்போதர முனிவர் குட்டையான சரீரமும் பெரிய தலையும் கறுத்தமயிரும் சிவந்த நேத்திரங்களும் தொந்தி வயிறும் குட்டையான கை கால்களுமுடையவராய், யௌவனப்பருவம் வாய்ந்தவராய், கௌபீனந்தரித்து, மரவுரியுடுத்து, தண்டகமண்டலங்கொண்டு ஜடாமுடியும் மீசையு முடையவராய்ப் பாதுகையின்மீது, மெதுவாக யாககுண்டத்துக்கு வந்தார். அவரைப் பார்த்த யாவரும் மனத்தில் பயமடைந்து தங்கள் தங்கள் செய்கையை மறந்தார்கள். பிறகு தாங்கள் மறந்தவைகளை ஒருவர்க்கொருவர் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

இப்பால் இராமபிரான் சீக்கிரமாக எழுந்திருந்து எதிர்கொண்டுபோய்க் கும்போதர முனிவரைச் சாஷ்டாங்கமாக வணங்கிக் கையைப் பிடித்துக்கொண்டு, மண்டபத்துக்குள் அழைத்துவந்து சொர்ணாசன மளித்து அதில் வீற்றிருக்கச் செய்தார். கும்போதர முனிவர் அதிசீக்கிரத்தில் தமது தண்டகமண்டலத்தையும் மரவுரியையும் தரையில் வைத்துவிட்டு ஸ்ரீ ரகுநாதனை வணங்கினார். உடனே இராமபிரான் தமது கைகளால், முனிவரை யெழுப்பித், தழுவிக்கொண்டு அவரைப்பார்த்து "மகானுபாவராகிய முனிசிரேஷ்டரே! இராவண சங்காரஞ்செய்த நான் தமது வந்தனத்துக்குத் தக்கவனன்றே" என்று உபசரித்தார். இப்படிப்பட்ட இராமருடைய வசன ரூபமான பாணங்கள் இருதயத்தில் தைக்கவே வருத்தமடைந்த கும்போதர முனிவர், இரகுபுங்கவரைப் பார்த்து "ஏ இராம இராமா! மகாபாகோ! என்மீது தாங்கள் கோபஞ் செய்ய வேண்டாம். ஏ இரகு நாயக! நான் தங்கள் விஷயத்தில் செய்த அபராதத்தை மன்னித்தருளும்; யான் எனது காரியத்துக்காகத் தங்களிடத்தில், தோஷாரோபணம் செய்ததல்ல: பிறரின் உபகாரத்திற்காகவும் உமது கீர்த்திக்காகவும் செய்தேன். இது சர்வலோக க்ஷேமத்துக்காகச் செய்யப்பட்டதென்பது உமது சித்தம் அறியும்; அன்றியும் இம்முனிவர்கள் யாவரும்

அறிவார்கள். தமது அன்ன சத்திரத்தில், கணக்கற்ற யாவரும் புசித்தார்கள். யானும் புசித்தேன். ஆகையால் ஏ இரகுநந்தனா! இவ்விதம் மகத்தான கீர்த்திபெற்ற தமக்குத் தோஷமென்பது ஏது? இவ்வாறு நிச்சயஞ் செய்துகொண்டே உலக நன்மைக்காகத் தம்மிடத்தில்என்வாயால் தோஷத்தைக்கூறினேன். இல்லாவிடில், ஏ இராமா! தமக்குஇவ்விதமான தீர்த்தங்களிலும் தேசங்களிலும் உபவனங்களிலும் முனிவர் ஆசிரமங்களிலும் யாத்திரை செய்வதற்குக் காரணம் எப்படி சம்பவிக்கும்? மேற்சொன்ன இடங்களில், வசிக்கும் ஜனங்கள் யாவரும் சிரத்தையுடன் கர்மங்களைச்செய்து கொண்டு சுபகரமான தமது தரிசன லாபத்தைப் பெற்று சந்தோஷமடைந்தார்க ளல்லவா? ஏ இரகுநந்தனா! இதற்கு நானே காரணமென்று எண்ணுகிறேன். ஜனங்கள் யாவரும் எவ்விடங்களிலும் விஷயங்களில் பேராவல் கொண்டநமக்கு சீதாராமருடைய தரிசனங் கிடைத்தது, கும்போதர முனிவருடைய பிரசாதத்தாலல்லவா? என்று எனது உபகாரத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். தம்மிடத்தில் ஒரு தோஷம் கற்பித்ததால் எனக்கு ஜன்மசாபல்யமும், எங்கும் பரவாநின்ற பெரிய கீர்த்தியும் உண்டாயின. அதனால் தங்களுக்கும் கீர்த்தி பெருகிற்று, இப்பொழுது பூலோகத்தில், ஏற்பட்ட கணக்கற்ற இராமேசுவரங்கள் இராமதீர்த்தங்கள் எவ்வளவு காலம் பிரசித்தியாக இருக்கப் போகின்றனவோ அவ்வளவு காலம் உமது கீர்த்தியும் பரவிநிற்கும். அன்றி எனதுவாக்கியத்தைத்தாங்கள் அநுசரித்ததால் லோகத்துக்கு ஒரு நல்ல பழக்கமும் ஏற்பட்டது. கும்போதர முனிவர், மகாத்மாவாகிய இராமபிரான் மீதே தோஷங் கற்பித்தபோது நமக்கேன் அத்தோஷம் ஏற்படாது? ஸ்ரீராமபிரான் சகலதீர்த்த யாத்திரைகளும் செய்து அத்தோஷத்தைப் பரிகரித்துக் கொண்டமையால், நாமும் அவ்வாறு செய்யவேண்டு மென்பதில் சந்தேகமா? என்னும் இவ்வாறான நியமனங்கள் ஜனங்களுக்கு ஏற்பட்டு மனதில் பயம் வைத்து தங்களுடைய தோஷபரிகாரத்திற்காக பூதலத்தில் எங்கும் யாத்திரைசெய்யத் தலைப்படுவார்களல்லவா?

தாமரை இலையில் ஜலம் சிறிதும் பற்றாததுபோல், எங்கும் நிறைந்திருக்கும் பிர்மமாகிய தங்களிடத்தில் தோஷாரோபணமென்பது உண்டாவதெப்படி ? பின்னும் தங்களுடைய புருவத்தை நெறித்த மாத்திரத்தில் இப்பிர்மாண்டம் பிரளயத்தில் மூழ்கிவிடுகிறது. நிமிஷநேரத்தில் இந்த பிர்ம்மாண்டத்துள்ளடங்கிய ஜீவவர்க்கங்கள் முழுமையும் தங்களிடத்தில் அடங்கிவிடுகின்றன. இப்படிப்பட்ட மகிமைவாய்ந்த தங்களிடத்தில் தோஷாரோபணம் எவ்வாறு உண்டாகும்? தங்களுடைய ஆக்ஞைப்படியல்லவா காலன் எல்லாவற்றிற்கும் நாசமுண்டாக்குகிறான். அப்படிப்பட்ட நீர் தோஷம் செய்ததாக யாரால் கூறமுடியும்? ஒருவன் பெரிய சுவரில் ஆயிரக்கணக்காகச் சித்திரங்களை எழுதி அவைகளைத்தானே யழிப்பதுபோல், ஏ இராமா ! சத்வரஜஸ்தமஸாகிய முக்குணங்களில் சத்வ குணத்தால் பிர்ம்ம ரூபமும் ரஜோகுணத்தால்விஷ்ணு ரூபமும் தமோகுணத்தால் ருத்திராம்சத்தையும் பெற்று உலகங்களின் சிருஷ்டி ஸ்திதி சங்காரமாகிய முத்தொழிலையும் நடத்தி வருகிறீர்களல்லவா? தங்களுடைய மகிழ்ச்சிக்காக நாங்கள் அனைவரும் தீர்த்த யாத்திரை செய்துவருகிறோம். அத்தீர்த்த ரூபமாகிய தமக்குத் தோஷமென்பதேது? தீர்த்தங்களுள் உத்தம தீர்த்தமான ஆகாச கங்கையென்பது, தமதுவலது காற்பெருவிரல் நுனியிலிருந்து உற்பத்தியாகிய தூளியின் சம்பந்தத்தைப் பெற்று, பரிசுத்தமாகி பூலோகத்தில் பிரவகித்துக்கொண்டு தன்னுடைய வெண்மை நிறத்தால், இன்றும் தங்களுடைய பாததூளி சம்பபந்தத்தைவெளியிட்டு வருகிறது" என்றார். இவ்வாறுகும்போதர முனிவர் பலவிதமாக இராகவனைத் துதித்து மகிழ்வித்தார். பிறகு இராமஷ்டோத்ர சத நாமங்களாலும் அவரைத்துதித்தார். இவைகளனைத்தையும் அன்போடு ஏற்றுக்கொண்ட இராமபிரான் அவரை நன்றாய்ப் பூஜித்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தார். பின் இராமரும் குருசந்நிதியில் சீதா தேவியுடன் வீற்றிருந்தார். அச்சபையில் கும்போதர முனிவருடைய தரிசனார்த்தமாக எழுந்திருந்து சகல ஜனங்களும் அவரவர்களுடைய ஆசனத்தி லமர்ந்தார்கள்.

கும்போதர முனிவர் அசுவமேதமண்டபத்துக்குவந்ததைக்கூறும்
4 - வது அத்தியாயம் முற்றிற்று.

5-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் கூறுகிறார்.

பரமகுருவே! நான் இப்பொழுது ஒரு சந்தேகம் கேட்க விரும்பியுள்ளேன். அதை விஸ்தரித்துக் கூறவேண்டுகிறேன். ஐயா! கும்போதர முனிவர், ஸ்ரீராமபிரானைத் துதித்த அஷ்டோத்தரநாமாவளி மிகவும் உபகாரமானதாகையால், அதை அடியேன் கேட்கப் பிரியப்படுகிறேன். தயைகூர்ந்து கூறவேண்டும்.

இராமதாஸர் கூறுகிறார்.

மகாபுத்திசாலியாகிய சிஷ்யனே! நீ இப்பொழுது கேட்ட விஷயம் எனக்கு மனக்களிப்பையளித்தது. அதை உனக்குக்கூறுகிறேன் கவனித்துக்கேள். ஸ்ரீராமபிரான் சர்வேசுரர், சர்வசொரூபர், சர்வபூத உபகாரார்த்தமாகவே தாம் அரூபியாயிருந்தும் ரூபத்தை எடுத்துக்கொள்கிறார். உலகத்தில் ஸம்ஸாரபய நிவாரணஞ் செய்கிறவர் அவர் ஒருவரே. துஷ்ட அசுராதிகளால், லோகத்துக்கு உபத்திரவம் நேரிடும்போதெல்லாம் தாம் அவதரித்து, அவ்வுபத்திரவங்களை விலக்கிவருகிறார். மத்ஸ்யம் கூர்மம் வராகம் இவை முதலாய பல அவதாரங்களை எடுத்து யாவருக்கும் உபகாரம் புரிந்திருக்கின்றனர். ஜனனமற்றவரும் முடிவற்றவரும் ரூபமற்றவரும் பக்தவத்ஸலருமான ஸ்ரீராமபிரான் சமசித்தர்களும் சாதுக்களுமாகிய பக்தர்களிடத்தில் கருணைகூர்ந்து அந்தந்த சமயத்தில் அவதரித்து அவரவர்களுடைய கஷ்டத்தைத் தீர்க்கிறார். தேவதேவேசப் பிரபுவான ஸ்ரீலக்ஷ்மீ நாராயணர் முன் க்ஷீராப்தியில், சங்குசக்ரதாரியாக பிரமன் முதலிய தேவர்கள் யாவருடனும் சேஷசயனஞ்செய்தார். அவர்களில் இலட்சுமணரே ஆதிசேஷர். ஜானகியம்மாள்தான் இலக்ஷ்மிதேவி. பரதசத்ருக்னர்களே சங்குசக்ரங்கள். வானரர்களே தேவர்கள். அவர்கள் இவர்களுக்கு முன்னமேயே தேவர்களின் பயநிவர்த்திக்காக அவதரித்

தனர். ஸ்ரீ ராமபிரானே ஆதிநாராயணர். அவர் சகலலோகோபகாரமாக பூவுலகில்தாமே அவதரித்திருக்கின்றனர், அவரை நினைத்த மாத்திரத்தில் சகலபாபங்களும் விலகிவிடும். அவர் நாமோச்சாரணஞ் செய்வதாலும் அதைச்சிரவணஞ் செய்வதாலும் கோடிபிர்மஹத்தியாதி பாபநிவாரணமுண்டாகும். அதிலும் இந்தக் கலியுகத்தில் அவரது நாம சங்கீர்த்தனத்தால் பாபமுழுதும் நசித்துப் போகுமென்பதில்சிறிதும் ஐயமில்லை. இராமா! இராமா!! இராமா!!! என்று மூன்று தடவை உச்சரித்தவன் மகாபாபியாயினும், அவனது பாபங்கள் ஆயிரக்கோடிக் கணக்காக விருந்தபோதிலும் அவற்றை நிவர்த்திசெய்கிறார். இந்த உண்மை எக்காலத்தும் மாறுவதில்லை. ஆகையால் அவருடைய அஷ்டோத்தர சத நாமங்களைக் கூறுகிறேன் கேள்.

அத² ஸ்ரீராமாஷ்டோத்தர ஶதநாமாவலி:

அஸ்ய ஸ்ரீராமசந்த்³ர நாமாஷ்டோத்தர ஶதஸ்ய மந்த்ரஸ்ய ப்³ரஹ்மா ருஷி: அநுஷ்டுப் ச²ந்த³: ஜாநகீவல்லப⁴: ஸ்ரீராமசந்த்³ரோ தே³வதா ஓம் பீ³ஜம் நம: ஶக்தி: ஸ்ரீராமசந்த்³ர இதி கீலகம்— ஸ்ரீராமசந்த்³ரப்ரீத்யர்தே² ஜபே விநியோக³:। ஓம் நமோ ப⁴க³வதே ராஜாதி⁴ராஜாய பரமாத்மநே அங்கு³ஷ்டா²ப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே வித்³யாதி⁴ராஜாய ஹயக்³ரீவாய தர்ஜநீப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே ஜாநகீவல்லபா⁴ய மத்⁴யமாப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே ரகு⁴நந்த³நாயாமிததேஜஸே அநாமிகாப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே க்ஷீராப்³தி⁴மத்⁴யஸ்தா²ய நாராயணாய கநிஷ்டி²காப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே ஸத்ப்ரகாஶாய ராமாய கரதலகரப்ருஷ்டா²ப்⁴யாம் நம:। ஓம் நமோ ப⁴க³வதே ராஜாதி⁴ராஜாய பரமாத்மநே ஹ்ருத³யாய நம:। ஓம் நமோ ப⁴க³

वते विद्याधिराजाय हयग्रीवाय शिरसे स्वाहा ।
ओं नमो भगवते जानकीवल्लभाय शिखायै वषट्
ओं नमो भगवते रघुनन्दनायामिततेजसे कव
चाय हुं । ओं नमो भगवते क्षीराब्धिशय्याय
नारायणाय नेत्रत्रयाय वौषट् । ओं नमो भग
वते सत्त्वकाशाय रामाय अस्त्राय फट् । भूर्भु
वस्सुवरिति दिग्बन्धः ।

॥ ध्यानम् ॥

मन्दाराकृतिपुण्यधामविलसद्वक्षस्स्थलं कोमलं
शान्तं कान्तमहेन्द्रनीलरुचिराभासं सहस्राननम्
वन्देऽहं रघुनन्दनं सुरपतिं कोदण्डदीक्षागुरुं
रामं सर्वजगत्सुसेवितपदं सीतामनोवल्लभम् ॥
सहस्रशीर्ष्णे देवाय सहस्राक्षाय ते नमः ।
नमस्सहस्रहस्ताय सहस्रचरणाय च ॥ ॥१॥
नमो जीमूतवर्णाय नमस्ते विश्वतोमुख ।
अच्युताय नमस्तुभ्यं नमस्ते शेषशायिने ॥ ॥२॥
नमो हिरण्यगर्भाय पञ्चभूतात्मने नमः ।
नमो मूलप्रकृतये देवानां हितकारिणे ॥ ॥३॥
नमस्ते सर्वलोकेश सर्वदुःखनिषूदन ।
शङ्खचक्रगदापद्मजटामकुटधारिणे ॥ ॥४॥
नमो गर्भाय तत्त्वाय ज्योतिषां ज्योतिषे नमः ।
ओं नमो वासुदेवाय नमो दशरथात्मज ॥ ॥५॥
नमो नमस्ते राजेन्द्र सर्वसम्पत्प्रदाय च ।
नमः कारुण्यरूपाय कैकेयीप्रियकारिणे ॥ ॥६॥
नमो दान्ताय शान्ताय विश्वामित्रप्रियाय ते ।
यज्ञेशाय नमस्तुभ्यं नमस्ते क्रतुपालक ॥ ॥७॥
नमो नमः केशवाय नमो नाथाय शार्ङ्गिणे ।
नमस्ते रामभद्राय नमो नारायणाय च ॥ ॥८॥

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌰𑌾𑌮𑌚𑌂𑌦𑍍𑌰𑌾𑌯 𑌮𑌾𑌧𑌵𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 |
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 || ||௯||

𑌨𑌮𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃 |
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑌾𑌥𑌨𑌾𑌥𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 || ||௧௦||

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 |
𑌵𑌾𑌮𑌨𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌰𑌾𑌘𑌵𑌾𑌯 𑌚 || ||௧௧||

𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌾𑌯 𑌜𑌾𑌨𑌕𑍀𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌯 𑌚 |
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶 𑌕𑌂𑌦𑌰𑍍𑌪𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ||௧௨||

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌾𑌯 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌹𑌰𑍍𑌷𑌕𑌾𑌰𑌿𑌣𑍇 |
𑌨𑌮𑍋 𑌰𑌾𑌜𑍀𑌵𑌨𑌯𑌨 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌗𑍍𑌰𑌜 || ||௧௩||

𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥 𑌨𑌮𑍋 𑌦𑌾𑌮𑍋𑌦𑌰𑌾𑌯 𑌚 |
𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌨𑌮𑌸𑍍𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑌾𑌯 𑌚 || ||௧௪||

𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌶𑌂𑌕𑌰𑌪𑍍𑌰𑌿𑌯 |
𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃 || ||௧௫||

𑌸𑌦𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 |
𑌅𑌧𑍋𑌕𑍍𑌷𑌜 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌲𑌹𑌰𑌾𑌯 𑌚 || ||௧௬||

𑌖𑌰𑌦𑍂𑌷𑌣𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃 |
𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌸𑍇𑌤𑍁𑌬𑌨𑍍𑌧𑌕 ||௧௭||

𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌮𑍋 𑌹𑌨𑍁𑌮𑌦𑌾𑌶𑍍𑌰𑌯 |
𑌉𑌪𑍇𑌂𑌦𑍍𑌰𑌚𑌂𑌦𑍍𑌰𑌵𑌂𑌦𑍍𑌯𑌾𑌯 𑌮𑌾𑌰𑍀𑌚𑌮𑌥𑌨𑌾𑌯𑌚 || ||௧௮||

𑌨𑌮𑍋𑌬𑌾𑌲𑌿𑌪𑍍𑌰𑌹𑌰𑌣 𑌨𑌮𑌃 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑌦 |
𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌮𑌹𑌾𑌦𑌰𑍍𑌪𑌹𑌰𑌾𑌯 𑌹𑌰𑌯𑍇 𑌨𑌮𑌃 || ||௧௯||

𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜 |
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑍃𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌜 || ||௨௦||

𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌸𑍇𑌵𑌿𑌤 |
𑌨𑌮𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌯𑌸𑌤𑍍𑌯𑌾𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑍂𑌪𑌿𑌣𑍇||௨௧||

அசிந்த்யாவ்யக்தரூபாய ஜ்ஞாநமயாய தே நம: ।
நம: ப்ரதாநாய பரமாய ஈஸ்வராய விதாத்ரே ॥ ௨௨ ॥

அப்ரமேயாய ஸூக்ஷ்மாய விஸுத்தாய பவித்ரே ।
நமோ மஹோக்ரரூபாய நமஸ்தே சாவதாரிணே ॥ ௨௩ ॥

ஸீதாராமாய ஸௌம்யாய ஸத்யாய வரதாத்ரே ।
நமஸ்தே பாணஹஸ்தாய நம: கோதண்டதாரிணே ॥ ௨௪ ॥

நம: கபந்தஹந்த்ரே ச வாலிஹந்த்ரே நமோஸ்து தே ।
நமஸ்தேஸ்து தஸக்ரீவப்ராணஸம்ஹாரகாரிணே ॥ ௨௫ ॥

இதி ஸ்ரீராமசந்த்ராஷ்டோத்தரஸத நாமாவளி:

இராமசந்திர அஷ்டோத்திரசத நாமாவளி.

1. ஸஹஸ்ர சீர்ஷ்ணே நம:
2. ஸஹஸ்ராக்ஷாய நம:
3. ஸஹஸ்ரஹஸ்தாய நம:
4. ஸகஸ்ரசரணாய நம:
5. ஜீமூத வர்ணாய நம:
6. விசுவதோமுகாய நம:
7. அச்சுதாய நம:
8. சேஷசாயினே நம:
9. ஹிரண்யகர்ப்பாய நம:
10. பஞ்சபூதாத்மனே நம:
11. மூலப்ரகிருதயே நம:
12. தேவாநாம்ஹிதகாரீ நம:
13. ஸர்வலோகேசாய நம:
14. ஸர்வதுக்கநிஷூதனாய நம
15. சங்கசக்ரகதாபத்ம ஜடாம
16. கர்ப்பாய நம [குடதாரிணே
17. தத்வாய நம: [நம:
18. ஜோதிஷாம் ஜோதிஷே நம
19. வாசுதேவாய நம:
20. தசரதாத்மஜாய நம:
21. இராஜேந்திராய நம:
22. ஸர்வஸம்பத்பிரதாய நம:
23. காருண்யரூபாய நம:
24. கைகேயிப்ரியகாரிணே நம:
25. தாந்தாய நம:
26. சாந்தாய நம:
27. விசுவாமித்ர பிரியாய நம:
28. யக்ஞேசாய நம:
29. கிரதுபாலகாய நம:
30. கேசவாய நம:
31. நாதாய நம:
32. சாங்கினே நம:
33. ராமசந்திராய நம:
34. நாராயணாய நம:
35: ராமசந்திராய நம:
36. மாதவாய நம:
37. கோவிந்தாய நம:
38. பரமாத்மனே நம:
39. விஷ்ணுஸ்வரூபாய நம:
40. ரகுநாதாய நம:

41. அநாத நாதாயநம:
42. மதுஸூதநாயநம:
43. திரிவிக்ரமாயநம:
44. சீதாயா:பதயேநம:
45. வாமநாயநம:
46. ராகவாயநம:
47. ஸ்ரீதராயநம:
48. ஜானகீ வல்லபாயநம:
49. ரிஷிகேசாயநம
50. கந்தர்ப்பாயநம:
51. பத்மநாபாயநம:
52. கௌஸல்யா ஹர்ஷகாரிணே [நம:
53. ராஜீவநயநாயநம:
54. லட்சுமணாக்ரஜாயநம:
55. காகுஸ்தாயநம:
56. தாமோதராயநம:
57. விபீஷணபரித்ராத்ரேநம
58. சங்கர்ஷணாயநம:
59. வாஸுதேவாயநம:
60. சங்கரப்ரியாயநம:
61. ப்ரத்யும்நாயநம:
62. அநிருத்தாயநம,
63. ஸதஸத்பக்திரூபாயநம:
64. புருஷோத்தமாயநம:
65. அதோக்ஷஜாயநம:
66. ஸப்ததால ஹராயநம:
67. காதூஷணஸம்ஹர்த்ரேநம
68. ஸ்ரீநிருஸிம்மாயநம:
69. அச்சுதாயநம:
70. சேதுபந்தகாயநம:
71. ஜநார்த்தனாயநம:
72. ஹநூமதாசிரயாயநம:
73. உபேந்திரசந்திரவந்தியாய [நம:
74. மாரீசமதனாயநம:
75. வாலிப்ரஹரணாயநம:
76. ஸுக்ரீவராஜ்யதாயநம:
77 ஜாமதக்நீயமகா தர்ப்பஹ [ராயநம:
78. ஹரயேநம:
79. கிருஷ்ணாயநம:
80. பரதாக்ரஜாயநம:
81. பித்ர்பக்தாயநம:
82. சத்ருக்நபூர்வஜாயநம:
83. அயோத்தியாதிபதயே
84. சத்ருக்நஸேவிதாய [நம:
85. நித்தியாயநம: [நம,
86. ஸத்தியாயநம: [நம:
87. புத்தியாதிஞானரூபிணே
88. அத்வைதப்ரம்மரூபாயநம:
89. ஞானகம்யாயநம:
90. பூர்ணாயநம:
91. ரம்யாயநம:
92. மாதவாயநம:
93. ஹிதாத்மனேநம:
94. அயோத்தியேசாயநம:
95. சிரேஷ்டாயநம:
96. சின்மாத்ராயநம:
97. பராத்மனேநம:
98. அகல்யோத்தாரணாயந:
99. சாபபங்கினேநம:
100. சீதாராமாயநம:
101. சேவ்யாயநம:
102. ஸ்துத்யாயநம:
103. பரமேஷ்டினேநம:
104. பாணஹஸ்தாயநம:
105. கோதண்ட தாரிணேநம:
106. கபந்தஹந்த்ரேநம.
107. வாலி ஹந்த்ரேநம:
108. தசக்ரீவ ப்ராணஸம்ஹா [ரகாரிணேநம:

விஷ்ணுதாஸ! சமஸ்தமான பாபங்களைப் போக்குவதும் சிரேஷ்டமும் பரிசுத்தமுமான ஸ்ரீராமசந்திரருடைய அஷ்டோத்ர சத நாமங்களைக் கூறினேன். அவைகள் பிராணிகளுடைய அதிர்ஷ்ட வசத்தால், இவ்வுலகத்தி லெங்கும் பரவும். அதை ஜனங்கள் பாராயணஞ்செய்து நற்கதி பெறுவார்கள். இந்நாமங்களைச் சொன்ன மாத்திரத்தில் பிர்மஹத்தியாதி பாபங்களொழியும். பயமற்றுத்திரியும் யமபடர்கள் அணுகார்கள். இந்த நாமங்களைச்சொன்ன மாத்திரத்தில், நெடு நாளாய் அறிய முடியாத ஸ்ரீராமபிரானுடைய பரமாத்சொரூபம் பிராணிகளுடைய மனதில் தெளிவாய்ப் பிரகாசிக்கும். இத்தோத்திரத்தை ஒரு மாத காலம் பக்தியுடன் பாராயணஞ் செய்பவன், துர்த்தானம் துர்ப்போஜனம், துர்பாஷாணம், இவைகளாலேற்பட்டிருக்கும் பாபங்களிலிருந்தும் விடுபடுவான். இத்தோத்திரத்தை உச்சரிப்பவனும் ஓதுகிறவனும் மனதில் சிந்திப்பவனும் பிறரால் கேட்பவனும் மகா பாதகங்களிலிருந்து விடுபட்டு ஸ்ரீராமநிஷ்டையை அடைவான்; மகா பாதகங்களைச் செய்பவன் அப்பாபத்திலிருந்து விலகப் பிராயச்சித்தம் பெறவேண்டினால், இத்தோத்திரத்தை ஒரு மாத காலம் பாராயணஞ்செய்வதே உத்தம மான பிராயச்சித்தம். சுருதி ஸ்மிருதி புராண இதிகாச ஆகமங்களை நூற்றுக்கணக்காகப்பாராயண செய்ததின் பலன் இத்தோத்திரத்தை ஒருமுறை பாராயணஞ் செய்ததின் பதினாறி லொருபங்குக்கு ஒப்பாகாது. புத்திரனல்லாதவன் புத்திரபாக்கியத்தையும், த்ரவிய மில்லாதவன் த்ரவியத்தையும், மனைவி யில்லாதவன் மனைவியையும், சம்பத் தில்லாதவன் சம்பத்தையும் இத்தோத்திர பாராயணத்தா லடைவான். கும்போதர முனிவர் யாக குண்டத்திற் கருகில், சீதா ராமருடைய ஸந்நிதியில், ஸ்தோத்தரித்த இராமாஷ்டோத்ர சதநாமஸ்தோத்திரத்தை உனக்குக் கூறினேன்.

ஸ்ரீ ராமாஷ்டோத்தர சதநாமஸ்தோத்திரத்தைக் கூறும்

5-வது சருக்கம்.

முற்றிற்று.

களைச் சுற்றிலும் வாரநாரிகளும் அவர்களைச் சுற்றிலும் வந்திமாகதர்களும் இவ்விதமாக சகல ஜனங்களும் உட்கார்ந்திருந்து சுகமாக யாகோத்ஸவங்களைத் தரிசிப்பார்கள்.

ரித்விக்குகள் மாத்தியான்ன காலம் வரும்வரையில் நிதானமாக ஹோமங்களைச்செய்து விட்டு, பிறகு மாத்தியான்னிகம்செய்வதற்காக சரயூநதிக்குச் செல்வார்கள். அவர்கள் மாத்தியான்ஹிகத்தை முடித்துக்கொண்டு மறுபடி யாகமண்டபம் வந்து சக்ரம்போல் வட்டமான அவரவர்களுடைய சொர்ணாசனத்தின்மீது வீற்றிருப்பார்கள். ஈசுவரர்முதலிய தேவர்களும் இவ்விதமாகவே அவரவர்களுடைய திவ்யாசனத்தில் வீற்றிருப்பார்கள். இலக்ஷ்மணர் பரதசத்ருக்னர்களுடன் அவர்கள் யாவரையும் பூஜித்து, அவர்கள் முன்பாக சொர்ணபோஜனபாத்திரங்களை வைத்து, பரிமாறுவதற்காகச் சீதையை அவசரப்படுத்துவார். பிறகு சீதை ஊர்மிளை, மாண்டவி, சுதகீர்த்தி, மந்திரிபத்னிகள், மித்ரர்களுடைய பத்னிகள் இவர்கள் ஆயிரக்கணக்காகச்சேர்ந்து, காமதேனு உதவும்சிரேஷ்டமான அன்னம்முதலிய போஜனபதார்த்தங்களை யாகமண்டபத்தில் வீற்றிருக்கும் யாவருக்கும் பரிமாறுவார்கள். அப்படியவர்கள்பரிமாறும்பொழுது முனிவர்கள் முதலிய யாவரும் மிகவும்சந்தோஷமடைவார்கள்.

இப்படிச் சீதை முதலியவர்கள் பரிமாறும்போது அவர்களுடைய கங்கணம் நூபுரம் நூபுரமணிகள் இவைகளுடைய சப்தமானது யாகமண்டப முழுதும் பரவும். இப்படிவேதியர்கள் அனைவரும் போஜனம்பண்ணும் சமயத்தில், "யாவரும் அவர்களிஷ்டப்படி சாப்பிடவேண்டும். அவரவர் மனதிற் கருதியவைகளைக் கேட்கவேண்டும். போஜனம் செய்வதில் சிறிதும் சங்கை செய்ய வேண்டாம். மனம் பிடிக்காததைத் தள்ளி விடலாம். போஜனஞ்செய்பவர்கள் திருப்தியடையும்படி பக்குவான்னங்களை அவர்கள் கேட்காமலிருந்தபோதிலும் பரிமாறவேண்டும். நெய்யைத்தாரை தாரையாகவிடவேண்டும். இவைகள் இராமபிரானுடைய ஆக்ஞை" என்று இவ்வாறு ஆங்காங்கு சப்த முண்டாகும். கடைசியாக

"சுவாமி! கொஞ்சம் அன்னம்! கொஞ்சம் அன்னம் சுவாமி!" என்று கேட்பதும் புசிப்போர்கள் போதும் என்று பதிலளிப்பதுமாக யாக மண்டபத்திலிருந்தும் சப்தங்கேட்கும். இப்பொழுது இராமபிரான் தாமே புறப்பட்டு வேதியர்களுடைய பந்திகள்தோறுஞ்சென்று "சுவாமிகளே! இன்னும் ஏதாவது அபேக்ஷையுண்டோ? என்று பிரார்த்திப்பர். சிலர் தங்களுடைய அபேக்ஷையைத் தெரிவித்துத் திருப்தியாகப் புசிப்பார்கள். அப்பொழுது இராமபிரான் அவர்களுக்கு விசிறியெடுத்து விசிறுவார். வேதியர்களும் முனிவர்களும் இவ்வாறு போஜனஞ்செய்தெழுந்த பிறகு இராமபிரான் அவர்களுக்குத் தாம்பூலங்கொடுத்து சொர்ண நாணயங்களைத் தக்ஷிணையாக அளிப்பார். அவர்கள் அவைகளைத் திருப்தியாகப் பெற்றுக்கொண்டு அவரவர் வாசஸ்தலம் செல்வார்கள். பிறகு முன் கூறிய உபசாராதிகள் பெற்று மன்னர்கள் புசிப்பார்கள். பிறகு வைசியர்களும் அவ்வாறே புசிப்பார்கள். தேவஸ்திரீகளும் முனிவர்களுடைய ஸ்திரீகளுடன் ஸ்திரீ போஜனசாலையில் சீதா பிராட்டியினுடைய உபசாரணையை யடைந்து போஜனம் செய்வார்கள். இதன் பின்னர், மன்னர்களுடைய ஸ்திரீகளும் இவ்வித உபசாரங்களுடனேயே புசிப்பார்கள். பிறகு வைசிய ஸ்திரீகளும் பட்டணத்து ஸ்திரீகளும் புசிப்பார்கள். அதன் பின்சூத்திரஸ்திரீகளும் மனமகிழ்ச்சியுடன் புசிப்பார்கள். பிறகு புருஷர்களுடைய சாலைகளில், வானரர்கள், அரக்கர்கள், கரடிகள், பட்டணத்தவர், தேசத்தவர் இவர்கள் யாவரும் சுகமாகப் புசிப்பார்கள். இதன் பிறகு சூத்திரர்களும் பின்மன்னர்களுடைய சேவகர்களும் புசிப்பார்கள். இவ்வசுவமேதயாகத்தில் பசியாலாவது தடுக்கப்பட்டாவது வருந்தியவன் ஒருவனுங்கிடையாது: இவர்கள் யாவரும் புசித்த பிறகு ஸ்ரீராமபிரான் தமது மித்திரர்கள், பந்துக்கள், மந்திரிமார்கள் இவர்களுடன் சீதை பலவாறு பிரார்த்திக்கக் கவலையற்றுப் புசிப்பார். பூமியின் தூளிகள் தண்ணீர்த்திவலைகள் ஆகாய நக்ஷத்திரங்கள் இவைகள் யாவையும் கணக்கிடின் எவ்வளவு கூடுமோ அவ்வளவு ஸ்திரீ புருஷர்கள் இந்த அசுவமேதயாகத்தில்

நாள் தோறும் புசித்து வருவார்கள். இவ்வாறனந்த கோடி ஜனங்களும் புசித்தபின்னரே சீதாபிராட்டி தனது மாமியார், மித்திர பத்னிகள் ஓரகத்திமார்கள் இவர்களுடன் திவ்யான்ன போஜனம் செய்வாள்.

இப்படி யாவருக்கும் திருப்தியாகப் போஜனமிட்டுத் தாம் பூலங் கொடுக்கும்பொழுது நான்காவது ஜாமத் தொடக்கமாக விருக்கும்.

இந்த நான்காவது ஜாமத்தில் யாகமண்டபத்தில் சித்ரக்கம்பளங்கள் விரித்து அதில் ஏற்படுத்தி யிருக்கும் சபையில் ஸ்ரீ ராமபிரான் சரித்திரங்கள், நாம கீர்த்தனங்கள், புண்ணியகரமான சாஸ்திரவாதங்கள், கீதம், வாரநாரிகளின் நர்த்தனம் இவைகளை மனோகரமாகச் செய்வித்து, மறுபடி ஹோமகாலம்வரும்வரையில் விநோதமாக அவைகளைச் சிரவணஞ்செய்து வருவார். பின் சந்தியாகாலத்தில் சந்தியா வந்தனம் ஹோமம் இவைகளை விதிப்படி செய்து, பின் இரவு இரண்டு ஜாமம்வரையில் முற்கூறியபடியே காலத்தைக் கழிப்பார். பிறகு எல்லாரையும் நித்திரைக்குச் செல்லும்படி உத்தரவளிப்பார். அவர் உத்தரவுப்படியே யாவரும் தங்கள் தங்கள் விடுதிக்குச்சென்று நித்திரை செய்வார்கள். கடைசியாக இராமபிரான் ஒரு வெண்பட்டைத் தரையில் விரித்து, இஷ்டதேவதைகளைச் சிந்தித்துச் சீதையுடன் நியமமாக அதில் நித்திரை செய்வார். அரசர்களுக்குத் தங்கள் ஆக்ஞையை மறுப்பதும் வேதியர்களுக்குச் சம்மானத்தைத்தடுப்பதும் பாரியைகளுக்குத் தனிப்படுக்கை ஏற்படுத்துவதுமாகிய இவைகள் ஆயுதமின்றி வதைப்பதை ஒக்கும். அதனாலேதான் ஸ்ரீராமபிரான் சீதையுடன் சயனித்தார். ஸ்ரீ ராமபிரானுடைய அசுவமேதயாக உற்சவத்தின் ஒவ்வொரு நாளும் இவ்வாறே யாவும் நடந்து வந்தன.

ஸ்ரீராமபிரானுடைய அசுவமேத யாகத்தில் நாடோறும்
நடைபெறுவனவற்றைக்கூறும்.

6-வது சருக்கம்

முற்றிற்று.

7 வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

இவ்வாறு நடந்து வருங்காலையில், ஹஸ்த்தியாஹஸ் என்னும் தினத்தன்று மகாமகிமையுள்ளவர்களாகிய ரித்விக்குகள், சதஸ்யர்கள், இவர்களை ஸ்ரீ ராமபிரான் சிரத்தையுடன் நன்றாகப் பூஜித்தார். பிறகு சித்திரைமாதம் சுக்லபக்ஷம் பிரதமைதிதியில் அந்த யாகமண்டபத்தில் அரசர்கள் விதிப்படி துவஜாரோபணம் செய்தார்கள்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஆசாரியரே! யாகமண்டபத்தில், அரசர்கள் துவஜாரோபணம் செய்ததாகக் கூறினீர்கள். அதன் விதியை எனக்குத் தெளிவாக விவரித்துக் கூறவேண்டுமென்றார்.

இராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! நீ கேட்டகேள்வி யாவருக்கும் உபகாரத்தைத் தரத்தக்கது. அதை யான் உனக்குக் கூறுகிறேன், கவனித்துக் கேள். இது ஒரு வருஷகாலம் செய்யவேண்டிய விரதம். இதற்காகவே அரசர்கள் யாவரும் வந்திருக்கின்றனர். அவர்கள் யாவரும் இந்த யக்ஞமண்டபத்தில் மனமகிழ்ச்சியுடன் துவஜாரோபணஞ் செய்திருக்கிறார்கள். இங்குச் செய்யாவிட்டால் விஷ்ணு ஆலயத்திலாவது அவசியம் செய்யவேண்டியது. இது ஒவ்வொரு வருஷமும் சித்திரைமாதத்தில், சுக்லப்பிரதமையில் செய்யவேண்டியது. அல்லது ஸ்ரீராமநவமி தினத்தில் செய்யவேண்டும். இவ்விரண்டுதினமும் இல்லையாயின் மேற்கூறிய மாதத்தில் சுக்லபக்ஷ தசமியிலாவது, அற்பசிமாத சுக்லபக்ஷதசமியிலாவது, செய்யவேண்டும். இவ்விரதத்துக்குக் காலங்களைத் தெரிவித்தேன். இனி மகாபாபத்தைப் போக்கிப் புண்ணியத்தைத் தருவதும் ஸ்ரீராமபிரா

னுக்குச் சந்தோஷ மளிப்பதுமான துவஜாரோபண மென்னும் விரதத்தைக் கூறுகின்றேன் கேள். இவ்வுத்தமமான துவஜாரோபணத்தை விஷ்ணு ஆலயத்தில் செய்பவனைப் பிரம்மதேவன் முதலியவர்கள் பூஜிப்பார்களெனில், யாம் இதைப்பற்றிக் கூறவேண்டுமோ? மிகவும் ஏழையான ஒரு குடும்பிக்கு சொர்ணத்தில் ஆயிரம் பாரங்களைக் கொடுப்பதால் உண்டாகும் பயனை, ஒருதரம் இத் துவஜாரோபண விரதம் செய்வதால் பெறக்கூடும். இத் துவஜாரோபண விரதத்துக்கு உத்தமமான கங்கா ஸ்நானமும் ஈடாகாது. துளசி பூஜையும் சிவலிங்க பூஜையும் இவ்விதமே தான். சித்திரைமாதத்தில் இவ்விரதத்தை யாவரும் அவசியம் செய்யவேண்டும். சித்திரைமாதஞ் செய்யத்தவறினால் அடுத்த பருவகாலங்களில் அவசியம் செய்யவேண்டும். விரதம் செய்பவன் சித்திரைமாதம்சுக்லபட்சம் பிரதமைதிதியில்காலையிலெழுந்திருந்து தந்த சுத்தி முதலியவைகளைச் செய்துகொண்டு சங்கற்பாதிகளுடன் ஸ்நானஞ் செய்து நித்திய கர்மானுஷ்டானத்தை முடித்துக்கொண்டு முதலில் விஷ்ணு பூஜையைச் செய்யவேண்டும். பிறகு நான்கு வேதியர்களை வைத்துக்கொண்டு சொஸ்தி வாசகத்துடன் நாந்திசிராத்தம் செய்யவேண்டும். இரண்டு துவஜஸ்தம்பங்களில் இரண்டு வஸ்திரங்களைச் சுற்றி அவைகளைக் காயத்திரி மந்திர முச்சரித்து புரோக்ஷணம் செய்து, கருடனும் ஆஞ்சநேயரும் வரைந்த இரண்டு பதாகைகளை அவைகளிற் கட்டவேண்டும். பின் சூரியன் சந்திரன் மாருதி வைநதேயன் இவர்களைப் பூஜிக்கவேண்டியது. இரண்டு கலசங்களில் தாதாவையும் விதாதாவையும் ஆவாகனஞ் செய்து, மஞ்சள், அட்சதை, அறுகம்புல், வெண்மையான மலர்கள் இவைகளால் பூஜிக்கவேண்டும். பிறகு ஒரு பசுவின் தோல் அளவுள்ள ஓரிடத்தைமெழுகி அங்கு அக்னியைப் பிரதிஷ்டை செய்து, அதில் முதலில் ஆஜ்ய பாகம் என்னும் ஹோமங்களைச் செய்து, பிறகு கிரமமாக பாயஸத்தாலும் நெய்யினாலும் நூற்றெட்டுஹோமங்கள் செய்யவேண்டும். அந்த ஹோமங்களை முதலில் புருஷஸூக்த மந்திரத்தாலும் பிறகு விஷ்ணோர்நுகம் என்னும் மந்திரத்தாலும்

செய்யவேண்டும். இதன் பின் வைநதேயாயஸ்வாஹா என்று எட்டுத் தடவை செய்யவேண்டும். இவ்விதமே மாருதயேஸ்வாஹா என்று ஹோமம் செய்யவேண்டும். பிறகு ஸோமோதேனும் என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும். இதன் பின் சூரிய மந்திரங்களையும் சாந்தி ஸூக்தங்களையும் பக்தியுடன் அங்கு ஜபிக்கவேண்டும். பிறகு அன்றிரவு சுத்தமாக ஹரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கண்விழித்திருக்கவேண்டும். இவ்விதம் ஒன்பது நாள் பரமோற்சவத்துடனிருந்து சத்சம்பாஷணைகளைச் செய்து வரவேண்டும். பிறகு பத்தாவது தினத்தில் காலையில் எழுந்திருந்து ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சந்தனம் புஷ்பம் அக்ஷதை இவைகளால் முன்போலவே கிரமமாகப் பூஜிக்கவேண்டும். பின்பு மங்கள வாத்தியம், வாரஸ்திரீ நர்த்தனம், ஸ்தோத்திரங்கள் இவைகளுடன் துவஜஸ்தம்பங்களை எடுத்துக்கொண்டுபோய் விஷ்ணுவாலயத்திற்கெதிரில் வாசலில் சந்தோஷமாக நாட்டவேண்டும். பிறகு அந்த துவஜஸ்தம்பங்களுக்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை இவைகளால் பூஜை செய்து, தூபதீபங் கொடுத்து மனோகரமான பலகாரங்களை நிவேதிக்கவேண்டும். பின் விஷ்ணு பூஜை செய்யவேண்டும். பிரதமைமுதல் தசமிவரையில், விரதமிருப்பவன் தன்னுடைய கிருகத்தில் துவஜங்களுக்குப் பூஜை செய்து ஏகாதசியன்று விஷ்ணுவாலயத்தில் அத் துவஜங்களைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அல்லது தசமி, துவிதியை, சதுர்த்தி, அஷ்டமி, சஷ்டி, இந்தத் தினங்களிலாவது இப்படி விரதத்தை முடிக்கவேண்டும். விரதத்தின் ஆரம்பம் மட்டும் பிரதமைதினமாகவேயிருக்கவேண்டும். முற்கூறிய மாதங்களில் தான் ஹரி பூஜை செய்யவேண்டியது; இதரமாதங்களில் செய்யக் கூடாது. இதுவரை விஷ்ணு துவஜ விரதத்தின் வரலாற்றைத் தெரிவித்தேன். இனிமேல் சிவபெருமானுடைய துவஜ விரதத்தின் வரலாறு கூறுகிறேன் கேள்.

விஷ்ணுதாஸ! மாகமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில், நந்தி, பிருங்கி இவ்வடையாளங்கள் எழுதப்பட்ட பதாகைகள் கட்டிய இரண்டு துவஜங்களைச் சிவாலயத்துக்கெதிரில் நாட்டி முற்

கூறிய முறைப்படி பூஜித்து வரவேண்டும். சித்திரை மாதத்தில் அல்லது ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமியில் உமாதேவியின் ஆலயத்தில் துவஜங்களை நாட்டிப் பூஜிக்கவேண்டியது. ஆவணி மாதம் சுக்லபக்ஷம் சதுர்த்தியில் விக்னேசுவராலய துவஜாரோபணஞ் செய்யவேண்டும். மார்கழி மாதம் சுக்ல பக்ஷம் சஷ்டியில் சூரியனுடைய ஆலய துவஜாரோபணம் செய்யவேண்டும். சமஸ்த தேவர்களுடைய உற்சவதினங்களிலும் துவஜம் நாட்டி முன் சொன்னபடி பூஜை புரியவேண்டும். இவ்விதம் தேவாலயங்களில், மங்களகரமான துவஜஸ்தம்பங்களை நாட்டி, திரவியக்குறைவின்றி சாஸ்திரோக்தமாக விஷ்ணுவைப் பூசித்து, வலம் வந்து, பின்வரும் சுலோகங்களைக் கூறித் துதிக்கவேண்டும்.

த்⁴வஜாரோபணப்ரகரணே விதே⁴ய
விஷ்ணுஸ்தோத்ரம்

நமஸ்தே புண்ட³ரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபா⁴வந ।
நமஸ்தே(அ)ஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ ॥
யேநேத³மகி²லம் ஜாதம் யஸ்மிந் ஸர்வம் ப்ரதிஷ்டி²தம் ।
லயமேஷ்யதி யத்ரைதத் தம் ப்ரபந்நோ(அ)ஸ்மி கேஶவம் ॥
ந ஜாநந்தி பரம் தே³வம் ஸர்வே ப்³ரஹ்மாத³யஸ்ஸுரா: ।
யோகி³நோ யம் ப்ரஶாம் ஸஞ்சிந்தாவதே ஜ்ஞா நரூபிணம் ॥
அந்தரிக்ஷம் ச நாபி⁴ர்யஸ்ய சைவ ஹி ।
பாதா³தலம் ச மூர்த்⁴நா த்³யௌஸ்தம் வந்தே³ விஶ்வரூபிணம் ॥
யஸ்ய ஶ்ரோத்ரே தி³ஶஸ்ஸர்வா யச்சக்ஷுர்தி³நக்ருச்சஶீ ।
ருக்ஸாம யஜுஷா யேந தம் வந்தே³ ப்³ரஹ்மரூபிணம் ॥
யந்முகா²த் ப்³ராஹ்மணா ஜாதா யத்³பா³ஹோ ராஜஸ்யவாஹவா: ।
வைஶ்யா யஸ்யோருதோ ஜாதா: பத்³ப்⁴யாம் ஶூத்³ரஸ்ய
[ஜாயத ॥௬॥

மநஸஶ்சந்த்ரமா ஜாதோ ஸூர்யஶ்சக்ஷுஷஸ்ததா |
ப்ராணேப்ய: பவநோ ஜாதோ முகாதக்நிரஜாயத ‖
பாபஸந்தாபஶமநே க்ருஷ்ண பதந்தி பாபக்ஷயம் |
ஸ்வஹாவஶிஷ்டம் பரம் நிஷ்காரம் நிரஞ்ஜநம் ‖௮‖
க்ஷீராப்திஶாயிநம் தேவமநந்தமபராஜிதம் |
ஸஹஸ்ரஶீர்ஷம் விஷ்ணும் ஶ்ரீவத்ஸம் நமாம்யஹம் ‖ ‖௯‖
ப்ரயிவ்யாதீநி பூதாநி தந்மாத்ராணீந்த்ரியாணி ச |
ஸூக்ஷ்மாணி ச யதோபஸம்ஸ்ருஷ்டம் பரமேஶ்வரேதா
யஸ்ய ஸ்வரூபம் யாமஸ்வரேகாத்மகோ த்ருஷ்டம் [ஸ்வயம் ‖

நிர்குணம் பரம் ஸூக்ஷ்மம் ப்ராணோதாரஶீர்ஷம்
நிஷ்காரணம் பரம் ஸ்வரேதாஸ்வயம்புவம் | [மாம:|
யமாமநந்தி யோகீந்த்ரா: ஸர்வகாரணகாரணம் ‖
ஸ தேவோ விஷ்ணுருத்தம் ப்ரயுஷ்டோதாநதேகஶ: ‖
ஶ்ரீதேவகாநாம் ஸம்பூதாத்மாநமேவ ஸ்வஹாமேவ: |
நிர்குண: பரமாத்மா ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖௧௫‖

ஹ்ருதயேஷ்வரதேவேஶ்வரோமாயயா மோஹிதாத்மநாம் |
ஜ்ஞாநிநாம் ஸ்வயம்பூஸ்ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖
சதுர்பிஶ்ச சதுர்பிஶ்ச த்வாப்யாம் பஞ்சபிரேவ ச |
ஹூயதே ச புநர்த்வாப்யாம் ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖
ஜ்ஞாநிநாம் கர்மிணாமேவ ததா ஸக்ததாம் ந்ருணாம் |
கதிர்தாதா விஶ்வஹர்தா ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖௧௬‖

ஜகத்ஸ்ருஷ்டிம் யோ தேஹமாஸ்ரித்ய மாயயா ஹரி: |
ஸ்வயம் யந்தி விப்ராயா ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖௧௭‖

யமாமநந்தி வேதஜ்ஞா: ஸ்வயம்பூதாநமீஶ்வரம் |
நிர்குணஞ்ச குணாதாரம் ஸ மே விஷ்ணு: ப்ரஸீதது ‖

ஸர்வேஶ: ஸர்வஸாக்ஷீ ஸாத்வதாம் ப்ரபு: |
விஶ்வஸ்ய ஸர்வஜ்ஞ: ஸர்வேஶ விஷ்ணு: ப்ரகீர்த்தித: ||
யஇதம் கீர்த்தயேந்நித்யம் ஸ்தோத்ராணாமுத்தமோத்தமம் |
ஸர்வபாப விநிர்முக்தோ விஷ்ணுலோகே மஹீயதே ||

துவஜாரோபணகாலத்தில் செய்யும் விஷ்ணுஸ்தோத்திரம்.

ஏ புண்டரீகாக்ஷ! விசுவபாவன! ருஷீகேச! மகா புருஷ பூர்வஜ! உமக்கு வந்தனம். (க)

எவரிடத்திலிருந்து உலகம் உற்பத்தியாயிற்றோ, எவரிடத்தில் அது இருந்து வருகிறதோ, கடைசியாக அது எவரிடத்தில் மறைகின்றதோ அந்த மாதவனை நமஸ்கரிக்கின்றேன். (உ)

பிர்மா முதலிய தேவர்கள் எவனைப் பரபிர்ம்மமென்று அறிகிறதில்லையோ யோகிகள் எவனை ஞானசொரூபியென்று அறிகின்றார்களோ அவனை வணங்குகின்றேன். (ங)

எவருடைய பாதத்திலிருந்து பூமி புண்டாயிற்றோ எவருக்குப் பாதமுதற்கொண்டு நாபிவரையில் ஆகாயமாகவும் தலைசொர்க்கமாகவுமிருக்கின்றனவோ அந்த விசுவரூபியைப் பணிகின்றேன்.

எவருக்குத் திக்குகள் செவிகளோ எவருக்குச் சந்திர சூரியர்கள் கண்களோ, ருக்கு யஜுஸ் சாமம் முதலிய வேதங்கள் யாரால் வெளியிடப்பட்டனவோ அவனைத் தொழுகின்றேன். (ரு)

எவருடைய முகத்திலிருந்து பிராமணர்களும் எவருடைய கைகளிலிருந்து மன்னர்களும் எவருடைய துடைகளிலிருந்து வைசியர்களும் எவருடைய பாதங்களிலிருந்து சூத்திரர்களும்பிறந்தார்களோ அவருக்கு வந்தனம். (சு)

எவருடைய மனதிலிருந்து சந்திரனும் எவருடைய கண்களிலிருந்து சூரியனும் எவருடைய பிராணனிலிருந்து காற்றும் எவருடைய முகத்திலிருந்து அக்கினியு முண்டாயிற்றோ அவருக்கு வந்தனம். (எ)

பாபங்களைத் தகிந்தும் மாத்திரத்தால் எவர் புருஷரென்று சொல்லப்படுகிறாரோ எவர் இயற்கையிலே நிர்மலமும் பரிசுத்த மும் விகாரமின்மையும் பற்றுதலின்மையும் உடையவரோ அவ ருக்கு வந்தனம். (அ)

க்ஷீராப்தி சயனரும் பிரகாசமானவரும் முடிவற்றவரும் ஒரு வராலும் ஜயிக்கப்படாதவரும் பக்தவத்ஸலரும் பக்தியால் அடை யத்தக்கவருமாயிருக்கிற விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன். (கூ)

பிருதிவி முதலிய ஐந்து பூதங்களும் தன் மாத்திரைகளும் இந்திரியங்களும் சூட்சுமேந்திரியங்களும் எவரால் உண்டாக்கப் பட்டனவோ அவரைத் திக்குகள்தோறும் நோக்கி நமஸ்கரிக் கின் றேன். (ய)

பரபிர்மமும் தேஜோரூபியும் லோகங்களிலுள்ள உத்தமர்க ளுக்குள் உத்தமரும் நிற்குணரும் பரரும் சூட்சுமருமான விஷ் ணுவை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன். (கக)

நிர்விகாரரும் அஜரும் சுத்தசொரூபியும் எங்கும் அக்கிசொ ரூபமா யிருப்பவரும் ஈசுவரரும் சமஸ்தகாரணங்களுக்கும் காரண பூதரும், யோகிந்திரர்களால் வணங்கப்படுகிறவருமான பகவானை நமஸ்கரிக்கின்றேன். (கஉ)

நிற்குணரும் அழிவற்றவரும் பரமானந்த சொரூபருமாக விருந்து ஆதியில் ஒரே மகாபூதமாகி, பிறகு அளவற்ற பூதங்க ளாகி மூவுலகங்களிலும் வியாபித்து சமஸ்தத்தையும் புசிக்கிற விஷ்ணுவானவர் அநுக்கிரகிக்கட்டும். (கங)

எல்லாருடைய இருதயத்திலிருப்பவராயினும்மாயாமோகிதர் களுக்குத்தூரத்திலும் ஞானிகளுக்குச் சர்வதர்ம சொரூபியாகவு மிருப்பவரான விஷ்ணுவானவர் எனக்கு அநுக்கிரகிக்கட்டும்.(கச)

நான்கு, நான்கு, இரண்டு, ஐந்து- மறுபடி இரண்டு ஆகிய இக்கணக்குள்ள மந்திரங்களை உச்சரித்து ஹோமம் செய்யப்படு கிற விஷ்ணுதேவர் அநுக்கிரகிக்கட்டும். (கரு)

ஞானிகள், கர்மிகள், பக்திமான்களான அரசர்கள் இவர்க ளுக்கு நற்கதியளிப்பவரும் விசுவபோக்தாவுமான விஷ்ணுவான வர் அநுக்கிரகிக்கட்டும். (கசு)

உலக நன்மையின் பொருட்டு, எவர் விளையாட்டாக சரீர மெடுக்கின்றாரோ, எவரை ஞானிகள் பூஜிக்கின்றனரோ அந்த ஹரியானவர் அனுக்கிரகிக்கட்டும். (கள

எப்பொழுதும் பெரியோர்களால் தியானிக்கப்படும் ஆநந்த மூர்த்தியும் குணாதீதரும் குணாதாரருமான விஷ்ணுவானவர் அனுக்கிரகிக்கட்டும். (கஅ)

பரமேசுவரரும், பரமானந்தரும், பராத்பரரும், பிரபுவும், சித்ரூபமென்று அறியத்தக்கவருமான விஷ்ணுவானவர் அனுக்கிரகிக்கட்டும். (கசு)

நாள்தோறும் இந்த உத்தமமான ஸ்தோத்திரப்பாக்களைப் பாராயணஞ் செய்கிறவன் சர்வ பாபங்களிலிருந்து விலகி விஷ்ணுலோகத்தை யடைகிறான். இவ்விதம் விஷ்ணு ஸ்தோத்திரஞ் செய்து இதன் பின், ஆசாரியர் பிராமணர்கள் இவர்களுக்கு வஸ்திரம் தக்ஷிணைகளை யளித்துப் பூஜிக்கவேண்டும். இதற்குப் பின் பக்தியுடன் பிராமணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். ஏ விஷ்ணுதாஸ! பிறகு புத்திர, மித்திர, களத்திராதிகளுடனும் பந்துக்களுடனும் மௌனமாக விருந்து நாராயண நாமோச்சாரணஞ்செய்துகொண்டு பாரணைசெய்ய வேண்டும். இப்படிப்பட்ட உத்தமமான துவஜாரோபண விரதத்தைச் செய்து முடிப்பவனுடைய புண்ணியத்தைக் கூறுகிறேன் நீ கேள். துவஜஸ்தம்பத்திற் கட்டியிருக்கும் வஸ்திரமானது எவ்வளவு காலம் காற்றினால் அசைந்துகொண்டிருக்குமோ அக்காலம் வரையில் அவனுடைய பாபம் கூட்டங் கூட்டமாக நசித்துவரும். இதில் ஐயமில்லை. மகாபாதகம் செய்தவனானும் வேறு எந்தப் பாபங்களைப் புரிந்தவனானாலும் விஷ்ணு ஆலயத்தில் துவஜாரோபணஞ்செய்வானேயாகில் அப்பாபங்கள் சிறிதும் அவனைச் சேர்கிறதில்லை. ஹரியினுடைய ஆலயத்தில் நாட்டப்பட்ட துவஜமானது எந்நாள் வரையில் அழியாமலிருக்குமோ அந்நாட்களில் நாளொன்றுக்கு ஆயிரம்யுகக் கணக்காக வைகுண்டத்தில் விஷ்ணு சமீபத்தில் வசிப்பான். தர்மஞ் செய்கிறவர்கள் அவ்

விதமான் துவஜத்தைப் பார்த்து வணங்கினால், அவர்கள் கோடிக் கணக்கான உபபாதகங்களிலிருந்தும் விலகுகிறார்கள். விஷ்ணு வாலயத்தில் நாட்டியிருக்கும் துவஜஸ்தம்பமானது தனக்குமேல் கட்டியிருக்கும் வஸ்திரத்தைக் காற்றின் மூலமாக அசைத்துக் கொண்டு நாட்டினவனுடைய பாபங்கள் முழுவதையும் அரை நிமிஷ நேரத்திற்குள்ளாக உதறித் தொலைத்து விடுகிறது. ஏ விஷ்ணுதாஸ ! நீ கேட்டபடியே மனோகரமான துவஜாரோபண மகாத்மியத்தை அதன் விதியுடன் இவ்விதம் உனக்குக் கூறினேன். ஆகையால் மன்னர்கள் யாவரும் இன்று சித்திரை மாதம் சுக்கிலபக்ஷப் பிரதமை திதி வந்ததை யறிந்து அதில் துவஜாரோபண விரதத்தை ஆரம்பித்து, துவஜத்திற்கு ஒவ்வொருவரும் தத்தம் கிருகத்தில் பூஜை செய்து ஸ்ரீராமபிரானைவிஷ்ணுவென்று அறிந்து அவருடைய யாகமண்டபத்திலேயே மறுநாளாகிய துவிதியை யன்று தனித்தனியே ஒவ்வொருவரும் துவஜாரோபணம் செய்தார்கள். துவஜத்தை விரதமனுஷ்டிப்பவன் ஒன்பது நாள் தனது கிருகத்தில் வைத்துப் பூஜை செய்து பிறகு நாட்டலாம். அவரவருடைய சக்திக்கியன்றவாறு இந்த விரதத்தை அநுஷ்டிக்கலாம். இச்சமயத்தில் அரசர்கள் அசுவமேத மகோற்சவத்தைத் தரிசிப்பதன் நிமித்தம் ஒருநாள் பூஜித்து துவஜாரோபணம் செய்தார்கள். ஸ்ரீராமபிரானும் இதற்கு முன்னமே மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி யன்று பரமசிவனுடையமுன்பு துவஜாரோபண உற்சவத்வதைச் செய்திருக்கிறார். அப்பொழுது நாட்டின துவஜங்கள் ஆகாசமளாவி மிக உன்னதமாக விளங்குகின்றன. இந்தத்துவஜாரோபண சரித்திரமானது மிகவும் மனோகரமானது. சகல சம்பத்தையும் அளிக்கக் கூடியது. ஆகையால் புண்ணியகரமான இச்சரித்திரத்தைப் படிப்பவரும் அவரவர் மனக்கோரிக்கைகளைப் பெறுவார்கள்.

துவஜாரோபண விரதத்தை விளக்கும்

7-வது சருக்கம்

முற்றிற்று.

8 வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு சித்திரைமாத சுக்லபக்ஷத்தில் இராமபிரானுடைய ஜன்மதினமாகிய நவமிதிதியில் அசுவமேதயாக பலனைத்தரும் அவபிருத ஸ்நானத்தைச் செய்விக்க, குருவாகிய வசிஷ்டமுனிவர் கருதினார். அப்பொழுது வெயிலின் தாபம் அதிகமாயிருந்தமையால் ஸ்ரீராமபிரானுக்கு ஒருவிதமான சமிக்ஞை செய்து அவசரப்படுத்தினார். அந்த சமிக்ஞை அறிந்த இராமபிரான் இலட்சுமணரைப் பார்த்து ஏ இலட்சுமணா! இன்று அவபிருத ஸ்நானஞ்செய்வதற்கு யாவரும் உற்சவகோலத்துடன் இராமதீர்த்தம் செல்லவேண்டும். அதற்காக நீ செய்யவேண்டியவைகள் எவையெனில், இங்கு வந்திருக்கும் அரசர்கள் யாவரும் அந்தப்புர ஸ்திரீகளுடனும் தங்கள் தங்கள் சைன்னியங்களுடனும் அசுவமேத மண்டபத்தி லிருந்துகொண்டே அவரவர்களுடைய ரதம் கஜம் துரகம் பதாதி ஒட்டகம் சிவிகை இவைகளை வரவழைத்து வைத்துக் கொள்ளும்படி கட்டளையிடவேண்டும். நவவாத்தியங்கள் எங்கும் முழங்கவேண்டும். பதாகைகளுடன் துவஜங்கள் தோரணங்கள் இவைகளை எங்கும் கட்டவேண்டும். யாகமண்டபத்தில் முத்துமாலை பவளமாலை மலர்மாலை இவைகளைக் கட்டி அலங்கரிக்க வேண்டும். அந்த யாகமண்டபத்திலிருந்து ராமதீர்த்தம் போகும் வரையிலும் மேற்கூறியபடியே அலங்கரித்து, சந்தனக் குழம்புகளைத் தெளித்து, குளிர்ச்சிசெய்விக்க வேண்டும். வழியில் இருபக்கங்களிலும் வாழை கரும்பு பேரீச்சங்குலைகள் இவைகளைக்கொண்டு அலங்கரிக்கவேண்டும். பூச்செடிகளைவழிநெடுகவைத்து திவ்ய அலங்காரஞ் செய்யவேண்டும். வாரநாரிகள் நர்த்தனஞ் செய்யவேண்டும். பட்டுகளாலும் புஷ்பங்களாலும் வழி முழுதும் பந்தலிடவேண்டும். உனது புத்தியைக்கொண்டும் இன்னும் செய்யவேண்டியதையும் நான் சொல்லாதவைகளில் எது உனக்கு உசிதமாகப் படுகிறதோ அவைகளையும் சித்தப்படுத்தும்படி கட்டளையிடு என்றார். லட்சுமணர் அவர் கூறியபடியே யாவும் நடைபெறும்படி செய்தார். பிறகு அவபிருதஸ்நானஞ் செய்யப்

புறப்படும் தருணத்தில் செய்யவேண்டிய இஷ்டியை [ஓர் யாகம்] விதிப்படிரித்விக்குகள் செய்தார்கள். பின் நல்ல குதிரைகள் கட்டித்தங்கமாலைகளாலலங்கரிக்கப்பட்ட ஓர் இரதத்தில் யாகாக்கினிகளையும் பாத்திரங்களையும் வைத்தார்கள். வசிஷ்டமுனிவர் இராமரையும் சீதையையும் அந்த இரதத்திலேயே ஏற்றிவைத்து, ரித்விக்குகளுடன் தாமும்அதில் ஏறினார். முனிவர்கள் யாவரும் வேதமோதினார்கள். ஏக சக்ரவர்த்தியாகிய ஸ்ரீராமபிரான் இரதமேறிக்கொண்டு வந்திகள் துதிக்க, வழியில் மெதுவாகச்சென்றார். முதலில் பதாகையால் அலங்கரித்த யானைகளும் பிறகு குதிரைகளும் பின் குதிரைகளின் மீதிருந்து தூரிய வாத்திய கோஷஞ்செய்பவரும் அவர்களுக்குப்பிறகு விசித்ரமான தலைப்பாகைகளும் கையில் திவ்ய தண்டங்களும் தரித்த ராஜதூதர்களும் அவர்களுக்குப் பிறகு வந்திகள் நடர்கள் இவர்களும் பின் வாரநாரிகளும் அவர்களுக்குப் பின் தேவகந்தர்வர்களுமாகப்போய்க் கொண்டிருக்க, இராமர் சீதையுடனும் ரிதவிக்குகளுடனும் அக்நியைப் பாதுகாத்துக் கொண்டு சென்றார். இராமருக்குப் பிறகு முனிவர்களும் அவர்களுக்குப்பிறகு முனிவர்களுடையபத்தினிமார்களும் மற்றுமுள்ள ஸ்திரீகளும் மெதுவாகச் சென்றார்கள். இவர்களுக்குப் பிறகு மன்னர்கள் அவரவர்களுடைய வாகனத்திலேறிக்கொண்டு சென்றார்கள். பிறகு அவர்களுடைய சைன்னியங்களும் அதன் பிறகு பலவேறு ராஜசேவர்களும் சென்றார்கள். இவர்களுக்குப் பிறகுவேவாத்தியக்காரர்களும் பிறகு ஒட்டகங்களும் பாணங்கள் முதலிய பல ஆயுதங்கள் நிறைந்த வண்டிகளும் இவைகளுக்குப் பிறகு கொல்லன், தச்சன், சக்கிலியன், பூமியளப்போன், கயிறு, கடப்பாரை, இவைகளைக்கொண்டுவருகிறவர்கள் முதலிய எல்லோரும்சென்றார்கள். இத்தருணத்தில் வாத்தியங்கள் முழங்கின. வாரநாரிகள் நர்த்தனம்செய்தார்கள். முனிவர்களின் பத்தினிகளும் அரசர்களுடைய பத்தினிகளும் மலர்மாரி பொழிந்தார்கள். வந்திமாகதர்கள் யாவரும் வழி நெடுகத் துதித்து வந்தார்கள். கந்தர்வர்கள் களிப் படைந்து ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களில் பாடினார்கள். முனிவர்கள் சுரத்துடன் வேத கோஷஞ்செய்தார்கள்.

இவ்விதம் சுற்றிலும் நடக்கும் மஹோற்சவங்களை ஸ்ரீ ராமபிரான் சீதாபிராட்டியுடன் பார்த்துக்கொண்டு இருபக்கங்களிலும் வெண் சாமரம் விசிவரச்சென்றார். இந்த வைபவத்துடன் வரும் சீதா ராமருடைய முககமலங்களைத் தரிசிப்பதற்காகப் பல ஜனங்களும் கூட்டமாக வந்து அங்கு நெருங்கிக் கோலாகலஞ் செய்தார்கள். இவர்களை நூற்றுக்கணக்கான பிரம்புக்காரர்கள் அங்கங்கு அடித்து விலக்கித் தொந்தரவு செய்தார்கள். இப்படி அவர்கள் அடித்துத் தொந்தரவு செய்தது முன்னிலும் அதிகமான கோலாகலத்துக் கிடந்தந்தது. பிறகு இராமபிரான் இந்தக் கூச்சலையும் ஜனங்கள் படுந்தொந்தரவையும் பார்த்து அருகிலிருக்கும் லட்சுமணரைநோக்கி, ஏ இலட்சுமணா! ஜனங்கள் தொந்தரவடையவேண்டாம். புஷ்பகவிமானத்தை யழைத்து, அதில் அவர்களனைவரையும் ஏற்றிவை. அவர்கள் சுகமாக என்னையும் சீதையையும் தரிசனஞ் செய்யட்டுமென்றார். உடனே இலட்சுமணர் விமானத்தை வரவழைத்து ஜனங்களை அதில் ஏற்றிவைத்துச் சுகமாக சீதாராம தரிசனம் செய்யும்படி செய்தார்.

இவ்விதம் அவர்கள் ஸ்ரீராமபிரானைத் தரிசித்துக்கொண்டே விமானத்தில் மெதுவாகச் சென்றார்கள். அக்கூட்டத்தில் சிலர், இன்று சீதையுடன் ஸ்ரீராமபிரானைத் தரிசித்துச் சந்தோஷித்தோம் என்றார்கள். சிலர் நமது மனக்கோரிக்கை நிறைவேறித் தன்னியர்களானோம் என்றார்கள். இன்னும் சிலர் நம்மைப்பெற்ற தாய் தந்தையர்கள் வெகு தன்னியர்கள்; அவர்களுடைய புண்ணிய மிகுதியால் சீதாராமருடைய தரிசனம் கிடைத்தது என்றார்கள். இவ்விதம் புருஷர்கள் புஷ்பகவிமானமேறி ஸ்ரீராமபிரானைத் தரிசிப்பதைப்பார்த்து, ஸ்திரீகள் புஷ்பகவிமானத்தில்தாங்கள் ஏறுவதற்காக ஒரு கூட்டங்கூடி ஒருவர்க்கொருவர் ஆலோசித்து அதைச் சீதையிடத்தில் தெரிவித்துக்கொண்டார்கள். உடனே ஜானகிதனக்குளதிரிலிருக்கும் இலட்சுமணரையழைத்து இலட்சுமணா! இம்மாதரனைவரும் எங்களைப் பார்க்க மிகப்பிரியங்கொண்டிருப்பதால், அவர்களையும் இப்புஷ்பக விமானத்திலுள்ள மாதர் சாலையில் ஏற்றி வைக்கவேண்டுமென்றாள். இலட்சுமணர்

உடனே அப்படியே யாகட்டுமென்று சொல்லி அவர்களனைவரையும் விமானத்தில் ஏற்றி வைத்தார்.

விமானத்திலேறிய மாதர்கள் சுகமாக விருந்து சீதா ராமர்களைத் தரிசித்து மலர்மாரி பொழிந்தார்கள். அந்த அவபிருத மஹோற்சவத்தில் மிருதங்கம், சங்கம், பணவம், துந்துபி, ஆனகம், கோமுகம் இப்படிப்பட்ட விசித்திர வாத்தியங்கள் முழங்கின. வாரநாரிகள் நர்த்தனஞ் செய்தார்கள். காயகர்கள் கூட்டங் கூட்டமாகச்சேர்ந்து பாடினார்கள். வீணை வேணு முதலிய கானங்களும் நடந்தன. பூலோகத்தில் இந்த அசுவமேதயாக மஹோற்சவத்தினுண்டாகும் சப்தமானது சொர்க்கலோகமும் பரவிற்று. யது, சிரோஞ்சயம், காம்போஜம், குரு, கேகயம், கோஸலம் முதலியதேச சத்துமன்னர்கள் சொர்ணாபரணங்களணிந்து கொண்டு,கொடி கட்டியஉயரமான துவஜங்களுடனும்அலங்கரிக்கப்பட்டயானை குதிரை இரதம் காலாள் இவைகளுடனும் பூமி நடுங்கும்படி எஜமானுகிய இராமபிரானுக்குப் பின்னால் சென்றார்கள். சதஸ்யர்கள், ரித்விக் சிரேஷ்டர்கள் இவர்கள் வேத கோஷஞ் செய்தார்கள். தேவர்கள் முனிவர்கள், பிதிர்க்கள், கந்தர்வர்கள் இவர்கள் இராமபிரானைத் துதித்து மலர் மாரிபொழிந்தார்கள். பட்டணத்துப் புருஷர்களும் ஸ்திரீகளும் சந்தனம் மாலை திவ்யவஸ்திரங்கள் இவைகளைத் தரித்துக்கொண்டு திவ்யாலங்கார பூஷிதராய்ச் சென்றார்கள். வாசனைத்தைலம், கோரஸம், சந்தனம் இவைகள் கலந்த மஞ்சள் பொடியால் செய்த குங்குமத்தைப் புருஷர்கள் பூச, அதை யேற்றுக்கொண்டு வாரநாரிகள் இராமர் கூடவே சென்றார்கள். இவ்வித மஹோற்சவங்களுடன் ஸ்ரீராமபிரானும் சீதையும்வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு இரதத்தை மெதுவாகச் செலுத்தி சரயூ நதியிலேற்பட்ட சுபகரமான இராம தீர்த்தத்துக்குச் சென்றார்கள்.

இங்கே வந்ததும் ஸ்ரீராமபிரான் சீதையுடன் இரதத்திலிருந்து இறங்கி, சரயூ நதியின் தண்ணீரில் நின்று ரித்விக்குகள் சூழ ஜலேஷ்டியை (ஓர் ஜலயாகத்தை)ச் செய்தார். பிறகு ரித்விக்குகள்

யாவரும் அந்த அவப்ருதத்துக்கு அங்கங்களான பத்நீஸம்யஜாம் முதலிய காரியங்களை எஜமான் ஸ்ரீராமபிரானை முன்னிட்டுக்கொண்டு செய்தார்கள். பிறகு ஸ்ரீராமபிரான் ஆசமனஞ்செய்ததும் அவருக்குச் சீதாதேவியுடன் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்தார்கள். அதன் பின் மந்திரிகளும் முனிவர்களும் முன் சத்ருக்னன் மூலமாக வரவழைத்திருக்கும் பல புண்ணிய தீர்த்தங்களை, துந்துபி முதலிய பலவாத்தியங்கள் முழங்க, ஸ்ரீ ராமபிரான் மீது அபிஷேகம் செய்தார்கள். அப்பொழுது முழங்கிய நராதுந்துபிகளுக்குச் சரிபாகவே தேவதுந்துபிகளும் முழங்கின. தேவர்கள்,முனிவர்கள், பிதிர்க்கள், மனிதர்கள் யாவரும் இச்சமயம் மலர் மாரி பொழிந்து வாழ்த்தினார்கள். பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலிய நான்கு வருணத்தாரும் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தார்கள். மகாபாதகர்களும் இப்பொழுது ஸ்நானஞ் செய்து அவர்களுடைய பாபங்களை யொழித்தார்கள். பிறகு இராமபிரான் புதிதான வெண்பட்டாடையுடுத்துக் கங்கண கேயூர குண்டலங்களை அததற்குரிய அவயவங்களில் அணிந்து கொண்டு முத்துமாலைகள் பலவித மலர் மாலைகள் இவைகளைக் கழுத்திலும்,கால்களில் இரத்நமயமான நூபுரங்களையும் அணிந்து கொண்டார். பின் மார்பில் சிந்தாமணியும் கழுத்தில் கௌஸ்துப மணியும் அணிந்துகொண்டு திவ்யதேஜஸுடன் விளங்கினார். தமது உதரத்தில் படிந்திருக்கும் சிந்தாமணி கௌஸ்துபமணி இவைகளின் காந்தியால் கோடி சூரியப் பிரகாசம்போல் விளங்கும் ஸ்ரீ ராமபிரான் ரித்விக்குகள் சூழ சரயூநதியில் மணலில் ஓர் உத்தமமான ஆசனத்தில் ஜனககுமாரத்தியுடன் வீற்றிருந்தார். பின் ரித்விக்குகளுக்கு அலங்காரஞ் செய்து, பசுக்கள், யானைகள், குதிரைகள் இவைகளை திவ்யாலங்காரத்துடன் வேதோக்தமாகச் சரியான காலத்தில் தக்ஷிணையாகக் கொடுத்தார். அதன் பின் காமதேனுவை அலங்காரஞ்செய்து, தமது குருவாகிய வசிஷ்டருக்குக் கொடுப்பதாகக் கருதி அதைச் செய்ய ஆரம்பித்தார். அதை யறிந்த வசிஷ்ட முனிவர், தமது மனதில், நமக்குக் காமதேனுவின் பெண்ணாகிய நந்தினி என்னும் ஓர் தேனு இருக்கிறதே. இதனால் நாம் அடையத்தக்க

பிரயோசனம் யாது? ஆகையால் இப்பொழுது ஓர் அபூர்வமான வேடிக்கை செய்வோம். இந்தக் காமதேனுவுக்குஇவரிடத்திலிருப்பது தான் தகும். இவரும் காமதேனுவை வைத்திருக்கவேண்டியது அவசியந்தான். ஆகையால் இந்தக் காமதேனுவைஇவரிடத்திலேயே யிருக்கும்படி செய்து மூவுலகங்களிலும் இவருடைய கீர்த்திப் பிரதாபம் விளங்க, சீதையை அலங்காரத்துடனும் தக்க தக்ஷிணையுடனும் தரவேண்டுமென்றுயாசித்து அவருடையஉதார குணத்தை யாவருக்கும் வெளிப்படுத்துவேனென்று நிச்சயித்துக் கொண்டு, இராமபிரானைப்பார்த்து,ஏ இரகுபுங்கவா! இந்தக் காமதேனுவையா எனக்குத் தானஞ் செய்யப் போகிறீர்? அதனால் எனக்குத் திருப்தியுண்டாகாது. நீர் எனக்குத் தானமளிக்க விரும்பினால் சீதையை சர்வாபரணங்களாலும் அலங்கரித்துத் தானஞ் செய்யும். அப்பொழுதுதான் எனக்குத்திருப்தியுண்டாகும்.அன்றி வேறெந்த தானத்தை நூற்றுக்கணக்காக அளித்த போதிலும் எனக்குத் திருப்தியுண்டாகாதென்றார். இவ்விதம் வசிஷ்டர் கூறியதும் ஜனங்கள் யாவரும் ஆகாகாரம் செய்தார்கள்; மனங்கலங்கினார்கள். வருத்த முற்றார்கள். முகம் வாடினார்கள். சிலர் இவ்வசிஷ்டருக்குக் கிழத்தனம் வந்தமையால்,பைத்தியம் பிடித்துவிட்டது போலிருக்கிறதென்றார்கள். சிலர்,முனிவர் வேடிக்கைசெய்கிறார் என்றார்கள். சிலர் இராமபிரானுடைய தைரியத்தைப்பார்க்கிறார் என்றார்கள். சிலர் இவ்விதங் கேட்டால் இராமபிரான் யாது செய்வார் பார்ப்போமென்று எண்ணிக்கேட்கிறார் என்றார்கள். இத்தருணத்தில் ஸ்ரீ ராமபிரான் முனிவர் கூறியதைக் கேட்டு நகைத்து உடனே குருசந்நிதிக்குச் சீதையை வரும்படி சமிக்ஞை செய்து, சீதை வந்ததும் தமது கரத்தால் அவளது இடது கரத்தை மனமகிழ்ச்சியுடன் பிடித்துக் கொண்டு சபையில் வசிஷ்டரைப்பார்த்து,ஏ குலகுருவே! நான் சீதாதானம் செய்கின்றேன், தாங்கள் ஸ்திரீதான மந்திரத்தைக் கூறுங்களென்றார்.

உடனே வசிஷ்ட முனிவரும் நல்லதெனச் சொல்லி முனிவர்கள் கூட்டத்தின் மத்தியில் தான மந்திரத்தை ஓதி ஸ்ரீராமபிரான் அன்போடளிக்கும் ஸ்திரீ தானத்தை ஏற்றுக்கொண்டார். இச்

சமயம் ஸ்தாவர ஜங்கமங்கள் யாவும் நிலை குலைந்து நடுங்கின. மனிதர்கள் யாவரும் தம்வசமற்றுச் சித்திரம்போல் நின்றார்கள். உடனே முனிவர் சீதையைப் பார்த்து ஏ குழந்தாய்! உன்னை இராமபிரான் எனக்குத் தானமாக அளித்து விட்டமையால் நீ எனக்கு ஒரு பெண். எனது முதுகில் ஏறிக்கொள் என்றார். இதைக்கேட்டதும் சாதுவாகிய சீதாப்பிராட்டி சிறிதுமனதில் வருத்தமுற்று, ஒரு சார்பாக நோக்கிய வண்ணம் முனிவரது முதுகில் உட்கார்ந்தாள். உடனே தேகம் மயிர்க்குச்செறிந்தது. கண்களில் ஜலம் ததும்பியது. இப்பொழுது இராமபிரான் வசிஷ்டரைப் பார்த்து, வணக்கத்துடன், குலகுருவே! இந்தச் சுரபியையும் தங்களுக்கு யான் தானமளித்து விடுகிறேன், பெற்றுக்கொள்ளும். முன்கைலாஸத்தில், சிந்தாமணியின் மூலமாக எனக்குச்சந்தோஷமுண்டாக்கிய சீதைக்கு யான் இதை யளித்திருப்பதால் சீதையினிடத்திலேயே இது யிருக்கட்டும். நானும் அதைத் தங்களுக்கு அளிப்பதாக வரவழைத்து விட்டேன் என்றார். வசிஷ்டமுனிவர், இராம!ராமா! மகாபகோ! உமது உதாரகுணம் இன்று பிரகாசமடைந்தது. இப்பொழுது யான் யாசித்ததமதுசீதைதம்மிடத்திலிருப்பதே சுபம். தராசில் இம்மாதுக்குச்சரியான சொர்ண பாரத்தை நிறுத்து எட்டுத்தடவை எனக் களித்துவிட்டு இச் சபையில் எனது வசனப்படி இம்மாதைத் தாங்களே பெற்றுக் கொள்ளவேண்டியது. தவிர இன்னுமொரு விஷயமிருக்கிறது. கேளுங்கள். ஏ இராகவா! தேனு, சிந்தாமணி,கௌஸ்துபம்,சீதை, அயோத்தியா பட்டணம், உமது இராஜ்யம், புஷ்பகம், இவ்வேழினுள் எதையாவது யாருக்கேனும் தானமளிப்பீரேயாகில் அது எனது ஆக்ஞையைத் தவிர்த்ததற் கொப்பாகும். அதனால் மிக்க கிலேசம் நேரிடும். ஆகையால் மேற்கூறிய ஏழினையுந் தவிர மற்றவைகளில் நீர் விரும்பியவற்றை யோசியாமல் வேதியர்களுக்குக் கொடும்என்றார். இராமர் தமது குலகுருவின்வார்த்தையை ஏற்றுக் கொண்டு, சொர்ணங்களையும் தராசையும் கொண்டு வர ஆக்ஞாபித்து,ஒருதட்டில்சீதாப்பிராட்டியையும்மற்றொருதட்டில்அவளுக்குச் சரியான சொர்ணத்தையும் நிறுத்துத்தானமளித்தார்.இவ்விதமே

இன்னும் ஏழு தடவை தான மளித்துச் சீதாதேவி தரித்திருந்த ஆபரணங்களையும் அவருக்கே கொடுத்துச் சீதையை மீட்டுக்கொண்டார். அப்பொழுது வாத்தியங்கள் முழங்கின. விமானத்திலிருந்த சுரஸ்திரீகள் சீதா ராமர்கள் மேல் சந்தோஷமாக மலர் மாரி பொழிந்தார்கள். இப்பொழுது சீதாபிராட்டி முன்னிலும் அதிகமான ஆபரணங்களை யணிந்து கொண்டாள். ஜனங்கள் யாவரும் இப்பொழுது மகிழ்ந்தார்கள். பிறகு சீதாபிராட்டி ஸ்ரீ ராமபிரானை வணங்கி ஆனந்த சாகரத்தில் மூழ்கி முகமலர்ச்சியுடன் அவரைப் பார்த்துக்கொண்டு அவர் அருகிலேயே யிருந்தாள். பிறகு இராமபிரான் ரித்விக்குகள் சதஸ்யர்கள், வித்வான்கள், முதலிய வேதியர்கள் யாவருக்கும் பல தானங்களை யளித்துப் பூஜை புரிந்தார். பிறகு தமது ஞாதிகள் மன்னர்கள் மித்திரர்கள் மற்றவர்கள் யாவருக்கும் வஸ்திரா லங்கார பூஷணங்களை யளித்து உபசரித்தார். அப்பொழுது புருஷர்கள் யாவரும் அழகான ரத்ன குண்டலங்கள் தலைப்பாகைகள் சட்டைகள் வெண்பட்டுகள் விலை பெற்ற மாலைகள் இவைகளை யணிந்து கொண்டு மகிழ்ந்தார்கள். மாதர்கள், செவிகளிற் குண்டலங்களை யணிந்தும் இடையில் மேகலாபரணம் பூண்டும் தங்கள் முக கமலங்களின் அளகபங்திகள் பிரகாசிக்க விளங்கினார்கள்.

அசுவமேத யாகத்தின் அவபிருத ஸ்நான

மஹோற்சவத்தைக் கூறும்

௮-வது சருக்கம்.

முற்றிற்று.

9-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீ ராமபிரான் இவ்வாறு அவபிருத ஸ்நானஞ் செய்து முடிந்ததும் சம்புவானவர் பிர்ம்மாதி தேவர்களுடன் அவ்விடம் வந்து அவனை வேதங்களினால் துதித்து அவர் முன்நின்று ராகவா, தேவதேவா! கிருபாநிதியே! சீதையுடனும் சகோதரர்களுடனும் அசுவமேதயாக அவபிருத ஸ்நானஞ்செய்து முடித்திருக்கும் தங்களைத் தரிசித்ததால், நாங்கள் பாவநும் தன்னியரானோம். இது எங்களுக்குச் சந்தோஷந் தரத்தக்க காலம். இந்த மகா புண்ணியமான இராம தீர்த்தம் இனி உத்தமோத்தமாக விளங்கும். இதற்கு நீர் அநேக வரத்தைத் தந்தருளும். தவிரவும் ஒவ்வொரு வருஷத்திலும் இங்கு எங்களுக்குத் தமது தரிசனம் கிடைக்கவேண்டும். இன்னும் பூலோகத்தில், தாங்கள் யாத்திரை செய்த பொழுது தமது பெயரால் ஏற்பட்ட தீர்த்தங்களெல்லாந் தமது பெயரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்களுக்கும் எனது சொற்படி வரங்களைக் கொடுத்தருளும். பட்டணங்களுக்குள் அயோத்தி சிரேஷ்டமென்றும் நதிகளுக்குள் சரயூநதி சிரேஷ்டமென்றும் எனது சொற்படி தாம் கூறவேண்டுமென்றார். இவ்வாறு சம்புவானவர் கூறியதும் இரகுநந்தனர் நகைத்து "சம்போ! திரிலோகங்களுக்கு உபகாரமாகவும் சந்தோஷகரமாகவும் கூறிய தமது வார்த்தையின்படியே யானும் நினைத்திருந்தேன். அதை இப்பொழுது கூறுகிறேன் கேளுங்கள். மாதங்கள் பனிரண்டுக்குள் இந்த வைகாசி மாதமே சிரேஷ்டமானது. வைகாசி மாதத்திலும் கார்த்திகை சிரேஷ்டமானது; அதைக்காட்டிலும் மாசி மாதம் சிரேஷ்டமானது. அதைக் காட்டிலும் சித்திரை மாதம் சிரேஷ்டமானது. நான் இந்த மாதத்தில் பிறந்ததாலும் அசுவமேத யாகஞ் செய்து அவிபிருத ஸ்நானஞ் செய்தமையாலும், தங்களுடைய வாக்கின் மகிமையால், மாதங்களுக்குள் சித்திரையே மேன்மையானது. இம்மாதத்தில் செய்த தானம் ஹோமம் ஸ்நானம் சிந்தனை முதலியவைகள் யாவும் ஒன்று கோடியாகப் பெருகும். அதிலும்

இந்த அயோத்தியில் இன்னும் விசேஷமாகும். இந்த அயோத்தியா புரியானது எனது சொல்லால், எல்லாப் பட்டணங்களுக்கும் முதன்மையாகி முத்தியளிக்கத் தக்க மகிமையையும் பெறும். மனிதர்கள் வேறிடங்களில் 60 வருஷ காலம் செய்த புண்ணியமானது இங்கு எக்காலத்திலேனும் ஒரு நாள் செய்தால் கைகூடும். ஏ மகா தேவா! அயோத்திக்கு வரங்கொடுக்க வேண்டுமென்று தாங்கள் கூறியபடியால், பட்டணங்களுக்குள் முக்கியமான இந்த அயோத்தியா பட்டணமானது தங்களுடைய காசியைவிட நூறு மடங்கு சிரேஷ்டமானது. நதிகளுக்குள் சரயூநதியைக்காட்டிலும் வேறெந்த நதியும் சிரேஷ்டமானதன்று. இனி சிரேஷ்டமாக ஏற்படுவது மில்லை. அச்சரயூ நதிக்குள்ளாக எனது பெயரால் யான் ஏற்படுத்திய இந்த இராம தீர்த்தம் தனது தேஜஸினுலும் பிரதாபத்தாலும் மற்றத் தீர்த்தங்கட் கெல்லாம் பிரதானமாக விருந்து சமஸ்த பாதகங்களையும் பரிகரிக்கும். இதில் ஐயமில்லை. இவ்விதமே எனது பெயரால் லோகத்தில் ஏற்பட்ட தீர்த்தங்கள் யாவும் மற்றத் தீர்த்தங்களை விட உத்தமமேயாகும். சங்கரரே! எனது பெயரால் ஏற்பட்ட சிவலிங்கங்கள் யாவும் தரிசன மாத்திரத்தில் முத்தியை யளிக்கும் மகிமையைப் பெறட்டும். இவ்விதமே தீர்த்தங்களும் ஸ்நானத்தால் முத்தியை யளிக்கும் மகிமை பெறட்டும். பூலோகத்தி லுள்ள மனிதர்கள் யாவரும் வருஷந்தோறும் சித்திரை மாதத்தில் இந்த இராம தீர்த்தத்தில் விதிப்பிரகாரம் நியமத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். இப்படி ஸ்நானஞ் செய்வதால், அவர்கள் அசுவமேத பலனையும் ஸோமயாக பலனையும் கோமேத பலனையும் அடைவார்கள். பின்னும், சூரிய கிரகண புண்ணியகாலத்தில், குருக்ஷேத்திரத்தில் செய்யும் ஸ்நான தானங்களால் பெறத்தக்க பலனை அயோத்தியிலுள்ள இந்த இராம தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் ஸ்நானஞ் செய்பவர்கள் அடைவார்கள். மேலும் மறு ஜன்மத்தைக் கொடாத மோக்ஷ பலனையும் பெறுவார்கள். சுகத்தை விரும்புகிறவன் மாசி மாதத்தில் பிரயாகை தீர்த்தத்திலும் கார்த்திகை மாதத்தில் காசி பஞ்ச கங்க தீர்த்

தத்திலும், வைகாசி மாதத்தில் துவாரகையின் சக்ர தீர்த்தத்தி லும் சிரத்தையுடன் ஸ்நானஞ் செய்வது போல், இந்த அயோத்தி இராம தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் ஸ்நானஞ் செய்தால் தான் இச்சித்த பலனைப் பெறுவதில் ஐயமில்லை. ஆகையால் யாவ ரும் பக்தியுடன் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வரவேண் டும். இதுவரையிலும் பனிரண்டுமாதங்களுக்குள் மார்க்சீரிஷமே (மார்கழி மாதம்) முதலாக விருந்தது. தேவர்களுக்குள் நீர் தலைமைபெற்றிருப்பது போல் சித்திரை மாதமே இனி மேல் மாதங்களுக்குள் முதலாக ஏற்படும். இந்த அயோத்தியும் அவ் வாறே பட்டணங்களுக்குள் தலைநகரமாக விளங்கும். இப்பொழுது இங்கு வந்திருப்பது போல் இனிவரும் ஒவ்வொரு வருஷ சித்தி ரை மாதத்திலும் இந்திரன் முதலிய தேவர்கள் அவரவர் இருப்பி டத்தை விட்டு இங்கு வந்து இத்தீர்த்தத்தில் வசிப்பார்கள் என் றார். இவ்வாறு ஸ்ரீ ராமர் கூறியவைகளைக் கேட்ட கௌரியான வள் சீதாப்பிராட்டியைப் பார்த்து "ஏ சீதே! உலகத்திலுள்ள ஸ்திரீக ளுக் கநுகூலமாக எனது சொற்படி நீ சிறிது வரங்களை யளிக்க வேண்டும்." என்றாள். உடனே ஜானகி இவ்வுலகத்தில் என் பெய ரையுடைய தீர்த்தங்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அவைக ளில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு விசேஷமான புண்ணியங் கிடை க்குமென்பதில் ஐயமில்லை. அவைகளில் நான் வெகு நாளாய் ஸ்நானஞ் செய்துவந்தஇந்தச் சரயூநதியிலுள்ள தீர்த்தமானது மிகவும் சிரேஷ்டமானது. அதற்குச் சீதளகௌரி யென்று பெயர். அதில் வைசாக சுக்கில திருதியையில் ஸ்திரீகள் அவசியம் ஸ்நானஞ் செய்யவேண்டும். அந்த ஸ்நான மானது மிகவும் சிரேஷ்டம். அதில் ஒரு மாதம் ஸ்நானம் செய்கிறவர்கள் சகல பாக்கியங்களையும் பெற்றுப் புத்திர பௌத்திராதிகளுடன் வாழ் வார்கள். இதைத் தவிர மற்றத் தீர்த்தங்களில் சித்திரைமாதம் சுக் கிலபக்ஷம் திருதியை திதியில் ஸ்நானம் செய்வது உத்தம மானது. இராம தீர்த்தங்களிருக்கும் இடங்களில் இடது புறத் தில் எனது தீர்த்தங்களு மிருக்கின்றன. இவைகளில் ஸ்நானஞ் செய்த மாதர்கள் சகல பாதகங்களி லிருந்தும் விடுபட்டு முத்தி யைப் பெறுவார்கள். என்று வரங்களைக் கொடுத்து விட்டு இராம ருடைய முன்னிலையி லிருந்தாள்.

இதன் பிறகு குலகுருவாகிய வசிஷ்ட முனிவர் இராமரைப் பார்த்து இனி யாகமண்டபத்திற்குப் போகவேண்டுமெனத் தெரிவித்தார். இரகுகுலோத்தமர் நல்லது அவ்வாறே என்று ஒப்புக்கொண்டு ரித்விக்குகளுடனும் சீதாதேவியுடனும் உடனே இரதமேறினர். அப்பொழுது பேரி, துந்துபி, பணவம் முதலிய சகல வாத்தியங்களும் முழங்கின. வேதியர்கள் வேதகோஷங்களையும் ஜயசப்தங்களையும்மந்திரசப்தங்களையும்பறபலவிடங்களிலிருந்தும் செய்தார்கள். முந்தி இராமர் யாகமண்டபத்திலிருந்து புறப்பட்டுவரும்போது நடந்தது போல யாவும் இப்போதும் நடந்தன. அவ்வுற்சவங்களை ஸ்ரீ ராமபிரான் பார்த்துக் கொண்டே மெதுவாக யாகமண்டபஞ் சென்று, இரதத்திலிருந்து இறங்கி, உடனே யாகாக்கினிகளை அந்தந்தக் குண்டங்களில் ஸ்தாபித்து, சீதையுடனும் ரித்விக்குகளுடனும் அவ்வக்னிகளில் பூர்ணாகுதிசெய்துபிறகு வஸ்திரம், கனிவர்க்கங்கள் இவைகளை அக்நிபகவானுக்கு நிவேதித்துப் பூஜித்து, யாகத்தினுடைய முடிவில் யாகபாத்திரங்களை விசர்ஜனம் செய்து விட்டு ரித்விக்குகள் யாவருக்கும் தக்ஷிணைகொடுப்பதற்காக, அருகேயிருந்த இலட்சுமணரைப் பார்த்து "இலட்சுமணா! ரித்விக்குகளான இம் முனிவர்களைப் பொக்கிஷ மிருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு அதைக் காண்பித்து அங்கிருக்கும் காவலாளிகளைத் தூரவிலகும்படி செய்துவிட்டு நீ வாய்திறவாமலிருந்து பார்த்துக்கொண்டிரு; அவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி திரவியத்தை எடுத்துக்கொள்ளட்டும். பிறகு நீ, அவர்கள் எடுத்துவைத்த திரவியங்களைத்தனித்தனியே வாகனங்களிலேற்றி அவரவர் ஆசிரமத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விடவேண்டும். பிறகு முனிவர்களுக்கும் வேதியர்களுக்கும் கைநிறைந்த பணங்களை அள்ளித் தானஞ்செய்யவேண்டுமென்றார். இவ்வாறு ராமர் கூறியதும் இலட்சுமணர் ரித்விக்குகளை யழைத்துக்கொண்டு போய் அவ்வாறே செய்தார். இதன் பிறகு அசுவமேத யாகத்தில் வரித்திருந்த ரித்விக்குகளுக்குத் திருப்தியாகப் போஜனஞ் செய்வித்து, விடை கொடுத்தனுப்பினர். அப்பால்

பரமசிவன் முதல் தேவர்கள் யாவருக்கும் வஸ்திரம், நன்றுப் அலங்காரஞ் செய்த வாகனங்கள் இவைகளைக் கொடுத்து தமது வைபவத்துக்குத் தக்கபடி பூஜித்தார். அப்பொழுது அரசர்களிற் சிலருக்குத் திரவியங்களையும் சிலருக்குச் சிவிகைகளையும் சிலருக்கு யானைகளையும் சிலருக்கு ஆயுதங்களையும் கொடுத்து அவரவர்களுக்குத் தக்க மரியாதைசெய்தார். பிறகு அந்தப்புர ஸ்திரீகளுக்கும் வேலையாட்களுக்கும் வஸ்திராபரணம் வாகனம் முதலியவைகளையளித்துத் திருப்தி செய்வித்தார். கடைசியில் எல்லாருக்கும் திருப்தியாகப் போஜனஞ் செய்வித்தார். பிறகு இராமர் திவ்விய வஸ்திரங்களைத் தாமும் தரித்துக்கொண்டார். இச்சமயத்தில் தேவர்களும் மன்னர்களும் ஸ்ரீராமபிரானுக்குக் கப்பமளித்து வணங்கினார்கள். நதிகள், மலைகள், சமுத்திரங்கள், சர்ப்பங்கள், பசுக்கள், பறவைகள், மிருகங்கள், சொர்க்கம், பூமி, சர்வ பூதங்கள் இவைகள் யாவும், இராமபிரானுக்குத் தக்க உபாயனங்களைக் கொண்டு வந்து சமர்ப்பித்து வணங்கின. இப்போது மகாராஜாவாகிய இராமபிரான் வஸ்திராபரண அலங்காரஞ் செய்து கொண்டு சீதாதேவியுடன் அக்நிபோல் விளங்கினார். அவரை இலட்சுமணர் முதலிய சகோதரர்கள் அருகில் நின்று வணங்கி மகிழ்ந்தார்கள். குபேரன் சிரேஷ்டமான ஒரு சொர்ணாசனத்தையும் வருணன் சந்திரன் போன்ற பிரகாசம் பொருந்தியதும் சுற்றிலும் ஜலத்தைவருஷிக்கக்கூடியதுமான ஒருகுடையையும், வாயுபகவான் இரண்டு வெண்சாமரங்களையும் தர்ம தேவதையானவள் கீர்த்தியைத்தரும் ஒரு மாலையையும், இந்திரன் உத்கிருஷ்டமான ஒரு கிரீடத்தையும், தர்மராஜன் துஷ்டர்களை யடக்கும் ஒரு தண்டத்தையும், பிரமதேவர் வேதமயமான ஒரு கவசத்தையும், சரஸ்வதி தேவி உத்தமமான ஒரு ஹாரத்தையும், ருத்திரமூர்த்தி பத்து சந்திரன் போலப் பிரகாசிக்கும் ஒரு கத்தியையும், அம்பிகையானவள் நூறு சந்திரன் போல் பிரகாசிக்கும் ஒரு கத்தியையும், சந்திரன் அமுதமயமான அசுவங்களையும் துவஷ்டா மிக அழகான ஒரு இரதத்தையும், சூரியன் தனது கிரணமயமான இரண்டு பாதுகைகளையும், இராமபிரானுக்கு உபாயனமாக

அளித்து மகிழ்ந்தார்கள். ஆகாசமானது நாள்தோறும் புஷ்பமாரி பொழிந்தது. தேவர்கள் நீதம் நாட்டியம் வாத்தியம் அந்தர்த்தான சக்தி முதலியவைகளைக்கொடுத்தார்கள். முனிவர்கள் யதார்த்தமான ஆசீர்வாதங்களைச்செய்தார்கள் சமுத்திரம் தன்னிடத்துப் பிறந்த ஓர் சங்கத்தை யளித்தது. நாற்றிசையிலுள்ள சமுத்திரங்கள், மலைகள், நதிகள், இவைகள்யாவும் மகாத்மாவாகிய இராமபிரானுக்கு இரத வீதிகளையளித்தன. பிறகு மன்னர்கள் யாவரும் இரதம் யானை, குதிரை, சிவிகை, விருஷபங்கள், ஒட்டகைகள், தாஸ, தாஸிகள் கத்திகள் இவைகளை யளித்தார்கள். பிறகுஆயிரக்கணக்கான தேவபத்னிகளும் ரிஷிபத்னிகளும் சீதாபிராட்டிக்கு திவ்ய வஸ்திரம் அலங்காரம், வாகனம், மங்களகரமான ரவிக்கைகள், விளையாட்டுக்கருவிகள், விசித்திரமான பறவைக்கூண்டுகள் இவைகளை யளித்தனர். இவ்வாறு எல்லாராலும் பூஜிக்கப்பட்ட இரகுநாயகர் வந்திகள் துதிக்க, சீதையுடனும் யாகாக்னிகளுடனும் இரதத்தின் மீதேறினார். அவ்வாறு முனிபுங்கவர்கள் தமது பத்னிகளுடனும் தேவபத்னிகளுடனும் புஷ்பக விமானமேறி ஆகாசமார்க்கமாக அயோத்தியிலிருக்கும் ஸ்ரீ ராமபிரானுடைய அரண்மனைக்குச்சென்றார்கள். பிறகு இராமபிரான் முற்கூறிய மகோற்சவ வைபவத்துடன் மெதுவாகச் சென்று, வந்திமாகதர்கள் துதிக்கத் தமது பட்டணத்திற்குள் பிரவேசித்தார். இப்பொழுது இலட்சுமணர் சுற்றிலும் முத்துமாலை கட்டித் தொங்கவிட்ட வெண்குடையைப் பிடித்துவந்தார். பரதன் பனைவிசிறியையும் சத்ருக்னன் இரண்டு சாமரங்களையு மெடுத்துக் கொண்டு வீசிவந்தார்கள். சுக்ரீவன் தாம்பூல பாத்திரத்தையும் அநுமான் ஜலபாத்திரத்தையும் நீலன் காளாஞ்சியையும், அங்கதன் சிரேஷ்டமான கண்ணாடியையும், விபீஷணன் பல புது வஸ்திரங்களையும், ஜாம்பவான் அகில் தூபபாத்திரத்தையும், மந்திரிமார்கள் பலகனிவர்க்கங்கள் நிறைத்துவைத்திருந்த பாத்திரங்கள் பூஜா பாத்திரங்கள் சுகந்தத்திரவிய பாத்திரங்கள் இவைகளையும் எடுத்துவந்தனர். இவ்வாறு கொண்டு வரும் சுகந்தப்பொடியை வாரநாரிகளின் கூட்டத்தில் இராமபிரான் வாரி இறைத்துக் கொண்டு சீதையுடன் இரதத்தில் விளங்கிவந்தார். இவ்வாறுவாசனை

யான வர்ணப்பொடிகள் கலந்தஜலத்தைப்பீச்சாங்குழலிலெடுத்து வாரஸ்திரீகள் மன்னர்கள் இவர்களுடைய வஸ்திரங்களில் பீச்சி, அவர்களுடைய வஸ்திரங்களை வசந்தருதுவில் மலர்ந்த பலாச புஷ்பங்கள்போல் சித்திரித்தார். இத்துடன் இவ்விதம் நனைந்த அவர்களுடைய வஸ்திரங்களின் மேல் சுகந்தமான வர்ணப்பொடிகளை வாரி இறைத்து திவ்யவாசனையையூட்டிச்சித்தரித்தார். வாரநாரிகள் நர்த்தனம் செய்ய, வந்திமாகதர்கள் துதிக்க, பட்டணத்தாரனைவரும்மலர்மாரி பொழிய ஸ்ரீராமபிரான்மெதுவாகராஜவீதியின் வழியே தமது அரண்மனைக்குச்சென்றார். வீதியில் பட்டணத்து ஸ்திரீகள் கும்பதீபங்களையும் ததியோதனங்கலந்த பலி தீபங்களையும் பூர்ண கும்பங்களையு மெடுத்துக் கொண்டு முன் சென்று சீதா ராமர்களுக்கு நீராஜனம் செய்தார்கள். உடனே ஸ்ரீ ராமபிரான் சீதையுடனும் அக்நியுடனும் இரதத்திலிருந்து இறங்கித் தமது கிரகத்துக்குட் சென்று அக்நியை ஸ்தாபித்து விட்டுப் பிறகு சபைக்குவந்து சிங்காசனத்திலமர்ந்தார். மன்னர்கள் யாவரும் இரகுநாதரை வணங்கினார்கள். மன்னர்களுடைய முடிகளிலணிந்திருக்கும் மலர்களின் மகரந்தப்பொடிகள் படிந்த இராமபிரானது பாதபங்கஜங்கள் அம்மன்னர்களுடையமகுட ரத்னகாந்தியால் செந்தாமரை மலர் போல் மிகப் பிரகாசமுற்று சிம்மாசனத்தின்மேலில்விளங்கின. இவ்வாறே இராஜ பத்னிகளும் தேவபத்னிகளும் சீதாபிராட்டியினுடைய பாதபங்கஜங்களை வணங்கினார்கள். அவர்களுடைய சிரசில் அணிந்திருக்கும் ரத்னமயமான சந்திரப்ரபை சூரியப்ரபை என்னும் ஆபரணங்களினுடைய ரத்னகாந்தியும் அம்மாதர்களுடைய கூந்தல் மாலைகளின் மகரந்தப்பொடிகளும் படிந்து சீதாபிராட்டியினுடைய பாதபங்கஜங்கள் சொர்ணமயமாக விளங்கின. பிறகு மகேசுவரர் அச்சபையில் ஸ்ரீ ராமரை ராமஸ்தோத்திரத்தால் துதித்தார். ஸ்ரீராமபிரானும் மகேசுவரரை நன்றாய்ப் பூஜித்தார். பிறகு மகேசுவரர் ஸ்ரீ ராமபிரான் அநுமதிபெற்றுத் தமது பரிவாரங்களுடனும் தேவாதிகளுடனும் ரிஷபாரூடராய்த் தமது இருப்பிடத்திற்குச் சொல்லக் கருதினார். இராஜபத்நிகளும் சீதாபிராட்டியை வணங்கி அநுமதிபெற்றுத் தங்கள்தங்கள் இருப்

பிடத்திற்குச் செல்ல வாகனங்களிலேறி அயோத்தியிலிருந்து புற ப்பட்டனர் பிறகு மன்னர்கள் முதலிய யாவரும் ஸ்ரீராமபிரா னது உத்தரவுபெற்றுத் தமது பரிவாரங்களுடனும் சைன்னியங்க ளுடனும் தத்தம் இராஜ்யமடைந்தனர். பரமசிவனும் கைலேயங் கிரியை யடைந்தார். பிரமன் தமது ஸத்தியலோகத்திற்குச் சென் ருன். இந்திராதி தேவர்களும் சொர்க்கலோகஞ்சென்றார்கள். மகா சிலர்களும் பிரம்மவாதிகளுமான ரித்விக்குகளான முனிவர்கள் தத் தம் ஆசிரமத்தையடைந்தார்கள். பிறகு இராமபிரான் முன்போலவே சுகமாகச் சீதையுடனிருந்து இராஜ்யபரிபாலனஞ்செய்துவந்தார். பிறகு இரண்டு வருஷத்துக் கொருதடவையாக இருபது வருஷத் தில் ஒன்றுக்கொன்று மிகசிரேஷ்டமான பத்து அசுவமேதயாகங் களைச் செய்துமுடித்தார். இவ்வாறுசெய்தபத்தாவது அசுவமேத யாகத்தில் குலகுருவாகிய வசிஷ்டர் கூறியவைகளைத் தவிர மற் றப் பொருள்கள் யாவற்றையும் ஸ்ரீராமபிரான் வேதியர்களுக்குத் தானமாகக் கொடுத்து ரித்விக்குகளுக்கு நான்கு திக்குகளையும் தானமளித்தாரென்று கேட்டிருக்கிறேன்.

ஏ விஷ்ணு தாஸ! கிருபாநிதிகளாகிய அந்த ரித்விக்குகள் தங்களுக்கு அளித்த நான்கு திக்குகளிலுள்ள தேசங்கள் யாவை யும் பரிபாலிக்கும்படி ஸ்ரீராமபிரானுக்கே திரும்பவும் கொடுத்து விட்டார்களென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். நீ கேட்ட மங் களகரமான இராமருடைய அசுவமேத யாக சரித்திரத்தை உனக்குச் சிறிது கூறினேன். புண்ணியகரமும் மனோகரமுமான இந்த யாககாண்டத்தைக் காலையிலெழுந்து படிப்போர் தங்கள் கோரிக்கைகள் யாவற்றையும் பெறுவார்கள். சந்ததி விரும்பியவர் கள் சந்ததியையும் பொருளை அபேக்ஷித்தவர்கள் பொருளையும் அடைவார்கள். இந்த யாககாண்டத்தைக்கேட்கிறவன் அசுவமேத யாகபலன் பெறுவான். ஹோமகாலத்திலும் சிரார்த்தகாலத் திலும் சாதுர்மாஸ்யம் முதலிய கர்மகாலங்களிலும் ஜபம் தியா னம் அர்ச்சனம் இவைகளின் ஆரம்பத்திலும் இந்த யாககாண்டத் தைப் படிக்கவேண்டும். ரம்மியமும் பவித்திரமும் புண்ணியகரமு

மான இராமபிரானுடைய அசுவமேதயாக சரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் தங்கள் மனதிற் கருதியவைகள் யாவற்றையும் பெறுவார்கள்.

அசுவமேதயாகத்தின் முடிவைக்கூறும்

9-வது சருக்கமும் யாககாண்டமும்

முற்றிற்று.

விலாஸ காண்டம்.

1 வது சருக்கம்.

சிஷ்யன் வினவுகிறான்.

ஸ்ரீராமமூர்த்தியை சிவன் எவ்விதம் ஸ்தோத்திரம் செய்தாரோ அந்த ஸ்தோத்திரத்தைத் தாங்கள் தயைசெய்து விஸ்தாரமாகக் கூறவேண்டுமென்று சிஷ்யன் விநயத்தோடுகேட்க, ஸ்ரீராமதாஸர் அடியில் வருமாறு சொல்லுகிறார்.

இராமதாஸர் கூறுகிறார்.

குழந்தாய்! நீ வெகு பக்தியோடு கேட்பதால், நான் சொல்வதைக் கவனமாகக்கேள்

உலகத்தில் மேலானதும் குணங்களுக்கெல்லாம் ஆதாரமானதும் மலரகிதமானதும் மங்கள ப்ரதானமானதுமான வஸ்து எதுவோ அதற்கே நாம் அனைவரும் பக்தி செய்து கைவல்யத்தை யடையவேண்டும்.

அதாவது இவ்விதம் உள்ளவஸ்து ஸ்ரீராம என்னும் தாரகமந்திரந்தான். இதுவே ஸம்ஸாரக்கடலிலிருந்து ஸகல பிராணிகளையும் கரையேற்றுவதால், இதற்குத்தாரகமென்று பெயர். இதையே ஸகலமான ரிஷிகளும் எப்போதும் ஜபித்துக்கொண்டுந்தங்களது ஹிருதய கமலத்தில் தியானஞ் செய்து கொண்டு மிருக்கிறார்கள். இதுதான் பிரமமென்று கூறப்படுவது. பிர்ம்மஹத்தியாதி ஸமஸ்த பாபங்களையும் போக்கடித்து நிர்மலானந்தத்தை எப்போதும்விளைவிப்பதும் இதுதான். இப்படிப்பட்ட இந்தப்பரம் பொருளைக்குறிப்பதான ஸ்ரீராம வென்னும் திவ்யநாமத்தை எக்காலத்திலும் உச்சரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இவ்வுலகில் எல்லா சௌகரியங்களும் லோகாந்தரத்தில் மோக்ஷ மென்னப்படும் நிரதிசயானந்தமும் உண்டாகுமென்பதில் ஐயமேயில்லை. இவ்வளவு மேன்மை பொருந்தியபரம்பொருளைச் சிவன் எவ்வாறு ஸ்தோத்திரம் செய்தாரென்பதை நான் உனக்குக் கூறுகிறேன். இந்தஸ்தோத்தி

ரம் ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம் ஆதிபௌதிக மென்னும் தாப ங்களைப் போக்கடித்து பாபங்களெல்லாவற்றையும் நாசஞ்செய்து விஞ்ஞானத்தையும் பிறகு மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடியது. ஸ்ரீராம மூர்த்தியைப் பற்றிய ஸ்தோத்திரங்க ளெல்லாவற்றிலும் இதுசிறப்பான தாகையால், இதற்கு இராமஸ்தவராஜ மென்று பெயர்.

அயோத்தியா நகரத்தில் அழகிய ரத்னமண்டபத்தில் ரத்ன ஸிம்ஹாஸனத்தின் மத்தியில் அநேக ரத்னங்களாலாகிப் பிரகா சியாநின்ற அஷ்டதளமுள்ள தாமரைப்புஷ்பத்தின் நடுவே ஆன ந்தமாய் வீற்றிருக்கும் ஸ்ரீராமமூர்த்தியைச் சிவபிரான் தியானஞ் செய்து கூறுகிறார்.

அயோத்தியா நகரத்தில் புத்திரனில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தசரத மஹாராஜனுக்குப் புத்திரராய் அவதரித்து உலகில் மானுடஜன்மமெடுத்தவன் தனதுதந்தைமுதலிய எல்லாரி டத்திலும் நடந்துகொள்ள வேண்டியமாதிரியைத் தாமே நடந்து காட்டி,நம்மை மேன்மையடையும்படி செய்தவராயும் ஆயிரம்ஆதி த்தன் உதயமானாற்போல் பிரகாசியாநின்ற இந்திர நீல மணியின் காந்தியைப்போன்ற தேகதேஜஸையும் விசாலமானநேத்திரங்களை யும் நீண்டநாசியையும்தொடைவரையில்நீண்டிருக்கும்கைகளையும் உடையவராயும் கிரீடம்முத்தாரம் இரத்தினமாலைகுண்டலம் தோ ள்வளைகாப்பு தோடா சிலம்புமுதலான ரத்நாபரண பூஷிதராயும் லோகமனோஹராயும் ஸ்ரீவத்ஸமென்ற மருவையும் கௌஸ்துபம் என்றரத்நத்தையும் மார்பில்தரித்துச் சிந்தாமணியுடன் விளங்கு பவராயும் திக்குகளெங்கும் பரிமளம்வீசப்பச்சைக்கர்ப்பூரம் அகில் கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண் டிருப் பவராயும் துளஸி மந்தாரம் ஜாதிசம்பகம் மல்லிகை முல்லை தாழ ம்பூ முதலிய புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவராயும் இரகு வம்சத் தரசர்களை மேன்மைப் படுத்தியவராயும் எப்போதும் மந் தஹாஸத்தால் பிரகாசிக்கின்ற முகாரவிந்தத்தை யுடையவராயும் மஹா யோகிகளெல்லாம் யமநியமாஸநாதி அஷ்டாங்க யோகங் களால் மனதில் தியானம் செய்து கொண்டிருக்கிற திவ்ய மூர்த்தி யாயும் எப்போதும் லக்ஷ்மணர் பரதர் சத்ருக்னர் ஆகிய

சகோதரர்களால் சேவிக்கப்படுகிறவராயும், யக்ஷர்கள், கின்னரர்கள், ஸித்தர்கள் ஸாத்தியர்கள் முதலான தேவர்களாலும் தேவேந்திரனாலும் நாரதர் தும்புரு முதலிய மாஹாயோகிகளாலும் இரவிலும் பகலிலும் ஸ்தோத்திரஞ் செய்யப் படுகிறவராயும், வஸிஷ்டர் வாமதேவர் ஜாபாலி காச்யபர் விசுவாமித்திரர் முதலான ரிஷீசுவரர்களால் சேவிக்கப்படுகிறவராயும் ஸநகஸநந்தந ஸநத்குமாராதி முனிசிரேஷ்டர்களுடனும் யோகீச்வரர்களின் கூட்டங்களுடனும் விளங்குபவராயும் தநுர்வித்தை யானையேற்றம் குதிரையேற்றம் ஆகிய உல்லாச வித்தைகளிலும் கரைகண்டவராயும் உலகிலுள்ள பிராணிகளுக்கு ஸகல மங்களங்களையும் கொடுத்தருளுபவராயும் எல்லாப் பிராணிகளின் மனதிலும் பிரவேசித்து ஹிருதயத்திலுள்ள தாபங்களையெல்லாம் போக்கி ஆநந்தத்தை விளைவிப்பவராயும் விளங்கிக்கொண்டிருக்கிற ஸ்ரீராமசந்திரமூர்த்தியை நான் வந்தனம் செய்கிறேன்.

𑌶𑍍𑌰𑍀𑌶𑌿𑌵 𑌉𑌵𑌾𑌚.

𑌯𑌦𑍇𑌕𑌂 𑌯𑌦𑍍𑌵𑌰𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ॥ ௧
𑌯𑌦𑍇𑌕𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌦𑍈𑌵 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌯 𑌰𑌾𑌮𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌧𑌿𑌯𑌾 𑌭𑌜𑍇 ॥
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌂 𑌵𑌿𑌮𑌲𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑌂
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌵𑌸𑍁𑌖𑍈𑌕𑌹𑍇𑌤𑍁𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌹𑌰𑌿𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌂
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌰𑌾𑌮𑌮𑌹𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥ ௨

பரமசிவன் துதிக்கிறார்.

நித்யமானதும் சித்ஸ்வரூபமானதும் ஆனந்தமானதும் உலகமெங்கும் வியாபித்ததும் உலகமானதுமான ஏகவஸ்துவை, இராம பக்தியினால் மூவுலகங்களும் க்ஷேமமடையத் தியானஞ் செய்கிறேன். ஞான காரணரும் விசாலமான நேத்திரமுடையவரும், திவ்யசுகசொரூபரும் ஆதிதேவரும் ஹரியும் விச்வேசுவரரும் புராணகவியும் புராணபுருஷரும், ஸநாதனரும் யோகீசுவரரும்

கவிம் புராணம் புருஷம் பரேஶம்
ஸநாதநம் யோகிநமீஶிதாரம் |
அணோரணீயாம்ஸமநந்தவீர்யம்
ப்ராணேஶ்வரம் ராமமஸௌ ததர்ஶ || ௪
நாராயணம் ஜகந்நாதமபிராமம் ஜகத்பதிம் |
கவிம் புராணம் வாகீஶம் ராமம் தஶரதாத்மஜம் || ௫
ராஜராஜம் ரகுவரம் கௌஸல்யாநந்தவர்தநம் |
பர்கம் வரேண்யம் விஶ்வேஶம் ரகுநாதம் ஜகத்குரும் || ௬
ஸத்யம் ஸத்யப்ரியம் ஶ்ரேஷ்டம் ஜாநகீவல்லபம் ப்ரபும் |
ஸௌமித்ரிபூர்வஜம் ஶாந்தம் காமதம் கமலேக்ஷணம் || ௭
ஆதித்யம் ரவிமீஶாநம் க்ருணிம் ஸூர்யமநாமயம் |
ஆநந்தரூபிணம் ஸௌம்யம் ராகவம் கருணாகரம் || ௮
ஜாமதக்ந்யம் தபோமூர்த்திம் ராமம் பரஶுதாரிணம் |
வாக்பதிம் வரதம் வாச்யம் ஶ்ரீபதிம் பக்ஷிவாஹநம் || ௯

அணுவுக் கணுவாயிருப்பவரும் அநந்த சக்தியுள்ளவரும் சர்வஜீவேசுவரரும் நாராயணரும் ஜகந்நாதரும் அபிராமரும் ஜகத்பதியும் வாகீசுவரரும் தசரத புத்திரரும் இரகு சிரேஷ்டரும் கௌஸல்யாதேவியின் ஆனந்தத்தை விருத்தி பண்ணுகிறவரும் தேஜோரூபியும் வணங்கத் தகுந்தவரும் விசுவேசுவரரும் ஜகத்குருவும் ஸத்தியஸ்வரூபரும் ஸத்தியப்பிரியரும் சிரேஷ்டரும் ஜாநகீ காந்தரும் பிரபுவும் இலட்சுமணாக்ரஜரும் ஸத்ரூபரும் இஷ்டங்களை யெல்லாம் கொடுப்பவரும் அரவிந்தாக்ஷரும் ஸூர்யஸ்வரூபரும் ஆனந்த ரூபியும் ஸௌம்யரும் தயாமூர்த்தியும் தபோமூர்த்தியும் ஜமதக்கினியின் புத்திரரான பரசுராம ஸ்வரூபியும் வாக்பதியும் வரதரும் துதிக்கத் தக்கவரும் ஸ்ரீபதியும் கருடவாஹனரும் சார்ங்கமென்னுந் தநுசை யுடையவரும் சின்மயானந்த மூர்த்தியும் கிருபா நிதியான பலராமரும் ஈசானரூபியும் கிருபாநிதியும் கலாநாதரும் ஜகன் மோகனமங்களரும் விக்கிரமமுள்ளவரும் மத்ஸ்ய வராஹமுதலான அநேக ரூபங்களைத்தரிக்

श्री राज्यदायिनं रामं विनयानन्दविग्रहम् ।
[illegible] कृपानिधिम् ॥

श्रीवत्सं [illegible] ।
[illegible] ॥ ௧௧

वासुदेवं जगद्योनिमनादिनिधनं हरिम् ।
गोविन्दं गोपतिं विष्णुं गोपीजनमनोहरम् ॥

गोपालं [illegible] ।
[illegible] रामं कृष्णं जगन्मयम् ॥ ௧௩

गोगोपीकासहस्राणां वेणुवादनतत्परम् ।
[illegible] ॥ ௧௪

[illegible] ।
श्रीधरं श्रीकरं श्रीशं श्रीनिवासं परात्परम् ॥ ௧௫

கிறவரும் அழிவற்றவரும் ஆதிபந்தமில்லாதவரும் ஹரியும் கோவிந்தரும் கோபதியும் விஷ்ணுவும் கோபாலர்கள் கோபிகைகள் கோக்கள் முதலியவைகள் சூழநின்று வேணுகானஞ்செய்பவரும் வித்வத் சொரூபத்தினால் பிரகாசிப்பவரும் மிகவும் ஆசையால் கர்மோபாசனை புரிகிறவர்களுக்கு அவரவர் இஷ்டப்படி பலன்களை யப்போதைக்கப்போது கொடுத்தருளும் தயாமூர்த்தியான கிருஷ்ணமூர்த்தியும் மகரத்வஜனை மன்மதரூபியும் மதுராநாதரும் மாதவரும் ஸ்ரீதரரும் ஸ்ரீகரரும் ஸ்ரீபதியும் ஸ்ரீநிவாஸரும் பூதேசரும் பூபதியும் ஸகலமான துக்கங்களை நாசம் செய்து ஐசுவரியத்தைக் கொடுப்பவரும் துஷ்டர்களான ராக்ஷஸர்களையெல்லாம் நாசம் செய்பவரும் நரசிம்மரூபியும் மகா தேஜஸ்வியும் சிதானந்த ஸ்வரூபரும் நித்யரும் ஓங்கார ரூபியும் ஸூர்யமண்டலத்தில் நித்தியமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஜோதி சொரூபரும் பக்தர்களிடத்தில் பிரியத்தோடு அவரவர்கள் கோரும் பலன்களைக் கொடுப்பவரும் பக்தப்பிரியரும் கௌஸல்யா புத்திரரும் கலா

பூதேஶம் பூதபதிம் பவ்யம் பூதிதம் பூரிபூஷணம் |
ஸர்வது:கஹரம் வீரம் துஷ்டதாநவவைரிணம் ‖
ஶ்ரீந்ருஸிம்ஹம் மஹாவிஷ்ணும் மஹாந்தம் தீப்ததேஜஸம் |
சிதாநந்தமயம் நித்யம் ப்ரணவம் ஜ்யோதிரூபகம் ‖ ௧௭
ஆதித்யகுலஸம்பூதம் நிஶ்சிதார்த்தஸ்வரூபிணம் |
பக்திப்ரியம் பத்மநேத்ரம் பக்தாநாமீப்ஸிதப்ரதம் ‖ ௧௮
காகுத்ஸ்தம் கமலாப்ரியம் |
ஸிம்ஹாஸநே ஸமாஸீநம் நித்யவ்ரதமகல்மஷம் ‖ ௧௯
விஶ்வாமித்ரப்ரியம் தாந்தம் ஸ்வதாரநியதவ்ரதம் |
யஜ்வேஶம் யஜ்ஞஸம்ரக்ஷம் யஜ்ஞஸாதநதத்பரம் ‖ ௨௦
ஸத்யஸந்தம் ஜிதக்ரோதம் ஶரணாகதவத்ஸலம் |
ஸர்வக்லேஶாபஹரணம் விபீஷணவரப்ரதம் ‖ ௨௧
தஶக்ரீவஹரம் ரௌத்ரம் கேஶவம் கேஶிமர்த்தநம் |
வாலிப்ரமதநம் வீரம் ஸுக்ரீவேப்ஸிதராஜ்யதம் ‖ ௨௨
நரவாநரதேவைஶ்ச ஸேவிதம் ஹநுமத்ப்ரியம் |
ஶுத்தம் ஸூக்ஷ்மம் பரம் ஶாந்தம் தாரகப்ரஹ்மரூபிணம் ‖

மூர்த்தியும் காகுஸ்தரும் லக்ஷ்மீப்ரியரும் ஸிம்ஹாஸனத்திபதியாயிருந்தும் தமது விரதானுஷ்டானந்தவறாது நடக்கிறவரும் களங்க மற்றவரும் விசுவாமித்ரரிடத்தில் பிரியமுள்ளவரும் இந்திரிய நிக்ரகஞ்செய்தவரும் ஏகபத்நீ விரதரும் யக்ஞங்களைச் செய்தவரும் யக்ஞங்களைக் காப்பாற்றுவதில் ஆசையுள்ளவரும் யக்ஞபுருஷரும் உண்மையானபிரதிக்ஞையையுடையவரும் கோபத்தை யடக்கினவரும் காப்பாற்ற வேண்டுமென்று அண்டினவர்களை நிச்சயமாய்க் காப்பாற்றுகிறவரும் துக்கங்களையெல்லாம் போக்கடிக்கிறவரும் விபீஷணரின் இஷ்டங்களைக் கொடுத்தவரும் தனது துஷ்டச் செய்கைகளால் உலகத்திலுள்ளவர்களைப் பிடித்துக்கொண்டிருந்த இராவணனைச் சங்கரித்தவரும் கேசி யென்னும் அசுரனை நாசஞ்செய்தவரும் வாலியை வதஞ்செய்து சுக்ரீவனுக்குராஜ்யத்தைக்கொடுத்தவரும்மனிதர்குரங்கு

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌾𑌰𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌨𑌿𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥௨௧॥
𑌨𑌿𑌰𑌾𑌮𑌯𑌂 𑌨𑌿𑌰𑌾𑌭𑌾𑌸𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌰𑌮𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥ ௨௨
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌮𑌨𑌸𑌾 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ௨௩
𑌸𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌂 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌂
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂
𑌨𑌮𑌾𑌮𑌿 𑌰𑌾𑌮𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 । ௨௪
𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂 𑌨𑌿𑌰𑍀𑌹𑌂
𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌕𑌾𑌰𑌣𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌮𑍍 ।

கள் தேவர்கள் முதலியவர்களால் சேவிக்கப்படுகிறவரும் அனுமந் பிரியரும் சுத்தமாயும் சூக்ஷ்மமாயும் பரமாயும் சாந்தமாயுமுள்ள தாரக பிர்ஹ்மமென்று சொல்லப்படுகிறவரும் சர்வபூதரூபியும் அவைகளுக்குள்ளிருப்பவரும் சர்வகாரணகர்த்தாவும்பிரகிருதிக்கு மேலான ஆதிகாரணரும் நிராமயரும் நிரஞ்ஜனரும், நித்யானந்தரும் நிராகாரரும் அக்ஞானத்திற்கப்பாற்பட்டவரும் அத்வைதரூபியும் பரமான வஸ்துவைக்காட்டிலும் பரம்பொருளும், ஸத்யானந்த சித்ஸ்வரூபரும் இரகு வம்சத்தரசர்களுக்குள் உத்தமருமான ஸ்ரீராமசந்திர மூர்த்தியை மனஸாலும் சிரஸாலும் எப்போதும் நமஸ்கரிக்கின்றேன்.

வேதங்களை அங்கங்களுடனும் அர்த்தத்தோடும் அத்தியயனஞ்செய்த மகான்களுக்குள் தலைமைவாய்ந்தவரும் சூரியன் சந்திரன் அக்னி இவர்களுக்கு மேலான மகிமையையுடையவரும் ஸர்வப்பிராணிகளிடத்திலும் பிரகாசிப்பவரும் ஸர்வாத்மகருமான இராமசந்திரரை நமஸ்கரிக்கிறேன். (24)

ஆசையற்றவரும் நிராச்ரயரும் எல்லாத் தேவதைகளுக்கும் சிரேஷ்டரும் நித்யரும் சாச்வதரும் விஷயங்களில் பற்றற்றமன

நித்யம் ஶுத்தம் நிர்விஷயஸ்வரூபம்
நிரஞ்ஜநம் ராமசந்த்ரம் பஜாமி ‖ உரு

பவாப்திபோதம் பரதாக்ரஜம்
பக்திப்ரியம் பாநுகுலப்ரதீபம் ।
பூதாதிநாதம் புவநாதிபத்யம்
பஜாமி ராமம் பவரோகவைத்யம் ‖ உசு

ஸர்வாதிபத்யம் ஸமராங்கதீரம்
ஸத்யம் சிதாநந்தமயஸ்வரூபம் ।
ஸத்யம் ஶிவம் ஸஜ்ஜநஹ்ருந்நிவாஸம்
த்யேயம் பரமாநந்தமயம் பஜாமி ‖ உஎ

கார்யக்ரியாகாரணமப்ரமேயம்
கவிம் புராணம் கமலாயதாக்ஷம் ।
குமாரவேஷம் கருணாமயஞ்ச
கல்பத்ருமம் ராமசந்த்ரம் பஜாமி ‖ உஅ

முடையவரும் நிரந்தரருமான இராமசந்திரனை நான் பஜிக்கிறேன். (25)

ஜனனமரணமாகிற ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்குத் தெப்பமும் மஹா பக்த சிகாமணியான பரதருக்கு ஜ்யேஷ்டரும் பக்தி செய்பவரிடம் பிரியமுள்ளவரும் ஸூர்ய குலம் பிரகாசிக்க அவதரித்தவரும் பூதபதியும் லோகங்களுக்கெல்லாம் அதிபதியும் ஜனனமாகிய கொடிய வியாதியை நீக்கும் வைத்தியருமான இராமனை நான் பஜிக்கிறேன். (26)

யுத்த களத்தில் மஹா தைரியத்தோடு சண்டை செய்யும் லோகைகவீரரும் ஸர்வாதிபத்திய முடையவரும் ஸத்யரும் சிதானந்த சுகசொரூபரும் மங்களாகாரரும் ஸாது ஜனங்களின் மனஸில் வசிப்பவரும் எல்லாராலும் த்யானஞ் செய்யப்படுகிறவரும் பரமானந்த ரூபருமான இராமனை பஜிக்கிறேன். (27)

தாமரைப் பூப் போன்ற நீண்ட நேத்திரங்களை யுடையவரும் காரியகாரண கிரியா சொரூபரும் கருணாநிதியும் கற்பகத்தருப் போன்றவரும் பாலருமான இராமனை பஜிக்கின்றேன். (28)

𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌨𑌾𑌥𑌂 𑌸𑌰𑌸𑍀𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑌂
𑌦𑌯𑌾𑌨𑌿𑌧𑌿𑌂 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌵𑌿𑌨𑌾𑌶𑌹𑍇𑌤𑍁𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌬𑌲𑌂 𑌵𑍇𑌦𑌨𑌿𑌧𑌿𑌂 𑌸𑍁𑌰𑍇𑌶𑌂
𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥ ௨௯

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌕𑌵𑌿𑌮𑍀𑌶𑌿𑌤𑌾𑌰—
𑌮𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌦𑍍𑌯𑌮𑍍 ।
𑌅𑌗𑍋𑌚𑌰𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌮𑍇𑌕𑌰𑍂𑌪𑌂
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥ ௩௦

𑌅𑌶𑍇𑌷𑌵𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵—
𑌮𑌜𑌂 𑌹𑌰𑌿𑌂 𑌰𑌾𑌮𑌮𑌨𑌨𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑍍 ।
𑌅𑌪𑌾𑌰𑌸𑌂𑌵𑌿𑌤𑍍𑌸𑍁𑌖𑌮𑍇𑌕𑌰𑍂𑌪𑌂
𑌨𑌮𑌾𑌮𑌿 𑌰𑌾𑌮𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ ௩௧

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂
𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾 𑌪𑍂𑌰𑌿𑌤𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌕𑌮𑍍 ।
𑌰𑌾𑌜𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌂 𑌰𑌵𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑍍𑌥𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥ ௩௨

திரிலோகநாதரும் அரவிந்தாட்சரும் தயாநிதியும் த்வந்த்வ நாச ஹேதுவும் மகா பலரும் வேதநிதியும் சுரேசுவரரும் புராண புருஷருமான இராமனைப் பஜிக்கின்றேன். (29)

வேதாந்தத்தினாலறியப்படுகிறவரும் ஆதிமத்யாந்தரகிதரும் வாசாமகோசரரும் சாமான்யருக்கும் எட்டாதவரும் நிர்மலரும் ஏகரூபரும் பராத்பரருமான இராமனைப் பஜிக்கிறேன். (30)

ஸமஸ்தவேத வேதாந்தஸ்வரூபியும் ஆதிதேவரும் கரையற்ற ஸுகஸ்வரூபியும் பிறப்பற்றவரும் அநந்த ஸ்வரூபியுமான இராமனைப் பஜிக்கிறேன். (31)

புராண புருஷரும் தமது தேஜஸால் உலகெங்கும் நிறைந்திருப்பவரும் ராஜாதி ராஜரும் சூர்யமண்டலத்திலிருப்பவரும் விச்வேசுவரருமான இராமனைப் பஜிக்கிறேன். (32)

𑌯𑍋𑌗𑍀𑌂𑌦𑍍𑌰𑌸𑌂𑌘𑍈𑌶𑍍𑌚 𑌸𑍁𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌮𑍍 |
𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑌗𑌦𑍇𑌕𑌨𑌾𑌥𑌂
𑌹𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌦𑌾𑌨𑌂𑌦𑌮𑌯𑌂 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌮𑍍 || ௩௩

𑌅𑌶𑍇𑌷𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿
𑌰𑌾𑌮𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 |
𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌦𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌜𑌂 𑌵𑌿𑌰𑌾𑌜𑌂
𑌰𑌾𑌜𑍇𑌂𑌦𑍍𑌰𑌮𑍀𑌶𑌂 𑌰𑌘𑍁𑌵𑌂𑌶𑌨𑌾𑌥𑌮𑍍 || ௩௪

𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌂
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌂 𑌰𑌾𑌮𑌮𑌹𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 |
𑌅𑌶𑍇𑌷𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌕𑌾𑌰𑌹𑍀𑌨—
𑌮𑌾𑌨𑌨𑍍𑌦 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌸𑍁𑌖𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌮𑍍 || ௩௫

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌹𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿
𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 |
𑌮𑍁𑌨𑍀𑌂𑌦𑍍𑌰𑌗𑌮𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌕𑌂
𑌕𑌲𑌾𑌨𑌿𑌧𑌿𑌂 𑌕𑌲𑍍𑌮𑌷𑌨𑌾𑌶𑌹𑍇𑌤𑍁𑌮𑍍 |

தத்வஸ்வரூபியும் யோகீந்திரர்களின் கூட்டங்களால் சேவிக்கப்படுகிறவரும் நிர்மலமான ஆதி நாராயணரும் நித்தியரும் ஜகந்நாதரும் சிதாநந்த ஸ்வரூபரும் மோக்ஷ சுகத்தைக்கொடுக்கிறவருமான இராமனை நமஸ்கரிக்கிறேன். (33)

ஸமஸ்தமான வித்தைகளுக்கு அதிபதியும் ஸகல ஐச்வர்யங்களைக்கொடுக்கிறவரும் உலகங்களை சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவரும் விராட்சொரூபரும் ராஜேந்திரருமான இரகுநாதனை வணங்குகிறேன். (34)

மனத்திற் கெட்டாதவரும் அவ்யக்தரும் அனந்தரூபியும் ஜோதி ஸ்வரூபரும் ஸம்ஸார விகாரங்களற்றவரும் ஆனந்த சுகரூபியுமான இராமரைப் பஜிக்கின்றேன். (35)

ஸகலலோகஸாக்ஷியா யிருப்பவரும் முனீந்திரர்களாலறியப்படுகிறவரும் பரிபூரணரும் கலாநிதியும் பாபங்களை நாசஞ்செய்வ

பராத்பரம் யத்பரம் பவித்ரம்
நமாமி ராமம் மஹதோ மஹாந்தம் || ௩௬

ப்ரஹ்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச தேவேந்த்ரோ தேவதாஸ்ததா |
ஆதித்யாதி க்ரஹாஸ்சைவ த்வமேவ ரகுநந்தந || ௩௭
தாபஸா ருஷய: ஸித்தா: ஸாத்யாஸ்ச முநயஸ்ததா |
விப்ரா வேதாஸ்ததா யஜ்ஞா: புராணம் தர்மஸம்ஹிதா: ||
வர்ணாஸ்ரமாஸ்ததா தர்மா வர்ணதர்மாஸ்ததைவ ச |
நாகா யக்ஷாஸ்ச கந்தர்வா திக்பாலா திக்கஜா திஸ: || ௩௯
வஸவோஷ்டௌ த்ரய: காலா ருத்ரா ஏகாதஸ ஸ்ம்ருதா:
தாரகா த்வாதஸாதித்யாஸ்த்வமேவ ரகுநாயக || ௪௦
ஸப்தத்வீபா: ஸமுத்ராஸ்ச நகா நத்யஸ்ததா த்ருமா: |
ஸ்தாவரா ஜங்கமாஸ்சைவ த்வமேவ ரகுநந்தந || ௪௧

தற்கு ஹேதுவானவரும் பரிசுத்தரும் பரம்பொருளும் பராத்பரரும் பெரிதிற்கெல்லாம் பெரிதுமான வருமான இராமரைப் பஜிக்கின்றேன். (36)

ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபுவே! பிர்மா விஷ்ணு ருத்ரன் தேவேந்திரன் தேவதைகள் சூரியன் முதலான கிரஹங்கள் இவர்கள் யாவரும் நீரே. (37)

தபஸ்விகள் ரிஷிகள் சித்தர்கள் ஸாத்யர்கள் முனிவர்கள் பிராம்மணர்கள் வேதங்கள் யக்ஞங்கள் புராணங்கள் தர்ம சாஸ்திரங்கள் இவர்களும் நீரே. (38)

வர்ணாச்ரமங்கள் தர்மங்கள் நீதிகள் நாகர்கள் யக்ஷர்கள் கந்தர்வர்கள் திக்பாலர்கள் திக்கஜங்கள் திக்குகள் இவர்களும் நீரே. (39)

அஷ்டவசுக்கள் திரிகாலங்கள் ஏகாதசருத்திரர்கள் துவாதசாதித்தர்கள் நக்ஷத்திரங்கள் சப்ததீபங்கள் இவர்களும் நீரே. 40

ஸமுத்திரங்கள் குளங்கள் நதிகள் விருக்ஷங்கள் அசையும் பிராணிகள் அசையாப் பிராணிகள் இவைகளும் நீரே. (41)

𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌦𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌂 𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌾𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌤𑌥𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 ॥ ௪௨
𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌵 𑌚 ।
𑌤𑍍𑌵𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌰𑌾𑌘𑌵𑌾𑌵𑍍𑌯𑌯 ॥ ௪௩
𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌮𑍍 ॥ ௪௪

தேவதைகள் மனிதர்கள் பட்சிகள் தேவாசுரர்கள் மாதா பிதாக்கள் அண்ணன் தம்பி இவர்கள் யாவரும் நீரே. (42)

ஏ இரகுநந்தனு! ஸர்வேசுவரரும் பரபிர்மமும் நீரே, உமது உருவமே இந்த உலகம். நாசமற்ற பரஞ்சோதியும் நீரே. (43)

சாந்தரும் சர்வப்பிராணிகளின் இருதயத்தில் வசிப்பவரும் சூட்சுமரும் பரபிர்ஹ்மமும் ஸநாதனரும் ஜகத்பதியும் அரவிந்தாக்ஷருமான ராமமூர்த்தியும் நீரே. (44)

இவ்வாறு சிவபெருமான் ஸ்தோத்திரஞ்செய்தவுடன் ஸ்ரீராமபிரான் அவருக்குப்பிரஸன்னமாகி நான் உமது ஸ்தோத்திரத்தால் ஸந்தோஷமடைந்தேன். உமக்கு வேண்டியவரனைக்கேட்டுக்கொள்ளும் என்றார்.

சிவபிரான் இராமரைப்பார்த்து "ஏ இராமா! ஸர்வலோக ரக்ஷகரான பிரபுவே! எனக்கு வேறுவரன் ஒன்றும் தேவையில்லை. ஸம்ஸாரத்தைத் தொலைப்பதான உமதுபாதார விந்தத்தில் அசஞ்சலமான பக்தி எப்போதும் இருக்கவேண்டும். இந்த ஒருவரனைத் தாங்கள்கொடுத்தருளினால் எனக்குஅவ்வரமேமேலானபாக்கியம்" என்றார். ஏ விஷ்ணுதாஸ! இவ்வாறு பரமசிவனால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட ஸ்ரீராமர், அவருக்கு அந்த வரனைக்கொடுத்துவிட்டு உலகத்துள்ள ஜனங்களின் நன்மைக்காக, அவரால் சொல்லப்பட்ட ஸ்தவராஜமென்னும் ஸ்தோத்திரத்திற்கும் அதிக மேன்மையுண்டாகுமெனவும் அநுக்கிரகம் செய்தார். அந்த ஸ்தவராஜத்தையே நீ வெகு ஆவலோடுகேட்டதால் உனக்கெடுத்துரைத்தேன். இது ஸாக்ஷாத் பரமசிவனால் சொல்லப்பட்ட வேதங்களின் ஸாரமான

தால் இதைத் தினந்தோறும் பாராயணஞ் செய்தாலும் அல்லது பக்தியுடன்கேட்டாலும் பிர்மஹத்தி சொர்ணஸ்தேயம் ஸுராபானம் முதலிய மஹா பாதகங்களுடன் உலகிலேற்பட்ட பாபங்களையெல்லாம் ஒழித்து மநஸிற்கு சுத்தியையும் நிரதிசயானந்தத்தையும் உண்டுபண்ணும். மனதால் செய்யப்பட்ட பாபமாயினும் வாக்கினால் செய்யப்பட்ட பாபமாயினும் காயத்தினால் செய்யப்பட்ட பாபமாயினும் ஸ்ரீராமனை ஒருதரம் அன்புடன் ஸ்மரிக்க மாத்திரத்தில் வெகு தீவிரமாய் விலகிவிடுமென்பது சத்தியம்! சத்தியம்!

ஸத்யமாயும் பரமாயுமிருக்கிற பிர்ஹமம் இராமன் தான். அவரைத் தவிர இவ்வுலகில் வேறொன்றுமில்லை. இவ்வுலகமே ஸ்ரீராமஸ்வரூபமானது. மலர்ந்து அழகிய நீலோத்பலம் போன்ற தேககாந்தியையுடையவரும் நிர்மல குணமுடையவரும் முனீந்திரர்களின் மநஸாகிய மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும் ஹம்ஸமும் ஜனனமரண ரூபமான ஸம்ஸாரத்தை நாசம் செய்கிறவரும் தடுக்கமுடியாத பராக்கிரமசாலியும் ரகுகுலத்திற்குத் திலகம் போன்றவரும் புராண புருஷரும் தயாநிதியும் ஸர்வேசுவரருமான ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு நாம் தினந்தோறும் வந்தனம் செய்வோமாக.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

கருணாநிதியாகிய எனது குருவே! அயோத்தியா நகரத்தில் ராமரும் சீதையும் எந்தெந்தச் சுகங்களை யனுபவித்தார்கள்? என்னென்ன நன்மையான காரியங்களைச் செய்தார்கள்? இவைகளைத் தயைசெய்து தாங்கள் தெரிவிக்கவேண்டும்.

இராமதாஸர் கூறுகிறார்.

சிஷ்ய! நீநல்ல விஷயத்தைக்கேட்டாய்; இப்போது நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் முதலில் பெரும் யுத்தத்தைச் செய்து பிறகு அசுவமேதம் முதலிய யாகங்களை நடத்திவிட்டு அயோத்தியா பட்டணத்தில் சீதையோடு அநேக விதமான சுகத்தை யநுபவித்துக்கொண்டிருந்தார். சீதையும் ஸ்ரீராமரும் வெகு வேடிக்கையாய் இருந்துகொண்டு அனேக அற்புதச் செய்கைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவைகளைக் கேட்கும்போது வெகு ஆச்சரியமாயிருந்தாலும் பிறகு நமக்கு மங்களங்களெல்லாம் உண்டாகும். அவர்களின் விலாஸ சரிதங்களைச் சொல்லுவதற்கு யாரால் முடியும்? இருந்தாலும் நான்சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

கைலாயமலையில் ஜகத்பதியாகிய பரமசிவன் பார்வதி தேவியோடு சுகமாக இருந்து வருவதுபோல் ஸ்ரீராமர் சீதாதேவியோடு அநேக லீலைகளைச் செய்துகொண்டு அயோத்தியில் வசித்து வந்தார். ஸ்ரீராமபிரான் வசித்து வந்த கிருகம் சொர்ணத்தில் இரத்தினங்கள் பதித்து வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கும். அந்த கிருகத்தில் ஸ்ரீராமபிரானது பள்ளியறை பார்க்க வெகு விநோதமாக விருக்கும். அந்த அறையின் சுவர்களில் இரத்தினங்கள் பதித்திருக்கும். அங்குள்ள தூண்களில் பளிங்குகள் பதித்துச் சித்திரங்கள் வரைந்திருக்கும். அங்கங்கே அறைகளில், முத்துக்களும் இரத்தினங்களும் சொர்ணங்களும் குவியல் குவியல்களாக நிறைந்திருக்கும். அந்த கிருகத்தில் வெகு ஜனங்கள் ஸஞ்சரிப்பினும் ஒருவர்மேல் ஒருவர் படாமல் சஞ்சரிக்கலாம். மேலும் அந்தகிருகம் அநேகமாடிகளும் பெரியகூடங்களும் உடையதாயிருக்கும். ஆங்காங்கு இரத்னமயமான தீபங்களும் மரதகம் முதலிய நவரத்னமயமான பதுமைகளும் சாமரம் குடை முதலிய உபசார சாமான்களும் இன்னும் மற்றுமுள்ள வெகு நேர்த்தியான சாமான்களும் கணக்கில்லாமல் காணப்படும். வேறு சில இடங்களில் சொர்ணமயமான கட்டில்களும் அவைகளுக்குவேண்டிய உபகரணங்களும் பார்ப்பவர்களின் மனதைக் கவரத்தக்கபடி வைத்திருக்கும். இன்னொரு பக்கத்தில் பீதாம்பரம் வெண்பட்டு முதலியவைகளால் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட பல்

லக்குகளும் ராஜாஸனங்களும் கணக்கில்லாமற் காணப்படும். வீடு முழுவதும் இரத்தின தீபங்கள் ரமணீகரமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். விலாமிச்சம் வேரினால் செய்யப்பட்ட சாமரங் களும் விசிறிகளும் கணக்கில்லாமல் இருக்கும். அவ்விடத்தில் ஏலம் கிராம்பு ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி முதலியவாஸனைத் திரவ் யங்களோடு நல்ல வெற்றிலைகளும் சிப்பிச் சுண்ணும்பும் நிறைந்த வெற்றிலைத் தட்டுகளும் அங்கங்கே அன்றன்று புதிது புதிதாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டுப் பார்ப்பதற்கு வெகு ரம்மியமாக விளங்கும். நவரத்னுபரணங்களாலும் விலையுயர்ந்த வஸ்திரங்க ளாலும் நன்ருய் அலங்கரித்துக்கொண்ட, இரம்பை ஊர்வசி முத லான தேவஸ்திரீகளுக்கொப்பான தாஸிகள் தங்கள் கைகளில் சொர்ணம் வெள்ளி இவைகளாலாகிய பிடிகளையுடையசாமரங்களை யேந்தி இராமருக்கும் ஸீதைக்கும் உபசாரங்களைச் செய்வார்கள். சில இடங்களில் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட பக்ஷிக்கூடுகள்கட்டித்தொங்கவிடப்பட்டிருக்கும். இவைகளில் சில, ஸ்ரீராமர் யாகம் செய்யும்போது ஸீதாதேவிக்கு அநேக ராஜபத்தி னிகளால் பரிசாக அளிக்கப்பட்டன. இந்தக் கூடுகளில் மயில்களும் ஹம்ஸங்களும் ஸாரஸ பக்ஷிகளும் நாகணவாய்ப் பறவைகளும் கிளிகளும் கோகிலங்களும் அந்தந்தக் காலங்களில் போடப்பட்ட மிருதுவான ஆகாரங்களைப் புசித்துவிட்டு உல்லாஸமாயும் அநேக விதமாய்க் கூவிக்கொண்டுங் கேட்பவர்களின் மநதை ஆனந்தப் படுத்திக்கொண்டு மிருக்கும். அந்தப்பக்ஷிகள் செய்யும் சப்தங் களின் மகிமையை என்னென்று கூறுவது! காட்டில் வசித்துக் கொண்டுஆகாரமில்லாமல் சீதோஷ்ணங்களைச்சஹித்துக்கொண்டு காயக்லேசஞ்செய்த மகரிஷிகள், தங்கள் மனதில் த்யானம் செய் யும் பரம் பொருளின் நாமமாகிய இராமவென்னும் திவ்ய நாமத் தைப் பழக்கத்தால் பக்ஷிகள் யாவும் அடிக்கடி சொல்லித்துதிக் கும்; அப்படித் துதிப்பதைக்கண்டவர்கள் இப்பறவைகள் ஜீவன் முக்திதசையை அடைந்து விட்டனவென்று கருதுவார்கள்.

பக்ஷிண ஊசு:

ஜயது ராக₄வோ ஜானகீயுதோ
ஜயஸுவிஶ்வ ராஜ ராஜேஶ்வர: |
த₃ஶரதா₂த்மஜோ லக்ஷ்மணாக்₃ரஜோ
ஜயது ரமாபதிஸ்தாடகாந்தக: || ௧

ஜயது கௌஶிகஸ்யாத்₄வரம் முதா₃
ஜயது ரக்ஷஸாம் நாஶகோ ப₃லாத் |
ஜயது கௌ₃தமாஹல்யயா ஸ்துதோ
ஜயது ஜானகீ தாத பூஜித: || ௨

ஜயது ந: பதிஶ்சாபப₄ஞ்ஜனோ
ஜனகஜாக்ருதாநந்த₃ஶோப₄யா |
ந்ருபஸஹஸ்ரஸங்க₃ணே கௌஶிகானுக₃:
பரஶுபோ₄ஷிதஸ்ரீதிஹர்ஷித: || ௩

பக்ஷிகள் துதிக்கின்றன.

சீதாதேவியுடன் கூடிய ராகவருக்கு ஜயம் உண்டாகுக. ஸமஸ்தமான ராஜாதி ராஜர்களுக்கும் ஈச்வரராயும் தசரதரின் பிள்ளையும் லக்ஷ்மணனின் ஜ்யேஷ்ட ஸஹோதரராயும் லக்ஷ்மீபதியாயும் தாடகையைக் கொன்றவராயும் இருக்கிற ஸ்ரீராமருக்கு ஜயம் உண்டாகுக. (1)

விச்வாமித்திரரின் யாகத்தை ரக்ஷிக்கச்சென்று அங்கே ராக்ஷஸர்களை யெல்லாம் நாசம் செய்து அஹல்யையும் பெண்ணாக்கி அவளாலும் அவளது கணவரான கௌதமராலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு மிதிலா நகரம் சென்று அங்கே ஜனக மகாராஜனால் உபசரிக்கப்பெற்ற ஸ்ரீராமர் ஜயத்தை யடைவாராக. (2)

பிறகு சிவதநுஸை ஒடித்துச் சீதாதேவிக்கு மாலையிட்டு ஸகல அரசர்களும் புகழ விச்வாமித்திரரைப் பின்றொடர்ந்து வந்த ஸ்ரீராமர் ஜயம் பெறுவாராக. (3)

ஜயது ஸரஸிஜாங்க்ர்யோர் ஜாநகீயா: ஸ்தாப்ய
நிஜகரயுகளே ஹஸ்தாப்ஜயுகளம் ।
கமலஸத்ருக்ஷே நாககோராக்ஷதிம்
ஸ ரகுபதிரஸ்மாந் பாது ந: ஸர்வதா ॥ ௪

ஜயது ஸரஸிஜாக்ஷோ ஜாநகீ ஸாநுராக:
ஜநகநிஜதநூஜாலிங்கநாநந்தபாவ: ।
பரஶுதரதநுஷம் ப்ராப்ய தச்சாபநாஸ:
நிஜபித்ருஸ்வக்ஷோ ஸ்வபலம் தர்ஶயந்து ॥ ௫

ஜயது ஸீதயா போகஸக்தசித்த:
ஜயது கைகேயீ ப்ரேரிதாவநந்து ।
ஜயது வநகதோ வாஸஸக்தசித்த:
ஜயது யோ அத்ரிணா பூஜிதோ வநே ॥ ௬

ஜயது யோ விராதஸ்ய ஹந்தா
ஜயது தூஷணாதி ப்ரஹர்த்தா: ।

சீதையின் தாமரை மலர் போன்ற பாதங்களில் தமது கைகளை வைத்துக் கமலம்போன்ற ஹஸ்தங்களால் அஞ்சலி பந்தம் செய்த இராகவர் நம்மைச் சுகமாய்க் காப்பாற்றவேண்டும். (4)

சீதாதேவி ஆலிங்கனம் செய்துகொள்ளும் அழகு வாய்ந்தவரும், தேஜஸுடையவரும், பரசுராமரால் கொடுக்கப்பட்ட தநுஸை வளைத்துப் பிதாவுக்குத் தன் பலத்தை வெளியிட்டவருமான ஸ்ரீராமருக்குச் சகல மங்களங்களுமுண்டாகுக. (5)

சீதாதேவியோடு சிலகாலம் போகங்களை யநுபவித்துக்கொண்டிருந்து கைகேயியின் ஏவலினால் வனஞ் சென்று வெகு காலம் மலையில் வசித்துக்கொண்டிருந்து காட்டில் அத்திரி மஹரிஷியால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீராமருக்கு ஜயம் உண்டாகட்டும். (6)

விராதனைக் கொன்று தூஷணன் முதலானவர்களையும் நாசம் செய்து மான் வேடம் பூண்ட மாரீசனை ஸம்ஸாரத்திலிருந்து கரை

ஜயது யோ ஶப³ர்யா மோக்ஷம் தா³பயாம்ʼஸ வா
ஜயது ய: கப³ந்த⁴ம் க்ஷணாஜ்ஜகா⁴ன ॥ ௭

ஜயது வாலிஹா ஸேதுகாரகோ
ஜயது ராவணாதி³து³ஷ்டக⁴ாதக: ।
ஜயது ஸ்வம் புரம் ப்ராப்ய ஸீதயா
ஜயது மங்க³லஸ்நானக்ருந்ந்ருப: ॥ ௮

ஜயது வாக்யதோ ப்³ராஹ்மணஸ்ய ய:
ஸஞ்சசார ஸுசிரம் பு⁴வி ।
ஜயது யாக³க்ருல்லோகரக்ஷயா
ஜயது ஜானகீஸம்யுதோ விபு⁴: ॥ ௯

பேறும்படி செய்து க்ஷண காலத்திற்குள் கபந்தனையும் கொன்ற பகவானுக்கு ஜயம் வரக்கடவது. (7)

வாலியைக்கொன்று ஸமுத்திரத்தில் அணையைக் கட்டி ராவணன் முதலான கொடிய துஷ்டர்களை வதம் செய்து சீதாதேவியோடு தமது நகரமான அயோத்தியை யடைந்து மங்கள ஸ்நானம் செய்து சுகமாயிருக்கிற ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு ஜயம் உண்டாகக் கடவது.

பிராம்மணனுடைய வாக்குப்படி வெகு காலம் பூமியில் ஸஞ்சரித்து உலக நன்மைக்காக யாகங்களைச் செய்து சீதாதேவியோடு சுகமாயிருக்கிற ஸ்ரீராமமூர்த்திக்கு ஸகல ஜயமும் உண்டாகக்கடவது. (9)

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீராகவர் விஷயமாய்ப் பக்ஷிகள் கூறிய இந்த உத்தமமான ஒன்பது சுலோகங்களையும் உலகில் பக்தியோடு படிப்பவனுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகும். இவ்விதமான அழகிய கிருகத்தில் ஸ்ரீராமர் சீதையோடு ஏக பத்நீவ்ரத முள்ளவராய்

வெகு சுகங்களை யனுபவித்துக் கொண்டிருந்தார். சீதா தேவி யும் அப்போதைக் கப்போது அவர் மனதிற்கொத்தபடி நடந்து அவரைச் சந்தோஷப்படுத்தி வந்தாள். இப்படியிருக்கையில், ஒரு நாள் ஸ்ரீராமர் மஞ்சத்தின் மீது உட்கார்ந்துகொண்டு சீதையி னுடைய விலாஸங்களால் மிகவும் ஸந்தோஷ மடைந்து சீதையை வர்ணிக்க ஆரம்பித்தார். தாமரைப் பூப்போன்ற கண்களையுடைய ஏ சீதே! நீ பிரம்மாவினால் எவ்விதம் சிருஷ்டிக்கப் பட்டாய்? அவரால் நீ சிருஷ்டிக்கப்படவில்லை யென்று எனக்குத் தோன்று கிறது. ஏனென்றால், உனது ரூபத்திற்குச் சரியான வேறொரு மாதை இந்த உலகில் காணேன். உனது நகங்கள் பிரத மைச் சந்திரனுக்கொப்பானதாக விருக்கின்றன. நகமத்தியிலுள்ள சிவப்புக்கோடுகள் மாதுளை முத்துக்களின் மத்தியிலுள்ளவஸ்துக் கள் போலிருக்கின்றன. கால் பெரு விரல்கள் அழகுள்ளவைக ளாயும் சக்ராகாரமாயு மிருக்கின்றன. உள்ளங் கால்கள் மிருது வாயும் தாமரைத் தளம்போன்றவைகளாயும் கொடி குடை சாம ரம் முதலிய ரேகைகள் அமைந்து மேலான அழகோடும் விளங்கு கின்றன. கணுக்காலுக்கு மேற்பட்ட இடமோ தசைபடர்ந்த தாயும் அநேக ராஜஸ்திரீகள் வந்து வணங்குவதற்கு யோக்கிய மாயுமிருக்கின்றது. துடையோ வாழைமரத்தையும் யானையின் துதிக்கையையும் தனது காந்தியாலும் உருவத்தாலும் ஜயித்து விட்டது. இடுப்பு மிகவும் மெலிந்ததாய் இருக்கின்றதோ இல்லையோ வென்று ஐயுறத்தக்கதா யிருக்கின்றது. அங்குள்ள மடிப்புகளைப் பார்த்தால் வீணையின் தந்திபோலென்று நினைக்க வேண்டியதா யிருக்கிறது. உன்னுடைய ஸ்தனங்களோ தங்கக் குடத்திற்குச் சமமாய்ப் பருத்தும் யானை மஸ்தகத்தை யொத்து மிருக்கின்றன. கைகள் நீண்டு பருத்து மெதுவாய் யானையின் தும் பிக்கைக்குச் சமமாயிருக்கின்றன. கைவிரல்கள் நீண்டு மெலிந்து வழவழப்பாயும் அழகாயும் இருக்கின்றன; உள்ளங்கையில் சங்கு மத்ஸியம் முதலிய பாக்கிய ரேகைகள் மிகவுமிருக்கின்றன. புறங் கை பருத்தும் தசையடர்ந்தும் பார்ப்பவரெல்லோருக்கும் ஆனந் தத்தை யுண்டாக்கக்கூடியதாயு மிருக்கின்றது. கழுத்துச் சங்குக் குச் சமானமாய்ப் பருத்து மாம்ஸமடர்ந்திருக்கிறது. பிடரியோ

வெகு சிலாக்கியமாய் பாக்கிய ஸூசகமான ரேகைகளுடன் கூடிய தாயிருக்கிறது. கன்னம் பருத்து நடுவில் பள்ளமாகவும் உருண்டையாகவும் இருக்கிறது. கீழ் உதடு கொவ்வைக்கனியையும் தளிரையும்போல் மிகவும் சிவந்து அமிர்தத்திற் கொப்பாயிருக்கிறது. பற்கள் முல்லை மலருக்குச் சமானமாயும் மிகவும் ரமணீயமாயும் இருக்கின்றன. மூக்குநீண்டு அழகுவாய்ந்திருக்கின்றது. கண்கள் விசாலமாய்த் தாமரை மலருக்குச் சமானமாயிருப்பதுமன்றிப்பெண்மான்களின் கண்கள்போலஅடிக்கடி சலித்துக்கொண்டு பார்ப்போரின் மனதைக் கவர்கின்றன. உனது செவிகள் அகன்று அதிபாரத்தைத் தாங்குவனபோல் தோன்றுகின்றன. புருவங்கள் கறுப்பாகவும் மெலிந்த மன்மத பாணம் போலவும் இருக்கின்றன நெற்றி விசாலமாயும் ஸமமாயும் மிருதுவாயும் இருக்கின்றன வகுப்புக் கங்கைக்கரைபோல் அழகாயும் தலைமயிர் நன்றாய்க் கருத்து வண்டுகளின் கூட்டம்போலவுமிருக்கின்றன. தலை சிறுத்து உருண்டையாயிருக்கின்றது ; தலைப் பின்னல் நாகம்போல் இடுப்புக்குக் கீழ்வரையில் தொங்குகிறது. உன் சரீரகாந்தியானது சண்பகப்பூவிற்குச் சமானமானது ; வைதேதே ! சந்திரன் உன் முகத்தோடு போட்டி போட்டுக் குறைவடைந்துவிட்டான். உன் நேத்திரத்தினால் ஜயிக்கப்பட்ட பெண்மான் காட்டில் ஓடுகிறது ; உன் புருவத்தோடு கலகத்திற்கு வந்த வில்லை முன்னமே நான் ஒடித்துவிட்டேன். உன் கடைக்கண் பார்வையால் முனிவர்களும் காமவிகாரத்தை யடைகிறார்கள் ; கண்கள் அடிக்கடி சலிப்பதைக் கண்டு மீன்களெல்லாம் வெட்கப்படுகின்றன. மூக்கைப் பார்த்துக் கிளி தன்னை நிந்தித்துக்கொள்ளுகிறது ; உன் உதடுகளின் சிவப்பையும் தேககாந்தியையும் பார்த்து ஒட்டுமாமரத்தின் துளிர்கூடத் தனது ஸ்வபாவமான இரத்தத் தன்மையை விட்டுப் பச்சையாய் மாறியிருக்கின்றது.

இவ்விதமான உனது அழகை நான் எவ்வாறு வர்ணிப்பேன். இன்னும் வர்ணிக்கவேண்டியவை எவ்வளவோவிருக்கின்றன. உன்னைச் சிருஷ்டித்த பிர்ம்மாவினாலும் உனது அழகை வர்ணிக்கமுடியாதென்பது நிச்சயம்—என்றுஸ்ரீராமபிரான் ஆசையோடு சொல்லிவிட்டு, சீதையைத் தழுவிக்கொண்டார். சீதையும் தன்னைப்பற்

றிக் கூறிய அந்த வர்ணனையைக் கேட்டு வெட்கத்தால் தலை குனிந்து கொண்டு மந்தஹாஸமுள்ள முகத்தோடு பதியான ஸ்ரீ ராமர் மடியில் உல்லாசமாய் உட்கார்ந்திருந்தாள்.

ஸீதாவர்ணனமென்ற இரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ஜானகியானவள் சிறிது வெட்கமடைந்து, "பிரபுவே! தாமரை மலரின் இதழ்போன்ற கண்களையுடைய இரகுபுங்கவா! தங்களை யொருவார்த்தை கேட்கவேண்டுமென்றெண்ணங்கொண் டிருக்கிறேன். தாங்கள் உத்தரவு கொடுத்தால் தெரிவிக்கிறேன்" என்றாள்.

இப்படிச் சொல்லக்கேட்டதும் ஸ்ரீராமர் "ஏ ஸீதா உனக்கு எது கேட்கவேண்டுமோ அதைக்கேள்? அது எவ்வளவு இரகசிய மாயிருந்தாலும் நான் பதில் சொல்கிறேன்" என்று சொன்னார். பிறகு சீதை "பிரபுவே! தங்கள் விஷயமாய் நல்ல ஞானம் கொடுக்கக்கூடியதை எனக்குத் தயையோடு உபதேசிக்க வேண்டு கின்றேன்" என்றாள்.

இப்படிச் சீதை கூறியதும் இராமர் "ஏ சீதே நீ கேட்டது மிகவும் நல்லது. ஆகையால் நான் கூறுவதை மிகவும் கவனமாய்க் கேள்" என்றார்.

॥ श्रीराम: ॥

सच्चिदानन्द रूपस्य सागरस्य तदिच्छया ।
तद्रूपायास्तु शक्तेश्च बिन्दुर्जातोऽति निर्मल: ॥१॥
शुद्धानात्मात्मसंज्ञस्य बुद्धिर्माता प्रसूयते ।
शुद्धसत्त्वान्त:करणं पिता चात्मन संस्थित: ॥२॥

இராமசந்திரர் கூறுகிறார்.

ஸச்சிதாநந்த ரூபம் என்னும் பெயரையுடைய ஸமுத்திரத்து க்கு அலையாகிய அதனுடைய இச்சையினால் சுத்தமான ஆத்மாட் சத்தின் பிந்துவானது உண்டாயிற்று. (1)

ஆத்மாவென்னும் பெயரையுடையது தாயாகிற புத்தியின் வயிற்றிலிருந்து உண்டாயிற்று. சுத்த சத்வாந்தக்கரணம் என் பது ஆத்மாவின் பிதாவென்று கூறப்படுகிறது. (2)

அந்த ஆத்மாவின் நான்கு பேதங்களும் பந்துக்களாக எண்ணப்படுகின்றன. அவைகளில் துரீயாவஸ்தை யென்பது முதலாவது. இரண்டாவது ஜாக்ராவஸ்தை. மூன்றாவது ஸ்வப்நாவஸ்தை. நான்காவது ஸுஷுப்தியவஸ்தை.

ஹிருதயாகாசம் என்பது அவைகளின் ஸ்தானம். மனோவேகம் என்பதுவெளிச்சஞ்சாரம்.

மனதின் கெட்ட வியாபாரங்களை யொழிப்பது மனதின் வேகத்தையடக்குவதாம். மாயாயோகம் என்பது அதன் பூர்வஸம்ஸ்காரங்களை யடக்குவதாம.

வெகுகாலம் ஸம்ஸாரமாகிற காட்டில் ஸஞ்சரிப்பது புத்தியின் காரணத்தினாலேயே. அங்குக் கம்பத்தை யடக்குவதென்பது ஸ்திரமான பஞ்சபூத சொரூபமாம்.

பர்னசாலை ஆத்மாவுக்கு சிரமபரிகாரம் செய்து கொள்ளும் ஸ்தானமென் றெண்ணப்படுகிறது. காமம் குரோதம் லோபம் இவைகளை ஜயிப்பதென்பது ஆசையையடக்குவதாம்.

முதலில் மோகத்தை யடக்குவது சுத்த மாயையை யடைவது. பிறகு ரஜோரூபமான மாயையானது ஜடாக்னியில் சேர்கிறது.

பிறகு அக்ஞான ஸம்பந்தமான அந்த மாயையின் வியோகம் உண்டாகின்றது. அப்போது சுகமில்லாததோத பெரிய வருத்தம், பிறகு துக்கத்தின் பங்கமும் உண்டாகிறது.

அப்போது விவேகத்தின் ஆச்ரயமும் அதிகமான பக்தியின் சேர்க்கையும் உண்டாகின்றன.

திரிகுணங்களுக்கு ஆச்ரயமான வீட்டில், அஜ்ஞானத்தைத் தாண்டும் உபாயம் லிங்கம் என்னும் பெயரையுடைய மதத்தை யடக்குவதென்று கூறப்படுகிறது.

மச்சரத்தை யடக்குவதும் பின் அகங்காரத்தை யடக்குவதும் பின் லிங்கதேகத்தின் வியோகமும் பிறகு மாயையென்னும் ஏகத்தன்மையும் ஹிருதயா காசத்தை யடைவதும் பிறகு ஆனந்த

மாகிற ஏகசுகமும் அதற்குப் பிறகு மாயையை விடுவதும் ஸாத்விகியை யடைவதென் றெண்ணப்படுகிறது.

ஸாத்விகமான மாயையோடு கூட உத்தமமான ஹிருதயாகாசத்தை ஸச்சிதாநந்தமென்னும் பெயருள்ள மஹாகாசத்தில் சேர்க்கப்படுகிறது.

ஸாகரத்தில் பிரவேசிக்கும்படி செய்வதே ஆத்மாவுக்கு சிரேஷ்டமான முத்தியென்று அறியத்தக்கது. நான்கு முத்தியிலும் அது ஸாயுஜ்யமுத்தி யென்னப்படும்.

ஏ சீதே! இரகஸ்யமான அர்த்தத்தை யுடையதும் வேதங்களின் ஸாரமான விஷயங்களையுடையதும் மனதிலுள்ள அஞ்ஞானத்தை நாசம் செய்வதும் என் விஷயமான ஞானத்தையுண்டாக்கக்கூடியதுமான ரத்னம் போன்ற பதினைந்து சுலோகங்களால் நிறைந்த ஸம்ஜ்ஞானபேடிகா வென்னும் இவ்விஷயத்தைப் பிரீதியோடு நான் உனக்குச் சொன்னேன். இதை நீ நன்றாய் உன் மனதில், தாரணஞ்செய்து ஆலோசித்துப்பார்த்தால், மேன்மேலும் ஆனந்த முண்டாவதோடு இன்னும் என் ஸம்பந்தமான அநேக அற்புதமான விஷயங்கள் உன் மனதிற்றோன்றும் என்றார்.

சீதாதேவியானவள் இராமர் சொன்ன அந்த வார்த்தையைக் கேட்டு ஸம்ஜ்ஞான பேடிகையைத் தனது மனதில் நன்றாய் நிலைநிறுத்தி அடிக்கடி புத்தியால் ஆலோசித்துப்பார்த்துச் சிறிதுநேரம் பேசாமல் இருந்தாள். பிறகு தன்னுடைய லீலைகளை யெல்லாம் தெரிந்துகொண்டு ஸ்ரீராமமூர்த்தியின் சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்தாள்.

அப்புறம் ஆனந்தம் நிறைந்த உள்ளத்தோடு ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு க்ஷணநேரம் ஒன்றும் பேசாமல் இருந்தாள். இவ்வித ஸ்திதியிலிருக்கும் சீதையைப் பார்த்து ஸ்ரீராமர் "ஏ சீதே! இந்தப் பேடிகையில் ஆனந்தம் விளைவிக்கக்கூடியதாகக் கண்டதெது? உன் அஞ்ஞானம் விலகிற்றா? என் விஷயமாகிய நல்ல ஞானம் உனக்கு உண்டாயிற்றா? நீ எவ்விதம் அறிந்துகொண்டாய்? உனக்கு ஏதாவது தெரிந்ததா இல்லையா? அல்லது நான் நன்றாய்ச் சொல்லட்டுமா? என்றார்.

இப்படி ஸ்ரீராமர் சொல்வதைக்கேட்டு மிகவும் ஆனந்த மடைந்த சீதை இராமரிடம் பின் வருமாறு கூறுகிருள்.

சீதாதேவி கூறுகிருள்.

இராவணனுடைய கொழுப்பை யடக்கிய ஏ ராம! நீங்கள் உபதேசித்த ஞான பேடிகையை புத்தியால் ஆராய்ந்து பார்த்து நான் நல்ல ஞானத்தை யடைந்தேன். நிர்க்குணமாயும் நிர் விகார மாயும் இருக்கிற நீர் உலகில் ஜனங்களின் நன்மைக்காக என் ஸம் பந்தத்தால் வெகு லீலைகளைக்காட்டியிருக்கிறீர். நீங்கள் பதினைந்து சுலோகங்களால் சொன்ன பேடிகையில் அடங்கின உத்தமமும் இரஹஸ்யமுமான விஷயங்களை ஜனங்களின் நன்மைக்காக வெகு விஸ்தாரமாய் எடுத்துக்கூறுகிறேன். இதைப்பக்தியோடுநன்ருய்த் தியானஞ்செய்து கொண்டு வந்தால் மனிதனுக்கு ஆத்மஞானம் அவசியம் உண்டாகும் என்பது நிச்சயம். ஸச்சிதாநந்த ரூபியான விஷ்ணுவேதான் ஸாகரம் என்னப்படுவது; விஷ்ணுவுக்குப் பூபா ரத்தைக்குறைக்கவேண்டுமென்னும் எண்ணம் உண்டாவதே அலை யென்று சொல்லப்படுவது. அந்த இச்சையால் மங்களகரமான அவரது அம்சத்தின் லவமானது ஸமுத்திரத்திலிருந்து வெளிப் படுத்தப்படுகிறது. அதற்குத் தான் உலகத்தில் ஆத்மாவென்னும் பெயர் வழங்குகிறது.

அதனுடைய தாயாகிய புத்திரன் இவ்வுலகத்தில் கௌஸல் யை என்று சொல்லப்படுவது. அந்த ஆத்மாவுக்குப் பிதாவான சுத்த ஸத்வாந்தக்கரணம் என்பது தான் ஸத்யபராக்ரமமான ஸ்ரீமத் தசரத மஹா ராஜன்.

அந்த ஆத்மாவினுடைய நான்கு பேதங்கள் தான் சகோதரர் களான இராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்கள்.

அவைகளில் முதன்மையான ஸத்வகுணப் பிரதானமான துரியாவஸ்தை என்பது தான் ஸ்ரீராம சந்திர மூர்த்தி.

ஜாக்ராவஸ்தை தான் லக்ஷ்மணர். மூன்ருவதான ஸ்வப்நா வஸ்தை தான் பரதன்.

கடைசியான ஸுஷுப்தி யவஸ்தை தான் சத்ருக்னன். இவைகளுக்கு ஸ்தானமான ஹிருதயாகாச மென்பது தான் அயோத்யாபட்டணம்.

மனோவேக மென்பது வெளியில் பிரயாணம் போவதும் விச்வாமித்திரரின் யாகத்திற்குப்போவதுமாம். மனதின் கெட்ட வியாபாரங்களை நாசம் செய்வதே தாடகையைச் சங்கரித்ததாம்.

மனோவேகத்தை பங்கப்படுத்துவதே தனுஸை பொடித்தது. பிறகு அது மாயையோடு சேர்வதே என்னைத் தாங்கள் கல்யாணம் செய்துகொண்டது.

முன்னுள்ள ஸம்ஸ்காரங்களை யடக்குவதே பரசுராமரைப்பங்கப்படுத்தியது. பிறகு புத்தியின் காரணத்தால் ஸம்ஸாரமாகிய மகா காட்டில் ஸஞ்சரிப்பதே கைகேயியின் வரதானத்தால் தண்டகாரண்யத்தில் ஸஞ்சரித்தது.

அங்கே தம்பத்தை யடக்குவதே விராதனைக்கொன்றது.

பஞ்சபூத சொரூபமானதும் சஞ்சலமானதுமான ஆத்மாவின் இந்தச் சரீரம் பர்ண சாலையை யடைவதே நீர் சிரமத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக பஞ்சவடியை யடைந்தது.

காமத்தை யடக்குவதே கரனைக்கொன்றது. குரோதத்தை யடக்குவதே தூஷணனைக் கொன்றது.

லோபத்தை பொழிப்பது தான் திரிசிரஸ்ஸைக் கொன்றது. அங்கே ஆசையை யடக்குவதே பாணத்தால் சூர்ப்பனகையை யலங்கோலம் செய்தது.

மோகத்தை யடக்குவது தான் மிருக ரூபியான மாரீசனைக் கொன்றது. பிறகு சுத்த மாயையை யடைவதே தண்டகா வனத்தில் ஸத்வகுண ப்ரதானையான என்னை இடது புறத்தில் அடைவதாம். ஜடராக்னியில் ரஜோ ரூபமாயிருக்கிறதென்றெண்ணப்படுகிற மாயை தான் அக்னியில் பிரவேசித்த ரஜோ ரூபமான நான். அப்போது தாமஸியான மாயையின் வியோகமென்பது தான் தமஸ்வரூபிணியான என்னை இராவணன் அபஹரித்துக்கொண்டு போனது. சுகமில்லாமலிருக்கிற பெரிய வருத்தமே நான் உம்மை

விட்டுப் பிரிந்தது. பிறகு துக்கத்தின் பங்கம் தான் கபந்தனைக் கொன்றது. விவேகத்தை யடைவது தான் சுக்ரீவனைச் சேர்ந்தது. அதிகமான பக்தியை யடைவது தான் நீர் அநுமானை யடைந்தது. அவிவேகத்தை நாசஞ்செய்வது தான் நீர் வாலியைக் கொன்றது. பிறகு உற்சாகத்தோடு சேருவது தான் விபீஷணரின் சரணாகதி. அக்ஞானத்தைத் தாண்டுவதற்கு வேண்டிய உபாயந்தான் பெரிய ஸமுத்திரத்தில் அணைபோட்டது.

ஏ இரகு நந்தன! லிங்கதேகம் என்னும் பெயரையுடைய மங்களகரமான திரிகுணங்களும் ஆச்ரயமான லிங்கதேகத்தை யடைவது தான் நீர் திரிகூட மலைமேலுள்ள இலங்கையை யடைந்தது.

அங்கே மதத்தை யடக்குவது தான் நீர் கும்பகர்ணனைக் கொன்றது. மச்சரத்தை அடக்குவது தான் நீர் மேக நாதனை(இந்திரஜித்தை)க் கொன்றது. அங்கே அஹங்காரத்தை யொழிப்பது தான் நீர் இராவணனை வதஞ்செய்தது: மாயை யென்பதோடு சேர்வது தான் நீர் மூன்று விதமான என்னுடன் சேர்ந்தது.

இலிங்கதேகத்தின் வியோகந்தான் நீர் இலங்கையிலிருந்து திரும்பியது. இருதயாகாசத்தையடைவதே மறுபடி நீர் அயோத்திக்குப்போனது. ஆனந்தமான ஏக சுகம் என்பது தான் அங்கு நீர் இராஜ்யசுகங்களை யனுபவித்தது. மாயையைவிடுவது என்பது தான் வான்மீகியின் ஆச்ரமத்தில் என்னைத்தாங்கள் விட்டுவிட்டது. இன்னும் மேலேவரப்போகிறதும் ஸ்ரீராம! உம்மால் பிரகாசப் படுத்தப்பட்டிருக்கிறது. மறுபடி ஸாத்விகையை கிரகித்துக்கொள்வதென்பதே தாங்கள் மறுபடியும் என்னையடைந்தது. ஸாத்விகமான மாயையோடு சேர்வதென்பதே நீர் என்னுடன் சேர்ந்திருப்பது. பிறகு இருதயாகாசத்தை மஹாகாசத்தில் இலயிக்கும்படி செய்வதென்பது, நீர் அயோத்தியா பட்டணத்தை விட்டுப் பிறகு வைகுண்டத்திற்குப்போவது. ஸச்சிதாநந்தமென்று பெயருள்ள ஸமுத்திரத்தில் பிரவேசிப்பது தான் நீர் மானுடரூபத்தை விட்டு விஷ்ணுரூபத்தைக்காட்டுவது. ஸாயுஜ்மென்பதுதான் உமது ஆத்மாமுக்தியை யடைவதென்று மனிதர்களால் சொல்லப்படுகின்றது,

ஏ ராம! சுபமானதும் அசுபமானதுமான எந்தெந்தக் காரியங்கள் உம்மால் செய்யப்பட்டனவோ அவைகளெல்லாம் ஜனங்கள் அறிவையடைவதற்கும் எல்லாருடைய நன்மைக்காகவும் ஏற்பட்டனவாகும். உம்முடைய செய்கைகளில் செய்யத்தகாதவைகளிருந்தாலும் ஸச்சிதாநந்தரூபியும் நிர்க்குணரும் ஆத்மஸ்வரூபருமான உமக்கு அதனால் என்ன உண்டாகக்கூடும்? இவ்விதம் நீர் எனக்கு உபதேசித்த மங்களகரமான ஸம்க்ஞானபேடிகையை நான் நன்றாய் விசாரித்ததால் ஜீவன்முக்தையாகிவிட்டேன். ஐயமேயில்லை. பதினொந்து சுலோகங்களால் நீர் எனக்கு உபதேசித்த தேகராமாயணத்தை நான் ஹாரம்போல் தரித்துக்கொண்டு விட்டேன்! சுலோகரத்னங்கள் அடங்கிய இந்த ஹாரத்தை எவன் கழுத்தில் போட்டுக் கொள்ளுகிறானோ அப்படிப்பட்ட புருஷசிரேஷ்டன் ஒரு க்ஷண காலத்தில் ஜீவன் முக்தனாகவே ஆகிவிடுவான் என்பதற்கு ஐயமில்லை. ஏ ராம! நீர் உபதேசித்த இந்த தேகராமாயணத்தைப் போல் ஒருவரும் சொன்னதுமில்லை. இனி மேல் சொல்லப்போகிறதுமில்லை. ஏ இரகுபுங்கவா! என்னிடத்தில் பிரியத்தால் நீர் உபதேசித்தீரேயொழிய பிர்மமா முதலாவர்களாலேயும் அறியமுடியாத இவ்விஷயத்தை இம்மாதிரி ஒருவரும் தெரிந்துகொள்ள முடியாது. தேகராமாயணமானது இரகசியமாயும் அழகுள்ளதாயும் மிகவும் கஷ்டப்பட்டுத்தெரிந்து கொள்ளகூடியதாயும் ஸ்வல்பமாயுமிருந்தாலும் நல்ல ஞானத்தை யுண்டாக்குகிறதாயும் கேட்பதால் பாவங்களை யெல்லாம் போக்குகிறதாயும் இருக்கிறது என்று கூறிப்புகழ்ந்தாள்.

இவ்வாறு சீதை கூறியவார்த்தைகளைக்கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்து ஸ்ரீராமர், ஏ சீதே! நீ பரிசுத்த முடையவள். நான் கூறிய ஸம்க்ஞானபேடிகையை நன்றாய் மனதிற்கொண்டு உள்ளது உள்ளபடியேயறிந்திருக்கிறாய். மோகத்தைவெகுதூரத்தில்துரத்தின் விஷயமான ஞானத்தை நன்றாய்உண்டாக்கக்கூடியஇந்ததேகராமாயணத்தை நாஸ்திகனுயிருந்து வெளிக்கு ஆஸ்திகன் போல் நடிப்பவனுக்கும் நல்ல ஹிருதயம் இல்லாதவனுக்கும் போதித்தல் கூடாது. மிகவும் இரகசியமான இது கலியுகத்தில் அதிகப்பயன்

உள்ளதாக விளங்கும். சகல வேதாந்த ஸாரம் அடங்கியதாயும் பக்தி முக்தி இவைகளைக்கொடுக்கக்கூடியதாயும் என்னால் உனக்கு உபதேசிக்கப்பட்டதாயும் இருக்கிற இந்த தேக ராமாயணத்தை மனிதர் தியானஞ்செய்தால், அவர்களுக்கு பிர்ம்மாநந்தாநுபவம் அவசியம் உண்டாகுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை என்றார்.

இவ்வாறு ஸ்ரீராமர் இரவில் ஸீதாதேவியுடன் பேசிக்கொண்டேயிருந்து, அவளோடு இரத்தினமயமான கட்டிலில் சுகமாய் நித்திரை செய்தார்.

மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீ ராமபிரான் சீதையோடு சுகமாக நித்திரை செய்த அன்றைய தினம் இராத்திரி விடிய நான்கு நாழிகையிருக்கும் போது, அவரை நித்திரையிலிருந்து எழுப்புவதற்காக சயன கிருகத்திற்கு வெளியில் வந்திகள், மாகதர்கள், சூதர்கள், தாஸிகள் நடர்கள் இவர்கள் யாவரும் வந்து கூடி வாத்தியங்களை முழக்கினார்கள். அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். மங்கள கீதங்களைப் பாடினார்கள். விடியற்காலத்தில் துதிக்கும் ஸ்தோத்திரங்களை மனோகரமாகவும் இனிமையாகவும் பாடினார்கள்.

𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌸𑌕𑌲𑌵𑌿𑌘𑍍𑌨𑌵𑌿𑌨𑌾𑌶𑌦𑌕𑍍𑌷𑌾
𑌦𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌚 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌚 ।
𑌭𑍃𑌙𑍍𑌗𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑍈𑌰𑌵𑌗𑌣𑌾𑌶𑍍𑌚 𑌶𑌿𑌵𑌾𑌚𑌦𑍁𑌰𑍍𑌗𑌾
𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌾𑌶𑍍𑌚 𑌨𑍃𑌪𑌤𑍇 𑌤𑌵 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ।
𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 𑌶𑌶𑍀 𑌕𑍁𑌜𑌬𑍁𑌧𑍌 𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌕𑍍𑌰
𑌰𑌾𑌹𑍂𑌸𑍍𑌸𑌕𑍇𑌤𑍁𑌰𑌦𑌿𑌤𑌿𑌦𑌿𑌤𑌿𑌜𑌦𑌿𑌤𑌾𑌦𑌿𑌤𑍇𑌯𑌾𑌃 ॥
𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑌃 𑌕𑌮𑌲𑌜𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌥
𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌕𑌰𑍋𑌤𑍁 𑌸𑌤𑌤𑌂 𑌤𑌵 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥

எல்லா இடையூறுகளையும் போக்கும் விநாயகரும், உலக மாதவாகிய தாக்ஷாயணியும், பகவதியான ஸரஸ்வதியும், மஹாதேவன் பக்தர்களான பைரவகணங்களும் துர்க்காதேவியும், தேவர்களும் ஏ அரசனே! உம்முடைய விடியற்காலத்தைச் சுபகரமாகச் செய்யட்டும்.

சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்ரன், ராகு, கேது, அதிதி, திதி, ஆதித்தேயர்கள், இந்திராதி தேவர்கள், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் இவர்கள் யாவரும் எப்பொழுதும் உம்முடைய இந்த விடியற்காலத்தைச் சுபகரமாகச் செய்யட்டும்.

பிருதிவி, அப்பு, தேயு வாயு, ஆகாயம், சப்தகுலாசலங்கள், சதுர்த்தசபுவனங்கள், பர்வதங்கள், அரண்யங்கள், கங்கை முதலிய நதிகள் இவையாவும் உமது விடியற் காலத்தைச் சுபகரமாகச் செய்யட்டும். திக்சக்ரவாளம், திக்குகள், திக்பாலர்கள், நாகங்கள், கருடன் முதலிய பக்ஷிகள், விருக்ஷங்கள் மலையிலுள்ள கொடிகள், புண்ணியகரமான தேவாலயங்கள், தேவலிங்கங்கள் இவையாவும் உமது விடியற்காலத்தைச் சுபகரமாகச் செய்யட்டும்.

ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்கள், நல்ல மார்க்கத்தைப் போதிக்கும் முனிவர்கள், பரமகாருண்யர்களான வியாசர் முதலிய ரிஷீசுவரர்கள், ரிஷிகளுடைய கோத்திரங்கள் இவர்கள் யாவரும் உமது விடியற்காலத்தைச் சுபகரமாக்கட்டும்—இவ்விதம் வந்திகள் சூதர்கள் கூண்டுகளிலிருக்கும் அநேக பக்ஷிசமூகங்கள் முதலியவர்கள் வாத்திய கோஷங்களோடு ஸ்ரீ ராமபிரானைத் துதித்தார்கள். இந்த ஸ்தோத்திரங்களைக் கேட்டுச் சீதை முதலிலும் ஸ்ரீராமர் பின்னுமாக எழுந்திருந்தார்கள். இராமர் எழுந்திருந்ததும் தேவர்களையும் முனிவர்களையும் மாதா பிதா குரு இவர்களையும் காமதேனுவையும் சிந்தாமணியையும் மனஸில் தியானித்தார். பிறகு சீதையும் துர்க்கை சரஸ்வதி, ஸ்ரீராமர், கௌஸல்யை, குரு பத்நி, தன் தாய் இவர்களை மனஸில் த்யானித்து ஸ்ரீராம மூர்த்தியை மிகவும் வணக்கத்துடன் நமஸ்கரித்தாள். பின் இராமர் நித்திய கர்மானுஷ்டானத்துக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொண்டு தேவதைகள் அக்நி, பிராமணர்கள் இவர்களை வணங்கிக் கிரமப்படி சௌசம் தந்தசுத்தி முதலியவைகளையுஞ் செய்து முடித்தார். பிறகு ஸ்நானஞ் செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தேவ பூஜையுஞ் செய்து முடித்தார். இதற்குப் பின் கிரமப்படி பிராமணர்களுக்குத் தானமளித்தார். இச்சமயத்தில் சீதையும் கௌரி பூஜை செய்து முடித்துத் தன்னுடைய மாமிமார், இராமசந்திரர் இவர்களுக்கும் நமஸ்காரஞ் செய்து அவரருகில் வீற்றிருந்தாள்.

இதன் பின் இராமபிரான் சீதை, தாய்மார்கள், தமது பந்துக்கள், மித்திரர்கள் இவர்களுடனிருந்து புராணகதைகளை வசிஷ்டர் ஓதிவரக் கேட்டுவந்தார். புராண சிரவணஞ்செய்த பிறகுஇராமர் தமது குருவாகிய வசிஷ்டர் அவர் பத்னி தாய்மார் பிராமணர் பண்டிதர் வைதிகர் முனிவர் யோக நிஷ்டர் தபோநிஷ்டர் ஜோதிடர் மீமாம்ஸகர் தார்க்கிகர் மந்திரசாஸ்திர நிபுணர் மர்ம சாஸ்திரம் அறிந்தவர் இன்னும் பூஜிக்கத்தக்க மகான்கள் இவர்கள் யாவரையும் சீதையுடன் கூட பூஜித்து வணங்கினர். பிறகு சீதை தன்னுடைய தோழிமார்களுடன் சுவர்ணபாத்திரத்தில் பூஜாதிரவியங்களை எடுத்துக்கொண்டு காமதேனுவிடஞ் சென்று அதற்கு ஆராதனை புரிந்து நமஸ்கரித்துத் தூபதீபாதி உபசாரங்கள் செய்து பக்குவான்னம் பாயஸம் இவைகளை நிவேதித்து சந்தோஷப்படுத்தி அதை வலம் வந்து, "ஏ காமதேனுவே! உனக்கு நமஸ்கரிக்கிறேன். நீ சீக்கிரமாக இராமபிரானுக்கும் பிராமணர்களுக்கும் திவ்யபக்குவான்னம் முதலியவைகளைக் கொடு" என்று பிரார்த்தித்தாள். இவ்வாறு சீதை பிரார்த்தித்துப் பின் காமதேனுவின் அருகில் கோடிக் கணக்கான சுவர்ண பாத்திரங்களை வைத்தாள். காமதேனு அப்பாத்திரங்களெல்லாவற்றிலும், திவ்யான்னங்கள் நிரம்பும்படி செய்தது. உடனே சீதை அந்தப் பக்குவான்னங்களையும் போஜன பதார்த்தங்களையும் சொர்ண பாத்திரங்களில் தனித்தனியே எடுத்துக்கொண்டு தன் பாதச் சிலம்பு ஒலியிடப் பரிமாறச் சென்றாள். இதற்குள் இராமர்கோடிக்கணக்காகப் பிராமணர்களையும் ஆயிரக்கணக்கான தமது மித்திரர்களையும், மந்திரிமார்களையும்அழைத்து வந்து போஜனசாலையில் போட்டிருக்கும் சுவர்ண பீடங்களில் சக்ராகாரமாக உட்காரவைத்து அவர்களுக்கு வெண்பட்டு, சுவர்ணபாத்திரம் இவைகளையளித்துச் சந்தனம் புஷ்பம் முதலியன கொடுத்துப் பூஜித்தார். இராமபிரானுடையபந்துக்கள் மூன்றுகால்களுள்ள சொர்ணபாத்திரங்களில் போஜனபதார்த்தங்களைத் தனித்தனியே யெடுத்து வந்து போஜனசாலைக்குச் சமீபத்தில் ஓரறையில்வைத்தார்கள். பிறகுபோஜனஞ்செய்ய

விருக்கும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சொர்ணதீர்த்த பாத்திரமும் இரத்தின தீபத்துடன் உபபாத்திரமும் வைத்தார்கள். இத்தருணத்தில் அந்த ஸ்திரீகளின் பாதநூபுரங்கள் கிண்கிணிகள், கைக்கங்கணங்கள் இவைகளின் ஒலியும் அவர்கள் கழுத்திலணிந்து கொண்டிருக்கும் முத்துமாலைகள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வதாலுண்டாகும் சப்தமும் காதுக்கினிமையாகவும் மனோகரமாகவும் கேட்டன. இச்சப்தங் கேட்டதும் அங்குள்ளாரியாவரும் திடுக்கிட்டு இஃதென்ன சப்தமென வியப்புற்றார்கள். பின் சீதை அங்கு நடந்துவருவதைக் கண்டார்கள். இவ்விதம் வரும் சீதையானவள் மின்னற் கூட்டங்களின் பிரகாசம் போலவும், ஆகாயத்தில் விளங்கும் சூரியப்பிரகாசம் போலவுமிருந்தாள். கைவிரல்களிலும் கால்விரல்களிலும் மீன், முதலை, ஆமை இவைகளின் உருவம் போல் செய்யப்பட்ட மோதிரங்களை யணிந்து கொண்டிருந்தாள். காலில் நூபுரம், கிண்கிணி, கைகளில் கல்லிழைத்த கங்கணம் இவைகளை யணிந்து கொண்டிருந்தாள். இடையில் அழகுவாய்ந்த வெண்பட்டுடுத்துக் கொண்டிருந்தாள். கழுத்தில் நடந்து வரும்போதொலியுண்டாகக் கூடியதும், சொர்ணக் கம்பியில் கட்டப்பட்டதுமான முத்துமாலைகளையும் தரித்துக்கொண்டிருந்தாள். சொர்ணக்கொடியில் கட்டப்பட்டதும் இரத்தினச் சதங்கைக் கொத்துகள் நாற்றியதும், சிங்கம், வியாக்ரம், மான் முதலிய மிருகங்களின் உருவங்கள் வரையப்பெற்றதும் நீலம், மஞ்சள், கறுப்பு, சிவப்பு முதலிய பல வர்ண இரத்தினங்க ளிழைக்கப்பெற்றதுமான மேகலாபரணத்தை இடையில் பூண்டிருந்தாள். அந்த இடைக்குமேல் வயிற்றில் வாழைப்பழம்போன்ற பதக்கங்களுடன் சுவர்ணமாலைகள் தொங்கிக்கொண்டிருந்தன. சித்திர வர்ணமுள்ள இரவிக்கை யணிந்திருந்தாள். இரண்டு செவிகளிலும்இரத்தினக் கம்மல்களும் நாசியில் திவ்ய மூக்குத்தியும் சிரசில் சந்திரபிரபை சூரியபிரபை என்னும் ஆபரணங்களும் பின்னல் முதல் நெற்றிப் பொட்டு வரையில் வந்து தொங்கும் சுட்டியும் ஜனக மகாராஜனால் விவாக காலத்தில் அளிக்கப்பட்ட சூடாமணியும் பூண்டிருந்தாள்.

இவ்வாறான அலங்காரங்களோடு கூடிய சீதையைப் பார்த்த பிறகு எந்தப் புருஷன் மனமுருகாமலிப்பான்? இடதுகரத்தில் சொர்ண பாத்திரத்தையும் வலது கரத்தில் கரண்டியையும் தரித்திருப்பவளும் தாமரைப் புஷ்பம் போன்ற முகம், தாமரை இதழ் போன்ற நேத்திரங்கள், காந்தள் மலர்போன்ற கைகள், பச்சைக் கர்ப்பூர முதலிய வாசனைத் திரவியங்கள் ஊட்டியகலவைச்சந்தனம் பூசிய சரீரம், இவைகளோடு கூடியவளும், நவரத்தின மயமான தோள் வளை திவ்யகங்கணங்கள் செம்பஞ்சுக் குழம்பினால் பிரகாசியாநின்ற தண்டைகள் இவைகளை யணிந்திருப்பவளும் நெற்றியில் கஸ்தூரிப் பொட்டும் குங்குமம் தரித்துக் கண்களில் மை தீட்டியிருப்பவளும், புன்னகை விளங்கும் முகமுள்ளவளுமாகிய சீதையைக் கண்ட பிராமணோத்தமர்கள் முதலிய எல்லோருடைய நேத்திரங்களும் நவரத்தினத்தின் காந்தியைக்கண்டு ஒளிமழுங்கியது போலாயின. யாவரும் சித்திரப்பதுமைபோலாயினர். தங்களையும் மறந்தனர்.

சீதையின் அலங்காரத்தைக் கூறும்

4 - வது சருக்கம்

முற்றிற்று.

5-வது சருக்கம்.

அப்பால் சீதாதேவி ஒரு க்ஷணநேரத்தில் யாவருக்கும் திவ்ய பக்குவான்னத்தைப் பரிமாறினாள். காமதேனுவின் அநுக்ரகத்தாலுண்டான நெய் பாயஸம் முதலியவைகளையும் பேணி வடை முதலிய பலகாரங்களையும் பூஷணிக்காய் முதலியவைகளாற் செய்யப்பட்ட வடகங்களையும் சித்திரான்னங்கள், மா, பலா, வாழை முதலிய கனிவர்க்கங்கள், உஷ்ணமாறுத லேகியங்கள், நாவினால் புசிக்கத் தக்கவைகள், பேயங்கள் என்று சொல்லப்படும் பானபதார்த்தங்கள், சீனிசர்க்கரை, கண்ட சர்க்கரை, மிளகு முதலியவைகள் கலந்தமோர், நெய்யில் பக்குவமான வ்யஞ்சனம் ஆகிய இவ்வித போஜன பதார்த்தங்களைத் தனித்தனியே எடுத்துச் சீதை பரிமாறினாள். இராமரும் புண்ணியகதைகளைச் சொல்லிக் கொண்டு தமது சிநேகிதர்களுடன் யாவருக்கும் பரிமாறினார். இராமர் அவர்கள் யாவரும் புசித்து எழுந்தபின் எல்லாருக்கும் தமது கரத்தால் தாம்பூலமளித்துப் பின் தாம் போஜனம் செய்து மகிழ்ந்தார். உடனே வேறு வஸ்திரமுடுத்து ஆயுதங்கள் தரித்துக் கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துவிட்டு முத்துப் பல்லக்கி லேறித் தமது அரண்மனையை விட்டு வெளிப் புறப்பட்டார். பந்துக்கள் தாதிகள் மித்திரர்கள் இவர்கள் யாவரும் சூழ்ந்து ஸ்தோத்திரஞ் செய்ய இரகுராமர் தமது தாய்மார்களின் அரண்மனையை யடைந்தார். அங்கு முதலில் கௌஸல்யா தேவியை நமஸ்கரித்துப் பிறகு கிரமப்படி மற்றவர்களையும் நமஸ்கரித்து அவர்களுடைய ஆசீர்வாதம்பெற்றுச் சபைக்கு வந்து, தமது மந்திரிமார்களுடன் சிம்மாஸனத்தில் வீற்றிருந்து இராஜ்ய விவகாரங்களைக் கவனித்து நீதியாய் அரசுபுரிந்து வந்தார். பிறகு சீதை தன் தோழிகள் கொழுந்தன்மார் ஊர்மிளை முதலிய தன் சகோதரிகள் முதலிய யாவருக்கும் திவ்ய போஜனம் செய்வித்துத் தானும் போஜனஞ்செய்து தாம்பூலந் தரித்துப் பச்சை வர்ணமுள்ள புடவை யுடுத்துச் சிவப்பு வர்ணமுள்ள ரவிக்கை யணிந்து தன்னுடைய கிருகத்தின் பின்புற மிருக்கும் உபவனத்திற்குத் தோழிமார்களுடன் சென்று அங்கு வீற்றிருந்து திவ்ய சரித்திரங்களைப் பேசிக்கொண்டிருந்தாள். இப்பொழுது சீதை திவ்யமான அநேக

ஆபரணங்களை யணிந்துகொண்டிருந்தாள். அவைகளின் பெருமையை வர்ணிக்க நான்கு முகமுள்ள பிரம்மதேவனாலும் ஐந்து முகமுள்ள பரமசிவனாலும் ஆறுமுகமுள்ள சுப்பிரமணியக் கடவுளாலும் ஏழுமுகமுள்ள உச்சைசிரவசுவாலும் ஆயிர முகமுள்ள ஆதிசேஷனாலும் இயலாது. இப்படியாயின் நரர்களுக்குள் யாரே வர்ணிப்பவர்?

இப்படிப்பட்ட திவ்யாலங்காரத்துடன் சீதாதேவி உபவனத்துக்கு வந்திருப்பதை யறிந்த தண்ணீரிறைக்கும் வேலைக்காரர்கள் அங்குள்ள ஜலயந்திரங்களைச் சீக்கிரமாகத் திறந்துவிட்டனர். சீதாதேவி அவைகளின் வேடிக்கைகளையும் விருக்ஷங்கள் கொடிகள் இவைகளின் அழகையும் கண்டு களித்துப் பரமானந்த மடைந்தாள். இப்பொழுது இராமர் சபையை விட்டெழுந்து பந்துக்களுடன் தமது அரண்மனைக்குப்புறப்பட்டார். துந்துபி நவவாத்தியம் கோமுக வாத்தியம் பேரிகை முதலியவை முழங்கின. தாஸிகள் கீர்த்தனம் செய்தனர். இந்த அரவமானது தோட்டத்தில் தன் தோழிமாருடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சீதையின் செவியிற் பட்டது. உடனே சீதை இடது கையில் கனகப்பட்டை என்கிற வாத்தியத்தையும் வலது கையில் உபபாத்திரத்தையு மெடுத்துக்கொண்டு தன் நாயகனாகிய ஸ்ரீராமச் சந்திர பிரபுவின் வரவை எதிர்பார்த்திருந்தாள். இராமர் அரண்மனை வாயில் வந்ததும் தமது பந்துக்களை அனுப்பி விட்டு பல்லக்கிலிருந்து இறங்கி வெளியில் பல்லக்கை நிறுத்திவிட்டுக் கிருகத்துக்குள் பிரவேசித்தார். இப்பொழுது அநேக தாஸிகள் தத்தம் வேலைகளில் பிரவேசித்து இராமபிரானுக்கு முன் விரைவாக வந்து, ஒருத்தி பிரபுவுக்கு விசிறினாள். ஒருத்தி சாமரம் போட்டாள். ஒருத்தி ஆசனமளித்தாள். ஒருத்தி வெற்றிலை பாக்கு வைக்கும் பெட்டியை எடுத்து நின்றாள். ஒருத்தி காளாஞ்சியைத் தூக்கிக்கொண்டு அருகே நின்றாள். ஒருத்தி ஜலபாத்திரத்தை எடுத்துக்கொண்டாள். ஒருத்தி வஸ்திரப் பெட்டியையும் ஒருத்தி வில்லையும் மற்றொருத்தி அம்புறாத்தூணியையும் ஒருத்தி கத்தியையுமாக எடுத்துக் கொண்டனர். இப்படி அநேக தாஸிகள் அநேக

மான கைங்கரியங்களை செய்யத் தலைப்பட்டு இராகு வீரரைச் சூழ்ந்து கொண்டார்கள். இராமபிரான் பின்பு கால் நடையாக உபவனத்தை நோக்கி வந்து தமது வரவை எதிர் பார்த்திருப்பவளும் வெட்கத்தால் தலை குனிந்து புன்னகையுடன் கூடிய முகத்துடனிருப்பவளும் அழகான மூக்கு கண்கள் அன்போடு கூடிய கடைக்கண் பார்வை இவைகளையுடையவளுமான சீதையைக்கண்டு புன்னகை கொண்டார். உடனே சீதை எழுந்து நமஸ்கரித்து இராமருக்கு ஆசமனஞ் செய்ய நீர் கொடுத்து ஆசனமிட்டு உபசரித்தாள். இராமர் மனமகிழ்ச்சியுடன் அந்த ஆசனத்தமர்ந்து தீர்த்தம் அருந்திப் பின் சீதையுடன் ஜல யந்திரத்திற் கருகாமையிலுள்ள சாலைக்குச் சென்றாள். அப்பொழுது அங்கு அருகே யிருந்த இலட்சுமணனைப்பார்த்து "இலட்சுமணா! நீ போஜன சாலைக்குப் போ, அங்குப் பிராமணர்கள் முதலியவர்களை அழைப்பி; ஊர்மிளை முதலியவர்களுக்கு ஞாபகப்படுத்து; உசிதம்போல காரியங்களையெல்லாம் சித்தப்படுத்திய பிறகு எனக்குத் தெரிவி" என்றார். இலட்சுமணர் இராமர் உத்தரவைச் சிர மேற்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டு வசிஷ்டர் முதலியவர் வர்களையும் பிராமணர்களையும் சிநேகிதர் மந்திரிமார்கள் முதலியவர்களையும் போஜனசாலைக்கு வரவழைத்தார் ஊர்மிளை மாண்டவி முதலியவர்களுக்கு ஸ்ரீராமர் கட்டளையைத் தெரிவித்தார். பிறகு இராமபிரான் தாதுக்கள் கலந்ததும் சித்திராகங்கள் நிறைந்ததுமான ஜலநிலயத்தில் சீதையுடன் இறங்கி முதலில் சீதையைத் தமது கரங்களால் கட்டிக்கதழுவி மூழ்கச்செய்து பின் தாமும் அநேக தாஸிகள் பார்த்திருக்க மூழ்கி மைதிலியாகிய தமதுபத்தினியுடன் ஜலக்ரீடை செய்தார். சீதையைத் தமது கரங்களால் கட்டிப் பின்னே தள்ளுவதும் இரு கைகளாலும் ஜலத்தை யெடுத்து அவள்மீ திறைப்பதும், தாஸிகள் அங்குத் தயாராகக் கொண்டு வந்து வைத்திருக்கும் வாசனைத் திரவியங்கள் புஷ்பங்கள் இவற்றை வாரி ஒருவர்மீது ஒருவர் எறிவதும் ஜலயந்திரங்களை மூடிப்பிறகு திறப்பதுமாக விளையாடினார்கள். இப்போது இராமருடைய கண் ஜாடையால் இராமரது வேலைக்காரர்களிற் சிலரும் சீதையின் கண்ஜாடையால் அவளது வேலைக்காரர்

களிற் சிலரும் தனித்தனியே கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள். சீதை இராமரைத் தனது முஷ்டியால் குத்தினள். இராமரும் புஷ்பம் போன்ற தமது முஷ்டியால் சீதையைக் குத்தி விளையாடினர். இராமர் சீதையின் கோவைக்கனிபோன்ற அதரபானஞ்செய்து ஆலிங்கனஞ் செய்து கொண்டார். சீதையும் இராமரைக் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டாள். இவ்வாறாக இருவரும் வெகுநேரம் வரையில் விளையாடினர்கள். இந்த விளையாட்டை யாரால் வர்ணிக்கமுடியும்?

இச்சமயத்தில் போஜன விஷயமாகத் தெரிவிக்க இலட்சுமணர் வந்தார். அவரைத் தாஸிகள் பார்த்து "இலட்சுமணா! இராமர் சீதையுடன் ஜலக்ரீடை செய்கிறார். இராமபிரானிடம் செல்ல இதுசமயமல்ல; நீர் இங்கேதானே யிரு"மென்றுகூறித் தோட்டத்திற்கு வெளியிலேயே தடுத்தார்கள். இலட்சுமணர் அந்தத் தாஸிகளைப் பார்த்து "ஏ தாஸிகளே! நீங்கள் ஸ்ரீராமபிரானிடம் சென்று இலட்சுமணர் ஏதோ ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த உம்மிடம் வந்திருக்கிறாரென்று தெரிவியுங்கள்; பிறகு நான் வீடு செல்கிறே"னென்று கூறினர். இதைக் கேட்டதும் தாஸிகளுள் ஒருத்தி மெதுவாக இராமரிடஞ்சென்று மறைவிலிருந்து இலட்சுமணர் வந்திருக்கிறாரெனத் தெரிவித்தாள். இராமர் அந்தத்தாஸி கூறியதைக்கேட்டு உடனே சீதையுடன் தாமும் ஜல நிலயத்திலிருந்து வெளியேறி வெந்நீரில் ஸ்நானஞ்செய்து நூதனவஸ்திரமுடுத்து வாசனை வஸ்துக்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரித்துக்கொண்டு புஷ்பங்களா லலங்கரிக்கப்பட்ட வழியே இருவரும் போஜன சாலைக்கு வந்தனர்.

இங்கு ஊர்மிளை முதலியவர்கள் காமதேனு உதவிய அன்னத்தையும் பலகாரங்களையும் முற்கூறியதை விடப் பதின் மடங்கு அதிகமான உபசாரத்துடன் பரிமாறினர்கள். இராமபிரான் வசிஷ்டர் முதலியவர்கள் மித்திரர்கள் பந்துக்கள் இவர்களுடன் திருப்தியாகப் போஜனஞ்செய்து சந்தோஷித்தார். அப்பொழுது சீதை விநோத விளையாட்டுகளுடன் ஸ்ரீராமபிரான் அருகிலிருந்து பேசிக்கொண்டு அவருக்குத் திருப்தியுண்டாகும்படி சாமரம் வீசினர். இவ்விதம் இராமர் போஜனஞ்செய்து சீதை கொடுத்த தாம்பூல

தரித்துக்கொண்டு சபைக்கு வந்து மந்திரி பிரதானிகளுடன் பல பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டு சுகமாக விருந்தார்.

பிறகு சீதையும் போஜனம் செய்து தன் தோழிமாருடன் சயன கிருகம் சென்று கிளிகளுடன் பேசிக்கொண்டு ஸ்ரீராமபிரானது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜலக்கிரீடை வர்ணனை கூறும்

5-வது சருக்கம் முற்றிற்று.

6-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

இதன்பின் இராமபிரான் இலட்சுமணர் முதலியவர்களை யனுப்பிவிட்டுத் தாஸிகளுடன் வந்திமாகதர்கள் புகழ மனமகிழ்ச்சியுடன் சயனகிருகம் வந்து சீதையைக் கண்டார். ஸ்ரீராமபிரானது வரவை யறிந்த சீதை சொக்கட்டாறுடுவதை நிறுத்தி விட்டுக் கால் தண்டைகள் சப்திக்கத் தன் தோழிமார்களுடன் பதியை எதிர்கொண்டழைத்து, நமஸ்கரித்து அவரது கரங்களைப் பிடித்துப் படுக்கையில் உட்கார வைத்துத் தாம்பூல மளித்தாள். பின்பு இராமபிரான் சீதாதேவியுடன் ரத்நங்களாலும் முத்துக்களாலும் அலங்கரித்த மஞ்சத்தில் படுத்து தாஸிகள் சாமரம் போட நித்திரை புரிந்தார். சீதாதேவி ஒரு முகூர்த்தத்திற்குப் பிறகு எழுந்து மஞ்சத்திலிருந்து கீழே சயனித்துக்கொண்டாள். பிறகு இராமரும் விழித்துக்கொண்டார். உடனே சீதை மகிழ்ச்சியுடன் எழுந்திருந்து இராமருக்குத் தீர்த்தங்கொடுத்துத் தாம்பூல மளித்தாள். இராமருடைய பணிவிடைப் பெண்கள் இராமருக்கு மயில் தோகை விசிறியால் பக்தியுடன் விசிறினார்கள். சீதையின் பணிவிடைப் பெண்கள் தேனுவின் வால்மயிரினால் செய்யப்பட்ட விசிறியைக்கொண்டு சீதைக்கு விசிறினார்கள். இதற்குப் பிறகு இராமர் சீதையினுடைய கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு திராட்சைக்கொடியால் அமைக்கப்பட்ட மண்டபத்துக்குச் சென்று அங்கு ஓர் ஆசனத்தில் பின் பக்கத்தில் தலையணைகொண்டு இடதுபக்கத்தில் சீதையுடன் உட்கார்ந்து, அங்கு வரைந்திருக்கும் யானை, ஒட்டகை, குதிரை, மந்திரி, அரசன், தூதர்கள் இவர்கள் போன்ற சித்திரங்களின் விநோதங்களையும் தங்கம், ரத்தினம், தந்தம் இவைகளாற் செய்யப்பட்ட யானைகளையும் பார்த்துக்கொண்டு சந்தோஷமாக விருக்கும் சீதையுடன் சுகத்தை அநுபவித்தார். பிறகு அங்குக் கூண்டுகளிலிருக்கும் பக்ஷிகளுடன் சீதையும் தாமுமாக விளையாடினார். இப்பொழுது சீதையின் தாஸிகள் அங்கு வந்து நடனம் செய்தார்கள். ஷட் சுவரத்துடன் பாடினார்கள். பிறகு சீதை அந்தத்

தாஸிகளுக்கு ஆபரணங்கள் வஸ்திரங்கள் சந்தன தாம்பூலம் முதலியவைகளைக் கொடுத்து அனுப்பிவிட்டு இராமபிரானை நோக்கி "பிராண நாதா! தங்களுடன் நான் மேன்மாடியிலிருந்து தெருவில் நடக்கும் விநோதங்களைப் பார்க்க விரும்புகிறேன்; அங்கு வரவேண்டு"மெனப் பிரார்த்தித்தாள். தசரதநந்தனர் சீதையுடன் உப்பரிகை சென்று திவ்யாசனத்தில் அமர்ந்து ரத்தின மயமான கதவுகளமைக்கப்பட்ட சாளரத்தின் வழியே ராஜ வீதிகளிலும் மற்ற வீதிகளிலும் நடக்கும் ஜனங்களின் கொண்டாட்டத்தைத் தமது வலதுகையின் ஆள் காட்டி விரலால் சீதைக்குக் காண்பித்தார். இச்சமயத்தில் வீதியில் ஓர் அந்தணமாது இடுப்பில் அழுக்குவஸ்திர முடுத்து இளைத்த சரீரமுள்ள ஒரு குழந்தையை யெடுத்துக்கொண்டு பிக்ஷை யெடுப்பதற்குச் சென்றாள். அதைக் கண்ணுற்ற சீதை உடனே தன் தாதிகளுள் ஒருத்தியை யழைத்து, அந்த அந்தணமாதைத் தன்னருகில் அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தாள். அவள் வேகமாகச் சென்று அந்தப் பிராமண ஸ்திரீயை யழைத்து வந்தனள். சீதாதேவி அந்தப் பிராமண ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா! நீங்களேன் இவ்வாறு அழுக்காடை யுடுத்து பிக்ஷை யெடுக்கப்புறபட்டீர்கள்? தங்கள் குழந்தை ஏன் இளைத்திருக்கிறது?" என்று கேட்டாள்.

அதைக்கேட்டதும் பிராமண ஸ்திரீ கண்களில் நீர்ததும்ப நின்று "அம்மா! என் புருஷன் என்னை என் தந்தையின் கிருகத்தில் விட்டுவிட்டுத் தீர்த்த யாத்திரை சென்றார். அவர் கிழவராகையால், யாத்திரை போன விடத்திலேயே மரணமடைந்து விட்டார். எனது சகோதரர்கள் இருவரும் அவந்திதேசம் சென்று சாஸ்திராப்பியாசஞ்செய்கிறார்கள். இப்பொழுது என்னைக் காப்பாற்றுகிறவர் வீட்டில் ஒருவருமில்லாமையால், இக்கோலத்துடன் பிக்ஷைக்கு வெளிப்புறப்பட்டேன். என் குழந்தையும் சரியான உணவில்லாமல் இந்த ஸ்திதிக்கு வந்து விட்டது" என்றாள். இப்படி அந்த அந்தணமாது கூறியதும் ஜானகி தன் நாயகனது திரு முகத்தை நோக்கிப் பின் தன் ஆபரணங்களையும் திவ்ய வஸ்திரங்களையும் அந்த ஸ்திரீக்கு மனமகிழ்ச்சியுடன் அளித்து

அம்மாதைப்பார்த்து "அம்மா நீங்கள் விரைவாக இலட்சுமணரிடம் சென்று, என் உத்தரவுப்படி இலட்சம் பவுன் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று கூறினாள். அம்மாது அவ்விதமே இலட்சுமணரிடஞ் சென்று சீதையின் உத்தரவைத் தெரிவித்தாள். இலட்சுமணர் நமது இராஜ்யத்தில் பொய் கூறுகிறவர்கள் கிடையாது; ஆகையால் இம்மாது புகல்வதும் உண்மையாகத் தானிருக்குமென நம்பி அம்மாதுக்குச் சீதை உத்தரவுப்படியே இலட்சம் பவுன் கொடுத்தனுப்பினார். பிறகு சீதை தன் தாதியை இலட்சுமணரிடம் அனுப்பி, "இந்த ஏழு தீவுகளிலும் மற்ற இடங்களிலும் ஸ்திரீகளிலோ புருஷர்களிலோ யாரேனுமொருவர் 'நல்ல ஆடை ஆபரணங்களில்லாமலிருக்கிறதாகச் சாரர்கள் எனக்குத் தெரிவிப்பார்களானால், அந்தத் தேசத்தரசர்களுக்கு என்னாலும் இராமராலும் தக்க சிக்ஷை விதிக்கப்படும்" என்று பறை சாற்றுவிக்கும்படி தெரிவித்தாள். அயோத்தியிலும் இந்த உத்தரவைத் தெரியப்படுத்தவேண்டுமெனவும் கூறினாள். இதுவன்றி நமது தேசத்து அந்தணர்களுக்குக் கஜானாவிலிருந்து வேண்டிய திரவியங்கள் கொடுத்து அவர்களைப் பூஜிக்கவேண்டுமெனவும் தெரிவித்தாள். இலட்சுமணர் சீதையின் உத்தரவுப் படியே பறை சாற்றுவித்தார். ஏழு தீவுகளிலுள்ள அரசர்களும் தங்கள் தேசங்களில் சீதாபிராட்டியின் உத்தரவை யானையின் மீதேறி வாத்திய சப்தங்களுடன் தெரிவித்தார்கள். அதுமுதல் எல்லாத்தேசங்களிலும் பூமி புத்திரியாகிய சீதாபிராட்டியின் உத்தரவுப்படி வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரமும் ஆபரணமில்லாதவர்களுக்கு ஆபரணமும் அளிக்கப்பட்டன. இவ்விதம் சீதாபிராட்டியானவள் அநேக விநோதங்களை நடத்தினாள். பிறகு இராமபிரான் மாகதர்கள் வந்திகள் துதி செய்யத் தமது சபைசென்று இராஜ காரியத்தைக்கவனித்தார்.

அப்பால், சாயங்காலமானதும் சபையை விட்டெழுந்து சீதையின் அரண்மனை வந்து சந்தியாவந்தனாதி நேம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஔபாஸன அக்னி ஹோத்திரங்கள் செய்து கைலாஸபதியாகிய பரமசிவனைப்பூஜித்தார். பிறகு பிராமணர்களைப்

பூஜித்தார். அநேகவித பலவர்க்கங்களை அவர்களுக்கு அளித்தார். பிறகு தாம் போஜனம் செய்து புராணம், காயகர்களின் கானம் விஷ்ணுபக்தர்களின் நாமகீர்த்தனம் இவைகளைக்கேட்டுக்கொண்டு இரவு பதினொன்றே கால் நாழிகை வரையிலிருந்து விட்டு சயனகிருகம் வந்தார். இராமச்சந்திர பிரபுவின் வருகையை யறிந்த சீதை தன் தோழிகளுடனெதிர்கொண்டு சென்றழைத்தாள். பிறகு இராமர்சீதாபிராட்டியுடன் ரத்தினமஞ்சத்தில் படுத்துத்தாஸிகள் சாமரங்கள்வீச நித்திரை புரிந்தார். இவ்வாறுஇராமரால் சீதையும் சீதையால் இராமரும் சுகத்தை யனுபவித்தார்கள். சில சமயம் நிலாவில் வீட்டு முற்றத்திலும், சிலசமயம் உப்பரிகையிலும், சில சமயம் உப்பிரிகையின் மேற்புறத்திலும், சிலசமயம் கிருகத்திலும் சுவர்ணமணிகளால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தின்மேல் சிலசமயமும், சில சமயம் திராட்சை மண்டபத்திலும், சிலகாலம் ஜலயந்திரத்திற்குச் சமீபத்திலும், சில சமயம் மண்பூமியிலும், சில காலம் ஸ்படிக பூமியிலும், சிலசமயம் புஷ்பகவிமானத்திலும், சிலசமயம் சித்திர கிருகத்திலும், சிலசமயம் விலாமிச்சைத் தோட்டத்திலும், சிலசமயம் இன்னும் மற்றுமுள்ள அநேக இடங்களிலும் சீதையோடு சுகித்தார்.

சீதாராமர்களின் தினசரி அனுஷ்டானங்களை விவரிக்கும்

6 - வது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஒரு நாள் வியாச மகா முனிவர், சரயூ, நதியில் ஸ்நானஞ் செய்யும் பொருட்டு சித்திரை மாதத்தில் அயோத்திக்கு வந்தார். இராமபிரான் அவரை எதிர்கொண்டழைத்து, நமஸ்கரித்து, பக்தியுடன் ஆசனமளித்துத்தமது அரண்மனைக்கு வந்திருக்கும் முனிவர்களுடன் வீற்றிருக்கச்செய்து காமதேனு சிந்தாமணி இவைகளினுதவியால திவ்ய போஜனமளித்து அவருக்குத்தாம்பூல தக்ஷிணை கொடுத்து உபசரித்து க்ஷேமம் விசாரித்தார். அப்பொழுது சீதாதேவி சத்தியவதி குமாரராகிய வியாச முனிவருக்கு விசிறிக் கலையாற்றினள். இச்சமயத்தில் வியாச முனிவர் தமது க்ஷேமத்தைத் தெரிவித்து இராமபிரானுடைய க்ஷேமத்தையுஞ் சந்தோஷமாக விசாரித்துப் பின் விசனமுற்று, "மகாபலம் பொருந்திய இராம! நீ அரசாட்சி செய்வது போல் மற்றவர்கள் செய்ததுமில்லை, செய்கிற வருமில்லை, இனிச் செய்யப் போவதுமில்லை. உன்னுடைய மனத்திலிருக்கும் மற்றொரு தைரியத்தை நினைத்து இப்பொழுது ஆச்சரியப்படுகிறேன். அதாவது "ஏ இரகு சிரேஷ்ட! யௌவன பருவத்தில் காமமாகிற காட்டுத் தீயைச் சகிப்பவர் யார்? சீதையைத் தவிர மற்ற ஸ்திரீகளின் முகம் பார்ப்பதில்லை யென்னும் விரதம் அனுஷ்டித்து வரும் நீ இந்த யௌவன பருவத்தில் சகிப்பது மிகவும் ஆச்சரியமல்லவா" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும்இராமச்சந்திரர்"ஏ வியாஸமுனிவரே!என்னால் மூன்று பிரதிக்ஞைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்று, என் வாக்கினால் சொன்னதைப் பொய்யாக்குவதில்லை. அதற்கு இரண்டாவதும் பேசுவதில்லை. இரண்டாவது, சீதையைத் தவிர மற்ற ஸ்திரீகளை நினைப்பதில்லை. மூன்றாவது, எந்த சத்ருவைக்கொன்று விட வேண்டுமென்று விரும்புகிறேனே அவனை ஒரே பாணத்தினாற் கொன்று விடுவது; இரண்டாவது பாணம் எடுப்பதில்லை. ஆகிய இம்மூன்று நியமங்களும் தங்கள் ஆசீர்வாதத்தினால் குறைவற நிறைவேறவேண்டு" மென்றார். வியாஸர் ஸ்ரீராமர் மொழியைக்கேட்டு "அவ்வாறே யாகுக" என்றாசீர்வதித்து "ஏ இராமா!

இந்த ஏகபத்நீ விருதத்தின் புண்ணியத்தால் அடுத்த ஜன்மத்தில் நீ கிருஷ்ணனாக அவதரித்து அநேக ஸ்திரீகளை மணந்து அனுபவிக்கப்போகிறாய்" என்று கூறினார்.

இவ்வாறு அம்முனிவர் கூறியதும் இரகுநந்தனர் புன்னகை கொண்டு "முனிவர் பிரானே! துவாபரயுகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து அநேக ஸ்திரீகளை மணந்துகொள்ளும்பாக்கியத்தைப் பெற நான் செய்யவேண்டிய விருதங்களும் தானங்களும் எவை? தயை செய்து கூறவேண்டு"மெனப் பிரார்த்தித்தார். வியாசமுனிவர் "ஏ இராமா! நீ நல்ல கேள்வி கேட்டாய்? நீ அனுஷ்டித்து வரும் ஏகபத்நீ விருதத்தினாலேயே அந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்கும். ஆனாலும் நீ செய்யவேண்டியதைக் கூறுகிறேன் கேள். அதாவது சீதையின் உருவத்தைப்போல் பதினாறு உருவங்கள் சொர்ணத்தினால் செய்து அவைகளை வஸ்திரம் ஆபரணம் இவைகளாலலங்கரித்துச் சரயூநதிக்கரையில் பிராமணர்களுக்குத் தக்ஷிணையுடன் தானஞ்செய்தால் அடுத்த ஜன்மத்தில் அநேக ஸ்திரீகளையடைவாய்" என்று கூறினார். அம்முனிவர் பிரானது திருவாக்குப்படியே இராமபிரான் பதினாறு உருவங்களைச் செய்து சரயூநதிக்கரையில் தானஞ்செய்தார். அந்தப் பதினாறு உருவங்களைப் பெற்றுக்கொண்ட அந்தணர்கள் இராமபிரானைப்பார்த்து "ஏ இராமா! ஒன்று கொடுத்தால் ஆயிரங் கிடைக்குமென்பது தருமசாஸ்திர விதி. ஆகைபால் நீ பதினாயிரம் ஸ்திரீகளை யடைவாய்" என்று ஆசீர்வதித்துச்சென்றனர். பிறகு இராமர் சந்தோஷத்துடன் வியாஸமுனிவரை நமஸ்கரித்துப் பூஜை செய்து ஆசிரமத்திற்கு அனுப்பினார்.

இதன்பின்பு ஒருநாள் சித்திரை மாசத்தில் இராமர் சீதாபிராட்டியுடன் சரயூநதிக்கரையில் கூடாரத்திலிருந்து விளையாடினார். இப்பொழுது இராமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய வெகு ஜனங்கள் அயோத்தி நகரம் வந்தார்கள். தேவர்கள், யக்ஷர்கள் பன்னகர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள், ஓஷதிகள், நதிகள், முனீசுவரர்கள், அரசர்கள், அப்ஸரஸ்திரீகள் புண்ணிய க்ஷேத்திர அபிமான தேவதைகள், குரங்குகள் இவர்கள் யாவரும் அயோத்திக்கு வந்தார்கள். பிறகு தேவபத்னிகள் வந்தார்கள். அந்தச் சமயம்

சீதை தீண்டத்தகாதவளாயிருந்தாள். (ரஜஸ்வலையாயிருந்தாள்) இதை அறிந்த அவர்கள் இராமபிரானுடைய அழகில் மோகங் கொண்டு மன்மத பாணத்தால் வருத்தமுற்றுப் பாதி ராத்திரி வேளையில் இராமசந்திரரைப்பார்க்க வந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்த்த இராமபிரானுடைய காவலாளிகள் "நீங்கள் யார்? இந்த நள்ளிருளில் இங்கு வரக் காரணம் யாது? சந்தேகமின்றித் தெரிவியுங்க"ளென்றுகேட்டார்கள். அவர்கள் "நாங்கள் இராமரைப் பார்க்க வந்தவர்கள்? இப்போது ஸ்ரீராமச்சந்திரருடைய தரிசனம் கிடைக்காவிட்டால் சரயூநதியில் எங்கள் தேகத்தை ஒழித்துவிடுவதாகத் தீர்மானித்து விட்டோம்" என்றார்கள். இப்படிக்கூறிய அந்தத் தேவபத்திகளுடைய வார்த்தையைக் கேட்ட அந்த வேலைக்காரர்கள் தாஸிகள் மூலமாக, ஸ்ரீராமபிரானுக்குத் தெரிவித்தார்கள். உடனே இராமபிரான் தாம் சயனித்திருந்தஇடத்திற்கு அவர்களை யழைக்கும்படி தாதிகளுக்கு உத்தரவிட்டார். தாதிகள் அவர்களை யழைத்து வந்ததும் ஸ்ரீராமபிரானுக்கு அவர்கள் வந்தனம் புரிந்து நாம் மகா புண்ணியஞ் செய்தவர்கள், அதனால் தான் இராமதரிசனம் கிடைத்ததென்று எண்ணிக்கொண்டு வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றார்கள். இராமர் அப்பொழுது அவர்களைப் பார்த்து "நீங்கள் இங்கு வந்த வரலாறு யாது"என்றுகேட்டார். அந்த ஸ்திரீகள் "ஈசுவர! சகலமும் அறிந்தவராயிற்றே தாங்கள். நாங்கள் எதைத் தெரிவிக்கப்போகிறோம்" என்றார்கள். இராமர் உடனே அவர்கள் மனத்திற் கொண்டிருக்கும் எண்ணத்தை யறிந்து "தேவபத்திகளே! உங்கள் எண்ணத்தை யானறிவேன். நான் இந்த ஜன்மத்தில் ஏகபத்நி விரதம் அனுஷ்டித்து வருகிறேன். என்வார்த்தையைப் பொய்யாக நினைக்க வேண்டாம்; உங்கள் இருப்பிடத்திற்கு நீங்கள் விரைவாகச் செல்லலாம், அரசர்களுக்குக் கெடுதியைத் தரும்படியான காரியம் நமது இராஜ்யத்தில் வேண்டாம்" என்றார். இவ்வார்த்தைகளைக்கேட்டதும் அந்த ஸ்திரீகள் அவ்விடத்திலேயே மூர்ச்சித்து விழுந்துவிட்டார்கள். இவ்வாறு விவேகமற்றுக் கீழே விழுந்த அந்த ஸ்திரீகளைப் பார்த்த தீனரக்ஷகரான இரகுபுங்கவர் மனமிரங்கி "ஏ மாதர்களே! உங்களுடைய வருத்தந் தீரும்படியான என் வார்த்தையைக் கேளுங்கள். நான் துவாபர யுகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து நந்தகோப

ளுல் பரிபாலிக்கப்பட்டு இடைச்சேரியில் வசிக்கப்போகிறேன். அப்பொழுது இனி நான் ஜெநிக்கப்போகிற வாத்தினுல் தேவர்கள் கோபாலர்களாகவும் இந்திரன் நந்தனுகவும்அவதரிக்கப் போகிருர்கள். அப்போது நீங்கள் கோபஸ்திரிகளாக அவதரிப்பீர்கள். உங்களிஷ்டம் அக்காலந்தான் நிறைவேறும். உங்களோடு இராஜக்ரீடையை பிருந்தா வனத்திலும் யமுனுநதியின் மணலிலும் செய்கிறேன். ஆகையால் வருத்தப்படாமல் உங்களிருப்பிடத்திற்குச் செல்லுங்கள்" என்று கூறினுர்.

இவ்வாறு கூறிய அந்த இராமருடைய வசனுமிருதத்தினுல் அவர்கள் உயிர் பெற்றுச் சந்தோஷத்துடன்அவரை நமஸ்கரித்துத் தங்களிருப்பிடஞ் சென்றுர்கள். இச்சமயத்தில் மாயாபுரியிலிருந்து மங்களசொரூபியான குணவதியென்பவள் மேற்கூறிய புண்ணிய காலத்தை உத்தேசித்துச்சரயூ நதியில் ஸ்நானஞ்செய்வதற்காகவந்தாள் என்று இராமதாஸர்கூறினுர். இதைக்கேட்டதும் விஷ்ணுதாஸர், "பரமகுருவே! தாங்கள் கூறிய குணவதி யென்பவள் யார்? அவளுடைய சுபாவமென்ன? அவள் யாருடைய பெண்? முன் யாருக்கு அவள் பத்னியாயிருந்தாள். இவைகளை விஸ்தரிக்கவேண்டுகிறேன்" என்றுர். இராமதாஸர் மறுபடி மேலே கூறுகிருர்.

தேவபத்நிகளுக்கு வரமளித்ததைக் கூறும்.

7-வது சருக்கம் முற்றிற்று.

8 வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

மாயாபுரியில், கிருதயுகத்தின் முடிவில் தேவசர்மாவென்றொரு அந்தணரிருந்தார். அவர் ஆத்திரேய கோத்திரத்தில் பிறந்தவர். நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் இவைகளின் கரைகண்ட நிபுணர். அதிதிபூஜை அக்நிஹோத்திரம் சூரியவிருதம் சூரியபூஜை இவைகளைத் தவறாமற் செய்யும் பிராமண சிரேஷ்டர். அவருக்குக் குணவதி யென்ற பெண்ணிருந்தாள். ஆண் சந்ததி கிடையாது. அவர் தமது பெண் குணவதியைச் சந்திரன் என்ற பெயருள்ள தமது சீடனுக்கு விவாகம் செய்துகொடுத்தார். அந்தச் சந்திரனையே தனக்குப் பிள்ளையாகவும் கொண்டு அன்புபாராட்டி வந்தார். இந்திரியங்களை ஜயித்த சந்திரனும் தேவசர்மாவைத் தனக்குத் தந்தையாகப்பாவித்துவந்தான். ஒருநாள் தேவசர்மாவும் சந்திரனும் தர்ப்பங்கள் சமித்துகள் முதலியவைகளைக் கொண்டு வருவதற்கு இமயமலைக்குச் சென்று அங்கு, இங்குமங்கும் உலாவிக்கொண்டிருக்கையில் பயங்கரமான ரூபத்துடன் ஓர் அரக்கன் அவர்கள் எதிர் தோன்றினான். அவனைக் கண்டதும் பயமடைந்து தேக நடுக்கமுற்று ஓடித்தப்ப வழியற்று யமனுக்குச் சமானமான அவ்வரக்கனுக்கு இரையானார்கள். அவ்விருவரும் உயிருள்ள வரையில் சூரிய பகவானைப் பூஜை செய்து கடையிலும் இமயமலையில் மரித்தமையாலும் மாயாபுரியில் இதுவரையில் வசித்து வந்தமையாலும் தருமங்களைச் செய்து வந்தமையாலும் மகா விஷ்ணுவினுடைய கருணைக்குப் பாத்திரவான்களாகி அவருடைய தூதர்களால் அழைக்கப்பட்டு வைகுண்டலோகஞ்சென்றார்கள். சூரியபூஜைபுரிந்தவர் வைகுண்ட உலகம் அடைவது எதனாலென்றால், விஷ்ணுவே சூரியனாகவும் சக்தியாகவும் விக்நேசுவரராகவும் பரமசிவனாகவும் இருக்கிறார். சூரியன் முதலிய தேவர்களைப் பூஜிப்பவர்கள் மழை ஜலம சமுத்திரத்தை யடைவதுபோல் அந்த மகாவிஷ்ணுவையே யடைகிறார்கள். சூரியனைப் போன்ற தேஜஸையடைந்து விமானத்தில் வைகுண்டத்திற்குச் சென்று அங்கு வசிக்கிற தேவசர்மா, சந்திரன் இவ்விருவரும் திவ்ய ஸ்திரீகளிடம் திவ்ய போகங்களை

அநுபவித்துக்கொண்டு விஷ்ணு ஸந்நிதானத்தில் விஷ்ணுவுக்குச் சமமான சாரூப்பிய முத்தி பெற்றுச் சுகமாக இருந்தார்கள்.

குணவதியானவள் தன் தந்தையும் புருஷனும் அரக்கனுக்கு இரையானதை யறிந்து விசனமுற்றுத் தன் வீட்டிலுள்ள சாமான்களைக் கிரயப்படுத்திப் புருஷனுக்கும் தந்தைக்கும் செய்யவேண்டிய சடங்குகளை முடித்து விட்டு அந்த மாயாபுரியிலேயே வாஸஞ்செய்து வந்தாள். விஷ்ணு பக்தியிற் சிறந்த குணவதி ஏகாதசி விருதம் கார்த்திகை விருதம், வருஷந்தோறும் மாக ஸ்நானம் சைத்திரஸ்நானம் வைகாசி மாதத்தில் (மாதவ) ஸ்நானம் விஷ்ணு ஆலயத்திருப்பணிசெய்தல், கோவில்களிற் கோலமிடுதல், விஷ்ணுவினிடத்தில்மனத்தைச்செலுத்தித்தினந்தோறும்விஷ்ணுபஜனம் செய்வது ஆகிய இவ்வெட்டு விருதங்களை வெகு பக்தியுடன் இந்திரிய நிக்ரகம் செய்து அநுசரித்து வந்தாள். சித்திரைமாதத்தில் அயோத்தியில் சரயூநதியிலுள்ள இராமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் மோக்ஷமுண்டாமென்று புராணிகர்கள் கூறுவதைக் கேட்ட குணவதி, ஒருநாள் பல ஜனங்களுடன் அயோத்தியாபுரி வந்து,ஸ்ரீராமதீர்த்தத்தில் தங்கினாள். அங்கிருக்கையில் ஒருநாள் சரயூநதியின் மணலில் கூடாரத்தில் வசித்து வரும் இராமரைப் பார்த்தாள். அவருடைய பூஜைக்கேற்றவைகளை எடுத்துக் கொண்டுபுறப்பட்டுக்கூடாரஞ்சென்று வாயிற்காப்போன் மூலமாக இராமருக்குத் தெரியப்படுத்தி அவர் உத்தரவின் பேரில் கூடாரத்திற்குள் நுழைந்து, பாதங்களில் நூபுரமும் இடையில் அரைஞாணும் கரங்களில் இரத்தினகங்கணமும் தோட்களில் இரத்தினங்களிழைத்த தோள்வளையும் கழுத்தில் கௌஸ்துபமணி, இரத்தினமணிமாலை, முத்துமாலை, பவளமாலை துளசிமாலை இந்திரநீலம் மரகதமணிமாலை முதலிய மாலைகளும் ஸ்ரீராமர் என்ற பெயர் வரைந்துள்ள மாலைகளும் கைவிரல்களில் இரத்தினமோதிரங்களும் செவிகளில் இரத்தினக் குண்டலங்களும் சிரசில் சூரியனுக்கொப்பான கிரீடமும் தரித்துக் கோடி சூரிய பிரகாசமுடையவராய் இரத்தினக்கட்டிலில் வீற்றிருந்து தமது மனைவியுடன் சொக்கட்டானாடிக்கொண்டிருக்கும் ஸ்ரீராமரைக்கண்டு குணவதி சாஷ்டாங்

கமாக நமஸ்கரித்தாள். ஸ்ரீராமர் அவளை எழுந்திரு எனக் கூறிய தும் குணவதி எழுந்து அவருக்குப் பூஜை செய்தாள். இதனால் இராமர் சந்தோஷமடைந்து உனக்கு வேண்டுவது யாதெனவினவி னார். குணவதி "ஏ இரகுவீர! எனக்கு வேண்டுவதொன்றுமில்லை. தங்களுடைய வேலைக்காரிகளில் ஒருத்தியாக என்னையுஞ் சேர்த் துக் கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

குணவதி இவ்வாறு கேட்டதும் இராமர் புன்னகைகொண்டு "ஏ மாதே! நீ ஒரு பிராமண மாது. இப்மாதிரி சொல்வது உசித மல்ல. என்னைச்சேவிக்க வேண்டுமென்ற விருப்பம் உனக்கிருந் தால் கூறுகின்றேன் கேள். துவாபரயுகத்தில் துவாரகா பட்ட ணத்தில் கிருஷ்ணாவதாரம் செய்யப்போகிறேன். உனது தந்தை தேவசர்மா சத்ராஜித் என்ற பெயர் கொண்டு பிறக்கப்போகிறான். சந்திரன் அக்ரூரன் என்னும் பெயருடையவனாகப் பிறந்து எனக் குத் தோழனாகப் போகிறான். நீ சத்தியபாமை யென்கிற பெய ரோடு பிறந்து எனக்குப் பத்நியாகப் போகிறாய். அச்சமயம் உன்மனத்தில் இருக்கும் அபிப்பிராயப்படி. என்னைத் திருப்தி பண்ணி வைக்கலாம்" என்று கூறினார்.

அதைக்கேட்டதும் குணவதி சீதாராமர்களுக்கு அநேக நமஸ்காரஞ் செய்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சைத் திர ஸ்நானத்தையும் முடித்துக்கொண்டு தன்னோடு வந்த ஜனங் களுடன் அரித்துவாரம் சென்று அங்கு ஆயுளுள்ளமட்டும் வசித் திருந்து பிறகு கங்காநதியில் ஜுரமடிக்கும் வேளையில் ஸ்நானஞ் செய்து தன் தேகத்தை த்யாகம் செய்து, வெகுகாலம் வரையில் சொர்க்கத்திலிருந்தாள். பிறகு துவாபரயுகத்தில் துவாரகா பட் டணத்தில் சத்ராஜித்துக்குப் பெண்ணாகப் பிறந்து ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்குப் பத்திநியாகி அநேக விதமாகப் பகவானை உபசரித் தாள்.

பிறகு ஒருநாள் இரவு பிங்களையென்ற ஒருவேசியானவள் இரா மபிரான் சீதாதேவியுடன் திவ்யமஞ்சத்தில் படுத்து நித்திரைசெய் யும் சமயத்தில் தன்பாதங்களில் அணிந்துகொண்டிருந்த தண்டை

களைக்கழற்றிவிட்டு திவ்ய வஸ்திராபரணம்பூண்டு இங்குமங்கும் பார்த்துக்கொண்டு சீதை காண்பாளோ வென்னும் பயமுடைய வளாய் மன்மத பாணத்திற்கு மனமுடைந்து வாசற்காவலாளிகளை யறியாமல் இராமபிரானது சயனஸ்தானத்துக்கு வந்து அவரது பாத தாமரையைத் தன் கையால் தொட்டு எழுப்பினள். அப் பொழுது இராமசந்திர பிரபு விழித்துக்கொண்டு தன் எதிரில் நிற்கும் பிங்களை என்பவளைக் கண்டார். இராமர் பார்த்ததும் பிங் களை இரகுநந்தனர் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ஏ இராம! செந்தாமரை மலர்போன்றகண்களையுடைய ஏ காகுஸ்த! நான் செய்த குற்றத்தை மன்னித்துக் கிருபைகூர்ந்து என் னிடம் கருணைசெய்யவேண்டும்" என்றாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் இராமர் இவள் காமவெறிகொண்டவளெனத் தெரி ந்து "ஏ பிங்களே! என்னுடைய ஏகபத்நீ விரதத்தின் மகிமை யை நீ அறியாய் போலும்" என்று கூறிவிட்டு "ஏ மாதே! நான் கிருஷ்ணாவதாரம் செய்யப்போகிறேன். அப்பொழுது மதுரா பட்டணத்து அரசனாக விருக்கப்போகிற எனது மாமன் கம்ஸனை நான் வதஞ்செய்யப்போகிறேன். நீ அப்போது அவன் வீட்டில் குப்ஜை என்னும் பெயரையுடைய ஒரு வேலைக்காரியாக இருக்கப் போகிறாய். அந்தக்காலத்தில் உன் எண்ணம் நிறைவேற்றப்படும்" என்று கூறி, ஸ்திரீ ஜாதியானதால், அவள் துணிகரமாய் யாவ ரையும் அறியாமல் உள்ளேவந்த குற்றத்தை மன்னித்து அனுப்பி விட்டார். பிறகு வேலைக்காரர்களின் அஜாக்கிரதைக்காக அவர் களைத் தண்டித்தார். இதன் பின்பு சீதையை எழுப்பிப் பிங்களை வந்ததைக் கூறினார். இதைக்கேட்டதும் சீதைகோபமடைந்து தன் நாயகனைப்பார்த்து "அப்போதே என் என்னை எழுப்பித் தெரிவித் திருக்கப்படாது. உம்முடைய ஏகபத்நி விரதத்தைப்பற்றி முன் வியாசமுனிவரிடம் நீர் பிரதிக்ஞை கூறிப் புகழ்ந்தது பொய் போலும்! நீர் பிங்களையோடு சுகமனுபவித்து விட்டு இப்பொ ழுது அவள் சென்றபின் என்னை எழுப்பியிருக்கிறீர். உமது நடத்தையை யறிந்தேன். அன்னிய ஸ்திரீயை நான் எனது தாயாகிய கௌஸல்லியைக்குச் சமானமாகக் கருதுகிறேன் என்று அடிக்கடி கூறியிருக்கிறீரே! அவ்வார்த்தை இப்போது

எப்படியாயிற்று? அந்த ஏக பத்நீ விரதம் இப்போது எங்கே? இந்த நிமிஷத்திலேயே நான் சரயூநதியில் விழுந்து என் பிராணனை விட்டு விடுகிறேன். ஒரு வேசிபடுத்த படுக்கையை நானும் தீண்டப்போமோ? வேசியுடன் கூடிச் சுகித்த உம்மைப் பார்க்க என்மனம் சகிக்கவில்லை. நான் மரணமடைந்த பிறகு தங்களுக்கு என்ன நேரிடப்போகிறதோ தெரியவில்லை. வேசியினிடம் ஆசை வைத்த அரசனிடம் இராஜ்யம் அதிகநாளிராது'' என்றுகூறி இராமரை நமஸ்கரித்து, உயிரை மாய்த்துக்கொள்ளத் திடமொன்று எழுந்து மின்னற் கொடிபோன்ற ஜானகி விரைவாகச் சரயூநதிக்குப் புறப்பட்டாள். இவ்வாறு கோபங்கொண்டு செல்லும் ஜானகியை இராமர் பின்றொடர்ந்து சென்று விரைவாகத் தமது கரங்கொண்டு கட்டித்தழுவி மனையில் உட்காரவைத்து, "ஏ வைதேகி! கோபங்கொள்ளாதே! நான் ஒரு வார்த்தை கூறுகின்றேன்கேள். உனக்கு நான் எவ்வளவு பிரதிக்ஞை செய்தாலும் நம்பிக்கையுண்டாகாது. நீ இப்போது எவ்விதமாகப் பிரதிக்ஞைசெய்யச் சொன்னபோதிலும் செய்கிறேன். சீக்கிரமாகத் தெரிவி" யெனக்கூறினார். பிராணநாதன் இவ்விதங் கூறியதும் சீதாபிராட்டி கூறுகிறாள்.

நாதா! நான் தங்களுக்கு என்ன சொல்லப்படுகிறேன். அக்கினிதேவன் தங்களுடைய வதனத்திற் பிறந்தவன். தங்களுக்குச் சந்திரன் சூரியன் இவர்களிருவரும் நேத்திரங்கள். சமுத்திரம் தமக்கு இருப்பிடம். இந்தப் பூமியைத் தாங்குகிறவரும் நீரே. ஆதிசேஷன் தங்களுச்குப் படுக்கை. அந்த ஆதிசேஷனே தங்களுக்குச் சகோதரனாகப் பிறந்து தங்கள் வாசலிலிருக்கிறான். தங்களுடைய நகங்களிலிருந்துண்டான ஆயுதங்களே இங்கிருப்பவை. நான் பார்க்கும் எந்தப் பொருளும் தங்ளுடைய சொரூபமாகவேயிருக்கின்றது. ஆகையால் எனக்கு நம்பிக்கையுண்டாவதன் நிமித்தம் தாங்கள் சபதஞ்செய்வதற்குநான்எவைகளைக் கவனித்தாலும் அவைகள்யாவும்தங்களுடைய அம்சமாகவேயிருக்கிறபடியால் ஒன்றையுங் குறிப்பிடுவதற்கில்லை. ஆனால் என்புத்திக் கெட்டியதொன்று. அந்தச் சபதத்தைத் தாங்கள் செய்தாற்போ

தும். அதாவது இந்த நிமிஷமே தங்களுடைய ஆசிரியராகிய வசிஷ்ட மகா முனிவரை வரவழைத்து அவருடைய பாதங்களைத் தொட்டுச் சபதம் செய்தால் நம்பிக்கையுண்டாகும்" என்றாள்.

இப்படிச் சீதாபிராட்டி கூறியதும் இராமர் புன்னகை கொண்டு இலட்சுமணரை வரவழைத்து வசிஷ்டமுனிவரை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். இதைக் கேட்டதும் இலட்சுமணர் பல்லக்கிலேறி பட்டணத்திற்குள் பிரவேசித்து வசிஷ்டமுனிவர் வீடுசென்று வேலைக்காரர்கள் மூலமாகத் தமது வரவை வசிஷ்டருக்குத் தெரிவித்தார். அந்த நள்ளிரவில் இலட்சுமணர் வரவைக் கேட்டதும் வசிஷ்டமுனிவர் இவ்வேளையில் இலட்சுமணன் வர யாது காரணமென்று திடுக்கிட்டு அவரை உள்ளே அழைத்து வரும்படி தெரிவித்து "இலட்சுமணா! இப்பொழுது இங்குவந்த காரணமென்ன" என்றுக் கேட்டார். இலட்சுமணர் முனிவரை நமஸ்கரித்து "முனிவர் பிரானே! இராமசந்திரர் தங்களுக்கு ஞாபகப்படுத்தும்படி ஆக்ஞாபித்தார். அதன்பொருட்டு வந்தேன். பல்லக்குத் தயாராக இருக்கிறது. இப்போதே புறப்படவேண்டும். காரணம் நானறியேன்" என்று கூறினார். இதைக்கேட்டதும் வசிஷ்டமுனிவர் அருந்ததியுடன் பல்லக்கிலேறிச் சரயூநதிக்குப் புறப்பட்டார். இலட்சுமணர் வேறு பல்லக்கிலேறிக்கொண்டு அவர்களுக்குப் பின் சென்றார்.

இராமசந்திரர் தமது குரு வசிஷ்டரது வரவை அறிந்து இரத்தினத் திவட்டிகளுடன் எதிர்கொண்டு சென்று குருவையும் அவரது பத்தினியையும் அழைத்து ஆசனமளித்துச் சீதையுடன் தாமும் நமஸ்கரித்து இருவரும் அவர்களை வஸ்திராபரணங்களால் பூஜித்து, பிங்களைவந்து போனதையும், சீதை அதனால் கோபங்கொண்டிருப்பதையும் அவள் சபதஞ்செய்யச் சொன்ன விதத்தையுங்கூறி, "ஏ முனிவரே! நான் அந்தப் பிங்களையை அனுபவிக்கவேண்டுமென்று மனத்திலும் எண்ணவில்லை; இதுவரையில் வேறு எந்த ஸ்திரீயையும் நான் மனத்திற்கருதினவனன்று. இந்த வாக்கியம் தங்கள் பாதசாக்ஷியாக உண்மையென்று கூறி அவருடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்துச் சபதஞ்செய்தார்.

இவ்விதம் இராமர் சபதஞ்செய்ததைக்கண்ட சீதைஆச்சரியமடைந்துதன் நாயகன் குற்றமற்றவனெனவறிந்து "பிராணநாதா! அடியேன் தங்கள் மகிமையை யறியாது கூறியதை க்ஷமிக்கவேண்டுமெனவணக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டாள். பிறகு அருந்ததிக்கு வஸ்திராபரணங்கள் கொடுத்து உபசரித்தாள். இராமரும் வசிஷ்டருக்குப் பூஜை செய்து உபசரித்தார். உடனே இருவரும் பல்லக்கிலேறி அவிடமிருந்து புறப்பட்டுத் தங்களுடைய கிருகம் வந்து சேர்ந்தார்கள்.

பொழுது புலர்ந்ததும் சீதை தன்தாதிகளிலொருத்தியை யனுப்பிப் பிங்களையைப் பிடித்துக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்து, அவள் அப்படிக்கொண்டுவரப்பட்டதும் அவளைப்பார்த்து, "நீ எனக்குப்பெருங்குற்றஞ்செய்தமையால், மதுராபுரியில்மூன்று கோணல்களுடன் கூறிய சரீரத்துடன் பிறக்கக்கடவாய்" என்று சாபமிட்டாள். பிங்களை தாமே என்சாப விமோசனத்துக்கும் அநுக்கிரகம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, சீதா பிராட்டி, உனக்குக் கிருஷ்ணமூர்த்தியின் கிருபாகடாக்ஷத்தால் திவ்யரூபமுண்டாகுமெனவும் அநுக்கிரகஞ் செய்து அனுப்பினாள்.

இவ்விதம் இராமபிரான் தன் மனத்திற்கிசைந்த விளையாட்டுகளைப் பலவிதமாகச் செய்து சீதைக்குச் சந்தோஷமுண்டாக்கிக்கொண்டு சுகமாகவிருந்து வந்தார்.

சீதை சினமடைந்ததைக் கூறும்

8-வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஒருநாள் இராமர் சூரியகிரகண புண்ணியகாலத்தில் சீதையுடனும் பந்துக்களுடனும் புஷ்பகவிமானமேறி குருக்ஷேத்திரஞ் சென்றார். அங்குத் தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், பன்னகர்கள், கின்னரர்கள் முதலிய யாவரும் வந்திருந்தார்கள். இராமபிரான் அந்த க்ஷேத்திரத்தில் அந்தப் புண்ணியகாலத்தில் ஸ்நானஞ்செய்து குதிரைகள், ஒட்டகங்கள், இரதங்கள், யானைகள் இவைகளைத் தானஞ்செய்தார். இங்கு அரசர்கள் யாவரும் காணிக்கையுடன் இரகுவீரரைத் தரிசித்து மகிழ்ச்சி யடைந்தார்கள். ராஜபத்நிகளும் சீதையைத் தரிசித்து மகிழ்ந்தார்கள்; ஜானகிதேவியும் ராஜஸ்திரீகளை ஆலிங்கனஞ் செய்து உத்தமமான ஆசனங்களில் உட்காரவைத்துத் தோழிமாருடனும் முனிவர் பத்நிகளுடனும் தானும் உட்கார்ந்தாள். இந்தச் சமயம் சீதாதேவியின் பூஜையை யேற்றுக்கொண்ட அகஸ்தியமுனிவருடைய பத்நியாகிய லோபாமுத்திரை சந்தோஷங்கொண்டு சீதையைப் பார்த்து, "ஏ சீதே! தாமரைதளம் போன்ற கண்களையுடையவளே! மதம் பிடித்த பெண்யானையைப் போன்ற நடையுடையவளே! நீ பாக்கியம் செய்தவள். செவிக்கினிமையைத் தரும் உனது பர்த்தாவின் பராக்கிரமத்தைச் சிறிது தெரிவிப்பாயென வினவினாள். லோபாமுத்திரை இவ்வாறு வினவியதும் சீதாபிராட்டி மனமுவந்து இராமபிரான் தன்னை விவாகம் செய்துகொண்டது முதல் இப்போது குருக்ஷேத்திரம் வந்திருக்கிறவரையில் தான் தன் நாதனிடங்கண்டு களித்த பராக்கிரமங்களை யெடுத்துரைத்தாள். இதைக்கேட்டதும் லோபாமுத்திரை சிரித்துக்கொண்டு "மஹாநுபாவனாகிய இரகுவீரர் செய்த சகல காரியங்களும் உசிதந்தான்; சமுத்திரத்தில் குரங்குகளைச் சிரமப்படுத்தி அணைகட்டியது தான் வீணென்று என் புத்திக்குப் படுகிறது. அவர் அகஸ்தியமுனிவரிடம் ஒரு வார்த்தை கூறியிருப்பாரேயாயின், அவர் தமது உள்ளங்கையில் அச்சமுத்திரத்தை வரவழைத்துப் பானஞ் செய்திருப்பார். அப்படிச்செய்யாமல் வீண் சிரமப்

பட்டார்" என்றாள். முனிவர் பத்நியின் வார்த்தையைக் கேட்ட சீதாபிராட்டி, புன்னகைகொண்டு "ஏ பதிவிருதா சிரோமணியே! இராமபிரான் அணைகட்டியது மிகவும் உசிதம். அதற்குக் காரணம் கூறுகின்றேன்; கவனித்துக் கேளுங்கள். ராஜஸ்திரீகளும் கவனித்துக் கேட்கட்டும். அம்மா! எனது நாயகன் ஒரு பாணத்தால் சமுத்திர ஜலத்தை வற்றச்செய்தல் கூடும். அப்படி வற்றிப் போகும்படி செய்தால், அதற்குள்ளிருந்து வாழும் அநேக ஜந்துக்களுக்குக் கஷ்ட முண்டாகுமென்று கருதிப் பாணமெய்யவில்லை. ஆகாயமார்க்கமாக வந்தால் இராவணன் இராமனை மானிடனென்று எண்ணமாட்டானென்பதைக் கருதி அவ்வாறு செய்யவில்லை. அநுமார்போலத் தாண்டிச்சென்றால் இராமருக்குப் பராக்ரமமில்லையென்று இராவணன் கருதக்கூடுமென்று அவ்வாறுசெய்யவில்லை. நீந்திச்செல்லலாமே என்றால், பிராம்மணனுடைய மூத்திரத்தைத் தாண்டக்கூடாதென்று ஆலோசித்து அவ்வாறுசெய்யவில்லை. தங்கள் பிராணநாதர் முதலில் இச்சமுத்திரத்தைப் பானஞ்செய்து பிறகு மூத்திரத்துவாரத்தின் வழியே திரும்பவும் வெளிப்படுத்தினர். இச்சமுத்திரம் உப்பாகவிருப்பதே அதற்குச் சாட்சியென்று கொள்ளவேண்டும். தங்கள் பர்த்தா, இராமபிரான் உத்தரவிடும் பக்ஷத்தில் செய்வார், தட்டமாட்டார்; இராமன் தன்நிமித்தம் ஒரு பிராமணனை மூத்திரபானம் செய்யச்சொன்னனென்கிற வீண் அபவாதம் வருமென்றஞ்சி அவ்வாறு செய்யவில்லை. இவ்வளவு காரணங்களைக்கொண்டு தான் எனது பிராணநாதர் அணைகட்டினர். இராமருக்கு முன் ஒருவரும் இவ்வாறணை கட்டியதில்லை; இனிக் கட்டப்போகிறது மில்லை. இதனால் கல்லைக் கடலில் மிதக்கச் செய்தார் இராமபிரான் என்ற பெருமையை யடைந்தார்" என்று பதிற் கூறினள். இப்படிச் சீதை கூறியதும் லோபா முத்திரை ஸ்திரீகளின் கூட்டத்தில் மிகுந்த வெட்கத்தை யடைந்தாள்.

பிறகு வைதேகி சிரித்துக்கொண்டு, லோபாமுத்திரையையும் முனிவர்பத்நிகளையும் பூஜைசெய்து லோபாமுத்திரையைப் பார்த்து "பதிவிரதா சிரோமணியே! நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். நாம் ஒருவர்க் கொருவர் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்ததனாலே தான் எனது பிராணநாதர் பராக்ரமத்

தைப்பற்றிப் பேசினேன். தங்கள் நாயகனுடைய ஆசீர்வாதத்தின் மகிமையால் தான் இராமர் இந்த மகோன்னத பராக்ரமத்தைப் பெற்றார் என்பதை நானறிவேன்" என்று கூறி, அவர்களெல்லோரையும் பூஜித்து விடைகொடுத்தனுப்பினாள். அரசர்கள் யாவரும் இரகுபுங்கவரைப் பூஜித்துத் தத்தம் பதிக்கேகினர். இரகு வீரரும் சீதையுடன் கருடவாகனமேறிப் புறப்பட்டார். தாசரதி அயோத்தி வந்ததும் அரண்மனை ஸ்திரீகள் நீராஜனம் சுற்ற அரண்மனைக்குட் பிரவேசித்து சீதா பிராட்டியுடன் அநேக விளையாட்டுகளைச் செய்துகொண்டு சுகமாக இருந்தார்.

இராமச்சந்திரர் சீதையுடன் எப்படி அநேக விளையாட்டுகளைச் செய்துகொண்டு சுகித்து வந்தனரோ அவ்விதமே இலட்சுமணரும் ஊர்மிளையுடனும் அநேக விளையாட்டுகளைச் செய்து கொண்டிருந்தார். பரதன் மாண்டவியுடனும், சத்ருக்னன் சுருதகீர்த்தியுடனும் பட்டணத்திலுள்ளவர்கள் தீவுகளிலுள்ளவர்கள் எல்லோரும் அவரவர் பத்நிகளுடனும் அநேக விதமான விளையாட்டுகளைச் செய்துகொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். பார்வதி பரமேசுவரன் போல் இராமரும் சீதையுடனிருந்து அரசு செலுத்தி வந்தார். இராமபிரான் அரசாக்ஷி செய்யுங் காலத்தில் இந்தப் பூமியில் பரஸ்திரீ கமனஞ்செய்கிறவன், சாராயம், கஞ்சா முதலிய போதை வஸ்துக்களை உபயோகப் படுத்துகிறவன் தரித்திரன், வியாதிஸ்தன், வியசனப்படுகிறவன், தளர்வுற்றோன், பாபஞ்செய்கிறவன், ஜடன், திருடன், ஹிம்ஸிக்கிறவன் இவர்களைக் காண்பதரிது. விஷ்ணுதாஸ! செவிக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய சீதாராமர்களின் விளையாட்டை நானுனக்குரைத்தேன். இந்த விலாஸகாண்டத்தை முக்காலங்களிலும் இராமபிரானுடைய ஸந்நிதானத்தில் எவனொருவன் படிக்கின்றானோ அவனை பூமியில் மானிடவடிவமெடுத்த இராமனென்றே கருது. இந்த விலாஸகாண்டத்தைப் பாராயணம் செய்தால் திரவியத்தில் அபேக்ஷையுள்ளவர் திரவியத்தையும் போகங்களில் அபேக்ஷையுள்ளவர் போகங்களையும் புத்திரனை அபேக்ஷித்தவ புத்திர பாக்கியத்தையும் அடைவார். எந்தமானிடன் இராமபக்தியுடன் பாராயணஞ்செய்கின்றானோ அவன் பாபரகிதனாகிச் சுக

டைவான். சிலாக்கியமானதும் ஜனங்களின் மனத்துக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணக்கூடியதும் செவிகளுக்கு இனிமையைக் கொடுக்கக்கூடியதுமான இந்த விலாஸகாண்டத்தைப்படித்தாலும் கேட்டாலும் சகல காமங்களையும் அடைவதுடன் மோக்ஷமென்னும் நான்காவது புருஷார்த்தத்தையும் பெறுவான். இராக்காலத்தில் படுக்கையில் தன் பத்னியுடன் இந்தக் காண்டத்தை ஆறுமாதம் படித்தால், புத்திரபாக்கியமுண்டாகும். அல்லது ஒரு படுக்கையில் வியாஸமுனிவர் போன்ற ஒரு பௌராணிகரை உட்காரவைத்து இரண்டாவது படுக்கையில் தானும் பத்னியுமாக விருந்து அந்தரங்கமாய் ஒன்பது மாதம் கேட்டால் நிச்சயமாய்ப் பிள்ளையுண்டாகும். இதில் ஐயமில்லை. புத்திரனை யுத்தேசித்து மாத்திரந்தான் படுக்கையிலிருந்து கேட்கவும் படிக்கவும் கூடும். விவாகத்தை உத்தேசித்துப் படித்தால் ஒன்பது மாதத்தில் பத்தினியை அடைவான். கல்யாணமாகாத கன்னிகை படித்தால் ஆறு மாதத்தில் நல்ல புருஷனைப் பெறுவாள். புருஷனுடைய ஆயுளையபேக்ஷித்த ஸ்திரீகள் ஸ்நானஞ்செய்து நியமத்துடன் கேட்கவேண்டும். ரமணீயமானதும் விசித்திரமானதும் பரிசுத்தமானதும் கரும்பு போன்றதும் ஸம்ஸார ரோகத்திற்குத் தண்டம் போன்றதுமான இந்த விலாச காண்டத்தை யானுனக்குக் கூறினேன் என்றார் இராமதாஸர்.

குருக்ஷேத்திரயாத்திரை கூறும்
9-வது சருக்கமும் விலாஸகாண்டமும்
முற்றுப்பெற்றன.

ஜனமகாண்டம்.

1-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீ ராமபிரான் அயோத்தியாபட்டணத்தில் தமது பத்நி சீதாதேவியுடனும் பந்துக்களுடனுமிருந்து தேவர்களுக்குங்கிட்டு தற்கரிய விளையாட்டுகளை அநேகவிதமாக வெகுநாள் விளையாடி வந்தார். அச்சமயத்தில் சீதாதேவி கர்ப்பந்தரித்திருக்கின்றாள் என்று தாதியர்கள் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் அநேக தானங்களைச் சந்தோஷத்துடன் வேதியர்களுக்குக் கொடுத்தார். நாடோறும் கோடிக்கணக்கான அந்தணர்களுக்குப் போஜனமளித்து வந்தார். சீதாதேவிக்கு நூதனமான இரத்நாபரண அலங்காரங்களை அநேக விதமாகச் செய்யும்படி ஆக்ஞாபித்தார். சொர்ணமயமான நூற்களால் செய்யப்பட்டதும், பச்சை, மஞ்சள், சிவப்பு இவ்வர்ணங்களோடு கூடியதும் சரியான அகலநீள முள்ளதும் புஷ்பம் போல் மிருதுவானதும், விலையுயர்ந்ததும் மிக அழகுள்ளதுமான அநேக வஸ்திரங்களைப் புதிதாக நெய்து கொண்டுவரும்படிசெய்து அவைகளைத் தமது பத்நி சீதைக்குக் கொடுத்தார்.

பிறகு இரண்டாவது மாதத்தில், தமது மாமி ஸுமேதையையும் மாமனார் ஜனகமகாராஜனையும் மற்றுமுள்ளபந்துமித்திரர்களையும் வரவழைத்து, பகற்பொழுதில் வசிஷ்டருடனும் பிராமணர்களுடனுமிருந்து சீதாதேவிக்குப் பும்ஸவனம் என்கிற கர்மாவை விதிப்பிரகாரம் திவ்யோற்சவங்களுடன் செய்தார். ஜனகமகாராஜன் கர்ப்பந்தரித்திருக்கும் தன் குமாரத்தியை இந்தப் பும்ஸவன முகூர்த்தத்தில் தான் பார்க்கும் பாக்கியம் பெற்றதற்கு மகிழ்ந்து தம்பதியை ஆசீர்வதித்து உபசரித்தார். அச்சமயத்தில் ஜனகமகாராஜன், சீதாதேவிக்கு சொர்ண நூற்களால் நெய்யப்பட்டதும் பச்சை, மஞ்சள் இவ்வர்ணங்களோடு கூடியதும் லேசானதும் பார்வைக்கு வெகு அழகானதும் அகலநீளமுள்ளதுமான திவ்ய வஸ்திரங்களைச் சந்தோஷத்துடன்கொடுத்தார். ஸ்ரீராமபிரானுக்கு மனமகிழ்ச்சியுண்டாகத் தக்க யானைகள், குதிரைகள்

ஒட்டகங்கள் இரதங்கள் இவைகளையும் தாஸிதாஸர்களையும் மன மகிழ்ச்சியுடன் கொடுத்தார். இவ்விதமாக ஜனகமகா ராஜன் ஸ்ரீராமரையும் சீதாதேவியையும் உபசரித்தார். ஸ்ரீராமரும் ஜனகமகா ராஜனைப் பூஜித்தார். பிறகு அவர் தமது பத்னியுடன் மிதிலைக்கேகினர். இராமபிரானுஞ் சீதாதேவியுடன் சுகமாகப் பல கிரீடைகளைச் செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருந்து வருகையில், நாளடைவில் சீதைக்குச் சரீரத் தில் பளுவுண்டானமையால், ஆபரணந் தரித்துக்கொள்வதை ஒழித்தாள். ஆபரண மணிந்துகொள்ளவில்லையாயினும்வெளுத்தும் இளைத்தும் தைன்னிய நிலைமையிலுமிருந்த அவள் தேகமானது வெகுஅழகாகவிருந்தது. இப்பொழுது ஒருநாள் சீதாதேவி, அயோத்தியா பட்டணத்திற்கு வெளியேயுள்ள உத்தியான வனத்தில் வசிப்பதற்குப் பிரியப்பட்டு, அதைத்தன்தாதி மூலமாக இராமருக்குத் தெரிவித்தாள். இராமர் அதனையறிந்ததும் இலட்சுமணனை வரவழைத்துப் புன்னகையுடன் "ஏ இலட்சுமணா! சீதை என்னோடு உத்யானவனத்தில் வசிக்கவேண்டுமென்பதாகத் தெரிவித்திருக்கின்றனள். அதற்காகத்தான் உன்னை இப்பொழுது வரவழைத்தேன். அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஆட்களுக்குக் கட்டளையிடு" என்றார். இலட்சுமணர் இராமபிரானுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு அவ்விதஞ் செய்விக்கிறேனெனக்கூறி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, கையில் பிரம்பு பிடித்தவர்களும் விசித்திரமான முண்டாசுகளைப் பூண்டவருமான வேலைக்காரர்களை வரவழைத்து, அவர்களைப்பார்த்து ஸ்ரீராமபிரான் நமது அன்னையார் சீதாதேவியுடன் உத்யான வனத்துக்குச் செல்கிறார். இதை நகரத்து, வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்குமறிவித்து உத்தியானவனத்திற்குச் செல்லும்படி அவர்களைத் துரிதப்படுத்துங்கள்" என்றார். உடனே அந்த வேலைக்காரர்கள் பட்டணத்து வீதிகள் தோறும் சென்று கைகளைத் தூக்கிக்கொண்டு உரத்த சப்தத்துடன் "பட்டணத்து ஜனங்களே! வியாபாரிகளே! மற்றுமுள்ள பெரியோர்களே! இதைச் சந்தோஷத்துடன் கேளுங்கள், நமது அன்னையார் சீதாதேவி இராமபிரானுடன் உத்யானவனம் செல்கி

றார்; நீங்கள் யாவரும் முந்திச்செல்லுங்கள்" என்று கூறிவிட்டு இலட்சுமணரிடம் சென்றார்கள். மறுபடியும் இலட்சுமணர் அந்த வேலையாட்களைப் பார்த்து, பின் வரும் வேலைகளைச் சீக்கிரமாகச்செய்து முடிக்கும்படி ஆக்ஞாபித்தார். உத்யானவனத்தில்ஆச்சரியப்படத் தக்க கூடாரங்களை நான்கு பக்கங்களிலும் தயார்செய்யவேண்டும். பூமியைச் சமன் படுத்தவேண்டும். ஜலயந்திரங்கள் யாவும் சரியாயிருக்கும்படி செய்யவேண்டும். அநேகமான மங்கள வஸ்துக்கள், சிலாக்கியமான வாஸனைத்திரவியங்கள் இவைகளைத்தயாராக வைத்திருக்கவேண்டும். மிகமேலான வஸ்திரங்களையும் இன்னும் அங்கு வேண்டப்படும் அநேக சமான்களையும் சீக்கிரம்தயார் செய்யவேண்டும். தோட்டத்திலுள்ள உப்ரிகைகளைத்திவ்யவஸ்திரங்களாலும் தோரணம் முதலியவைகளாலும் கொடிகளாலும் விசேஷமாக அலங்கரித்து வைக்கவேண்டும்" என்றார். வேலையாட்கள் சுவாமி அவ்விதமே செய்து முடிக்கிறோமென்று கூறி அவரிடம் விடைபெற்றுச் சென்று ஆக்ஞைப்படி யாவற்றையும் அதிசீக்கிரத்தில் செய்து முடித்தார்கள். பிறகு இலட்சுமணர் இராமரிடம் சென்று, "இரகுநந்தன! தங்களுத்தரவுப்படி யாவும்செய்து முடிந்தன. உத்தியான வனத்துக்குப் புறப்படலாம். தங்களுக்கும் அண்ணியாருக்கும் எந்த வாகனத்தைக் கொண்டுவரட்டும்" என்று கேட்டார். இராமர் இதைக்கேட்டதும் சீதையையழைத்து "ஏசீதா! நீ எந்த வாகனத்தில் ஏறிக்கொண்டு உத்தியானவனம் செல்லப் பிரியப்படுகிறாய்! அதைத்தெருவி" என்றார். சீதை நான், பல்லக்கிலேறிப்போகப்பிரியப்படுகிறே"னென்றாள். இராமரும் அப்பொழுது பல்லக்கையே விரும்பினார். உடனே இலட்சுமணர் இரத்தினங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட இரண்டு பல்லக்குகளைத் தூதர்கள் மூலமாக வரழைத்தார். உடனே இராமர் பல்லக்கில் ஏறினார். தேகம்வெளுத்து இளைத்திருக்கிற சீதையானவள் சிறிது ஆபரணங்களை யணிந்து கொண்டு தாதியர்கள் அழைத்துவர, மெதுவாக வந்து பல்லக்கிலேறினாள். கர்ப்பிணியானதால், சாய்ந்துகொள்ளத் தெண்டும். கீழே மிருதுவான மெத்தையும் போடப்பட்டிருந்தன. பல்லக்கில் பக்கத்

தில் தாதியர்களிருந்து விசிறிவந்தார்கள். சொர்ண முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட அப்பல்லக்கின் மேலே கட்டி விடப்பட்டிருக்கும் பிடியைத் தன்கையினால் பிடித்துக் கொண்டாள். உடனே இரண்டு பல்லக்கும் புறப்பட்டன. தெருக்களில் வரும்போது அங்கங்கே நடக்கும் வேடிக்கைகளை முத்துக்களாலமைக்கப்பட்ட சாளர மார்க்கத்தின் வழியே சீதாதேவி பார்த்துக்கொண்டேபோனாள். பிறகு பந்துக்களும் அவர்கள் மனைவிமார்களும் அழகான பல்லக்குகளில் தனித் தனியே பேறிப்புறப்பட்டார்கள். முதலில் குலகுருவாகிய வசிஷ்டர் பிறகு சகோதரர்கள், பின் தாய்மார்கள், இவர்களுக்குப் பின், சீதை முதலியவர்கள் பந்துக்கள் அவர்கள் மனைவிமார்கள் இவ்விதமாக யாவரும் இராமரைத் தரிசித்துக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றார்கள். தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். வாத்தியங்கள் முழங்கின. வந்திகள் சீதாராமரை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

இவ்வாறு மங்களவாத்தியங்கள் முழங்கவும் சேனைகளும் பட்டணத்து ஜனங்களும் சூழ்ந்துவரவும் ஸ்ரீ ராமபிரான் சீதாதேவியுடன் உத்யானவனம்வந்து அவர்க்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்துக்குட் சென்றார். பிறகெல்லாரும் அவரவர் கூடாரங்களில் பிரவேசித்தார்கள். இப்பொழுது வாரஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். வாத்தியங்கள் முழங்கின. சீதாதேவியின் கூடாரமானது திவ்ய வஸ்திரங்களால் அமைக்கப்பட்டிருந்தது. சீதையும் இராமரும் மன உல்லாசமாக வீற்றிருக்கும்அந்தக் கூடாரமானது ஐந்துமையில் நீளமும் ஐந்துமையில் அகலமும் உள்ளதாயிருந்தது இவ்விதமான கூடாரத்தையும் அரசர்களுக்கு இன்பந்தரத்தக்கதாக விருக்கும் உத்தியானவனத்தையுங் கண்ட சீதை மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அங்கு மிகுதியும் காணபட்ட கட்டிமாமரங்களால் அவ்வனம் இரசத்திற்கு 'இருப்பிடமாக விளங்கியது. அசோகமரங்களின் மிகுதியால் சோகத்தையொழிப்பதுபோற் காணப்பட்டது. பனைமரங்கள் பச்சிலைமரங்கள் கூந்தற் பனைகள் இவைகளின்மிகுதி, முள்ளம்பன்றிகளெங்குசஞ்சரிப்பது போற்காணப்பட்டது. அங்கு விளங்கும் கமுகமரங்கள ஆகாயத்தில்

ஒரு பட்டணமிருப்பது போல் வளர்ந்திருந்த வில்வ மரங்களின் மிகுதியானது இலட்சுமிக்குப் பிரயோஜன முள்ளதென்று சொல்லும்படி விளங்கிற்று. அங்கு நிறைந்திருந்த அகில் மரங்கள் மிகுந்த பிரகாசத்தைத் தந்தன. விளாமரங்கள் கோரோசனை வர்ணமுள்ள குரங்கினங்களைக் குறித்தன. எலுமிச்சைமரங்களிலுள்ள பழங்கள் இலட்சுமியின் ஸ்தனங்களுக்கொப்பாக விளங்கின. அங்குள்ள நாரத்தை மரங்கள் இலட்சுமியின் அரங்கமண்டபத்தையொத்திருந்தன. வாழைமரங்கள் மாதுளை முதலியனவும் நிறைந்திருந்தன. அங்கு பயிரிடப்பட்டிருக்கும் வெற்றிலைக்கொடி அசைவதானது சிரமப்பட்டு வழி நடப்பவர்களை சிரமபரிகாரத்தின் பொருட்டு அழைப்பதை ஒத்திருந்தது. அங்கு வளர்ந்திருக்கும் புன்னாக மரங்கள் நான்கு பக்கங்களிலும் அசையும் துளிராகிய கைகளால் மல்லிகைப்பூ மொட்டுகளாகிய ஸ்தனங்களைத் தொடுகிற புருஷயானைகள் போன்றிருந்தன. மாதுளை வெடித்திருப்பதானது ஒருமாது ஆசையுள்ள தன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது போன்றிருந்தது. அத்தோட்டத்தில் மாதவியென்னும் மரங்களோடுவெள்வேலமரங்கள் அடர்ந்திருப்பதுமாதவியை வெள்வேல் ஆலிங்கனம் செய்து கொண்டதுபோல் விளங்கியது. ஆகாயத்தை அளாவிநிற்கும் பழத்தோடு கூடிய அத்திமரங்கள் பிர்ம்மாண்டத்தைத் தாங்கிநிற்கும்பகவானுக்கொப்பாகவிளங்கின. பலாமரங்கள் யாவும் அவ்வனத்துக்கு மூக்குகள் போலிருந்தன. பொரசமரங்களும் இலந்தை மாங்களும் கடம்பமரங்களும் மகாமேருவின் சிகரம் போன்ற செம்புளிச்ச மரங்களும் அநேகமாக இருந்தன. பழமுண்ணிப்பாலை மரங்கள் காமிகள் கிருகம் போல் விளங்கின. அங்கு நாலாபக்கங்களிலும்நிறைந்திருந்த ஆலமரங்கள் கூடாரங்கள் போடப்பட்டதுக்கொப்பாக விளங்கின. வெண்பாலை தூதுவளை பெருங்களாச்செடி முதலியவைகளும் சில விடங்களில் நிறைந்திருந்தன. அங்கே சில விடங்களில் தங்கம்போன்ற செந்தாழை மலர்கள் நிறைந்த தாழை மரங்களும் கொன்றை மரங்களும் நிறைந்திருந்தன. சிலவிடங்களில் உச்சித்திலங்கள் (புத்திர ஜீவன்கள்) இங்குளமரங்கள் இலுப்பை மரங்கள் நிறைந்திருந்

தன. கீழே விழுந்து கிடக்கும் இலுப்பைப் பூக்கள் பூமி ரூபமாக இருக்கிற பரமசிவனை அர்ச்சித்திருப்பது போல் விளங்கின. சிலவிடங்களில் மருதமரங்களும் அஞ்சனமரங்களும் விசிறி கொண்டு விசிறுவது போல் விளங்கின. தென்னை பேரீச்சு இவைகள் ஆகாயத்தில் குடைபிடிப்பன போல் சில விடங்களில் விளங்கின. மலைஆத்திமரங்கள், பசிமந்தாதிமரங்கள், எப்போதும் புஷ்பித்துப்பலனை யளிக்கக்கூடிய மரங்கள், நாகமரங்கள் இவைகளால் சிலவிடங்கள் சோபித்தன. சாதசங்கம் என்ற மரங்கள் நிறைந்து சிலவிடங்கள் மிகவும் அழகாகக் காணப்பட்டன. சந்தனம், கோங்கு, நெல்லி முதலிய மரங்கள் சில விடங்களில் நிறைந்திருந்தன. மல்லிகை, முல்லை முதலிய கொடிவகைச் செடிகள் சில விடங்களில் நிறைந்து பரிமளத்தைத்தந்தன. துளசிச்செடிகள் சிலவிடங்களில் நிறைந்திருந்தன. வண்டுகள், வனம், மாலையைத் தரித்துக்கொண்டிருப்பது போல் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. திவ்யபரிமளத்துடன் காற்றானது சதாகாலமும் வீசிக்கொண்டிருந்தது. ஆசையைக் கொடுக்கக்கூடிய அநேக மிருகங்களும், பக்ஷிகளும், அங்கு நிறைந்திருந்தன. ஓடைகள், நதிகள், வாவிகள் முதலியவை அவ்வனத்தின் நான்கு பக்கங்களிலுமிருந்து ஜலசௌக்கியத்தைக் கொடுத்தன. நாலா பக்கங்களிலும் விழும் புஷ்பங்கள் பார்வைக்குச் சொர்ண மழை ஆகாயத்திலிருந்து பொழிவது போற் காணப்பட்டன. அங்கு மயில் கூட்டங்கள் கூவுவது வாருங்கள்! வாருங்கள் !! என நல்வரவு கூறுவது போன்றிருந்தது. இப்படிப்பட்ட அந்த உத்தியான வனத்தைச் சீதாபிராட்டி கண்டாள். கண்டு சந்தோஷமடைந்து இங்குமங்கும் சஞ்சரித்தாள்.

ஜன்மகாண்டம்

1-வது சருக்கம்

முற்றிற்று.

2-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு சீதாதேவியானவள் அந்த உத்தியானவனத்தில்ஸ்ரீராம பிரானோடு அநேகவிளையாட்டுகளைத் தேவர்களும்மகிழும்படி அநேகவிதமாக விளையாடினாள். சில சமயம் உத்தியானவனத்தின் மத்தியிலுள்ள உப்பரிகையின் மேலும் சிலசமயம்கூடாரங்களிலும் சில சமயம் மரங்களின் நிழலிலும் சிலகாலம் பூந்தோட்டங்களிலும் சிலகாலம் ஜலயந்திரங்களுக் கருகிலும் சில சமயம் ஓடைக்கரையிலும் சில சமயம் நதியின் பாங்கரும் சில சமயம் இராமரோடு ஓடத்திலேறிச் சரயூநதியின் ஜலத்தில் மத்தியிலும் சில சமயம் இரவிலும் சில சமயம் பகலிலும் ஜலக்ரீடை செய்தும் சில சமயம் தாமரைக்குளங்களில் ஓடமேறிவிளையாடியும் சிலசமயம் வாழைத் தோட்டங்களிலும் சில சமயம் மரங்களின்மேல் அமைக்கப்பட்ட கிருகங்களிலும் சில சமயம் விலாமிச்சை வேரினாலாக்கப்பட்டகிருகங்களிலும் சில சமயம் சரயூநதியின் கண் அமைக்கப்பட்டுவிளங்கும் கிருகங்களிலும் சில சமயம் புஷ்பங்கள் நிறைந்த வனங்களிலும் சில சமயம் சித்திர மண்டபங்களிலும் சில சமயம் புஷ்பகவிமானத்திலும் சில சமயம் தாழைவனத்திலும் சில சமயம் ஒற்றைக்கால் மண்டபத்திலும் சில சமயம் ஓடத்தின் மேற் பக்கங்களிலுள்ள இடத்திலும் சில சமயம் சரயூநதியின் மணற்பாங்குகளிலும் சில சமயம் இராமபிரானோடு தனிமையாகவும் சில சமயம் பல்லக்கின் பேரிலும், சில காலம் அரண்யத்தின் நடுவிலும் சில காலம் மாதுளைத் தோட்டத்திலும் சில சமயம் மரக்கட்டிலின் மேலுமாக விருந்து வெளுத்த சரீரமும் பெருத்த தேகமுமுடைய சீதாதேவி இராமபிரானோடு விளையாடினாள். இப்பொழுது சீதாதேவி பச்சை வஸ்திரமுடுத்துச் சிவப்புரவிக்கை தரித்துக்கொண்டு விளங்கினாள். ஒரு சமயம் சீதாதேவி இலைகளின் மத்தியில் தன் தேகத்தை மறைத்துக்கொண்டு இராமரைக் கலங்கும்படி செய்வாள். அவர் தன்னைப் பார்த்துவிட்டதாகக் கண்டால் வேகமாக அவரிடம் ஓடிவந்து இராமர் கழுத்தில் கைகளைக்கொடுத்து கட்டிக்கொள்வாள். இப்படிப்பட்ட சீதாராமருடைய பரமாச்சரியமான விளையாட்டை இந்தப் பூமண்டலத்தில் விஸ்தாரமாக வர்

ணிப்பதற்கு எவனை சக்திவாய்ந்தவன்? சீதாராமர்களுடைய சரிதையை நூறுகோடி கிரந்தங்களால் வர்ணித்த அந்த வான்மீகி முனிவர் ஒருவரே சக்திபெற்றவரல்லது வேறொருவருமாகார். அவைகளில் ஆலோசித்து மிகவும் சாரமான பாகத்தை வர்ணிக்கிறேன் கேள்—

ஏ விஷ்ணுதாஸ! சில சமயம் சீதை தாசிகளை நர்த்தனம் புரியும்படி செய்து பார்த்து மகிழ்ந்தாள். சில காலம் சிலாக்கியமான வாத்தியங்களைக் கேட்டுச் சந்தோஷிப்பாள். சில சமயம் வேடிக்கையான நகைகளைக் கேட்பாள். சில சமயம் இந்திர ஜாலங்களைப் பார்ப்பாள். சில சமயம் டொம்பன் கழைக்கூத்து முதலான விளையாட்டுகளைப் பார்ப்பாள். யந்திரங்களால் செய்யப்படும் வேடிக்கைகளைச் சில சமயம் கவனிப்பாள். சில சமயம் மரம் முதலியவைகளாற் செய்யப்பட்ட யானை முதலிய மிருகங்களையும் தன்னுடைய உருவத்தோடு சேர்த்துச் செய்யப்பட்ட இராமருடைய உருவத்தையும் பார்த்து மகிழ்வாள். இவ்வாறாகக் காலத்தைக் கழித்துக்கொண்டு சீதையானவள் ஒருமாதம் அந்த உத்தியானவனத்தின் கண் வசித்து வந்தாள். பிறகு சீதாதேவி இராமபிரானுடன் மங்கள வாத்தியங்களும் ஆடல் பாடல்களும் நடைபெற உப்பரிகையிலிருந்துபட்டணத்து ஸ்திரீகள் புஷ்பவருஷம்வருஷிக்கத் தன் அரண்மனைவாயில் வந்து சேர்ந்தாள். இங்கு வந்ததும் கும்பதீபங்களாலும் தயிரன்னத்தின் மத்தியில் வைக்கப்பட்ட தீபங்களாலும் நீராஜனம் செய்யப்பட்டு உளுந்துஎண்ணெய் கடுகு முதலியவைகளால், பூஜிக்கப்பட்டு இராமருடன் தன் அரண்மனைக்குள் சென்றாள்.

இரகுநந்தனனாகிய ஸ்ரீராமபிரான் இவ்வாறு தமது பத்நிக்குப்பிரியமானவைகளைச் சகலவைபவங்களுடனும் செய்துதிருப்தி செய்வித்தார். சீதாதேவியும் தன்னுடைய நாயகனாகிய ஸ்ரீராமபிரானைத்தன் விளையாட்டில் திருப்திசெய்வித்தாள். பிறகுஆறாவது மாதம் பிறந்ததும் இராமபிரான் வசிஷ்டமுனிவரையும் பிராமணர்களையும் தமது மாமி சுமேதையையும் வரவழைத்துச் சீதாதேவிக்குச் சீமந்த முகூர்த்தத்தைச் செய்தார். இச்சமயம் பிராமணர்

களுக்கு இரகுசிரேஷ்டர் அநேக தானங்களைச் செய்தார். ஜனக மகாராஜன், தமது மருமகன் ஸ்ரீராமபிரானுக்கும் அவருடைய பந்துக்களுக்கும் கௌஸல்யாதி ஸ்திரீகளுக்கும் பட்டணத்து ஸ்திரீ புருஷர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி திவ்யவஸ்திரங்களைக் கொடுத்து உபசரித்தார். பட்டணத்து ஜனங்கள் யாவரும் சீதாதேவியோடு ஸ்ரீ ராமபிரானையழைத்துத் தங்கள் தங்கள் வீட்டில் போஜனம் செய்வித்துப் பூஜித்தார்கள். அவர்கள் போஜனத்துக்கு வரும்போதும் ஆடல்பாடல்களும் வாத்திய கோஷங்களும் நடந்தன. பலதேச மன்னர்களுடைய பத்நிகள் சீதாதேவியைப் பார்ப்பதற்கு அயோத்தியா பட்டணம் வந்தார்கள். அயோத்தியானது இப்பொழுது வெகு அலங்காரமாக விளங்கிற்று. அந்த ஸ்திரீகள் யாவரும் சீதாதேவி விரும்பும் வஸ்துக்களைக் கொணர்ந்து கொடுத்து உபசரித்தார்கள். தேவர்களுக்குங் கிடைத்தற்கரிய திவ்ய அலங்கார வஸ்துக்களையும் தங்கள் தங்கள் தேசத்திற்கிடைக்கக் கூடிய அபூர்வமான பதார்த்தங்களையும் அந்த ராஜஸ்திரீகள் சீதா தேவிக்கு மனமுவந்து கொடுத்து வணங்கினார்கள். அவர்கள்யாவரும் சீதாதேவி யோடு ஒருமாதகாலம் வசித்துவிட்டுப் பின் தங்கள் தங்கள் தேசம் சென்றார்கள்.

பிறகு ஒருநாள் ஸ்ரீராமர் சீதாதேவியின் முன்பு தாம் இரகசியமாக மனத்தில் வைத்திருந்த ஒரு விஷயத்தைச் சுமேதையையும் ஜனகமகாராஜனையும் பார்த்துக் கேட்டார். ஒருக்ஷணநேரமாவது சீதை என்னிடமில்லா திருப்பாளாயின், எனக்குப் பொறுக்கமுடியாத விரகதாப முண்டாகிறது. உடனே நான் அவளிடம் சென்று அவளுடைய முகாரவிந்தத்தின் அழகாகிய அமுதபானஞ் செய்து ஸ்திரபுத்தியை யடைகிறேன். எனக்குக் கவலையுண்டானால் உடனே சீதையின் சமீபஞ்சென்று நீக்கிக்கொள்வது வழக்கம். இப்பொழுது ஜானகியினிடத்தில் எனக்கு அதிக விருப்பமுண்டாகிறது. கர்ப்பந்தரித்து ஐந்து மாதமான ஸ்திரீயை முனிவர்கள் நிந்திக்கிறார்கள். பிரசவமான பின் ஸ்திரீ திருடையாக ஆகிறாள். ஐந்து மாதத்துக்குள் சேர்ந்தால் தம்பதிக்குக்

குறைவு ஏற்படும். இவ்விஷயத்தில் நான் செய்ய வேண்டியதை ஏ மாமா! நீங்களே தெரிவியுங்கள், இந்தச் சீதையை இப்பொழுது மிதிலைக்கு அனுப்பினால் நானும் அங்குவரவேண்டும். கொஞ்ச காலம் வரையில் சீதாவியோகமானது எந்தக்காரணத்தைக் கொண்டாவது ஏற்படவேண்டும். நானென்று யோசித்திருக் கிறேன். உலக அபவாதத்திற்குப் பயந்தும் வண்ணான் கூறினான் என்னும்காரணங்கருதியும்கங்காநதியின்தென்கரையிலுள்ள வான் மீக முனிவருடைய ஆசிரமத்தில் பரிசுத்த முடையவளான சீதை யை விட்டுவிடவும் மறுபடி கொஞ்சகாலங் கழிந்தபின் வரவழைத் துக்கொள்ளவும் நிச்சயித்திருக்கிறேன். சீதை எனக்கு நம்பிக்கை யுண்டாகும்படி சபதமொன்று செய்யப்போகிறாள். பிறகு நான் அவளைக் கானகத்திலிருந்து அழைத்து வந்து அவளோடு அநேக காலம் வாழ்ந்து சுகங்களைப் பெறப்போகிறேன். அந்த வான்மீகி யின் ஆசிரமத்தில் நீரும் உமது பத்நி சுமேதையும் ஐந்து வருஷ மிருக்கவேண்டும்'' என்றார். இதைக் கேட்டதும் ஜனகமகா ராஜனும் அவர் மனைவியும் அவ்வாறே செய்கிறோ மென்பதாக ஒப்புக்கொண்டார்கள். சீதையும் புன்னகை கொண்டு பதியின் கட்டளையை ஒப்புக்கொண்டாள். உடனே இராமர் அவர் களுக்கு மிதிலைக்குப் போக உத்தரவுக்கொடுத்தார்.

ஜனகமகா ராஜன் மிதிலைக்குப் போனதும் தம் அரசாட்சியை மந்திரிவசம் ஒப்புவித்துவிட்டுத் தம் பத்னியுடன் வெகு சீக்கிர மாக வான்மீக முனிவருடைய ஆசிரமம் வந்து சேர்ந்தார். வரும் போது சீதாதேவிக்காகத் தாஸி தாஸர்களையும் அநேக வஸ்துக் களையும் வாகனங்களிலேற்றிக் கொண்டு வந்து ஆசிரமத்தில் நிறைத் தார். அங்கு வான்மீகருக்கு ஆநந்த முண்டாக்கக் கூடியதும் வெகு விஸ்தாரமும் அதிக அழகோடு கூடியதும் சந்திரகாந்தக் கற்களா லாகிய சாளரங்கள் கதவுகள் இவைகளோடு கூடியதுமான ஒரு திவ்யகிருகத்தை ஏற்படுத்தினார். அந்தக்கிருகத்தில், அநேகம் அழ கான பசுக்கள் எருமைகள் இவைகளைக்கொண்டு வந்து கட்டினார். தானிய மூட்டைகள் வஸ்திரங்கள் ஆபரணங்கள் இவைகளை நிறைத் தார். அருகே குளங்கள் புஷ்பத்தோட்டங்கள் முதலியவற்றையுண்

டாக்கினர். இரத்தினசனங்களையும் இரத்தினக் கட்டில்களையும் செய்து அங்கங்கு அலங்காரமாக வீடுமுழுவதும் நிறைத்தார். அன்னம், மாடப்புறா, குயில், மயில், கிளி இவைகளிருந்து வசிக்க வசதிகளேற்படுத்தி அவைகளின் சப்தம் சதாகாலமும் செவியிற் படும்படி செய்தார். சாட்சாத் இலட்சுமிதேவி வசித்தற்கு யத்தினம் செய்திருக்கும் கிருகத்தில் எந்த வஸ்துக்களில்லாதிருக்கும்? சகல வஸ்துக்களும் நிறைந்திருக்குமல்லவா! கடைக்கண்பார்வையினால் இந்திராதிதேவர்களுக்கு மகத்தான ஐசுவரியத்தை யளிக்கும் இலட்சுமிதேவியின் இருப்பிடத்தை நான் வர்ணிக்க வேண்டுமா?

ஜனக மகாராஜன் பின்பு தாம் அங்குவந்த வரலாற்றையும் சீதை வரப்போவதையும் வான்மீகருக்கு வந்தனத்துடன் தெரிவித்தார். வான்மீகர் கேட்டு மனதில் பரமானந்த மடைந்தார்.

ஜன்ம காண்டம்

2 - வது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஒருநாள் ஸ்ரீராமர் தனிமையாயிருக்கும் போது கௌஸல்யா தேவி அவரைப்பார்த்து "ஏ இராமா! சீதாதேவியை சீக்கிரத்தில் எல்லைக் கப்புறம் அனுப்பு" என்றாள். இவ்வாறு கௌஸல்யாதேவி கூறியதும் ஸ்ரீராமபிரான் அப்படியே செய்கிறேனென்று கூறித் தாம் சீதையை வான்மீகி முனிவருடைய ஆசிரமத்தில் விடுவதாக ஆலோசித்திருப்பதைத் தெரிவித்தார். இதன் பின் தாமரைப் பூவின் இதழ் போன்ற நேத்திரமுடைய ஸ்ரீராமபிரான்எட்டாவது மாதத்துவக்கத்தில் சீதாதேவியைப் பார்த்து "ஏ சீதே! வண்ணான் கூறியதை வியாஜமாகக் கொண்டு உலக அபவாதத்திற்குப் பயந்தவன் போல் உன்னை இப்பொழுது கானகத்திற்கு அனுப்புகிறேன்' அல்லாமலும்அந்த வண்ணான் கூறியதையேவியாஜமாகக் கொண்டு ஸ்திரீகள் கர்ப்பந்தரித்த மூன்று அல்லது ஐந்து ஏழுமாதங்களுக்கு மேல் அவர்களுடன் சேரக்கூடாதென்று ஏற்படுத்திய புத்திமான்களுடைய சாஸ்திரவிதியை உன்னுடைய அருகில் இருக்க முடியாத யான் காப்பாற்றுகிறேன். சந்திரன்போன்றமுகமுள்ள உனது பேரெழிலானது என்னை மன்மதன் கைப்பாணத்துக்குள்ளாக்குகிறது. இப்பொழுது உன் வியோகமானது நிர்ப்பந்தமின்றி எவ்விதமேற்படும்? ஆகையால் என் மனமொத்த மைதிலீ! அந்நிர்ப்பந்தத்தை நான் உனக்குக் கொடுக்கிறேன்; இதைச்சத்தியமாகக் கேள். நீ ஐந்து வருஷத்திற்குப் பிறகு மறுபடியும் என்னிடம் வந்து உலக நம்பிக்கைக்காகச் சபதம் கூறப்போகிறாய்; அதாவது சிம்மாசனத்தின் பேரிலிருந்து பூமியின் வழியே பூமாதேவியின் பூஜையைப் பெற்றுப் பாதாளஞ் செல்லப்போகிறாய். அப்பொழுது நான் பூமிதேவியைத் தோத்திரஞ்செய்தும்பயப்படுத்தியும் உன்னைப்பெற்று மடியில் உட்காரவைத்துக்கொள்ள போகிறேன். ஏ சீதே! நீ அப்போது உன் இரண்டு பிள்ளைகளோடு என்னிடமிருந்து சுகமாக வசிக்கப்போகிறாய். என் மூலமாக உனக்குக் குசன் என்னும் மூத்தபிள்ளை யுண்டாகப் போகிறான்.

வான்மீகி முனிவரின் தபோமகிமையால், லவன் என்னும் பேர் கொண்ட மற்றொரு பிள்ளை உனக்குண்டாகப்போகிறான். இந்த இரண்டு பிள்ளைகளும் வான்மீகி முனிவருடைய ஆசிரமத்தில் உண்டாகும்; எனது உத்தரவினால் முந்தியே உனது தந்தை அவ்வாசிரமஞ்சென்று உனக்கு யோக்கியமான கிருகம் முதலிய எல்லாவற்றையும் தயார்செய்து வைத்திருக்கிறார். ஏ ஜனக புத்திரியே! இப்பொழுது நான் கூறுவதைக் கேள். நீ முன்பு தண்டகாரண்யத்தில் கௌதமி நதிக்கரையில் சத்வகுண வடிவத்துடன் எனது சரீரத்தின் இடது பாகத்தில் எவ்வாறு இருந்தனையோ அவ்வாறே இப்போது எனதருகிலிருந்துவா; வான்மீகி முனிவருடைய ஆசிரமத்தில் ரஜஸ் தமஸ் என்னும் இவ்விருவித குணங்களோடு கூடிய வடிவத்துடன் இருந்துவா; இவ்விதமாக நம்மிருவருக்கும் பிரிவினை ஏற்படட்டும். அங்கே குசன் பிறக்கும்போது நான் உனக்கு இரகசியமாகத் தரிசனந்தருகிறேன்" என்றார். இராமர் இவ்விதங் கூறியதைக் கேட்டதும் ஜனக புத்திரியாகிய சீதாதேவி புன்னகைகொண்டு அவரை நமஸ்கரித்துப் "பிராணநாதா! தங்கள் சித்தப்படியே செய்கிறேன்" என்று கூறி, இராஜஸ தாமஸமென்கிற இரண்டு குணங்களாகிய தன்னுடைய சாயலைத் தனியே நிறுத்தி சத்வகுணச் சாயலை இராமபிரானிடம் மறைத்தாள்.

இதன் பின் இராமபிரான், ஆலோசனையின் உண்மையையறிந்தவர்களும் வயது சென்றவர்களுமாகிய மந்திரிகளோடும் சேனாதிபதிகளோடும் சிங்காதனத்தமர்ந்தார். அப்பொழுது அவருடைய சிநேகிதர்கள் நான்கு பக்கங்களிலும் வீற்றிருந்து அவருக்குச் சந்தோஷமுண்டாகும்படி சில கதைகளைக் கூறிவந்தார்கள்.

இராமர் இவ்விதம் கதை சொல்லிவருகிறவர்களுள் விஜயன் என்பவனைப்பார்த்து "ஏ விஜயா! நமது நகரத்திலுள்ளவர்கள் என் நல்ல குணத்தையும் கெட்டகுணத்தையும் பற்றி ஏதாவது பேசிக் கொள்ளுகிறார்களா? கைகேயியைக் குறித்தாவது, சீதையைக்குறித்தாவது அல்லது என் தாய்மார் கௌஸல்யை முதலியவர்களைப் பற்றியாவது என்ன பேசிக்கொள்ளுகிறார்கள். நீ பயப்படவேண்

டாம்; என்பேரில் ஆணைப்படி. தெரிவி" என்று கேட்டார். இப்படிக் கேட்ட இராமரைப்பார்த்து விஜயன் "பிரபுவே! பட்டணத்து ஜனங்கள், இராமபிரானால் யாவரும் செய்தற்கரிய செய்கை செய்யப்பட்டது" என்றுபுகழ்கிறார்கள்; இப்படிப் புகழ்ந்தாலும், "இராமர் இராவணனைக் கொன்று தன் கோபத்தை ஒழித்துச் சீதையைத் தமது வீட்டுக்குத் தருவித்துகொண்டார். அவர் மனம் எப்படிப்பட்டதோ? அவருக்குச் சீதையின் சம்போகத்தின் சுகம் எத்தன்மைத்தோ? இவைகளையாறறிவார்? வனத்தில் அபகரிக்கப் பட்டவளல்லவா சீதை? ஸ்திரீகளிடத்தில் அகாரணமாக ஏற்படும் சாதாரணச் செய்கையிலுமன்றோ கோப முண்டாகிறது? அரசன் எவ்விதமோ அப்படியே குடிகளுமிருப்பார்கள்" என்று இகழ்ந்தும் பேசுகிறார்கள். வண்ணான் ஒரு விஷயம் தெரிவித்திருக்கிறான். அதனைக் கூறுகிறேன் கேளுங்கள்; வண்ணான் தன் மனைவியின் மீது சினங்கொண்டு அவளைப் பார்த்து "ஏ முண்டே! இராவணன் வீட்டிலிருந்த சீதையைத் தன் வீட்டிக்கு மறுபடியு மழைத்துச் சேர்த்துக்கொண்ட இராமனல்ல நான்; உன் இஷ்டப் படியே நான் உன்னை இராமனைப்போல் சேர்த்துக் கொள்ளமாட்டேன்" என்று கூறினான். இதை நான் போய்க்கொண்டிருக்கையில் வழியில் கேட்டேன்; ஏ இரகுகுலதிலக! தாங்கள் இப்போது என்னைக் கேட்டதால் தெரியப்படுத்தினேன்" என்றான். "இவ்வார்த்தையை இராமர் கேட்டதும் மற்றவர்களைப்பார்த்து இவ்விஷயம் உண்மைதானோ" என்றார். அவர்கள் இராமருக்கு வந்தனஞ்செய்து "பிரபுவே! அது உண்மை தான்" என்றனர். இராமர் அவர்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டு இலட்சுமணரை வரவழைத்து "இலட்சுமணா! சீதையின் மூலமாக எனக்கு உலக அபவாத மேற்பட்டிருக்கிறது. நாளை உதயத்திற் கெல்லாம் சீதையை இரதத்திலேற்றி, வான்மீகி முனிவருடைய ஆசிரமத்திற் கொண்டு போய்விட்டு உடனே இவ்விடம் திரும்பி வா; இந்தக் கட்டளையை மறுப்பாயேயாயின் என்னைக்கொன்ற பாபத்தை யடைவாய். உலகத்தாருடைய நம்பிக்கைக்காகச் சீதையின் கையை வெட்டிக்கொண்டுவா" என்று இலட்சுமணருக்குக் கட்டளையிட்டுக் கைகேயினிடம் போனார்.

இங்கே கைகேயி சீதையைப்பார்த்து "ஏ சீதே! இந்தச் சுவரில் இராவணனுடைய உருவத்தை எழுதிக்காட்டு பார்ப்போம்" என்று கேட்டாள். சீதை, "அம்மா நான் ஒரு போதும் இராவணனைப் பார்த்ததில்லை, கௌதம நதிக்கரையில் என்னை அபகரிக்க வந்தகாலத்தில் நான் அவனுடைய வலது கால் பெருவிரலை மட்டும் நோக்கினேன்" என்றாள். உடனே கைகேயி "நீ பார்த்தபடி அவனுடைய பெருவிரலை இங்கு எழுது" என்றாள். சீதை ஆகாவென்று கூறிச் சுவரில் இராவணனது பெருவிரலை எழுதிக்காட்டி விட்டுப் பிறகு அவளிடம் விடைபெற்று அரண்மனை சென்றாள். கைகேயி கெட்ட எண்ணங்கொண்டு, அந்த விரலாகிருதிக்குத் தக்கபடி இராவணனது உருவத்தை எழுதி அந்த உருவத்தை இராமருக்குக் காண்பிக்க வேண்டுமென்று நினைத்து அவ்வாறே எழுதி முடித்தாள். இப்போது இராமரும் அவள் எதிர் தோன்றினர். இராமரைக்கண்டதும் "அப்பா! இராமா! வா; இந்த ஆசனத்திலமர்ந்திரு" என்று ஆசனமிட்டாள். இராமர் தமது மாதாவாகிய கைகேயியை நமஸ்கரித்து அந்த ஆசனத்தமர்ந்தார். உடனே அங்கே சுவரில் எழுதப்பட்டிருந்த இராவணனுடைய உருவத்தைப்பார்த்து, "அம்மா! இந்த உருவம் இங்கு யாரால் எழுதப்பட்டது" என்று கேட்டார். கைகேயி, "அப்பா இராமா! இந்த உருவத்தைச் சீதை வரைந்தனள்" என்று கூறி, "மனுஷியர்களுக்கு எங்கு மனம்பற்றுகிறதோ அதைக்குறித்து அடிக்கடி ஞாபகம் உண்டாகும். ஸ்திரீயின் நடத்தையை யறிபவர்யார்? சிவன் முதலிய தேவர்களையும் ஸ்திரீகள் மோகமடையச் செய்கின்றனர்" என்றாள். உடனே இராமர் கைகேயியினிடம் சற்றுமுன் சபையில் சீதை விஷயமாக நடந்ததைத் தெரிவித்து, "ஏ அம்மா! நாளைக்காலையில் சீதையைஇலட்சுமணன் கங்கைக்கரையில் கொண்டுபோய் விட்டுவிடப்போகிறான். அவளுடைய கையை வெட்டிக்கொண்டுவந்து உனக்கும் பட்டணத்து ஜனங்களுக்கும் காட்டப்போகிறான்; ஸ்திரீ ஹத்தி தோஷத்திற்குப் பயந்து, இராவணன் உருவத்தைச் சுவரில் வரைந்த சீதையைக் கொல்லும்படி இலட்சுமணனுக்கு ஆக்ஞை

யிடவில்லை. ஒரு நிமிஷத்தில் வனத்தின் கண்ணுள்ள துஷ்ட மிருகங்கள் அவளைப்பட்சித்து விடும்" என்று இராமர் கூறவே, கைகேயி கேட்டுச் சந்தோஷமடைந்து, சீதை தன்னைவிட்டுப்பிரிந்துவிட்டமையால் இராமன், இராஜ்யத்தில் வெறுப்படைந்து விட்டுவிடுவான்; இலட்சுமணனும் இராமசேவையின் நிமித்தம் இராஜ்யத்தை ஒப்புக்கொள்ளான். அப்போது இராமன் உத்தரவினால் நமது பிள்ளையாகிய பரதன் அரசாட்சிசெய்வான் என்று தன் மனத்திற்குள்ளெண்ணிக்கொண்டாள். பிறகு இராமர் கைகேயியை நமஸ்கரித்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு சுமித்திரை கௌஸல்யை இவர்களிடம் சென்று அவர்களுக்கு வந்தனஞ்செய்து சபையில் சீதையின் விஷயமாக நடந்த வரலாற்றைத் தெரிவித்துப் பின் ஜானகியின் அரண்மனைக்குவந்தார். சீதை இராமபிரானைக் கண்டதும் அர்க்கிய பாத்தியாதி உபசாரங்களைச் செய்தாள். அதனை இராமர் ஒப்புக்கொண்டு, சந்தோஷத்துடன் அவளிடத்தில் சபையில் நடந்ததையும் கைகேயின் அரண்மனையில் நடந்ததையும் தெரிவித்தார். இதைக்கேட்டதும் சீதை "பிராணநாதா! கைகேயி என்னைப் பன்முறை கேட்டுக்கொண்டதன் மேல் இராவணனுடைய பெருவிரலை மாத்திரம் நான் எழுதினேன். பிறகு அவள் கெட்ட எண்ணங்கொண்டு அந்தப்பெருவிரலுக்குத் தக்கபடி இராவணனது உருவத்தை வரைந்திருக்கிறாள்" என்று கூறினாள். இராமர் "ஏ சீதே! அந்தக் கைகேயியின்கெட்ட எண்ணத்தை நான் நன்று யறிவேன்" என்று கூறிச் சீதையைக்கட்டித் தழுவி முத்தமிட்டார்.

பிறகு அன்றிரவு இராமபிரான் சீதையுடன் சொர்ண மஞ்சத்தில் சயனித்திருக்கும்போது, விளையாட்டாக வைதேகியைப் பார்த்து, "ஏ சீதே! கர்ப்பந்தரித்திருப்பவர்களுடையமனமானது சில வஸ்துக்களில் ஆசை கொள்வதுண்டு; அப்படி யேதேனும் உனக்கு விருப்பமிருந்தால் தெரிவி. அதை உடனே நிறைவேற்றுகிறேன்" என்றார். இப்படி இராமர் கூறியதும் சீதைநடக்கப்போகிற வைகளுக்குக் கட்டுப்பட்டு, "நாதா! கங்கைக்கரையிலிருக்கும் மரங்களையும் முனிவர்களின் பத்தினிமார்களையும் அந்த வனத்தின் வனப்பையும் பார்க்க என்மனம் விரும்புகின்றது; ஆகையால்

அங்கே என்னை அனுப்பவேண்டுகின்றேன்" என்றாள். இவ்வாறு சீதைகூறியதும் இராமர் மனமகிழ்ச்சியடைந்து "ஏ ஜானகி! நாளையதினம் என் உத்தரவுப்படி இலட்சுமணன் உன்னையழைத்துக் கொண்டு போவான்" என்று கூறி, மறுபடியும் சீதையைப் பார்த்து, "ஏ சீதே! உன்னுடன் விளையாடிக்கொண்டிருந்தமையால் ஜெபம் தியானம் முதலியவைகளைச் செய்ய மறந்துவிட்டேன். நீ அரண்யம் சென்ற பிறகு தான் செய்யவேண்டும்" என்று தெரிவித்துப் படுத்து நித்திரைசெய்தார்.

சீதையும், நமது தாய் தந்தை ஆசிரமத்திலிருக்கும்போது, நமக்கு அங்கே குறைவென்ன ஏற்படப்போகிறது; ஆகையால் நாம் ஒன்றுங் கொண்டுபோக வேண்டாம். நாளைக்காலையில் தோழிமார்களுடனும் இலட்சுமணருடனும் தேரின் மீதேறி சுகமாகப் போவோம் என்று தனக்குள் எண்ணிக்கொண்டு படுத்து நித்திரை புரிந்தாள்.

இதன்பின் விடியற்கால மெழுந்திருந்து ஸ்நானஞ் செய்து நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு, ஸ்நானஞ்செய்துவீற்றிருந்த பதியாகியஇராமருக்குப் போஜனமளித்து அவர் புசித்தானபின் தானும்புசித்தாள். பிறகு ஊர்மிளை முதலியசகோதரிகளிடத்திலும் மாமிமார்களிடத்திலும் தான் கங்கைக்கரையிலிருக்கும் மரங்களையும்முனிவர்களையும் பார்க்கப்போய் வருகிறேனென்று கூறி விடைபெற்றுக்கொண்டாள். இலட்சுமணரையும் தன்தோழிகளையும் பணிவிடைப்பெண்களையும்வரவழைத்தாள். பிறகு இராமரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, தாசிகளுடனும் துளஸிமுதலிய தோழிகளுடனும் இலட்சுமணருடனும் இரதத்திலேறினாள். இரதம் உடனே தென்றிசைநோக்கி வாயுவேகமாகச் சென்றது. அன்னையார்செல்வதையறிந்துஇந்திரன் முதலிய தேவர்கள் வழியில் உபசரித்தார்கள். இலட்சுமணர் பரிசுத்தமான தமஸாநதியையும் கோமதி என்ற நதியையுந்தாண்டி கங்கை யமுனை மந்தாகினி இரண்டாவதுதமஸா நதிஇவைகளையுந்தாண்டி மலையின்தாழ்வரையில் வான்மீகி முனிவருடைய ஆசிரமத்துக்கருகாமையில் ஓர் அரசமரத்தடியில், இரதத்தை நிறுத்தி அங்குயாவரையும் உட்காரவைத்துக்கண்களினின்று நீர்பெருக நின்று சீதையைப் பார்த்து"அம்மா! என் தமையனாகிய

இரகு வீரர் உலக அபவாதத்திற்குப் பயந்து உம்மைக் காட்டிற் கொண்டுவந்துவிட எனக்கு ஆக்ஞாபித்தார். தங்களுக்கு ஒருவித தோஷமும் கிடையாது. சுகமாக இந்த வான்மீகி முனிவருடைய ஆசிரமம் சென்று அங்கிருங்கள்" என்று சொல்லி அன்னையை வலம்வந்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தேரின்மீதே றிப் புறப்பட்டுக் கங்காநதி வந்தார்.

பிறகு வான்மீகிமுனிவர் தமது மாணாக்கர்கள் மூலமாக சீதை வந்திருப்பதையறிந்து, ஜனகமகா ராஜன் சுமேதை தமது பத்தினி இவர்களுடன் சீதையினிடம் வந்து உபசரித்து பல்லக்கிலேற்றி வைத்து அநேக வாத்திய சப்தங்களுடனும் நர்த்தனங்களுடனும் தமதாசிரமத்திற் கழைத்துவந்தார். அங்குள்ள முனிவர்கள் இப்பொழுது ஜானகியின்மீது புஷ்பமாரிபொழிந்தார்கள். சிலர் ஜானகிக்கு நீராஜனம் செய்து மெதுவாகப் பல்லக்கிலிருந்து கீழே யிறக்கி, ஒரு திவ்யாசனமிட்டு அதில் வீற்றிருக்கும் படி உபசரித்தார்கள். பிறகு முனிவர்களின் பத்தினிகள் தனித் தனியே பிராட்டியைப் பூஜித்தார்கள். வான்மீகி முனிவருடைய வாய்மொழியால் வைதேகியை, ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் இருதயகமலவாசியாகிய இலட்சுமிதேவி யென்றே யறிந்து, நாடோறும் ஜானகிக்குத் திவ்யான்னமளித்து அவள் விரும்பும் கனிவர்க்கங்களையும் கொடுத்து முனிவர் பத்தினிகள் யாவரும் உபசரித்தார்கள். இங்கு ஜானகி அயோத்தியி லிருந்ததை விடப் பன்மடங்கு சுகமாகவே யிருந்துவந்தாள்.

3-வது சருக்கம்

முற்றிற்று.

4 வது சருக்கம்.

பிறகு இலட்சுமணர் கங்கைக்கரை வந்ததும் பரிசுத்த இருதயமுள்ள சீதாதேவியை இந்தக் கானகத்தில் விட்டு விடும்படி நமக்கு இராமபிரான் மனதிற் சிறிதுங் கலக்கமின்றி ஆக்ஞாபித்தது, ஜனங்களைத் திருப்தி செய்வதற்காகவே யென்று தனக்குள் சிந்தித்து, அவருடைய கட்டளை இன்னும் என்னவென்று யோசித்துப் பார்த்து, சீதையின் கையை வெட்டி வரும்படி ஆக்ஞாபித்தது ஞாபகத்துக்கு வரவே, ஆ! நான் இதற்கென்ன செய்வேன்? ஐயோ! அப்போது அவர் ஆணையிட்டதைக் கண்டு பயந்து பேசாமல் வந்து விட்டேனே? இப்போது என்ன பதிற் கூறுவேன்? எப்படி இராமரிடம் போவேன்? சீதையின் கையைக் கொண்டு போகாமற் போனால் அவர் என்னைப்பார்த்து என்ன சொல்வார்? அந்தோ! சீதையின் கையை எப்படி வெட்டுவேன்? என்னைத் தன் வயிற்றுப் பிள்ளையைப்போல் ஆதரித்து வந்த உத்தமியாயிற்றே. ஆ! இதற்கென்ன செய்வேன் என்று நெடு நேரம் ஆலோசித்தார். பிறகு நான் என் முகத்தை இராமருக்குக் காண்பிக்கவில்லை; அக்நியில் பிரவேசித்துவிடுகிறேன். இதைத் தவிர வேறு மார்க்கமில்லை யென்று நினைத்து, சிதையடுக்க முயற்சித்தார். இத்தருணத்தில் பிரம்ம தேவரது ஆக்ஞைப்படி தேவ தச்சனாகிய விசுவகர்மாஎன்பவன் கையில் ஒருகோடரியுடன் தச்ச வேடம் பூண்டு அங்கு சஞ்சரித்து வந்தான். அத்தச்சனை இலட்சுமணர் கண்டு நீ எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும்; என்னவெனில், உன் கைக்கோடரியைச் சற்றுக்கொடு; இம்மரங்களை வெட்டிச் சிதை யடுக்கவேண்டும்; சீக்கிரமாகக்கொடு, உனக்கு வேண்டிய பொருள் தருகிறேன்" என்றார். இதைக்கேட்டதும் விசுவகர்மா சிதை அடுக்குவதற்குக் காரணம் யாதென வினவினான். இலட்சுமணர் முன் நடந்ததைக் கூறினார். தச்சன் இலட்சுமணர் கூறியவைகளை மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து பிறகு புன்னகையுடன், "பிர்மாவின் கைகளிலிருந்து உற்பத்தியான க்ஷத்திரிய குமாரனாகிய இலட்சுமணா! இந்த அற்ப காரியத்திற்காக உன் சரீரத்தை அக்னியில் ஹோமம் செய்யாதே; நான் சீதையின் கையை உண்டாக்கி ஒரு க்ஷணத்தில் கொடுக்கிறேன்"

என்று கூறி, தோல், மாம்சம், எலும்பு, சிறு நரம்பு, இரத்தம், ரவிக்கை சீதாதேவி அலங்கரித்துக்கொண்டிருப்பது இவைகள் யாவும் பொருந்திய சிலாக்கியமான சீதையின் கையைச் செய்து இலட்சுமணரிடம் கொடுத்து உடனே மறைந்து விட்டான்.

இலட்சுமணர் அக்கையை பெடுத்துக்கொண்டு, பிரகாச மழுங்கியதும் சந்தோஷமற்றதும், சுழல் காற்றினால் மிகுந்த தூளி படிந்ததும் மனைவியில்லாத கிருகம் போன்றதுமான அயோத்திக்கு வந்து உள்ளே தலையைக் குனிந்துகொண்டே பிரவேசித்தார். பிறகு சபையில் வீற்றிருக்கும் இராமபிரானைக்கண்டு வந்தனம் செய்து கங்கண முதலிய அலங்காரங்களோடு கூடிய சீதையின் கையைக் காண்பித்தார். இராமர் அக்கையைப் பார்த்ததும் தலை குனிந்துகொண்டே "இலட்சுமணா! இந்தக் கையை என் உத்தரவுப்படி நமது தாய் கைகேயி அம்மாளுக்கும் பட்டணத்து ஜனங்களுக்கும் காண்பித்துவிட்டு வா" என்றார். இலட்சுமணர் இராமபிரான் உத்தரவுப்படியே கைகேயி முதல் யாவருக்கும் காண்பித்து விட்டு அக்கையைப் பெட்டியில் வைத்துக் காப்பாற்றினார். கைகேயி அக்கையைக் கண்டு மிகவும் சந்தோஷித்தாள். விக்ஞான சொரூபரும், பிரதான புருஷரும் ஆதிதேவரும் முனிவர்கள் வணங்கும் சரணங்களுள்ளவரும் பரமாத்மாவுமாகிய ஸ்ரீராமரும் சீதையில்லாததினால் எல்லாச்சுகங்களையுமிழந்துவிரக்தராகவும் முனிவர்களின் அனுஷ்டானத்துடனுமிருந்து வந்தார். சீதையும் முனிவருடைய ஆசிரமத்தில், முனிவர் பத்னிகள் உபசரிக்கச் சுகமாக இருந்து வந்தாள்.

சீதாபிராட்டி வான்மீகி முனிவருவடைய ஆசிரமத்தில் இரண்டு மாதங்களிருந்த பிறகு ஒரு புத்திர ரத்தினத்தைப் பெற்றாள். சீதாபிராட்டி பிரசவமானதையறிந்த இரகுவீரர் இராத்திரியில் தமது ஆப்த பந்துவுடன் புஷ்பக விமானத்திலேறி ஆகாச மார்க்கமாக வான்மீகி முனிவருடைய ஆசிரமம் வந்து, அம்முனிவரை நமஸ்கரித்து, அங்குள்ள முனிவர்களுடனும் பிராமணர்களுடனுமிருந்து விதிப்படி ஜாதகர்மாதி கிரியைகளை நடத்தினார். சீதாபிராட்டி கண் காணத் தமது புத்தி

ரனது முகத்தைச் சந்தோஷத்துடன் பார்த்தார். வஸ்திராபரணங்களைத் தானங்கொடுத்தார். மக்கட்பேறடைந்த மகோற்சவத்தில் விதிப்படி நாந்தி சிராத்தம் செய்தார். இப்போது தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தது. தேவர்கள் ஆகாயமார்க்கமாகச் சஞ்சரித்துப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். தேவ ஸ்திரீகள் நர்த்தனம் புரிந்தனர். ஜனகமகா ராஜனது சேவர்கள் வாத்தியகோஷம் செய்தனர். தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். மாகதர்கள் சீதை இராமர் குழந்தை முதலியவர்களைக்கொண்டாடினார்கள். முனிவர்பத்தினிகள் திவ்ய அலங்காரஞ்செய்து கொண்டு, இராமர், சீதை, குழந்தை இவர்களுக்கு நீராஜனம் செய்து இனிமையான குரலுடன் பாடி வாழ்த்தினார்கள். இராமபிரான் அந்த முனிவர் பத்தினிகள் யாவருக்கும் திவ்ய வஸ்திரமளித்துப் பூஜித்தார். வான்மீக முனிவர் குழந்தைகளுக்கு விதிப்படி குசங்களால் அரிஷ்ட நிவாரணஞ் செய்தார். அரிஷ்ட நிவாரணத்தின் பொருட்டு குச ஸ்பரிசமடைந்த நீரால் விரோக்ஷணம் செய்யப்பட்டமையால் அக்குழந்தைக்குக் குசன் என்னும் திருநாமம் இராமர் முன்னிலையில் வான்மீக முனிவரால் கொடுக்கப்பட்டது. இந்த வைபத்துடன் இராமபிரான் அன்றிரவு முழுதும் அங்கிருந்து, புறப்படும் சமயத்தில் அங்குள்ளவர்களைப் பார்த்து " நான் இங்கு வந்தவரலாற்றைஇந்த ஆசிரமத்திற்கு வெளிப்பக்கத்தில் கூறுகிறவன் என்னுடைய சிக்ஷைக்குள்ளாவான். இதில் சந்தேகமில்லை" யென்று கூறிவிட்டு முனிவர்களை நமஸ்கரித்து, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டார். பிறகு சீதையிடஞ்சென்றுபோய் வருவதாகச்சொல்லிக் கொண்டு இலட்சுமணருடன் புஷ்பகவிமானம் ஏறி, ஆகாச மார்க்கமாக ஒரு நொடியில் அயோத்தியாபுரி வந்து முன்போல் அரண்மனையில் நித்திரைபுரிந்தார்.

சிலநாட் சென்றதும் இராமபிரான் வஸ்திராபரண அலங்காரத்துடன் சொர்ணத்தால் செய்யப்பட்ட சீதையைப் பத்தினியாகக் கொண்டு யாகம் செய்ய நினைத்தார்.

பாபஞ்செய்தவள், அநாசாரமுள்ளவள், புருஷனை நிந்திக்கிறவள், திருடுகிறவள், புருஷனைக்கொல்ல எண்ணங்கொண்டவள்

எப்போதும் சண்டை போடுகிறவள், பரபுருஷனால் அனுபவிக்கப் பட்டவள், பாபச் செய்கைகளை விரும்புகிறவள், புருஷன் வார்த்தையைக் கேளாதவள், தன் இச்சைப்படி நடக்கிறவள், காணாமற் போனவள், மரணத்தை யடைந்தவள், பிறரால் அபகரிக்கப்பட்டு அதற்கிணங்கிச் சென்றவள், இப்படிப்பட்ட மனைவிகளைத் தள்ளி விட்டு, பிராமணர்களானால் தர்ப்பையால் மனைவியை ஏற்படுத்திக் கொண்டு தாங்கள் செய்யவேண்டிய கருமங்களைச் செய்யலாம். க்ஷத்திரியர்கள் சொர்ணத்தாலும் வைசியர்கள் வெள்ளியினாலும், சூத்திரர்கள் தாம்பிரத்தாலும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. இல்லையாயின் எல்லா வருணத்தவரும் சொர்ணத்தால் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது விதி. ஸ்ரீராமர் க்ஷத்திரியர் மரபிற் கேற்ப இப்போது சொர்ணத்தால் சீதை போல் கற்பித்து அக்நிஹோத்திரம் செய்தார். தண்டகாரண்யத்தில் இராவணன் சீதையை அபகரித்துச் சென்றபோது, சொர்ணம் இல்லாமையால் இராமசந்திர பிரபு குசங்களால் சீதையை ஏற்படுத்திக்கொண்டு கருமத்தை நடத்தினார். நித்திய கர்மானுஷ்டானத்தை விடுவது சாஸ்திரத்திற்கு மிகவும் அசம்மதமானதென்பதைக் கருதி மற்ற வருணத்தவரும் குசங்களால் மனைவியைக் கற்பித்து அக்நிஹோத்திரம் செய்கிறார்கள். விபசாரம் செய்கிறவள், பாபஞ்செய்கிறவள், புருஷனை விரோதிக்கிறவள் இப்படிப்பட்ட ஸ்திரீயை ஆதானம் என்ற கருமத்தில் தியாகம் செய்யவேண்டுமென்பது விதி. (ஆதானத்தில் தியாகம் செய்யவேண்டாமென்பது மற்றொரு மதக் கொள்கை.)

ஸ்ரீராமர் வசிஷ்டமுனிவர் மற்றுமுள்ள பிரம்மஞோத்தமர் இவர்களுடன் பக்ஷந்தோறும் நவமியில் அவப்ருத ஸ்நானம் செய்ய நிச்சயித்து முத்கல முனிவரது ஆசிரமத்திற் கருகாமையில் தென் பக்கத்தில் கங்கா நதி வடக்கு முகமாகப் பிரவகிக்குமிடத்தில் பிரயாகை க்ஷேத்திரத்திற்குச்சமீபத்தில்யாக பூமியேற்படுத்தி அந்த ஸ்தலத்தைத் தங்கக் கலப்பை கொண்டு சோதனை செய்து அங்கே சொர்ண சீதையுடனிருந்து யாகஞ்செய்யத் தொடங்கினார்.

அக்ஞானிகள் சொர்ணச் சீதையையும் ஞானிகள் தமது இடது பாரிசத்தில் மறைந்திருக்கும் சத்வகுணசீதையையும் தரி

R... INSTITUTE,
14, R. H. ROAD, MADRAS-4

சிக்க யாககாரியங்களை யனுஷ்டித்தார். பிரபுவான தசரத குமாரர் இவ்வாறு யாகஞ்செய்துமுடிந்ததும் தமதுகுலகுருவாகிய வசிஷ்ட முனிவருக்கு அந்த சொர்ண சீதையைத் தானமாக் கொடுத்து விட்டார். இவ்விதம் நூறு யாகங்களிற்பற்றி நூறு சொர்ண சீதையைத் தானம் செய்தார். இவ்வாறு தானஞ்செய்ததன் பலனாக ஸ்ரீராமபிரான் கிருஷ்ணாவதாரத்தில் பதினாயிரத்து நூறு ஸ்திரீகளை விவாகம் செய்துகொள்ளப்போகிறார். இரகுவீரர் யாகந்தோறும் கறுப்புக்காதுகளுள்ள குதிரையைப் பூப்பிரதக்ஷிணத்திற்கு அனுப்பினார். அந்தக் குதிரைகளொவ்வொன்றும் யாகமண்டபத்திலிருந்து புறப்பட்ட நான்காவது தினத்தில் நான்கு திக்குகளையும் சுற்றிக்கொண்டு வந்து சேரும். சத்ருக்னனே ஒவ்வொரு யாகத்தில் விடப்பட்ட குதிரையை புஷ்ப விமானத்தின் மீதேறி ரக்ஷித்து வந்தான். இவ்வாறாகத் தொண்ணூற்றொன்பது யாகங்கள் நடந்தன. ஸ்ரீராமர் நூறாவது அசுவமேதயாகம் செய்யத்தொடங்கி அந்த யாகத்தையும் கங்கைக் கரையில் முத்கல முனிவர் ஆசிரமத்திற்கு அருகே நடத்தினார்.

இதுநிற்க, இனிச்சீதாபிராட்டியைக் கவனிப்போம். பிராட்டியாருக்குக் குழந்தைபிறந்த பத்து நாள் வரையில் இரவிலும் சந்தியா காலங்களிலும் வான்மீகி முனிவர் அக்குழந்தைக்கு இராமரக்ஷை என்ற மந்திரத்தால் அபிமந்திரணம் செய்தார். இரகுவீரர் உத்தரவுப்படிபதினோராவது நாளில், குசன் என்னும் பெயரிட்டு மற்றுமுள்ள காரியங்களை நடத்தினார். பின்னர், குழந்தை குசன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு வந்தான். ஜனகமகாராஜனும் சுமேதையும் குழந்தையை வஸ்திரங்களாலும் புலி நகங்களாலும் அலங்கரித்து பெருமைப் படுத்தினார்கள். குசன் பலவித விளையாட்டினால் தன் தாய் சீதா பிராட்டிக்குச் சந்தோஷமுண்டாக்கி வந்தான். ஒருநாள் வான்மீகி முனிவருடைய ஸந்நிதியில் குழந்தையானது தொட்டிலிற்படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தது. அச்சமயம் பிராட்டியாரின் தோழி துளஸி, தாய் சுமேதை இவர்கள் வெளிபோயிருந்தார்கள். ஜானகி இநேரமயத்தில் அதாவது ஐப்பசிமாதம் ஞாயிற்றுக்

கிழமையன்று தமஸாநதிக்குச்செல்ல எண்ணித் தன்குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி வான்மீகி முனிவருக்குத் தெரிவித்துவிட்டுத் தான் தமஸாநதிக்குச் சென்றாள். தாஸி வழி காட்டப்பின்னால் சென்ற சீதை வழியில், இடுப்பு,தோள், தலை இவைகளில் ஐந்து குட்டிகளைகட்டிக்கொண்டுசஞ்சரிக்கும் ஒரு பெண்குரங்கைக் கண்டாள். அப்பெண்குரங்கைப் பார்த்ததும் தன் குழந்தையை நினைத்துக்கொண்டு, "திரியக் ஜாதியில் பிறந்த குரங்குமல்லவா தன்குழைந்தைகளை விட்டுப் பிரியாமல் கூடவே அழைத்துக்கொண்டுபோகிறது, மானிட ஜன்மமெடுத்த என்னைச் சுடவேண்டும், எனக்குப் பிறந்த ஒரே குழந்தையைத் தனியே விட்டு ஸ்நானம் செய்யப்புறப்பட்டுவிட்டேனே. இப்பூமியில் சுகமானது ஒரு க்ஷணகாலமும் விடாமல் அநுபவிக்கத்தக்கது. நான் பெரிய முட்டாள்." என்று தன்னைத்தூஷித்துக்கொண்டு திரும்பவும் ஆசிரமம் வந்தாள். இச்சமயத்தில் வான்மீகிமுனிவர் லகுசங்கைக்குச் சென்றிருந்தார். சிஷ்யர்கள்ஸமித்துகள் சேகரித்துவரச்சென்றிருந்தார்கள். சீதை தொட்டிலிலிருந்த குழந்தையைஎடுத்துக்கொண்டு வெளியேவந்து நதிக்குச்சென்று ஸ்நானஞ்செய்து கொண்டிருந்தாள். முனிவர் வந்துபார்த்து தொட்டிலிற் குழந்தையைக் காணாததால், சீதாதேவியின் சாபத்திற்குப்பயந்து, முன்போல், நறுக்கின குசங்களின் அடிப்பக்கங்களால் (லவங்காளல்) ஒரு குழந்தையைக் கற்பித்து, மந்திர தீர்த்த ப்ரோக்ஷணம்செய்து தவத்தின் மகிமையால் அக்குழந்தைக்கு உயிருண்டாக்கினர். வான்மீகி முனிவர் ஞானதிருஷ்டியால் குழந்தைகாணாமற்போனதின்காரணத்தைக் கவனிக்கவில்லை.

இவ்வாறிருக்க சீதாபிராட்டியும் நதியில் ஸ்நானஞ்செய்துவிட்டு இடுப்பில் குழந்தையை எடுத்துக்கொண்டு தன் தாதியுடன் கால்தண்டைகள் சப்திக்க ஆசிரமம்வந்து தொட்டிலில் வேறொரு குழந்தையிருக்கக்கண்டு இக்குழந்தை யாருடையதென்று முனிவரைக்கேட்டாள். முனிவர் ஜானகியின் இடுப்பில் குசன் இருக்கக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து, சீதையையழைத்து நடந்ததைத் தெரிவித்தார். பின்தொட்டிலிற படுத்திருக்கும் குழந்தையை எடுத்துச்சீதையின்மடிமீதுவைத்து எனது அநுக்கிரகத்தாலுண்டான

இக்குழந்தையை நீ இரண்டாவது குழந்தையாகக்கொள். இக்குழ ந்தை லவங்களால் உண்டுபண்ணப்பட்டபடியால், லவன் என்று இவனையழைக்க வேண்டும்" என்று கூறினர். முனிவர் இவ்விதங் கூறியதும் ஜானகி மன மகிழ்ச்சியுடன் குழந்தையை யெடுத்துக் கொண்டாள். பிறகு முனிவர் லவனுக்கு ஜாதகர்மம் முதலிய காரியங்களைச் செய்தார். அப்பொழுது பூமியிலும் ஆகாசத்தி லும் வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் புஷ்பமாரி பொழிந் தார்கள். ஜனகமகாராஜன் சுமேதை இவ்விருவரும் சந்தோஷ மாக உற்சவம் கொண்டாடினார்கள். பிறகு முனிவர் குசலவர் களுக்கு வில்வித்தை அஸ்திரவித்தை இவைகளைக் கற்பித்தார். வித்தியாப்பியாசம் செய்வித்தார். தாம் செய்த இராமாயணத் தை உபதேசித்தார். அச்வினி தேவர்கள் போல் அழகினிற் சிற ந்த குசன் லவன் இருவரும் அந்த இராமாயணத்தைப் பாடிக் கொண்டு வனத்தில் சஞ்சரித்தார்கள். இப்படி இவர்கள் இரா மாயண கானஞ்செய்து கொண்டு உலாவுவதைக் கண்ட முனிவர் கூட்டங்கள், பரமாச்சரியமடைந்து இவ்வாறு கானஞ்செய் கிறவர்களை நாம் எங்கும் கண்டதில்லை. கந்தர்வலோகம், கின்னர லோகம், பூமண்டலம், தேவலோகம், அமராவதி, பாதாளம், சத் தியலோகம் இவைகளெங்கும் நாம் பார்த்திருக்கிறோமே; நமக்கு வயசும் அதிகமாயிற்றே. நமது நீண்ட ஆயுட்காலத்தில் இப் படிக் கானஞ்செய்கிறவர்களை மேற்கண்ட இடங்களில் நாமெங்கே கண்டிருக்கிறோம்? எங்கும் கண்டதில்லையல்லவா ? அன்றிச் செவி யால் கேட்டுத்தா னிருக்கிறோமா ? அதுவுமில்லையே என்று விய ந்துபேசிக்கொண்டார்கள். முனிவர்கள் எல்லாரும் தினந்தோறும் கொண்டாட அவ்விரு பாலர்களும் வனத்தில் சஞ்சரித்துக்கொ ண்டு சுகமாக இருந்தார்கள். தங்கக்கங்கணம், தண்டை, சதங்கை, அரை நாண்மாலை, ஹாரம், குண்டலங்கள் இவைகளால்அலங்கரிக் கப்பட்டிருக்கும் அக்குழந்தைகள் இருவரும் நாள்தோறும் பற் பலவிதமாக விளையாடித் தங்கள் தாய் சீதாபிராட்டி, ஜனகமகாரா ஜன், சுமேதை, முனிவர் இவர்களுக்குச் சந்தோஷ முண்டாக்கி வந்தார்கள்.

4-வது சருக்கம்

முற்றிற்று.

5-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பரம குருவே! வான்மீகிமுனிவர் குசன் என்ற பாலனுக்கு இராமரக்ஷையால் அபிமந்திரஞ் செய்தாரென்று கூறினீரே, அந்த இராம ரக்ஷையை எனக்குக் கூறவேண்டுமென்று விஷ்ணுதாஸர் வினவினார். இராமதாஸர் இவ்வாறுகேட்ட தமது மாணவனைப் பார்த்து, " ஏ விஷ்ணுதாஸ! இந்த இராமரக்ஷையைப் பரமசிவனவர் பார்வதிக்கு ஸ்ரீசுப்பிரமணியரின் பொருட்டுக் கூறியுள்ளார். அவ்வாறே கூறுகின்றேன் கேள்.

ஒரு சமயம் பரமசிவன் பார்வதியைப் பார்த்து, "குமாரன் சுப்பிரமணியனுக்கு இராமரக்ஷையைச் செய். அவன் தாரகாசுரனைக் கொல்லும் சக்தி பெறுவான்" என்று கூறிப் பரிசுத்தத்துடனிருந்து பார்வதிக்கு அந்த இராமரக்ஷையை உபதேசஞ்செய்தார்.

|| 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 ||

𑌵𑌾𑌮𑍇 𑌕𑍋𑌦𑌂𑌡𑌦𑌂𑌡𑌂 𑌨𑌿𑌜𑌕𑌰𑌕𑌮𑌲𑍇
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌬𑌾𑌣𑌮𑍇𑌕𑌂
𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑌾𑌗𑍇 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌧𑌤𑌮𑌭𑌿𑌮𑌤𑌂
𑌸𑌾𑌸𑌿𑌤𑍂𑌣𑍀𑌰𑌭𑌾𑌰𑌂
𑌵𑌾𑌮𑍇𑌽𑌵𑌾𑌮𑍇𑌵𑌸𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌹𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌤𑌨𑌾𑌂
𑌜𑌾𑌨𑌕𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇𑌽𑌹𑌂
𑌪𑍍𑌰𑌣𑌤𑌜𑌨𑌮𑌨𑌃𑌖𑍇𑌦𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌦𑌕𑍍𑌷𑌂

தியானம்.

இடது கையில் வில்லையும் வலது கரத்தில் பிரதானமான பாணத்தையும் பின் பக்கத்தில் சிலாக்கியமான கத்தி, அம்புறாத் தூணி இவைகளையுங்கொண்டு, இடதுபக்கத்தில் சீதையும் வலது பக்கத்தில் இலட்சுமணரும் வீற்றிருக்கப் பெற்ற சரீரத்தோடு கூடியவரும், சரணமடைந்தவர்களின் மனத்திலிருக்கும் சிரமத்தை நீக்குகிறவரும் கறுப்பு நிறமுடைய வருமான ஸ்ரீராமனை நான் பஜிக்கிறேன்.

அஸ்ய ஸ்ரீ ராமரக்ஷாஸ்தோத்ர மந்த்ரஸ்ய புதகௌசிக ருஷிஃ। ஸ்ரீ ராமசந்த்ரோ தேவதா। அநுஷ்டுப் சந்தஃ। ஸ்ரீராம ப்ரீத்யர்த்தே ஜபே விநியோகஃ।

சரிதம் ரகுநாதஸ்ய சதகோடி ப்ரவிஸ்தரம்।
ஏகைகமக்ஷரம் பும்ஸாம் மஹாபாதகநாசநம் ॥௧॥

த்யாத்வா நீலோத்பலஸ்யாமம் ராமம் ராஜீவலோசநம்।
ஜாநகீலக்ஷ்மணோபேதம் ஜடாமுகுடமண்டிதம் ॥ ॥௨॥

ஸாஸிதூணதநுர்பாணபாணிம் நக்தஞ்சராந்தகம்।
ஸ்வலீலயா ஜகத்த்ராதுமாவிர்பூதமஜம் விபும் ॥ ॥௩॥

ராமரக்ஷாம் படேத்ப்ராஜ்ஞஃ பாபக்நீம் ஸர்வகாமதாம்।
சிரோ மே ராகவஃ பாது பாலம் தசரதாத்மஜஃ॥ ॥௪॥

இந்த இராம ரக்ஷா ஸ்தோத்திர மஹா மந்திரத்திற்குப் புத கௌசிகர் ரிஷி, ஸ்ரீராமசந்திர பிரபு தேவதை, ஸ்ரீராமர் பீஜம் அனுஷ்டுப் சந்தஸ் இராமரின் பிரீத்யர்த்தமாக ஜபம் செய்தல் (வினியோகம்).

நூறு கோடி கிரந்தங்களால் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்ட ஸ்ரீ இரகு புங்கவருடைய சரித்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரமும் மகா பாபங்களைப் போக்கத்தக்கது. (1)

கருநெய்தல் மலர் போன்ற மேனியும் தாமரை மலர் போன்ற கண்களுமுடையவரும், சீதை, இலட்சுமணர் இவர்களுடன் கூடியிருப்பவரும், ஜடாமகுடதாரியாயிருப்பவரும், கத்தி, அம்புறாத்தூணி, வில், பாணம் இவைகளைக் கையிலேந்தியவரும் அரக்கர் குல காலனும் தம் விளையாட்டினால் உலகங்களை இரக்ஷிப்பதற்கு அவதாரம் செய்தவரும் பிறப்பற்றவரும் பிரபுவுமான ஸ்ரீ ராமரைத் தியானஞ்செய்து பிரக்ஞை யென்னும் புத்தியையுடையவன், பாபங்களை யொழித்து இஷ்டார்த்த சித்திகளைக் கொடுக்கும் ஸ்ரீராம ரக்ஷையைப் படிக்க வேண்டும். இராகவர் சிரஸை ரக்ஷிக்கட்டும், தசரத குமாரர் நெற்றியை ரக்ஷிக்

கௌஸல்யேயோ த்ருசௌ பாது விச்வாமித்ரப்ரிய: ச்ருதீ |
க்ராணம் பாது மகத்ராதா முகம் ஸௌமித்ரிவத்ஸல: ||௫||
ஜிஹ்வாம் வித்யாநிதி: பாது கண்டம் பரதவந்தித: |
ஸ்கந்தௌ திவ்யாயுத: பாது புஜௌ பக்நேசகார்முக: ||
கரௌ ஸீதாபதி: பாது ஹ்ருதயம் ஜாமதக்ந்யஜித் |
மத்யம் பாது கரத்வம்ஸீ நாபிம் ஜாம்பவதாச்ரய: ||
ஸுக்ரீவேச: கடீ பாது ஸக்திநீ ஹநுமத்ப்ரபு: |
ஊரூ ரகூத்தம: பாது ரக்ஷ:குலவிநாசக்ருத் |
ஜாநுநீ ஸேதுக்ருத் பாது ஜங்கே தசமுகாந்தக: ||௯||

கட்டும், கௌஸல்யையின் குமாரன் கண்களை ரக்ஷிக்கட்டும், விசுவாமித்திரருக்குப் பிரியமுள்ளவர் காதுகளை ரட்சிக்கட்டும், யாகத்தைக் காப்பாற்றுகிறவர் மூக்கைக் காக்கட்டும், இலட்சுமணரிடம் அன்புள்ளவர் முகத்தைக் காக்கட்டும். (2-5)

வித்தைகளுக்கு இருப்பிடமானவர் நாவைக்காக்கட்டும், பரதர் வணங்கும் பரம புருஷர் கழுத்தை ரக்ஷிக்கட்டும், திவ்ய ஆயுதம் தரித்தவர் தோள்களை ரக்ஷிக்கட்டும், பரமசிவன் வில்லை முறித்தவர் புஜங்களைக் காக்கட்டும். (6)

சீதாபதியானவர் முன் கைகளை ரக்ஷிக்கட்டும், பரசுராமரை ஜயித்தவர் மார்பைக் காக்கட்டும், இரகு ராமர் பக்கங்களைப் பரிபாலிக்கட்டும், இக்ஷுவாகு குமாரர் வயிற்றைக் காக்கட்டும். (7)

கரனைக் கொன்றவர் இடையைப் பாதுகாக்கட்டும், ஜாம்பவாசிரியர் நாபியை இரக்ஷிக்கட்டும், சுக்ரீவனுக்குப் பதியானவர் இடையின் கீழ்ப் பக்கத்தைக் காக்கட்டும், ஹநுமந் பிரியர் மேல் தொடைகளைக் காக்கட்டும். (8)

ஸ்ரீ ரகுசிரேஷ்டர் கீழ்த்தொடைகளைக் காக்கட்டும், அரக்கர் குலத்தை நாசஞ்செய்தவர் இரகசியமான குஹ்யஸ்தலத்தைரக்ஷிக் கட்டும், சேது பந்தனம் செய்தவர் முழங்கால்களைக் காப்பாற் றட்டும், இராவணனை நாசம் செய்தவர் கால்களைக் காக்கட்டும். ()

𑌪𑌾𑌦𑍌 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌶𑍍𑌰𑍀𑌦𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌰𑌾𑌮𑍋𑌽𑌖𑌿𑌲𑌂 𑌵𑌪𑍁𑌃 ।
𑌏𑌤𑌾𑌂 𑌰𑌾𑌮𑌬𑌲𑍋𑌪𑍇𑌤𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂 𑌯𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑍀 𑌪𑌠𑍇𑌤𑍍 ।
𑌸 𑌚𑌿𑌰𑌾𑌯𑍁𑌃 𑌸𑍁𑌖𑍀 𑌪𑍁𑌤𑍍𑌰𑍀 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌵𑌿𑌨𑌯𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥௰॥
𑌪𑌾𑌤𑌾𑌲𑌭𑍂𑌤𑌲𑌵𑍍𑌯𑍋𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌶𑍍𑌛𑌦𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌃 ।
𑌨 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌪𑌿 𑌶𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌰𑌾𑌮𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 ॥ ॥௧௧॥
𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌰𑌾𑌮𑌭𑌦𑍍𑌰𑍇𑌤𑌿 𑌰𑌾𑌮𑌚𑌂𑌦𑍍𑌰𑍇𑌤𑌿 𑌵𑌾 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌨𑌰𑍋 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌪𑌾𑌪𑍈𑌰𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌂𑌦𑌤𑌿 ॥
𑌜𑌗𑌜𑍍𑌜𑍈𑌤𑍍𑌰𑍈𑌕𑌮𑌂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌰𑌾𑌮𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌃 𑌕𑌂𑌠𑍇 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑌸𑍍𑌥𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑌃 ॥ ॥௧௩॥
𑌵𑌜𑍍𑌰𑌪𑌂𑌜𑌰𑌨𑌾𑌮𑍇𑌦𑌂 𑌯𑍋 𑌰𑌾𑌮𑌕𑌵𑌚𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ।
𑌅𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌾𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌲𑌭𑌤𑍇 𑌜𑌯𑌮𑌂𑌗𑌲𑌮𑍍 ॥ ॥௧௪॥

விபீஷணருக்கு இராஜ்யம் கொடுத்தவர் பாதங்களைக் காக்கட்டும். ஸ்ரீராமர் ஸகல சரீரத்தையும் ஸம்ரக்ஷிக்கட்டும். இராமருடைய பலத்தோடு கூடிய இந்த ரக்ஷையை எந்தப் புண்ணியசாலி படனம் செய்கின்றானோ அவன், தீர்க்காயுள் சுகம் மக்கள் விஜயம் வணக்கம் இவைகளைப் பெற்று மேன்மை யடைவான். (10)

சொர்க்க மத்திய பாதாளம் இவைகளில் ஸஞ்சாரம் செய்பவர்கள், கபடமாகச் சஞ்சாரம் செய்பவர்கள், இராம ரக்ஷையினால் இரக்ஷிக்கப்பட்டவனைப் பார்க்கவும் சக்தியற்றவர்களாவர். (11)

இராம! இராம பத்திரா! இராம சந்திரா! என்று நினைக்கிறவர்கள் பாபரகிதர்களாகி இகலோக போகத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள். (12)

வல்லமையுள்ள முக்கியமான ஓர் இராம மந்திரத்தைக்கழுத்தில் அணிந்து கொண்டால், ஸகல சித்திகளையும் பெறுவான். (13)

இந்த, (வஜ்ர பஞ்சரம்) வஜ்ரக்கூடு என்ற பெயருள்ள ஸ்ரீராம கவசத்தைப் படனஞ் செய்தவன் தடை ஏற்படாத ஆக்ஞையுடன் எங்கும் ஜயத்தையும் மங்களத்தையும் அடைவான். (14)

ஆதிஷ்டவாந் யதா ஸ்வப்நே ராமரக்ஷாமிமாம் ஹர: |
ததா லிகிதவாந் ப்ராத: ப்ரபுத்தோ புதகௌசிக: ||

ராமோ தாசரதி: சூரோ லக்ஷ்மணாநுசரோ பலீ |
காகுத்ஸ்த: புருஷ: பூர்ண: கௌஸல்யேயோ ரகூத்தம: |
வேதாந்தவேத்யோ யஜ்ஞேச: புராணபுருஷோத்தம: |
ஜாநகீவல்லப: ஸ்ரீமாநப்ரமேயபராக்ரம: || ||௧௭||
இத்யேதாநி ஜபேந்நித்யம் மத்பக்த: ச்ரத்தயாந்வித: |
அச்வமேதாயுதம் புண்யம் ஸம்ப்ராப்நோதி ந ஸம்சய: ||

ஸந்நத்த: கவசீ கட்கீ சாபபாணதரோ யுவா |
கச்சந் மநோரதோऽஸ்மாகம் ராம: பாது ஸலக்ஷ்மண: ||

பரமசிவன் இராம ரக்ஷையைப் புதகௌசிகருக்கு ஸ்வப்னத்தில் உபதேசம் செய்தார். அந்தப் புதகௌசிகர் அதிகாலையில் தாம் உபதேசம் பெற்றபடி எழுதினார். (15)

1. இராமர், 2. தசரத குமாரர், 3, சூரர், 4 இலட்சுமணரோடு கூடியவர், 5. பலமுள்ளவர், 6. காகுஸ்தர், 7. புருஷர், 8. பூர்ணர், 9. கௌஸல்யைக்கு ஆனந்தத்தை விருத்தி செய்கிறவர் 10. வேதாந்தத்தினால் அறியத் தகுந்தவர், 11. யாகங்களுக்கு அதிபதி 12. புராண புருஷர்களுக்குள் சிரேஷ்டர் 13. ஜானகிக்குப்பதி, 14. ஸ்ரீமான், 15. அளவிறந்த பராக்கிரமமுள்ளவர் ஆகிய இந்த நாமங்களைப் பக்தி சிரத்தையுடன் எப்போதும் ஜபித்துவரின் பதினாயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனை நிச்சயமாக அடைவான். (16-18)

பக்தர்களைக் காக்க ஸன்னதம் உள்ளவர், கவசம் பூண்டவர், கத்தி தரித்தவர், வில் பாணம் இவைகளுள்ளவர், யௌவனமுள்ளவர், இலட்சுமணருடன் கூடியவர்—ஆகிய இராமபிரான் எங்கள் மனத்தின் இஷ்டம்போல் நடந்து காக்கக்கடவர். (19)

𑌤𑌰𑍁𑌣𑍌 𑌰𑍂𑌪𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍌 𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑍌 𑌮𑌹𑌾𑌬𑌲𑍌 ।
𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍌 𑌚𑍀𑌰𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌾𑌂𑌬𑌰𑍌 ॥௨௦॥

𑌫𑌲𑌮𑍂𑌲𑌾𑌶𑌿𑌨𑍌 𑌦𑌾𑌨𑍍𑌤𑍌 𑌤𑌾𑌪𑌸𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍌 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑍌 𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑍈𑌤𑍌 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌 ॥

𑌧𑌨𑍍𑌵𑌿𑌨𑍌 𑌬𑌦𑍍𑌧𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑍌 𑌕𑌾𑌕𑌪𑌕𑍍𑌷𑌧𑌰𑍌 𑌶𑍁𑌭𑍌 ।
𑌵𑍀𑌰𑍌 𑌶𑌂 𑌮𑌮 𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑌾𑌂 𑌤𑌾𑌵𑍁𑌭𑍌 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌 ॥

𑌶𑌰𑌣𑍍𑌯𑍌 𑌸𑌰𑍍𑌵𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍌 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑍁𑌷𑍍𑌮𑌤𑌾𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑌃𑌕𑍁𑌲𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑍌 𑌤𑍍𑌰𑌾𑌯𑍇𑌤𑌾𑌂 𑌨𑍋 𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑍌 ॥

𑌆𑌤𑍍𑌤𑌸𑌜𑍍𑌜𑌧𑌨𑍁𑌷𑌾 𑌇𑌷𑍁𑌸𑍍𑌪𑍃𑌶𑌾
𑌵𑌕𑍍𑌷𑌯𑌾𑌶𑍁𑌗𑌨𑌿𑌷𑌂𑌗𑌸𑌂𑌗𑌿𑌨𑍌 ।
𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌮𑌮 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾—
𑌵𑌗𑍍𑌰𑌤𑌃 𑌪𑌥𑌿 𑌸𑌦𑍈𑌵 𑌗𑌚𑍍𑌛𑌤𑌾𑌮𑍍 ॥ ॥௨௪॥

யௌவனம், அழகு, மிருதுவான, சரீரம், மிகுதியான பலம் தாமரைப் புஷ்பம் போன்ற கண்கள் இவைகளையுடையவர்களும் மரவுரி, மான்தோல் இவைகளை வஸ்திரமாக அணிந்திருப்பவர்களும். (20)

பழம் காய்கிழங்குகளை ஆகாரமாகக் கொள்கிறவர்களும் இந்திரியங்களை அடக்குகிறவர்களும் தவஞ்செய்கிறவர்களும் பிர்ம்ம ஸ்வரூபத்தைத் தரிசிப்பவர்களும் தசரத மகாராஜனது புத்திரர்களும் சகோதரர்களும் இராமர் இலட்சுமணர் என்ற பெயருள்ளவர்களும் வில்லை உடையவர்களும் இடைவாரில் கட்டப்பட்ட கத்தி உள்ளவர்களும் அழகான குடுமியுள்ளவர்களும் பிரசித்தர்களும் வீரியம் உள்ளவர்களுமான இராமலக்ஷ்மணர்கள் வழியில் காப்பாற்றட்டும். (21-22)

ஸகல பிராணிகளையும், காப்பாற்றத் தக்கவர்களும் ஸகல வில்லாளிகளுக்குள் சிறந்தவர்களும் இராக்ஷஸ குலத்தை நாசம் செய்தவர்களுமான அந்த இரகு சிரேஷ்டர்கள் இரக்ஷிக்கட்டும். ()

தயார் செய்யப்பட்ட விற்களையும் பாணங்கள் நிறைந்த அம்புறுத்தூணியையு முடையவர்களான இராமலட்சுமணர்கள் என்

𑌆𑌰𑌾𑌮𑌃 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌰𑌾𑌮𑌃 𑌸𑌕𑌲𑌾𑌪𑌦𑌾𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌮𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥

𑌰𑌾𑌮𑌾𑌯 𑌰𑌾𑌮𑌭𑌦𑍍𑌰𑌾𑌯 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌵𑍇𑌧𑌸𑍇 ।
𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌾𑌯 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 ॥ ॥௨௬॥

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌰𑌾𑌮 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 𑌰𑌾𑌮𑌰𑌾𑌮
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜 𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌰𑌾𑌮 𑌰𑌣𑌕𑌰𑍍𑌕𑌶 𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌰𑌾𑌮 𑌶𑌰𑌣𑌂 𑌭𑌵 𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮 ॥ ॥௨௭॥

𑌲𑍋𑌕𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌰𑌣𑌰𑌙𑍍𑌗𑌧𑍀𑌰𑌂
𑌰𑌾𑌜𑍀𑌵𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌰𑌘𑍁𑌵𑌂𑌶𑌨𑌾𑌥𑌮𑍍 ।
𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌕𑌰𑌂 𑌤𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ ॥௨௮॥

ளைக் காக்க முன் பக்கத்திலும் வழியிலும் எப்போதும் இருக்கட்டும். (24)

கற்பக விருக்ஷங்களுக்கு இருப்பிடமானவரும் ஸகல கஷ்டங்களைப்போக்குகின்றவரும் மூன்று உலகங்களுக்கும் அன்பைஅளிக்கிறவருமான கிருபையுள்ள இராமரே எனக்குப் பிரபு. (25)

இராமா, இராம பத்திரா, இராம சந்திர, வேதஸ, இரகுநாதா, நாதா, ஸீதாபதி என்ற பெயர்கள் அமைந்தவருக்கு நமஸ்காரம். ()

ஸ்ரீராமா! ஸ்ரீராம! இரகு நந்தன! இராம இராம! ஸ்ரீராம இராம! பரதருக்கு முன்பிறந்த இராம! இராம ஸ்ரீராம இராம! யுத்தத்தில் சமர்த்தராகிய ஏ இராம! இராம! ஸ்ரீராம! இராம! இராம! இராம! நீர் என்னை இரக்ஷிக்கவேண்டும். (27)

ஜனங்களுக்குச் சந்தோஷமுண்டாக்குகிறவரும் யுத்தகளத்தில் தைரியமுள்ளவரும் தாமரைப் புஷ்பம் போன்ற கண்களுள்ளவரும் இரகு குலத்திற்கு நாயகரும் கருணை வடிவானவரும் கருணைக்கு இருப்பிடமானவருமான அந்த ஸ்ரீராம சந்திரரை இரக்ஷிக்கிறவரென்று நானடைகிறேன். (28)

தக்ஷிணே லக்ஷ்மணோ யஸ்ய வாமே ச ஜனகாத்மஜா |
புரதோ மாருதிர்யஸ்ய தம் வந்தே ரகுநந்தனம் ||

கோஷ்பதீக்ருதவாரீஶம் மஶகீக்ருதராக்ஷஸம் |
ராமாயணமஹாமாலாரத்னம் வந்தே(அ)நிலாத்மஜம் || ||௩௦||

அபஸர்ப திஷ்ட தூரே த்வம் பாபவ்யாதிஶ்ச தூரத: |
ஸர்வதா ஹ்யஸ்மாகம் ஹ்ருதி ராமோ யதஸ்ஸ்தித: ||௩௧||

மனோஜவம் மாருததுல்யவேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம் |
வாதாத்மஜம் வானரயூதமுக்யம்
ஸ்ரீராமதூதம் ஶரணம் ப்ரபத்யே || ||௩௨||

ராமராம தவ பாதபங்கஜம்
சிந்தயாமி பவபந்தமுக்தயே |

வலது புறத்தில் இலக்ஷ்மணரும் இடது பாகத்தில் ஸீதா தேவியும் முன் புறத்தில் ஹநுமானுமாகவுள்ள ஸ்ரீராமரை நமஸ்கரிக்கின்றேன். (29)

சமுத்திரத்தைப் பசுவின் குளம்படியாகக் கொண்டவரும் அரக்கர்களைக் கொசுக்களுக்குச் சமானமாக எண்ணியவரும் இராமாயணமாகிய சிலாக்யமான மாலைக்கு இரத்தினம்போல் பவருமான அந்த வாயுநந்தனனை நமஸ்கரிக்கின்றேன். (30)

ஏ பாபக் கூட்டமே! எட்டி நில்லு! ஏ வியாதிகளே! நீங்களும் எட்டி நில்லுங்கள்; எங்கள் மனத்தில் விளங்குகையுமான ஸ்ரீராமர் எப்போது மிருக்கின்றார். (31)

மனோவேகம் போன்ற வேகமுள்ளவரும் வாயு பகவானுக்குச் சமமான வேகமுள்ளவரும் இந்திரியங்களை ஜயித்தவரும் புத்தி உள்ளவர்களுக்குள் சிறந்தவரும் வாயுவுக்குப் பிள்ளையும் வானரசிரேஷ்டர்களுக்குள் சிரேஷ்டரும் ஸ்ரீராமதூதருமான ஹநுமாரைச் சரணமாக அடைகின்றேன். (32)

வந்திதம் ஸுரநரேந்த்ரைர்ஹி—
த்யாயிதம் சரணம் யோகிபி: ஸதா ‖ ‖௩௩‖

ராமம் லக்ஷ்மணபூர்வஜம் ரகுவரம்
ஸீதாபதிம் ஸுந்தரம்
காகுத்ஸ்தம் கருணார்ணவம் குணநிதிம்
விப்ரப்ரியம் தார்மிகம் |
ராஜேந்த்ரம் ஸத்யஸந்தம் தசரததநயம்
ஶ்யாமளம் ஶாந்தமூர்த்திம்
வந்தே லோகாபிராமம் ரகுகுலதிலகம்
ராகவம் ராவணாரிம் ‖ ‖௩௪‖

இமானி ராமநாமானி ப்ராதருத்தாய ய: படேத் |
அபுத்ரோ லபதே புத்ரம் அதநீ லபதே தநம் ‖

ஏ இராம! இராம! தேவர்களும் அரசர்களும் சிரோபூஷணமாகக்கொள்வதும், யோகீசுவரர்கள் தங்கள்மனதில் எப்போதும் தியானிப்பதுமான உமது சரணாரவிந்தத்தை ஸம்ஸாரபந்தம் நீங்குவதன்பொருட்டுத் தியானம் செய்கின்றேன். (33)

இலட்சுமணருக்கு முன் உண்டானவரும், இரகுவம்சத்தில் பிறந்த அரசர்களுக்குள் சிரேஷ்டரும், சீதைக்குப் பதியும் அழகுள்ளவரும், காகுஸ்தவம்சத்தில் உண்டானவரும், கருணைக்கு இருப்பிடமானவரும், குணங்களுக்கு நிதியானவரும், பிராம்மணர்களிடம் அன்புள்ளவரும், தருமகுண சீலரும் அரசர்களுக்குள் சிரேஷ்டரும் ஸத்தியம் தவறாதவரும், தசரத மகாராஜரின் பிள்ளையும், சியாமளவர்ண முள்ளவரும், ஜனங்களை ஆனந்திக்கச் செய்பவரும், இரகு குலத்திற்குத் திலகம் போன்றவரும், இரகு வம்சத்தில் பிறந்தவரும், இராவணனுக்குச் சத்துருவுமான ஸ்ரீராமரை நமஸ்கரிக்கின்றேன். (34)

இந்த இராமநாமங்களை விடியற்காலத்தில் எழுந்து எவன் படனம் செய்கின்றானோ அவன் பிள்ளை இல்லாதவனாயின் பிள்ளையையும் திரவியமில்லாதவனாயின் திரவியத்தையும் அடைவான். (35)

𑌮𑌾𑌤𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌤𑍍𑌪𑌿𑌤𑌾 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃
𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌤𑍍𑌸𑌖𑌾 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌮𑍇 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌦𑌯𑌾𑌲𑍁𑌰𑍍—
𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌜𑌾𑌨𑍇 𑌨𑍈𑌵 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌜𑌾𑌨𑍇 ॥

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌨𑌾𑌮𑌾𑌮𑍃𑌤𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌬𑍀𑌜𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑍀 𑌚𑍇𑌨𑍍𑌮𑌨𑌸𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 ।
𑌹𑌾𑌲𑌾𑌹𑌲𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌲𑌯𑌾𑌨𑌲𑌂 𑌵𑌾
𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌵𑌿𑌶𑌤𑌾𑌂 𑌕𑍁𑌤𑍋 𑌭𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀 𑌶𑌬𑍍𑌦𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌜𑌯𑌶𑌬𑍍𑌦𑌯𑍁𑌕𑍍𑌤𑌂
𑌜𑌯𑌦𑍍𑌵𑌯𑍇𑌨𑌾𑌪𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑍋 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌨𑌾𑌮
𑌜𑌪𑌨𑍍𑌨𑌿𑌹𑌨𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍋𑌟𑌿𑌹𑌤𑍍𑌯𑌾𑌃 ॥ ॥௩௮॥

எனக்குத் தாய் இராமர், தகப்பன் இராமர்; அண்ணன் தம்பிகளாக இருப்பவரும் இராமர்; தோழனும், இரகுகுலத்தில் பிறந்தவர்களுக்குள் சிரேஷ்டராகிய இராமரே. எனக்கு ஸகல தனமும், தயையுள்ள இராமசந்திரர் தான். வேறுதெய்வத்தை நான் அறியவில்லை. (36)

இராமருடைய நாமமாகிய அமிருதமந்திர ஸஞ்சீவனி என்னும் ஓஷதியானது மனத்திற் புகுந்திருந்தால், ஆலாஹால விஷத்தையோ பிரளயகால நெருப்பையோ அல்லது யமன் முகத்தையோ அடைந்திருப்பினும் பயம் ஏது? (37)

ஸ்ரீ என்ற சப்தத்தை முன் சொல்லி இராம என்றும், ஜய என்ற சப்தத்தை முன்சொல்லி இராமவென்றும் ஜயஜயவென்று இரண்டுதடவை முன்சொல்லி மறுபடியும் இராம என்றும் இவ்விதம் இருபத்தொருதடவை சொன்னால் [அதாவது இராமஜயராம ஜயஜயராம] கோடி பிர்மஹத்தி தோஷமும் விலகிவிடும். (38)

ஏ பார்வதி! இவ்விதம் நான் முன் என் ஐந்து முகங்களினால் விசுவாமித்திர முனிவருக்கு உபதேசம் செய்திருக்கும் இராம

ரக்ஷை என்னும் ஸ்தோத்திரத்தை உனக்கு உபதேசம் செய்தேன்" என்று பரமசிவன் கூறினார்.

இராமதாஸர் கூறுகிறார்.

இவ்வாறு பரமசிவனிடம் உபதேசம்பெற்ற பர்வத ராஜன் புத்திரியாகிய பார்வதி இராமரக்ஷையைப் பாராயணம் செய்து சுப்பிரமணியசுவாமிக்கு இரக்ஷை செய்தாள்.

அந்த இராமரக்ஷையின் பலத்தினால் தாரகாசுரனை ஸ்கந்தர் சங்காரம் செய்து தமது காரியங்களை முடித்துக்கொண்டார். சர்வ பயமும் நீக்கக்கூடிய இராமரக்ஷையைத் தான் நானுனக்குக் கூறினேன். வான்மீகி முனிவரும் இந்த மந்திரத்தினால்தான் குசனுக்கு ரக்ஷை செய்தார். பாலர்களுடைய துஷ்ட கிருகங்களை விலக்குவதும் பாபங்களைப் போக்குவதும் புண்யங்களைக் கொடுப்பதுமான இந்த மந்திரத்தை ஜபம்செய்ய வேண்டும். வேறு ஸ்தோத்திரங்கள் இதனிலும் புண்யமும் சிரேஷ்டமுமாகா. இது சத்தியம்" என்றார் இராமதாஸர்.

இராமரக்ஷையின் மகிமையைக் கூறும்
ஐந்தாவது சருக்கம்
முற்றிற்று.

6 வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஒருநாள் ஜானகிதேவி வான்மீகி முனிவரைப் பார்த்து "ஐயா! இராமசந்திரருடைய சேர்க்கையை அடைவதற்கு நான் அநுஷ்டிக்க வேண்டிய விரதத்தைக் கூறவேண்டும்" என்று வினவினாள். முனிவர்பிரான் ஜானகியைப் பார்த்து "ஜானகீ! ஒரு விரதமிருக்கின்றது. அந்த விரதத்தைச் சுக்லபக்ஷம் பிரதமை முதல் நவமி வரையில் அநுஷ்டிக்க வேண்டும். அதைக் கூறுகிறேன் கேள்—

சொர்ணத்தால் இரகுநந்தனருடைய பாதுகைகளைச் செய்து பிரதமை திதியன்று ஒன்பது தாமரைப் புஷ்பங்களைக் கொண்டு மந்திரங்களைச் சொல்லிப் பூஜை செய்யவேண்டும். பிறகு உன் குமாரர்கள் குசலவர்கள்வாயிலாக இந்த ஜன்மகாண்டத்தைச்சிரவணம்செய்யவேண்டும். துவிதியை திதியன்று பதினெட்டுத்தாமரைப் புஷ்பங்களால் பூஜித்துப் பிறகு இந்த ஜன்மகாண்டத்தை இருமுறை கேட்கவேண்டும். ஸ்திரீகளுக்குப் புருஷனைத் தவிர வேறு தெய்வமில்லை. இவ்வாறு ஒவ்வொரு நாளும் முதல் நாள் செய்ததைவிட ஒன்பது தாமரைப் புஷ்பம் அதிகமாக எடுத்துப் பூஜைசெய்து ஜன்மகாண்டத்தையும் ஒருமுறை யதிகமாகக் கேட்டுவா; கடைசியில் நவமிதிதியன்று எண்பத்தொரு தாமரைப்புஷ்பங்களைக்கொண்டு பூஜித்து ஒன்பதுதடவை ஜன்மகாண்டத்தைக் குசலவர்கள் முகமாகக்கேள்; பிறகு தசமிதிதியன்று ஸ்நானஞ்செய்து எண்பத்தொரு பிராம்மண தம்பதிகளுக்கு வஸ்திராபரணங்களளித்துத் தக்ஷிணைகொடுத்து, அவர்களை வணங்கிப் பிரார்த்தனை செய்துகொண்டால், இவ்விரதம் முடிவுபெறும். வைதேகி! இவ்விரதத்தைச்செய்து ஜன்மகாண்டத்தைக் கேட்டால் நீ சீக்கிரமாக உன்பதியை யடைவாய். ஸம்யோககரணம்—(சேர்க்கையுண்டாக்குவது) என்னும் பெயருள்ளதும் விசேஷபுண்ணியமுள்ளதுமான இவ்விரதத்தைச் செய்பவர்கள் விட்டுப் பிரிந்தவர்களோடு சேர்வார்கள்" என்றார். சீதாதேவி அவரைப்பார்த்து "முனிவர் பெரு

மானே! அயோத்தியில் ராமதீர்த்தத்தில் அநேக தாமரைப்புஷ்பங்களிருக்கின்றன. அங்குச்செல்ல யார் சக்தியுள்ளவர்? பூந்தோட்டத்தின்கண்ணுள்ள இராமதீர்த்தத்தை இராமதூதர்கள் அவரது உத்தரவுப்படி காவல் புரிகின்றனர்" என்றாள். இதைக்கேட்டதும் பிராட்டியாரினருகே நின்ற ஐந்து வயதுள்ள லவன் தன்னுடைய தாயாரைப்பார்த்து, "அம்மா தாங்கள் விரதத்திற்கு யத்தனம் செய்யலாம். தாமதமின்றித் தாமரைப் புஷ்பங்களைக் கொண்டுவருகிறேன்" என்று கூறினான். இப்படித் தன்குழந்தை கூறியதைக்கேட்டதும் சீதாதேவி அவனைக்கட்டித்தழுவி முத்தமிட்டு "லவா! அந்த இராமதீர்த்தம் அளவற்ற தூதர்களால் காக்கப்பட்டு வருகின்றது; அங்கு நீஎவ்விதம் பிரவேசித்துப் புஷ்பம் பறித்து வருவாய்" என்றாள். "லவன் அன்பார்ந்த என் தாயே! நான் தங்களது முலைப்பாலருந்தி வளர்ந்தவனாதலாலும், வான்மீகி முனிவரிடமிருவில்வித்தைக் கற்றவனாதலாலும் முனிவர்களின் ஆசீர்வாதம் பெற்றிருப்பதாலும் இராமரிடம் எனக்குப்பயமில்லை; எனது பராக்ரமத்தை இப்போது பாருங்கள்; தயைசெய்து விடைகொடுத்தனுப்புங்க" ளென்று தன் தாயாரையும் வான்மீகி முனிவரையும் பார்த்துக்கேட்டான். பிராட்டியாரும் வான்மீகி முனிவரும் உடனே லவனை ஆசீர்வதித்துப் போய்வரும்படி உத்தரவிட்டார்கள். லவன் வெகு சந்தோஷத்துடன் நல்லவஸ்திரமுடுத்து வில் அம்புறாத்தூணி இவைகளுடன் இரதத்தின்மீது தானொருவனாகவே ஏறி, லக்ஷ்மியாகிய சீதாதேவியில்லாத அயோத்திக்கு வந்து கூப்பிடுதூரத்திற்கு முன் தேரைநிறுத்திக் கால்நடையாகத் தோட்டம் வந்தான். இப்பொழுது நடுப்பகலாயிருந்தமையால், காவலாளிகள் போஜனத்துக்குச் சென்றிருந்தனர். லவன் யாதொரு தடையுமின்றி இராம தீர்த்தத்திலிறங்கிப் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு தன் தேரின் மீதேறி ஆச்ரமம் வந்து முனிவரையும் தாயாரையும் நமஸ்கரித்துத் தாமரைப்புஷ்பங்களைக் கொடுத்தான். சீதாபிராட்டி மிகுந்த சந்தோஷத்துடன் விரத மனுஷ்டிக்கத் தொடங்கி, நடத்திவந்தாள். குழந்தையாகிய லவன் இவ்விதம் ஏழுநாள் வரையில், தாமரைப்புஷ்பங்களைப்பறித்துக் கொணர்ந்து

கொடுத்தான். எட்டாவது நாள், வழக்கம் போல் சென்று புஷ்பம் பறித்து இரதத்தில் ஏறப்போகும் தருணத்தில், அவனைக்காவலாளிகள்கண்டு, "அப்பா நீயார்? இராமபிரானுடைய வேலைக்காரர்களுக்குள் உன்னை நாங்கள் பார்த்ததில்லையே. எப்பொழுது முதல் கொண்டு நீ பிரபுவுக்கு ஊழியம் செய்துவருகிறாய்?" என்று கேட்டார்கள். இப்படிக்கேட்டதும் லவன், சிரித்து "நான் இராமனைப் பார்த்ததில்லை. நான் வான்மீகிமுனிவரைச் சேர்ந்தவன். அம்முனிவரின் உத்தரவால் இங்கு நாடோறும் புஷ்பம் பறித்துக்கொண்டு போகிறேன். இன்று தான் உங்களைப்பார்த்தேன்" என்றான். காவலாளர் சினமடைந்து, நீ இராமனைப் பார்க்கவுமில்லை; எங்களைக் கேட்கவு மில்லை; இராமபிரானது உத்தரவின்றித் தினந்தோறும் புஷ்பங்களைக் கொண்டுபோகிறாய்; இப்பொழுது நீ போகக்கூடாது; நில்; "நீ இராமருக்குக் குற்றஞ் செய்தவன்; பிரபுவிடம் உன்னைக் கொண்டுபோக வேண்டும்" என்றுரைத்து அவனைத் தடுத்தார்கள். தன்னைத் தடுத்த தூதர்களைப்பார்த்து லவன் சிரித்து, "நீங்கள் இராமரிடம் சென்று என் நடத்தையைத் தெரிவியுங்கள். அவருக்குப் பராக்கிரம மிருக்குமானால் நிச்சயமாய் என்னிடம் வருவார்" என்று தேரின்மீதிருந்தே தெரிவித்தான். இந்தவார்த்தையைக் கேட்ட தூதர்கள், கோபத்துடன் "குழந்தாய்! நீ இறப்பதில் விருப்பங்கொண்டவனாகக் காணப்படுகின்றாய். இன்றேல் இவ்விதம் பிதற்றமாட்டாய்! இப்போது நாங்கள் உன்னைக்கட்டி இராமபிரானிடங்கொண்டு போவோம்" என்று கூறித் தேருக்குச்சமீபம்வந்தார்கள். தன்சமீபத்தில் வந்த இராமதூதர்களைப்பார்த்த லவன், வில்லைக்குணத்தொனிசெய்து, நாணேற்றிப் பாணங்களைப்பூட்டி, "தூதர்களே! என்சமீபம் வரவேண்டாம்; தூரவே நில்லுங்கள். வருவீர்களேயாயின் இந்த பாணங்களால் உங்களை இராகவன்முன் செல்லும்படி செய்வேன்" என்று சொன்னான். இவ்விதம் சொல்லியும் அந்தத் தூதர்கள் மறுபடியும் தன்னைக்கட்ட அருகில்வரவே; அவர்களை அந்தயாகசாலையிலேயே பாணங்களினால் தள்ளினான். தூதர்கள் லவன்விட்ட பாணத்தினால் அடிபட்டுக் காங்கா நதிக்கரையில் இராமருக்குமுன் மூர்ச்சித்து விழுந்தார்கள். சிலர் லவனைப்பார்த்து பயந்து ஓடினார்கள்.

பிறகு லவன் ஆச்ரமம் வந்து, புஷ்பங்களைச் சீதையிடம் கொடுத்து நடந்த வரலாற்றைக் கூறினான். அந்தத் தூதர்களும் மூர்ச்சை தெளிந்தெழுந்து நடந்த வரலாற்றை இராமரிடம் தெரிவித்து முறையிட்டார்கள். இராமச்சந்திரர் ஆச்சரியப்பட்டுத் தோட்டக்காவலுக்கு ஆயிரம் தூதர்களை யனுப்பினார். பிறகு லவனும் முன்போல் நவமிதிதியன்று அயோத்திக்கு வந்தான். அவனைக் கண்டதும் இராமருடைய காவலாளிகள் ஆயிரம் பேர்களும் யுத்தஞ்செய்ய யத்தனிப்பதும்பொழுது அவர்களைநோக்கி, "ஏ காவலாளிகளே! உங்கள் எஜமான் எப்பொழுது சீதையைக் காட்டில்விடக் கட்டளையிட்டனரோ அது முதல் உங்களிடமிருந்த ஜயலட்சுமிபோய் விட்டாள். ஆகையால் வாய் பேசாமல் இராமரிடம் செல்லுங்கள்; சீதையைப் பிரிந்ததினால் உங்கள் இராமருக்கும் வீரியம் போய்விட்டது" என்றுரைத்தான். பாணங்கள் போன்ற இப்படிப்பட்ட லவனுடைய வார்த்தைகளால் மனந்தளர்ந்து மிகக் கோபமடைந்த அத்தூதர்கள் லவன்மீது பாணங்களைப் பொழிந்தார்கள். லவன் அதைக்கண்டதும் வில்லைக் குணத்தொனிசெய்து பாணங்களைப் பிரயோகித்து அவர்களை முன்போல் இராமபிரான் முன்பு விழும்படி செய்து, தாமரைப் புஷ்பங்களுடன் ஆச்ரமம் சென்று நடந்த வரலாற்றைக் கூறினான். குழந்தையின் சௌரியங்களைக்கேட்ட ஜானகி சந்தோஷமடைந்தாள். இராமதூதர்கள் பிறகு மூர்ச்சை தெளிந்து லவனுடைய பாணங்களால் அடிபட்டு நொந்த சரீரத்துடன் இராமபிரானைப்பார்த்து "பிரபுவே! ஒரு அபூர்வமான வேடிக்கை, இதைக் கவனமாய்க் கேளுங்கள்; ஐந்து வயதுள்ள சிறுவனால் நாங்கள் இப்போது மிகுந்த அவமானமடைந்தோம். அவன் வான்மீகி முனிவரிடம் வில்வித்தை பயின்றவன், இலட்சுமணர் முதலியவர்களையும் ஜயிக்கத்தக்க ஆண்மையுள்ளவன், தாங்கள் சீதையைக் காட்டில்விட்டது முதலியவற்றைக் கூறி நம்மைத்தூஷிக்கிறான். ஆகையால் அவனைக் கொல்வதற்கு இப்போதே தாங்கள் உபாயந்தேடவேண்டும்" என்று முறையிட்டார்கள். தூதர்கள்சொல்லைக்கேட்டதும் இராமர் மந்திரிகளுடன் ஆலோசனைசெய்து, வான்

மீகி முனிவருக்குத் தூதனை அனுப்பினார். தூதன் ஆச்ரமம் சென்று முனிவரைப்பணிந்து, "முனிவரே! நான் இராமபிரானுடைய தூதன். இராமர் தாம் செய்யும் யாகத்திற்குத் தங்களை யழைக்க மறந்து போனதைப்பற்றி மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார். உங்களுடைய மாணவர்களில் மிகவும் குரூரனான ஒருவன் இராமபிரானுக்குக் குற்றம் செய்திருக்கிறான். அந்தமாணவனை இராமபிரானிடம் இப்பொழுது அனுப்பவேண்டும்; அல்லது நீர் அவனை யழைத்துக்கொண்டு வரவேண்டும்; இவைகளை இராமபிரான் தங்களிடம் தெரிவிக்கும்படி கூறியவை" என்றான். முனிவர் "அப்பா! நான் எனது இரண்டு மாணவர்களுடனும் யாகத்திற்குவருகின்றேன். நீ முந்திச் செல்" என்று கட்டளையிட்டார். தூதன் உடனே அங்கிருந்து திரும்பி இராமரிடம் வந்து அவரை நமஸ்கரித்துச் சங்கதிதெரிவித்தான். உலக விவகாரப்படி அநுஷ்டானஞ்செய்து வரும் இராமர் இவ்வாறு நடக்கப்போகிற தென்று தெரிந்தே, மாணவர்களுடன் வான்மீகிமுனிவரை யாகத்திற்குமுன் அழைக்கவில்லை. சீதாதேவிக்கும் அவள் எடுத்துக்கொண்ட விரதம் இப்போது முடிவாயிற்று.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பரம குருவே! இந்த விதிப்படி செய்யச் சக்தியற்றவர்கள் இவ்விரதத்தை எவ்விதம் செய்வது? தயைசெய்து கூறவேண்டும்.

இராமதாஸர் கூறுகிறார்.

சுவர்ணம், அல்லது வெள்ளி இல்லையாயின் தாம்பிரம் முதலிய லோகங்களில் எதனாலாவது சக்திக்குத் தக்கபடி இராமருடைய பாதுகையைச்செய்து, தாமரைப் புஷ்பங்களில்லாவிடில், மற்ற எந்தப் புஷ்பத்தைக் கொண்டாவது, பாதுகைகளைப் பூஜித்து, முற்கூறிய எண்பத்தொரு தம்பதிகளைப் பூஜிக்கச் சக்தியில்லாவிடில், ஒன்பது தம்பதிகளையாயினும் பூஜை செய்யவேண்டும். அதற்குச் சக்தியில்லையாயின், ஒன்பதுக்குக் குறைந்த எவ்வளவு தம்பதிகளைப் பூஜை செய்ய முடியுமோ அவ்வளவு தம்பதிகளைப் பூஜித்து, கைப்பொருளைச்செலவு செய்ய மனமில்லாதவரா யிராமல்

சக்திக்குத் தக்கபடி அவ் விரதத்தைச் செய்தால் வெகுதூரத்திலிருக்கும் பந்துக்களுடன் சேர்க்கையுண்டாவதுமன்றிக் கோரிய காரியங்கள் விரைவாகவும் சிலாக்கியமாகவும் பூர்த்தியாகும் இது நிச்சயம்" என்று கூறினார்.

பந்துக்களின் சேர்க்கை யுண்டாக்கும் விரதத்தைக் கூறும்.

6-வது சருக்கம்.

முற்றிற்று.

7-வது சருக்கம்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஏ விஷ்ணுவிதாஸ! பிறகு தரும சிந்தனையுள்ள இராமபிரான் தாம் செய்ய யத்தனித்த நூறாவது அசுவமேதயாகத்தில் வழக்கம் போல் பூப்பிரதக்ஷிணம் செய்யக் குதிரையை யனுப்பி, அதற்குப் பின் சத்ருக்னனை அதைக்காத்து வருவன் பொருட்டு அனுப்பினார்.

அக் குதிரையானது தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு இத்திக்குகளில் சஞ்சரித்துவிட்டு யாகசாலைக்குத் திரும்பிற்று. சத்ருக்னன் அநேக அரசர்களிடம் மிகுந்த த்ரவியத்தை ஸம்மானமாகப் பெற்று அவ்வரசர்களுடனும் பதினொரக்கணக்கான இரத கஜதுரகபதாதிகளுடனும் குதிரைக்குப் பின்வந்தான். யாகத்திற்கோ இராஜரிஷிகள், பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் எல்லோரும் வந்து கொண்டிருந்தார்கள். வான்மீகி முனிவரும் சீதையுடனும், இராமாயண கானம் செய்யும் குசலவர்களுடனும் வந்தார். அரசர் கூட்டங்களில் யாவரும், பல்லக்கில்வரும் சீதையை இன்னாரென்று கவனிக்கவில்லை. சீதைவருவதை அவர்களறியார்கள். இவ்விதம் முனிவர் வந்து யாகசாலைக்கு இரண்டு கூப்பிடு தூரத்திற்கப்பால், பர்ணசாலை ஏற்படுத்திக்கொண்டு அங்குச் சீதையை வைத்து யாருமறியாவண்ணம் பாதுகாத்துக்கொண்டு குசலவர்களுடனிருந்து வந்தார். ஜனகமகாராஜனும் சுமேதையுடன் யாகத்திற்கு வந்து அரசர்கள் தங்குமிடத்தில் தங்கினார். பிறகு வான்மீகி முனிவர், அநேக ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டும் ஜடை, மரவுரி, மான்தோல்களைத் தரித்துக் கொண்டுமிருக்கிற அதிபுத்திசாலிகளான சீதையின் குமாரர்களை பார்த்து, "குழந்தைகளே! நீவிரிருவரும் தெருக்களில் இராமாயணத்தைக் கானம் செய்துகொண்டு போகும்போது இராமர் கேட்க விரும்பினால் ஜன்மகாண்டம்வரையில் கானஞ்செய்யுங்கள். மற்றக் காண்டங்களை நான் சொன்னபிறகு கானம் செய்யலாம். ஏதாவது திரவியம் முதலியவைகளை இராமர் உங்களுக்குக்கொடுத்தால், நீங்கள் வாங்கவேண்டாம்" என்று ஆக்ஞாபித்தார். அவ்விருவரும் முனிவர், தங்களுக்கு முன் உபதேசித்தபடிபேகானஞ்செய்து சஞ்

சரித்துவந்தார்கள். அபூர்வமான விருத்தம், ஸ்லோகம், பாட்டு முதலிய வைகளோடுதாம் முன் நடந்து காட்டிய சரித்திரத்தைக் கேட்ட இராமர், சந்தோஷத்துடன் யாககாரியங்கள் நடக்கும் போது நடுவே முனிவர்கள், அரசர்கள், பட்டணத்திலுள்ளவர்கள், புத்திமான்கள், பௌராணிகர்கள், சாஸ்திரம் படித்தவர்கள், கணக்கர்கள், வைத்தியர்கள், அனேக வித்தைகளில் பயிற்சிபெற்றவர்கள், பெரியோர்களாகிய பிராமணர்கள் இவர்களைப் பூஜித்து அவ்வாறு கானஞ்செய்கிறவர்களை யாகசாலைக்கு வரவழைத்தார். அச்சமயத்தில் அரசர்கள் பிராமணர்கள் எல்லோரும் பரமானந்தத்துடன் இராமரையும் அந்தக் குழந்தைகளையும் இமை கொட்டாமல் பார்த்து ஆச்சரியப்பட்டு ஒருவருக்கொருவர், இவ்விருவரும் இராமருக்கு ஒப்பாக விளங்குகிறார்களல்லவா? இவர்கள் இராம தேகமாகிய பிம்பத்திலிருந்து உண்டான பிம்பங்கள் போல் காணப்படுகின்றார்களன்றோ? இவ்விருவருக்கும் ஜடை மரவுரி மாந்தோல் இவைகளில்லாவிடில் இராமருக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லையென்றே கூறவேண்டுமல்லவா?" என்று பேசிக் கொண்டிருந்தார்கள். இச்சமயம் இராமதூதருள் ஒருவன் லவனுடைய பாணங்களால் தானடைந்த உபத்திரவத்தை நினைத்துக்கொண்டு யாகசாலையிலிருக்கும் இராமரிடம் வந்து லவனை விரலினால் காட்டி "இராமசந்திர பிரபுவே! இவனைப்பாருங்கள், இவன் தான் எங்களைப் பாணங்களாலடித்துத் தங்களருகில் எங்களைத் தள்ளியது மன்றி ஸீதையைக் காட்டுக்கனுப்பியது முதலான விஷயங்களைக் கூறி நிந்தித்து, சுவர்ணகாந்தியுள்ள தாமரை புஷ்பங்களைக்கொண்டு போனவன். தங்களுடைய சமீபத்தில் இப்போது வந்திருக்கிற இவன் நீங்கள் தண்டனை செய்வீர்களென்றஞ்சி முன் தான் கொண்டிருந்த வேஷத்தை மாற்றிக்கொண்டு இரதம் வஸ்திரம் ஆபரணம் அம்புறை பாணங்கள் இவைகளின்றி மரவுரி முதலியவைகளைத் தரித்துக் கொண்டு ஏழைபோல் காணப்படுகிறான். இப்போது தாங்கள் இவனுக்குத் தண்டனைசெய்பதல் வேண்டும்" என்றான். இதைக்கேட்ட இராமர் அன்புடன் அமிர்தப்ரவாகத்தில் மூழ்கிய கண்களால்

குழந்தைகளைப் பார்த்தார். பாலர்களாகிய குசலவர்கள் சபையி லுள்ள பெரியோர்களைக் கிரமப்படிவணங்கிப் பிறகு இராமனையும் தங்கள் சிறிய தந்தையரையும் வசிஷ்டமுனிவரையும் நமஸ் கரித்து திவ்ய வீணைகளை மீட்டிக்கொண்டு கானம் செய்யுமிடம் சென்று கந்தர்வர்கள்போல் அழகாகப் பாடுவதற்கு யத்தனம் செய்தனர்.

இராமசந்திரர் அவர்களுடைய கானத்தின் முகமாகத் தாம் முன்பு சீதையோடு நடத்திய விஷயங்களை விலாஸகாண்டம் வரை யில் கேட்டார். பிறகு பகற்பொழுதானதும் அக்குழந்தைகளை இராமபிரான் மலர்ந்த முகத்துடன்பார்த்து இன்று நேரமாயிற்று. நாளைக்காலை என்னருகே வந்து பாக்கிக்கதைகளையும் கானம் செய்யுங்களென்று உத்தரவிட்டார். குசலவர்கள் அப்படியே செய்கிறோமென்று ஒப்புக்கொண்டார்கள். பிறகு இராமர் அவ னைப் பார்த்து "லவா! நீ எனக்குக் குற்றஞ் செய்திருக்கிறாய்; ஆயினும் நீ இப்பொழுது பாடிய உன் கானத்தின் மூலமாக என் கதையைக்கேட்டு சந்தோஷமடைந்தேன். ஆகையால் உன் குற் றம் மன்னிக்கப்பட்டது. நீ எங்கும் பயமில்லாமல் சஞ்சரிக்க லாம்" என்றார். லவன் உடனே இராமமூர்த்தியைப்பார்த்து "இராம சந்திர பிரபுவே! தங்களைப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு தங்களுக்குக் குற்றமிழைத்தேன். நான் எண்ணியபடி யே இப்பொழுது தங்களைப் பார்த்தேன். அதனால் எனக்கு இப் பொழுது பராக்ரமம் உண்டாயிருக்கிறது. தங்களுக்கு முன்பு கானஞ் செய்ததன் நிமித்தம் கீர்த்தியும் ஏற்பட்டது" என்று கூறி மௌனமாயிருந்தான். பிறகு குசன் லவன் இவ்விருவரும் முனி வரிடம் செல்ல விருப்பங்கொண்டு புறப்பட்டனர். அதை யறி ந்த இராமபிரான் பரதனைக்கொண்டு அவர்களுக்குப் பதினாயிரம் பவுன்கொடுக்கும்படி ஆக்ஞாபித்தார். அச்சிறுவரிருவரும் பரதர் வார் கொடுத்த பொருளை வாங்காமல் "அரசனே! நாங்கள் காட் டிலுள்ள காய், கனி, கிழங்கு முதலியவைகளைப் புசிக்கிறவர்கள். எங்களுக்கு இப்பொருளால் பிரயோசனம் என்ன? தாங்கள் எப் போதும் எங்களைக் கருணையுடன் பாதுகாக்கவேண்டும்" என்று

தெரிவித்துவிட்டு வான்மீகி முனிவரிடம் வந்தார்கள். இராமபிரான் தமது சரித்திரத்தைக் கேட்டதனால் மிகவும் மகிழ்ந்தார். குசன் தன தாயாரிடம் நடந்த சங்கதிகளைத் தெரிவித்துவிட்டுக் கங்கா நதிக்கு ஸ்நானம் செய்யச் சென்றான். லவன் அநேக முனிபாலர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்த யாகக் குதிரையைப் பிடித்து ஆச்ரமத்திற் கருகாமையில் ஒரு மரத்திற் கட்டிவிட்டு மறுபடியும் முனிபாலர்களோடு விளையாடினான். பிறகு ஆகாயமார்க்கத்தில் புஷ்பக விமானம் வந்தது. அந்த விமானத்தில் வரும் சத்ருக்நன் குதிரை கட்டியிருப்பதைப்பார்த்து நகைத்து தன் தூதர்களை நோக்கி, “குதிரையை அவிழ்த்து விடுங்கள்” என்று உத்தரவு கொடுத்தான். அவர்கள் குதிரையை அவிழ்த்து விட வருகையில் லவன் கண்டு அக்ஷணமே ஒரு வில்லை யெடுத்து வாயு தேவதையின் மந்திரத்தை ஜபித்து பாலர்களுடன் விளையாடிக்கொண்டே பிரயோகஞ்செய்தான். அப்பொழுதேயுண்டான சுழல்காற்றால் ரதகஜதுரக பதாதிகள் நிறைந்திருந்த அந்தப்புஷ்பக விமானமானது ஆகாயத்தில் வண்டிபோல் சுழன்றது. இச்சங்கதியை இராமசந்திரர் கேட்டு விரைவாக சுக்ரீவன் அங்கதன் நீலன் மைந்தன் ஜாம்பவான் நளன் சுமந்திரன் பரதன் ஹநுமான கருடன் விபீஷணன் சுஷேணன் இவர்களையும் இவர்களுக்குரிய சேனைகளையும் த்விவிதன் ததிவக்த்ரன் மகரத்வஜன் இவர்களையும் மற்றுமுள்ள வானரர்களையும் அனுப்பினார். அந்தவீரர்கள் கருவங்கொண்டு விரைவாக வந்து லவனை எதிர்த்தார்கள். அப்போது லவன் அவர்களைப்பார்த்துக் குதிரையை அவிழ்த்துவிட எத்தனவை வந்து அவமானமடைந்த தூதனுடைய கையிலிருந்து நழுவிப் பூமியில் விழுந்திருந்த வில்லையும் அம்புறாத்தூணியையும் எடுத்துக்கொண்டு வேகமாக யுத்தம் செய்ய வந்து வில்லோசை செய்து மனத்தில் ஆலோசித்தான்.

இப்போது யுத்த பூமியில் என்னோடு யுத்தம் செய்ய எனது சிறிய தந்தை முதலியவர்கள் வந்து நிற்கின்றார்கள். நான் இவர்களோடு எப்படி யுத்தம் செய்வேன். எப்படி இவர்கள் தேகத்தில்

கடுமையான பாணங்களைப் போடுவேன். தங்களைச் சேர்ந்தவர்களைக் கொன்றால், சீதை வான்மீகி முனிவர் ஸ்ரீராகவர் இவர்கள் எப்படிப் பொறுப்பார்கள். நான் இப்போது செய்யவேண்டியது என்ன? யுத்தத்தை நிறுத்தித் திரும்பி முனிவரிடம் சென்றால் முனிவரிடம் கற்ற வித்தை பிரயோஜன மற்றதாய் விடும். ஆகையால் யாரையும் கொல்லாமல் யுத்தஞ் செய்கிறேனென்று நிச்சயஞ் செய்து கொண்டு மேகம்போல் சப்தித்து எதிரிகளை நோக்கி "எதற்காக நீங்கள் விரைந்து என்னிடம் வருகின்றீர்கள்? கூறுங்கள்; நான் உங்களால் உபத்திரவத்தை யடைவதற்குச் சிதையல்ல. ஏ துஷ்டர்களே? என்னை சீதையின் துக்கமான நெருப்பை அவிக்கும் மேகமெனக் கருதுங்கள்; சீதாதேவியின் உண்மையான பெருமூச்சாகிற கடுமையான தீயின் ஜ்வாலைகளால் உங்கள் வீரியம் பொசுங்கிப் போய்விட்டது. ஆகையால் நீங்கள் அடையவேண்டிய உலகத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று லவன்கூறினன். இச்சொற்கள் அவர்களுடைய மார்பில் பாணங்கள்போற் பாய்ந்தன. மறுபடியும் ஒரு மோகனாஸ்திரப் பிரயோகஞ்செய்து எல்லோரையும் மயங்கும்படி செய்துவிட்டு சுமந்திரன், பரதன் இருவரையுந் தன் கட்கங்களி லிடுக்கிக்கொண்டு இருகைகளிலும் அநுமாரையும் சுக்ரீவனையும் எடுத்துக்கொண்டு பர்ணசாலை வந்து அவர்களைச் சீதைக்குக் காட்டினன். சீதாப்பிராட்டி தன் பிள்ளையின் மோகனாஸ்திரத்தினால் மயங்கியவர்களைப் பார்த்து அவர்களை விடுவித்து யாருமறியாமல் இரக்ஷணை செய்தாள். இப்படிச் சேனைகள் யாவரும் லவனால் கொண்டு போகப்படுவதைக்கேட்ட இரகுவீரர் இலட்மணனைப்பார்த்து "இலட்சுமணா! இராவணனும் இம்மாதிரி நம்மைக்கட்டவில்லையே! இதென்ன விபரீதம்! இதற்கென்ன செய்வது" என்று கேட்டார். இலட்சுமணர் "அண்ணா! கவலை வேண்டாம், நான் ஒருக்ஷணப்பொழுதில் அந்தப் பாலகனைத் தங்களிடத்திற்கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்று கூறி, அவரை வணங்கி, சேனைகளுடன் தேரின்மேலேறி, வான்மீகிமுனிவர் இருக்குமிடம் வந்தார். லவன் இலட்சுமணர் வரவை யறிந்து, அவர் முன்பு தைரியமாய் நின்றான். இலட்சுமணர் சுந்தர ரூபமுள்ள அக்குழந்தையைப்பார்த்து, கருணை

கூர்ந்து இப்பொழுது என் முன்பு சாகஸம் செய்யாதே. ஏ குழந்தாய்! நீ என் எதிரில் நிற்பதற்கும் சக்தியில்லாதவன்; போய் விடு; இல்லாவிடில் பிராணனை இழப்பாய்; உன்னிடம் பாக்கியான இராமாயண கதையைக் கேட்க வேண்டுமென்கிற எண்ணத்தினால் நான் கொல்லவில்லை; ஏ பாலா! நீ அடிக்கடி இராமருக்குக் குற்றஞ்செய்கிறாய். நீ அவ்வாறு குற்றஞ்செய்தாலும்நான் உன்னைக் கொல்லவில்லை. நீ பிராணனுடன் இருக்கப் பிரியங்கொண்டால், நீ கொண்டுபோன தூதர்களையும் குதிரையையும் விட்டு விட்டு இராமச்சந்திர பிரபுவைச் சரணமடைவாய்" என்றார். லவன் பயப்படாமல்,"இலட்சுமணா! உன்னையும்இராமரையும் சீதையைக் காட்டுக்கு விரட்டிய வீரர்களென்றுயானறிவேன். உங்கள் வீரம் சீதையினிடந்தான் செல்லும். லவனாகிய என்னிடம் பலியாது. சீதையின் துக்கத்தைப்போக்குவதற்காக வான்மீகிமுனிவர் என்னை யுண்டுபண்ணியிருக்கிறார். இப்பொழுது உங்களை வென்று சீதையின் துக்கத்தை யொழிக்கின்றேன். பதிவிரதையான சீதையைவீணுகக் காட்டில் விரட்டியதற்குப் பிரதி செய்யவே நான் வந்திருக்கின்றேன். ஏற்கனவே சீதையின் துக்கமாகிய தீயினால் உங்கள் சௌரியம் எரிந்து போயிருக்கிறது. என் முன்பு நீங்கள் நில்லாதேயுங்கள். செல்லுங்கள்" என்று வீரவாதம் பேசினான். இப்படிப்பட்ட சொற்களாகிய பாணமானது இலட்சுமணர் மார்பைப் பிளந்தது. உடனே இலட்சுமணர் சினமடைந்துஆயுதங்களாலும் பாணங்காளாலும் லவனை அடித்தார். உடனே லவன் தன்னுடைய பாணங்களைத் தொலைத்து இராமருடைய மந்திரிகளைப் பாணங்களால் அடித்து யாக சாலையில் எறிந்தான். அப்படி விழுந்த அவர்கள் யாவரும் அழுதுகொண்டு இராமரிடஞ் சென்று இராமச்சந்திரபிரபுவே! லவன் செய்யும் காரியம் அசாத்தியமாக விருக்கிறது. எங்கள்மீது பாணங்களைவிட்டு, இங்குத் தள்ளிவிட்டான். அவனைக் கொல்ல இந்த க்ஷணம் வேறு உபாயந் தேடவேண்டும். ஆயுதங்களிலாவது பாணங்களிலாவது அவன் சாகமாட்டான். தங்களுக்கு இலட்சுமணரை உயிருடன் பார்க்க இஷ்டமிருக்குமாயின் அவருக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறி லவன் கூறிய சொற்களையும்

கூறினார்கள். இராமர் இவ் வாக்கியங்களைக்கேட்டதும் ஒரு க்ஷணம் பேசாமல் ஆலோசனையுட னிருந்தார். இது நிற்க.

லவன் இலட்சுமணரைப் பார்த்து பாணங்களால் அடித்தான். அந்தப்பத்து பாணங்களும் இலட்சுமணருடைய சரீரத்தில் கணுக்கள்தோறும் பாய்ந்து தொந்தரவு செய்தன. பிறகுஇலட்சுமணர் கோபமடைந்து, இந்த லவன் பேரில்ஆயுதங்களைப் பிரயோகிப்பது வீண் என்று நினைத்து, பிர்மாஸ்திரத்தைவிடுத்து லவனைக்கட்டிக்குதிரையுடன் லவனையும் இராமபிரானிடம் கொண்டு வந்து "அண்ணா! இதோ குதிரையையும் லவனையும் கொண்டுவந்தேன்" என்று தெரிவித்தார். லவனும் பிர்மாஸ்திரத்திற்கு மரியாதைதந்து வாய் பேசாமல் இராமரிடம் சென்றான்.

இராமர் லவனைத் தமது புத்திரனென்று அறிவாராயினும் ஜனங்களுக்குச்சந்தோஷத்தைக் கொடுப்பதன்பொருட்டு, "இலட்சுமணா! இவனால் பெரிய யுத்தம் செய்யப்பட் டிருக்கிறது. இவனை நான் க்ஷத்திரிய னென்றே கருதுகிறேன். பிர்மஹத்திர தோஷம் வருமே யென்று சிறிதும்யோசிக்காமல் இப்போதேஇவனைக்கொல்" என்று உத்தரவிட்டார். இதைக்கேட்டதும் இலட்சுமணர் "அண்ணா! இவன் ஆயுதங்களினால் மரண மடையமாட்டான். பரதன் முதலியவர்களாலும் என்னாலும் அடிபட்ட இவனுடைய சரீரத்தில் சிறிதேனும் காயமிருக்கின்றதா பாருங்கள்" என்று கூறினார். இராமர், "இலட்சுமணா! என் முன் இந்த லவனைப்பார்த்து உனக்கு எந்த உபாயத்தினால் மரணமென்று கேள்; சூரர் தம் மரணத்தை மறைக்கமாட்டார்கள்; தன் பலத்தினால் உயிரை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் வீரர்கள் எப்போதும் பொய் சொல்ல மாட்டார்கள்" என்று கூறினார். ஸௌமித்திரியானவர் லவனை உன்னுடைய மரணத்திற்கு உபாயம் யாதென, லவன் தன்னை ஜலத்தினால் நனைத்தால், தன் சரீரம் விருத்தியாகு மென்பதைத் தான் ஏற்கனவே முனிவரிடம் தெரிந்து கொண்டிருப்பதால், இப்பொழுது உலகத்தாருக்குக் காட்டுவதன் பொருட்டு, "ஜலத்தினால் என்னை நனைத்தால் மரண

முண்டாகும்.'' என்று கபடமாகக் கூறினான். இலட்சுமணர் இதைக் கேட்டதும் லவனை ஒரு கல்லில் உட்காரவைத்து, ஜலத்தினால் ஸ்நானஞ்செய்வித்தார். அவ்வாறு ஸ்நானம் செய்வித்தும் லவன் ஒரு கெடுதியையும் அடையாமலிருக்கக்கண்டு, அயோத்தியாபட்டணத்திலிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் யாவரையும் குடங்களினாலும் தோலினால் செய்த பைகளினாலும் ஜலத்தைக் கோடிக்கணக்கான எருதுகள், யானைகள் ஒட்டகைகள் இவைகளின் மேலேற்றிக்கொண்டு வரும்படிசெய்து, அவ்வளவு ஜலத்தையும் அவன்மேலூற்றி ஸ்நானஞ்செய்வித்தார். ஜலங் கொட்டக்கொட்ட லவன், விருத்தியாகி ஏழு பனையளவு உயரமுள்ளவனாகவும் புத்தியிற் சிறந்தவனாகவும் விளங்கினான். இதைக்கண்ட இலட்சுமணர் ஆச்சரியமடைந்து, "லவா! நீ பொய் கூறினாய்; இதுவல்ல உன் மரணத்திற்கு உபாயம். நீ விருத்தியடைவதன் உபாயமே யாகுமிது" என்றார். லவன், "இலட்சுமணா! ஓர் விளக்கானது எண்ணெய் யில்லாமல் அணையும்போது பிரகாசமாவதுபோல், என் ஆயுள் முடியும் இச்சமயம் என் தேகமும் பலமும் விருத்தியாகின்றன" என்று கபடமாகப் பதிற் கூறினான். இவ்வாறு கூறிய லவன் சொல்லை யுண்மையென நம்பி, முன்போலவே கங்காநதியிலிருந்து ஜலத்தை வரவழைத்து, கட்டைகளாற் செய்யப்பட்ட கோமுகம் முதலியவை களின் வழியே அநேக ஜனங்களைக்கொண்டு அபிஷேகஞ்செய்வித்தார். பிறகு லவன் பிரமாஸ்திரத்திலிருந்து விடுபட்டுக் கைகளைக் கொட்டி, குழந்தை விளையாட்டாகத் தொடைகளைத்தட்டினான்.

இப்பொழுது அங்கிருந்த ஜனங்கள்யாவரும் குடங்களையெறிந்துவிட்டு, மலஜலங் கழித்துக்கொண்டு கௌபீனம் அவிழ்ந்ததுகூடத் தெரியாமல் லவனைப் பார்த்துக்கொண்டே ஓடினார்கள். இச்சமயத்தில் கங்கையில் முனிவர் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டிருந்த குசன், அடிக்கடி கூட்டங்கூட்டமாக வந்து ஜலங் கொண்டுபோகும் ஜனங்களைப்பார்த்து, நீங்கள் அடிக்கடி ஏன் ஜலமெடுக்கின்றீர்கள் என்று வினவ, "லவன் தனக்குஜலத்தால் மரணமென்று சொன்னதை நம்பி நாங்கள் அவனைக் கொல்வதற்கு

ஜலமெடுத்துச் செல்கின்றேம்" என்றுசொன்னர்கள். குசன் அவ்வசனத்தைக் கேட்டதும் பரபரப்புடன் அச்சமயம் வந்து, பெரிய வில்லை யெடுத்து குணத்தொனி செய்து லவனை விடுவிப்பதற்கு யாகசாலைப் பக்கம் வந்தான். லவன் குசனுடைய வில்லோசையைக் கேட்டதும் யுத்தம் செய்யாமலிருந்தான். யுத்த கோலத்துடன் வந்த குசனைப்பார்த்த இலட்சுமணர் அவனோடு யுத்தம் செய்ய வந்தார்.

குசன் இலட்சுமணனைப் பார்த்து, "இலட்சுமணு! நீயும் இராமனும் மற்றவர்களும் சேர்ந்து சீதையையும் லவனையும் ஜயிக்க முடியுமே தவிர வேறு என்ன காரியம் செய்யவல்லீர்? என்னை லவனைப் போலென்ன வேண்டாம். உங்கள் சௌரியம் ஸ்திரீயினிடத்திலும் குழந்தையிடத்திலும் தான் செல்லும்; இதை யானறிவேன். சீதையினுடைய துக்கமாகிய நெருப்பில் கரிந்து போன உங்கள் பலமானது என் முன் சாயாது. வீண் பரிகாசமாகவே முடியும். வான்மீகி முனிவரிடம் கற்றவித்தையை உனக்கும் இராமனுக்கும் காட்டுகிறேன்" என்று வீரவாதம் பேசிச் சிற்றப்பனேடு யுத்தம் செய்தான். இலட்சுமணருடைய பாணங்கள் ஜானகியின் குமாரனுகிய குசனிடம் பிரயோசன மற்றவைகளாகப் போயின. குசன் சிற்றப்பனுயினும் யுத்தத்தில் கொல்வது தோஷமல்லவென்னும் அரச நீதிப்படி பயமில்லாமல், ஆதிசேஷனே இலட்சுமணராக அவதரித்திருக்கின்றனர் என்பதை இராமாயண முகமாகத் தெரிந்துகொண்டிருப்பவனுதலால், அவரைக் கொல்வதற்குக் கருடாஸ்திரப் பிரயோகஞ் செய்தான். கருடாஸ்திரம் சமீபத்தில் வந்ததும் இலட்சுமணர் மிகவும் பயந்து, சக்தியற்றுத் தேரிலிருந்து பூமியில் விழுந்தார். இவ்விதம் கீழேவிழுந்த தம்பியை இராமச்சந்திரர் பார்த்து யாகத்தில் தீக்ஷையையடைந்திருந்தாலும் விரைவாக வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு யாக குண்டத்திற்கு முன்னின்று, இலட்சுமணன் உயிர் பிழைத்தெழுந்திருக்கவேண்டுமென்ற ஆசையால், பிர்மாஸ்திரத்தை ஜபம் செய்து ஆகாசத்திலிருக்கும் கருடாஸ்திரத்தின்மேல் குறிவைத்து விடுத்தார். உடனே கருடாஸ்திரமானது அந்தப் பிர்மாஸ்திரத்திலொடுங்கிவிட்டது.

பிறகு குசன் சர்ப்பாஸ்திரத்தை இராமரிடம் பிரயோகஞ் செய்து, "இராமா! சீதையைப் போல் என்னை நினையாதே! உன்னுடைய புருஷத்தன்மையை இவ்வுலகத்தாருக்குக் காட்ட, வீணில் ஜானகியைக் காட்டுக்கு அனுப்பினாயே, அதை யானறிவேன். யுத்தம் செய்வாய்; சக்தியில்லாவிடில் வான்மீகி முனிவரையும் சீதையையும் சரணமடைவாய்" என்று சொன்னான்.

குசனுடைய வாக்கியங்களாகிய பாணங்களால் அடிபட்டுத் தத்தளித்த இராமர்தம்மை நோக்கிவரும் குசனுடைய ஸர்ப்பாஸ்திரத்தைப் பார்த்து பூனையின் அஸ்திரத்தை பிரயோகித்தார். அதனால் ஸர்ப்பாஸ்திரம்தலைகாட்டாமலொழிந்தது. பிறகு குசன் ஸ்ரீராமர்மேல் நாய் அஸ்திரத்தைவிட இராமர் அதை உலக்கை அஸ்திரத்தினால் தடுத்தார். பின்குசன், அக்னியாஸ்திரத்தை இராமரிடம் விடுத்தான். இராமர், மேகாஸ்திரத்தால் அதைத் தடுத்தார். சீதையின்வயிற்றிற் பிறந்த குசன், வாயுவாஸ்திரத்தை இராமரிடம் விட இராமர் அதைப்பர்வதாஸ்திரத்தினால் தடுத்தார். பிறகுஜானகீ புத்திரன் பிர்மாஸ்திரம் விடுத்தான். அப்போ துபாகசாலையில், ஆ! ஆ!! என்ற சப்தமுண்டாயிற்று. அதை இரகு சிரேஷ்டர். நாராயணாஸ்திரத்தினால் தடுத்தார். பிறகு இராமரை, குசன், நாராசபாணங்களாலும், இராமர், குசனை அனேகபாணங்களாலும்இப்படி ஓர் யாமம்வரையிலும் அடித்துக்கொண்டு கடுமையான யுத்தம் செய்தார்கள். இராமர் விடும்பாணங்கள் குசனுடைய சிரசுக்கு மேற்சென்று பூமியில் விழுகின்றன. குசன் விடும்பாணங்கள், ஸ்ரீராமருடைய, பாதங்களுக்குச் சமீபத்தில் விழுகின்றன. இந்த வேடிக்கையைப் பார்த்த இராமர், ஆச்சரியப்பட்டு, மந்திரியை வரவழைத்து, மந்திரி! நீ வான்மீகி முனிவரிடம் சென்று, அவரை நமஸ்கரித்து உம்முடைய மாணவர்களாகிய இவ்விருவரும் யார், என்று கேட்டுவா! சீக்கிரம் செல், பிறகு இவர்களை நான் ஸம்ஹாரம் செய்யப்போகிறேன் என்று உத்தரவு செய்தார்.

உடனே மந்திரி ரதத்திலேறி குசலவர்களுக்கு இரண்டு கூப்பிடு தூரத்திற்கு அப்பாலுள்ள வழியாக ஆச்ரமம் சென்று, முனிவரை நமஸ்கரித்து, ஸ்ரீ ராமருத்தரவைத் தெரியப்படுத்தினான். மந்திரியின் சொல்லைக்கேட்டு வான்மீகி முனிவர் நாளைய தினம் காலையில் சபையில் ராமாயண கானம் செய்யும்போது குழந்தைகளுடைய வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாமென்று கூறினார். உடனே மந்திரி ராமரிடம் வந்து முனிவர் கூறியதைத் தெரிவித்தான். பின் வான்மீகி முனிவரும் குசலவர்களைத் தமதருகில் அழைத்து அன்புடன் ஆலிங்கனம் செய்து கதைகளைச் சொல்லிக்கொண்டு ராத்திரியில் சுகமாக இருந்தார்.

குசலவர்களின் பராக்ரமத்தைக் கூறும்

7-வது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

மறுநாட்காலையில் ராமர் குசலவர்களை அழைத்து வரும்படி தூதனை யனுப்பினார். குசலவர்கள் தூதர்கள் வந்தழைத்ததும் வான்மீகிமுனிவரின் உத்தரவுபெற்று, ராமருடைய சபைக்குச் செல்லத் தீர்மானித்து, மாந்தோலுடுத்து, ஸீதையையும் முனிவரையும் வணங்கி, சபைக்குச்சென்று தந்தையின் முன்னிருந்து ஜன்மகாண்டத்தைக் கானம் செய்தார்கள். ராமசந்திரப் பிரபு தமது சரித்திரத்தைக்கேட்டு பரமாச்சரியமடைந்தார். ஜனங்களும் ஆச்சரியமடைந்தார்கள். யாவரும் குசலவர்களை ஸீதையின் குமாரர்களென்று அறிந்து பரமானந்தங் கொண்டார்கள்.

இச்சமயத்தில் ஏற்கனவே லவனுடைய பாணங்களால் அடிபட்டுக் கிடந்த சத்ருக்னன் முதலியவர்களும் அங்கதன் முதலிய வானர வீரர்களும்லக்ஷ்மணரும் மற்றஅரசர்களும் உபத்திரவமொழிந்து அவரவர்கள் வாகனத்தின் மீதேறிச் சபைக்கு வந்து ஸ்ரீராமரை நமஸ்கரித்து அவர் அருகிலிருந்தார்கள். ஸ்ரீராமர் ஆலோசித்துக் குசலவர்களை அன்புடன் விடை கொடுத்தனுப்பிவிட்டு, விபீஷணன் லட்சுமணன் சத்துருக்னன் மகரத்துவஜன் கருடன் சுஷேணன் ஜாம்பவான் இவர்களைப்பார்த்து, இப்பொழுது, தேவருக்குச் சமானராகிய வான்மீகி முனிவரை ஸீதையுடன் அழைத்துவாருங்கள்; கங்காநதியின் தென்கரையில் பெரிய ஒரு சபை ஏற்படுத்துங்கள்; கங்கைச் கரையில் அந்தச் சபையிலிருந்து, ஸீதை என் முன்னால் சபதம் செய்யட்டும்; முனீச்வரர் முதலிய எல்லோரும் ஸீதாதேவி தோஷமற்றவளென்றறியட்டும். அவ்விதமே என்னையும் வான்மீகி முனிவரையும் தோஷமற்றவர்களென்று அறியட்டுமெனக் கூறினார்.

இவ்விதம் ஸ்ரீராமர் கூறியதும் லக்ஷ்மணர் முதலியவர்கள் வான்மீகி முனிவரிடம் வந்து ராமபிரான் திருவாய் மலர்ந்தருளியதைத் தெரிவித்தார்கள். அப்போது வான்மீகி முனிவர் ராமருடைய அபிப்பிராயங்களை யெல்லாம் அறிந்து லவன், யுத்தஅரங்கத்

தில் தூங்கிக்கொண்டு வந்த சுமந்திரன், பரதன், அநுமான் சுக்ரீவன் இவர்களை அவர்கள் வசம் ஒப்புவித்து, நீங்கள் ஸ்ரீராமரிடம் சென்று, நாளைய தினம் சபையில் ஸீதை சபதம் செய்வாள். ஸ்திரீகளுக்குப் புருஷனே தெய்வம், வேறு தெய்வமில்லை, ஸ்திரீகளுக்கு மூவுலகத்திலும் புருஷனை விட்டால் வேறு கதியில்லையென்பதையுங் கூறுங்கள் என்றார்.

இவ்விதம் முனிவர்சொல்லக்கேட்ட லக்ஷ்மணர் முதலியவர்கள், உடனே ஸ்ரீராமரிடம் வந்து சுமந்தரன் முதலிய நான்கு வீரர்களையும் அவரிடம் ஒப்புவித்து வான்மீகி முனிவர் கூறியதைத் தெரிவித்தார்கள். ஸ்ரீராமசந்திரர் முனிவர் சொல்லியனுப்பிய வசனத்தைக்கேட்டு, சந்தோஷமடைந்து சுமந்திரன், பரதன், அநுமான், சுக்ரீவன் இவர்களைக் கட்டியணைத்து அவர்கள்பிழைத்தது மறு ஜன்மமென்றே கருதினார். அந்நால்வரும் ஸீதாராமரை வணங்கி "பிரபுவே! நாங்கள் லவனால் ஜயிக்கப்பட்டு ஸீதையின் திருவருளால் உயிர்பெற்றோம்" என்று நடந்த வரலாற்றை விவரமாய்க் கூறினார்கள்.

மறுநாள் தசரத குமாரர் சபை கூட்டி எல்லோரையும் வரவழைத்து "ஏ முனிவர்களே! அரசர்களே! நீங்கள் யாவரும் ஒரு மனதுடனிருந்து ஸீதை செய்யப்போகும் சபதத்தை நல்லதாயிருந்தாலும் கெடுதலாயிருந்தாலும் கவனியுங்கள்" என்று தெரிவித்தார்.

பிறகு வான்மீகி முனிவர் ஸீதாதேவியை யழைத்துக் கொண்டு யாகசாலைக்குப் புறப்பட்டார். ஸீதை முனிவர்க்குப் பின்னால் தலைகுனிந்து கைகூப்பிக்கொண்டு மெதுவாக நடந்துசென்று யாக சாலைக்குள் பிரவேசித்தாள். இவ்விதம் முனிவர்பிரானுடன் வந்து யாகசாலைக்குள் பிரவேசித்த ஸீதாதேவியைக் கண்ணுற்றவர்கள் இம்மாது விஷ்ணுவின் இதயாரவிந்தத்தில் வசித்துவரும் லக்ஷ்மிதேவியே யென்று கருதிச் சந்தோஷமடைந்து "நின்வரவு நல்வரவாகுக" என்று வாழ்த்தினார்கள். இப்பொழுது ஸீதாதேவியுடன் சபையில் பிரவேசித்த முனிவர் அவ்விடத்திலேயே நின்று ராமரைப் பார்த்து தசரத குமாரராகிய " ஏ ராம! நீ உலக அப

வாதத்திற்குப் பயந்து நல்ல நடத்தையுள்ளவளும் தரும குண முள்ளவளுமான ஸீதையை யமுனா நதியின் தென் கரையிலுள்ள எனதாச்ரமத்திற்கு அருகே த்யாகம் செய்தாய். இந்த உத்தமி இப்பொழுது உன் முன்னிலையில் சபதம் செய்யப்போகிறாள். அதற்கு இப்போது உத்தரவு தரவேண்டும். ஏ ராமா! இவர்களுள் (குசலவர்களைக் காட்டி) குசன்உனக்குப் பிறந்தவன். * ஸீதையின் சாபத்திற்குப் பயந்து தருப்பங்களை நறுக்கி அவைகளின் அடிப் பக்கத்தால் யான் இந்த லவனை உண்டுபண்ணினேன். ஆதலாலே தான் இவன் பெயர் லவனென அழைக்கப்பட்டது. இவ்விருவரும் ஒருவராலும் ஜயிக்கமுடியாத அதி பராக்ரமசாலிகள். இப்பொழுது யான் கூறியயாவும் உண்மையே; ரகுகுலதிலகனாகிய ப்ரபுவே! யான் பிரசேதஸ்என்பவருக்குப்பத்தாவது புத்திரன். பொய்யைக் கனவிலும் நினையேன். இந்த ஸீதை தோஷமுள்ளவளானால் அநேக வருஷங்களிற் செய்த எனது தவத்தின் பலனை யான் அனுபவியாமல் போகிறேன் என்று கூறி ராமரது வலதுதொடையில் குசனையும் இடதுதொடையில் லவனையும் உட்காரவைத்து, அவர் முன்பு நின்றார்; உலகநாயகராகிய ராமசந்திரப் பிரபு தமது குழந்தைகளை ஆலிங்கனம் செய்துகொண்டு உச்சிமோந்து மிகக் குட்டையாயும் சிறியவனாகவு மிருக்கிற லவனுடைய சிரசில் தமது தாமரை மலர்போன்ற திருக்கரத்தை வைத்து முன் குசனுக்குச் செய்ததுபோல் ஜாதகர்ம முதலியவைகளைச் செய்தார். பிறகு தமக்கு முன் அழகான இருகரங்களையும் கூப்பிக்கொண்டு நிற்கும் ஸீதையைப் பார்த்தும் அறியாதவர்போல் அருகேநிற்கும் லக்ஷ்மணனை யழைத்து, "லக்ஷ்மணா! முன் நீ என்னிடம் கொண்டு வந்து காண்பித்தஸீதையின்கரமெங்கே? பத்திரமாகப்பாதுகாத்து வைத்திருந்தால் இங்கு இப்பொழுதுகொண்டுவா" என்றார். லக்ஷ்மணர் ஆச்சரியமடைந்து 'ஆகா! அவ்விதமே கொண்டு வருகிறேன்' என்று சொல்லி வேகமாகச் சென்று பெட்டியில் வைத்திருந்த ஸீதையின் கையை எடுத்து வந்து ராமர் முன்னே வைத்தார்.

---

* ஸ்நானத்திற்குச் சென்ற ஸீதை மீண்டும் வந்து வான்மீகரை யறியாமல் குசனை யெடுத்துச் சென்றதின் காரணமாக வான்மீகர் லவனை உண்டுபண்ணிய விஷயம்.

ஐந்துவருஷகாலமாயும் அக்கை மாம்சம் முதலியவைகளோடு சிறிதும் வித்தியாசப்படாமல் ஸீதையின் கையைப்போலவே யிருக்கக் கண்டியாவரும் பரமாச்சரிய மடைந்தார்கள். இச்சமயத் தில் விசுவகர்மாவால்செய்யப்பட்ட அக்கையானது எல்லாருடைய கண்முன்பும் ஒரு க்ஷணப்பொழுதில் மறைந்தது. இதுவும் அங்கிருப்பவர்களனைவர்க்கும் பரமாச்சரியத்தை விளைத்தது. ராமசந்திரப் பிரபுவும் ஆச்சரியமடைந்து வான்மீக முனிவருக்கு வந்தனமளித்து மகாபுத்திசாலியாகிய முனிவரே! இப்பொழுது தாங்கள் எனக்குக் கூறியவைகள் உண்மையே; தமது வசனங்களால் ஸீதை குற்றமற்றவளென்பதில் எனக்கு நம்பிக்கைதான்; இலங்கையில் தேவர்களுக்கு முன்பு இந்த ஸீதை சபதம் செய்ததன் பேரில் அயோத்திக்கு அழைத்து வந்தேன். அவ்வாறு சபதம் செய்தவளாயினும் தோஷமணுகாத பதிவிரதையாயினும் உலக அபவாதத்திற்குப் பயந்தே த்யாகம் செய்தேன். இதைப்பற்றித் தாங்கள் என்னை மன்னித்தல்வேண்டும். இந்தக் குசன் எனது அம்சமாக ஜனித்தவன் என்பதனையும் இந்த லவனைத் தாங்கள் ஸீதையின் சாபத்திற்குப் பயந்து லவங்களால் உண்டுபண்ணினீர்கள் என்பதையும் யானறிவேன். எது எவ்விதமாயினும் சகல ஜனங்களும் பார்த்து நம்பிக்கை கொள்ளும் சபதத்தை இப்பொழுது உமது முன்னே ஸீதை செய்யட்டும். பிறகு நான் ஒப்புக் கொள்ளுகிறேன்" என்றார்.

இவ்விதம் கூறி முடிந்ததும் சபையிலுள்ள அனைவரும் சபதத்தைப் பார்க்க வெகு ஆவலுள்ளவர்களாக இருந்தார்கள். உடனே ஸீதாதேவி பட்டு வஸ்திரமுடுத்து வடக்கு முகமாக நின்று தலையைக் குனிந்துகொண்டு 'யான் ராமசந்திரப் பிரபுவைத் தவிர வேறு புருஷனை மனதிற் கருதாதிருப்பது உண்மையாயின் இந்தப் பூமிதேவி எனக்கு இடங்கொடுக்க வெடிக்கட்டும்" என்றாள். இவ்விதம் சபதம் செய்த ஸீதாதேவியின் முன்பு ஆச்சரியப்படத்தக்கதும் சிலாகிக்கத்தக்கதும் சூரியனைப்போல் பிரகாசிப்பதுமான ஸிம்மாசனமொன்று பூமியிலிருந்து தோன்றியது. அதைத் தேவசரீரம் பெற்ற ஸர்ப்பராஜர்கள் சுமந்து கொண்டிருந்தார்கள். பின் பூமிதேவியானவள் தன் பெண்ணாகிய ஸீதைக்கு நல்வரவு கூறித்

தன் கைகளால் ஆலிங்கனம் செய்துகொண்டு ஆசனத்தமர்த்தி வஸ்திரம் புஷ்பம் சந்தனம் அவைகளால் அலங்கரித்து அன்புடன் சாமரம் வீசினாள். இப்பொழுது ஸிம்மாசனமானது மெள்ளப்பூமிக்குள் மறைந்தது. ஸிம்மாசனமேறி ஸீதை பாதாள உலகம் செல்லும்போது ஆகாசமார்க்கத்திலிருந்த தேவர்கள் எல்லோரும் மலர்மாரி பொழிந்தார்கள். நன்று! நன்று!! என்று கூறி மகிழ்ந்தார்கள். விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலுமுள்ள யாவரும் நடுங்கினார்கள். அசையாப் பொருள்களும் நடுக்கமுற்றன; சில வானரர்களும் மானிடர்களும் அநேகவிதமாகப் பேசிக்கொண்டார்கள். சிலர் கவலையுடனும் சிலர் ஆசையுடனுமிருந்தார்கள். சிலர் ராமபிரானைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாதாள உலகம் செல்லும் ஸீதையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களனைவரும் மோகமடைந்து சிறிதுநேரம் தங்கள் அறிவை யிழந்து வாய் பேசாமலிருந்தார்கள். பின் ராமர் ஸீதையினிடம் பரபரப்புடன் வந்து தமது இடது கரத்தால் ஸீதையின் கையைப் பிடித்துக் கொண்டு பூமிதேவியைப் பார்த்து பிரார்த்தனை செய்கிறார்.

ஏ தேவி! நீ மானிடர்களுக்குரிய இருப்பிடம்; எல்லோருக்கும் தாய்; நீ பிரளய ஜலத்துக்குமேல் சதாகாலமும் பரிசுத்த உருவத்துடனிருந்து எல்லாருக்கும் உத்தமமான பதார்த்தங்களை அளித்து வருகிறாய். உலகங்களுக்குத் திருப்தியைத் தரும் ஔஷதிகளை நீ உன் வயிற்றில் உண்டுபண்ணித் தருகின்றாய். தார்க்கையும் விஷ்ணுவாகிய எனக்குப் பத்தினியான லக்ஷ்மியும் நீயே. ஸரஸ்வதியும் நீயே. இப்பொழுது இவ்வவதாரத்தில் என்னால் சிருஷ்டிக்கப்பட்ட எனது சக்தியும் நீயேயாகிறாய். உன்னிடமிருந்து சகல ஜனங்களும் சொர்ணம் முதலியவைகளை அடைகிறார்கள். இன்சொல்லினும் கடுஞ்சொல்லினும் நீயே பெருமை வாய்ந்தவள். ஜனகன் பெண்ணாகிய இந்த ஸீதை எனக்குப் பெண்ணாகிறாள். இப்பொழுது உனக்கு நீ மாமி, முன்பு நீ கன்னிகையை எனக்குத் தானமளித்தமையால் இப்பொழுதும் எனக்கு கன்னிகையைத் தானம் கொடுத்து அநுக்கிரகம் புரியவேண்டும்; இல்லையேல் உன்பால் மிகக் கோபமுண்டாகும்" என்று கூறினார்.

ராமதாஸர் கூறுகிறார்.

அதி பராக்ரமசாலியாகிய ராமபிரான் இவ்விதம் பிரார்த்தித்தும் ஸ்திரீகளுடைய மனம் கடினம் என்பதற்கேற்ப அவரது திருவாய் மொழிக்குச் செவிகொடாமல் மெள்ள மெள்ள ஸீதையுடன் பாதாளம் நோக்கிச்செல்லும்போது பூமிதேவியைப் பார்த்துச் சினமடைந்து லக்ஷ்மணனை யழைத்து வில்லை எடுத்துவா, கத்திபோன்ற பாணத்தால் இந்தப் பூமிதேவியைத் தண்டிக்கிறேன். அப்போது தான் இவள் ஸீதையை நம்மிடம் கொடுப்பாள். இப்பூமிதேவியைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை" என்று கூறினார். உடனே லட்சுமணர் வில்லைக் கொணர்ந்து ராமரிடம் கொடுத்தார். ராமபிரான் அதனைப் பெற்று நாண் கயிற்றை இழுத்துக் கட்டி அதில் பாணத்தைப் பொருத்தினார். அப்பொழுது பெருங் காற்றுண்டாயிற்று. கடலுங் கலங்கா நின்றது. ஆகாயத்தின் கண்ணிருந்த நக்ஷத்திரங்கள் பூமியில் உதிர்ந்தன. திக்குகளெங்கும் தூளிபடலமாயிற்று. பூமிதேவியும் நடுங்கி "ராமசந்திரப்பிரபுவே! அடியேனை ஆதரிக்கவேண்டும்" எனப்பகர்ந்து ஸீதையுடன் வெளியே வந்து ராமரது மடியினை ஸீதையைஉட்காரவைத்தாள்; தானும் ராமபிரான் திவ்யசரணாரவிந்தங்களில் சிரத்தைப்பொருத்தி வணங்கினாள். இப்பொழுது தேவர்கள் யாவரும் களிப்படைந்து ஸீதாராமர்கள்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. பிறகு ராமபிரான் தமது சரணங்களிற் சிரம் வைத்து வணங்காநின்ற பூமிதேவியைப் பார்த்துகோபத்தை யடக்கிக்கொண்டு பாணத்தையும் வில்லையும் அருகேவைத்துவிட்டு, தமதுகரத்தால் அத்தேவியை எழுப்பினார். பூதேவி உடனே யெழுந்து ராகவனைக் கைகூப்பித்தொழுது பிரபுவே! அடியேனை மன்னிக்கவேண்டுமெனப் பன்முறை கூறிப் பிரார்த்துப் பின்தன் விமானத்தை ஸீதைக்களித்து அவளைப்புகழ்ந்து அவளிடம் பூஜையைப் பெற்று ராகவரது உத்தரவு பெற்றுக்கொண்டு க்ஷணத்தில் மறைந்தாள். உடனே சகல ஜனங்களும் ஸீதை மறுபிறப்படைந்தனளெனக்கூறி வியப்படைந்தார்கள். ஜய ஜய! என்று கூறித் தனித்தனியே வணங்கிப் பூஜித்தார்

கள். இச்சமயம் ராமர் மனமகிழ்ச்சியடைந்து வெகு தானங்கள் செய்தார். வாத்தியக்காரர்கள் வாத்தியகோஷங்கள் செய்தார்கள். தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். கங்காநதியில் ஸீதை சபதம்செய்த இடத்தில் ஸீதா குண்டம் என்னும் பிரசித்திபெற்ற தீர்த்தமுண்டாயிற்று. ஸீதாதேவியின் மூச்சுக் காற்றானது சபதம் செய்த அச்சமயம் மிக உஷ்ணமாக இருந்தமையால் அந்த ஸீதாகுண்டத்தின் புண்ய தீர்த்தமானது இப்பொழுதும் அந்த மூச்சின் தாபத்தை விளக்குவதற்கொப்ப மிகவும் உஷ்ணமாகவேயிருக்கின்றது; அந்த ஸீதா குண்டமானது நினைத்த மாத்திரத்தில் சகல பயத்தையும் நீக்கக்கூடியது. ஸ்திரீகள் தங்கள் புருஷர்களின் ஆயுளபிவிருத்தியின் நிமித்தம் எப்பொழுதும் இந்தப் பூமியில் சேவிக்கத்தக்கது.

பிறகு ராமபிரான் ஸீதாதேவியுடனும் வஸ்திராபரணபூஷிதர்களான தமதுமக்கள் முதலியவர்களுடனும் அவபிருத ஸ்நானம் செய்து முடித்தார். தேவர்களை பக்தியுடன் பூஜித்து அநேக தானங்களைச்செய்தார்; முனிவர்கள் அரசர்கள் மற்றுமுள்ள பந்துக்கள் இவர்களுடன் அந்த அசுவமேதயாகத்தைப் பூர்த்திசெய்தார்; முனிவர்கள், அரசர்கள், சுமேதைஜனகர் முதலியவர்களைப்பூஜித்து ரித்விக்குகள், யாகத்தைத் தரிசனம்செய்த பிராமணர்கள் முதலியவர்களுக்குத்தக்க பொருள் கொடுத்து உபசரித்து அவரவர் இருப்பிடத்திற்குச் செல்ல விடைகொடுத்தனுப்பினர்.

இதன் பின்பு ராமபிரான் அரசர்கள் குசலவர்கள் ஜானகி இவர்களுடன் அவ்விடம் விட்டுப்புறப்பட்டுத் தமதரண்மனை வந்து சேர்ந்தார். இப்பொழுது அயோத்தியாபுரியில் எங்கேகண்டாலும் மகோற்சவம் கொண்டாடப்பட்டது. சகல ஜனங்களும் வெகு நாளைக்குமுன் பார்த்த ஜானகியைப்பார்த்து மகிழ்ந்தார்கள். பிறகு ராமபிரான் அவர்களனைவருக்கும் தக்க உபசாரஞ்செய்து அவரவர் தேசத்துக்குச் செல்ல விடைகொடுத்தனுப்பினர். ஜனகமகாராஜன் சுமேதை இவர்களுக்கும் சம்மானம் செய்து மிதிலைக்கு அனுப்பினர். பிறகு இராமர் சீதாதேவியுடனும் தமது மக்களுடனும் அயோத்தியிலிருந்து வெகு சுகமாக வாழ்ந்து வந்தார்.

விஷ்ணுதாஸ! ஒரு கற்பத்தில் ராமர் இப்பூமண்டலத்தில் பதின்மூவாயிர மாண்டு ஸீதையுடனிருந்து அரசு புரிந்திருக்கிறார். மற்றொரு கற்பத்தில் பதினோராயிரத்துப் பதினொரு வருஷம் பதினொரு மாதம் பதினொருநாள் ஸீதையுடன் அயோத்தியிலிருந்து அரசுபுரிந்திருக்கிறார். இன்னொரு கற்பத்தில் பதினோராயிரம் வருஷம் பதினோருநாள் வரையில் அயோத்தியில் ஸீதாதேவியுடனிருந்து ஏழு தீவுகளையும் ஆண்டிருக்கிறார். வேறொரு கற்பத்தில் ராமர் பதினோராயிரம் வருஷம் ராஜ்ய பரிபாலனம் செய்திருக்கிறார்.

ஸீதையை யேற்றுக்கொண்ட கதையினைக் கூறும்

8-வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! பிறகு ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி யாகிய மூவரும் சிறிது முன்னும் பின்னுமான நாட்களில் கர்ப்பந் தரித்தார்கள் அந்தக் கர்ப்பிணிகள் மூவருக்கும் ஸீதைஆதரவுடன் அவ்வப்போது அலங்காரங்கள் செய்து சந்தோஷப்படுத்தி வந்தாள். ரகுஸ்ரேஷ்டராகிய ராமசந்திரர் ஜனக மகாராஜனை சுமேதையுடன் வரவழைத்து, பந்துக்களுடன் கர்ப்பிணிகள் மூவருக்கும் பும்சவனம் முதலியவைகளைச் செய்து முடித்தார். பட்டணத்து ஸ்திரீகளும் பந்துக்களும் அம்மூவருக்கும் அவரவர் விரும்பியவைகளைக்கொடுத்துத் திருப்தியுண்டாக்கினார்கள். ராமபிரான் அம்மூவரையும் வஸ்திராபரண அலங்காரங்களால் உற்சாகப்படுத்திச் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்படி செய்து வந்தார்.

இப்படியிருக்கையில்,ஊர்மிளை ஒருபுத்திரனை யீன்றாள்.மாண்டவி சுபதினத்தில் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள். கடைசியாக சுருதகீர்த்தி இரட்டைக் குழந்தைகளை யீன்றாள். பிறகு சில காலஞ்சென்றதன்மேல் ஊர்மிளைக்கு இரண்டாவது புத்திரன்பிறந்தான். மாண்டவியும் இவ்விதமே மற்றொரு புத்திரனை யீன்றாள். ராமபிரான் இக்குழந்தைகளுக்குக் காலா காலங்களில் சாஸ்திரோக்தமாக ஜாதகர்மம் முதலியவைகளைச்செய்வித்து மகிழ்ந்தார். லட்சுமணருடைய மூத்த குமாரனுக்கு அங்கதன் எனவும் இளையவனுக்குத் சித்திரகேதுவென்றும் மாண்டவியின் மூத்த குமாரனுக்குப்புஷ்கரன் என்றும்இளையவனுக்குத்தக்ஷன் என்றும் சுருதகீர்த்தியின் மூத்த குமாரனுக்குச் சுபாகு என்றும் இளையவனுக்கு யூபகேதுவென்றும் குருவின் முகமாக நாமகரணம் செய்வித்து மகிழ்ந்தார். ஏ விஷ்ணுதாஸ! இந்தக்குமாரர்கள் அந்தந்தக்காலங் களில் பிறந்தவர்கள். யான் உனக்குச் சுருக்கமாகக் கூறினேன். இக்குமாரர்கள் உண்டாகும் காலத்தில் தேவர்களனைவரும் பரமானந்தமடைந்து வாத்தியகோஷம்செய்தார்கள். சூரியனைப்போன்ற தேஜஸ்பெற்ற அக்குழந்தைகளுக்கு ராமபிரானது உத்தரவால் உற்சவம் கொண்டாடப்பட்டது. நவ வாத்யங்களும் முழக்கப்

பட்டண. வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். பதாகைகள் தோரணங்கள் இவைகளால் பட்டணம் அலங்கரிக்கப்பட்டது. பந்துக்களும் அரசர்களும் ராமர் முதலானவர்களுக்கு வஸ்திரமுதலியவைகளை யளித்து உபசரித்தார்கள். ராமர் பந்துக்களுக்கும் அந்தணர்களுக்கும் அநேக தானதர்மங்களைச் செய்து நாந்திச்ராத்தம் நடத்தி திவ்யபோஜனம் செய்வித்தார். ராமர் முதலிய நால்வருடைய புத்திரர்களான குசன் முதலிய எட்டுக் குமாரர்களும் அவரவர் தாய்மார்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டார்கள். தங்கச்சங்கிலி பூட்டிய தொட்டில்களில் சயனஞ்செய்து வளர்ந்து வந்தார்கள். நெற்றியில், நுனியில் முத்துக்கள் கட்டித் தொங்க விடப்பட்ட சுட்டியும் கண்டத்தில் ச்ரேஷ்டமான ரத்தினங்களிழைக்கப் பெற்று நடுவில் புலி நகம் சேர்க்கப்பட்ட ஹாரங்களும் செவிகளில் சொர்ணம் ரத்தினம் முதலியவைகளாற் செய்யப்பட்ட கடுக்கன்களும் காலில் சப்திக்கும் மணிகள் கட்டிய தண்டைகளும் இடுப்பில் சொர்ண அரைஞாணும் தோளில் தோள் வளைகளும் பூட்டப்பெற்று வளர்ந்து வந்தார்கள். அக்குழந்தைகள் தங்கள் தாய் தந்தையர்களுக்குப் புன்முறுவலாலும் இந்த்ர நீலம் போன்ற தங்கள் தேகத்தினாலும் பல குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதாலும் அவர்களுடன் வேடிக்கையாகச் சண்டையிடுவதாலும் இனிமையான சொற்களாலும் ஆனந்தமளித்து வந்தார்கள்.

இப்படியாக யாதொரு குறைவுமின்றிவளர்ந்துவருகையில் ஒரு நாள் ராமபிரான் கொலுவில் வீற்றிருக்குந் தருணத்தில் அக்குழந்தைகள் அவரருகில் வந்து வீற்றிருந்தனர். அச்சமயம் ராமர் வசிஷ்ட முனிவரை யழைத்து, வரிசைக்கிரமமாக இக்குந்தை களுக்குள்ள அங்க அடையாளங்களைப் பரிசோதித்துப் பாருங்களெனப் பிரார்த்தித்தார். இதைக்கேட்டதும் வசிஷ்ட முனிவர் முதலில் குசனை யழைத்து அடையாளங்களைப் பரிசோதித்து ஸ்ரீராமரிடம் கூறுகிறார்.

வசிஷ்டர் கூறுகிறார்.

ஸூக்ஷ்மமான ஐந்து அவயவங்களும் நீண்டதான அங்கங்களும் சிவந்த ஏழு அவயவங்களும் உயர்ந்த ஆறு அங்கங்

களும் பெருத்த மூன்று ஸ்தானமும் லேசும் கம்பீரமுமாயமை ந்த மற்ற ஸ்தானங்களுமுள்ள இக்குசன் முப்பத்திரண்டு லட்ச ணங்கள் அமைந்தவனாகிறான். நீடித்த ஆயுள்பெற்ற இக்குசனு டைய நீண்டகை மோவாய்க்கட்டை, முழங்கால், மூக்கு முதலிய இவ்வவயவங்கள் மிகவும் சிலாக்கியமாக இருக்கின்றன. கழுத்து கணுக்கால், ஆண்குறி இம்மூன்று உறுப்புக்களும் பருத்துக்குட் டையாக யிருப்பதால், இவன் எல்லாராலும் பூஜிக்கத்தக்கவன். குரல் கம்பீரமாயும் நாபி ஆழமாயுட் பலம் அதிகமாயுமிருப்ப தால், இவன் மங்களமுடையவன். தோல் கேசங்கள் விரல்கள் பற்கள் விரல்களிலிருக்கும் கணுக்கள் ஆகிய இந்த ஐந்து அவய வங்களும் அதி ஸூக்ஷ்மமாக இருப்பதால், இவன் அதிக மான ஸம்பத்தை யடைவானெனச் சொல்லவேண்டும். உள்ளங் கை, உள்ளங்கால், கடைக்கண், நாக்கு, உதடுகள், நகங்கள் இவைகள் சிவப்பு வர்ணமுள்ளவைகளாக இருப்பதால், இவன் ராஜ்ய சுகத்தைப் பெறுவானென்பதிலையமில்லை. மார்பு, வயிறு, நெற்றி, தோள்கள், கைகள், முகம் இவ்வாறு அங்கங்களும் உய ரமாக இருப்பதால், இவன் ப்ரபுத்தன்மை பெறுவான். நெற்றி, இடை, மார்பு இம்மூன்றும் அகலமாக இருப்பதினால் இவன் தேஜஸூம், ப்ரபுத்தன்மையு மடைவானென்பது நிச்சயம். இந்தக் குசனுடைய சுண்டுவிரலின் அடியிலிருந்து ஆள்காட்டி விரல் வரையில் ரேகையானது பேதமின்றிச் சென்றிருக்கிறது. ஆகையால் இவன் தீர்க்காயுளுடனிருப்பான். இவனுடைய கை கள் ஆமையின் முதுகுபோல், கடினமாக இருப்பதால் இவன் ராஜ்ய உரிமையைப் பெறுவானென்று கூறவேண்டும். பாதங் கள் அழகாகவும் சரியான விரல்களுடனும் சிவந்த வர்ணமுள்ள வைகளாகவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலும் நேர்த்தி யான கரடுகளுள்ளவைகளாயும் இருப்பதால், அவைகள் இவனது ப்ரபுத்தன்மையைக் குறிக்கின்றன. கைகளில், நான்குபக்கங் களிலும் சிவந்த வர்ணமுள்ள சொற்பமான ரேகைகளிருப்பதால் இவன் எப்போதும் சுகமுள்ளவனாகவே யிருப்பான். இவனது ஆண்குறி சிறுத்துக் குட்டையாயிருப்பதால், இவன் ராஜாக்களு க்கு ராஜாவாக ஆவான். இவனது ஆஸனம் பருத்து, கால்கரடு

இடைக்கு மேற்பாகம் நாபி இவைகள் சக்ராகாரமாகவும் இருப்ப தால் இவைகளும் இவனது ப்ரபுத்தன்மையைக் குறிக்கின்றன. எவனுடைய மூத்திரதாரையானது, வலது பக்கம் சுழன்று ஒன்றாக ஏற்படுகின்றதோ அவன் அரசனுவானென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவ்வாறு நமது குசனுக்கு வாய்த்திருக்கிறது. இவனது கைகள் நீண்டதாயும் சரி சமானமாயும் சுகப்படுவதற்கேற்றவைகளாகவும் இடது பக்கத்தில் சூழிகளுள்ளவைகளாகவும் இருப்பதால், அவைகளுக்குப் பூமியைப் பரிபாலிக்கும் சக்தியுண்டு. ஸ்ரீவத்ஸம் வஜ்ரம் சக்ரம் பத்மம் மத்ஸியம் தனுஸ் முதலியரேகைகள் குசனது கைகளில் காணப்படுகின்றன. ஆகையால் இவன் இந்த மூவுலகத்துக்கும் அரசனாக ஆவான். இந்தக் குசன் முப்பத்திரண்டு இலட்சணங்களையுடையவன். இவன் சிலாக்யமான சங்கத்துக்கு நிகரான கழுத்தையுடையவனாயிருக்கிறான்; அன்றில் பக்ஷி, மேகநாதம் துந்துபிவாத்யம் இவைகளின் சப்தம்போன்ற குரலுடையவன். ஆகையால் இவன் ராஜாதிராஜனாக இருப்பானென்பதிற் சிறிதுமையமில்லை. இவனுடைய கண்கள் மதுவையும் கோரோசனையையும் போன்ற நிறமுடையனவாயிருக்கின்றன. ஆகையால் இவனை விட்டு ஸ்ரீதேவி பிரியாள். இவனுடைய நெற்றியில் ஐந்து ரேகைகளிருக்கின்றன. இவன் வயிறு சிங்கத்தின் வயிறு போலுள்ளது. இவனது பாதங்களில் ரேகைகள் நீண்டு சென்றிருக்கின்றன. இவனுடைய மூச்சுக்காற்றானது தாமரைமலரின் வாஸனையை வீசுகிறது. ஆகவே இந்தக் குசன் தோஷமற்ற லக்ஷணமுடையவனென்று கூறி, பின் லவன் முதலியவர்களுடைய லக்ஷணங்களையும் வரிசைக்கிரமமாக ஆராய்ந்து கூறினார் வசிஷ்டர்.

இவைகளைக் கேட்ட ராமபிரான் மனமுவந்து தமது குருவாகியவசிஷ்டருக்கு வஸ்திராபரணமளித்துப் பூஜித்தார். பின் அரண்மனைக்குச்சென்றார். இச்சமயத்தில் பூமிதேவியளித்த திவ்ய ஸிம்மாஸனத்தில் தாஸிகள் திவ்ய சாமரம் வீச, தோழிமார்களுடன் கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஸீதா

தேவி இராமரது வரவைக் கேட்டு, வெகுவிரைவாக ஆஸனத்தி லிருந்து எழுந்து, எதிர் கொண்டுவந்து ஒரு இடையில் யூபகேது வையும் மற்றோரிடையில் யூபகேதுவுக்கு இளையவனாகிய அங்க தனையும் எடுத்துக்கொண்டு குசலவர்களை முன்னிட்டுக்கொண்டு, மெதுவாக வரும் ஸ்ரீராமரையும், ராமருக்குப் பின்னால் தக்ஷனை இடையிலும் புஷ்கரனை வலது கையிலும் எடுத்துக்கொண்டுவரும் லட்சுமணனையும், லட்சுமணருக்குப் பின்னால் சித்ரகேதுவை யிடையிலும் சுபாகுவை வலதுகையிலும் எடுத்துக்கொண்டுவரும் பரதனையும், பரதனுக்குப் பின்னால் ராமருடைய ஆயுதங்களை யெடுத்துவரும் சத்ருக்னனையும் பார்த்தாள். பார்த்து உள்ளத் தில் பரமானந்தங்கொண்டு விரைவாகச் சென்று அவர்களை யழை த்து முன்னே வந்துகொண்டிருக்கும் லவனைக் கட்டித் தழுவி இடுப்பில் எடுத்துக்கொண்டு ராமருடன் இனியவசனங்களைப் பேசிக்கொண்டே மெதுவாக நடந்து தன்னரண்மனைக்கு வந்து தோழிமார்களுடனிருந்து அவருக்குத் திருப்தி யுண்டாக்கினாள்.

பிறகு ராமபிரான் குசன் முதலான குழந்தைகளைப்பற்றி வசி ஷ்டர் கூறிய சாமுத்ரிகா லட்சணங்களை ஸீதைக்குக் கூறி மிகு ந்த சந்தோஷமடைந்தார். ஸீதாதேவியும் கேட்டுப் பரமானந்த மடைந்தாள். இப்பொழுது ராமர் ஸீதையைப் பார்த்து''ஏ ஸீதே! அங்கதன் சித்ரகேது இவ்விருவரையும் லட்சுமணனுடைய மடி யில் உட்காரவைத்து வாவெனக் கூறினார். ஸீதை ராமரது வாக்கியத்தைக் கேட்டதும் மகிழ்ந்து அங்கதனையும் சித்ர கேதுவையும் எடுக்கப்போன தருணத்தில் லட்சுமணர் வெட் கத்தினால் எழுந்திருந்து வெளிப் புறப்பட யத்தனித்தார். ராமர் தாமரைப் புஷ்பம்போன்ற தமது கண்களால் லட்சுமண ரைப் போகவொட்டாமற் றடுக்கும்படி மாண்டவி சுருதகீர்த்தி இவர்களுக்கு ஜாடை செய்தார். அவ்விதமே 'மாண்டவியும் சுருதகீர்த்தியும் தடுக்க லட்சுமணர் வெளிச் செல்லாமல் தம தாசனத்தில் உட்கார்ந்தார். உடனே ஸீதை அங்கதனையும் சித்ரகேதுவையும் லட்சுமணர் மடியில் உட்கார வைத்து இவ்விதமே பரதன் மடியில் தக்ஷன் புஷ்கரன் இவ்விருவரை யும் சத்ருக்னன் மடியில் சுபாகு யூபகேது இவர்களையும் உட்

காரவைத்தாள். இப்பொழுது ராமர் ஸீதையைப் புன்னகையுடன் பார்த்து, "ஸீதே! ஊர்மிளை முதலியவர்கள் தத்தம் பதிக்கு விசிறிகொண்டு விசிறட்டும்" என்றார். இம்மொழியைக் கேட்டதும் ஊர்மிளை முதலியவர்கள் வெட்கமுற்று அவ்விடம் விட்டு வெளியே செல்லப் புறப்பட்டார்கள். பிறகு தோழிகளால் தடுக்கப்பட்டு ராமரது உத்தரவுப்படியே விசிறினார்கள். இவ்விதம் ராமர் போஜனம் செய்தல் வீற்றிருத்தல் முதலிய பல செயல்களில் ஸீதைக்கும் பந்துக்கள் முதலானவர்களுக்கும் அநேகவித விநோதங்களைச் செய்து காட்டினார்.

இவ்வித மிருக்கையில் ஒருநாள் ராமசந்திர ப்ரபு வசிஷ்ட முனிவரைப் பார்த்து குசலவர்களுக்கு (விரதபந்தம்) உபனயனஞ் செய்யவேண்டுமேயெனக் கேட்க, வசிஷ்டர் அவ்விதமே செய்வோமென்று கூறி உடனே ஜோதிடர்களை வரவழைத்துக் குசனுக்கு வயது ஐந்தும் லவனுக்குச் சற்றுக் குறைய ஐந்து வயதுமாகின்றது; இவர்களுக்கு உபனயனஞ் செய்யக் காலத்தை நிச்சயஞ் செய்யுங்களென்று கூறினார். அச்சோதிடர்கள் பஞ்சாங்கங்களையெடுத்துப் பார்த்து ராமரிடம் கூறுகிறார்கள். ராமசந்திர ப்ரபுவே! அந்தணர்களுக்கு எட்டாவது வயதிலும் க்ஷத்திரியர்களுக்குப் பனிரண்டாவது வயதிலும் வைசியனுக்குப் பதினோராவது வயதிலும் உபனயனஞ் செய்ய முனிவர்கள் விதித்திருக்கின்றார்கள். வீரியத்தை விரும்பிய அரசன் ஏழாவது வயதில் தன் புத்திரனுக்கு விரதபந்தம் செய்யலாம். பிரமதேஜஸை விரும்பிய பிராமணன் ஐந்தாவது வயதிலும் பலத்தை விரும்பிய க்ஷத்திரியன் ஆறாவது வயதிலும் பொருளை விரும்பிய வைசியன் எட்டாவது வயதிலும் உபநயனஞ் செய்யலாமெனப் பெரியோர்கள் சாஸ்திரங்களில் நிச்சயஞ் செய்திருக்கிறார்கள். ஆகையால் புத்திரர்களுக்குக் கர்ப்பவாசக் கணக்குப்படி ஆறாவது வயதில் உபநயன முகூர்த்தத்தைச்செய்யுங்களென்றுகூறி, "பிரபுவே! இன்றைக்குப் பதினைந்தாவது தினத்தில் ஒரு முகூர்த்தமிருக்கிறது" என்றும் சொன்னார்கள். ராமர் அவர்களுக்குத் தக்க சம்மானமளித்து அனுப்பிவிட்டு, லட்சுமணனை யழைத்து "ஏ லட்சுமணா! அரசர்கள் அரசபத்தினிகள் முனிவர்கள் பட்டணத்தி

ளுள்ளவர்கள் தேசங்களில் வசிப்பவர்கள் இவர்களை வரவழைத்தல் வேண்டும். இந்த அயோத்தியாபட்டணத்தை அலங்காரஞ்செய்து அகழிகள் ஏழையும் ஆதரவுடன் சீர்திருத்த வேண்டும். உப்பிரிகைகளெங்கும் சுண்ணும்பு பூசிச் சித்திரமெழுதல் வேண்டும். அங்கங்கே த்வஜங்களும் தோரணங்களும் கட்டி யலங்கரித்தல் வேண்டும். தங்கத்தினுல் வேதிகைகள் அமைக்கவேண்டும். மண்டபங்கள் பல தயாராகவேண்டும். யானைகள் குதிரைகள் பல்லக்குகள் இவைகளை யலங்கரித்து வைக்கவேண்டும். மற்ற விஷயங்களில் எதெது உனக்கு உசிதமாகத் தோன்றுகிறதோ அவைகளையும் செய்து முடித்தல்வேண்டுமென ஆக்ஞாபித்தார். இலட்சுமணர் அவ்விதமே செய்கிறேனெனக் கூறி அடுத்த நாளே ராமரது ஆக்ஞைப்படி சகலகாரியங்களையும் செய்து முடித்தார்.

குறித்த முகூர்த்தநாள் வந்ததும் ஸ்ரீராமசந்திர ப்ரபு தமது பந்துக்களுடனும் குமாரர்களுடனும் மங்களஸ்நானம் செய்து நூதன வஸ்திர மணிந்து அநேக அலங்காரங்கள் செய்துகொண்டு தமது குருவாகிய வசிஷ்டரையும் முனிவர்களையும் பூஜித்து, புண்ணியாவாசனம் நாந்தி ச்ராத்தம் இவைகளைச்செய்து முடித்து மங்கள வாத்தியங்கள் முழங்க ஸீதையுடன் தேவகப்ரதிஷ்டையைச் செய்தார். பிறகு அநேக அரசர்கள் முனிவர்கள் ஏழு தீவுகளின் மத்தியி லிருப்பவர்கள் இவர்கள் யாவரும் தத்தம் பத்தினியுடன் வாகனங்களிலேறி அயோத்திக்கு வந்தார்கள்.

பிறகு வசிஷ்டமுனிவர் ராமருக்கும் குசனுக்கும் மத்தியில் வஸ்திரத்தைப் பிடித்து மறைத்து பிராம்மணர்களுடனிருந்து நல்ல ஸ்வரமுந் திவ்ய அக்ஷரங்களா லமைந்ததுமான மங்கள வாசககங்களைக் கூறினுர். ஸ்ரீகணேசர், பிர்மதேவருடைய பெண், பரமசிவன், பிர்மதேவர், மகாவிஷ்ணு, இலட்சுமிதேவி, பார்வதி, சரஸ்வதி, இந்திரன், தேவர்கள் நவக்கிரகங்கள், புண்ணிய வஸ்துக்கள், புண்ணிய நதிகள், முனிவர்கள், தமது குலதேவதை, தந்தைதாய் இவர்களைப் பக்தியுடன் த்யானஞ்செய்து எப்போதும் குமாரனுக்கு மங்கள முண்டாகட்டுமென்றுர். ஸீதாபதியின் ஸ்மரணமே சுபலக்நம் சுபதினம் சுபநக்ஷத்திரம் சந்திரபலம் வித்தியாபலம் தெய்வபலம் முதலிய

வகைளாம். இவ்வாறு அநேக மங்கள வசனங்களாலும் ஓங்கார சப்தங்களாலும் ராமபிரானது மனதைத் திருப்தி செய்வித்துக் குறுக்கே தடுத்திருந்த வஸ்திரத்தை யெடுத்தார். பின் ராமபிரானது மடியில் குசனை உட்காரவைத்து ஹோமம் முதலியவைகளைச் செய்து கௌபீனம் தண்டம் கமண்டலம் இவைகளைக் குசனிடம் விதிப்படி சேர்த்து ஸ்வர்ணமுஞ்சியை முதலில் இடையிலே கட்டிப் பிறகு மான்தோலை யக்ஞோபவீதத்தோடு சேர்த்துக்கட்டிக் காயத்ரி யுபதேசஞ் செய்தார்.

* * * * * * *
* * * * * * *

அப்பால் வசிஷ்டர் குசனுக்கு பிரம்மசரிய விரதமனுஷ்டிக்கும் முறையைக் கூறினார். அதாவது:—சாஸ்திர விதிப்படி சௌசம் செய்தல், பின் ஆசமனம் பண்ணி பல் நாக்கு இவைகளைச் சோதித்துச் சுத்திகரித்தல், வருணதேவதையின் மந்த்ரங்களை ஜபித்து ஸ்நானம் செய்தல், பிராணாயாமம் செய்தல், காலைமாலைகளில் சூரியனை உபாசித்தல், ஸமிதா தானம் செய்தல், அந்தணர்களை நமஸ்கரித்துஇந்தக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் யானெனக் கூறி மேகலை தண்டம் அஜினம் உபவீதம் இவைகளோடு புண்ய சாலிகளாகிய பிராமணர்களின் கிருகத்தில் பிக்ஷை யெடுத்தல், ஜீவனைக்காப்பாற்றுவதற்கு ஆசாரியருத்தரவு பெற்று மௌன நியமத்துடன் போஜனம் செய்தல், யாரையும் தூஷியாமலிருத்தல் முதலிய விரத அனுஷ்டானங்களைக் கூறினார். ச்ராத்த தினத்திலும் ஆபத்காலத்திலும் ஒருவேளை ஆகாரம் செய்ய வேண்டும். த்விஜர்களாகிய பிராமணர் முதலியவர்களுள் ச்ரேஷ்டனாக விருப்பவன் பகற்பொழுதில் இரண்டு தடவை புசிக்கலாகாது. அக்னிஹோத்திரத்தின் விதியை அநுசரித்தவர்கள் பகலில் ஒருதடவையும் இரவில் ஒருதடவையுமே போஜனம் செய்வார்கள். கள்ளருந்தல், மாமிசம் புசித்தல், ஜீவஹிம்சை, சூரியனை நீரில் பார்த்தல், ஸ்திரீசங்கம், பழையது, எச்சில் இவைகளையுண்ணல், பிறரைத் தூஷித்தல் முதலியவைகளைத் தவிர்க்க வேண்டும். குருவின்எதிரிலிருந்து தன்னிஷ்டப்படி காரியங்களைச் செய்தல் கூடாது. எப்போதும் குருவினுடைய பெயரையும் தன்

பெயரையும் உச்சரிக்கலாகாது. எங்கேனும் குருவைமாணவர்கள் தூஷிப்பதைக் கேட்கின் உடனே தன் செவிகளைப் பொத்திக் கொண்டு வேறுஇடம் செல்லல்வேண்டும். தாய் தங்கை தமக்கை தன் கூடப்பிறந்த ச்சோதரிகள் இவர்களுடனும் தனித்திருக்க லாகாது. மகா பண்டிதனுயினும் இந்த்ரியங்கள் மோகத்தை யுண்டுபண்ணும்—இப்படிப்பட்ட அநேகமான பிரமசரிய விரத அநுஷ்டானங்களைக் குசனுக்குஉபதேசித்தார். இவ்வமயம்அநேக தானங்கள் செய்யப்பட்டன. பிறகு குசனுக்கு ஸீதாதேவியுடன் போஜனம் செய்வித்தார். பின் புரச தண்டத்தைப் பூஜித்து விதிப்படி அநேக உற்சவங் கொண்டாடிச் சகல காரியங்களையும் நடத்தினர். குசன் ஸ்ரீராமன் ஸீதை இவர்களைக்கொண்டு தேக விஸர்ஜனம் (கங்கணவிஸர்ஜனம்) செய்வித்தார். அரசர்கள் அந் தணர்கள் ஜனகமகாராஜன் இவர்களால் ராமபிரான் உபசரிக்கப் பட்டார். ராமர் வஸ்திரம் பொருள் முதலியவைகளை அந்தணர் கள் முதல் சண்டாளர்கள் வரையிலுள்ள யாவருக்கும் அளித்துப் பெருமைப்படுத்தினர். ராமபிரான் இவ்வாறாக ஒருமாதகாலம் வரையில் வந்திருந்த சகல ஜனங்களுடன் சந்தோஷமாக இருந்து பிறகு அரசர்களுக்குஅவரவர் தேசங்களுக்குச் செல்ல விடைகொ டுத்தார். இவ்விதமாகவே லவனுக்கும் தக்கவபதில் உபநயன முகூர்த்தத்தை நடத்தி மகிழ்ந்தார். பிறகு அவ்விரண்டு வாலிபர் களும் விதிப்படி குருமுகமாக உத்தமமான வேதாத்தியயனம் செய்தார்கள். பின்பு ராமபிரான் தமது சகோதரர்களாகிய லட்சு மணர் முதலியவர்களின் குமாரர்களுக்கும் அவரவர்களுக்கு உசித மான காலத்தில் எல்லோரையும் வரவழைத்து வசிஷ்டரையும் பிராம்மண ச்சேஷ்டர்களையும் வைத்துக்கொண்டு தமது குமாரர் களுக்கு நடத்தியதைக் காட்டிலும் பதின்மடங்கதிகமான உற்ச வங்களுடன் உபநயனத்தைச் செய்து முடித்தார். பின்பு அவர் கள் எல்லோரும் பிரமசரிய விரதங்களை அநுஷ்டித்து குருவின் முகமாக வேதத்தை அத்தியயனம் செய்தார்கள். ராமபிரான் ஜகதீசனுகிய பரமசிவன் பார்வதியுடனும் விநாயகர் சுப்பிரமண் யர் இவர்களுடனும் விளங்குவதற்கொப்பத் தமது பத்தினிஸீதை புத்திரர்களாகிய குசலவர்கள் இவர்களோடு விளங்கினர். நாளடை

வில் குசன் முதலானவர்கள் குருமுகமாக வேதாத்தியயனம் செய்து நல்ல ஞானத்தைப்பெற்று சேனைகள் மந்திரிகள் குருமார் இவர்களுடன் பூமியில் பரதகண்டத்தின் கண்ணுள்ள புண்ய ஸ்தலங்கள் தீர்த்தங்கள் இவைகளுக்கு யாத்திரை செய்வதில் ஐந்துமாதகாலம் செலவிட்டுப் பின் அயோத்தியாபட்டணம் வந்தார்கள். லட்சுமணர் குழந்தைகளின் வரவைக் கேட்டு நகரத்தை அலங்காரஞ்செய்யச் சேவகர்களுக்கு உத்தரவிட்டு உடனே உத்தமமான யானைகளுடன் அக்குழந்தைகளை எதிர்கொண்டழைக்கச் சென்றார். குசன் முதலானவர்கள் தங்களை எதிர்கொண்டழைக்கவரும் லட்சுமணருக்கு மனமுவந்து வந்தனமளித்தார்கள். லட்சுமணர் குழந்தைகள் எல்லோரையும் கட்டித் தழுவி முத்தமிட்டு அநேக விநோதங்களுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். இப்படிச் செல்கையில் அப்பட்டணத்து வீதிகளில் மேன்மாடியிலிருந்த ஸ்திரீகள் யாவரும் புஷ்பவருஷம் வருஷித்து குசன் முதலான குழந்தைகளை வாழ்த்தினார்கள். சில ஸ்திரீகள் தெருவில் நின்று நீராஜனம் சுற்றினார்கள். இவ்விதக் கோலாகலத்துடன் குழந்தைகள் யாவரும் அரண்மனை சென்று ராமரை நமஸ்கரித்துப்பிறகு ஸீதையின் அரண்மனை சென்றார்கள். இச்சமயம் ஸீதை ஊர்மிளை மாண்டவி சுருதகீர்த்தி இவர்கள் தயிரன்னம் சுத்த அன்னம் எள்ளன்னம் கடுகு உப்பு உளுந்து இவைகள் நிறைந்த பாத்திரங்களில் தீபங்களை வைத்து நீராஜனம் செய்தார்கள். பிறகு குழந்தைகள் கௌஸல்யை முதலியவர்களுக்கு வந்தனமளித்தபின் ஸீதை முதலானவர்களுக்கு வந்தனமளித்தார்கள். குழந்தைகள் குருகுல வாசத்தை முடித்து வந்ததின் காரணமாக ராமர் இச்சமயம் அநேக தானங்களைச்செய்தார். அநேக கோடி பிராமணர்களுக்குப் போஜனம் செய்வித்தார். இவ்வாறு பல உற்சவங்கள் நடந்தன. பின் குசலவர் முதலான ராஜகுமாரர்கள் சில சமயங்களில் ஆச்சரியப்படக்கூடிய திவ்யவஸ்திரங்களைத்தரித்து தேர் முதலிய வாகனங்களின் மீதேறிக்கொண்டு அயோத்தியா பட்டணத்தின் ராஜவீதிகளிலும் நாற்சந்திகள் கூடுமிடங்களிலும் உத்யானவனங்களிலும், நதிக்கரையிலும்

காட்டிலும் சேனைகள் மந்திரிகள் இவர்களுடன் சஞ்சரித்து ஆனந்தமடைந்தார்கள். இம்விதம் ராமபிரான் அயோத்தியா பட்டணத்தில் ஸீதையுடனும் குழந்தைகளுடனுமிருந்து ஜனங்களைச் சந்தோஷப்படுத்திக்கொண்டு வெகுகாலம் சுகமாக இருந்தார்.

விஷ்ணுதாஸ! இந்த ஜன்மகாண்டத்தை நான் உனக்குக் கூறினேன். குசன் முதலானவர்களின் உற்பத்தியை விஸ்தாரமாகக் கூறினேன். ரம்மியமானதும் பரிசுத்தமானதும் ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியதும் புத்திர பௌத்திராதிகளைக் கொடுக்கக் கூடியதும் சுகமளிக்கச் சக்தியுள்ளதுமான இந்த ஜன்மகாண்டத்தைச் செவியிற் கேட்கும் மானிடர்களுக்கு புத்திரர்கள் முதலான பந்துக்களின் பிரிவு ஏற்படாது. மனைவியை விட்டுப் பிரியவும் நேரிடாது. ஸ்திரீகள் கேட்பாராயின் அவர்கள் தங்கள் கணவனை விட்டு ஒருகாலும் பிரியார்; லட்சுமிதேவிபோல் வாழ்வார்கள். அந்நியதேசம் தீர்த்த யாத்திரை இவைகளுக்குச் சென்று வெகுநாள் வராமலிருந்தால் அவர்களும் இந்தக் காண்டத்தைப்படிக்கச்சொல்லிக் கேட்ட மாத்திரத்தில் வந்துசேர்வார்கள். தங்கள் காரியங்கள் அதிசீக்கிரத்தில் முடியவேண்டுமென்னும் எண்ணமுடையவர்கள் இந்த ஜன்மகாண்டத்தை நாள் தோறும் படிக்கவேண்டும். இந்த ஜன்மகாண்டத்தை முதல்நாள் ஒருதடவையும் இரண்டாவதுநாள் இரண்டுதடவையும் மூன்றாவதுநாள் மூன்றுதடவையும் கடைசியாக ஒன்பதாவது நாளில் ஒன்பதுதடவையும் பாராயணம் செய்து மறுநாள் எட்டுத்தடவையோடு நிறுத்தினால் நினைத்தகாரியங்கள் யாவும் சித்தியாகும். இவ்விதம் ஒரு வருஷகாலம் பாராயணம் செய்தால் புத்திரனில்லாதவன் புத்திரனை யடைவான். ஆனந்தராமாயணத்தின் மத்தியிலிருக்கும் இந்த ஜன்மகாண்டத்தைப் பாராயணம் செய்யினும் கேட்பினும் சுகமுண்டாகும் என்பதில் ஐயமில்லை.

குசலவர்களுக்கு உபநயனம் செய்தவரலாற்றைக்கூறும்
9-வது சருக்கம் முற்றிற்று.

ஜன்மகாண்டம் முற்றிற்று.

விவாக காண்டம்.

1-வது சருக்கம்.

ஒருநாள் ராமபிரான் தமது மந்திரிகள் சூழ ஸபையில் வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்ட சிங்காஸனத்தில்வீற்றிருந்தார். இச்சமயத்தில் ஒருதூதன் ராமரைப் பார்ப்பதற்காக வந்து சபையின் வாயிற் காப்போனைக் கண்டு ஒரு கடிதத்தைக் கொடுத்து "ஐயா! நான் கிழக்கு தேசத்தரசனாகிய பூரிகீர்த்தி யென்பவரால் அனுப்பப்பட்ட தூதன்; அவர் இக்கடிதத்தை ராமபிரானிடம் கொடுத்து வரும்படி என்னையனுப்பினார். தாங்கள் தயைசெய்து இதனை அவரிடம் சேர்ப்பித்துவிட வேண்டும்" என்றான். அவன் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு உள்ளே சென்று லட்சுமணர் முன்பு வைத்தான். அவர் அதனைப் பிரித்துப் பார்த்தார். அதில் மஞ்சள் தடவியிருந்ததையும் தங்கக் கிலிட்டினால் புஷ்பம் போல் சித்திரங்கள் போடப்பட்டிருந்ததையும் கண்டு விவாகக் கடிதமென வறிந்து சந்தோஷத்துடன் அதைப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

திருமுகம்.

உலகத்தில் மகா துஷ்டனாக இருந்த இராவணன் முதலிய ராக்ஷஸர்களைக் கொன்று க்ஷேமத்தை யுண்டாக்குவதன் நிமித்தம் தசரதமகாராஜனுக்கும் கௌஸல்லியைக்கும் புத்திராக அவதரித்து அருள்புரிந்த ராமசந்திர ப்ரபுவுக்கு எப்போதும் ஜயமுண்டாகுக. அவரது சரணாரவிந்தங்களில் வண்டினையொத்துப் பூரிகீர்த்தியாகிய நான் விக்ஞாபனம் செய்துகொள்வ தென்னவென்றால்:—

எனது பௌத்திரிகளான சம்பிகை ஸுமதி என்னும் இரண்டு குழந்தைகளுக்கும் ஸ்வயவரம் நடத்த உத்தேசித்திருக்கிறபடியால் தாங்கள் பந்து புத்திர மித்திரர்களோடு வந்திருந்து மங்கள காரிய

த்தை நடத்திவைத்து என்னை அநுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்கின்றேன். அடியேனுடைய இத்திருமுகத்தை அலக்ஷியம் செய்யாது அவசியம் வந்திருந்து என்னைக் காத்தருள வேண்டும். அநேக கோடி வந்தனமளித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:

தங்களன்புள்ள,

பூரிகீர்த்தி.

இத்திவ்யதிருமுகத்தைச் செவியுற்ற ராமச்சந்திரப்ரபு தமது குருமார்களுடன் சுயம்வரத்திற்குப் போக உத்தேசித்து "லட்சுமணா! நான் நாளையதினம் நமது ராஜ்யத்தை விஜயன் என்பவனிடம் ஒப்புவித்துவிட்டுச் சேனைகளோடும் உன்னோடும் சத்ருக்னனோடும் மற்றுமுள்ள ஸ்திரீகளோடும் சுயம்வரத்திற்குச்செல்லக் கருதியிருக்கின்றமையால், இன்றைக்கே வழியைப் பழுது பார்த்து அங்கங்கே கூடாரங்களை யேற்படுத்தி அவசியமான சாமான்களையும் தயார் செய்துகொண்டு பிரயாணத்திற்குத்தயாராக இருக்கவேண்டுமென்று உத்தரவிட்டார். லட்சுமணர் அவருடைய உத்தரவை வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டு அவ்விதமேசெய்து முடித்தார்.

மறுநாட்காலையில் ராமபிரான் ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு மூன்று ஆக்னிகுண்டங்களையுமெடுத்துப் புஷ்பக விமானத்தில் வைத்துவிட்டு ஸீதாதேவி முதலிய ஸ்திரீகளைப் பயணத்துக்குத் தயாராகும்படி உத்தரவிட்டார். அவர்கள் உடனே திவ்ய அலங்காரஞ் செய்து கொண்டு விமானத்தில் ஏறினார்கள். ராமரும் தமது விருதுகளுடன் யானையின் மீதேறிக்கொண்டு இருபக்கங்களிலும் சாமரம்வீச, முன்னே சென்றார். குருவான வசிஷ்டர் ஒரு யானையின் மீதேறிக்கொண்டு அவருக்கு முன் சென்றார். இவர்களுக்குப் பிறகு குசன் முதலிய எட்டுப் பிள்ளைகளும் பரத சத்ருக்னர்களும் யானைகளின் மீதேறிக்கொண்டு சென்றார்கள். இவர்கள் பிறகு மந்த்ரிகளும் பட்டணத்து ஜனங்களும் இன்னுமற்றுமுள்ள எல்லோரும் வரிசைக்கிரமமாகச்

சென்றார்கள். ராமபிரானுடைய யானையானது ஐராவதத்திற்குச் சமானமானதாய் நான்கு கொம்புகளுடன் வெண்மை நிறத்துடனும் விளங்கிற்று. அவர் வீற்றிருந்த அம்பாரியானது முத்து ஜாலர்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வந்திமாகதர்கள் ஸ்தோத்திரஞ்செய்பவும் காயகர் கானஞ் செய்யவும் ஸ்திரீகள் எல்லோரும் புஷ்பக விமானத்தின் மீதிருந்து புஷ்ப மாரி பொழியவும் நவ வாத்திய முழங்கவும் வெகு கோலாகலத்துடன் போய்க்கொண்டிருந்தார்கள்.

அயோத்தியா பட்டணத்திற்கு ஒரு யோசனை தூரத்திற்கப்பாற் சென்றதும் தங்குவதற்கு வசதியான இடமிருக்கக்கண்டு அங்கே சேனைகளுடன் இறங்கி ஏற்கனவே அவ்விடத்தில் அடித்திருந்த கூடாரத்திலிருந்து ஆகாரம் புசித்துச் சிரம பரிகாரம் செய்துகொண்டார்; இவ்விதம் ராமபிரான் வழியில் அங்கங்கே தங்கி அநேக தேசங்களைப் பார்த்துக்கொண்டு கங்கா நதியைக் கடந்து மெதுவாக இருபது நாட்களில், பூரி கீர்த்தியின் பட்டணம் போய்ச்சேர்ந்தார்' ராமபிரானுடைய வருகையையறிந்த பூரிகீர்த்தி ராஜனுடைய வேலைக்காரன் வேகமாகச் சென்று பூரி கீர்த்தியிடம் ப்ரபுவான ராமசந்திரர் வருகிறார் என்பதைத் தெரிவித்தான். பூரிகீர்த்தி அதைச் செவியுற்றதும் ஸந்தோஷமடைந்து மிகுந்த பரபரப்புடன் ராமரை எதிர்கொண்டழைத்துச் சென்று அவருக்குவஸ்திரம் ஆபரணம் முதலியவைகளைக் கொடுத்து வணங்கி மிகஅழகாக அலங்கரித்திருக்கும் தமது பட்டணத்திற்கு அழைத்துவந்தான். இப்போது சுயம்வரத்திற்கு வந்திருக்கும் மற்ற அரசர்களும் ராமபிரானுக்குத் தங்கள்காணிக்கைகளைக் செலுத்தி அவரை வணங்கி, அவருடைய குமாரர்களாகிய குசன் லவன் இவ்விருவரையும் பார்த்து, 'இந்தத் திவ்ய சுந்தரரூபமுள்ள வாலிபர்களிருக்க, இவர்களை விட்டுச் சுயம்வரத்தில் அப் பெண்கள் நம்மை எங்ஙனே வரிப்பார்கள்'' என்று எண்ணிக்கொண்டு விமானத்தைப் பின் தொடர்ந்தே வந்தார்கள்: அப்போது தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள்; வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். இவ்வித வைபவத்துடன் ராமசந்திர ப்ரபு

பூரிகீர்த்தியின் பட்டணத்தில் பிரவேசித்தார். அப்பொழுது அந் நகரத்து மாதர்கள் ராமபிரான் வருவதை யறிந்து, அவரைத் தரி சிப்பதன் நிமித்தம் தங்கள்வேலைகளையும் நிறுத்திவிட்டுக் கோபுர முதலிய உயரமான இடங்களில் ஏறிக்கொண்டார்கள். ஒருமாது அழுதுகொண்டிருந்த தன்னுடைய குழந்தையைத்தொட்டிலிலே யேகிடத்திவிட்டு வெகுவிரைவாக மெத்தையின் பேரிலேறிநின்று கொண்டாள். வேறொருத்தி தனது புருஷனுக்குத் தாம்பூல மடித் துக்கொண்டிருக்கும்போதே ராமபிரான் வருவதையறிந்து, அதை நிறுத்திவிட்டு வேகமாக அவரைத் தரிசிக்க ஓடிவந்தாள். ஒருத்தி போஜனஞ்செய்து கொண்டிருக்கையில் மத்தியிலெழுந்து ராம ரைப்பார்க்க ஓடி வந்தனள். தலை சீவிக்கொண்டிருந்த மற்றொரு ருத்தி அப்படியே மயிரைக் கையிலேந்திக்கொண்டு வெளியே வந்து விட்டாள். ஒரு ஸ்திரீ தனது புருஷன் அன்போடு தன்னை ஆலிங்கனஞ்செய்துகொண்டிருக்கையில் அவன்கையைக் கடிந்துகொ ண்டு ஓடி வந்து உப்பரிகையின்மீது ஏறிக்கொண்டாள். வேறொரு த்தி தன் புருஷனுடைய ஒரு காலைக்கழுவிவிட்டு மற்றதைக்கழுவ ஆரம்பிக்கும் சமயத்தில் சீதையும் இராமரும் வருகிறார்களென்று கேட்டதும் அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தாள். தனது புரு ஷன் தன்னை முத்தமிட்டுக் கொண்டிருக்கையில், அவனுடைய முகத் தைத் தள்ளிவிட்டு தலையிலிருந்த பூ மலர்கள் கீழே விழ வெகு வேகமாயோடி வந்தாள். புருஷனோடு நித்திரை செய்து கொண்டிருந்த ஒருத்தி அவசரமாய் அரைத் தூக்கத்திலெழுந்து புரண்டுவிழும் மயிர்களை விலக்கிக்கொண்டு வெகு வேகமாக வந்து ராமரைத் தரிசித்தாள். எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்த ஒருத்தி மத்தியிலெழுந்துவந்து மாடியின் மீதேறிக்கொண்டாள். ஒரு கையில் ரவிக்கை யணிந்து பின் மற்றொரு கையில் ரவிக்கை போட யத்தனித்த ஒருத்தி ராமபிரான் வருகிறாரெனக் கேட்ட தும் அப்படியே சீக்கிரத்தில்வெளியேவந்து பார்த்தனள். ஒருத்தி ஒரு காலில் தண்டை யணிந்துகொண்டு இன்னொரு காலில் அணிந்து கொள்ளவிருந்த ஒருத்தி அதைமறந்து, உப்பிரிகைக்கு வேகமாகச் சென்றாள். தன் இன்ப நாயகனோடு பேசிக்கொண்டிரு ந்த ஒருத்தி பேச்சை நிறுத்தி விட்டு வெளியே வந்து விட்

டாள். தன்னுடைய புருஷனுக்குப் போஜனமளித்துக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீ போஜனபாத்திரத்தை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு ராமரைப் பார்க்க ஓடி வந்து விட்டாள். ஒருத்தி ஸ்நானஞ்செய்து நூதனவஸ்திரமுடுத்திக்கொண்டு துளஸியையும் பரமசிவனையும் பூஜை செய்து கொண்டிருக்கையில் ராமர் வந்திருக்கிறாரெனக் கேட்டு அந்தப் பூஜையை நிறுத்தி விட்டு வெளியேவந்து விட்டாள். ஜலமெடுக்கச் சென்ற ஒருத்தி குடத்தைத் தாம்புக்கயிற்றில் கட்டிக் கிணற்றில் போட்டதும் ராமரைப்பார்க்க ஆசைகொண்டு அப்படியே விட்டு விட்டு வேகமாய் ஓடிவந்து விட்டாள். தன்னுடைய குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்த ஒருத்தி மார்பின்மேல் குழந்தையை அணைத்துக்கொண்டே வந்து விட்டாள். இன்னொருத்தி வஸ்திரம் உடுத்திக்கொண்டிருக்கும்போது ராமரது வரவைக்கேட்டு அவரைப்பார்க்க அப்படியே வேகமாக வந்துவிட்டாள். இவ்வாறு அப்பட்டணத்திலுள்ள ஸ்திரீகளனைவரும் தங்கள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு ராமரைத் தரிசிக்க வந்து அங்கங்கே கூடி நின்று யானையின்மீது வருகிற ராம மூர்த்தியின்மேல் புஷ்பங்களை வாரி இறைத்துப் புகழ்ந்தார்கள். சிலர் அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய இந்த ராமச்சந்திர ப்ரபுவைப் பெற்று வளர்த்த கௌஸல்யாதேவியே இவ்வுலகத்தில் எல்லாரினும் புண்ணியத்தைச் செய்தார்; உலகத்திலுள்ள புருஷர்களுக்கெல்லாம் ச்ரேஷ்டரான இந்த ராமபிரான் ஸீதையுடன் லீலைகளை யனுபவிப்பதால் அவள் தான் மேலானவள். அவள் இந்தப் புருஷனை மணஞ்செய்து கொள்ளச் செய்த தர்மம் யாதோ தெரியவில்லையே என்று சில ஸ்திரீகளும், நாம் ஸீதையின் தாஸிகளாகப்பிறந்திருந்தால் ராமனுக்குரிய பணிவிடைகளைச் செய்யலாம்; அந்தப் புண்ணியம் நாம் செய்யவில்லையேயென்று சிலரும் பேசிக்கொண்டார்கள். இவ்விதம் புகழும் அப்பட்டணத்து ஸ்திரீகளுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு ராஜவீதி வழியே சென்று பூரிகீர்த்தியரசனால் தமக்கென்று ஏற்படுத்தியிருந்த திவ்ய கிருகத்திற்கு வந்து யானையின் மீதிருந்திறங்கி உள்ளே பிரவேசித்து அங்கே ஸீதாதேவியோடும் உறவினரோடும் சுகமாக இருந்தார்.

1-வது சருக்கம் முற்றிற்று.

2-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

மறுநாள் பூரிகீர்த்தியானவன் ராமரது கிருகத்திற்கு வந்து வந்தனஞ் செய்து இன்று தாங்கள் சபைக்குவரவேண்டு மென வணக்கத்துடன் தெரிவித்தான். ராமர் அவ்விதமே செய்கிறேன் என்று கூறித் தமது குமாரர்களுக்கு ஆபரணம் பீதாம்பரம் குண்டலம் இவைகளாலலங்கரித்துக்கொள்ளும்படி உத்தரவிட்டு அவர்களுடன் மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு தனித்தனியான பல்லக்குகளில் பரிவாரங்கள் சூழப்புறப்பட்டு, சபைக்கு வந்தார். முன்பே சபையில் ஆசனங்களில் வீற்றிருந்த அரசர்கள் யாவரும் ராமபிரான் வருவதைக்கேட்டு ஆசனத்தை விட்டெழுந்து பரபரப்புடன் எதிர்கொண்டு சென்று வெகு வணக்கத்துடன் அவருக்கு வந்தனம் செய்தார்கள். அப்போது அவரது சமீபத்திலிருந்து கையில் பிரம்பு பிடித்துக்கொண்டிருந்த சேவர்கள் ஒவ்வொரு அரசர்களின் பெயரையும் தனித்தனியே ராமருக்குக் கூறினார்கள்.

ராஜாதிராஜ! கருணாடக தேசத்தரசனாகிய விஜயன் இதோ தங்களுக்கு வந்தனம் செய்கிறார். ராகவேந்திர! இவ்வரசன் தமிழ் நாட்டிற்கதிபன், தங்களை வந்தனம் செய்கிறார். தீனதாயுளுவே! இதோ விதர்ப்ப தேசத்தரசன் தங்களை நமஸ்கரிக்கிறார். இப்பொழுது வந்தனஞ் செய்கிறவர் மகத தேசாதிபதி. சீதாபதியே! மகாபலசாலியான அவந்தி தேசத்ததிபராகிய உக்ரபாஹு இதோ! வணங்குகிறார். ரகுவீர! ஹேஹயபட்டணத்து மன்னன் ப்ரதீபன் இதோ வந்தனம் செய்கிறார் பாருங்கள். ராமசந்திரபிரபுவே! சூரதேசாதிபதியாகிய சுஷேணன் தங்களை அடிக்கடி வணங்குகிறார் பாருங்கள். கோஸலேந்திர! இதோ வணங்கி நிற்பவர் அரித்துவாரத்தில் வசித்துவரும் நீப வம்சத்தில் பிறந்த யக்ஞகீர்த்தி என்பவர். அயோத்தியாதிபதியே! கலிங்கதேசாதிபதியாகிய ஹேமாங்கதன் இப்பொழுது வணங்கியவர். இதோ இவ்வரசன் நாகப்பட்டணத்தில் வசிப்பவர், பாண்டியன் என்னும் பெயர் கொண்டவர். இவர் மகா புத்திசாலி.

இவரும் தங்களை வணங்குகிறார் பாருங்கள் என்று இவ்விதம் ராமசந்திர பிரபுவை வணங்கும் ஒவ்வொருவருடைய பெயரை யும் பட்டணத்தையும் சேவகர்கள் கூற, பிரபு அவர்களைத் தமது பார்வை முதலியவைகளால் தக்கபடி மரியாதை செய்துகொண்டு மந்திரிகளோடும் குமாரர்களோடும் பந்துக்களோடும் சபையில் பிரவேசித்தார். அங்கே மேற்குப் பக்கத்திலிருந்த அழகான ஸிம் மாஸனத்தில் ராமசந்திரபிரபு கிழக்கு முகமாக உட்கார்ந்தார்.

ராமபிரானுடைய வலது பக்கத்தில் லட்சுமணர் பரத சத் ருக்னர் மூவரும் வீற்றிருந்தார்கள். இடதுபாரிசத்தில் குசலவர் முதலியவர்களும் மந்திரிகளும் உட்கார்ந்தார்கள். சத்ருக்னரு டைய வலதுபுறத்தில் சுமந்திரர் முதலிய மந்திரிமார் உட் கார்ந்தனர். இன்னும் மற்றுமுள்ள அரசர்கள் சபையின் வட வண்டையிலும் தென்பக்கமும் கிரமமாய் உட்கார்ந்தார்கள். பிரா மணர் முதலியவர்கள் கோட்டையின் மேலுட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்; வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. தூபங்கள் ஆகாயமளவும் சென்று பரவின. தாஸிகள் நர்த்தனம் செய்தும் வந்திகள் ஸ்தோத்திரம் செய்து கொண்டும் மாகதர்கள் பாடிக்கொண்டு மிருந்தார்கள்.

இச்சமயத்தில் அரசனுடைய பௌத்திரிகளாகிய சம்பிகை ஸுமதி என்னும் இரண்டுபெண்களும் ஆடையாபரணாலங்காரத் துடன் நவரத்னமயமான மாலைகளைத் தங்கள் கையிலெடுத்துக் கொண்டு சபையின் வாயிலில் வந்து திவ்ய தேஜஸுடன் விளங்கி னார்கள். அப்பொழுது அச்சபையின் கண் வீற்றிருந்த அரசர்கள் யாவரும் அவ்விருபெண்களின் கடைக்கண்ணாகியவேலின் நுனி யால் தாக்குண்டு மன்மதபாணத்திற்குஇரையாகித் தெளிவுகுன்றி மிகவும்கஷ்டப்பட்டார்கள். சம்பிகைஎன்பவள் தென்கிழக்கு மூலை யிலிருந்து சபையில் பிரவேசித்தாள். ஸுமதி வடகிழக்கு மூலையி லிருந்து சபையில்பிரவேசித்தாள். பின்பு நந்தை என்னும் உபமா தா தன் கையில் ஒரு பிரம்பை எடுத்துக்கொண்டு சபையில் தென் னண்டை வரிசையிலிருந்த அரசர்களைச் சம்பிகை என்பவளுக் குத் தனித்தனியே காண்பித்து அவர்களின்னாரென்பதையும்அவர்

கள் குணதிசயங்களையும் எடுத்துக்கூறினாள். ஸுநந்தை என்னும் பெயருள்ள மற்றொரு உபமாதா தன்கைப் பிரம்பினால் வடவண்டை வாடையிலிருந்த அரசர்களை ஸுமதிக்குத்தனித்தனியே காண்பித்து, அவர்களின்னாரென்பதையும் குணதிசயங்களையும் கூறினாள். பிறகு பல்லக்கிலிருந்த சம்பிகையை நந்தை என்னும் உபமாதா ஓர் அரசனிடம் அழைத்துக் கொண்டுபோய் அவனைப் பின்வருமாறு வர்ணித்தாள்.

ஏ ராஜ கன்னிகையே! நான் கூறுவதைக்கவனித்துக் கேள். இவர் பாண்டிய தேசத்து மன்னன்; நாகபட்டணத்தில் வசிப்பவர்; இவர்பெயர் மதிமான். குடிகளைவெகு நியாயமாய்ப் பரிபாலிப்பவர்; அதிசமர்த்தர். உனக்குப் பிரியமாயிருந்தால் இவரை நீ வரிக்கலாம். இவ்வரசனுக்கு வாழ்க்கைப்பட்டால் நாகபட்டணத்தில் வசித்து அவருடன் வெகு ஆநந்தமாய்ப் உப்பிரிகையின்மீது விளையாடலாம் என்று கூறினாள். அவ்வரசனிடம் சம்பிகைக்குப்பிரியமுண்டாகவில்லை. ஆகையால் வேறு அரசனிடம் செல்லும்படியாக உத்தரவு அளித்தாள். உடனே நந்தை வேறு அரசனிடம் பல்லக்கைக் கொண்டு போகச்சொல்லி, "ஏ குழந்தாய்! இவ்வரசனைப் பார்; இவர் கலிங்கதேசத்ததிபர்; அவர் பெயர் ஹேமங்கராஜன்; இவரது புஜங்களில் கோடிக்கணக்கான முத்தாரங்கள் பிரகாசிக்கின்றன பார். இவருக்கு நீ மனைவியாவாயேயாயின், உப்பரிகையின் மீதிருந்து சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டு ஆனந்தத்தை யனுபவிக்கலாம். மேலும் இவருடைய பத்தினிகளுக்குத் தலைவியாகலாம் என்றாள். நந்தை இவ்விதம் சொல்லியும் சம்பிகை கேளாமல் வேறொரு அரசனிடம் போகுமாறு உத்தரவு செய்தாள். அவ்விதமே மற்றொரு அரசனிடம்போய் குழந்தாய்! இவ்வரசனைப்பார்; இவர் அரித்துவாரத்தில் வசிப்பவர்; நீபவம்சத்தைச்சேர்ந்தவர்; க்ஷீராப்தியின் மத்தியில்உற்பத்தியான சந்திரன் போல் உதயமானவர். இவ்வரசன் அநேக யக்யங்களைச்செய்து உலகத்தில் கீர்த்திபெற்றமையால் இவர் யக்ஞ கீர்த்தி யென்னும் பெயர்பூண்டனர்; ஸ்திரீகளிடம் மிகுந்த பிரியமுள்ளவர். சொர்ணஆபரணங்கள் பூண்ட இவரையே நீ வரிக்க வேண்டும்; நீ இவருக்குப் பத்தினியாவாயே யாயின் ஓடங்களிலேறிக் கொண்டு கங்கையின் அலைகளைப் பார்த்து விளையாடலாம்;

வெகு சுகமாகவிருக்கலாம் என்றாள். அவ்விதம் நந்தை கூறலும் சம்பிகை அவ்வரசனுக்கு மாலையிட இசையாமல், வேறொரு அரச னிடம் செல்லப் பணித்தாள். நந்தை வேறு அரசனிடம் அழைத் துப்போய் சம்பிகை! இவ்வரசனைப்பார். இவர் ஆவரண தேசத் தை ஆண்டு வருபவர். ஸுஷேணன் என்பது இவர் பெயர். இவ ருடைய குதிரைகள் வாயுவேகமுள்ளவை; மானைப்போன்ற விழி யினையுடைய அநேகம் ஸ்திரீகள் இவருக்கு மனைவிகளா யிருக் கின்றனர். இவரது அரண்மனையில் இரவும் பகலும் தாஸிகள் நர்த்தனம் செய்துகொண்டிருப்பார்கள். உன்முகமும்இவருடைய முகமும் ஒத்திருக்கிறது. ஏ குழந்தாய்! மறுவார்த்தை பேசாமல் இவரை வரித்துக்கொள். உன் ஜன்மம் சபலமடையும் என்றாள். நந்தை இவ்விதம் கூறியதும் சம்பிகை அவனைத் தாஸி விடனெ ன்று அறிந்துகொண்டு வெறுப்புக்கொண்டு வேறு அரசனிடம் போகும்படி கூறினாள். உடனே நந்தை வேறொரு அரசனிடம் அழைத்துச் சென்றாள். கண்மணியே! இவ்வரசனைப்பார். இவர் ஹேஹயபட்டணத்தரசன்; ஆயிரம் கைகளையுடைய கார்த்த வீரி யார்ஜுனனுக்கு ஆபரணம் போன்றவர். ப்ரதிபனென்பது இவர் பெயர். மிகசூரர், அதிரதர். இவரை நீ வரித்து இவருக்குப் பட்ட மகிஷியாய் விட்டால், இவரோடு நர்மதா நதியில் பலவித மான ஜலக்ரீடைகளைச் செய்துகொண்டு சுகமாகவிருக்கலாம் என் றாள். மிகவும் சாமர்த்தியசாலியான அந்தப்பெண் அவனை வரிக் காமல் மேலே செல்லும்படி நந்தைக்குக் கூறினாள். அம்மாதிரி அநேக அரசர்களுடைய வரலாற்றையும் குணாதிசயத்தையும் நந் தைகூறிவர, சம்பிகை தடுத்துக்கொண்டேவந்து ராமபிரானுடைய மந்திரிகளாகிய சுமந்திரர் முதலியவர்களையுந் தாண்டி சத்ருக்னரி டம் வந்தாள். இங்குவந்ததும் நந்தையானவள் இவ்வரசரைப்பார். இவர் பரதாழ்வாருக்கு இளையவர்; கோஸலதேசத்தரசனான ராம பிரானுக்குச் சகோதரர். இவர் அயோத்தியில் வசித்து வருகிறார். ராமபிரான் கூறும் வார்த்தைகளுக்கு இவர் மறு பேச்சுப் பேசுவ தில்லை. நீ இவரை வரிப்பாயேயாயின் சுருத கீர்த்திக்குச் சகோ தரிபோலிருக்கலாம் என்றாள். நந்தை இவ்விதங்கூறியும் சம்பிகை சத்ருக்னரிடம் தன்மனதைச் செலுத்தாமல் மேலே செல்லும்படி

நந்தைக்குக் கண் ஜாடை செய்தாள். உடனே நந்தை பரதரிடம் அழைத்துப்போய் ஏ குழந்தாய்! இவர்தான் சத்ருக்னருடைய தமையனான பரதர். கைகேயியின் புத்திரர். ராமருக்கு உண்மை யான சேவை செய்பவர். இவரை நீ வரித்தால் இவரோடும் மாண் டவியோடும் சரயூநதியில் ஆநந்தகரமாக ஜலக்ரீடை செய்யலாம் என்றாள். சம்பிகை இதற்கும் செவி கொடாமல் வேறொரு அரசனிடம் செல்லக் கட்டளையிட்டாள். பிறகு நந்தை இலட்சு மணரிடம் அழைத்துச் சென்று இவரைப் பார். இவர் சுமத்தி ரையின் வயிற்றிற் பிறந்தவர். இவர்தாம் இலட்சுமணர் என்னும் திருநாமம் படைத்தவர். அயோத்தியாபுரியில் வசிப்பவர். எப் போதும் ராமபிரானுக்குச் சேவை செய்வதில்தான் இவருக்குப் பிரியம். இவர்தாம் மகாதுஷ்டனான மேகநாதனைக்(இந்திரஜித்தை) கொன்றவர். இவர் ஆதிசேஷனுடைய அம்சம். இவரை நீ வரித் தால் ஊர்மிளைக்குச் சகோதரி போலாகலாம் என்றாள். சம்பிகை, அவர்கள் யாவரும் ராமருக்குச் சேவை செய்வதில் பிரியமுள்ளவ ர்களா யிருப்பினும் அவர்களுக்கு ராஜலக்ஷணங்களுக் குற்ற குடை சாமரம் ஒன்று மில்லாதிருப்பதாலும் எல்லாரும் பத்னிக ளுடன் கூடினவர்களாயிருப்பதாலும் அவர்களை விரும்பாது மேலே செல்லும்படி நந்தைக்குத் தெரிவித்தாள். அவள் பிறகு சம்பிகை யை ராமர் சந்நிதானத்திற்கு அழைத்துச்சென்று அவரை ஸ்தோ த்திரிக்கலானாள். ஏ சம்பிகே! நீ ராகவனைப் பார்க்க நேர்ந்தது. உனக்குப் பாக்கியமேயாம். இவரை வர்ணிக்க எதிரில்வந்திருக்கும் நானும் புண்ணியவதிதான். குணக்கடலாகிய ராமபிரான் எங்கே? மந்த புத்தியுள்ள ஸ்திரியாகிய நான் எங்கே. இவரை வர்ணிக்கும் விஷயத்தில் வான்மீகி மஹரிஷியே தடைபட்டுப் போயிருக்கும் போது, நான் இவரை எவ்வாறு வர்ணித்தல்கூடும்? வான்மீகி மஹரிஷியால் ராமரது சரித்திரம் நூறுகோடி சுலோகங்களால் வர்ணிக்கப்பட்டிருந்தாலும் அவரது குணங்களின் கோடியில் ஒரு பாகம் கூட வர்ணிக்கப்படவில்லை. ஆயினும் இவரைப்பற்றி எனக்கு தெரிந்தவரையில் சொல்லுகிறேன்கேள். இந்த ஸ்ரீராமர் சூரிய வம்சத்திற்கு ஆபரணம்போன்றவர், தசரதரின் பிரிய

முள்ளகுமாரர். கௌஸல்யாதேவியிடம்பிறந்தவர். கருணாநிதியான நாராயணரே இவர். இவர் தாடகையைக் கொன்று விசுவாமித்திர மஹரிஷியின் யாகத்தைக் காப்பாற்றினார். அஹலியையின் சாப நிவர்த்தி செய்தார். சிவனது வில்லை யொடித்து ஜனக மஹாராஜனுடைய புத்திரியாகிய ஸீதையை மணம்செய்து கொண்டார். பரசுராமரை ஜயித்தார் அரசர்களை யெல்லாம் ஜயித்துப் பரதனைக் காப்பாற்றினார். தந்தையினுடைய வாக்கியத்தைப் பரிபாலனம் செய்வதற்காக ஸஹோதரனான லக்ஷ்மணனோடும் பத்தினியான ஸீதையோடும் அரண்யத்தில் வசித்தார். அங்கே விராதன் கரன் தூஷணன் முதலியவர்களைக் கொன்றார். இன்னும் மான்வேடம் பூண்டுவந்த மாரீசனையும், கபந்தன் வாலி, இவர்களையும் கொன்றார். ஸமுத்திரத்தில் அணைகட்டி லங்கைசென்று அங்குள்ள ராக்ஷஸர்களை யெல்லாம் நாசஞ்செய்து கொடிய துஷ்டனாகிய ராவணனையும் வதம் பண்ணி ஸீதையையடைந்து ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து கொண்டார். பிறகு பரிசுத்தமான அநேக யாகங்கள் செய்தார். முதலில் ஜானகியைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு, பிறகு அவளைத் திரும்பவுமடைந்து, தமது குமாரர்களான குசன் லவன் என்பவராகிய இவர்களோடு அஸ்வமேத யாகக் குதிரைக்காகச் சண்டை செய்தார். ஏக பத்னீ வ்ரதமுடையவர். நிச்சய மனமுடையவர். மஹா சாந்தசீலர். சத்தியவந்தர். ஒரேபாணத்தால் சத்துருக்களை யழிக்கவல்லவர். இவரது கொடியில் எப்போதும் ஹனுமார் இருப்பர். அரசர்களெல்லோரும் இவரை வணங்குவதால், அவர்களது ஸிரஸ்ஸிலுள்ள முத்துக்களால் இவரது திவ்ய சரணாரவிந்தம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது; சிலாக்யமான ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து குடை சாமரம் இவைகளால் உபசரிக்கப்படுகிறார். ஏ குழந்தாய்! நீ இவரை வரிக்கவேண்டும். வரிப்பாயேயாயின் ஸீதையோடு சுகமாக இருக்கலாம். இவர் ஏழு தீவுகளுடன் கூடிய இப்பூமிக்கு அதிபதி. ஆகையால் நீ மேலே செல்லாது இவரது கழுத்திலேயே நவரத்னமயமான மாலையைப் போட்டுவிடு. இவ்வாறு நந்தை சொன்னதைக் கேட்ட சம்பிகை அற்ப பாக்கியஞ் செய்தவளாகையால், தெய்வ வசத்தால், அவரிடத்தில் அவளுக்கு மனம்

செல்லவில்லை மேலும் ஸீதை யென்னும் பதிவிருதா சிரோமணி பத்னியாய் இருக்கிறாள் என்றுகேட்டதாலும், ஸ்ரீராமர் ஏகபத்னீ விருதமுடையவர் என்றதாலும் நம்மைக் கவனிக்க மாட்டாரென்கிற எண்ணம் சம்பிகையின் மனதில் உண்டாயிற்று. அதனால் தான் அவள் ஸ்ரீராமரை வரிக்கவில்லை யென்றுஞ் சொல்லலாம். பிறகு அவளுடைய கஞ்ஜாடையால் நந்தை அவளைக் குசனிடம் அழைத்துச்சென்று அவனை வர்ணிப்பதில் ஆசைகொண்டு கூறுகிறாள். ஏ கன்னிகையே! இவர் ஸ்ரீராமரது பிள்ளை. இவர்பெயர் குசன்; இவர்தான் மூத்தவர். மிகவும் பால்ய வயதை யுடையவர். ஜானகி வயிற்றில் பிறந்தவர். இன்னும் இவருக்குக் கல்யாணம் ஆகவில்லை. வித்தையில் மிகவும் சமர்த்தர். மிகவும் வணக்கமுடையவரானாலும் அசுவமேதக் குதிரைக்காகத் தகப்பனாரோடு போர் புரிந்தார், இவர் மிகவும் பௌருஷமுள்ளவர். மஹரிஷியான வால்மீகியே இவருக்கு ஆசாரியர். ஏ மாது சிரோமணியே! தேவர் மனிதர் முதலிய யாவரும் புகழுங் கீர்த்தியையுடைய இந்த வாலிபரை நீ அவசியம் வரிக்கவேண்டும்; நவரத்ன மயமான மாலையை இவரது கழுத்தில் நீ சுகமாய்ப் போடவேண்டும் என்றாள். இவ்வாறு நந்தை சொன்ன வார்த்தைகளைக் கேட்டு சம்பிகை சிறிது புன்னகை கொண்டு தனது கையிலிருந்த மாலையை குசனுடைய கழுத்தில் போட்டாள். அப்போது மங்கள வாத்தியங்கள் சப்தித்தன. வந்தி மாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். குழந்தையான குசன் ஸபையில் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டான்.

அப்போது மிகவும் ஸந்தோஷத்தை யடைந்த பூரிகீர்த்தி அரசர்களெல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது குசனுடைய மடியில் சம்பிகையை உட்காரவைத்தான். இந்த வைபவத்தை உப்பிரிகையின் மேலிருந்த ஸீதாதேவி ஸ்திரீஜனங்களோடு பார்த்து மிகவும் ஸந்தோஷித்தாள். ஸ்ரீராமரும் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்தார்.

2-வது சருக்கம் முற்றிற்று.

3-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

பிறகு கையில் பிரம்புபிடித்த ஸுநந்தை என்னும்தாதியானவள் பல்லக்கின்மீதுள்ள ஸுமதிக்கு வடவண்டை வீற்றிருக்கும் அரசர்களின்னாரென்பதையும் அவர்களின் குணாதிசயங்களையுமெடுத்துக் கூறுகிறாள்.

"குழந்தாய்! நான் கூறுவதைக்கேள். இந்த ராஜசிரேஷ்டனைப்பார். இவர் அவந்தி தேசத்தரசன். இவர் பெயர் உக்ரபாகு. இவர் அனுத்தமன் (இவரைக் காட்டிலும் உத்தமனில்லை). இவருக்குச் சமானமான அரசன் இவ்வுலகத்தில் கிடையாது இவ்வரசனை நீ வரிக்கவேண்டும். இவருக்கு நீ பட்டமகிஷியாவாயேயாயின் க்ஷீராப்தியின் மணலிற் கூடாரங்களில் வசித்துக்கொண்டு சுகமாக இருந்து ஆனந்தமடையலாம்" என்றாள். அனுத்தமன் என்னும் பதத்திற்கு உத்தமனில்லை யென்றும் பொருள்படு மாதலால் இந்த விதமும் பொருள் படும்படி ஸுநந்தை கூறினாளென்று ஸுமதி தெரிந்துகொண்டு அவனை வரிக்காமல் மேலே செல்லென ஸுநந்தைக்குத் தெரிவித்தாள். அவள் அவ்விதமே வேறு அரசனிடம் அழைத்துச் சென்று "இவர் விதர்ப்ப தேசத்திலுள்ளவர். இவர் பெயர் அங்கநாதன். இவரை நீ அவசியம் வரித்தல்வேண்டும். இவர் ஸ்திரீகளிடம் ப்ரியமுள்ளவர். வெகு பால்யம்; கவசகுண்டல கேயூராதி பூஷணங்களோடு விளங்குகின்றனர். இவருக்கு நீ பட்ட மகிஷியாவாயேயாயின் பயோஷ்ணி யென்னும் நதியில் நீ இவரோடு சுகமாய் விளையாடலாம்" என்று தாதி கூறினள். இவ்வரசனையும் ஸுமதி யிச்சிக்காமல் வேறு அரசனிடம் போகும்படி கூறினாள். அவ்விதமே ஸுநந்தைவேறு அரசனிடம் அழைத்துச்சென்று இவர் மகததேசமன்னன். இவர் பெயர் பரந்தபன். இவரை நீ வரிக்காமல் இவரைக் காட்டிலும் மேலானவர் உளரென்று செல்லாதே. நீ இவருக்குப் பட்டமகிஷியாவேயாயின் பிர்மதீர்த்தம் என்று கூறப்படும் வெந்நீர்க் குளத்தில் பனிகாலத்தில் சுகமாக விளையாடலாம். இவரையே வரித்து விடு" என்றாள். இம்மன்னனிடத்தும் ஸுமதி மனஞ் செலுத்தவில்லை. மேலே

செல்லும்படி உபமாதாவுக்குக் கட்டளையிட்டாள். உடனே அவள் வேறு அரசனிடம் அழைத்துச்சென்று "மாதே! இவ்வரசனைப் பார், இவர் தமிழ் தேசத்திலிருப்பவர். இவர் கம்புகண்டன் என்னும் பெயர்கொண்டவர். காஞ்சீ பட்டணத்தில் வசிக்கிறார். இவரை நீ விடாமல் வரித்துவிடு. வேறு ராஜனிடம் செல்லவேண்டாம். இவரைப் பர்த்தவாக அடைந்தால் பொற்றாமரைப் பூக்கள் நிறைந்த அழகிய ஸர்வதீர்த்தத்தில் விதம் விதமான கிரீடைகளை அநுபவிக்கலாம். மேலும் தினந்தோறும் இவ்வரசனோடு வரத ராஜரென்று பெயருள்ள விஷ்ணுவையும் ஏகாம்பரநாதரென்ற சிவனையும் பக்தியோடு ஆராதிக்கலாம். சாதாரண அரசனென்று இவ்வரசனை விட்டுவிடாமல் அவசியம் வரித்தல்வேண்டும்" என்று கூறினாள். ஸுமதி இவ்வரசனையும் வரிக்க எண்ணமில்லாமல் உபமாதாவுக்கு வேறு அரசனிடம் செல்லத் தெரிவித்தாள் அவ்விதமே ஸுநந்தை அவளை வேறு அரசனிடம் அழைத்துச்சென்று, "ஏபெண்மணியே! இவ்வரசனைப்பார்த்தாயா? இவர் கருணாடகதேசத்திலுள்ளவர். இவர் பெயர் விஜயபூபதி. தாமரைப்பூப்போன்ற வதன முடையவர். இவர் மிகவும் அழகுள்ளவர். நான் சொல்வதைக் கேட்டு நீ இவரையே வரித்தல் வேண்டும். நீ இவரது பட்டமகிஷியானால் அழகிய கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள வனத்தில் இவரோடு பல லீலைகளைச்செய்து சுகப்படலாம். ஆகையால் என் வார்த்தையைக்கேட்டு இவரையேமணந்துகொள். மேலேசெல்லாதே" என்றாள். உபமாதா இவ்விதம் சொன்னதில் என் வார்த்தையைக் கேளாதே, மேலே போகலாமென்று ஸுநந்தைக்கும் ஜாடைகாட்டினாள். இவ்வாறு அநேகம் அரசர்களை உபமாதாவானவள் தனித்தனியாய் ஸ்தோத்திரம்பண்ணுவதையும் அதில் தடுப்பதற்குரிய வேறு பொருள் இருப்பதையும் கவனித்து ஸுமதியானவள் ஒரு அரசனிடமும் தன் மனதைச் செலுத்தாமல் மேலே போவென்றே சொல்லிவந்தாள். இவ்விதம் அநேகம் அரசர்களையும் இராமருடைய மந்திரியின்பிள்ளைகளையும் கடந்து சிறுவனாயூபகேதுவினிடம் வந்தபின், இவன் மிகவும் அழகுள்ளவன். இவன் சத்ருக்னனுடையகுமாரன். இவனுக்கு யூபகேதுவென்று பெயர். தன் தகப்பனாரின் ஸகோதரரான ராமரது பிள்ளை

களை அநுசரித்து நடப்பவன். என் கண்மணியே! இவனைப் பார். மிகவும் கவனித்து இவனையே நீ வரிக்கவேண்டும். மேலே செல்லாதே, என்றாள். இவ்விதம் இவள் கூறியதில் இவனை நீ வரிக்கவேண்டாம், மேலே போவென்று அர்த்தம் தோன்றியதால் ஸுமதி மறுபடியும் தாதியை மேலே போவென்றே கூறினாள். அவ்விதமே ஸுமதி கிரமமாய் ஸுபாகு புஷ்கரன் தக்ஷன் சித்திரகேது அங்கதன் முதலியவர்களைக் கடந்து சென்று லவனிடம் போனாள். அந்த லவனை அன்போடு நோக்கிய ஸுமதியைப்பார்த்து "பெண்மணியே! பாலனான இவனைப்பார்த்தாயா? இவன் ஸ்ரீராமருடைய இரண்டாவதுபிள்ளையான லவன் என்பவன். அதிபால்யன். இனிமேற்றான் இவனுக்கு விவாகமாகவேண்டும். ஸீதாதேவியால் அன்புடன் வளர்க்கப்பட்டவன். வான்மீகி மஹாிஷியின் அநுக்கிரகத்தால் சகல வித்தைகளையும் பெற்றவன். குசனுக்குத் தம்பி. நீ இவனை வரிப்பதோடு இவன் கழுத்தில் உடனே மாலை போட்டு விடு. இப்போது உன் ஸகோதரியான சம்பிகை குசன் மடியில் எவ்வாறு வீற்றிருந்தாளோ அவ்வாறு நீயும் இவன் மடியில் வீற்றிருந்து எங்களுக்கெல்லாம் மிகவும் ஆனந்தத்தை யுண்டுபண்ணு" என்று ஸுநந்தை சொன்னதைக்கேட்டு ஸுமதி புன்சிரிப்புடன் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டு லவனுடைய கழுத்தில் மகிழ்ச்சியுடன் மாலையைப்போட்டாள். அப்போது வாத்தியங்கள் முழங்கின. பாடகர்கள் பாடினார்கள். தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்போதுமிகவும் சந்தோஷமடைந்த பூரிகீர்த்தி யென்னும் அரசன் பூர்ணமனதோடு லவனுடைய மடியில் ஸுமதியை உட்காரவைத்தான். இவ்வைபவத்தைக் கண்ட ராகவர் பரமானந்த மடைந்தார். ஸீதையும் தன் தோழிகளோடு உப்பரிகையின் மேலேறிக்கொண்டு பலகணி வழியாய்ப் போய்ப் பார்த்துக் களித்தாள். உடனே ராஜ ச்ரேஷ்டனான பூரிகீர்த்தி மற்ற அரசர்களைப் பார்த்து நீங்கள் கல்யாண மங்களத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு போகலாம் என்று கேட்டுக் கொண்டான். அரசர்கள் யாவரும் அதற்குச் சம்மதித்து முகவாட்டமுற்று உற்சாகமின்றி மன்மதபாணாவஸ்தையுடன் சாமர்த்தியமற்றவர்கள் போலத் தங்கள் தங்கள் விடுதிக்குச் சென்றார்கள்.

ராமரும் தமது உறவினரோடும் குழந்தைகளோடும் தமது விடு திக்குச் சென்றார்.

பிறகு அடுத்த நாள் பூரிகீர்த்தி புரோகிதரோடு ராமர் விடுதிக்குச்சென்று அவரை வணங்கி "ப்ரபுவே! சுகத்தை யுண்டாக்கக்கூடிய மங்களகரமான ஒரு நல்ல முகூர்த்தத்தைப் பார்த்து, அதில் விவாகத்தை நடத்துவதற்குத் தங்களிஷ்டப்படி மண்டபங்கள் நிர்மாணம் செய்யத் தாங்களே ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார். ராகவரும் அப்படியே ஆகட்டுமென்று கூறி வசிஷ்டரிடந் தெரிவிக்க அவர் சோதிடசாஸ்திரமறிந்த அநேகருடன் நன்றாய் ஆராய்ந்துபார்த்து, அன்றைக்கு ஐந்தாவது நாளில் ஒரு முகூர்த்தத்தைக் குறிப்பிட்டார். இதன்பின் பூரிகீர்த்தி தன்னுடைய பந்துமித்திரர்களுடனிருந்து முதலில் விநாயகரைப் பூஜித்து லக்ன பத்திரிகை கொடுத்தான்; சோதிடர்களுக்கும் ஸ்ரீராமருக்கும் தக்க உபசாரஞ் செய்து தன்கிருகம் சென்றான். பிறகு ராமரது உத்தரவுப்படி லக்ஷ்மணர் மண்டபம் முதலியவைகளை நிர்மாணித்தார். பூரிகீர்த்தி அப்பட்டணம் முழுதும் கொடிகள் தோரணங்கள் இவைகளால் அலங்கரிக்க உத்தரவளித்தான். பிறகு அந்த முகூர்த்த சமயத்தில் ஸீதை முதலிய ஸ்திரீ ஜனங்கள் குசனையும் லவனையும் மணப்பெண்களையும் திவ்ய ஆஸனங்களில் உட்காரவைத்து அவர்களுக்கு எண்ணெய்தேய்த்து மங்களவாத்திய முழங்க மங்கள ஸ்நானம் செய்துவைத்தார்கள். அப்போது ராமர் முதலியவர்களும் வெகு ஆனந்தமாய் எண்ணெய் தேய்த்துக்கொண்டு மங்கள ஸ்நானம் செய்தார்கள்.

பிறகு புரோகிதரான வஸிஷ்டர் மற்றுமுள்ள மகரிஷிகளோடும் ராமரும் அவரது பந்து மித்திரவர்க்கங்களும் குசன் லவன் முதலான பாலர்களும் எண்ணிறந்த இன்னும் மற்றுமுள்ள யாவரும் முத்துமயமான அம்மண்டபத்தில் வீற்றிருக்கும்போது வசிஷ்டர் சில முனிவருடனிருந்து விக்நேச்வர பூஜையைச் செய்வித்து, கிரமமாக புண்யாகம் முதலான காரியங்களைச் செய்வித்தார். தேசாசாரங்களையும் குலாசாரங்களையும் சரியாக நடப்பித்து இஷ்ட தேவதையைப்பூஜித்து கல்யாணத்திற்குரியதேவதையைப் பிரதிஷ்டை செய்தார். அப்போது ஸீதை முதலான ஸ்திரீகளும்

சிவப்பு, பச்சை, மஞ்சள் முதலிய வர்ணமுள்ள விலையுயர்ந்த ஜரிகை வஸ்திரங்களையுடுத்துக்கொண்டு அநேகவிதமான ஆபரணங்களணிந்து மண்டபத்திற்குச் சமீபத்தில் வந்து வெகு அழகாக விளங்கினார்கள். இதற்குமுன் ஸ்வயம்வரத்திற்கே போயிராத ஆயிரக்கணக்கான முனீச்வரர்கள் அந்த ஸ்வயம்வரத்தைப் பார்க்கவந்தார்கள். குசன் லவன் இவர்களுக்குவிவாகமஹோற்சவம் என்று கேள்விப்பட்டு அநேகம் பிராமணர்கள் வந்தார்கள். ராமசந்திரப் பிரபு லக்ஷ்மணனோடும் ஸீதையோடுமிருந்து அந்த பிராமணர்களுக்கு வஸ்திரம் ஆபரணம் பசு முதலியவைகளை அநேகமாகக்கொடுத்தார். அப்பால் பூரிகீர்த்தி பந்து மித்திரர்களோடும் அநேகம் அரசர்களோடும் மங்களவாத்திய கோஷத்தோடும் குசலவர்களையழைத்துச் செல்ல அவர்கள் வீட்டிற்கு வந்தான். மகாவீரியமுள்ள பூரிகீர்த்தியினுடைய பிள்ளை குசனையும் லவனையும் விலையுயர்ந்த வஸ்திரம் ஆபரணம் இவைகளைக்கொடுத்து மண்டபத்தில் பூஜித்தான். பிறகு அவ்விரண்டு குமாரர்களும் பெரிய யானைகளின் மேலேறிக்கொண்டு திவ்யசாமரங்கள் வீச எதிரில் தாஸிகள் நர்த்தனம் செய்ய மங்களவாத்தியங்கள் கோஷிக்க வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்ய ஸீதாதேவி முதலான உத்தமஸ்திரீகள் பெண்யானைகளின்மேலேறிக்கொண்டு பின்னேவர, பட்டணத்து ஸ்திரீகள் உப்பரிகைகளின் மேலேறிக்கொண்டு புஷ்பங்களையும் பொறிகளையும் வருஷிக்க, இன்னும் சிலர் மஞ்சள், சிவப்பு, முதலிய பல வர்ணமுள்ள தானியங்களையும் மங்களகரமான முத்துக்களையும் வாரி யிறைக்க, வெகுஆனந்தத்தோடு வீதிகளில் சென்றார்கள். அப்போது புஷ்பங்கள் பரப்பிய வீதிகளையும் அலங்காரமாக மரம்போல் செய்யப்பட்ட தூண்களையும் கொடிமரங்களையும் நெருப்புப்பட்டதும் எரிகிற விருக்ஷங்களையும் மனிதரைப் போல் செய்து வண்டிகளில் வைத்திழுக்கப்படும் பதுமைகளையும் ஆகாயத்தில் மின்னல் போல் செய்து வைக்கப்பட்ட ஒளியையும் இன்னும் அநேக வேடிக்கையான பாணங்களையும் பார்த்துக்கொண்டு உல்லாஸமாக்ச் சென்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பூரிகீர்த்தியின் உத்தமமான மண்டபத்தினருகே சென்று யானைகளிலிருந்திறங்கி உள்ளே பிரவேசித்தார்கள். அப்பொழுது அவருடைய குருக்கள் பிராம்மணர்க

ளோடு அவர்களுக்குச் சாஸ்திரப்படி மதுபர்க்கம் முதலானவை களையும் ஆஸனம் முதலானவைகளையும் கொடுத்து உபசரித்தார்கள். இச்சமயம் மண்டபத்திற்கு ஸமீபத்தில் ராமராஜன் ஸீதையோடும் இன்னும் மற்றுமுள்ள சுமங்கலிகளோடும் உபாத்தியாயர் கூறியபடி அப்பெண்களுக்கு பூஜை செய்தார். பிறகு நல்ல முகூர்த்தம் வந்ததும் குருவானவர் குசனை சம்பிகையோடும் லவனை ஸுமதியோடும் வெவ்வேறு வேதிகைகளில் சேர்த்து உட்காரவைத்து அவர்களுக்கு நடுவில் ஒரு பட்டு வஸ்திரத்தைமறைவாகக் கட்டி அவரவர்களுக்குத் தனித்தனியே வெவ்வேறு வஸ்திரங்களைக் கொடுத்து உடுத்துக் கொள்ளச் சொல்லி அலங்கரித்தார்கள். அப்போது மங்கள வாத்தியங்கள் முழங்கின. அந்த மங்கள சப்தங்களைக் கேட்டுக் கொண்டு ஜனங்களெல்லாரும நிச்சப்தமாயிருந்தார்கள்.

3-வது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஸீதை, ராமர், பார்வதி, பரமேசுவரர், கணேசர், நந்தி சுப்ர மண்யர், லக்ஷ்மணர், பரதர், பிர்ம்மா, சத்துருக்னர், முனிவர் கள், புண்ணிய தீர்த்தங்கள், பர்வதங்கள், திக்பாலகர்கள், சூரிய சந்திரர்கள், அநுமந்தர் இவர்கள் யாவரும் உங்களுக்கு மங்கள மருளட்டும்" என்று குருவாகிய வசிஷ்டர் ஆசி கூறி, "ஸீதாபதி யாகிய ஸ்ரீராமசந்திர ப்ரபுவைப் ஸ்மரிப்பதே சுபலக்னம், சுப தினம், சுபநக்ஷத்திரம், சந்திரபலம், வித்யாபலம், தெய்வபலம் முதலியவைகளாகும்" எனவும் மங்கள வசனங்கள் கூறி ஆசீர் வதித்தனர். பற்பல வாத்தியங்கள் முழங்கின. இத்தருணத்தில் வசிஷ்டர் குறுக்கிடப்பட்டிருந்த வஸ்திரத்தை எடுத்து "ஓம் புண் யாகம்" என்று சொன்னார். பிறகு சாஸ்திர முறைப்படி பாணிக்ர ஹணத்தை நடத்தி லாஜஹோமம் (பொரியிடல்) முதலியவை களையும் மங்களாசாரப்படி செய்து முடித்தார். இச்சமயம் மங்கள வாத்தியங்கள் முழங்கின. தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். வந்திமாகதர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். சந்தோஷத்துடன் அனேக தானங்கள் செய்யப்பட்டன. பிறகு குசன் லவன் இருவ ரும் தத்தம் பத்தினியை இடுப்பில் எடுத்துக்கொண்டு ஸீதை, ஊர்மிளை முதலிய பல ஸ்திரீகள் சூழ போஜன சாலைக்குச் சென் றார்கள். அங்கே பார்வதி பரமேசுவரரைப் பக்தியுடன் பூஜித்தார் கள்.

* * * * *

அப்பால் குசன் லவன் இவ்விருவரும் தத்தம் பத்தினியை அருகில் வைத்துக்கொண்டு அநேக ஸ்திரீகளுக்கு மத்தியில் போஜனஞ் செய்தார்கள். உபநயன காலத்தில் தாயாரோடும் விவாககாலத்தில் மனைவியோடும் புசிக்க வேண்டுமென்பது விதி; மற்றவரோடு புசிக்கின் பாபமுண்டாகும். ராமபிரானும் தமது பந்துக்கள், மித்திரர்கள் ராஜ ச்ரேஷ்டர்கள் இவர்க ளுடன் பூரிகீர்த்தியின் கிருகத்தில் போஜனஞ் செய்து மகிழ்ந்

தார். இவ்விதமே ஸீதையும் பூரிகீர்த்தியின் கிருகத்தில் தன் தோழிமார்களுடன் போஜனம் செய்தாள். யாவரும் போஜனம் செய்த பின்பு, குசன் லவன் இவ்விருவரும் தங்கள் தாய்மார், மாமிமார் இவர்களுக் கெதிரில் எல்லா ஸ்திரீகளும் பார்த்துக் கொண் டிருக்கும்போதே அங்கிருந்த உத்தமஸ்திரீகளின் சொற்படி, தத்தம் பத்தினியினுடைய பாதங்களில் தலைவைத்து வணங்கினார்கள். பிறகு வதூவரர்கள் அழகாய் நலங்கிட்டு விளையாடி மகிழ்ந்தார்கள். இவ்வாறு உற்சாகமான அநேக வேடிக்கைகள மூன்றுநாள் நிகழ்ந்தன. நான்காம் நாள் மூங்கில் பாத்திரங்களில் தீபம்வைத்து ஆலத்தி சுற்றித் தம்பதிகளுக்குத் திருஷ்டிப்பரிகாரம் செய்தார்கள். பிறகு நர்த்தனம் செய்வதில் தேர்ந்தவர்கள் தம்பதிகளைத் தங்கள் தோளில் தூக்கிக்கொண்டு நர்த்தனம் செய்தார்கள். இதைக்கண்ட தம்பதிகளின் தாய்மார்கள் வெகு சந்தோஷமடைந்தார்கள். பூரிகீர்த்தியானவன் தனக்கு ராமபிரானுடைய சம்பந்தம் கிடைத்ததென்ற சந்தோஷத்தினால் குசனுக்கும் லவனுக்கும் பதினாயிரம் யானைகள், பதினாயிரம் பல்லக்குகள் ஐம்பதினாயிரம் குதிரைகள், பதினாயிரம் தேர்கள், களங்கற்ற ஆபரணங்கள், வஸ்திரங்கள், பசுக்கள், சேவர்கள், தாஸிகள் முதலியவர்களைத் தனித்தனியே ஸ்திரீதனமாகக் கொடுத்தான். இவ்விதம் மரியாதை பெற்றுக்கொண்ட பின்பு ராமபிரான் தமது குமாரர்கள், அவர்களின் பத்தினிகள், ஸீதை, பந்துக்கள் பட்டணத்து ஜனங்கள் இவர்களோடும் மித்திரர்களோடும் முன்போலவே பலவித வேடிக்கைகளுடன் தாம் இறங்கியிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். பிறகு அந்த வடபுரியில் ஒரு மாத காலம் ஸீதாதேவியுடன் சுகமாக வசித்திருந்து பிறகு யாவருடனும் தமது பட்டணத்திற்குப் புறப்பட்டார்.

அயோத்தியை யாள ராமபிரானால் முன்பு ஏற்படுத்தப் பட்ட விஜயன் என்பவன் ராமர் வருவதைக்கேள்விப்பட்டு, பட்டண முழுவதையும் பதாகை தோரணம் புஷ்பம் முதலியவற்றா லலங்கரித்தான். பற்பலவித வாத்தியங்களுடனும் அநேக யானைகளுடனும் புறப்பட்டு ராமரை எதிர்கொண்டழைத்தான்.

ராமர் தமது பிள்ளைகள் அவர்கள் மனைவிகள் மித்திரர்கள் பந்துக்கள் முதலியவர்களோடு சந்தோஷமாக வாத்தியக்காரர்கள் வாத்தியங்களை முழக்கவும், வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்யவும், பட்டணத்தில் பிரவேசித்தார் குசன் லவன் இவ்விருவரும் தத்தம் மனைவியரோடு யானையின் மீதேறி வருவதைக்கண்ணுற்ற அந்நகரஸ்திரீகள் யாவரும் புஷ்பங்களையும் பொரிகளையும் வாரியிறைத்து வாழ்த்தினார்கள். இவ்வித வைபவத்துடன் ராமபிரான் தமது கிருகத்திற்குச்சென்று லக்ஷ்மியைப் பூஜித்து, அநேகதானங்களைச்செய்தார். மித்திரர்களுக்கும் பட்டணம் தேசங்களிலிருந்து வந்த சகலஜனங்களுக்கும் வஸ்திரா பரணங்களளித்துச் ஸந்தோஷப்படுத்தினார். பின்தம்முடன் வந்த பூரிகீர்த்தியின் மந்த்ரிகளுக்கு நல்ல மரியாதைசெய்து அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினார். இதன் பின் சுக்ரீவன் விபீஷணன் இவர்களையும் உபசரித்து அனுப்பினார். யாவரும் பரமானந்தத்துடன் ராமரை வணங்கிவிட்டுத் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். ராமபிரான் தமது குமாரர்கள் அவர்கள் பத்தினி பந்துக்கள் முதலியவர்களுடனிருந்து சுகமாக ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். பிறகு பூரிகீர்த்தி சிராவண மாதம் அமாவாசை முதல் பதினாறுபண்டிகைத் தினங்களிலும் ராமபிரானை மக்கள்களோடும் பந்துமித்திரர்களுடனும் தன் கிருகத்திற்கு வரவழைத்து அவர்களுக்கு வஸ்திராபரணங்களளித்து உபசரித்து, பிறகுஅயோத்திக்கு அனுப்பிவந்தான். இவ்விதம் வருஷந்தோறும்செய்வது வழக்கம். ஏ, விஷ்ணுதாஸ! ஒரு வருஷத்திலுள்ள பதினாறுபண்டிகைத் தினங்களையும் உனக்குச் சொல்லுகிறேன் கேள். சிராவணமாதம் அமாவாசை, புரட்டாசிமாதல் சுக்லபக்ஷம் சதுர்த்தசி, விஜயதசமி, தீபாவளியின் நான்கு தினங்கள், மார்கழிமாதம் சுக்லபக்ஷம் பஞ்சமி, மகர சங்க்ராந்தி (தைமாதப் பிறப்பு) ரதசப்தமி, சித்திரைமாதம் சுக்ல பக்ஷம் ப்ரதமை, பூர்ணிமை, அக்ஷயதிருதியை, ஆடிமாதம் பூர்ணிமை, சிராவண மாதம் சுக்லபக்ஷம் பஞ்சமி ஆகிய இப்பதினாறு தினங்களும் வருஷத்தில் பண்டிகைத் தினங்களாம்.

ஏ விஷ்ணுதாஸ! நான் கேட்டபடி குசலவர்களின் விவாகத்தை உனக்குக் கூறினேன். ராமபிரான் மங்களகரமாக சொர்க்கத்திற்குச் சென்றபிறகு குசன் அயோத்தியில் சரயூ நதியில் சம்பிகையோடு ஜலக்ரீடை செய்வான். அப்பொழுது அவன் வலது கையில் தரித்திருக்கும் தங்கக்காப்பு ஜலத்தில் விழுந்து விடப் போகிறது. அந்த ஜலத்தில் வசித்துவரும் குமுதம் என்னும் ஸர்ப்பத்தின் சகோதரியான குமுதவதி அதை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் செல்வாள். குசன் தன் காப்பைப் பெறுவதன் பொருட்டு சரயூ நதியின் ஜலத்தை வற்ற வடித்து விடுகிறேனெனக் கூறிப் பாணத்தை வில்லில் பூட்டப் போகிறான். பிறகு அச்சரயூ நதி குமுதத்தை வணக்கமாகக் கேட்கப்போகிறது. அந்தக் குமுதம் என்னும் சர்ப்பம் குசன் கோபமடைந்திருக்கிறானென்பதைக் கேட்டுப் பயந்து தன் சகோதரி குமுதவதியினிடமிருந்தகாப்பை வாங்கிவந்து குசனிடம் கொடுத்துக் குமுதவதியையும் குசனுக்கு விவாகம் செய்து கொடுக்கப் போகிறது. அப்பால் குசனுக்கும் குமுதத்துக்கும் சிநேகம் உண்டாகப் போகிறது. இவ்விதமாகக் குசன் குமுதவதி யென்னும் ஒரு மனைவியை வெகு காலத்திற்குப் பிறகு அடையப்போகிறான். அவளிடத்தில் குசனுக்கு அதிதி என்ற ஓர் ஆண் பிள்ளை உண்டாகப்போகிறது, சம்பிகைக்குப் பெண்களை யன்றிப் பிள்ளைகளில்லாமற் போகும். அதிதியினிடமிருந்து சூரியவம்சம் விருத்தியடையப் போகிறது. இவ்விதம் நான் குசனுடைய இரண்டு மனைவிகளைப்பற்றியும் வர்ணித்து விட்டேன். பிறகு குச லவர்கள் தத்தம் பத்தினியோடு சுகமாகவிருந்து வந்தார்கள்.

4-வது சருக்கம்.

முற்றிற்று.

5-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஒருநாள் ராமசந்திர பிரபு ஸீதை, தமது குமாரர்கள், பந்துக்கள், மந்திரிகளோடும் பட்டணத்து ஜனங்களோடும் புஷ்பக விமானத்தின் மீதேறிக் கொண்டு வனத்திற்குச் சென்றார். அங்கே அநேக அற்புத வஸ்துக்களைப் பார்த்துக்கொண்டும் ஸீதா தேவியை ஆனந்தப்படுத்திக்கொண்டும் வனத்தின் கண் வெகு தூரம் சென்று தண்டகாரண்யத்தில் அகஸ்தியருடைய ஆச்ரமத்திற்குச் சமீபம் சென்றார். முனிவர் பிரானாகிய அகஸ்தியர் ராமரது வருகையை யறிந்து அவரை எல்லோருடனும் தமதாச்ரமத்திற்குள் அழைத்துச் சென்று சற்றுப் பேசியிருந்து விட்டுப் பிறகு ஸ்நானஞ்செய்து வெகு நியமத்தோடு ஏகாந்தத்திலிருந்து அன்ன பூர்ணையான மஹா லக்ஷ்மியை த்யானம் செய்தார். அப்போது அந்தத் தேவியானவள் அவருக்குப் பிரத்தியக்ஷமாகி அவரிடம் பாயஸம் நிறைந்த ஒரு பாத்திரத்தைக்கொடுத்து "இதிலிருந்து அநேகவித ச்ரேஷ்டமான பதார்த்தங்களுண்டாகும். அவைகளை யெடுத்து லோபாமுத்திரை இங்கு வந்திருப்பவர்களுக்குப் பரிமாறட்டும்" என்று கூறி மறைந்து விட்டாள். உடனே அப்பாத்திரத்திலிருந்து போஜனத்துக்குரிய சகல பதார்த்தங்களுமுண்டாயின. அவைகளையெடுத்து அங்கிருந்த பிராமணர்களுக்கு முதலில் பரிமாறிப் பிறகு ராமர் முதலிய யாவருக்கும் பரிமாறி திவ்யபோஜனம் செய்வித்தாள். அப்பால் அகஸ்தியர் ராமபிரானுக்கு ரத்னமயமான காப்பும் ஸீதாதேவிக்கு திவ்ய குண்டலங்களும் மனமுவந்து அளித்தார். இவ்விதம் உபசரிக்கப் பட்ட பிறகு ராமர் அகஸ்தியரோடு விமானத்திலேறிக்கொண்டு முன்போல் தண்டகாரண்யத்தில் சஞ்சரித்தார். அங்குள்ள நதிகளையும் விருக்ஷங்களையும் மலைகளையும் இன்னும் மற்றுமுள்ள ஆச்ரமங்களையும் ஜானகிக்குக் காட்டிச் சந்தோஷமடைந்தார். இவ்வாறு சஞ்சரித்துக்கொண்டு போகையில் வழியில் பஞ்சாப்ஸரஸ் என்ற ஒரு குளத்தைப் பார்த்து அன்றிரவு அங்கேயே வசித்தார். நடு ராத்திரியில் அந்த இடத்தில் அப்ஸரஸ்திரீகள் பாடும் சப்தத்தையும் அவர்கள் நர்த்தனம் செய்யும் சப்

தத்தையும் கேட்டார். அங்குள்ள மற்றவர்களும் அச்சப்தத்தைக் கேட்டார்கள். அப்ஸரஸ்திரீகளைக் காணுமல் சப்த மட்டும் உண்டாகக்காரணம் யாதென அகஸ்தியரை ராமர் கேட்டார். அகஸ்தியர் "தங்களுக்குத் தெரியாததா? எதையும் என் வாயால் கேட்கத் தாங்கள் எண்ணங்கொண்டீர் போலும்? அங்ஙனமாயின் இதோ கூறுகிறேன் கேளுங்கள்—

முற்காலத்தில் கந்தர்வ ராஜனுடைய ஐந்து பெண்கள் இக்குளத்திற்குவந்து க்ரீடைசெய்தார்கள். அவர்கள் ப்ரௌடையாகாதவர்கள். இதே சமயத்தில் ஏழு நாக கன்னிகைகள் இக்குளத்தில் ஜல க்ரீடைசெய்து கரையேறினர்கள். அந்நாக கன்னிகைகளுக்கும் கந்தர்வகன்னிகைகளுக்கும் அன்று அதிக சிநேகமுண்டாயிற்று. பிறகு இருவகுப்பினரும் அடிக்கடி இந்தக் குளத்திற்கு வந்து விளையாடுவது வழக்கம். அவர்கள் வருவதை அப்போது இங்கே தவஞ்செய்து கொண்டிருந்த ஒரு முனிவர் அடிக்கடி தடுத்து வந்தார். அவர்கள் கன்னிகைகளானதாலும், இந்திரனால் அந்த முனிவரது தவத்தைக் கெடுக்க ஏவப்பட்டவர்களானதாலும், அவரது வார்த்தையைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் அடிக்கடி அங்கே வந்துகொண்டிருந்தனர். முனிவர் அவர்கள் செய்கையில் கோபமடைந்தாராயினும், சபித்தால்தமது தவம் குறைந்து விடுமென்றஞ்சி வேறு விதமாகத் தண்டிக்க மனதில் ஆலோசித்து, தமது வாய் மொழியால் ஜல தேவதையை ஏவினர். உடனே ஜலதேவதைகள் வெளிக்கிளம்பி பகற்பொழுதில் அந்தக் கன்னிகைகளைத் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றன. அந்தக் கன்னிகைகளுக்கு அவ்விடத்திலிருந்து தப்பி வர முடியாமையால் அங்கேயிருந்து இவ்விதம் பாடியும் நர்த்தனம் செய்தும் வருகிறார்கள். இப்பொழுது கேட்டது அவர்கள் பாட்டுத்தான். இந்த விருத்தாந்தத்தைத் தாங்கள் கேட்டபடி சவிஸ்தாரமாகக் கூறிவிட்டேன். இக்கன்னிகைகளுக்குத் தாங்கள் ஏதாவது நன்மை செய்வதாயிருந்தால் செய்யலாம். நாக கன்னிகைகளும் கந்தர்வ கன்னிகைகளும் சுகப்படுவார்கள்" என்றார். இதைக்கேட்டதும் ராமர் லட்சுமணரைப் பார்த்து, "ஏ குழந்தாய்! என் வில்லைக்கொண்

டுவோ ? அதில் பாணத்தைப் பூட்டி ஜலதேவதைகளை அடித்து நாக கன்னிகைகளும் கந்தர்வ கன்னிகைகளையும் இந்தக்ஷணம் விடுவிக்கிறேன்,'' என்றார். உடனே லட்சுமணர் வில்லையெடுத்து வந்து ராமரிடம் கொடுத்தார். ராமர்வில்லை வாங்கிக்கொண்டு வளைத்து நாணேற்றித் தமது பெயர்வெட்டப்பட்ட ஒரு பாணத்தை அதில் பொருத்தினார். அச்சமயம் பூமி நடுங்கிற்று. சப்த சமுத்திரங்களும் கலங்கின. பயங்கரமான காற்றுக் கிளம்பிற்று. திக்குகளெங்கும் மணல்மாரி பொழிந்தது. ஆகாயத்திலிருந்து நக்ஷத்திரங்களெல்லாம் கீழே விழுந்தன. காட்டு மிருகங்கள் பயந்து நாட்டிற்கு ஓடிவந்து விட்டன. மலைகளெல்லாம் நடுங்கின. மேகங்கள் இரத்த மழை பொழிந்தன. இந்த உத்பாதத்தை ஜலதேவதைகள் கண்டு பயந்து அந்தக் கன்னிகைகளெல்லோரையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீராமரிடம் வந்து அவரை வணங்கி, நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அப்பன்னிரண்டு பெண்களையும் ராமரது சரணாரவிந்தங்களில் ஸமர்ப்பித்து ''ஏ மஹா பராக்ரமசாலியான ராமச்சந்திர பிரபுவே! நாங்கள் செய்த அபராதத்தை மன்னித்து எங்கள் மேல் பாணத்தை ப்ரயோகிக்காமல் அநுக்ரஹம் செய்தல் வேண்டும். தங்களுடைய சூரிய வம்சத்து ஸ்திரீகளுக்கு நாங்கள் குற்றம் செய்தவர்களன்று. தாங்கள் முன் கங்கைக்கரையில் ஸ்திரீயெனக் கருணை கூர்ந்து பூமி தேவியைக் காப்பாற்றினீர். ஆனால் தாடகை முதலிய லோககண்டகிகளைக் கொன்றது உலகத்தாரெல்லாருக்கும் க்ஷேமத்தை யுண்டாக்குவதற்காகவே'' என்றுகூறிப் பிரார்த்தித்தன. இவ்வாறு அவைகள் பிரார்த்தித்ததைக் கேட்ட ராமர் புன்னகைகொண்டு வில்லைத் தளர்த்தி பாணத்தை எடுத்து அம்புறாத்தூணியில் வைத்துவிட்டு அவர்களைத் தத்தம் இடத்திற்குப் போகும்படி கட்டளை யிட்டார். இதன் நடுவில் கந்தர்வர்களும் பன்னகர்களும் ராமரதுசெய்கையை யறிந்து அவரைப்பார்ப்பதற்கு உபாயனங்களை யெடுத்துக்கொண்டு அவாருகில்வந்து ராமர் ஸீதை அகஸ்தியர் இவர்களை வணங்கி உபாயனங்களை ராமருடைய சரணாவிந்தங்களில் சமர்ப்பித்துக் கைகூப்பி நின்று மிகவும் வணக்கமாய்க் கூறுகிறார்கள்.

5 வது சருக்கம்

முற்றிற்று

6-வது சருக்கம்.

கந்தர்வர்களும் பன்னகர்களும் கூறுகிறார்கள்.

தங்கள் பெண்களை ஜல தேவதைகளிடமிருந்து விடுவித்தனர் ராமபிரானென்பதைக்கேட்ட பன்னகர்களும் கந்தர்வர்களும் சந்தோஷமடைந்து உடனே ராமபிரானிடம் வந்து, "தாமரைப் பூப்போன்ற முகத்தையுடைய ராமசந்திர பிரபுவே! வந்தனமளிக்கின்றோம். எங்கள் குமாரத்திகளைத் தாங்கள் ஜலதேவதைகளிடமிருந்து விடுவித்தீர்கள். ஆகையால், கன்னிகைகளான அவர்களைத் தங்கள் குமாரர்களுக்கு விவாகம் செய்து கொள்ள வேண்டும். இன்றைக்கு நாங்கள் கிருத கிருத்தியர்களானோம். இன்று தான் எங்கள் குலம் பரிசுத்தமாயிற்று இன்று தங்கள் தரிசனத்தால் நாங்கள் யாவரும் கரை யேற்றப்பட்டோம். ஏழு ஜன்மங்களிற் கிடைக்கக்கூடிய புண்ணியம் இன்று எங்களுக்குக் கிடைத்தது. ஆகையால் பிரபுவே! நம்மிருவருக்கும் சம்பந்தம் உண்டாகட்டும்" என்று கூறிப்பிரார்த்தித்தார்கள்.

இவ்வாறு அவர்கள் பிரார்த்தித்ததும் ராமபிரான் தமது பத்தினி ஸீதாதேவியுடன் அவர்கள் பேச்சுக்கிணங்கி அகஸ்தியரைப் பார்த்தார். அகஸ்தியர் ராமரைப்பார்த்து, நீர் வைகுண்டம் சென்றவுடன் குமுதனுடைய சகோதரியாகிய குமுதவதீ யென்பவள் குசனுக்கு மனைவியாகப்போகிறாள். குசனுக்குக் குமுதவதியினிடம் அதிதியென்ற ஒரு புத்திரனுண்டாகப் போகிறான். அந்த அதிதியே ராஜ்யமாளுகிறவனாகவும் வம்ச விருத்தி செய்கிறவனாகவுமிருப்பான். ஆகையால் நீர் இப்போது இந்த ஏழு நாக கன்னிகைகளையும் குசனைத் தவிர மற்ற எழுவருக்கும் விவாகஞ்செய்து கொள்ளவேண்டும். ஐந்து கந்தர்வ கன்னிகைகளையும் யூபகேது, குசன், லவன் இவர்களைத் தவிர மற்ற ஐந்து பிள்ளைகளுக்கும்விவாகம்செய்து கொள்ளவேண்டும். யூபகேது ராக்ஷச விவாக முறையில் ஒரு கன்னிகையைத் தனக்குப் பத்தினியாக் அடையப்போகின்றான். இவ்வாறு தங்களுடைய பிள்ளைகளுக்கு மனைவிகளேற்பட்டுச் சுகமாக வாழ்வார்கள். தக்களுக்குப் பேரன்மார்களும் அவர்களுக்குப் பேரன்மார்களும் உண்டாகப் போகிறார்கள். தாங்கள் இவற்றை யெல்

லாம் பார்த்து ஆனந்த மடைந்து விட்டுப் பின் ஜானகியோடும் பட்டணத்து ஜனங்களோடும் வைகுண்டம் போகப்போகிறீர்கள்" என்றார். ராமபிரான் முனிவர் பிரானாகிய அகஸ்தியர் கூறியதைக் கேட்டு, அவ்விதமே நடப்பதாக ஒப்புக்கொண்டு கந்தர்வர்களை யும் பன்னகர்களையும் அவரவர் கன்னிகைகளின் பெயரைக்கூறும் படி கேட்டார். கந்தர்வர்களில் ஒருவன் உடனே ராமசந்திரப் பிர புவை நமஸ்கரித்து, அக்குளக்கரையில் நின்று "சந்திரிகை, சந் திரவதனை, சஞ்சலை, சபலை, சலை என்பவைகளே எங்கள் கன்னி கைகளின் பெயர்கள்" என்றான். பிறகு பன்னகருள் ஒருவனெழு ந்து ராமனை "வணங்கி பிரபுவே! கஞ்சானனை, கஞ்சலோசனை, கஞ் சாங்கி,கலாவதி, கலிகா, கமலா, மாலதி என்பவைகளே எங்கள் கன்னிகைகளின் பெயர்கள்" என்று கூறினான். இவ்விதமான கன் னிகைகளின் பெயரைக் கேட்டதும் ராமர் சந்தோஷமடைந்து, அவர்களைப் புஷ்பக விமானத்தின்மீது ஏற்றி வைத்துக்கொண்டு அன்றிரவு அக்குளக் கரையிலேயே எல்லாருடனும் சுகமாக இரு ந்தார்.

பிறகு மறுநாட் காலையில் ராமபிரான் எழுந்து ஸ்நானஞ்செய்து விதிப்படி ஹோமம் செய்து முடித்து கந்தர்வர்களையும் பன் னகர்களையும் பார்த்து "இந்த மண்ணுலகில் வசிக்கும் யான் விவா கம் நடத்துவதற்கு ஸொர்க்கலோகத்திற்காவது பாதாள உலகத் திற்காவது வர முடியாது. ஆகையால் சிநேகிதர்களான நீங்கள் உங்கள் உலகத்திற்குச் சென்று உங்கள் மனைவிகள் உறவினர், நண்பர்கள் இவர்களுடன் அயோத்திக்கு வந்து சேருங்கள். நான் இப்போது இந்த விமானத்தின் மீதேறி அயோத்திக்குச் செல்கி றேன்" என்றார். அவர்கள் ராமர் உத்தரவுப்படி நடக்கச் சம்மதித் துத் தங்கள் தங்கள் உலகம் சென்றனர். ராமபிரானும் அக் கணமே யாவருடனும் விமானத்தின்மீதேறி அயோத்தியாபட்ட ணம் வந்து சேர்ந்தார். அக்கன்னிகைகள் யாவரையும் வசிஷ்ட ருடைய கிருகத்திற் கனுப்பினார்.

பிறகு ராமர் சபை மத்தியில் லட்சுமணனை யழைத்து "லட் சுமணா! அரசர்களையும், முனிவர்களையும் நண்பர்களையும் வர வழைக்கவேண்டும். தேசம் பட்டணம் இவைகளிலிருக்கும் ஜன

ங்கள் யாவரும் வரவேண்டும். நமது நகரத்து ஏழு அகழிகளை யும் சுத்தப்படுத்தி எங்கும் அலங்கரிக்கவேண்டும்; வீடு தவறா மல் சுண்ணும்பு பூசப்பட்டு அழகான சித்திரங்கள் எழுதப்பட வேண்டும். தேவாலயங்கள் யாவையும் சுத்தப்படுத்த வேண்டும். ஆங்காங்கு கொடிமரங்களை நாட்டி அலங்கரிக்கவேண்டும். நாலா பக்கங்களிலும் தோரணங்கள் கட்டவேண்டும். தங்கமயமான வேதிகைகள் பல அமைக்கவேண்டும். ஆயிரக்கணக்கான யானை கள் குதிரைகள் பல்லக்குகள் இவைகளைச் சிங்காரிக்க வேண்டும். கந்தர்வர்களும் பன்னகர்களும் வசிக்கத்தக்க கூடாரங்க ளமைத் தல் வேண்டும். அவைகளில் சகல சாமான்களும் நிறைந்திருக்க வேண்டும். இவைகளன்றி மற்றவைகளில் உனக்கு நல்லதெனத் தோன்றுவனவற்றையும் அவசியம் நீ செய்யலாம்" என்று ராமர் உத்தரவிட்டார். ராமர் இவ்விதம் உத்தரவு செய்ததைக்கேட்ட லட்சுமணர் உடனே அமைமாதிரி எல்லாவற்றையும் செய்து முடி த்தார். பிறகு கந்தர்வர்களும் தமது பந்து மித்ர புத்ரகளத்திரா திகளோடு அயோத்திக்கு வந்து சேர்ந்தார்கள். பன்னகர்களும் மனிதவேடங்கொண்டு யானை, குதிரை ரதம் காலாள் முதலிய விருதுகளோடும் பந்துமித்ராதிகளோடும் வந்து சேர்ந்தார்கள். இவர்களின் வரவையறிந்த ராமபிரான் அநேக மங்கள வாத்தியங் களோடு அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனம் செய்ய எதிர்கொண்டு சென்று அவர்களை மரியாதையுடன் அழைத்து அவர்களுக்கெ ன்று ஏற்படுத்தப்பட்டிருந்த கிருகங்களில் அவர்களை யிறக்கினர்.

பிறகு ஒரு சமயத்தில் ராமர் சபையில் வீற்றிருந்து வசிஷ் டரையும மற்றப் புரோகிதர்களையும் சோதிடர்களையும் வரவழை த்து இவர்களுக்குத் (குமாரர்களுக்கு) தனித்தனியே விவாகம் செய்யமங்களகரமான முகூர்த்தங்களை இவ்வருஷத்திலேயே நிச் சயிக்கவேண்டுமெனக் கூறினர். சோதிடர்கள் மிகவும் சிரேஷ் டமான முகூர்த்தங்களைப்பார்த்து வைகாசி மாதத்தில் நல்ல இர ண்டு முகூர்த்தங்களும் ஆனிமாதத்தில் இரண்டு முகூர்த்தங்களும் மார்கழி மாதத்தில் இரண்டு முகூர்த்தங்களும் மாசி மாதத்தில் மூன்று முகூர்த்தங்களும் பங்குனி மாதத்தில் மூன்று முகூர்த்தங்

களும் இருக்கின்றனவெனக் குறிப்பிட்டார்கள். இவ்வாறு பன்னிரண்டு பெண்களுக்கும் விவாக நிச்சயம்செய்தார்கள்.

வைகாசி மாத முகூர்த்தத்தில் அங்கதன் லவன் இவர்களுக்கும் ஆனிமாத முகூர்த்தத்தில் சித்திரகேது புஷ்கரன் இவர்களுக்கும் மார்கழிமாத முகூர்த்தத்தில் தக்ஷன் சுபாகு இவர்களுக்கும் மாசிமாத முகூர்த்தத்தில் யூபகேது அங்கதன் சித்திரகேது இவர்களுக்கும்பங்குனிமாதமுகூர்த்தத்தில் புஷ்கரன் தக்ஷன் ஸுபாகு இவர்களுக்கும் விவாகங்களை நடத்தச் சோதிடர்கள் ராமாநு ஸந்நிதியில் நிச்சயம் செய்தார்கள். இவ்வாறு அவர்கள் கிரமமாய்ப் பன்னிரண்டு முகூர்த்தங்களையும் நிச்சயஞ் செய்த பிறகு ஸ்ரீராமசந்திர பிரபு அவர்களுக்குத் தக்கபடி வெகுமான மளித்துபசரித்தார்.

6-வது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

இவ்வாறு விவாக முகூர்த்தம் நிச்சயஞ் செய்த பிறகு அந்தச் சோதிடர்கள், வசிஷ்டரையும் இன்னும் மற்றுமுள்ள புரோகிதர்களையும் வைத்துக்கொண்டு ராமசந்திரமூர்த்தியினது ஸந்நிதானத்தில் தெரிவித்தனர். லவனுக்குக் காஞ்சனையையும், அங்கதனுக்குக் கஞ்சாக்ஷியையும் சித்ரகேதுவுக்குக் கஞ்சாங்கிரியையும் புஷ்கரனுக்குக் கலாவதியையும் தக்ஷனுக்குக் காலிகையையும், கமலையை சுபாகுவுக்கும் மாலதியை யூபகேதுவுக்கும் விவாகம் செய்விப்பதெனத் தீர்மானித்தார்கள். பிறகு கந்தர்வ கன்னிகைகளாகிய சந்திரிகையை அங்கதனுக்கும் சந்திராஸ்யையைச் சித்திரகேதுவுக்கும் புஷ்கரனுக்குச் சஞ்சலையையும் சபலையைத் தக்ஷனுக்கும் சுபாகுவுக்கு அசலையையும் விவாகஞ் செய்விப்பதெனத் தீர்மானித்தார்கள்.

இவ்வாறு நிச்சயஞ் செய்த பிறகு ராமபிரான் சோதிடர்களுக்குத் தக்க மரியாதை செய்து அனுப்பிவிட்டு ஸீதையிடஞ் சென்று நடந்த சங்கதிகளைத் தெரிவித்து மகிழ்ந்தார். உடனே கோடிக் கணக்கான முனீசுவரர்களும், அந்தப்புர ஸ்திரீகள் பட்டணத்து ஜனங்கள் இவர்களுடன் கூடிய அரசர்களும் கூட்டங் கூட்டமாக வந்துகூடினார்கள். இச்சமயம் அந்நகரமானது இந்திரவுலகமும் இதற்கு ஈடில்லை யெனச் சொல்லும்படி விளங்கிற்று. விபீஷணரும் வந்துசேர்ந்தார். சுக்ரீவன் வானரசைனியங்களுடன் வந்து சேர்ந்தான். ஜனகமகாராஜனும் யுதாஜித்தும் வந்து சேர்ந்தார்கள். கௌஸல்யை முதலிய தேவிமார்களின் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு சகல ஜனங்களும் வந்து சேர்ந்த பிறகு தசரத நந்தனராகிய ராமபிரான், வைகாசிமாதம் சுக்லபக்ஷத்தில், பிராமண ச்ரேஷ்டர்களோடும் புரோகிதர்களோடும் நண்பர்களோடுமிருந்து லவனுக்கு மங்கள ஸ்நானஞ் செய்விக்க மாதர்களுக்கு ஆக்ஞை

செய்தார். உடனே சுபமுகூர்த்தகாலமாகிய அப்பொழுதே லவனுக்கு சுகந்த தைலங்களைத் தேய்த்து ஸீதை முதலான தாய்மார்கள் மங்கள ஸ்நானஞ் செய்வித்தனர். தாங்களும் ஸ்நானஞ் செய்தார்கள். அப்போது மங்கள வாத்யங்கள் முழங்கின. பிறகு ராமர் பிராமணர்களுடனிருந்து கணபதியைப் பிரதிஷ்டை செய்து அவரைப் பூஜித்து, விதிப்படி புண்ணியாகம் முதலிய மூன்று காரியங்களையும் செய்து முடித்தார். மனமகிழ்ச்சியுடன் பிராமணர்களையும் முனிவர்களையும் பூஜித்தார். உடனே சுபமுகூர்த்த வேளையில் கஞ்சநயனைக்கும் லவனுக்கும் விவாகத்தைச்செய்து முடித்தார். நான்காவது நாள் மூங்கில் பாத்திரங்களில் ரத்தின தீபங்கள் வைத்து ஸ்ரீராமருக்கு ஸதிரீகள் நீராஜனம் செய்தார்கள். பிறகு ராமர் தமது கிருகத்திற்குச் சென்று முற்கூறியபடி லக்ஷ்மி பூஜை செய்ய லவனுக்குத்தாவிட்டார். பிறகு மன்னர்களும் பன்னகர்களும் நண்பர்களும்பட்டணத்து ஜனங்களும் ராமபிரானுக்கு வஸ்திரம் ஆபரணம் இவைகளையளித்து உபசரித்தார்கள். அவ்வாறே லட்சுமணர் முதலியவர்களையும் குசன் முதலிய பாலர்களையும் உபசரித்தார்கள். பிறகு அரசர்களின் பத்தினிகளும் சிநேகிதரின் பத்னிகளும் நாகரின் பத்தினிகளும் கந்தர்வரின் பத்தினிகளும் இன்னும் மற்றுமுள்ள ஸ்திரீகளும் ஸீதை முதலானவர்களுக்கு வஸ்திராபரணங்களையளித்து உபசரித்தார்கள். ஸீதையும் அந்த ஸ்திரீகளெல்லோருக்கும் வஸ்திரங்களும் ஆபரணங்களும் அளித்து நன்குபசரித்தாள். ராமரும் தமது சிநேகிதர்கள் பட்டணத்து ஜனங்கள் கந்தர்வர்கள் பன்னகர்கள் முதலியவர்களுக்கு வஸ்திராபரணங்கள் வாகனங்கள் முதலியவைகளையளித்து நன்குபசரித்தார். இப்படி வைகாசி மாதம் சுக்ல பக்ஷத்தில் லவனுக்கு விவாக முகூர்த்தத்தைச் செய்துவிட்டுப் பிறகு வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷத்தில் அங்கதனுக்கு விவாகத்தை நடத்தினர். ஆனி மாதம் சுக்ல பக்ஷம் கிருஷ்ண பக்ஷங்களில் சித்ரகேதுவுக்கும் புஷ்கரனுக்கும் ஆசையோடு விவாகத்தைச் செய்து முடித்து, அரசர்கள் முதலான யாவருக்கும் தக்கபடி மரியாதை செய்தனுப்பிவிட்டார். பிறகு முன் போலவே மறுபடியும் அவர்களையழைத்து மார்கழி மாதத்தில் தக்ஷனுக்

கும் சுபாகுவுக்கும்ஆதரவோடு விவாகத்தை நடத்தினார். அப்புறம் மாசி மாதத்தில் யூபகேது அங்கதன் இவர்களுக்கும் சித்ரகேது வுக்கும் விவாகம் செய்து பங்குனிமாதத்தில் புஷ்கரன் தக்ஷன் ஸுபாகு இவர்களுக்கும் விவாக முகூர்த்தத்தைச் செய்து முடித்தார். இவ்வாறு ராமர் ஆதரவுடன் பன்னிரண்டுவிவாகங்களையும் செய்துமுடித்து, எல்லா அரசர்கட்கும் தக்க உபசாரஞ் செய்து அவரவர் தேசங்களுக்குச் செல்ல அவர்களுக்கு உத்தரவு கொடுத்தனுப்பினார். முனீசுவரர் முதலிய எல்லாரையும் நன்றாய்ப் பூஜித்து அவர்களையும் தத்தம் இடத்திற்கு அனுப்பினார். கந்தர்வர்களும் பன்னகர்களும் ராமரைப்பிரிந்து தங்கள் உலகத்திற்குச் செல்ல மனமில்லாமல் அந்த அயோத்தியிலேயே யிருந்துவிட்டார்கள். ராமர் எப்போது வைகுண்டத்திற்குச் செல்வாரோ அப்போது அவர்களும் ஸாந்தானிகம் என்னும் லோகங்களுக்கு நிச்சயமாகப் போவார்கள். பிறகு ராமர் பன்னகர்களுடையவும் கந்தர்வர்களுடையவும் வீடுகளில் அந்தப்புர ஸ்திரீகளோடும் நண்பர்களோடும் தமது பட்டணத்து ஜனங்களோடும் வருஷப் பண்டிகைகளுக்குப்போய் உண்டு உறவாடிச் சுகமாக இருந்தார். அயோத்தியில் வீடுகள் தோறும் மேலான உற்சவங்கள் ஆனந்தகரமாய் நடந்து வந்தன. பிறகு ராமர் தனித்தனியே எட்டு திவ்யகிருகங்களைக் கட்டுவித்து அவைகளில் தமது பிள்ளைகளுக்குச் சாந்திகளை நடத்தி அவர்களைத் தத்தம் பந்துக்களோடும் மனைவிகளோடும் அவைகளில் வசித்துவரும்படி செய்தார். அவ்வாறே லட்சுமணர் முதலியவர்களும் பந்துக்களோடும் தங்கள் தங்கள் பத்தினிகளோடும் சுகமாய் இருந்தார்கள். ஸௌமித்ரி சுமித்திரையோடும் பரதர் கைகேயியோடும் கௌஸல்யை ராமரோடும் தங்கள் தங்கள் கிருகங்களில் சுகமாக வாழ்ந்தார்கள். பிள்ளைகள் யாவரும் தங்கள் சேவகர்களாலும் தாஸிகளாலும் நன்குபசரிக்கப்பட்டுப் பரமானந்தத்தையடைந்துவாழ்ந்து வந்தார்கள். லட்சுமணர் முதலியவர்களும் குசன் முதலான பாலர்களும் தங்கள் தங்கள் கிருகங்களில் ஒவ்வொரு நாட்காலையிலும் ஸ்நானம் செய்து ஹோமம்

சிவபூஜைகளைச் செய்து முடித்து உடனே ராமரிடம் சென்று அவரையும் ஸீதாதேவியையும் நமஸ்கரித்து அவரது ஆஸனத்திற்குச் சமீபத்தில் வணக்கமாக நிற்பார்கள். அவர்களுடைய மனைவிகளும் தினந்தோறும் அதிகாலையில் ஸ்நானம் செய்து துர்க்காதேவியைப் பூஜித்து ஸீதையினிடம் சென்று நமஸ்கரித்து அப்பிராட்டியின் கட்டளைப்படி ஆஸனத்தில் அமர்வார்கள். பிறகு லட்சுமணர் முதலியவர்களும் ராமரது சபைக்குச் சென்று தங்கள் குருவின் முகமாகப் புராணகதைகளைக் கேட்டு தங்கள் தங்கள் வீட்டிற்குச் செல்வார்கள். பிறகு அவர்கள் யாவரும் தனித்தனியே இராமருடைய உபசாரணையைப் பெற்று அங்கேயே போஜனம் செய்வார்கள். இவ்விதம் அவர்கள் மனைவிகளும் ஸீதையின்உபசாரணையைப்பெற்றுஅவ்வுத்தமியுடன் ஆனந்தமாய்ப் போஜனம் செய்வார்கள். ஸீதையும் ராமரும் ஒருவருக்கொருவர் எவ்வித கலகமுமில்லாமல் இவ்வாறு சகோதரர்களோடும் அவர்களுடைய மனைவிகளோடும் பந்து புத்திர மித்திரர்களோடும் கூடிச்சுகமாய் வெகுகாலம் வாழ்ந்து வந்தார்கள்.

7-வது சருக்கம்.

முற்றிற்று.

8-வது சருக்கம்.

ராமதாசர் கூறுகிறார்.

அப்பால் ஒருசமயம் தெற்குத்தேசத்தில் சிவகாந்தி என்னும் ஒரு பெரியபட்டணத்தையாண்டுவந்த கம்புகண்டனென்னும் ஒரு அரசன் தன் பெண்ணுக்கு சுயம்வரம் நடத்த நிச்சயித்து, எல்லா அரசர்களுக்கும் ஆதரவோடு திருமுகமனுப்பினன். அத்திருமுகங் கண்ட அரசர்கள் யாவரும் முன் சுயம்வரத்தில் தங்களுக்குண்டான மானக்குறைவை எண்ணிச் சுயம்வரத்திற்குச் செல்லாமல் தனித்தனியே கம்புகண்டனுக்குக் கடிதமெழுதி யனுப்பினார்கள். அவைகளில் ஒரு விஷயம் இங்குக் குறிப்பிடத்தக்கது. அது வருமாறு:—

"ராமரது பிள்ளைகள் சுயவரத்திற்கு வராமல் இருந்தால் தான்இந்த ஜம்புத்வீபத்திலுள்ளராங்களெல்லோரும் வருவோம்" என்பதே. இப்படிப்பட்ட அவர்களது அபிப்பிராயத்தை அறிந்த அவ்வரசன் ராமரது பிள்ளைகளான குசலவர்களுக்கும் சம்பிகை ஸுமதி இவர்களுக்கும் நடந்த சுயம்வரத்தில் ஏற்பட்ட பகைமையை நினைத்துக்கொண்டு ஸ்ரீராமரை அழைக்காமலிருந்து விட்டான். கம்புகண்டன் ராமரைச் சுயம்வரத்திற்கு அழைக்கவில்லையென்பதை யறிந்தும் அரசர்கள் யாவரும் புறப்பட்டுக் காந்திபட்டணம் வந்து சேர்ந்தார்கள். இச்சமயம் அந்தகம்புகண்டனுடைய பெண்ணின மதனசுந்தரி என்பவள் சகிகளோடு மேன்மாடியி லிருந்தனள். இதைக்கண்ட நாரதர் ஆகாயத்திலிருந்து இறங்கி அவளருகில் வந்தார். அவள் சகிகளோடு நாரதரைப் பூஜித்து வணக்கத்துடன் எதிரில்நின்று "சுவாமி! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? தங்கள் தரிசனத்தால் என் மனம் பரிசுத்த மடைந்தது" என்று கூறினள்.

இவ்விதம் அந்தப் பெண் கூறியதைக்கேட்டுச் சிறிது நகைத்து நாரத முனிவர் "ஏ பெண்ணே! நான் இப்போது சொர்க்க லோகத்திலிருந்து வருகிறேன்' அயோத்திக்குச் சென்று ராமபிரானது பிள்ளைகளின் கிருகங்களில் தனித்தனியே யிருந்து போஜனஞ் செய்வதன் பொருட்டு ஆகாயமார்க்கமாக வந்

தேன். நான் வந்துகொண்டிருக்கையில் இந்தக் காந்திபுரியின் வெளிப்பக்கத்தில் சேனைகளிருப்பதைப் பார்த்து, இவைகள் யாருடைய சேனை யென்பதைப்பற்றி மனதிற் கருதிச் சற்று நின்றேன். அப்பொழுது இங்கே போய்க்கொண்டிருந்த ஜனங்கள் உனக்குச் சுயம்வரம் என்று பேசிக்கொள்வதைக்கேட்டு, இச்சுயம்வரத்திற்கு ராமபிரானும் தமது குமாரர்களோடு வந்திருக்க வேண்டுமெனக் கருதி, அவர்களைப் பார்த்துப் பேசும் விருப்பத்துடன் இங்கு வந்தேன். இங்கே வந்து விசாரித்ததில் அவர் வரவில்லையெனத் தெரிந்து கொண்டு அவர் வராததற்குக் காரணம் யாதென்று அரசனை விசாரித்து, அவர் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டேன். அது எனக்கு மிகவும் வருத்த முண்டாக்குகிறது. ஏழு தீவுகளுக்கும் பதியாயும் பந்து புத்ரர்களோடு கூடினவராயுமிருக்கிற ராமரை அழைக்காமல் உனது தந்தை மற்ற அரசர்களை வைத்துக்கொண்டு சுயம்வரத்தை நடத்த உத்தேசித்திருக்கிறார். இப்போது நான் ஸகேத பட்டணத்திலுள்ள ராமரைப் பார்க்கப்போகிறேன்; ஏ பெண்ணே! நீ அதிர்ஷ்டமில்லாதவள். ஏனென்றால் உலகத்திற்கெல்லாம் பதியான ராமருக்கு மருமகளாகும் பாக்கியம் உனக்கில்லாமற் போயிற்று" என்றார். நாரதர் இவ்விதம் கூறி அப்பெண்ணினிடம் உத்தரவு பெற்று அவ்விடம் விட்டுப் புறப்பட யத்தனித்தார். உடனே அப்பெண் மனவருத்தங்கொண்டு கண்களில் நீர் ததும்ப வாடின முகத்தோடு உதடுதுடிக்கத்தேகத்தில்மயிர்க்கூச்சலெடுக்கக் குன்றிய அழகுடனின்று தழதழத்த குரலோடு நாரதரை அடிக்கடி பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டாள். ஏ முனிச்ரேஷ்டரே! நான் ஸ்ரீ ராமருக்கு மருமகளாகும்படி தாங்கள் ஓர் உபதேசம் செய்ய வேண்டும். நான் தங்களைச் சரணம் அடைந்து விட்டேன் என்று சொல்லி அம்முனி சிரேஷ்டருடைய பாதங்களில் தனது சிரசை வைத்து வணங்கி அவருக்குத் தயை யுண்டாகும்படி வேண்டிக்கொண்டாள். முனிவர் அப்பெண்ணுக்கிரங்கி "ஏ அழகிய பெண்ணே! இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் யோசிக்காதே! நீ ராமருக்கு மருமகளாகும் உபாயத்தை நான் அவசியம் செய்கிறேன்" என்று அப்பெண்ணுக்குத் தேறுதல் கூறிவிட்டு ஆகாயவழியே போய்விட்டார்.

இங்கு இவ்விதமிருக்க, அயோத்யா பட்டணத்தில் யூபகேது என்பவன் தேரில் ஏறிக்கொண்டு வனங்களைப் பார்த்துக் கொண்டே தமஸாநதியின் கரைக்கு வந்தான். சிறிதுசேனையோடு அவ்விடம்வந்த யூபகேது தமஸாநதியில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தனுதி நேம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு அக்கரையில் உட்கார்ந்தவுடன் நாரதரைப் பார்த்தான். அவரைக் கண்டதும் ஆதரவோடு வணங்கிப் பூஜை செய்து வணக்கத்துடன் எதிரில் நின்றுகொண்டு ஐயா! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டான். நாரதர் உடனே எல்லா விர்த்தாந்தத்தையும் விஸ்தாரமாகச் சொன்னர். இவைகளைக் கேட்டதும்யூபகேது முனிவரான நாரதரை வணங்கிக் கோபத்தோடும் பரபரப்போடும் அவர் முகத்தைப்பார்த்து ஐயா! எல்லா அரசர்களுக்கும் இராமரிடத்தில் த்வேஷம் உண்டாயிருக்கிறதென்று தாங்கள் சொன்னதைக் கேட்டவுடன் அவர்கள் எல்லாருக்கும் நாசகாலம் கிட்டிவிட்டதென்பதில் ஐயமில்லை. யுத்தத்தில் கம்புகண்டன்முதலிய அரசர்களின் பலத்தையும் பார்க்கிறேன். முனிவர் பிரானே! தங்களது தயவால் எல்லாரையும் ஜயித்து விட்டு அப்பெண்ணை நான் கொண்டுவருகிறேன் என்று கூறிஉடனே அவ்விடமிருந்து புறப்பட்டுச் சேனைகளோடு ஐந்தாவது நாள் காந்திபுரிக்குச்சென்றான். பிறகு மிகவும் ஸந்தோஷமுள்ள மனதுடன் நாரதரும் இராமரைப் பார்க்கச் சென்றார்.

இராமர் முனிவரைப் பூஜித்து அவருடன் போஜனத்துக்குட்கார்ந்தார். அப்பொழுது ராமர், யூபகேதுவைக் காணுமல் லட்சுமணைக் கூப்பிட்டு எங்கே யூபகேதுவைக் காணும்; சாப்பிட அவனை இங்கே அழைத்துவாவென்று கட்டளையிட்டார். உடனே லட்சுமணர் வேகமாய் மாலதியிடம் சென்று யூபகேது எங்கே என்று கேட்டார். அவள், சிறிது சேனையுடன் இப்போது தான் காட்டிற்குச் சென்றார் என்று கூறினள். லட்சுமணர் உடனே இச்சமாசாரத்தை ராகவரிடம் தெரிவித்தார். பிறகு ராமர் சந்தோஷமாக முனிவருடன் போஜனஞ் செய்தெழுந்து தமது ஸபைக்குச் சென்று அம்முனிவரைப் பார்த்து "என்னிஷ்டப்படி தாங்கள் இங்கே ஐந்து நாள் இருக்கவேண்டும்" என்று

வேண்டிக்கொண்டார். பிறகு ராமர் இன்றிரவும் யூபகேதுவைக் காணுமல் லட்சுமணரை யழைத்து, "யூபகேதுவைக்கூப்பிடு" என்ருர். லட்சுமணர் உடனே மாலதியிடம் சென்று யூபகேது எங்கே என்று கேட்க, அவள் "இன்னும் வரவில்லை" யெனக் கூறினுள். இதைக் கேட்டதும் லட்சுமணர் கவலை யடைந்து ராமரிடம்வந்து தெரிவிக்க, அவரும் பந்துக்களும் வருத்தத்தை யடைந்தார்கள். பிறகு ஜானகியும் கேட்டுப் பரபரப்போடு ராமரது முன் சென்று "குழந்தையைக் காணேும், எல்லாரும் மௌனமாய் இருக்கிறீர்களே" என்று கேட்க, உடனே யாவரும் மிகுந்த வருத்தமடைந்து அவனைத் தேடத் தொடங்கினர். அப்போது அவர்கள் கவலைப்படுவதைப் பார்த்து நாரதர் "யூபகேது காந்திபுரிக்குச் சென்றிருக்கிருன்" என்று கூறி மற்றவைகளையும் ஆதரவோடு தெரிவித்தார். அவைகளை ராமர் கேட்டுச் சிறிது மகிழ்ச்சி யடைந்து "சதுரங்கபலத்தோடு சத்ருக்னன் குசன் முதலியவர்கள் இக்கணம் காந்திபுரத்திற்குப் போகட்டும்" என்று லட்சுமணரிடம் சொன்ஞர். லட்சுமணரும் அவ்வாறே சேனைகளோடும் குழந்தைகளோடும் வேகமாகப் போகும்படி அன்றிரவே சத்ருக்னனுக்கு ஆக்ஞைசெய்தார். சத்ருக்னன் உடனே ராமரை நமஸ்கரித்து அவரிடம் உத்தரவுபெற்றுக் குசன் முதலியவர்களோடு இரதத்திலேறிப் புறப்பட்டுச் சீக்கிரமாக ஆருவது நாள்காந்திபுரத்திற்குச் சென்றுன். அன்று சுயம்வரநாளானதால், காந்திபுரியில் சுயம்வரத்திற்காக அரசர்கள் யாவரும் வந்து சபையில் சந்தோஷமாகக் கூடியிருந்தனர். மதனசுந்தரி நாரதர் கூறியதை எண்ணிச் சிறிது முகவாட்டத்துடன் பல்லக்கிலேறிக் கொண்டு சபையின்கண் வந்தாள். கிழவியான ஒரு தாதி அரசரெல்லாரையும் அவளுக்குக் காண்பித்தாள். இச்சமயம் யூபகேது வேகமாய்த் திடீரென்று சபைநடுவே சென்று, மோகனுஸ்திரத்தை விட்டு, அந்தச் சபையை மயக்கிவிட்டான். அந்த அஸ்திரத்தால் பல்லக்குத் தூக்குகிறவர்களும் மயக்கமடைந்து பல்லக்கைக் கீழே வைத்துவிட்டார்கள். உடனே யூபகேது பல்லக்கினருகிற் சென்று மதன சுந்தரியை யெடுத்துத் தன் ரதத்தில் வைத்துக் கொண்டு

அவளுக்குத் தானின்னானென்பதையும் தனது பெயரையுந் தெரிவித்து அந்நங்கையை சந்தோஷப்படுத்தினான். பின்னர் மதனசுந்தரி உள்ளன்போடு அவனைவரித்து நவரத்னமயமான மாலையை அவன் கழுத்தில் போட்டாள். அவன் பல்லக்குடன் காந்திபுரிக்கு வெளியே சென்று அங்குத் தங்கி, "பெண்மணியே! நீ இனி அஞ்சாதே? நான் எல்லா அரசனையும் ஜயித்துவிட்டு உன்னோடு பட்டணத்திற்குப் போகிறேன்" என்றான். இப்படி யூபகேது கூறியதும் மதனசுந்தரி "நாதா! இப்பொழுதோ அநேகம் அரசர்கள் தங்கள் தங்கள் சேனையோடு வந்திருக்கிறார்கள். தாங்களோ ஒருவர், சேனையும் கொஞ்சமே! ஆகையால் இச்சமயம் இவர்களுடன் போர்புரியாமல் என்னை அழைத்துக்கொண்டு ஸாகேத பட்டணம் சென்று விடுங்கள். அங்கே இவர்கள் வந்தால் ராமரும் சேனையோடு தங்களுக்கு உதவி செய்வார். ஆகையால் என்பேச்சுத் தட்டாமல் இப்போது தயவுடன் திரும்பி விடுங்கள்" என்றாள். இவ்வாறு மதனசுந்தரி கூறியதும் அவளை அடிக்கடி சமாதானப்படுத்திக் கொண்டு, விளையாட்டாய்த் தான் விட்ட மோகனாஸ்திரத்தை இழுத்துக்கொண்டான். உடனே அரசர்கள் மயக்கந்தெளிந்து கண்திறந்துபார்த்து மதனசுந்தரிஅங்கே காணாதிருக்க எல்லோரும் வியப்படைந்து அங்குள்ள ஸ்திரீகளை விசாரித்தார்கள். அவர்கள் சத்ருக்னரது பிள்ளையான யூபகேதுவென்பவன் அவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோய் விட்டான் என்று சொல்லக் கேட்டு கோடிக்கணக்கான சேனைகளைச் சேர்த்துக்கொண்டு போர்புரியச் சென்றனர்; பட்டணத்துக்கு வெளியே சென்றதும் மதனசுந்தரி போட்ட மாலையைத் தரித்துக்கொண்டிருக்கும் யூபகேதுவைக் கண்டு அவன் அருகே சென்று பாணங்களை ப்ரயோகித்தனர். அப்போது யூபகேது வேகமாய் வில்லை டங்காரம்செய்து அதில் ஒரு வாயுவாஸ்திரத்தைப் பொருத்தி எய்தான். அவ்வஸ்திரம் அவ்வரசரெல்லோரையும் சேனையோடு தூக்கி அப்பால் எறிந்துவிட்டது. இதைக்கண்ணுற்ற அந்தக் கம்புகண்டன் சம்பிகை ஸுமதி இவர்களின் சுயம்வரத்திலுண்டான பகைமையையும் இப்பொழுது தன் பெண்ணை ஒரு சிறியவன் பலாத்

காரமாகக் கொண்டுபோகிறான் என்பதையும் எண்ணிச் சின மடைந்து தன் சேனையுடன் நகரத்திற்கு வெளியேவந்தான். மஹாரதிகனான யூபகேது அவ்வமயம் முழங்கிய துந்துபி வாத்யங்களின் பேராவத்தைக் கேட்டு வில்லை நாணேற்றி அதில் சிரேஷ்டமான அம்பைப்பூட்டி நகரத்திலிருந்து வெளிப்படும் வீரர்கள்யாவரையும் அக்ஷணத்தில் அடித்துக்கொன்று விட்டான். கம்புகண்டன் யூபகேதுவினுடைய பராக்ரமத்தைப் பார்த்து தன் ரதத்தில் ஏறிக்கொண்டு வேகமாய் யூபகேதுவினிடஞ் சென்று, 'அடே! நீ என்னோ டல்லவா போர்புரிய வேண்டும், கொசுக்குச் சமானமான இவர்களை யடித்து விட்டதினால் பராக்ரமசாலியென் றெண்ணுகிறாயா?" என்று கூறி உடனே யூபகேதுவின் மேல் ஏழுபாணங்களை எய்தான். அந்தப் பாணங்கள் வருவதைக்கண்ட யூபகேது தன் பாணங்களால் அவைகளைத் தடுத்து அவனது வில்லையும் ஸாரதியையும் கொடியையும் நாசம் செய்து விட்டுக் குதிரைகளையுங் கொன்றான். அப்போது கம்புகண்டன் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு வேகமாகஓடிவந்தான். யூபகேது அந்த ஆயுதத்தைப் பாணங்களால் அநேகம் துண்டுகளாகப் பிளந்துவிட்டான். பின் கம்புகண்டன் மிகவும் கோபமடைந்து கையை மூடிக்கொண்டு யூபகேதுவின் மார்பில் குத்தினான். யூபகேது அவனைப்பிடித்து தேரின் மீதுள்ள கொடிபிற்கட்டி அதி சீக்கிரத்தில் கத்தியை எடுத்து அவனது தலையை வெட்ட ஆரம்பித்தான். அதைப் பார்த்த மதனசுந்தரி மிகவும் ஆவலோடு யூபகேதுவினது கையைப்பிடித்துக் கொண்டு கண்ணீர் பெருக நின்று "பிரபுவே! என் தகப்பனாரான கம்புகண்டனை ஏன் கொல்கிறீர்? முதற் கவளத்தில் ஈ விழுந்ததற்கொப்ப சுகத்தின் ஆரம்பத்திற்கு முன்னமேயே ஏன் இவ்வாறு துக்கரமான காரியத்தைச் செய்கிறீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்; இவரைக் கொல்லவேண்டாம்" என்று வேண்டிக்கொண்டாள். இவ்விதம் மதனசுந்தரி சொன்னதைக்கேட்டு, அவன் சிரித்துக்கொண்டு கையிலிருந்த ஆயுதத்தைக் கீழே எறிந்துவிட்டுத் தன்ஸாரதிக்கு ரதத்தை ஓட்டும்படி ஆக்ஞைசெய்தான். ஸாரதி உடனே வேகமாக ரதத்தை

ஓட்டினன். பின் ரதம் அயோத்யா புரிக்குப் போகும் வழியில் செல்லும்போது, எதிரே துந்துபி வாத்தியங்களின் சத்தமுண்டாயிற்று. அதைக்கேட்ட யூபகேது மறுபடியும் தன் வில்லைக் கெட்டியாய்க் கையில் பிடித்துக்கொண்டு இவ்வழியில் யாருடைய சேனை எதிரேவருகிறதென்று சற்று ஆலோசித்து, உடனே தன் பெயருள்ள பாணத்தை ஒருயோஜனை தூரத்திற்கப்பாலிருந்த சேனையின் மீது விடுத்தான். அந்தப்பாணம் சத்ருக்னருடைய ஸந்நிதானத்தில் போய்விழுந்தது. உடனே அவர் அதையெடுத்து அதில் வரைந்திருந்த யூபகேதுவின் பெயரைப் பார்த்து யூபகேது வழியில் நிச்சயமாய் இருக்கிறான்" என்று தீர்மானித்து, உடனே வில்லில் தன் பெயருள்ள பாணத்தைப் பூட்டி யூபகேதுவைக் குறித்து விட, அது அவன் தலைக்கு நேராக மேலே விழுந்தது. அப்பாணத்தை யூபகேது பார்த்து அது தன் தந்தையின் பாணமென அறிந்து மிகவும் சந்தோஷமடைந்து துந்துபி வாத்தியமுழக்கத்துடன் அதிவேகமாகச் சென்று தன் தந்தையைப் பார்த்து ரதத்திலிருந்து கீழே இறங்கி, தன் மனைவியுடன் அவரை நமஸ்கரித்து கம்புகண்டனைக் காண்பித்தான். அவனைக் கண்டதும் சத்ருக்னர் "இவன் நமது நண்பன்; ஆகையால் இவனை விட்டுவிடு" என்றுகூறி அவனை விடுவித்தார். பின்கம்புகண்டன் சத்ருக்னரை வணங்கி நடந்த விருத்தாந்தத்தை அவருக்கு விஸ்தாரமாகச் சொல்லி, அவரைத் தனது பட்டணத்திற்கு அழைத்துச் சென்றான். சத்ருக்னரும் அவன் இஷ்டப்பிரகாரம் காந்திபுரிக்குச் சென்று பட்டணத்திற்கு வெளியே இருந்துகொண்டு ராமரை அழைத்துவரத் தூதர்களை யனுப்பினார். உடனே அந்தத் தூதர்கள் சந்தோஷத்துடன் வேகமாய் ராமரை அழைக்கச் சென்றனர்.

8-வது சருக்கம்

முற்றிற்று.

9 வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

தூதர்கள் அயோத்திக்குச் சென்று ராமரிடம் எல்லா விருத்தாந்தங்களையுந் தெரிவிக்க ராமர் சந்தோஷமடைந்து விஷயத்தை ஸீதைக்குஞ் சொல்லி நல்ல முகூர்த்தத்தில் ஸீதையோடும் அந்தப்புர ஸ்திரீகளோடும் பந்துக்களோடும் மித்ரர்களோடும் பட்டணத்து ஜனங்களோடும் நாரதனை முன்னிட்டுக்கொண்டு காந்திபுரிக்கு வந்து சேர்ந்தார். கம்புகண்டன் ராமர் வந்திருப்பதைக் கேட்டு மிகவும் மகிழ்வெய்தி ராமனை எதிர்கொண்டழைத்து அன்போடு வணங்கி அவரைப் பூஜித்தான். பிறகு யூபகேதுவையும் இவ்வாறே பூஜித்து வாத்தியகோஷங்களுடன் பட்டணத்திற்குள் அழைத்து வந்தான். உடனே அப்பட்டணத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் தத்தம் வீட்டு மெத்தைகளில் ஏறிக்கொண்டு யூபகேதுவின் மேலும் ராமர் மேலும் புஷ்பங்களை வாரியிறைத்தார்கள். சிலர் வழியில் ஆலத்திஎடுத்தார்கள். இவ்வித உற்சவத்தோடு ராமர் முதலியவர்கள் தமது விடுதிக்கேகினர்.

பிறகு ராமபிரான் நல்ல முகூர்த்தத்தைப் பார்த்து வெகு ஆனந்தத்துடன் யூபகேதுவின் விவாகத்தை நடத்தினார். கம்புகண்டனும் களிப்படைந்து ரதகஜதுரகபதாதிகளையும் தாஸதாஸீ ஜனங்களையும் கொடுத்து ராமரைப் பூஜித்தான். உடனே ராமர் மதனசுந்தரியோடும் மற்றவர்களோடும் அயோத்திக்குப் புறப்பட்டார். அச்சமயம் வாத்தியங்கள் முழங்கின. தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். மாதர்கள் யாவரும் மாடியின்மீதிருந்து புஷ்பங்களை வருஷித்தார்கள். இவ்வித வைபவத்துடன் ராமர் தமது கிருகத்திற்குச் சென்று அங்கே லக்ஷ்மீ பூஜையைச் செய்வித்து கோடிக்கணக்கான தானங்களைச் செய்தார். ஆடையாபரணங்களளித்து நண்பர்களை உபசரித்தார். பிறகு பந்துமித்திரர்கள் யாவரும் ராமரிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இருப்பிடத்துக்குச் சென்றார்கள். பிறகு லவன் முதலிய ஏழு பிள்ளைகளும் தத்தம் மனைவிகளோடு சுகமாக இருந்தார்கள்.

பிறகு குசனுக்கும் சம்பிகைக்கும் அழகிய ஒன்பது பெண்கள் பிறந்தனர். மேலும் குசனுக்குக் குமுதவதியினிடம் எட்டுப் பிள்ளைகள் உண்டாகப்போகின்றனர். சம்பகமாலினி என்ற ஒரு பெண்ணும் பிறக்கும். அப்பிள்ளைகளுள் மூத்தவனான அதிதி என்பவன் ராஜ்யமாளப்போகிறான். சுமதி முதலான பதினான்கு ஸ்திரீகளும் வரிசைக்கிரமமாகத் தனித்தனியே பெண்களையும் பிள்ளைகளையும் பெறுவார்கள். ராமர் ஸீதையோடு 1235 பௌத்திரர்களையும் பௌத்ரிகளையு மடைந்து அன்பு பாராட்டி வளர்த்து ஆனந்தமடைவார். ராமரது பௌத்திரர்களுக்குச் சில அரச கன்னிகைகள் சுயம்வரத்தாலும் சிலர் ராக்ஷஸ விவாகத்தாலும் சிலர் காந்தர்வ விகாகத்தாலும் சில பெண்கள் பௌருஷ விவாகத்தாலும் மனைவிகளாகப் போகிறார்கள். இவர்களுக்குக் கணக்கில்லை. அவர்களது ஸந்ததியைச் சொல்லுவதற்கும் இங்கு ஒருவராலும் முடியாது. இவ்வாறு நாரதர் யூபகேதுவின் விவாகத்தைச் செய்துவித்துச் சபையில் ஸ்ரீராமரை மிகவும் பக்தியுடன் ஸ்ரீசூதர் தமக்குச் சொன்ன ஆயிரம் பெயர்களால் ஸ்தோத்திரம் செய்து அவரிடம் விடை பெற்றுக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றார்.

இவ்வாறு ஸ்ரீராமர் ஸாகேதபட்டணத்தில் சகல சுகங்களையும் அனுபவித்து வந்தார். இவ்வுலகத்தில் அவைகளை வர்ணிக்க யாரால் முடியும்? தபோநிதியான வான்மீகி யொருவரே, ஸ்ரீராமரது குணங்களை வர்ணிப்பதில் சமர்த்தரா யிருந்தார். அவரே மகா மங்களகரமான ராமரது சரித்திரத்தை நூறு கோடி கிரந்தங்களால் வர்ணித்தவர். அதை ஸ்மரித்துக்கொண்டுதான் நானும் கொஞ்சம் வர்ணித்தேன். இவ்வாறு ஸ்ரீராமர் அயோத்திய பட்டணத்தில் பிள்ளைகளோடும் பேரர்களோடும் அவர்கள் பிள்ளைகளோடும் அவர்களது பேரர்களோடும் சகோதரர்களோடும் ஸீதையோடும் இன்னும் மற்றுமுள்ளவர்களோடும் கூடிச் சுகமாக இருந்தார்.

விஷ்ணுதாஸ! இந்த ஆனந்த ராமாயணத்தின் விவாககாண்டத்தை உனக்குக் கூறிமுடித்தேன். இது ஒன்பது ஸர்க்கமுள்

ளது. இதைக் கேட்பவர்கள் சகல மங்களத்தையும் பெறுவார்கள். இதைப் பக்தியுடன் கேட்கும் மாதர்கள் புத்திர பௌத்திரர்களை யடைவார்கள். தர்மத்தை விரும்புகிறவன் தர்மத்தையும் பொருளை விரும்புகிறவன் பொருளையும் காம்யத்தை விரும்புகிறவன் காம்யத்தையும் மோக்ஷத்தை விரும்புகிறவன் மோக்ஷத்தையும் அடைவன். இதைக் கிரமமாகப்பக்தியோடு எவர்கள் படிக்கிறார்களோ அல்லது கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகும் என்பது நிச்சயம்

9-வது சருக்கம்

முற்றிற்று

விவாககாண்டம்

முற்றிற்று.

ராஜ்யகாண்டம்.

(பூர்வார்த்தம்.)

1-வது சருக்கம்.

ஸ்ரீ விஷ்ணுதாசர் வினவுகிறார்.

பரமகுருவே! சூதரால் சொல்லப்பட்ட ராம ஸஹஸ்ர நாமத்தைக்கூறி நாரதர் ஸ்ரீராமனை ஸ்தோத்திரம்செய்தாரென்றுவிவாக காண்டத்தின் கடைசிச்சருக்கத்தில் சொன்னீர்களே; அது எப்படிப்பட்டதென்று எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும். முற்காலத்தில் அதைச் சூதர் முனிவர்களுக்குக் கூறியவாறு தெரிவிக்கவேண்டும்-என்று பிரார்த்தித்தார்.

ராமதாஸர் கூறுகிறார்.

சிஷ்ய! நீ நன்றாய்க் கேட்டாய். நான் சொல்லுவதைக் கவனித்துக் கேள். சூதரால் சொல்லப்பட்ட ராமஸஹஸ்ர நாமத்தை உனக்குச் சொல்லுகிறேன். நீ இப்போது கேட்ட மாதிரி சௌனகர் சூதரைக் கேட்க, அவர் நைமிசாரண்யத்திலிருந்து விஸ்தாரமாகப் பின் வருமாறு கூறினார்.

அது வருமாறு:—

ஸ்ரீ சூதர் கூறுகிறார்.—ஸகல உலகங்களையும் காப்பாற்றுவதில் விருப்பமுள்ளவர்களும் இந்திரன் முதலிய லோகபாலர்களால் சேவிக்கப்படுகிறவர்களுமான பார்வதியும் பரமேசுவரனும் முற்காலத்தில் ஒரு நாள் சுகமாக ஆஸனத்தில் வீற்றிருக்கையில் பார்வதியானவள் பரமசிவனை நோக்கி பல தர்மங்களைச் சொல்லும்படி வரிசையாகக் கேட்டாள்.

பார்வதி கூறுகிறாள்.—எனக்கும் உலகங்களுக்கும் நாதராயிருக்கிற தங்களது அருளால் நான் உத்தமமான தர்மங்களைத் தெரிந்து கொண்டேன். பாபங்களின் பிராயச் சித்தங்களையும் நன்றாகக்கேட்டேன். இன்னும் பிரம்மஹத்தி முதலிய பாபங்களின் பிராயச்சித்தத்தையும் தாங்கள் கூறவேண்டும்"என்றுகேட்டாள்.

மஹாதேவர்:—முற்காலத்தில் ஸநத்குமாரருக்கும் விக்நேச்வருக்கும் நடந்தஸம்வாதத்தின் ரகசியமானவிஷயத்தைச்சொல்லுகிறேன்; ஏ பார்வதி! விநாயகர் சுகமாக வீற்றிருக்கும் சமயத்தில் சநத்குமாரர் அவ்விடம் வந்து, அவரை வணங்கிச் சில தர்மங்களைத் தெரிவிக்கும்படி ரகசியமாகக் கேட்டார். அவையாவன:—

ஸநத்குமாரர்:—"தர்மங்களை யெல்லாம் அறிந்த ப்ரபுவே! பிர்ம ஹத்தியை நீக்கக்கூடிய கர்மத்தைத் தயையுடன் எனக்குச் சொல்லவேண்டும்; மூன்றுலகங்களிலும் தங்களைத் தவிர வேறொருவரில்லை; இது உண்மை" யென்று கூறிப் பிரார்த்தித்தார்.

விநாயகர்:—பிராமணோத்தமரே! மிகவும் ஸந்தோஷம்; கேட்டது நன்று; எல்லா உலகங்களுக்கும் உபகாரமாகவிருக்கும்படி நான் முன் செய்த ஒரு செய்கையைக் கூறுகிறேன் கேளுங்கள்; முன்னொருகாலத்தில் நான் யானை உருவத்தோடு மலைபோல் பிறந்தேன்; உடனே மரங்களைப் பிடுங்கி முனிவர்களை இம்சிக்க ஆரம்பித்தேன்; அநேக ரிஷிகளைக்கூட்டம் கூட்டமாய்க் கொன்றேன். உடனே நாலா பாக்கங்களிலும் பிராம்மணர்கள் ஆ! ஆ! என்று கதறினார்கள். அப்போது ஆயிரம் ஆயிரமான ஜனங்களின் நாசத்தாலுண்டான பாபமானது என்னைச் சூழ்ந்துகொண்டது. நான் அப்பொழுது பிரக்ஞையற்றவன்போல் பூமியில் விழுந்துகிடந்தேன். என்னைப் பார்த்ததும் என் பிதா தயவோடு சகல உலகங்களுக்கும் நாதரான ராமமூர்த்தியை எனக்காகப் பூஜித்தார். உடனே ராமமூர்த்தி அவருக்கு பிரத்தியக்ஷமாகி என் தந்தையைப் பார்த்து "ஏ மகாதேவ! நான்பிரஸன்னமாயிருக்கிறேன்; என்னிடமிருந்து தாங்கள் வேண்டுவதென்ன? மூன்றுலகங்களிலும் கிடைக்கக்கூடாததாய் இருந்தாலும் உடனே கொடுக்கிறேன்" என்றார்.

மஹாதேவர்:—"தங்களுக்கு என்னிடம் தயையிருக்குமாயின் பிர்மஹத்தி பாப மடைந்த இந்தப் பிள்ளையை அப்பாபத்தினின்றும் தயவுடன் விடுவித்தல் வேண்டும்" என்றார். ராமர் "அப்படியே ஆகட்டும்" என்று தயையோடு என்னைப் பார்த்தார். அதே க்ஷணத்தில் நான் மோகம் நீங்கிப் பாபவிமோசன மடைந்து, அநேக வாக்கியங்களாலும் ஸ்லோகங்களாலும் அவரை ஸ்தோத்

கிரம் செய்து வணங்கினேன். பிறகு ராமமூர்த்தி "விநாயக! ஆயிரக்கணக்கான பிர்மஹத்திக்குப் பிராயச்சித்தம் என்னுடைய ஸகஸ்ரநாமத்தை ஜபம் பண்ணுவதேயாகும்" என்று கூறித் தமது ஸகஸ்ரநாமத்தை மிகவும் ரகசியமாக எனக்குப் போதித்தார். நான் அதைப்பெற்றுக்கொண்டு பாபரகிதனானேன். அதுமுதற்றான் தேவர்கள் என்னைப் பூஜிக்கிறார்கள். நீரும் இந்த ஸகஸ்ரநாமத்தை நன்றாய்ப் படித்து உலகெங்கும் பரவும்படி செய்யும் என்றார்.

ஸநத்குமாரர்:—"விநாயக மூர்த்தியே! நான் கிருதார்த்தனானேன்; தமது அநுக்கிரகத்தை யடைந்தேன். தங்களாது தயையால் நான் ராமஸகஸ்ரநாமத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டேன்" என்று வணங்கினார்.

ஸ்ரீமகாதேவர்:—ஏ பார்வதி! ஸநத்குமாரர் இவ்விதம் தேவேசரிடம் சொல்லி, அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து விடை பெற்றுக்கொண்டு தமது இருப்பிடம் சென்று, அதுமுதல் எப்போதும் மிகவும் சுத்தமாயிருந்து இந்த ஸ்தோத்திரத்தை ஜபித்துப் புண்யபாபமற்று மேலான சித்தியை அடைந்தார்.

பார்வதி:—நாதா! எனக்கு அதைக்கேட்க ஆவலிருப்பதால், தயவுடன் இப்போது அருளவேண்டுமென்று கூறி வணங்கினாள்.

॥ ஶ்ரீமஹாதே³வ உவாச ॥

அத² வக்ஷ்யாமி ஹே தே³வி ராமநாமஸஹஸ்ரகம் ।
ஶ்ருணுஷ்வைகமநா: ஸ்தோத்ரம் கு³ஹ்யாத்³கு³ஹ்யதரம் மஹத் ।
ஶிவவிநாயகஸ்யாஸ்ய ஸ்யாந்நாமஷ்டேஷ்வபி உச்யதே ।
ஸர்வஸ்வஹார்த்³த³கோ ராமோ தே³வதாஸம்ஹ்ருத்ஸமே ॥

அஸ்ய ஶ்ரீராமஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமந்த்ரஸ்ய । விநாயக ருஷி: । அநுஷ்டுப் ச²ந்த³: । ஶ்ரீராமோ தே³வதா । மஹாவிஷ்ணுரிதி பீ³ஜம் । கு³ணப்⁴ருந்நிர்கு³ணோ மஹாநிதி ஶக்தி: । ஸச்சிதா³நந்த³விக்³ரஹ இதி கீலகம் । ஶ்ரீராமப்ரீத்யர்த்தே² ஜபே விநி

𑌯𑍋𑌗𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌂𑌦𑍍𑌰𑌾𑌯 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃। 𑌸𑍀𑌤𑌾𑌪𑌤𑌯𑍇 𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 । 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌾𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 । 𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜𑌾𑌯 𑌅𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 । 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌯 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 । [illegible] 𑌕𑌰𑌤𑌲𑌕𑌰𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌂𑌦𑍍𑌰𑌾𑌯 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑌸𑍀𑌤𑌾𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌰𑌸𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌾𑌯 𑌶𑌿𑌖𑌾𑌯𑍈 𑌵𑌷𑌟𑍍 । 𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜𑌾𑌯 𑌕𑌵𑌚𑌾𑌯 𑌹𑍁𑌂। 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌯 𑌨𑍇𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌾𑌯 𑌵𑍌𑌷𑌟𑍍 । [illegible] 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌫𑌟𑍍।

॥ 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 ॥

𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑌾𑌜𑌾𑌨𑍁𑌬𑌾𑌹𑍁𑌂 𑌧𑍃𑌤𑌶𑌰𑌧𑌨𑍁𑌷𑌂
𑌬𑌦𑍍𑌧𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂
𑌪𑍀𑌤𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌵𑌸𑌾𑌨𑌂 𑌨𑌵𑌕𑌮𑌲𑌦𑌲—
𑌸𑍍𑌪𑌰𑍍𑌧𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑍍 ।
𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌕𑌾𑌰𑍂𑌢𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌖𑌕𑌮𑌲𑌮𑌿𑌲—
𑌲𑍍𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌰𑌦𑌾𑌭𑌂
𑌨𑌾𑌨𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌂 𑌦𑌧𑌤𑌮𑍁𑌰𑍁𑌜𑌟𑌾—
𑌮𑌣𑍍𑌡𑌨𑌂 𑌰𑌾𑌮𑌚𑌂𑌦𑍍𑌰𑌮𑍍 ॥

மஹாதேவர் கூறுகிறார்.

மஹாதேவர்:—ஏ தேவி! ஸ்ரீராமஸஹஸ்ரநாமத்தைச்சொல்லுகிறேன், ஒரே மனதோடு கவனித்துக்கேள். இது மிகவும் ரகசியமானது. இதற்கு விநாயகர் ரிஷி; சந்தஸ் அனுஷ்டுப்; பரப்பிர்ம ஸ்வரூபியான ராமரே தேவதை........................

தியானம்.

முழந்தாள்வரையில் நீண்டகைகளை யுடையவரும் வில் அம்பு இவைகளைத் தரித்து பத்மாஸனமிட்டு உட்கார்ந்து கொண்டிருப்பவரும் மஞ்சள் வஸ்திரம் உடுத்துக்கொண்டிருப்பவரும் இடது அடையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் ஸீதையின் முககமலத்தை நோக்காநின்ற அன்றலர்ந்த இதழ்போன்ற கண்களை

𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌸𑌹𑌿𑌤𑌂 𑌸𑍁𑌰𑌦𑍍𑌰𑍁𑌮𑌤𑌲𑍇
𑌹𑍈𑌮𑍇 𑌮𑌹𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑍇
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑌾𑌸𑌨𑍇 𑌮𑌣𑌿𑌮𑌯𑍇
𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑍇 𑌵𑌾𑌚𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑌞𑍍𑌜𑌨𑌸𑍁𑌤𑍇
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑍁𑌨𑌿𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑌰𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑌂
𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌮𑍍 ॥

𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑍇 𑌸𑍁𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑍇।
𑌮𑍂𑌲𑍇 𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌪𑍀𑌠𑍇 𑌸𑌿𑌂𑌹𑌾𑌷𑍍𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑍇॥
𑌮𑍃𑌦𑍁𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌤𑌰𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌜𑌾𑌨𑌕𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌰𑌾𑌮𑌂 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌸𑌮𑍍 ॥

யுடையவரும், மேக நிறம்போன்ற மேனியையுடையவரும் அநேக அலங்காரங்களால் பிரகாசிப்பவரும் அலங்காரமான நீண்ட சடையையுடைய வருமான ஸ்ரீராமரைத் தியானம் செய்கிறேன்.

புஷ்பகவிமானத்தின் மத்தியில் கற்பகத்தருவின் கீழ் தங்கமயமான பெரிய மண்டபத்தின்கண் மணிமயமான ஆஸனத்தில் வீராஸனம் பூண்டு ஸீதாதேவியோடு சுகமாக வீற்றிருக்கிறவரும் எதிரில் ஹனுமார் படித்துக்கொண்டிருக்க, முனிவர்களுக்கு மேன்மையான தத்துவத்தை எடுத்து விவரமாய்ச் சொல்லுகிற வரும் பரதர் முதலிய சகோதரர்கள் சூழ வீற்றிருப்பவரும் நீல மேக ச்யாமலவர்ணராயுமிருக்கிற ஸ்ரீராமரைச் சேவிக்கிறேன்.

புஷ்பகவிமானத்தில் பிரகாசியாநின்ற சொர்ணமண்டபத் தின் கண் கற்பகத்தருவின் கீழ் எட்டுச் சிங்கங்கள் தாங்காநின்ற வழுவழுப்பான சொர்ண பீடத்தில் ஜானகியோடு சுகமாக வீற்றிருப்பவரும் நீலோத்பலம் போல் கறுத்த இரண்டு கைகளையுடைய வரும் மஞ்சள் வஸ்திர முடுத்துக்கொண்டிருப்பவரும் மந்தஹாஸ முகமுடையவரும் தாமரை இகழ்போன்ற கண்களையுடைய வரும் கிரீடம் முத்துமாலை தோள்வளை குண்டலம் முதலிய ஆபரணங்

ஸ்மிதவக்த்ரம் ஸுகாஸீநம் பத்மபத்ரநிபேக்ஷணம் |
கிரீடஹாரகேயூரகங்கணாத்யை: கடகாதிபி: ||
ப்ராஜமாநம் ஜ்ஞாநமுத்ராதரம் வீராஸநஸ்திதம் |
ஸ்ப்ருசந்தம் ஸ்தநயோரக்ரே ஜாநக்யா: ஸவ்யபாணிநா ||
வஸிஷ்ட வாமதேவாத்யை: ஸேவிதம் லக்ஷ்மணாதிபி: |
அயோத்யாநகரே ரம்யே ஹ்யபிஷிக்தம் ரகூத்வஹம் ||
ஏவம் த்யாத்வா ஜபேந்நித்யம் ராமநாமஸஹஸ்ரகம் |
ஹத்யாகோடியுதோவாபி முச்யதே நாத்ர ஸம்சய: ||
ராம: ஸ்ரீமாந் மஹாவிஷ்ணுர் ஜிஷ்ணுர் தேவஹிதாவஹ: |
தத்த்வாத்மா தாரகம் ப்ரஹ்ம சாச்வத: ஸர்வஸித்தித: |

கள் பூண்டு விளங்குகிறவரும் ஞான முத்திரை தரித்திருப்பவரும் வீராஸனத்தில் வீற்றிருப்பவரும் ஜானகியை இடது கையால் தழுவிக்கொண்டிருப்பவரும் வசிஷ்டர் வாமதேவர் முதலியவர்களால் சேவிக்கப்படுகிறவரும் அழகிய அயோத்தியா பட்டணத்தில் அபிஷேகம் செய்யப்பட்டவருமாயிருக்கிற ஸ்ரீராகவரைத்யானம் செய்கிறேன். இவ்வாறு த்யானம் செய்துகொண்டு, ஸ்ரீராமநாம ஸஹஸ்ரத்தைத் தினந்தோறும் ஜபம் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் கோடிஹத்தி செய்தவனாயிருந்தாலும் அந்தப் பாபத்திலிருந்து விடுபடுவான். இவ்விஷயத்தில் சிறிதும் ஐயமேயில்லை.

ஓம், ஸ்ரீராமர், ஸ்ரீமான், மஹாவிஷ்ணு, ஜிஷ்ணு, தேவருக்கு நன்மையுண்டு பண்ணுகிறவர், தத்துவசொரூபர், தாரகப் பிர்மம், சாச்வதர், ஸித்திகளெல்லாம் கொடுப்பவர்.

|| நாமாவலி ஸ்தோத்ரம் ||

ராஜீவலோசந: ஸ்ரீமாந் ஸ்ரீராமோ ரகுபுங்கவ: |
ராமபத்ர: ஸதாசாரோ ராஜேந்த்ரோ ஜாநகீபதி: ||க||

நாமாவளி ஸ்தோத்திரம்.

தாமரைப்பூப் போன்ற கண்களையுடையவர், ஸ்ரீமான் ஸ்ரீராமர், ரகுவம்ச சிரேஷ்டர், மங்களகரமான ராமர், நல்ல ஆசாரமுடையவர், ராஜச்ரேஷ்டர், ஜானகியின்பதி. (1)

𑌅𑌗𑍍𑌰𑌣𑍍𑌯𑍋 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑍋 𑌵𑌰𑌦𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 |
𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑍋 𑌜𑌿𑌤𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌃 ||௨

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌦𑌾𑌨𑍍𑌤𑌃 𑌶𑌤𑍍𑌰𑍁𑌜𑌿𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑍁𑌤𑌾𑌪𑌨𑌃 |
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌦𑌿𑌃 𑌶𑌰𑌣𑍍𑌯𑍋 𑌵𑌾𑌲𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑌃 ||௩||

𑌜𑍍𑌞𑌾𑌨𑌭𑌵𑍍𑌯𑍋𑌽𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋 𑌵𑌾𑌗𑍍𑌮𑍀 𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 |
𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑍍𑌯𑍋 𑌦𑍃𑌢𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌖𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑍀 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍 ||௪||

𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 𑌵𑍀𑌰𑍋 𑌜𑌿𑌤𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌰𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑌃 |
𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍋 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌢𑍋 𑌦𑍃𑌢𑌃 ||

𑌈𑌶𑌃 𑌖𑌡𑍍𑌗𑌧𑌰𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌕𑍌𑌸𑌲𑍇𑌯𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌕𑌃 |
𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌂𑌸𑍋 𑌮𑌹𑍋𑌰𑌸𑍍𑌕𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ||௬||

முதன்மையாகக் கருதக் கூடியவர், ச்ரேஷ்டமானவர், வரங்களைக் கொடுக்கிறவர், பரமேச்வரர், ஜநார்த்தனர் சத்துருக்களை ஜயித்தவர், பிறர் பிரயோஜனமாகக் கொடுப்பவர். ( )

விச்வாமித்திரருக்குப் பிரியர், கொடுக்கிறவர், சத்துருக்களை ஜயித்தவர், சத்துருக்களைத் தவிக்கும்படி செய்கின்றவர், எல்லாமறிந்தவர், வேதங்களுக்கெல்லாம் ஆதியானவர், ரக்ஷகர், வாலியை நாசம் செய்தவர். (3)

மங்களமான ஞானத்தைக் கொடுப்பவர், அளவிட முடியாதவர், பேசுந்திறமை வாய்ந்தவர், உண்மையான விரதத்தையுடையவர், பரிசுத்தமானவர், ஞானத்தால் அடையக் கூடியவர், ஸ்திரமான புத்தியையுடையவர், கரனை நாசஞ்செய்தவர், பிரதாபமுடையவர். (4)

காந்தியையுடையவர், ஆத்மவான், வீரர், கோபத்தை ஜயித்தவர், சத்துருக்களை நாசஞ்செய்கிறவர், லோக ரூபமானவர், விசாலமான கண்களையுடையவர், பிரபு, எல்லாருக்கும் எஜமானர், ஸ்திரமானவர். . (5)

ஸர்வஸம்பன்னர், கத்திதரித்திருப்பவர், லக்ஷ்மியோடு கூடினவர், கௌஸல்யையினுடைய குமாரர், அசூயைபற்றவர், பெரிய தோள்களையுடையவர், எல்லாருக்கும் மேலாயும் மேலான ஸ்தானமாயுமிருப்பவர். (6)

ஸத்யவ்ரதஸ்ஸத்யஸந்தோ குணார்ண: தர்மாத்மக: ।
லோகஜ்ஞோ லோகவந்த்யோ லோகாத்மா லோககृத்விபு: ॥

அநாதிர்பகவாந் ஸேவ்யோ ஜிதமாயோ ரகூத்வஹ: ।
ராமோ தயாகரோ தக்ஷஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வபாவந: ॥ ௮

ப்ரஹ்மண்யோ நீதிமாந் கோப்தா ஸர்வதேவமயோ ஹரி: ।
ஸுந்தர: பீதவாஸாஶ்ச ஸூத்ரகார: புராதந: ॥ ௯

ஸௌம்யோ மஹர்ஷி: கோதண்டீ ஸர்வஜ்ஞஸ்ஸர்வகோவித: ।
கவிஸ்ஸுக்ரீவவரத: ஸர்வபுண்யாதிகப்ரத: ॥ ௧௦

பவ்யோ ஜிதாரிஷட்வர்கோ மஹோதாரோऽகநாஶந: ।
ஸுகீர்த்திராதிபுருஷ: காந்த: புண்யக்ருதாகம: ॥

உண்மையான விரதத்தையுடையவர், உண்மையான பிரதிக்ஞையையுடையவர், பரமகுணநிதி, தர்மமுள்ளவர், லோகங்களை அறிந்தவர், லோகசரண்யர், லோகஸ்வரூபமானவர், லோகங்களையுண்டாக்கினவர், உலகெங்கும் வ்யாபித்து நிற்பவர். (7)

ஆதியற்றவர், பகவத்ஸ்வரூபமானவர், சேவிக்கத்தகுந்தவர், மாயையை ஜயித்தவர், ரகுச்ரேஷ்டர், ஸ்ரீராமர், தயாநிதி, ஸமர்த்தர், எல்லாமறிந்தவர், எல்லாவற்றையும் சுத்தப்படுத்துகிறவர். (8)

பிராம்மண பக்தர், நீதியையுடையவர், காப்பாற்றுகிறவர், விஷ்ணு, அழகியவர், மஞ்சள் வஸ்திரந் தரித்தவர், சூத்திரம் செய்தவர், புராணபுருஷர். (9)

பிரஸன்னமானவர், மகரிஷி, கோதண்டத்தையுடையவர், ஸர்வக்ஞர், எல்லாவற்றிலும் கரைகண்டவர், கவி, ஸுக்ரீவனுக்கு வரத்தைக் கொடுத்தவர், சகல புண்யங்களையும் அளிப்பவர். (10)

மங்களகரமானவர், காமாதிகளான ஆறுசத்துருக்களையும் ஜயித்தவர், மிகவும் உதாரர், பாபங்களைப் போக்குகிறவர், நல்லகீர்த்தியையுடையவர், ஆதிபுருஷர் இச்சிக்கக்கூடியவர், புண்யம் செய்தவர் அடையக்கூடிய ஸ்தானமாகவிருப்பவர். (11)

𑌅𑌕𑌲𑍍𑌮𑌷𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌾𑌸𑍋 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌃 |
𑌸𑍍𑌮𑌿𑌤𑌭𑌾𑌷𑍀 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ‖
𑌧𑍀𑌰𑍋 𑌦𑌾𑌨𑍍𑌤𑍋 𑌘𑌨𑌶𑍍𑌯𑌾𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌧𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 |
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌯𑍋𑌗𑌨𑌿𑌲𑌯𑌃 𑌸𑍁𑌮𑌨𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌗𑍍𑌰𑌜𑌃 ‖
𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌯𑌃 𑌶𑍂𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌃 |
𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍀 𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑍋 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ‖ ‖௧௪‖
𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍀 𑌶𑌤𑍍𑌰𑍁𑌜𑌿𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 |
𑌶𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑌾 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌃 ‖ ௧௫
𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌭𑍂𑌤𑍋 𑌦𑍁𑌰𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌪𑌰𑌪𑍁𑌰𑌞𑍍𑌜𑌯𑌃
𑌅𑌨𑌨𑍍𑌤𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌰𑌃 ‖ ௧௬
𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑍋 𑌗𑍁𑌣𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 |
𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌕𑌾𑌯𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ‖௧௭‖

பாபமற்றவர், நான்கு கைகளையுடையவர், எல்லா இடத்திலுமிருப்பவர், அணுகக்கூடாதவர், புன்சிரிப்போடு பேசுகிறவர், ஒழிவடைந்த மனதையுடைவர், சாஸ்திரமுடையவர், வீரியமுடையவர், பிரபு. (12)

தீரர், இந்திரியங்களை அடக்கினவர், மேகம்போல் கறுத்தவர், சகலாயுதசமர்த்தர். அத்யாத்ம யோகத்தில் வசிப்பவர், நல்ல மனமுடையவர், லட்சுமணருக்கு மூத்தவர். (13)

சகல தீர்த்தஸ்வரூபர், சூரர், எல்லாயக்ஞங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவர், யக்ஞஸ்வரூப முள்ளவர், யஜ்ஞேசுவரர், கிழத்தனம் மரணம் இவையற்றவர். (14)

வர்ணாச்ரமங்களுக்குக்குரு, பிரம்மசாரி, சத்துருக்களை ஜயிக்கிறவர், புருஷ ச்ரேஷ்டர் (15)

சிவலிங்கப்ரதிஷ்டை செய்தவர், பரமாத்மா, ஸர்வச்ரேஷ்டர் பிரமாணமானவர், அறியக்கூடாதவர், நிறைந்தவர், சத்துருவின் நகரங்களை ஜெயித்தவர், முடிவில்லாதவர், ஆனந்தஸ்வரூபர், தநுர்வேத ஸ்வரூபர், தநுஸைத் தரித்தவர். (16)

குணங்களுக்கு நிதி, ச்ரேஷ்டமான குணமுடையவர், ஸச்சிதாநந்தஸ்வரூபர், நமஸ்கரிக்கத் தகுந்தவர், பெரிய சரீரமுள்ளவர், உலகங்களைப் படைத்தவர், ஸமர்த்தர். (17)

வினீதாத்மா வீதராகஸ்தபஸ்வீஶோ ஜனேஶ்வர꞉ |
கல்யாணப்ரக்ருதி꞉ கல்ப꞉ ஸர்வேஶ꞉ ஸர்வகாமத꞉ || 18

அக்ஷய꞉ புருஷஸ்ஸாக்ஷீ கேஶவ꞉ புருஷோத்தம꞉ |
லோகாத்யக்ஷோ மஹாகாயோ விபீஷணவரப்ரத꞉ ||

ஆனந்தவிக்ரஹோ ஜ்யோதிர்ஹனுமத்ப்ரபுரவ்யய꞉ |
ப்ராஜிஷ்ணுஸ்ஸஹனோ போக்தா ஸத்யவாதீ பஹுஶ்ருத꞉ ||

ஸுகத꞉ காரணம் கர்த்தா பவபந்தவிமோசன꞉ |
தேவசூடாமணிர்னேதா ப்ரஹ்மண்யோ ப்ரஹ்மவர்த்தன꞉ ||

ஸம்ஸாரதாரகோ ராம꞉ ஸர்வது꞉கவிமோக்ஷக்ருத் |
வித்வத்தமோ விஶ்வகர்த்தா விஶ்வஹர்த்தா ச விஶ்வக்ருத் || 22

வினயமுள்ள மனதுடையவர், ஆசையற்றவர், தபஸ்விகளுக்கு ஈச்வரர், ஜனங்களுக்கு ஈச்வரர், கல்யாண சொரூபர், மூலப்ரகிருதி, கல்பம், எல்லாவற்றிற்கும் ஈச்வரர், இஷ்டங்களை யெல்லாம் கொடுப்பவர். (18)

நாசமற்றவர், புருஷர், ஸர்வஸாக்ஷியாயிருப்பவர், கேசவர், புருஷோத்தமர், லோகங்களுக்கு ஈசர், பெரிய காரியமுடையவர், விபீஷணருக்கு வரத்தைக் கொடுத்தவர். (19)

ஆனந்த சொரூபர், ஜோதிசொரூபர், ஹனுமாருக்கு பிரபு நாசமற்றவர், அனுபவிக்கிறவர், ஸத்திய ஸந்தர், அநேக ஸாஸ்திர மறிந்தவர். (20)

சுகங்களைக் கொடுப்பவர், காரணபூதர், கர்த்தர், ஸம்ஸார பந்தத்தை விடுவிக்கிறவர், தேவர்களுக்குச் சூடாமணிபோன்றவர், பிரேரகர், பிர்ம்மண்யர், பிராமணர்களை விருத்தி செய்பவர். (21)

மிகவும் அறிந்தவர், உலகங்களைக் காக்கிறவர், உலகங்களை யழிப்பவர், உலகங்களை ஸ்ருஷ்டிப்பவர், ஸம்ஸாரதிபந்தங்களைத் தாண்டும்படி செய்பவர், எல்லாத் துக்கங்களையும் நாசம் செய்கிறவர். (22)

நித்யோ நியதகல்யாண: ஸீதாஶோகவிநாஶக்ருத் |
காகுத்ஸ்த்: புண்டரீகாக்ஷோ விஶ்வாமித்ரபயாபஹ: ||
மாரீசமதநோ ராமோ விராதவதபண்டித: |
து:ஸ்வப்நநாஶநோ ரம்ய: கிரீடீ த்ரிதஶாதிப: || 24
மஹாதநுர்மஹாகாயோ பீமோ பீமபராக்ரம: |
தத்வஸ்வரூபீ தத்வஜ்ஞஸ்தத்வவாதீ ஸுவிக்ரம: || 25
பூதாத்மா பூதக்ருத்ஸ்வாமீ காலஜ்ஞாநீ மஹாபடு: |
அநிர்விண்ணோ குணக்ராமோ நிஷ்கலங்க: கலங்கஹா ||
ஸ்வபாவபத்ர: ஶத்ருக்ந: கேஶவ: ஸ்தாணுரீஶ்வர: |
பூதாதி: ஶம்புராதித்ய: ஸ்தவிஷ்ட: ஶாஶ்வதோ த்ருவ: ||27

நித்தியர், நித்ய கல்யாணசொரூபர், ஸீதையின் சோகத்தை நாசம் செய்பவர், காகுத்ஸ வம்சத்திலுண்டானவர், தாமரைப் பூப்போன்ற கண்களையுடையவர், விச்வாமித்ரர் பயத்தைப் போக்குகிறவர். (23)

மாரீசனைக் கொன்றவர், இராமர், விராதனைக்கொல்வதில் சமர்த்தர், துர்ச்சொப்பனத்தை நீக்குகிறவர், அழகியவர், கிரீட முடையவர், தேவதைகளுக்கு அதிபர். (24)

பெரிய தனுஸையுடையவர், பெரிய சரீரத்தையுடையவர், பயத்தை யுண்டாக்கக்கூடியவர், அதிபராக்ரமசாலி, தத்வஸ்வரூப முடையவர், தத்துவத்தை யறிந்தவர், உண்மைபேசுகிற வர். (25)

பூதசொரூபி, பூதங்களையுண்டாக்குகிறவர், ஸ்வாமீ, கால ஞானத்தையுடையவர், பெரிய சரீரமுடையவர், ஒழிவடையாத வர், குணங்களுக்கு இருப்பிடமானவர், களங்கமற்றவர், களங்கங் களை நீக்குகிறவர். (26)

ஸ்வபாவமாக மங்களகரமானவர், சத்துருக்களை நாசஞ்செய் பவர், கேசவர், ஸ்தாணு, ஈச்வரர், பூதங்களுக்கு ஆதி, சுகத்தை யுண்டுபண்ணுகிறவர், சூரியசொரூபி, மிகவும் ஸ்திரமானவர் நித்யமானவர். (27)

𑌕𑌵𑌚𑍀 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍀 𑌚𑌕𑍍𑌰𑍀 𑌖𑌡𑍍𑌗𑍀 𑌭𑌕𑍍𑌤𑌜𑌨𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ||
𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌰𑌹𑌿𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑌿𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍋𑌚𑌰𑌃 || 28
𑌅𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌸𑌰𑍍𑌵𑌾𑌦𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑌾𑌗𑌰𑌃 |
𑌸𑌮𑌸𑍍𑌸𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌮𑌗𑍋 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 || 29
𑌅𑌜𑌯𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍋 𑌮𑌹𑌾𑌤𑌪𑌾𑌃 |
𑌲𑍋𑌕𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍋𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌰𑌮𑍃𑌤𑍋𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 || 30
𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌸𑌦𑍍𑌗𑌤𑌿𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 |
𑌅𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌊𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌰𑍁𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌵𑌾𑌮𑌨𑍋 𑌬𑌲𑌿𑌃
𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌵𑌿𑌧𑌾𑌤𑌾 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑍍𑌚 𑌶𑌙𑍍𑌕𑌰𑌃 |
𑌹𑌂𑌸𑍋 𑌮𑌰𑍀𑌚𑌿𑌰𑍍𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍋 𑌰𑌤𑍍𑌨𑌗𑌰𑍍𑌭𑍋 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ||
𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌵𑌾𑌚𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌪𑍍𑌤𑌾𑌸𑍁𑌰𑌸𑍂𑌦𑌨𑌃 |
𑌜𑌾𑌨𑌕𑍀𑌵𑌲𑍍𑌲𑌭𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌕𑌟𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 || 33

கவசமுடையவர், குண்டலமுடையவர், சக்ரதாரீ, கத்தியை யுடையவர், பக்தஜனப்பிரியர், மிருத்யு அற்றவர், ஜன்மமில்லாதவர், எல்லாவற்றையும் ஜெயித்தவர், எங்கும் நிறைந்தவர். 28

தனக்குமேல் உத்தமமற்றவர், அளவிடமுடியாத ஆத்மாவை யுடையவர், ஸர்வஸொரூபி, குணக்கடல், சமமானவர், சமஸொரூபி, சமமாய்ப் பேசுகிறவர், ஜடாமகுடம் தரிப்பவர். (29)

ஜயிக்க முடியாதவர், சகலபூத ஸொரூபியாயிருப்பவர், நாலு பக்கங்களிலும் சேனையை யுடையவர், லோகேச்வரர், பெரியகைகளை யுடையவர், அமிர்த ஸொரூபி, வேதங்களை யறிந்தவர். (30)

சகிக்கிறவர், நல்லவர்களுக்குக் கதியாயிருப்பவர், அடக்குகிறவர், லோகங்களுக்குக் காரணபூதர், பெரிய காந்தியையுடையவர், இந்திரனை அதிக்ரமித்தவர், ஸ்திரமானவர், உன்னதமானவர், உபேந்திரர், வாமனர், பலி, தனுர் வேதங்களை யறிந்தவர், உலகங்களைஸ்ருஷ்டிக்கிறவர், பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆத்மரூபி, மரீசி, கோவிந்தர், இரத்தினங்களை கர்ப்பத்தில் உடையவர், பெரிய காந்தியையுடையவர். (32)

வ்யாஸஸ்வரூபி, பிருஹஸ்பதி, கொழுப்பை யடைந்த அசுரர்களை நாசம் செய்கிறவர், ஜானகிபதி, பூஜ்யர்; ப்ரீதியை விருத்தி செய்கிறவர். (33)

ஸ்வயம்பூரதீந்த்ரியோ வேத்யோ நிர்தேஶ்யோ ஜாம்பவத்ப்ரபு꞉ |
மதநோ மதநாகாரோ வ்யாபீ விஶ்வரூபோ நிரஞ்ஜந꞉ || 34

நாராயணோऽக்ரணீ꞉ ஸாதுர்ஜடாயுப்ரீதிவர்தந꞉ |
நைகரூபோ ஜகந்நாத꞉ ஸுரகார்யஹித꞉ ஸ்வபூ꞉ || 35

ஜிதக்ரோதோ ஜிதாராதி꞉ ப்லவகாதிபராஜ்யத꞉ |
வஸுத꞉ ஸுபுஜோ நைகமாயோ பவ்ய꞉ ப்ரமோதந꞉ || 36

சண்டாம்ஶு꞉ ஸித்தித꞉ கல்ப꞉ ஶரணாகதவத்ஸல꞉ |
அகதோ ரோகஹர்தா ச மந்த்ரஜ்ஞோ மந்த்ரபாவந꞉ || 37

ஸௌமித்ரிவத்ஸலோ துர்யோ வ்யக்தாவ்யக்தஸ்வரூபத்ருக் |
வஸிஷ்டோ க்ராமணீ꞉ ஶ்ரீமாநநுகூல꞉ ப்ரியம்வத꞉ || 38

சுயமாய் உண்டாகிறவர், இந்த்ரியங்களைக் கடந்தவர், அறியக் கூடியவர், குறிப்பிடக்கூடியவர், ஜாம்பவானுக்கு எஜமான், மதமுண்டாக்குகிறவர், மன்மதசொரூபி, உலகவ்யாபி, லோகரூபி, அக்ஞானமற்றவர். (34)

நாராயணர், முதன்மையானவர், ஸாது, ஜடாயுவுக்குப் பிரீதியை உண்டு பண்ணுகிறவர், அநேக ரூபமுடையவர், லோகநாதர், தேவகாரியத்திற்கு ஹிதமானவர், பிரபு. (35)

கோபத்தை ஜயித்தவர், சத்ருக்களை ஜெயித்தவர், சுக்ரீவனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்தவர், தனத்தைக் கொடுப்பவர், நல்லபுஜங்களையுடையவர், அநேகவிதமான மாயையையுடையவர், மங்களகரமானவர், ஸந்தோஷத்தை யுண்டாக்குகிறவர். (36)

உஷ்ணகிரணரூபி, ஸித்திகளைக் கொடுப்பவர், சரணமடைந்தவரிடம் ஆசையுள்ளவர், ஔஷத சொரூபி, ரோகத்தைப் போக்குகிறவர், மந்திரமறிந்தவர், மந்திரரூபி. (37)

லக்ஷ்மணரிடம் பிரியமுள்ளவர், பாரத்தைவகிக்கிறவர், வ்யக்தமாயும் அவ்யக்தமாயு மிருக்கிற ரூபத்தைத்தரிக்கிறவர், வஸிஷ்டர், மேன்மையானவர், ஸ்ரீமான், அநுகூலர், பிரியமாய்ப்பேசுகிறவர்.

𑌅𑌸𑌮𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌾𑌨𑍍 𑌧𑍀𑌰𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑍋𑌪𑍇𑌤𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌤𑌾𑌟𑌕𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ॥ 39

𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌕𑍂𑌰𑍍𑌮𑌃 𑌕𑌮𑌲𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌗𑍋𑌵𑌰𑍍𑌧𑌨𑌧𑌰𑍋 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌰𑍂𑌪𑌃 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌸𑌾𑌗𑌰𑌃 ॥ 40

𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌭𑍇𑌤𑍍𑌤𑌾 𑌚 𑌗𑍋𑌪𑍀𑌗𑍋𑌪𑌾𑌲𑌸𑌂𑌵𑍃𑌤𑌃 ।
𑌮𑌾𑌯𑍀 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑍋 𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌰𑍈𑌣𑍁𑌕𑍇𑌯𑌬𑌲𑌾𑌪𑌹𑌃 ॥ 41

𑌪𑌿𑌨𑌾𑌕𑌮𑌥𑌨𑍋 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑍋 𑌗𑌰𑍁𑌡𑌧𑍍𑌵𑌜𑌃 ।
𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑍋 𑌲𑍋𑌕𑌚𑌰𑌿𑌤𑍋 𑌭𑌰𑌤𑌾𑌗𑍍𑌰𑌜𑌃 ॥ 42

𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌃 𑌸𑌦𑍍𑌗𑌤𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌮𑌨𑍋𑌰𑍂𑌪𑍀 𑌮𑌨𑍋𑌵𑍇𑌗𑍀 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ॥

சமானமற்றவர், ஸ்வரூபமுள்ளவர், தீரர், வில்லில் சாமர்த்தியமுள்ளவர், ஜேஷ்டர், எல்லா குணங்களோடும் கூடியவர், ஸக்தியுடையவர், தாடகையைக்கொன்றவர். (39)

வைகுண்டரூபி, பிராணிகளின் பிராணன், கூர்மரூபி, கமலாபதி, கோவர்த்தனத்தைத் தரித்தவர், மத்ஸயரூபி, தயாநிதி. (40)

கும்பகர்ணனைப் பிளந்தவர், இடையர், இடைச்சி இவர்களால் சூழப்பட்ட முந்நூறு மாயைகளையுடையவர், லோகவ்யாபி, பரசுராமரின் பலத்தை நாசம் செய்தவர். (41)

சிவதநுஸை ஒடித்தவர், உலகங்களால் நமஸ்கரிக்கத் தகுந்தவர், சாமர்த்தியமுள்ளவர், கருடனை த்வஜத்திலுடையவர், மூன்றுலகங்களுக்கும் ஆச்ரயமானவர் உலகமெங்கும் நிறைந்தவர், பரதனுடைய ஜ்யேஷ்ட சகோதரர். (42)

ஸ்ரீயைத் தரிப்பவர், சம்பந்தமுள்ளவர், உலகசாக்ஷி, நாராயணர், உலகவ்யாபீ, மனதின் ரூபமுடையவர், மனதின் வேகமுடையவர், நிறைந்தவர், புருஷச்ரேஷ்டர். (43)

𑌯𑌦𑍁𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌯𑌦𑍁𑌪𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌵𑌾𑌸𑌸𑍍𑌸𑍁𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌤𑍇𑌜𑍋𑌧𑌰𑍋 𑌧𑌰𑌾𑌧𑌾𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌨𑌿𑌧𑌿𑌃 ॥
𑌚𑌾𑌣𑍂𑌰𑌮𑌰𑍍𑌦𑌨𑍋 𑌵𑌂𑌦𑍍𑌯𑌶𑍍𑌶𑌾𑌂𑌤𑍋 𑌭𑌰𑌤𑌵𑌂𑌦𑌿𑌤𑌃 ।
𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑌿𑌗𑍋 𑌗𑌭𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑍋𑌮𑌳𑌾𑌂𑌗𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌗𑌰𑌃 ॥ 45
𑌲𑍋𑌕𑌾𑌧𑍍𑌵𑌗𑌶𑍍𑌶𑍇𑌷𑌶𑌾𑌯𑍀 𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌬𑍍𑌧𑌿𑌨𑌿𑌲𑌯𑍋𑌮𑌲𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌦𑍀𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌾𑌤𑍍 ॥
𑌅𑌮𑍃𑌤𑌾𑌂𑌶𑍁𑌰𑍍𑌮𑌹𑍀𑌗𑌰𑍍𑌤𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌜𑍍𑌞𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌵𑌿𑌹𑌾𑌯𑌸𑌗𑌤𑌿𑌃 𑌕𑍃𑌤𑍀 ॥
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 [illegible] 𑌭𑍂𑌤𑌾𑌵𑌾𑌸𑌃 𑌕𑌮𑌲𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌵𑌕𑍍𑌷𑌾𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑍋 𑌵𑍀𑌰𑌹𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌗𑍍𑌰𑌜𑌃 ॥ 48

யதுக்களுள் ஸ்ரேஷ்டர், யதுக்களின் பதி, பூதங்களின் வாசஸ் தலம், நல்ல விக்ரமமுடையவர், தேஜஸ்ஸைத் தரிப்பவர் பூமிக்கு ஆதாரம், நான்கு மூர்த்திகளை யுடையவர், பெரிய நிதி. (44)

சாணூரனை நாசஞ்செய்தவர், நமஸ்கரிக்கக் கூடியவர், ஸாந்தர், பரதனால் சேவிக்கப்பட்டவர், நாதாதீதமானவர், கம்பீர ஸ்வபாவமுள்ளவர், அழகிய சரீரமுடையவர், பிரளயகாலத்தில் இருப்பவர். (45)

லோகங்களின் மேலேபோகிறவர், ஆதிசேஷன் மேற்படுப்பவர், க்ஷீரஸாகரத்தை ஸ்தானமாக உடையவர், பலமற்றவர், ஆத்மஜோதியையுடையவர், கம்பீர ஸ்வபாவமுடையவர், ஆயிரம் விதமான கிரணமுடையவர், ஆயிரம் கால்களை யுடையவர். (46)

அமிர்தமயமான கிரணமுடையவர், பூப்ரவேசமுடையவர் லோகவிஷயங்களில் ஆசையற்றவர், மூன்று காலங்களையுமறிந்தவர், முனி, சாக்ஷி, காயத்தில் கதியுடையவர், ஸமர்த்தர். (47)

மழைக்கதி தேவதை, பூமிக்கு ஸந்தோஷம் கொடுப்பவர், பூதங்களின் வாஸஸ்தலம், தாமரை இதழ்போன்ற கண்களையுடையவர், ஸ்ரீவத்ஸத்தை மார்பிலுடையவர், லக்ஷ்மிக்கு வாசஸ்தானம், வீரரைக் கொல்பவர், இலக்ஷ்மணருக்கு மூத்தவர். (48)

லோகாபிராமோ லோகாரிமர்த்தநஸ் ஸேவகப்ரிய: |
ஸநாதநதமோ மேகஶ்யாமளோ ராக்ஷஸாந்தக்ருத் || 49

திவ்யாயுததர: ஶ்ரீமாநப்ரமேயோ ஜிதேந்த்ரிய: |
பூதேவவந்த்யோ ஜநகப்ரியக்ருத் ப்ரபிதாமஹ: || 50

உத்தமஸ்ஸாத்விகஸ்ஸத்யஸ்ஸத்யஸந்தஸ்த்ரிவிக்ரம: |
ஸுவ்ரதஸ்ஸுலபஸ்ஸூக்ஷ்மஸ்ஸுகோஷஸ்ஸுகதஸ்ஸுஹ்ருத் ||

தாமோதரோऽச்யுதஶ்ஶார்ங்கீ வாமநோ மதுராதிப: |
தேவகீநந்தநஶ்ஶௌரிஶ்ஶூர: கைடபமர்த்தந: || 52

ஸப்ததாலப்ரபேத்தா ச மித்ரவம்ஶப்ரவர்த்தந: |
காலஸ்வரூபீ காலாத்மா கால: கல்யாணத: கவி: || 53

உலகங்களில் எல்லாரையும் விட அழகானவர், உலகங்களி லுள்ள சத்ருக்களை நாசம் செய்பவர், பக்தப்பிரியர், மிகவும் புரா ணர், மேகம்போல் கறுப்பானவர், இராக்ஷஸகாலன். (49)

திவ்ய ஆயுதத்தைத் தரிப்பவர், பூமி, தேவர் இவர்களால் வணங்கக் கூடியவர், பிர்மாவுக்குப் பிரியத்தைச் செய்கிறவர், பிர்மாவுக்கு மேலானவர். (50)

உத்தமமானவர், ஸத்வகுணமுடையவர், ஸத்பரசொரூபி, உண்மையான பிரதிக்ஞையுடையவர், த்ரிவிக்ரமர், நல்ல நடத்தை யுடையவர், நன்றாய் அடையக்கூடியவர், சூக்ஷுமமானவர், நல்ல சப்தமுடையவர், சுகத்தைக் கொடுக்கிறவர், ஸ்நேகிதர். (51)

தாமோதரர், அச்சுதர், சார்ங்கி, வாமனர், மதுரைக்கு அதிபதி, தேவகீ குமாரர், சௌரி, சூரர், மதுகைடபர்களை நாசம் செய்தவர். (52)

ஏழு ஆலமரங்களைப் பிளந்தவர், ஸ்நேகிதரின் வம்சத்தை விருத்தி செய்பவர், காலஸ்வரூபி, காலத்தை ஆத்மாவா யுடைய வர், காலம், கல்யாணங்களைக் கொடுப்பவர், கவிரூபி, [400] (53)

𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍋 𑌋𑌤𑍁𑌃 𑌪𑌕𑍍𑌷 𑌅𑌯𑌨𑍋 𑌦𑌿𑌵𑌸𑍋 𑌯𑍁𑌗𑌃 |
𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑍍𑌲𑍇𑌪𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌨𑌿𑌰𑌾𑌕𑍁𑌲𑌃 ||
𑌅𑌨𑌾𑌦𑌿 𑌨𑌿𑌧𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌪𑍂𑌜𑍍𑌯𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 |
𑌰𑌸𑍋 𑌰𑌸𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌾𑌰𑌜𑍍𑌞𑍋 𑌲𑍋𑌕𑌸𑌾𑌰𑍋 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 ||
𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌤𑌿𑌗𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌾𑌶𑌿𑌃 𑌪𑌰𑌮𑌗𑍋𑌚𑌰𑌃 |
𑌶𑍇𑌷𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌵𑌿𑌗𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑍋 𑌰𑌘𑍁𑌨𑌾𑌯𑌕𑌃 ||
𑌵𑌰𑍍𑌣𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌵𑌰𑍍𑌣𑌬𑌾𑌹𑍍𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣
[𑌗𑍁𑌣𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌃 |
𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌗𑍁𑌣𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑍁𑌰𑌵𑌰𑌪𑍍𑌰𑌦𑌃 || 57
𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌦𑍇𑌵𑍋 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌃 |
𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌮𑌯𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍀 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌪𑌾𑌣𑌿𑌰𑍍𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑌃 || 58

வருஷம், ருது, பக்ஷம், அயனம், பகல், யுகம், ஸ்தோத்திரம் செல்லத் தகுந்தவர், பரிசுத்தமானவர், ஸம்பந்தமற்றவர், எங்கும் வ்யாபித்தவர், ஆகுலமற்றவர். (54)

ஆதியந்தமற்றவர், எல்லா ஜனங்களாலும் பூஜிக்கத் தகுந்தவர், வ்யாதியற்றவர், ரஸரூபி, ரஸத்தை யறிந்தவர், ஸாரத்தை யறிந்தவர், உலகங்களின் ஸாரம், ரஸத்தை ஆத்மாவாகவுடையவர். (55)

எல்லாத் துக்கத்தையும் தாண்டினவர், வித்தைகளின் ராசி, மிகவும் விஷயமானவர், சேஷரூபி, விசேஷமானவர், கல்மஷமற்றவர், ரகுச்ரேஷ்டர். (56)

வர்ணங்களுக்கு ஸ்ரேஷ்டர், வர்ணங்களுக்கு மங்களமானவர், வர்ணரூபி, வர்ணங்களின் குணங்களால் ப்ரகாசிப்பவர், கர்மங்களுக்கு ஸாக்ஷி, குணங்களால் ஸ்ரேஷ்டமானவர், தேவர், தேவர்களுக்கு வரங்களைக்கொடுப்பவர். (57)

தேவருக்கெல்லாம் மேலான தேவர், தேவஸ்ரேஷ்டர், தேவர் அசுரர் இவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவர், ஸர்வ தேவஸ்வரூபி, சக்ரத்தை யுடையவர், வில்லைக் கையிலுடையவர், ரகுஸ்ரேஷ்டர். (58)

𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌵𑍍𑌯𑌯𑌃
𑌨𑍍𑌯𑌾𑌯𑍋 𑌨𑍍𑌯𑌾𑌯𑍀 𑌨𑌯𑍀 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌨𑌯𑍋 𑌨𑌗𑌧𑌰𑍋 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃॥௫௯॥
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍍𑌭𑌰𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌦𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌬𑌲𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑌃 ।
𑌬𑌾𑌣𑌾𑌰𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑍋 𑌯𑌜𑍍𑌵𑌾𑌽𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑍇𑌵𑌿𑌤𑌃॥௬௦॥
𑌦𑍇𑌵𑌾𑌗𑍍𑌰𑌣𑍀𑌃 𑌶𑌿𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌪𑌰𑌃 ।
𑌸𑌾𑌮𑌗𑍇𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌶𑍂𑌰𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 𑌸𑍁𑌲𑍋𑌚𑌨𑌃॥௬௧॥
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋 𑌦𑌶𑌾𑌸𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌪𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌕𑌲𑌾𑌨𑌿𑌧𑌿𑌃 𑌕𑌲𑌾𑌨𑌾𑌥𑌃 𑌕𑌮𑌲𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ॥　　॥௬௨॥
𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 𑌪𑍂𑌰
[𑌯𑌿𑌤𑌾 𑌰𑌵𑌿𑌃 ।
𑌜𑌟𑌿𑌲𑌃 𑌕𑌲𑍍𑌮𑌷𑌧𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌭𑌞𑍍𑌜𑌨𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍁𑌃 ॥　　॥௬௩॥

மனோபுத்தி ரூபி, அகங்காரம், ப்ரகிருதிரூபி, நாசமற்ற புருஷர், நியாயம், நியாயரூபத்தை யுடையவர், நயமுடையவர், ஸ்ரீமான், நயம், நகத்தைத் தரிப்பவர், நிச்சயமானவர். 59

லக்ஷ்மியையும் உலகத்தையுந் தரிப்பவர், போஷிக்கிறவர், தேவ ச்ரேஷ்டர், பலியை நாசம் செய்தவர், பாணனது சத்ருவை ஸம்ஹாரம் செய்தவர், யாகம் செய்பவர், ச்ரேஷ்டமானவர், முனிவர்களால் சேவிக்கப்பட்டவர். 60

தேவச்ரேஷ்டர், எப்போதும் சிவனை த்யானம் செய்கிறவர், பரமமானவர், ச்ரேஷ்டர், ஸாமவேதத்தால் கானம் பண்ணக்கூடியவர், ப்ரியர், சூரர், புண்ய கீர்த்தி யுடையவர், நல்ல கண்களை யுடையவர். 61

வ்யக்தமில்லாத லக்ஷணங்களையுடையவர், வ்யக்தர், ராவணனாகிய யானைக்கு ஸிம்மம்போன்றவர், கலாநிதி, கலாநாதர், லக்ஷ்மியின் ஆனந்தத்தை விருத்திசெய்பவர். 62

புண்யர், புண்யாதீதர், பூரணர், பூர்வர், நிரம்புகிறவர், ஸூர்யரூபி, ஜடையுள்ளவர், பாபமாகிய இருட்டைப் போக்கும் ஸூரியன். 63

ஜயீ ஜிதாரிஸ்ஸர்வாதிஶ்ஶமநோ ஹவ்யவாஹந: |
அலங்கரிஷ்ணுரசலோ ரோசிஷ்ணுர்விக்ரமோத்தம: ||௬௪||

ஆஶுஶ்ஶப்தபதிஶ்ஶப்தகோசரோ ரஞ்ஜநோ லகு: |
நிஶ்ஶப்த: புருஷோ மாயீ ஸ்தூலஸ்ஸூக்ஷ்மோ விலக்ஷண:

ஆத்மயோநிரயோநிஶ்ச ஸப்தஜிஹ்வஸ்ஸஹஸ்ரபாத் |
ஸநாதநதமஸ்ஸ்ரக்வீ பேஶலோ ஜயிநாம் வர: || ||௬௬||

ஶக்திமாந் ஶங்கப்ருந்நாத: கதாபத்மரதாங்கப்ருத் |
நிரீஹோ நிர்விகல்பஶ்ச சித்ரூபோ வீதஸாத்வஸ: ||

ஶதாநநஸ்ஸஹஸ்ராக்ஷஶ்ஶதமூர்த்திர்கநப்ரப: |
ஹ்ருத்புண்டரீகஶயந: கடிநோ த்ரவ ஏவ ச ||௬௮||

ஜயசீலர், சத்துருக்களை ஜயித்தவர், எல்லாவற்றிற்கும் ஆதி, அக்நிரூபி, ஸம்ஸாரபந்தத்தைத் தொலைப்பவர், அலங்காரம் செய்பவர், ஸ்திரமானவர், ப்ரகாசமுள்ளவர், மேலானபராக்ரமமுடையவர். 64

சீக்ரரூபி, சப்தங்களுக்குப்பதி, சப்தங்களுக்கு விஷயமானவர்; திருப்திசெய்பவர், லகுரூபி, சப்தமற்றவர், புருஷர், மாயையுடையவர், ஸ்தூலரூபி, ஸூக்ஷ்மரூபி, ஸமர்த்தர். 65

தன்னைக்காரணமாகவுடையவர், காரணமற்றவர், ஏழுநாக்குகளை யுடையவர், ஆயிரம் கால்களையுடையவர், மிகவும் புராதனர், மாலையை யுடையவர், அழகுடையவர், ஜயிப்பவருள் ச்ரேஷ்டமானவர். 66

சக்தியுடையவர், சங்கத்தையுடையவர், லோகநாதர் கதையையும் சக்ரத்தையும் தரிப்பர், ஆசையற்றவர், விகற்பமற்றவர், சித்ரூபி, பயமற்றவர். 67

நூறு முகங்களையுடையவர், ஆயிரம் கண்களை யுடையவர், நூறு மூர்த்திகளையுடையவர், மேகத்தின் காந்திபோன்ற காந்தியையுடையவர், ஹ்ருதய கமலத்தில் வசிப்பவர், கடினமானவர், த்ரவரூபி. 68

ஸூர்யோ க்ரஹபதி: ஶ்ரீமாந் ஸமர்த்தோ(அ)நர்த்தநாஶந: |
அதர்மஶத்ரூ ரக்ஷோக்ந: புருஹூத: புருஷ்டுத: ||
ப்ரஹ்மகர்ப்போ ப்ருஹத்கர்ப்போ தர்மதேநுர் தநாகம: |
ஹிரண்யகர்ப்போ ஜ்யோதிஷ்மாந் ஸுலலாட: ஸுவிக்ரம: ||
ஶிவபூஜாரத: ஶ்ரீமாந் பவாநீப்ரியக்ருத்வஶீ |
நரோ நாராயண: ஶ்யாம: கபர்தீ நீலலோஹித: ||
ருத்ர: பஶுபதி: ஸ்தாணுர் விஶ்வாமித்ரோ த்விஜேஶ்வர: |
மாதாமஹோ மாதரிஶ்வா விரிஞ்சிர் விஷ்டரஶ்ரவா: ||௭௨||
அக்ஷோப்ய: ஸர்வபூதாநாம் சண்ட: ஸத்யபராக்ரம: |
வாலகில்யோ மஹாகல்ப: கல்பவ்ருக்ஷ: கலாதர: ||௭௩||
நிதாகஸ்தபநோ மேக: ஶுக்ர: பரபலாபஹ்ருத் |
வஸுஶ்ரவா: கவ்யவாஹோ ப்ரதப்தோ விஶ்வபோஜந: ||

ஸூர்யரூபி, கிருகங்களுக்குப்பதி, ஸ்ரீமான், சமர்த்தர், அனர்த்தங்களை நாசஞ்செய்பவர், அதர்மத்திற்குச் சத்துரு, ராக்ஷஸர்களை நாசஞ்செய்பவர், புருஹூதர், புருஷ்டுதர். 69

பிர்மத்தைக் கர்ப்பத்திலுடையவர், பெரிய கர்ப்ப முடையவர், தர்மரூபமானதேனு, தனத்தின்வரவு, ஹிரண்ய கர்ப்பர், காந்தியையுடையவர், நல்ல நெற்றியையுடையவர், நல்ல பராக்ரம முடையவர். 70

சிவபூஜையில் ஆசையுள்ளவர், ஸ்ரீமான், பார்வதிக்குப் பிரியத்தையுண்டாக்குகிறவர், ஜிதேந்திரியர், நரரூபி, நாராயணர், கரிய திருமேனியுடையவர், கபர்தீ, நீலலோஹிதர். 71

ருத்ரர், பசுபதி, ஸ்தாணு, விச்வாமித்ரர், பிராம்மண ச்ரேஷ்டர், மாதாமஹர், மாதரிச்வா, விரிஞ்சி, விஷ்டரச்ரவஸ். 72

எல்லாப் பிராணிகளாலும் அசைக்கக் கூடாதவர், குரூரர், ஸத்தியமான பராக்ரமமுடையவர், வாலகில்யர், மஹாகல்பர், கற்பக விருக்ஷம், கலைகளைத்தரிப்பவர். 73

கோடைகாலம், உக்ரமானவர், மேகம், சுக்ரர், அன்னியர் பலத்தை அபஹரிக்கிறவர், வஸுச்ரவஸ், கவ்யத்தை வாஹனமாயுடையவர்; மிகவும் உஷ்ணமானவர், உலகத்தைப் பூஜிப்பவர். 74

𑌰𑌾𑌮𑍋 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌶𑍍𑌯𑌾𑌮𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍋 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌕𑌬𑌨𑍍𑌧𑌮𑌥𑌨𑍋 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃 𑌕𑌮𑍍𑌬𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ ॥௭௫॥

𑌸𑍁𑌖𑍀 𑌨𑍀𑌲𑌸𑍍𑌸𑍁𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑍁𑌲𑌭𑌶𑍍𑌶𑌿𑌶𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 ।
𑌅𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌤𑌿𑌥𑌿𑌶𑍍𑌶𑍂𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌕𑍃𑌤𑍍 ॥

𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌪𑌾𑌦𑌃 𑌪𑌾𑌪𑌾𑌰𑌿𑌰𑍍𑌮𑌣𑌿𑌪𑍂𑌰𑍋 𑌨𑌭𑍋𑌗𑌤𑌿𑌃 ।
𑌉𑌤𑍍𑌤𑌾𑌰𑌣𑍋 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌹𑌾 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑍋 𑌦𑍁𑌸𑍍𑌸𑌹𑍋 𑌬𑌲𑌃 ॥ ॥௭௭॥

𑌅𑌮𑍃𑌤𑍇𑌶𑍋𑌽𑌮𑍃𑌤𑌵𑌪𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑍀 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌕𑍃𑌪𑌾𑌕𑌰𑌃 ।
𑌭𑌗𑍋 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋 𑌦𑌿𑌵𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 ॥

𑌉𑌦𑌾𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍁𑌦𑍍𑌯𑍋𑌗𑍀 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌃 𑌸𑌦𑌸𑌨𑍍𑌮𑌯𑌃 ।
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑍀 𑌨𑌾𑌕𑍇𑌶𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌃 𑌷𑌡𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ॥௭௯॥

ராமர், கருநெய்தல் போல் கறுப்பானவர், ஞானத்தைக் கொடுப்பவர், பெரிய காந்தியையுடையவர், கபந்தனைக் கொன்றவர், திவ்யரூபி, சங்குபோன்ற கழுத்தையுடையவர், சிவப்பிரியர். 75

ஸுகரூபி, நீலரூபி, மிகவும் நன்றாய் உண்டானவர், எல்லாராலும் அடையக்கூடியவர், குளிர்ந்த ஆத்மாவையுடையவர், ஸம்பந்தமற்றவர், அதிதி, சூரர், நன்றாய் நாசஞ்செய்பவர், பாபத்தை நாசஞ்செய்பவர். 76

பரிசுத்தமான பாதங்களையுடையவர், பாபத்தின் சத்ரு, மணிபூரர், ஆகாய கமனமுடையவர், தாண்டும்படி செய்பவர், பாபத்தை நாசம் செய்பவர், அசைக்கமுடியாதவர், சகித்தற்கரிய பலமுள்ளவர், பலரூபி. 77

அமிர்தேசுவரர், அமிர்த சரீரமுடையவர், தர்மமுடையவர், தர்மரூபி, கிருபாநிதி, வீர்யரூபி, ஆதித்யர், தேவலோகத்து அதிபர். 78

உதாரமான கீர்த்தியையுடையவர், முயற்சியுடையவர், வாக்ரூபி, ஸத் அஸத் ரூபமுள்ளவர், நக்ஷத்திரங்களின் தேவதை, தேவலோகாதிபர், தன்னிடமுள்ளவர், எல்லாருக்கும் ஆச்ரயமாகவிருப்பவர். 79

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌗𑌫𑌲𑌂 𑌵𑌰𑍍𑌣𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌰𑌯𑌫𑌲𑌂 𑌨𑌿𑌧𑌿𑌃 ।
𑌨𑌿𑌧𑌾𑌨𑌗𑌰𑍍𑌭𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑍋 𑌨𑌿𑌰𑍀𑌶𑍋 𑌵𑍍𑌯𑌾𑌲𑌮𑌰𑍍𑌦𑌨𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀 𑌵𑌲𑍍𑌲𑌭𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌰𑌂𑌭𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌭𑌦𑍍𑌰𑌃𑌸𑌮𑌂𑌜𑌸𑌃 ।
𑌭𑍂𑌶𑌯𑍋 𑌭𑍂𑌤𑌿𑌕𑍃𑌦𑍍𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌷𑌣𑍋 𑌭𑍂𑌤𑌵𑌾𑌹𑌨𑌃 ॥

𑌅𑌕𑌾𑌯𑍋 𑌭𑌕𑍍𑌤𑌕𑌾𑌯𑌸𑍍𑌥𑌃 𑌕𑌾𑌲𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌮𑌹𑌾𑌵𑌟𑍁𑌃 ।
𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌚𑌲𑍋 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌗𑌰𑌃 ॥ ॥௮௨॥

𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌭𑌦𑍍𑌰𑍋 𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌭𑌯𑌨𑌾𑌶𑌨𑌃 ।
𑌵𑍇𑌦𑍍𑌯𑍋 𑌵𑍈𑌦𑍍𑌯𑍋 𑌵𑌿𑌯𑌦𑍍𑌗𑍋𑌪𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌮𑌰𑌵𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑌃 𑌕𑌰𑍍𑌮𑍀 𑌹𑍍𑌯𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌃 ।
𑌧𑍈𑌰𑍍𑌯𑍋𑌽𑌗𑍍𑌰𑌣𑍀𑌰𑍍𑌧𑌰𑌾𑌧𑍀𑌶𑌸𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌶𑍍𑌶𑌰𑍍𑌵𑌰𑍀𑌪𑌤𑌿𑌃

நான்குவர்க்கங்களின் பலரூபி, வர்ணம் சக்தி இந்த மூன்றின் பலரூபி, நிதி, புதையலைக் கர்ப்பத்திலுடையவர், காரணமற்றவர், ஈசனற்றவர், ஸர்பத்தை நாசம்செய்கிறவர். 80

ஸ்ரீவல்லபர், மங்களகரமான ஆரம்பமுடையவர், சாந்தர், மங்களரூபி, சரியானவர், பூமியில் படுப்பவர், பூதங்களைச் செய்கிறவர், ஐச்வரியரூபி, அலங்காரமானவர், பூதத்தை வாஹனமாயுடையவர். 81

சரீரமற்றவர், பக்தரின் சரீரமுள்ளவர், காலத்தையறிந்தவர், மிகவும் சமர்த்தர், பரார்த்தத்திலுள்ளவர், சஞ்சலமில்லாதவர், பரிசுத்தர், வேதஸமுத்திரர். 82

ஸ்வபாவமாய் மங்களகரமானவர், மத்தியிலுள்ளவர், ஸம்ஸாரபயத்தை நாசம் செய்பவர், அறியக்கூடியவர், வைத்தியர் ஆகாயத்தைக் காப்பாற்றுகிறவர், முனிவர், தேவர் இவர்களுக்கு ஈச்வரர். 83

தேவச்ரேஷ்டர், காரணன் காரியம் செய்கிறவர், கர்மத்தையுடையவர், விஷ்ணுரூபி, தைர்யமுள்ளவர், முன் செல்கிறவர், பூபதி, மனதின் கர்மம், இரவின் பதி. 84

பரமார்த்தகுருர்த்ருஷ்டிஸ்ஸுசிராச்ரிதவத்ஸல: |
விஷ்ணுர்ஜிஷ்ணுர்விபுர்யஜ்ஞோ யஜ்ஞேசோ யஜ்ஞபாலக: ||
ப்ரபவிஷ்ணுர்க்ரஸிஷ்ணுச்ச லோகாத்மா லோகபாலக: | கேசவ: கேசிஹா காவ்ய: கவி: காரணகாரணம் ||
காலகர்த்தா காலசேஷ: வாஸுதேவ: புருஷ்டுத: |
ஆதிகர்த்தா வராஹச்ச வாமனோ மதுஸூதன: ||௮௭||
நாராயணோ நரோ ஹம்ஸோ விஷ்வக்ஸேனோ ஜனார்த்தன: |
விச்வகர்த்தா மஹாயஜ்ஞோ ஜ்யோதிஷ்மான் புருஷோத்தம: ||
வைகுண்ட: புண்டரீகாக்ஷ: க்ருஷ்ணஸ்ஸூர்ய: ஸுரார்சித: |
நாரஸிம்ஹோ மஹாபீமோ வஜ்ரதம்ஷ்ட்ரோ நகாயுத: ||
ஆதிதேவோ ஜகத்கர்த்தா யோகீசோ கருடத்வஜ: |
கோவிந்தோ கோபதிர்க்கோப்தா பூபதிர்ப்புவனேச்வர: ||

பரமார்த்தகுரு, நேத்திரம், வெகுகாலம் ஆச்ரயித்தவரிடம் ஆசையுள்ளவர், எங்கும் வியாபித்தவர், ஜபசீலர், ஸமர்த்தர், யக்ஞரூபி, யக்ஞாதிபதி, யக்ஞத்தைக் காப்பாற்றுகிறவர். 85

ஸமர்த்தர், க்ரஸிப்பவர், லோகரூபி, லோகங்களைப் பரிசுத்தப்படுத்துகிறவர், கேசியைக் கொன்றவர், ஆதியானவர், கவி, காரணங்களுக்குக் காரணர். 86

காலங்களைச் செய்பவர், காலங்களைச் சேஷமாக உடையவர், வாஸுதேவர், புருவினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவர், ஆதிகர்த்தா, வராஹமூர்த்தி, வாமனர், மதுசூதனர். 87

நாராயணர், நரரூபி, ஹம்ஸர், விஷ்வக்ஸேனர், ஜநார்த்தனர், உலகத்தைச் செய்பவர், மஹாயக்ஞர், காந்தியுடையவர், புருஷச்ரேஷ்டர். 88

வைகுண்டவாசி, புண்டரீகாக்ஷர், கிருஷ்ணர், ஸூரியர், தேவரால் பூஜிக்கப்பட்டவர், நரஸிம்மரூபி, மிகவும் பயங்கரர், வஜ்ரம் போன்ற பற்களையுடையவர், நகங்களை ஆயுதமாகவுடையவர். ()

ஆதிதேவர், உலகத்தை ஸிருஷ்டிப்பவர், யோகீந்த்ரர் கருடத்வஜர், கோவிந்தர், பூபதி, காப்பாற்றுகிறவர், லோகபதி, லோகச்ரேஷ்டர். 90

பத்மநாபோ ஹ்ருஷீகேசோ தாதா தாமோதர: ப்ரபு: |
த்ரிவிக்ரமஸ் த்ரிலோகேசோ ப்ரஹ்மேச: ப்ரீதிவர்த்தந: ||

ஸந்ந்யாஸீ சாஸ்த்ரதத்த்வஜ்ஞோ மந்தர: பர்வதோத்தம: |
வாமநோ துஷ்டசமநோ கோவிந்தோ கோபவல்லப: ||

பக்திப்ரியோऽச்யுத: ஸத்ய: ஸத்யகீர்த்திர் த்ருதி: ஸ்ம்ருதி: |
காருண்ய: கருணோ வ்யாஸ: பாபஹா சாந்திவர்த்தந: ||

பதரீநிலய: சாந்தஸ் தபஸ்வீ வைத்யுத: ப்ரபு: |
பூதாவாஸோ மஹாவாஸ: ஸ்ரீநிவாஸ: ஸ்ரிய: பதி: ||

தபோவாஸோ முதாவாஸ: ஸத்யவாஸ: ஸநாதந: |
புருஷ: புஷ்கர: புண்ய: புஷ்கராக்ஷோ மஹேச்வர: ||

தாமரையை நாபியிலுடையவர், ஹிருஷீகேசர், உலகப்ரபு, விஷ்ணுரூபி, ப்ரபு, த்ரிவிக்ரமர், மூன்றுலோகங்களுக்கும் ஈச்வரர், பிர்ம்மனுக்கு ஈசன், ப்ரீதியை விருத்திசெய்கிறவர். 91

மனதடக்கமுள்ளவர் சாஸ்திரங்களின் உண்மையை யறிந்தவர், மந்தரபர்வதரூபி, பர்வதச்ரேஷ்டர், வாமனரூபி, துஷ்டர்களை நாசம்செய்கிறவர், கோவிந்தர், கோபரின் ச்ரேஷ்டர். 92

பக்தியை ப்ரியமாயுடையவர், அச்சுதர், ஸத்யர், உண்மையான கீர்த்தியுடையவர், தைர்யரூபி ஸ்மரணரூபி, வ்யாஸர் பாபத்தை நாசம்செய்கிறவர், காந்தியைவிருத்தி செய்கிறவர். 93

பதரிகாசிரமத்தில் வசிப்பவர், சாந்தசீலர், தவமுடையவர், மின்னல் ஸம்பந்தமானவர், ப்ரபு, பூதங்களின் வாஸஸ்தானம், பெரியஇடம், லக்ஷ்மியின்வாஸஸ்தலம், லக்ஷ்மீபதி. 94

தபஸின் வாஸஸ்தலம், சந்தோஷத்திற்கு இருப்பிடம், ஸத்தியத்தின் வாஸஸ்தலம், மிகவும் புராதனர், புருஷர், புண்யமுடையவர், புண்யரூபி, தாமரைபோன்ற கண்களையுடையவர், மஹேச்வரர் 95

பூர்ணரூபீ புராணஜ்ஞ: புண்யத: ப்ரீதிவர்த்தந: |
பூர்ணரூப: காலசக்ரப்ரவர்த்தந ஸமாஹித: ||௯௬||
நாராயண: பரஞ்ஜ்யோதி: பரமாத்மா ஸதாஶிவ: |
ஶங்கீ சக்ரீ கதீ ஶார்ங்கீ லாங்கலீ முஸலீ ஹலீ ||௯௭||
கிரீடீ குண்டலீ ஹாரீ மேகலீ கவசீ த்வஜீ ||
யோத்தா ஜேதா மஹாவீர்ய: ஶத்ருக்ந: ஶத்ருதாபந: ||
ஶாஸ்தா ஶாஸ்த்ரகர: ஶாஸ்த்ரம் ஶங்கர: ஶங்கரஸ்துத: |
ஸாரதி: ஸாத்விக: ஸ்வாமீ ஸாமவேதப்ரிய: ஸம: || ||௯௯||
பவந: ஸம்ஹத: ஶக்தி: ஸம்பூர்ணாங்க: ஸம்ருத்திமாந் |
ஸ்வர்க்கத: காமத: ஶ்ரீத: கீர்த்தித: கீர்த்திதாயக: || ||௧௦௦||

பூர்ணரூபமுடையவர், புராணத்தை யறிந்தவர், புண்யத்தைக் கொடுப்பவர், ப்ரீதியை வ்ருத்தி செய்கிறவர், காலசக்ரத்தை ஓட்டுகிறவர், ஸமாதான முடையவர். 96

நாராயணர், மேலானகாந்திரூபி, பரமாத்மஸ்வரூபி, ஸதாசிவரூபி, சங்கத்தையுடையவர், சக்ரத்தையுடையவர், கதையையுடையவர், சார்ங்கமென்ற தனுஸை யுடையவர், கலப்பையையுடையவர், உலக்கையையுடையவர், கோடாரியையுடையவர். 97

க்ரீடத்தை யுடையவர், குண்டலங்களை யுடையவர், ஹாரத்தையுடையவர், அரைநாணுடையவர், கவசத்தையுடைவர், துவஜத்தையுடையவர், யுத்தவீரர், ஜயசீலர், மகா வீர்யமுடையவர், சத்ருருக்களைக் கொல்லுகிறவர், சத்ருருக்களை தவிக்கும்படி செய்தவர். 98

ஆளுகிறவர், சாஸ்திரங்களைச் செய்கிறவர், சாஸ்திரரூபி, க்ஷேமத்தை யுண்டாக்குகிறவர், சிவனால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவர், ஸாரதி, ஸத்வகுணமுள்ளவர், எஜமானன், ஸாமவேதத்தில் ப்ரியமுள்ளவர், ஸமமானவர். 99

வாயுரூபி, கூட்டமானவர், சக்திரூபி, நிறைந்த அங்கமுடையவர், ஸம்ருத்தியுடையவர், சுவர்க்கத்தைக்கொடுப்பவர், காமங்களைக்கொடுப்பவர், ஸம்பத்தைக் கொடுப்பவர், கீர்த்தியைக் கொடுப்பவர், கீர்த்தியைக்கொடுக்கும்படி செய்கிறவர். 100

மோக்ஷத: புண்டரீகாக்ஷ: க்ஷீராப்திக்ருதகேதந: ।
ஸர்வாத்மா ஸர்வலோகேச: ப்ரேரக: பாபநாசந: ॥
வைகுண்ட: புண்டரீகாக்ஷ: ஸர்வதேவநமஸ்க்ருத: ।
ஸ்ருஷ்டிஸ்தித்யந்தக்ருத்தேவஸ்ஸர்வலோகமஹேச்வர: ॥
ஸ்ருஷ்டிஸ்தித்யந்தக்ருத்தேவஸ்ஸர்வலோகஸுகாவஹ: ।
அக்ஷய்யச்சாச்வதோऽநந்த: க்ஷயவ்ருத்திவிவர்ஜித: ॥
நிர்லேபோ நிர்குணஸ்ஸூக்ஷ்மோ நிர்விகாரோ நிரஞ்ஜந:
ஸர்வோபாதிவிநிர்முக்தஸ்ஸத்தாமாத்ரவ்யவஸ்தித: ॥
அவிகாரீ விபுர்நித்ய: பரமாத்மா ஸநாதந: ।
அசலோ நிச்சலோ வ்யாப்தீ நித்யத்ருப்தோ நிராச்ரய: ॥

மோக்ஷத்தைக் கொடுப்பவர், தாமரைமலர்போன்ற கண்களையுடையவர், க்ஷீரஸாகரத்தை வீடாகவுடையவர், ஸர்வரூபி, உலகங்களுக்கெல்லாம் ஈச்வரர், ஏவுகிறவர், பாபங்களை நாசஞ் செய்கிறவர்.

வைகுண்டவாஸி, புண்டரீகாக்ஷர், சகலதேவர்களாலும் நமஸ்கரிக்கப்படுபவர், எங்கும் வ்யாபித்தவர், உலகங்களுக்கு நாதர் உலகங்களுக்கெல்லாம் மஹேச்வரர். 102

ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறவர், தேவர், எல்லா உலகங்களுக்கும் சுகத்தை யுண்டாக்குகிறவர், நாசமற்றவர், சாச்வதர், முடிவற்றவர், க்ஷயம் விருத்தி இரண்டுமற்றவர். 103

பற்றற்றவர், குணமற்றவர், ஸூக்ஷ்மரூபி, விகாரமற்றவர், அக்ஞானமற்றவர், உபாதிகளற்றவர், ஸத்தா மாத்திரத்தால் இருப்பவர். 104

விகாரமற்றவர், ப்ரபு, நித்யர், பரமாத்மரூபி, புராதனர், சஞ்சலமற்றவர், ஸ்திரமானவர், உலகெங்கும் வியாபித்தவர், எப்போதும் திருப்தி யடைந்தவர், ஆச்ரயமற்றவர். 105

ஶ்யாமோ யுவா லோஹிதாக்ஷோ தீப்தாஸ்யோ மிதபாஷண:
ஆஜாநுபாஹுஸ்ஸுமுகஸ்ஸிம்ஹஸ்கந்தோ மஹாபுஜ: ॥
ஸத்த்வவாந் குணஸம்பந்நோ தீப்யமாநஸ்வதேஜஸா ।
காலாத்மா பகவாந் கால: காலசக்ரப்ரவர்தக: ॥
நாராயண: பரம்ஜ்யோதி: பரமாத்மா ஸநாதந: ।
விஶ்வக்ருத்விஶ்வபோக்தா ச விஶ்வகோப்தா ச ஶாஶ்வத: ॥
விஶ்வேஶ்வரோ விஶ்வமூர்த்திர்விஶ்வாத்மா விஶ்வபாவந: ।
ஸர்வபூதஸுஹ்ருச்சாந்த: ஸர்வபூதாநுகம்பந: ॥
ஸர்வேஶ்வரஸ்ஸர்வஶுபஸ்ஸர்வதாஶ்ரிதவத்ஸல: ।
ஸர்வகஸ்ஸர்வபூதேஶஸ்ஸர்வபூதாஶயஸ்தித: ॥

ஸியாமர், நித்யயுவர், சிவந்த கண்களை யுடையவர், காந்தியால் ப்ரகாசிக்கிற வார்த்தைகளையுடையவர், முழங்கால் வரையில் நீண்டகைகளையுடையவர், நல்ல முகமுடையவர், ஸிம்மத்தின் தோள்போன்ற தோள்களை யுடையவர், பெரிய கைகளையுடையவர். 106

ஸத்வத்தையுடையவர், குணங்களோடு கூடியவர், தனது காந்தியால் ப்ரகாசிக்கிறவர், காலரூபி, பகவத்ஸ்வரூபி, காலன், காலசக்ரத்தை நடத்துகிறவர். 107

நாராயணர், பரஞ்சோதி, பரமாத்மரூபி, புராதனர், உலகங்களை ஸிருஷ்டிக்கிறவர், உலகங்களை அனுபவிப்பவர், உலகங்களைக் காப்பாற்றுகிறவர், ஸ்திரமானவர். 108

உலகங்களுக்கு ஈச்வரர், உலகமூர்த்தி, விச்வரூபி, உலகங்களைப் பாவனை செய்கிறவர், சகல பிராணிகளுக்கும் சிநேகிதர், சாந்தர், பிராணிகளுக்கெல்லாம் அருள்புரிகிறவர். 109

எல்லாவற்றிற்கும் ஈச்வரர், எல்லாவற்றிற்கும் மங்களத்தை யுண்டாக்குகிறவர், எப்போதும் ஆச்ரயித்தவரிடம் ஆசையுள்ளவர், எங்கும் போகிறவர், எல்லாப் பிராணிகளுக்கும் ஈச்வரர், எல்லாப் பிராணிகளினுடைய மனத்திலும் இருப்பவர். 110

ஹ்ருத்ஸ்தோ(அ)ஜ்ஞாநஸ்ய ஸம்ஹர்தா நாராயண: பர: |
அநாதிநிதந: ஸ்ரஷ்டா ப்ரஜாபதிபதிர்ஹரி: ||
நாரஸிம்ஹோ ஹ்ருஷீகேச: ஸர்வத்ருக் வசீ |
ஜகதாஸ்தாந: கர்தா ராஜா புராதந: ப்ரபு: ||
ஸ்ரீமாந் தாதா விதாதா ச ஸர்வேஷாம் பதிரீச்வர: |
ஸஹஸ்ரசீர்ஷா விச்வாத்மா விஷ்ணுர்விச்வத்ருகவ்யய: ||
புராணபுருஷச்ரேஷ்ட: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் |
தத்வம் நாராயணோ விஷ்ணுர்வாஸுதேவ: ஸநாதந: ||
பரமாத்மா பரம் ப்ரஹ்ம ஸச்சிதாநந்தவிக்ரஹ: |
பரஞ்ஜ்யோதி: பரந்தாம பராகாச: பராத்பர: ||
அச்யுத: புருஷ: க்ருஷ்ண: சாச்வத: சிவ ஈச்வர: |
நித்ய: ஸர்வகத: ஸ்தாணூ ருத்ர: ஸாக்ஷீ ப்ரஜாபதி: ||

மனத்திலுள்ளவர், அக்ஞானத்தை நாசம் செய்கிறவர், நாராயணன், மேலானவர், ஆதியந்தமற்றவர், ஸிருஷ்டிக்கிறவர், ப்ரம்மாவுக்கும் அதிபர், விஷ்ணு. 111

நரஸிம்மர், இந்திரியங்களுக்கு ஈசன், எங்கும் பார்ப்பவர், ஜிதேந்திரியர், உலகங்களுக்கு ஆச்ரயமானவர், ப்ரபு, ஆளுகிறவர், புராதனர். 112

செய்கிறவர், அறிப்பவர், ஸ்ரீமான், எல்லாருக்கும் எஜமானன், ஈச்வரர், ஆயிரம் சிரங்களுடையவர், லோகரூபி, உலகமெங்கும் வ்யாபித்தவர், உலகங்களைப் பார்ப்பவர், நாசமற்றவர். 113

புராணபுருஷ ச்ரேஷ்டர், ஆயிரங் கண்களை யுடையவர், ஆயிரம் கால்களை யுடையவர், தத்வரூபி, நாராயணன், உலகவ்யாபி, வாசுதேவர், புராணர். 114

பரமாத்மா, பரப்ர்மம், ஸச்சிதாநந்தரூபி, பரஞ்சோதி, மேலான இடம், மேலான ஆகாசம், ச்ரேஷ்டத்தைக் காட்டிலும் ச்ரேஷ்டமானவர். 115

அச்சுதன், புருஷன், கிருஷ்ணன், சாச்வதன், சிவன், ஈச்வரர், நித்யர், எங்குமுள்ளவர், ஸ்தாணு, ருத்திரர், ஸாக்ஷீ, ப்ராஜாபதி.

ஹிரண்யகர்ப்ப: ஸவிதா லோகக்ருல்லோகப்ருத்விபு: |
ஓங்காரவாச்யோ பகவாந் ஸ்ரீபூலீலாபதி: ப்ரபு: ||

ஸர்வலோகேச்வர: ஸ்ரீமாந் ஸர்வஸ்ருட் ஸர்வதோமுக: |
ஸ்வாமீ ஸுசீல: ஸுலப: ஸர்வக: ஸர்வசக்திமாந் ||

நித்ய: ஸம்பூர்ணகாமச்ச நைஸர்கிகஸுஹ்ருத் ஸுகீ |
க்ருபாபீயூஷஜலதி: சரண்ய: ஸர்வதேஹிநாம் ||

ஸ்ரீமந்நாராயண: ஸ்வாமீ ஜகதாம் ப்ரபுரீச்வர: |
மத்ஸ்ய: கூர்மோ வராஹச்ச நாரஸிம்ஹோ(அ)த வாமந: ||

ராமோ ராமச்ச க்ருஷ்ணச்ச பௌத்த: கல்கி: பராத்பர: |
அயோத்யேசோ ந்ருபச்ரேஷ்ட: குசதாத: பராக்ரம: ||

ஹிரண்யகர்ப்பன், ஸூரியர், உலகங்களைப் படைப்பவர், உலகங்களை அநுபவிப்பவர், சமர்த்தர், ஓங்காரத்தின் பொருளாயிருப்பவர், லக்ஷ்மி, பூமி லீலை இவைகளுக்குப் பதி, ப்ரபு. 117

உலகங்களுக்கெல்லாம் ஈச்வரர், ஸ்ரீமான், எல்லாவற்றையும் படைப்பவர், எங்கும் ப்ரவ்ருத்திப்பவர், எஜமான், நல்ல நடத்தையை யுடைவர், எல்லாரும் அடையக்கூடியவர், எங்கும் போகிறவர், சகல சக்தியு முடையவர். 118

நித்யர், நிறைந்தவர், இஷ்டமுடையவர், ஸ்வபாவஸிநேகிதர், சுகி, கருணாநிதி, ஜீவரக்ஷகர். 119

ஸ்ரீமான், நாராயணன், எஜமானன், உலகங்களுக்கு ப்ரபு, ஈச்வரர், மத்ஸ்யரூபி, கூர்மரூபி, கூர்மரூபமுள்ளவர், வராஹரூபமுள்ளவர், நரஸிம்மன் வாமனன். 120

தசரதகுமாரன், இராமன், பரசுராமன், கிருஷ்ணன், புத்தர், கல்கி, மிகவும் ச்ரேஷ்டமானவர், அயோத்திக்கு ஈசர், ராஜ ச்ரேஷ்டர், குசனுக்குத் தந்தை, மிகவும் பராக்ரமசாலி. 121

லவதாத: கஞ்ஜநேத்ர: கஞ்ஜாங்க்ரி: பங்கஜாநந: |
ஸீதாகாந்த: ஸௌம்யரூப: ஶிஶுஜீவநதத்பர: ||
ஸேதுக்ருச் சித்ரகூடஸ்த: ஶபரீஸம்ஸ்துத: ப்ரபு: |
யோகித்யேய: ஶிவத்யேய: ஶாஸ்தா ராவணதர்பஹா ||
ஶ்ரீஶ: ஶரண்யோ பூதாநாம் ஸம்ஶ்ரிதாபீஷ்டதாயக: ||
அநந்த: ஶ்ரீபதீ ராமோ குணப்ருந் நிர்குணோ மஹாந் |

இதி ஶ்ரீராமஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்

ஸம்பூர்ணம்.

லவனுக்குத் தந்தை, தாமரைப் பூப்போன்ற கண்களையுடையவர், தாமரை இதழ்போன்ற சரணங்களையுடையவர், தாமரைப் பூப்போன்ற முகத்தையுடையவர், ஸீதாபதி, சாந்தரூபி சிசுக்களைக் காப்பாற்றுவதில் ஆசையுள்ளவர். 122

அணைபோட்டவர், சித்திரகூடத்தி லிருந்தவர், சபரியால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவர், ப்ரபு, யோகிகளால் த்யானம் செய்யப்பட்டவர், சிவனால் த்யானஞ் செய்யப்பட்டவர், புருஷர், இராவணனது கொழுப்பை யடக்கியவர். 123

லக்ஷ்மீபதி, ஜீவ ரக்ஷகர், ஆச்ரயித்தவர்களின் இஷ்டங்களைக் கொடுப்பவர், அந்தமற்றவர், லக்ஷ்மீபதி, ராமர், குணங்களையுடையவர், குணமற்றவர், மஹான். 124

ராமஸஹஸ்ரநாமம் முற்றிற்று.

இவைபோன்ற வேறு கணக்கற்ற அநேக நாமங்கள் உண்டு. இவைகளில் ஒவ்வொன்றும் மஹா பாதகங்களைப் போக்குமாதலால் இவ்வாயிரம் நாமங்களின் மகிமையைக் கூற யாரால் முடியும்? இவைகளில் மந்த்ர சாஸ்த்ரம் முதலிய எல்லா சாஸ்த்ரங்களின் தத்வங்களும் அடங்கியிருக்கின்றன. முன் ஸநத்குமாரருக்கு விநாயகரால் கூறப்பட்ட இந்த திவ்ய நாமங்களை நான் உனக்குக் கூறினேன். எவன் இவைகளைப் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ அவன் பிர்ம்ம பதத்தை யடைவான். நாராயணனை ராமனது திவ்யநாமங்களாகிறஸிம்மத்தின்தொனியைக் கேட்கும் வரை

யிலேதான் மஹாபாதகங்களுக்கு வலிமையுண்டு. பிராம்ஹணனைக் கொல்கிறவன், மதுபானஞ் செய்கிறவன், திருடுகிறவன், குரு பத்தினியைப் புணருகிறவன், சரணமென்றடைந்தவனைக் காப் பாற்றாதவன், சிநேகிதனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவன், மாதாவைக் கொன்றவன், பிதாவைக் கொன்றவன், கர்ப்பத்தை நாசஞ்செய்தவன், வீரனைக்கொன்றவன், கோடிக்கணக்கான பாப ங்களைச் செய்தவன் ஆகிய இத்தகைய மகாபாதகர்களும் தின ந்தோறும் ராமர் ஸந்நிதியில் இதைக் கிரமமாக ஒரு வருஷம் ஜபம் செய்தால், தங்கள் பாபங்களினின்று விடுபடுவார்கள்; இகத்தில் சுகம்பெற்றுக் கடைசியில் முக்தியும்பெறுவார்கள். 127

சூதர் கூறுகிறார்

சௌநகரே! பார்வதிக்குச்சிவன் எவ்வாறு ராம நாம ஸஹஸ் ரத்தை உபதேசித்தாரோ அவ்வாறே நான் உனக்கு இப்போது உபதேசித்தேன் என்றார்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஏ சிஷ்ய! நீ கேட்டபடி ஸ்ரீராம ஸஹஸ்ரத்தை சூத முனி வர் சொன்னவிதமே உனக்கு உபதேசித்தேன்.

முனிவரான நாரதர் புக்தி முக்திகளைக் கொடுக்கும்படி யான ஸ்ரீ ராம நாம ஸஹஸ்ரத்தால் ஸபையில் ஸ்ரீராமரை ஸ்தோத்ரம் செய்தார்.

1-வது சருக்கம்.

முற்றிற்று.

2-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பரமகுருவே! தாங்கள் ராம ஸஹஸ்ரநாமத்தையும் ராமர் கற்பகவிருக்ஷத்தின் அடியிலிருப்பதாக எண்ணித் த்யானிப்பதையும் கருணையுடன் எனக்குபதேசித்தீர்களல்லவா? ஸ்வர்க்கலோகத்திலிருந்த கற்பக விருக்ஷம் அயோத்தியா பட்டினத்திற்கு எவ்வாறு வந்ததென்றும் அதனடியில் ராமரை எவ்வாறு த்யானஞ்செய்வதென்பதையும் எனக்குக் கூறவேண்டும் என்றார்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஏ விஷ்ணுதாஸ! நன்றாய்க் கேட்டாய். நான் சொல்வதைக் கவனமாகக் கேள். ராமபிரான் மஹாவிஷ்ணுவேயாயினும் பூவுலகில் மனிதனாய் அவதரித்தாராதலால் அவரது மகிமையை உலகத்தவர்க்குக் காட்டத் திருவுளங்கொண்ட தூருவாச முனிவர் தமது சிஷ்யர்கள் அறுபதினாயிரவரோடு ஒருநாள் அயோத்திக்கு வந்து ராமரது க்ருகத்தைத் தாண்டிச்சென்று ஸீதாதேவியின் வீட்டு வாசலுக்குப் போய்த் தமது சிஷ்யர்களுடன் நின்றார். சிஷ்யர்களுடன் வாசலில் நின்று கொண்டிருக்கும் முனிவரைப் பார்த்த வேலைக்காரர்கள் உடனே வீட்டிற்குள் சென்று முனிவர் வந்திருப்பதை ஸீதைக்குத் தெரிவித்தார்கள். அங்கே அச்சமயம் ஏகாந்தமாயிருந்த ராமரும் இச்செய்தி கேட்டு வேகமாக வெளியே வந்து முனிவரை வணங்கி வீட்டிற்குள் அழைத்துச் சென்று ஆசன முதலியவைகளை யளித்து உபசரித்தார். முனிவர் அன்புடன் ராமபிரானிட்ட ஆசனத்தில் அமர்ந்து "ராம! நான் ஆயிரவருஷ காலம் உபவாசமிருந்து வந்தேன். அந்த வ்ரதம் இன்றைக்கு முடிவு பெறுகிறபடியால் யான் எனது சிஷ்யர்களுடன் இன்று தங்கள் வீட்டில் போஜனம் செய்ய விரும்பியுள்ளேன். ஆகையால் எனக்கு ருசிகரமான போஜனம் அளிக்க வேண்டும். அது சிந்தாமணி, காமதேனு அக்கினி இவைகளால்

தயார் செய்யப்படாததாக இருக்கவேண்டும். இதுவன்றிச் சிவாராதனை புரிவதற்கு மனிதர் பார்த்திராத மலர்களையும் ஸ்வர்க்கத்திலிருந்து வரவழைக்கவேண்டும். தங்களுக்கு கார்ஹஸ்த்யம் வேண்டுமென்ற ஆவலிருந்தால் இவ்வளவையும் எனக்குச்சம்பாதித்துக் கொடுங்கள். இல்லாவிடில் என்னால் முடியாது என்று சொல்லி என்னை அனுப்பிவிடுங்கள்" என்றார். முனிவர் கூறியதைக் கேட்டு ராமர் புன்னகை கொண்டு "எல்லாவற்றையும் நடத்திவைக்கிறேன்" என்று வணக்கத்துடன் சொன்னார். இதைக் கேட்டதும் முனிவர் பரமானந்தமடைந்து "நான் சரயூ நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன்; சீக்கிரம் எனது விருப்பப்படி போஜனம் தயாரிக்கப்படட்டும். யான் கூறிய விஷயம் ஜானகிக்கும் சகோதரர்களுக்கும் தெரிந்திருக்கட்டும்" என்று சொல்லி விட்டு ஸ்நானத்திற்குப் போய்விட்டார். இதனையறிந்த லக்ஷ்மணன் ஸீதை குசன் முதலிய பாலர்கள் யாவரும் மிகவும் பயமடைந்து "முனிவர் கேட்டபடி ராமர் எவ்விதம் நிறைவேற்றப் போகிறார்; சிந்தாமணி காமதேனு அக்னி இவைகளினால் தயாரிக்கப்படாத அன்னம் எங்கிருக்கிறது" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

முனிவர் ஸ்நானத்திற்குச் சென்றதும் ராமபிரான் லட்சுமணனைப் பார்த்து, அவனைக்கொண்டு ஒரு கடிதம் எழுதச்சொல்லி அதைத்தமது பாணத்தில் கட்டி அந்தப் பாணத்தை வில்லிற் பூட்டி விடுத்தார். அப்பாணமானது வில்லிலிருந்து விடுபட்ட அக்கணமே அமராவதி சென்று தேவசபையில் தேவரோடு வீற்றிருக்கும் இந்த்ரனது முன்னிலையில் விழுந்தது. இந்த்ரன் தன்முன்னிலையில் விழுந்தபாணத்தைக்கண்டு பயந்து 'இது யாருடையது? எங்கிருந்து வந்தது' எனச் சொல்லிக்கொண்டே அதனை உற்று நோக்கினான். அதில் ராமபிரானது திருப்பெயர் வரைந்திருக்கக் கண்டு ஆச்சரியமடைந்து இந்தபாணம் இங்கு வருவதற்குக் காரணம் யாதென யோசித்துப் பின் அதன் நுனியில் ஒரு கடிதம் கட்டியிருக்கக்கண்டு அதை அவிழ்த்து எடுத்து வெகு வணக்கமாய்ப் படித்தான்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"ஏ இந்த்ர! நினக்குச் சுகமுண்டாகுக. நான் எப்பொழுதும் நீ ஸ்வர்க்க லோகத்திலிருப்பதை நினைத்துக்கொண்டிருக்கிறேன். தபோநிதியாகிய துருவாச முனிவர் ஆயிரம் வருஷம் உபவாச மிருந்து அவ்விரத முடிவாகிய இன்றைத்தினம் தமது மாணவர்கள் ஆறுபதினாயிரவருடன் என்னிடம் வந்து சிந்தாமணி காமதேனு அக்கி இவைகளால் தயார் செய்யப்படாத திவ்யபோஜனம் தமக்கும் தமது சிஷ்யர்களுக்கும் செய்விக்க வேண்டுமெனக் கேட்கிறார். இதன்றிச் சிவாராதனைக்கு மனிதர்கள் பார்த்திராத மலர்கள் வேண்டுமென்றுங் கேட்டிருக்கிறார். இப்பொழுது சரயூநதிக்கு ஸ்நானத்திற்குப் போயிருக்கின்றார். அவர் ஸ்நானம் செய்து திரும்புவதற்குள் கடலிலுண்டான கற்பக விருக்ஷம், பாரிஜாதம் இவைகளிரண்டையும் விரைவில் என்னிடம் அனுப்புக" என வரைந்திருந்தது. இதைப் படித்ததும் இந்த்ரன் கற்பக விருக்ஷம் பாரிஜாதம் இவ்விரண்டையும் விமானத்தின் மீதேற்றிக்கொண்டு தேவர்கள் புடைசூழ அயோத்திக்கு வந்தான். இந்த்ரன் வந்திருப்பதை யறிந்த லட்சுமணர் அவனுக்கு நல் வரவு கூறி, அவனை ராமரிடம் அழைத்துச் சென்றார். இந்த்ரன் ராமரிடம் சென்றதும் அவரை வணங்கித் தான் கொண்டுவந்த கற்பகவிருக்ஷத்தையும் பாரிஜாதத்தையும் அவரிடங் கொடுத்துவணக்கமாக அவரெதிரில் நின்றுகொண்டிருந்தான். இச்சமயம் துருவாச முனிவர் தமது மாணவன் ஒருவனை யழைத்து "இப்போது ராமர் வீட்டில் என்ன நடக்கிறது? நமக்கு வேண்டியவைகள் ஏதாவது சேகரிக்கப்படுகின்றனவா? இல்லையா? என்பதை நீ போய்த் தெரிந்துகொண்டு வா; ராமர் நமக்கு வேண்டியவைகளைச் சேகரிப்பதில் கவலையுள்ளவரா யிருக்கிறாரா? இல்லையா? என்பதும் எனக்குத் தெரியவேண்டும். சீக்கிரம் செல்" என்று ஆக்ஞை செய்து அனுப்பினார். மாணாக்கன் உடனே அதிவேகமாக ராமரது க்ருகத்திற்கு வந்து, இங்கே கற்பக வ்ருக்ஷமும் பாரிஜாதமும் தேவர்களுடன் இந்த்ரனும் இருப்பதை நோக்கிக் களிப்படைந்துமீண்டு

முனிவரிடம் சென்று தான் கண்டவைகளை அவருக்குக் கூறினான்.

முனிவர் இதைக்கேட்டதும் ஆச்சரிய மடைந்து நதியிலிருந்து உடனே புறப்பட்டுத் தமது மாணாக்கர்களுடன் ராமபிரானுடைய க்ருகத்திற்கு வந்தார். ராமர் முனிவரைக் கண்டதும் வணங்கி அவருக்கும் அவருடைய மாணாக்கர்கள் அறுபதினாயிரவருக்கும் ஆசனங்களளித்து வீற்றிருக்கும்படி வேண்டினார். பிறகு ஸீதை லட்சுமணர் இவர்களுடன் ராமபிரான் முனிவருக்குப் பூஜை செய்து மனிதர்கள் பார்த்திராத பாரிஜாத புஷ்பங்களைச் சிவாராதனை செய்யும்பொருட்டு மனமுவந்து அளித்தார். முனிவர் அதைப் பெற்றுக்கொண்டு ஒன்றும் பேசாமல் சிவாராதனம் செய்தார். பிறகு ராமர் அங்கு வந்திருந்த தேவர்களுக்கும் தேவேந்திரனுக்கும் ஆசனமளித்து உபசரித்து யாவருக்கும் பரிமாறும்படி ஸீதைக்கும் லட்சுமணருக்கும் உத்தரவிட்டார். உடனே ஸீதை ஆடையாபரண மணிந்துகொண்டு கற்பகவிருக்ஷம் பாரிஜாதம் இவைகளைப் பக்தியுடன் பூசித்து அவைகளின் கீழ் கோடிக்கணக்கான பாத்திரங்களை வைத்து "க்ஷீரஸாகரத்தி லிருந்துண்டாகித் தேவர்களுடைய விருப்பங்களை யளித்துவரும் கற்பக விருக்ஷமே! சிஷ்யர்களுடன் வந்திருக்கும் துருவாச முனிவருக்குத் திருப்தி யுண்டாகும்படி இன்று க்ருபை செய்ய வேண்டும்" என ப்ரார்த்தித்தாள். இவ்விதம் ப்ரார்த்தித்த அந்தக்ஷணத்திலேயே கற்பகத் தருவானது தன் கீழ் வைக்கப்பட்டிருக்கும் கோடிக் கணக்கான ஸ்வர்ண பாத்திரங்களிலும் திவ்யான்னங்களை நிரப்பி விட்டது.

ஸ்வர்ண பாத்திரங்களில் நிறைந்திருக்கும் அந்தத்திவ்யான்னங்களை யெடுத்து ஊர்மிளை சம்பிகை முதலியவர்களுடன் ஸீதாதேவி பரிமாறினாள். முனிவர் தேவர்களுடனும் தமது மாணவர்களுடனும் மனமுவந்து போஜனம் செய்தார். ரகுவீரரால் அடிக்கடி ப்ரார்த்திக்கப்பட்டார். பிறகு போஜனம் செய்து கைகளைச் சுத்தி செய்து கொண்டு ராமபிரானிடம் தாம்பூலம் தக்ஷிணைகளைப் பெற்றுக்கொண்டு தேவர்கள் முன்னிலையில் ஸ்ரீராமரை

வேத வாக்கியங்களால் ஸ்தோத்ரம் செய்து ஆனந்தமடைந்து அவரை நோக்கிக் கூறுகிறார்—

தாமரைமலர் போன்ற கண்களை யுடைய ஹே ராம! நீர் உலகங்களுக்கு எஜமானன். பிரத்தியக்ஷமாக இந்தப் பூமியின்கண் ராவணவதத்திற்காக அவதாரம் செய்தவர் என்பதைநான் அறிவேன். உலகங்களிலுள்ள ஜனங்களுக்கு உமது பெருமையைத் தெரிவிக்கும் பொருட்டு இவ்விதம் யாசித்தேன். இந்தப் பூமியின்கண் மானிடர்களால் பார்க்கக்கூடாத புஷ்பங்களும் திவ்யான்னங்களும்காமதேனு அக்நி ரத்னம் இவைகளின்றி எவ்விதம் அடைய முடியும்? ஹே ராமா! உமது புருவநெறிப்பால் பிர்ம்மாதி தேவர்களுக்கு நாசமும் மறுபடி உற்பத்தியும் ஏற்படுகின்றன. அவ்வளவு மகிமை உள்ள உமக்கு எந்தக் காரியந்தான் செய்வதற்கரிது· நீர் க்ஷீரசாகரத்தில் முழுகிப்போன மந்த்ர பருவதத்தைஉயரக்கிளப்புவதற்குக் கூர்மாவதாரம் செய்தவர். அப்பொழுது தேவர்கள் அச்சமுத்திரத்தில் ச்ரேஷ்டமான பதினைந்து வஸ்துக்களை அடைந்தார்கள். அவைகள் யாவும் தங்களுடைய உதவியால் என்பதையும் நான் அறிவேன். பதினைந்து ரத்தினங்களாவன—இலட்சுமி, சந்திரன், காமதேனு, கௌஸ்துபம், அமிர்தம், விஷம், ஐராவதம், அப்ஸரஸ்திரீகள், கற்பகவ்ருக்ஷம், தந் வந்த்ரி, உச்சைசிரவஸ், பாரிஜாதம், ஸுராதேவி, ஜ்யேஷ்டாதேவி முதலியனவாம். இந்தப் பதினைந்து ரத்நங்களையும் விபாகம் செய்தவர்கள் தாங்கள் என்று நான் அறிவேன். தேவர்களும் தங்கள் க்ருபையினுல்சுகம் அடைகின்றார்கள். சிவன் முதலிய சகலதேவர்களும் தங்களுடையஉத்ரவைப் பாலிப்பவர்களே யாவார்கள். எல்லோருக்கும் ஜீவனம் செய்யும் உபாயத்தைத் தனித்தனியாகக் கற்பித்துக் காக்கும் தங்களுக்கு எதுதான் அடையக் கூடாதது. எனக்குப் போஜனம் கொடுக்கும் விஷயத்தில் ஏற்பட்ட தங்களுடைய மகிழ்ச்சியையும் சக்தியையும் நான் பார்க்கும்பொருட்டும் ஜனங்களுக்குக் காண்பிக்கும் பொருட்டும் இவ்விதம் யாசித்தேன். நானும் பார்த்தேன்; ஜனங்களுக்கும் காண்பித்தேன். நீர் சகல உலகங்களையுங் காக்கின்றவர்; உண்டுபண்ணுகிறவர்; ஸம்மாரம் செய்கின்றவர். எங்களுக்கு நற்கதியைக் கொடுக்கின்றவர்; நான் செய்த குற்ற

த்தை மன்னித்தல் வேண்டும்—என்று. இவ்விதம் அநேக விதமாக ஸ்தோத்ரம் செய்து ஸ்ரீ ராமருக்குப் பன்முறை வந்தனம் புரிந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு துருவாச முனிவர் தமாதாச்ரமம் சென்றார்.

பிறகு ஸ்ரீராமர், தேவர்களை நோக்கி, "நீங்கள் கற்பக வ்ருக்ஷம் பாரிஜாதம் இவைகளை எடுத்துக்கொண்டு ஸ்வர்க்கலோகம் செல்லலா"மென்று கூறினார். இவ்விதம் கூறிய ஸ்ரீராமருடைய வசனத்தை ப்ருகஸ்பதி பகவான் கேட்டு, "ராம! நீர் பூமியில் இருக்கும் வரையில் இந்த அயோத்தியா புரியில் இந்தக் கற்பக வ்ருக்ஷம், பாரிஜாதம் இவைகள் இருக்கட்டும். நீர் வைகுண்டம் வந்த பின் பூமியி லிருந்து இவைகள் சொர்க்க லோகம் போகட்டும்" என்று கூறினார்.

ப்ரபுவாகிய ஸ்ரீராமர் அந்த ப்ருகஸ்பதியின் வசனத்தைக் கேட்டு மகிழ்ந்து அவ்விதமே ஆகுக எனக் கற்பக வ்ருக்ஷத்தையும், பாரிஜாத விருக்ஷத்தையும், புஷ்பகவிமானத்தில் வைத்தார்.

பிறகு இந்த்ரன் முதலான சகலதேவர்களும் ஸ்ரீராமரால் உபசரிக்கப்பட்டு மிகவும் ஸந்தோஷமடைந்து ராமனை நமஸ்கரித்து ஸ்வர்க்கலோகம் சென்றார்கள்.

ஏ சிஷ்ய ! இரண்டு வ்ருக்ஷங்களும், ஸ்வர்க்கலோகத்தி லிருந்து பூலோகத்திற்கு வந்த காரணத்தைக் கூறினேன். அதுமுதல், இரண்டு தருக்களும் புஷ்பக விமானத்தில் ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. ஸ்ரீராமசந்த்ரர் அவ்விரண்டு விருக்ஷங்களால் கிடைக்கும் சுகத்தை அடைந்து மகிழ்ந்தார். இரகுச்ரேஷ்டர், ஸீதா தேவியுடன் கற்பக வ்ருக்ஷத்தின் கண் திவ்ய பரியங்கத்தில் வீற்றிருந்து அநேக விதஸுகங்களை அநுபவித்தார். சிஷ்ய ! அதனாலே தான் ஸஹஸ்ர நாமங்களைக் கூறும் இடத்தில் கற்பகத் தருவின் அடியில், ஸ்ரீராமனைத் தியானம் செய்யவேண்டு மென்று முன் உனக்குக் கூறினேன்.

அதுமுதல் பூமியில் பாரிஜாத விருக்ஷங்களின் அம்சங்களுள்ள பாரிஜாதம் என்ற பெயருடன் வெகு விருக்ஷங்கள் உண்டா

யிருக்கின்றன. இந்தப் பாரிஜாத புஷ்பத்திற்குச் சமமாக ராமருக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய புஷ்பம் எதுவுமில்லை. கற்பகவிருக்ஷத்தின் அம்சமாக விளங்கும் அரசமரத்தைச் சேவிப்பவர்களுக்குச் சகல கோரிக்கைகளும் நிறைவேறும் என்று சொல்லப்படுகிறது.

க்ருதம், த்ரேதை, த்வாபரம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் புண்யத்தின் பெருந்தன்மையினால், எல்லோரும் பூஜித்தனர். கலியுகத்தில், பாபத்தின் மிகுதியால் எல்லோரும், மிகுதியாகப் பூஜிப்பதில்லை.

கற்பகவிருக்ஷம், பாரிஜாதவிருக்ஷம்

இவைகள், பூமிக்கு வந்ததின்

காரணத்தைக் கூறும்

2-வது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

பரமகுருவே! பூமியில் விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களிலும் ராமன் க்ருஷ்ணன் என்னும் இரண்டு அவதாரங்களே மேன்மையானவை யென்று சொல்லப்படுகின்றன. அவைகளிரண்டிலும் மேன்மையானது எது? இது தெரிந்தால் நான் எப்போதும் அவரது சரித்ரத்தைக் கேட்டு க்ருதார்த்தனுவேன்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறுர்:— நீ நன்றுய்க் கேட்டாய்; இவ்வுலகில் ராமாவதாரமே மேலானதென்று ஜனங்கள் சொல்லுகிறுர்கள். இவ்விஷயமாய் இரண்டு ப்ராம்மணர்களுக்குள் விவாதமுண்டாய் அதன் மூலமாக ஏற்பட்ட ஒரு அழகிய கதையைக் கூறுகிறேன் கேட்பாயாக.

அயோத்யா நகரத்தில் ராமனென்று பெயருள்ள ஒரு ப்ராமணனும் த்வாரகையில் க்ருஷ்ணனென்று பெயருள்ள ஒரு ப்ராம்மணனும் இருந்தார்கள். இருவரும் முறையே ராமக்ருஷ்ணர்களை வெகு பக்தியுடன் சேவித்து வந்தார்கள். இவ்விருவரும் ஒரு காலத்தில் ப்ரயாகையில் மாக மாதத்தில் சந்தித்துக்கொண்டார்கள். பிறகு திருவேணியில் ஸ்நானம் செய்துவிட்டு மாதவனைப் பூசித்து புராண ப்ரசங்கம் நடக்குமிடத்திற்குச் சென்று வெகுபக்தியோடு அநேக கதைகளைக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். ராமனென்று பெயருள்ள ராமபக்தன் ஸ்ரீராமரது கதையைக் கேட்டு அதிக சந்தோஷமடைந்து அந்தப் பௌராணிகரை நன்றுய்ப் பூஜித்தான். க்ருஷ்ணனென்னும் பெயருள்ள க்ருஷ்ணபக்தன் அப்போது மிகுந்த கோபத்தையடைந்து கூறுகிறுன்—

எல்லாரையும் கஷ்டப்படுத்துகிற ராமனுடைய கதையைக் கேட்டு நீர் மிகவும் மகிழ்ந்தது மன்றி, மேன்மேலும் அதையே விரிவாகக் கூறுகிறீரே; இதனுல் உம்மை நான் மூடனென்றெண்ணுகிறேன். அநேக லீலைகளோடு கூடிய க்ருஷ்ணனது சரித்திரம் போல ஒன்றுவது அழகுள்ளதாய் இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை என்றுன்.

இவ்விதம் கூறிய க்ருஷ்ணோபாஸகனுடைய வார்த்தையைக் கேட்டு ராமோபாஸகன் ஆச்சரியத்தோடு கூறுகிறான்:—

ராமோபாஸகன் கூறுகிறான்:—ராமர் கஷ்டத்தை யுண்டாக்குவதும் க்ருஷ்ணன் சுகத்தைக் கொடுப்பதும் எப்படி? க்ருஷ்ணனது சரித்திரம் எவ்விதம் அழகியதென்பதும் ராமரது சரித்திரம் அழகுடையதல்லவென்பதும் எவ்விதமென நன்றாய் விஸ்த்தரித்துத் தெரிவியும். இச்சபையிலுள்ளவர்கள் கேட்கட்டும்.

க்ருஷ்ணோபாஸகன்:—நீர் நன்றாய்க் கேட்டீர். கவனமாய்க் கேளும். ராம சரிதம் எவ்விதம் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதென்றும் க்ருஷ்ண சரிதம் எப்படிச் சுகத்தையுண்டாக்கக்கூடியதென்றும் விவரித்துச் சொல்லுகிறேன். இந்த ஸபையிலுள்ளவர்களும் கேட்கட்டும்; நீர் கூறும் ராமர் பிறப்பதற்கு முன் அவரது தந்தைக்குச் சாபமுண்டாயிற்று. அதற்கு முன் ராவணன் அவரது மாதா பிதாக்களை லங்கையில் கொண்டு போய் வைத்திருந்தான். ஆரம்பத்திலேயே இவ்வளவு துக்கமுண்டாயிருந்தது. எனது க்ருஷ்ணன் பிறக்கும்போது அவரது தாய்தந்தையரைக் கம்ஸன் மங்களகரமான விவாக உற்சவங்களால் ஆதரவுடன் பூஜித்தான்.

ராமோபாஸகன்:—ஓய்! ஓய்!! கேளும் நீர் புத்தியில்லாதவர்; நீர் சாபமென்றது சாபமல்ல. அது வரம்; அதனுடைய அனுக்ரகத்தாலே தான் பிள்ளையில்லாத அரசனுக்குப் பிள்ளையுண்டாயிற்று: இவ்விதமே ராமரிடம் பயங்கொண்டு தான் அவரது தாய் தந்தையரை ராவணன் லங்கையில் வைத்திருந்து பிறகு விட்டுவிட்டதுமென்க. ஆகையால் அவர் பிறக்கும்போது நடந்த இவ்விஷயம் அவருக்கு மகிமையேயாம் உமது க்ருஷ்ணன் பிறக்கும்போது தாய் தந்தையர் சிறைச்சாலையி லிருந்தார்கள். ராஜ சுகங்களையனுபவிக்காமற் போகக் கடவதென்ற சாபம் யதுகுலத்திற் கேற்பட்டது. அவர் பிறந்ததும் சிறைச்சாலையி லிருந்த தாய் தந்தையர்க்கும் பிரிவினை யுண்டாயுற்று இவர் காரணமாக இவருடைய சகோதரர்கள் இவருடைய மாமனால் வதம் செய்யப்பட்டார்கள்; தவிர இவர் மாடுமேய்ப்பவருடைய பிள்ளையானார். பாலியத்திலேயே வேறிடத்தில் வாஸஞ் செய்தார்; பிறரால் போஷிக்கப்பட்டார். இவ்வாறு உமது க்ருஷ்ணனுக்கு அநேகவித துக்கங்களேற்பட்டனவே ஒழிய சுகமேயில்லை.

கிருஷ்ணோபாஸகன்:—உமது ராமர் தமக்காகத் தாடகையென்ற அசுரமாதைக்கொன்றார். அவர் தாய் தந்தையரை விட்டுப் பிரியநேரிட்டமையால் அவர்களுக்கு துக்கமுண்டாயிற்று.

ராமோபாஸகன்:—தவச்ரேஷ்டர்களுக்குத்தாடகை இடுக்கண் விளைத்துக்கொண்டிருந்தாள். அதனாலே தான், துஷ்டையானதாடகையை ராமர்கொன்றார். ரிஷியினுடைய யாகத்தைக் காப்பாற்றுவதற்காகவே அரசன் தனதுகுமாரர்களைவிச்வாமித்திரரோடு அனுப்பினான். உமது கிருஷ்ணன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக பூதனையைக்கொன்றார். அப்படியே இடைச்சேரியில்தன் நிமித்தம் அநேகரைக் கொன்றார். இவருக்கு இடையரோடே சகவாசம்; இடையரைக் காப்பாற்றுவதே இவர் தொழில்; பசு ஸர்ப்பம் பக்ஷி குதிரைகழுதை காளை இவைகளைக்கொன்றார். திருடுவதும், சூதாடுவதும், காட்டில் அலைவதும், கம்பளியைப் போற்றிக் கொள்வதும் மழை குளிர்உஷ்ணம்இவைகளைப் பொறுத்துக்கொண்டு நாள்தோறும் பசிதாகங்களால் வருந்தப்படுவதும், இடையர்எச்சிலைச் சாப்பிடுவதும், காட்டில் பிராம்மண ஸ்திரீகளிடத்தில்அடிக்கடி தனக்காக அன்னத்தை யாசிப்பதும் இந்த்ரத்வஜத்தைப் பூஜிப்பதுமாக இருந்து வந்தார். இவைகளன்றி வ்ருத்தரின் ஆசாரத்தைக் குறைப்பதும், தனக்கு மேல் வயது சென்ற ஸ்திரீகளுடன் சுகிப்பதும் ஆடையில்லாத ஸ்திரீகளை யெப்போதும் பார்த்துக்கொண்டிருப்பதும், நெருப்பைச் சாப்பிடுவதும் மண் பழையது இவைகளைப் புசிப்பதும், வெண்ணெய்க்காக அடிக்கடி அழுவதும் தாயிடம் அடிபடுவதும் பசுக்களிடத்திலும் இடையர்களிடத்திலும் ஸ்நேகஞ் செய்வதும், தானிருந்த இடத்தை விட்டுச் செல்வதுமாக விருந்தார்.

வண்ணானைக் கொன்றார்; க்ஷத்திரியன் போல யுத்தம் செய்தார்; யானை மல்லர் தமது மாமன் இவர்களைக் கொன்றார். ஸ்நேகிதரின் வர்க்கங்களில் தயையில்லாமலிருந்தார்; ராஜ்யத்தை அடையாமலேயிருந்தார். அரசனுக்கரவை அனுசரித்தார்; விகாரமான ரூபமுள்ள தாஸியோடுலீலைசெய்தார்; யுத்தத்தில்தோல்வியடைந்து

சத்ருவுக்குப் பயந்து புறங்காட்டி ஓடினார். பிறந்துத் தெரியும்படி மலையில் தீயிட்டுத் தாமிருந்த இடத்தை விட்டார். சமுத்ரக் கரையில் வசித்தார். பலாத்காரமாய் ஸ்திரீயைக்கொண்டு போனார். பிறர் த்ரவியத்தை அபகரித்துக்கொண்டார். தன்னைச் சேர்ந்தவர்களைக் கொல்வதற்காகப் பாண்டவர்களுக்கு உபதேசித்தார். இவ்விதமான அநேக கெட்ட நடத்தைகள் உமது கிருஷ்ணரிடம் இருக்கின்றன.

கிருஷ்ணோபாஸகன்:—நீர் ஏன் உளறுகிறீர்; நான் சொல்லுவதைக்கேளும். உமது ராமரிடத்தும் இப்படிப்பட்ட கெட்ட நடத்தைகள் இருக்கின்றன. ஸகோதர ஸம்பந்தம் உண்டாயிருக்கிறது. சிவபிரானது வில்லை யொடித்ததால் சிவாபராதியாயினர். பரசுராமரை மானபங்கஞ் செய்தார். முத்கலருடைய உத்தரவில்லாமல் லக்ஷ்மணர் அவரது அழகிய ஆச்ரமத்திலிருந்த கொடிகளை யெல்லாம் அறுத்து விட்டார். எப்போதும் காட்டில் திரிந்து தமக்காகப் பிராணிகளை ஹிம்சித்தார். வானப்ரஸ்தாச்ரமம் கொண்டிருந்தார். காட்டில் உள்ளவைகளைக்கொண்டு ஜீவனம் செய்தார்; மாம்சத்தையும் புசித்தார்; வில்லை எப்போதும் எடுத்துக் கொண்டு வேடன்போலலைந்து திரிந்து மழை, சீதோஷ்ணங்களைப் பொறுத்துக் கொண்டு, வேட்டை யாடுவதிலேயே ஆசையுள்ளவராயிருந்தார். ஜடாவத்கல தாரியாயிருந்து காலால் நடந்து கஷ்டப்பட்டார். தாடிவளர்த்துக் கொண்டு மரத்தடியிலேயே வசித்தார். மேலும் உமது ராமரின் மனைவியை ராக்ஷஸன் தூக்கிக் கொண்டு சென்றான். அதற்காக அவர் பெரியதுக்கத்தை யடைந்தார்; தாஸியால் மரியாதை செய்யப்பட்டார்.

ராமோபாஸகன்:—ராக்ஷஸன் எடுத்துச் சென்றது எங்கள் ராமபிரானுடைய மனைவியின் நிழலேயாம். ஸபரீ என்பவள் தாஸியல்ல; வெகு நாளாய் முனிவர்களை ஸேவித்துக் கொண்டிருந்து கடைசியில் இவரைத் தரிசனம் செய்து இவரது கிருபையால் மோக்ஷத்தை யடையக் காத்திருந்தவள்.

உமது கிருஷ்ணரின் பத்னிகளை இப்போதும் சத்துருக்களனுபவிக்கிறார்கள். பலத்தால் அர்ஜுனனை ஜெயித்து ஆயிரக்கணக்

கான ஸ்திரீகளை அபகரித்துக்கொண்டு போனார். ஸ்திரீகளுடைய மனோரதங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு ராத்ரியில் தூக்க மில்லாமல் அலைந்தார். தாய்க்குச் சமானமாயும் வயதில் பெரிய வர்களாயும் இருந்த கோபிகா ஸ்திரீகளை அநுபவித்தார்.

கிருஷ்ணோபாஸகன்:—உமது ராமரும் ஸ்நேஹிதரின் யாகத் தைக் காப்பாற்றுவதற்காக நித்ரையில்லாமலிருந்தார். ஸ்நேகித னின் மனைவியான தாரையை சுக்ரீவனுக்குக் கொடுத்தார். குரங்குகளோடு ஸ்நேகஞ் செய்தார். துந்துபியின் பிணத்தைக் கையால் தொட்டார், பயனின்றி வாலியைக் கொன்றார். குரங்கு களின் ஸகாயத்தைப் பெற்றார். குரங்கை வாகனமாகக் கொண் டார். பனைமரங்களை வீணாப் பிளந்தார். கடலில் அணைகட்டித் தடுத்து அதன் வழியாய் அக்கரை சென்று ச்ரேஷ்டமான லங்கையைக் கொளுத்தி நாசம் செய்தார்.

ராமோபாஸகன்:—உமது கிருஷ்ணன் தரித்ரரான குசேலரி டம் ஸ்நேகஞ்செய்தார். நீர் சொன்னபடி அவைகள் குரங்கல்ல; எல் லாம் தேவாம்சமுள்ளவைகள். உமது கிருஷ்ணன் கபடமாய் ஜரா ஸந்தனைக் கொன்றார். காட்டிலும் இடைச்சேரியிலும் இடையர்க ளுடைய சகாயம் பெற்றிருந்தார் எப்போதும் வனத்திலேயே விளையாடிக் கொண்டிருந்தார். காசி பட்டினத்தைக் கொளுத்தி னார். ஸ்நேகிதனை ருக்மியை விரூபப்படுத்தினார். சிவபக்த னான பாணனோடு போர்செய்தார். சிவனோடும் சண்டை செய் தார். சிசுபாலனிடம் திட்டுக் கேட்டார். பாரிஜாதம் முதலியவை களை யளிப்பதில் மாதர்களுக்குள் ஒருவருக்கொருவர் கலகத்தை யுண்டாக்கினார்.

கிருஷ்ணோபாஸகர்:—உமது ராமரின் புத்திரனும் ஸ்நேஹி தனைக் கட்டி சண்டையில் ஜெயித்தான். சிவபக்தனான ராவண னோடு ராமர் சண்டை செய்தார். இவரும் த்விஜனைக் கொன் றார். முனிவரால் ராமர் நிந்திக்கப்பட்டார். விபீஷணனுடைய உதவியால் ராவணனை ஜெயித்து, அந்த ராஜ்யத்தை விபீஷண னுக்கே கொடுத்தார். சத்ருவின் வீட்டிலிருந்த தமது மனைவியை மீண்டும் சேர்த்துக் கொண்டார். மனைவியினிடம் முரட்டுத்

தனத்தைக் காட்டினார். வாகனத்தின் மீதேறிக்கொண்டு யாத்ரை செய்தார். மேலும் பதிவிரதையான ஸீதையினிடம் குற்றங்களை ஏற்படுத்தினார். புத்திரனைக் கொல்லக் கட்டளையிட்டார். சூத்ரன் ஸிம்மம் இவைகளைக்கொன்றார்.

ஸ்ரீராமோபாஸகன்:—க்ருஷ்ணனன் வம்சம் கடைசிகாலத்தில் சாபத்தால் குறைவை யடைந்தது. அவருடைய அழகான த்வாரகாபட்டினம் கடலில் மூழ்கிவிட்டது. கடைசியில் அவரது வம்சமே நசித்தது. கள்ளருந்தல் முதலிய மகாபாதகங்களும் அவரிடத்தில் இருந்தன. முடிவில் ஸ்நேகிதனான அர்ஜுனனுக்குத் தரிசனங் கொடுக்கவில்லை. அவ்வாறே தமது இருப்பிடத்திற்கும் ஒருவராகவே சென்றார். முடிவில் அவரை வேடனொருவன் தன் பாணத்தால் நன்றாய்க் காயப்படுத்தினான்.

கிருஷ்ணோபாஸகன்:—ராமரும் பிள்ளைகளோடு பெரும்போர் புரிந்தார். ஸீதையைத்தாம் தள்ளிவிட்டதாகக்கூறி ஜனங்களை ஏமாற்றி வான்மீகியின் ஆச்ரமத்திற்குச் சென்று பிள்ளைகளை ரகஸ்யமாய்ப் பார்த்தார். மேலும் அவர் தண்டகாரண்யத்தில் அலைந்துகொண் டிருக்கும்போது இங்குதிபலத்தின் சக்கையால் தமது தகப்பனுருக்குப் பிண்டம் போட்டார். அரசமரத்தை வெட்டுவதற்காக அடிக்கடி பெரும் யாகம்செய்தார். தமது மந்திரிக்கு ஆயுளைக் கொடுப்பதற்காக யமராஜனோடு சண்டை செய்யச் சொன்னார். எனது கிருஷ்ணன் பால்யத்தில் வேடிக்கையாகப் பூதனையைக் கொன்றார். திருணாவர்த்தன் முதலியவர்களும் கொல்லப்பட்டார்கள். கிருஷ்ணன் தமதுவிரலால் மலையைத் தூக்கினார்.

ராமோபாஸகன்:—எனது ராமர் பால்யத்தில் வேடிக்கையாகத் தாடகையைக் கொன்றார். மாரீசன் முதலானவர்களும் கொல்லப்பட்டார்கள். மலைகளை ஜலத்தில் மிதக்கச் செய்தார்.

கிருஷ்ணோபாஸகன்:—எனது கிருஷ்ணனன் சுந்தர ரூபத்தைக்கண்டு இடைச்சேரியில் இடைச்சிகள் மோகித்தார்கள். மன்மதனை மோகிக்கச் செய்பவளான ராதை என்பவளும் இவரிடம் மோகங் கொண்டாள்.

ராமோபாஸகன்:—ராமரின் ரூபத்தால் தேவர்களை மோக மடைந்தார்கள். தேவபத்னிகளும் எப்போதும் இவரையே நினைத்துக்கொண் டிருந்தார்கள்; அதனாலேதான் கோபிகா ஸ்தி ரீகளானார்கள். ஒரு வேலைக்காரி பக்தியோடு ராமரது தாம்பூல எச்சில் ரஸத்தைத் தினந்தோறும் பானம் செய்து வந்ததால் அவள் இடைச்சேரியில் ராதிகையானாள். இவைகளன்றி எனது ராமர் ஏகபத்னி வ்ரத முடையவராதலால், அவரே எல்லாருக் கும் மேலானவர்.

கிருஷ்ணோபாஸகன்:—எனது க்ருஷ்ணன் 16108 பத்னி களை விதிப்படி மணஞ்செய்து கொண்டார்.

ராமோபாசகன்:—ராமர் வீராகையால் எல்லாத் தேவ ஸ்திரீ களையும் தாயைக் குழந்தை மயக்குவதுபோல மயக்கிவிட்டார். கிருஷ்ணனை விட ரானதால், கோபிகாஸ்திரீகளை மயக்கினார்.

கிருஷ்ணோபாசகன்:—க்ருஷ்ணன் விளையாட்டாய் கஜேந் திரத்தைக் கொன்றார்.

ராமோபாசகன்:—ராமரும் அஷ்டாபத மென்னும் நாகேந் த்ரத்தைக் கொன்றார்.

க்ருஷ்ணோபாசகன்:—க்ருஷ்ணன் தமது பராக்ரமத்தால் யமு னையைத் தடுத்தார்; ஸ்வர்க்கத்தி லிருந்து பாரிஜாத வ்ருக்ஷத்தை வரவழைத்தார்.

ராமோபாசகன்:—ராமர் ஸ்வர்க்கத்திலிருந்து கற்பகம், பாரி ஜாதம் ஆகிய இரண்டு வ்ருக்ஷங்களையும் வரவழைத்தார்.

கிருஷ்ணோபாசகன்:—கிருஷ்ணன் இறந்துபோன தம் குரு வினுடைய ஏழு பிள்ளைகளையும் மறுபடி உயிர்பெற்றெழும்படி செய்தார்.

ராமோபாசகன்:—ராமர் அயோத்தியில் ஏழுமனிதர்களை உயிர் பிழைக்கும்படி செய்தார்.

கிரு - ன்:—கிருஷ்ணரின் உதவியைக் கொண்டு த்ரௌபதி மரத்தில் பழத்தை ஒட்டவைத்தாள்.

ராமோ - ன்:—ராமரின் உதவியைக் கொண்டு ஸீதை துளஸீதளத்தை ஒட்டவைத்தாள்.

க்ரு - ன்:—க்ருஷ்ணனுடைய பராக்ரமம் இடைச்சேரியில் ஜனங்களுக்கு நன்றாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இடைச்சேரியில் தூர்வாஸமுனிவர்வந்து கோபிகாஸ்திரீகளிடம் அன்னத்தை யாசித்தார்.

ராமோ - ன்:—ராமருடைய பராக்ரமமும் ஜனங்களுக்குத் தெரியும். ராமர் பட்டினமாகிய அயோத்தியிலும் தூர்வாசர் வந்து அன்னத்தை யாசித்தார்.

கிரு - ன்:—கிருஷ்ணன் இவ்வுலகில் அநேகம் ரூபமெடுத்திருக்கிறார்.

ராமோ - ன்:—அநேக ரூபங்களை ராகவரும் எடுத்திருக்கிறார்.

கிரு - ன்:—கிருஷ்ணன் ஸ்னேகிதனுக்குத் தங்கமயமான பட்டினத்தைக் கொடுத்தார்.

ராமோ - ன்:—ராமரும் ஸ்னேகிதனுக்குத் தங்கமயமான பட்டினத்தைக் கொடுத்தார்.

கிரு - ன்:—கிருஷ்ணன் ஸூர்ய க்ரஹணத்தில் குருக்ஷேத்ரத்தில் ஸ்நானம் செய்தார்.

ராமோ - ன்:—ராமரும் ஸூர்யக்ரஹணத்தில் குருக்ஷேத்ரத்தில் ஸ்நானம் செய்தார். ராமர் சொல்லும் வார்த்தையெல்லாம் ஸத்தியமாகும். உமது கிருஷ்ணன்சொல்வதெல்லாம் பொய்யாம். ராமரின் ஒருபாணமே சகல சத்ருக்களையும் கொன்றுவிடும். உமது கிருஷ்ணன் சத்ருக்களினிடம் ப்ரயோகம் செய்யும் பாணங்களெல்லாம் பயனற்றுப்போகின்றன. ராமருக்கு ஒரே மனைவி; கிருஷ்ணருக்கோ அநேக மனைவிகள்; ராமர் மத்யதேசத்தில்

ஸரயூநதிக்கரையிலுள்ள அயோத்யாபட்டினத்தில் வசிப்பவர். கிருஷ்ணனோ மேற்கு ஸமுத்ரக் கரையிலுள்ளவர். ராமருக்கு மூன்று சகோதரர்கள். கிருஷ்ணருக்கு உடன் பிறந்தவர் ஒருவரே. ராமருக்கு, பசு, இரண்டுமணிகள், புஷ்பகம், இரண்டு தேவ வ்ருக்ஷங்கள், முனிவரால் கொடுக்கப்பட்ட இரண்டு காப்புகள், ஐராவதத்தின் குலத்தில் உண்டான நான்கு கொம்புகளையுடைய கஜச்ரேஷ்டம் ஆகிய ஒன்பது ரத்னங்களுண்டு. கிருஷ்ணனுக்கு இரண்டு ரத்னங்களும் பாரிஜாதமென்ற ஒரு ரத்னமும் ஆக மூன்று ரத்னங்களேயாம். ஆகையால் நீர் கிருஷ்ணனை எவ்வாறு புகழுகிறீர்? எனது ராமர் ஏழுதீவுகளுக்கும் ஈச்வரர்; ராஜச்ரேஷ்டர்களால் வந்திக்கப்பட்டவர். அவரது வில் கோதண்டம் பாணம் இவைகள் பலத்துடன் கூடியவை. ப்ராம்மணரின் இஷ்டங்களை நிறைவேற்றவேண்டுமென்பதே எப்போதும் அவருடைய எண்ணம். அவருக்கு ஸிங்காதனம், குடை, இரண்டு சாமரங்கள் இவைகளிருக்கின்றன. அவருக்கு புஷ்பகம் வாஹனம். அவரது பிள்ளைகள் தகப்பனருக்குச் சமானமானவர்கள். ப்ராம்மணர்கள் அவர் கொடுத்த தானத்தை இன்றைக்கும் நன்றாய்ப் பரிபாலனம் செய்கிறார்கள். உமது கிருஷ்ணன் ப்ராம்மணருக்கு என்ன கொடுத்தார்? பரமசிவனும் ராமனை த்யானம் செய்கிறார். மேலும் விச்வேச்வரர் காசியில் மரணத்திற்குத் தயாராயிருக்கும் ஜனங்களிடத்தில் ப்ராம்மணவேஷத்தோடு சென்று, ஸ்ரீராமநாமத்தையே தாரகமந்த்ரமாக உபதேசித்து அவர்களைக் கரையேற்றுகிறார். அதனாலே தான் ஒருவனுடைய மரணத்தறுவாயில், அவனது பந்துக்கள் அவனை ராம ராமவென்று சொல்லும்படி சொல்லுகிறார்கள். அவரது நாமத்துக்கே இவ்வளவு மகிமையிருக்கும்போது அவரைப்பற்றி நான் எவ்விதம் வர்ணிக்கப் போகிறேன். வான்மீகி முனிவரும் இவரது சரித்ரத்தை வெவ்வேறு விதமாய் நூறு கோடி கிரந்தங்களால விஸ்தாரமாகக் கூறியிருக்கிறார்.

ஆகையால உமது கிருஷ்ணனை இவருக்குச் சமமாய் எப்படிச் சொல்லலாம்?

ராமதாஸர்—இவ்விதம் இவர்கள் விவாதம் செய்துகொண்டிருக்கும் போது, "ராமருக் கெதிரில் ஒருவரையும் ஸ்தோத்ரம் செய்யமுடியாது" என்று ஆகாயத்திலிருந்து ஒரு வாக்கு உண்டாயிற்று அதை எல்லோரும் கேட்டு மிகுந்த ஸந்தோஷத்தோடு ஜயகோஷம் செய்தார்கள். தேவர்களும் ஆகாயத்தில் விமானங்களிலேறி வந்து அந்த ராமோபாஸகர் மேல் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். அப்போது அந்தக் கிருஷ்ணோபாஸகர் வெட்கத்தால் தலைகுனிந்துகொண்டு அந்த ராமோபாஸகரை வணங்கி ப்ரார்த்தித்தார். அப்போது ராமோபாஸகரும் அவரை வணங்கித் தழுவிக்கொண்டு ஏ கிருஷ்ணோபாஸகரே! கேளும் கிருஷ்ணனே ராமர்; வேறல்ல. ராமனே க்ருஷ்ணன்; வேறல்ல. ஆயினும் அயோத்தியில் விளங்குகிற பரமாத்மாவினிடத்தில் என்மனம் பற்றுத லடைகிறது; ஆகையால் நான் ராமரை ஸ்தோத்ரம் செய்தேன். உம்மிடத்திற்கொண்ட அஸூயையால் கிருஷ்ணனை நிந்தித்தேன். ராமனே க்ருஷ்ணன், கிருஷ்ணனே தான் ராமர். இருவருக்கும் பேதமேயில்லை. எந்த மனிதன் இவ்விருவருக்கும் பேதத்தையுண்டாக்குகிறானோ, அவன் பயங்கரமான நரகத்தில் எப்போதும் கிடந்துழலுவான். இதிற் சந்தேகமேயில்லை. ஆகாசவாணி ராகவனை ஸ்தோத்ரம் செய்தது உமது கர்வத்தை யடைக்குவதற்கேயாம். இவ்விதம் ராமரென்ற அந்த ப்ராம்மணர் கிருஷ்ணனிடம் சொல்லி ஸமாதானப் படுத்திவிட்டு ஸபையோர்புகழ அங்கு விளங்கினார். பிறகு அவர்கள் மாக மாதத்தின் முடிவில் தத்தம் தேசம் சென்றார்கள். ஆகையால் சிஷ்யனே! அவதாரங்களில் ராமாவதாரத்திற்குச் சமமானதில்லை. பக்தியோடு அவரது சரித்ரத்தைக்கேட்டு அவரைப் பஜனை செய்தால் ஸகல மங்களத்தையும் நிச்சயமாய் அடைவாய்.

3-வது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்:—சிஷ்ய! ஒருநாள் ராமர் தமது பரிவாரங்களோடு போய்க்கொண்டிருக்கையில் த்ராக்ஷைக்கொடி நிறைந்த ஒரு பந்தலில் ஒரு காக்கையைப் பார்த்தார். அது மிகவும் தைன்ய நிலைமையிலிருந்தது. அது இரண்டு கண்களுக்கும் ஒரே பார்வையுடையதாகையால், இவரையே இவருக்குத் தயையுண்டாகும்படி சாய்ந்தவாறு பார்த்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து ராமர் தமது உள்ளத்தில் தயைகொண்டு காகத்தைத் தம்மிடம் வரும்படி கூறினார். ராமர் தம்மிடம் வரும்படி கூறியதும் அந்தக் காகம் த்ராக்ஷைப் பந்தலிலிருந்து பறந்து ராமரது சமீபம்வந்து, அவரைப்பார்த்து இரைந்து கூவிற்று. உடனே ராமர் "காகமே! உனது நேத்ரத்தைத் தவிர வேறு வரன் ஏதாவது கேள்" என்றார். காகமானது, "ராமச்சந்த்ர ப்ரபுவே! தங்கள் க்ருபா கடாக்ஷம் என்னிடம் எப்போதும் இருக்க வேண்டும். இவ்வுலகில் பயனையளிக்கும் வேறு வரங்களை நான்விரும்பவில்லை" என்றது. இதைக் கேட்டவுடன் ராமர் மகிழ்வுற்று, "தேவாந்திரத்திலோ அல்லது வேறெங்கேயோ, நடப்பதும், நடந்ததும், நடக்கப்போவதுமான சமாசாரங்கள் யாவும் உனது கண்களுக்குத் தோன்றக் கடவன: வரும் காரியங்கள் உனக்கு நன்றாய்த் தெரியட்டும். ஜனங்கள் உனது நடையைக்கொண்டு சகுனங்கள் பார்க்கட்டும்; நீ ஸ்திரமாயிருந்தால் ஜனங்களின் காரியம் ஸ்திரமென்றும் நீ போக ஆரம்பித்தால் காரியம் சஞ்சலமென்றும் ஜனங்கள் அறியட்டும். பூமியில் எல்லாஜனங்களும் க்ருஹப்ரவேசம் செய்யும்போது நீ இடது புறமாய்ச்சென்றால், நல்ல சகுனமென்றும் யாத்திரை போகும்போது நீ வலது புறமாய்ச் சென்றால் மஹா மங்களமுண்டாகுமென்றும் நினைக்கட்டும். சவத்திற்குப் பத்தாவதுநாள் முதலில் போடும் பிண்டத்தை நீ தொடாவிட்டால், இறந்தவருக்கு நற்கதியுண்டாகாமற் போகும்; இஃதன்றி நீ பிண்டத்தைத் தொடாவிட்டால் இறக்கும்போது இறந்தவரது ஆசைகள் அவனது உறவினர்களால் பூர்த்தி செய்யப்படவில்லையென்றேற்படும். இவற்

ரேறி உனக்கு வேறு வரமும் கொடுக்கிறேன். அதாவது புஸ்தகம் எழுதும்போது ஏதாவது மறந்துவிட்டால், அவ்விடத்தில் உனது பாதம்போல் அடையாளம்போட்டு மறந்ததை எழுதட்டும் அந்த அடையாளத்தைப் பார்க்கும்போது ஜனங்கள் இது முதலில் எழுதப்படாமல் மறந்துபோய்ப் பிறகு எழுதப்பட்டதென்று தெரிந்து கொள்ளட்டும்.” என்று இவ்வரங்களைக் கொடுத்தார். உடனே காகமும் ராகவனை வணங்கிச் சென்றது. இவ்வாறு ராமர் அநேக லோகோபகாரங்களைச் செய்திருக்கிறார்.

இன்னொருநாள் ராத்திரி ராமர் பாரிஜாத மரத்தின்கீழ் ஸீதையைவிட்டு விலகிப் படுத்துக்கொண்டிருந்தார். இச்சமயம் காவற்காரர்களும் பணிவிடைக் காரிகளும் இன்னும் மற்றுமுள்ளவர்களும் ராமரது நித்திரையை பங்கப்படுத்தாமல் வேறே எங்கேயோ சென்றிருந்தார்கள். அயோத்தி பட்டினத்திலுள்ள அநேகம் அழகிய பருவமங்கையர்கள் மன்மத விகாரமடைந்து ஆடையாபரணம் பூண்டு ராமரிருக்குமிடம் வந்தார்கள். வந்தவர்களுள் ஒருத்தி அவருக்கு விசிறவும் ஒருத்தி அன்புடன் கால்பிடிக்கவும் ஒருத்தி சந்தனம் பூசவும் மற்றொருத்தி தாம்பூலம் கொடுக்கவும் வேறொருத்தி நல்ல கனிகளைக் கொடுக்கவும் மற்றவர்கள் சித்ரான்னம் முதலியவைகளைக் கொடுக்கவும் தயாராயிருந்தார்கள். இச்சமயம் ராகவர் நித்திரை நீங்கி விழித்துக் கொண்டு தமக்கு எதிரில் அழகிய நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் நிற்பதைப் பார்த்தார். ராமர் எழுந்ததும் அவர்கள் வெகு அன்புடன் வணங்கினார்கள். உடனே ராமர் “இந்த ராத்திரியில் நீங்கள் யாவரும் ஏன் இந்தப் புஷ்பக விமானத்தருகில் வந்தீர்கள்? எனக்கு உண்மையைச் சொல்லுங்கள்” என்றார். ராமர் இவ்விதம் கேட்டதும் அம்மாதர்கள் யாவரும் நாணமுற்றுத் தலைகுனிந்து கொண்டு, பேசாமலிருந்தார்கள். அப்போது அவர்களுள் ஒருத்தி சற்று நாணத்தைத் துறந்து “நாங்கள் வந்திருப்பதன் காரணம் பிரபுக்களான தங்களுக்குத் தெரிந்திருக்கும்; ஆகையால், அதை வெளிப்படையாகச் சொல்ல எங்களுக்கு வெட்கமாயிருக்கிறது; இளம் பருவத்தினரான எங்கள் மனோரதத்தைப் பூர்த்திசெய்ய

வேண்டும்" என்று சொன்னாள். உடனே ராமர் "மங்கைமீர்! நான் சொல்வதைக் கேளுங்கள், நான் ஏக பத்னீ வ்ரதமனுஷ்டிப்பவன். அவளைத்தவிர மற்ற மாதர்கள்யாவரும் எனக்குத் தாய்க்குச் சமமானவர்கள்; நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள்; நான் அரசனாயிருக்கும்போது அதர்மம் நடப்பது கூடாது. நீங்கள் செய்த குற்றத்தை மன்னித்துவிட்டேன்" என்றார். அவர்கள் ஏற்கனவே மன்மதபாணத்தினால் அடிப் பட்டவர்களாதலால், இப்போது ராமருடைய பாணம்போன்ற சொற்களால் அடிபட்டதும் மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தனர். இதைக்கண்டதும் ராமர் தயைகூர்ந்து "மாதர்காள்! நீங்கள் ஒருமுறை என்னுடன் கூடியதால் மட்டும் உங்களுக்குத் திருப்தியுண்டாகாது; என் வ்ரதத்துக்கு மட்டும் பங்கமுண்டாகும்; ஆகையால், நான் சொல்வதைக் கேளுங்கள். நான் குருவுக்கு யாகத்தில் அநேகம் ஸ்வர்ண ஸீதைகளைக் கொடுத்திருக்கிறேன். அதன் பலனாக வரும் த்வாபர யுகத்தில் க்ருஷ்ணாவதாரமெடுத்து உங்களனைவரோடும் வெகுகாலம் க்ரீடை செய்கிறேன். அப்போது நீங்கள் சுகமுறலாம். நீங்கள், அநேக அரசருக்குப் பெண்ணாகப் பிறந்து வளர்வீர்கள். உங்களை அப்போது பௌமாஸுரன் ஸம்ஹாரஞ்செய்யவருவான் அவனைக்கொன்று உங்களைவிடுவித்துப் பிறகு உங்களையெல்லாம் விவாகம் செய்துகொள்கிறேன். நீங்கள் இவ்வார்த்தையை நம்பி உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்றார். மாதர்கள் அவரை வணங்கிவிட்டுத், தத்தம் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் சென்றதும் ராமர், தமது பணிவிடைப் பெண்களைக் கூப்பிட்டார்; அவர்களங்கில்லாததால் வேலைக்காரர்களைக் கூப்பிட்டார்; அவர்களும் வாராததால், வாசல் காவற்காரர்களைக் கூப்பிட்டார்; அவர்களும் இல்லை; பிறகு அங்கரக்ஷகர்களைக் கூப்பிட்டார்; அவர்களும் இல்லையென்று தெரிந்துகொண்டு ராமர் வெகு ஆச்சரியத்தோடு விமானத்தின் மெத்தைமேலேறி லக்ஷ்மணரைக் கூப்பிட்டார். அக்குரலைக்கேட்ட ஊர்மிளை தன் பதியாகிய லக்ஷ்மணரைத் தட்டி எழுப்பினாள். அவர் எழுந்து வெகுவேகமாய்ப் படுக்கையறையிலிருந்து வெளியேவந்து, ராமரிடம்போய் அவரைப்பார்த்தார். அவர்

நடந்தவைகளை யெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொன்னார். இதைக் கேட்டதும் லக்ஷ்மணர் தமது வேலைக்காரர்களை யனுப்பி ராமருடைய வேலைக்காரர்களை யழைத்து வரும்படி உத்தர விட்டார். அவர்கள் ராமருடைய வேலைக்காரர்க ளிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அவர்களை யழைத்தார்கள். அவ்வேலைக்காரரில் சிலர் ஸ்ரீ ராமரது கீர்த்தனத்தைப் பாதியில் எவ்விதம் விட்டுச் செல்வதென்றும், சிலர் போகாவிடில், ராஜமானருடைய கட்டளையை மீறியதோஷம் வருமென்றும் பயந்தாராயினும் நாம் இங்கிருந்தோமென்று கூறினால் அவர் திருப்தி யடைந்துவிடுவாரென்று எண்ணித் தங்களுக்குத் தாங்களே சமாதானப் படுத்திக் கொண்டு செய்தி தெரிவித்து அவர்களை யனுப்பி விட்டார்கள். வேலைக்காரர்கள் உடனே அவிடமிருந்து திரும்பி ராமரிடம் வந்து அவர்கள் கூறியசெய்தியைத் தெரிவித்தார்கள். கேட்டதும் ராமர் சிறிது கோபமடைந்தார். பின் என் கீர்த்தனத்தில் மனதைச் செலுத்தியவர்களை நானே தண்டிப்பது நியாய மல்லவாயினும் சிறிதேனும் இவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று நினைத்தார்.

இச்சமயம் ஒரு அழுகைக் குரல் கேட்க, அது எங்கிருந்து உண்டாகிறதென்று கூடியவரையில் பார்த்தும் தெரிந்து கொள்ள முடியாமல், விமானத்தைப் பார்த்து "விமானமே! இக்குரல் உண்டாகும் இடத்தை நோக்கிச் செல்" என்று ராமர் கட்டளையிட்டார். அந்தவிமானம் அப்படியேசென்று பட்டினத்திற்குவெளியேவந்து அழுகைக் குரல் கேட்குமிடமாகிய ஸரயூநதிக்கரைக்குச் சென்றது. அங்கே போய்ப்பார்க்கும்போது அஞ்சனபர்வதம் போன்ற, ஒருஸ்திரி அங்கு நின்று, அழுதுகொண்டிருக்கக்கண்டார். ராமர். 'நீயார் எதற்காக அழுகிறாய்' என்று அவளை வினவ, அவள் "நான் இங்கே வெகு நாளாய் அழுதுகொண்டிருக்கிறேன். தெய்வாதீனமாய் இப்போது தான் என் அழுகைக் குரல் தமது செவிக்கெட்டியிருக்கிறது. நான் நித்ராதேவி. நான் பிறந்தது முதல் கும்பகர்ணன் எனக்கு நல்ல ஆச்ரயமாயிருந்தான். அவனைத் தாங்கள் கொன்று விட்டமையால், எனக்கு வேறு இடமில்

லாமல் நான் ப்ரம்மாவிடம் போனேன். அவர் தங்களிடமே செல்லும்படி ஆக்ஞை செய்தார். ஆகையால் அவ்வாக்ஞைப்படியே நான் இப்பட்டினத்திற்கு வந்தேன். ஆயினும் எல்லை தாண்டி வரக்கூடாதென்று இந்நதிக்கரையிலேயே யிருந்து அழுதுகொண்டிருக்கிறேன். ஆகையால் நான் சுகமாயிருக்கத் தக்க இடத்தைத் தாங்கள் தயையோடு தெரிவித்து என்னை அனுப்பவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டாள். இதைக் கேட்டதும் ராமர் முன் தமது வேலையாட்கள் செய்ததை நினைத்து மிகவும் கோபங்கொண்டு ''ஏ நித்ராதேவி! நான் உனக்கு இடம் குறிப்பிடுகிறேன் கேள்; உலகத்தில் கீர்த்தனம், புராணச்ரவணம், வேதபாடம், பூஜை, ஜபம், தவம், த்யானம், ஹோமம் முதலிய நல்ல காரியங்களைப் பாபாத்மாக்கள் செய்யும்போது நீ போய் அவர்களிடத்தில் வ்யாபித்துவிடு. உன்னால் அவர்களுக்கு அவைகளில் ச்ரத்தைக் குறைவுண்டாகட்டும். மேலும் மூடன், பாலன், கர்ப்பிணி பட்டினியிருந்து சாப்பிட்டவன், விக்பார்த்தி, ச்ரமப்பட்டவன், வாந்திசெய்தவன், விழித்துக்கொண் டிருப்பவன் இவர்களும் உனக்குத் தங்குமிட மாவார்கள். என் வரத்தால் இவர்களையும் நீ மயக்கக் கடவாய்'' என்று ராமர் வரங்கொடுத்தார். இதைக்கேட்டு நித்ராதேவி ஸந்தோஷமடைந்து அவரை வணங்கிச் சென்றனள். ராமரும் தமது பட்டினம் வந்தார். அது முதல் புராணச்ரவணம் முதலியவைகளைச் செய்யும் பாபாத்மாக்களுக்கும் மேற்குறிப்பிட்ட மூடன் முதலானவர்களுக்கும் நித்ரை சுகமாய் வருவது வழக்கம். சேவகர்களுக்கும் இதேமாதிரி நித்ரை வருவது வழக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்:—இப்போது ஸீதைக்கு மகிமை யளித்த மற்றொரு கதையைக் கூறுகிறேன் கேள்—கும்பகர்ணனுடைய பிள்ளையான நிகும்பனுடைய மனைவி கர்ப்பமாயிருந்து ப்ரஸவிக்கத் தீவாந்தரத்திலுள்ள தன் தகப்பனார் வீட்டிற்குச் சென்றாள். ராவணாதிகளின் வதம் நடந்த பிறகு அவளுக்குப் பௌண்டிரகன் என்னும் ஓர் ஆண் பிள்ளை உண்டானான். அவன் நூறுதலைகளும் இருநூறு கைகளு முடையவனா யிருந்தான். மாயாபுரியில் அவன் பிறந்தான். க்ஷீரஸாகரத்தில் ச்ரோணநதிதீரத்தில் நூறு தலை ராவணனிருந்தான். இவனைச் சகாயமாகக்கொண்டு அவன்

விபீஷணரை மிரட்டி விலக்கிவிட்டு லங்கையை ஆண்டுவந்தான். பிறகு விபீஷணர் ராமரிடம் சென்று எல்லாவற்றையுந்தெரிவிக்க, ஸீதையோடும்விபீஷணரோடும் ராமர் லங்கைசென்று ஸீதையைக் கொண்டு அவனை ஜயித்து, அந்தப்பௌஸ்ட்ரனைக் கொன்று விபீஷணருக்கு ராஜ்யத்தைக்கொடுத்தார். பிறகு ஒரு சமயம் ராமர் ஸபையிலிருக்கும்போது விபீஷணர் நான்கு மந்திரிகளோடும் தமது பிள்ளை பெண்களோடும் ராமரிடம் வந்து அவர் காலில்விழுந்து, நேத்ரத்தில் நீர்பெருக நின்று பெருமூச்சுடன் லங்கையில் நடக்கும் வ்ருத்தாந்தங்களைக் கூறினார். "ஸ்ரீராம! ஜகத்ப்ரபுவே! சரணமென்றடைந்த என்னைத் தயையோடு காப்பாற்றவேண்டும். முன்கும்பகர்ணனுக்கு மூலநக்ஷத்ரத்தில் காட்டில் ஒரு பிள்ளை பிறந்தான். அவன் தாதர்களால் மரத்தடியில் விடப்பட்டான். ஈக்கள் தங்கள் வாயிலுள்ள நீர்த்திவலைகளை யளித்து, அவனைக் காப்பாற்றின. அவன் இப்போது யௌவனத்தையடைந்து எங்கள் குலத்தை நாசம் செய்தவர் நீரெனவறிந்து சினங்கொண்டு கடுந்தவம் புரிந்து பிர்ம்மாவை ஸந்தோஷப்படுத்தி வரம்பெற்று அந்த கர்வத்தினால், பாதாளத்திலுள்ள அரக்கர்களுடன் லங்காபட்டினத்திற்கு வந்து என்னோடு ஆறுமாதம் பெரும்போர் புரிந்து என்னைச் சிறையிலடைத்து விட்டுத் தன் நகரத்திற்குப்போய் விட்டான். நானும் ரகஸ்யமாய் பூமிக்குள்ளேயே ஓடி லங்கைக்கு ஒரு யோசனை தூரத்திற் கப்பால் நடுராத்ரியில் வெளிக்கிளம்பி வந்து இப்போது உம்மை அடைந்திருக்கிறேன். அவன் மூலநக்ஷத்திரத்தில் ஜனித்து விருக்ஷத்தினடியில் வளர்க்கப்பட்டபடியால் அவன் மூலகாஸுரன் என்னும் பெயர்பெற்றான். அவன் என்னுடன் யுத்தஞ்செய்து திரும்பும்போது முதலில் என்னைக் கொன்றுவிட்டுத் தன் தகப்பன் முதலிய எல்லாரையும் கொன்ற தங்களுடன் சண்டைசெய்ய வருவதாய்ச் சொல்லிப் போயிருக்கிறான். ஆகையால் இச் சமயம் எதைச் செய்வது நலமோ அதைச் செய்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றார். இவைகளைக் கேட்ட ராமர் மிகவும் வியப்படைந்து, இவ்வுலகிலுள்ள எல்லாத்தேசத்து அரசர்களையும் இப்போது வரவழைக்க வேண்டுமென்று லக்ஷ்மணனுக்கு உத்

ரவளித்தார். பின்னர் லக்ஷ்மணர் உத்தரவின்படி தூதர்கள் தேசங்கள்தோறும் சென்று மீண்டுவந்து சபையில் ராமரிடம் "ஐயா! சில அரசர்கள் தங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தார்கள். சம்பிகை ஸுமதி இவர்களது சுயம்வரத்திலுண்டான அவமானத்தையும் யூபகேதுவின் பாணத்தால் அடிபட்ட வருத்தத்தையும், மதனசுந்தரியை இழந்தோமே யென்னும் துக்கத்தையும் நினைத்துக்கொண்டு சிலர் தங்களுத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லை. தங்கள் ஆக்ஞைப்படி நடந்த சுக்ரீவன் முதலானவர்கள் தங்கள் தங்கள் சேனைகளோடு கோடிக்கணக்காய் இங்கே வந்திருக்கிறார்கள்." என்று சொன்னார்கள். இதைக் கேட்டு ராமர் மிகுந்த கோபமடைந்து "அதமர்களான இவர்கள் என் பாணத்தினால் அடிபட விரும்புகிறார்கள் போலும்! நல்லது, முதலில் இவர்களைக் கொன்று விட்டுப் பிறகு அவ்வரக்கனைக் கொல்கிறேன்" என்று சொல்லி நல்லதினத்தில் சேனையோடு புறப்பட்டார். சிறிது சேனையுடன் யூபகேதுவைப் பட்டினத்திலேயே வைத்துவிட்டுக் குசன் முதலிய எழு பிள்ளைகளையும் தம்மோடு அழைத்துக்கொண்டு விமானத்தின்மீ தேறினர். அதற்குள் அவ்வரசரெல்லாரும் தங்கள் தங்கள் சேனைகளோடு வந்து ராமனைக் கண்டு அவரை வணங்கி எதிரில் நின்றார்கள். அவர்களைக்கண்டதும் கோபந் தணிந்து எச்சரிக்கை செய்துவிட்டு நன்றாய் ஒழுங்குப் படுத்திக்கொண்டு ஸீதையில்லாமல் புஷ்பக விமானத்தின் மீது தாம் தனித்து ஏறிக்கொண்டு அநேகதேசங்களைப் பார்த்துக்கொண்டே ஆகாயமார்க்கமாய் லங்கைசென்றார்.

ராமர் வந்திருப்பதைக் கேட்ட மூலகாசுரன் அவரோடு போர்புரிய லங்கைக்கு வெளியேவந்தான். பிறகு இருவருக்கும் அமர்நேர்ந்தது. ராக்ஷஸர்கள் கால்களால் குரங்குகளைக் கொன்றார்கள், வானரங்களும் தங்கள் கால்களாலும் நகங்களாலும் பல அரக்கர்களைக் கொன்றன. இவ்வாறு ஏழுநாள் குரூரமானயுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் மடிந்த குரங்குகளை அனுமார் முன்போல் சஞ்சீவி மலையைக்கொணர்ந்து ஜீவிக்கும்படி செய்தனர். அப்போது அரக்கர் சேனையில் நாலில் ஒரு பங்குதான் மீந்திருந்தது. இதைக்கண்ட மூலகாசுரன் மிகவுஞ் சினமடைந்து தனது

மந்திரிகளையும் சேனாபதிகளையும் போருக்கனுப்பினான். அவர்கள் வந்ததும் ராமனைச்சேர்ந்த வீரர்கள் அநேக பாணங்களாலும் அஸ்த்ரங்களாலும் அடித்து அவர்களைக் கொன்றார்கள். அவர்களும் வானரங்களையடித்தார்கள். இவ்வாறு பெருஞ்சண்டையுண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் ராம வீரர்கள் அவர்களனைவரையும் யமலோகத்திற்கு அனுப்பி யொழித்தனர். அவர்கள் மடிந்ததை யறிந்த மூலகாசுரன் அச்சமயம் மீந்திருந்த சிறிது சேனைபோடுதானே ரதத்திலேறி யுத்தத்துக்கு வந்தான். அவன் வந்ததும் ஆயிரக்கணக்கான அரசர்கள் அவனோடு சண்டை செய்யச்சென்றார்கள். மூலகாசுரன் அவர்களனைவரையும் பாணங்களால் மூர்ச்சையடையும்படி செய்தான். அவர்கள் மூர்ச்சையடைந்ததும் சுமந்த்ரர் முதலான மந்திரிமார்கள் சண்டைக்குச் சென்றார்கள். அவர்களையும் பாணத்தினாலடித்துக் கீழே தள்ளினான்.

மந்த்ரிகள் மூர்ச்சையடைந்ததும் குசன் முதலிய பாலர்கள் எதிர்த்தார்கள். இப்போது பயங்கரமானயுத்தமுண்டாயிற்று. குசன் ஏககாலத்தில் அநேக பாணங்களை யெய்து மூலகாசுரனை யடித்துக் கீழே தள்ளினான். பிறகு அவ்வசுரன் எழுந்திருந்து ரதம் பாணம் இவைகளை மீண்டும் அடைய ஒரு ரகஸ்யமான இடத்துக்குச் சென்று ஆபிசார ஹோமம் செய்தான். விபீஷணர் ஹோமஸ்தானத்தைப் பார்த்து கற்பக வ்ருக்ஷத்தினடியில் உட்கார்ந்திருக்கும் ராமனிடம்வந்து "இந்தத்துஷ்ட அசுரன் இவ்வாறு ஆபிசாரஹோமம் செய்கிறான்; அதையழிக்க முன்போல் குரங்குகளை யனுப்புங்கள். இந்த ஹோமம் சரியாகச் செய்யப்படுமாயின் அவனை ஜெயிக்க ஒருவராலும் முடியாது" என்றார். இச்சமயம் ப்ரம்மதேவர் ராமனிடம் வந்து, அவரை வணங்கி, அவன் தனக்கு மரணமுண்டாகக் கூடாதெனக் கேட்டுக்கொண்டபடியால், நான் அவ்விதமே வரமளித்திருக்கிறேன். ஆகையால், தாங்கள் அவனைக் கொல்லமுடியாது. அவனுக்கு ஸ்திரீகளாலேதான் மரணமுண்டாகும். தவிர அவனுடைய மரண சம்பந்தமாய் வேறொரு காரணமுமுண்டு, கூறுகிறேன்—

ஒருசமயம் அவன் துக்கத்தோடு முனிவர்களின் முன்னிலையில், "இந்தச்சண்டியான சீதையாலல்லவா எனது வம்சம் நாச

மடைந்தது" என்று கூறிச் சினந்தான். இதைக்கேட்டதும் முனிவரில் ஒருவர் கோபமடைந்து "நீ யாரைச் சண்டி என்கிறாயோ அவளே உன்னைக் கொல்லட்டும்" என்று சபித்தார். அவர் சபித்ததும் அரக்கன் அவரைக் கொன்று விட்டான். பிறகு முனிவர்களெல்லோரும் அவனுக்குப் பயந்து பேசாமலிருந்து விட்டார்கள். ஆதலால் அந்த முனிவரின் சாபப்படிக்கும் எனது வரத்தாலும் அவனை ஸீதையாகிய மாதுதான் கொல்லவேண்டும். இதில் ஸந்தேகமில்லை. ஆகையால் ஸீதையை அழைத்துக் கொண்டு வந்து இந்த அரக்கனைக் கொல்லும்" என்று சொல்லிவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார். ராமரும் இதைக் கேட்டு மகிழ்ந்து விபீஷணரிடம் "மூலகாசுரனுடைய ஹோமத்திற்கு நாம் இப்போது விக்னம் செய்ய வேண்டியதில்லை; ஸீதை இங்கு வந்தபிறகு வேண்டுமானால், குரங்குகள் அதைக்கெடுக்கட்டும்" என்று கூறிப் பிறகு புஷ்பகத்திலிருந்தபடியே, கருடனைக் கூப்பிட அவர் அக்கணமே அருகில் வந்தார். ராமர் "பக்ஷிராஜ! நீ அனுமாருடன் அயோத்திக்கு வேகமாகச் சென்று ஸீதையை முதுகில் ஏற்றிக்கொண்டு, அவளை இங்கே துரிதமாய்க்கொண்டு வரவேண்டும். வழியில் நான்குபக்கங்களிலும் துஷ்டர்களின் இம்சையுண்டாகாமல் அநுமந்தன் பாதுகாத்துவருவான்" என்றார். உடனே கருடனும் அநுமாரும் அவரது ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு ஸீதையை அழைத்துவர அயோத்திக்குச் சென்றார்

4-வது சருக்கம்

முற்றிற்று.

5 - வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

இனி, ராமனைவிட்டுப் பிரிந்து அயோத்தியில் இருந்து வரும் ஸீதாதேவியைப் பற்றிக் கூறுவாம். அவ்வம்மை தனது நாயகனைவிட்டுப் பிரிந்தது முதல், சிறிதும் சுகமென்பதில்லாமல், சிலவேளை மேன்மாடியின்மீது உலாவுவதும், சிலசமயம் திராட்சைப் பந்தரின் கீழமர்ந்திருப்பதும், சிலவேளை ஆபரணங்களை யணிந்து கொள்ளாமலிருப்பதும், சிலவேளை தாஸர்களின் நர்த்தனங்களைப் பார்ப்பதுமாக இருந்து வந்தாள். இஃதன்றிச் சிலசமயம் இராமபிரானது ஜயத்தை விரும்பிக் கார்த்தவீரியார்ச்சுனனைப் பூஜிப்பாள். சிலசமயம் துளஸி, அரசமரம் இவைகளைப் பக்தியுடன் வலம்வருவாள். அந்தணர்களைக்கொண்டு மன்யு ஸூக்தங்களைப் பாராயணம் செய்யும்படி செய்வாள். சாணத்தினால் அனுமானை லக்ஷ்மணத்தோடு சுவரில் வரைந்து சிலசமயம் பூஜித்து, அவருடைய வால், நாள்தோறும் தன் விரலில் ஒரு விரலளவு வளரும்படி செய்து வந்தாள். ராகவருக்கு ஜயமுண்டாகும்படி சதருத்ரீய ஸூக்தத்தைப் படிக்கும்படி செய்து துர்க்காதேவியையும் பூஜித்தாள். இராகவருடைய மஞ்சத்தில் கார்த்தவீரியருடைய மந்திரத்தை எழுதிவைத்துப் பூஜிப்பாள். ராமர் யாத்திரை சென்ற பிறகு ஸீதை ஒருநாளாவது சுகமாய் ஸ்நானஞ்செய்து தன்னை அலங்கரித்துக் கொள்வதில்லை. சந்தனம் புஷ்பமாலை புஷ்பப்படுக்கை இவைகளை ஒருபொழுதும் உபயோகிப்பதில்லை. ஒருவரோடும் சிரித்துப் பேசுவதுமில்லை ஒருவேளையும் ஸந்தோஷமடைந்தவரைக்காண்பதுமில்லை. கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பதில்லை. ஸந்தோஷமடைந்தவர்களைக் காண்பதேயில்லை. அழகிய வஸ்திரம் ரவிக்கை இவைகளை யணிந்து கொள்வதில்லை. சரயூநதிக்கு ஸ்நானம் செய்யப் போவதில்லை. உபவனம் முதலிய விநோத ஸ்தலங்களுக்குச் செல்வதில்லை.

ஜானகி இவ்வாறு ராகவரது வியோகத்தை யடைந்திருக்கும்போது ஒருநாள் தன் அரண்மனை மேன்மாடியின்மீது ஒரு காகத்தைப் பார்த்து, "ஏ காகமே! எனக்கு ராமபிரானது தரி

சனம் சீக்கிரத்தில் கிடைக்கக்கூடுமாயின், நீ இப்பொழுது இந்த இடத்தைவிட்டுப் பறந்துபோய்விடு; இல்லையாயின் இருந்த இடம் விட்டு அசையாதே" என்று கூறினள். ஸீதை இவ்வாறு சொல்லி வாயைமூடியதும் காகம் அந்த இடத்தைவிட்டுப் பறந்துபோய் விட்டது. இதனால் ஸீதாதேவி சற்றுத் தேறுதலடைந்து பின் காற்றைநோக்கி "நீ முதலில் ராமரது தேகத்தை ஸ்பரிசித்து விட்டுப் பிறகு என்னிடம் வா" என்றாள். பிறகு சந்திரனைநோக்கி "ஏசந்திர! நீ உனது பூர்ணமான சீதள கிரணங்களால் ராகவருக்குச் சுகமளித்து விட்டுப் பிறகு என்னைத்தொடு". என்றாள். ஸீதை இவ்வாறு சகுனங்களைப்பார்த்து ராமர் சீக்கிரம் வரக் கூடுமெனவறிந்து மனமகிழ்ச்சி யடைந்தாள். பிராம்மணர்களையும் ஸுமங்கலிகளையும் ஆராதித்துவந்தாள். அநேக விதமான விரதங்களை யனுஷ்டித்துவந்தாள். அனுமாருக்கு வடைமாலைசாற்றுவதாக வேண்டிக்கொண்டாள்; பூரணத்துடன் நல்ல மோதகங்கள்செய்து அர்ப்பணம் செய்கிறேன் என்று விநாயகரைப்பிரார்த்தித்துக்கொண்டாள். துர்க்காதேவிக்குப் பலிதானம் செய்வதாக வேண்டிக் கொண்டாள். சண்டிகைக்குத் தன் நாக்கின் ரத்தத்தைகொடுப்பதாக வேண்டிக்கொண்டாள். இவைகளன்றி, சனிக்கிழமை தோறும், புசிபாம விருப்பதாகவும், நெய்யையும் மதுரமான பதார்த்தங்களையுஞ் சேர்த்துக்கொள்வதில்லை யென்றும் பிரதிக்ஞை செய்து கொண்டாள். ராமபிரான் வரும் வரையில் எள்ளும் வெல்லமுமாய்க்கலந்து பிராமணர்களுக்குத் தானங்கொடுப்பதாகத் தீர்மானித்தாள். ஞாயிற்றுக்கிழமைதோறும் சூரியனை ஆராதிப்பதாகவும் வேண்டிக்கொண்டாள். ஸீதை இவ்வாறு அநேக நியமங்களை நடத்தினாள்

ஊர்மிளா சம்பிகை முதலான ஸ்திரீகளும் தங்கள் தங்கள் புருஷருடைய வியோகத்தால் வருத்தமுற்று, சில சமயம் மணிமயமான பூமியிற்கிடந்து புரளுவதும், சிலசமயம் சந்திரகாந்தக் கல்லிழைத்த தரையில் தண்ணீர்க் குழாய்க்கருகிலும் சில சமயம் தாமரையிலைகளின்மேலும் படுத்துக்கொள்வதுமாகவிருந்தார்கள். மயில்களை ஆடும்படிசெய்து வேடிக்கை பார்ப்பதையும், கிளிக

ளோடு பேசுவதையும் ஸாகஸபக்ஷிகளுடன் விளையாடுவதையும் வீட்டில் ஒருவரோடொருவர் கூடி விளையாடுவதையும் ஒழித்து விட்டார்கள். இவைகளன்றி வீணைமுதலான வாத்தியங்கள் வாசிப்பதையும் கற்பகவிருக்ஷத்தின் புஷ்பங்களைச் சூடுவதையும் மதுரமான மதுவைப்பானஞ் செய்வதையும் ஒழித்துவிட்டு, யோகிகள் ஒரேமனதாயிருந்து ஈசுவரனைத் தியானம் செய்வதுபோலத், தங்கள் நாயகனையே தியானம் செய்துகொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் ஸீதாதேவியின் உபவாசம், விரதம் இவைகளுக்கு ஈடு பட்டவர்கள்போலக் கருடபகவானும் அனுமாரும் அப்பட்டினத்திற்கு வந்தார்கள். அச்சமயம் ஸீதை தன் இடது புஜமும் நேத்திரமும் துடிக்கக்கண்டு, இது நல்ல சகுனம்; இன்று நற்செய்திவரவேண்டுமென எதிர்பார்த்திருந்தாள். அனுமாரும் கருடபகவானும் ராமரது அரண்மனைக்குள் பிரவேசித்து, அங்கிருந்த யூபகேதுவினிடம், லங்கையில் நடந்த சமாசாரங்களைத் தெரிவித்தார்கள். யூபகேது சங்கதிகளைக்கேட்டுமனமுவந்து, உடனே ஸீதையிடம் சென்றுதெரிவிக்க, ஸீதைமிகவும் மகிழ்ச்சியடைந்து, அன்றைபதினமே அக்கி ஹோத்திரத்தை முன்னிட்டுக்கொண்டு ரித்விக்குகளோடும் புரோகிதர்களோடும் கருடன் மீதேறிப் புறப்பட்டாள். ஒரு ஸ்திரீயானவள் தனது புருஷன் அருகிலில்லாத காலத்தில், அக்கிஹோத்திராதிகளுடன் எல்லை தாண்டிச் செல்வது தோஷமாயினும், அது ஸீதையின் விஷயத்தில் சம்பந்தப்படாது. ஏனெனில் ஸீதை ஆகாயமார்க்கமாகச் செல்லுகிறாள்; இஃதன்றித்தான் மனத்திற்கொண்ட அச்சத்தாலும் தேசாந்திரம் போகும்படி நேர்ந்தமையாலும் இக்குற்றம் ஸீதையைப்பாதிக்காது. வழியில் அனுமார் நாற்புறமும்காவல் புரிந்து கொண்டுகூடவே ஆகாயமார்க்கமாகச் சென்றனர். பிறகு ஸீதை அநேக தேசங்களைப் பார்த்துக்கொண்டு இலங்கைக்குச் சென்றனள்.

அங்கே கற்பவிருக்ஷத்தின் கீழ் புஷ்பகவிமானத்திலிருக்கும் ராகவரைப் பார்த்து, பக்தியோடு வணங்கி, கருடன் மீதிருந்து கீழே இறங்கினாள். அவளைப் பார்த்ததும் "ராமர் ஏ ஸீதே!

உனது முகம் ஏன் வெளுத்திருக்கிறது? சரீரம் ஏன் இளைத்திருக்கிறது?" என்று கேட்டார். இதைக்கேட்டு ஜானகி புன்னகைகொண்டு "நாதா! தங்களின் பிரிவாற்றாமையால், நான் சாப்பிடாமலும், நித்திரைசெய்யாமலும் பானம் பண்ணாமலும் யோகிகள் போன்று தங்களையே நினைத்துக்கொண்டும், சொப்பனத்திலும்தங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டும் கவலை கொண்டிருந்தேனாகையால் இக்கோலம்அடைந்திருக்கிறேன். தாபத்தையொழிக்க வேண்டுமெனக்கூறித் தங்கள் முகத்திற்குப் பிரதிநிதியான சந்திரனையும் பார்க்கிறதில்லை. தங்கள் குரலுக்குச் சமமான கோகிலத்தின் குரலையும் கேட்பதில்லை; மந்தமாருதத்தையும்சேவிப்பதில்லை. ஆனால் தங்களுடைய வெற்றியை விரும்பி அநேக விரதம் உபவாஸம் நியமம் இவைகளையே செய்து கொண்டிருந்தேன்." என்று சொன்னாள். இதைக்கேட்டதும் ராமர் நகைத்து ஆலிங்கனம் செய்து கொண்டு மகிழ்ந்தார்.

அடுத்தநாள் காலையில் ராமர் ஸ்நானம் செய்துவிட்டு ஜானகியையும் ஸ்நானம் செய்யச்சொல்லி அஸ்திரவித்தை சஸ்திரவித்தை பாணங்கள் எய்வது முதலிய தனுர்வித்தை இவையெல்லாம் அவளுக்குச் சொல்லிக்கொடுத்தார். ராமரது ஆக்ஞையால் லக்ஷ்மணரும் ரதத்தைத் தயார் செய்தார். அதற்குத் தாருகன் ஸாரதியானான். அநேக அஸ்திரங்களும் சஸ்திரங்களும் அவ்விரதத்திலேயே வைக்கப்பட்டன அதன் கொடியில் கருடன் உட்கார்ந்துகொண்டான். அதில் வாயுவேகமுடைய சைப்ய, ஸுக்ரீவ, மேகபுஷ்ப,வலாஹக என்னும் பெயருள்ளநான்குகுதிரைகள் பூட்டப்பட்டன. அதில் ச்ரேஷ்டமானகுடையும் தங்கத்தடியும்வைக்கப்பட்டன. ராமர் அந்த ரதத்தைப் பார்த்ததும், ஜானகியையழைத்து "ஏஸீதே! நீ இதில் உட்கார்ந்து சென்று, மூலகாசுரனைக் கொல்லவேண்டும்" என்றார். ஸீதை, ராமர் வாக்கியத்தை ஒப்புக்கொண்டு, தனது நிழலை ஏவினாள். அந்தத் தாமச ஸீதையும் அவரைப் பன்முறை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, மிகவும் பயங்கரமான ரூபத்தோடு ரதத்தின் மீதேறிற்று. இப்பொழுது ராமரால் ஏவப்பட்ட வானரச்ரேஷ்டர்கள், இல

ங்கைசென்று முன்போல அவனை ஹோமத்திலிருந்து கலைத்து விட்டுக் களிப்புடன் ராமரிடம் திரும்பி வந்தார்கள். மூலகாசுரன் உடனே கோபங்கொண்டு ரதத்தின் மீதேறிச் சண்டை செய்யப் புறப்பட்டான். வழியில் அவனது மகுடம் தவறிக் கீழே விழுந்தது. அதைக் கவனித்துத்திரும்பாமல் அவன் கர்வத்தோடு யுத்தபூமிக்கே வந்தான். அந்தஸீதையின் நிழலும் சேனையோடும் லக்ஷ்மணர் முதலியவர்களோடும் சண்டைக்குச் சென்றது.

5 - வது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

ஸீதாதேவியின் சாயையானது சார்ங்கமென்கிற பெரியவில்லின் நாணையிழுத்து ஸப்தஞ்செய்துகொண்டு அதிவேகமாகயுத்தகளஞ்சென்று பயங்கரமான பற்கள், கண்கள், செவிகள், குகைபோல் அகன்ற வாய், கருத்த மயிரடர்ந்த சரீரம் இவைகளோடு அரசன் வரவை எதிர்பார்த்து நின்றது. அசுரனும் அக்கணமே, வந்து அந்தப் பயங்கரமான ரூபத்தைப் பார்த்து மனத்தில் அச்சங்கொண்டு "நீயார்? நீ ஏன் இங்குவந்தாய்? போர்புரியவா வந்தாய்? நீ உயிர் தப்பவேண்டுமாயின், என்னெதிரில் நில்லாதே" என்று தழதழத்த குரலுடன்கூறினன். இதைக்கேட்டதும் அந்தச் சாயையானது மலைகளும் நடுக்கங்கொள்ளத்தக்க குரலுடன், "அடே மூலகாசுர! நான்ஸீதாதேவியின் உக்ரமான அம்சமாகிய சாயை; எனதுபெயர் சண்டிகை. என்னாலே தான் உங்கள் வம்சம் அழிந்தது. இலங்கையும் நாசமடைந்தது. என்னிடம் அன்பினையுடைய அந்தணார்களை நீ முன்பு கொன்றாய்; ஆதலால், இப்போது யுத்தத்தில் உன்னைக்கொன்று அந்தக்கடனைத் தீர்க்கப்போகிறேன்" என்று சொல்லி உடனே வில்லைவளைத்து அவ் வசுரன் மேல் ஐந்து பாணங்களை யெய்தது. அசுரனும் அதன்மேல் பாணங்களை எய்து யுத்தம் செய்தான்.

இவ்வாறு இருவரும் யுத்தம்செய்வதை முன் அனுமாரால் பிழைப்பிக்கப்பட்டஅரசர்களும் வானரர்களும் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். கற்பகத்தருவினடியில் ஸீதையோடு சுகமாய்வீற்றிருக்கும் ராமபிரானும் இப்பெருஞ் சண்டையைப் பார்த்து வியப்படைந்தார். அந்தச்சாயை மூலகாசுரனால் விடப்பட்ட பாணங்களையெல்லாம் தனது பாணங்களால் தடுத்து, அவன்மேல் அநேகபாணங்களை யெய்து, அவனுடைய ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள், அவன் கிரீடம் கவசகுண்டலங்கள் வில் இவைகளையொடித்து, அவனை அலங்கோலப்படுத்திற்று. ரதமொழிந்ததும் அவ்வசுரன் காலால் நடந்து, வேறொரு ரதத்திலேறிக்கொண்டு, மறுபடியும் யுத்தத்திற்குவந்து, சாயையின்மேல் அக்கி

யாஸ்திரத்தை விடுத்தான். சாயை மேகாஸ்த்ரம் விடுத்து அதைத்தடுத்தது. பின் மூலகாசுரன் பர்வதாஸ்திரம் விடுக்க, அதையும் தடுத்தது சாயை. மறுபடியும் அவ்வசுரன் வேகமாய் நாகாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தான்; அதை அந்தச் சாயை கருடாஸ்திரத்தால் தடுத்தது. இவ்வாறு ஏழுநாள்வரையில் கொடூரமான யுத்தம் இருவருக்கும் நடந்தது. பிறகு சண்டிகை வெகு கோபத்தோடு அவ்வரக்கன்மேல் மேகாஸ்திரப் பிரயோகம் செய்தது. அப்போது பூமி நடுங்கிற்று. சமுத்திரங்கள் எல்லைகடந்து பெருகின. திக்குகள் புழுதிகளால் நிறைந்திருந்தன. இவ்வஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டதும் அதிவேகமாகச்சென்று, அவனது தலையையறுக்க, அது இலங்கையின் அரண்மனை வாசலில் விழுந்தது. இதைக்கண்ட ராக்ஷஸர்கள் ஹா! ஹா!! வென்று கூறி அலறினார்கள். தேவவாத்தியங்கள் முழங்கின. தேவதைகளும் ஆகாசத்திலிருந்து புஷ்பங்களை வருஷித்தார்கள். பிறகு அந்தச் சாயை ராமர் அருகில் வந்து, அவரையும் ஸீதாதேவியையும் பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து உடனே ஸீதையின் சரீரத்தில் முன்போலவே சேர்ந்துவிட்டது. உடனே வாத்தியங்கள் முழங்கின. வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். பிறகு பிரம்மதேவன் தேவர்கள் சூழ அங்குவந்து ராமபிரானையும் ஸீதையையும் வணங்கி, பின் வருமாறு தோத்திரஞ் செய்தார்.

பிரம்மதேவர் துதிசெய்கிறார்.

ஜனகமஹாராஜரின் பெண்ணே! ராகவரது பிரியையே! தங்கம்போலப் பிரகாசிக்கிறவளே! பக்தர்களைக் காப்பாற்றிவருகிறவளே! தசரதகுமாரரது பிராணநாயகியே! எனது சிரஸு உன்னுடைய பாதங்களாகிற தாமரைப்பூக்களுக்கு வண்டாயிருக்கட்டும்.

மூலகாஸுரனது பிராணனைப் போக்கினவளே! ராமரால் காப்பாற்றப்பட்டவளே! ராமரை ஸேவிப்பவளே! ராமரைமோகிக்கச்செய்பவளே! ரதத்திலுள்ளவளே! எனது சிரஸு தாமரைப்பூப்போன்ற உனது பாதங்களுக்கு வண்டாயிருக்கட்டும்.

ராமராகிற கட்டிலி லேறினவளே! லக்ஷ்மியே! ராமரால் சிறப்பட்டவளே! ராமரால் ஆதரிக்கப்பட்டவளே! ராமரால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவளே! ராமரால் மோகிக்கப்பட்டவளே! எனது சிரஸு உன்னுடைய பாதங்களுக்கு வண்டாயிருக்கட்டும்.

உலகத்தைப் பரிசுத்தப் படுத்துகிறவளே! லக்ஷ்மியே! பிறப்பற்றவளே! சிரேஷ்டமானவளே! பூபுத்திரியே! லோகரக்ஷிணி! தாமரைப்பூப்போன்ற கண்களை யுடையவளே! உன்னுடைய பாதங்களுக்கு எனது சிரஸு வண்டாயிருக்கட்டும்.

தாமரைபோன்ற கண்களையுடையவளே! பெண் யானைபோல் நடப்பவளே! ஆத்மானந்த சுகமுடையவளே! அழகியரூபத்தையுடையவளே! தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்டவளே! முத்தாரம் பூண்டவளே! உன்னுடைய பாதகமலங்களுக்கு என் சிரஸு வண்டாயிருக்கட்டும்.

தாமரைபோன்ற முக முடையவளே! நீ எப்போதும் உனது சேவகர்களைக் காப்பாற்றுகிறாய்! முனிவர்களின் சத்துருக்களுக்கு எப்போதும் துக்கத்தைக்கொடுப்பவளே! உன்னுடைய பாதகமலங்களில் என் சிரஸு வண்டாயிருக்கட்டும்.

ராமப்ரியே! உனது முகத்தைப் பார்த்ததால் ராக்ஷஸச்ரேஷ்டன் நாசத்தை யடைந்தான். உன் கண்ணைப்பார்ப்பதால், பெண்மானும் வெட்கத்தையடைகிறது. உன்னுடைய பாதகமலங்களில் என் சிரஸு வண்டாயிருக்கட்டும்.

குசலவர்களுடைய தாயே! தாமரை போன்ற முகமுடையவளே! தாமரை போன்ற நேத்திரமுடையவளே! பாபங்களை நாசம் செய்பவளே! மதுரமான நல்ல குரலுடையவளே! ஒலிக்கும் தண்டையணிந்தவளே! உனதுபாதகமலங்களில்என் சிரஸு வண்டாயிருக்கட்டும்.

புன்சிரிப்புள்ள முகத்தை யுடையவளே! உனது மூக்கு மிகவும் மேலானது. உனது உதடு கோவைப்பழத்திற்குச் சமமானது. உன்னால் யுத்தகளத்தில் மூலகாசுரன் இப்போதே கொல்லப்பட்டான். நாங்களும் கரையேற்றப்பட்டோம்.

ராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் பிர்ம்மாவினால் ஸ்தோத்தரிக்கப்பட்ட ஸீதையின் ஸ்தோத்திரமான இந்த ஒன்பது சுலோகங்களையும் சூரியோதயத்தில் எவன் படிக்கிறானோ அவன் இவ்வுலகத்தில் எல்லாச் சுகங்களையும் அடைந்து, ஸ்ரீராமரது ஸந்நிதியையும் அடைவான். இவ்வாறு பிர்ம்மா ஸீதையை ஸ்தோத்திரம் செய்து ஸீதாராமர்களுக்கு வஸ்திரம் முதலியவைகளை யளித்துப் பூஜித்து ராமரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தமது லோகம் சென்றார். பிறகு விபீஷணர் "ஏ பிரபுவே! நீர் இதுவரையில் இலங்கைக்கு வரவில்லையாதலால், இப்போது ஸீதையோடுவந்து என்னைக் கிருதார்த்தனாக்க வேண்டும்" என்று சொல்ல, ராமர் அப்படியே ஆகட்டுமென்று வெகு ஸந்தோஷத்தோடு ஸீதை முதலியவருடன் விமானத்தின் மீதேறி இலங்கைக்குச் சென்று அங்கே விபீஷணனுக்குப் பட்டங்கட்டினார். அப்போது இலங்கையானது பரமானந்தத்தில் மூழ்கியிருந்தது. பிறகு விபீஷணர் ஸீதை ராமர் லக்ஷ்மணர் குசன் முதலிய குழந்தைகள் இவர்களெல்லோருக்கும் வஸ்திரம் ஆபரண முதலியனவளித்து அன்புடன் நன்றாய்ப் பூஜித்து உபசரித்தார்.

பிறகு விபீஷணர் தமது ஐசுவரியங்களை யெல்லாம் ராமருக்கு ஆதரவோடு கொடுத்தார். ராமர் அவைகளையெல்லாம் அவருக்கே திருப்பிக்கொடுத்துவிட்டு, அவர் வெகு காலமாய் ஆராதித்துவந்த, கபிலவராகமூர்த்தியைக் கேட்டார். விபீஷணர் உடனே மனமுவந்து அவர் விருப்பப்படியே அம்மூர்த்தியை அவருக்குக் கொடுத்துவிட்டார். அந்த மூர்த்தியை முன் மனத்தால் கபிலர் நிர்மாணம் செய்தார். அவர் அதை வெகு காலம் பூஜித்துவிட்டுப் பிறகு இந்திரனிடம் கொடுத்தார். ராவணன் இந்திரனை ஜெயித்து அந்த மூர்த்தியை இலங்காபுரிக்குக் கொண்டுவந்து ஸ்தாபனம் செய்து, ஆராதித்துவந்தான். சிலா ரூபமான அந்த மூர்த்தியை விபீஷணர் இப்போது ராமருக்குக் கொடுத்தார்.

பிறகு ஸீதை ராமரோடும் மைத்துனர்களோடும் குழந்தைகளோடும் உல்லாசமாய் விமானத்தின் மீதேறி அசோகவனம்

சென்று அங்கே தானிருந்து அநேக கஷ்டங்களை யனுபவித்த சிம்சுபா விருக்ஷத்தை ராமருக்குக் காட்டினுள். இஃதன்றிச் சிற்சில வேளைகளில் தான் சஞ்சரித்த இடங்களையும் ராமருக்குக் காண்பித்து, வரும்போது திரிசடை என்பவளுக்கு வஸ்திராபரணங்களைக் கொடுத்து உபசரித்துப் பிறகு ஸரமை என்பவளை ராமருக்குக் காட்டி அவரிடம் ஒரு வார்த்தை கூறினுள்.

பிரபுவே! ராக்ஷஸ ஸ்திரீகள் என்னைப் பிடித்துக்கொல்வதாய்ப் பயமுறுத்தியபோது இவள்தான் என்னைக் காப்பாற்றினள். ஆகையால் இவளை உபசரிக்க வேண்டுமென்று கூற, ராமர் அவளுக்கு வஸ்திராபரணுதிகளளித்து உபசரித்தார். பிறகு யாவரும் தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள். அதன் பின் ராமர் மாத்ரம் விபீஷணருடன் புஷ்பக விமானத்தின் மீதேறி நிகும்பிலை முதலிய அநேக இடங்களைப் பார்த்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்று, தமது விருப்பப்படி கையில் வில்லையும் பாணத்தையும் எடுத்துக்கொண்டு ஆதரவோடு பிரதக்ஷிணமாகச் சுற்றினுர். இதைக் கண்ட விபீஷணர் ஏன் இவ்விதம் சுற்ற வேண்டுமென்று கேட்க "ஏ விபீஷண! உனது ரக்ஷணை நிமித்தம் நான் இதைச் சுற்றினேன். இதை மற்றவர்கள் தாண்டமுடியாது. எனது பெயருள்ள இந்த வில்லையும் பாணத்தையும் நீ வாங்கிக்கொள். இது உனது கையில் இருக்கும்போது ஒருவரும் உன்னை எதிர்க்கமுடியாது" என்று சொல்லி அந்தப்பாணத்தையும் வில்லையும் அவரிடம் கொடுத்தார். விபீஷணர் அதை வாங்கிக் கொண்டு அவரை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து பூஜித்தார். பிறகு ராமர் அவ்விடமிருந்து யாவருடனும் புறப்பட்டு அநேக தேசங்களைப் பார்த்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப் பட்டுத் தமது பட்டினம் வந்து சேர்ந்தார். அப்பொழுது வாத்தியங்கள் கோஷித்தன. அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். உடனே யூபகேது பட்டினத்து ஜனங்களுடன் ராமரை எதிர்கொண் டழைத்தான். பட்டினத்து ஸ்திரீகளும் கோடிக் கணக்காக மெத்தையின் மீதேறிக்கொண்டு ஸீதை ராமர் முதலானவர்கள் மீது புஷ்பங்களை வருஷித்தார்கள். பிறகு ராமர் அரசர்களோடு ஸபையில் பிரவேசித்தார். ஸீதையும் தனது அந்தப்புரம் சென்றுள்.

இதன் பிறகு ராமர் கபிலவராக மூர்த்தியைத் தமது கிருகத்தில் நல்வேளையில் ப்ரதிஷ்டை செய்தார். பிறகு ஒரு நாள் யமுனா நதிக்கரையில் வாசஞ் செய்கிற முனிவர்களெல்லோரும் லவணாசுரன் என்னும் ஓர் அசுரனால் தொந்தரவடைந்து, அவனுக்குப் பயந்து ராமரிடம் வந்து முறையிட்டார்கள். அம்முனிவர் கூட்டத்துக்குப் பிருகு ரிஷியின் புத்திரரான சியவனரிஷி தலைவராக இருந்தார். ராமர் அன்புடன் அவர்களைப் பூஜித்துச் சந்தோஷப்படுத்தி, "முனிவர்களே! நீங்களாகவே என்னைப் பார்க்க வந்தமையால், நான் கிருதார்த்தனானேன். எனக்கு எதைச் செய்யக் கட்டளையிடினும் அதனை அவசியம் செய்து முடிக்கிறேன். தாங்கள் தயைசெய்து எனக்கு உத்தரவளிக்க வேண்டும்" என்றார். இதைக்கேட்டதும் முனிவர்களின் தலைவரான சியவனர் மகிழ்ச்சியடைந்து "ஏ ராமா முன் கிருதயுகத்தில் மதுவென்ற ஒரு மகாசுரன் மிகுந்த தர்மிஷ்டனாயும், தேவர்கள், அந்தணர்கள் இவர்களிடம் பக்தியுள்ளவனாகவும் இருந்தான். மகாதேவர் அவனிடம் கருணை கூர்ந்து அவனுக்கு ஒரு சூலாயுதத்தை அளித்து 'இதனால் நீ யாரைக்குத்துகிறாயோ அவன் சாம்பலாய்ப் போய்விடுவான்' என்று ஒரு வரமும் தந்தார். ராவணனுடைய தம்பியின் மனைவியாகிய கும்பீனஸீ என்பவளுக்கு லவணனென்றொருவன் பிறந்தான். இவன் அதிபராக்கிரமசாலியான அரக்கன். இவன் பிராமணர்கள் தேவர்கள் முனிவர்கள் ஆகிய எல்லோரையும் மிகவும் வருத்துகிறான். மதுவைக் கொன்று மதுசூதனரென்னுந் திருப்பெயர் பெற்ற பிரபுவே! எங்களையும் பீடிக்கிறான். தாங்களே எங்களைக் காத்தருளவேண்டும்" என்றார்கள். இதைக் கேட்டதும் ராமசந்திர பிரபு அவர்கள்மீது இரக்கங்கொண்டு "முனிவர்களே! நீங்கள் சிறிதும் இனி அஞ்சவேண்டாம், நான் அவ்வசுரனைக் கொன்று உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்று கூறி உடனே அருகே இருந்த சத்ருக்னனையழைத்து, "ஏ சத்ருக்ன! உன்னை மதுரா பட்டினத்திற்கு அதிபதியாக்கக் கருதி இன்று உனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்போகிறேன்" என்றார். இதைச் செவியிற் கொண்டதும் சத்ருக்னன் "பிரபுவே! தாங்கள் என்னை எப்பொழுதும் தங்கள் ஸந்நிதியிலேயே வைத்துக்கொண் டிருக்கவேண்டும். என்னைத் தங்களை விட்டுப்

பிரித்துத் தூரதேசத்திற்கு அனுப்புவதுகூடாது. எனக்கு ராஜ்யம் வேண்டாம்" என்று மிகவும் வேண்டிக்கொண்டான். பிறகு ராமர் பரதனை யழைத்து, இவ்வாறே கூறி உன் விருப்பம் யாது என விசாரித்தனர். பரதன் மறுக்க, பிறகு ராமர் சுபாகுவையும் யூபகேதுவையும் வரவழைத்து அவர்களுக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து பிராமணர்களோடும் முனிவர்களோடும் அவர்களுக்கு அபிஷேகஞ் செய்வித்தார். பிறகு சத்ருக்னனுக்குத் தமது பெயர் வரைந்துள்ள ஒரு பாணத்தைக் கொடுத்து "ஏ சத்ருக்ன! லவணாசுரன், தான் மகாதேவனிடம் பெற்ற சூலாயுதத்தை வீட்டில் வைத்துப் பூஜித்துவிட்டு வேட்டையாடக் காட்டிற்குச் சென்று பிறகு வீட்டிற்குத் திரும்பிவருவான். இச்சமயம் பார்த்து அவன் வீட்டு வாயிலண்டை நின்றுகொண்டிருந்து அவனை இந்தப் பாணத்தால் கொல்லவேண்டும். குரூரனான அந்த லவணாசுரனைக் கொன்றுவிட்டு அவ்வனத்தின்கண் யமுனாநதிக் கரையில் மதுரை என்னும் ஒரு நகரம் ஏற்படுத்தி, அதில் சுபாகுவை வசிக்கும்படிசெய். விதிசாநகரத்தில் யூபகேதுவை இருந்து வரும்படி செய். இவ்வாறு அதிவிரைவில் செய்துமுடித்து, பிறகு என்னிடம் வந்துசேர். உன்னோடு இரண்டாயிரம் குதிரைகளையும் இரண்டாயிரத்தைந்நூறு ரதங்களையும் அறுநூறு யானைகளையும் முப்பதாயிரம் காலாட்களையும் கொண்டுபோ; நீவந்ததும் நான் ராஜாக்களனைவரையும் ஜயிக்க யாத்திரை போகவேண்டும்' என்று கூறிச் சத்ருக்னனை வாழ்த்திப் பிராமணர்களுடைய ஆசீர்வாதத்தையும் செய்வித்து அனுப்பினர். சத்ருக்னர் ராமபிரானது ஆக்ஞையைச் சிரமேல் வகித்து மனமகிழ்ச்சியுடன் அவரை வலம் வந்து நமஸ்கரித்து, சேனாஸமுத்திரங்களுடன் வனத்திற்குச் சென்றார்.

ராமபிரான் இவ்விதம் சத்ருக்னரை அனுப்பிவிட்டுப் பிறகு யூபகேது, சுபாகு இவ்விருவரையும் அவரவர் குழந்தைகள் மனைவிகள், தாய்மார்கள், சைந்நியங்கள் இவர்களோடு அனுப்பினர். சத்ருக்னர் ராமபிரானது ஆணைப்படியே லவணாசுரனைக் கொன்று யமுனாநதிக் கரையில் மதுராபட்டினத்தை ஏற்படுத்தி அதில் சுபாகுவையும் விதிசா நகரத்தில் யூபகேதுவையும் இருந்து

வரும்படி செய்தார். பிறகு அங்குச் சிலநாள் இருந்து விட்டு ராமரிடம் வந்து யாவையும் தெரிவித்துப் பணிந்து நின்றார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் கைகேயியின் புத்திரனாகிய பரதனை அவர் மாமன் யுதாஜித்துத் தமது தேசத்துக்கு அழைத்தார். பரதர் ராமபிரானது உத்தரவு பெற்று, அத்தேசத்துக்குச் சென்று, இரண்டு மூன்று கோடி கந்தர்வநாயகரைக் கொன்று, புஷ்கராவதி யென்னும் பட்டினத்திலிருந்து புஷ்கரன் பரிபாலித்துவரச் செய்துவிட்டு ராமரிடம் வந்து சேவை செய்தார். ராமபிரான் மனமகிழ்ந்து பரதனை வாழ்த்தினர். பிறகு லக்ஷ்மணரை யழைத்து "லக்ஷ்மணா நீ மேற்குத்திக்குக்குச்சென்று அங்குள்ள துஷ்ட அரசர்களைக்கொன்று அத்திக்கில் இரண்டு பட்டினங்களை யுண்டாக்கி, அவ்விரண்டு பட்டினத்தையும் சித்ரகேது அங்கதன் இவர்களுக் குரிமையாக்கு. அவர்களுக்கு ஆயிரக்கணக்கான சேனைகள் அளவற்ற ரத்னம் தனம் இவைகளையும் கொடுத்து அங்கேயே வசித்து வரும்படி செய்' எனக் கட்டளையிட்டார். அவர் ராமபிரானது ஆக்ஞையைச் சிர மேற்கொண்டு அவ்விதமே செய்துமுடித்து கஜாச்வம் என்னுமிடத்தில் அங்கதனையும் தனரத்னம் என்னுமிடத்தில் சித்ரகேதுவையும் இருந்தாசாட்சிசெய்ய உத்தரவிட்டார்.

பிறகு லக்ஷ்மணர் ராமரிடம் திரும்பிவந்து ராமனையே சேவித்துக்கொண் டிருந்தார். இதன் பின் ராமர் சோதிடர்களை அழைத்து அவர்களைப் பூஜித்து பூமியை ஜெயிப்பதற்குப் புறப்பட ஒரு நல்ல முகூர்த்தம் பார்க்கச்சொன்னார். உடனே அவர்கள் நல்ல முகூர்த்தம் பார்த்துச்சொல்லக் கேட்டு மகிழ்ந்து மறுபடியும் அவர்களைப் பூஜித்து அனுப்பிவிட்டார். அப்போது ராமர் லக்ஷ்மணரிடம் "நான் பூமியிலுள்ள அரசர்களை ஜெயிப்பதன்பொருட்டுப் புறப்படப்போகிற படியால், சீக்கிரம் சேனையைத் தயார்செய்யவேண்டும். விமானத்தில் அநேகம் சஸ்திரங்களையும் அஸ்திரங்களையும் சிலாக்யமான குண்டுகளையும் வேண்டிய தன தான்யங்களையும் வைக்கவேண்டும். பட்டினத்தைக் காப்பாற்ற சுமந்திரர் ஸைந்யத்தோடு தயாராயிருக்கட்டும்" என்று உத்தரவு செய்துவிட்டு ஸீதையின் அந்தப்புரம் சென்றார். லக்ஷ்மணரும் ராமர் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் செவ்வனே செய்து முடித்தார்.

6 - வது சருக்கம்
முற்றிற்று.

7-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! இதன்பிறகு ராமபிரான் தாம் தமது பிள்ளைகளோடும் அரசர்களோடும் பந்துக்களோடும் சென்று உலகத்திலுள்ள அரசர்களை ஜயிக்க நிச்சயித்திருப்பதாக ஸீதையிடம் தெரிவித்தார். இதைக்கேட்டதும் ஸீதாதேவி, "பிரபுவே! நான் தங்களை விட்டுப் பிரிந்திருக்கச் சகியேன். ஆகையால், என்னையும் தங்களோடு அழைத்துப்போக வேண்டும்; இதுதான் உசிதமெனத் தோற்றுகிறது" என்று பிரார்த்தித்தனள். ராமரும் இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்து "ஸீதே! நல்லது அவ்விதமே செய்வோம்" என்று ஸீதைக்கு மறுமொழிதந்தார். ராமர் இவ்விதம் ஜைத்ர யாத்திரை போக நிச்சயித்திருப்பதைக் கேள்விப்பட்ட, ஊர்மிளை முதலானவர்களும் குசன்முதலானவர்களுடைய மனைவிமார்களும் ஸீதையிடம் சென்று, "அம்மா! தங்களோடு நாங்களும் வருகிறோம்; எங்களையும் அழைத்துச் செல்லவேண்டு" மெனப் பிரார்த்தித்தார்கள். இதைக்கேட்டதும் ஸீதைதன்பதியிடம் தெரிவித்து, அவருடைய அனுமதிபெற்று, "நீங்களெல்லாரும் புறப்படவேண்டியது தான்; ஆகையால் நீங்கள் பயணத்துக்குச் சித்தமாயிருங்கள்" என்று கூறியனுப்பினாள். அவர்கள் யாவரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் தத்தம் கிருகத்திற்குச் சென்று பிரயாணத்துக்கு வேண்டியவைகளைத் தயார்செய்து கொண்டிருந்தார்கள். ராமபிரான் அன்றிரவு ஸீதாதேவியின் அரண்மனையிலேயே யிருந்து விட்டார்.

மறுநாள் அதிகாலையில், வந்திமாகதர்களின் ஸ்தோத்திரங்களைக் கேட்டு, பிராம்ம முகூர்த்தத்திலெழுந்து, காலைக்கடனை முடித்துக் கொண்டு பரமேசுவரனை பக்தியோடு ஆராதித்து அநேகதானங்களை யளித்தார். பிறகு யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, கணபதியை ஆராதித்து, மங்கள சிராத்தம், கிருதசிராத்தம் முதலானவைகளைச் செய்துமுடித்துக் காமதேனு, கற்பகவிருக்ஷம்,பாரிஜாதம் முதலியவற்றை நன்றாய்ப்

பூஜித்தார். இதன்பிறகு திவ்ய போஜனம் செய்து நல்ல வஸ்திரங்களை யுடுத்து ஆயுதங்களைத்தரித்துக் கொண்டார். தமது பந்துக்கள், புத்திரர்கள், அரசர்கள், மந்திரிகள், சேனைகள், சேவகர்கள் இவர்கள் சூழப் பல்லக்கிலேறிக்கொண்டு புஷ்பகவிமானத்திற்குச் சென்றார். அங்குச் சென்றதும் ஸ்திரீகள், குழந்தைகள் மந்திரிமார்கள் முதலியவர்களைப் புஷ்பகவிமானத்திலேறிக்கொள்ளும்படி செய்து பிறகு தாமும் ஏறிக்கொண்டார். அப்பொழுது வாத்தியங்கள் முழங்கின. வந்திமாகதர்கள் ஸ்தோத்ரம் செய்தார்கள். பாடகர்கள் பாடினார்கள். மற்றவர்கள் ஜயகோஷம் செய்தார்கள்., ஏ சிஷ்ய! அந்தவிமானமானது அப்பொழுது, எப்படியிருந்ததெனில், நான்யாத்திரா காண்டத்தில் வர்ணித்தது போலவே விளங்கியது.

பிறகு ராமபிரான் விமானத்தை நோக்கி, கிழக்குமுகமாகச் செல்லும்படி ஆக்ஞாபித்தார். விமானமும் அப்படியே சென்றது. சுமந்திரர் ராமரை வணங்கி, அனுப்பிவிட்டு அயோத்தியிலேயே சுகமாக இருந்தார். கிழக்குத்திக்கிலுள்ள அரசர்கள் ராமரது வரவைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து அவரது தரிசனத்திற்குரிய சாமான்களை யெடுத்துக்கொண்டு எதிர்கொண்டு சென்று அவரைப்பூஜித்து, தங்கள் தங்கள் பட்டினத்துக்கு அழைத்துச்சென்று அவரிடம் தங்கள் பொக்கிஷம் முதலிய யாவற்றையும் ஒப்புவித்து வணங்கி நின்றார்கள். ராமர் அவைகளைப் பார்த்து மகிழ்ந்து மீண்டும் அவர்களிடமே கொடுத்துவிட்டு, அவ்விடமிருந்து புறப்பட்டு மகததேசத்தைத் தாண்டிச் சென்று அநேக தேசங்களைப் பார்த்துக்கொண்டு காந்திபுரியை யடைந்தார். அங்குள்ள கம்புகண்டன் ராமரை மிகவும் வணக்கமாய்ப் பூஜித்து, உபசரித்தான். பிறகு ராமர் அவ்விடமிருந்து புறப்பட்டுஆரவாரமென்னும் மகாதேசத்தையும் சோழமண்டலத்தையுந்தாண்டி, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் இவைகளுக்குச் சென்றார். அங்கு விஜயபுரவாசியான விஜயனால் நன்குபசரிக்கப்பட்டுக் கொங்கணதேசத்திலுள்ள அரசர்களை ஜயித்து, மகாராஷ்டிரதேசம் சென்று தேவகிரியென்று பெயருள்ள கோட்டையையும் இன்னும் அநேககோட்டைகளையும் தம்வச

மாகச்செய்துகொண்டு பிறகு விராடதேசம் சென்று விந்தியபர்வதத்திற்குச் சமீபத்திலுள்ள தேசங்களைப் பார்த்துக்கொண்டே சரயூநதிக்கரையின் ஓரமாகச்சென்று ஓங்காரரூபியான ஈச்வரனைத் தரிசனம்செய்து வணங்கிவிட்டு மாளவதேசம் சென்றார். அங்குள்ள அரசர்களையும் ஜயித்துவிட்டு உஜ்ஜயினி பட்டினம் சென்று அத்தேசமன்னனாகிய உத்ரபாகுவை ஜயித்து, அஸ்தினாபுரம் சென்றார். அப்பொழுது சந்திரவம்சத்தைச் சார்ந்த மூன்று அரசர்கள் சிறிது சைன்னியங்களோடு சண்டைசெய்யவந்தார்கள். அவர்களோடு ராமர் மூன்று நாள் கோரமான யுத்தம் புரிந்தார். அப்போது சர்வபாவங்களையும் நாசஞ்செய்கிற கங்கை இரத்தத்தால் நிறைந்திருந்தது. நான்காவது நாள் ராமர் அவர்களை ஜயித்து அந்தப் பட்டினத்திற்குச் சென்று அங்கே வானர வைத்தியனை சுஷேணனை ஸேனையோடு ராஜனாக ஏற்படுத்தி, அம் மூன்று பேர்களையும் சிறைச்சாலையிலடைத்து சுக்ரீவன் முதலானவர்களோடு மதுரா நகரத்தைப் பார்க்கச்சென்றார். அந்த ராஜ்யத்திலுள்ள ஸுபாகுவைப் பார்துவிட்டு, அங்கிருந்து விதிசாநகரம் சென்று அங்குள்ள யூபகேதுவைப் பார்த்து, அவனுடைய வந்தனவழிபாடுகளை ஏற்றுக்கொண்டார். பிறகு குருக்ஷேத்திரம் புஷ்கரம் இவைகளைப் பார்த்துக்கொண்டு,மருதேசத்தைத் தாண்டி கூர்ஜர தேசம் ப்ரபாஸம் இவைகளுக்குச் சென்றார். பிறகு அங்கிருந்து மல்லதேசம் போய் அங்கே கஜாச்வநகரத்தில் அங்கதனைப்பார்த்துப் பிறகு தனரத்னத்திலுள்ள சித்ரகேதுவையும் பார்த்துவிட்டு, பிறகு ஆநந்ததேசம் போய்ச்சேர்ந்து அங்குள்ளவர்களால் பூஜிக்கப்பட்டு, பிறகு புஷ்கராவதிக்குச் சென்றார். அங்கு அரசனாக இருந்துவரும் புஷ்கரனைப் பார்த்துவிட்டு, அப்புறம் தக்ஷசிலைசென்று, அங்குள்ள தக்ஷனைப்பார்த்துவிட்டு உடனே அங்கிருந்து பரதனது மாமனை யுதாஜித்தைப் பார்க்கப்போய் அங்கே அவனால் பூஜிக்கப்பட்டு ஆகாயமார்க்கமாய்ச் சகதேசம் சென்றார். அங்குள்ள யவனதேசத் தரசர்களையெல்லாம் ஜெயித்துப் பிறகு அங்கதேசங்களைப் பார்த்துக்கொண்டு, தாம்ரதேசம்சென்று அங்கிருந்து மாயாபுரிக்குப்போனார். பிறகு கலாபக்

கூடத்திற்குச் சென்று அங்கே நரநாராயணமூர்த்திகளையும் நாரதரையும் வந்தனஞ்செய்து மகிழ்ந்தார். பிறகு அங்குள்ளவர்களால் பூஜிக்கப்பட்டுப் பாரததேசம் போய், அவ்வரசனை யுத்தத்தில் முறியடித்து அந்தஸ்தானத்தில் தம்மோடு வந்த பரதனை ராஜனாக ஏற்படுத்தி மிகவும் அழகிய தேசமாகிய புண்ய தேசத்தையடைந்து, அதற்கு எதிரில் 2000 யோஜனை அகல முள்ளதும் 73000 யோஜனை நீளமுள்ளதும் மிகவும் அழகியதுமான ஹிமாசலத்தைப்பார்த்து அங்கே சென்று எல்லாரோடும் அநேகவித ஆச்சரியங்களைக்கண்டு ஸீதைக்குக் காண்பித்து மிகவும் ஸந்தோஷத்தையடைந்தார்.

7-வது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

பிறகு ராமர், 9000 யோஜனை விஸ்தாரமுள்ளதும் அநாதியாய் ராமமூர்த்தியையும் அநுமாரையும் ஸ்தாபிக்கப்பெற்று விளங்குவதுமாகிய கிம்புருவென்னும் பெயர்கொண்ட வர்ஷத்திற்குச்சென்றார். அங்குள்ள அரசன் ராமரை வெகு மரியாதையுடனும் அநேக வாத்திய கோஷங்களோடும் எதிர்கொண்டழைத்து உபசரித்தான். புஷ்பகவிமானத்திலிருந்துகொண்டே அப்பட்டினமெங்கும் சஞ்சரித்தார். அப்புறம் மிகவும் அழகியதும் 2000 யோஜனை அகலமுள்ளதும் 8100 யோஜனை நீளமுள்ளதும் அநேக தாது நிறைந்ததும் உயர்ந்த சிகரங்களால் பிரகாசிப்பதுமான ஹேமகூடமென்னும் பர்வதத்தை யடைந்தார். பிறகு அநேக யோஜனை தூரம் அளவுள்ளதும் நரஸிம்ஹ மூர்த்தியை உபாஸித்துக்கொண்டிருக்கிற ப்ரஹ்லாதர் மூர்த்தீகரித்திருக்கப் பெற்றதும் மிகவும் அழகியதும் மூன்றாவதுமான ஹரிவர்ஷமென்னும் வர்ஷத்தைத் தசரத குமாரர் அடைந்தார். அந்தவர்ஷத்தில் வசிக்கும்அரசக்கூட்டத்தோடு பெரும்போர் புரிந்து, அதில் ஜயத்தை யடைந்துசத்துரு ஸ்திரீகள் ஆலத்தி சுற்ற சத்துருக்களின் பொக்கிஷங்களை யெடுத்துக்கொண்டும் ஸீதைக்குப்பல விநோதங்களைக் காட்டிக்கொண்டும் கொடி தோரணம் மணி சதங்கைகள் இவைகளுடன் அழகிய விமானத்தின்மீதேறிக்கொண்டே நாலாபக்கங்களிலும் சென்றார். பிறகு 2000 யோஜனை அகலமுள்ளதும் 90000 யோஜனை நீளமுள்ளதும் அழகியதுமான நிஷதமென்னும் பர்வதத்தைப் பார்த்தார். பின்னர், மேருபர்வதத்திற்கு நான்குபக்கங்களிலும் நான்குதிக்குகளிலும் சமானமாயும் 34000 யோஜனை பரிமாணமுள்ளதாயும் இருக்கிற இளாவிருதமென்னும் நான்காவது வர்ஷத்திற்கு மேற்கில் மேருவுக்கு ஆச்ரயமான ஸுபார்ச்வ பர்வதத்தில் விளங்குவதும் மிகவும் உயர்ந்ததும் விஸ்தாரமானதும் புஷ்பங்களால் அழகியதுமான ஒரு கதம்ப (அடம்பை) மரத்தை ராமர் பார்த்தார். அப்பால் மேருவுக்கு அடுத்த வடக்கே அதற்கு ஆச்ரயமான குமுதமென்னும் பர்வதத்தில் விளங்

குவதும் மிகவும் உயர்ந்ததும் அதிகமாய்ப் பெருத்துப் படர்ந்ததுமான ஓர் ஆலமரத்தைக்கண்டு மகிழ்ந்து ஸீதைக்கும் காட்டினார். ரகுவம்சத்திற்கு அலங்காரமாயும் ஜானகியின் பிராணநாயகராயுமுள்ள அந்த ராமர் மேருபர்வதத்தை ஆச்ரயித்துக்கொண்டிருக்கிற நந்தபர்வதத்தில் விளங்குகிறதும் மிகவும் உயர்ந்து படர்ந்து விசாலமாயிருப்பதும் குடம்போன்ற பழங்களின் பாரத்தால் விளங்குவதுமான ஓர் ஒட்டுமாமரத்தைப்பார்த்தார். அந்த இளாவிருதகண்டத்தில் ஸங்கர்ஷணரை உபாஸித்துக்கொண்டிருக்கிற ருத்ரமூர்த்தியைக்கண்டு இராமர் பத்னியோடு நமஸ்காரம் செய்தார். அந்த வர்ஷத்தில் வசிக்கிற அரசர்கள் கைகூப்பிக்கொண்டு சிரங்குனிந்து ராமனை வணங்கினார்கள். பிறகு அங்கிருந்து கிழக்குமுகமாய்ச்சென்றார். பிறகு 2000 யோஜனை அகலமுள்ளதும் 34000 யோஜனை நீளமுள்ளதுமான கந்தமாதன பர்வதத்தைப் பார்த்தார். பிறகு 31000 யோஜனை நீளமுள்ளதும் ஹயக்ரீவ மூர்த்தியை உபாஸிக்கிற பத்ராச்வனால் அலங்கரிக்கப்பட்டதுமான பாத்ராச்வமென்னும் ஐந்தாவது வர்ஷத்திற்குச் சென்றார். அங்கே சிலவிடங்களில் சில அரசர்களோடு சண்டைசெய்து அவர்களை ஜெயித்துக்கொண்டும் சில இடங்களில் சரணமென்றடைந்து கைகூப்பிக்கொண்டு வணங்கும் அரசர்களிடமிருந்து கப்பம் வாங்கிக்கொண்டும் மேற்குமுகமாய்ச் சென்றார். பிறகு மேருவுக்கு மேற்குத்திக்கிலுள்ள 2000 யோஜனை அகலமுள்ளதும் 34000 யோஜனை நீளமுள்ளதும் அதிரமணீயமானதுமான மால்யவானென்னும் பர்வதத்தைப் பார்த்தார். அதற்குமேற்கே 31000 யோஜனை நீளமுள்ளதும் வாமதேவரையுபாஸித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மீயால் விளங்குவதுமான கேதுமாலமென்னும் ஆறாவது வர்ஷத்திற்குச் சென்றார். அந்த வர்ஷத்திலுள்ள அரசர்கள் தமது சிரங்குனிந்து வணங்கி மகுடங்களால் ராமபிரானது பாதகமலங்களைச் சிங்காரித்தார்கள். அங்கு ராமரும் ஸீதையும் அதிகஸந்தோஷத்தை யடைந்தார்கள். பிறகு மேருவுக்கு வடக்கே 2000 யோஜனை விஸ்தாரமுள்ளதாயும் 9000 யோஜனை நீளமுள்ளதாயும் இருக்கிற நீலபர்வதத்தைப் பார்த்து ராமஸந்தோஷித்தார். பின்னர், 9000 யோஜனை பரி

மாணமுள்ளதாயும் மத்ஸமூர்த்தியை உபாஸித்துக் கொண்டிருக்கிற மநுவினால் அலங்கரிக்கப்பட்டதாயும் இருக்கிற ரம்யகமென்னும் ஏழாவது வர்ஷத்திற்குச் சென்றார். அங்குள்ள அரசரால் நன்றாய் மரியாதை செய்யப்பட்டு அதற்கப்பால் சென்றார். அதற்கு வடக்கே 2000 யோஜனை விஸ்தாரமுள்ளதும் மிகவும் அழகுள்ளதுமான சுவேதபர்வதத்தைப் பார்த்தார். பிறகு 9000 யோஜனை பரிமாணமுள்ளதும் கூர்மமூர்த்தியை உபாஸித்துக் கொண்டிருப்பதும் ஆரியனால் ஆச்ரயிக்கப்பட்டதுமான மிகவும் அழகிய ஹிரண்மயம் என்று பெயருள்ள எட்டாவது வர்ஷத்திற்குச் சென்றார். அவ்வர்ஷத்தில் வசிக்கும் ராஜஸ்திரீகளெல்லோரும் ஸீதையை எதிர்கொண்டழைத்து நன்றாய்ப் பூஜித்து அவளை வணங்கினார்கள். இப்போது எல்லோருடையவணக்கத்தையும்பெற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸீதையை ராமர்பார்த்து மிகவும் ஸந்தோஷித்தார். பிறகு 9000 யோஜனை பரிமாணமுள்ளதும் வராஹமூர்த்தியை உபாசித்துக்கொண்டிருப்பதும் பூதேவதையால் மிகவும் அழகியதுமான உத்தரகுருவர்ஷமென்னும் ஒன்பதாவது வர்ஷத்தை இராமர் அடைந்தார். அவ்வர்ஷத்திலுள்ள அரசர் இவரோடு போர்புரிய வந்து பராஜயமடைந்து, இவரை வணங்கி நிற்கும்போது, இவர் மிகவும மடைந்தார். பிறகு ராமர் ஜம்பூத்வீபத்தின் பதியும் உத்தரகுருவர்ஷத்தி லிருப்பவனுமான ஸுபாஹு என்பவனை யுத்தத்திற்கொன்று "அயோத்திக்குச் சென்று உவனை ஜம்பூத்வீபத்தின் பதியாக்குகிறேன்" என்று அங்குள்ளார் முன்னிலையில் நிச்சயித்துக் கொஞ்ச நாள் அந்த அதிகாரத்தில் விஜயனென்னும் தமது மந்திரியை ஏற்படுத்தி வைத்திருந்தார். இந்த ஜம்பூத்வீபத்திற்குள்ளடங்கிய வர்ஷங்களுக்கும் அவ்வாறே மற்ற த்வீபங்களுக்குள்ளடங்கிய வர்ஷங்களுக்கும் ஏற்பட்ட பெயர்களை பிரியவிருதனென்னும் அரசனது பேரர்களுடைய பெயர்களாக விளங்கின. அவைகளில் ஏற்படும் அரசரெல்லோரும் அந்தந்த வர்ஷத்தின் பெயருள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். ஆகையால் எல்லாவற்றிற்கும் தனித்தனிப் பெயர்களை நான் சொல்லவில்லை. இவ்விதம் ஜம்பூத்வீபமென்பது

நீளம் அகலம் இவைகளில் லக்ஷம் யோசனை பரிமாண முள்ளதாயும் மிகவும் அழகியதாயும் ஒன்பது வர்ஷங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் இருக்கிறது. அதை ஸ்ரீராமர் வசப் படுத்திக்கொண்டார். மேருபர்வதத்தின் உச்சியில் எட்டுத்திக் குப் பாலகர்களுக்கும் எட்டுப் பட்டினங்களிருக்கின்றன. அந்தப் பாலகர்கள், இந்திரன் அக்நி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்களே. இவர்களெல்லாரும் "எனது ஆக்ஞையைப் பாலனஞ்செய்வார்களாக" என்று ராமர் அவர்களைக் குறித்துச் சொன்னார். அந்த எட்டுப் பட்டினங்களும் தனித்த னியாய் நீளம் அகலம் இவைகளால் 2500 யோஜனை பரிமாண முள்ளவைகளென் றறிந்துகொள்க.

மேருபர்வதம் லக்ஷம் யோஜனை உயரமுள்ளது. மேலே முப்பத்திரண்டாயிரம் யோஜனை விஸ்தாரமுள்ளது. பதினாறாயிரம் யோஜனை பூமியின் கீழ்சென்றுள்ளது. எண்பத்து நான்காயிரம் யோஜனை பூமிக்கு மேலிருப்பது. ஹேமத்தம் பூப்போலக் காணப் படுவது. அந்த மேருபர்வதத்தின் உச்சியில் எட்டுத்திக்குப் பாலகர்களின் பட்டினங்களுண்டு. அவைகளுக்குள் பிரமபுரி என்பது அகலம் நீளம் இவ்விரண்டிலும் பத்தாயிரம் யோஜனை யுள்ளதென்றுதெரிகின்றது. வர்ஷத்திற் கெல்லையாகிய அஷ்டகுல பர்வதங்களும் பத்தாயிரம் யோஜனை உயரமுள்ளவைகளையாம். வர்ஷமும் பர்வதமும் போல நீளமுள்ளது. சிலர் ஜம்பூத்வீபத் தில் எட்டு உபத்வீபங்களுண்டு என்கிறார்கள். அவைகள் குதிரை யைத் தேடிக்கொண்டு பூமியின்கீழ்ச் சென்ற ஸகரகுமாரர்களால் கண்டுபிடிக்கப்பட்டவையாம். அவை, ஸ்வர்ணப்ரஸ்தம், சந் திரசுக்லம், ஆவர்த்தனம, ரமணகம், மந்தஹரிணம், பாஞ்சஜன் யயம், ஸம்ஹலம், லங்கை என்பவையாம். அவைகளில் லங்கை யைத் தவிர மற்றத்தீவுகளுக்குச் சென்று அவ்வதிபதிகளை ராமர் தமக்கு வசப்படுத்திக் கொண்டார். பாரத வர்ஷம் இளாவ்ருத வர்ஷம் இவைகளைத் தவிர மற்ற ஏழுவர்ஷங்களிலும் கணக்கற்ற மலைகளும் ஆறுகளு மிருக்கின்றன. இவைகளை விஸ்தாரமாய்ச் சொல்ல யாரால் முடியும்? ஆனால் இளாவிருதத்திலுள்ள முக்கிய மான நதிகளை இங்குக் கூறுகின்றேன்.

அருணோதை, ஜம்புநதி, பயோததி, க்ருதமது, குடான்னா, அம்பரசய்யா. ஆஸநா, ஆபரணஸம்க்ஞா இவைகள் நதங்கள். அவ்வாறே பஞ்சமது, தாரை, ஸீதை. அலகநந்தை, சக்ஷுர்பத்திரை என்னும் நான்குநதிகளும் மேருவுக்குக்கீழே நான்கு திக்குகளிலும் விழுகின்றன. இவைகள் கங்கையின் பேதங்களாம் இவைகளில் ஸீதை என்பது கிழக்கு ஸமுத்திரத்திலும், சக்ஷுஸ் என்பது மேற்கு ஸமுத்திரத்திலும், பத்திரை என்பது வட ஸமுத்திரத்திலும், அலகநந்தை என்பது தெற்குத்திக்கில் பாரதவர்ஷத்திலும் ஸமுத்திரத்திலும் சங்கமமாகின்றன. இந்தப் பாரதவர்ஷத்தில் அநேகம் மலைகளும் நதிகளுமிருக்கின்றன. அதாவது மலயம், மங்களப்ரஸ்தம், மைநாகம், திரிகூடம், ரிஷபம், குடகம், ஸஹ்யம், தேவகிரி, ரிச்யமூகம், ஸ்ரீசைலம், வேங்கடம், மஹேந்த்ரயம், வாரிதாரம், த்ரோணம், சித்ரகூடம், கோவர்த்தனம், ரைவதகம், சகுபம், நீலம், கோகாமுகம், இந்திரநீலம், காமகிரி இவைகளும் இன்னும் அநேக அளவற்ற மலைகளும் நூற்றுக் கணக்காயும் ஆயிரக் கணக்காயும் இருக்கின்றன. சந்திரவசை, தாம்ரபர்ணீ, அவடோதை, க்ருதமாலை, வைஹாயஸீ, காவேரி, பயஸ்வினீ, சர்க்கராவர்த்தை, துங்கபத்திரை, கிருஷ்ணா, வேணீ, பீமரதி, கோதாவரி, நிர்விந்தியா, பயோஜதி என்னும் நதிகளும், ஆந்திரம், சோணம் என்னும் நதங்களும், மஹாநதி, வேதஸ்மிருதி, ரிஷிகுல்யாதி, ரிஸாமா, கௌசிகி, மந்தாகினி, யமுனா, ஸரஸ்வதீ, திருஷத்வதீ, கோமதீ, ஸரயூ, ரோதஸ்வதி, ஸப்தவதி, ஸுஷோமா, சதத்ரு, சந்திரபாகா, மருதந்வை, விதஸ்தை, அயக்னீ, விஸ்வை என்னும் மஹாநதிகளும் இருக்கின்றன. ஏ சிஷ்ய! இவ்வாறு லோகநாயகரான ரகுநாயகர் உபத்வீபங்களுடன் கூடிய ஜம்பூத்வீபத்தையும் வசப்படுத்திக் கொண்டு, லக்ஷயோசனை விஸ்தாரமுள்ள லவண ஸமுத்திரத்தைப் புஷ்பக விமானத்தின்மேல் இருந்தவாறே ஜம்பூத்வீபத்தின் அகழைக் கடந்ததுபோலக் கடந்து ப்லக்ஷம் என்னும் இரண்டாவது த்வீபத்தைப் பார்த்தார்.

8 - வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீராமர் பிறகு இரண்டு லக்ஷ யோசனை அளவுள்ளதும் ஏழு வர்ஷங்களோடு கூடியதுமான அழகிய ப்லக்ஷத்வீபத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் பிராமணர் முதல் யாவரும் ஸூரியனை உபாஸிக்கக்கூடிய தெய்வமாகக் கொண்டிருந்தார்கள். அங்கே தங்கவர்ணமான ஒரு ப்லக்ஷ விருக்ஷமிருக்கிறது. அதினாலே தான் இந்தத்வீபத்திற்கு இப்பெயர் வந்தது. மேருவுக்குக் கிழக்கில் சிவமென்ற வர்ஷமிருக்கிறது. முதலில் ராமர் ஆகாய மார்க்கமாய் அங்கே சென்றார். அங்கே பாவங்களையெல்லாம் போக்கக் கூடிய அருணையென்றொரு நதியுண்டு. இவர் அதில் ஸ்நானம் செய்து விட்டு விரைவாக அதன் அதிபனிடம் சென்று, அவனை ஜெயித்து விட்டு அவனும் மற்ற அரசர்களும் செய்த உபசாரணையைப் பெற்று ஐந்து மாதம் அங்கேயே வசித்து, பிறகு வஜ்ரகூட மலைக்குச் சென்றார். அம்மலை இரண்டு வர்ஷங்களுக்கும் எல்லை போன்றது. அதைச் சுற்றிக்கொண்டு யவபஸமென்னும் வர்ஷத்திற்குச் சென்றார். அங்குள்ள நிரும்ணா நதியில் ஸ்நானம் செய்து விட்டு, அவ்வரசனைப் பார்க்கச் சென்று அவனாலும் மற்ற அரசர்களாலும் நன்குபசரிக்கப்பட்டு, புஷ்பக விமானத்திலேறிக் கொண்டு, உபேந்திரஸேன பர்வதத்திற்குச் சென்று, அதைச் சுற்றிக்கொண்டு ஸுபத்திரவர்ஷத்திற்குச் சென்றார். அங்கே ஆங்கிரஸி யென்னும் நதியில் ஸ்நானம் செய்து, அவ்வரசனாலும் நன்குபசரிக்கப்பட்டு அங்குள்ள எல்லோரோடும் ஜ்யோதிஷ்மான் என்னும் மலையையடைந்து அதைச் சுற்றிக்கொண்டு சாந்தவர்ஷம் சென்று அங்கே ஸாவித்ரீ நதியில் ஸ்நானம் செய்து, அவ்வதிபனை அரசனை ஜெயித்து இன்னும் அங்கிருந்த மற்றுமுள்ளவர்களையும் தமது வசமாக்கிக்கொண்டு அதிவிரைவில் ஸ்வர்ணபர்வதம் சென்றார். பிறகு அங்கேயிருந்து க்ஷேமவர்ஷம் போய் அங்கே ஸுப்ரபாதா நதியில் ஸ்நானம் செய்து, அவ்வரசனால் நன்கு உபசரிக்கப்பட்டு அங்கிருந்து அழகிய ஹிரண்யஷ்டீவமென்

னும் மலையைக் கடந்து சென்று அங்குள்ள அரசரால் மரியாதை செய்யப்பட்டு, ஸத்யம்பரை என்னும் நதியில் ஸ்நானம் செய்து அங்குள்ள அரசனோடு போர்புரிந்து அவனைத் தமது வசமாக்கிக் கொண்டு அவனோடும் மற்ற அரசர்களோடும் க்ஷணத்திற்குள் மணிகூடமென்னும் மலையைத் தாண்டினார். பிறகு இரண்டு லக்ஷயோஜனை விஸ்தீரணமுள்ள அழகிய இக்ஷுரஸோதமென்னும் பெருங்கடலைக் கடந்து நான்கு லக்ஷயோஜனை அளவுள்ள சால்மலீத்வீபம் சென்றார். அங்கே ஒரு பெரிய சால்மலீ (கொங்கிலவை) விருக்ஷமுண்டு அதனாலே தான் அந்தத்வீபத்திற்கு இப்பெயர் வந்தது அங்கே சந்திரன் தான் உபாஸிக்கக் கூடிய தெய்வம். அங்குள்ள வர்ஷங்களையும் முன்போல மேருபர்வதத்திற்குக் கிழக்கிலிருந்து வரிசையாய்க் கூறுகிறேன் கேட்பாயாக.

ஸுரோசனம், ஸௌமனஸ்யம், ரமணகம், தேவவர்ஷம், பாரிபத்ரம், ஆப்பாயனம், அவிக்ஞாதம் என்ற ஏழுவர்ஷங்களுண்டு. அனுமதி, ஸினீ, வாஸீ, ஸரஸ்வதி, குஹூ, ரஜனீ, நந்தாராகா என்னும் ஏழுநதிகளுண்டு. சதச்ருங்கம், வாமதேவம், குந்தம், முகுதம், புஷ்பவர்ஷம், ஸஹஸ்ரச்ருதி, ஸவாசம் என ஏழுபர்வதங்களுண்டு. இந்த ஏழுவர்ஷங்களிலுமுள்ள பாலகர்களை ராமர் ஜயித்து மிக மகிழ்ச்சியுடன் நான்குலக்ஷம் அளவுள்ள ஸுரோதமென்ற ஸமுத்திரத்தையும் தாண்டி எட்டுலக்ஷம் யோஜனையளவுள்ள குசத்வீபத்திற்குச் சென்றார். அந்த த்வீபத்தில் வசிக்கு மெல்லோருக்கும் அக்கினிதான் உபாசிக்கிற தெய்வம். அங்கே தேவர்களால் செய்யப்பட்ட ஒரு தர்ப்பை ஸ்தம்பமிருக்கிறது. அதனாலேதான் இந்த த்வீபத்திற்கு இப்பெயர் வந்தது. அங்குள்ள ஏழுவர்ஷங்களையும் நான் வரிசையாகச் சொல்லுகிறேன் வஸு, வஸுதானம், தருடருசி, நாபிகுப்தம், ஸத்யவிரதம், விவிக்தம், வாமதேவம் என ஏழுவருஷங்களுண்டு. இவ்வேழு வர்ஷங்களிலும் வரிசையாய் ரஸகுல்யா, மதுகுல்யா, மித்ரவிந்தா, சருதவிந்தா, தேவகர்ப்பா, க்ருதச்புதா, மந்திரமால ஆகிய ஏழுநதிகளுண்டு சதுச்சிருங்கம், கபிலம், சித்ரகூடம், தேவாநீகம், ஊர்த்வரோமா, த்ரவணம், சக்ரம் ஆகிய இவ்வேழும் இவற்றிற்கு எல்லையாயுள்ளமலைகள். ராமர் இவ்வேழுவர்ஷங்

களிலுமுள்ள அரசர்களை யுத்தத்தில் ஜெயித்து மேலான கீர்த்தியையடைந்து பிறகு குசத்வீப அரசனையும் வென்று அங்குள்ள மஹாசைலனென்னும் ஈச்வரனை ஸந்தோஷப்படுத்திப் பிறகு க்ருதோதமென்னும் உத்தமமான சமுத்திரத்தைத் தாண்டி புஷ்பக விமானத்தின் மீதேறிக்கொண்டு க்ரௌஞ்ச த்வீபத்திற்குச்சென்றார். இந்த த்வீபம் குசத்வீபத்தைக் காட்டிலும் இருமடங்கு பெரிது. அங்கேயுள்ள க்ரௌஞ்சமென்னும் மலையால் இதற்கு இப்பெயர் வந்தது. இங்குள்ளவர்களுக்கு ஜலமயமான தெய்வந்தான் உபாசிக்கக்கூடியது. அங்கேயும் ஆமம், மதுருஹம், மேகப்ருஷ்டம், ஸுதாமானம், ப்ராஜிஷ்டம், லோஹிதாரணம், வனஸ்பதி என்று ஏழுவர்ஷங்களிருக்கின்றன. வர்த்தமானம், போஜனம் உபபர்ஹணம், நந்தம், நந்தனச்ரேஷ்டம், ஸர்வதோபத்ரம்,சுக்லமென்ற ஏழுமலைகள் எல்லைகளாயிருக்கின்றன. ஏழுவர்ஷங்களிலும் கிரமமாய், அபயா, அமிர்தௌகா, ஆர்யகா, தீர்த்தவதி, விருத்திரூபவதீ, பவித்ரவதீ, சுக்லா எனச் சிரேஷ்டமான ஏழுநதிகள் இருக்கின்றன. இந்த ஏழுவர்ஷங்களிலுமுள்ள அரசர்களிடமிருந்து கப்பம் வாங்கிக்கொண்டு அவர்களால் பூஜிக்கப்பட்டு அந்தத்வீபத்தின் பதியை யுத்தத்தில் ஜெயித்து, யானை குதிரை பொக்கிஷம் முதலிய கப்பங்களோடு செய்த அவரது உபசாரணையைப்பெற்று மனமகிழ்ந்தார். பிறகு ராமர் அங்கிருந்து க்ஷீரோதமென்னும் கடலைக்கடந்து க்ரௌஞ்ச பர்வதத்திற்குச் சமமாய் முப்பத்திரண்டு லக்ஷம் அளவுள்ள சாகத்வீபம் சென்றார். அங்கே சாகவிருக்ஷமொன் றிருப்பதால், அந்தத்வீபத்திற்கு இப்பெயர் வந்தது இங்கு வசிப்பவர்கள் வாயுரூபியான ஈச்வரனை உபாஸிப்பவர்கள். இங்கேயும் புரோஜவம், மனோஜவம், பவமானம், தூம்ரானீகம், சித்ரரூபம், பஹுரூபம், விச்வாதாரமென்று ஏழுவர்ஷங்களிருக்கின்றன.

இவைகளில் வரிசையாய் அனகா, ஆயுர்தா, உபயஸ்ருஷ்டி, அபராஜிதா, பஞ்சபதீ, ஸஹஸ்ரச்ருதி, நிஜத்ருதி என ஏழு நதிகள் இருக்கின்றன. உருச்ருங்கம்,பலபத்ரம்,சதகேஸரம்,ஸஹஸ்ரஸ்ரோதஸ், தேவபாலம், மஹானஸம், ஈசானம் என ஏழு மலைகளிருக்கின்றன. இவ்விதம் இந்த ஏழுவர்ஷங்களிலும் ஆங்காங்

குள்ள அரசரால் ராமர் பூஜிக்கப்பட்டு சுந்திரனென்று பெயர் கொண்ட அந்த த்வீபாதிபதியை யுத்தத்தில் ஜெயித்து அவனால் பூஜிக்கப்பட்டு, பிறகு முப்பத்திரண்டு லக்ஷம் அளவுள்ள ததிமண்டோதமென்னும் ஸமுத்திரத்தைத் தாண்டி அறுபத்திநான்கு லக்ஷம் அளவுள்ள புஷ்கரத்வீபம் சென்றார். அதற்கு மத்தியில் மேகம்போன்ற மானஸோத்தராசல மென்பதைப் பார்த்தார். இங்கே ரமணகமென்றும் ஹாதகீ என்றும் இரண்டு வர்ஷங்களுண்டு. அவ்விடத்திலுள்ள அரசர்களையும் அந்தத்வீபங்களிலுள்ள அரசர்களையும் ஜெயித்துவிட்டுப் பரமானந்தமடைந்தார். அங்கேயிருந்த புஷ்கர (தாமரை) பென்பதைப் பார்த்தார். அதனாலேதான் இந்த த்வீபத்திற்கு இப்பெயர்வந்தது, இது பிர்ம்மாவுக்கு மேலான ஆசனம். அங்கே கர்மமயமான லிங்கமொன்றுண்டு. அதற்குக் கர்மலிங்கமென்று பெயர். அதையே அங்குள்ளவர்கள் உபாஸிக்கிறார்கள். இவ்விரண்டு வர்ஷங்களிலும் பாபங்களைப் போக்கக்கூடிய வெகு நதிகளிருக்கின்றன. பதினாயிரம் யோஜனை அளவுள்ள மலையுண்டு. அந்த மலையின் கிழ்ப்பாகத்தில் தேவதானீ யென்ற பெயருள்ள அழகான இந்திரனுடைய நகரமிருக்கிறது. அந்த மலையின் தெற்குப் பாகத்தில் ஸம்யமினீ என்னும் யமனுடைய ராஜதானி இருக்கிறது. மேல்பாகத்தில் நிம்லோசனீ என்னும் வருணனுடைய ராஜதானி இருக்கிறது. வடபாகத்தில் விபாவரீ என்னும் குபேரனுடைய ராஜதானி இருக்கிறது இவை மேருபர்வதத்திலுள்ளவைகளைக் காட்டிலும் வேறானவையாம். ஒரு அரசனுக்கு அநேகம் இடம் இருப்பதுபோல, இவைகள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா எல்லைப்பர்வதங்களும் தனித்தனியே இரண்டாயிரம் யோஜனை விஸ்தாரமுள்ளவைகளாகும். பிறகு ராமர் சுத்தோதகமென்னும் கடலைக்கடந்து புஷ்கரத்வீபத்திற்குச் சமானமான பூமியை ஸீதைக்குக் காட்டித் தாமும் ஸந்தோஷப்படுவதற்காக அங்கே சென்றார். அங்கே அதற்கு எதிரில் 15750000 யோசனை அகலமுள்ள ஓரிடத்தைக்கண்டார். அந்த சிற்சில இடங்களில் பிராணிகள் வசிப்பதையும் பார்த்தார். ராமர் அங்கேவசிப்பவர்களுடைய பூஜையைப்பெற்று ஸீதையைத் திருப்தி செய்விப்பதற்காக, இன்னும் மேலேசென்றார். மேருபர்வதம் மானஸோத்

தராசலம் இவ்விரண்டிக்கும் மத்தியிலுள்ள பூமியின் அளவு 1574000 யோஜனையாம். அப்புறம் கண்ணுடிக்குச் சமமாயும் தங்கமயமானதாயும் தேவர்கள் வசிப்பதாயும் 839000 யோஜனை அளவுள்ளதாயும் இருக்கும் பூமியைப்பார்த்து ஸந்தோஷமடைந்தார். அதற்குப்பிறகு 125000000 யோஜனை விஸ்தீரணமுள்ளதாயும் மிகவும் உயரமாயிருப்பதால் பூமிக்குப் பிராகாரம்போன்று ஒருவராலும் தாண்டமுடியாததாயும் இருக்கிற லோகாசலத்தைப் பார்த்தார். அதன் எட்டுத்திக்குகளிலும் கஜச்ரேஷ்டமான ரிஷபம், புண்டரீகம், புஷ்கரசூடம், குமுதம், வாமனம், புஷ்பதந்தம், அபராஜிதம், ஸார்வபௌமம் என்னும் திக்கஜங்களிருக்கின்றன. அவைகளாலேயே இவ்வுலகம் நிலைநிற்கின்றது. அந்த சிரேஷ்டமான மலையிலேயே எல்லா ஐச்வரியங்களுக்கும் பதியான மஹாபுருஷரான ஸ்ரீமத் ஸர்வேச்வரர் உலகங்களை யெல்லாம் காப்பாற்றுவதற்காக வாசஞ் செய்கிறார். அதற்குமேலே பரிசுத்தமான யோகேச்வரகதி யிருக்கிறதென்று கூறுகிறார்கள். இவ்விதம் 50 கோடியளவு விஸ்தாரமுள்ள இந்தப் பூமியைத் தம்வசமாக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சுற்றிக்கொண்டு முன்போலத்வீபங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே ஜம்பூத்வீபத்தில் பாரதவர்ஷத்தின் நடுவிலுள்ள தமது ராஜதானியான அயோத்யா பட்டினத்திற்கு சப்தத்வீப அரசர்களோடுவந்து சேர்ந்து, தமது வரவைத் தூதர்கள் மூலமாய் ஸுமந்திரருக்குத் தெரிவித்தார்.

அவர் ராமர் வந்துவிட்டாரெனக் கேள்விப் பட்டதும் கொடி த்வஜம் தோரணம் இவைகளால் அயோத்தியை அலங்கரிக்கச்செய்து, சிரேஷ்டமான யானைகளுடன் அநேக பட்டினத்து ஜனங்கள் சூழ எதிர்கொண்டுசென்று அவரை வணங்கி வெகு மரியாதையுடன் அயோத்திக்குள் அழைத்துவந்தார். அப்போது மங்களவாத்தியங்கள் கோஷித்தன. அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். வந்திமாகதர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். நடர்கள் நடித்தார்கள். பட்டினத்து ஸ்திரீகளெல்லாரும் நன்றாய் அலங்காரம் செய்துகொண்டு மேன்மாடிகளில் ஏறிப் புஷ்பங்களை இறைத்தார்கள். உடனே இராமர் ஊர்வலம்வந்து விமானத்திலிருந்திறங்கிப் பட்டினத்து ஜனங்களின் காணிக்கைகளை

வாங்கிக்கொண்டு. ஸ்திரீகள் ஹாரத்தி சுற்றத் தமது கிருகத்தின் கண்ணுள்ள சபைக்குச் சென்று தம் ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்புறம் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அரசருக்குத் தகுந்த ஜாகைகள் ஏற்படுத்தும்படி இலக்ஷ்மணருக்கு ஆக்ஞைசெய்தார். பிறகு தநிச்ராத்தம் முதலியவைகளைச்செய்து தம்மைக் கிருத கிருத்யராக நினைத்தார். இன்னும் மற்றுமுள்ள அரசரால் உபசரிக்கப்பட்ட லக்ஷ்மணரின் இஷ்டத்தின் பேரில் பரதரைப் பரத தேசத் ததிபராக்கினர். ஆதியில் இவர்களுக்கு நாமகரணம் பண்ணும்போதே பகவான் வஸிஷ்டர் இவர் பரததேசத்திற்கதிபதியாவாரென்று நினைத்தே பரதனென்று பெயரிட்டாராகையால் அது இப்போது சரியாய் நிறைவேறிற்று. ராமர் தமது பிள்ளையான லவனை ஜம்பூத்வீபத்திற்குப்பதியாகச் செய்தார். அவனும் ஸந்தோஷமாய் அதனை யேற்றுக்கொண்டு விஜய னென்பவனைத் தன் மந்திரியாக்கிக்கொண்டான். மறுபடியும் அடிக்கடி ஒன்பது வர்ஷங்களுக்கும் போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தார். பரதர் தமது யுவராஜ்ய பதத்தில் சத்ருக்னனையும், ராமர் தமது யுவராஜ்ய பதத்தில் குசனையும் அபிஷேகம் செய்து ஏற்படுத்திக் கொண்டனர். இவ்விதம் ராமர் ஏழுதீவுகளுக்கும் பதியானார். அவரவர்கள் தங்கள் தங்கள் காரியங்களில் கவனமுள்ளவர்களாயிருந்து நீதியாய் ராஜ்யபரிபாலனம் செய்து வந்தார்கள். பிறகு ராமர் எல்லா அரசர்களையும் நன்றாய் உபசரித்து அவரவர்பதிக்குச் செல்ல விடைகொடுத்தனுப்பினார். அவர்களும் ராமரை வணங்கி தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். பாரதவர்ஷத்திற் கதிபதியான ஸ்ரீமான்பரதர் அந்தத் தேசத்தை நன்றாய்ச் சீர் திருத்திக்கொண்டு ஆண்டுவந்தார். லவன் ஜம்பூத்வீபத்தை நன்றாய்ச் சீர்திருத்தி ஆண்டுவந்தான். ஸ்ரீராமப்பிரபு லவனோடும் லக்ஷ்மணரோடும் சப்தத்வீபங்களையும் நன்றாய்ச் சீர்திருத்தி மிகவும் அழகாய் ஆண்டுவந்தார்.

9 - வது சருக்கம்

முற்றிற்று.

10 - வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஒரு காலத்தில் ராமர் சபையிலிருக்கும்போது வெளியில் ஒரு நாய் பெருத்த சப்தம் செய்ததைக்கேட்டு, அதைத்தெரிந்து கொண்டுவரும்படி தூதனையனுப்பினார். அவன் உடனே சப்தம் வருமிடத்தை நோக்கிச் சென்று, அங்கொரு நாய் ஊளையிடக் கண்டு அதைத்துரத்திவிட்டு ராமரிடம்வந்து, "நாய் காரணமில்லாமல் குலைத்தது. ஆகையால் நான் அதைத் துரத்திவிட்டேன்" என்று தெரிவித்தான். மறுபடியும் இரண்டாவது நாளும் நாய் குலைத்தது. தூதனும் முன்போல அதைத்துரத்திவிட்டான். மறுபடியும் மூன்றாவது நாள் அப்படியே நாய்குலைத்தது. அதைக்கேட்டுச் சற்றுப்பயந்து லக்ஷ்மணரைக் கூப்பிட்டு "நாய் இம்மாதிரிமூன்று நாளாய்க் குலைப்பதால், அதன் காரணத்தை நீ நன்றாய்த் தெரிந்து கொண்டு வரவேண்டு"மென்று கட்டளையிட்டார். அவர் அவ்விதமே செய்கிறேனென்று சொல்லிப்பிறகு, தூதர்களையழைத்து நாயைச் சபைக்கு அழைத்துக்கொண்டு வரும்படி உத்தரவிட்டார். தூதர்கள் வேகமாய்ச்சென்று நாயைச் சபைக்கு வரவேண்டுமென்றழைத்தார்கள். அப்போது நாய் "பாபயோநியில் பிறந்த நாங்கள் தேவாலயத்திலும், யாகஞ்செய்யுமிடத்திலும், ஹோமம் செய்யுமிடத்திலும், பிருந்தாவனத்திலும், ஸபையிலும், மடத்திலும், அரசன் வீட்டிலும், புலையஸ்தலத்திலும், புண்யதீர்த்தத்திலும், சமையல் செய்யும் இடத்திலும், ஏகாந்த ஸ்தலத்திலும், ஸ்நானம் ஸந்தியாவந்தனம் செய்யுமிடத்திலும், போகக்கூடாது" என்றது. உடனே தூதர்கள் ஆச்சரியப்பட்டு ராமரிடம் அதைத் தெரிவிக்க, அவர் பரபரப்போடு தமது பாதரக்ஷைகளை எடுத்துவரச் சொல்லி, அவைகளைக் காலில் போட்டுக்கொண்டு கையில் ரத்னதண்டம் பிடித்துக்கொண்டு மெள்ளமெள்ள வெளியே சென்று, நாயின் சமீபம் போய்ப் புன்முறுவலுடன், நாயைப் பார்த்து "நீ துக்கிப்பதற்குக் காரணமென்ன? என்னிடம் உண்மையைச் சொல்; என் ராஜ்யத்தில் காரணமில்லாமல் ஒருவருக்கும் துக்கமுண்டாவது கூடாது" என்றார். இதைக்கேட்டு நாய்

அவரை வணங்கி, ஒடிந்த தனது காலை அவருக்குக் காட்டிக்கொண்டு "நான் ஒரு அபராதமும் செய்யாமலிருக்கும்போது ஒரு ஸந்நியாசி என்னைக் கல்லாலடித்து என்காலை ஒடித்துவிட்டான். அதற்காக நான் தங்களைச் சரணமடைந்திருக்கிறேன்" என்றது. உடனே ராமர் அந்த ஸந்யாஸியை வரவழைத்து, அவரை வணங்கி "ஸ்வாமி! நீர் எதற்காகக் காரணமில்லாமல் இந்த நாயை படித்து இதன் காலை ஒடித்துவிட்டீர்" என்று கேட்டார். அப்போது ஸந்யாஸி "நான் பிக்ஷைக்காகத் தெருவில் சென்று வரும்போது அது என் பிக்ஷான்னத்தைத் தொட்டது. அப்போது நான் பசியுள்ளவனாயிருந்தமையால் கோபங்கொண்டு தூரத்தி எண்ணிக் கல்லை யெறிந்தேன், அதனால் இதன் கால் ஒடிந்துவிட்டது. நான் வேண்டுமென்று இதையடிக்கவில்லை" என்றார். அப்போது ராமர் இது விவேகமற்ற பிராணியாகையால், உமது அன்னத்தைத்தொட்டது இதன் குற்றமாகாது. ஆகையால் நீர் இதை அடித்திருக்கக்கூடாது; அப்படி அடித்தது உமது குற்றந்தான்; அதற்குரிய தண்டனையை நீர் அநுபவிக்கவேண்டும்" எனச் சொல்லி நாயினிடம் "உன் விஷயமாய் இந்த ஸந்யாஸி குற்றவாளியாயிருப்பதால், அவரை நான் உன்வசம் ஒப்புவித்திருக்கிறேன். நீ எந்தத் தண்டனை சொன்னாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்றார். அப்போது நாய் "சிவாலயத்தின் அதிகாரவேலையில் இவரை ஏற்படுத்தி விடுங்கள்" என்றது. அப்படியே ஆகட்டுமென்று ராமர் அவரைப் பல்லக்கில் ஏற்றிவைத்து, வஸ்திரம் சந்தனம் புஷ்பம் இவைகளால் நன்றாய்ப்பூஜித்து, அநேக வாத்திய கோஷங்களோடு சிவாலயத்திற்கு அழைத்துக்கொண்டு போய், ஸர்வாதிகார வேலையில் அவரை ஏற்படுத்தினர். அப்போது அந்த ஸந்யாஸி நல்ல அதிர்ஷ்டத்தால், தனக்கு இந்த வேலை கிடைத்ததென்று புத்தியில்லாமல் ஸந்தோஷப்பட்டான்.

பிறகு ராமர் ஜனங்களோடு தமது ஸபைக்கு வந்து சேர்ந்தனர். இந்த ஆச்சரியத்தை எல்லாம் பார்த்த பட்டினத்து ஜனங்கள் ராமரிடம் போய் "பிரபுவே! நாய் ஏன் இவ்வாறு தண்டனைவிதித்தது? அன்னத்திற்கு அலைந்து கொண்டிருந்த ஸந்யாஸிக்கு

நல்ல அதிர்ஷ்டத்தால் இந்த ஸ்தானம் கிடைத்தது. அவர் இனி மேல் மேலான சுகத்தையடையப்போகிறார்” என்று சொல்ல, இராமர் “நாயைக்கேட்டால் இதற்குக் காரணம் அது நன்றாய்ச்சொல்லும்”என்றுசொன்னார். அவர்கள் அவ்வாறேசென்றுநாயைக்கேட்டார்கள். அப்போது நாய் துஷ்டர்களை ஸம்மானம் செய்கிறவர்களும், சிவாலயம் மடம் கிராமம் தானம் இவைகளுக்கு அதிகாரிகளும், அநாதர் பாலர் இவர்களின் திரவியத்தை அபரிக்கிறவர்களும், பசு, பிராம்மணர், சிவன் இவர்களுடைய பணத்தை அபகரிக்கிறவர்களும், அனியாயம் செய்கிறவர்களும், அரசன் வீட்டிவிருந்துகொண்டு, வரும் யாசகர்களைத் தடுப்பவர்களும், பிறர் திரவியத்தை அபகரிக்கிறவர்களும்,பிராமண போஜனத்திற் கேற்பட்ட திரவியத்தை யபகரிப்பவர்களும், மறுஜன்மத்தில் நாயின் யோநியை உண்மையில் அடைவார்கள். நான்மடாதிபதியாயிருந்தமையால் இந்த ஜன்மத்தில் நாயாகப்பிறந்திருக்கிறேன். ஆகையால் நான் அந்த ஸந்நியாஸியைச் சிக்ஷிப்பதற்காக இவ்வுத்தியோகத்தைக்கொடுத்தேன்” என்றது. இவ்வாறு அது கூறக்கேட்ட ஜனங்கள் சந்தேகம் நீங்கித், தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். நாயும் போய்விட்டது. பிறகு அந்த ஸந்யாஸி மறுஜன்மத்தில் தனது பாபத்தால் நாயாய்ப் பிறந்தான். நாயும் முதலில் தனது பாபங்களை யனுபவித்து விட்டுக் கடைசியில் நல்ல ஜன்மத்தை யடைந்தது. அந்த ஸந்யாஸி காரிய வசமாய் வேறிடம் சென்று அங்கே யிறந்தானே யொழிய அயோத்தியில் யிறக்கவில்லை. ஏனென்றால், அயோத்தில் இறந்திருந்தால் அவனுக்கு மோக்ஷமே தவிர வேறு ஜன்மம் ஏற்படாது.

பிறகு ஒரு காலத்தில் அயோத்தியில் வசித்த ஒரு பிராம்மணனுடைய ஐந்து வயதுள்ள குழந்தை மரித்துவிட்டது. அப்போது அந்தப் பிராம்மணர் பத்னியோடு அந்தக்குழந்தையைக் காலை வேளையில் தூக்கிக்கொண்டு வந்து, அரண்மனைவாயிலிற் போட்டு, இரைந்து அழுதார். பிள்ளையிறந்ததால் மிகவும் துக்கத்தோடுகூடிய அந்தப் பிராம்மணர் வெகு கோபத்தோடு “ஏ ராம! நீர் சுகமாய்த் தூங்குகிறீரே; உமது ராஜ்யத்தில் அதர்மம் மிகுந்திருக்கிறது. அதனால் என் குழந்தை அகாரணமாய்

இறந்துவிட்டது. இதைத்தாங்கள் கவனிக்கவேண்டாமா? கவனியாமலிருப்பது தங்களுக்குத் தர்மமா? அரசன் பாபியாயிருந்தால் ஜனங்களுக்கு அற்பாயுள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன், தர்மவானான அரசனுடைய ராஜ்யத்தில் ஒருவன் அதர்மம் செய்தாலும் அது அரசனையே சேரும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது தர்மசீலரான உமது ராஜ்யத்தில் இந்தக் குழந்தை செத்துப்போயிருப்பதால், இது பிழைப்பதற்கு வேண்டிய உபாயத்தை நீர் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நாங்களிருவரும் இக்குழந்தையோடு மரித்து விடுகிறோம்" என்று சொன்னார். பிறகு பிராம்மணரது பத்னீ இரைந்து ஸீதையைக் கூப்பிட்டு 'ஏ ஸீதே! நீ சுகமாய்ப் புருஷனோடு தூங்குகிறாயே! நீயும் பிள்ளைகளைப்பெற்றவள் தானே? உனது புருஷனிடம் சொல்லி இக்குழந்தை பிழைக்கும் உபாயத்தைச் செய்யச்சொல்லலாகாதா? உனக்கு இவ்வளவு தயையில்லையா?" என்று அலறினாள். அந்நகரத்திலுள்ளவர்களெல்லோரும் இந்தத் தம்பதி இவ்வாறு அலறுவதைக்கேட்டு மிகவும்வருத்தத்துடன் அப்பிணத்தைச் சூழ நின்றார்கள். பிறகு ஸீதையும் ராமரும் வந்திமாகதர் ஸ்தோத்திரம் செய்ய நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டு இவர்கள் அழுங் குரலைக்கேட்டு மிகவும் பரிதாபத்தோடு படுக்கையறையிலிருந்து வெளியே வந்து, இவர்களிருக்குமிடம் தேடி வந்தார்கள். அவர்கள் ஸீதாராமர்களைப் பார்த்தவுடன் அதிகமாய் அழ ஆரம்பித்தார்கள். ராமர் தழ தழத்த குரலோடு அவர்களைச் சமாதானப்படுத்தி "நீங்கள் துக்கப்படாதேயுங்கள்; உங்கள் குழந்தை பிழைக்கும்படி உபாயம் செய்கிறேன். அப்படிப் பிழைக்காமற் போனால் என் குழந்தை குசனை ஸத்தியமாய் உங்களுக்குக்கொடுத்து விடுகிறேன்." என்றார். பிறகு ஸீதை அந்தப் பிராமணரின் பத்னியை ஸமாதானப்படுத்தி "என் புருஷனான ராமர் தமது குழந்தை குசனைக்கொடுத்து விடுகிறேன் என்று சொல்லியிருப்பதால் தாங்கள் வருத்தப்படவேண்டாம்; நானும் இப்போது அதனையே ஸத்தியமாகச் சொல்லுகிறேன். இந்தக் குழந்தை பிழைக்காவிட்டால், என் குழந்தை லவனையும் நான் ஸத்தியமாகக் கொடுக்கிறேன். எங்கள் இரண்டு குழந்தைகளையும் நீங்கள் வாங்கிக்கொண்டாவது இந்த புத்திரசோகத்தைமறந்து எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

பிறகு ராமர் பிராம்மணரிடம் "நீர் உமது பத்னியோடு இங்கே ஸ்திரமாக இரும். இவ் விஷயத்தில் வருத்தப்படவேண்டாம். உமது குழந்தையைப் பிழைக்கும்படிசெய்கிறேன்" என்று சொல்லிவிட்டு லக்ஷ்மணரையழைத்து "லக்ஷ்மண! இந்தச் சவத்தினிடம் புழு நாற்கந்தம் ஒன்றும் உண்டாகாம லிருக்கும்படி இதை எண்ணெய்க்கொப்பரையில் போட்டு வைக்கும்படி உத்தரவுசெய்" என்றுசொல்லித் தாம் ஸ்நானம் முதலிய நித்திய காரியங்களை முடித்துக்கொண்டு சபைக்குவந்தார். அந்த வஸிஷ்டரிடம் "நான் தர்மமாய் ராஜ்ய பரிபாலனம்செய்யும் போது பிராம்மணரின் இந்தக் குழந்தை எப்படி இறந்து போயிருக்கும்? அது பிழைப்பதற்குத் தாங்கள் உபாயம் கூறவேண்டும்" என்று தெரிவித்தார். இப்படி இவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நாரதர் வீணாகானம் செய்துகொண்டு வேகமாய் ஆகாயத்திலிருந்து சபையில் இறங்கினார். ராமர் அவரை எதிர்கொண்டழைத்து விதிப்பிரகாரம் பூஜித்து நடந்ததைச்சொல்லி அவரையும் உபாயம் கேட்டார். அப்போது நாரதர் "ராம! உமது ராஜ்யத்தில் ஒருவரும் அதர்மம் செய்பவரில்லை. ஆனால் பூமி முழுவதும் சென்று பார்க்கவேண்டும். எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும் ஜனங்களைச் சிக்ஷிப்பதற்கு உம்மையே அனுப்புகிறேன். அதர்மத்தைச் செய்கிற அவனைக் கண்டுபிடித்து, நீர் நன்றாய்த் தண்டிக்கவேண்டும். இவ்வாறு அதர்மத்தை ஒழித்தால் இந்தச் சிசு பிழைத்து விடும்" என்றார். ராமரும் அப்படியே ஆகட்டுமென்று அவரை மரியாதை செய்தனுப்பிவிட்டு ஸீதையோடும் பட்டணத்து ஜனங்களோடும் மந்திரிகளோடும் பிள்ளைகளோடுங் கூட புஷ்பக விமானத்தின்மீதேறிக் கொண்டு புறப்பட்டார். இப்பொழுது அவருக்கு எதிரில் பெருத்த அழுகைச் சப்தங்கேட்டது. அதைக் கேட்டதும் ராமர் இதென்னவென்று அங்கிருந்தவர்களை விசாரித்துக்கொண்டே சப்தமுண்டாகுமிடஞ்சென்று ஆங்கு ஒரு ஸ்திரீ ஒரு சவத்தைத்தன்னருகில் போட்டுக்கொண்டு அழுவதையும் அவளைச்சுற்றி ஜனங்கள் நிற்பதையும் கண்டு அந்த ஸ்திரீயின் புருஷன் அகாலத்தில் இறந்து விட்டமையால்

அவள் விதவையானதுபற்றி அழுகிறாள் என்றுந்தெரிந்து கொண்டார். அந்த ஸ்திரீ வந்திருப்பவர் ராமரென்றறிந்து "ஏ தர்மப்ரபுவே! ராம! உமது ராஜ்யத்தில் நான் விதவையாய் விட்டேன். எனது புருஷன் பிழைக்கவேண்டும். இல்லாவிட்டால், உங்களைச் சபித்து விடுவேன்" என்று அலற, ராமர் மிகுந்த வருத்தத்தோடு "நான் அவசியம் உனதுபுருஷனைப் பிழைக்கும்படி செய்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம். சுகமாய் என் வீட்டில் இரு" என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டு முன்போல் அந்தச் சவத்தை எண்ணெய்க்கொப்பரையில் போட்டு ஜாக்ரதையாய்க் காப்பாற்றிவைக்கும்படிக்கும் இனி இப்படி மரணமடைகிறவர்களையும் இவ்வாறே தாம் வரும் வரையில் ரக்ஷிக்கும்படிக்கும் ஸுமந்திரருக்கு ஆக்ஞை செய்துவிட்டு மேற்கு வடக்கு கிழக்கு இந்தத் திக்குகளைப்பார்த்துக்கொண்டு, தெற்குத் திக்கை நோக்கிச்சென்றார். இதன் நடுவில் அயோத்யாபட்டணத்தில் ஐந்துபேர் மரணமடைந்துவிட்டனர். அப்பிணங்களைச் சுமந்திரர் ராமரின் உத்தரவுப்படியே எண்ணெய்க் கொப்பரையிற் போட்டு ஜாக்ரதையாக ரக்ஷித்துக்கொண்டிருந்தார். அந்த ஐந்து பிணங்களில் ஒன்று மதுராபுரியிலுள்ள ஒரு க்ஷத்திரியினுடையது. இரண்டாவது பிரயாகையிலுள்ள ஒரு வைசியனுடையது. மூன்றாவது அஸ்தினாபுரியிலுள்ள ஒருவாணியனுடையது. நான்காவது அரித்வாரத்திலுள்ள ஒரு தட்டானுடையது. ஐந்தாவது உச்சயினியிலுள்ள ஒரு சக்கிலியினுடையது. இவ்வைந்து பேரும் யௌவனபருவமுள்ளவர்களானதால், இவர்களுடைய மரணம் அகால மரணமாம்.

ராமரும்: தண்டகாரண்யத்தைப் பார்த்துக்கொண்டு நர்மதா நதியால் அலங்கரிக்கப்பட்ட விந்தியமலைசென்றார். அங்கே ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டு தவஞ்செய்துகொண்டிருக்கும் ஒரு சூத்திரனைப்பார்த்து, "ஏ சூத்திர! பிராம்மணர் தான் தவம் செய்யவேண்டியது. சூத்திரர் மற்ற வருணத்தாருக்குப் பணிவிடை செய்யவேண்டியது. இவ்விதமிருக்க, நீ பிராம்மணரின் தர்மமான தவத்தைச் செய்ததால், அந்த அதர்மத்தினால் என் ராஜ்யத்தில் சிலர் அகாலத்தில் இறந்து விட்டார்கள். அவர்

களைப் பிழைப்பிக்க நான் இப்போது உன்னைக் கொல்லப்போகிறேன்" என்று கோபத்தோடு சொன்னவுடன் அவன் பயந்து, ராமரைப் பன்முறை வணங்கி "நான் தெரியாமல் செய்துவிட்டமையால் என்னைக் கொல்லாது எனக்கு நற்கதியைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்" என்று மிகவும் வேண்டிக்கொள்ள ராமர் அவனிடம் தயைகூர்ந்து "சூத்திரர் எப்போதும் என் நாமத்தை ஜபிக்கவேண்டும். கூட்டமாய்க்கூடிச் சொல்லவேண்டும். அப்போது அவர்களுக்கு நல்ல கதியுண்டாகும். நீயும் என்பெயரையே ஜபம் செய்து நல்லகதியை யடையக்கடவாய். உன்னால் சூத்திரர் கரையேறும்படியான ஒரு மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டபடியால், அவர்களுக்குள் உனக்கு எப்போதும் மேலான கீர்த்தி யுண்டாகட்டும்" என்று வரங்களைக் கொடுத்தார்.

இதைக்கேட்ட சூத்திரன் மறுபடியும் "ஏ சுவாமி! கலியுகத்தில் சூத்திரர் மந்த புத்தியுடையவர்களாயும் எப்போதும் பயிர் வேலையில் ஜாக்ரதையுள்ளவர்களாயும் இருக்கப்போகிறார்களாதலால், அவர்கள் உங்கள் திவ்ய நாமத்தை எவ்வாறு ஜபம்செய்யப் போகிறார்கள். ஆதலால், இதற்கு அநுகூலமான வரத்தைத் தாங்கள், கொடுத்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள ராமர் "சூத்திரர் இதரரை வந்தனம்செய்யும்போது எப்போதும் ராம! ராம!! என்று சொல்லட்டும். அதனால் அவர்களுக்கு நல்லகதி கிடைக்கும்; இந்தத் தேகத்தின் முடிவில் நீயும் வைகுண்டத்தை யடைவாய்" என்று வரங்கொடுக்க, மறுபடியும் அந்தச் சூத்திரன் "தாங்கள் தங்கள் அம்சத்தோடு ஸீதை லக்ஷ்மணர் இவர்களுடன் இந்த மலையில் எப்போதும் இருக்கவேண்டும். நானும் தங்களைத் தரிசனம் செய்துகொண் டிருக்கவேண்டும். இங்கு வரும் மனிதரும் முதலில் என்னைத் தரிசித்து விட்டுப் பிறகு தங்களைத் தரிசித்து மேலான பதவியை யடையவேண்டும். இவைகளுக்குத் தாங்கள் தயைசெய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டு, அவனுக்குப் பக்தியைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்திப் பிறகு அவனைக் கொன்று அயோத்தியிலுள்ள எழுபிணங்களையும் பிழைப்பித்தார்.

விஷ்ணுதாஸ! அதுமுதல் பூமியில் சூத்திரர் பிறரை வந்தனம் செய்யும்போது ராம ராம! வென்று சொல்வது வழக்கம். பிறகு ராமர் ஸீதைக்கு அநேகம் வேடிக்கைகளைக் காட்டிக்கொண்டு தமது பட்டணம்வந்து கொண்டிருந்தார். இப்படி வந்துகொண் டிருக்கையில் வழியில் ஒரு கழுகும் கோட்டானும் சண்டையிட்டுக்கொண்டு ராமரைக்கண்டு வணங்கிநின்றன. ராமர் அவைகளைப் பார்த்து நீங்கள் எதற்காகச் சண்டையிடுகின்றீர்களென்று கேட்டார்.

அப்போது, கோட்டான் "நான் இந்த மரத்தின்மேல் கூடு கட்டிக்கொண்டிருக்கிறேன். நான் அங்கே யில்லாதபோது இந்தக் கழுகு வந்து அதில் உட்கார்ந்துகொண்டு அந்தக் கூடு தன்னுடையதென்றும் எனக்கு இடங்கொடுக்க மாட்டேன் என்றும் சண்டை போடுகிறது" என்றது. இதைக்கேட்டு ராமர் "நீ ஏன் அவ்விதம் செய்கிறாய்?" என்று கழுகைக்கேட்க, அது "நான் அதில் இல்லாதவேளையில் இந்தக் கோட்டான் அதைப்பிடித்துக் கொண்டு இப்போது எனக்கு விடமாட்டேன் என்று சண்டையிடுகிறது" என்றது. இதைக்கேட்டு ராமர் "நீங்கள் கூடுகட்டியது யாருக்குத்தெரியும்?" என்று கேட்டார். அவை "ஒருவருக்குந் தெரியாது" என்றன. இப்போது ராமர் "இந்தச்சங்கடத்திற்கு நாம் என்னசெய்வது; கூட்டை யாருக்குக் கொடுப்பது" என்று எண்ணிப் புன்னகைசெய்துகொண்டு விமானத்தி லுள்ளவரிடம் தெரிவித்தார். ராமர் வார்த்தையைக்கேட்டு எல்லோரும் ஆச்சரியமடைந்து மௌனமாயிருந்தார்கள். அப்போது சர்வலோக சரண்யரான ராமர் கோட்டானை நோக்கி, "நீ எப்போது வீடுகட்டினாய்" என்று கேட்க "இந்தபூமி எப்போது உண்டாயிற்றோ அப்போது நான் கட்டினேன்" என்றது. இதைக்கேட்டு ராமர் "பிரளயகாலத்தில் ஆச்ரயமில்லாமல் மரம் எப்படியிருந்தது? ஆலமரத்திற் கல்லவா நாசமில்லை; நீ மாமரமென்றாயே. அது எப்படி" என்று கழுகைக்கேட்க அது ஒன்றும் பேசாமலிருந்தபோது, "ஏ கழுகே! நீ வீணாய் இந்தக்கோட்டானோடு சண்டையிடுகிறாய்; இப்போது கூறிய உன்வார்த்தையாலேயே இக்

கூடு உன்னுடைய நல்லவென்று தெரியவருகிறது. நீ துஷ்டபக்ஷி; உன்னைத் தண்டிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டுத் தூதர்களைக்கொண்டு அதை மலையின்மேலேற்றி அதன் ஸ்தானம் அனுப்பினார். அது ராமரது ஸந்நிதியில் பிராணனை விட்டமையால், நல்ல பதவி யடைந்தது. ராமரும் அந்தக் கூட்டைக் கோட்டானுக்குக் கொடுத்துவிட்டுத் தமது பட்டணம்வந்து சேர்ந்தார். இங்குச் செத்துப் பிழைத்தவர்கள் ஆதரவோடு தம்மை வணங்க வருவதைப் பார்த்து, மிகவும் ஸந்தோஷமடைந்து அவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கொடுத்து அனுப்பிவிட்டார். இதனால் உலகமெங்கும் நல்ல கீர்த்தியுண்டாயிற்று. இவ்வாறு ஸ்ரீராமர் அநேக லீலைகளைச் செய்தார்.

10 - வது சருக்கம்

முற்றிற்று.

11-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஒருசமயம் ராமபிரான் ஸீதாதேவியோடு காட்டிற்கு வேட்டை யாடுவதற்குச் செல்லக்கருதி, பாதங்களில் திவ்ய பாதரக்ஷைகளையும் கைகளில்கறுத்த உடும்புத்தோலாற்செய்யப்பட்ட கைரக்ஷைகளையும் தரித்துக்கொண்டார்; தலையில் கறுத்த தலைப்பாகை யணிந்துகொண்டார்; நல்லவிற்களை யெடுத்துக்கொண்டார்; கத்தி கேடயம் முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டார். இவ்விதம் தம்மை யலங்கரித்துக் கொண்டு குதிரைகள் காலாட்படைகள் அரசர்கள் முதலியோர்சூழப் புறப்பட்டுமிகவும் அடர்ந்த காட்டிற்குள் பிரவேசித்தார். அங்கேசென்றதும் தமது ஆட்களைச் சரியாய்ப் பிரித்துவிட்டார். சிலரை ஆங்காங்கு அமைக்கப்பட்ட கூடாரங்களி லிருந்து காவல்புரிந்து வரும்படி திட்டப்படுத்தினார். இவ்வாறு திட்டப்படுத்திய பின் தாம் வேட்டைக்குரிய உடைகளைத் தரித்துக்கொண்டு வேட்டையாடப்புறப்பட்டார். இவ்விதம் வேட்டையாடப் புறப்பட்டு வேட்டையாடி வருகையில் மான்கள் அங்கு மிங்கும் ஓடுவதைப்பார்த்து அதோ! மான் ஓடுகிறது. அடியுங்கள்! அடியுங்கள்!! பிடியுங்கள்! பிடியுங்கள்!! என்று கூவிக்கொண்டும் மிருகங்களைத் தேடிக்கொண்டும் ஆங்காங்கு காணும் ஆறு மலை வனம் இவைகளைக் கடந்து சென்றும் ஓடித்திரிந்தார். அப்போது அந்த வனத்தில் சிற்சில விடங்களில் மான்கள் பயந்தோடின. முள்ளம்பன்றிகள் புதருக்குள்ளிருந்து வெளிப்பட்டன. யானைகள் இங்குமங்கும் வேகமாய்த் திரிந்தன. கரடி, புலி, சிங்கம், இவைகள் பயங்கரமாகக் கர்ச்சித்தன. காட்டெருமைகள்கத்திக்கொண்டே ஓடின. கவயமிருகங்கள் கூட்டங் கூட்டமாக வெளிப்பட்டன.

இவ்விதக் கோலாகலத்துடன் கூடிய அவ்வனத்தில் ராமபிரான் வெகுநேரம் வேட்டையாடிப் பிறகு நடுப்பகலில் தமது கூடாரத்துக்கு வந்து சற்று இளைப்பாறிப் போஜனம் செய்தார்.

பிறகு சற்றுநேரம்பொறுத்து மீண்டும் வேட்டைக்குச் சென்றார்; பிறகு அஸ்தமனமானதும் கூடாரம் வந்துசேர்ந்தார்.

இப்படிச் சிலநாள் அந்தவனத்தில் வசித்து வேட்டையாடி வந்தார். இப்போது ஒருநாள் ராமர் அதிகாலையில் வேட்டைக்குச்சென்று, மிருகங்களைத் துரத்திக்கொண் டோடிச் சிலவற்றைப் பாணங்களால் அடித்துத் தள்ளினார். ராமபிரான் வேட்டையாடுகிறதைக்கண்டு பயந்த ஒரு சிங்கம் தன் குகையிலிருந்து வெளிப்பட்டு வெருவேகமாய் ஓடிற்று. அதைத் துரத்திக்கொண்டு அநேகமனிதர்களும் ராமரும் ஓடினார்கள். அது மறைந்து மறைந்தோடிக் கடைசியில் ஒரு பயங்கரமான காட்டிற்குள் புகுந்து விட்டது. எல்லாரும் பின்னாலேயே தங்கிவிட்டனர், ராமர் மாத்திரம் அதைத் துரத்திக்கொண் டோடினார். அங்கிருந்து நிர்ஜனமான அநேகவனங்களைத் தாண்டிக்கொண்டு அத்துடன் ஒரு மலையின் குகையில் பிரவேசித்து விட்டார்.

ராமரது பந்துக்கள், வேலையாட்கள், லக்ஷ்மணர் இவர்கள் யாவரும் ராமரைக் காணமல் இங்குமங்கும் தேட ஆரம்பித்தனர்.

ராமர் அங்குச் சென்றதும் கூரானபாணத்தால் அந்தச் சிங்கத்தை யடித்தார். உடனே அது கீழேவிழுந்து ஒரு திவ்ய ரூபத்தை யெடுத்துக் கொண்டு ராமரைப் பார்த்து, ராமச்சந்திர பிரபுவே! நான் ஒரு வித்தியாதரன். நான் பலாத்காரமாக ஒரு முனிபத்னியை அனுபவிக்க யத்தனித்தேன். அப்போது அவள் மிகுந்தகோபத்தோடு "நீ சிங்கம்போல் அதிக ஆவேசத்தோடு என்னிடம் பிரவேசிக்க வந்தமையால், இன்று முதல் நீ இவ்வனத்தில் சிங்கரூபத்தோடு திரியக்கடவாய்" என்று என்னைச்சபித்தாள். பிறகு நான் அதிக வணக்கத்துடன் அவ்வுத்தமியைப் பிரார்த்தித்துக் கொண்டேன். அவ்வுத்தமி என்மேல் கிருபை கூர்ந்து, "ஸ்ரீராமரது பாணம்பட்ட மாத்திரத்தில் உனக்கு இச்சாபம் நீங்கிவிடும்" என்று அநுக்கிரகம் செய்தாள். அப்படியே இப்போது தங்களுடைய பாணத்தின் அடியினால் சாபமொழிந்து எனது ஸ்தானம் செல்லுகிறேன்"

என்று சொல்லி அந்த வித்பாதகன் ராமனை வணங்கிவிட்டு ஸ்வர்க்கலோகம் சென்றான். இதனால் ராமர் பரமாச்சரியமடைந்து, சற்று அந்தக்குகையில் ஸஞ்சரித்தார். அப்போது அங்கே ஒருயோஜனை நீளமுள்ள ஒருபெரும் கற்பாறையிருக்கக் கண்டு, அதிசயித்துத் தமது வில்லின் நுனியால் அதைத் தூக்கினார். அது வெகு தூரத்தில் போய் விழுந்தது. அப்புறம் இவர் அங்குக் காணப்பட்ட குகையில் பிரவேசித்தார். அங்கே சிறிது தூரத்திலிருந்து தவம் புரிந்துகொண்டிருக்கும் நான்கு பெண்களைப்பார்த்தார். அவர்கள் எலும்பும் தோலும் உள்ளவர்களாய் இருக்கக்கண்டார். உடனே அருகிற்சென்று அவர்கள் மூச்சு விடுவதைப்பார்த்து, அதனால் அவர்கள் உயிருடனிருக்கிறார்களெனத் தெரிந்துகொண்டார். உடனே நான்கு ரூபமெடுத்துக்கொண்டு அவர்கள், ஒவ்வொருவர் முன்பும் நின்று தனித்தனியே அவர்களைக் கூப்பிட்டு, "நான் ராமன்; உங்களுக்குப் பிரஸன்னமாயிருக்கிறேன்; வேண்டியவரங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்றார். இப்படி இவர் சொன்னதும் அவர்கள் ஒவ்வொருவருடைய சரீரமும் மாம்ஸம் ரத்தம் இவைகளால் நிறைந்து திவ்ய அழகுடன் விளங்கியது. பிறகு அந்த ஸ்திரீகள், தங்கள் ஒவ்வொருவருடைய முன்னிலையிலும், கோடி ஸூர்யப் பிரகாசத்தோடு கையில் கத்தி கேடயம் முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு அழகிய குதிரையின் மீது வீற்றிருக்கும் ராமச்சந்திர பிரபுவைப் பார்த்து, ஆச்சரியமடைந்தார்கள்; பிறகு அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே குதிரையின் மீதேறிக் கொண்டு "இங்குவந்திருக்கும் தாங்கள்யார்? எங்கிருந்து வருகிறீர்கள், தேவர்களா? அசுரர்களா? எங்கள் சரீரம் ஏன் இவ்வாறாயிற்று? பெரிய அசுரனான துந்துபி என்பவன் இப்போது உயிரோடிருக்கிறானா? அல்லது இறந்துவிட்டானா?" என்று கேட்டார்கள். இம்மாதிரி அந்த ஸ்திரீகள் கேட்டதும் ராமர் "நான் ஸூரியவம்சத்திற் பிறந்தவன். ஸப்தத்வீபாதிபதியான ராமன். நான்ஒருவனே। இப்போது இங்கே நான்குதேகத்தோடு உங்களுக்குக்காட்சிதந்திருக்கிறேன். நான் இந்தக்காட்டிலவேட்டைக்கு வந்து ஒரு சிங்கத்தை யடித்தேன். பிறகு இங்கிருந்த சிலையைக் கண்டு என்வில்லின் நுனியால் அதைப் புரட்டித்தள்ளிவிட்டு

உங்கள் சமீபத்திற்கு வந்து என்கையினால் உங்களைத்தொட்டேன்; தொட்டமாத்திரத்தில் உங்கள் சரீரங்கள் இவ்வாறு அழகுகிப்பற்றன. வாலியென்பவன் துந்துபியைக் கொன்றுவிட்டான். அந்த வாலியை நான் கொன்றுவிட்டேன். அவனைக் காட்டிலும் பராக்கிரமசாலியான இராவணனையும் நான் கொன்றுவிட்டேன். வேண்டும் வரங்களைக் கொடுப்பதற்காகவே இப்போது பேசினேன்; இங்கு வேறு காரியமில்லை; சீக்கிரம் எனது ஜனங்களிடம் போக வேண்டும். நீங்கள் யார் என்பதை விஸ்தாரமாய்ச் சொல்லுங்கள்" என்றார். இராமர் துந்துபி மாண்டானென்றும் கற்பாறையைப் புரட்டி விட்டேனென்றும் சொன்னதும், அவர்கள் மிகவும் ஸந்தோஷத்தையடைந்து, "பிரபுவே! நாங்கள் நால்வரும் பிராம்மணப் பெண்கள்; இன்னும் க்ஷத்திரியர் வைசியர் இவர்களது பெண்கள் பதினாயிரம் பேர்கள் இந்தக் குகையிலேயே சற்றுத் தூரத்தில் அடைபட்டுக் காற்றையுட்கொண்டு மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த மகாபாவியான துந்துபி என்னும் அசுரன் லக்ஷம் ஸ்திரீகளை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றெண்ணி, ஆங்காங்குச் சென்று அழகிய ஸ்திரீகளைப் பலாத்காரமாய் அபகரித்துக்கொண்டுவந்து,இக்குகைக்குள் அடைத்து மேலே கற்பாறையை மூடிவிட்டு வெளியே சென்று இன்னும் அநேகரைக் கொண்டு வரப்போனான். நாங்கள் வெகுநாளாய் இங்கேயே வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் மற்ற க்ஷத்திரிய வைசிய ஸ்திரீகளும் இவ்வாறே வருத்தப்பட்டுக்கொண்டு ஸ்ரீவிஷ்ணுவினிடம் தங்கள் மனதைக் செலுத்திக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள்." என்று சொன்னார்கள். இராமர் இதைக் கேட்டதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நான்தான் விஷ்ணுவென்று சொன்னார். அவர்கள் உண்மையானரூபத்தைக்காட்டவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே ராமர் ஸ்ரீவிஷ்ணுவினது ரூபத்தைத் தனித்தனியே ஒவ்வொருவருக்கும் காட்டினார். அவர்கள் விஷ்ணுவின் ரூபத்தைத் தரிசித்து மிகுந்த பக்தியோடு தனித்தனியே நமஸ்கரித்தார்கள். அப்போது "உங்கள் சந்தேகம் தெளிந்ததா" என்று ராமர் அவர்களைக் கேட்டார்.

அவர்கள், "பிரபுவே! சந்தேகம் நிவிர்த்தியாயிற்று. இப்போது உங்களைப் பார்த்ததினாலேயே நாங்கள் எல்லாக்கிலேசமும் நீங்கியவர்களானோம்" என்று சொன்னார்கள். பிறகு அவர் தமது இராமரூபத்தை எடுத்துக்கொண்டு "இஷ்டமானவரங்களைக் கேளுங்கள்" என, அவர்கள் "பிரபுவே! இவ்வனத்தில் நீங்களே யெங்களைக் காந்தர்வ விதிப்படி விவாகம் செய்துகொள்ளவேண்டும்" என்று மிகவும் வேண்டிக் கொண்டார்கள். ராமர் நான் ஏகபத்னி விரதமுடையவன்; ஆகையால் இப்போது விவாகம் செய்துகொள்ள முடியாது. நான் துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதாரம் செய்யப் போகிறேன்; அப்போது அவசியம் விவாகஞ்செய்துகொள்ளுகிறேன்; இவ்விஷயத்தில் ஸந்தேகம் வேண்டாம்" என்று சொன்னார். இவ்விவரங்களைக் கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்து. "தாங்கள் சற்றுமேலே செல்லவேண்டும்" என்று ராமரை வேண்டிக் கொண்டார்கள். அவரும் அப்படியே அவர்களோடு சென்று கண்டகீ தீரத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பதினாறாயிரம் ஸ்திரீகளையும் பார்த்தார்.

11-வது சருக்கம்

முற்றிற்று.

12-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ராமர் அவர்களெல்லோரையும் தமது கையினால் தடவிக்கொடுத்து அவர்கள் யாவருக்கும் யௌவனருவமளித்து, துந்துபி மாண்டது முதலான விருத்தாந்தங்களையு மெடுத்து உரைத்து, அவர்களை மகிழ்வித்து உடனே, தாமும் பதினாறாயிரம் விஷ்ணு ரூபங்கொண்டு அந்தப் பதினாறாயிரம் மாதர்களுக் கெதிரில் நின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் பார்த்து ஆச்சரியமடைந்து, "தாங்களே எங்களுக்குப் பர்த்தாவாகவேண்டும்" என்னும் வரனைக்கேட்டார்கள். அதற்குப் பகவான், "நான் ஏகபத்னீ விரதமுடையவன், ஆதலால் உங்களை விவாகம் செய்து கொள்ள முடியாது" என்றார். உடனே அவர்கள் "நாமே இவரை வரித்து விடுவோம்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். இதைக் கேட்ட ராமர் தமது மனத்தில் ஆலோசித்து "நான் விரதமுடையவனென்று சொன்னாலும் இவர்கள் பலாத்காரமாய் என்னை அநுபவிக்க என ஆலோசிக்கிறார்கள். முற்காலத்தில் பிர்ம்மா, ருத்திரர், இந்திரன் முதலான தேவர்களும் யோக பலமுடைய முனி ச்ரேஷ்டர்களும் இந்த ஸ்திரீகளாலேயே விளையாட்டாய் மோகத்தை யடைந்திருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியம். கொடிபோன்ற ஸ்திரீயின் புருவமாகிய கெட்டியான வில்லிலிருந்து வெளிப்படுகிற, நேத்திரமாகிற கூரான பாணங்களால் வில்லாளியான மன்மதனடித்தால், யாருடைய மனந்தான் வேறுபடாது? மன்மதன் ஸ்திரீகளின் லீலைகளாகிற உயர்ந்த மதுவினால் புருஷரின் சித்தத்தை மயக்காத வரையிலே தான், மனிதர் நிச்சயமனதை யுடையவராயிருப்பதும், குலம் ஆசாரம் இவைகளைக் கவனிப்பதும்,தவத்தை விசேஷமாகச் செய்வதும், நியமம் விரதம் முதலானவைகளை ஸ்திரமாய் அனுஷ்டிப்பதுமாம். இந்த ஸ்திரீகள் எந்தக் குணங்களால் என்னை இப்போது மோகிக்கவும் மதத்தை யடையவும் செய்கிறார்கள்? காமிகளான புருஷரோ வென்றால், மாம்ஸம், ரத்தம், மலம், மூத்திரம்,

இவைகள் நிறைந்து அசுத்தமாயும் குணமற்ற தாயுமுள்ள ஸ்திரீ களின் சரீரத்தை அழகெனக்கற்பித்துக்கொண்டு மிகவும் மோகத் தை யடைந்து மூடராய் விடுகிறார்கள். நிர்மலபுத்தியுடையவர் கள் ஸ்திரீகள் சமீபத்தில் இருப்பதையும் வெறுப்பார்கள். இவர் கள் சமீபத்தில் வருவதற்குள் நான் மறைந்துவிட்டாலன்றி எனது விரதம் பூர்த்தியாகாது என நினைத்தார். பிறகு ஏகபத்னீ விரதமுடைய என்னை இவர்கள் என்னசெய்ய முடியும்? என்று கருதி ராமர் அங்கேயே ஸ்திரமாய் இருந்துவிட்டார். அவர்களெல் லோரும் "நாங்கள் உங்களை வரித்துவிட்டபடியால், உங்களுக்கு ஏகபத்னீ விரதமிருந்தாலும் அது இன்று ஸபலமாய்விடும்" என்று சொல்லிக்கொண்டே அவரது சமீபத்திற் சென்று அவரைத் தழு வுவதற்குப் பலவிதமாக யத்தனித்தார்கள். ராமர் "மாதர்களே! உங்களுடைய அனுகூலமும் பிரியமுமான வார்த்தைகள் ஏகபத்னீ விரதமுள்ள எனக்குச் சிறிதும் பயன்படா; ஆகையால் நீங்கள் வருத்தப்படாதீர்கள்" என்றார்.

இதைக்கேட்டவுடன் அந்தப் பதினாறுயிரம் ஸ்திரீகளும் "பிர புவே! தர்மத்திலிருந்து அர்த்தமும், அர்த்தத்திலிருந்து காமமும், காமத்திலிருந்துஇஷ்டமான பலமும் முறையே உண்டாகுமென்று சாஸ்திரங்களில் பண்டிதர் கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காமம் இப்போது உங்களுக்கு வந்திருப்பதால் நீங்கள் இதை அவ சியம் ஸேவிக்கவேண்டும்" என்றார்கள்.

ராமர்:—"வேண்டுமானால் நான் உங்களுக்கு வரங்களைக் கொ டுக்கிறேன், நீங்கள் சொல்வதற்கு நான் செவிகொடேன்" என்று புன்சிரிப்புடன் கூறினார்.

ஸ்திரீகள்:—"நல்லகுலத்தி லுண்டான ஸ்திரீ, திவ்ய ஔஷதமாயும் மனத்தைச் சந்தோஷப்படுத்துகிற ரஸாயனமா யும் நல்ல மந்திரமாயும் அன்னமாயும் ஜலமாயும் இருப்பதால், அவள் தானே வரும்போது புத்திசாலியானவன் அவளை மறுக்கக்கூடாது. நீதியறிந்தவர்கள் காரிய சித்தியாகும்போது உபேக்ஷியார். காலதாமதம் செய்யார். பூர்ண அன்புடையவர்

களாயும் நல்ல குலத்திலுண்டானவர்களாயும் அன்பு நிறைந்த மன முடையவர்களாயும், நன்றாய்ப் பேசுகிற வர்களாயும் தாமே வரிப் பவர்களாயும் நல்ல யௌவன ரூபத்தோடு கூடியவர்களாயும்இருக் கும் கன்னிகைகளை அதிர்ஷ்டமுள்ளவர்கள் அடைகிறார்களே யொழிய மற்றவர்கள் அடைவதில்லை. தேவ ஸ்திரீகளான நாங் கள் எங்கே? உமது ஏகபத்னீ விரதம் எங்கே? ஆகையால் எங்களை நீங்கள் இப்போது நிராகரணம் செய்வது கூடாது. காந்தர்வ விவாகமுறைப்படி எங்களை இப்பொது ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டும்; இல்லாவிடில் எங்கள் உயிர் இப்போதே போய்விடும்'' என்றார்கள்.

ராமர் ''ஏ வநிதாரமணிகளே! தர்மத்தை முக்கியமாகக் கொ ண்டவர்கள் அதை எவ்வாறு விட்டு விடுவார்கள்? தர்மம் அர்த் தம் காமம் மோக்ஷம் இந்நான்கும் ஒழுங்குப்படி நடத்தப்படும் போது தான் பலனைக்கொடுக்கும். மாறுபடின் பலனைக்கொடா. ஆகையால் என் ஏகபத்னீ விரதமென்னும் தர்மத்தை நான் இந்த ஜன்மத்தில் விடவே மாட்டேன்'' என்றார். அவர் இவ்வாறு கூடவே, அவர்கள், ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு அவர் கரத்தைவிட்டுக் காலைப்பிடித்துக்கொண்டார்கள். இப்படி அவர்கள் செய்வதைப்பார்த்து, ராமர் அக்கணமே அங்குமறை ந்துவிட்டார்; தாம் மறைந்தவுடன் அவர்கள் என்ன செய்கிறார் கள் என்று பார்க்க நினைத்து அங்கு ஓரிடத்தில் மறைந்து ஆச்சரி யததுடன பாாததுக்கொணடிருநதாா. ஒரு க்ஷணத்திற்குள் ராக வர் அங்கே காணாமற் போகவே, அந்த ஸ்திரீகள் இதென்ன ஆச்சரியமென்று நினைத்து மனச் சஞ்சலமுற்றுக் கூறுகிறார்கள்—

''ஏ பிரபுவே! இந்திரஜாலமாயையை விட்டு விடும்; பிரியத்தோடு கூடிய தங்களுடைய தரிசனங்கொடுக்கவேண்டும். எங்களுக்கு அதிக தாபத்தை யுண்டாக்குவதற்கே தாங்கள் வந்திருக்கிறீர்கள். தங்களுடையமனத்தில் சிறிதும் தயையில்லையா? அல்லது எங்க ளைப் பரீக்ஷிக்கிறீரா? எங்களைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்னும் எண்ணமா உங்களுக்கு? எங்கள் மனதை அபகரிக்கிறீரா? எங்களிடத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் இல்லையா? நீர்

மாயையில் சமர்த்தராதலால், எங்களோடு விளையாடுகிறீரா? மனத்தில் பிரவேசிக்கச் சமயம் பார்க்கிறீரா? நிரபராதிகளாகிய எங்களிடம் கோபமா? பிறரை ஏமாற்றுவதால் துக்கம் விளையுமென்று தங்களுக்குத் தெரியாதா? ஏ பிராணநாதா! இப்போது தங்களைக் காணுவிடில் நாங்கள் ஜீவிக்கவே மாட்டோம். இருந்தாலும் தங்களைப் பார்க்கலாமென்னும் ஆசையால்இப்போது ஜீவிக்கிறோம் தாங்கள் போயிருக்குமிடத்திற்கு எங்களையும் அழைத்துப் போகவேண்டும். தயைசெய்து எங்களுக்குத் தரிசனம் கொடுக்கவேண்டும். ஸாதுக்கள் ஒன்றிற்கும் காலத்தை எதிர்பார்க்க மாட்டார்களல்லவா?" என்று இவ்வாறு அந்த ஸ்திரீகளெல்லாரும் வெகு நேரம் அலறி விட்டு இராமரைப் பார்க்கக் காட்டில் இங்கு மங்கும் அலைந்து திரிந்தார்கள். அப்போது அங்குள்ள மரங்களையும் கோகிலம் மயில் முதலிய பறவைகளையும் பார்த்து "ஸ்ரீராமரைப் பார்த்தீர்களா" என்று பல முறை விசாரித்தார்கள். அப்படியும் அவர்களுக்கு ராமர் சென்ற இடத்தைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை. ஆகவே அவர்கள் அவரது பிரிவாற்றாமையால் காட்டின்கண் வெகுநேரம் துக்கத்தோடிருந்து விட்டுக் கடைசியாகக் கண்டகிதீரத்திற்கு வந்து கானம் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஸ்திரீகள் கூறுகிறார்கள்.

(1) ஏ பிரபுவே! ஜாநகி தேவியை ராக்ஷஸன் நடுக்காட்டில் அபகரித்துக்கொண்டு போனபோது அவள் விஷயமாய் நீங்கள் துக்கப்படவில்லையா?

(2) ஏ பிரபுவே! உமது விரஹத்தால் மனஸ்தாபத்தையடைந்து காடு முழுவதும் அலைந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு முறை எங்களுக்குத் தரிசனம் கொடுக்கவேண்டும். அதுவே எங்களுக்கு வரன். ஸம்போகம் வேண்டுவதில்லை.

(3) ஏ ராகவ! உம்மிடமிருந்து ஸம்போகத்தை நாங்கள் விரும்பவில்லை. பிராம்மணக் கன்னிகைகளுக்கு எவ்வாறு வரங்கொடுத்தீர்களோ அவ்வாறு எங்களுக்கும் வரங்கொடுத் தருளவேண்

டும். அடுத்த ஜன்மங்களிலும் உங்களைச் சேவிப்பதையே நாங்கள் இச்சிக்கிறோம்,

(4) சஞ்சல சுபாவத்தால் நாங்கள் செய்வதையெல்லாம் தயையோடு மறந்து விடுங்கள். உங்களைப் பார்ப்பதற்காகவே எங்கள் பிராணன் சரீரத்திலிருக்கின்றது. தங்களை யாசிக்கிறோம்.

(5) ஏ ராகவ! தாஸி ஜனங்களான எங்களிடத்தில் தாங்கள் கோபங்கொள்வது கூடாது. உம்மிடமிருந்து எங்களுக்கு வேறு வரம் வேண்டுவதில்லை.

(6) தங்கள் தரிசனமாகிய லாபத்தை ஜன்மாந்தரத்திலும் கொடுக்கவேண்டும். இது தான் எங்களுக்கு வேண்டும் வரம். சரணமடைந்த எங்களெல்லோரையும் காப்பாற்றிக் கரையேற்றவேண்டும். மிகவும் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(7) ராம! நீர் தயைபற்ற இருதயமுள்ளவரா ? உமது இருதயத்தில் ஸ்திரீ ஜனங்களின் பொருட்டுக் கருணையுண்டாகாதா ? விஷ்ணுவான நீர் உமது பாதங்களில் சரணமடைந்தவர்களிடம் இவ்வாறு கோபத்தை யடைதல் தகுமா? இப்போது எங்களுக்கு வரனைக் கொடுக்கவேண்டும்.

(8) அதிவிமலமான மதியுடையவர்கள் பாலனிடத்திலும் ஏழையினிடத்திலும் ஸ்திரீ ஜனங்களிடத்திலும் தங்கள் பிள்ளையினிடத்திலும் இவ்வாறு குரூரமான கோபத்தையடைவதில்லை. இப்போது நீர் எங்களுக்கு வரங்களைக் கொடுக்கவேண்டும். அஞ்சலி பந்தம் செய்து தங்களை இப்போது வணங்குகின்றோம்.

(9) ஏ நாத, ராகவ! லக்ஷ்மீபதே ! ராவண சத்ருவே ! ஸீதாபதே! சத்ருசங்கார! தாமரைப்பூப்போன்ற கண்களையுடையவரே ! ஏராம! நீர் இப்போது உமது தரிசனத்தைக் கொடுக்கவேண்டும். ஸ்திரீகளான எங்களைத் துக்க சாகரத்திலிருந்து கரையேற்றவேண்டும்.

(10) ஏ கருணாநிதே! ஜந்மாந்தரத்திலும் உமது திவ்ய பாத பத்மஸேவையை விரும்புகிறோம். தயை செய்யவேண்டும். இல்லாவிட்டால், இப்போது உமது விரகத்தால் நிச்சயமாய் எங்கள்

பிராணனை விட்டு விடுவோம். ஆகையால் எங்கள் மீது கிருபை செய்யவேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் ஸ்திரீகள் பாடியதை ராமர் கேட்டு மனமிரங்கி ஸ்திரீகளுக்கெதிரில் தோன்றினர். அவர்கள் ராமரைப் பார்த்ததும், முகமலர்ச்சி யடைந்து வணங்கினார்கள். உலகத்திலிந்த நாரிகீதத்தைக்கேட்கும் மனிதர்கள் தங்களுடைய சகல விருப்பங்களையும் அடைவார்கள். ஆகையால், இது எல்லாராலும் எப்போதும் பாடத்தகுந்தது. பிறகு ராமர் தமது தரிசனத்தால் அவர்களை மகிழ்வித்துப் பின்வரும் வரங்களைக் கொடுத்தார்—

ஏ ஸ்திரீகளே! நான் கூறுவதைக் கேளுங்கள். முன்னொரு காலத்தில் நான் வியாசருக்கெதிரில் அநேக ஸ்திரீகளை யடைய வேண்டுமென்று தங்கத்தினால் பதினறு ஸ்திரீ மூர்த்திகளைச் செய்து தானங்கொடுத்தேன். அந்தத்தானத்தினால் ஸந்தோஷமடைந்த அந்தப் பிராம்ஹணர்கள் "இதற்கு ஆயிரம் மடங்கு பலம் உமக்கு உண்டாக வேண்டும்" என்று ஆசீர்வதித்தார்கள். ஆகையால் நான் அந்தப் பலனை அனுபவிப்பதற்காக துவாபரயுகத்தில் கிருஷ்ணவதாரஞ் செய்து உங்களைக் கல்யாணம் செய்துகொள்கிறேன். நீங்கள் அந்த யுகத்தில் அரசர்களுக்குப் பெண்களாகப் பிறப்பீர்கள். அப்போது இந்தத்துந்துபி பௌமாசுரனகப் பிறந்து உங்களை முன்போல் அபகரித்துப் போவான். அப்போது நான் அவனைக் கொன்றுவிட்டு உங்களை இஷ்டப்படி சந்தோஷப்படுத்துகிறேன்" என்றார். அவர்கள் இவ்விதம் ராமர் கூறிய வசநங்களைக் கேட்டு மிகவும் சந்தோஷித்தார்.

இப்பொழுது தங்களை விட்டுப் பிரிந்த ராமரைத் தேடியலைந்த இலட்சுமணர் முதலானவர்கள், குதிரையின் காலடிபடிந்திருந்த வழியே தேடிச்சென்று கடைசியில் அங்குவந்து பதினறாயிரம் ஸ்திரீகளின் நடுவே ராமரைப் பார்த்து, அதிக ஆச்சரியமடைந்து அவரை வணங்கினார்கள். அங்கே நடந்த சமாசாரத்தை ராமர் முகமாகவே கேட்டுச் சந்தோஷத்தை யடைந்து, அவருடைய ஸந்நிதியில் நின்றார்கள். பிறகு தூதர்கள் இராமரது ஆக்ஞைப்படி

ஸேநாநிவேசத்திலிருந்து நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் வாகனங்களைக் கொண்டுவந்தார்கள்.

ராமர் அந்த வாகனங்களில் அந்த ஸ்திரீகளை யேற்றி வைத்துக்கொண்டு சேனையிருக்குமிடம் வந்து, ஸீதையைப் பார்த்தார். அந்த ஸ்திரீகளனைவரும் ஸீதையை வணங்கி மகிழ்ந்தார்கள். பிறகு ராமர் எல்லாவற்றையும் ஸீதைக்குச் சொன்னார். ஸீதை கேட்டு மகிழ்ந்து அம்மாதர்களெல்லோருக்கும் வஸ்திராபரணங்களளித்து உபசரித்தாள். பிறகு ராமர் அவ்விடத்திற்கு அருகே இருந்த ஒரு பெரும் குளத்தைக் கண்டு, அதில் ஸீதையுடன் தாமும் ஸ்நானஞ்செய்து அனுஷ்டானங்களைச் செய்து முடித்துக் கொண்டு, உறவினரோடும் வேட்டைக்கு வந்திருக்கும் மற்றவர்களோடும் சுகமாகப் போஜனஞ் செய்துவிட்டு அழகிய கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

பிறகு ராத்திரியில் வேடர்கள் வில்லில் பாணத்தைப் பூட்டிக்கொண்டு திக்குகளைத் தடுத்து வலைகளைப் பரப்பி வேட்டைக்கு ஆரம்பஞ் செய்தார்கள். அந்த நடுராத்திரியில் குளக்கரையில் பல பன்றிகள் கூட்டமாகச் சேர்ந்து கிழங்குகளைப் பிடுங்கித் தின்றுகொண்டே வந்து வலைகளிற் சிக்கிக்கொண்டன. அப்பொழுது அரசனும் வேடர்களும் அவைகளில் பலவற்றைக் கொன்றார்கள். இது அவர்களுக்குப் பெரும் வேடிக்கையாயிருந்தது. பிறகு எல்லோரும் அவரவர் கூடாரத்திற்குச் சென்றனர்.

இவ்விதம் ராமர் ஸீதையோடு காட்டில் ஏழுநாள் சுகமாய் இருந்து அநேக போகங்களை யனுபவித்துவிட்டுப் பிறகு தமது நகரத்திற்குச் சென்றார். பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் எல்லாரையும் கூப்பிட்டு எந்த ஸ்திரீ எவரது பெண்ணோ, எந்த ஸ்திரீ எவரது மனைவியோ அந்தந்த ஸ்திரீயை அவரவர்களிடம் வஸ்திராபரண அலங்காரத்துடன் ஒப்புவித்துஅவரவரிருப்பிட மனுப்பினார்.

அவர்கள் எல்லோரும் மனமகிழ்ச்சி யடைந்து, அப்பெண்களைத் தங்கள் தங்கள் தேசத்திற்கு அழைத்துச்சென்று விதிப்படி விவாகமாகாத கன்னிகைகளுக்கு விவாகம் செய்வித்தார்கள். ராமரது அநுக்ரகத்தால் அப்பெண்கள் கல்யாணம் செய்து கொண்டு தத்தம் புருஷரோடு சுகமாக இருந்தார்கள். முதலில் ராமபிரான் பார்த்த நான்கு பிராமணப் பெண்களும் தங்கள் தகப்பன் வீட்டிலேயேயிருந்து கொண்டு நியமம் விரதம் முதலியவைகளை யனுஷ்டித்துக் காலங்கழித்தார்கள். அவர்களுக்கு விவாக காலம் தாண்டிவிட்டபடியால், அவர்கள் விவாகம்செய்துகொள்ளாமலேயிருந்துவிட்டார்கள். ஜன்மாந்தரத்தில் கிருஷ்ணன் அவர்களைத் தமக்கு மனைவிகளாக மணந்துகொள்வார்.

பிறகு ராமர் சுபாகுவென்னும் தமது குழந்தைக்குக் கல்யாணஞ் செய்ய ஸீதையோடும் பந்துக்களோடும் பட்டினத்து ஜனங்களோடும் மதுராபுரிக்குச்சென்று அங்கே கல்யாணத்தை நடத்திவிட்டு, சிலகாலம் அங்கேயே சுகமாய் வசித்தார். அப்பொழுது ஒருநாள் ஸீதை அங்குள்ள யமுனாநதியின் மணலில் படுத்து நித்திரை செய்யப் பிரியப்பட்டாள். பிராட்டியார் கருத்துக்கிசைந்து ஒரு நாள் இரவு ராமபிரான் ஸீதையுடனும் பணிவிடைக்காரிகளுடனும் யமுனைக்குச்சென்று அங்கு நித்திரை செய்தார். அப்பொழுது அவருடன்வந்த வேலைக்காரர்களும் படுத்து நித்திரை செய்து விட்டார்கள். இச்சமயம் பார்த்து யமுனையானது ஒரு பெண்ணுருக் கொண்டு ராமரிடம் வந்து அவர் கால்விரலைத்தொட்டது. ராமர் விழித்துக்கொண்டு தமக்கெதிரில், திவ்ய அலங்காரஞ்செய்துகொண்டு ஒரு பெண் புன்சிரிப்புடன் நிற்கக்கண்டு, இவள் யாரெனக்க்ஷணநேரம்சிந்தித்துப் பின் யமுனையெனத்தெரிந்து அவளழகைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்து பிறகு "ஏ பெண்ணே! நீ யிங்கே வந்ததன் காரணம் யாது?" என்று கேட்டார். யமுனையானது வெட்கத்தோடு "தங்களுக்கே எல்லாம் தெரியும்" என்றாள். ராமர் "இந்த ஜன்மத்தில் நான் ஏகபத்னீ விரதமுடையவனுதலால், நீ ஸீதை விழித்துக் கொள்வதற்குள் வேகமாய் உனது ஸ்தானத்திற்குப்போ" என்று சொன்னார். யமுனை

அதைக்கேட்டு மிகவும் பயந்து மூர்ச்சையடைந்தது. பிறகு ராமர் " ஏ யமுனே! நான் சொல்வதைக்கேள்; துவாபரயுகத்தில் நான் கிருஷ்ணாவதாரம் செய்து உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். பிறகு என்னோடு சுகத்தை யனுபவிக்கலாம்" என்றார். யமுனை இவ்வாறு ராமர் சொன்னதைக் கேட்டு அவரை த்யானம் செய்துகொண்டே போய்விட்டது. பிறகு அன்று பொழுது விடிந்ததும் ராமர் ஸீதையோடும் சேனைகளோடும் தமது பட்டிணம் சென்றார். இவ்விதம் ராமர் அயோத்யாபுரியில் ஸீதையோடும் உறவினரோடும் கூடிச் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்.

12-வது சருக்கம்

ராஜ்யகாண்டத்தின் பூர்வபாகம்

முற்றிற்று.

உத்தரார்த்தம்.

13-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

ஒரு சமயம் ஸ்ரீராமர் சபையில் சுகமா உட்கார்ந்திருந்தார். அப்போது லக்ஷ்மணர் அருகினின்று சாமரம் வீசினர். மற்றுமுள்ள நண்பர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள். பாடகர்கள் பாடினார்கள். அச்சபையின்கண் வந்திருந்த இந்நகரத்தாருள் ஒருவன் தாஸிகளுடைய நர்த்தனம்முதலியவைகளைப் பார்த்து நகைத்தான். அவன் நகைத்ததை ராமபிரான் கேட்டதும், முன் லங்கையில் இராவணனுடன் போர்புரியும் சமயத்தில் தமது பாணங்களால் அறுபட்ட அவனுடைய சிரங்கள் நற்புத்தியை யடைந்து, நகைத்துக்கொண்டே தம்மை நமஸ்கரிக்க வருதுபோலத் தோன்றியதும், அச்சிரங்களின் பற்கள் முதலிய கோரங்களைப் பார்த்து பயமடைந்து, தம்மை விழுங்க வருவதாக நினைத்து நூற்றொரு தடவை பாணங்களை யெய்து அவைகளை யறுத்து ஆகாயத்தில் எறிந்த விஷயமும் ஞாபகத்துக்கு வந்தன. இவ்வாறு ஞாபகமுண்டானதும் அந்த இராவணன் தலைதான் அப்பொழுது வந்து, மந்தஹாஸம் செய்கிறதோ வெனக்கருதி, அச்சமயம் ஒருவரும் சிரிக்கவேண்டாம் என உத்தரவுசெய்தார். பிறகு வேறு சில சமயங்களில் யார் நகைத்தபோதிலும் இவ்வாறே ராமருக்கு ஞாபகம் வந்தமையால், "நான் பிறர் நகைப்பதைக் கேட்கும்போதெல்லாம் ராவணனது தலையின் விகாரமான சிரிப்பு, என் நினைவுக்கு வருகிறது. மாயாவியான ராக்ஷஸர்கள் எனக்கு இவ்வாறு நினைவுண்டாக்கி என்னைச் சாப்பிடுவதற்கு இங்கே வருவதுபோலவுந் தோன்றுகிறது. நீதி சாஸ்திரங்கள் சிரிப்பை விலக்கியிருக்கின்றன. ஆகையால் இனிப் பூமியிலுள்ளவர்கள் நகைப்பதே கூடாதென்று செய்துவிடுகிறேன்" என்று தீர்மானம் செய்துகொண்டு, இலக்ஷ்மணரையழைத்து "இவ்வுலகில் ஆடவர், மாதர், அல்லது நமது

84, R. H. ROAD. MADRAS-4

குழந்தைகள், ஆப்தபந்து மித்ரர்கள். ஆகிய ஒருவரும் இனிச் சிரிக்கவே கூடாது. அப்படி மீறிச் சிரித்தவர்களை நாம் தண்டித்து விடுவோம். இந்த ஆக்ஞையை எங்கும் பிரசித்தப்படுத்திவிடு" என்றார். லக்ஷ்மணர் அவர் உத்தரவுப்படியே பிரசித்தப்படுத்தினார். பட்டினத்து ஜனங்கள் இதை யறிந்து, தண்டனைக்குப் பயந்து, நர்த்தனம் கீதம் விகடம் முதலிய ஹாஸ்யகரமானவைகளொன்றையும் நடத்தவேயில்லை; மங்களகரமான உற்சவங்கள் அநேக விதமான கதைகள் இவைகளையும் கொண்டாடாமலிருந்து விட்டார்கள். அவசியமில்லாமல் பிரபுவைப் பார்க்க ஒருவனாவது சபைக்குப் போவதேயில்லை. புராணம் இதிகாசம் ஒன்றையும் படிப்பதில்லை. வீடுகளில் ஜாதகரணம் நாமகரணம் முதலான ஒன்றையும் செய்வதில்லை.

பூமியில் ஒரு வருஷம் இவ்வாறு இருந்தது. பின் சிரிப்புள்ளவருடைய முகத்தைக் காண்பது அரிதாய்விட்டது. ஒருவரும் அலங்காரம் செய்து கொள்வதில்லை. இவைகளை உற்சாக தேவதைகளறிந்து இந்திரனுக்கு தெரிவித்தன. இந்திரன் முதலான தேவர்கள் கர்மங்களுக்கு அங்கமாகத் தங்களை உலகத்தார் பூஜியாமல் இருப்பதைப் பிரமனுக்குத் தெரிவித்தார்கள். பிரமன், "ராமனை விட நாம் பலசாலிகளல்ல; அவர் எனக்குத் தந்தையாயிருப்பதால், அவருக்கு உபதேசம் பண்ண என்னால் முடியாது; ஆகையால் ஒரு யுக்தியால் எல்லாருக்கும் இதமுண்டாகும்படி இந்தக் காரியத்தைச் சாதிக்கிறேன்" என்று தேவர்களுக்குக்கூறிச் சமாதானம் பண்ணிவிட்டு பூலோகத்திற்கு வந்தார். அவர் அயோத்திக்கு அருகே ஒரு அரசமரத்தைக்கண்டு அதற்குள் புகுந்துகொண்டு வழிப்போக்கர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்தார். இவ்வாறிருக்கையில் அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஒரு விறகுக் கட்டுக்காரன் அரசமரம் சிரிப்பதைப் பார்த்துத் தானும் சிரித்தான். பிறகு அவன் விறகு விற்கக் கடைக்குச் சென்று அங்கும் அரசமரம் சிரித்ததைப் பார்த்துப் பின்னும் அதிகமாகச் சிரித்தான். இதைப்பார்த்த ராஜ தூதனும் தனக்

குண்டாகிய சிரிப்பை அடக்க முடியாமல் அதிகமாகச் சிரித்தான். இங்கே சிரித்ததுமன்றிப் பிறகு அவனே சபைக்குச் சென்று விறகு வெட்டியின் சிரிப்பை மனதில் நினைத்துப் பின்னும் அதிகமாய்ச் சிரித்தான். அதைக்கேட்டுச் சபையிலுள்ளவர்கள் சிரித்தார்கள். பிறகு ராமரும் அதிகமாய்ச் சிரித்துவிட்டார். உடனே ராமர் தாம் சிரித்தது எதற்காகவென்று ஆலோசித்து, சிரித்தவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுமென்று கட்டளையிட்ட நாமே இப்போது சிரித்தோமே, நம்மை இப்போது யார் தண்டிப்பது? நம்மை ஜனங்கள் என்ன சொல்வார்கள்? ராகவர் குற்றத்தைத் தாமே செய்துவிட்டார், இவரைத்தண்டிப்பது யார் என்றல்லவோ நமது ஆக்ஞையை லக்ஷியஞ் செய்ய மாட்டார்கள். இவ்வாறு நாம் செய்தது யோசனையின்றியதாம்" என்று நினைத்தார். அப்போதும் மறுபடியும் அடக்க முடியாமல் சிரித்தார். பிறகு ராமர் சபையோரை நோக்கி "நீங்கள் எதற்காகச் சிரித்தீர்கள். உங்களாலெனக்குச்சிரிப்புண்டாயிற்று. காரணங் கூறுங்கள் என்று கேட்டார். அவர்கள் சபையில் இப்போது வந்த தூதன் சிரித்தான். அதனால் நாங்களும் சிரித்தோம்" என்று சொன்னார்கள். ராமர் தூதனை யழைத்து "நீ எதற்காகச் சிரித்தாய்" என்று அவனைக் கேட்டார். அவன் "விறகுவெட்டி சிரித்ததைக்கண்டு நான் சிரித்தேன்" என்றான். உடனே ராமர் வேலைக்காரரைக்கொண்டு அந்தவிறகுவெட்டியைச் சபைக்கு அழைத்துவரச் சொன்னார்.

அந்த விறகுவெட்டி பயந்து நடுநடுங்கிக்கொண்டு ராமரிடம் வந்தான். ராமர் அவனைப் பார்த்து "நீயேன் சிரித்தாய்" என்று கேட்டார். அவன் பிரபுவே! நான் இந்த நகரத்திற்குச் சமீபத்தில் வந்துகொண்டிருக்கும் போது ஒரு அரசமரம் சிரித்தது. அதைப் பார்த்துச்சிரித்தேன். பிறகு கடையில் விறகு விற்கச்சென்ற போதும் அதை நினைத்துச் சிரித்தேன்." என்று வணக்கத்தோடு சொன்னான். அபூர்வமான இச்சொல்லைக்கேட்டு ராமர் மிகவும் ஆச்சரியமடைந்து, தமது வேலைக்காரர்களை யழைத்து "நீங்கள் வேகமாகச் சென்று இது உண்மையா, அல்லது பொய்யாவென்று

தெரிந்து கொண்டு விரைவில் வாருங்கள்" என்றனுப்பினர். வேலைக்காரர்கள் அவ்வாறே சென்று அரசமரம் சிரிப்பதைப் பார்த்து, மிகவும் ஆச்சரியப்பட்டு, ராமரிடம் ஓடிவந்து தெரிவித்தார்கள். ராமர் அதைக்கேட்டதும் ஆச்சரியமும் கோபமுமடைந்து வேலைக்காரரைப் பார்த்து, "இது நமது கட்டளையை மீறுகிற அடையாளமாயிருப்பதால், அந்த அரசமரத்தை நீங்கள் வெட்டி விடுங்கள்" என்று உத்தரவு செய்தார். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு அதி சீக்கிரத்தில் அம்மரத்தி னருகே சென்று வெட்ட ஆரம்பித்தார்கள். அதிலிருந்த பிர்மா அம்மரத்திலிருந்து அநேக கற்களை வருஷித்து வேலைக்காரர்களை யடித்துத் துரத்தி விட்டார். வேலைக்காரர்கள் அந்த அடி பொறுக்க மாட்டாமல் ராமரிடம் ஓடிவந்து நடந்ததைத் தெரிவித்தார்கள். ராமர் ஆச்சரியப்பட்டு, இன்னும் ஆயிரக்கணக்கான தூதர்களை யனுப்ப, அவர்களும் கல்லடிபட்டு ராமரிடம் வேகமாய் ஓடி வந்து அலறினார்கள். ராமர் அதனால் பெருங்கோப மடைந்து, அந்த மரத்தை வெட்டச் சேனைகளோடு சுமந்திரரை யனுப்பினர். அவரும் ராமரை வணங்கிவிட்டு அம்மரத்தின் சமீபஞ் சென்று அதை வெட்ட யத்தனித்தார். அப்போது அம்மரத்திலிருந்து வெளிப்பட்ட பெரும் கற்களால் அவரும் நன்றாய் அடிபட்டுக் கீழேவிழுந்தார். அதைக்கண்ட மற்றவர்கள் பயந்து அலறினார்கள். இது அயோத்தி யெங்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அப்படிச் சுமந்திரர் விழுந்ததைக் கேட்டு ராமர் சத்ருக்னரைத் தமது பிள்ளைகளோடு அதை வெட்டுவதற்காக அனுப்பினர். அப்போது பட்டிணத்து ஸ்திரீகளெல்லோரும் மிகுந்த ஆச்சரியமடைந்து மேன்மாடிகளின் மீதேறி வேடிக்கை பார்த்தார்கள். மற்றவரெல்லோரும் அவரைத் தொடர்ந்து அம்மரம் இருக்குமிடத்துக்குச் சென்றார்கள். சத்ருக்னர் பட்டிணத்திற்கு வெளியே வந்ததும், அவரது குதிரை யானை முதலியவைகள் அப்படியே வழியில் நின்றுவிட்டன; அடித்தும் நின்ற இடம் விட்டு அவை அசையவில்லை. அவ்வாறே குசன் லவன் இவர்களுடைய குதிரை யானை முதலியனவும் அங்கேயே நின்றுவிட்டன; அடித்

தும் அவை இடம்விட்டுப் போகவில்லை. இந்த ஆச்சரியத்தை ராம ரிடம் தெரிவித்தார்கள். ராமர் அதைக்கேட்டு மிகவும் பயந்து "இவ் விஷயத்தை நன்றாய் விசாரிக்க வேண்டும். இதில் ஏதோ விசேஷ மிருக்கிறது. புரோகிதரைக் கேட்க வேண்டும்" என்று நிச்சயித் துத் தாம் எல்லாவற்றையும் அறிந்தவரா யிருந்தாலும், புரோகி தரை அழைத்தார். அவர் அதி சீக்கிரத்தில் ராமரது சபைக்கு வந்தார். ராமர் அவரை எதிர்கொண்டழைத்து, ஆசனம் அளி த்து நன்றாய் உபசரித்து, அவரிடம் சமாசாரத்தைத் தெரிவித்தார். வசிஷ்ட முனிவர் தங்களது சரித்திரத்தை யியற்றின வான்மீகி முனிவரைக் கேட்கவேண்டும் என்று சொல்ல, ராமர் அவ் வாறே வான்மீகியை வரவழைத்து அவரைப் பூஜித்து அவரிடம் சமாசாரத்தைத் தெரிவித்தார். வான்மீகி முனிவர் அதைக்கேட்டு புன்சிரிப்படைந்து நீர் எல்லாம் அறிந்தவிஷயம்; என்னை எதற்குக் கேட்கிறீர். மானுட அவதாரத்திற்கேற்ப நீர் என்னைக் கேட்கின் றமையால், இப்பொழுது தெரிவிக்கிறேன் "நீர் வேடிக்கையை விட்டதால் வேடிக்கையைத் தரும்படியான உற்சவம் முதலிய காரியங்களெல்லாம் ஒரு வருஷமாய்ப் பூமியில் நின்றுபோய் விட் டன. ஆதலால் உற்சாக தேவதைகளும் கர்மாங்க தேவதைக ளும் பூமியில் தங்களது பூஜை குறைந்து போனதைக் கண்டு பிர்ம்மாவினிடம் முறையிட்டார்கள். பிர்ம்மா உம்மை வணங்கி உம்மிடத்தில் அதைச்சொல்லி நிவர்த்தி செய்து கொள்ளச் சக்தி யற்றவராய்த் தேவதைகளுக்கு நன்மையைச் செய்யக்கருதி அந்த அரசமரத்திற் புகுந்து கொண்டு இவ்வாறு செய்கிறார்." என்றார். இவ்விதம் முனிவர் கூறியதைக்கேட்டு ராமர் கோபமடைந்து "நானே இப்போது சென்று பிர்ம்மாவின் பலத்தைப் பார்க்கி றேன். ரகுசிரேஷ்டன் எவ்விதம் தமது சிக்ஷையை மாற்று வான்" என்று சொல்லிவிட்டுத் தமது சேனைக்குக் கட்டளை யிட்டார். அப்போது முனிசிரேஷ்டரான வான்மீகி "ஏ இரகு சிரேஷ்ட! கோபங் கொள்ளாமல் நான் கூறுவதைக் கேளும். நீர் சச்சிதானந்த ரூபமுள்ளவர். உமது சரிதம் ஆனந்த

மயமானது. நான் அதை வர்ணித்து முற்காலத்தில் கங்காதீரத்தில் யக்ஞஸமயத்தில் உமது பிள்ளைகளின் முகமாய் அதைக் கேட்கும்படி செய்தேன். அந்தச் சரிதத்தைக் கேட்டால், மனிதன் ஆனந்தரூப மடைந்து விடுவான். நீர் ஹாஸ்யத்தை விலக்கிவிட்டால், உமது சரிதமும் ஹாஸ்யரஸம் அற்றதாய்விடும். ஜனங்கள் கேட்கமாட்டார்கள். உமது சரிதத்தைப்பற்றி வேறுசில சொல்லுகிறேன் கேளும்; உமது சரிதத்தை நான் நூறுகோடி கிரந்தங்களாய் ஆதியில் செய்தேன். பிறகு அதில் பிரித்து சாரமுள்ளதாய் எடுத்து வியாஸமுனிவர் பதினெட்டுப் புராணங்களையும் உபபுராணங்களையும் இயற்றினர். இவ்வாறே முனிவர்கள் ஸாரம் ஸாரமாய் எடுத்து ஆறுசாஸ்திரம் முதலியவைகளையும் அநேக விதமாய்ச் செய்யப்போகிறார்கள். இந்தச் சரிதத்தில் கைகேயினுடைய துஷ்டத்தனத்தால், நீர் பதினான்கு வருஷம் காட்டில் ஸஞ்சரித்து எல்லாருக்கும் துக்கம் வரும்படியாகச் செய்த இருபத்திநாலாயிரம் சுலோகப்ரமாணமுள்ள பாகம் மாத்திரம் வான்மீகி செய்ததென்கிறார்கள். இதை யெல்லாம் அறிந்து இதற்கு மேற்பட்ட பாகத்தையும் நான் செய்திருக்கிறேன். யுத்தபாகத்தைக் காலை வேளையிலும் துக்கபாகத்தை மத்தியானத்திலும், ராத்திரியில் ஸாரதபாகத்தையும் எப்போதும் ஆனந்த ராமாயணத்தையும் கேட்க வேண்டும். யுத்தம் பாரதமென்றும், ஸாரதம் பாகவதமென்றும், யுள்ள இருபத்திநாலாயிரம் கிரந்தம் சோகமென்றும் சொல்லப்படுகின்றன. இந்த ஆனந்தராமாயணம் முன் என்னால் செய்யப்பட்ட நூறுகோடியில் 12000 பிரமாண மடங்கிய ஒன்பது காண்டங்களுள்ளது இது இவ்வுலகில் மிகவும் பிரசாரமுள்ளதாயிருக்கும். இது உமது கீர்த்தி மாலையை வர்ணிப்பதாயிருப்பதால், இதை ஒருவரும் கண்டனம் செய்யாது, சந்திர சூரியர் உள்ளவரையில், காப்பாற்றுவார்கள்; நான் நூறுகோடி கிரந்தங்களாகச் செய்த உமது சரிதம் வியாஸ முனிவரால் பிரிக்கப்பட்டது. இதை நான் நன்மையாகவே நினைத்தேன். ஏனென்றால், இந்தக் கலியுகத்தில் ஜனங்களெல்லாரும், அற்பாயுளை யுடையவர்களாயும் மந்தமதியை யுடையவர்களாயும் இருப்பதால், அதை முழுவதும்படிக்க ஒருவராலும் ஆகாது. அதைப் பதினெண் புராணங்களாகவும்

உபபுராணங்களாகவும் அவர் பிரித்து எழுதியது லோகோபகாரமே. ஆதலால்; நான் ஒன்பதுகாண்டமாய் எழுதிய இந்த ஆனந்த ராமாயணத்தைக் கெடுக்கக்கூடாது. நீர் ஹாஸ்யத்தை நிறுத்திவிடின், எல்லாம் சோகமயமாகும். அந்த ஆனந்தசரிதம் உலகில் பரவாது. ஆகையால், ஹாஸ்யத்தை நிறுத்தக் கூடாது. நான் வர்ணித்த உமது சரிதத்தைக் கேட்டால், ஜனங்கள் அவசியம் சிரிப்பார்கள். அப்படிச் சிரிக்கும்போது பற்களைக் காட்டாமல், துணியால் முகத்தை மூடிக்கொண்டு சிரிப்பதே எப்போதும் மங்களகரமானது. இதுவே மிகவும் சிரேஷ்டமானது. சிரிப்புள்ள முகத்துடன் கூடிய ஸ்திரீ எந்த வீட்டில் இருக்கிறளோ அந்த வீடு மிகவும் மங்களமுள்ளது. எவனது முகம் சிரிப்புள்ளதோ அவன் சிரேஷ்டமானவன். கோபத்தோடு கூடின முகமுடையவர்களை ஜனங்கள் நிந்திப்பார்கள். அதிகமான ஹாஸ்யத்தை நிந்திப்பவர்கள் முனிசிரேஷ்டர்களேயாவர். ஆகையால் தாங்கள் தயைசெய்து என் வார்த்தையைக் கேட்கவேண்டும். பிரம்மா கர்வங்கொண்டு இங்குவரவில்லை; உம்மைத் தந்தையென்று அறிகிறர். ஆதலால் உம்மைச் சரணமடையும்படி செய்கிறேன்" என்று வணக்கமாகச் சொன்னர். இவ் வார்த்தையை இராமர் கேட்டு நல்லதென ஒப்புக்கொண்டு, தாம் அவர் இஷ்டப்படியே செய்வதாகத் தீர்மானித்தார். உடனே வான்மீகியும் மனமகிழ்ச்சியுடன் ஒரு சிஷ்யனை யனுப்பிப் பிரம்மாவை அரசமரத்தி லிருந்து, இறக்கி அழைத்துவரும்படி செய்தார். எல்லாக் குதிரைகளும் எழுந்திருந்து பட்டணத்திற்குச் சென்றன. சத்ருக்னரும் சேனையோடு சென்று ராமருக்கருகில் நின்றர். ராமரது குழந்தைகளும் வந்து அவருக்கெதிரில் உட்கார்ந்தார்கள். ராமரது உத்தரவால் விறகுவெட்டியும் தூதர்களும் விடப்பட்டார்கள். இந்திரன் அமுதத்தை வருஷிக்க ஸுமந்திரரும் தூதர்களும் சுகமாய் எழுந்திருந்தார்கள். அவர்கள் ராமர் சமீபத்தில் வந்து ஆனந்தமாய் நின்றர்கள்.

பிறகு இந்திரன் தேவர்களோடு ராமரிடம்சென்று அவரை வணங்கினன். பிரம்மாவும் ராமரை வணங்கி, நான் ஏதாவது

அபராதம் செய்திருந்தால், அதை மன்னித்தல்வேண்டு மென்றும், நாங்கள் எப்போதும் தங்களையே ஆச்ரயித்தவர்களாதலால் எங்களை எப்போதும் காப்பாற்றவேண்டும் என்றும் பிரார்த்தித்து மேலே கூறுகிறார்.

முற்காலத்தில் எங்கள் நன்மைக்காகவே நீங்கள் அநேகம் அவதாரங்களைச்செய்து பகைவர்களைக் கொன்றீர்கள். வேதத்தை அபகரித்த சங்காஸுரன் மத்ஸ்யரூபத்தால் கொல்லப்பட்டான். அவ்வாறே எங்களுக்காக அமுதத்தைக் கடையும்போது கீழே முழ்கின மந்தர பர்வதத்தைக் கூர்ம ரூபத்தால் தூக்கினீர்கள். பூமி என்னுடையதென்று அதைப்பாதாளத்திற்குக் கொண்டு போன ஹிரண்யாக்ஷனை வராஹ ரூபத்தால் கொன்றீர். ப்ரஹ்லாதருடைய வார்த்தையால், தூணிலிருந்து கிளம்பி, ஹிரண்ய கசிபுவைக்கொன்றீர். முற்காலத்தில் இந்திரனது ராஜ்யம் திருவிழந்து போகக்கண்டு வாமன ரூபமெடுத்து பலியைப் பாதாளத்தில் அழுத்தினீர். அரசரெல்லோரும் அதர்மத்தில் பிரவிருத்தியுடையவர்களென்று பரசுராமாவதாரம் செய்து அவர்களை நாசம் செய்தீர். ராமாவதாரத்தில் பத்னிக்குத் துரோஹஞ்செய்த இராவணன் கும்பகர்ணனென்னும் ராக்ஷஸர்களை நாசம் செய்தீர். அவர்கள் தேவசாபத்தால் இரண்டுதடவை கரையேற்றப் பட்டார்கள். இதற்குப் பிறகு இன்னுமொருதடவை அவர்களைக் கரையேற்றப் போகிறீர். இவ்வாறு பிரம்மா கூறியதைக் கேட்டு முனிசிரேஷ்டரான வஸிஷ்டர் எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும், ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக பிரம்மாவைக் கேட்கிறார்.

13-வது சருக்கம்

முற்றிற்று.

14-வது சருக்கம்.

வஸிஷ்டர் கூறுகிறார்.

முற்காலத்தில் எந்த இரண்டு கணங்கள் தேவரால் சபிக்கப்பட்டு, இரண்டுதடவை இராமரால் கரையேற்றப் பட்டார்கள். இதற்குப் பிறகும் அவர்களை இராமர் எவ்விதம் கரையேற்றப் போகிறார் என்று கேட்டார். இதைக்கேட்ட பிர்மா சிரித்து இவைகளைத் தங்கள் சித்தம் அறியுமாயினும் ஜனங்களுக்குத் தெரியும்படி செய்வதற்காக, என்னைக் கேட்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆகையால் நான் எல்லாவற்றையும் விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன் கவனித்துக் கேட்கவேண்டும்.

ஒருகாலத்தில் மஹாவிஷ்ணு வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மியோடு ரகஸ்யமாய் வீற்றிருந்தார். அப்போது அவரைப் பார்ப்பதற்கு, தேவவைத்தியர்களான அசுவனி குமாரர்கள் வந்தார்கள். அவர்களைப்பார்த்து துவாரபாலகர்களான ஜயன் விஜயன் என்பவர்கள் “பிரபுவான மஹாவிஷ்ணு இப்போது ரகஸ்யமாய் வீற்றிருப்பதால், அவரைப்பார்ப்பதற்கு இது சமயமல்ல” என்றார்கள். அசுவனி குமாரர்கள் “நாங்கள் இப்போதுதான் பார்க்க வேண்டும்; ஆதலால் நாங்கள் வந்திருப்பதைப் பகவானிடம் தெரிவிக்க வேண்டும்” என்று சொன்னார்கள். துவாரபாலகர்கள் “மஹாலக்ஷ்மியோடு ரகஸ்யமாயிருக்கும் மஹாவிஷ்ணுவினிடம் நாங்கள் இப்போது போகமாட்டோம்” என்று மறுத்து விட்டார்கள்.

இவ்வாறு இரண்டு மூன்று தடவை துவாரபாலகர்கள் மறுத்துவிட, அசுவனி குமாரர்கள் மிகுந்த கோபத்தோடு “எங்கள் வார்த்தையை நீங்கள் கேளாததால் நீங்கள் மூன்று தடவை பூமியில் பிறவியை யடையக் கடவீர்கள்; இதற்கையமில்லை என்று சபித்தார்கள். பிறகு தேவகணங்களான துவாரபாலகர்களும் “குற்றமில்லாமல் எங்களைச் சபித்ததால் நீங்களும் பூமியில் ஒரு ஜன்மத்தை யடையக்கடவீர்கள்” என்று தேவவைத்தியர்களைச் சபித்தார்கள். இவ்வாறு அவர்கள் ஒருவரை

யொருவர் சபித்துக்கொண்டு; ஹா! ஹா! வென்று கத்தினார்கள். இதைச் செவியுற்ற மகாவிஷ்ணு அவர்களைக் கூப்பிட்டுவிசாரித்து, விஷயங்களைத் தெரிந்து கொண்டார். பிறகு அந்த நான்கு பேரும் "சீக்கிரம் எங்களுக்கு முக்திகிடைக்கும்படி அநுக்ரகம் செய்ய வேண்டும்" என்று விஷ்ணுவைவேண்ட, அதற்கு அவர் "என்னைப் பகைத்துக் கொண்டால், விரைவில் முத்தியை அடையலாம்; என்னிடத்தில் பக்தியாய் இருந்தால் ஏழு ஜன்மங்களுக்குப் பிறகு என்னை யடைதல் கூடும். இவைகளில் எது வேண்டுமானாலும் நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். அவர்கள் "உங்களை விரோதித்துக் கொண்டாவது உங்கள் தரிசனத்தைச் சீக்கிரம் அடையவேண்டும்" என்று கூறி அவ்விதமே பூமியில் ஜன்மத்தை யடைந்தார்கள்.

ஜயன் ஹிரண்யாக்ஷனாகவும், விஜயன் ஹிரண்ய கசிபுவாகவும் பிறந்தார்கள். மஹா விஷ்ணு வராஹ ரூபமெடுத்து ஹிரண்யாக்ஷனையும், நரஸிம்ம ரூபங்கொண்டு ஹிரண்ய கசிபுவையும் நாசம் செய்தார். மறுபடியும் அவர்கள் ஜன்மமெடுக்க விரும்பி, ஜயன் ராவணனாகவும், விஜயன் கும்பகர்ணனாகவும் பூமியில் பிறந்தார்கள். அப்பொழுது மகாவிஷ்ணு ராமாவதாரமெடுத்து அவர்களைக் கொன்றார். அந்த அசுவனி குமாரர்களில் ஒருவன் ஐராவணனென்றும், மற்றொருவன் மைராவணனென்றும் பாதாளலோகத்தில் பிறந்து ராமரது கையால் மரணமடைந்தார்கள். பின்னர், ஜயன் சிசுபாலனாகவும் விஜயன் தந்தவக்தரனாகவும் பூமியில் பிறக்கப் போகிறார்கள். அப்போது மஹாவிஷ்ணு துவாபரயுகத்தில் கிருஷ்ணவதாரமெடுத்து அவ்விருவரையும் நாசஞ் செய்யப் போகிறார். தேவகணமான ஜயன் விஜயன் இருவரும் இவ்வாறு பூலோகத்தில் மூன்று ஜன்மங்களை யனுபவித்துவிட்டு மஹா விஷ்ணுவினது திவ்யகிருக துவார பாலகர்களாகப் போய்ச்சேர்வார்கள். தேவ வைத்தியர்களான அசுவனி தேவர்களும் முன்போல் தேவலோகத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். ஏ ரிஷியே! தேவகணங்களுக்குச் சாபம் வந்ததற்குக் காரணம் என்னவென்று தாங்கள் கேட்டதற்கு நான் விஸ்தாரமாய்க் கூறி

விட்டேன். ஏ ராகவ! நீரும் இதற்குப் பிறகு ஜராஸந்தன் கம்ஸன் முதலியவர்களால் இந்தப் பூமி மிகவும் வருத்தப்படுவதைப் பார்த்து, கிருஷ்ணாவதாரமெடுத்து விளையாட்டாய் எல்லாரையும் கொன்று, பூமிக்குச் சுகத்தை யுண்டாக்கப் போகிறீர். அதற்குப்பிறகு உலகில் அதிகமாகும் பௌத்தர்களையும் புத்தாவதாரம் செய்து ஜெயிக்கப்போகிறீர். கலியுகத்தின் கடைசியில் ஜாதிகளெல்லாம் ஒன்றாய் இருப்பதைப்பார்த்து கல்கி ரூபமெடுத்து எல்லாரையும் விளையாட்டாய் ஸம்ஹாரம் செய்யப்போகிறீர். இவ்விதம் நீங்கள் பத்து அவதாரங்களையும் உலகநன்மைக்காகவே செய்வீர்கள் என்று துதித்தார்.

ராமதாஸர் கூறுகிறார்.

இப்படித் தோத்திரம் செய்த பிர்ம்மாவை ராமர் ஆலிங்கனம்செய்து ஆசனத்தில் உட்காரவைத்து ' உமக்காக முனிவரின் உத்தரவுப்படி ஜனங்களை நகைக்கும்படி ஆஜ்ஞாபித்தேன். எல்லாம் வான்மீகி முனிவர் சொன்னபடியே யிருக்கட்டும்'' என்றார்; இதைக்கேட்டு தேவர் முதலானவர்களும் சந்தோஷித்தார்கள். பிறகு ராமர் சபையில் வான்மீகியை நோக்கி "நீங்கள் நான் அவதாரம் செய்வதற்கு முன் என் சரித்திரத்தைச் செய்திருப்பதால் அது தங்களுக்கு எவ்வாறு தெரிந்தது? யார் உபதேசித்தார்கள்? முன் ஜன்மத்தில் நீர் யாராகவிருந்து என்ன புண்யத்தைச் செய்தீர்? இவைகளை யெல்லாம் எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்'' என்றார். இதைக்கேட்டு வான்மீகி முனிவர் சபையில் கூறுகிறார்.

வான்மீகி முனிவர் கூறுகிறார்:—ராம! நீர் நன்றாய்க்கேட்டீர். சொல்லுவதைக் கவனமாகக் கேளும். உமது திவ்ய நாம மகிமையை யாரால் தான் வர்ணிக்க முடியும்? ஆயினும் நான் அதை என் புத்திக்கு எட்டியவாறு வர்ணித்தமையால் பிரும்மரிஷியாயினேன். என் பூர்வ ஜன்ம சரிதத்தைச் சொல்லுகிறேன் கேளும். பம்பா தீரத்தில் சங்கனென்று ஒரு கீர்த்திபெற்ற பிராமணன் இருந்தார். அவர் ஒருநாள் கோதாவரி நதியில் ஸ்நானத்

திற்குச் சென்று அங்கே விதிப்பிரகாரம் ஸ்நானம் செய்துவிட்டு வைகாசி மாதத்தில் மத்தியான வேளையில் ஜனசஞ்சார மற்றதாயும் மிகவும் பயங்கரமாயுமுள்ள ஒரு காட்டிற்குள் பிரவேசித்தார். அப்போது ஒரு வில்லை யெடுத்துக்கொண்டு பிரயாணிகளுக்கெல்லாம் யமன்போன்ற ஒரு வேடன் அங்கே வந்து, குண்டலந்தரித்தவராயும் சூரியன்போல் பிரகாசிக்கிறவராயும் இருக்கிற அந்தப் பிராம்மணனைக் கத்தியால் பயமுறுத்திக் குண்டலம், பாதரக்ஷை, குடை, வஸ்திரம், கமண்டலம் முதலிய எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு அவரைத் துரத்தி விட்டுப் போய்விட்டான். அப்படியே கற்கள் நிறைந்த காட்டுவழியே சென்று மத்தியான வேளையில் மிகவும் கொரோமான வெயிலில் நடக்கமுடியாமல் தவித்துக்கொண்டு புல்நிறைந்த ஓரிடத்திற்போய் அங்கு ஒதுங்கி நின்றார். அதைக்கண்டஅவ்வேடனுக்கு ஒருநல்லபுத்தியுண்டாயிற்று. அதாவது "நாம் காட்டில் திருட்டுத்தனத்தால் வெகு பதார்த்தங்களைச் சம்பாதிக்கிறோம். இந்த அந்தணனுடைய இந்தப் பாதரக்ஷைகளை அவனுக்கே கொடுத்துவிடுவோம். அவைகளைக் கொண்டு இந்தப் பிராம்மணன் வெகு சுகமாய் தனது இருப்பிடம் போய்ச் சேரட்டும்; இந்த வெயில் வேளையில் பாதரக்ஷைகளைக் கொடுப்பது மிகவும் புண்யமாகும்" என்று தனக்குள் சிந்தித்து, உடனே அந்தப் பிராம்மணன் இருக்கும் இடத்திற்கு வேகமாய்ச் சென்று அவ்வேடன் பாதரக்ஷைகளை அவருக்குக் கொடுத்தான். அவர் அதைப் பெற்றுக்கொண்டு அதிக சந்தோஷமடைந்து, "உனக்குச் சுகமுண்டாகுக" என்று அவனை வாழ்த்திவிட்டு மறுபடியும் அவனிடம் கூறுகிறார்.

"ஏ வேடா! நீ இந்த வைகாசி மாதத்தில் பாதரக்ஷைதானம் செய்ததால், உனக்கு முன் ஜன்மத்திய புண்யம் கொஞ்சம் இருக்கிறது." என்றார். இதைக்கேட்டு வேடன் "நான் பூர்வஜன்மத்தில் என்ன புண்யம் செய்திருக்கிறேன்? அதை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்" என்றான்.

"இங்கு வெயில் அதிகமா யிருப்பதோடு ஜலமும் நிழலும் இல்லாமலிருப்பதால், நாம் சுகமான இடத்திற்குப் போய் அங்கே

சிரமபரிகாரம் செய்து கொண்டு பேசத்தொடங்குவோம்" என்று பிராம்மணர் சொன்னார். வேடன் அதைக் கேட்டுச் சந்தோஷித்துக் கைகூப்பிக்கொண்டு, இங்கே சமீபத்தில் மிகவும் சுகமான இடமிருக்கிறது. அங்கே அநேக பல விருக்ஷங்களும் இருக்கின்றன. அங்குச் சென்றால் சௌக்கியமாயிருக்கும்" என்றான். உடனே பிராம்மணர் அவனோடு சிறிது தூரம்சென்று, அங்கே எதிரில் ஒரு சிரேஷ்டமான குளத்தைக்கண்டு, அதில் ஸ்நானஞ் செய்து வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு, அப்போது செய்ய வேண்டிய கிரிகைகளை யெல்லாம் செய்து முடித்து, தேவபூஜை செய்து நல்ல பழங்களைப் பறித்து ஆகாரமாக உட்கொண்டு ஜலத்தைக் குடித்து நல்ல நிழலில்சுகமாய் உட்கார்ந்துகொண்டு இளைப்பாறிப் பின் "உனது பூர்வ புண்யங்களைச் சொல்லுகிறேன்" என்று அவனிடம் கூறுவாராயினர்:—

முன் ஜன்மத்தில் நீ சாகலமென்னும் தேசத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் பிறந்து வேதாத்தியயனம் செய்த ஒரு பிராம்மணனா யிருந்தாய். உனக்கு ஸ்தம்பன் என்று பெயர். உனக்கு ஒரு தாஸி பிரியமாயிருந்தாள். அவளைப் புணரும் தோஷத்தால் நீ நித்தியக்கிரியைகளை யெல்லாம் விட்டு, சூத்திரன்போல் மூர்க்க குணமடைந்து மிகவும் கெட்டுப்போய் விட்டாய். அப்படிப்பட்ட உன்னுடைய பத்தினியான காந்திமதி என்பவள் அந்தக்காலத்திலும் உன்னிடத்தில் அதிக பயபக்தியோடு உன்னை உபசரித்து வந்தாள். உன்னிடத்திலுள்ள பயத்தால் அந்தத் தாசிக்கும் அவள் அதிகமான பணிவிடைகளைச் செய்து வந்தாள்.

இப்படி யிருக்கையில், ஒருநாள் அவளது பர்த்தாவாகிய நீ மிகவும் அபத்யமான பதார்த்தங்களைச் சாப்பிட்டுவிட்டு வாந்தி செய்து கொண்டும், பேதியால் வருந்திக்கொண்டும் இருந்தாய். அதனால் உனக்குப் பெரும் வியாதி யுண்டாயிற்று. உன்னிடத்தில் அதிகப்பிரியமுள்ள அந்தத்தாசியும் அந்தக்காலத்தில் உன்னிடம் பணம் ஒன்றுமில்லை யென்று தெரிந்து வேறொருவனோடு சேர்ந்து கொண்டு உன்னை லட்சியம் செய்யவில்லை.

அப்போது நீ மிகவும் வாடிய முகத்தோடு வியாதியால் பீடிக்கப்பட்டு மிகவும் அழுதுகொண்டு பத்தினியிடம் "ஏ தேவி! நீதான் இச் சமயத்தில் என்னைக் கைவிடாது காப்பாற்ற வேண்டும். நான் பதிவிரதையான உன்னை அவமானப்படுத்தி விட்டு, இப்போது இவ்வாறு அனுபவிக்கிறேன். இரவும் பகலும் சாதுக்களால் நிந்திக்கப்படுகிறேன். வணங்கிய பதிவிரதையான மனைவியை எவன் அஞ்ஞானத்தால் அவமானப் படுத்துகிறானோ அவன் நபும்ஸகனாய்ப் பிறப்பானென்னும் சாஸ்திரம் எனக்குத் தெரிந்திருந்தாலும், நான் மோகத்தால் இப்படிப்பட்ட கெட்ட நிலைமையை அடைந்துவிட்டேன். இச்சமயத்தில் நீதான் என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும் வேண்டிக்கொள்ள, அவள் கைகூப்பிக்கொண்டு "நீங்கள் என்னிடம் இவ்வாறு தீனமான வார்த்தைகளைச் சொல்லவேண்டாம். தங்களிடம் எனக்குக் கோபமே கிடையாது. நான் பூர்வஜன்மத்தில் செய்த கர்மங்களின் பலன்களை அனுபவித்துத் தீரவேண்டும். ஆகையால், இப்போதும் வெகு அன்போடு நான் உங்களை ஆராதிப்பதில் சிறிதும் ஆக்ஷேபணையில்லை" என்று வெகு வணக்கத்துடன் சொன்னாள். அப்படியே தன் தகப்பனார் வீட்டிலிருந்து, பணத்தைக் கொண்டுவந்து ஈச்வராராதனம் செய்வதோடு இரவும் பகலும் தன் நாயகனது சரீரத்தை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டு, ஒரு நிமிஷங்கூடத் தூங்காமல் காத்துக்கொண்டிருந்தாள். "கணபதி என்னுடைய நாயகனுடைய வியாதிகளை நிவர்த்தி செய்து அவருக்குச் சுகத்தை யுண்டாக்கட்டும். அப்போது அவருக்கு மோதகம் செய்து நிவேதனம் செய்கிறேன்! சண்டிகை எனது பர்த்தாவை ரக்ஷிக்கட்டும். அவளுக்கு நல்ல ருசியுள்ள போஜனம் செய்விக்கிறேன். எல்லாத் தேவர்களும் அவரை ரக்ஷித்து அவருக்குச் சுகத்தை யுண்டாக்கட்டும்" என்று இவ்விதம் ஒவ்வொரு நாளும் வேண்டிக்கொண்டு தான் ஆகாரம் உண்பதையும் ஆடை ஆபரணம் முதலானவைகளணிவதையும் ஒழித்து, விரதங்களை அநுஷ்டித்துக் கொண்டிருந்தாள். அப்போது மஹாத்மாவான தேவலரென்னும் ஒரு முனிவர்

வைகாசி மாதத்தில் வெயிலால் வருத்தமடைந்து அவ்வுத்தமியின் வீட்டிற்கு வந்தார்.

அப்போது உனது பத்தினியாகிய அந்த மாது "மஹாத்மாவான வைத்தியர் வீட்டிற்கு வந்திருக்கிறார். அவருக்கு நான் பூஜைசெய்கிறேன். அதனால் தங்களது வியாதிதொலையு" மென்று உன்னிடம் சொல்லிவிட்டு, அவருக்கு அர்க்கியம் பாத்யம் முதலியவைகளைக் கொடுத்து அவரது சரணாரவிந்தங்களைச் சுத்தி செய்து அந்தத்தீர்த்தத்தை உனதுசிரஸில்ப்ரோக்ஷித்தாள். பிறகு அதையே உட்கொள்ளும்படி உனக்குக் கொடுத்தாள். மஹாத்மாவான அவருக்குப் பானகத்தைக் கொடுத்து நல்ல பக்ஷணங்களோடு அவருக்குப் போஜனம் செய்வித்தாள். பிறகு அவர் அங்கேயே அன்று இளைப்பாறிவிட்டு அடுத்த நாள் காலையில் வேறு ஊருக்குச் சென்றார். பிறகு கொஞ்சக்காலத்திற்கெல்லாம் உனக்கு ஜ்வரமும் ஜன்னியும் உண்டாகி, அதனால் நீ மிகவும் வருந்திக் கடைசியில் அந்தத் தாசியையே நினைத்துக்கொண்டு, காலதர்மத்தை யடைந்துவிட்டாய். அப்போது உனது பத்னியான காந்திமதியும் தனது தங்கக்காப்புகளை விற்று விதிப்பிரகாரம் சிதையடுக்கித் தானும் பரிசுத்தமாக ஸஹகமனம் செய்து விட்டாள். பிறகு மஹா பதிவிரதையான அவ்வுத்தமி மஹாவிஷ்ணு லோகத்தை யடைந்தாள்.

நீ அந்தியகாலத்தில் தாசியை நினைத்துக்கொண்டே தேகத்தை விட்டதால், நல்ல ஆசாரங்களை பனுசரியாத, துராத்மாவான வேடனாகப் பிறந்தாய். அதிலேயும் கடுங்கோடையில் எல்லாரையும் பயமுறுத்தித் தொந்தரை செய்துகொண் டிருக்கிறாய். முற்பிறப்பில் வைகாசி மாதத்தில் நல்ல பிராம்மணனுக்கு உன்மனைவி பானகத்தைக்கொடுத்த புண்ணியத்தால், இப்போது இந்தக்காலத்தில் நீ எனக்குப் பாதரக்ஷைகளைக் கொடுத்தாய். சிரேஷ்டமான முனிவினுடைய ஸ்ரீபாதபத்ம தீர்த்தத்தை சிரஸில் பக்தியோடு தரித்துக் கொண்டமையால் இப்போது இந்த வனத்தில் என்னோடு கூடி உனது புண்ணியங்களைக் கேட்பதற்கு உனக்கு எண்ண முண்டாயிற்று. முற்சென்மத்தில் வாயில் விரலை

வைத்துக் கொண்டே இறந்ததினால் இப்போது இவ்வனத்தில் உனக்கு மாமிசத்தைத் தின்ன நேர்ந்தது. அந்தத் தாசியும் இப்போது உனக்கு பத்தினியா யிருக்கிறாள். நீ படுக்கையில் படுத்துக்கொண்டே இறந்ததால் இப்போது நீ எக்காலத்திலும் தரையில் படுக்கும்படியாக விருக்கிறது. நீ போனஜன்மத்தில் செய்தபாவம் புண்ணியம் இவைகளை ஞானதிருஷ்டியா லறிந்து உனக்கு நன்றாய்ச் சொன்னேன். இதற்குப் பிறகு வரும் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். ஒரு குளக்கரையில் க்ருணு வென்னும் ரிஷியொருவர் குரூரமாய்த் தவம் செய்யப் போகிறார். தவத்தின் முடிவில் அவரது கண்களி லிருந்து வெளியில் பெருகும் வீரியத்தை ஒரு பாம்பு பார்த்து, ருதுகாலத்தில் அதைக் கிரகிக்கப் போகிறது. நீ அதற்குப் பிறக்கப் போகிறாய். வேடர்கள் உன்னை வளர்ப்பார்கள். ஆதலால் நீ வேடனாகப்போகிறாய். நீ இப்போது பாதரக்ஷைகளைத் தானம் செய்த தர்மத்தால், ஏழு முனிசிரேஷ்டர்களோடு உனக்குச் சேர்க்கையுண்டாகப்போகிறது. அவர்களது அநுக்கிரகத்தால் நீ வான்மீகி முனிவராகப்போகிறாய்; நீ இராமகதையை வெகு நன்றாய்ச் செய்யப் போகிறாய்.

வான்மீகி கூறுகிறார்:—சங்கனென்ற அந்த அந்தணர் இவ்வாறு வேடனுக்குச் சொல்லிவிட்டு, வைகாசிமாதத்தில் செய்யும் தர்மங்களின் பலன்களையும் புகழ்ந்துவிட்டு, அவ்வேடன் கொடுத்த தமது குண்டலம் முதலியவைகளை யடைந்து சந்தோஷத்துடன் கௌதமீ தீரத்திற்குப் போய்விட்டார். அந்தச் சங்கருடைய வசனப்படி வேடன் அந்தக் காட்டில் வைகாசிமாதத்திய தர்மங்களைக்கிடைக்கும் பதார்த்தங்களால் பிரியமாய்ச்செய்து வந்தான். இவ்வாறு வேடஜன்மம் தொலைந்ததும், நான் காட்டில் க்ருணுவின் புத்திரனாகப் பாம்பின் வயிற்றில் பிறந்தேன். பிறகு வேடர்களால் வளர்க்கப்பட்டேன். நான் ஜன்மாந்திரத்தில் பிராம்மணனானாலும் எப்போதும் சூத்திராசாரத்தில் ஆசையுள்ளவனா யிருந்தேன். ஆதலால் இந்திரியக் கட்டில்லாத எனக்குச் சூத்திர ஸ்திரீயினிடம் வெகு பிள்ளைகள் பிறந்தார்கள். பிறகுநான் திருடர்களோடு சேர்ந்து திருடனானேன்.

எப்போதும் வில்லு அம்புகளைத் தரித்துக்கொண்டு பிராணிகளுக்கு யமன் போன்றவனாயிருந்தேன். ஒருகாலத்தில் அப்பெரிய காட்டில் சூரியன்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஏழு முனிசிரேஷ்டர்களை நான் பிரத்தியக்ஷமாகக் கண்டேன். உடனே அவர்களது சாமான்களைப் பிடுங்கிக்கொள்ள வெகு ஆசையோடு அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினேன். அப்போது அவர்கள் "ஏ பிராம்மணா! நீ எதற்காக ஓடிவருகிறாய் நில் நில்" என்றார்கள். அதற்கு நான் "ஏ முனி சிரேஷ்டர்களே! நான் மனைவி மக்களுடனிருக்கிறேன். அவர்கள் எப்போதும் பசியால் வருந்திக்கொண்டிருப்பதால், அவர்களைக் காப்பாற்றுவதற்காக நான் இவ்வாறு செய்யவேண்டியதாயிருக்கிறது" என்றேன். பிறகு அவர்கள் வெகு அன்போடு என்னிடம் "நீ வீட்டிற்குச் சென்று பிரதிதினம் நான் உங்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்யும் பாபத்தை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா வென்று உன் மனைவி குழந்தை முதலாயவர்களைக் கேட்டு அதற்கு அவர்கள் சொல்லும் மறுமொழியை எங்களிடம் வந்து சொல்லு. நாங்கள் நிச்சயமாய் இங்கேயே யிருக்கிறோம். இதைவிட்டு அப்புறம் போகவில்லை; இது நிச்சயம். அப்படிப்போனால் எங்களுக்கு பிரம்மஹத்தியினாலுண்டாகும் பாபமும், சுராபானஞ் செய்வதனாலுண்டாகும் பாபமும், சொர்ணத்தைத் திருடுவதினாலுண்டாகும் பாபமும், குருபத்னியைப் புணர்ந்த பாபமும், பிராம்மணரின் பொருளை அபகரித்த பாபமும் அவசியமுண்டாகட்டும்" என்று பிரதிக்ஞை செய்துகொடுத்து என்னை வீட்டிற்கு அனுப்பினார்கள். நானும் அவ்வாறே சென்று முனிவர்கள் சொன்னபடி குடும்பத்தாரைக் கேட்டதற்கு அவர்கள் "பாபம் உன்னைச் சேர்ந்தது. எங்களுக்கு பாகந்தான் உண்டு" என்றார்கள். உடனே நான் ஸம்ஸாரத்தில் வெறுப்பையடைந்து, தயையோடு முனிவர் காத்துக்கொண்டிருக்குமிடத்திற்கு மறுபடியும் திரும்பிவந்து, அவர்களைப் பார்த்தேன். உடனே என்மனம் சுத்தமாய் விட்டது. அக்கணமே பாண முதலானவைகளைப் பூமியிலெறிந்து விட்டு தண்டம்போல் கீழேவிழுந்து "ஏ முனி சிரேஷ்டர்களே! தயையோடு என்னைக் காத்தருள வேண்டும்" என்று அவர்களை வேண்டிக்

கொண்டேன். அவர்கள் வெகு தயையோடு என்னை யெழுந்திருக்கச் சொல்லி "உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறோம் அதனால் நீ மோக்ஷத்தை யடைவாய்" என்று "நல்ல நடத்தை யுடையவனா யிருந்தால், நல்ல மந்திரத்தை யுபதேசிக்கலாம். கெட்ட ஆசாரமுள்ள இவனுக் கென்ன செய்வது" என ஒருவரோ டொருவர் ஆலோசித்துக் கொண்டு ஸ்ரீராம! அவர்கள் உமது திவ்யநாம மந்திரத்தை மாற்றி எனக்கு உபதேசஞ் செய்து இங்கிருந்து மௌனத்தைப் பூண்டவனாய் "மரா" வென்னும் இந்த மந்திரத்தை யெப்போதும் ஜபித்துக்கொண்டிரு; நாங்கள் மறுபடியும் திரும்பிவருகிறோம்" என்று சொல்லிவிட்டு அவர்கள் தமது திவ்யலோகஞ் சென்றார்கள். நான் அவர்கள் உபதேசித்தபடியே வெளி விஷயங்களை மறந்து ஒரே மனதோடு ஜபித்துக்கொண்டிருந்தேன். அங்கே தவத்திற்குச் சாக்ஷியாக ஒரு தண்டத்தை நிறுத்தி யிருந்தேன். இவ்வாறு வெகுகால மௌனமுடன் அசைவற்றிருந்த என்மேல் ஒரு புற்று கிளம்பிற்று. எனது தவத்தின் பலத்தால் அந்தத் தண்டமும் அழகிய ஒரு மரமாயிற்று. இந்தப்படி ஆயிரம் யுகமானதற்குப் பிறகு அந்த ரிஷிகள் மறுபடியும் திரும்பிவந்து தயவுடன் "வெளியில்வா" என்று யென்னை யழைக்க நான் வெகு சீக்கிரம் புற்றிலிருந்து சூரியன் வெளிப்படுவதுபோல், வெளியே வந்துவிட்டேன். அப்போது முனிவரெல்லாம் "நீர் வால்மீகத்தி (கறையான்புற்றி)லிருந்து வெளியே வந்ததால் உமக்கு வால்மீகி என்று பெயராகுக" எனச் சொல்லிவிட்டு, அவர்களது திவ்யலோகஞ் சென்றார்கள். ஸ்ரீராமா! நான் உமது திவ்ய நாமத்தின் மகிமையால் இவ்விதமானேன்.

ஒருகாலத்தில் பரமசிவனிடம் பிரமா உமது சரித்திரத்தைக்கேட்டு மிகவும் ஆனந்தமடைந்து நாரதருக்கு உபதேசித்தார். நாரதர் வேதவாக்கியங்களால், எனக்கு உபதேசித்தார். பிறகு தமஸா நதிக்கரையில் ஆணும் பெண்ணுமான கிரௌஞ்ச பக்ஷிகள் வெகு உல்லாசமாக விளையாடிக்கொண் டிருக்கும்போது அவைகளில் ஆண் பக்ஷியை வேடனொருவன் பாணத்தால் அடித்தான். அதனால் மிகவும் வருத்தத்தோடு அலறிக்கொண்டிருந்த பெண் பக்ஷியை உத்தேசித்து என் மனத்திலிருந்த துக்கத்தை வெளியிடும்போது அது 32 அக்ஷரமுள்ள சுலோகமாக வந்தது.

உடனே இந்தப் பிர்ம்மாவும் என்னிடம் வந்து, உமது சரிதத்தைச் சுருக்கமாகச் சொல்லி, அதை வெகு விஸ்தாரமாய் நான் தெரிந்துகொள்ளும்படி எனக்கு வரங்களையும் கொடுத்தார். உடனே இவரது வாக்கியத்தால், ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய உமது அழகிய சரிதத்தை நூறுகோடி விஸ்தாரமுள்ளதாகச் செய்தேன். ஏராம! தாங்கள் கேட்டபடி நான் எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொன்னேன்." என்று வால்மீகி மஹரிஷி தமது விருத்தாந்தத்தை முடித்தார்.

இவைகளையெல்லாம் ராமர் அறிந்தவராயினும் ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகவே இவ்விதம்கேட்டார். பிறகு பிர்ம்மர் மிகவும் ஆதரவோடு "ஏராம! ஆனந்தரூபியான உமது சரிதத்தைக் கானஞ் செய்யமுடியுமா? உலகத்தில் வழங்கிவரும் அகாரம் முதலான பதினாறு உயிரெழுத்துக்களும் ககாரம்முதல் க்ஷகாரம்வரையிலுமான முப்பத்துநான்கு மெய்யெழுத்துக்களுமே உமது திவ்யநாம மந்திரத்தைக்கூறுகின்றன. ஆதலால், சராசரமான இவ்வுலக முழுதும் உமது திவ்யநாம மந்திரம் வியாபித்திருக்கிறது. இவ்விஷயத்தை நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன். எல்லா ஜனங்களும் கேட்கட்டும். இதைச் சொல்லப் பரமசிவனும் ஆயிரம் நாவுகளையுடைய ஆதிசேடனும் சமர்த்தர்களல்லர். ஆதலால், என்னால் முழுவதும் எவ்வாறு வர்ணிக்க முடியும்? ஆயினும் உமது கிருபையால், உமது சரிதத்தை, இந்த வான்மீகி மகரிஷி வர்ணித்தபடியால், இவரே உலகத்தில் மிகவும் சிரேஷ்டமானவர்" என்று கூறித் தோத்திரஞ் செய்தார்.

ராமதாஸர் கூறுகிறார்.

இவ்வாறு பிர்ம்மா எல்லாராலும் பூஜிக்கப்பட்டுத் தமது லோகம் சென்றார். வான்மீகி மகரிஷியும் சித்திரகூட பர்வதத்திலுள்ள தமது ஆச்சிரமத்திற்குச் சென்றார். அது முதல் ஜனங்களும் விகடம் முதலிய ஹாஸ்ய காரியங்களைச் செய்துகொண்டு சுகமாய் இருந்தார்கள்.

14-வது சருக்கம்

முற்றிற்று.

15-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ராமர் இராஜ்யபரிபாலனம் செய்யுங்காலத்தில் சகல ஜனங்களும் ஆனந்தமா யிருந்தார்கள். ஓரிடத்திலாவது கலகம் திருட்டுப் பயம் முதலியவைக ளிடையா. ரிஷிகளும் சந்தோஷமுள்ளவர்களாகவும் குறைவற்றவர்களாகவு மிருந்தார்கள். யாகம் செய்வது கிணறு குளம் முதலியவை வெட்டுவது முதலான தர்மங்கள் ஆங்காங்கு விருத்தியடைந்து கொண்டிருந்தன. எங்கும் தேவாலயங்களும், யூபஸ்தம்பங்களும் நல்ல புஷ்பங்களுடன் கூடிய உத்தியானவனங்களும் தீங்கனியையளிக்கும் விருக்ஷங்களும் மிருந்திருந்தன. அந்த ராஜ்யத்தில் நதிகளே ஸ்தம்பங்கள் - கொழுப்புடன் கூடியவைகள். (நல்ல ஜலத்துடன் கூடியவைகள்) மனிதர் ஸ்தம்பர்களல்லர் (கொழுப்புடன் கூடியவர்களல்லர்). குடிலமாக (கோணலாக)ப் போவது நதிகளேயொழிய ஜனங்களல்ல. கிருஷ்ணபக்ஷத்து இரவுகள்தாம் தமஸோடு கூடியவை (இருட்டோடு கூடியவை)- மனிதர் தமஸோடு (அக்ஞானத்தோடு) கூடியவர்களல்லர். கோடாலி உலக்கை சாமரம் குடை முதலியவைகளுக்குத் தான் தண்டம் (பிடி) மற்றவருக்குத் தண்டமே (தண்டனையே) இல்லை. ஜாட்ய (சீதள)த்தன்மை யென்பது ஜலத்திலேதான். ஸ்திரீகளின் இடைதான் பலமற்றவை. மூர்த்திகளின் கைகளிலேயே சூலம். யானைகள்தான் மதம்பிடித்தவைகள். குளங்களில் அலைகளுக்குத்தான் யுத்தம். கண்டகப் (முள்ளு) மரங்களிலே தான். அநேகமாய் வண்டுகளே சஞ்சல சுவபாவ முள்ளவைகள். இப்படிப்பட்ட தேசத்தில் ராமர் வெகு தர்மமாய் ஆண்டுவந்தார். சத்துருக்களின் மனத்தில் சூரியன் போலவும், ஆப்தமித்திரர்களின் மனத்தில் சந்திரன்போலவும் பிரகாசித்தார். அவர் தர்மராஜர் போலவும் தண்டிக்கக் கூடாதவர்களைத் தண்டிக்காமலும், தண்டிக்க வேண்டியவர்களைதண்டித்துக்கொண்டும், நீதியாய்ப் பரிபாலனம் செய்துவந்தார். தேவலோகத்தில் கலாவான் (சந்திரன்) ஒருவனே. இவரது ராஜ்யத்தில் எல்லாரும் கலாவான்களே (வித்

வர்ணத்தாரைக் கௌரவத்தோடு மூன்று காலங்களிலும் நமஸ்கரித்து அவர்களுக்குப் பணிவிடை செய்வதும், வித்வான்களை ஆராதிப்பதும் தபஸ்விகளை வந்தனம் செய்வதும், ஜிதேந்திரியர்களை உபாஸிப்பதும், காலையிலும் மாலையிலும் மந்திரத்தால் பரிசுத்தமான ஹவிஸ்ஸை அக்னியில் ஹோமம் செய்வதும் பரிசுத்தமான திரவியங்களைச் சேர்த்து அடிக்கடி வாவி கிணறு குளம் முதலியவைகள் வெட்டுவது முதலியவைகளிலும் இன்னுமுள்ள எல்லாவித நற்காரியங்களிலும் ஜனங்களது மனது சென்று எல்லாரும் சுகமாகவே யிருந்தார்கள். இவ்வாறு ஸ்ரீராமர் ராஜ்யபரிபாலனம் செய்யும்போது எல்லாரும் சகல சுகங்களையும் அடைந்து தீர்க்காயுளோடு வாழ்ந்து வந்தார்கள்.

15-வது சருக்கம்

முற்றிற்று.

16-வது சருக்கம்

ஸ்ரீராமதாஸர்கூறுகிறார்.

ஸ்ரீராமர் ஒருகாலத்தில் குசன் லவன் லட்சுமணன் பரதன் சத்ருக்னன் இவர்களைக் கூப்பிட்டு இராஜநீதியை அவர்களுக்கு விஸ்தாரமாய்க் கற்பித்தார். குழந்தைகளே! நான் இப்போது இராஜநீதியை விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன், எல்லாரும் கேளுங்கள். குசனைப்பார்த்து, நான் வைகுண்டம் சென்ற பிறகு நீயே அரசனாகப் போகிறபடியால் இராஜநீதியை மிகவும் ஆதரவோடு கேட்டு நீ அவ்வாறே நடக்கவேண்டும். நன்மையை விரும்புகிற அரசன் ஒருபோதும் பொய் சொல்வது கூடாது. எப்போதும் நீதியுள்ளவனா யிருக்கவேண்டும். கோபத்தை யடையக்கூடாது. பரஸ்திரிகளை இச்சிக்கக்கூடாது. உண்மை பேசுதல், நல்ல ஆசாரம், தயை, பொறுமை, ருஜுஸ்வபாவம், மதுரமான வார்த்தை, பிராம்மணரையும் யதிகளையும் ஆராதிப்பது முதலிய வைகளே அரசருக்குற்ற நல்லகுணங்கள். நித்திரை சோம்பல் மதுபானம் சூதாடுதல் தாசிகளைப் புணர்தல் அதிகமாய்க் கிரீடிப்பது அதிகமான வேட்டை ஆகிய இவை அரசருக்குத் தகாத குணங்கள். அரசர் பிரஜைகளைப் புத்திரரைப்போல் காப்பாற்ற வேண்டும். ஆறிலொன்று வரிவாங்கவேண்டும். வேவுகாரரைக் கொண்டு தேசத்தின் சமாச்சாரங்களை அறியவேண்டும். சத்துரு இராஜ்யத்தில் தமது தூதர்களை மாறுவேஷத்தோடு அனுப்ப வேண்டும். வேற்றரசருடைய தூதர்களை ஒருபோதும் நம்பக் கூடாது. காலம் வரும்போது தமது காரியத்தை யுக்தியாய் முடித்துக்கொள்ள வேண்டும்.

மனத்தில் எண்ணியதை ஒருவரோடும் சொல்லாமலும் காரியத்தை முடித்து ஜனங்களுக்கும் மந்திரிகளுக்கும் காட்டவேண்டும். ஒவ்வொரு மாதமும் பொக்கிஷத்தைச் சோதனை செய்ய வேண்டும். அங்குள்ள வேலைக்காரர்களை நம்பவேகூடாது. ஒவ்வொருவருஷமும் மந்திரிகளோடு பட்டணம் கோட்டை மதில் இன்னும் மற்ற கூடங்கள் இவைகளைப் பழுது பார்க்க வேண்டும். நான்கு மாதங்களுக் கொருமுறை ஆயுதம், மார்க்கம் முதலிய

வைகளைப் பழுது பார்க்கவேண்டும். ஒவ்வொரு பக்ஷத்திலும் யானை குதிரை இவைகளைக் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு மாதமும் வாவி கிணறு குளம் முதலிய ஜனங்களுக்கு சௌகரிய மானவைகளைப்பற்றிக் கவனிக்கவேண்டும் எப்போதும் சேனையைப்பற்றிக் கவனிக்கவேண்டும். தேவர், பிராம்மணர், குருக்கள், யதிகள், இவர்களுக்கு ஒருகாலும் வருத்தத்தை யுண்டாக்கக் கூடாது. வரும்படியைப் பார்த்து அதற்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும். வரவில் நாலில் ஒரு பங்குதான் செலவழிக்க வேண்டும். சிலவேளை மூன்றிலொன்று செலவழிக்கலாம். எப்போதாவது தான் வரும்படியிற் பாதி செலவழிக்கலாம். இஷ்டர்களை மந்திரிகளாய் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருபோதும் கோபத்தை யடையக்கூடாது. மந்திரிகளை அதிகமாயும் உபசரிக்கக்கூடாது. அவர்களோடு விரோதத்தையும் அடையக் கூடாது. ஒவ்வொரு பக்ஷத்திலும் பட்டணம் கோட்டை மலை நாடு தீவு நதி தீரம் ஸமுத்திர தீரம் அநேக தேசம் வர்ஷம் இவைகளில் வசிப்பவர்களைத் தூதர்களைக் கொண்டு கவனிக்கச் செய்யவேண்டும். காஷாயம் முதலியவை தரித்த ஸந்யாசிகள் போலவும் இன்னும் வேறு வேஷதாரிகள் போலவும் சாரர்களை யனுப்பவேண்டும். வருஷந்தோறும் ஆங்காங்கு உத்யோகஸ்தர்களை யேற்படுத்தவேண்டும். அவர்களை அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். வேறு தேசத்துத் தூதன் தனது தேசத்தில் வந்திருக்கிறானென்று பார்க்கவேண்டும். அப்படி வந்திருந்தால், அவனைத் தண்டிக்கக்கூடாது. அவனுக்கு மரியாதை செய்தனுப்பவேண்டும். முன் போகிறவனையும் பக்கத்தில் சஞ்சாரஞ் செய்கிறவர்களையும் பின்னால் வருகிறவனையும் சேனாபதியையும் மந்திரியையும் தமது பிரதிநிதியையும் ஸாரதியையும் சாமரம் போடுகிறவனையும் ஸமீபத்திலுள்ள தூதனையும் எப்போதும் வெகுமதியால் ஸந்தோஷப்படுத்திக்கொண்டே யிருக்கவேண்டும். தேசத்தையும் காலத்தையும் பலத்தையும் பொக்கிஷத்தையும் தமது உத்ஸாகத்தையும் முதலில் பரீக்ஷித்துக்கொண்டு பிறகு சத்ருவிஷயமாய் உத்தேசிக்க வேண்டும். தமது நண்பர் அவரது நண்பர் பொதுவாய் நல்லவர் இவர்களது பலாபலத்தை முதலில்

பரியாலோசனை செய்து பிறகு சத்ருவினுடைய பலாபலத்தை ஆராய்ச்சி செய்யவேண்டும். தமது சத்ருவையும் அவனது சத்ருவையும் அவனது மித்திரரையும் பற்றி நன்றாய் ஆலோசிக்கவேண்டும். பிறகு தமது சத்துருவின் சத்துருவோடு சிநேகம் செய்துகொள்ளவேண்டும்.

சத்துருவின் ராஜயத்திலிருக்கும் நதிகள் கோட்டைகள் மலைகள் காடுகள் குறுக்குவழிகள் ஜலாசயங்கள் இவைகளைச்சாரர்களைகொண்டு பரிசீலனம் செய்யச்செய்து அவைகளுக்குத் தக்கவாறு தமது இராஜ்யத்திலும் ஏற்பாடு செய்யவேண்டும். தான் எங்கே சென்றாலும் ஒருவரோடும் சொல்லக்கூடாது. கிழக்கில் போக இச்சையிருந்தால் வடக்கே கொடியை நாட்ட வேண்டும். முன் செல்பவனை வடக்கிலேயே போகச்செய்து அவன் இரண்டு மைல் சென்ற பிறகு தான் கிழக்கே செல்லவேண்டும். யாத்திரைக்குப் போகும்போது யந்திரம் ஆயுதம் வாகனம் பலம் தானியம் முதலியவைகளைப் போதுமான அளவு எடுத்துக்கொண்டு புறப்படவேண்டும். தமது பட்டணத்திலும் கோட்டையிலும் தேசத்திலும் ஜனசஞ்சாரமில்லாத வனத்திலும் பணத்தைச் செலவழித்து அநேக ஜலாசயம் ஏற்படுத்தவேண்டும். இவைகளில் செலவழிப்பணத்தைச் செலவாக நினைக்காமல் தமது ரக்ஷணையாக நினைக்கவேண்டும். தர்மத்திற்காகச் செலவழிப்பது சேர்த்துவைக்கும் முதலுக்குச் சமானமாம். ஆபத்திற்காகத் தனத்தையும், தனத்தால் பத்தினியையும், தனம் பத்தினிகளால் தன்னையும் எப்போதும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். சேனையில்லாமல் பட்டணத்திற்கு வெளியே போகக்கூடாது.

தனியே கிராமத்தில் சஞ்சரிக்கக்கூடாது. ஒருவனாக எங்கேயும் படுக்கக்கூடாது கால் நடையாய் எங்கும் போகக்கூடாது. அடிக்கடி பிறர் வீட்டிற்குப் போகக்கூடாது. வாசற்காவற்காரன், ஜலம் கொடுப்பவன், வண்ணான் இவர்களை நம்பக்கூடாது. பிறர் கொடுக்கும் தண்ணீரைவாங்கிப் பரீக்ஷித்துவிட்டு உபயோகப்படுத்தவேண்டும். பிறர் கொடுக்கும் பழங்களைப் பரீக்ஷித்துச்சாப்பிடவேண்டும். சபையில் அரையாமம் இருக்கவேண்டும். அதற்குமேல் இருக்கக்கூடாது. தமக்குத் துவேஷியானவனைப் பட்டணத்தி

ற்கு வெளியே துரத்திவிடவேண்டும். சபையில் கால்நீட்டிக் கொண்டாவது கை முழங்கால் இவைகளைக்கட்டிக்கொண்டாவது இருக்கக்கூடாது. சபையில் எப்போதும் அதிகமாய்ச் சிரிக்கக் கூடாது. அழுக்கு வஸ்திரங்களோடு போகக்கூடாது. தாஸி, சோதிடர், வைத்தியர், பாடகர், வந்திகள், நடர் பண்டிதர், தர்ம சாஸ்திர மறிந்தவர், தர்க்க பண்டிதர், வைதிகர், பிராம்மணர் இவர்களுக்குத் தினந்தோறும் ஸம்மானஞ் செய்து பூஜிக்கவே ண்டும். நாவிதனை அதிகமாய் நம்பக்கூடாது. ஜனங்களுக்குக் கௌரவமுண்டாகும்படி ஆளவேண்டுமே யல்லது வீணாய் ஜனங் களை தண்டிக்கக்கூடாது. வருகிறவர்கள் அரண்மனை வாசலிலுள்ள காவற்காரரிடம் தெரிவித்து இராஜனது ஆக்ஞையைப்பெற்று உள்ளே சென்று அவனது சபாதத்தின் பேரில் அங்கே உட்கார வேண்டும். மண்டலாதிபதிகள் அரசனது எதிரில் நிற்கவேண் டும். அவர்கள் கையைக் கட்டிக்கொண்டு காலை ஒதுக்கிவைத்துக் கொண்டு அரசனையே பார்த்துக்கொண்டு நிற்கவேண்டும்.

அரசனுக்கெதிரில் சிரிக்கக்கூடாது; கொட்டாவி விடக் கூடாது; இருமக்கூடாது; எச்சில் உமிழக்கூடாது. எல்லாரும் சபையில் போகும்போதும் வரும்போதும் அரசனுக்கு நமஸ்கா ரம் செய்யவேண்டும். மற்ற அரசரும் கூட இராஜ ஸந்நிதியில் இரைந்து பேசக்கூடாது. சட்டையில்லாமல் சபையில் உட்கா ரக்கூடாது. அரசர் வேட்டையாடும்போது யானையை அடிக்கக் கூடாது. சூல்கொண்ட மானையும் அடிக்கக்கூடாது. மிருகம் தண்ணீர் குடிக்கும்போதும் தூங்கும்போதும் அதை அடிக்கக் கூடாது. தம்மிடம் தப்பி ஓடி வந்த மிருகத்தையும் கொல்லக் கூடாது. கிரீடித்துக்கொண்டிருக்கிற மிருகத்தையும் கொல்லக் கூடாது. எட்டுத்திக்குகளிலும் காவற்காரரை யேற்படுத்திவிட்டு வேட்டைக்கு ஆரம்பஞ்செய்ய வேண்டும். இராத்திரியில் தமது சினேகிதனோடு வேறுவேடம் பூண்டு பட்டினத்தில் ஆங்காங்கு சஞ்சரிக்கவேண்டும். ஜனங்கள் பேசும் வார்த்தைகளைச் சுபமானாலும் அசுபமானாலும் கேட்கவேண்டும். இவ்வாறு தாம் இராத்திரியில் போகமுடியா விட்டால், தமது ஆப்த

மித்திரரை அனுப்பலாம். தமது வீட்டுச்சமாசாரத்தை சபையில் சிறிதும் வெளியிடக் கூடாது. சத்துருக்களின் பலத்தைக்கேட்டுத் தமது தைரியத்தை விட்டுவிடக் கூடாது. யுத்தகளத்திலிருந்து ஒருகாலும் ஓடக்கூடாது. ஒருகாலும் சத்துருவுக்குத் தமது முதுகைக் காட்டக் கூடாது. சிற்றுறையும் ஓடத்தால் தாண்டக்கூடாது. ஒவ்வொரு ஆறுக்கும் அணைபோடவேண்டும். ஓடத்திலிருந்து பெண்டுகளோடு ஜலக்ரீடை செய்வதுகூடாது. கடைத்தெருவின் மத்தியிலும் நான்கு சந்துகள் கூடுமிடத்திலும் நிற்கக்கூடாது. தமது மனைவி புத்திரர் இவர்களை யடிக்கக்கூடாது. தமது பெயர்போட்ட வாகனத்தைத் தவிர வேறுவாகனத்தின் மீதேறி வெளியே செல்லக்கூடாது. சிற்சிலவேளை தவிர மற்றவேளைகளில் மொட்டையடித்துக்கொள்ளக் கூடாது. பர்வகாலங்களில் வீட்டில் ஸ்நானஞ்செய்யக்கூடாது. காலால் வில்லையும் பாணத்தையும் ஆயுதங்களையும் தொடக்கூடாது. பக்ஷிகளுடன் அதிகமாய் விளையாடக் கூடாது. அரண்மனை வாசற்படியில் நிற்கக்கூடாது. ஸ்திரீகள் ஜலங்கொண்டு வரும் வழியில் போகக்கூடாது. தானியத்தை எப்போதும் எங்கேயும் ஒரேவிலையாய் விற்கும்படி செய்யவேண்டும். ஒருவேளை விலை அதிகமாய் விற்கும்படி நேரிட்டால், அக்காலத்தில் வரியைக் குறைக்கவேண்டும். எப்போதும் ஜனங்களிடத்தில் அதிகக்கடுமை காட்டாமல் மிகவும் உதாரமாய் இருக்கவேண்டும். திருடரிடமிருந்து சாமான் மீட்கப்பட்டாலும், அவர்களைவிட்டுவிடக்கூடாது. ஒருவருக்கும் முகத்தைப்பார்த்துத் தீர்மானம் சொல்லக்கூடாது. நியாயவிஷயத்தில் தாமேசென்று விசாரிக்கவேண்டும். வருத்தமடைந்தவரின் விருத்தாந்தத்தைத் தாமே முழுமையும் கேட்கவேண்டும். தம்மையே எப்போதும் புகழ்ந்துகொள்ளக் கூடாது. எப்போதும் ஸபையில் பண்டிதரை வைத்துக்கொண்டே இராஜகாரியங்களை முடிக்கவேண்டும். யாகம் தானம் ஜபம் ஹோமம் ஸந்தியாவந்தனம் தியானம் சிவபூஜை ஸ்நானம் புராண சிரவணம் இவைகளைத் தினந்தோறும் பக்தியோடு செய்யவேண்டும். மயக்கமுண்டாகும் பதார்த்தங்களை உபயோகிக்கக்கூடாது. தமது காலால் நடந்து யாத்திரை செய்யக்கூடாது. ஏகாதசியன்று பலகாரம் அவசியம் செய்யவேண்டுமே

யல்லாது, நாள் முழுவதும் பட்டினியாக இருக்கக்கூடாது. எந்தப் பிராம்மணன் எதை யாசித்தாலும் அவனுக்கு அதைக் கொடுக்க வேண்டும். எப்போதும் பிராம்மணரையே மிகவும் ஆராதிக்க வேண்டும். உற்சாகம் வரும் காலங்களில் ஜெயிலில் அடைக்கப் பட்டவர்களை விட்டுவிடவேண்டும். தமது உத்தரவை மீறினவர் வர்களைத் தலைவாங்குவதற்குச் சமானமாய்த் தண்டிக்கவேண்டும். தமது தூதரை அவமதித்தால் தம்மை அவமதித்ததாக எண்ண வேண்டும். தமது தூதரைப் பூஜித்தால், தம்மைப் பூஜித்ததற்குச் சமானமாகக் கருதவேண்டும். ஏ சுத! நான் இவ்வாறு இராஜநீதியை வெகு விஸ்தாரமாய் உனக்குச் சொல்லிவிட்டேன். நான் தினந்தோறும் எவ்வாறு காரியங்களை நடத்துகிறேனோ அந்த மாதிரியே நீயும் நடத்திவர வேண்டும்.

16-வது சருக்கம்

முற்றிற்று.

17-வது சருக்கம்

ராமதாஸர் கூறுகிறார்.

ராமபிரான் பிறகு ஒரு சுபதினத்தில் குசனது புத்திரியான ஹேமை என்பவளுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினார். அந்தச் சுயம்வரத்திற்கு சகல தேசத்தரசர்களும் வந்தார்கள். தேவர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், வித்யாதரர்கள், நாகர் முதலியவர்களும் வந்து சபையில் நிறைந்திருந்தார்கள். இப்படி எல்லாரும் சபையில் வந்து நிறைந்தபிறகு ஹேமை என்பவள் மங்களஸ்நானம் செய்துவிட்டு, சகல ஆபரணங்களையும் அணிந்துகொண்டு மங்களவாத்தியங்கள் முழங்க சபையில் பிரவேசித்தாள். அங்கு வந்து வீற்றிருக்கும் அநேகமான அரசர்களைப் பார்த்தாள். அவளது கடாக்ஷத்திற்கு இலக்கான அரசர்கள் யாவரும் தங்களை மறந்து இருந்தபடி இருந்துவிட்டார்கள்.

இச்சமயம் அச்சபையில் வந்திருந்த அவந்தி நாதனை சித்திராங்கதன் என்பவன் சபையிலுள்ளவர்களை மோகனாஸ்திரத்தினால் மயக்கி விட்டு, ஹேமை என்பவளை யெடுத்துத் தன் இரதத்தின்மீது வைத்துக்கொண்டு இரண்டுமையில் தூரத்திற்கப்பாற்போய், "தங்கப்பதுமைக் கொப்பான இந்தக் கன்னிகையைத் திருடன்போல் அபகரித்துப்போவது நமது வீரத்தன்மைக்கு அழகாகுமோ" வென்று நினைத்து அங்கேயே நின்றுவிட்டான். இச்சமயம் ராமர் முதலியவர்கள் வேறு வேலையில் பிரவேசித்திருந்தார்கள். உக்ரபாகுவின் குமாரன் சித்திராங்கதன் ஹேமையைப் பலாத்காரமாகக்கொண்டுபோய் விட்டானென்ற சங்கதி பட்டணமெங்கும்பரவி எங்குக்கண்டாலும் ஆ! ஆ!! வென்னும் சத்தமுண்டாய் விட்டது. இச்சமயம் சித்திராங்கதன் தான் விடுத்த மோகனாஸ்திரத்தை உபசம்ஹாரம் செய்துகொண்டான். உடனே மயங்கிக் கிடந்த அரசர்கள் யாவரும் எழுந்து விஷயந் தெரிந்துகொண்டு சேனைகளோடு அவனிடம் சண்டைக்குப்போய் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். சித்திராங்கதன் தந்தை தன் புத்திரனுடைய செய்கையைப் பார்த்துப் பேசாமலிருந்தான்.

இருதரத்தாருக்கும் சண்டை பலத்துவிட்டது. அரசர்கள் சித்திராங்கதன்மேல் கோடிக் கணக்கான பாணங்களைப் பிரயோகித்தார்கள்.

சித்திராங்கதன் உடனே ஒரு வாயுவாஸ்திரம் எடுத்து அவ்வளவிறந்த அரசர்களுடைய ரதங்களையும் ஆகாயத்தில் கர கர வென்று சுழலும்படி செய்தான். இது பார்ப்பவர்களுக்கு மிகவும் வேடிக்கையாக விருந்தது.

உற்சவத்திற்காக அங்கு வந்திருக்கும் லவன் முதலியவர்கள் ராமபிரானது ஆக்ஞையால் தங்கள் சேனைகளோடு யுத்தத்திற்கு வந்தார்கள். பயங்கரமான யுத்தம் உண்டாயிற்று. அவர்கள் அநேக சஸ்திரங்களால் சித்திராங்கதனை யடித்தார்கள். சித்திராங்கதன் தனது பாணங்களால் அவைகளைத் தடுத்துவிட்டு, யூபகேதுவை எதிர்த்தான். சித்ரகேது அங்கதன் இவர்களையு மெதிர்த்துச் சண்டைசெய்தான். ஆச்சரியகரமான அவனது வில்லத்திறமையைப் பார்த்த லவன் உடனே பாணங்களை எய்து திவ்யமான அவன்கைவில்லை முறித்து அவனை மிகவும் ஆகுலப்படுத்தினன். அதைக்கண்ட உக்ரபாகுவும் உடனே மிகக் கோபமடைந்து வேகமெவகமாய் அவனுடன் சண்டைசெய்யப் போனன். அப்போது லவன் பாணங்களைப் பிரயோகித்து அவனது இரதம் முதலியவைகளை முறித்துவிட்டான். உடனே உக்ரபாகு வேறு இரதத்திலேறிக்கொண்டு பாணங்களைப் பிரயோகித்து லவனை மூர்ச்சை யடையும்படி செய்தான். அச்சமயம், ஹா! ஹா! வென்னும் கூக்குரலுண்டாயிற்று. உடனே குசன் அவனோடு சண்டைக்குச சென்றான். அங்கதன் முதலியவர்களும் இரதத்திலேறிக்கொண்டு உக்ரபாகுவை எதிர்த்தார்கள்.

உக்ரபாகு பாணங்களால் இவர்களை மிகவும் உபத்திரவிக்கக் குசன் தனது பாணங்களால் அவனுடைய ரதத்தையும் பாணங்களையும் ஒடித்துவிட்டான். பிறகு உக்ரபாகு மிகவும் பயந்து திகைத்து நின்றான். குசன் அவனையும் அவனது குமாரனையும் வாத்திய கோஷத்தோடு ஸ்ரீராமரது ஸந்நிதிக்கு அழைத்துச் சென்றான். ராமர் தமது சிநேகிதனை அவனை மிகவும் உபசரித்

தார். பிறகு ராமர் குசனுக்கு, அகஸ்தியரால் கொடுக்கப்பட்ட திவ்யமான கங்கணத்தைப் பிரியத்தோடு கொடுத்தார். அதைக் குசன் வாங்கி யணிந்துகொண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான். பிறகு குசன் அகஸ்தியரை வணங்கி "இந்தக்கங்கணம் தங்களுக்கு எவ்வாறு கிடைத்தது? என்று கேட்டான். அவர் அதன் வரலாற்றைச் சொல்லுகிறார்—முற்காலத்தில் இந்திரனுடைய சத்துருக்களான அநேகர் சமுத்திரத்தில் முழுகி ஒளிந்துகொண்டார்கள். அப்போது இந்திரன் என்னை மிகவும் பிரார்த்தித்துக் கொள்ள, நான் சமுத்திரத்தை விளையாட்டாகவே குடித்துவிட்டேன். அப்போது தேவர்களுக்குப் போக்குவரவு முழுவதும் நின்றுபோனபடியால், மறுபடியும் இந்திரன் என்னை வேண்டிக்கொள்ள பயங்கரமான சமுத்திரஜலத்தை மூத்திரம்போல மறுபடியும் வெளியே விட்டுவிட்டேன். அந்த வேளையில் சமுத்திரம் ஸந்தோஷத்தோடு இந்தக் கங்கணத்தை எனக்குக்கொடுத்தது. நான் முன் அதை இராமரிடம் கொடுத்திருந்தேன். அவர் அதை இப்போது உனக்குக் கொடுத்தார் என்றார். இவ்வாறு முனிவர் கூறியதும் குசன் மகிழ்ந்து 'முனிவர் பிரானே! இப்பொழுது ரணகளத்தில் லவன் அடிபட்டு மூர்ச்சித்து விழுந்திருப்பதால், அவனை எழுப்பத் தாங்கள் ஓர் உபாயங் கூறவேண்டுமென்று கேட்டான். முனிவர் குசனைப்பார்த்து அப்பா! முன் பரதன் மிதிலைக்குப்போகும் வழியில் அசுரரால் அடிக்கப்பட்டு மூர்ச்சையடைந்து விழுந்தபோது முத்கலாச்ரமத்திலிருந்து லக்ஷ்மணர் ஓஷதிகளைக் கொண்டுவந்து அவனைக் காப்பாற்றினார். இப்போது நீயும் அதேகொடிகளைக் கொண்டுவந்து லவனை எழுப்பு; அல்லது அநுமாரையாவது அந்த ஆச்சிரமத்திற்கு அனுப்பு என்று சொன்னார். இவ்வார்த்தை செவிப்படுமுன் அநுமார் வெகுவேகமாய் அந்த ஆச்சிரமத்திற்குச்சென்று, ஓஷதிகளைக் கொண்டுவந்து, லவனை எழுப்பினார். அவனது சேனைகளும் உடனே உயிர் பெற்றன.

விஷ்ணுதாசர் வினவுகிறார்.

பரமகுருவே! அந்த முத்கல முனிவரது ஆச்சிரமத்தில், இறந்தவரைப் பிழைப்பிக்கும் படியான திவ்யஓஷதிகள் இருக்கக்காரண

மென்ன? இவை இருக்கும்போது முன் ஜாம்பவான் ஹநுமா ரைத் துரோண பருவதத்திற்குப்போகும்படி ஏன் அனுப்பினார் இந்தச் சந்தேகத்தைத் தாங்கள் தயவுசெய்து தீர்க்கவேண்டும்.

ஸ்ரீ ராமதாசர் கூறுகிறார்.

கருடன் தனது தாயை விடுவிப்பதற்காக அமுதகலசத்தைத் தனது மூக்கினால் கொண்டுவந்தபோது, அந்தக் குடத்திலிருந்து திவலைகள் முத்கல மஹரிஷியின் ஆச்சிரமத்தில் விழுந்ததாலும், அவரது தபோபலத்தினாலும் அங்கே திவ்ய ஒஷதிகள் உண்டா யின. இது ஜாம்பவனுக்குத் தெரியாமலிருந்ததால், அவர் ஹநுமா ரை துரோணகிரிக்கு அனுப்பினார். இது நிற்க; இனி மேலே சொல்லப்போகும் கதையையும் கவனமாகக் கேள்.

பிறகு லவன் முதலியவர்களும் சந்தோஷமாய்த் தங்கள் பட்டணத்திற்கு வந்து, முனிவரையும் ராமர் முதலியவர்களையும் வணங்கி ராமபிரான் ஸந்நிதியில் நின்றார்கள். அப்பொழுது பட் டணமெங்கும் பெரும் உற்சவம் கொண்டாடப்பட்டது. லவன் ஹநுமாரால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்டான் என்பதை ராமர் தெரிந்துகொண்டு அவனை ஆலிங்கனஞ்செய்து மிகவும் மகிழ்ந் தார்! பிறகு ராமர் ரத்னமயமான வேறு இரண்டு கங்கணங் களைப் பிரியத்தோடு ஹநுமாருக்குக் கொடுத்தார். அவர் அவை களை அணிந்துகொண்டு மிகவும் மகிழ்ந்தார்.

பிறகு ராமர் அகஸ்தியரால் கொடுக்கப்பட்ட மற்றொரு திவ்யமான கங்கணத்தை லவனுக்குக் கொடுக்க, அவன் அதை அணிந்துகொண்டு மிகவும் மகிழ்ந்தான். அப்போது லவன் முனி வரைவணங்கி "தங்களுக்கு இந்தக் கங்கணம் கிடைத்தவரலாற் றைக் கூறவேண்டும்" என்றுவேண்ட, அகஸ்தியர் கூறுகிறார். ஒருகாலத்தில் தண்டகாரண்யத்தி லுள்ள ஒரு குளத்திற்கு நான் ஸ்நானஞ்செய்யப் போனேன். அங்கே ஸ்நானஞ்செய்து விட்டு நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு அங்கு ஒரு க்ஷண காலமிருந்தேன். அப்போது ஒருதேவன் ஆகாயத்திலிருந்திறங்கி, அங்கேவந்து சேர்ந்தான். அவனோடு திவ்யாலங்கார பூஷிதைக ளான அநேக ஸ்திரீகள் வந்திருந்தார்கள். அவனும் திவ்யாபரண

பூஷிதனாக விளங்கினான். அவன் ஆகாயத்திலிருந் திறங்கினதும் உடனே அக்குளத்திலிருந்து துர்கந்தத்தோடு கூடின
கிளம்பிக் கரையோரமாய் மிதந்துவந்தது. அந்தத் தேவன் விமானத்திலிருந்து இறங்கி, அப்பிணத்தினருகே சென்று அதன் மாமிசம் முதலியவைகளை வெட்டி அதை ஆதரவோடு தின்றான். பிறகு ஜலத்தைக்குடித்துவிட்டு விமானத்தின்மீ தேறிவிட்டான். அப்பிணமும் குளத்திலேயே மூழ்கிவிட்டது. அந்தத்தேவன் புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்போது, நான்" ஐயா சற்றுநில்லும்; எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஸ்வர்க்கலோகத்திலுள்ளஉமக்கு இவ்விதம் பிணத்தைத் தின்னும்படி ஏன் நேரிட்டது? க்ஷணம் நின்று பதில் சொல்லவேண்டும்" என்று கேட்டேன். உடனே அந்தத்தேவன் என்னைப்பார்த்து,, ஐயா! முற்காலத்தில் விதர்ப்ப தேசத்தில் சுதேவனென்று ஒரு அரசனிருந்தான். அவனுக்கு சுவேதனென்றும் சுரதனென்றும் இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். அவர்களில் நான்தான் சுவேதனென்பவன். அந்தஜன்மத்தில் ஒரு தர்மமும் நான் செய்யவில்லை. ஆனால் ராஜ்யமதத்தால் நான் பாவங்களையே செய்துகொண்டு இருந்தேன். எனக்குப் பிள்ளையில்லை. ஆகையால் நான் வயோதிகப் பருவமுற்றதும் சுரதனென்கிறஎனது சகோதரனை ராஜ்யத்தில் ஏற்படுத்திவிட்டு,காட்டிற்குச்சென்று கொடூரமான தவஞ்செய்தேன். ஒரு சமயத்தில் ஸ்நானஞ்செய்ய ஒருகுளத்தில் இறங்கினவுடன், தவறி விழுந்து இறந்துவிட்டேன். பிறகு தபோபலத்தால் ஸ்வர்க்கத்தையடைந்து எல்லாச் சுகங்களையும் அனுபவித்தேன். அங்கே எனக்குத் தகுந்தபடி புசிப்பதற்கு ஒன்றுமில்லாமையால், நான் இந்திரனை "இங்கே சுகங்களெல்லாம் இருக்கின்றன. ஆனால் எனக்குத்தகுந்தபடி புசிப்பதற்கு ஒன்றுமில்லையே" என்று கேட்க, இந்திரன் "நீ பூமியில் ராஜ்ய மதத்தால் ஒரு தர்மத்தையும் செய்யாததால் இங்கு உனக்கு ஒன்றும் கிடைக்காது. ஆகையால் நீ தினந்தோறும் விமானத்திலேறிக்கொண்டு குளக்கரைசென்று, அங்கே மிதக்கும் உனது பிரேதசரீரத்தைத்தின்று விட்டுவா, அது வெகு காலமானாலும் குறைவையடையாது. " என்றான். இதைக் கேட்டு நான் "இவ்வன்னங்களை எப்போது அடைவேன்" என்று

கேட்க, இந்திரன் "இப்போது தண்டகாரண்யம் யமாயிருக்கிறது. விந்திய மலையின் விருத்தியைபடக்க, தேவர்கள் வேண்டுகோளின் பேரில் அகஸ்தியர் தமது மனைவியோடு காசியைவிட்டுத் தண்டகாரண்யத்திற்கு வந்து, ஒரு நாள் அக்குளத்தில் ஸ்நானஞ் செய்து விட்டுக் கரையில் நின்று கொண்டிருக்கும் போது அவரை நீ பார்த்து உனது கங்கணத்தை அவருக்குத் தானம் கொடுக்கப்போகிறாய். அப்போது உனக்கு திவ்யான்னம் கிடைக்கும்." என்றான். நான் அது முதல் வெகு காலமாய் இங்கு வந்து எனது சவத்தைப் பக்ஷித்துக்கொண்டிருக்கிறேன். இது வரையில் நான் இங்கே ஒருவரையும் கண்டதில்லை. இப்போது நான் தங்களைக் கண்டபடியினால், தாங்கள் தான் அகஸ்தியராயிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். இன்று உங்களால் நான் கிருதார்த்தனானேன். ஆகையால் நான் கொடுக்கும் இந்தத் தானத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்." என்று சொல்லித் தன் கங்கணத்தை எனக்கு தானங்கொடுத்து விட்டு, ஸ்வர்க்கலோகம் சென்றான். அது முதல் அந்தச் சவமும் ஒரு நாளும் ஜலத்திலிருந்து மேலே வரவில்லை. சொர்க்கலோகத்தில் அவன் திவ்யான்னத்தையும் அடைந்தான். இவ்வாறு நான் காட்டில் அடைந்த கங்கணத்தை ராமரிடம் கொடுத்தேன். அவர் இப்போது அதை உனக்குக் கொடுத்தார்" என்றான். இவ்விதம் அகஸ்தியர் சொன்னதைக்கேட்டு லவன் தண்டகாரண்யம் காடாக விருந்தது அதைச் சொல்லவேண்டும் என்றுகேட்டான்.

அகஸ்தியர் கூறுகிறார்.

இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த தண்டகனென்னு மோராசன் பாபகர்மங்களையே செய்துகொண்டிருந்தான். அவன் ஒரு காலத்தில் தனது சேனையோடு வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கே ஒரு மானைக்கண்டு குதிரையின்மீதேறிக்கொண்டு ஒருவனாக அதைத் துரத்திச் சென்றான். கடைசியாக அந்தமான் மறைந்து விட்டது. பிறகு அவன் அதிக தாகத்தோடு ஒரு குளத்தருகிற்சென்று அங்கே ஜலத்தைக்குடித்து விட்டுத் தனது குருவினுடையதென்று தெரிந்துகொள்ளாமல்

பிருகுவின் ஆச்சிரமத்திற்குச் சென்றான். அங்கே பிருகு மஹ ரிஷியில்லாதபோது ருதுவாகாத அவரது அழகிய பெண்ணைப் பார்த்து மிகவும் காமவிகாரமடைந்து, அவளைப்புணர இச்சித்து; பிரார்த்தித்தான். அவள் "நான் சுவதந்தரையல்ல; என் பிதா பிருகு மஹரிஷி. அவரது உத்தரவில்லாமல் நான் ஒன்றும்செய்ய மாட்டேன். அப்படி என்னை யடையவேண்டுமானால், வெளியிற் சென்றிருக்கும் அவர் வந்தவுடன் அவரிடம் சொல்லி என்னை மனைவியாய் அடையலாம்" என்று பலவாறாகச் சொல்லியும் அவ் வரசன் கேளாமல் பலாத்காரமாக அவளை அனுபவித்து விட்டுத் தன் பட்டணத்திற்குச் சென்றான். பிறகு அப்பெண் தன்தந்தை வந்ததும் வெகு துக்கத்தோடு சகல விருத்தாந்தங்களையும் கூறி னள். அதைக் கேட்டதும் மஹரிஷி தமது பெண்ணைச் சமா தானப்படுத்தி விட்டு வெகு கோபத்தோடு கையால் ஜலத்தை யெடுத்துக்கொண்டு, "தண்டனோடு கூட நாறுயோஜனை நீள முள்ள, அவனது இராஜ்யமும் இப்போது ஒரு க்ஷணத்திற்குள் எரிந்து விடக்கடவது; அங்கே நீர் நிலை யெங்கும் இல்லா தொழி யக்கடவது; அங்குள்ள சராசரமுழுவதும் தொலைந்து விடவேண் டும்" என்று சபித்து விட்டார். இவ்விதம் முனிவர் சபித்ததும் அவர் பெண் வியத்தோடு அந்தச் சாபத்தின் முடிவையும் கேட் டாள். முனிவர் "பெண்ணே அகஸ்திய முனிவர் தமது மனைவி யோடு காசியிலிருந்து இந்தப் பிரதேசத்திற்கு எப்போது வரப் போகிறாரோ அப்போது இங்கே ஜலம் முதலியன உண்டாகும். முனிசிரேஷ்டர்களும் அங்கு வசிப்பார்கள். தண்டனென்னும் அரசனுக்காக அது அரண்யமான படியால், இதைத் தண்ட காரண்யமென்று ஜனங்கள் சொல்லுவார்கள். அப்புறம் இராமர் இங்கே வருங்காலத்தில் அவரது அநுக்கிரகத்தால் அநேக க்ஷேத் திரங்கள் உண்டாகப் போகின்றன. ஆனதால் ஜனங்கள் இதை இராமக்ஷேத்திரமென்றும் சொல்லப்போகிறார்கள். முனியினுடை யவும் இராமருடையவும் அனுக்ரஹத்தால் இது முன் போல் ஆகிவிடும்; தேசங்களுக்குள் சிறந்ததாயும் ஆகிவிடும். தண்டகத் திற்குச் சமமான தேசம் வேறு ஒன்றும் கிடையாது" என்று

சொல்லிவிட்டு அப்பெண்ணை ஒரு ரிஷிகுமாரனுக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டு இமாசலத்திற்குத் தவம் செய்யப் போய் விட்டார். அந்த இராஜ்யம் பிருகுவின் சாபத்தால் நூறுயோஜனை தூரமும் எரிந்துபோய் விட்டது. அங்கே நானும் இராமனும் போன பிறகு ஸ்தாவர ஜங்கமங்களுண்டாகிச் சகல வனங்களும் நிறைந்து விட்டன.

ஏ லவ! நீ கேட்டபடி கங்கணம் தண்டகாரண்யம் இவை களைப்பற்றி உனக்குச் சொன்னேன் என்றார்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் முனிவர் சொன்னதைக்கேட்டு லவன் சந்தோஷ மடைந்து அவரை மிகவும் வணங்கி, ஸ்ரீராமரைச் சேவித்தான். பிறகு இராமரும் மங்களவாத்திய முழங்க வெகு உற்சாகத்தோடு அந்த ஹேமையைச் சித்ராங்கதனுக்கு விவாகம் செய்து கொடுத் தார். கோடிக்கணக்கான திரவியத்தையும் யானை முதலியவைகளை யும் ஸ்திரீதனமாகக் கொடுத்தார். அன்று அப்போதிலில் பெரும் உற்சவமாயிருந்தது. பிறகு உக்ரபாகுவுக்கு மிகவும் மரியாதை செய்து அனுப்பினார். முனிவர்களும் அரசர்களும் வெகு சந் தோஷமாய்த் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

17-வது சருக்கம்

முற்றிற்று.

18-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்

ஸ்ரீராமர் அயோத்தியாபுரி பட்டணத்தில் சீதாதேவிக்குப் பரமானந்த மளித்துக்கொண்டு இராஜ்ய பரிபாலனம் செய்து வருகையில், ஆயுதபாணியாகிய எவனும் இராமமுத்திரையில்லாமல் வெளிக்கிளம்பக் கூடாது. சிற்றரசர்களும் இராமமுத்திரை தரித்துக்கொண்டே வெளிக்கிளம்ப வேண்டும். விஷ்ணுதாஸ! அந்த இராமமுத்திரையின் விவரத்தைக் கூறுகிறேன் கேள்.

இராமமுத்திரையின் விவரம்.

நீளத்தில் பதினைந்தும் அகலத்தில் பதினைந்துமாக சிவப்பு ரேகைகளை ஏற்படுத்தவேண்டும். நான்கு பக்கங்களிலும் முதல் வரிசை மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும். இரண்டு, எட்டு, இவ்விரண்டு வரிசைகளும் வெண்மையாக இருக்க வேண்டும். பிறகு கர்த்தா கிழக்கு முகமாக வீற்றிருந்து முத்திரையை மேற்குமுகமாக வைக்கவேண்டும். அதன்பின் வடகிழக்குத்திக்கிலிருந்து மூன்றாவதில் வரிசையாக அடியிற் கூறுகிறபடி கறுப்புக் கோடுகளிழுக்க வேண்டும். வடக்கில் ஆரம்பித்துத் தெற்கில் முடிக்கவேண்டும். [illegible], 1, 6, 7, 8, 9, 11 இவைகளையும் அவ்வாறே செய்யவேண்டும். நான்காவது வரிசையில், 4,6,7,11, இவ்வரிசைகளையும் அவ்வாறே செய்யவேண்டும். ஐந்தாவது வரிசையில், 1,2,4,6. இவைகளையும் அவ்விதமே செய்யவேண்டும் ஆறாவது வரிசையிலும் ஐந்தாவது வரிசைக்குச் செய்ததுபோலவே செய்ய வேண்டும். ஏழாவது வரிசையில், 9, 11 இவ்விருவரிசைகளையும் கறுப்பாக்கவேண்டும். 8 வது முழுதும் கறுப்பாகவிருக்கவேண்டும். ஒன்பதாவது வரிசையில் 2, 4, 6, 7, 9, 10, 12 இவைகள் கறுப்பாக விருக்கவேண்டும். இவ்வாறே பத்தாவது வரிசையில் 4, 6, 7, 12 இவைகளைக் கறுப்பாக்கவேண்டும். பதினொன்றாவதில், 1, 2, 4. 6, 8, 9, 10, 12 இவைகளைக்கறுப்பாக்கவேண்டும். பன்னிரண்டாவதில் 1, 2, 4, 6, 7, 8, 9, 10, 12 இவை முழுதும் கறுப்பாய் இருக்கவேண்டும். பதின்மூன்றாவது முழுதும்

கறுப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு புத்தியைச் செலவழித்து வரையின் நடுவில் ஏற்படும் வெண்மைநிறம் ராஜாராம் என்று காணும். இதுதான் இராமமுத்திரை. ஏ விஷ்ணுதாஸ! இதை உனக்குக் கூறினேன்; இனிமேலே கூறுவாம்.

இராமபிரான் ஒருசமயம் இவ்விதமான இராமமுத்திரையை ஒரு கல்லில் செதுக்கி அதைப் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார். அந்தக்கல்லை இப்பொழுதும் இராமநாதபுரத்திற் காணலாம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

இராமபிரான் இராமமுத்திரை யிடப்பட்ட சிலையைப் பிராமணருக்குத் தானஞ்செய்ததின் காரணமென்ன? இதை எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்றான்.

இராமதாஸர் கூறுகிறார்.

ஒருசமயம் இராமபிரான் அநேக தானங்களைச் செய்யப்போவதாகக் கேள்விப்பட்டுப் பிர்ம்மபுரத்திலிருந்த பிராமணர்களெல்லாரும் மனமகிழ்ச்சியுடன் அயோத்திக்குவந்தார்கள். அப்பொழுது இராமர் கந்தர்வராஜன் வீட்டிற்குப் போஜனஞ் செய்யப்போயிருந்தார். வந்தபிராமணர்கள் இராமர் விருந்துக்குச் சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டு, தாங்களும் அங்குச் சென்றார்கள். அங்கிருந்த தூதர்கள் பிராமணர்கள் வந்திருப்பதை இராமபிரானுக்குத் தெரிவித்தார்கள். இராமர் உடனே பரபரப்புடன் வெளியே வந்து, அவர்களை நமஸ்கரித்து உள்ளே அழைத்துச் சென்று ஆசனமளித்து உபசரித்துச் சற்றுப்பேசியிருந்துவிட்டு ஸ்நானஞ் செய்து போஜனத்திற்குத் தயாராகும்படி சொன்னார். இப்பொழுது அந்தணர்களிற் சிலர் மற்றவரைப்பார்த்து, "ஸ்நானஞ்செய்வதற்கு முன்பல்லவா யாசிக்கவேண்டும்" என்றார்கள். சிலர், "இராமரிடம் நிர்ப்பந்தம் கிடையாது; எப்போது வேண்டுமானாலும் யாசிக்கலாம்" என்றார்கள். சிலர், இராமர் எப்போதும் பிராமணர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்கிறவர்" என்று சொன்னார்கள். இவ்விதம் பிராமணர்கள் கூறி ஆலோசிப்பதை யறிந்த இராமர் "அந்தணர்களே! தங்களுடைய கருத்தை

யறியலானேன். நீங்கள் இராஜ்யத்தை யடையவேண்டுமென்று எண்ணிச் சிரமப்படுகிறீர்கள். உங்கள் சிஷ்யரில் எவனையேனும் அனுப்பி உங்களுடைய அபிராயத்தைத் தெரிவித்திருந்தால், அதைஉடனே நிறைவேற்றி யிருப்பேன்'' என்று கூறி விட்டு,உடனே இலட்சுமணரை அழைத்து, இலட்சுமணா! நான் பிரம்மபுரத்திலிருந்து வந்திருக்கும் இந்த அந்தணர்களுக்கு இராஜ்யதானஞ் செய்ய உத்தேசித்திருக்கிறேன். ஆகையால் ஒரு சிலையில் என் முத்திரையையும் இராஜ்யம் தானமாகக் கொடுக்கப்பட்ட தென்பதையும் வரையும்படி செய்என்றார். உடனே இலக்ஷுமணர் கல்தச்சர்களை அழைத்துவரும்படி வேலைக்காரர்களுக்குஉத்தரவிட்டார். பிறகு பிராமணர்கள் இராகவரைப்பார்த்து எங்களுக்கு மிகவும் பசியாயிருக்கிறது; ஆகையால் போஜனத்துக்கு உத்தரவளிக்க வேண்டும் என்றார்கள். உடனே, இராகவர் அவர்களுக்குத் திவ்ய போஜனம் செய்விக்கும்படி உத்தரவிட்டார். பிறகு இராமசந்திர பிரபு அவ்விடத்திலேயே யிருந்து, ''சிலையிலெழுதி எப்பொழுது முத்திரையிடுகிறேனோ அதற்குப்பிறகுதான் நான்புசிப்பேன். செல்வம் நிலைபற்றது. மனம் ஒரு கணமும் ஒரு நிலையில் நில்லாது. பிராணனிருப்பது நிச்சயமல்ல. காலமோ கருணையற்றவன். ஆகையால் அறத்தை அதிசீக்கிரத்தில் செய்யவேண்டும். நூறு வேலைகளை விட்டாவது புசித்தல்வேண்டும். ஆயிரம் வேலைகளை விட்டாவது நீராடவேண்டும். இலக்ஷம் வேலைகளை விட்டாவது தானம் செய்யவேண்டும். கோடி வேலைகளைவிட்டாவது ஈசுவர பஜனம் செய்யவேண்டும். கீதையைக் கேட்பதற்கு கோடி விக்கினங்கள் நேரிடும். கங்கையில் நீராடுவதற்குப் பத்துக் கோடி விக்கினங்கள் நேரிடும். ஆகையால் அந்தணசிரேஷ்டர்களுக்குத் தானமளிப்பதில் பரபரப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். நித்திரைசெய்வதற்கும் புசிப்பதற்கும் சற்று முன்னும் சற்றுப் பின்னும் மனிதர்களுக்கு அனேகமாய்ப் புத்தி மாறுவதுண்டு; ஒருசமயம் போல் இருப்பதில்லை. ஆகையால் தானஞ்செய்ய மனம் நினைக்கும்போதே சிறிதும் தாமதியாமல் தானஞ் செய்ய வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது கல்தச்சர்கள் கண்டகி நதிப்

விருந்து ஒன்பது முழ நீளமுள்ள ஒரு கல்லைத் தூக்கிக்கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப்பார்த்து இராமர், பின்வருமாறு அச்சிலையில் வரையும்படி சொன்னார்.

சிலாஸாஸனம்.

சூரியவம்சத்திற் பிறந்து ஏழுதீவுகளுக்கும் பதியாகவிருக்கும் தசரத புத்திரராகிய இராமர், திரேதாயுகத்தில் பிரம்மபுரத்து அந்தணர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் செய்த இராஜ்யதான சாஸனம். இச்சாஸனமானது சூரியனுள்ளளவும் இவ்வுலகத்தில் இராமசரித்திரம் விளங்கும் காலம்வரையிலும், காற்றுலாவும் வரையிலும் நிலைத்திருக்கட்டும். அந்தணர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் தானஞ்செய்த இந்தத் தர்ம சேதுவை ஒவ்வொரு காலத்திலும் பாலனஞ்செய்து வரவேண்டுமென்று அரசர்களை இராமர்மிகவும் பிரார்த்திக்கிறார்.

ராஜாராம்.

இவ்விதம் சிலையில் வெட்டும்படி செய்து, இதில் ராமநாம முத்திரையைப் போடும்படி அனுமாருக்கு உத்தரவிட்டார். அனுமார் இராமபிரானது முத்திரையைச்சிலையில் அழுத்தினார். சிலையில் அம்முத்திரை "ராஜாராம்" என விழுந்தது. இதற்குள் அந்தணர்களும் போஜனஞ் செய்து விட்டு, இராமருடைய சந்நிதானத்துக்குவந்தார்கள். இராமர் அவர்களை ஆசனத்தில் வீற்றிருக்கும்படி உபசரித்தார். பிறகு சீதையையும் அருகில் வைத்துக்கொண்டு அந்தச்சிலாசாஸனத்தை அது எவ்வளவு நிறையிருந்ததோ அவ்வளவு நிறை திரவியத்தோடு பிராமணர்களுக்குக்கொடுத்தார். பிறகு கம்பு கண்டனைப்பார்த்து "ஏ கம்பு கண்ட! ‘நான் எப்பொழுதும் பிராமணர்களுக்குச் சகாயஞ் செய்கிறேன்". என ஒரு உறுதிமொழிச்சீட்டு உன் கைப்பட எழுதிக்கொடுவெனக்கேட்டு, அதைப்பெற்றுக்கொண்டு போஜனத்துக்குச் சென்று பந்து மித்திரர்களோடு போஜனஞ்செய்தார். இராமர் போஜனம் செய்து சபைக்குவந்ததும் பிராமணர்கள் ஆநந்தமான ஆசீர்வாதங்களை இராமபிரானுக்கு மனமுவந்து அளித்தார்கள். இராமரும் அவர்களை வந்தனித்து மிகவும் உபசரித்தார். பிறகு அங்கே போஜனம் செய்து விட்டு நின்றுகொண்டிருந்த அனுமந்தரைப் பார்த்து "ஏ அனுமந்த! நீ நமது

விமானத்தில் இந்தப் பிராமணர்களையும் சிலாசாஸனத்தையும் ஏற்றிவைத்துக் கொண்டு பிரமபுரம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டுப்பிறகு வந்து சேர்" என்று ஆக்ஞைசெய்தார். அநுமார் அந்த ஆக்ஞையைச்சிரமேற்கொண்டு அவ்விதமே பிரயாணப்பட்டு பிரமபுரம் போய்ச்சேர்ந்தார். சர்வலோகநாதராகிய இராமபிரான் இராஜ்யதானம் செய்த பிறகு பிரம்மபுரத்திற்கு இராமநாதபுரமெனப்பெயருண்டாயிற்று. இவ்வாறு இராமர் செய்ததானங்களுக்குக்கணக்கில்லை. வெகு காலத்திற்குப் பின்னர் இராமநாத புரத்திலிருந்த அந்தணர்கள் துஷ்ட அரசர்களுக்குப் பயந்து அந்தச் சிலையைக் குளத்தில் எறிந்துவிட்டார்கள். அதனால் அவர்களுக்குக் கஷ்டமுண்டாயிற்று. அந்தக் கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் அவர்கள் தங்களுயிரை மாய்த்துக்கொள்ள நிச்சயித்தார்கள். அத்தருணம் அநுமார் அவர்களுக்குப் பிரஸன்னமாகி, சிலையைக் குளத்திலிருந்து எடுத்து அவர்களைக் காப்பாற்றினார்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பிராமணர்களுக்குண்டான கஷ்டம் என்ன? அவர்கள் உயிரை மாய்த்துக்கொள்ள யத்தனிப்பானேன்? அநுமார் அவர்களை எவ்விதம் காப்பாற்றினார்? இவைகளை எனக்கு விஸ்தாரமாகக் கூறவேண்டும் என்றார்.

இராமதாஸர் கூறுகிறார்.

இராமபிரான் இந்த இராஜ்யதானஞ் செய்த வெகுகாலத்திற்குப் பின்னர், இந்தப் பூலோகத்தில், ஒரு துஷ்ட அரசன் ஏற்பட்டான். அவன் இந்தப் பிராமணர்களுக்குக் கொடுத்த இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வதற்காக, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, "இராமர் உங்களுக்கு இராஜ்யதானம் செய்திருந்தால், அந்தத் தானஸாஸனத்தை எனக்குக் காண்பியுங்கள்; இன்றேல் உங்களனைவரையும் என் கைக்கத்திக்கிரையாக்கி இந்த இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வேன்" என்று பயமுறுத்தினான். பிராமணர்கள், தங்களுடைய தானசாஸனத்தை ஏற்கனவே, துஷ்ட அரசர்களுக்

குப் பயந்து குளத்தில் எறிந்துவிட்டமையால், "ஒரு மாதத்திற்குள் தருகிறோம்" எனக் கூறினார்கள். அதைக்கேட்டு அவ்வரசன் அவ்விதமே தவறாமல் கொணர்ந்து காண்பியுங்களெனக் கூறி, அவர்களை அச்சமயம் தொந்தரவு செய்யாமல் விட்டுவிட்டான். பின் சிலநாளைக்கெல்லாம் ஒரு பெருமழை பெய்தது. அந்த மழையால் குளத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓட ஆரம்பித்து விட்டது. இதைக் கண்டு அவ்வந்தணர்கள் பயந்து, இன்னதுசெய்வதென்று தோன்றாமல், மிக்கவிசனத்தில் மூழ்கிப் பரமாத்மாவான இராமசந்திர பிரபுவைத் தியானித்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்துவிட்டனர்.

இதற்குள் அரசனிடம் கெடுக்கேட்டுவந்த ஒரு மாதமும் சென்றுவிட்டது. இவர்களுக்கு அப்போது அரசன் நம்மைக் கொன்று விடுவான் என்கிற பயமுண்டாய்விட்டது; என்னசெய்வார்கள். கஷ்டம்பொறுக்கமாட்டாமல் உயிரைவிட யத்தனித்தார்கள். இதையறிந்த அவர்கள் மக்கள் மனைவி முதலியவர்கள் மிகவும் துக்கமடைந்து கோவென்று கதறினார்கள். பிராமணர்கள் "ஏ ராமா ஏ ஜானகிகாந்தா! நீர் எங்களுக்குத் தானஞ்செய்ததால் நாங்கள் இக்கதியை யடையலானோம். தங்களுக்குத் தயையில்லையா" என்று கூறிக்கதறித் தங்களை மறந்துநின்றார்கள். இச்சமயம் அங்கிருந்த ஓர் ஆலயத்திலிருந்து "ஏ அந்தணர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம்; நீங்கள் பிராணனைவிடவேண்டாம்; இராகவரது தாஸனும் அஞ்சனாதேவியின் புத்திரனுமான நான் வந்துவிட்டேன்" என்று கூறினார் அனுமார். இவ்வார்த்தைகள் அவர்கள் செவியிற்பட்டதும், வெகு ஆச்சரியத்தோடு கண்களைத் திறந்து பார்த்தார்கள். எதிரில், ஆஜாநுபாகுவுடனும் தேகமெல்லாம் செம்பட்டைமயிருடனும் கூடிய ஓர் கிழவுருவந்தாங்கி நிற்கும் ஆஞ்சநேய மூர்த்தியைப் பார்த்து, அஞ்சலிசெய்து வணங்கி, தங்கள் குறைகளைக்கூறி முறையிட்டார்கள். உடனே ஆஞ்சநேயர் அக்குளத்திலிருந்து 'அச்சிலை'யை வெளிக்கிளப்பி அதை எடுத்துக்கொண்டு பிராமணர்களோடு அந்த அரசனிடம் சென்று அவனுக்கு அதைக் காண்பித்தார். அரசன் இராமபிரானது முத்திரையைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அவன் ஆச்சரியப்பட்டானாயினும்,

அவன் செய்த பிழைக்காக அனுமார் அவன்மேல் கோபங்கொண்டு அவனைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டார். அச்சமயம் அவனை விடுவிக்க வந்த இராஜதூதர்களையும் ஒரு நொடியில் எமலோகபட்டணத்திற்கனுப்பினார். அக்குளம் பிராமணரது தாபத்தைப்போக்கியதால், அதற்கு ஹிருத்தாமசமனம் என்னும் பெயருண்டாயிற்று. இராமர் இராஜ்யதானம் செய்த உதார குணத்தை உலகமறிவதன் பொருட்டு அங்கு உதாரராகவரென்கிற பெயருடன் ஒரு மூர்த்தி அக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக்குளத்தில் ஸ்நானம் செய்தவர்கள் தாபத்திரயந் தொலைந்து சுகம்பெறுவார்கள்.

அனுமார், இவ்விதம் சந்தோஷமடைந்த அந்தணர்களைப் பார்த்து, இந்த இடத்தில் ஓர்குகை ஏற்படுத்தி அங்கு அந்தச்சிலாசாஸனத்தை வைத்து விடுங்கள். இனி நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். இராமபிரானையும் என்னையும் நீங்கள் எப்பொழுது நினைக்கிறீர்களோ அப்பொழுது அவசியம் பிரத்தியக்ஷமாகிறேன் என்று கூறி மறைந்துவிட்டார். அந்தணர் அனுமார் கூறியவாறே ஒரு குகை ஏற்படுத்தி அதில் அச்சிலையை வைத்துவிட்டு மனமகிழ்ச்சியுடன் இராமஸ்மரணை செய்துகொண்டு தத்தம் மனைக்கேகினர். அதுமுதல் அவர்கள் இராஜ்யத்தை ஒருவரும் அபகரித்துக் கொள்ளவில்லை; ஏ விஷ்ணுதாஸ! இன்னும் பிராமணர்கள் அங்கு அந்த இராஜ்யத்தை அனுபவிக்கிறார்கள். பிறகு பூமியிலுண்டான அரசர்கள் யாவரும் இராமரது ஆக்ஞையை மதித்து வந்தார்கள். இவ்விதம் இராமர் அயோத்தியில் தமது பந்துமித்திரர்களோடிருந்து வெகுலீலைகளைச் செய்து வந்தார்.

18-வது சருக்கம்

முற்றிற்று.

19-வது சருக்கம்

விஷ்ணுதாசர் வினவுகிறார்.

தாங்கள் கூறிய விஷயத்தைக் கேட்டு மிகவும் ஆனந்தமடைந்தேன். மேலே நடந்தவைகளைக் கூறியருள வேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஏ சிஷ்ய! உலகங்களை ஒழுங்குப்படுத்த இராமராஜர் அனுசரித்துவந்த மங்களகரமான தினசரி அநுஷ்டானங்களைச்சொல்லுகிறேன் கேள். விடியற்காலத்தில் ஸீதையோடு சயனித்துச் சுகமாக நித்திரைசெய்து கொண்டிருக்கும்போது பாடகர்கள் பாடும் நல்லபாட்டுகளைக்கேட்டு எழுந்திருப்பார். பிறகு சிரேஷ்டமான வாத்தியகோஷங்களைக் கேட்பார். பிறகு பரமசிவன் உமாதேவி தந்தையாகிய தசரதர் தேவர்கள் புண்ய தீர்த்தங்கள் தாய்மார்கள் திவ்யக்ஷேத்திரங்கள் காடுகள் பருவதங்கள் சமுத்திரங்கள் புண்ய நதிகள் நதங்கள் இவர்களெல்லோரையும் தியானம் செய்துவிட்டுப் பிறகு ஸீதையைப் பார்ப்பார். அப்போது சீதை வணங்குவாள். அவ்வம்மையின் கரத்தைப்பற்றி மஞ்சத்தினின்றிறங்கி வேலைக்காரர்கள் சூழவெளிக்கட்டிற்குப் போய் காரியங்களைப் பார்த்துக்கொண்டு பிறகு கிரீடாசாலைக்குச் சென்று அங்கு சௌசம் முதலானவைகளை முடித்துக்கொண்டு தந்தசுத்தி செய்து கொள்வார். பிறகு வீட்டிலேயோ அல்லது ஸரயூநதியிலேயோ ஸ்நானம் செய்வார். சரயூநதியில் ஸ்நானம் செய்வதாயிருந்தால், பல்லக்கிலேறிக்கொண்டு புறப்படுவார். பிராமணர்களையும் வாகனங்களிலேற்றி அழைத்துக் கொண்டுபோவார். நதிக்கரைக்குச்சென்றதும் எல்லோரும் வாகனங்களிலிருந்து இறங்கிக் கால் நடையாகச்சென்று புண்யதீர்த்தத்தைவணங்குவார். இங்கு தக்ஷிணை போடு தேங்காய் தாம்பூலங்களை வைத்து, மறுபடியும் ஒரு முறைவந்தனம் செய்து பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய விதிப்பிரகாரம் ஸ்நானஞ் செய்வார். பிறகு காலசந்தியையும் பிரம்மயக்ஞத்தையும் செய்து முடிப்பார். பிறகு பிராமணர்களோடு கால்நடையாகவே கரைக்கு

வந்து, ஏற்கனவே இங்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் இரதத்தில் ஏற்றிக்கொண்டு எல்லாரோடும் வீடு வந்து சேர்வார். வீட்டிற்குவந்ததும் விதிப்பிரகாரம், ஹோமம் செய்து பக்தியுடன் பரமசிவனைப் பூஜித்துப்பின் கௌஸல்யை, சுமித்திரை, கைகேயி இவர்களைப் பூஜிப்பார். இதன்பின் காமதேனு, கற்பகத்தரு, பாரிஜாதம், புஷ்பகம், சிந்தாமணி, கௌஸ்துபம் இவைகளையும் ஆலமரம், வில்வமரம், அரசு, துளசி, பலாசு, வன்னி முதலியவைகளையும் அறுகம்புல்லையும் ஆராதிப்பார். அப்புறம் சீதையும் தாமுமாக விருந்து சூரியனைப்பூஜித்து அவரைவணங்குவார். பிறகு துவாரதேவதைகள், பசு, காளை, யானை இரதம், ஆயுதம், பிராமணர், பொக்கிஷம், சமையல் செய்யுமிடம், சிங்காதனம் இவைகளையும் பூஜிப்பார். குடை, சாமரம், விசிறி, கட்டில், தீபம், கண்ணாடி, புத்தகம் இவைகளை ஆராதித்தப்பிறகு பிராமணசிரேஷ்டர்கள் வணங்கும் தமது குருவைப் பூஜிப்பார். பிறகு குருவை உயர்ந்த ஆசனத்தில் உட்காரவைத்து, புத்திரர் மித்திரர்களத்திரர் இவர்களோடு இவரெதிரில் வீற்றிருந்து புண்யகதைகளைக் கேட்பார் பிறகு குருவுக்கு சிரேஷ்டமான வஸ்துக்களைச் சன்மானஞ்செய்வார். அதன்பின் போஜனஞ் செய்து தாம்பூலந் தரித்து நல்லவஸ்திரங்களை உடுத்திக்கொண்டு கச்சுப்புனைந்து இடுப்பில் ஆயுதங்களை அணிந்து கொள்வார் இதன் நடுவில் வைத்தியனும் சோதிடனும் அங்கு வருவார்கள். இராமர் அவர்களை உபசரித்து நல்ல ஆசனத்தில்வீற்றிருக்கச் செய்வார். வைத்தியன் இராமர் உத்தரவின்பேரில், அவர் வலது கையிலுள்ள ஜீவநாடியைப் பார்ப்பான், அப்படிப் பார்த்தால்தான் தேகத்தின் சுகாசுகங்களை வைத்தியர்கள் அறிவார்கள். சோதிடன் பஞ்சாங்கத்தை விரித்துப்பார்த்து, "விநாயகர், பிரம்மா, விஷ்ணு, தேவர்கள், சூரியன், சந்திரன், அங்காரகன் புதன், பிருகஸ்பதி, சுக்ரன், சனி, இராகு, கேது ஆகிய இவர்கள் எல்லாரும் எப்பொழுதும் தங்களுக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்" என்றும், "திதியைக் கேட்பதால், ஸ்திரமான சம்பத்தும், வாரத்தினால் நீண்ட ஆயுளும், நக்ஷத்திரத்தால் பாவநாசமும் யோகத்தால் பிணியின்மையும், கரணத்தால் எல்லா மனோபீஷ்டமும் உண்டாகுமாதலால்,

ஒவ்வொருதினமும் பக்தியுடன் பிராமணர்முகமாக பஞ்சாங்கத்
தைக்கேட்கவேண்டும்'' என்றும், 'ஸ்ரீ இராகவ! இன்று சுக்லபக்ஷம்
தசமிதிதி — ஞாயிற்றுக்கிழமை பூசநக்ஷத்திரம், ஐந்திரயோகம்,
பவகரணம்; சந்திரன் கடகராசியி லிருக்கிறான்; இது வஸந்தருது,
சைத்ரமாதம் என்று விவரித்துப் பிறகு தாங்கள் வெகுகாலம்
பூமியிலிருந்துசுகமாய்ராஜ்யத்தை ஆளவேண்டும், பிரஜைகள்சுகமா
யிருக்கவேண்டும்; ஒருவருக்காவது துக்கமென்பதேவரக்கூடாது''
என்று வார்த்தையும் கூறுவான். இவைகளைக் கேட்டு இராமர்
மிகவும் சந்தோஷமடைந்து வைத்தியனுக்கும் சோதிடனுக்கும்
தாம்பூலதக்ஷிணைகளைக்கொடுத்து அனுப்புவார். இதன்பின் மாலை
கட்டி, அழகிய புஷ்பங்களைப் பெற்றுக்கொண்டு, அவரது ஸந்நிதி
யில் சென்று அவரை வணங்கி, அவரது சமீபத்தில் மாலைகளை
த்துவிட்டுத் திரும்பிவிடுவான். இராமர் அவைகளைத் தாமெடு
த்துக்கொண்டு பந்து புத்ரமித்ர களத்ராதிகளுக்கும் கொடுத்து
ஆனந்தப்படுவார். அப்புறம் நாவிதன் இராமரது அருகேசென்று
அழகிய கண்ணாடியை அவருக்குக் காட்டுவான். இராமர் அதில்
தாமரை இதழ்போன்ற கண்கள், நீண்டநாசி, சிலாக்யமான குண்
டலங்கள் அணியப்பெற்றசெவிகள் இவைகளோடுகூடிய சந்திரபிம்
பம்போன்ற தமது முகத்தைப்பார்த்து மிகவும் ஆனந்தமடைவார்.
அப்புறம் தூபக்காரன்வந்து அவரைப்பணிந்து அவர்அருகில் தூப
த்தைக் கையிலேந்திக்கொண்டு நிற்பான். பிறகு இராமர் பல்லக்கி
லேறிக்கொண்டு வீட்டிற்குவெளியேசென்று மாகதர் முதலானவர்
களையும் வெளிக்கட்டி லுள்ளவர்களையும் பார்ப்பார். இவர்கள்
இராமரைவணங்கி சூரியவம்சத் தரசர்களையும் இவரையும் ஸ்தோ
த்ரம் செய்வார்கள். பிறகு சாரணர்கள் ஆனந்தத்துடன் பாடுவார்
கள். நடர்கள் வேசிகள் இவர்கள் அநேக வாத்தியங்களை முழக்கிக்
கொண்டுநர்த்தனம்செய்வார்கள். மற்றவர்களும் வேடிக்கைசெய்வா
ர்கள். பிற்பாடு இராமர் மூன்றாவதுகட்டிற்குச் சென்று அங்குள்ள
யானைகளையும், குதிரைகளையும், ரதங்களையும், வாகனங்களையும் பார்
ப்பார். அப்புறம் இந்தக்கட்டில் தம்மைப்பார்க்க வந்திருக்கும் அர
சர்களையும் பட்டணத்துஜனங்களையும்பார்ப்பார். பிற்பாடுஐந்தாவது

கட்டிலுள்ள புஷ்பக விமானத்தையும் புஷ்பத் தோட்டங்களையும் ஆயிரக்கணக்கான ஆயுததாரிகளையும் பார்ப்பார். அப்புறம் ஆறுவது கட்டிலுள்ள குதிரைகளின் மேலேறிக்கொண்டு கைகூப்பிக்கொண்டு வெகு விநயமாய் நிற்கும் வீரர்களைப் பார்ப்பார். பிறகு ஏழாவது கட்டிலுள்ள சபைக்குச் சென்று அங்கு பல்லக்கிலிருந்திறங்கி மெள்ள மெள்ள சிங்காதனத்தின் மேலேறுவார். அப்போது இலட்சுமணர் குடையையும், பரதர் சாமரத்தையும், சத்துருக்னர் அழகிய விசிறியையும், அநுமார் பாதரட்சைகளையும், ஸுக்ரீவர் ஜலபாத்திரத்தையும், நல்ல கண்ணாடியை விபீஷணரும் பிடிப்பார்கள்; வாலியின் புத்திரனான அங்கதன் கையில் தாம்பூல பாத்திரத்தைத் தரித்திருப்பான். ஜாம்பவான் வஸ்திரப்பையை வைத்துக்கொண்டிருப்பான்.

இவ்வாறிருக்க, ராமர் சிங்காதனத்தி லேறியதும் பின்னால் லக்ஷ்மணனும், வலது புறத்தில் பரதனும், இடதுபுறத்தில் சத்ருக்னனும், எதிரில் ஹநுமானும், வடமேற்கு மூலையில் விபீஷணனும், தென்கிழக்கில் அங்கதனும், தென்மேற்கில் ஜாம்பவானும் வீற்றிருப்பார்கள். அவருக்கு எதிரில் எல்லா அரசரும் கைகட்டி நின்றுகொண்டிருப்பார்கள். அவருக்கு எதிரில் இருபக்கங்களிலும் முனிசிரேஷ்டர்கள் உயர்ந்த ஆஸனங்களில் உட்கார்ந்திருப்பார்கள். அதற்கு எதிரில் தாசிகள் ஆயிரக்கணக்காய் நர்த்தனம் செய்வார்கள். பிறகு வீரர்களும் தூதர்களும் நின்றுகொண்டிருப்பார்கள்: அப்புறம் இராமருடைய இரண்டு புத்திரர்களும் அவரது மித்திரர்களும் வந்து நிற்பார்கள். அவர்கள் இராமரது ஆக்ஞையின்படி உட்காருவார்கள். அவர்களுடைய மத்தியில் இராமர் மிகவும் சிலாக்கியமாய் விளங்குவார். இவ்வாறு ஸபையில் வீற்றிருந்து அநேககாரியங்களைச் செய்து பந்துக்களையும் புத்திரர்களையும் அநேக காரியங்களைச் செய்யும்படி ஏவிவிட்டு, அநேக ஆச்சரியங்களைப் பார்த்துக்கொண்டு முன்போல் வீட்டிற்கு வருவார். அப்பொழுது கோமுகம் முதலிய வாத்தியங்கள் முழங்கும். இந்த வாத்திய கோஷத்தைக்கேட்டு ஜானகி பரபரப்புடன் கையில் ஜலத்தை வைத்துக்கொண்டு அவரை எதிர்கொண்டழைக்கக் காத்துக்கொண்டிருப்பாள். அப்போது வெண்

பட்டு உடுத்துக்கொண்டிருக்கிற ஸீதையை இராமர் பார்ப்பார். அதைக்கண்ட தேவி வெட்கமுற்றுத் தலைகுனிந்த வண்ணத்தில் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு இராகவருக்குத் தன்கையிலிருக்கும் தண்ணீரைக்கொடுப்பார். நீரை அவர் வாங்கிக்கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு கூடவந்தவர்களுக்குச்செலவு கொடுத்தனுப்பிவிட்டு ஸீதையின் வீட்டிற்குச்செல்வார். தாம் வழியில் பார்த்த ஆச்சரியமான விஷயங்களை ஸீதைக்குச் சொல்லுவார். பிறகு மாத்தியானஸ்நானம் செய்து விட்டு பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்வார். உடனே பரமசிவனுக்கு நிவேதனம் செய்வார். பின்னர் வைச்வதேவம் பலிதானம் இவைகளை விதிப்பிரகாரம் முடித்துவிட்டு, பூதபலி பிதிர்பலி இவைகளைக் கொடுத்து விட்டு வெளியில் காகபலியைச்செய்வார். பிறகு யதிகளை ஆதரவோடு பூஜித்து யதிகளையும் பிராம்மணரையும் ஆராதித்து தங்கப்பாத்திரங்களில் ஜானகியம்மாள் ஆதரவுடன் பரிமாற பந்துமித்ர புத்திரர்களோடு கூடச்சேர்ந்து போஜனம் செய்வார். பிறகு கரசுத்தி செய்துகொண்டு பிராமணருக்குத் தாம்பூல தக்ஷிணைகளைக் கொடுப்பார். தாமும் தாம்பூலம் தரித்துக்கொள்வார். நூறடிநடந்து மெள்ள மெள்ள சயனசாலைக்குச் செல்வர். இதன் நடுவில் ஸீதை போஜனம் செய்துவிட்டு இராமரிடம் சென்று கட்டிலின்மேல் படுத்திருக்கும் அவருக்கு அருகில் நின்றுகொண்டு விசிறிக்கொண்டிருப்பாள். இராமர் அதில் நித்திரை செய்வார். பின் ஸீதையும் அதில்படுத்து நித்திரைசெய்வாள். தாஸிஜனங்கள் அவர்களை விசிறிக்கொண்டிருப்பார்கள். பிறகு சற்றுநேரத்தில் ஸீதை இராமர் இருவரும் விழித்துக்கொள்வார்கள். உடனே இராமர் இருவரும் திராக்ஷை மண்டபத்திற்குச்சென்று அதன்கீழுள்ள தண்ணீர்க்குழாய் முதலியவேடிக்கைகளைப் பார்த்துவருவார். பிறகு கூட்டிலுள்ள பக்ஷிகளையெல்லாம் பார்த்து ஸீதை சந்தோஷமடைந்து தாஸிஜனங்களோடு தனது வீட்டிற்குச் செல்வாள். பிறகு ராமர், லக்ஷ்மணர் முதலிய தமது சகோதரர்கள் இருக்குமிடம்செல்வார். அவர்கள் ராமரைக்கண்டதும் வணங்கி மகிழ்வார்கள். அவர்களோடு கூட ராமர் குதிரை, யானை, ஒட்டகம் ஆயுதம் இவைகளிருக்கும் சாலைகளுக்குச்சென்று அவைகளைக் கவனிப்பார். பிறகு மெள்ளச்

சென்று பல்லக்குச்சாலையையும் இரதசாலையையும் பார்ப்பார். அப்புறம் இரதத்திலேறிக்கொண்டு வெளியேசென்று முன்போல் ஏழு கட்டுகளையும் தாண்டி எட்டாவதுகட்டில் வண்டிகளின்மே லுள்ள குண்டு, துப்பாக்கி முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு அங்கே அனேகவேடிக்கைகளைப் பார்ப்பார். பிறகு ஒன்பதாவதுகட்டிலிருந்து வீட்டைப்பாதுகாத்துவரும் வேலைக்காரர்களைப் பார்ப்பார். இவ்வாறு அவர் ஒன்பது கட்டுகளையும் தாண்டிச்சென்று அரண்மனைக்குவெளியே ஜலத்துடன் கூடிய ஒன்பது அகழிகளையும் பார்ப்பார். பட்டணத்து வாயிற்படியிலுள்ள ஒன்பது காவற்காரர்களையும் பார்த்துக்கொண்டு பிறகு அநேகம் உத்தியான வனங்களின் அழகை ஆனந்தத்தோடு பார்ப்பார். பந்து புத்திரரோடு ஸரயூநதிக் கரைக்குச் செல்லுவார். அங்கே ஓடங்களிலேறிக் கொஞ்சநேரம் விளையாடிவிட்டு நதிக்கரையில் சிறு ஸைன்யத்தோடு வீற்றிருந்து வேசிகளின் நர்த்தனத்தைப் பார்ப்பார். இவ்வாறு சற்றுநேரம் போக்கிவிட்டு, மறுபடியும் சீக்கிரமாக பட்டணத்திற்குத் திரும்பி வருவார்.

பிறகு முன் கூறியபடி மெள்ள மெள்ள ஸபைக்குச் சென்று லக்ஷ்மணர் முதலானவர்களால் சேவிக்கப்பட்டுசிங்காதனமேறுவார். அங்கிருந்து அநேககாரியங்களைச் செய்துவிட்டு, பந்து புத்திரருக்கும் காரியங்களைச் செய்யும்படி ஆக்ஞாபித்து, முன்போலவீட்டிற்குவருவார். சாயுங்காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்து விதிப்பிரகாரம் அக்னிஹோத்திரம் செய்வார். மறுபடியும் பல்லக்கிலேறித் தேவாலயம் சென்று சிவன் முதலிய தேவதைகளை வணங்கிப் பூஜித்து ஆங்காங்கு அநேக ஆச்சர்யங்களைப் பார்த்துக்கொண்டு மேலான ஆனந்த மடைவார். பிறகு வாகனத்திலேறிக்கடைவீதிவழியாய் வீட்டிற்குவருவார். பிறகு தமது பந்துபுத்திரரோடு அநேக கதைகளையும் பேசிக்கொகொண்டிருந்து இரவில் ஒன்றரையாமத்திற்குப் பிறகு பள்ளியறைக்குப் போவார். இதன் நடுவில் அவ்வறையில்ஸீதை புஷ்பப் படுக்கை முதலிய வைகளைத் தயார்செய்து வைத்துக்கொண்டு அவரை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். அதற்குள் அவர் வருவதைப்பார்த்ததும் ஸீதை பரபரப்

போடு எழுந்திருந்து அவரைக்கைகொடுத்துப் பள்ளியறைக்கு அழைத்துக் கொண்டு போவாள். அப்போது அங்குள்ள தாஸிகள் எல்லாரும் வெளியேவந்து விடுவார்கள். பிறகு ராமரும் ஸீதையும் வெகு உல்லாசமாயும் ஆனந்தமாயும் இருப்பார்கள்.

இவ்விதம் நடந்து வரும் நாளில் ஒருநாள் ராமர் ஸந்தோஷமா யிருக்கையில் ஸீதை அவரைப்பார்த்து, மிகவும் வெட்கத்தோடு "பிராணநாதா! நான் கேட்பதற்குத் தயைசெய்து பதில் கூற வேண்டுகிறேன். நான் குசனைப் பெற்றபிறகு எனக்கு கர்ப்பம் உண்டாகாததற்குக்காரணமென்ன என்றாள். ராமர் "ஏஸீதே! நீ நன்றாய்க்கேட்டாய்; அதற்குப் பதில் கூறுகிறேன்" கேள். நீ எதற்காக வெகு புத்திரர்களை விரும்புகிறாய். நல்ல வம்சத்தில் அநேக புத்திரர் உண்டாகக் கூடாது. ஏனெனில் ஒரு காலத்தில் ஒருவனுடைய துராசாரத்தால் குலத்திற்குக் கேடு விளைந்துவிடும். அதனாலேதான் நான் வெகுபுத்திரரை விரும்பவில்லை. குலத்தைத் தனது குணங்களால் அலங்கரிக்கிற ஒரு புத்திரனை அவசியம் விரும்பவேண்டும். துஷ்டர்களான அநேகம் பிள்ளைகள் பிறப்பதில் பயனென்ன? எப்போதும் இரண்டு பிள்ளைகளை நேத்ரங்கள் போலவும் கைகள் போலவும் சந்திர சூரியர்கள் போலவும் நானும் லக்ஷ்மணன் போலவும் இருக்கவேண்டும். இம்மாதிரி உனக்கு இரண்டு புத்திரர்களிருக்கிறார்கள் இதற்குமேல் வம்சவிருத்தி வேண்டியதில்லை" என்றார். மறுபடியும் ஸீதை எனக்குப் பெண்கள் உண்டாகாததற்குக் காரணம் யாதென்று கேட்டாள். அதற்கு ராமர் எனக்குப் பெண்பிறந்தால், அதை நான் யாருக்குக் கொடுக்கிறது. எனக்குச்சமானமான அரசன் இந்தப்பூமண்டலத்தில் கிடையாது? நீ ஒரு அரசனுடையமனைவியையும் நமஸ்காரஞ்செய்ய வேண்டியதில்லாமற்போயிற்றல்லவா? எந்த அரசனது புத்திரனுவது நமக்கு வரனுகவும் நான் விவாகத்தில் அவனது சரணத்தை என் அலம்பவேண்டியது. இது வெட்கமல்லவா? அதன்பொருட்டே நான் புத்திரியை அடைய விரும்பவில்லை. நசன் முதலியவர்களின் குழந்தைகளான பெண்களில்லையா? ஹே! ஸீதே! யௌவன மதத்தால் மோகத்தையடைந்து விட்டாயா? இப்போது ஸ்திரீரூபத்தை யடைந்திருக்கிற நீ மூன்று லோகங்களுக்

கும் மாதாவல்லவா? அதை மறந்துவிட்டாய் போலும்? ஏனெனில் இவ்வுலகத்திலுள்ள ஸ்திரீரூபம் முழுவதும் உன்னுடைய அம்சத்திலிருந்து உண்டாகிறது. புருஷரூபம் முழுவதும் என்னுடைய அம்சத்திலிருந்து உண்டாகிறது. இவ்வுலகிலுள்ள ஸ்திரீ புருஷரெல்லாம் உனது பிள்ளைகளும் பெண்களுமாம். "ஒருவனுவது கயைக்குப் போனால் வெகுபுத்திரரை விரும்பலாம்" என்னும் வாக்கியம் சாமான்யமானதென்று எண்ணவேண்டாம். 'ஏ ஸீதே! ஒரு பிள்ளையாயிருந்தாலும் குலத்தைக் கரையேற்றுகிறவனே மேலானவன். அநேகமாய்த் துஷ்டமார்க்கத்தை அனுசரிக்கும் பிள்ளைகள் புழுவுக்குச் சமமானவர்கள்" என்று சொல்லப்படுகின்றது. அநேகபுத்திரர் நமக்கு உண்டாகாததற்கு வேறுகாரணம் சொல்லுகிறேன் கேள்—நான் இப்போது வேடிக்கையாகச் சொல்லுகிறேன்; இதை வேறுவிதமாய் எண்ணாதே. பலகுழந்தைகளைப் பெறுவதால், ஸ்திரீகளின் யௌவனம் குறைந்து போய் விடுமென்று எண்ணியே நான் உனக்கு வெகு குழந்தைகளைக் கொடுக்கவில்லை. உனக்குப் பல குழந்தைகளை யடைய வேண்டுமென்று எண்ணியிருந்தால், துவாபரயுகத்தில் துவாரகா பட்டணத்தில் நான் கிருஷ்ணாவதாரம் செய்து உனக்குப் பத்துப்பிள்ளைகளைக் கொடுக்கிறேன். அதனால் திருப்தியடைவாய்; அப்போது உனக்கு ஒரு பெண்ணையும் கொடுக்கிறேன் நீ வெகு புத்திரரைப்பெற்றால், உன் யௌவனம் அழிந்து விடுமென்று உன்னோடு கூட 16000 ஸ்திரீகளையும் அவ்விதமே முக்கியமான எட்டு ஸ்திரீகளையும் ஏற்படுத்தி விடுகிறேன். அப்போது நீ வெகு பிள்ளைகளையும் மருமக்களையும் அடைந்து ஆனந்தத்தை யடைவாய். நானும் அநேக ஸ்திரீகளையடைந்து சுகத்தை யடைவேன்." என்று ராமர் சொல்ல ஸீதையும் பிராண நாதா! இவ்விதம் பேச சக்தி உங்களுக்கு எப்படியுண்டாயிற்று? நீங்கள் சொல்லுவது மிகமகிழ்ச்சியைத் தருகிறது என்று சொல்ல, பிறகு ஒருவரையொருவர் புகழ்ந்து கொண்டு, வெகு சுகமாய் நித்திரைசெய்தார்கள். வசிஷ்ட! ஸ்ரீராமரது தினசரியையை உனக்கு விஸ்தாரமாகச் சொன்னேன்.

19-வது சருக்கம்

முற்றிற்று.

20-வது சருக்கம்

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்

ஒருகாலத்தில் லவன் ஒரு நாள் காலையில் வசிஷ்டரிடம் "நான் தங்களை ஒருவிஷயம் கேட்கிறேன்; அதன் உண்மையைத் தயைசெய்து கூறவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். முனிவர் "சரி கூறுகிறேன். விஷயத்தைத் தெரிவி" என லவன் முனிவரைப் பார்த்துப் "பரமகுருவே! இரவில் நாம் நித்திரைசெய்யும் போது நமதுகாதில் துருத்திபோல் ஊதும் ஒருவனுடைய சப்தம் கேட்கிறதே. அதென்ன? இதைத்தெரிந்து கொள்ளவேண்டுமென்கிற ஆவல் எனக்கு அதிகமாய் இருக்கிறது. கிருபை செய்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்" என்றான். வசிஷ்டர், 'அப்பா! நீ நல்ல கேள்விகேட்டாய்; முன் காலத்தில் ராவணன் அநேகம் பிரம்மஹத்திகளைச்செய்தான். அதனால் அவன் இன்னும் தேஹத்தோடு இலங்கையில் பிரகாசிக்கிறான். பாபியேனும், இராமர் கையினால் அடிப்பட்டதாலும் த்வேஷபக்தியாலாவது ராமனை ஸ்மரித்தமையாலும் அவன் பாபங்களெல்லாம் தொலைந்து விட்டன. ஆனால் அவன் தேகத்தால் தேவதைகளை வணங்கவில்லை. தேவாலயங்களைச் சுத்தி செய்வது முதலிய ஒரு புண்யகாரியத்தையும் செய்யவில்லை. பக்தியோடு தீர்த்தயாத்திரையும் செய்ய வில்லை. தேகம் சீதோஷ்ணங்களைச் சகிக்கும்படியான விரதம் ஒன்றையேனும் செய்யவில்லை. இப்படிப்பட்ட அவனது தேகம் பிராம்மணரையும் ரிஷிகளையும் ஸ்திரீகளையும் மிகவும் இம்சித்தது. ஆகையால் அது இப்போது இலங்கையில் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது. இராத்திரியில் கேட்பது அந்தத் தேகம் செய்யும் சப்தமே; பகலில் ஜனங்களது சப்தம் அதிகமாயிருப்பதால், அப்போது இச்சப்தம் கேட்பதில்லை. தவிர ஒவ்வொரு நாளும் ஹனுமார் இலங்கையில் அந்தத் தேகத்தைச் சிதையிலேற்றிக் கொளுத்தி வருகிறார். அத்தேகத்தின் பாபம் நிவிர்த்தியாகவில்லையாதலால், அது தகிக்கப்படுவதில்லை. அவ்விதம் தகிக்கப்படாததற்கு வேறு காரணமும் கூறுகிறேன் கேள். ராவணன் பிரா

ணனை விடும்போது இராமரிடம் "எல்லாரும் என்னை ஸ்மரிக்கும்படியான வரத்தைத் தாங்கள் தயைசெய்து கொடுத்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அதற்கு ராமர் "உனது தேகம் எரிகின்ற ஜ்வாலையின் சப்தத்தை ஏழுதீவிலுள்ள ஜனங்களும் கேட்பார்கள். அதனால் உன்னுடைய ஞாபகம் எல்லாருக்கும் வரும்" என்றார். இதைக்கேட்டு ராவணன் வெகு பரபரப்போடு பரமானந்தங்கொண்டு ராமரிடத்தில் ஐக்கியத்தையடைந்துவிட்டான் என்று சொல்ல, இதைக்கேட்டு ஸந்தோஷமடைந்த லவன் அவரைவணங்கி அவரிடம் உத்தரவுபெற்றுப் பின் பல்லக்கி லேறிக்கொண்டு தனது வீடுபோய்சேர்ந்தான்.

ஒரு காலத்தில் ராமர் தமது கிருகத்தில் பந்துக்கள் புத்திரர்கள், ஸீதை, முனிவர்கள், குரு இவர்களோடு வீற்றிருக்கும்போது மிகவும் சந்தோஷமடைந்து கூறுகிறார்—"முனிவர்கள், பந்துக்கள், புத்திரர்கள், ஸீதை, மந்திரிகள், தாய்மார்கள் முதலிய யாவரும் கேட்கட்டும். இந்த அவதாரத்தில் ஸீதையோடு சுகத்தையனுபவித்ததைப்போல் வேறு அவதாரங்களில் அனுபவிக்கவேயில்லை. அநேக காரியங்களைச் செய்வதற்காக நான் பல அவதாரங்களைச் செய்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்தது தான். ஆயினும் இப்படிப்பட்ட சுகம் நான் அனுபவித்ததேயில்லை. முன்பு கிருதயுகத்தில், சங்காசுரன் என்னும் ஒருவன் கடலிலிருந்து உண்டாகி ஸத்தியலோகத்திலிருந்த வேதங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டான். அதற்காக நான் மச்சாவதாரம் செய்தேன். பிறகு அவனை ஒரு க்ஷணத்திற்குள் கொன்று விஷ்ணுரூபத்தையடைந்தேன். அந்த அவதாரத்தில் மத்ஸ்யஜாதியில் பிறந்த எனக்கு என்ன ஸுகமுண்டாயிருக்கும். ஆகையால் நான் அந்த அவதாரத்தில் வெகு காலமிருக்கவில்லை. பிறகு கடலைக்கடையும் போது ஜலத்தில் ஆழ்ந்த மந்தர பருவதத்தைத் தாங்குவதன் பொருட்டு கூர்ம (ஆமை) ரூபத்தை 'யெடுத்தேன். அது நிந்திக்கப்படக்கூடிய தென்றும் மிருகஜாதியில் சுகமொன்று மில்லையென்றும் எண்ணி, அவ்வவதாரத்தில் வெகு காலம் நிலைத்திருக்கவில்லை. பிறகு பூமி சமுத்திரத்தில் மூழ்கு

வதைப் பார்த்து, நான் வராக (பன்றி) அவதாரமெடுத்துப் பல்லில் பூமியைத்தரித்தேன். அப்போது எனது பூமியென்று கூறின ஹிரண்யாக்ஷனையும் சங்கரித்தேன் அந்த அவதாரத்தில் என்ன சுகமுண்டாகும்? ஆகையால் அந்த அவதாரத்திலும் நான் சுகமடையவில்லை. அப்புறம் ப்ரஹ்லாதனுடைய வார்த்தையால் ஸ்தம்பத்திலிருந்து நரஸிம்மரூபத்தோடு பூமியில் அவதரித்து க்ஷணகாலத்தில் ஹிரண்யகசிபுவையும் கொன்றேன். அந்தச்சமயத்தில் என்னிடத்திலுள்ள பயத்தால், ப்ரஹ்லாதனைத்தவிர ஒருவனும் என்னிடம் வரவில்லை. அப்போதுதான் சுகம் ஏது? மிகவும் கோபமுள்ள சிங்கத்தைக்கண்டு யார்தான் ஸந்தோஷிப்பார்கள்? பிறகு பலிச்சக்ரவர்த்தியை மோகிப்பதற்காக வாமன (குள்ள) ரூபத்தையெடுத்துக் காலால் மூன்றடியாசித்து அவனையும் பாதாளத்தில் அழுத்தினேன். அந்த வாமனரூபத்துடன் கூடின எனக்குச் சுகமேது? எந்த அவதாரத்தில் சுகத்திற்கு யோக்யமான அழகிய சரீரமில்லையோ. அந்த அவதாரமுள்ள பிரம்மசாரிக்குச் சுகம் எவ்வாறுண்டாகும்? ஆகையினலேதான் உடனே எனது லோகம் சென்றேன். மறுபடியும் பிராம்மண ரூபத்தையுடைய பரசுராமனுய் அவதரித்தேன். அதிலும் இருபத்தொருதடவை க்ஷத்திரியர்களை யெல்லாம்கொன்று பூமியில் க்ஷத்திரியப்பூண்டேயில்லாமற் போகச்செய்தேன். மேலும் ஸஹஸ்ரார்ஜுனனென்னும் வீரனைக் கொன்றேன். அப்போதும் கோபத்துடன் கூடினமுனிவர் ரூபத்தைத்தான் நானெடுத்துக்கொண்டேன். வனத்தில் ஸஞ்சரிக்கும் முனிகளுக்குச் சுகம் ஏது? இதையறிந்துதான் நான் அந்த ஜன்மத்தில் தவம்புரிந்தேன். வனத்தில் தவம் செய்யும்போது தான் சுகம் ஏது? இவ்விதம் நான் பூலோகத்தில் ஆறு அவதாரங்களை யெடுத்தும் எனக்குச் சுகமென்பதேயில்லாமற் போயிற்று. இதற்குப்பிறகு துவாபரயுகத்தில் கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணவதாரம் செய்யப்போகிறேன்! அப்போதும் இப்படிப்பட்ட சுகம் கிடையாது என்பதை விஸ்தார மாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் பிறக்கும்போதே எனது தாய் தந்தையருக்குக் காராகிருகப் பிரவேசம் உண்டாகும்.

பிறகு நான் அவர்களை விட்டுப்பிரிந்து குழந்தைப் பருவத்தில் கோகுலத்தில் பிறருடைய வீட்டில் வளரப்போகிறேன். இடையனாக இருந்துகொண்டு இடைச்சேரியில் வளர்ந்துவரும் எனக்கு என்ன சுகம் உண்டாகும்? அவ்விடத்திலஸ்திரீ, ஸர்ப்பம், குதிரை, பக்ஷி முதலிய அநேக பிராணிகளைக் கொல்லப்போகிறேன். தேவ பத்னீகளின் வரத்தால் பிறரது ஸ்திரீகளை யனுபவிக்கப்போகிறேன். அவ்விடத்தில் பலதிருட்டுக் காரியங்களைச்செய்துவிட்டு மதுரை நகரம் வந்து அங்கே கஜாஸுரன் கம்ஸன் முதலிவர்களைக் கொல்லப்போகிறேன். தாஸி கோபிகாஸ்திரீகள் இவர்களை அதிகமாய் அனுபவிக்கப்போகிறேன். காலயவனர்களிடமிருந்து எனக்குப் பயம் அவமானம்உண்டாவது போலிருக்கும். ஆகையால், நான் அந்த ஸ்தலத்தை விட்டுச் சமுத்திரத்தில் கொஞ்சகாலம் இருக்கப் போகிறேன். எனக்கு மத்யமதேசத்தில் இராஜ்யம் ஏற்படாது. இராஜ்யபோகமில்லாத ஜன்மம் உபயோகமற்றதே. அநேகம் ஸ்திரீகளுக்கு ஒரு தேகம் என்ன சுகத்தை உண்டாக்கும்? அந்த ஸ்திரீகளை எப்படி சுகப்படுத்துவதென்று எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பேன். இதற்காக இராத்திரியில் சில வீடுகளுக்கு மாத்திரம் செல்வேன்; சிலவீடுகளுக்குப் போக முடியாமல் நின்றுவிடுவேன். இப்படி இருக்கின்ற எனக்குச் சுகம் எது? இவ்வாறு எனக்கு த்வாபரயுகத்தில் கிருஷ்ணாவதாரத்திலும் சுகமே கிடையாது. பிறகு பிராமணனுடைய சாபத்தினால் அவதாரம் முடிந்துவிடும். பிறகு அசுரர்கள் யக்ஞத்தைக் கெடுப்பார்கள். அதற்காக மறுபடியும் நான் வரும்கலியுகத்தில் மிகவும் மோகிக்கக்கூடிய புத்தாவதாரம் செய்யப்போகிறேன். எனது வாக்கியத்தால் அவர்களுக்கு நல்லபுத்தியை யுண்டாக்கி விட்டு கொஞ்சகாலம் பூலோகத்தில் வசிப்பேன். அப்போது நான் மௌனத்தையடைந்து எல்லாருக்கும் உபதேசிக்கிற மாதிரியாக விருந்து 'ஒருவருக்கும் இம்சை செய்யாமலிருப்பதே மேலான தர்மம்'' என்று போதிப்பேன். இந்த ஜன்மத்திலும் எனக்கு அதிக துக்கமேயொழிய சுகமில்லை. அதற்கப்புறம் நான் கலியுகத்தில் எல்லா ஜாதிகளும் ஒன்றாயிருப்பதைப்பார்த்து, பிராமண தேகத்தோடு கத்தியைத் தரித்துக்கொ

ண்டு குதிரையின் மீதேறிச் செல்லுகிற கல்கிரூபத்தை யடையப் போகிறேன். அப்போது வெகு துஷ்டர்களைச்சங்காரஞ்செய்வேன். அந்த அவதாரத்தில் நான் பூமியில் வெகுகாலம் இருக்கமாட்டேன். ஏனெனில் அப்போதும் எனக்குச் சுகங்கிடையாது. மறுபடியும் கிருதயுகம் வந்ததும் இந்த அவதாரங்கள் வரிசையாக உண்டாகும். இவ்வாறு ஒன்பது அவதாரங்களிலும் எனக்குச் சுகமே கிடையாது. ஆகையால் இந்த அவதாரத்திலே பூர்ணமான சுகத்தையடைந்தேன். ஆகலால் இதற்குச் சமமான அவதாரம் இல்லவே இல்லை; இந்த அவதாரத்திலே தான் நான் ஏழுதீவுகளுக்கும் அதிபதியாக விளங்குகிறேன். மிகவும் அன்புள்ள மனைவி, வில்லாளிகளும் மகா வீரருமான இரண்டு பிள்ளைகள், மூன்றுலோகங்கள், பந்துக்கள், இவைகளை யடைந்தேன். காமதேனு முதலான ஏழு இரத்தினங்கள் என்னிடமிருக்கின்றன. பிரத்யக்ஷ வேதசொரூபமான ஆரியாவர்த்தத்தில் அயோத்தியா நகரத்தில் பிறப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இராஜ்யம் முதலான அநேக போகங்களை அனுபவிக்கிறேன். இப்போது தான் நான் ஸத்யவிரத சீலனாக இருக்கிறேன். ஒரேபத்னியை அனுபவிப்பதென்ற விரதமும் கொண்டுள்ளேன். ஒரேபாணத்தினாலே வாலி முதலியவர்களைக் கொன்றேன். ஸீதையே என் தர்மபத்தினி; புஷ்பகமே விமானம்; அனுமார் எனக்குத் தூதன்; சுக்ரீவன் விபீஷணன் இவர்கள் எப்போதும் ஸமீபத்திலுள்ள ஆப்த சிநேகிதர்களானார்கள். சத்ருக்களை நாசம் செய்யக் கூடிய கோதண்டமென்கிற மேலான வில்லையடைந்துள்ளேன். சூரியவம்சத்தில் பிறக்கும் பாக்கியம் கிடைத்தது. தசரதமஹாராஜன் எனக்குத் தந்தையானார். கௌஸல்யாதேவி எனக்கு அன்னையானாள். நான் எப்போதும் ஒருவருக்கும் அடங்காதவன். நல்ல புத்திக்குச் சமமான எனது மாமியார் என்னிடம் மிகவும் பிரியமுள்ளவள். மேலான விதேஹதேசாதிபன் எனக்கு மாமனாரானார். விசுவாமித்ரர் எனக்கு வித்யாப்யாஸம் செய்துவைத்தார். லக்ஷ்மணன் எனக்கு முக்கிய மந்திரியானான். சிரேஷ்டமான சரயூநதி என்னாட்டில் ஓடுகிறது. அங்கதன் முதலியவர்கள் எனது அருகிலிருந்துவருகிறார்கள். நான்குதந்தங்களையுடைய ஒருபெரியயானை யிருக்கிறது. பிராமணரின் இஷ்டத்தைப்

பூர்த்தி செய்வதென்ற விரதம் எப்போதும் குறையாமல் என்னிடமிருக்கிறது. வைகுண்டத்திற்குச் சமானமானமிகவும் அழகிய வீடு இருக்கிறது. பதினோராயிரம் வருஷம் எனக்கு ஆயுள் காலம் ஏற்பட்டிருக்கிறது. எந்த அரசர்களையும் வணங்காத சிரேஷ்டமான இந்த அவதாரத்திலே தான் குறைவற்ற சுகங்களை யனுபவித்தேன். ஆகையால் இதற்குச் சமமான அவதாரம் வேறில்லை. ஆதலால் நான் இதை பூர்ண ரூபத்தோடு தரித்துக் கொண்டேன். இதற்கு முந்திய அவதாரங்களும் வரும் அவதாரங்களும் அம்ச ரூபமானவைகளே. முன் நான் ஸீதையோடும் தம்பியோடும் காட்டிற்குச் சென்றது உலகத்திற்கு உபதேசம் செய்வதற்காகவும், பூபாரத்தைத் தொலைப்பதற்காகவுமே. அந்தச் சமயத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு உபதேசம் செய்யப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன்.

தகப்பனாரின் வாக்கியத்தைப் பூஜிக்க வேண்டும். அது எவ்வளவு சிரமமாயிருந்தாலும் அதை ஒருகாலும் பொய்யாக்கக் கூடாது. என் தகப்பனாரின் வாக்கியத்தை வீணாக்குவதற்கு எனக்குப் பலமில்லையா? ஆயினும் உலகத்தின் பொருட்டே நான் அதைப் பாலனம் செய்தேன். மஹா துஷ்டர்களாயும் இராஜ்யத்திற்கு விக்கினம் செய்கிறவர்களாயுமிருந்த கைகேயியையும் கூனியையும் நான் கொல்லவில்லை. அவர்களைக் கொல்ல எனக்குப் பலமில்லையா? இருந்தாலும் ஸ்திரீவதம் செய்யக்கூடாதென்று அவர்களை மன்னித்து விட்டேன். என் தகப்பனார் இறந்துபோன பிறகும் அந்த இராஜ்யத்தை நான் பலாத்காரமாக கைக்கொள்ளவில்லையல்லவா? ஏனென்றால், எப்போதும் பூமியில் ராஜ்யத்தில் ஆசையுள்ளவர்களாய் இருப்பதுகூடாது என்பதுதான்காரணம். தாய்தந்தை, சிநேகிதன், புத்திரர் இவர்களிடம் அதிக சிநேகத்தை வைக்கக்கூடாது என்று உபதேசிப்பதற்காக, அவர்களிடம் சிநேகத்தை விட்டுவிட்டேன். சுகம் துக்கம் இவைகளைச் சமமாக எண்ணவேண்டும்; சுகத்தில் ஸந்தோஷப்படக் கூடாது, துக்கத்தில் வருத்தப்படக்கூடாது என்று ஜனங்களுக்குக் காட்டுவதற்காக நான் இராஜ்ய சுகங்களைத் தள்ளிவிட்டுக் காட்டில் மிகவும் கிலே

சங்களை யடைந்தேன். ஜனங்கள் எப்போதும் காமம் முதலான துஷ்ட சத்துருக்களை பூமியில் நாசம் செய்ய வேண்டுமென்று உபதேசிப்பதற்காக வனத்தில் முனிவர்களை இம்சித்த அநேக இராக்ஷசர்களைக் கொன்றேன். எப்போதும் ஸ்திரீகளின் ஸம்பந்தத்தை விலக்கவேண்டும்; ஒருவனுக்குத் தவஞ் செய்ய வேண்டும்; மனதை எப்போதும் ஸ்திரீகளிடம் ஸம்பந்தப்படுத்தக்கூடாதென உபதேசிப்பதற்காகக் காட்டில் ஸீதையின் வியோகத்தைச் சகித்திருந்து மறுபடியும் அவளையே அடைந்தேன். விபத்தடைந்தவர்களைக் காப்பாற்ற வேண்டும்; சத்துருவைக் கொல்லவேண்டும் என்று ஜனங்களுக்குக் காட்டுவதற்காகவே, விபீஷணன் சுக்ரீவன் இவர்களைக் காப்பாற்றி; இராவணன் வாலி இவர்களைக் கொன்றேன். ஜனங்களிடம் கீர்த்தியைக்காட்டவேண்டும் என்றே சமுத்திரத்தில் பருவதங்களை மிதக்கச்செய்தேன். எனக்கு ஆகாய மார்க்கமாய்ச் செல்ல முடியாதா என்ன? தனது மனதிற்கு எவ்வளவு சுத்தமாய் இருந்தாலும் ஜனங்களுக்கு விரோதமாய் இருந்தால், அதைவிட்டுவிடவேண்டும் என்பதற்காகவே இலங்கையில் அக்கினிப்பிரவேசம் செய்து பரிசுத்தமடைந்த சீதையைப் பழையபடி காட்டிற் கனுப்பிவிட்டேன். ஏகபத்னி விரதம், அநேக இராஜ்ய காரியங்கள், அசுவமேதம் முதலான யாகங்கள், நல்ல ஆசாரங்கள், ஜபம் தவம் ஸ்நானம் ஸந்தியாவந்தனம் முதலியவைகளை நான் ஜனங்களை ஒழுங்குப்படுத்துவதற்காகச் செய்கிறேனேயொழிய ஆனந்த ஸ்வரூபியாயும் கர்மங்களைக் கடந்தவனுமாயிருக்கிற எனக்கு அவைகளாலாம் பயன்யாது? அளவற்ற சுகஸ்வரூபி நான். ஜனங்களுக்கெல்லாம் சுகத்தைக்கொடுக்கிறவன், ஆயினும் அவதாரங்களை யடைந்ததால் எனக்குச் சுக துக்கம் உண்டென்று சொன்னேன். உபாசிக்கிறவர்களின் ஸந்தோஷத்திற்காக இவ்வாறு நான் வருணித்தேன். இரண்டு அவதாரங்கள் ஜலத்தில் சஞ்சரிப்பவை. இரண்டு காட்டில் சஞ்சரிப்பவை. ஒன்று வைசியன். ஒன்று இடையன். ஒன்று மலினம். மற்றொன்று க்ஷண காலமிருப்பது. இவ்விதம் சென்றதும் வரப்போகிறதுமான அவதாரங்கள் எனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியவை

யல்லவாம். இந்த அவதாரமே எல்லாவற்றிலும் மேலானது; உபாசிக்கிற ஜனங்களுக்குப் பிரியந் தரத்தக்கது; சேவிப்பவர்களுக்கு மங்களங்களைக் கொடுக்கக் கூடியது. இந்த அவதாரத்தில் அநேக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறேன். அவைகளைக் கேட்டாலும் பாபம் நீங்கிப் புண்யம் வரும். இந்த அவதாரத்தை ஜனங்களெல்லாரும் பஜனைசெய்து மோக்ஷத்தையடையலாம். இதில் யார் பக்தி வைக்கிறார்களோ அவர்களிடம் எனக்கு அதிகமான பிரியமுண்டு. ஏ த்விஜர்களே! இவ்வாறு வருணித்தது எனக்குண்டான ஸந்தோஷத்தாலேயே யாம். இந்த அவதாரத்திலும் யார் தோஷம் கூறுகிறார்களோ அவர்கள் எனது பகைவர்களாகி நரகத்தில் விழுந்து வருந்துவார்கள் என்றார்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்

இவ்வாறு கூறியபின் ராமர் முனிவர்களைப் பூஜித்து அனுப்பி விட்டு ஸீதையோடு சுகமாய் இருந்தார். ஏ சிஷ்ய! இராமருடைய அவதார வர்ணனையை விவரித்தாயிற்று. இனி வேறு கேட்பாயாக.

20-வது சருக்கம்

முற்றிற்று.

21-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர்கூறுகிறார்.

ஒருகாலத்தில் ஜானகியைப் பார்க்க உத்தேசித்து முனிவர்கள், அரசர்கள், சிநேகிதர்கள், மற்றுமுள்ள க்ஷத்திரியர்கள் வைசியர்கள் இவர்களுடைய மனைவியார்களெல்லாம் சைத்ர ஸ்நானம் செய்து வருவதாகப் புறப்பட்டு வாகனங்கள் மீதேறிக்கொண்டு வந்தார்கள். இவர்களைப்பார்த்து சீதை வெகு பரபரப்போடுசென்று எதிர்கொண் டழைத்துவந்து விதிப்ரகாரம் பூஜித்தாள். அந்த ஸ்திரீகளும் சிங்காதனத்தின்மீதிருந்த சீதையை வஸ்திரம் ஆபரணம் முதலியவைகளால் நன்கு உபசரித்தார்கள். பிறகு அவர்கள் சீதையைச் சூழ்ந்திருந்து அவள் முகமாய் ராமசரித்திரங்களைக் கேட்டு ஸந்தோஷமடைந்து, சுபகரமான அவளது பாணிக்ரஹண மஹோற்சவத்தைக் கேட்க, ஆவலுள்ளவர்களாக அவளிடம் தெரிவித்தார்கள். ஸீதை அவர்கள் வார்த்தையைக் கேட்டுத் தான் அதைச்சொல்ல வெட்கத்தையடைந்து தன் ஸகியான துளஸியைச் சொல்லும்படி ஏவினாள்.

துளசி கூறுகிறாள்.

மஹா மங்களத்தை யுண்டாக்குகிற ஜானகிதேவியின் பாணிக்ரஹண மங்களத்தைக கூறுகிறேன். எல்லாஸ்திரிகளும் கேட்டு ஆனந்த மடையுங்கள்.

விசுவாமித்ர முனிவர் அயோத்தியிலிருந்து ராமரோடும் லக்ஷ்மணரோடும் தம் ஆச்ரமம்சென்று அங்கே ராம லக்ஷ்மணரைக் கொண்டு ராக்ஷஸ சேனைகளை நாசஞ்செய்து யாகத்தைச் சரியாக முடித்துக்கொண்டு, மிதிலைக்குச் சென்றார். மார்க்கத்தில் ராமரது பாதரேணுவால் கௌதமர் மனைவியான அகலிகை திவ்ய சரீரம் அடைந்தாள். பிறகு ராமர் விசுவாமித்ரரோடு மிதிலைக்குச்சென்று அங்குள்ள ராஜசபையை யடைந்து, சிவதனுசை யொடித்து, ஸீதையிட்ட மாலையைத் தமது புயத்திலேற்றுக் கொண்டார். பிறகு தமது தம்பிகளுக்கும் அங்கேயே விவாகத்தை முடித்துக்கொண்டு, ஜனகரால் பூஜிக்கப்பட்டுத் தமது

தாய் தந்தையரோடு அயோத்திக்கு வரும்போது வழியில்வந்தெதிர்த்த பரசுராமரது கர்வத்தையும் பங்கப்படுத்தினார். ஏ! ஸ்திரீகளே! நீங்கள் கேட்டவாறு ஸீதையின் பாணிக்ரஹண மங்களத்தை வர்ணித்துவிட்டேன் என்று கூறி முடித்தாள்.

ராமதாஸர் கூறுகிறார்.

அந்த ஸ்திரீகள் ராமரது விவாக மங்களத்தைக் கேட்டு மிகுந்த ஆனந்தமடைந்து ஸீதையைப் பக்தியுடன் பூஜித்து சைத்ர ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

பிறகு ஒருகாலத்தில், லவன் குருவின்முகமாய் அநேக புராணங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது, எல்லாஜனங்களுக்கும் தெரிவிப்பதற்காக, அடியில்வருமாறு அவரைக்கேட்டான். பரம குருவே! புத்தகங்களில் எங்கும் ஒவ்வொரு பக்கத்திலும் தனித் தனியாய் ஒரு பக்கத்தில் "ஸ்ரீ" யென்றும் மற்றொருபக்கத்தில் "ராமா" வென்றும் எதற்காக மனிதர் எழுதுகிறார்கள். இதை யெனக்குத் தயைசெய்து கூறவேண்டும் என்றான். இதைக்கேட்டு அடியில் வருமாறு குருவான வஸிஷ்டர் கூறுகிறார்.

நீ நல்லகேள்வி கேட்டாய்; முற்காலத்தில் வியாச முனிவர் ஸ்ரீ ராமசரித்திரத்தையும் பதினெண்புராணங்களையும் செய்தார். அவ்வாறே முனிவர்களும் ஆறுசாஸ்திரம் முதலியவைகளை வகுத்தருளினார்கள். ஸ்ரீராமசரித்திரத்திலுள்ள ஒருசுலோகத்திற்குத்தான் இவையெல்லாம் சமமானவைகளென்று ஜனங்களுக்குப் போதிப்பதற்காகவே முதலில் "ஸ்ரீ" என்றும் பிறகு "ராம" வென்றும் எழுதப்படுகிறது இதற்கு வேறு காரணத்தையும் சொல்லுகிறேன்; எழுதும்போது அக்ஞானத்தாலோ அல்லது ஸந்தேகத்தாலோ தவறாய் எழுதிவிட்டால், அந்தப் பக்கம் பரிசுத்தப்படட்டும் என்ற எண்ணத்தால், எங்கும் ஒவ்வொரு பக்கத்திலும் "ஸ்ரீ" என்றும் "ராமா" வென்றும் எழுதப் படுகின்றன. இம்மாதிரி குருசெய்த வியாக்கியானத்தைக் கேட்டு லவன் ஸந்தேகம் நீங்கி, மிகவும் ஸந்தோஷமுள்ளவனாயிருந்தான்.

ஒருகாலத்தில் ராமர் ஆசனத்தின் மீதிருந்து தாம்பூலம் போட்டுக்கொண்டபோது, தோஷத்தை யுண்டு பண்ணக்கூடிய முதல் இரஸத்தைத் துப்பவிரும்பி, எச்சில்வட்டிலை அங்குக்காணாது யோசிக்கும்போது. அருகேயிருந்த சுகுணையென்னு மொரு தாசி தன் கைகளைச் சேர்த்து ஏந்தினள். அதில் ராமர் துப்பி னர். உடனே அதை அவள் ஆதரவோடு குடித்துவிட்டாள். அதைக்கண்டு வியப்புற்ற ராமர் பெண்ணே! உனக்கு வேண்டிய வரத்தைகேள் தருகிறேன் என்றார். அதைக்கேட்டு அந்தத்தாசி "ஏ ரகுநாயக! இந்த ஜன்மத்தில் தாங்கள் ஏகபத்னீ விரதங்கொண் டிருப்பதால், வேறு ஜன்மத்தில் தங்களுடைய சம்பந்தத்தை அடைய நான் விரும்புகிறேன்" என்றாள். இதற்கு ராமர் மிக வும் மகிழ்ந்து, மாதே! நான் கோகுலத்தில் கிருஷ்ணனாக அவதாரம் செய்யப் போகிறேன். அப்போது நீ ராதையென்ற பெயருடன் எனக்கு மனைவியாவாய்; அக்காலத்தில் நீ கோரிய படி வெகுகாலம் என்னோடு சுகங்களை அநுபவிக்கலாம். கோப ஸ்திரீகளுள் மிகுந்த பிரியம் உன்னிடமே எனக்கு உண்டாகப் போகிறது என்று கூறினர். சுகுணை அதைக்கேட்டு மிகவும் ஆனந்த மடைந்தாள்.

விஷ்ணுதாஸ! ராமரது வேறொரு சரித்திரத்தைக் கேள். அதனால் எல்லாருக்கும் அதிக ஆச்சரிய முண்டாகும்.

ஒருகாலத்தில் ஸ்ரீ ராமர் ஸபையில் ஆஸனத்தில் பந்து புத் திர மித்திர மந்திரிகள் சூழ வீற்றிருக்கும்போது யுவாவான ஒரு பிரம்மசாரி தண்ட கமண்டலம் பூண்டு கிருஷ்ணாஜினத்தைப் போர்த்துக்கொண்டு காஷாய வஸ்திரத்தைஉடுத்துக்கொண்டு மிக வும் பரிசுத்தனாகவந்தான். ராமர் அவனைப்பார்த்ததும் அதிசீக் கிரமாக ஆசனத்திலிருந்திறங்கி, அந்தப் பிரமசாரியை எதிர்கொண் டழைத்து வணங்கி, ஆசனமிட்டு அதில் உட்காரவைத்து விதி வழி மதுபர்க்கம் முதலியவை கொடுத்துபசரித்து மிகவும்வணக் கத்தோடு "சுவாமி! தங்களைத் தரிசித்ததால் நான் இன்று கிருதகி ருத்தியனாய்விட்டேன் தாங்கள் வந்தகாரியாதிதுவெனத்தயையோடு கூறவேண்டும்" என்றார். பிரமசாரி 'பிரபுவே! வான்மீகிமஹரிஷி

யாகம் செய்யப்போகிறார், அதற்காகப் புத்திர மித்ரகளத்ராதிக ளோடுகூடத் தங்களை அழைத்துவரச் சொன்னார். அதன்பொரு ட்டு இவிடம் வந்தேன்; அந்த யாகதினம் சமீபித்து விட்டபடியால் தாங்கள் விரைவில் வரவேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக் கும் போதே வேறொரு பிர்ம்மசாரி விச்வாமித்திரருடைய ஆச்ர மத்திலிருந்து வந்தார். ராமர் அவரைப் பார்த்தவுடன் முன்போல் உபசரித்து வேறொரு ஆசனமிட்டு அதில் வீற்றிருக்கச் செய்து பூஜித்தார்; பிறகு அவரையும் விநயத்தோடு விசாரித்தார்; அதற்கு அவர் "விசுவாமித்திரர் பெரியயாகம் செய்ய உத்தேசித்திருப்ப தால், தங்களைப் பந்துமித்ரகளத்ரர்களோடு அழைத்துவர என்னை யனுப்பினார். ஆகையால் தாங்கள் விரைவில் புறப்படவேண்டும்" என்றார். இவ்விரண்டு பிர்ம்மசாரிகளின் வார்த்தையைக் கேட்டு ராமர் தாம் அவ்வாறே வருவதாய் ஒப்புக்கொண்டார். இவ்விஷ யத்தைச் சபையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்கள் ஆச்ச ரியமடைந்து ஒரேகாலத்தில் நடக்கும் இவ்விரண்டு யாகங்களுக் கும் ராமர் எப்படிப் போவாரென்று சிலரும், ராமருக்கு எது தான் முடியாதென்று சிலரும், சிலர்வனத்தில் ஸ்திரீகளுக்குத் தரிசனம் கொடுத்ததுபோலச் செய்வர் என்றும், முன்பரதருக்குத் தரிசனம் கொடுத்தகாலத்தில், லங்கையிலிருந்து வந்ததுபோல் செய்வார் என்றும், இவ்விதம் அநேக காலங்களில் வெவ்வேறாய்க் காக்ஷிதந்திருப்பதுபோல் இப்போதும் இரண்டு ரூபங்களோடு இரண்டு யாகங்களுக்கும் போவாரென்று சிலரும், இவ்விஷயத்தில் என்ன ஆச்சரியம் என்று சிலரும் பேசிக் கொண்டார்கள். இதை யறிந்த பட்டணத்து ஜனங்களும் இவ்வாறே பேசிக்கொண்டிருந் தார்கள். பிறகு ராமர் லட்சுமணரைப் பார்த்து "லட்சுமணா! நான் இன்று போஜனத்திற்குப் பிறகு வெளியே செல்லப் போகிறேன். கூடாரங்களுடன் சேனைகள் முன்னேசெல்லட்டும். வாத்தியங்களை வாசிக்கும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடு" என்று சொன் னார். உடனே இலட்சுமணர் வாத்தியங்களை முழக்கும்படி உத்தர விட்டார். வெளியே சேனையையும் கூடாரத்தையும் அனுப்பி விட்டார்.

பிறகு இராமர்தமது கிருகம்சென்று ஸீதையிடம் சகல சமாசாரங்களையும் தெரிவித்து பிராம்மணரோடு போஜனம்

செய்து அவர்களையும் அழைத்துக்கொண்டு பரிவாரங்களோடு ஸீதையை ஒரு பெண்யானையின்மீது ஏற்றிவைத்துக்கொண்டார். லக்ஷ்மணர்முதலியோரையும் யானைகள்மீ தேறிவர வுத்தரவிட்டுத் தாமும் ஒரு யானையின்மீதேறிக்கொண்டு வாத்தியங்கள் சப்திக்க தாஸிகள் நர்த்தனம் செய்ய வந்திமாகதர் ஸ்தோத்திரம் செய்ய நடர்கள் நல்ல ராகத்தோடு கானம்செய்யப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, கூடாரங்களுக்கு வந்து சேர்ந்தார். அங்கே அன்றிரவைக் கழித்துவிட்டு மறுநாட் காலையில் எழுந்திருந்து, நித்யவிதிகளை முடித்துக்கொண்டு மறுபடியும் யானையின்மீதேறிப் பிரயாணப்பட்டு நான்குமைல் தூரம் சென்றதும் எதிரில் வழி இரண்டாகப்பிரிந்து செல்வதைப் பார்த்து, தமதுசேனை முதலியவைகளை இரண்டாகப்பிரித்தார். தாமும் இரண்டு ரூபங்கொண்டார். சகோதரர் சீதை இவர்களையும் இரண்டு ரூபம் கொள்ளும்படி செய்தார். பிறகு இரண்டு வழிகளிலும் ஸீதையுடனும் சேனைகளோடும் சென்றார். அப்போது எல்லாஜனங்களும் இவ்வாறு ராமர் இரண்டு பிரிவாக இரண்டுவழிகளிலும் செல்வதைக்கண்டார்கள். விமானம் முதலிய எல்லாம் இரண்டாகிவிட்டன. வான்மீகி முனிவரின் சிஷ்யரான ஒரு பிரம்மசாரி ராமரைத் தம்து ஆச்ரமத்திற்கு அழைத்துச்சென்றார். மற்றொரு பிரமசாரி தன் குருவான விசுவாமித்திர மஹரிஷியின் ஆச்ரமத்திற்கு ராமரை அழைத்துச் சென்றார். இவ்வாறு ராமர் இரண்டுருக்கொண்டு ஒரேகாலத்தில் பந்துபுத்ரமித்ரகளத்ராதிகளோடு இரண்டு மஹரிஷிகளின் ஆச்ரமங்களில் நடக்கும் இரண்டு யாகங்களுக்குஞ்சென்று அங்குள்ள முனிவரால் எதிர்கொண்டழைத்துப் பூஜிக்கப்பட்டு அவர்களுடைய யாகங்களைப் பரிபூரணமாய் நடத்திவிட்டுத் தமது பட்டணத்திற்குத் திரும்பிவந்தார். எங்கே ராமர் இரண்டு தேகத்தையெடுத்துக் கொண்டாரோ அங்குவந்ததும் தாம் எப்போதும்போல் ஏகரூபமடைந்தார். அவ்வாறே யாவருமாயினர். பிறகு ஸ்ரீராமர் தமது பட்டணம்வந்துசேர்ந்தார். அப்போது பட்டணம் மிகவும் கோலாகலமா யிருந்தது. ராமர் இவ்விதம் அமானுஷ்யமான அநேக காரியங்களைச் செய்திருக்கிறார்.

21-வது சருக்கம்.

முற்றிற்று.

52-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

இப்போது ஸ்ரீராமச்சந்திரருடைய அழகிய வேறு லீலா விநோதங்களைச்சொல்லுகிறேன். ஒருகாலத்தில் ராமர் பந்து மித்திரபுத்திரர்கள்சூழ, வெகு உல்லாசமாகச் சபையில் வீற்றிருந்தார். இப்பொழுது சினேகிதனான பூரிகீர்த்தி தன் வேலைக்காரர்கள் மூலமாக திராக்ஷைப்பழம் நல்ல புஷ்பம் இவைகள் நிறைந்த அழகிய கூடைகளை ராமருக்குப் பிரியத்தோடு அனுப்பினான். அவைகளையெல்லாம் பார்த்து ராமர் மகிழ்ந்தார்.பிறகு அவைகளைச் சகிகளோடு உல்லாஸமாயிருந்த ஸீதையிடம் அனுப்பிவிட்டார். ஜானகி கூடைகளிலிருந்த புஷ்பங்களையெடுத்து ராமருக்குஅர்ப்பணம் செய்யாமல், அவைகளின் வாசனையை அடிக்கடி முகர்ந்து பார்த்து விட்டு, அந்தக்கூடைகளை முன்போலவே மூடிச் சரியாக வைத்துவிட்டாள். சபையிலுள்ள ராமர் இந்த விருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டு "இவ்வாறு ஸீதைசெய்திருந்தால், இது சரியான செய்கை யல்லவே,பதியான என்னை யன்றி ஸீதை அந்தப் புஷ்பங்களின் வாசனையை முகர்ந்ததை உலகத்தவர் கேட்கின், அவர்களுமல்லவா அவ்விதம்செய்வார்கள். ஆகையால், நான் அவளைத் தண்டிக்கிறேன்" என்று தீர்மானம் செய்து கொண்டு மௌனமாய் வீட்டிற்குச் சென்று ஸீதையுடனிருந்து பலவிதமான கிரீடைகளைச்செய்து அவ்வம்மையை ஸந்தோஷப்படுத்தினார்; ஸீதை அப்பொழுது மிகவும் மகிழ்ந்து பழம் புஷ்பம் இவைகள் நிறைந்த ஆயிரக் கணக்கான கூடைகளைக் கொண்டு வந்து ராமரது ஸந்நிதியில் வைத்தாள். ராமர் அவைகளைப்பார்த்து மகிழ்வுற்று, அவைகளைப் பகிர்ந்து தமது பந்துக்களுக்கு அனுப்பினார். அவ்வாறே தாய்மார்கள் வீட்டிற்கும் மந்திரிகள் குரு இவர்கள் வீட்டிற்கும் பட்டணத்து ஜனங்கள் சேவகர்கள் தாசிகள் இவர்கள் வீட்டிற்கும் அனுப்பினார். கடைசியாகஸீதைக்குங் கொடுத்தார். பிறகு தாமும் சில புஷ்பங்களையும் பழங்களையும் உபயோகப் படுத்திக்கொண்டார். முன் நடந்த சமாசாரத்தைப் பற்றி அறியாதவர்போல் நடந்துவந்தார்.

பிறகு ஒரு காலத்தில் ஜானகி ஏகாதசியில் உபவாஸமிருந்து விட்டு, அடுத்த நாள் ஸ்நானம் செய்து, பிருந்தாவனத்தின் ஸமீபம்சென்று அங்கு துளஸியைப்பூஜித்துப் பிரதக்ஷிணம் செய்தாள். இப்பொழுது, ஸீதை பசிக்களையால் வருந்தி பிரதக்ஷிண வழியை விட்டுச்சற்று விலகினாள். அப்படி விலகும்போது, ஸீதையின் வஸ்திரத்தின் நுனியானது துளஸிச்செடியில் பட்டு அதிலிருந்த ஒரு இலை கீழே விழுந்தது; ஜானகி அதைப்பார்த்து, துவாதசியில் துளஸீ இலை சேதிக்கப்பட்டது அதர்மமென்றறிந்து மிகவும் பயத்தையடைந்தாள். பிறகு அவள் தன் கையினால் அந்த இலையை எடுத்துப் பிருந்தாவனத்தைப்பக்தியுடன் வணங்கி எறிந்து விட்டாள். மறுபடி பிரதக்ஷிணம் செய்து அடிக்கடி துளஸியைப் பிரார்த்தித்துக் கொண்டே வீட்டிற்குப்போய் எப்போதும் போலிருந்து விட்டாள். இச்சமயம் நாரதர் வீணாகானம் செய்து கொண்டு "ஏ! ராகவ! தீனனான என்னைக் காத்தருளும்" எனப்பாடிக்கொண்டு ராமர் ஸந்நிதிக்கு வந்தார். அந்த முனிவர் மிகவும் இனிய குரலோடு பாபங்களைப்போக்குகிற இந்த மந்திரத்தை ([illegible]) அடிக்கடி பாடிக்கொண்டிருந்தார். பிறகு ராமர் முனிவரைப் பார்த்து எதிர்கொண்டழைத்துப் பக்தியுடன் வணங்கி ஆதனத்தில் வீற்றிருக்கச்செய்து ஆதரவோடு பூஜித்து, அவர் பாதங்களை ஸீதையைக்கொண்டு அலம்பச்செய்து, மதுபர்க்கம் சந்தனம் முதலியவைகளளித்து உபசரித்து, போஜனஞ்செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்து, போஜனத்திற்காகத் தங்க பாத்திரங்களை அவர் எதிரில் வைத்துப் பரிமாறும்படி ஸீதைக்குத் தெரிவித்தார். ஸீதை காமதேனுவினிடமிருந்துண்டான திவ்ய அன்னத்தை யெடுத்துக்கொண்டு பரிமாறுவதற்காக வந்தாள். அவ்வம்மையைப்பார்த்ததும் நாரதர், ராமரிடம் "ஹே ராம! கமலநேத்ர! நான் ஸீதை பரிமாறின திவ்யான்னங்களைப் புசிக்கமாட்டேன்" என்று சொன்னார். முனிவர் இவ்வாறு சொன்னதைக்கேட்டு ஸீதை மிகவும்பயந்தாள். ராமரு மறியாதவர்போல் பரபரப்புடன் அந்த முனிவரைவணங்கித் தாங்கள் அவ்விதம்சொல்வதற்கு ஸீதை செய்த பிழையாதெனக்கேட்க நாரதர் பதில்சொல்லுகிறார்.

நாரதர் கூறுகிறார்.

ஸீதை இன்று ஒருபாவம் செய்திருக்கிறாள். அது உமக்குத் தெரியாவிட்டால், நான் சொல்லுகிறேன் கேளும். துவாதசியான இன்றைக்கு இவள் துளஸியிலையைக் கிள்ளிவிட்டாள். இது பொய்யாக விருந்தால் பிருந்தாவனத்திற்குச் சென்றுபாரும். மாதப் பிறப்புக்களிலும் சதுர்த்தசியிலும் துவாதசியிலும் வியதீபாதத்திலும் பருவத்திலும் ஸந்திவேளைகளிலும் செவ்வாய் வெள்ளி இவைகளின் பிற்பகலிலும் சூரியன் அஸ்தமனமான பிறகும் சந்திரக்ரஹணத்திலும் ஜனனம் மரணம் இவைகளிலும் துளஸியைப்பறிப்பவர்கள் விஷ்ணுவின் சிரஸை அறுத்ததற்குச் சமானமாவார்கள். துவாதசியில் துளஸி இலையைக் கிள்ளுகிறவன் நிச்சயமாய் கோரமான நரகங்களையடைவான். அக்காலத்தில் துளசி இலையைக் கிள்ளினவர்கள் ஸ்திரீகளாயினும் சரி அல்லது புருஷராயினும் சரி அவர்களுக்கு ஒரு இலைக்கு ஒரு பிரும்மஹத்தி வீதமாக ஏற்படும். இந்த வசனங்களை முனிவரெல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஏராம! இதற்காகவே சீதை பரிமாறினவைகளை நான்புசிக்க இஷ்டமில்லாதவனாயிருக்கிறேன் என்றார்.

இவ்விதம் முனிவர் கூறிய அந்த வார்த்தையைக்கேட்டு ராமர் முனிவர் பெருமானே! தாங்கள் தான் ஸீதையைப்பரிசுத்தப்படுத்தவேண்டும். தாங்கள் வரங்கொடுத்தாலும் சரி; விருதம் ஏற்படுத்தினாலும் சரி; அவள் பரிசுத்தமடையவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். நாரதர் பிரம்மஹத்தி முதலிய பாவங்களைத்தொலைப்பதற்காக அநேக பிராயச்சித்தங்களை மஹா முனிவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் துவாதசியில் துளசி இலையைக் கிள்ளின தோஷத்தின் சாந்திக்காக ஒரு பிராயச்சித்தமும் நான் பார்த்ததில்லை. ஆனால் ஒரு உபாயம் இருக்கிறது. அதாவது ஸீதை என் எதிரில் தன் பாதிவிரத்தியத்தால் அத்துளஸி இலையை மறுபடியும் செடியில் ஒட்டிக் கொள்ளும்படி செய்தால், அவள் ஒரு க்ஷணத்திற்குள் பரிசுத்தமாய்விடுவாள். நான் சொல்வது உண்மை" என்றார்; இதைக்கேட்டு ராமர்ஸீதையைப் பார்த்தார். ஸீதை முனிவரைப்பார்த்து பிரும்மபுத்திரரான நாரதரே! நான் தங்களெதிரில் என் பாதிவ்ரத்யபலத்தால், துளசி

இலையைச் செடியில் ஒட்டிக் கொள்ளும்படி செய்கிறேன் என்று சொல்லிக் கையிலிருந்த பாத்திரத்தைக் கொண்டுபோய்ச் சமையலறையில் வைத்துவிட்டு வேகமாக பிருந்தாவனத்திற்குச் சென்றாள். நாரதர் ராமர் முதலியவரும் அங்கே போனார்கள். ஊர்மிளை சம்பிகை முதலான ஸ்திரீகளும் இலட்சுமணர் முதலானவர்களும் குசன் லவன் முதலியவரும் அங்கே சென்றார்கள். அப்போது இவர்கள் மத்தியிலிருந்த ஸீதை அந்தத் துளசி இலையை எடுத்துக் கொண்டு வெகு பக்தியுடன் செடியருகேபோய் மிகவும் வணக்கத்தோடு "ஏ மங்களகரமான துளஸியே! இன்று நான் சொல்வதைக் கேள்; என்னிடம் பரிசுத்தமான பாதிவ்ரத்யம் பூர்ணமா யிருக்கும் பக்ஷத்தில் இந்த இலைக்கும் உனக்கும் சேர்க்கை யுண்டாக வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு கையிலிருந்த இலையை அதில் பொருத்தினாள். அந்த இலை அதில் ஒட்டிக்கொள்ளவில்லை. அப்போது ஸீதை அதிக துக்கத்தையும் பயத்தையும் அடைந்தாள். தேவர்கள் கந்தர்வர் யக்ஷர்கள் நாகர்கள் கின்னரர்கள் குஹ்யகர்கள் மற்றுமுள்ள ரிஷிகள் முதலான எல்லோரும் இந்த ஆச்சரியத்தைப்பார்க்க வந்தார்கள். இவ்வாறு ஸீதை துக்கத்தையடைந்திருப்பதைக்கண்டு நாரதர் அவளை இரகசியமா யழைத்து "ஏசீதே! இதன்காரணத்தைச்சொல்லுகிறேன் கேள். பதிவிரதையான ஸ்திரிகள் தங்கள் பதிகளில்லாமல் புஷ்பம்முதலியனவைகளை முகர்வது முதலியவற்றைச் செய்யக் கூடாது; நீ முந்தி இவ்வாறு செய்தாய்; அதை ராமர் தெரிந்துகொண்டு இப்படி மாயைசெய்திருக்கிறார். அவரது இச்சைப்படி உன் வஸ்திரத்தின் நுனியால் அடிக்கப்பட்டு துளஸியின் இலை கீழே விழுந்துவிட்டது. அவரது எண்ணத்தை யறிந்தே நானும் உன்னிடம்தோஷம் ஏற்றினேன். நான் இப்படிச்செய்ததைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் கோபத்தையடையாதே. ஸ்திரீகளுக்கு உபதேசிப்பதற்காக உன்னிடம் இந்தமாதிரி செய்தேன். இல்லாவிட்டால் உலகத்தில் எல்லா ஸ்திரீகளும் பதியைவிட்டே எல்லாப்போகங்களையும் அனுபவிப்பார்கள். இப்போது நான் சொல்லுவதுபோல்செய்தால் ராமரது எதிரில் அந்த இலை ஒட்டிக் கொள்ளும். பிருந்தா

வனத்திற்கு மறுபடியுஞ்சென்று நான் சொல்லுகிறபடி சொல்ல வேண்டும். அதாவது பத்மத்தின் நல்லவாசனையை முகர்ந்துபார்த்ததைத்தவிர பதிவ்ரத்யத்தை நான் நன்றாய் இரக்ஷித்திருக்கும் பக்ஷத்தில் இந்தத் துளசி இலை அதன் செடியோடு ஒட்டிக்கொள்ளட்டும் இல்லாவிட்டால் இது கீழே விழட்டும் என்று சொல்; இப்போது இந்த இலை ஒட்டிக் கொள்ளும். ஆகையால் நீ துக்கத்தை யடையாது துளசிவனம் செல்லு" என்று போதித்தார். இவ்வாறு கூறி நாரதரும் பிராட்டியின் கூடவே சென்றார். ஸீதையும் துளசியைவணங்கி முனிவர் தேவர் இவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும் போதே, அடியில் வருமாறு கூறினாள்.

"நான் தாமரைப்பூவின் வாசனையை முகர்ந்ததைத் தவிர, பாதிவ்ரத்யத்தை நன்றாய் இரக்ஷித்திருக்கும் பக்ஷத்தில் இந்தத் துளசி இலை செடியோடு சேர்ந்துவிடட்டும், இல்லா விட்டால் பூமியில் விழுந்துவிடட்டும்." என்றாள். இப்படி ஸீதை சொன்னவுடன் அந்தத்துளசி இலை எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே செடியுடன் சேர்ந்துவிட்டது. அப்போது தேவவாத்தியங்கள் சப்தித்தன. தேவஸ்திரீகள் விமானங்களி லிருந்துகொண்டு இராமர் ஸீதை இவர்கள்மீது புஷ்பங்களை வாரி யிறைத்தார்கள். பிராம்மணர்கள் ஜயகோஷம் செய்தார்கள். இந்தத் தருணத்தில் இராமர், ஆனந்தமடைந்திருக்கும் ஸீதையைப் பார்த்து, "ஏ ஸீதே! நான் இவ்விதம் செய்தது உலகத்திலுள்ள ஸ்திரீகள் எப்போதும் பதிவிரதா தர்மத்தைத் தைரியமாய்ப் பாலனம் செய்யவேண்டுமென்பதன் பொருட்டே. உலகத்தில் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவும், ஸாதுக்களைப் பரிபாலனம் செய்வதற்காகவும், துஷ்டர்களை நாசம் செய்வதற்காகவுமே நான் இந்த அவதாரம் செய்திருக்கிறேன். ஆதலால் நீ வருத்தப்படாதே" என்று அவளைப் பன்முறை சமாதானப்படுத்திவிட்டு தேவர் முதலான எல்லாரையும் நன்றாய்ப் பூஜித்தார். பிறகு நாரதர் முதல் யாவருக்

கும் சீதையைக்கொண்டு பரிமாறச்சொல்லி நல்ல போஜனஞ் செய்துவைத்தார். பிறகு நாரதர் இராமரை ஸ்தோத்திரம் செய்து போய்விட்டார். தேவர்களும் முனிவர்களும் தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள். இவ்வாறு மனித ரூபத்தை யடைந்த இராமர் வெகு லீலைகளைச் செய்தார். அவைகளை வருணிக்க யாரால் முடியும்? ஏ சிஷ்ய! அவைகளில் ஞாபகத்திலிருந்த சிலவற்றை நான் உனக்குச் சொன்னேன்.

22 - வது சருக்கம்

முற்றிற்று.

23 - வது சருக்கம்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

ஸ்ரீராமர் ஜாநகியோடும் பந்து மித்ர புத்ராதிகளோடும் கூடி வெகு சுகமாய் இராஜ்ய பரிபாலனஞ் செய்துவரும் காலத்தில் ஒரு சேவகன் இராமரிடம் வந்து அவரை வணங்கி "பிரபுவே! நான் தங்களிடம் சேவைசெய்ய விருப்பமில்லை; தவம் செய்யப் போகிறேன். எனக்கு உத்தரவு கொடுங்கள்" என்று கூறி உத்தரவு வாங்கிக்கொண்டு தனது வீடு சென்று பரிசுத்த மனதுடனிருந்து சுபகரமான ஆனந்த ராமாயணத்தை ஒன்பது தினம் நியமமாய்ப் படித்துவிட்டுப் பிறகு காட்டிற்குச் செல்லத் தயாராயிருந்தான். அப்பொழுது அயோத்தியை அடுத்த ஒரு தேசத்தில் மந்திரி ஸ்தானத்திற்கு ஒருவனைத் தெரிந்தெடுக்க வேண்டிய அவசிய மேற்பட்டு, யாரைத் தெரிந்தெடுப்ப தென்கிற விவாதமுண்டாகிக் கடைசியில், பட்டத்து யானையின் துதிக்கையில் ஓர் மாலையைக் கொடுத்து "இந்த யானை தனது துதிக்கையிலுள்ள மாலையையிட்டு எவனை வரிக்கிறதோ, அவன்தான் மந்திரியாகலாம்" என்று நிச்சயப்படுத்திக்கொண்டு யானையை அநேக அழகிய வஸ்திரங்களால் அலங்கரித்து, அதற்கு திவ்யாபரணங்களைப் பூட்டி, அதன் தும்பிக்கையில் இரத்ந மாலை ஒன்றைக் கொடுத்து, வாத்தியகோஷம் முழங்க, அதை அவிழ்த்துவிட்டார்கள். அது வேகமாய்ப் பட்டணத்திற்கு வெளியே சென்று அயோத்தியை நோக்கிச் சென்றது. அந்தப் பட்டணத்து ஜனங்களெல்லோரும், அநேக வாகனங்கள் மீதேறிக்கொண்டு இந்த வேடிக்கையைப்பார்க்க அதைத் தொடர்ந்துச் சென்றார்கள். அந்த யானை நேரே அயோத்திக்குப்போய், அங்கே கடைத்தெருவிலிருந்த ஓர் தூதனை வரித்துவிட்டது. அவன்தான் ஆநந்த ராமாயணம் பாராயணம் செய்தவன். பிறகு அந்த ஜனங்கள் அவனையே மந்திரியாகச் செய்து, வெகு மரியாதையோடு அவனைத் தங்கள் பட்டணத்திற் கழைத்துச் சென்றார்கள். இது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. பிறகு ஆங்காங்குள்ள இராஜ தூதர்கள் இந்தச் சமாசாரத்தைக் கேட்டு இராஜ சேவையை விட்டுவிட்டுத் தங்கள்

தங்கள் வீடுகளுக்குச் சென்று சிலர் ஆனந்த ராமாயணத்தைப் பாராயணம் செய்வதும், சிலர் ஸந்தோஷத்தோடு கேட்பதும், சிலர் படிப்பதும், சிலர் கீர்த்தனம் செய்வதும், சிலர் பிரசங்கம் செய்வதுமா யிருந்தார்கள். இப்படிப் பாராயணம் செய்தவர்களில் அவரவ ரிஷ்டப்படி சிலருக்குத் தனமும், சிலருக்கு அழகிய வீடும், சிலருக்கு இராஜ்யமும் கிடைத்தன. சிலர் சூரியபதத்தை யடைந்தார்கள். சிலருக்கு இந்திர பதமும், சிலருக்கு அக்னி ஸ்தானமும் கிடைத்தன. சிலர் வருணலோகத்தையும் சிலர் குபேர லோகத்தையும், சிலர் இந்திர லோகத்தையும் சிலர் துருவலோகத்தையும், சிலர் வைகுண்டத்தையும் அடைந்தார்கள். இப்படி எங்கும் நடந்துவந்து, சிலகாலஞ் சென்றபின் ஒருவனை ஒருவன் தூதனாக அடைவதே நின்றுவிட்டது. இராமரது வேலைக்காரர்களும் வேலையை விட்டுவிட்டுச் சிலர் உத்தரவு பெற்றும் சிலர் உத்தரவில்லாமலும் போய்விட்டார்கள். இப்படி எல்லாத் தேசங்களிலும் வேலைக்காரர்கள் இல்லாமற் போன பிறகு. ஒருகாலத்தில் எல்லா அரசர்களும் இராமரைப் பார்ப்பதற்குத் தங்கள் சேனையைக் கூப்பிட அப்போது சேனையில் ஒருவருமேயில்லை ஆ! இதென்னவென்று அவர்கள் ஆச்சரியத்தை யடைந்து, தங்கள் புத்ர மித்ராதிகளையே சேனைகளாகக்கொண்டு இராமரிடம் வந்தார்கள். அவர்கள் வந்ததை யறிந்த இலட்சுமணர் அவர்களை யெதிர்கொண்டழைக்கத் தமது சேனையைக் கூப்பிட ஸேநாநிவேசத்தில் ஒருவரும் அகப்படவில்லை. உடனே இலட்சுமணர் இந்தச் சமாசாரத்தை இராமரிடம் தெரிவிக்க, இராமரும் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்தார். பிறகு மித்ரரோடு இலட்சுமணரை யனுப்பி, அரசர்களைத் தமது நகரத்திற்கு அழைத்து வந்தார். அவர்கள் வணக்கமாய் இராகவரை நமஸ்கரித்து, சபையில் சேனையின் விருத்தாந்தத்தைத் தெரிவித்தார்கள். இராமரும் தமது சேனையின் விருத்தாந்தத்தை அவர்களிடம் சொல்லி ஆச்சரியத்தை யடைந்து தமது குருவைக் கூப்பிட்டு வணக்கமாய் "ஐயா! எனது சைன்யமும் அரசரின் சைன்யமும் என்னவாயின? எங்கே யிருக்கின்றன? அதை விஸ்தாரமாகச் சொல்லவேண்டு" மென்று கேட்டார். இதைக்கேட்டு

குரு ஒரு க்ஷணம் தியானத்திலிருந்து பிறகு ஆச்சரியத்தை யடைந்து, "ஏ ராம! சகலமும் தங்கள் சித்தம் அறிந்ததே. நான் கூறுகிறேன் கேளுங்கள். முன் காலத்தில் வான்மீகி உமது சரித்திரத்தை ஆயிரம் கோடி கிரந்தமாகச்செய்தார். அதன் மத்தியில் ஒன்பது காண்டங்களடங்கிய ஆனந்த ராமாயணமிருக்கிறது. அதை இந்த அயோத்தியிலும் மற்ற விடங்களிலும் உள்ள சேவகர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவர் படிக்கத்தொடங்கி, சிலர் வைகுண்டத்தையும் சிலர் சொர்க்க முதலிய மற்ற பதவிகளையும் அடைந்திருக்கிறார்கள். ஆகையால் பூமியில் சைன்யமில்லை. சிலர் லோகாந்தரத்தையும் அடைந்திருக்கிறார்கள். அவ்விதமே தங்கள் சைன்னியத்திலிருந்தவர்களும் படித்துப் பதவிகளை அடைந்திருக்கிறார்கள். ஸார காண்டத்தைக்கேட்டால் ஸம்ஸார பந்தமொழியும். யாத்திரா காண்டத்தைக் கேட்டால் யாகங்களின் பலன் உண்டாகும். விலாஸகாண்டத்தைக் கேட்டால் அப்ஸர ஸ்திரீகளோடு ஸுகத்தையடையலாம். ஜன்ம காண்டத்தைக்கேட்டால் புத்ராதி ஸந்ததியுண்டாகும். விவாக காண்டத்தைக் கேட்டால் அழகிய ஸ்திரீயை யடைவான். இராஜ்ய காண்டத்தைக் கேட்டால் பூமியில் இராஜ்யத்தை யடைவான். மனோகர காண்டத்தினால் மனோரத சக்தியை யடையலாம். பூர்ணகாண்டத்தைக் கேட்டால் பூர்ணபலம் உண்டாகும். ஆனந்தராமாயணம் முழுவதையும் பக்தியுடன் கேட்டால், ஸச்சிதானந்த ரூபியான உம்மிடம் லயத்தை யடைந்து விடுவான். ஏராம! நீர் கேட்ட எல்லாவற்றிற்கும் இவ்வாறு விஸ்தாரமாய் பதில் கூறிவிட்டேன்" என்று வசிஷ்டர் அரசர்களுக்கெதிரில் தெரிவித்தார்.

இது நிற்க, இவ்வாறு தூதர்கள் ஆனந்த ராமாயணத்தைப் படித்தும் கேட்டும் சொர்க்காதிபதவிகளை யடைவதைக் கேட்ட தேசாந்திரங்களில் உள்ள மற்றவர்களும் அவ்விதமே படித்தும் கேட்டும், சொர்க்காதி பதவிகளுக்கு ஒவ்வொருவராகச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது யமன் தனது லோகத்திற்கு ஒருவரும் வராததுகண்டு பிர்ம்மாவோடு கூட கைலாயத்திற்குச் சென்று, அங்கே பரமசிவனிடம் சகல சமாச்சாரங்களையும் தெரிவித்தான். சிவன் இதைக்கேட்டு நகைத்து, பார்வதியோடு விருஷபத்தி லேறிக்கொண்டு பிர்ம்மா, யமன் தேவர்கள் இவர்கள் சூழ,

அயோத்திக்கு வந்தார். இராமர் இதைத் தெரிந்துகொண்டு அவரை எதிர்கொண்டழைத்து திவ்யமான சிங்காதனத்தில் வீற்றிருக்கச் செய்து, பரமசிவன் முதல் யாவருக்கும் விதிப்ரகாரம் ஸீதையோடு பூஜை செய்தார். இப்பொழுது பிரம்மா "ஏ ராமா! இப்போது யமனுக்கு வேலையில்லை. யமபட்டணமும் சூன்யமாகி விட்டது. பூலோகமும் சூன்யமாகி விட்டது. சொர்க்கத்தில் இடங் கிடையாது. எல்லா ஜனங்களும் ஆனந்த ராமாயணத்தைப் படித்தல் கேட்டல் முதலியவைகளால் சொர்க்கலோகத்தையே அடைந்து விட்டார்கள். ஆகையால் இந்த விஷயத்தில் தாங்கள் நன்றாய் ஆலோசித்து ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்" என்றார். இதைக்கேட்டு இராமர் சத்ருக்னனைக் கூப்பிட்டு வான்மீகியினிடம் இதைத் தெரிவிக்கும்படி சொன்னார்.

சத்ருக்னர் இராமர் கூறியதை வான்மீகரிடம் தெரிவித்ததும் வான்மீகர் புன்முறுவல் பூத்து ஏ சத்ருக்ன! நீ இராமரிடம் சென்று, "எனது கவிதையானது உலகத்தில் நாசமடையாமலிருக்கவும், ஜனங்களுக்குச்சுகமுண்டாகவும் தக்கபடி ஏதாவது ஏற்பாடுசெய்யும்படி அவருக்குத் தெரிவி" யென்றார். சத்ருக்னர் அதை இராகவரிடம் தெரிவிக்க, இராகவரும் அப்படியே செய்ய நிச்சயித்து, "ஏழு ஜன்மங்களில் என்னைப் பூஜை செய்த புண்யம் எவனுக்கு இருக்கிறதோ அவனுக்கு ஆனந்தராமாயணக் கதையில் ருசியுண்டாகட்டும். எப்போதும் எல்லாருக்கும் உண்டாக வேண்டாம்" என்று வரங்கொடுத்தார். இதைக்கேட்டு எல்லோரும் சந்தோஷத்தை யடைந்து தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள். ஏ விஷ்ணுதாஸ! அதுமுதல் பூமியில் எல்லாருக்கும் ஆனந்த ராமாயணத்தில் ருசியுண்டாகாமல் ஏழு ஜன்மங்களில் இராமனை ஆராதித்த புண்யத்தை யுடையவர்களுக்கே ருசியுண்டாயிற்று. ஆகையால் இப்படிப்பட்ட புண்யமுள்ளவன்தான் ஆனந்த ராமாயணத்தைப் பூஜிப்பானே யல்லாது மற்றவன் தெரிந்துகொள்ள முடியாது.

23 - வது சருக்கம்

முற்றிற்று.

24-வது சருக்கம்.

ஒருகாலத்தில் இராமர் ஸபையில் வீற்றிருக்கும்போது ஒரு சேவகன் ஓடிவந்து "ஏ பிரபுவே! ராம! தங்களது வெகுகால மந்திரியான சுமந்திரர் சொர்க்கலோகத்தை யடைந்துவிட்டார். அவரது மனைவியும் புத்திரர்களும் அனுமரணம் செய்யத் தங்களது உத்தரவை எதிர்பார்க்கிறார்கள்" என்றான். இதைக்கேட்டு இராமர் பயந்து வியஸனத்தை யடைந்து வாகனத்தின் மீதேறிக்கொண்டு, ஸுமந்திரரது வீட்டிற்குச் சென்று, அங்கே அவர் ஜாதகத்தை யெடுத்து அவர் ஆயுளைப் பார்த்தார். ஸுமந்திரர் பிறந்த காலம் முதல் 999-வருஷம் 11-மாதம் 21-நாட்கள் தாம் சென்றிருந்தன. இன்னும் 9-நாள் பாக்கியிருந்தன. இராமர் இதைத் தெரிந்துகொண்டு குருவினிடம் வந்து "பரமகுருவே! கிருதயுகத்தில் லக்ஷவருஷமும் துவாபரயுகத்தில் ஆயிரம் வருஷமும் கலியுகத்தில் நூறுவருஷமும் திரேதாயுகத்தில் பதினாயிரம் வருஷமும் ஜனங்களுக்கு ஆயுள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், அது இப்போது என் இராஜ்யத்தில் பொய்யாகிவிட்டது. யமனுக்கு என்னிடமிருந்து சிக்ஷை வேண்டும்போலும்! ஏனெனில், அவன் என்னை அலக்ஷியம் செய்துவிட்டு இன்னும் ஒன்பதுநாள் யிருக்கும்போதே என் மந்திரியை எவ்வாறு அழைத்துச்சென்றான். ஆகையால் யமனைக்கட்டி இழுத்துக்கொண்டு வந்து ஸுமந்திரரை ஜீவிக்கும்படி செய்கிறேன். எனது பராக்கிரமத்தைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு கருடன் மீதேறிக்கொண்டு கையில் கோதண்டமென்னும் வில்லை யெடுத்துக்கொண்டு வெகுவேகமாய் ஸம்யமினீ பட்டணத்திற்குச் சென்றார். வழியில் யமதூதர்கள் ஸுமந்திரரைக் கட்டி இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்து அவர்களெல்லாரையும் அடித்து லிங்கரூபத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற ஸுமந்திரரை விடுவித்தார். அப்போது யமதூதர்கள் "ஏ ராகவ! தாங்கள் எங்களை இவ்வளவு உக்ரமாய்த் தண்டித்தீர்களே நாங்கள் தங்களுக்கொன்றும் அபராதம் செய்யவில்லையே" என்று சொல்ல, இராமர் "இன்னும் இவரது ஆயுளில் ஒன்பதுநாள் மீதியிருக்கின்றதே. இதற்குள் ஏன் அழைத்

துச் செல்லுகிறீர்கள்? அந்த ஒன்பதுநாள் முடிந்ததும் இவரை அழைத்துக்கொண்டு போகலாம், அப்போது நான் தடுக்கமாட்டேன்" என்று சொன்னார். இதைக்கேட்டு யமதூதர்கள் "ஏ ராகவ! ஸுமந்திரரது ஜந்மம் மிகவும் அபூர்வமானது. ஏனென்றால், இவரது முகமும் இரண்டு கைகளும் கர்ப்பத்திலிருந்து முதலில் வெளிப்பட்டன. பிறகு பத்தாவது தினத்தில் தைவயோகத்தால் இவரது வயிறு முதலான அவயவங்கள் மெள்ள மெள்ள வெளிப்பட்டன. அப்போது பெரியோர்கள் நல்ல மந்திரங்களால் இவருக்கு ரக்ஷை செய்ததால், இவருக்கு ஸுமந்திரரென்னும் பெயருண்டாயிற்று. ஆகையால் முதல்நாள் முதற்கொண்டு இவரது ஆயுள் முடிந்துவிட்டது. தாங்கள் சரீரம் முழுமையும் வெளிவந்த நாள் முதல் கணக்கிடுவதால், ஒன்பது நாள் மீதியிருக்கின்றன. ஆகையால் நாங்கள் செய்தது குற்றமல்ல; இவரது பிறந்த சமயமே சந்தேகமாயிருக்கிறது. இவரை வீணாக அழைத்துவந்து தங்களால் சிக்ஷிக்கப்பட்டோம்," என்றார்கள். உடனே இராமர், யமதூதர்களே! எந்த தினத்தில் கர்ப்பத்திலிருந்து முழுவதும் வெளிப்பட்டுப் பிறந்தாரோ, அதுதான் இவரது ஜந்மகாலம். அதுதான் மிக உற்சாகதினம். அந்த தினத்தில்தான் அவரது பிதா முதலானவர்கள் ஜாதகத்தை நன்றாய் எழுதிவைத்தார்கள். ஆகையால் ஒன்பதுநாள் மீதியிருப்பதால் நீங்கள் மறுபடியும் பத்தாவது தினத்தில் திரும்பிவந்து இவரை அழைத்துச் செல்லவேண்டும். அப்போது நான் உங்களைத் தடுக்கமாட்டேன்" என்று சொன்னார். அதைக்கேட்டு யமதூதர்கள் வாய்பேசாமல் கண்ணீர் விட்டுக்கொண்டு யமனிடம் சென்றார்கள். இராமரும் திரும்பித் தமது நகரத்திற்கு வந்து மந்திரியின் வீட்டிற்குச் சென்று பார்த்தார். அங்கே எல்லாரும் ஸுமந்திரரோடு கூடி ஸந்தோஷமாயிருப்பதைக் கண்டார். அவர்கள் யாவரும் இராமரை வணங்கிப் பூஜித்தார்கள். பிறகு இராமர் தமது வீடு சென்றார். ஸுமந்திரரும் தமது ஆயுளில் ஒன்பது நாள் மீதியிருப்பதைக் கண்டு இராகவரது உத்தரவால் தானதர்மங்களை நன்றாய்ச் செய்தார்.

ஸுமந்திரரை நடுவழியில் விட்டுச் சென்ற யமதூதர்கள் அழுதுகொண்டே யமதர்மராஜனிடம் சென்று "ஏ பிரபுவே! உமது அதிகாரம் இனி எவ்வாறு உலகத்தில் நடக்கும்? உமது கட்டளைப்படி நடக்கிற எங்கள் அவஸ்தையைப்பார்த்தும், இன்னும் தங்களுக்கு வெட்கமுண்டாகவில்லை. நாங்கள் ஸுமந்திரரை யழைத்துவரும்போது வழியில் இராமர் வந்து எங்களை யடித்து அவருக்கு ஆயுளில் ஒன்பதுநாள் பாக்கி யிருப்பதாகச் சொல்லி, அவரை விடுவித்துக்கொண்டு போய்விட்டார். ஆகையால் நாங்கள் ஜலத்தில் விழுந்து பிராணனை விடுவோமேயொழிய, இனிப் பிழைத்திருக்க மாட்டோம்," என்று முறையிட்டார்கள். யமன் இவ்வாறு தூதர்கள் கதறுவதைக் கேட்டு மிகவும் கோபத்தையடைந்து தூதர்களைப்பார்த்து, "நான் இப்போதே சென்று இராமரைக் கட்டிப்பிடித்து அவரைத் தண்டிக்கிறேன்; சைன்யங்களைத் தயாராக விருக்கச் சொல்லுங்கள்" என்று உத்தரவு செய்துவிட்டு வேகமாய் இந்திரனிடம் சென்று தனக்கு அவனைச் சகாயஞ்செய்யும்படி வேண்டிக்கொண்டான் இந்திரன் "எனது சகாயத்தை வைத்துக்கொண்டு விஷ்ணுவுடன் சண்டைசெய்ய விரும்புவதைப்பார்த்தால். உனக்குச் சித்தம் சுவாதீனமில்லைபோற் காண்கிறது. பேசாமல் உன் நகரம் செல். அவரை நீ ஒன்றுஞ் செய்யமுடியாது. அவருக்குப் பயந்துதான் நான் என்னிடமிருந்த இரண்டு கற்பகவிருக்ஷங்களையும் அவருக்குக் கொடுத்துவிட்டேன்" என்று சொன்னான். உடனே யமன் இதைக் கேளாது அக்னி, நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது, அங்காரகன், த்ருவன் இவர்களெல்லாரையும் தனக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று தனித்தனியே வேண்டிக்கொண்டான். அவர்களும் இந்திரன் சொன்னபடியே அவனுக்கு நல்ல புத்திகூற, அதையும் கவனியாது, பிரம்மாவையும் ஏழு தீவுகளிலுள்ள அரசர்களையும் வெகுவாய் வேண்டிக்கொண்டான். அவர்களும் "இராமருக்கெதிரில் உனக்குச் சகாயஞ்செய்ய எங்களால் முடியாது" என்று மறுத்து விட்டார்கள். பிறகு கோபத்தையடைந்து தனது சேனைகளோடு இராமரிடஞ் சண்டைசெய்ய அயோத்திக்கு வந்து ஒன்

பதுகோட்டை வாசல்கள் அழகிய ஒன்பது பிராகாரங்கள் ஆயுத சாலைகள் ஒன்பது அகழிகள் இவைகளால் விளங்கும் அயோத்தியை முற்றுகைபோட்டான். இதையறிந்த இராமர் லவனை யமனோடு யுத்தத்திற்கனுப்ப, லவன் இரதத்திலேறிக்கொண்டு அநேக ஸேனைகளோடு அயோத்திக்கு வெளியே சென்று, வெகு பாணங்களைவிட அவைகளால் அடிக்கப்பட்ட அநேக யமதூதர்கள் கீழே விழுந்தார்கள். இதைப்பார்த்த யமன் மஹிஷத்தின் மீதேறிக் கொண்டு லவனோடு கோரயுத்தம் செய்து அநேக பாணங்களால் லவனது இரதம் சாரதி சேனை வில் கவசம் மகுடம் இவைகளை யெல்லாம் வெட்டி நாசஞ்செய்தான். அப்போது லவனும் மிகுந்த கோபத்தையடைந்து, வேறு இரதத்திலேறிக்கொண்டு யமனோடு கோரயுத்தஞ்செய்தான். தேவர்கள் விமானத்தின்மீ தேறிக்கொண்டு வேடிக்கைப் பார்த்தார்கள்.

உடனே லவன் தனது பாணங்களால் மஹிஷத்தை அடித்துப் பூமியில் தள்ளிவிட்டுயமனையும் பாணங்களால் அடிக்க, அவன் அதிககோபத்துடன், தனது காலதண்டத்தை லவன்மீதெறிந்தான். அப்போது லவன் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிரம்மாஸ்திரம் வருவதைக்கண்டு யமதண்டம் திரும்பிவிட்டது. அப்போது யமன் மிகவும் பயந்து ஓட ஆரம்பித்தான். பிரம்மாஸ்திரமும் காலாக்னிபோல் அவனைத் துரத்திக்கொண்டு ஓடிற்று. அப்போது சூரியன் திவ்ய தேகத்துடன் லவனிடம்வந்து "ஏ பால! லவ! இப்போது யமனை நீ காப்பாற்றவேண்டும். உன்னால் விடப்பட்ட பிரம்மாஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய்துகொள். நீ அஸ்திரங்களை யெல்லாம் அறிந்தவன். எனது வம்சத்தில் உண்டானவன். இந்த யமன் எனது பிள்ளை. உனது தமையனை நீ கொல்ல விரும்புவது கூடாது; ஒருவன் மூடனாக விருந்தால், எல்லாரும் மூடராயிருப்பதில்லை. சண்டைக்களத்திலிருந்து ஓடின சத்துருவை வீரர்கள் கொல்வதில்லை. ஆதலால் நீ இவனைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள லவன் பிரம்மாஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய்தான். பிறகு சூரியன் லவனை முன்னிட்டுக்கொண்டு யமனோடு இராகவரைப் பார்க்கச் சென்றார். அப்

போது ஆகாசத்தில் தேவதுந்துபிகள் சப்தித்தன. பட்டணத்து ஜனங்களும் வந்தி மாகதர்களும் ஸ்தோத்திரம் செய்தார்கள். லவன் ஜயசாலியாக இராமரிடம் சென்று அவரை வணங்கினன். இராமர் சூரியன் வந்திருப்பதை யறிந்து, அவரை வணங்கி எதிர்கொண்டு சென்று கையைப்பிடித் தழைத்துக்கொண்டு ஸபைக்கு வந்து, சிங்காதனத்தில் அவரை உட்காரவைத்து ஷோடசோபசாரங்களால் அவரைப் பூஜித்தார். அப்போது இராமர் ஸபையிலுள்ள சூரியனிடம் "தாங்கள் பெரியோராதலால் லவன் ஏதாவது குற்றம் செய்திருந்தாலும் அதைப் பொறுத்தருளவேண்டும்" என்றுதெரிவிக்க, சூரியன் "ஏ இராகவ! விஷ்ணுவான உமது நாபீகமலத்திலிருந்து, பிரும்மா உண்டானர். அவரிடம்மிருந்து மரீசி முதலியபுத்திரர்கள் உண்டானர்கள். மரீசியினிடமிருந்து கச்யபர் உண்டானர். கச்யபரிடமிருந்து நான் உண்டானேன். ஆகையால் நான் உனக்குப் பௌத்திரனுக்குப் பௌத்திரன் எனது புத்திரனை யமன் ஏதாவது அபராதம் செய்திருந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்து இராமரை வணங்கும்படி யமனுக்குச் சொன்னர். இச்சமயம்தேவரெல்லாரும் வந்து இராமரை நமஸ்கரித்தார்கள். இராமரும் எல்லாத்தேவதைகளையும் ஆதரவோடு பூஜித்தார். பிறகு இராமரது ஆக்ஞையால், இந்திரன் அமிர்தத்தை வருஷித்துச் சண்டையில் இறந்தவீரர்களையும் வாகனங்களையும் பிழைப்பித்தான். பிறகு இராமர் யமனுக்கு "நான் இராஜ்யம் ஆளும்வரையில் நீ பூர்ணமான ஆயுளடைந்தவனைத் தான் கொண்டுபோகவேண்டுமே யல்லாது, மற்றவர்களைக் கொண்டுபோகக்கூடாது" என்று உத்திரவுசெய்ய, அவனும் அப்படியே ஒப்புக்கொண்டான். பிறகு பத்தாவது தினம் வந்ததும் ஸுமந்திரர் இராகவரைவணங்கி, அவரெதிரில் பிராணனை விட்டார். அவரது மனைவிகளும் அப்போதே பிராணனை விட்டார்கள். பிறகு ஸுமந்திரர் திவ்ய தேகங்களையுடைய தனது மனைவிகளோடு தாமும் திவ்ய தேகத்தை யடைந்து திவ்ய விமானத்தின் மீதேறி எல்லாராலும் பூஜிக்கப்பட்டு, மிகவும் பிரகாசித்தார். இராமரது எதிரில் இவர் மரணத்தை யடைந்ததால் இவருக்கு இவ்வளவு பாக்கியம் கிடைத்தது.

பிறகு சூரியன் இராமரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு யமனோடு தனது இருப்பிடம் சென்றார். ஸுமந்திரரும் தமது ஸ்திரீகளோடு வைகுண்டம் சென்றார். இராமரும் ஸுமந்திரரது புத்திரனை ஸுமந்துவை மந்திரி ஸ்தானத்தில் ஏற்படுத்திக்கொண்டார். பிறகு இராமர் ஒரு ஆக்ஞைசெய்து அந்த ஆக்ஞையை உலகமெங்கும் பிரசித்தப்படுத்தும்படி இலட்சுமணரிடம் சொல்ல, அவரும் அவ்வாறே தூதர்களுக்கு ஆக்ஞாபிக்க, அவர்கள் துந்துபி வாத்திய கோஷங்களோடு எல்லா ஜனங்களுக்கும் பிரசித்தப் படுத்தினார்கள்.

இராமரது ஆக்ஞை.

"உலகத்தில் எவனாவது அற்பாயுளாக இருந்தால், அவனை இராமரிடம் கொண்டுவரவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பௌராணிகர்களை ஏற்படுத்தவேண்டும். எப்போதும் நித்யநைமித்திக கர்மங்களை விடக்கூடாது. பிராம்மணரை அவமானம் செய்யக்கூடாது. ஒருவரையும் விரோதித்துக் கொள்ளக்கூடாது. திருடர்களைத் தண்டிக்கவேண்டும். லோகத்தில் கெட்ட ஆசாரமுள்ளவர்களை அடக்கவேண்டும். எப்போதும் தர்மம் செய்யவேண்டும். அயோத்தி முதலான திவ்யக்ஷேத்திரங்களில் புண்யகாலங்களில் ஸ்நானம் செய்யவேண்டும். வருஷந்தோறும் பிரயாகைக்குச் சென்று மாகஸ்நானம் செய்யவேண்டும். சாதுர்மாஸவிருதம் முதலியவைகளை அனுஷ்டிக்கவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் துளஸீ பூஜை அதிதி பூஜை இவைகளைச் செய்யவேண்டும் பிராம்மணர் யாசித்தால், அதைப்பூர்த்தி செய்யவேண்டும். வீடு கிராமம் இவைகளில் ஒருகாலும் கலகம் செய்யக்கூடாது. குருவை எப்போதும் வந்தனம் செய்யவேண்டும். காலையில் எப்போதும் ஸ்நானம் செய்துவிட்டு விதிப்பிரகாரம் அக்னிகளைப் பூஜிக்கவேண்டும். ஒருவனுக விருந்து தவம் செய்யவேண்டும் பிறர் பத்னியைப் பார்க்கவே கூடாது. புண்யகாலங்களில் வீட்டில் ஸ்நானம்பண்ணக் கூடாது. கணக்கர், வைத்தியர் இவர்களை விரோதித்துக் கொள்ளக்கூடாது. தாஸியோடு புணரக்கூடாது. எப்போதும் சரியான காலங்களில் நித்யகர்மங்களைச் செய்யவேண்டும். பிறரை நிந்திக்கக் கூடாது.

காடுகளில் குளம் குட்டை இவைகளை வெட்டவேண்டும். மார்க்கங்களில் மரங்களைப் பயிராக்கவேண்டும் தனித்தனியாக தர்மசாலைகள் ஏற்படுத்த வேண்டும். ஸ்திரீயை வஸ்திர மில்லாதபோது பார்க்கக்கூடாது. பட்டணம் கிராமம் வனம் இவைகளில் அன்ன சத்திரங்கள் ஏற்படுத்தவேண்டும். காட்டில் வந்தவர்களை வேடர்கள் காப்பாற்றவேண்டும். இரவில் ஜனங்கள் எங்கே சஞ்சரித்தாலும் அவர்களுக்குப்பயம்ஏற்படக்கூடாது. காலில்பாதரக்ஷைகளைப் போட்டுக்கொண்டு திவ்ய தீர்த்தம் தேவன், குரு, கொட்டில், பிருந்தாவனம், ஹோமசாலை இவைகளுக்குப் போகக்கூடாது. எப்போதும் வேதம் முதலியவைகளைப் பாராயணம் செய்யவேண்டும். யதிகளுக்கு வந்தனஞ்செய்து போஜனம் செய்துவைக்க வேண்டும். அவர்களுக்குக் கமண்டலம் கௌபீனம் பாதுகை தண்டம் இவைகளைப் பக்தியோடு கொடுக்கவேண்டும். தனது மனைவியை இம்சிக்கக்கூடாது பகலில் தூங்கக்கூடாது ஏகாதசியில் சாப்பிடக்கூடாது. தேவாலயங்களில் நன்றாய்ப் பூஜை நடக்கவேண்டும். பிராம்மணருக்கு எப்போதும் பானகம் பக்ஷணம் இவைகளைத் தானம் செய்யவேண்டும் எப்போதும் சாந்திசூக்தம் புருஷசூக்தம் இவைகளைப் பாராயணம் செய்யவேண்டும். எப்போதும் தர்மத்தைச் சம்பாதிக்க வேண்டும். ஆயுளை சஞ்சலமானதாக நினைக்கவேண்டும். துஷ்டபுத்தியை விட்டுவிட வேண்டும். எப்போதும் நரக துன்பத்தை நினைத்து நடக்கவேண்டும். நமக்கு வாலிபம் போகிறமாதிரி யௌவனமும் போகிறது. கிழத்தனம் வருகிறதும் பற்கள் விழுகின்றன. கறுப்புமயிர் வெள்ளையாகிறது. இவைகளெல்லாம் மரணம் சமீபத்துவிட்டதென்பதைக் காட்டுங்குறிகள் என்றறியவேண்டும். ஆகையால்தாமதமின்றித் தானம் செய்யவேண்டும். எப்போதும் மனதைச் சுத்தமாய் வைத்திருந்து ஈசுவரனைத் தியானம் செய்து பரமானந்தத்தை யடையவேண்டும்'' என்ற இராம கட்டளையை அந்த இராமதூதர்கள் ஏழு தீவுகளிலுமுள்ள ஜனங்களுக்குப் பிரசித்தப்படுத்திவிட்டு அயோத்திக்குத் திரும்பிவந்து, இராமரிடம் "தங்களது ஆக்ஞையை ஏழுதீவுகளிலுமுள்ள ஜனங்களுக்கும் துந்துபி வாத்தியங்களோடு பிரசித்தம் செய்து விட்டோம்'' என்று சொல்ல இராமர் அதைக் கேட்டு ஸந்தோஷ

மடைந்தார். இவ்வாறு இராமர் பூமியில் வெகு சரித்திரங்களைச் செய்தார். ஏ சிஷ்ய! நான் இராம இராஜ்ய காண்டத்தைக் கூறினேன். இந்த இருபத்தொன்று சருக்கங்களும் மகாமங்களங்களைக் கொடுக்கக்கூடியன எந்த அரசர் பக்தியோடு இராஜ்யகாண்டத்தைப்படிக்கின்றார்களோ அவர்கள் ஒருகாலும்இராஜ்யத்தைவிட்டு விலகும்படி நேரிடாது. இந்த இராஜ்யகாண்டத்தைக் கேட்பவர்களுக்கு மஹாமங்கள முண்டாகும். உத்தியோகத்திலுள்ளவர்கள் இராஜ்யகாண்டத்தைப் படித்தால், அவர்களுக்கு உத்தியோகம் விருத்தியாகும். ஆனந்த ராமாயணத்தின் மத்தியிலுள்ள இராஜ்ய காண்டத்தைப் பக்தியோடு படித்தாலும் கேட்டாலும் ஜனங்களுக்கு மஹாமங்களமும் சித்தசுத்தியும் நிரதிசயாநந்தமும் அவசியம் உண்டாகும் என்பது நிச்சயம்.

உத்தரார்த்தம்

இராஜ்ய காண்டம்

21 - வது சருக்கம்

முற்றிற்று.

மனோகர காண்டம்.

1-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பரமகுருவே! நான் தங்களை ஒரு விஷயம் கேட்க விரும்புகின்றேன். அதன் உண்மையைக் கூறவேண்டும். முந்தி மகா புத்திமானாகிய நாரதமகாமுனிவர், இராமபிரான் சரித்திரத்தைச் சுருக்கமான வேதமொழிகளால் வான்மீகருக்கு உபதேசஞ் செய்ததாகக் கூறினீர்கள். அதை அதன் பொருள்களமைந்த சுலோக ரூபமாக எனக்குக் கூறவேண்டும் என்றார்.

ஸ்ரீ இராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாச! நீ நன்றாகக் கேட்டாய்; நான் உன் கேள்விக்குப் பதிலுரைக்கின்றேன்; கவனமாகக் கேள்:—

வான்மீக முனிவர் தாம் நாரத முனிவரிடமிருந்து வேத மொழிகளாய் உபதேசிக்கப்பெற்ற இராம சரித்திரத்தை நூறு சுலோகங்களாகக் கவனஞ் செய்து, அதைத்தாம் நூறு கோடி சுலோகங்களாகச் செய்த இராமாயணத்தின் முற்பகுதியில் சேர்த்திருக்கிறார். அதற்கு இலகு இராமாயணமென்று பெயர் சொல்லப்படுகிறது. அதை உனக்குக் கூறுகிறேன்.

மங்களாசரணம்.

கவனம் செய்யும் சக்தியாகிய கிளையின் மீதேறி, இராம இராம என்ற இனிமையான அக்ஷரங்களை, இனிமையாகக் கூவும் வான்மீகியாகிய குயிலை நான் நமஸ்கரிக்கின்றேன்.

கவனம் செய்யும் சக்தியாகிய காட்டில் சஞ்சாரம் செய்கின்ற வான்மீகி முனிவராகிய ஸிம்ஹத்தின் இராமாயண கதையாகிற சப்தத்தைக் கேட்ட, எவன் தான் (பரகதியை) நல்ல கதியை - (ஓட்டத்தை) அடையமாட்டான்.

எப்போதும் இராம சரித்திரமாகிய - அமிருத சமுத்திரத்தைப் பானம் செய்தவராயினும் அதில் திருப்தி யடையாதவரும், தோஷமற்றவரும், பிராசேதஸர் என்ற பெயருள்ளவருமான வான்மீகி முனிவரை நமஸ்கரிக்கின்றேன்.

சமுத்திரத்தைப் பசுவின் காலடிக்கும் அரக்கர்களைக் கொசுவுக்கும் சமானமாக நினைத்தவரும், இராமாயணமாகிய உயர்ந்த மாலைக்கு இரத்தினம் போன்றவருமான வாயுகுமாரனை நான் நமஸ்கரிக்கின்றேன்.

அஞ்சனாதேவியின் குமாரரும், வீரியமுள்ளவரும், ஸீதாதேவியின் துக்கத்தைப் போக்கினவரும், வானரர்களுக்குள் சிரேஷ்டரும், அக்ஷயனைக் கொன்றவரும், இலங்கைக்கு அச்சத்தை உண்டாக்கினவருமாகிய அநுமாரை நான் நமஸ்கரிக்கின்றேன்.

விளையாட்டாகக் கடலைக் கடந்து, ஜனகன் குமாரியாகிய ஸீதையின் துக்கமான நெருப்பை எடுத்து, அந்த நெருப்பினாலேயே இலங்கையை எரித்த அஞ்சனையின் குமாரனாகிய ஆஞ்சநேயரை நான் கைகூப்பிக்கொண்டு நமஸ்கரிக்கின்றேன்.

மனதுக்கும் வாயுவுக்கும் சமமான வேகமுள்ளவரும், இந்திரியங்களை ஜயித்தவரும் புத்திசாலிகளுக்குள் உயர்ந்தவரும், வாயுவுக்குக் குமாரரும், வானரக் கூட்டங்களுக்குள் சிரேஷ்டரும், ஸ்ரீராமருக்குத் தூதருமான அநுமாரைத் தலையால் வணங்குகின்றேன்.

பிர்ம்ம சொரூபியும் இரகுவம்சத்திற்கு நாதரும், இராமபத்திர ரென்றும், இராமச்சந்திர ரென்றும் பெயர் பெற்றவரும், ஸீதைக்குப் பதியுமாகிய ஸ்ரீராமரின் பொருட்டு நமஸ்காரம் செய்கிறேன். உலகங்களைத் தரிப்பவரும், பிறப்பற்றவரும், உலக சொரூபியும், குணமற்றவரும், குணரூபமுள்ளவரும், பகவனுமான ஹரியை நமஸ்கரிக்கின்றேன்.

மங்களாசரணம்

முற்றிற்று.

தவசிரேஷ்டராகிய வான்மீகி முனிவர், தவம் வேதம் இவைகளில் ஆசையுள்ளவரும், வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களுக்குள் சிரேஷ்டரும், முனிவர்களுக்குள் உயர்ந்தவருமான நாரத முனிவரை வினவுகிறார்:—

இந்தப் பூலோகத்திலிப்போது எவன் நற்குணங்களுள்ளவன், எவன் வீரியமமைந்தவன், எவன் தருமங்களை யறிந்தவன், எவன் செய்த உபகாரத்தை மறக்காதவன், ஸத்தியமான வசனமுள்ளவன் எவன், திடமான விரதமுள்ளவன் எவன், நல்ல நடத்தையுள்ளவன் எவன், சகல பிராணிகளிடத்தும் இதமான எண்ணமுள்ளவன் எவன், எவன் அறிந்தவன், எவன் சாமர்த்தியமுள்ளவன், எவன் எப்போதும் பிரியத்துடன் பார்க்கத்தகுந்த ரூபமுள்ளவன், தைரியம் உள்ளவன் எவன், கோபத்தை ஜயித்தவன் எவன், காந்தியுள்ளவன் எவன், அசூயை யில்லாதவன் எவன், யுத்தத்தில் எவனுக்குத் தேவர்களாலும் பயமடைவார்கள் இவைகளை எனக்குக் கூறவேண்டும், நான் கேட்க விரும்புகிறேன் என்றார். மூவுலக விஷயங்களையும் அறிந்த நாரதமுனிவர் வான்மீகி முனிவரின் வாக்கியத்தைக் கேட்டு, சந்தோஷித்து, அவரைப்பார்த்துக் கூறுகிறார்.

வான்மீகி முனிவரே! தங்களால் கூறப்பட்ட அநேக குணங்கள் ஒருமானுடனிடம் இருப்பது துர்லபம். ஆயினும் தாங்கள் கூறிய குணங்களையுடைய ஓர் மானுடனை நான் தெரிந்து கூறுகிறேன் கேளுங்கள். இக்ஷுவாகு வம்சத்திற் பிறந்து, சகல ஜனங்களும் புகழ விளங்குகிறான் இராமன் என்ற பெயருள்ள மானுடன் ஒருவன். அவன் கட்டுப்பட்ட மனமுள்ளவன், மிகுந்த வீரியமுள்ளவன், காந்தியுள்ளவன், தைரியமுள்ளவன், இந்திரியங்களை ஜயித்தவன், புத்தியுள்ளவன், நியாயமுள்ளவன், நல்ல வாக்குள்ளவன், அழகுள்ளவன், சத்ருக்களைச் சங்காரம் செய்யும் சக்தியுள்ளவன், பரந்த புயமும், நீண்ட கைகளும், சங்கம்போன்ற கழுத்தும், பெருத்த கன்னத்தின் மேற்பாகமும், சிலாக்கியமான மார்பும் உடையவன். பெரிய வில்லையுடையவன், மறைந்திருக்கும் தோள்களின் ஸந்தியுடையவன், காமம் முதலிய சத்ருக்களை நாசம் செய்தவன், முழங்கால் வரையில் நீண்ட கைகளுள்ள

வன், அழகான நெற்றியும் நல்ல நடையும் உடையவன், சமமான உயரம், உயரத்திற்குத் தக்க பருமன், சமமாகப் பிரிந்திருக்கும் கை கால் முதலான அவயவங்கள், பராக்ரமம் இவைகளுடையவன், பெருத்த மார்புடையவன், நீண்ட கண்கள் படைத்தவன், மங்களத்தை விளைவிக்கும் அடையாளங்களமைந்தவன், தருமங்களை யறிந்தவன், சத்யபிரதிஞ்ஞையோடு கூடினவன், பிரஜைகளுக்கு நன்மையைக் கோருகிறவன், நல்ல கீர்த்தி யமைந்தவன், ஞானத்துடன் கூடியவன், பரிசுத்தன், இந்திரியங்களை ஜயித்தவன், மனதை ஒருமைப் படுத்தும் சக்தியுள்ளவன், பிர்ம்மதேவருக்குச் சமானமானவன், ஸ்ரீயோடு கூடினவன், ஸகல ஜனங்களையும் இரக்ஷிக்கிறவன், சத்ருக்களைச் சங்கரிப்பவன், தரும பரிபாலனம் செய்பவன், தன்னைச் சேர்ந்த ஜனங்களைக் காப்பாற்றுகிறவன், வேதங்கள் வேதத்தின் ஆறு அங்கங்கள் இவைகளின் உண்மையை அறிந்தவன், தனுர்வேதத்திலும் சமர்த்தன், ஸகல சாஸ்திரப் பொருள்களின் உண்மையை அறிந்தவன், ஞாபகசக்தி யுள்ளவன், புதிது புதிதாகத் தோன்றும் பிரக்ஞையுள்ளவன், ஸகல ஜனங்களுக்கும் வேண்டியவன், ஸாது, துக்கப்படாத மனமுள்ளவன், சாமர்த்தியமுள்ளவன், சாதுசங்கப் பிரியன், பூஜ்யன், எல்லோரிடத்திலும் சமமான எண்ணமுள்ளவன், இவ்விதம் சகல குணங்களு மமைந்தவனும் கௌஸல்யைக்கு ஆனந்தத்தை விருத்தி பண்ணுகிறவனுமாகிய அந்த இராமன் கம்பீரத்தில சமுத்திரத்தையும், தைரியத்தில் இமவானையும், வீரியத்தில் விஷ்ணுவையும் ஒத்திருப்பான். கோபத்தில் பிரளயகாலாக்கினிக்கும், பொறுமையில் பூமிதேவிக்கும், கொடுப்பதில் குபேரனுக்கும், ஸத்யவசனத்தில் தருமதேவதைக்கும் நிகராவான்.

இவ்வித குணங்களுடன் கூடியவனும் ஸத்யமான பராக்ரமமுள்ளவனும் பிரியனும் ஜனங்களுக்கு நன்மையைச் செய்வதில் ஆசையுள்ளவனும் முத்தவனுமாகிய ஸ்ரீராமனென்ற குமாரனுக்கு ஜனங்களுடைய பிரீதியை விரும்பி யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைக்க, பூபதியாகிய தசரத மகாராஜன் எத்தனித்தான்

இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போவதை யறிந்த தசரதரின் பத்தினியாகிய கைகேயி, தான் முந்தி அவரிடம் பெற்றிருந்த இரண்டு வரங்களின்படி, ஒன்றால் இராமனை வனத்துக்கு அனுப்பவேண்டுமென்றும், ஒன்றால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டும் என்றும் அவரிடம் வேண்டிக்கொண்டாள். தசரதர், தருமமாகிய கயிற்றால் கட்டுண்டு, சத்தியமான சொல்லைக்காப்பாற்றும் பொருட்டுக் கைகேயியின் கருத்துக்கிணங்கி, இராமனை வனத்துக்குச் செல்ல உத்தரவு கொடுத்தார். மகாவீரனாகிய இராமன் கைகேயிக்குத் தமது தந்தை செய்த பிரதிக்ஞையைக்காப்பாற்றுவதற்கும், தந்தைவாக்கியப் பரிபாலன நிமித்தமும், கைகேயியின் திருப்திக்காகவும் வனம் செல்லப் புறப்பட்டார். இராமபிரான் வனஞ்செல்லப் புறப்படுவதைப் பார்த்ததும், சுமித்திரைக்கு ஆனந்தத்தை விருத்திபண்ணுகிறவரும், வணக்கத்துடன் கூடினவரும், தமையனாகிய இராமருக்கு அன்புடையவருமான இலட்சுமணர், ஒரு தம்பி தன் தமையனிடம் இம்மாதிரி இருக்கவேண்டுமென்பதை உலகத்தாருக்கு உணர்த்துவதன் பொருட்டு, அவரோடு தாமும் வனத்திற்குச் செல்லப் புறப்பட்டார். இதையறிந்ததும், இராமபிரானின் ஆருயிர்போ லுள்ளவளும், ஜனகபுத்திரியும் அவதாரமாகிய மோகினி போல் சகல இலட்சணங்களு மமைந்தவளும் ஸ்திரீகளுக்குள் உத்தமியுமான சீதாபிராட்டி, உரோகிணி சந்திரனை யனுசரிப்பது போல், இராமனை அனுசரித்து அவருடன் வனஞ்செல்லச் சித்தமானாள்.

பிறகு இராமர், சீதை, தம்பி இலட்சுமணர் இவர்களையும் அழைத்துக்கொண்டு வனமேகினர். பட்டணத்தாரும், சுமந்திரர் முதலிய மந்திரிமார்களும், தந்தையாகிய தசரதரும் பந்துக்களும் அவனைப் பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றார்கள். கங்காநதிக்கரையிலுள்ள சிருங்கபேர பட்டணத்திற்குச் சென்றதும் தருமசீலராகிய இராமபிரான் வேடர்களுக்கு வேந்தனாகிய குகனை யடைந்து, சுமந்திரர் முதலானவர்களை விட்டுப் பிரிந்தார். இராமபிரான் சீதா இலட்சுமணர்களுடன் குகனைக்கொண்டு கங்காநதியைக்கடந்து, பரத்வாஜாசிரமத்திற்குச் சென்றார். பிறகு அவர்

உத்தரவினால் சித்ரகூட பருவதம் சென்று, ஓர் அழகான பர்ண சாலைகட்டி அதில் வசித்துக்கொண்டிருந்தார்.

இராமபிரான் இங்கு வசித்துக்கொண்டிருக்கையில் அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தால் தசரத மகாராஜன் சொர்க்கலோகஞ் சென்றார். பிறகு வசிஷ்டர் முதலியவர்கள் இராஜ்யாபிஷேகத்தை ஏற்றுக்கொள்ளும்படி பரதனுக்குப் பன்முறையுங் கூறினார்கள். மகாபலமுள்ள பரதன் அதற்குச் சம்மதிக்காமல், இராமபிரானிடம் அனுக்ரகம்பெறுவதன்பொருட்டுச் சித்ரகூடபருவதம்சென்று அவரைக்கண்டு, "அண்ணா! தருமங்களை யறிந்த நீர் தான் அரசன்; நான் அரசனாவதெப்படி? ஆகையால் தாங்களே இராஜ்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டு" மெனக் கேட்டான். இராமசந்திரர் ஔதாரியம், மகிமை, தம்மையாசிரயித்தவர்களை ஆதரிக்கும் உத்தமகுணம் இவைகளையுடையவராயினும் தந்தைவாக்கிய பரிபாலன நிமித்தம் இராஜ்யத்தைஏற்றுக்கொள்ளச் சம்மதிக்காமல், இராஜ்ய பரிபாலனம் செய்யத் தமது பாதுகைகளை அடைக்கலமாகக் கொடுத்துப் பரதனை அயோத்திக்கு அனுப்பினார். பரதன் பாதுகைகளைப்பெற்றுத்திரும்பி அயோத்தியின் எல்லைக்குள் நுழையாமல் அதற்கப்புறமுள்ள நந்திக்கிராமம் என்னுமிடத்தில் தங்கி அயோத்தியை ஆண்டுவந்தான்.

பிறகு சத்தியசந்தரும் இந்திரியங்களை ஜயித்தவருமான இராமபிரான், நாம் இங்கிருந்தால் பட்டணத்து ஜனங்கள் அடிக்கடி நம்மிடம் வருவார்களென்றெண்ணி, சித்ரகூடத்தை விட்டுப் புறப்பட்டுத் தண்டகாரண்யத்தில் பிரவேசித்தார். தாமரைமலர் போன்றகண்களுள்ள இராமபிரான் தண்டகாரண்யத்தில் தம்மை யெதிர்த்தவிராதனென்னும் அரக்கனை வதம்செய்து விட்டுச் சரபங்க மகாமுனிவரைக்கண்டார்.

பிறகு சுதீக்ஷ்ணர், அகஸ்தியர் இவர் சகோதரராகிய சுதர்சனர் இவர்களைக்கண்டு சேவித்தார். அகஸ்தியமுனிவர் கூறியபடி இந்திரனால் கொடுக்கப்பட்ட வில், கத்தி, குறையாத பாணங்களைக் கொடுக்கும் அம்பறாத்தூணி இவைகளைப் பெற்றுக்கொண்டார். அசுரர்கள் இராக்கத ஸ்திரீகள் இவர்களின் வதத்தை

சித்துக் காட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் இராமரிடம் அநேக முனிவர்கள் வந்தார்கள். தண்டகாரண்ய வாசிகளும் அக்கினிக் கொப்பானவர்களுமான முனிவர்களுக்கு ஸ்ரீ இராமபிரான் தாம் அரக்கர்களை வதஞ்செய்வதாகப் பிரதிக்ஞை செய்து கொடுத்து அவர்களுக்குச் சந்தோஷமுண்டாக்கினர்.

பிறகு ஜனஸ்தானத்திலிருந்து தாமிருந்த பஞ்சவடி தீரத்திற்கு வந்த சூர்ப்பனகை என்ற அரக்கியின் மூக்கு முலைகளை இலட்சுமணரைக்கொண்டு அறுத்து அவளை விரூபப்படுத்தினர். பிறகு அந்தச் சூர்ப்பனகையின் சொல்லைக்கேட்டு அமருக்கு வந்த கரன், திரிசிரஸ், தூஷணன் முதலியவர்களையும் அவர்களுடன் வந்தவர்களையும் சங்கரித்தார். அந்த வனத்தில் வாசஞ்செய்யும் இராக்கதர்களிற் பதினாயிரம் பேர்கள் இராமரால் அடிபட்டு உயிர் துறந்தார்கள். இப்படித் தன் பந்துக்களும் தம்பிமார்களும் இராமரால் வதஞ் செய்யப்பட்டதை அறிந்த இராவணன், மாரீசன் என்ற அசுரனைத் தனக்கு ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொண்டான். மாரீசன் இராவணனைப் பார்த்து, "ஏ இராவணா! அதி பராக்ரமசாலியாகிய அந்த இராமருடன் விரோதஞ் செய்துகொள்வது உனக்கு அழகல்ல," என்று கூறி இராவணனைத் தடுத்தான்.

காலபாசத்தினால் கட்டுண்ட இராவணன் அவன் வாக்கியத்தை அநாதரவு செய்து, மாரீசனுடன் இராமருடைய ஆசிரமத்திற்கு வந்தான். மாயாவியான மாரீசன் தன் மாயையால் இராம இலட்சுமணர்களை வெகு தூரம் அழைத்துக்கொண்டு சென்றான். இராவணன் ஜடாயுவை வதம்செய்து இராமபிரானுடைய பத்தினியாகிய சீதாபிராட்டியை யபகரித்தான். அடிபட்டுக்கிடக்கும் ஜடாயுவைப்பார்த்து, சீதையை இராவணன் அபகரித்துப்போனானென்பதை அவனாலறிந்த இராமர் சோகத்தையும் வியாகூலத்தையு மடைந்து பிரலாபித்தார். பிறகு ஜடாயுவைத் தகனஞ்செய்து சீதையைத் தேடச்சென்றார். வழியில் விகாரரூபியான கபந்தன் என்னும் ஓர் அரக்கனைப்பார்த்தார். மகாபராக்கிரமசாலியான இராமர் அவனை வதஞ் செய்து அவனைத்தகனஞ் செய்தார். கபந்தன் சொர்க்கஞ்சென்றான். சொர்க்கத்திற்குச் செல்லும் கபந்தன்

இராகவனைநோக்கி, "ஏ இராகவ! தர்மமறிந்தவளும் தர்மம் செய்ப வளும் சன்னியாசாசிரமத்தி லிருப்பவளுமான சபரியிடம் செல்" என்று கூறினன். இராமர் அவ்விதமே சபரியிடம் சென்றார். சபரி இராமனை நன்றாகப் பூஜித்தாள். பிறகு பம்பாநதிக் கரையில் அனுமாரோடு சேர்ந்து மகிழ்ச்சியடைந்தார். அவர் மூலமாகச் சுக்ரீவனிடம் சென்றார். மகாபராக்ரமசாலியாகிய இராமர் சுக்ரீவனிடம் தமது விருத்தாந்தத்தையும் சீதையின் விருத்தாந்தத்தை விசேஷமாகவும் கூறினர். அவைகளைக் கேட்டதும் சுக்ரீவன் அக்கினிசாக்ஷியாக இராமரிடம் சிநேகம் செய்து கொண்டான். பிறகு வானர ராஜனான சுக்ரீவன் தனக்கும் வாலிக்குமுள்ள விரோதத்தைக் கூறினன். இராமர் அதைக்கேட்டதும் தாம் வாலியை வதம் செய்வதாக வாக்களித்தார். அப்பொழுது சுக்ரீவன் வாலியின் பராக்ரமத்தை ராமருக்குத் தெரிவித்து, இராமருடைய வீரியத்தில் சந்தேகங்கொண்டான். உடனே அங்குப் பருவதத்திற்குச் சமானமாகவிருந்த துந்துபியின் எலும்புக்கூட்டைக் காண்பித்தான். இராமர் அதைப்பார்த்து அலக்ஷியமாக நினைத்துத் தமது கால் பெருவிரலா லெற்றிவிட்டார். அது பத்து யோசனை தூரத்திற்கப்பால் சிதறி விழுந்தது. பிறகு சுக்ரீவன் ஏழு சாலவிருக்ஷங்களைக் காண்பித்தான். அவைகளனைத்தையும் இராமர் ஒரே பாணத்தால் துளைத்தார். அதைப் பார்த்த சுக்ரீவன் வியப்புற்று இராமருடன் கிஷ்கிந்தைக்குச் சென்று கம்பீரமாகக் கர்ச்சித்தான். அந்தக் கர்ச்சனையைக்கேட்ட வாலி யுத்தத்திற்கு வெளிக்கிளம்பினன். அப்பொழுது தன்னைத் தடுத்த தாரைக்குச் சமாதானஞ் செய்துவிட்டுச் சுக்ரீவனிடம் யுத்தஞ் செய்தான். இராமர் அவனை ஒரே பாணத்தால் அடித்துவிட்டுச் சுக்ரீவனைக் கிஷ்கிந்தாபதியாக்கினர்.

பிறகு சுக்ரீவன் சகல வானரர்களையும் வரவழைத்துச் சீதையைத் தேடும்பொருட்டுத் திக்குகள்தோறும் அனுப்பினன். பிறகு அனுமார் சம்பாதியின் வார்த்தையைக்கேட்டு நூறுயோசனை விஸ்தீரணமுள்ள லவண சமுத்திரத்தைத்தாண்டி இலங்கைசென்றார்.

இராவணனால் பரிபாலிக்கப்படும் அந்த இலங்கையில் அசோகவனத்தில் சோகத்தையடைந்து தியானஞ் செய்துகொண்டிருக்

கும் சீதையைப்பார்த்தார். சீதையினிடம் அடையாளத்தைக் காண்பித்து இராமபிரானுடைய முயற்சியையும் அறிவித்துச் சீதையைச் சமாதானப்படுத்திவிட்டு, கோபுரவாயிலையும் அசோக வனத்தையும் அழித்தார். இதைக்கண்டு யுத்தத்திற்கு வந்த பஞ்சசேனாதிபதிகளையும் ஏழு மந்திரி குமாரர்களையும் வதஞ் செய்து மிகுந்த பராக்ரமமுள்ள அக்ஷயகுமாரனைக் கசக்கிப் பிழிந்தார். இந்திரஜித்தினால் விடப்பட்ட பிர்ம்மாஸ்திரத்தினால் கட்டுண்டார். பிறகு பிர்ம்மாவின் வரமகிமையால் அவ்வஸ்திரத்தினின்றும் விடுபட்டு இராக்கதர்களை நாசஞ்செய்து, சீதையிருக்குமிடந்தவிர இலங்கையில் மற்ற இடங்களை எரித்துவிட்டு நற்செய்திகூற இராமரிடம் வந்தார். இராமரைக் கண்டதும் "கண்டேன் சீதையை" என்றுகூறி அவரை வலம் வந்து வணங்கி மகிழ்ந்தார். பிறகு சுக்ரீவனுடன் இராமர் சமுத்திரக்கரைக்குச் சென்று சூரியனுக்குச் சமமான பாணங்களைப் பிரயோகித்துச் சமுத்திரத்தைக் கலக்கினர். சமுத்திரராஜன் இராமருக்கு முன் தோன்றி நளனைக்கொண்டு தன்மேல் அணைகட்டிச் செல்லும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டான். அவ்விதமே இராமர் அணைகட்டி அவ்வழியாக இலங்கைசென்று அங்கு இராவணனுடன் போர்புரிந்து சீதையை அடைந்தார். சீதை மிகவும் வெட்கத்துடன் அவர்முன் வந்தாள். இராமர் சீதையை உதாசீனம் செய்தமையால், சீதை உடனே அக்னிப்பிரவேசஞ் செய்தாள். பிறகு அக்னிபகவான் வாய்மொழியால் சீதை குற்றமற்றவளென்று கேட்டு இராமர் மனமுவந்து சீதையை ஏற்றுக்கொண்டார். சகல தேவதைகளும் அவரைப் பூஜித்து மலர்மாரி பொழிந்தார்கள்.

* * * *

பிறகு விபீஷணனை இலங்காதிபதியாகச் செய்வித்துத் தம்மை கிருதகிர்த்தியனாக நினைத்து மனக்கவலைபற்றுச் சந்தோஷமடைந்தார். பின்தேவதைகளினுடைய வரப்பிரசாதத்தினால் யுத்தத்தில் மடிந்தவானரர்களை யெழுப்பியழைத்துக்கொண்டு புஷ்பகவிமானத்தி லேறி அயோத்திக்குப் புறப்பட்டார். மார்க்கத்தில் இராமர்

பரத்வாஜாசிரமத்தை யடைந்து அனுமாரைப் பரதனிடம் அனு ப்பினார்.

உடனே சுக்ரீவனுடன் புஷ்பகவிமானத்தின் மீதேறிக்கொண்டு நந்திக்கிராமத்தை யடைந்தார். நந்திக்கிராமத்தில் தமது சகோதரர்களுடன் ஜடாவிசர்ஜனம் செய்தார்.

பிறகு இராமபிரானைச் சீதையுடன் சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து, பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். சகல ஜனங்களும் சந்தோஷத்தையடைந்தார்கள்; தர்மத்தைச்செய்தார்கள்; பிறகு அந்த அயோத்தியாபட்டணத்தில் வியாதி, துர்ப்பிக்ஷம், பயம் இவைகள் கிடையா. தந்தை கண் முன்பு புத்திரனிறப்பதில்லை. விதவைகளேற்படுவதில்லை. காற்றினாலாவது, அக்னியினாலாவது, ஜலத்தினா லாவது, பசியினாலாவது திருடர்களாலாவது ஒருவருக்கும் பயமேகிடையாது. பட்டணங்களும் இராஜ்யங்களும் தனதான்ய சம்பத்துடன் நிறைந்திருந்தன. எல்லோரும் கிருதயுகத்தில் எப்போதும் சந்தோஷித்திருந்ததுபோ லிருந்தார்கள். நூறு அசுவமேதங்கள், பௌண்டரீகம் என்னும் யாகங்கள் இவைகளைச்செய்து பதினாயிரங்கோடி கோக்களைப் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்தார் இராமர். இராஜ பரம்பரைகளை இன்னும் நூறுமடங்கதிகமாக ஏற்படுத்தி இவ்வுலகத்தில் நான்கு வருணத்தார்களையும் அவரவர்களுக்குரிய தருமங்களைச் செய்து வரும்படி ஏற்படுத்துவார். இராமர் பதினோராயிரவருஷம் வரையில் இராஜ்ய பரிபாலனம் செய்து பிரம்மலோகம் சென்றார். பாபத்தைப் போக்கிப் பரிசுத்தத்தைக் கொடுக்கும் வேதங்களுக்கு ஒப்பான இந்த இராம சரித்திரத்தைப் படிப்பவன், சகல பாபங்களிலிருந்து விடுபட்டுப் புத்திர பௌத்திராதிகளுடன் பரலோகஞ்சென்று சொர்க்கத்தில் விளங்குவான். பிராமணன் படிப்பானாகில் வாக் சுத்த முண்டாகும். க்ஷத்திரியன் படிப்பானாகில் இராஜாவாக ஆவான். வைசியன் படிப்பானாகில் லாபம் அடைவான். சூத்திரன் படிப்பானாகில் தன் ஜாதிக்குள் உயர்ந்தவனாவான்.

ஏ விஷ்ணுதாஸ! இவ்விதம் நாரதமகாமுனிவர் வான்மீகி முனிவருக்கு வேதவாக்கியங்களால்கூறிய அர்த்தத்தைக்கிரகித்து

சுலோக ரூபமாக இலகு ராமாயணம் என்னும் பெயருள்ளதாக அவ்வான்மீக முனிவராலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. நூறு சுலோகங்களா லாக்கப்பட்ட இச்சரித்திரத்தை உனக்கு முன்னமேயே கூறியிருக்கின்றேன். அந்த வான்மீகி முனிவர் பிரம்மா கொடுத்த வரத்தால் எல்லாவற்றையும் அறிந்து நூறுகோடி கிரந்தங்களால் வர்ணித்திருக்கிறார். இராம க்ரீடையைச் சுலோக ரூபமாகச் செய்தார்.

இலகு இராமாயணத்தைக் கூறும்

1 - வது சருக்கம்

முற்றிற்று.

2-வது சருக்கம்.

ஸ்ரீ இராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ஒரு சமயம் சபையின் மத்தியில் பட்டணம், தேசம் இவைகளில் வசிப்பவர்கள் இராமரைப் பரமாத்மாவென்றே கருதி அவரிடம் வந்து வணக்கத்துடன் வினவுகிறார்கள்:—

“ஏ மகாராஜனாகிய இராமச்சந்திரப் பிரபுவே! விஷயங்களில் பற்றுதலுள்ள மனமுடையவர்களாகிய எங்களுக்கு நல்ல ஞானமுண்டாகும்படி உபதேசஞ் செய்யவேண்டும்” என்றார்கள்; இவ்வார்த்தையைக் கேட்ட இராமர் புன்னகைகொண்டு “எப்போதும் நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். அதை இராத்திரியில் ஒவ்வொரு யாமத்திலும் என் தூதர்கள் அறிவிக்கின்றார்களே! அஃதிருக்கட்டும்; இப்பொழுது நீங்களெல்லோரும் இன்றிரவு ஞாபகத்துடன் என் தூதர்கள் சொல்லும் வசனத்தைக் கேட்டுப் பிறகு உங்கள் மனதில் தோன்றுவதைத் தெரிவியுங்கள்” என்றார். ஜனங்கள் “அவ்விதமே செய்கிறோ” மென்று கூறி அவரை வணங்கித் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று சயனித்துக்கொண்டிருக்கும்போது தூதர்களின் வாக்யங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம், இரவு பதினொன்றேகால் நாழிகைக்குத் தூதர்கள் தீவட்டிகள் ஆயுதங்கள் தடிகள் இவைகளைத் தரித்துக்கொண்டு வாகனங்களின் மீதேறிக்கொண்டு, யானைகளின் மீது துந்துபி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு, வீதிகளெங்குஞ் சென்று,

“ஏ ஜனங்களே! நீங்களெல்லோரும் மோகத்தால் ஏன் தூங்குகிறீர்கள். இந்தத் தூக்கம் சரியல்ல. எப்போது அனர்த்தம் விளையுமோ தெரியவில்லை. நீங்கள் எல்லோரும் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். எங்கள் சொல்லைக் கேளுங்கள். இந்த அயோத்தியாபட்டணத்திற்கு ஒன்பது வாசல்கள். அவைகளில் ஒன்று இலகுவா யிருக்கின்றது. இந்த இராம ராஜ்யத்தில் பயமில்லை. ஆதலால் அவ்வாசல்களுக்குக் காவலாளிகளில்லை தவிர கதவுகளுக்குத் தாழ்ப்பாளுமில்லை. கறுத்த வர்ணமுள்ள திரு

டன் தென் திக்கிலிருக்கிறான் என்று கேள்வி. அவனை ஒருவரும் பார்த்ததில்லை. அவனுடைய தூதர்கள் ஜனங்களைப்போல் வேடம் பூண்டு இந்நகரத்தின்கண் வந்து உலாவுகிறார்கள். அவனை நாங்கள் பார்த்ததில்லை. வேறு தூதனைக்கண்டால் அந்த நிமிஷத்தில் எங்கும் பேதத்தைச்செய்து கலகஞ்செய்கிறதாகக் கேள்விப்படுகிறோம். இவ்விதம் அநேகதூதர்கள் இங்குச் சஞ்சரிக்கிறார்கள்.

இந்த அயோத்தியாதிபதியாகிய இரகுவீரர் வெகுகாலம் வாழ்ந்திருக்கட்டும். அப்பொழுது நமக்குப் பயமில்லை. இராமபிரானுடைய பலத்தையறிந்தவன் யார்? ஆத்மாராமரும் சச்சிதானந்த சொரூபியும் பிரபுவுமாகிய இராமபிரானை இத்தூதர்களால் என்னசெய்ய முடியும்? பலமற்றவர்களாகிய உங்களுக்கு அந்தத் தூதர்களிடமிருந்து எப்போதும் பயமுண்டு. பலமில்லாதவர்கள் அஜாபுத்திரனை (மாயையாலான ஜீவனை) பலிகொடுத்து வருகிறார்கள். இங்குச் சிங்கத்திற்குப் பலிகொடுத்ததாகத் தெரியவில்லை. ஆகையால் பலம் குறைந்த நீங்கள் இரவில் ஏன் தூங்கிவிடுகிறீர்கள். அந்தத் தூதர்கள் உங்களைத் துன்மார்க்கர்களாக்கி, அந்தத் திருடனை இங்கு வரவழைக்கிறார்கள். அந்தச்சமயம் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஆகையால் தூங்குவது சரியல்ல; தூக்கத்தைவிட்டு இந்நகரத்தில் இரவிலும் பகலிலும் சாவதானமாக விருந்து அருகே எப்போதும் கூர்மையான கத்தியை வைத்திருக்கவேண்டும். சரீரத்தில் கவசங்களை அணியவேண்டும். ஜனங்களே! தைரியத்துடன் பயமில்லாமலிருக்கவேண்டும். இந்த அயோத்தியாபுரியில் எவன் எப்போதும் விழித்துக்கொண்டிருக்கின்றானோ அவனுக்குத் திருடனிடம் எப்போதும் பயமில்லை. எங்களுடைய வாய்மொழிகளை எப்போதும் மறவாதிருங்கள். ஜனங்களே! எப்போதும் சாவதானம்! சாவதானம்!! சாவதானம்!!! அயோத்திபாபுரியிலுள்ள நீங்களெப்போதும் துறையாயிருங்கள்”.

இவ்விதம் அந்த இராஜதூதர்கள் கூறித் துந்துபிவாத்தியங்களையும் இன்னும் மற்றுமுள்ள மனோரம்யமான வாத்தியங்களையும் முழக்கினார்கள். அவர்கள் இரவில், கொஞ்சகாலத்திற்கு ஒருதடவையாக, மூன்றுதடவை இந்த விஷயங்களைக் கூறிக்கொண்டு

பட்டணத்தில் சஞ்சாரம் செய்தார்கள். இவ்விதம் போதனை செய்யப்பட்ட ஜனங்கள் யாவரும் அந்த விஷயங்களின் அர்த்தத்தை விசாரித்து, ஞானத்தை அடைந்தார்கள். பிறகு காலையில் பட்டணத்திலுள்ளவர்கள் தேசத்திலுள்ளவர்கள் எல்லோரும் சந்தோஷத்துடன் சபைக்கு வந்து ஸ்ரீராமரை நமஸ்காரம் செய்து அவர் சந்நிதியில் நின்று, "கமலமலர்போன்ற அழகான கண்களையுடைய ஏ இராம! தம்முடைய தூதர்களின் சொற்களை எப்போதும் நாங்கள் கேட்கின்றோம். ஆனால் அர்த்தங்களை விசாரிக்காமலிருந்தோம். இன்றையதினம் இரவில் தங்களுடைய தூதர்கள் கூறியவைகளைத் தங்கள் உத்தரவின்படி புத்தியைச் செலுத்தி மனதிற்கொண்டு விசாரித்தோம். அஞ்ஞானம் நீங்கிற்று. ஞானம் உண்டாயிற்று. ஏ இராம! இப்போது தாங்கள் உபதேசிக்க வேண்டுமென்பதில்லை" என்று கூறினார்கள்.

இவ்விதம் அவர்கள் கூறியதைக் கேட்ட இராமர் மந்தஹாஸத்துடன் அவர்களைப்பார்த்து, எப்படி உங்களுக்கு ஞானம் உண்டாயிற்று? நீங்கள் காதலால் கேட்ட விஷயங்கள் யாவை? எவ்விதம் ஆலோசனை செய்தீர்கள்? அந்த விவரத்தைக் கிரமமாகவும் விஸ்தாரமாகவும் என்முன்னால் கூறுங்கள் என்று வினவினார். இவ்விதம் ஸ்ரீராமர் கூறியதைக்கேட்டு ஜனங்கள் ஸந்தோஷத்துடன் சொல்லுகிறார்கள்.

மகா பலம்பொருந்திய ஏ இராம! நாங்களடைந்த ஞானத்தைக் கூறுகிறோம் கேளுங்கள்! மோகம் என்பதே இரவு; தூக்கம் என்பது ப்ரமம். இந்த ப்ரமம் என்பது சரியல்ல. அனர்த்தம் என்பது மிருத்யு; இந்த அயோத்தியா பட்டணமே சரீரம். இதன் ஒன்பது வாசல்களே சரீரத்தின் ஒன்பது துவாரங்கள். டம்பம் முதலியவைகள் துவாரங்களைக் காக்கின்றவர்கள். அந்தத் துவாரங்களுக்கு இமைகளும் உதடுகளுமே கதவுகள். பிராணன்களென்ற இராஜதூதர்கள் ஸஞ்சாரம் செய்கின்றவர்கள். ஆத்மாவே ராஜா. ஜீவனும் இந்திரிய தேவதைகளும் தேகமாகிற பட்டணத்தில் வசிக்கும் ஜனங்கள். காலம் என்பது பெரிய திருடன். அத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் முதலான மூன்று

தோஷங்களும் வியாதிகள். இவைகள் காலனுக்குச் சேவகர்களாகிப் பட்டணத்தி லுள்ளவர்களைப் போல் இருக்கின்றார்கள். இவ்விடத்தில் பலமற்ற ஜீவன்களுக்கு அந்த வியாதிகளால் பயமேற்படும். மோகத்தில் விழுந்து ப்ரமத்தை அடைந்தால், அந்தக் காலனுடைய சேவகர்கள் ராஜனாகிய காலனை வரவழைப்பார்கள். மரணமடையும் காலம் எப்போதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை; ஆகையால் ப்ரமத்தை அடைவது சரியல்ல. ஞானமாகிற கத்தி வைராக்கியமாகிற முனையோடு கூடியது. நல்ல ஸ்வபாவம் என்பது கவசம். உம்மிடத்தில் ஸ்திரமான பக்தி செல்லுவதே தைரியம். ஆத்ம சொரூபத்தை அறிந்தவன் விழித்துக்கொண்டிருக்கிறான். இவைகளுள்ளவனுக்கு, எப்போதும் பயமில்லை. ஞானத்தை அடைவதுதான் ஸாவதானம் என்பது. வாத்யகோஷங்கள், அறிவை விளைவிக்கும் சாதுக்களுடைய வசனங்களாகின்றன. அந்த வசனங்களை எப்போதும் மனதில் நிலைநிறுத்தி, புத்தியைக்கொண்டு அறியவேண்டும். தங்கள் சந்நிதியில் வசிப்பதுதான், மோகமொழிந்த விடியற்காலவேளை. நீர்தான் ஆத்மா. இந்த சபைதான் வாசம் செய்யவேண்டிய இடம். உமக்கு முன்னால் நிற்கும் நாங்களெல்லோரும் மோக்ஷபதவிக்கு வந்தவர்கள். இப்போது நாங்கள் தங்களைக் கேட்கவேண்டியது யாது? தாங்கள் உபதேசம் செய்யவேண்டியதுதான் யாது? தங்களுடைய நாமத்தைச் சொன்னமாத்திரத்தில் மானுடர்கள் மோக்ஷத்தை அடைகின்றார்கள்; உங்கள் சமீபத்திலுள்ள நாங்களெல்லோரும் முக்தர்கள்தான்; ஐயமில்லை.

இவ்விதம் கூறியதைக் கேட்டு பிரபுவாகிய ஸ்ரீராமர் புன்னகையுடன், அவர்களைப் பார்த்துக் கூறுகிறார்

"ஹே ஜனங்களே! நீங்கள் புத்தியைச் செலுத்தி நன்றாக அறிந்துகொண்டீர்கள். எப்போதும் சுகத்திலேயே இருக்கவேண்டும். உங்களைத்தவிர இராமர் வேறாக இருக்கின்றார் என்று உங்கள் மனதில் எண்ணவேண்டாம்" என்று கூறிச் சந்தோஷத்துடன் ஸீதையின் அரண்மனைக்குச் சென்றார். இராமரிடம் உத்தரவுபெற்ற பட்டணத்திலுள்ள சகல ஜனங்களும் சந்தேகம் தெளிந்து ஒவ்வொருவரும் தங்களையே பரமாத்மாவாக நினைத்தார்கள்.

ஏ விஷ்ணுதாஸ! இவ்விதம் ஸ்ரீராமருடைய தூதர்களின் வசனங்களால் அறிவுபெற்ற பட்டணத்திலுள்ள ஜனங்களின் மகிமையை நான் உனக்குத் தெரிவித்தேன்.

ஒருசமயம் கைகேயி ஸ்ரீராமரிடம் வந்து நமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் முன்னால் நின்று, இனிமையாக ஓர் வசனம் கூறுகிறாள்.

தாமரை மலரிதழ்போன்ற கண்ணழகுள்ள ஏ இராம! நான் முந்தி அறியாமையால் என்ன அபராதம் செய்தேனோ அவைகளைத் தயையுள்ள நீ மன்னிக்கவேண்டும். நான் உன்னைச் சரணமாக அடைந்தேன். உலகங்களுக்குப் பதியாகிய ஏ இராம! நீயே என்னைக் கரையேற்றவேண்டும். அஞ்ஞானம் எவ்விதம் விலகுமோ, அவ்விதம் உபதேசம் செய்யவேண்டும் என்று வேண்டினாள். இராமர் கைகேயி கூறியதைக் கேட்டு புன்னகை கொண்டு கூறுகிறார். "ஏ கைகேயி! முந்தி நீ எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை; என் அபிப்ராயத்தை அநுசரித்து ஸரஸ்வதியானவள் உன் முகத்திலிருந்து வரம் யாசித்தது முதலியவைகளைக் கேட்டாள். கைகேயி! நீ சுத்தமடைவாய்; உன்னிடம் எனக்குக் கோபம் இல்லை. இலட்சுமணன் நாளைபதினம் உன்னை அழைத்து உபதேசம் செய்வான்" என்று கூறி, கைகேயியை அனுப்பிவிட்டு உடனே இலட்சுமணனை அழைத்துக் கூறுகிறார். "இலக்ஷ்மண! என் சொற்படி நாளைபதினம் காலையில் கைகேயியைப் பல்லக்கில் ஏற்றிப் பட்டணத்துக்கு வெளியில் சரயூநதிக்கரையில் ஆட்டுக்கூட்டங்கள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்று பல்லக்கிலிருக்கும் கைகேயியை ஓர் முகூர்த்தம் வரையில் அவ்வாடுகள் கூறும் வாக்கியங்களைக் கேட்கும்படி செய்து பிறகு என் சமீபத்திற்கு அழைத்துவர வேண்டும் என்று ஆக்ஞை செய்தார். இவ்விதம் இராமர் கூறிய வசனத்தைக் கேட்டு, இலட்சுமணர், "அவ்விதமே செய்கிறேன்" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

பிறகு இலட்சுமணர் காலையில் பரதன் கிருகஞ் சென்று, சந்தோஷத்துடனிருக்கும் கைகேயியைப் பல்லக்கி லேற்றிக்கொண்டு

தாஸிகள், பிரம்பைக் கையில்பிடித்த சேவகர்கள் இவர்கள் சூழப் பட்டணத்திற்கு வெளியேவந்து சரயூநதிக் கரைக்குச் சென்று ஆட்டுக் கூட்டங்களுக்கு மத்தியில் பல்லக்கை நிறுத்தி அங்குக் கைகேயியைப் பல்லக்கினின்றும் இறக்கினர். அப்போது பிராம் மணர்களும் மூடவர்களும் கைகேயி ஸ்நானம் செய்ய வந்திருக்கிறா ளென்றெண்ணி, தக்ஷிணையில் ஆசைகொண்டு பல்லக்கிற் கருகே வந்தார்கள். அவர்கள் வருவதைப்பார்த்த இலட்சுமணர், "இந்த பிராமணர்களும், இந்த மூடவர்களும் வெகு மூர்க்கர்கள், வித்வான் களுமல்ல, சுரோத்திரியர்களுமல்ல, தானத்திற்குத் தகுதியில்லாத வர்கள்" என்று கூறித்தடுத்தார். பிறகு தூதர்களை விலகிப்போகும் படி ஆக்ஞைசெய்து தமது கைகளில் முத்துக்களை யெடுத்து உய ரத்தில் இறைத்துக் கைகேயியைப்பார்த்துக் கூறுகிறார். "அம்மா! நீங்கள் உங்கள் முன்னால் இருக்கும் ஆட்டுக்கூட்டத்தைப் பாருங் கள்; ஸ்ரீராமர் தங்களை இங்கு அனுப்பியது உபதேசம் பெறும் பொருட்டல்லவா?" என்றார். இலட்சுமணர் இவ்விதங்கூறியதும் கை கேயி ஆச்சரியமடைந்து, "ஸ்ரீராமர் என்னைவிரைவாக இங்கு எத ற்காக அனுப்பினார்; நான் மறந்து போனேன்" என்று நினைத்து ஓர் க்ஷணம் பேசாம லிருந்தாள். அப்பொழுது ஆடுகள் கூவும் மே! மே! என்ற சப்தத்தைக்கேட்டாள். அந்தசப்தங்களைக் கேட்டு எதற்காக இந்த ஆடுகள் மே மே என்று கூறுகின்றன. இதில் ஏதோ இரகசியமிருக்கின்றது என்று கொஞ்சகாலம் மனதில் யோசனை செய்தாள். பிறகு மறுபடியும் கண்களை மூடி மனதில் ஓர் க்ஷணகாலம் வரையில் ஆலோசனை செய்து சகல விஷயங்களையும் அறிந்து அஞ்ஞானம் நீங்கி, மிகுந்த ஸந் தோஷமடைந்து புன்னகையுடன், முன்னால் நிற்கும் இலட்சு மணரை நோக்கி, "குழந்தாய்! நான் ஞானத்தை யடைந்தேன்; ஸ்ரீராமரிடம் என்னை அழைத்துக்கொண்டு போகலாம்" என்று கூறினாள். உடனே இலட்சுமணர் கைகேயியைப் பல்லக்கிலேற்றிக் கொண்டு வெகு தூரத்தில் நிற்கும் தூதர்களை அழைத்து அவர் கள் சூழ விரைவாக அரண்மனைக்கு வந்தார். பிறகு கைகேயி ஸீதையின் அரண்மனை சென்று, தமது கையினால் அழகான தலைப்பாகையை எடுத்துத் தமது சிரசில் தரித்துக்கொண்டும்,

ஷீதையினால் காண்பிக்கப்பட்ட கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற ஸ்ரீராமரைப்பார்த்து நமஸ்கரித்து மிகுந்த பக்தியுடன் கூறுகிறாள்

"ஏ இராம! உன்கிருபையினால் ஆடுகளின் சப்தத்தைக்கேட்டு ஆராய்ந்து பார்த்தேன். அப்பொழுது நல்லஞானம்உண்டாயிற்று. மோகம் நீங்கிற்று. இனி உனது உபதேசத்தை நான் அபேக்ஷிக்கவில்லை. இராகவா! நான் இப்போது முக்தையானேன்" என்றாள். இவ்விதம் கூறிய கைகேயியின் வசனத்தைக் கேட்ட பிரபுவாகிய ஸ்ரீராமர் புன்னகைகொண்டு, "ஏ கைகேயி! எவ்விதம் நீ அறிந்தாய்; எவ்விதம் மனதில் விசாரித்தாய்; அந்த விஷயங்கள்எல்லாவற்றையும் விஸ்தாரமாக எனக்குச் சொல்," என்றார். கைகேயி, "ஏ இராம! நான் ஞானத்தை யடைந்த விவரத்தைக் கூறுகின்றேன் கேள். ஆட்டுக்கூட்டத்தில் சென்று அந்த ஆடுகளின் மே! மே! என்ற சொற்களைக்கேட்டேன். அப்பொழுது ஓர் க்ஷணம் மனதில் ஆலோசித்தேன். மே! மே! என்ற சப்தங்களை அந்த ஆடுகள் எனக்காகவே கூறின. உலகத்தில் எல்லோரும் பசுக்கள், புத்திரர்கள், கிருகங்கள், முதலியவைகளை என்னுடையது என்னுடையது என்று சொல்கின்றார்கள்; அப்படிச்சொல்லுவதை இந்த ஆடுகள் நிஷேதம் செய்தன. ஆகையினால் இனி எதையும் என்னுடையது என்று சொல்லமாட்டேன். என்தாய், என்பிள்ளை, என்வீடு, என் இராஜ்யம், என் சக்களத்தி, என் சக்களத்தியின், பிள்ளை என் அழகுள்ள சரீரம், என் சிலாக்கியமான ஆபரணம், எனக்குப் பிரீதியுள்ள வேலைக்காரியாகிய கூனி, என் குமாரன் என்பது முதலான கெட்ட எண்ணங்கள் இருந்தனவல்லவா? அவைகளை விட்டுவிடவேண்டுமென்று அந்த ஆடுகள் தங்கள் வசனங்களால், எனக்கு அறிவை உண்டாக்கின. ஏ இராம! அந்தப் பெண் ஆடுகள் அனேக மனிதர்களைக் குறித்துக் கூறியவைகளைக்கேள்? " நாங்கள் முன் ஜன்மத்தில் எனது எனது என்று சொல்லிக்கொண்டிருந்தோம் அதனால் இந்த ஜன்மத்தில் ஆடுகளாகப் பிறந்தோம். ஏ ஜனங்களே! எப்போதும் எனது எனது என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள்! விடாமற் போனால் நீங்கள்

எனது நிலைமையை யடைவீர்கள்'' என்றே இவைகளை எப்போதும் ஜனங்களுக்குத் தெரியப்படுத்துகின்றன. அந்தச் சப்தத்தை ஜனங்கள் புத்தியினால் ஊகிப்பதில்லை. அவைகளின் வாக்கியங்களாலும் உன்னுடைய அநுக்கிரகத்தினாலும் மே! மே! எனது எனது என்ற புத்தியானது என்னைவிட்டு விலகிற்று. ஆகையினால், நான் இப்போது முக்தையானேன்? நான் என்னுடைய தேகம் என்று எண்ணியிருந்ததைத் தொலைத்தேன். ஸம்ஸாரதுக்கத்தைக்கொடுக்கும் இந்தத் தேகத்தில் என்ன இருக்கின்றது?இந்தத் தேகம் இருக்கட்டும் அல்லது நாசத்தை அடையட்டும். இது எப்போதும் தண்ணீரில் காணப்படும் அலைகள்போல நசிக்கத்தக்கது. யாருக்கு யார் பிள்ளை? யாருக்கு யார் தாய்? எல்லாம் பிர்ம்மசொரூபந்தான். நான்தான் பரபிர்ம்மம். என்னைத்தவிர வேறு பிர்ம்மம் இல்லை. இப்போது காணப்படும் இந்தப் பிரபஞ்சம் முதலியவைகளெல்லாம் உன்னுடைய மாயாகாரியம். இவைகளெல்லாம் நசிக்கக்கூடியன. நீர்க்குமிழிக்கு நிகரானவைகள் என்று கூறினாள். இந்த வசனத்தைக்கேட்டு இராமர் புன்னகைகொண்டு, "கைகேயி! நீ நன்றாக உன் புத்தியைச் செலுத்தி விசாரித் திருக்கின்றாய். உன்னிருப்பிடம் செல்லலாம். சுகமாக இருக்கலாம். நீ ஜீவன் முக்தையாய் விட்டாய்" என்றார்.

இதைக்கேட்ட கைகேயி ஸந்தோஷத்துடன் தேகத்தில் அபிமானத்தைவிட்டு சீதையையும் இராமரையும் நமஸ்காரம் செய்து, பரதனுடைய அரண்மனை சென்று, எந்த வஸ்துக்களிலும் பற்றுதலில்லாமலிருந்தாள்.

சேடனே! ஆடுகளின் உபதேசத்தினால், கைகேயிக்கு ஞானம் உண்டான விஷயத்தைப்பற்றி நான் உனக்குக்கூறினேன். இப்போது ஸந்தோஷப்படக்கூடிய வேறு விஷயம் சொல்லுகிறேன் கேள்.—

ஒரு சமயம் சுமித்திரை சீதையுடன் தனியாக இருக்கும் ஸ்ரீராமரை நமஸ்காரம் செய்து கூறுகிறாள்.

"தாமரைபுஷ்பம்போன்ற கண்களுள்ள ஏ இராம! நான் இப்போது ஒரு விஷயம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கு ஏதா

வது உபதேசம் செய்யவேண்டும்," என்றாள். இந்த வசனத்தைக் கேட்ட இரகு வீரர், அந்தச் சுமித்திரையை நோக்கி, "ஏ சுமித்திரே! நீ யார்? முதலாவது அந்த விஷயத்தைச் சொல்லு. பிறகு உனக்கு உபதேசிக்கிறேன் அரண்மனை சென்று மனதில் ஸ்திரமான புத்தியுடனிருந்து விசாரித்து நாளையதினம் என்னிடம் வந்து என் கேள்விக்கு மறுமொழிகூறு. அம்மா! பிறகு நான், நீ ஸந்தோஷிக்கும்படியாக உபதேசம் செய்கின்றேன்," என்று கூறினார்.

சுமித்திரை அந்த இராமர் வாக்கியத்தைக்கேட்டு ஆச்சரியமடைந்து முகமலர்ச்சியுடன் வேறு பேசாமல், அரண்மனை சென்று, ஸ்ரீராமர் சொன்னதைப்பற்றி ஆலோசனை செய்தாள். "நான் யார்." என்று ஸ்ரீ ராமரால் கேட்கப்பட்டேனே! ஸ்ரீ ராமருக்கு நான் என்ன பதில் சொல்லுவது. நான் தேவஸ்திரீயா? தனுவம்சத்தில் பிறந்த அசுரஸ்திரீயா? இராக்ஷஸ ஸ்திரீயா? நான் மானுட ஸ்திரீயா?" என்றெண்ணி மறுபடியும் ஸ்ரீராமரிடம் பதில் சொல்வோமென்றால், நடனைப்போல் நான் அனேக சரீரங்களை எடுத்திருக்கின்றேனே வேறு சரீரங்களை அடைந்த முன் ஜன்மங்களில் இப்போது அடைந்திருக்கும் மானுடத்தன்மை எவ்விதம் ஏற்பட்டிருக்கும்? ஆகையால், நான் மானுட ஸ்திரீயுமல்ல; வேறு ஜாதி ஸ்திரீயுமல்ல; மானுடஸ்திரீ இராக்ஷஸ ஸ்திரீ என்ற பெயர்கள் தேகத்திற்கு ஏற்பட்டவைகள். தேகமோ அழிவுள்ளது என்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. தேகத்தைக் காட்டிலும் நான் வேறாக இருப்பவள். நான் அனேக தேகங்களை அப்போதைக்கப்போது அடைகின்றேன். இவ்விதமிருக்கும் நான் இன்னாரென்று எனக்குத்தெரியவில்லை. இப்போது நான் அறிந்தேன். மகாவிஷ்ணு எப்படியோ அப்படியே நானும்; அந்த விஷ்ணுவும் மத்ஸியம் (மீன்) முதலிய அநேக ரூபங்களை அடைகிறார். அதுபோல் நானும் அநேக சொரூபங்களை அடைகின்றேன். இவ்விதந்தான் சொல்லவேண்டியது. ஆனால் விஷ்ணுவுக்கும் எனக்கும் தாரதம்யமாவது, மகாவிஷ்ணு சுவதந்திரர்; நான் அவருக்குச் சுவாதீனை, ஆகையால் நான் விஷ்ணுவின் அம்சம்

தான் சந்தேகமில்லை. விஷ்ணுவுக்கும் எனக்கும் பேதமே இல்லை. கங்காஜலம் பூமியில் ஓடினாலும் குடத்திலெடுக்கப்பட்டாலும் எப்படி கங்கை நீரன்றி வேறல்லவோ, அப்படியே நான் விஷ்ணுவைச் சேர்ந்தவள் தான். நான் விஷ்ணுவாகவே இருந்தால், ஸ்ரீராமரிடம் உபதேசம் பெற்றுக்கொள்வது யாது? நான் ஜீவன் முக்தையே." என்று இவ்விதம் ஆலோசனை செய்து அஞ்ஞானம் நீங்கி ஸந்தோஷமடைந்து அன்றிரவுகழிந்ததும் காலையில் ஸ்ரீராமரிடம் வந்து, அவரை நமஸ்கரித்து இராம! நீ யார் என்று என்னைக்கேட்டாயே, அதைப்பற்றி இராத்திரியில் ஆலோசித்தேன்; பரபிரம்மம் தான். நான் உன்னிடம் வேறு கேட்கவேண்டியது ஒன்றுமில்லை. எப்போதும் நான் உனக்கு வேறாக இருப்பவளல்ல என்று இவ்விதம் சொல்லி அரண்மனையில் இராத்திரியில் தன்மனதில் எந்த விஷயம் ஆலோசிக்கப்பட்டதோ அவைகளையும் ஸ்ரீராமரிடம் கூறி, அது முதல் ஜீவன் முக்தையானாள்.

ஸ்ரீராகவரும் "சுமித்திரே! நன்றாகத் தெரிந்துகொண்டாய். அம்மா நீ ஜீவன் முக்தையாய்விட்டாய். அரண்மனை சென்று சுகமாக இரு" என்று கூறினார்.

பிறகு ஸந்தோஷத்துடன் கூடின ஸுமித்திரை மோகம் நீங்கியவளாகி, ஸ்ரீராகவரையும் சீதையையும் தனித்தனியாக நமஸ்காரம் செய்துவிட்டு இலட்சுமணர் அரண்மனைக்குச் சென்றாள். சீடனே! இவ்விதம் சுமித்திரை—"நான் யார்" என்று விசாரித்ததினால் ஜீவன் முக்தையாகி பிரம்மானந்த மடைந்தாள் என்பதை நான் உனக்குக் கூறினேன். பிராம்மண சிரேஷ்டனாகிய "ஏ விஷ்ணுதாஸ! மற்றொரு வரலாற்றைக் கூறுகிறேன்," அதைக்கேள்.

ஒரு சமயம் தாயாகிய கௌஸலியை, ஆச்சரியப்படக் கூடிய சபையில் ஆசனத்தில் சீதையுடன் வீற்றிருக்கும் ஸ்ரீராமச்சந்திரரைப் பரம்பொருளாகிய மஹாவிஷ்ணுவென்று தெரிந்து நமஸ்கரித்து வினவுகிறாள். "மகா பலம் பொருந்திய ஏ இராம! எதனால் உன் விஷயமாகிய நல்ல அறிவு மிகுதியாகவும்

நன்மையுள்ளதாகவும் ஏற்படுமோ அவ்விதம் ஓர் உபதேசம் செய்யவேண்டும்" என்றாள்.

ஸ்ரீராமன் அந்தத்தாயின் மொழியைக்கேட்டு புன்னகைகொண்டு "அம்மா! நாளையதினம் காலையில் எழுந்திருந்து பசுமாடுகள் கட்டியிருக்கும் இடஞ் சென்று, கொஞ்சகாலம் வரையில் பசுவின் கன்றுகளின் வசனங்களைக்கேட்டு, அந்த வசனங்களை மனதில் நன்றாக விசாரித்துப்பிறகு என் அருகில்வா; பிறகு நான் உனக்கு உபதேசம் செய்கின்றேன்; சந்தேகம் இல்லை,"என்றுகூறினார். அப்பொழுது கௌஸலியை ஆச்சரியத்துடன், அந்த இராமர் வசனத்தைக்கேட்டு ஸீதையுடன் கூடின இராமனை நமஸ்காரம் செய்துவிட்டுத் தன் அரண்மனை சென்றாள்.

பிறகு அந்தக் கௌஸலியை மறுநாள் அருணோதயகாலத்தில் கோசாலைசென்று ஓர் க்ஷணகாலம் நின்று அகம்மா (ஸஹம்ஹோ) என்று கூவும் பசுவின் கன்றுகளினுடைய வசனங்களை அடிக்கடி கேட்டு மிகுந்த பக்தியுடன் மனதில் விசாரிக்கலானாள். இந்தக் கன்றுகள் அகம்மா என்று ஏன் அடிக்கடி கூறுகின்றன. இந்தக் கன்றுகள் இந்த வசனங்களைக்கூறி எனக்கு எந்த விஷயத்தை அறிவிக்கின்றன என்று வினவி, மனதிலேயே நன்றாக ஆலோசனை செய்து அஞ்ஞானம் நீங்கினாள். பிறகு மறுநாள் சந்தோஷத்துடன் ஸ்ரீராமரிடம் வந்து, நமஸ்கரித்து, ஏ இராம! விஷ்ணுவே! ஏ இலக்ஷ்மீநாத! கன்றுகளின் வசனங்களை நான் சோதித்து அஞ்ஞானம் நீங்கினேன். இதைத்தவிர உன்னிடத்தில் வேறு உபதேசத்தை விரும்பவில்லை. ஞானத்தை அடைந்து, உன்னைத் தவிர நான் வேறாக ஏற்பட்டவளல்ல என்று கூறினாள். தாயாகிய கௌஸலியையின் வாக்கியத்தைக்கேட்டு இரகுவீரர், "ஏ அம்மா! கன்றுகள் வசனங்களால் உனக்கு எவ்வித ஞானம் உண்டாயிற்று? அதைச்சொல்ல வேண்டு" மென்றார்.

கௌஸலியை கூறுகிறாள்.—"ஏ இரகுசிரேஷ்ட! அகம்மா என்ற சப்தங்களைக் கன்றுகள் கூவக்கேட்டு, இந்தச் சப்தங்கள் எனக்கு எந்த விஷயத்தைக் கூறுகின்றன என்று மனதில் கொஞ்ச

காலம் யோசித்தேன். அந்த வசனத்திற்கு அர்த்தத்தையும் தெரிந்து கொண்டேன். ஏ ஜனங்களே! அகம்மா (அஹம்நா) நான் இல்லை என்று சொல்லுங்கள் என்று கன்றுகள் தெரிவிக்கின்றன. அந்த விஷயத்தை ஜனங்கள் அறியவில்லை அகம் என்ற சப்தமானது தேகத்தைக்குறிக்கின்றது. அதை நான் விட்டபடியால் "நான் தேகமுள்ளவள் நான் தாய்" என்ற புத்தியானது விலகிற்று. தேகத்தில் நானென்னும் புத்தியானது நீங்கினபோது பிறகு வேண்டுவது என்ன? சுகமும் துக்கமும் தேகத்திற்கேயொழிய எனக்கு ஒன்றும் சம்பந்தமில்லை. ஏ பிரபுவே; இந்தத் தேகமானது சுகதுக்கங்களை அநுபவிப்பதற்கு ஏற்பட்டது. நான் உம்முடைய அம்சம்தான்; இப்போது உபாதிபேதத்தினால் வேறாகக்காணப்படுகின்றேன். சூரியன் எப்படி கடத்தில் தனிமையாக உபாதியினால் காணப்படுகிறானோ அப்படியே நானும் காணப்படுகிறேன். எப்போதும் உம்மைத்தவிர நான் வேறல்ல நான் பிர்ம்மசொரூபமாகவே ஆகின்றேன் என்றாள். இராமர் இவ்வசனத்தைக்கேட்டு, புன்னகைகொண்டவராகி "அம்மா! நீ முக்தையாய் விட்டாய்; சந்தேகம் இல்லை; நீ கன்றுகள் சொற்களை நன்றாக மனதில் விசாரித்திருக்கிறாய்; அரண்மனைசென்று நீ சுகமாக இரு; இந்தப் புத்தியைத் திடமாகச் செய்துகொள். நானுங்களுக்கு என் வாக்கினால் உபதேசம் செய்யாமல்இருந்ததற்குக்காரணம் கூறுகிறேன். உபதேசம் செய்கிறவன் குருவாகின்றான். நான் உங்கள் மூவருக்கும் குமாரன். ஏ அம்மா! நான் எப்படி உங்களுக்கு உபதேசம் செய்வேன். ஸ்திரீகளுக்கு கணவன் குருவாகிறான். எப்போதும் கணவனைத்தவிர வேறு கதியில்லை. ஆகையினால் நான் உங்களுக்கு உபதேசம் செய்யவில்லை. பட்டணத்திலுள்ளவர்களுக்கு என் தகப்பனாகிய தசரதமகாராஜாவும் அவரவர்கள் புரோகிதரும் குருவாக ஆகின்றார்கள். ஆகையினால் பட்டணத்தில் உள்ளவர்களுக்கு தூதர்களைக்கொண்டு உபதேசம் செய்வித்தேன். அதனால் தான் உங்கள் மூவருக்கும் வேறுவிதமாக உபதேசம் செய்வித்தேன். அரண்மனை சென்று சந்தோஷத்துடன் என்னைத்தியானம் செய்யுங்கள் என்று கூறினார்.

இவ்விதம் இராமருடைய வசனத்தைக்கேட்டு கௌஸல்லி யை மனமகிழ்ச்சியடைந்து, ஸ்ரீராமரை நமஸ்காரம் செய்து விட்டுச் சுகமாக இருந்தாள். இவ்விதம் இராமச்சந்திரனால் அறிவை யடைந்த நல்லகுணங்களுடைய கௌஸல்லியைமுதலிய தாய்மார்கள் தங்கள் தங்கள் ஆயுள்முடிவுகாலத்தில் தேகங்களைச் சுகமாக விட்டார்கள். அவர்கள் ஸ்ரீராமருடைய சந்நிதானமகிமையால் சிலாக்கியமான விமானத்தின் மீதேறி ஸ்ரீராமரால் பூஜிக்கப்பட்டு வைகுண்டத்தை அடைந்தார்கள். ஸ்ரீராமர் முதலிய நால்வர் கைகளினால் பரலோககாரியத்தைச் செய்யப்பெற்ற கௌஸல்லியை முதலிய ஸ்திரீகளின் பாக்கியமே பெரிதானபாக்கியம்.

ஏ சீடனே! நான்! உனக்கு கௌஸல்லியை முதலானவர்கள் உபதேசமடைந்ததையும் அவர்கள் பரலோகம் சென்றதையும் கூறினேன்.

கௌஸல்யை முதலியவர்கள் வைகுண்டம்
சென்ற கதையைக் கூறும்

2 - வது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஆசாரியரே! ஸ்ரீராமனை உபாசிக்கும் டாநுடர்கள் ஸ்ரீராம ருடைய மானஸிக பூஜையை எப்படிச் செய்வது? பாஹ்ய பூஜையை எப்படிச் செய்வது? ஸ்ரீராகவருடைய உபாசனையை குருவிடமிருந்து எவ்விதம் கிரகித்துக்கொள்வது? ஸ்ரீராமருடைய உபாசனைகளுக்குள் எவ்விதமான உபாசனை உயர்ந்தது? குரு வாக ஏற்படுத்திக்கொள்ளக் கூடியவர்களுக்குள் எந்த லக்ஷணங் கள் அமைந்தவர் உயர்ந்தவர்? பக்தர்களுக்குக் காரியசித்தியைக் கொடுக்கும் மந்திரங்கள் எவைகள்? அந்த இராமருக்கு ஸந்தோ ஷத்தைக் கொடுக்கும் திதி எது? இன்னும் இராமருக்குப் பிரீதி யை விருத்திசெய்பவைகள் எவைகள்? எந்தத் தேவன் சிரேஷ் டன்? யாருடைய உபாசனையை அடையலாம். இவைகள் யாவற் றையும் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

ஸ்ரீ இராமதாஸர் கூறுகிறார்.

சிடனே! நீ நன்றாக வினவினாய்! சாவதானமான மனதுடன் கேள். எல்லாவற்றையும் இப்போது விஸ்தாரமாகவே உனக் குக் கூறுகிறேன். ஏ பிராம்மண சிரேஷ்ட! முதலாவது இல க்ஷணங்களைப்பார்த்து பரீக்ஷித்து அந்தக் குருவிடமிருந்து பரிசுத் தமான ஸ்தலத்தில் விதிப்படி உபதேசத்தைப் பெறவேண்டும்.

குருவின் லக்ஷணங்களை முதலாவது நான். உனக்குக் கூறு கிறேன்.

கோபமுள்ளவன், குஷ்டரோகமுள்ளவன், மகாரோக முள்ள வன், அழுக்கடைந்தவன், தயவில்லாதவன், மூடன், ஞானமில் லாதவன், நிந்திக்கிறவன், ஆசையுள்ளவன், விஷயங்களில் கட் டுப்பட்டவன், டம்பமுள்ளவன், கருவமுள்ளவன், பாபபுத்தியுள்ள வன், தோஷமுள்ள வம்சத்தில் பிறந்தவன், இம்சிக்கிறவன், பிற னுக்குத் துரோகஞ்செய்கிறவன், பிறருடைய பணத்தை அபகரிக்கி றவன், மனதை அடக்காதவன், வேதத்தை விட்டவன், பரஸ்திரீ

களிடம் பற்றுதலுள்ளவன், பிறருக்குத் தோஷத்தை ஏற்பாடு செய்கிறவன், கிருபணன், இந்திரியங்களை ஜயிக்காதவன், வேதம் தேவர்கள் பிராம்மணர்கள் சன்னியாசிகள் புண்ய தீர்த்தங்கள் கோக்கள், துளஸி, அக்னி, சூரியன் இவர்களைத் தூஷிக்கிறவன் ஆகிய இவர்களைக் குருவாக வரிக்கக்கூடாது.

சகல தருமங்களை அறிந்தவர், சாஸ்திரங்களை அறிந்தவர், ஸத்யஸந்தர், சொற்பமான ஆகாரம் கொள்பவர், அறிவுள்ளவர், வித்தையை நன்றாகக் கற்றவர், நல்ல கருமங்களைச் செய்பவர், தருமங்களை உபதேசம் செய்பவர், நல்ல புத்தியை உபதேசிப்பவர், யோகங்களில் மனதைச் செலுத்தினவர், உபாயங்களை யறிந்தவர், எல்லாரையும் சமமாகப் பார்ப்பவர், கருமங்கள் செய்தவர், புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர், தருமம் அதருமம் இவைகளைப் பகுத்தறியும் தன்மையுள்ளவர், (பிரம்மசாரியானாலும் கிருகஸ்தனானாலும், வானப்பிரஸ்தாசிரமம் உள்ளவனானாலும், ஸன்னியாஸியானாலும்) தங்களாசிரமத்துக்கு ஏற்பட்டவிதிப்படி அநுஷ்டானம் செய்கிறவர், புத்தியுள்ளவர், இந்திரியங்களை ஜயித்தவர், பொறுமையுள்ளவர், கிருபையுள்ளவர், மெதுவாகப் பேசுகிறவர், நல்ல முகம் உள்ளவர், கோபமில்லாத பார்வையுள்ளவர், தூக்கமில்லாதவர், முயற்சியுள்ளவர், அடங்கின மனமுள்ளவர், பிறருக்குச் சந்தோஷத்தைச் செய்பவர், கொடுக்குந் தன்மையுள்ளவர், ஞானமுள்ளவர், பரிசுத்தமுள்ளவர், கெட்ட பிரதிக்கிரகத்தை விட்டவர், இன்னும் அநேக நல்ல குணங்களுடையவர் ஆகிய இவரைப் பரமகுருவாக வரிக்கவேண்டும். அந்தக் குருவுக்கு வெகுநாள் பணிவிடை செய்து அவரைச் சந்தோஷப்படுத்தி அனுக்கிரகம் பெறவேண்டும். அந்தக் குருவிடமிருந்து நல்ல பிரதேசத்தில் விதிப்படி, உபாசனையைக் கிரகிக்கவேண்டும்.

உபாசனைகள் ஸாத்விகம் இராஜஸம் தாமஸம் என்று மூன்று விதம் உண்டு. இவைகளில் தாமஸமாகிய உபாஸனையைச் சிலாக்கியமல்லவென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அந்தத் தாமஸ உபாஸனையைச் செய்பவர்கள், பூதம் பேதாளம் பிசாசு இவர்களைப் பூஜிப்பவர்களாக ஆகின்றார்கள். தேவர்களைப் பூஜிப்பது ஸாத்விக

உபாஸனை. யக்ஷர்கள், இராக்ஷஸர்கள் இவர்களைப் பூஜிப்பது இராஜஸ உபாஸனை. சிவன் சூரியன் கணேசன் சக்தி விஷ்ணு இவர்களுடைய அவதாரங்கள் கணக்கற்று மிகுதியாக பூமியில் இருக்கின்றன.

பிராம்மணர்கள் முதலானவர்கள் அந்த அவதாரமூர்த்திகளை உபாஸிக்கும் மார்க்கத்தைக் குருமுகமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த ஐந்துதேவதைகளின் அவதாரங்களில் பெருமை பொருந்தியவைகளான விஷ்ணுவின் நாற்பத்தைந்து அவதாரங்களைக் கூறுகிறேன். புருஷோத்தமர், பிரம்மா, ருத்திரன், நாராயணர், ஹம்ஸர், தத்தாத்திரேயர், குமாரர், ரிஷபர், ஹயக்ரீவர், மத்ஸியர், வராகர், நாரஸிம்மர், வாமனர், பரசுராமர், ஸ்ரீராமர், கிருஷ்ணர், பௌத்தர், கல்கி, யக்ஞர், ஹவிசு, (என்பவர்) வாலகில்லியர், உத்தாரகர், பிருது. தன்வந்திரி, மோஹினி, நாரதர், வியாஸர், கபிலர், கேசவர், மாதவர், கோவிந்தர், திரிவிக்ரமர், சிரீதரர், பத்மநாபர், தாமோதரர், ஸங்கர்ஷணர், பிரத்துயுமனர், அனிருத்தர், அதோக்ஷஜர், அச்சுதர், ஜனார்த்தனர், உபேந்திரர், ஹிருஷீகேசர் ஆகிய இந்த அவதாரமூர்த்திகளை உயர்ந்தவைகளென்று தெரிந்துகொள்ளவேண்டும். இந்த நாற்பத்தைந்து அவதாரங்களுக்குள் மத்ஸியாவதாரம் முதலிய பத்து அவதாரங்கள் உயர்ந்தவைகள். இந்தப் பத்து அவதாரங்களுக்குள் இராமர், கிருஷ்ணர் இந்த இரண்டு அவதாரங்களும் மிகச்சிரேஷ்ட மானவைகள்.

ஸ்ரீராமர் ஸத்யத்தைப் பிரதிக்ஞையாகக் கொண்டவர். இரகுகுலவம்சத்தரசர்களுக்குள் உயர்ந்தவர். ஏகபத்தினியை உடைய விரதமுள்ளவர். ஏக பாணமுள்ளவர். அரசர்களுக்குள் சிரேஷ்டர். ஏழுதீவுகளுக்கும் அரசர். இலக்ஷ்மியோடு கூடினவர். கொடை சாமரம் இவைகளுள்ளவர். இவ்விதம் தெரிந்து குரு உபதேசித்தபடி, நல்ல வேளையில் நல்ல ஸ்தலத்தில், ஸ்ரீராமருடைய உபாஸனையை அடையவேண்டும்.

இவ்விதம் உபாஸனையைப் பெற்றுக்கொள்ள வேண்டியது. அல்லது அந்தந்தத் தேவதைகள் அவதாரம் செய்ததினத்தில்,

அந்தந்தத் தேவதையின் உபாஸனையைக் கிரகிக்கலாம். சைத்திர மாதத்தில் சுக்லபக்ஷத்தில் நவமீதிதியில் ஸ்ரீராமர் ஜனனம் ஆன தினத்தில் உபாசனையைப்பெற்று பிறகு ஸ்ரீராமரைப் பக்தியுடன் பூஜிக்கவேண்டும். இம்மாதிரி, எந்த மானிடர்கள் எந்த அவதாரத்தைப் பூஜிக்கின்றார்களோ, உபாஸனையையும் செய்கின்றார்களோ அந்தத் தேவதை அவதார தினத்தில் மஹோற்சவங்களுடன் பூஜை செய்யவேண்டும்.

ஏ சீடனே ! பத்து அவதாரங்கள் செய்த தினங்களைக் கூறுகிறேன் ! நீ கவனித்துக்கொள்.

பகவான் சைத்திரமாதத்தில் சுக்லபக்ஷம் பஞ்சமியில் மத்ஸியாவதாரம் செய்தார். ஜியேஷ்டமாதத்தில் சுக்லபக்ஷம் துவாதசியில் கூர்மாவதாரம் செய்தார். சைத்திரமாதம் கிருஷ்ண பக்ஷம் நவமியில் வராகவதாரம் செய்தார். வைசாகமாஸம் சுக்ல பக்ஷம் சதுர்த்தசியில் நரஸிம்மாவதாரம் செய்தார். பாத்ரபத மாதம் சுக்லபக்ஷம் துவாதசியில் வாமனாவதாரம் செய்தார். வைசாகமாஸம் சுக்லபக்ஷம் திருதியையில் பரசுராம அவதாரம் செய்தார். சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் நவமியில் பகல்வேளையில் ஸ்ரீராமாவதாரம் செய்தார். சிராவணமாஸம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியில் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் மதுராபட்டணத்திற் செய்தார்.

தைமாஸம் சுக்லபக்ஷம் சப்தமியில் பௌத்தாவதாரம் செய்தார் மாசிமாதம் சுக்லபக்ஷம் திருதியையில் கல்கி அவதாரம் செய்தார். அகலினுடைய மத்தியில் வாமனர் பரசுராமர் ஸ்ரீராமர் (இவர்களும்), ஸாயங்காலத்தில் கூர்மர் நரசிம்மர் பௌத்தர் கல்கி இவர்களும், இராத்திரியில் ஸ்ரீகிருஷ்ணனும் அவதாரம் செய்தார்கள். அந்தந்தத் தேவதையை உபாஸிப்பவர்கள் இந்த அவதாரங்களைத்தெரிந்துகொண்டு அத்தினத்தில் உற்சவம் செய்யவேண்டும்.

தேவதைகளை உபாஸ்தி செய்பவர் தினந்தோறும் பூஜை செய்யவேண்டும். அவதாரதினத்தில் விசேஷபூஜையைச் செய்ய வேண்டும். குருவிடம் உபதேசம்பெற்ற மந்திரத்தை தினந்தோறும் மனதில் ஜபம்செய்யவேண்டும். ஸ்ரீராமருடைய மந்திரங்கள்

அனேக மிருக்கின்றன. நூறு அக்ஷரங்கள் சேர்ந்த மந்திரம் உண்டு. ஐம்பது அக்ஷரங்கள், நாற்பத்திரண்டு அக்ஷரங்கள், முப்பத்திரண்டு அக்ஷரங்கள், இருப்பத்தேழு அக்ஷரங்கள், இருபத்தைந்து அக்ஷரங்கள், இருபத்திநான்கு அக்ஷரங்கள், இருபத்தொரு அக்ஷரங்கள், இருபது அக்ஷரங்கள், பதினேரு அக்ஷரங்கள், பதினைந்து அக்ஷரங்கள், பதினான்கு அக்ஷரங்கள், பதின்மூன்று அக்ஷரங்கள், பனிரண்டு அக்ஷரங்கள் இவைகளிலும் மந்திரங்களுண்டு பதினொன்று பத்து ஒன்பது எட்டு ஏழு ஆறு ஐந்து நான்கு மூன்று இரண்டு ஒன்று முதலிய அக்ஷரங்களிலும் மந்திரங்க ளிருக்கின்றன. இவ்விதம் ஸ்ரீராம மந்திரங்கள் அனேகமிருக்கின்றன. குருவினிடம் ஓர் மந்திர உபதேசம் பெற்று ஸ்ரீராமருடைய சன்னிதியில் ஜபம் செய்யவேண்டும். ஸ்ரீராமரைப் பூஜிக்கும் மானுடர்கள் பூஜை செய்யும் விதியை குருவிடமிருந்து மந்திரத்தின் சொரூபந் தெரிந்துகொள்வதுபோல சாஸ்திரப்படி தெரிந்துகொள்ள வேண்டும்.

தண்டகாரண்யத்தில் அகஸ்திய மகாமுனிவர் ஸுதீக்ஷ்ண முனிவருக்குக் கூறியவண்ணம் நான் உனக்கு ஸ்ரீராமருடைய மானஸிக பூஜையின் விதியைக் கூறுகிறேன்:—

ஒருசமயம் ஸுதீக்ஷ்ண முனிவர் தனிமையாக இருக்கும் அகஸ்திய மகாமுனிவரைக் கண்டு மிகுதியான பக்தியுடன் நமஸ்கரித்து வணக்கத்துடன் வினவுகிறார்.

ஸுதீக்ஷ்ணர் வினவுகிறார்.

பிரபுவாகிய அகஸ்திய முனிவரே! ஸ்ரீராமச்சந்திரனை மனதினால் பூஜை செய்வதற்கு உபசாரங்கள் என்ன? மானஸிக பூஜையை எவ்விதம் செய்வது?

அகஸ்திய முனிவர் கூறுகிறார்.

காலையில் எழுந்து தேகத்தைச் சுத்திசெய்துகொண்டு சோம்பலின்றி சுத்தமான இடத்துக்குச் சென்று தியானத்தையும் பூஜையையும் செய்வதற்கு யத்தினம்செய்து தாமரை மலர்போல்

நீண்ட கண்களுள்ளவரும், கறுத்த மேகம் போன்ற காந்தியுள்ள வரும், புன்னகைகொண்ட முகமுள்ளவரும், சுகமாக வீற்றிருப்பவருமான ஸ்ரீராமரைத் தாமரைபோன்ற மனதில் தியானம் செய்ய வேண்டும். இராகத்துவேஷம் முதலியவைகளினால் கலங்கின மனதை வைராக்கியத்தினால் சுத்தமாகச் செய்துகொண்டு ஸம்ஸாரபந்தம் நீங்குவதற்கு எப்போதும் ஸ்ரீராமரைத் தியானஞ் செய்யவேண்டும். தொப்புளாகிற ஸ்தானத்திலிருந்து உண்டானதும், வாழைப்பூவிற்குச் சமமானதும், எட்டு இதழ்கள் உள்ளதும், நல்ல வர்ணமுள்ளதுமான மனமாகிற தாமரைப் புஷ்பத்தில் தியானம் செய்யவேண்டும்.

ஸ்ரீராம நாமத்தினால் மலர்ந்த அந்த மனமாகிற தாமரைப் புஷ்பத்தின் மத்தியில் சூரியன் சந்திரன் அக்னி இந்தத் தேவதைகளைத் தியானம் செய்யவேண்டும். அதற்குமேல் இரத்தின மயமானதும் பிரகாசமுள்ளதுமான பீடத்தைப் பாவிக்கவேண்டும். அந்தப் பீடத்தின் மத்தியில் கோடி சூரியனுக்குச் சமமான காந்தியுள்ளவரும், கருநெய்தல் புஷ்பத்திற்குச் சமமான வர்ணமுள்ளவரும் சாந்தரும், விஸ்தாரமாகிய கண்களுள்ளவரும் அழகிய மார்புள்ளவரும், உதயகாலத்துச் சூரியனைப் போன்ற காந்தியுள்ள குண்டலங்களை யணிந்தவரும், சோபனமான மூக்குள்ளவரும், நல்ல கிரீட மணிந்தவரும், அழகிய கன்னங்களுள்ளவரும், சுத்தமாகிய சிரிப்புள்ளவரும், இரண்டு கைகள் உடையவரும், சங்கம் போன்ற கழுத்துள்ளவரும், நல்ல கேசங்களமைந்தவரும், அநேக இரத்தினங்களால் செய்யப்பட்ட திவ்ய ஹாரங்களினால் அலங்காரம் செய்துகொண்டவரும், அழிவற்றவரும், மின்னற் கூட்டம் போன்ற ஒளியை யுடையவரும், இரண்டு வஸ்திரங்களை யணிந்தவரும், ஹரி என்ற பெயரமைந்தவரும், வீராஸனத்தில் வீற்றிருப்பவரும், கற்பக விருக்ஷத்தின் அடியில் வாசம் செய்பவரும், விலை உயர்ந்த வாசனைத்திரவியங்கள் கலந்த சந்தன மணிந்தவரும், வனமாலையைப் பூண்டவரும், அழகான சிரிப்பு, மங்களமானமுகம், அன்போடுகூடிய பார்வை இவைகளுடனும் சொர்ணத்திற்குச் சமமான காந்தியுடனும் கூடிய சீதாபிராட்டியை இடதுபாகத்தில்

உடையவரும், கொடை, சாமரங்களால் உபசாரம் செய்யும் இலட்சுமணரோடு கூடியவரும், அனுமார் முதலிய வானரர்கள் சூழவீற்றிருப்பவரும், முனிவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவரும், பரதன் முதலியவர்களால் உபசரிக்கப்படுகிறவரும் ஸனந்தனர் முதலிய யோகிகளால் எப்போதும் சேவிக்கக்கூடியவரும், ஸகல சாஸ்திரங்களின் அர்த்தங்களை அறிந்தவரும், யோகம் தெரிந்தவரும், யோகஸித்தியைக் கொடுப்பவரும் இரண்டு மணிகளால் அலங்கரித்துக் கொண்டவருமான ஸ்ரீராமரை இவ்விதம் தியானஞ் செய்து சுத்தமான மனதுடனிருந்து மானச பூஜை செய்யவேண்டும்.

உலகங்களுக்கு ஈசரும், ஸீதைக்குப் பதியும், பிரபுவும், கௌஸல்லியைக்குக் குமாரரும், விஷ்ணுவும், மாயைக்கு மேலானவருமான ஸ்ரீராமரை ஆவாகனம் செய்கிறேன். இராஜாதிராஜரும், இராஜ சிரேஷ்டரும் இராமச்சந்திரரும் பூமிக்குப் பதியும், பிரபுவுமான ஏ இராம! உமக்கு இரத்தின சிங்காதனம் கொடுக்கிறேன், தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். பகவானுகியும் இரகுவீரரும், இரகுசிரேஷ்டரும், இராஜேந்திரருமான ஏ இராம! தாங்கள் ஸீதாதேவியுடன் வந்து, இந்த ஆசனத்தில் ஸ்திரமாக அமர்ந்திருக்கவேண்டும்.

ஜானகிதேவியின் பதியும் மகா மகிமை யுள்ளவரும் தேவர்களுக்கு அரசரும், உலகநாயகரும், மதுவென்ற அசுரனை சங்கரித்தவருமான ஏ இராம! எனக்கு அனுக்கிரகம் செய்யக் கிருபை செய்யவேண்டும். வில்லாளிகளுக்குள் உயர்ந்தவரும் இராவணாந்தகரும், இரகுவம்சத்தில் அவதாரம் செய்தவருமான ஏ இராமச்சந்திரா! நான் பூஜையை முடிக்கும் வரையில் ஸந்நிதியிலிருக்கவேண்டும்.

ஏ இரகுநந்தனு! ஏ இராஜசிரேஷ்டா! தாமரை மலர்போலழகிய நேத்திரங்களுள்ள ஏ இராமா! இரகுவம்சத்தில் அவதரித்த தேவராகிய இராமா! எனக்கு அபிமுகராக இருக்கவேண்டும்.

ஹே ஜகன்னாத! நீர் எனக்கு சரணம்! ஹே பக்தவத்ஸலா! சரணம்! ஹே இரகுசிரேஷ்டா! சரணம். எனக்கு வரங்களைக் கொடுக்கக் கிருபை செய்யவேண்டும்.

மூன்று உலகங்களையும் பரிசுத்தம் செய்யும் தன்மையுள்ளவரும், முடிவற்றவரும் இரகுகுல நாயகரும், இராஜ சிரேஷ்டருமான ஏ இராம! உமக்கு நமஸ்காரம். தாங்கள் பாத்தியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எங்கும் நிறைந்தவரும், பரமானந்த சொரூபியும் பிர்ம்ம சொரூபியுமான ஏ இராம! நமஸ்காரம். ஏ விஷ்ணுவே! பாபங்களைப் போக்கிற கிருஷ்ணு! ஏ! ஜனார்த்தன! நான் கொடுக்கும் அர்க்கியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஓங்காரரூபியும் வாசுதேவரும் தத்துவஞான சொரூபியும் இராஜராஜருமான தங்களுக்கு நமஸ்காரம். மதுவர்க்க ஸ்னானத்தை அடையவேண்டும். சத்திய சொரூபியும், சுத்த சொரூபியும், நமஸ்கரிக்கத் தக்கவரும் சகல லோகங்களுக்கும் ஏகநாயகராக விளங்குகிறவருமான ஆசமனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஹே ஜனார்த்தனு! ஹே இரகுநந்தனு! பிரம்மாண்டத்தின் மத்தியில் உள்ள புண்ய தீர்த்தங்களால், தங்களைப் பக்தியுடன் ஸ்னானம் செய்து வைக்கிறேன். தாங்கள் அடையவேண்டும். லோகநாதனும் இராமச்சந்திரருமான பிரபுவே! உருக்கின தங்கத்திற்குச் சமமான காந்தியுள்ள இந்தப் பீதாம்பரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். உமக்கு நமஸ்காரம்.

யாகங்களுக்குப் பிரபுவும், இலக்ஷ்மியைத் தரித்தவரும், ஆனந்த சொரூபியும் இரகுவம்சத்தில் ஜனித்தவருமான ஏ இராம! யக்ஞோபவீதம் உத்தரீயம் இவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரகுசிரேஷ்டா! ஜனார்த்தனு! கிரீடம் ஹாரம் தோள்வளை இரத்தின குண்டலம் அரைஞாண், கண்டத்தில் போட்டுக் கொள்ளும் கௌஸ்தபம், ஹாரம், இரத்தினகங்கணம். தண்டை முதலிய பூஷணங்களை நான் பக்தியுடன் கொடுக்கிறேன். தாங்கள் கிருபையுடன் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிரபுவாகிய இராமா! குங்குமம், அகில், கஸ்தூரி, பச்சக் கர்ப்பூரம் இவைகள் கலந்த சந்தனத்தை நான் தங்களுக்குக்

கொடுக்கிறேன். தயவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். துளஸி, தும்பை, மந்தாரம், ஜாதி, புன்னாகம், சண்பகம், அரளி, கதம்பம், தாமரை, கருநெய்தல், வில்வதளம் மற்றுமுள்ள புஷ்பம் முதலியவைகளால் நான் பக்தியுடன் பூஜிக்கிறேன். தாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் தங்களுக்கு நமஸ்காரம்.

புவனகர்த்தாவாகிய ஏ இராமச்சந்திரா! திவ்யவாஸனையுள்ள மனோகரமாகிய இந்தத் தூபத்தைத் தாங்கள் தயைசெய்து ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏ இராஜனே! ஒளியுள்ளவைகளுக்குப் பதியும் பிரம்மரூபமாகிய உமக்கு நமஸ்காரம். மூவுலகங்களிலுமுள்ள இருளைப்போக்கும் இந்தத் தீபத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இராஜேந்திரா! ஹே ஸ்ரீராம! ஆறுவித இரசங்களுடன்கூடிய திவ்ய அமிருதமான அன்னத்தை நைவேத்தியம் செய்கிறேன். தயையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இராம! பாக்கு நாகவல்லி கர்ப்பூரம் இவைகளுடன் கூடிய இந்தத் தாம்பூலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பூமிக்குப் பதியும் லோகநாதரும் ஹரியுமான ஹே இராமசந்திரா! இந்த நீராஞ்சனத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். உமக்கு நமஸ்காரம்.

எட்டு நமஸ்காரங்கள்.

பகவானும், பரமாத்மாவும், ஸகல பூதங்களுக்கும் உள்ளிருப்பவரும், ஸீதையுடன் கூடினவருமான ஸ்ரீராமருக்கு நமஸ்காரம். 1

பகவானும். ஸ்ரீராமச்சந்திரரும். பிரம்மசொரூபரும் ஸகல வேதாந்தங்களால் அறியத்தகுந்தவரும் ஸீதையுடன் கூடினவருமான உமக்கு நமஸ்காரம் 2

பகவானும், விஷ்ணுவும், பரமாத்மாவும், பராத்பரரும் ஸீதையுடன் கூடினவருமான ஸ்ரீராமருக்கு நமஸ்காரம். 3

பகவானும், இரகுநாதரும், சார்ங்கம் என்ற வில்லைக்கொண்டவரும், சின்மயரும், ஆனந்தசொரூபரும் ஸீதையுடன் கூடினவருமான உமக்கு நமஸ்காரம். 4

பகவானும், ஸ்ரீராமரும், கிருஷ்ணரும், சக்ராயுதமுடைய வரும், நிர்மல ஞான சரீர முடையவரும், ஸீதையுடன் கூடினவரு மான உமக்கு நமஸ்காரம். 5

பகவானும், ஸ்ரீவாசுதேவரும், விஷ்ணுவும், பூர்ணாநந்த சொரூபரும், ஏகமானவரும், ஸீதையுடன் கூடினவருமான உமக்கு நமஸ்காரம் 6

பிர்ம்மசொரூபரும், பகவானும், ஸகல உலகரக்ஷகரும், ஸீதை யுடன் கூடினவரும் ஸ்ரீராமபத்ரருமான உமக்கு நமஸ்காரம். 7

பகவானும், உத்தமமான தேஜஸ் உள்ளவரும், பிர்ம்மா னந்த சொரூபரும், ஸீதையுடன் கூடினவருமான ஸ்ரீராமருக்கு நமஸ்காரம். 8

எட்டு நமஸ்காரங்களுக்கும் மந்திரங்கள்.

நர்த்தனம், கானம், வாத்தியம், புராணபடனம் இன்னும் மற்றுமுள்ள இராஜோபசாரங்கள் முதலியவைகளில் ஏ இராகவ! சந்தோஷமடையவேண்டும்.

பரிசுத்த ஞானசொரூபரும், இரகுநாதரும், விஷ்ணுவும், இரகுநந்தருமான உமக்கு நமஸ்காரம்; எனக்கு மனச்சுத்தியை அளிக்கவேண்டும்.

நாராயணா! அனந்தா! கருணைக்கு இருப்பிடமாகிய ஹே ஸ்ரீராம! ஹே ஜகன்னாதா! பயங்கரமாகிய ஸம்ஸார சாகரத்தி னின்று என்னைக் கரையேற்ற வேண்டும்.

வில்லாளிகளுக்குள் உயர்ந்தவரும், சரணம் என்று வந்தவர் களைக் காப்பதில் துறையுள்ளவருர், ஸகல உலகங்களுக்கு அரசரு மான ஹே இராமச்சந்திரா! அத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதி தைவிகம் என்ற மூன்று தாபமாகிய பெரும் நெருப்பிலிருந்து என்னை இரக்ஷிக்கவேண்டும்.

ஏ ஸ்ரீ கிருஷ்ண! ஏ ஸ்ரீகரா! ஏ ஸ்ரீசா, ஏ ஸ்ரீராமா, ஸ்ரீநிதி யே, ஹரியே! ஸ்ரீநாதா! ஸ்ரீமஹாவிஷ்ணுவே! ஸ்ரீ நரஸிம்ஹா! கிருபைக்கு இருப்பிடமாகிய ஏ ஜகன்னாதா! ஏ கிஷ்ண!

ஏ ஜனார்த்தனா! கர்ப்பவாசம் பிறப்பு வியாதி கிழட்டுத் தன்மை பயங்கரமான ஸம்ஸாரபந்தம் இவைகளிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும்.

ஏ ஸ்ரீராமா! கோவிந்தா! முகுந்தா! கிருஷ்ணா! ஸ்ரீநாதா! ஏ விஷ்ணுவே! உமக்கு நமஸ்காரம். ஏ நாராயணா! பிரபஞ்சத்தைச் சரீரமாகக்கொண்ட பிரபுவே! சத்ருக்களாகிய காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியமென்னும் ஆறு பேர்களாலுண்டாகும் பெரும்பயத்திலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.

ஏ இராமா! அச்சுதா! யக்ஞேசா! ஸ்ரீதரா! ஆனந்தசொரூபா! இராகவா! கோவிந்தா! விஷ்ணுவே! ஜானகிபதியே! உமக்கு நமஸ்காரம்.

ஏ இரகுசிரேஷ்டா! மானுடர்களுக்கு உம்முடைய நாமஸ்மரணம் பிரம்மானந்தத்தை விளைவிக்கின்றது. உம்முடைய தாமரை மலர்போன்ற பாதங்களில் நல்ல பக்தியைக் கொடுக்க வேண்டும். ஏ நாராயணா! விசுவமூர்த்தியே! உமக்கு நமஸ்காரம்.

நித்தியரும் விசுவமூர்த்தியும் பிரபுவுமாகிய ஏ இராம! உமக்கு நமஸ்காரம். நீர்தான் அசையும்பொருள், அசையாப் பொருள்களுடன் கூடின சகல பிரபஞ்சங்களும்; ஸாதுக்கள் உம்மையே ஸர்வசொரூபரென்று சொல்லுகிறார்கள்.

காரணங்களுக்கும் காரணமாகிய உமக்கு நமஸ்காரம். மோக்ஷபலத்தைக் கொடுக்கும் உமக்கு நமஸ்காரம். ஸகல ஜகத்சொரூபரும் வேதாந்தங்களால் அறியத்தகுந்தவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

பரதனுக்குத் தமையனாகிய உமக்கு நமஸ்காரம். யாகத்தை இரக்ஷித்த உமக்கு நமஸ்காரம். அனந்தரும் யாகங்களுக்கு அரசருமான ஹரியே! முகுந்தா! கோவிந்த! விஷ்ணுவே! ஆறு குணங்களுள்ளவரே! முரனுக்கு சத்ருவானவரே! இலட்சுமிகாந்தா! முடிவற்றவரும், உலகங்களுக்கு வசிக்கும் இடமாயுள்ளவரும், இராஜ சிரேஷ்டருமான ஏ ஸ்ரீராம! உமக்கு நமஸ்காரம்.

ஜானகிக்குப்பதியும், நீண்டகண்ணுள்ளவரும், ராஜாதிராஜனுமான ஏ இராம! உம்மிடத்தில் எனக்குப் பக்தி ஏற்படட்டும்.

ஏ இரகுசிரேஷ்டா! உருக்கின தங்கத்தினால் செய்ததும், இரத்தினங்களால் அமைக்கப்பட்டதுமான சொர்ணபுஷ்பத்தைக் கொடுக்கிறேன். பிரபுவே! ஏற்றுக்கொள்ள வேண்டும்.

என்னுடைய இருதயமாகிற தாமரைக்குளத்தின் மத்தியில் ஏ இராம! நீர் ஸீதையுடன் அனேகம் ஆபரணங்களை யணிந்துகொண்டு வாசஞ் செய்யவேண்டும். மனோவாக்குக் காயங்களினால் நான் செய்யும் காரியங்கள் சுபமானாலும் அசுபமானாலும் உம்முடைய பிரீதியின்பொருட்டே இருக்கவேண்டும். சார்ங்கம் என்ற வில்லையுடைய இராம! நமஸ்காரம். நான் பகலிலும் இரவிலும் அனேகம் அபராதங்களைச் செய்கின்றேன். என்னைத்தாஸனென்று எண்ணி இரக்ஷிக்க வேண்டும்.

ஏ ஜானகிபதியே! பூபதியே! இராமச்சந்திரா! உமக்கு நமஸ்காரம். பூர்ணாநந்த சொரூபராகிய நீர் அர்க்கியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், நமஸ்காரம் செய்கிறேன்.

எந்த மானுடன் இவ்விதம் மனதிலாவது வெளியிலாவது ஒருதடவை பூஜைசெய்கிறானோ அந்த மானுடன் இராமனாகவே ஆகின்றான். எப்போதும் பூஜைசெய்பவன் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸகல மனோரதங்களையும் அடைகிறான் என்பதில் ஐயமில்லை. ஸுதீக்ஷ்ண முனிவரே! நீர் கேட்டபடி நான் ஸ்ரீராமருடைய மானஸிக பூஜையின் விதியைக் கூறினேன்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்:—விஷ்ணுதாஸ! முன் அகஸ்திய முனிவர் ஸுதீக்ஷ்ண முனிவருக்குக் கூறியபடி, நான் விஸ்தாரமாகக் கூறினேன். இப்போது பாஹ்ய பூஜைசெய்யும் விதத்தைக் கூறுகிறேன் கேள்:—

மானுடன் காலையில் எழுந்து, சௌசம் முதலியவைகளை முடித்து ஸ்னானம் செய்தபின், ஸந்தியாவந்தனம் செய்துவிட்டு பூஜைக்கு யத்தினம் செய்யவேண்டும். புண்ய தீர்த்தங்களுக்கு அருகாமையிலாவது தேவாலயத்திலாவது ஜனங்கள் இருக்கும்

இடத்திலாவது புண்ய தேசங்களிலாவது நதிக்கரையிலாவது துளஸி வனத்திலாவது கோமயத்தினால் மெழுகினபின் வெளுப்பு சிவப்பு பச்சை மஞ்சள் நீலம் கறுப்பு இவைகள் முதலிய அனேக வர்ணங்களுள்ள பத்மங்களை ஏற்படுத்தி அதில் பூஜை செய்ய வேண்டும்.

ஆயிரத்தெட்டு ஸ்ரீராமலிங்க ஆசனத்திலாவது, நூற்றெட்டு ஸ்ரீராமலிங்க ஆசனத்திலாவது, ஆயிரத்தெட்டு ஸ்ரீராம பத்ரா ஸனத்திலாவது, நூற்றெட்டு ஸ்ரீராம பத்ராஸனத்திலாவது, இன்னும் மற்றுமுள்ள ஆசனங்களில் ஏதாவது ஓர் ஆசனத்தில் வஸ்திரத்தினால் அலங்காரஞ் செய்து ஸர்வதோபத்ரம் என்ற இலட்சணமுள்ள அமைப்பை அமைத்து, அதன்மீது பத்மம் எழுதி அதன் மத்தியில் ஸீதையுடன் இராமரையும், இராமருக்குப் பின் பக்கத்தில் இலட்சுமணரையும், வலது பக்கத்தில் பரதரையும், இடது பக்கத்தில் சத்ருக்னரையும், முன்பக்கத்தில் வாயுகுமாரராகிய ஆஞ்சனேயரையும், வாயுமூலையில் சுக்ரீவனையும், ஈசான மூலையில் விபீஷணரையும், அக்னி மூலையில் அங்கதனையும், நிருதி மூலையில் ஜாம்பவானையும் ஸ்தாபனஞ் செய்யவேண்டும்.

இவ்விதமே வித்வான்கள் ஸகல சாஸ்திரங்களிலும் நிர்ணயஞ் செய்திருக்கிறார்கள். இலட்சுமணர் கையில் முத்துக்களால் அலங்கரித்த குடையையும், பரதன் கையில் சொர்ணமயமான சாமரத்தையும், சத்ருக்னன் கையில் விசித்திரமான விசிறியையும், அனுமாருடைய கையில் இரண்டு பாதுகைகளையும், சுக்ரீவன் கையில் மனோகரமான ஜலபாத்திரத்தையும், விபீஷணன் கையில் சிரேஷ்டமான கண்ணாடியையும், அங்கதன் கையில் வெற்றிலைத் தட்டையும், ஜாம்பவான் கையில் வஸ்திரம் வைக்கும் பெட்டியையும் கொடுத்து இராமருக்கு நவாயதனம் ஏற்படுத்த வேண்டும். அல்லது ஆசனத்தின்மீது பஞ்சாயதனத்தை ஏற்படுத்தவேண்டும். மத்தியில் ஸீதையுடன் இராமசந்திரரையும் பின்பக்கத்தில் இலட்சுமணரையும் வலதுபக்கத்தில் பரதரையும் இடதுபக்கத்தில் சத்ருக்னரையும், முன்பக்கத்தில் அனுமாரையும் முற்கூறிய உபசாரங்களோடு ஏற்படுத்திவைக்க

வேண்டும். இவ்விதம் இராமரை பத்திராஸனத்தின்மீது பக்தியுடன் ஸ்தாபிக்கவேண்டும் அல்லது மத்தியில் ஸீதையுடன் இராமரை ஸ்தாபித்து, இராமருக்குப் பின்பக்கத்தில் இலட்சுமணரையும் முன்பக்கத்தில் அனுமாரையும் ஸ்தாபித்து வில்லைக் கையிலேந்திய இராமரைப் பக்தியுடன் பூஜைசெய்யவேண்டும். அல்லது ஸீதையுடன் இராமரையும் இலட்சுமணரையும் பூஜிக்கலாம். ஸீதையையும் இலட்சுமணரையும் விட்டு, இராமருக்கு மட்டும் பூஜைசெய்யக்கூடாது. அப்படிச்செய்தால் ஏதாவது இடையூறு உண்டாகும். நவாயதனபூஜை சிரேஷ்டமானது, சுபத்தைக் கொடுக்கக்கூடியது. பஞ்சாயதனபூஜை என்பது மத்யமம். மூன்று தேவதைகளைப் பூஜிப்பது அதமம். இரண்டு தேவதைகளைப் பூஜிப்பது மிகவும் அதமம். இடதுகையில் வில்லும் இடது பக்கத்தில் அம்புறையையும் தம்பெயரினால் அடையாளம் செய்யப்பட்ட பாணத்தை வலதுகையிலும் தரித்துக்கொண்ட ஸ்ரீராமரை ஸ்தாபனம்செய்து பூஜைசெய்ய ஆரம்பம் செய்யவேண்டும். பூஜைசெய்ய ஆரம்பிக்கும்போது தனக்கு இடதுபக்கத்தில் ஜலம் நிறைந்த கும்பத்தையும், வலதுபக்கத்தில் பூஜைக்குரிய பாத்திரங்களையும் தனக்கு முன்சிரேஷ்டமும் விசாலமுமான பாத்திரத்தையும் வைத்துக்கொள்ளவேண்டும். கிழக்கு முகமாக பத்மாஸனத்தில் சுகமாக உட்காரவேண்டும். பரிசுத்தமுள்ள இருதயத்துடன் மௌனமாயிருந்து துளஸிமாலை ருத்திராக்ஷமாலை இவைகளை அணிந்துகொள்ள வேண்டும். மனம் சலிக்காதவனாயிருக்க வேண்டும். சிகையை நன்றாகக் கட்டிக்கொள்ளவேண்டும். பரிசுத்தமான வஸ்திரம் தரித்திருக்கவேண்டும். பவித்திரம் தரித்துக்கொள்ளவேண்டும். பிறகு பூஜாரம்பம் செய்து ஆதியில் விக்னேச்வரரை வணங்கி திதி வாரம் முதலியவைகளைக் கூறவேண்டும் கிரமப்படி 'பூமியையும் பூதங்களையும் சுத்திசெய்து அங்கநியாஸம் கரநியாஸம் இவைகளைச்செய்து ஜலம் நிறைந்த புரோக்ஷணீ பாத்திரத்தையும் தயார்செய்து அந்தப்புரோக்ஷணீபாத்திரத்தை அறுகு அக்ஷதை சந்தனம் புஷ்பம் இவைகளினால்பூஜித்து அந்தஜலத்தால் பூஜை சாமான்களை புரோக்ஷணம் செய்யவேண்டும். பாத்யம் ஆசமனம் அர்க்கியம் இவைகளுக்காக மூன்றுபாத்திரங்களை வைத்துக்

கொண்டு விக்னேசுவரரையும் வருணனையும் சங்கத்தையும் பூஜித்து அந்தச் சங்கத்திலிருக்கும் ஜலத்தினால் புரோக்ஷணம் செய்ய வேண்டும். தேனுமுத்திரை சங்கமுத்திரை சக்ரமுத்திரை கருடமுத்திரை இவைகளைக் காண்பிக்கவேண்டும். சிலைதருலோகம் சந்தனம் சித்ரம் மணல் இரத்தினம் இவைகளால் விக்ரகங்களையுண்டு பண்ணி பூஜிக்கலாம். மனதிலும் உருவமைத்துக்கொண்டு பூஜிக்கலாம். பிறகு சீதாபிராட்டியை யணைந்துகொண்டு முன்பக்கம் விளங்கும் இரண்டு கைகளுடன், அம்புறை, வில், பாணம், ஆயுதங்கள் பீதாம்பரம் இவைகளைத் தரித்துக்கொண்டிருப்பவரும், இலட்சுமணர், பரதர், சத்துருக்னர், இவர்களுடன் கூடினவரும், அனுமாரால் சேவிக்கப்பட்டவரும் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறவரும் குடைபிடிக்கப்பெற்றவரும், சாமரங்களால் உபசரிக்கப்பெற்றவரும், விபீஷணருடன் கூடினவரும் சுக்ரீவனால் நமஸ்கரிக்கப்பட்டவரும் ஜாம்பவானுடன் கூடினவரும் அங்கதனால் தோத்திரம் செய்யப்படுகிறவரும், அயோத்தியா பட்டணத்தில் வாசம் செய்பவருமான ஸ்ரீராமச்சந்திரரைத் தியானம் செய்ய வேண்டும். ஏ ஸீதாராம! தாங்கள் வரவேண்டும். என்முன்னால் ஸ்திரமாக இருக்கவேண்டும். நான் செய்யும் பூஜையை ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் தங்களை ஆவாகனம் செய்கிறேன்.

தங்கம் இரத்தினம் இவைகளால் செய்யப்பட்டதும், அனேக சித்திரங்களமைந்ததும், வஸ்திரத்துடன் கூடினதுமான சிங்காதனத்தைத் தங்களுக்கு ஆசமனமாக அளிக்கிறேன். கால் அலம்புவதற்காக பாத்யம் கொடுக்கிறேன். எனக்கு அனுக்ரகம் செய்ய வேண்டும். புஷ்கரம் முதலிய தீர்த்தங்களினின்றும் கங்கை முதலிய நதிகளின்றும் நான் கொண்டுவந்த ஜலத்தை அர்க்கியமாகக் கொடுக்கிறேன்; ஏற்றுக்கொள்ளவேண்டும். அனேக தீர்த்தங்களுடன் கூடினதும் நல்ல வாசனையுள்ளதுமான ஜலத்தை ஆசமனத்திற்குக் கொடுக்கிறேன். தேவர்களுக்கு அரசனாகிய ஏ இராம! ஏற்றுக்கொள்ள வேண்டும்.

காமதேனுவின் பால், நந்தியின் ஸுந்தரமான தயிர், கபிலையின் சிரேஷ்டமான நெய், விந்தியமலையில் உண்டான தேன்,

சர்க்கரை இவைகள் சேர்ந்த வெண்ணெய்தலுக்குச் சமமான பஞ்சாமிருதத்தை நான் கொடுக்கிறேன். ஸ்நானத்திற்காகத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதை, ஸிந்து, காவேரி, ஸரயூ, கண்டகி, தாம்பிரபரணி, கிருஷ்ணவேணி, பீமநதி, சோமநதி, பால்நதி, (பயோக்ஷணீ), எழுகடல், பூர்ணை, துங்கபத்ரை, க்ஷிப்ரை, வேகவதீ, பினாகி, நதங்கள், கிருதமாலை, கிருதமாலை, மஹீ, நிக்ஷேபிகை, சர்மண்வதி இன்னும் மற்றுமுள்ள நதிகள் இவைகளிலிருந்துகொண்டு வந்த ஜலங்களை ஸ்நானத்திற்குக் கொடுக்கிறேன். ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரகுவம்சத்திற்கு நாதராகிய ஏ இராம! ஸகல தீர்த்தங்களிலிருந்தும்கொண்டுவந்த ஜலத்தை மறுபடி ஆசமனம் செய்யக்கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இரகுநாயக! சொர்ணநூற்களால் செய்த மஞ்சள் வர்ணமுள்ள இரண்டு பட்டு வஸ்திரங்களைத் தருகிறேன் ஏற்றுக்கொள்ளவேண்டும். சொர்ணமயமானதும் புதிதான நூற்களாற் செய்யப்பட்டதும் பிரம்மமுடிச்சுடன் கூடியதும், பரிசுத்தமுமான இந்த உபவீதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிரீடகுண்டலங்கள், மோதிரங்கள், கங்கணங்கள், தண்டைகள், அரைஞாண், மாலைகள், தோள்வளைகள் இவைகளையும் சொர்ணம் இரத்தினம் முதலியவைகளால் செய்யப்பட்ட மற்றுமுள்ள ஆபரணங்களையும் தாங்கள் அலங்காரத்திற்காக ஏற்றுக்கொள்ளவேண்டும். சத்ருக்களைச் சங்கரிக்கும் சக்தியுள்ள இராம! குடை, விசிறி, இரண்டு சாமரங்கள் இவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஏ இராம! கறுத்த அகில்கட்டையின் வாசனை கலந்ததும், தேவர்களுக்குரியதும் செஞ்சந்தனம் கலந்ததுமான வாசனைச் சந்தனத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பரமேசுவரா! சிரேஷ்டமானதும், தேவர்களுக்குரியதும், முத்துக்களா லமைக்கப்பட்டதும் கஸ்தூரி குங்குமம் இவைகள் கலந்ததுமான அக்ஷதைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.'

மாலதீபுஷ்பம் முதலிய வாசனையுள்ள புஷ்பங்களைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏ இராம! மெழுகுடன் கூடினதும், வாசனையால் நிறைந்ததும், ஸகல தேவர்களையும் ஆக்ராணம் செய்யத்தக்கதும், உத்தமமுமான தூபத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மூவுலகங்களிலுள்ள இருளைப்போக்கும் சாமர்த்தியம் வாய்ந்த பிரபுவாகிய ஏ இராம! மூன்று வர்த்திகள்போட்டதும், நெய்யுடன் கூடினதும், அக்னியினால் பிரகாசிக்கிறதுமான தீபத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பக்ஷியங்கள், அன்னங்கள், பாயஸம், நெய், சர்க்கரை, தேன் இவைகளுடன் கூடிய நைவேத்தியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏ இரகுநந்தன! நல்ல பக்குவமான கட்டி மாம்பழம் முதலிய அநேகபழங்களைக் கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பாக்கு, வெற்றிலை, ஜாதிக்காய் முதலிய நான்கு திரவியங்களுடன் கூடிய தாம்பூலத்தைக் கிரகிக்கவேண்டும்.

பிரம்மதேஜஸிலிருந்து உண்டானதும், அக்னி தேஜஸிலிருந்து உண்டானதுமான சொர்ணத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

விஷ்ணுதாஸ! ஆவாகனம் முதல் தக்ஷிணைவரையிலுமுள்ள பதினாறு உபசாரங்களை விஸ்தாரமாக உனக்குக் கூறினேன். பாக்கியுள்ள பூஜைசெய்யும் விதியையும் கூறுகிறேன் கேள்:—

ஏ இராம! ஐந்து வர்த்திகளுடன் கூடினதும் கபிலையின் நெய்கலந்ததும், அக்னியினால் ஜ்வலிப்பதுமான நீராஞ்சனத்தைக் கிரகிக்கவேண்டும்.

ஏ இராகவ! ஜாதி, சண்பகம், மந்தாரம், தாழம்பூ, துளஸீ, தமனம், முனிபுஷ்பம், குந்தபுஷ்பம், ஆனந்தபுஷ்பம் இந்த ஒன்பதுவித புஷ்பங்களையும் மந்திர புஷ்பங்களாகக் கொடுக்கிறேன். பரமேசுவர! கிரகித்துக்கொண்டு எனக்கு அனுக்ரகம் செய்ய வேண்டும்.

வலம் சுற்றிவரும்போது, ஒவ்வொரு அடிக்கு ஜன்மாந்தரத்தில் செய்த பாபங்களெல்லாம் நாசமடையவேண்டும். மார் தலை கண் மனம் வாக்கு பாதம் கைகள் முழங்கால்கள் முதலிய எட்டு அங்கங்களாலும் உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நான் ஆவாஹனம் செய்யும் விதியையும் விஸர்ஜனம் செய்யும் விதியையும் பூஜைசெய்யும் விதியையும் அறியேன். பரமேசுவரா! க்ஷமிக்கவேண்டும்.

இரகுசிரேஷ்ட! மந்திரம் கிரியை பக்தி இவைகளில் குறைவிருந்தாலும் நான் பூஜித்ததை பரிபூர்ணமாகப் பாவிக்கவேண்டும்.

இவ்விதம் பக்தியுடன் இடைவிடாமல் ஸ்ரீராமச்சந்திரரைப் பூஜைசெய்யவேண்டும். நவமியில் விசேஷமாகப் பூஜிக்கவேண்டும்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்:—இந்தப்பூஜையில் ஒன்பது புஷ்பங்களால் புஷ்பாஞ்சலி செய்யவேண்டுமென்று தாங்கள் கூறினீர்கள். அதைப்பற்றி விஸ்தாரமாக எனக்குக் கூறவேண்டும். தங்களிடம் அனேக தேவர்களுடைய பூஜையின் விதியைக் கேட்டிருக்கிறேன். அவைகளில் இம்மாதிரி புஷ்பாஞ்சலி செய்யும் கிரமத்தை கேட்டதில்லை. ஆகையால் எனக்குக் கூறவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்:—சீடனே நன்றாகக் கேட்டாய். ஸாவதானமாகக் கேள்:—

முந்தி காவேரிநதியின் வடகரையில் இராமநாதபுரம் என்ற பட்டணத்தில் சுந்தரன் என்ற ஓர் பிராம்மணன் வெகு பக்தியுள்ளவனாக இருந்தான். அந்தப் பிராம்மணனுக்கு ஸ்ரீ ராமனைத் தியானம் செய்யும் விஷயத்தில் மிகவும் விருப்பமுள்ள ஒன்பது குமாரர்கள் இருந்தார்கள். சந்திரன், அதிசந்திரன், சந்திராபன், சந்திராஸியன், சந்திரசேகரன், சந்திராம்சு, ஜிதசந்திரன், சந்திரசூடன், இராமசந்திரன் எனப்பெயரிடப்பட்டிருந்தார்கள். ஒன்பது பேர்களும் ஒன்பது கிரகங்கள்போல் விளங்கினார்கள். ஒருசமயம் ஒன்பது பேர்களும், சைத்திரமாசத்தில் பக்தர்களிடம் கிருபையுள்ள ஸ்ரீராமரைத்தரிசனம் செய்வதற்கு அயோத்தியா பட்டணத்தில் ஸரயூ நதிக்கரைக்கு வந்திருந்தார்கள்.

அந்தச்சமயம் அனேக தேசங்களிலிருந்து வெகு ஜனங்கள் கூடினார்கள். ஸரயூநதிக்கு சைத்திர ஸ்னானத்திற்காக வாகனங்களிலேறி வந்த ஜனங்களின் நெருக்கத்தினால் இந்த ஒன்பது பேர்களுக்கும் ஸ்ரீராமருடைய தரிசனம் கிடைக்கவில்லை. அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசிக்கலானார்கள்.

இந்தக் கூட்டத்தில் ஸ்ரீராமருடைய தரிசனம் எவ்விதம் கிடைக்கும். ஒருகால் ஸ்ரீராமதரிசன மாத்திரம் ஏற்பட்டால் என்ன பிரயோஜனம்? எது வரையில் நாம் இராமரை சஞ்சலமற்ற மனதுடன் பார்க்கவில்லையோ அது வரையில் மனம் சந்தோஷத்தை அடையப்போகிறதில்லை. ஆகையால் நாம் கடுமையான தவஞ் செய்து ஸ்ரீராமதரிசனத்தை இங்குத் தானே யடையலாம் என்று ஆலோசித்துத் தவம்புரியத் தீர்மானித்தார்கள். பிறகு ஒரே காலத்தில் எல்லோரும் தவம்புரிந்தால் யாருக்கு முன்னால் இராமர் தரிசனம்கொடுக்கிறார், பிந்தியாருக்குத் தரிசனம் கொடுக்கிறார் பார்ப்போம்; யாருக்கு ஸ்ரீராம பக்தி திடமாக இருக்கின்றது என்பதும் தெரிந்து கொள்ளலாம் என்று சொல்லி எல்லோரும் அந்தக் கூட்டத்திற்கு வெகுதூரத்திற்கப்பால் சென்று ஆகாரத்தை ஒழித்து விட்டு வாயுவை ஆகாரமாகக் கொண்டு மனதை ஸ்ரீராமரிடம் செலுத்தித் தவம் புரிந்தார்கள். இந்தவிஷயங்கள் எல்லா வற்றையும் ஸர்வஸாக்ஷியாக விளங்கும் உலகநாயகராகிய ஸ்ரீராகவர் அறிந்து, ஸந்தோஷத்துடன் ஒன்பதாவது நாளில் ஒன்பதுபேர்களுக்கும் தரிசனம் கொடுக்கவிரும்பி, ஒன்பது ரூபங்களை எடுத்துக்கொள்வதாக நிச்சயம் செய்துகொண்டு இலக்ஷ்மணரை நோக்கி "இலட்சுமணா! பல்லக்குக்கொண்டுவா; ஸந்தோஷமாக வெளியில்போய் வருகிறேன்" என்று கட்டளையிட்டார். இலட்சுமணர் உடனே தூதர்களைக்கொண்டு பல்லக்கைத் தருவித்து ஸ்ரீராமரிடம் தெரிவித்தார். உடனே இராமர் சிங்காதனத்திலிருந்து எழுந்து பல்லக்கி லேறிக்கொண்டார். அப் பல்லக்கைச்சூழ பந்துக்களும் சினேகிதர்களும் நின்றார்கள். இச்சமயம் திடீரென்று இராமபிரான், ஒன்பது ரூபமெடுத்துக் கொண்டு ஒன்பது பல்லக்குகளில் பந்துக்களும் சினேகிதர்களும் சூழ விளங்கினார்.

பிறகு இரகுசிரேஷ்டர், பந்துக்கள், மித்ரர்கள், தூதர்கள், மற்றுமுள்ள ஜனங்கள் இவர்களுடன் தவம் புரிந்துவரும் ஒன்பது பிராம்மணர்களுக்கு முன்னால் சென்று நின்றார். அந்த ஒன்பது பிராம்மணர்களும் தங்களுக்கு முன் நிற்கும் பிரபுவாகிய இராமரைத் தனியாகப் பார்த்துப் பரமானந்த மடைந்து அவரை வணங்கினார்கள் அப்பொழுது ஒன்பது இராமர்களும் தனித் தனியாக பல்லக்கிலிருந்து இறங்கி ஒன்பது பிராம்மணர்களையும் ஆலிங்கனம் செய்துகொண்டு நிர்மலமான முக மலர்ச்சியுடன் கூறுகிறார்கள்.

ஒன்பது இராமரும் தனித்தனியே கூறுகிறார்கள்.

ஏ பிராம்மணர்களே! நீங்கள் சிரமத்தை அடைந்தீர்கள்; உங்கள் மனநிச்சயத்தை அறிந்து நான் ஒன்பதுரூப மெடுத்துக் கொண்டேன். தவம் புரியும் உங்களுக்குள் என் தரிசனத்தை யாருக்கு முந்தியும் யாருக்குப் பிந்தியும் கொடுப்பதென்று ஆலோசித்து இவ்விதம் தரிசனங் கொடுத்தேன். வேண்டியவரன்களைக் கேளுங்கள் என்றார்கள். இவ்வசனத்தைக் கேட்ட ஒன்பது பிராமணர்களும் "பிரபுவே! எங்களுக்கு உலகத்தில் கீர்த்தி உண்டாகும்படி வரம் கொடுக்கவேண்டும்" என்று கேட்டார்கள். அவர்கள் இவ்விதம் கூறியதைக்கேட்ட ஒன்பது இராமர்களும் ஏ பிராம்மணர்களே! உங்களுக்குத் தரிசனம் கொடுக்கும் பொருட்டு இவ்விதம் ஒன்பது இராமர்களாக ஆனேம். ஆகையினால் இதுமுதல் உங்கள் பெயரை அடைந்து, பூமியில் ஒன்பது இராமர்களாக விளங்குகிறோம்; எங்களுக்கு ஒன்பது என்ற கணக்கில் அகப்பட்டவைகளெல்லாம் பிரீதியுள்ளவைகளாக ஆகட்டும் என்று கூறினார்கள். இவ்விதம் இராமர்கள் சொல்லியதைக் கேட்ட ஒன்பது பிராமமணர்களும் வெகு ஸந்தோஷமடைந்து தங்கள் தங்கள் இராமரை வணங்கினார்கள். அப்போது சகல ஜனங்களும் இராமரில் ஒன்பது பேரையும் இலட்சுமணரில் ஒன்பதுபேரையும் பரதரில் ஒன்பதுபேரையும் பார்த்து ஆச்சரிய மடைந்தார்கள். பிறகு ஒன்பது இராமர்களும் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஒன்பது பிராம்மணர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு அவ்விடமிருந்து

திரும்பினார்கள். வரும் மார்க்கத்தில் இராமபிரான் எப்போதும்போல் ஏகரூபமாகவே ஆய்விட்டார். மற்றவர்களும் எப்போதும் போல் ஏகரூபமானார்கள். இதைக்கண்ட எல்லோரும் பரமாச்சரியம் அடைந்தார்கள்.

பிறகு இராமர், பந்துக்கள் முதலியவர்களுடன் பட்டணம் சென்று அந்தப்புரத்தில் ஸீதைக்கு ஸகல ஸமாசாரங்களையும் கூறினார். பிறகு இராமர் அந்த ஒன்பது பிராம்மணர்களின் பெயர்களைக்கொண்டு பூமியில்பிரஸித்தியை அடைந்தார் அன்று முதல் ஒன்பது என்ற எண்ணிக்கை யுள்ளவைகள் எதுவும் இராமருக்கு வெகுபிரியம்.எப்படி பனிரண்டுசூரியர்கள், இருபத்தொரு கணாதிபர்கள், பதினொரு உருத்திரர்கள், எட்டுப் பைரவர்கள் ஒன்பது துர்க்கைகள் ஏற்பட்டார்களோ அப்படியே ஒன்பது இராமர்களும் ஏற்பட்டார்கள். சூரியனுக்குப் பிரியம் பனிரண்டு ; சிவனுக்கு பிரியம் பதினொன்று; மஹாத்மாவாகிய கணேசருக்குப் பிரியம் இருபத்தொன்று; பைரவருக்குப் பிரியம் எட்டு; துர்க்கைக்குப் பிரியம் ஒன்பது; இப்படியே இராமருக்குப் பிரியமானதும் ஒன்பது. ஏ சீடனே! ஆகையினால் ஒன்பது புஷ்பங்களில் அர்ச்சித்து அஞ்சலிசெய்வது இராமருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கும்.

இராமருக்குரிய இரண்டு வகையான பூஜையை விளக்கும்

5-வது சருக்கம்

முற்றிற்று.

4 - வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

சுவாமியே! தாங்கள் ஸ்ரீராமருடைய ஆயிரத்தெட்டு நாமங்களுக்கும் நூற்றெட்டு நாமங்களுக்கும் பத்ரங்கள் கூறினீர்கள். ஸ்ரீராமரைப்பூஜிப்பதற்குக்கூறிய இரண்டுவித பத்ரங்கள் எப்படிப் பட்டவைகள்? அவைகளை எவ்விதம் எழுதுவது? அவைகளின் விசேஷங்கள் எவ்வளவு? இவ்விரண்டு பத்ரங்களேயும் உள்ளபடி தெரிந்துகொள்ள வேண்டுகின்றேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

ஸ்ரீ இராமதாஸர் கூறுகிறார்.

ஏ விஷ்ணுதாஸ! ஸ்ரீராமநாம அடையாளமுள்ளவைகளும் மனதுக்கு ஆனந்தத்தை விளைக்கக் கூடியவைகளும் மங்களகரம் பொருந்தியவைகளுமாகிய பத்ரங்களின் விவகாரங்களைக் கூறுகின்றேன். ஸ்ரீராமநாம அடையாளமுள்ள நூற்றெட்டு பத்ரங்கள் மிகவும் சிலாக்கியமானது. இதில் இராம முத்திரையை உபாஸிக்க வேண்டும். உபாஸிக்கிறவர் உருத்திரரென்று கூறப்படுவர். இது ஸ்ரீராமருடைய சின்னங்களடங்கின பத்ரமாகையால் பெரியோர்கள் இதைச்சிலாக்கியமென்று கூறுகிறார்கள். இதற்கு அகலத்திலும் நீளத்திலும் இருநூறுரேகைகள் உண்டு அவைகளில் முதலில் கறுப்பு வர்ணமுள்ள மண்டலமும், பிறகு சிவப்பு வர்ணமுள்ள மண்டலமும், அதன் பின் வெளுப்பு வர்ணமுள்ளமண்டலமும், பின் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமுமிருக்கும். மூலைகளில் சந்திரன்போல் மூன்று ஸ்தானங்களுண்டு, சந்திரன்போன்ற மண்டலத்திற்கு முன்னால் கறுப்புவர்ணமுள்ள சங்கிலிபோன்ற கோடுகளைப் பனிரெண்டு பாதங்களுடன் அமைக்கவேண்டும், பிறகு மஞ்சள் வர்ணமுள்ள இருபத்துமூன்று பாதங்களடங்கிய கொடிபோன்ற கோடுகளை அமைக்கவேண்டும். பிறகு மஞ்சள்வர்ணமுள்ள பனிரெண்டு பாதங்களுள்ள சங்கிலியை அமைக்கவேண்டும். இருபதாவது பாதத்தில் அமைத்திருக்கும் பத்திரம் சிவப்பாகவாவது வெளுப்பாகவாவது இருக்கலாம். பதின்மூன்று இருபத்தாறு

இவ்விண்டு ஸ்தானங்களும் வெண்மையா யிருக்க வேண்டும். சிரஸானது நான்கு ஸ்தானங்களுடனும், கறுப்பு வர்ண முள்ளதாயு மிருக்கவேண்டும். நாபியானது இரண்டு ஸ்தானங்களையுடையதா யிருக்கவேண்டும். மூலபாகமும் ஸ்கந்த பாகமும் ஆறு ஸ்தானங்களுடனிருக்க வேண்டும் இருபக்கங்களும் நான்கு ஸ்தானங்களுடனிருக்க வேண்டும். பிறகு சிவப்பு வர்ணமுள்ள மரியாதை என்று பெயரமைந்த பனிரண்டு ஸ்தானங்களுள்ள மண்டலமிருக்கவேண்டும். மரியாதை என்ற மண்டலத்தைச்சுற்றி லிங்கமுத்திரைகளு மிருக்கவேண்டும். இவ்விதம் ஒன்பது ஹாரர்களும் எட்டு முத்திரைகளும் கூறப்பட்டிருக்கின்றன. கடைசி அடையாளங்களுக்கு மேற்பாகம், நான்கு பக்கங்கள் இவ்விடங்களில் பதினாறுமண்டலங்கள், ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரம், இவைகள் வெண்மை அல்லது மஞ்சள் வர்ணமாயிருக்கவேண்டும். சிவப்பு வர்ணமுள்ள பத்ரத்திற்குரிய ஸ்தானங்களுக்கு இஷ்டப்படி வர்ணங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். மத்தியில் உள்ள லிங்கம் ஸ்கந்தம் நேத்திரங்கள் இவைகள் வெண்மை வர்ணமுள்ளவைகளா யிருக்கவேண்டும் லிங்கத்திலும் ஸ்கந்தத்திலும் உள்ள சங்கிலிகள் வெண்மையான வர்ணமுள்ளவைகளா யிருக்கவேண்டும். கீழ் முகமுள்ளதும் ஹாரை மேமேல கொண்டதுமான பத்ரம் சிவப்புவர்ண முள்ளதாயிருக்கவேண்டும். குறுக்காக இருக்கும் பத்ரங்கள் வெண்மைவர்ணமுள்ளதாயும்பதினெட்டுஸ்தானங்களுடன்கூடியதாயுமிருக்கவேண்டும்.பிறகு வரிசைக்கு மேற் பக்கத்தில் வெண்மையான வர்ணமுள் மண்டலமும், அதற்கு மேல் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் இருக்கவேண்டும். இவ்விதம் முதல்வரிசையைச் செய்துகொள்ளவேண்டும். இரண்டாவது வரிசையின் விசேஷத்தை இதற்கு முன் ஒருவருக்கும் கூறினதில்லை. ஆயினும் உனக்குக் கூறுகின்றேன். இதில் முத்திரைகள் ஏழு; மண்டலங்கள் பதினான்கு; பத்திரங்கள் சிவப்புவர்ண முள்ளவைகள்; ஸ்தானங்கள் ஆறு;மற்றவைகள்யாவும், முன் கூறியது போலவே யிருக்கவேண்டும்.

பிறகு மூன்றாவது வரிசையில் ஐந்து முத்திரைகளும் ஆறு ஹாரர்களும் பத்து மண்டலங்களும் முப்பது பத்ரங்களும் முப்

பது ஸ்தானங்களுமிருக்கவேண்டும். பிறகு நான்காவது வரிசையில் மூன்று ஹாரர்களும் நான்கு முத்திரைகளும் நான்கு மண்டலங்களும், எட்டு பத்ரங்களும் ஒன்பது ஸ்தானங்களும் இருக்கவேண்டும். வெண்மை மஞ்சள் இவ்வர்ணங்களுக்கு மத்தியில் சிவப்புவர்ணமுள்ள மண்டலமிருக்கவேண்டும். ஐந்தாவது வரிசையில் முத்திரையும், இரண்டு ஹாரர்களும் நான்கு மண்டலமும் நான்கு பத்ரங்களும், தொண்ணூறு ஸ்தானங்களுமிருக்கவேண்டும். வெண்மை சிவப்பு மஞ்சள் இவ்வர்ணமுள்ள மண்டலங்கள் முன்போலிருக்கவேண்டும். ஆறாவது வரிசையில் ஒரு முத்திரையும் இரண்டு மண்டலமும் ஒன்பது ஸ்தானங்களும் மூன்று பத்ரங்களும் மூன்று மண்டங்களுமிருக்கவேண்டும். மத்தியிலும் நான்கு பக்கங்களிலும் ஒன்பது ஸ்தானங்களுள்ள பத்ரங்களிருக்கவேண்டும். சந்திரன்போன்ற மூன்று ஸ்தானங்களையும் கறுப்புவர்ணமுள்ள ஐந்து ஸ்தானங்களையுமுடைய சங்கிலிகள், பதினொரு ஸ்தானங்களையுடைய கொடி ஒன்பது ஸ்தானங்களையுடைய பத்ரங்கள், அல்லது இருபத்து நான்கு ஸ்தானங்களுள்ள பத்ரங்கள் வெண்மை வர்ணமுள்ள மண்டலம் இவைகளிருக்கவேண்டும். அன்றியும் பதினாறு ஸ்தானங்களில் மத்தியில் இஷ்டமான வர்ணமுள்ள பத்ரத்தை அமைக்கலாம். பத்மத்தின் நுனியை வெண்மைவர்ணமாக அமைக்கவேண்டும். பாக்கியுள்ளவைகளைத் தன் புத்தியினால் அமைத்துக்கொள்ள வேண்டும் இவ்விதம் நூற்றெட்டு நாமங்களையுடைய இராமலிங்க சொரூபங்கள் கூறப்பட்டன. இந்தப் பத்திரத்தில் வேதமறிந்த பெரியோர்கள் முன் இராஜ்யகாண்டத்தில் உத்தரார்தத்தில் பதினெட்டாவது சருக்கத்தில் சொல்லப்பட்ட முத்திரையின் சொரூபம்போல் அமைத்துக்கொள்ள வேண்டும். அங்குப் பனிரண்டு ஸ்தானங்களையுடைய பனிரண்டுவரிசைகளும் அந்தவரிசைகளில் கிழக்குத்திக்கு முதல் கிரமமாகவர்ணங்களும் அமைக்கவேண்டும் முதல் ஏழு வரிசைகள் கறுப்புவர்ணமுள்ளவைகளாக இருக்கவேண்டும். உயரத்திலும் கீழ்ப்பக்கத்திலும் ஐந்து ஐந்து வரிசைகள் உண்டு. அதன் கிரமத்தைக் கூறுகிறேன். முதல்வரிசைக்கு உயரத்திலுள்ள ஐந்து வரிசைகளில் முதல் வரி

சையையும் வடகிழக்கு வரிசையையும் கறுப்புவர்ணமுள்ளவைக ளாக அமைக்கவேண்டும். அதற்குக் கீழ் இரண்டாவது வரிசை யில், ஒன்று இரண்டு, நான்கு, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பதி னொன்று, இந்த ஸ்தானங்களை கறுப்பு வர்ணமுள்ளவைகளாக அமைக்கவேண்டும். அதற்குக்கீழ் மூன்றாவது வரிசையில், நான்கு, ஏழு, பதினொன்று, இவைகளைக் கறுப்பு வர்ணமுள்ளவைக ளாக அமைக்கவேண்டும். அதற்குக்கீழ் நான்காவது வரிசையில் ஒன்று இரண்டு நான்கு ஆறு ஏழு ஒன்பது பதினொன்று இந்த ஸ்தானங்களையும் அதற்குக்கீழ் ஐந்தாவது வரிசையில், ஒன்று இரண்டு நான்கு ஆறு ஒன்பது பதினொன்று. இந்த ஸ்தானங் களையும் கறுப்பு வர்ணமுள்ளவைகளாக அமைக்கவேண்டும்.

ஐந்து வரிசைகளிலும் ராஜா என்ற இரண்டு அக்ஷரங்களை வெண்மை வர்ணமுள்ள வைகளாக அமைக்கவேண்டும். அதற்குக் கீழ் ஐந்து வரிசைகளுக்குள் முதல் வரிசைகளில் முற்கூறியது போல் வர்ணங்களையும் அதற்குக் கீழ் இரண்டாவது வரிசையில், ஒன்று இரண்டு நான்கு ஆறு ஏழு ஒன்பது பத்து பனிரண்டு இந்த ஸ்தானங்களில் கறுப்பு வர்ணங்களையும்அமைக்கவேண்டும். மூன்றா வது வரிசையில் நான்கு ஆறு ஏழு பனிரெண்டு இந்த ஸ்தானங் களையும் நான்காவது வரிசையில் ஒன்று இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பது பத்து பனிரெண்டு இந்த ஸ்தானங்களையும், ஐந்தா வது வரிசையில் ஒன்று இரண்டு நான்கு ஆறு ஏழு எட்டு ஒன் பது பத்து பனிரெண்டு இந்த ஸ்தானங்களையும் கறுப்பு வர்ண முள்ளவைகளாக அமைக்கவேண்டும். ராமா என்ற இரண்டு அக்ஷ ரங்களையும் ராஜா ராமா என்ற நான்கு அக்ஷரங்களையும் மாறுத லான ராம ராஜா என்ற அக்ஷரங்களையும் எழுதவேண்டும். அல் லது ராம ராம என்று மூன்றுவதாகவும் எழுதலாம். கீழ் ஐந்து வரிசைகளிலுள்ள விசேஷங்களாவன. நான்காவது வரிசையின் முதல் ஸ்தானத்தை கறுப்புவர்ணமாகச் செய்யவேண்டும். ஆகிரு தியைக் கவனிக்காமல் ராமநாமத்தைப் பார்க்கவேண்டும்.

மேல்வரிசைகளில் ராம ராம என்றுவது இருக்கலாம் முதல் வரிசை முன்போல் இருக்கலாம். அதன்பிறகு இரண்டாவது

வரிசையில் ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு ஒன்பது பதினொன்று இந்த ஸ்தானங்களையும் மூன்றாவது வரிசையில் ஒன்று ஐந்து ஆறு பனிரண்டு இந்த ஸ்தானங்களையும் நான்காவது வரிசையில் ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஏழு எட்டு ஒன்பது பதினொன்று இந்த ஸ்தானங்களையும் கறுப்பு வர்ணமுள்ள வைகளாகச் செய்யவேண்டும். ஐந்தாவது வரிசையில் ஒன்று இரண்டு மூன்று ஆறு ஏழு எட்டு ஒன்பது பதினொன்று இந்த ஸ்தானங்கள் கறுப்பு வர்ணமுள்ளவைகளாக விருக்கவேண்டும். ராமா என்ற இரண்டு அக்ஷரங்கள் வெளுப்பு வர்ணமுள்ளவைகளாக விருக்கவேண்டும். இந்த நான்கு நாமங்களையும் நான்கு பக்கங்களிலும் ஏற்படுத்த வேண்டும்.

இலகு முத்திரையுடன் கூடின இராமலிங்கமென்னும் பெயருள்ள பத்ரத்தைக் கூறுகிறேன். அதை நீ சாவதானமாகக்கேள். இதற்கு நீளத்திலும் அகலத்திலும் ஐம்பத்தொரு ரேகைகளுண்டு. ஒவ்வொரு ரேகையும் ஏழு ஏழு ஸ்தானங்களை உடையது.

மஞ்சள் வர்ணமுள்ள இரண்டு மண்டலங்களையும் மூலைகளில் மூன்று ஸ்தானங்களுடன் வெண்மை வர்ணமுள்ள சந்திரனையும் அமைக்கவேண்டும். ஆறு ஸ்தானங்களுடன் கூடின கறுப்பு வர்ணமுள்ள சங்கிலியையும் பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின கொடியையும் அமைக்கவேண்டும். இதில் எட்டு ஸ்தானங்கள். பச்சை கறுப்பு இவ்வர்ணங்களுட னிருக்கவேண்டும். கொடிக்குச் சமீபத்திலுள்ள பத்ரத்தை மூன்று ஸ்தானமுள்ளதென்றும், சிவப்பு வர்ணமுள்ளதென்றும் அறியவேண்டும். அறுபது ஸ்தானங்களுடன் கூடியது இம்முத்திரை. அவைகளில் கிழக்கு தெற்கு வரிசைகளை நீக்கி, ஓரங்களிலுள்ள ஸ்தானங்களையும் நான்கு பிறகு, நான்கு அதன்பின் நான்கு ஆறு, இந்த ஸ்தானங்களையும் இரண்டு வரிசைகளையும் ஏழாவது வரிசைக்குக் கீழுள்ள ஸ்தானத்தையும் மையினால் பூரணம் செய்ய வேண்டும். அந்த இடங்களில் பாதியில் ராம என்ற பத்ரத்தையும் எழுதவேண்டும்.

முதலாவது மூன்று முத்திரைகளுக்கும் அதற்கு எல்லைகளாக மண்டலங்களு மிருக்கவேண்டும். சிவப்பு வர்ணமுள்ள பத்ரம் இரண்டும் அதற்குமேல் மஞ்சள் வர்ணமுள்ள இரண்டு ஸ்தானங்களும், வீதிபோல் கொடியுமிருக்க வேண்டும் இரண்டாவது வரிசையில் ஒரு முத்திரை, இரண்டு மண்டலங்கள் இரண்டு சுவர்கள், ஒன்பது ஸ்தானங்கள் இவைகளுடன் கூடின பத்ரம், லிங்கம், கொடி, இவைகளையும், இவைகளுக்கு மத்தியில் ஆறு ஸ்தானங்களுடன் கூடின மஞ்சள் வர்ணமுள்ள பத்ரம் என்பதையும், லிங்கத்திற்குமேல் நான்கு ஸ்தானங்களுள்ள சிவப்பு வர்ணமுள்ள பத்ரத்தையும் பச்சை வர்ணமுள்ள லிங்கம் ஸ்கந்தம் இரண்டு ஸ்தானங்களுள்ள வீதி மஞ்சள்வர்ணமுள்ள பத்ரம் ஒன்று, சிவப்பு வர்ணமுள்ளவைகள் இரண்டு ஆகிய மூன்று பத்ரங்கள் இவைகளையும் ஏற்படுத்தவேண்டும். பிறகு நான்கு பக்கத்திலும் பத்ரங்கள், இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் கூடின வாபி, மடிஸ்தானத்தில் உள்வீடு இவைகளை ஏற்படுத்தவேண்டும் பிறகு கொடி மூன்று ஸ்தானமுள்ள பத்மம் ஐந்து ஸ்தானங்களுடன் கூடின சங்கிலி, இவைகளை ஏற்படுத்தவேண்டும். பிறகு மண்டலமமைத்து பத்மத்திற்கு மத்தியில் சிவப்பு வர்ணமாவது விசித்திர வர்ணமாவது கொடுக்கவேண்டும். கடைசியில் வெளுப்பு சிவப்பு மஞ்சள் கறுப்பு இந்த வர்ணங்களுள்ள மண்டலங்கள் ஏற்படுத்த வேண்டும். இந்தப் பதினாறு முத்திரைகளுடன் கூடிய இராமலிங்கமென்னும் பெயருள்ள பத்ரத்தை உடையவரும் ஸதானந்த சொரூபரும் சித்சொரூபரும் துக்கமற்றவரும், எங்கும் பிரகாசிக்கிறவரும், நித்யரூமாகிய ஸ்ரீராமனை உபாசிக்கிறோம்.

இராமலிங்கத்துடன் கூடின மானி இராஜாவாக ஏற்படுகிறான். எல்லோரையும் ஸந்தோஷப்படுத்தி வைப்பதால் இராமனென்றும், யோகிகளால் அடையத்தக்கவ ரென்றும் பரஞ்சோதி என்றும் சொல்லப்படுகிறார். எந்தப் பரம்பொருளிடத்தில் பூதங்கள் லயத்தை அடைகின்றனவோ எவரிடமிருந்து பூதங்கள் உண்டாகின்றனவோ அந்த சொரூபத்தைப் பிரம்ம ஞானிகள் பரா

காச மென்று கூறுகிறார்கள். மங்கள சொரூபியான பகவான் இராமர் என்றும் லிங்கமென்றும் இரண்டுபெயரை உடையவராகிறார். மஹாத்மாவாகிய ஸ்ரீராமருக்கு அனேகம் பெயர்களுண்டு. பூமியிலுள்ள தூளிகளை ஒருவன் எண்ணினாலும் எண்ணுவான். ஸர்வேசுவரனாகிய ஸ்ரீ ராமருடையபெயர்களை எண்ணமாட்டான். அவர் விஷயத்தில் ஸர்வதோபத்ரம் என்பது இருதயஸ்தானமாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸர்வதோ பத்ரத்தில் எட்டு இதழோடு கூடினதும் தூளிகள் உள்ளதும் மொட்டுடன் கூடியதுமான பத்மம் இருப்பதால், அந்தஸ்தானம் ஸ்ரீராமரை தியானம் செய்யத்தக்கதாகிறது அப் டிக் கில்லாவிடில், எங்கும் நிறைந்த பரமாத்மாவுக்கு தேசம், காலம் முதலிய அவஸ்தைகள் ஏது? சித் சொரூபராகிய இந்தப் பரமாத்மா தன் மாயைக்கு ஸ்வாதீனமாகவிருக்கும் தன்மையை அடைந்து தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம், இவைகளுக்காக சிருஷ்டியை விரும்பினார். அந்தச் சைதன்னியமாகிற சந்திரனுக்கு, பதினாறு கலைகளாகிய இவைகள் சிதம்சத்துடன் கலந்து கடம் முதலியவைகளை அடைந்து, ஸ்வபாவகுணத்தினால் பிரகாசிக்கின்றன. கிரகிக்கிறதும் விடுகிறதுமான புத்தி என்பது சத்துவகுணமுள்ளது. மங்கள சொரூபராகிய பரமாத்மாவுக்குச் சமீபமாயுள்ளது. ஆகையினால் அந்தப் புத்தி ஞானத்தை முக்கியமாக உடையது. அந்த ஞானம் கண் முதலியவைகளில் பரவி ரூபம் சப்தம் முதலியவைகளை விசேஷமாக அறிகிறது அந்தப் புத்தியானது விருத்தியின் பேதத்தினால் நான்கு விதமாக ஆகின்றது. அந்த விஷயத்தினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஆகையால் விஸ்தரிக்கவில்லை

பிராணன் கிரியைகளை முக்கியமாக உடையது. தன் விருத்தியினால் பிராணன், அபானன், வியானன், ஸமானன், உதானன், என ஐந்துவிதமாகிறது. வாக்கு முதலிய கர்மேந்திரியங்களில் உள்ள கிரியை பிராணனை ஆசிரயித்திருக்கிறது. காது, கண் மூக்கு, தோல், நாக்கு இந்த ஐந்து இந்திரியங்களும் ஞானத்தை ஆசிரயத் திருக்கின்றன. வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இந்த ஐந்தும் கர்மேந்திரியங்கள். . இவ்விதம் கலைகள்

பதினாறு என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அந்தப்பதினாறு கலைகளில் சைதன்யமென்று பிரசித்தி உள்ள இராம நாமம் பிரவேசித்து எப்போதும் பிரகாசிக்கின்றது. அதனால் உலகமெல்லாம் அசைகின்றது.

கருமமாகிய வேர் பழம் இவைகளுள்ள அநாதியான ஸம்ஸாரமே விருக்ஷம். தேகத்தில் அபிமானம் உள்ள ஜீவர்கள் பழங்களைப் புசிக்கிற பக்ஷிகள் இவர்கள் ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட சுகதுக்கங்களை அனுபவிக்கிறார்கள். ஒருவன் அநேக ஜன்மங்களுக்குள் எந்த ஜன்மத்தில் ஞானமடைகிறானோ அப்பொழுது இராம சொரூபத்தைத் தன்னிடத்தில் இருப்பதாக அறிந்து மோக்ஷத்தை அடைகிறான். இந்திரியங்களை உயர்ந்தவைகளென்றும் அவைகளைக் காட்டிலும் புத்தி உயர்ந்ததென்றும் அதைக்காட்டிலும் பரமாத்மா உயர்ந்தவரென்றும் ஸர்வஸாக்ஷி என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இரண்டுபக்ஷிகள் ஒருவிருக்ஷத்தை ஆசிரயித்திருக்கின்றன. அவ்விரண்டு பக்ஷிகளுக்குள் ஒரு பக்ஷி ருசியான பழத்தைப் புசிக்கிறது. மற்றொருபக்ஷி பார்த்துக்கொண்டிருக்கிறது. மூன்று ஸ்தானங்களுக்குள் எது புசிக்கத்தகுந்ததோ எவன் புசிக்கிறவனோ எவன் புசிக்க யோக்யனோ இவர்களைக் காட்டிலும் விலக்ஷணனாகவும் ஸாக்ஷியாகவும் இருப்பவன் ஆத்மாவென்று அதர்வணவேதம் கூறுகிறது. இங்கு எது இருக்கிறதோ எது பிரகாசிக்கிறதோ எது ஆனந்தத்தை அடைகிறதோ அந்த தேஜோரூபத்தில் சகல ரூபங்களும் சேர்ந்திருக்கின்றது. விஷயம் முதல் புத்திவரையில் உள்ள ஆத்ம சொரூபமற்ற ஜடமாகிய சகலமும் எவருக்குப் பிரியமாகிறதோ அவர் மஹாத்மாவென்றும் மஹானென்றும் பிரியரென்றும் ஏற்படுகிறார். அவர் ஆத்ம சொரூபி. எல்லோருக்கும் வேண்டியவர். அவர் எங்கும் ஒருவராக விளங்குகிறார். எவன் குருவினால் கொடுக்கப்பட்ட (சொஹம்) என்ற உபதேசத்தினால் உபாஸனை செய்து சித்சொரூபியான இராமனை மனதிற்கண்டு ஞானத்தை அடைகிறானோ அவனுக்குச் சம்ஸாரத்தில் ஒரு செய்கையுமில்லை. சாஸ்திரங்களில் கூறியுள்ள எல்லா உபாயங்களும் எதைத் தெரிந்துகொள்ள ஏற்பட்டிருக்கின்

றனவோ, அது குருவின் உபதேசத்தினால் மனதில் உண்டானால் அதன் பிறகு வேண்டுவது என்ன? இவ்விதம் அமைக்கப்பட்ட இந்தப் பத்ரத்தைப் பார்த்து விசாரித்து விஷயம் தெரிந்துகொண்டால், அப்பொழுது வித்வான்களாகிய ஸாதுக்களுக்கு மிகுதியான பிரீதி உண்டாகும். சாந்த ரூபரும் லிங்கரூபங்கொண்டவரும் சுகத்தை உண்டு பண்ணுகிறவரும் விஷ்ணு சொரூபரும் சிவசொரூபருமான ஸ்ரீராமருக்கு நமஸ்காரம்.

அல்லது முதலாவது ஸ்தலத்தில் ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரத்தை ஏற்படுத்தி குறுக்காக ஓர் பத்ரத்தையும் ஏற்படுத்தவேண்டும். ஆறு ஸ்தானங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். ஒருபத்ரம் சிவப்பாகவும் மற்றொன்று மஞ்சள் வர்ணமுள்ளதாகவும் இரண்டாவது ஸ்தலத்தில் உள்ளதாகவும் பத்ரம் சிவப்பு வர்ணமுள்ள இருபது ஸ்தானங்களுடன் கூடினதாகவும் இருக்கவேண்டும் குறுக்காக விருக்கும் பத்ரம் ஒன்பது ஸ்தானங்களுடன் மஞ்சள் வர்ணமுள்ளதாகவும் சங்கிலிகள் சித்திரவர்ணமுள்ளதாகவும் சங்கிலிகள் இரண்டு ஸ்தானங்களுடன் கூடினவைகளாகவும் அமைக்கவேண்டும் பாக்கியுள்ளவைகளை முன்போல் அமைத்துக்கொள்ளவும். இது ராமதோபத்ரம் என்பது. ஸ்ரீராமருக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கக் கூடியது.

ஆனந்த கனரும் மாயையை அதிக்கிரமித்தவரும் விகாரங்களற்றவரும் பற்றுத லில்லாதவரும் வித்தைக்குப் பிரபுவும் ஆறு குணங்களுக்கும் ஆசிரயமா யிருப்பவரும் பிரபுவுமான ஸ்ரீராமரை நமஸ்காரம்செய்து இராமர் என்ற பெயருள்ள பத்ரத்தைக் கூறுகிறேன்.

வடகிழக்கில் இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது ரேகைகளைச் சமமாக ஏற்படுத்தி, அந்தஸ்தானங்களில் மூலைகளுக்கு மத்தியில் மேற்பக்கத்திலும் மஞ்சள் வர்ணமுள்ள இருபத்தொரு மண்டலங்கள் ஏற்படுத்தவேண்டும். மூலைகளில் பத்மத்தை வெளுப்பு வர்ணமுள்ளதும் சங்கிலிகள் கறுப்புவர்ணமுள்ளதும் கொடிகள் வெளுப்புவர்ணமுள்ளதுமாக இருக்கவேண்டும். அநேகவித அமைப்புகளுள்ள சிவப்புவர்ணமுள்ள பத்ரங்கள் வெண்மை

வர்ணமுள்ள முத்திரைகளுடனும் சிவப்பு வர்ணமுள்ள மண்டலங் களுடனு மிருக்கவேண்டும். இவ்விதம் பூர்த்திசெய்தால் முனி வர்களுக்கு மிகுதியான பிரீதியை உண்டுபண்ணும்.

முத்திரை அறுபது ஸ்தானங்களுள்ளதாக இருக்கவேண்டும். அங்கு தெற்கு, கிழக்கு, இந்த வரிசைகளில் நீங்கிய மற்ற வரிசை களில் தனித்தனியாக மூலைகளிலுள்ள நான்கு ஸ்தானங்களையும் ஆறு நான்கு இந்த ஸ்தானங்களையும் கறுப்பு வர்ணமுள்ளதாகச் செய்ய வேண்டும். ஏழாவது வரிசை வரையில் ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்தினால், அழகுள்ள ராம என்ற ஸாரமான இரண்டு அக்ஷ ரங்கள் விளங்கும். அது பரமசிவன் ஜபம்செய்யக்கூடியது. பிரா ணனை விடுங்காலத்தில் ஜபம் செய்கிறவர்களுக்கு மஹாலோகத் தைக் கொடுக்கக்கூடியது இந்த ராமா என்ற இரண்டு அக்ஷரங் களையும் ஒன்றாவது வரிசை முதல் இருபதாவது வரிசை வரையில் நன்றாக அமைககவேண்டும்

இராம முத்திரைகள் எல்லாவற்றிலும் மத்தியில் இரண்டு மண்டலங்களும் முதலாவது இருபத்தைந்து முத்திரைகளும் இருபத்து மூன்று முத்திரைகளும், பிறகு அதன்பின் இருபத்தொன்றும், பிறகு, இருபது, பதினேழு, பதி னாறு, பதினான்கு, பதிமூன்று, பனிரண்டு, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்றுமாக முத்திரைகளை ஏற் படுத்தவேண்டும்.

பத்ரங்கள் பதினாறு ஸ்தானங்களுடனிருக்கலாம். இருபது, முப்பது, முப்பத்தாறு, பதினாறு, இருபத்தைந்து, முப்பது, நாற் பத்திரண்டு, இருபது, இருபத்தைந்து, முப்பத்தாறு, நாற்பத்திர ண்டு, இருபது, முப்பது, முப்பத்தாறு, பதினாறு, முப்பது, நாற் பத்திரண்டு, இருபது இந்த ஸ்தானங்களுடனும் கூடின பத்ரங்களை நான்கு பக்கங்களிலும் அமைக்கவேண்டும். இருபத்தோராவது ஸ்தானத்தில் வாபியையும் மண்டலத்திற்கு கடைசியில் சிவந்த தாம ரைப்பூவையும் பத்ரங்களுக்குமேல் உள்ள ஸ்தானங்களைப் பெரி தாகவும் அமைத்துக் குறுக்காக உள்ள பத்ரங்களுக்கும் சங்கலி களுக்கும் தன் புத்தியை அநுஸரித்து ஸ்தானங்களைப் பூர்த்தி

செய்துக்கொள்ள வேண்டும். எல்லா ஸ்தானங்களிலும் சங்கிலி களும் ஐந்து ஸ்தானங்களுடன் கூடின பதினொரு கொடிகளும் மூன்று ஸ்தானங்களுடன் கூடின சந்திரன் வெளிப்பக்கத்தில் வரிசையாக மண்டலங்கள் அந்த மண்டலங்கள் கிரமமாக கறுப்பு சிவப்பு வெளுப்பு மஞ்சள் இந்த வர்ணங்களுடன் கூடியவைக ளாகவும் நான்கு திசைகளிலும் இருக்கவேண்டும். இது ஆயிரத் தெட்டு நாமங்களுக்குரிய பத்ரம், அன்றியும் பதினைந்து ரேகை களை விருத்திசெய்து அங்கு மண்டலம் கற்பித்து, நூற்று இருபத் தொரு லிங்கங்களையும் ஏற்படுத்தி வாபிகள் பத்ரங்கள் சந்திரன் இவைகள் முதலியவைகளை நான்கு பக்கங்களிலும் இருபத்து நான்கு ஸ்தானங்களுடன் கூடின லிங்கத்தையும் பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடின வாபியையும் ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களையும் பதினாறு ஸ்தானங்களுடன் கூடின ஆறு பத்ரங்களையும் முப்பது லிங்கங்களையும் இருபத்தேழு வாபி களையும் அமைக்கவேண்டும். இருபக்கத்திலும் பதினாறு ஸ்தானங் களுடன் கூடின லிங்கங்களை அதிகமாகக்கொண்ட இரண்டு பத் ரங்களை அமைக்கவேண்டும், பாக்கியுள்ள ஸ்தானங்களில் மடிப்பிர தேசமுள்ள ஸ்தானத்தையும் கிருகங்களையும் அமைக்கவேண்டும். லிங்கங்கள் கறுப்பு வர்ணமுள்ளவைகளாகவும் வாபிகள் வெளுப்பு வர்ணமுள்ளவைகளாகவும் இருக்கவேண்டும். பாக்கியுள்ளவைக ளில் முன் சொன்னதுபோல் எந்த எந்த இடங்களில் பத்ரங்கள் சங்கிலிகள் இவைகள் ஏற்படுத்தவேண்டுமோ அந்த அந்த விடங்க ளில் பத்ரங்களையும் சங்கிலிகளையும் போடவேண்டும்.

கடைசியில் கறுப்பு சிவப்பு வெண்மை மஞ்சள் இந்த வர்ணங் களுள்ள மண்டலங்கள் போடவேண்டும். இவ்விதம் இராம ருடைய லிங்கத்துடன் கூடின பத்ரத்தைக் கூறினேன். இதனால் இராமரும் சிவனும் பிரீதியை அடைகிறார்கள். இராமரைப் பூஜிப் பதற்கு இந்தப் பத்ரத்தை ஆஸனமாகச் சொன்னேன்.

ஆசாரியர்கள், ஞானத்தினால் உயர்ந்த பெரியோர்கள் இவர் களை நமஸ்காரஞ்செய்து அவர்கள் அனுக்கிரகத்தினால் சிவனுடன் கூடின இராமருடைய பத்ரத்தின் கிருதியையும் இராமருடைய

பத்ரத்தின் பிரகிருதியையும் லிங்கத்துடன் கூடின விகிருதியையும் சொல்லுகிறேன்.

அகலத்திலும் நீளத்திலும் நூற்றுமூன்று ரேகைகளும் அந்த ஸ்தானங்களில் ஆறு மண்டலங்களும் இவ்வாறு மண்டலங்களுக்குக் கடைசியில் மஞ்சள் வர்ணமுள்ள ஆறுமண்டலங்களும் மூலைகளில் மூன்று ஸ்தானத்துடன் கூடின வெளுப்புவர்ணமுள்ள சந்திரனும் கறுப்புவர்ணமுள்ள சங்கிலியும் ஐந்துஸ்தானங்களுடன் கூடின பதினொரு கொடிகளும் நான்கு பதினாறு பனிரெண்டு ஆறு இந்த விடங்களில் வீடுகளும் ஏற்படுத்த வேண்டும் எட்டு வீடுகளிலும் முன்போல் இராமமுத்திரையைக் கற்பிக்கவேண்டும். எட்டு ஆறு ஐந்து நான்கு மூன்று ஒன்று இந்த விடங்களில் மரியாதை என்று பெயருள்ள சிவப்பு வர்ணமுள்ள மண்டலங்கள் ஒன்று அதிகமாகப்போடவேண்டும். ஒன்று இரண்டுநான்கு இந்த இடங்களில் மரியாதை என்ற பெயருள்ள ஆறு மண்டலங்களைப் போடவேண்டும். கடைசியான மண்டலத்திற்குச் சமீபத்தில் ஸர்வதோ பத்ரத்தை எழுதவேண்டும். இதற்குப் பிறகு இருபத்து நான்கு ஸ்தானங்களுடன் கூடின வாபி, ஒன்பது ஸ்தாபனங்களுடன்கூடின பத்ரம், மண்டலத்திற்கு மத்தியில் சிவப்புவர்ணமுள்ள பத்மம், மஞ்சள்வர்ணமுள்ள மொட்டு, கடைசியில் மஞ்சள் வெளுப்பு சிவப்பு கருப்பு இந்த வர்ணமுள்ள மண்டலங்கள் இவைகளையும் பத்ரங்களுக்குமேல் பாக்கியுள்ள ஸ்தானங்களையும் புத்திபால் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும். குறுக்காக இருக்கும் பத்ரம் சங்கிலி இவைகள் மஞ்சள் கலந்த சித்திரவர்ண முள்ளவைகளாயிருக்கவேண்டும்

இது இராமருடைய நூற்றெட்டு நாமங்களுக்குரிய பத்ரம் ஒன்றும் பிறப்பிறப்பற்றதும் ஸகல உலகங்களுக்கு ஸ்தானமும் ஸத் சித் ஆனந்தம் இவைகளோடு கூடியதும் பிரபஞ்ச சொரூபமும் மாயையின் சேர்க்கையில் பிரம்ம விஷ்ணு சிவன் என்றுபெயரமைந்ததும் மலமற்றதும் சிருஷ்டி பரிபாலனம் நாசம் இவைகளுக்குக் காரணமும் வேதமறிந்தவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்படுவதும் ஸகல பூதங்களும் ஆத்மாவும் எல்லாம் அறிந்த

தும் ஸகல சக்தியுள்ளதும் சங்கடங்களைப் போக்கக் கூடியதும் அமிருதசொரூப முள்ளதுமான தேஜஸை நான் தியானம் செய்கிறேன்.

தேவபதத்தைக் கொடுக்க வல்லமையுள்ள குருவினுடைய பாதகமலத்தை நான் நமஸ்கரித்து ஸாதுக்கள் மனசுக்கு சமத்காரத்தை உண்டுபண்ணும் அத்யாத்ம விஷயமான வரலாற்றைக் கூறுகிறேன் கேள்.

பசுக்களின் நகங்கள் ரோமங்கள் முதலியவைகளெல்லாம் பிரயோஜனப்படக் கூடியவைகளே. உயிரை இழந்த மனித சரீரத்தை வேறு விதமாக உபயோகப்படுத்துவது தோஷத்திற்குக் காரணமாக ஆகிறது. இந்த மனுஷனால் ஆத்மசொரூபத்தை அடையும் ஞானம் ஒன்றுதான் சாதிக்கத்தக்கது. அந்த ஞானமில்லாவிடில், பசுக்களைக்காட்டிலும் குறைவுள்ளவனாக ஆகிறான். கோடி மனுஷியர்களுக்குள் ஒருவன் புதிதுபுதிதாகத் தோன்றும் அறிவை அடைந்தவனாகவும் பரிசுத்தனாகவும் குருவிடத்திலும் விஷ்ணுவினிடத்திலும் சிரத்தை உள்ளவனாகவும் ஏற்படுகிறான். அவன் முடிவில் நாராயணனாகவே ஆகிவிடுகிறான்.

ஒருவன் இராமதோ பத்ரத்தையும் அறுபது ஸ்தானங்களுடன் கூடிய இராம முத்திரையையும் கவனத்துடன் விசாரிப்பானாகில், இந்தப் பிரம்மாண்டத்திலிருக்கும் ஏழு உலகங்களையும் காண்பான்.

பிரம்மாண்டம் இராமதோ பத்ரமென்றும் இராமமுத்திரை பூதங்களென்றும் இராமர் என்னும் சைதன்னியத்துடன் கூடியதென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

எந்தவிடத்தில் வஸ்துவானது அமைக்கப்படுகிறதோ அதை முத்திரை என்று கூறுகிறது. அர்த்தத்தினால் முத்திரையை உடையது சின்னத்தை உடையதென்றும் மறைக்கப்பட்டதென்றும் சொல்லப்படும். அத்தன்மைபோல் ஸகல முத்திரைகளும் பிர்ம்ம சொரூப முடையவைகள். அவ்விதம் இந்த முத்திரைக் குள்ளும் புறம்பும் சைதன்யம் விளங்குகின்றது. ஸ்படிக

மயமான கலசத்தில் வைத்திருக்கும் தீபம் மூடப்பட்டிருந்தாலும் உள்ளும் புறம்பும் பிரகாசிப்பதுபோல் விளங்குகின்றது. பொன் முதலியவைகளை உருக்கும் குகைக்குள்ளிருக்கும் தாம்பிரம் எவ்விதம் மாறுதலை அடைந்து குகைபோலவே ஆகின்றதோ அவ்விதம் விகாரமில்லாத பிர்ம்மம் முத்திரைக்குள் அமைக்கப்பட்டால், முத்திரைபோலவே பிரகாசிக்கிறது. ஈசுவரன் முதலில் ஜீவன்களை உண்டுபண்ணி அந்த ஜீவன்களிடம் தான் பிரவேசிக்கிறார். இவ்விதம் கண்வசாகையிலும் மற்ற விடங்களிலும் பிரஸித்தமாகச் சொல்லியிருக்கின்றது, ஈசுவரன் ஏகன் என்றும் அவர் ஸ்வாதீனத்தில் எல்லாம் உள்ளனவென்றும் ஸகல பூதங்களினுள் இருப்பவர் என்றும் வேதங்கள் கூறுகின்றன. ஈசுவரன் ஜீவன்களைச் சிருஷ்டித்து ஸந்தோஷத்தை அடையாமல் மானிடர்களுக்குரிய இந்த இராமமூர்த்தியைச் சிருஷ்டி செய்து ஸந்தோஷத்தை அடைந்தார். தேவதைகள் இந்த முத்திரையைப்பார்த்து புண்யமென்று கூறினார்கள் என்று நிச்சயமாகத் தெரியவருகின்றது. ஸர்வ பூதங்களைச் சிருஷ்டிப்பதற்கு முன் ஸந்தோஷங் கொள்ளாத பரமபுருஷன், பரப்பிர்ம்ம சொரூபத்தை அறிந்துகொள்வதில் தீக்ஷ்ண்யமாகிய புத்தியுள்ள மானிடனைப் பார்த்து, ஸந்தோஷமடைந்தார் என்று ஏ விஷ்ணுதாஸ! நாங்கள் கேள்விப்படுகின்றோம்.

தேவருக்கு (முத்) என்பது ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதாலும் துக்கத்தையும் பாபங்களையும் உருகும்படி செய்வதாலும் முத்திரை என்பது மந்திர சாஸ்திரத்தில் பிரஸித்தமாக இருக்கின்றது. ஆகையினால் எல்லாத் தேகங்களிலும் ஸத்சொரூபம் இருக்கின்றன. இந்த முத்திரை உள்ளவன் சொர்க்கத்திற்கும் மோக்ஷத்திற்கும் அதிகாரியாவான். உலகத்தில் பிரஸித்தியுள்ள ஒரு மானுடன் இராஜமுத்திரையினால் அடையாளம் செய்துகொண்டானாகில் அந்த மானுடனை அதிகாரி என்றெண்ணுகிறார்கள்; வெகு ஆதரவுடன் பூஜிக்கிறார்கள். அவ்விதம் இந்த இராமமுத்திரையினால் அடையாளங்கொண்டவன் சாஸ்திரங்களை அப்பியாஸஞ் செய்ய அதிகாரியாகிறான். மற்ற ஜன்மங்கள்

ஆத்ம சொரூபத்தின் ஸ்தானத்தை அறிந்துகொள்ளச் சக்தியில்லாதவைகள்.

மானுட சரீரத்தில் அறுபது ஸ்தானங்க ளிருக்கின்றன. அவைகளைச் சுருக்கமாகவும் நன்றாகவும் கூறுகிறேன் கேள்.

காரண சரீரத்தில் அவித்தை, காமம், கர்மம், போக்தா, போகம், சுஷுப்தி இவ்வாறு ஸ்தானங்களிருக்கின்றன.

ஏ விஷ்ணுதாஸ! தமஸ், அஞ்ஞானம், அவித்தை இந்தச் சப்தங்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன. ஆகையினால் இந்த ஆறு ஸ்தானங்களில் குணங்களைக் கிரகிக்கும் தன்மையில்லை. லிங்க சரீரத்தில் அவித்தை, காமம், தமம் இவைகள் மூன்றும் உண்டு. ஆனாலும், மூன்று ஏதுக்கள் இருக்கின்றன. காரியமில்லாமற்போனாலும் காரணத்தில் காரணரூபத்துட னிருக்கின்றது. காமியமான தர்மத்திற்கும் சூக்ஷ்மரூபமிருக்கின்றது. காரணசரீரத்தில் அவித்தை முக்கியமாக இருக்கின்றது. உண்மையில் காமமில்லை என்பது வேதத்தின் தீர்மானம். சூக்ஷ்மசரீரத்தில் முப்பத்தெட்டு ஸ்தானங்கள் இருக்கின்றன. பத்து இந்திரியங்கள் ஐந்து பிராணன்கள் புத்தி மனசு இந்தப் பதினேழும் லிங்கசரீரத்தைச் சேர்ந்தவைகள். இது சாஸ்திர சம்மதம். விஷயங்களைக் கிரகிக்கும் குணங்கள் ஐந்து, கர்மங்களின் செய்கைகள் ஐந்து, பிராணகாரியங்கள் ஐந்து, சங்கற்பம், நிச்சயம் இவ்விதம் பதினேழு தருமங்கள் சாஸ்திரத்தில் பிரசித்தி யுள்ளவைகளாகவிருக்கின்றன. சொப்பனத்திற்கு அபிமானிகளாகிய போகங்கள் ரஜஸ்ஸு ஸ்தூலதேகத்தில் பதினாறு ஸ்தானங்கள் அபானம் வியானம் இவைகளுடைய ஸ்தானத்தில் பாயு, தோல், வாக்கு, மார்பு, பிராணன், மனசு, புத்தி இந்த ஸ்தானங்களிலும் போக்தா, போகம், ஜாக்ரதை இந்த அவஸ்தைகள் இந்த குணங்கள் உண்டென்று புத்திமான்கள் கூறுகிறார்கள். வேதம், சித்து இந்த சொரூபங்கள் அடங்கின இந்த முத்திரை இவைகளைத் தெரிந்து கொண்டவனுடைய ஜன்மம் கடைத்தேறும். இல்லாவிடில் பெரிய தவறுதல் ஏற்படும்.

எந்த இராமருடைய பெயரால் இந்த முத்திரை அமைக்கப் பட்டதோ அந்த இராமருடைய மகிமையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். யோகிகள் களங்கமற்ற பரானந்த சொரூபத் தில் ரமிக்கிறார்கள் என்றும் உலகங்களை ரமிக்கும்படி செய்கிற தனால் இராமரென்றும் கூறுகிறார்கள்.

ஜீவன்கள் இந்த ரஸத்தினால் ஜீவிக்கிறார்கள். ரஸசொரூபரா கிய இந்தப் பரம்பொருளை அடைந்து, எல்லோரும் ஆனந்தத்தை அடைகிறார்கள். உலகங்களில் பிரவேசம் செய்த பரமபுருஷ னால் உலகம் யாவும் அசைகிறது. அந்தப் பரமபுருஷனை அசை யச்செய்ய சக்தியுள்ளவன் யாருமில்லை. அந்தப் பரமபுருஷன் இராமரென்று சொல்லப்படுகிறார். எல்லா உலகங்களும் எவரால் நிலைநிற்கின்றனவோ அவர் ஸத் எனப்படுவர். அசத்தாக இருக் கும் வஸ்துவுக்கு ஸத் என்ற தன்மையைக்கொடுப்பவர் இராமர் என்று சொல்லப்படுகிறார். பரப்பிரம்ம சொரூபத்தைக் கூறுவது இராமநாமமென எப்படிப் பிரஸித்தியா யிருக்கிறதோ அவ்விதமே லிங்கத்தின் பெயரும் பரமாத்மாவுக்கு ரூபமாகிறது. பரமாத்மா விடம் பூதங்கள் லயத்தை அடைகின்றன. அவரிடம் உண்டா கின்றன. ஆகையினால் அவரை லிங்கமென்றும் பரமாகாசமென் றும், நிஷ்களரென்றும், பரமசிவரென்றும், தத்துவத்தை அறிந்த வர்களும், சாஸ்திரங்களைக் கற்றவர்களுமான பெரியோர்கள் கூறு கிறார்கள். அந்தர்யாமியாகிய ஈசுவரனுடைய நாமங்கள் ரூபங் கள் சப்தத்தாலும் ரூபத்தாலும் வேறுபோல் காணப்படுகின் றன. உண்மையில் பேதமில்லை அவர்தான் பிரம்மா, சிவன், விஷ்ணு, இந்திரன், அக்ஷரம், பரமன், ஸ்வராட் என்று வேதம் சொல்லுகிறது. ஸகல வஸ்துக்களிலும் ஈசுவரனுடைய ஸச்சி தானந்தங்கள் வியாபித்திருக்கின்றன. எல்லாவேதங்களின் ஆதியிலும் மத்தியிலும் முடிவிலும் குருவின் உபதேசப்படி இராமப் பிரம்மத்தைக் கூறவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்

ஐதரேயமென்னும் உபனிஷத்தில், ஆதியில் ஆத்மா ஒன்று 'கவே இருந்தது; அவர் தன்னிச்சையால் உலகங்களையும் உலகத்

தைப்பாலனம் செய்பவர்களையும் சிருஷ்டிசெய்து, தேவர்களுக் குரிய ஆகாரத்தையும் இருப்பிடத்தையும் ஸிருஷ்டிசெய்து, பிறகு அவைகளில் தான் பிரவேசித்து, தானே இந்திரனாக விளங்குகிற தென்றும் கூறுகிறது. அன்றியும், "ஆத்மாயார்" என்றகேள்வி யில் எதனால் பார்க்கிறானோ எதனால் ஆக்ராணம் செய்கின்றானோ என்பது முதலியவைகளாலும் இருதயம் முதலியவைகளாலும் ஆத்மாவென்பதை நிச்சயஞ் செய்யப்பட்டிருக்கிறது. பிரக்ஞான ரூபமாகிய இதன் நாமங்களைச்சொல்லி, அந்தப் பிரக்ஞானம் எங்கு மிருப்பது என்பதை இவர் தான் பிரம்மம் என்ற சப்தங்களால் ஸகல ஜகத்துக்கும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பிரக்ஞானம் என்பது கண்; பிரக்ஞானத்தில் ஸகலமும் அமைக்கப்பட்டிருக் கின்றன வென்ற விஷயங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின் றன. அந்தப் பிரக்ஞானம் என்பது இராம ஸச்சிதானந்தகனம். இதிற் சந்தேகமில்லை. தைத்திரீயக சாகையில் பிரம்மத்திற்கு இலக்ஷணம், ஸத்தியம் ஞானம் அனந்தம் என்று சொல்லி, வேதம் முதலியவைகளின் இலக்ஷணத்தையும் சொல்லி, எவன் இவை களை அறிகிறானோ அவன் ஒரே சமயத்தில் ஸகல காமங்களையும் அடைகிறான்.

ஞானத்திற்குப் பலத்தைச்சொல்லி ஞானமே பிரம்மசொரூப மென்று கூறி பூதங்களின் உற்பத்தியையும் பஞ்சகோசங்களை அறிவிக்கும் வழியையும், அதன் பலத்தையும் அவைகள் ஆத்மா இல்லாமலிருக்க முடியாதென்ற தன்மையையும் காண்பித்து (புச் சம் பிரம்மம்) என்று நிச்சயித்து, தோற்றத்தால், அது அஸத்ஸத் என்றும் அஸத் ஸத்தாக ஆகிறதென்றும் சொல்லி, பிறகு தான் பல உருவத்தை அடையவேண்டுமென்று ஆசைகொண்டு இவ்வு லகத்தைச் சிருஷ்டித்துப் பஞ்சபூதங்களாக ஆயிற்றென்றும் கூறு கிறது. ஈசுவராம்சம் இருக்கும் போது பிராணன் அபானன் இவை களின்சேஷ்டை உண்டாகிறது. அவர்தான் ஆத்மா; ரஸரூபர் என்ற பெயருடன் எல்லோரையும் ஸந்தோஷப் படுத்துகிறார். அந் தப் பிரம்மமே காற்றுமுதலியவைகள் சஞ்சரிப்பதற்குக்காரணம் மானிடர் முதல் பிரம்மதேவர் வரையில் தேவர்கள் ஒவ்வொரு வகைக்கு நூறு மடங்கு ஆனந்தம் அதிகமாக உடையவர்கள். அந்த

ஆனந்தங்கள் பரப்பிர்ம்மத்தின் ஆனந்தத்தின் பிந்துக்கள் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. தேகங்களில் இருப்பவனும் சூரியனிடத்திலிருப்பவனும் ஒருவன் என்று எண்ணங் கொண்டவனை அவன் செய்த புண்ய பாபங்கள் துன்பப்படுத்தா என்று நன்றாக நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது அந்தப் பரபிர்ம்மம் இராமரென்று நிச்சயித்திருப்பதில் சந்தேகமில்லை. சாந்தோக்கிய உபநிஷத்தில் ஸ்வேதகேதுவுக்கு உபதேசம் செய்த விஷயங்களும் ஸ்ரீராமரைப்பற்றியவைகளே. வேறு வேதசாகையைக்கொண்டும் பிர்ம்மவித்தையை மானிடஜன்மத்தை அடைந்தவன் அறியவேண்டும். இல்லாவிடில் பெரிதானகெடுதியாகும் என்று சொல்லியிருக்கிறது. வேதம் பிர்ம்மத்தின் மகிமையைவிளக்கியிருக்கிறது. அந்த மகிமையைக் குருமுகமாக இராமரென்று தெரிந்துகொள்ளவேண்டும். முண்டகோபநிஷத்தில், பிர்ம்மவித்தை உயர்ந்ததென்றும், பிர்ம்மத்தை அறிவதற்கு வேதமேகாரணமென்றும், அநேக திருஷ்டாந்தங்களால் சிருஷ்டி பரிபாலனம் பிரளயம் இவைகளுண்டென்றும் சொல்லியிருக்கின்றது. பிரபஞ்சம் பாவும் இராமசொரூபம், அவருடைய ஒளியால் ஸகலமும் பிரகாசிக்கின்றன. எவன் எல்லோருக்கும் விஷயமில்லாததும் தன் இருதய குகையில் இருப்பவருமாகிய ஈசுவரனைத் தியானம் செய்கிறானோ அவன் அவித்தையினின்றும், விடுபடுகிறான். பிரும்ம சொரூபத்தை அடையவேண்டுமானால் ஈசுவரன் கிருபையினால் தான் அடையவேண்டும். எந்தச் சாதனத்தினால் பரமபிரபுவை அடைய விரும்புகிறானோ, அந்தச் சாதனத்தினாலேயே தான் ஈசுவரனை அடையவேண்டும்; வேறு சாதனங்களால் அடையமுடியாது. பலமற்றவர்களால்இந்தச் சொரூபத்தை அடையமுடியாது. எவர்கள் சாஸ்திரங்களை விசாரித்து ஸன்னியாஸிகளாகி அந்தக்கரணம் சுத்தமானபின் சொரூபத்தைப் பார்க்கிறார்களோ அவர்கள் வெகு காலஞ்சென்ற பின் ஸம்ஸாரத்தினின்று விடுபடுகிறார்கள்; நதிகள் எவ்விதம் ஸமுத்திரத்தில் மறைகின்றனவோ அவ்விதம் எல்லோரும் பிர்ம்மசொரூபத்தில் அடங்குகிறார்கள். பிராரப்தகருமம் நீங்கியபின் மோக்ஷத்தை அடைகிறான். எவன் சிரேஷ்டமான பிரம்மத்தை அறிகிறானோ அவன் பிர்ம்மமாகவே ஆகிறான். உபனிஷத்தின் ஓர் பிரிவில்

பிர்ம்மம் பரிபூர்ணமான வஸ்து வென்றும் ஆதி நடு முடிவு இவைகள் அற்றதென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

பரோக்ஷ ரூபத்திலுல் பூர்ணமாயிருக்கும் பிர்ம்மம் தத் என்னும் பதத்திலுல் அடையாளமுள்ளதாக ஆனதும், பிரத்தியக்ஷரூபத்திலுலும் த்வம் என்னும் பதத்திலுலும் ஸகல பூதங்களில் இருப்பதும், பூர்ணம் என்று வேதம் நிரூபணம் செய்வதற்கு முன்னமே பூர்ணமாக இருப்பதும் சாஸ்திரம் முதலியவைகளாலும் உபநிஷத்து வசனங்களிலுலும் அகண்டமென்றும் ஏகரஸமென்றும் உபாதியற்றது என்றும், பூர்ணமென்றும் சேஷமாக இருக்கக் கூடியது என்றும் சொல்லப்படுவதாகிய பிர்ம்மந்தான் யோகிகளால் தியானம் செய்யத்தக்க நித்தியமாகிய இராமரென்று சொல்லப்படுகிறது. ஸகல தருமங்களையும் நிஷேதம் செய்து வேதத்தில் வர்ணிக்கப்பட்டதும் கீதையில் கிருஷ்ண பகவான் ஏ அர்ஜுனு! நான் ஸகல ஜகத்துக்கும் உற்பத்தி நாசம், இவைகளுக்குக்காரணம்; என்னிடம் நூலில் மணிகள் கோக்கப்பட்டிருப்பதுபோல், ஸகல உலகங்களும் சேர்ந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டதும், மற்ற சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் வர்ணிக்கப்பட்டதுமான பிர்ம்ம சொரூபத்தை அறியும் பொருட்டு முக்கியமான ஏதுவேண்டும். எல்லாமானுடர்களும் வெளியில் சஞ்சாரம் செய்யும் இந்திரியங்களை உடையவர்கள். ஆகையிலுல் தான் பிர்ம்மசொரூபம் நன்ருகப் பிரகாசிப்பதில்லை. பிரபுவிலுல் சிருஷ்டி செய்யப்பட்ட, அந்த இந்திரியங்களைக் கொண்டு, மனதிலிருக்கும் ஆத்மாவைப் பார்ப்பதில்லை. மானுடர்களெல்லாம் பணம் ஸ்திரீகள் சரீரம் காமன் இவர்களுக்குத் தாஸர்களாயிருக்கிருர்கள். ஆகையிலுல் சித்சொரூபம் பிரகாசிக்கவில்லை. ஆத்மசொரூபமும் ஆனந்தசொரூபமும் குணூதீதமும் ஸாக்ஷிசொரூபமுமாகிய பிர்ம்மம் பிரகாசித்தால்; அவனுக்கு மற்ற எந்தவஸ்துவும் ருசிக்காது. பிருஹதாரண்யகோபநிஷத்தில், தன்னிடத்தில் புருஷன் இருக்கிருன் என்று அறிந்தானே யாகில், அவன் யாருடைய இஷ்டத்திற்கும், எதையும் செய்யவிரும்பான், அவன் சரீரம் எதற்காகத் தாபத்தை அடையும் என்றும் சொல்லியிருக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்

-ஜனனுக்கு எவன் ஆத்மாவிடம் மிகுதியான பிரீதியுள்ளவனும் தான் திருப்தியுள்ளவனும் தன்னிடம் ஸந்தோஷத்தை உடையவனுமாக இருக்கிறானோ அவனுக்குச் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமில்லை என்று கூறியிருக்கிறார். அகத்தில் விருப்பமுள்ள மானுடன் தனிமையான இன்பத்தை அடையமாட்டான். பெண்ணாசை மக்களாசை இவைகளில் விருப்பமுள்ளவனாகி எப்போதும் பொருள் சம்பாதிக்க முயற்சிக்கிறான். மூடனாகிய மானுடன் புத்திரனில்லாதவனுக்குப் பரலோகமில்லை என்பதைக்கேட்டு புத்திரனை அடைவதற்காக முதலாவது வெகுபிரயாசத்துடன் விவாகத்தில் மனமுடையவனாகி ஸ்திரீயை அடைகிறான். தேவர்கள் புண்யதீர்த்தங்கள் இவைகளை ஸேவிப்பதனால் புத்திரர்களை அடைந்து, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் யாகங்களைச்செய்வதற்கும் தனங்களில் விருப்பத்தினால் எப்போதும் மனதில் தகிக்கப்பட்டு தன்னிஷ்டப்படி பொருளை அடைவதில்லை.

நல்ல செய்கையுடையவனும், சாஸ்திரங்கள் கற்றவனும், பொருளுக்குத் தாஸனாகிப் பணமுள்ளவர்கள் வீடுதோறும் சென்று அவமதிக்கப்பட்டு, நாய்போல் சஞ்சாரம் செய்கிறான். அனேக ஜன்மங்களில் செய்த புண்யங்களால் நல்ல வம்சத்தில் ஜன்மத்தை அடைந்திருந்தாலும் துஷ்டர்களின் சேர்க்கையுடையவனாகில், ஆத்ம சொரூபத்தைப் பார்க்கமுடியாது. அப்படியிருக்க புத்தியில்லாதவர்களுக்கு ஆத்ம சொரூபத்தைப் பார்க்கும் பேச்சு ஏது? சாதுக்கள் கூடியிருக்கும் முறைப்படி ஸ்ரீராமப் பிர்ம்மத்தைத் தரிசனம் செய்ய விரும்பினால், இராமமுத்திரையைப் பூரணம் செய்யவேண்டும்.

விஷ்ணுதாஸ! பூரணம் செய்யும்விதத்தைச் சுருக்கமாகக் கூறுகிறேன். உலகத்தில் மையைச் சம்பாதித்து கண்களில் பூரணம் செய்துகொண்டால், நிதியைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறான். அத்தன்மைபோல் நான்கு ஸாதனங்களைச் சம்பாதித்த பின், இராம என்னும் சுத்தமான சொரூபத்தைப் பார்க்கிறான். தத்துவத்தை அறிந்த பெரியோர்களால், பிர்ம்மமும் அதன் சாதனமும் மாயையுடன் சேர்ந்தனவென்றும் அவித்தையுடன் சேர்ந்

தது சத்தம் என்றும் சொல்லப்படுகிறது. நான்கு பிரிவுகளுடன் கூடிய சாதனம் பூர்ணசாதனமென்று சொல்லப்படும். தனித் தனியாக உள்ள சாதனத்திற்கு நான்கு சாதனமென்று பெய ரிருக்கிறது. ஸ்மிருதிகளில் விவேகம் வைராக்கியம் சமம் முத லானவைகளும், மோக்ஷமடையவேண்டிய விருப்பமும், நான்கு சிலாக்கியமான அடையாளங்களும் தனித்தனியாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. பெண்ணாசை, பொன்னாசை, பிள்ளையாசை என்ற மூன்று ஆசைகளையு மொழித்து, ஸன்னியாஸம் செய்து கொள்தல், குரு சிச்ருஷை, சிரவணம் மனனம் நிதித்யாஸனம் முதலியவைகளை அனுஷ்டித்தலே சாதனங்களாம். மோக்ஷம் அடையவேண்டுமென்ற ஓர் சாதனத்தினால்நியாசம்முதலிய ஆறும் ஒன்று. விவேகம் வைராக்கியம், சமம் முதலியவைகளால் மட் டிலும் மோக்ஷமடைய விருப்பம் உண்டாகாது. ஆறு சாதனங்களி னால் ஆதரவு ஏற்படும். இந்தச் சாதனங்களால் பதங்களைப் பூர ணம் செய்யவேண்டும். அவைகளைக் கேட்பவர்கள் தெரிந்து கொள்ளச் சொல்லுகிறேன்.

பத்து இந்திரியங்கள், ஒன்பது துவாரங்கள், பிராணன் அபானன், மனம், புத்தி தருமங்கள் நான்கு இந்த இருபத்தேழு ஸ்தானங்களைச் சாதனங்களால் பூர்ணம் செய்யவேண்டும். அப் பொழுது இராமப் பிர்மம் பிரத்தியக்ஷமாக விளங்கும். இதனால் கிருத கிருத்தியனாக ஆகிறான். இவ்விதம் வர்ணித்ததனால் இராம தோபத்ரம் முத்திரை இவைகள் சொல்லப்பட்டன. பிறகு இரா மரைப்பற்றியும் விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஸர்வதோ பத்ரம் சொல்லப்படுகிறது. ஸ்தானத்தாலும் பெயராலும் பிர்ம் மத்தைத் தியானம்செய்தால் மானுடர்களுக்கு எங்கும் கலியாணம் உண்டாகும். பத்ரத்திற்கு வாசகமும், முக்கியமானதும், மங்களங் களுக்கும் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதும், எங்கும் பிரகாசிக் கும் வஸ்துவானதும் சொல்லப்படுகின்றன. அதிதைவம், அத் யாத்மம், இந்த இரண்டும் ஸர்வதோபத்ரம் என்று பெயரை யுடையன. உனக்கு விவரமாக வஸ்துவை அறியும் பொருட்டுச் சொல்லுகிறேன்.

முதலாவது அதிதைவத்தில் இருக்கும் பத்ரத்தைக் கூறுகிறேன். அண்டத்திற்கு இருதய ஸ்தானமாகிய பிரஹ்மலோகம் ஸர்வதோபத்ரம். இதனாலே தான் எல்லாவுலகங்களுக்கும் மங்களமுண்டாகிறது. உலகஸ்திதியின் பொருட்டு அங்கு சொர்ண மயமான கிருகம் பிரபுவினால் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தானத்தைப் பத்மமென்று தெரிந்துகொள்ள வேண்டும். அவ்விடம் ஸன்னியாஸத்தினால் சென்ற பிராணனை உபாஸிப்பதிற் பிரியமுள்ள ஸகலயோகிகளுமாகிய ஸகலபிராணிகளுக்கும் பிர்ம்மத்துடன் பிரகாசிப்பதற் குரியஸ்தானம். அவர்கள் பிர்ம்மத்துடன் இருப்பவர்கள் என்பது ஸ்மிருதிவசனம். சுருதியிலும்ஸ்மிருதியிலும் தீர்மானஞ்செய்யப்பட்ட நிர்மலமாகிய இராமமுத்திரையின் வழி இது. அத்யாத்மத்தில் இருதயம் ஸர்வதோபத்ரம் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பத்ரத்தால் எல்லா அவயவங்களிலும் கலியாணமுண்டாகும். அந்த இருதயத்தி லிருக்கும் தாமரைப்பூ பிரஹ்மத்திற்கு ஸ்தானம். இவ்வாறு வேதத்தில் கூறியிருக்கிறது. பிரஹ்மத்தினிடம் ஸ்திரமான எண்ணமுள்ள பெரியோர்களுக்குக் குருவின் உபதேசத்தினா லுண்டான ஞானத்தினால் பிரஹ்மம் பிரகாசிக்கிறது. அந்தப் பரமபுருஷன் பூமியிலும் இருக்கிறார் என்று சுருதி கூறுகிறது. பரோக்ஷமாக ஆகாது. பாதாளத்திலும் இருப்பவர் ஈசுவரன். அவர் சுருதிகளில் வியாபித்திருக்கும் தன்மையை உடையவர். எல்லா மூடர்களுக்கும் தேகத்தில் நான் என்று காணப்படுகிறார். பிரமம் உண்டாகாம லிருப்பதற்கு ஆத்மாதான் என்று மறுபடி சொல்லுகிறது. எல்லா உபநிஷத்துகளிலும் பிரஹ்மம் ஒன்று என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பிர்ம்மம் ஒன்று தான் அமிருத சொரூபம் உள்ளது என்று அதர்வணவேதம் கூறுகிறது. அது நீ தான், நீ தான் அது என்று கைவல்லியங் கூறுகிறது.

அது நீ என்று சாந்தோக்கிய உபநிஷத்து பிரஹ்மத்துக்கும் ஆத்மாவுக்குமுள்ள ஏகபாவத்தைக் காண்பித்திருக்கிறது. வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஜீவனும் ஈசுவரனும் ஒன்று என்பது ஸ்பஷ்டமான விஷயம். காணப்படுவனவும், கேட்கப்படுவனவுமான இந்த சகல பிரபஞ்சமும், பிரபஞ்சத்திற் குள்ளும் புறம்

பும் நாராயணமூர்த்தி வியாபித்திருக்கிறூர். ஆத்மசொரூப மொன்றே, இரண்டில்லை என்று சுருதிகள் பிரஹ்மத்தைப் பற்றிக் கூறுகின்றன. அந்தப் பிரஹ்மத்தைப் பூதங்களிலும் பூதங்களைப் பிரஹ்மத்திலும் பார்க்கிறவன் ஆத்மஞானியாகிருன். மனுவின் வசனப்படி ஞானத்தினுல் பிரஹ்ம சொரூபனுகி கிருத கிருத்தியனுகவும் ஆகிருன். ஸம்ஸாரத்தைக் கடந்து சீடர்களையும் கடைத்தேறச் செய்கிருர்கள். இங்கு சொன்ன சுருதியின் அபிப்பிராயத்தை வித்வான்கள் எல்லோரும் அறிவார்கள். அதிகமாகச் சொல்லுவதில் பயனில்லை என்று சுருக்கமாகக் கூறினேன்.

o

நாராயணு! அச்சுதா! ஜனர்த்தனு! வாசுதேவா! கோவிந்தா! மாதவா! முகுந்தா! இலக்ஷ்மீநாதா! விஷ்ணுவே! ஸங்கர்ஷணு! ஜன்மமில்லாதவரே! நரஸிம்மா! ஸகலலோக சொரூபா! இராம! பெரியோர்களால் கொண்டாடக் கூடியவரே! சிவ வாமனு! சீடனுகியவனைக் காப்பாற்றும். எவரால் இந்தப் பிரபஞ்சம் விகாரத்தை அடைகிறதோ, எவருடைய பிரபஞ்சத்தி லுள்ளவர்கள் அறிவுடையோர்க ளாகின்ருர்களோ, எவரிடம் இந்தப் பிரபஞ்சம் இருக்கிறதோ அந்த ஸர்வசொரூபியாகிய பரமாத்மாவுக்கு நமஸ்காரம்.

நூற்றெட்டு நாமங்களடங்கியதும், இலகு முத்திரையுடன் கூடியதுமான இராமதோ பத்ரத்தின் அனேக பேதங்களைக் கூறுகிறேன். முற்கூறிய ரேகைகளைக் காட்டிலும் இருபது ரேகைகளை அதிகமாகப் போடவேண்டும். மண்டலங்களும் இரண்டு அதிகம். அவ்விரண்டு வரிசைகளில் லிங்கங்களும், முதலாவது வரிசையில் இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் கூடின வெளுப்பு வர்ணமுள்ள பதினைந்து ருத்திரர்கள் பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின பதினுறு வாபிகள், இருபத்தாறு பத்ரங்கள் இவைகளும் இருக்கவேண்டும்.

பிறகு இரண்டாவது வரிசையில் பன்னிரண்டு ருத்திரர்கள் பதினெட்டு ஸ்தானங்களுடன்கூடினபதின்மூன்றுவாபிகள் பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின பத்ரம் இவைகளையும் மற்றவை

களையும் முன்போல ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இது நூற்றெட்டுநாமங்களடங்கின இராமலிங்கதோ பத்ரம். அல்லது முதல் வரிசையில் ஆறு முத்திரைகள், ஆறு ருத்திரர்கள், ஆறுவாபிகள், பதின்மூன்று ஸ்தானங்கள், பதினாறுபத்ரங்களிருக்கலாம். இரண்டாவதுவரிசையில் ஐந்து முத்திரைகள், ஆறு லிங்கங்கள், ஆறு வாபிகள், பன்னிரண்டுஸ்தானங்களுடன்கூடின பத்ரங்கள் இருக்க வேண்டும். மூன்றுவது வரிசையில் நான்கு முத்திரைக ளிருக்க வேண்டும். நான்காவது வரிசையில் ஐந்து முத்திரைகளும், ஐந்தாவது வரிசையில் நான்கு முத்திரைகளும், ஆறுவது வரிசையில் இரண்டு முத்திரைகளும், ஏழாவது வரிசையில் ஒருமுத்திரையும் இருக்கவேண்டும். மூன்றுவது வரிசைமுதல் எட்டாவது வரிசை வரையில் கிரமமாக ஆறு இரண்டு இரண்டு இரண்டு இரண்டும் ஒரு ருத்திரரும் ஆறு பனிரெண்டு ஆறு இருபது பதினாறு இரண்டு பத்ரங்களும் இருக்கவேண்டும் என்று ஞானமுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது. அல்லது எட்டாவது ஸ்தானத்தில் முத்திரை ஏற்படுத்தி அங்குள்ள லிங்கத்தை நான்காவது வரிசையில் ஏற்படுத்தி இருபது ஸ்தானங்களுடன் கூடின பத்ரத்தை ஏற்படுத்தவேண்டும். முத்திரைகள் எல்லாவற்றிலும் மத்தியில் இரண்டு மண்டலங்களையும் லிங்கம்வரையில் முத்திரை போடுவதற்கு ஸ்தானத்தையும் தனக்குத் தோன்றிய வர்ணங்களால் ஏற்படுத்திக்கொள்ளலாம். கொடிக்கும் வாபிக்கு மத்தியில் பத்ரமுமிருக்கவேண்டும். அன்றியும் சங்கிலிபோடக் கூடிய ஸ்தானங்களில் அவைகளைப் போட்டு பூர்த்திசெய்யவேண்டும். அல்லது முதலாவது வரிசையில் பத்து முத்திரைகள் எல்லைகள் மண்டலங்கள் பன்னிரண்டு ஸ்தானங்களுடன்கூடின பத்ரம் இவைகளிருக்கவேண்டும். மத்தியில் இரண்டுமண்டலமிருக்க வேண்டும். இவ்விதம் முன்வரிசைகளிலும் மண்டலங்களிருக்க வேண்டும். மூன்றுவது வரிசையில் எட்டு முத்திரைகள் நான்கு ஸ்தானங்களுடன்கூடின பத்ரம் ஐந்து முத்திரைகள் பன்னிரண்டு ஸ்தானங்களுடன்கூடினபத்ரம் இவைகள்இருக்கவேண்டும்.இங்கு இரண்டு மண்டலங்கள் கிடையா. ஏழாவது வரிசையில் மூன்று

முத்திரைகள் நான்கு ஸ்தானங்களுடன் கூடின பத்ரமும் இருக்கவேண்டும். இரண்டாவது வரிசையில் பதின்மூன்று ருத்திரர்கள் பதினன்கு வாபிகள் இருபத்தாறு பத்ரம் இவைகளிருக்கவேண்டும். நான்காவது வரிசையில் ஒன்பது ருத்திரர்கள் பத்து வாபிகள் இருபத்தாறு பத்ரம் இவைகளிருக்க வேண்டும். ஆறுவது வரிசையில் ஐந்து ருத்திரர்கள் ஆறு வாபிகள் இருபத்தாறு பத்ரம் இவைகளிருக்கவேண்டும். பாக்கி வரிசைகளை முன்போல் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அல்லது முதல்வரிசையில் பதினைந்து ருத்திரர்களும் இரண்டாவதுவரிசையில் எட்டு முத்திரைகளும் பதினெட்டு ஸ்தானங்களு மிருக்க வேண்டும் ஆறு நான்கு இவ்வரிசைகளில் ஐந்து முத்திரைகளும் ஐந்தாவது வரிசையில் நான்கு முத்திரைகளும் ஏழாவது வரிசையில் ஒரு முத்திரையும், எட்டாவது வரிசையில் ஒரு முத்திரையு மிருக்கவேண்டும். ஏழாவது வரிசை வரையிலும் இரண்டு ருத்திரர்களும் இரண்டு வாபிகளும் இருபத்தாறு ஆறு பதினறு பன்னிரண்டு ஆறு இருபது பதினறு பத்ரங்களும் கிரமமாக இருக்க வேண்டும். அல்லது முதல்வரிசையில் ஒரு முத்திரை மத்தியில் லிங்கம் பதினறு, ஸ்தானங்களுடன் கூடின பத்ரம் இவைகளை ஏற்படுத்தவேண்டும். எட்டாவது ஸ்தானத்தில் லிங்கத்தையும் இருபத்தாறு பத்ரங்களையும் ஏற்படுத்த வேண்டும். பாக்கியுள்ள ஸ்தானங்களை முன்போல் ஏற்படுத்தவேண்டும். முதல் இரண்டு மூன்று வரிசைகளில் ஐந்து, ஏழு, மூன்று ருத்திரர்கள் இருக்க வேண்டும். முத்திரைகளின் மத்தியில் எல்லையையும் மண்டலத்தையும் ஏற்படுத்தவேண்டும். முதலாவது ஆறு ஸ்தானங்களுடன் கூடின பத்ரம், இரண்டாவது பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின பத்ரம், இரண்டிரண்டு வாபிகள் லிங்கங்கள் இவைகளை ஏற்படுத்தவேண்டும். பாக்கியுள்ளவைகள் முன் கூறியது போல் அல்லது முதலாவது வரிசைமுதல் ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று ஒன்று இக்கணக்குள்ள முத்திரைகள் எல்லை மண்டலங்கள், ஆறு ஸ்தானங்களிலும் நான்கு நான்கு ருத்திரர்கள் இரண்டுலிங்கம் பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடின வாபி

கள் இவைகளிருக்க வேண்டும். இனிக் கூறப்படும் பத்ரங்கள் இருபத்தாறு, பதினாறு, நான்கு கோஷ்டங்கள் இவைகளுடன் கூடியன. பாக்கியுள்ளவை யாவும் முற்கூறியதுபோல் அல்லது முதல்வரிசை முதல் ஐந்தாவது வரிசைவரையில் ஆறு, ஐந்து, நான்கு, மூன்று முதலிய கணக்குள்ள முத்திரைகளும் மத்தியயில் ருத்திரர்களும் நான்கு இரண்டு இரண்டு இரண்டு இரண்டு எல்லைகள் மண்டலங்களும் இரண்டு லிங்கமும் பதினாறு பதினாறு பன்னிரண்டு ஆறு ஆறு பத்ரங்களும் இருக்கவேண்டும். மற்றவைகள் முன்னேகூறியது போலவே விஷ்ணுதாஸ! இவ்வாறு பல பேதங்களுட னிருக்கின்றன.

இலதுராமதோ பத்ரத்தின் விஸ்தாரத்தைக் கூறும

4-வது சருக்கம்

முற்றிற்று.

5-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! மூற் கூறிய சிலாக்கியமான முத்திரைகளு ளொன்றாகிய இராமதோபத்ரத்தின் விவரங்களைக் கூறுகிறேன் கேள். அகலத்திலும் நீளத்திலும் சிவந்தவர்ணமுள்ள அறுபத் தொரு இரேகைகளும் கடைசியில் கறுப்பு சிவப்பு வெளுப்பு மஞ்சள் இவ்வர்ணமுள்ள மண்டலங்களையு மமைக்கவேண்டும். பன்னிரண்டாவது ரேகைக்குக் கடைசியில் மஞ்சள் கறுப்பு சிவப்பு வெளுப்பு வர்ணங்களுள்ள மண்டலங்களிருக்கவேண்டும். ஐந்தா வது ரேகை மஞ்சள் வர்ணமுள்ளதா யிருக்கவேண்டும். அங்கு ஸர்வதோபத்ரத்தைஎழுதவேண்டும். பன்னிரண்டாவதுரேகைக்கு வெளிவரிசையில் எல்லைகளும் மண்டலங்களும் சிவந்த வர்ண முள்ளவைகளாக விருக்கவேண்டும். மத்தியில் மஞ்சள் வர்ண முள்ள இரண்டு மண்டலங்களும், கிருகமுள்ள விடத்தில் இரண்டு முத்திரைகளுமிருக்கவேண்டும்' நான்கு பக்கங்களிலும் முன் போல் நாமங்களையும் எழுதவேண்டும். மூலைகளில் சந்திரனை மூன்று ஸ்தானங்களுடனும் வெளுப்பு வர்ணமுள்ள தாகவும் அமைக்கவேண்டும். பதினொரு ஸ்தானங்களுடன் கூடின கறுப்பு வர்ணமுள்ள சங்கிலி மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலி பத்து ஸ்தானங்களுடன் கூடின சங்கிலி பத்தொன்பது ஸ்தானங்க ளுடன் கூடிய பச்சை வர்ணமுள்ள கொடி, ஒன்பது ஸ்தானங்க ளுடன் கூடின சிவப்பு வர்ணமுள்ளபத்ரம், வெண்மைவர்ணமுள்ள பதின்மூன்று ஸ்தானங்களுள்ள வாபி, மூன்று ஸ்தானங்களுடன் கூடின சிவப்புவர்ணமுள்ள பத்ரம், சுற்றிலும் மஞ்சள் வர்ண முள்ள பத்ரம், இரண்டு பத்ரங்களுக்கு நான்கு பக்கங்களிலும் இரண்டு ஸ்தானங்களுடன் கூடின சங்கிலி எட்டு முத்திரைகள் இவைகளுடன் கூடின இராமதோபத்ரத்தை நான் உனக்குக்கூறி னேன்.

மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலியில்லாமல் பதினெட்டு ஸ்தான முள்ள கறுப்புவர்ணமுள்ள லிங்கத்தையும் நான்கு ஸ்தானங்க ளுடன் கூடின வாபிகளையும் ஆறுஸ்தானங்களுள்ள சிவப்புவர்ண

முள்ள பத்ரத்தையும் அமைக்கவேண்டும். குறுக்கேயிருக்கிற மஞ்சள் வர்ணமுள்ள இரண்டு பத்ரங்கள், என்பது ஸ்தானங்களுடனும், நான்கு ஸ்தானங்களுடனும் கூடியவைகளாயிருக்க வேண்டும். லிங்கத்திற்கு மேல் சிவப்பு வர்ணமுள்ளதும் மூன்று ஸ்தானங்களுடன் கூடின மாலிகை, மூன்று ஸ்தானங்களுடன் கூடின ருத்திரர்கள், எட்டு முத்திரைகளுடன் கூடினதும் லிங்கங்களுடனும்கூடினதுமான இராமபத்ரம் இவைகளிருக்கவேண்டும். இது அகலத்திலும் நீளத்திலும் ஐம்பத்து மூன்று ரேகைகளுள்ளது. மற்றவைகளையெல்லாம், முன்போலவே அமைக்க வேண்டும். முத்திரைகள் மண்டலங்கள் இவைகளை ஆறு வரையில் இஷ்டப் பூரணம் செய்துகொள்ள வேண்டும்.

இது நான்கு முத்திரைகளுடனும் லிங்கங்களுடனும் கூடின பத்ரம். அகலத்திலும் நீளத்திலும் எழுபத்து மூன்று ரேகைகள் நல்ல சிவப்புவர்ண முள்ளவைகளாக ஏற்படுத்த வேண்டும். அவைகளில் நான்கு பக்கங்களிலும் கிரமமாக மண்டலங்களை ஏற்படுத்த வேண்டும். அந்த மண்டலங்கள் கறுப்பு சிவப்பு வெளுப்பு மஞ்சள் வர்ணமுள்ளவைகளாக விருக்கவேண்டும். பன்னிரண்டாவது ஸ்தானத்தின் கடைசியில் நான்கு பக்கங்களிலும் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் அதற்கு முன்னால் நான்கு பக்கங்களிலும் சிவப்பு வர்ணமுள்ள மண்டலமும் பிறகு எட்டாவது ஸ்தானத்திற்கு மேல் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் அதன்பின் ஆறாவது ஸ்தானத்திற்கு மேல் மறுபடியும் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் முதலாவது ஸ்தானத்தில் மரியாதை என்ற பெயருடைய ஸ்தானமும் அல்லது மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் பன்னிரண்டாவது ரேகைக்குக் கடைசியில் உள்ள ஸ்தானங்களில் சிவப்பு வர்ணமுள்ள நான்குமண்டலங்களும் மூலைகளில் உள்ள ஸ்தானங்களில் முன்போலவே மத்தியில் மூன்று முத்திரைகளும் இருக்கவேண்டும். பிறகு இரண்டாவது ஸ்தானத்தில் சந்திரனும் கறுப்புவர்ணமுள்ள சங்கிலியும் ஏழு ஸ்தானங்களுடன் கூடின கொடியொன்றும் பதினன்கு ஸ்தானங்களுடன் கூடின கொடிகளுக்குநடுவே ஆறு ஸ்தானங்களுடன்கூடின சிவப்புவர்ணமுள்ள

பத்ரத்தையும் அமைக்கவேண்டும். பதின் மூன்று ஸ்தானங்களுடன் கூடின வெளுப்பு வர்ணமுள்ள நான்கு வாபிகள், இருபத்தாறு ஸ்தானங்களுடன் கூடினதும் கறுப்பு வர்ணமுள்ளதுமான மூன்று ருத்திரர்களும் பதின்மூன்றுவாபிகளும்லிங்கத்தின்மத்தியிலும் ஸ்தானங்களிலும் மசியினால் இராம என்னும் நாமங்களும் இருத்தல்வேண்டும். சிரஸு நான்கு ஸ்தானங்களுடன் கூடியதாயிருத்தல்வேண்டும். கழுத்து இரண்டு ஸ்தானங்களுடன்கூடியதாயிருத்தல்வேண்டும். லிங்கமும் பக்கங்களும் நான்கு ஸ்தானங்களுடன் கூடியவைகள். பாதங்களும் தோள்களும் ருத்திரருடைய நேத்திரங்கள். ஸ்தானங்களை வெண்மை வர்ணமுள்ளவைகளாக அமைத்தல்வேண்டும் வாபிகளுக்குமேல் பாக்கியுள்ள எட்டுஸ்தானங்களில் மூன்று ஸ்தானங்களைச் சிவப்புவர்ண முள்ளவைகளாகவும், ஐந்து ஸ்தானங்களை மஞ்சள் வர்ணமுள்ளவைகளாகவும் அமைத்தல்வேண்டும். பிறகு மத்தியில் ஸர்வதோபத்ரத்தை முன்போலமைக்கவேண்டும்' எல்லா லிங்கங்களுடன் கூடின மூன்று இராம பத்ரத்தை நான் உனக்குக் கூறினேன். பன்னிரண்டு முத்திரைகளுடனும் இராமலிங்கங்களுடனும் கூடிய பத்ரம் மிக அழகுள்ளது; வெகு விசித்ரமானது; சுபங்களைக் கொடுக்கக் கூடியது' இதை ஸ்ரீராமருடைய திருப்திக்குக் கூறினேன்.

அகலத்திலும் நீளத்திலும் எழுபத்தொன்பது ரேகைகளுடன் மற்றயாவும் முன்போலமைத்துக் கொள்ளவேண்டும். நான்கு முத்திரைகளுடன் கூடின பத்ரத்தைப்போல் மத்தியிலும் முதலாவது வரிசையிலும் மூன்று முத்திரைகள் மூன்று எல்லைகள் மண்டலங்கள் மத்தியில் மும்மூன்று முத்திரைகள் எல்லைகள் மண்டலங்கள் கடைசியில் இரண்டிரண்டு முத்திரைகள் எல்லைகள் மண்டலங்கள் இவைகளை அமைக்கவேண்டும். இது பதினாறு முத்திரைகளுடன் கூடின இராமதோபத்ரம் என்பது.

கிருகத்தின் மத்தியில் உள்ள அடையாளத்திலேபதினாறு ஸ்தானங்களுடன் கூடின லிங்கமும் அகலத்திலும் நீளத்திலும் சிவப்பு வர்ணமுள்ள நானூற்று ஐம்பத்தொரு ரேகைகளும் மத்தியில் எட்டுமுத்திரைகளுள்ள இராமதோ பத்ரமும் வரைதல்வேண்டும்.

அகலத்திலும் நீளத்திலும் நான்கு பக்கங்களிலும் மஞ்சள் வர்ண முள்ள மண்டலங்களுண்டு. பன்னிரண்டாவது ஸ்தானத்திற்குக் கடைசியில் வெளிப்பக்கத்தில் மண்டலங்களும் உண்டு. மூலைகளில் உள்ள வீடுகளையும் முத்திரைகளையும் முன்போல ஏற்படுத்த வேண்டும். முன் இரண்டு முத்திரைகள் சொல்லப்பட்டிருக்கின் றன. அவற்றிற்குக் கீழ்பாகத்தில் நான்கு முத்திரைகளும், மத் தியிலும் நான்கு பக்கங்களிலும் இரண்டு மண்டலங்களும், பிறகு ஆறு முத்திரைகளும், அதன்பின் எட்டு முத்திரைகளும், ஐந்தா வது ஸ்தலத்தில் ஆறு முத்திரைகளும், நான்கு வாபிகளும், எண் பத்துநான்கு ஸ்தானங்களுடன் கூடின வாபிக்குள் பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின குண்டமும் அமைக்கவேண்டும். அவை கறுப்பு வர்ணமுள்ளவைகளாக விருக்கவேண்டும். வாபிக்குப் பக்கங்களில் சிவப்பு வர்ணமுள்ள நான்கு பத்ரங்களுண்டு. அந்தப் பத்ரங்கள் தனித்தனியாகப் பதினைந்து ஸ்தானங்களுடன் கூடினவைகள் என்று அறியவும். ஆறுவது ஸ்தானத்தில், பன்னி ரண்டு முத்திரைகளும், முன்னால் பதினான்கு, பதினாறு, பதி னெட்டு, இருபது, இருபத்திரண்டு முத்திரைகளும், இருபத்தி னன்கு, இருபத்தாறு, இருபத்தெட்டு, முப்பது முப்பத்திரண்டு முத்திரைகளும் அவைகளால் ஸ்தானங்களில் பதினாறு முத்திரை களும், பதினாறு வாபிகளும், மத்தியில் இரண்டு வாபிகளுமிருக்க வேண்டும்.

ஆயிரத்தெட்டு நாமங்களடங்கிய இராமதோபத்ரம் சொல் லப்பட்டது. அதாவது, அகலத்திலும் நீளத்திலும் சிவப்பு வர்ணமுள்ள ஐந்நூற்றுத் தொண்ணூற்றெட்டு ரேகைகளமைக்க வேண்டும். முற்கூறிய மூன்று சர்வலிங்க ராமபத்ரங்களை அவை களுக்கு மத்தியில் எழுதி, மத்தியில் உள்ள முத்திரை ஸ்தலத் தில் ருத்திரனைக் கறுப்பு வர்ணமுள்ளதாக எழுபத்திரண்டு ஸ்தா னங்களுடன் அமைக்கவேண்டும். கையினால் முப்பத்தாறு ராம நாமங்களை எழுதினாலும் எழுதலாம். அதன் நுனிப்பாகத்தை கறுப்பு வர்ணமுள்ளதாகவும், நான்கு ஸ்தானங்களுடன் சிரசை யும் அமைக்கவேண்டும். நான்கு ஸ்தானங்களால் இடையையும்

பன்னிரண்டு ஸ்தானங்களால் பக்கங்களேயும், இருபது ஸ்தானங்களால் தோள் மூலஸ்தானம் இவைகளேயும், இருபத்தாறு ஸ்தானங்களால்வெண்மை வர்ணமுள்ள இரண்டு வாபிகளேயும். இரண்டு ஸ்தானங்களால் ருத்திரருடைய கண்களேயும் வெண்மை வர்ணமுள்ளவைகளாக அமைக்கவேண்டும். பாக்கியுள்ள ஸ்தானங்களில் ருத்திரருடைய செவிகளே யமைக்கவேண்டும். இவைகளில் ஐந்து ஸ்தானங்கள் சிவப்பு வர்ணங்களாகவும் மூன்றுவது ஸ்தானங்களில் மூன்று முத்திரைகளேயும் அமைத்து இரண்டு ருத்திரர்களே ஏற்படுத்தவேண்டும். நான்காவது ஸ்தானத்தில் நான்கு முத்திரைகளேயும் மூன்று ருத்திரர்களேயும் ஏற்படுத்த வேண்டும்.

பதினென்காவது ஸ்தானத்தில் பதினென்கு முத்திரைகளேயும் பதினென்கு ருத்திரர்களேயும் அமைக்க வேண்டும். பதினைந்தாவது ஸ்தானத்தில் உள்ள முத்திரைகளேயும் ருத்திரர்களேயும் முன்போல் எழுதவேண்டும். மூலைகளிலுள்ள ஸ்தானங்களில் ஆச்சரியப் படக்கூடிய ஆறு ஸ்தானங்களுள்ள இரண்டு ருத்திரர்களே அமைக்கவேண்டும். எட்டு முத்திரைகளுடன் கூடின லிங்கங்களுள்ள பத்ரத்தில் இரண்டு முத்திரைகளுக்கு ஒரு லிங்கமாக விருத்தி செய்துகொள்ள வேண்டும். பன்னிரண்டாவது ஸ்தானத்தில் பன்னிரண்டு முத்திரைகள் இருபத்துமூன்று லிங்கங்கள் வெளிப்பக்கத்தில் மண்டபங்கள் இவைகளுண்டு. இவ்விதம் யுக்தியினுல் ஏற்படுத்தவேண்டும். பாக்கியுள்ள யாவும்முன்போலமைத்துக்கொள்க.

இப்பொழுது ஆயிரத்தெட்டு இராம நாமங்களடங்கிய பத்ரம் கூறுகிறேன். இது சிலாக்கியமானது. ஸ்ரீராமருக்குப் பரம ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. அகலத்திலும் நீளத்திலும் நூற்றறுபத்தைந்து இரேகைகளே முன்போல் அமைக்க வேண்டும். எட்டு முத்திரைகளுடன் கூடின பத்ரம் மத்தியிலும் இதைச்சுற்றிலும் மண்டலங்களுமிருக்கவேண்டும். அகலத்திலும் நீளத்திலும்பன்னிரண்டாவது ஸ்தானத்தின்கடைசியிலும்வெளிப் பக்கத்திலும் மண்டலங்களிருக்கவேண்டும். மத்தியில் எல்லே மண்டலமும், இரண்டாவது ஸ்தானத்தில் நான்குமுத்திரைகளும்

மூன்றாவது ஸ்தானத்தில் விசேஷமும் உண்டு. எட்டாவது ஸ்தானத்திலும் மூன்று முத்திரைகளும் மூன்று வாபிகளுமிருக்க வேண்டும். ஐந்தாவது ஸ்தானத்தில் பத்து பத்ரங்கள் பாக்கியுள்ளவை முன்போலவுமிருக்க அமைக்கவேண்டும். நான் உனக்கு இந்த நூற்றெட்டு நாமங்களுள்ள இராமஸேதுபத்ரத்தைக் கூறினேன்.

அகலத்திலும் நீளத்திலும் இருநூற்றுப் பதின்மூன்று ரேகைகள் முன்போலிருக்கவேண்டும். ஒரு பத்ரத்தில் எல்லா லிங்கங்களுடன் கூடின இராமபத்ரம் மூன்றையும் கூறியிருக்கிறேன். இந்த இராமஸேதுபத்ரத்தை இந்த விடத்தில் எழுத வேண்டும். பன்னிரண்டாவது ஸ்தானத்திற்கு மேல் வெண்மை வர்ணமுள்ள வாபியை எழுதவேண்டும். முன்போல் மண்டலங்களை எழுதவேண்டும். அகலத்திலும் நீளத்திலும் மண்டலங்களையும், மூன்றாவது ஸ்தானத்தில் மூன்று முத்திரைகளையும் இரண்டு ருத்திரர்களையும், நான்காவது ஸ்தானத்தில் நான்கு முத்திரைகளையும் மூன்று ருத்திரர்களையும், ஐந்தாவது ஸ்தானத்தில் ஐந்து முத்திரைகளையும் நான்கு ருத்திரர்களையும், ஆறாவது ஸ்தானத்தில் ஆறு முத்திரைகளையும் ஏழு ருத்திரர்களையும், மூலைகளில் உள்ள இரண்டு ஸ்தானங்களில் பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு ருத்திரர்களையும் ஏழாவது ஸ்தானத்தில் ஏழு முத்திரைகளையும் எட்டு லிங்கங்களையும் அங்குள்ள மூலை ஸ்தானங்கள் இரண்டிலும் இரண்டு ருத்திரர்களையும் பதினெட்டு ஸ்தானங்களையும் அமைக்கவேண்டும். இது நூற்றெட்டு இராமலிங்க ரூபமானது என்று நிச்சயிக்கப் பட்டிருக்கிறது.

ஆறாவது ஸ்தானத்தில் அல்லது மூலைகளில் உள்ள ஸ்தானத்தில் ருத்திரரை அமைக்கக்கூடாது. மூன்றாவது ஸ்தானத்தில் ஒரு முத்திரை இரண்டு வாபிகள் இரண்டு ருத்திரர்கள் இவைகளை யமைக்கவேண்டும் இது இராமநாமங்களில் நூறு அடங்கிய பத்ரமென்று சொல்லப்படுகிறது. நூற்றெட்டு இராமநாமங்களுள்ள பத்ரத்தில் மூன்றாவது ஸ்தானத்தில் ஆறு முத்திரைகளையும், ஐந்தாவது ஸ்தானத்தில் ஐந்து முத்திரைகளையும் ஐந்துவாபி

களையும் அமைக்கவேண்டும். இது நூறு முத்திரைகளுள்ள பத்ரம். ஆயிரத்தெட்டு நாமங்களுள்ள பத்ரத்தில் ஐந்தாவது ஸ்தானத்தில் ஆறு வாபிகளையும் நான்கு முத்திரைகளையும் அமைக்க வேண்டும். ஆயினும், இராம முத்திரைகளுள்ள இராமலிங்கபத்ரம் என்று சொல்லப்படும்.

ஆயிரத்தெட்டு லிங்கங்களுடன் கூடின ஆஸனத்தில் பதினான்காவது ஸ்தானத்தில் மூலையிலுள்ள ஸ்தானத்தில் ருத்திரரை ஏற்படுத்தக்கூடாது. முத்திரைகளுள்ள ஸ்தானத்தில் மத்தியில் இரண்டு வாபிகளை உண்டாக்கக்கூடாது. ஆயிரம் இராம முத்திரைகளுடனும் லிங்கங்களுடனும் கூடியது இது. 'பதினாறு நாமங்களுள்ள இராமதோ பத்ரத்தில் முதல் ஸ்தானத்திலும் மூன்று திசைகளிலும் வாபிகளிருக்கவேண்டும். மூன்று மத்தியிலும் உள்ள முத்திரைபோடும் இடத்திலும் இவ்விதமே யிருக்க வேண்டும். இது பதின்மூன்று நாமங்களடங்கிய இராமதோ பத்ரமென்று கூறப்படும். அல்லது முதலாவது ஸ்தானத்தில் மத்தியிலுள்ள முத்திரைகளில் நான்கு திசைகளில் நான்கு வாபிகளும் மற்றொரு ஸ்தானத்தில் மூன்று திசைகளில் மூன்று வாபிகளு மிருக்கவேண்டும். இது ஒன்பது முத்திரைகளுடன் கூடியதும் ஸ்ரீராமருக்கு மிகுதியான சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதுமான இராமதோபத்ரம்.

அகலத்திலும் நீளத்திலும் நூற்றுப்பதினைந்து ரேகைகள் முன் கூறியதுபோல் மத்தியில் பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின பத்ரம் மூன்று முத்திரைகளும் முத்திரையின் மத்தியில் இரண்டு வாபிகளும் பன்னிரண்டு மண்டலங்களும் எங்கும் இரண்டிரண்டு மண்டலங்களு மிருக்கவேண்டும். இது இருபத்தைந்து முத்திரைகளின் சொரூபமுள்ளன. தத்வமறிந்தவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் இராமதோ பத்ரம் என்றறியவேண்டும். மூலைகளில் உள்ள ஸ்தானங்களில் நேத்திரங்கள் உள்ளவிடத்திலும் மேற்பக்கத்திலும் லிங்கங்களையும் வாபியுள்ள விடத்தில் லிங்கத்தையும் இருபத்தைந்து ஸ்தானங்களுடன் கூடியவைகளாக அமைக்கவேண்டும். இது இருபத்

தைந்து முத்திரைகளுடன் கூடின இராமலிங்க சொரூபமாகிய பத்ரம். பிறகு ஸ்ரீராமருடைய ஆஸனத்திலிருக்கும் தேவதைகளைக் கூறுகிறேன். மத்தியிலும் ஸர்வதோ பத்ரத்திலும் தேவர்களை ஆவாஹனம் செய்து அதற்கு வெளிப்பக்கத்திலுள்ள லிங்கங்களில் ருத்திரரையும் வாபிகளில் நளனையும் பத்ரங்களில் சுக்ரீவனையும் குறுக்கேயுள்ள பத்ரங்களில் கவயனையும் மஞ்சள்வர்ணமுள்ள சங்கிலிகளில் அங்கதனையும் ஆவாகனம் செய்யவேண்டும். மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலியில்லாவிடில் நான்கு ஸ்தானங்களுடன் கூடின குறுக்கேயுள்ள பத்ரத்தில் அங்கதனை ஆவாகனம் செய்யவேண்டும். கறுப்புவர்ணமுள்ள சங்கிலிகளில் விபீஷணனையும் கொடிகளில் ஜாம்பவானையும் சந்திரன் உள்ள இடங்களில் த்விவிதனையும் முத்திரையில் சீதையுடன் இராமரையும் முத்திரைக்கு மேற்கு தெற்கு வடக்கு கிழக்கு இவ்விடங்களில் இலட்சுமணன் பரதன் சத்ருக்னன் ஹனுமான் இவர்களைக் கிரமமாக ஆவாகனம் செய்யவேண்டும். பூஜிக்கத்தக்கவன் பூஜிக்கிறவன் இவர்களுக்கு மத்தியில் கிழக்குத்திசை என்றறியவேண்டும். வெண்மை வர்ணமுள்ள மண்டலங்களில் சுஷேணனையும் எல்லா ஸ்தானங்களிலும் சகல வானரங்களையும் வெளிப்பக்கத்திலுள்ள மூன்று மண்டலங்களில் த்ரிவேணியையும் ருத்திரரைநோக்கி ஆமைக்கவேண்டும். அல்லது தனக்கு அபிமுகமாகவாவது பத்மத்திற்கு அபிமுகமாகவாவது செய்யவேண்டும். இவ்விதம் பத்ரங்களிலுள்ள விசேஷங்களைக் கூறினேன். மூன்று பக்ஷத்திலும் ஸிலாக்கியமென்று முனிவர்கள் கூறுகிறார்கள். முற்கூறிய பத்ரத்தில் தேவர்களைப் பூஜித்துப் பிறகு ஸ்ரீராமருக்குச் சிறந்த பூஜைசெய்ய விஸ்தாரமாகத் தொடங்க வேண்டும். பத்மத்தின் உச்சியில் ஸீதையுடன் இராமரை ஆவாகனஞ்செய்து பத்மத்தின் எட்டுத் தளங்களிலும் ஆவரணதேவதைகளை ஆவாகனம் செய்யவேண்டும். இவ்விதம் பூஜைசெய்ய வேண்டுமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

பத்மம் சுருக்கமாக விருக்கும் தன்மையை யோசித்து வேறு விதமாகக், கூறுகிறேன். ஸர்வதோ பத்ரத்தின் மத்தியிலுள்ள

கமலத்தில் தானியங்களைப் பரப்பி அதன்மீது ஜலம்நிறைந்த குடத்தைவைத்து அதைத் தாழைமடல்களால் அலங்கரித்து அதன் முன்பாகத்தில் அரிசி நிறைந்த பெரிய பாத்திரத்தையும் வைத்து அதன்மீது உள்ள வஸ்திரத்தில் ஆவரண தேவதைக ளுடன் கூடின ஸ்ரீராமசந்திரரைப் பூஜிக்கவேண்டும். லோகம் மரம் கல் மணல் மணல்மணிகள் இவை முதலிய எட்டுவித பிரதிமைகள் சாஸ்திரங்களில் நிச்சயம் செய்யப்பட்டிருக்கின்றன இராம பத்திரங்கள்எல்லாவற்றிலும் பூஜிக்கத் தகுந்தவர் இராகு சிரேஷ்டர்; பூஜிக்கிறவர் ருத்திரர்; பத்ரம் முதலியவைகள் பார்ஷதர்கள். ஆகையினால் ஸ்ரீராமதோபத்ரமென்று பெரியோர் கள் கூறுகிறார்கள். இவ்விதம் அநேகவித பேதங்களிருக்கின் றன. விஷ்ணுதாஸ! ஸ்ரீராமதோ பத்ரங்களைக் கணக்கிட முடி யாது. உன் முன்னிலையில் சில பத்ரங்களைக் கூறினேன். இலக்ஷ்மீ பதியைப் பூஜிப்பதற்கு மானிடர்கள் தங்கள் புத்திக்குத்தக்கபடி செய்து கொள்ளவேண்டும். ஸ்ரீராமரைப் பூஜிப்பதற்கு சிலாக்கிய மான சொர்ண நூற்களாலாவது வெள்ளி நூற்களாலாவது ஆஸனத் தை அமைக்கவேண்டும். அல்லது பட்டுவஸ்திரத்தினால் சிரே ஷ்டமான ஆஸனத்தை அமைக்கலாம். அல்லது ஒன்று மகப்படா விடில் பிராம்மணர்களைக் கொண்டு நூல்களால் அமைத்துக் கொள்ளலாம். பூர்ஜமரத்தில் எழுதினால் விசேஷமாகக் காரியஸித் தியைக் கொடுக்கும். வஸ்திரத்திற்குமேல் சித்திர வர்ண முள்ள நூற்களால் அமைக்கலாம். ஆஸனமில்லாத பூஜை பிரயோ ஜனமில்லை. இராமபத்ரமென்னும் ஆஸனத்தில் செய்யும் பூஜை மிகுதியான பலத்தைக் கொடுக்கக்கூடியது. இராமர் விஷயமாகச் செய்யும் காரியங்களில் பிராமணர்களுடன் இராமாஸனத்தி லிருக்கும் இராமரை முன்னிட்டு ஆரம்பம் செய்யவேண்டும். இராம பத்ரமென்னும் ஆஸனங்களில்லாத காரியங்களும்பயனற்ற வைகளாம். ஆகையால் இராமரைப் பூஜிப்பதற்கு இவ்விதஞ் செய்ய வேண்டும். இது ஸ்ரீராமருக்கு மிகுதியான ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதற்குக்கீழ் ஆயிரத்தெட்டு இராமதோ பத்ரம்; அதற்குக்கீழ் நூற்றெட்டு இராமலிங்கம், அதற்குக்கீழ் நூற்றெட்டு இராமதோபத்ரம், அதற்குக்கீழ் இருபத்தைந்து

ஸ்ரீராம பத்ராஸனம்; அதற்குக்கீழ் பதினாறு இராமதோபத்ரம்; அதற்குக்கீழ் பதின்மூன்று இராமதோபத்ரம்; அதற்குக்கீழ் பன்னிரண்டு, ஒன்பது, எட்டு, நான்கு, இந்த முத்திரைகளுள்ள ஆஸனங்கள் இவைகளைக் கிரமமாக அமைக்கவேண்டும். இவ்விதம் கிரமமாக ஆஸனங்களை அறியவேண்டும். சிரேஷ்டமான பலனைக் கொடுக்கும் சாமானியமான ஆஸனங்களில் பூஜைசெய்தால், சாமானிய பலனைக்கொடுக்கும். இவ்விதம் பலன்றரும் வரலாற்றைத்தெரிந்து சிரேஷ்டான ஆஸனத்தைக் கற்பித்து இராமரை உபாஸனை செய்யவேண்டும் ஒவ்வொரு வருஷத்திலும் புதிதான ஆஸனத்தை ஆதரவுடன் ஏற்படுத்தவேண்டும். ஒருவருஷத்துக்கு மேல் ஒரே ஆஸனத்தில் பூஜைசெய்வது சுபமாகாது. சீடனே! நீ முன் வினவிய ஆஸனத்தின் பேதங்களை நான் உனக்குக் கூறினேன். நீ கேட்ட இராமதோ பத்ரத்தை வர்ணிக்கும் பிரஸக்தியில் ஸ்ரீ ராமருடைய ஒரு லீலை நினைவுக்குவந்தது. அதைக் கூறுகிறேன் கேள்.

இராமசந்திரர் வருஷந்தோறும் சிராவண மாதத்தில்குருவின் வசனப்படி நாற்பது டங்கம் எடையுள்ள சொர்ணத்தினால் இலக்ஷம் லிங்கங்களைச் செய்து தினந்தோறும் ஸீதையுடன் பூஜித்து வந்தார். ஆயிரத்தெட்டு லிங்கங்களுடன் கூடின சிலாக்கியமான பத்ரமானது சிவனுக்கு மிகுதியான பிரீதியை விருத்திசெய்யும் ஆஸனம். அந்த ஆஸனத்தின் மத்தியிலுள்ள கமலத்தில் ஸ்ரீராமர் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்துப் பதினாறு வித உபசாரங்களுடன் பூஜித்து தக்ஷிணைக்காக சொர்ணமுத்திரையைக் கொடுத்து பிராம்மணரைப்பூஜித்து ஆஸனத்துடன்கூடின அந்தஸ்தானத்தை ஆதரவுடன் தனித்தனியாகக் கொடுத்தார். இவ்விதம் முப்பத்துமூன்று நாட்களில் கோடிலிங்கங்களைத் தானஞ்செய்து இந்த விதமாகவே வருஷந்தோறும் சிராவணமாதத்தில் நடத்தினர். பிராம்மணர்கள் இரகுவீரர் கொடுத்த வஸ்திரம் ஆபரணம் இவைகளால் பரமானந்த மடைந்தார்கள். ஸீதாபதியானவர் சொர்ண நூற்களாலே செய்த ஆஸனங்களில் பூஜையைச்செய்து உத்யாபனத்தையும் ஹவனத்தையும் செய்தார்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! ஆயிரத்தெட்டு நாமங்களடங்கிய லிங்கதோபத்ரத்தின் பேதங்களை விஸ்தாரமாக உபதேசஞ்செய்ய வேண்டும். ஸ்ரீராமர் சொர்ண நூற்களால் கற்பித்த ஆஸனத்தைச் செய்து சொர்ணமயலிங்கங்களையும் செய்து திவ்யவஸ்திரங்கள் ஆபரணங்கள் இவைகளை இவ்விதம் செய்யச் சக்தியில்லாவிடில், எவ்விதம் விரதம் சித்திபெறும்? இந்த விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

சக்தியிருந்தால் பட்டுவஸ்திரத்திலும் இல்லையாயின் கம்பளத்திலாவது அல்லது வஸ்திரத்திலாவது நூற்களாலாவது அமைக்க வேண்டும். அல்லது வெள்ளிதாம்பிரம் சொர்ணம் ஸ்படிகம் இந்திரநீலம் மரம் சந்தனம் கோமயம் மண் இவைகளால் லிங்கங்களைச்செய்து தன் சக்திக்குத் தக்கபடி பிராம்மணர்களைப் பூஜிக்க வேண்டும். இப்போது லிங்கதோபத்ரத்தின் அமைப்பைச் சொல்லுகிறேன்.

அகலத்திலும் நீளத்திலும் இருநூற்றுப்பதினெட்டு ரேகைகள் சிவந்தவர்ணமுள்ளவைகளாக அமைக்கவேண்டும். அவைகளுடைய ஸ்தானங்களுக்கு ஒன்றுடன் முன் சொன்ன கணக்கு ஏற்படும். ஆறுவது ஸ்தானத்திற்கு மேல் எல்லாவிடங்களிலும் மஞ்சள்வர்ணமுள்ள பதினொன்குமண்டலங்கள் அவைகளில்லிங்கம் முதலியவைகளை புத்தியினாலே செய்து கொள்ளவேணடும். நான்கு மூலைகளில் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரர்களையும் அதற்குமுன்னால் நான்கு பக்கங்களிலும் ஐந்து ஸ்தானங்களுடன் சங்கிலியையும் பதினோருஸ்தானங்களுடன்கூடின கொடியையும் முப்பது ஸ்தானங்களுடன் கூடின வாபியையும் பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடின ருத்திரரையும் கிரமமாக எழுதவேண்டும். அதில் முதலாவது மண்டலத்திற்குக்கீழ் முப்பத்து மூன்று லிங்கங்களையும், முப்பத்து நான்பிகு வாபிகளையும், இருபத்து நான்கு ஸ்தானங்களுடன் கூடின பத்ரங்கள் இரண்டையும் அமைக்கவேண்டும்.

அவைகளுக்குமேல் இரண்டு ஸ்தானங்களுள்ள சங்கிலி, மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலி, பச்சை வர்ணமும், மூன்று ஸ்தானங்களுள்ளதுமான மற்றுமொரு சங்கிலி இவைகளிருக்க வேண்டும். வாபிகளுக்குமேல் சிவப்பு வர்ணமுள்ள ஸ்தானமென்றறியவேண்டும். அறுபத்தொரு ஸ்தானங்களுள்ளதும், மஞ்சள் வர்ணமுடையதுமான மண்டல மிருக்கவேண்டும். மற்றவைகளை முன்போலமைத்துக்கொள்க. இது இரண்டாவது பந்தி. மூன்றாவது பந்தியை ஐம்பத்தொன்பது ஸ்தானங்கள், ஆறு ஸ்தானங்களுடன் கூடிய பத்ரம், ஏழு லிங்கங்கள், எட்டு வாபிகள் இவைகளுடனும் பாக்கியுள்ளவைகளை முன்போல் நாற்பத்தேழு ஸ்தானங்களுடனும் அமைக்கவேண்டும். நான்காவது பந்தி நாற்பத்தைந்து ஸ்தானங்களுடையது, பன்னிரண்டு ஸ்தானங்களுள்ள பத்ரம், ஐந்து வாபிகள், பத்ரத்திற்குமேல் நான்கு லிங்கங்கள், ஆறு ஸ்தானங்களுடன் சிவப்பு வர்ணமுள்ள கொடி, மும்மூன்று ஸ்தானங்களுடன்கூடிய மண்டலங்கள் இவைகளு முண்டு.

ஐந்தாவது பந்தி முப்பத்தொரு ஸ்தானங்களுடன் கூடியது. ஒன்பது ஸ்தானங்களுடன் பத்ரம், மூன்று வாபிகள், இரண்டு ருத்திரர்கள் பத்ரத்திற்குமேல் மூன்று ஸ்தானங்களுடன் சிவப்பு வர்ணமுள்ள சங்கிலி, பத்தொன்பது ஸ்தானங்களுடன் கூடிய மண்டபம் இவைகளையும் அமைக்கவேண்டும். முன்னுலிருக்கும் பந்திகள் பதினேழு ஸ்தானங்களுடன் கூடியவைகள். நான்கு மூலைகளுக்குச் சமமாக ஸர்வதோ பத்ரத்தை அமைக்க வேண்டும். அதன் கிரமத்தைக் கூறுகிறேன். மூன்று ஸ்தானங்களுடன் வெண்மை வர்ணமுள்ள சந்திரன், கறுப்பு வர்ணமுள்ள ஐந்து ஸ்தானங்களுடன் கூடின சங்கிலிகள், அதற்குமேற்புறத்திலும் பக்கங்களிலும் பதினெட்டுஸ்தானங்களுடன்கூடின லிங்கம் பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபிகள், நான்கு ஸ்தானங்களுடன் இரண்டு பத்ரங்கள் தெற்கு, கிழக்கு, வடக்கு, மத்தி இவைகளில் மூன்று வாபிகள், ஒன்பது ஸ்தானங்களுடன் கூடிய பத்ரம். பத்து ஸ்தானங்களுடன் கூடிய கொடிகள், கொடிகளுக்கு மேற்பக்கத்தில் ஆதியிலும் அந்தத்திலும் பச்சை வர்ணமுள்ள இரண்டு

ஸ்தானங்கள் மத்தியில் ஒரு கொடி, ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரம், அதற்குமேல் இரண்டு ஸ்தானங்களுடன் கூடிய சிவப்பு வர்ணமுள்ள சங்கிலி, வாபிகளுக்குமேல் சிவப்பு வர்ண முள்ள ஸ்தானம் பக்கங்களில் வெண்மை வர்ணமுள்ள இரண் டிரண்டு ஸ்தானங்கள் ஐந்து ஸ்தானங்களுடன் கூடிய மண்டலம் இவைகளை அமைக்கவேண்டும். ஒன்பது ஸ்தானங்களுடன்கூடி யதும் சிவப்பு வர்ணமுள்ளதும், எட்டுத் தளமுள்ளதுமான பத் ரத்தை மஞ்சள் வர்ணமுள்ள மொட்டுடன் அமைக்கவேண் டும். அந்தப் பத்மத்திற்கு வெளிப்பக்கத்தில் உள்ள மண்டலங் கள் மஞ்சள், வெண்மை, சிவப்பு, கறுப்பு, இவ்வர்ணங்களுள்ள வைகளா யிருக்கவேணடும். கிரீடம்போன்ற நூற்றிருபத் தொரு நாமங்களடங்கிய லிங்கதோபத்ரமானது எல்லாப் பத்ரங் களுக்கும் கிரீடம்போன்றது. மாணவனே! வேறுவிதங் கூறுகி றேன் கேள். அகலத்திலும் நீளத்திலும் நூற்று மூன்று ரேகை களும் மத்தியிலுள்ள விடங்களில் நூற்றிரண்டு லிங்கங்களும் நான்கு திசைகளிலும் ஒன்பது, எட்டு, ஆறு, நான்கு, இரண்டு, ஒன்று லிங்கங்களும், லிங்கங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான வாபிகளும் இருக்கவேண்டும். ஆறு வரிசைகளில் மண் டலங்கள், அதற்குமேல் வாபிகள், மூலைகளில் சந்திரன், சங்கிலி கொடி இவைகளைக் கிரமமாக அமைக்கவேண்டும். பத்தொன் பது ஸ்தானங்களுடன் இருபத்துநான்கு லிங்கங்களும், பதி னெட்டு வாபிகளும் கிரமமாக முப்பத்தாறு, இருபது, இருபத் தைந்து, முப்பது, முப்பத்தாறு, இருபது இந்தப் பத்ரங்களைக் கடைசி வரிசைக்கு அருகிலும் ஏற்படுத்தவேண்டும். ஒரு வரிசை யில் ஆறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு இரண்டு பத்ரங்க ளிருக்கவேண்டும். அதற்குமேல் ஸர்வதோபத்ரம் அதில் வாபி இருபத்துநான்கு ஸ்தானங்களுட னிருக்கவேண்டும. அதன் பிறகு மண்டலத்தின் கடைசியில் சிவப்பு வர்ணமுள்ள பதினாறு ஸ்தானங்களுடன் கூடின பத்மத்தை ஏற்படுத்தவேண்டும். கறு ப்பு வர்ணமுள்ள லிங்கம், சங்கிலி இவைகள் பச்சைவர்ணமுள்ள கொடி, சிவப்பு வர்ணமுள்ள பத்ரம், சுத்த வர்ணமுள்ள பத்மம் வாபி இவைகளை யமைக்கவேண்டும்.

நூற்றிருபத்தொரு நாமங்களடங்கிய லிங்கதோபத்ரம் கூறுகிறேன் கேள்—இது வேறுவிதம், அகலத்திலும் நீளத்திலும் எண்பத்தாறு ரேகைகளும், எண்பத்தைந்து ஸ்தானங்களும், எங்கும் பந்திகளும் உண்டு. அவைகளில் ஆறு ஆறு ஸ்தானங்களுக்குக் கடைசியில் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் நான்கு பக்கங்களிலும் இந்தக் கிரமமாகவே நான்கு மண்டலமும் மிருக்க வேண்டும். அந்தப் பந்திகளுக்குள்ளிருக்கும் ஸ்தானங்களில் தன் புத்திக்குத் தக்கபடி லிங்கம் முதலியவைகளை அமைத்துக்கொள்ளவேண்டும். மூலைகளில் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரன் அதுமுதல் சங்கிலி பிறகு கொடி பிறகு பத்ரம் வாபி லிங்கம் இவைகள் கிரமமாக ஏற்படும். அவைகளில் முதல் வரிசையில் ஐந்து ஸ்தானங்களுள்ள சங்கிலி பதினொரு ஸ்தானங்களுடன் கொடி, ஆறு ஸ்தானங்களுடன் சங்கிலி, ஒரு ஸ்தானத்துடன் பத்ரம், பதினெட்டு உள்வீடுகளுடன் வாபி, இவைகளைக் கிரமமாக அமைக்கவேண்டும். ஒன்பது ஸ்தானங்களுடன் இரண்டு ருத்திரர்கள், பத்து வாபிகள், இரண்டு பத்ரம் இவைகளிருக்க வேண்டும். இரண்டாவது பந்தியில் பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபி,பதினாறு ஸ்தானங்களுடன் பத்ரம்,எட்டுலிங்கங்கள், ஒன்பது ஸ்தானங்களுடன் வாபிகள் இவைகளையும் பாக்கியுள்ளவைகளையும் அமைக்கவேண்டும்.

மூன்றாவது பந்தியில் நான்கு ஸ்தானங்களுடன் பத்ரமும் பாக்கியுள்ளவைகள் முன்போலவு மிருக்கவேண்டும். எட்டு வாபிகள், ஏழு ருத்திரர்கள் கிரமமாக ஏற்படும்.

நான்காவது பந்தியில் நான்கு வாபிகளும், இரண்டு ருத்திரர்களும், இருபது பத்திரங்களு மிருக்கவேண்டும். பாக்கியுள்ளயாவும் முன்போலிருக்கவேண்டும். நான்காவது மண்டலத்திற்கு மேல் ஐந்தாவது மண்டலத்தின் கடைசியில் ஒரு மண்டலமு மிருக்கவேண்டும். அந்தப் பந்தியில் இரண்டு சங்கலிகளுடன் ஒரு ஸ்தானமுள்ள கொடி, இரண்டு ஸ்தானங்களுடன் கூடிய சந்திரன் இவைகளை முன்போல் அமைக்கவேண்டும். அவ்வாறு ஸ்தானங்களுடன் கூடிய இரண்டு பத்ரங்களிருக்கவேண்டும். மற்ற

இரண்டு பத்ரங்கள் ஒன்பது ஸ்தானங்களுள்ளவைகள்; அங்கங்கு பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபியை ஏற்படுத்தவேண்டும். இரண்டு பத்ரங்களுக்குமேல் ஆறு ஆறு ஸ்தானங்களுடன்கூடின இரண்டு பத்ரங்கள் சங்கிலிக்காக சிலாக்கியமான ஸ்தானங்கள் இவைகளை அமைக்கவேண்டும். அதற்குமேல் ஐந்தாவது வரிசைக்குமேல் ஒரு மண்டலத்தை அமைக்கவேண்டும். இரண்டுக்கும் மத்தியில் பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபியையும் அவ்வாறு ஸ்தானங்களுடன் இரண்டு பத்ரங்களையும் அமைக்க வேண்டும். பாக்கியுள்ளவைகளை முன்னதுபோலவே அமைக்கவேண்டும். கடைசியில் பத்து ஸ்தானங்களுடன் சித்ரவர்ணமுள்ள அல்லது சிவப்பு வர்ணமுள்ள பத்மத்தை அமைக்கவேண்டும். வெண்மை வர்ணமுள்ள சங்கிலி, பச்சை வர்ணமுள்ள கொடி, மஞ்சள் வர்ணமுள்ள இரண்டு சங்கிலி, சிவப்பு வர்ணமுள்ள பத்ரம், வெண்மை வர்ணமுள்ள வாபி, கறுப்பு வர்ணமுள்ள லிங்கம், இவைகளையும், லிங்கத்திற்கு மத்தியிலுள்ள ஸ்தானங்களையும் அழகுள்ளவைகளாகவும் அமைக்கவேண்டும். பாக்கியுள்ள இரண்டாவதில் முப்பத்தொரு ஸ்தானங்களுடன் கூடின லிங்கங்களையும், பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களையும் அமைக்கவேண்டும். மூன்றாவதில் இருத்தொன்பது ருத்திரர்கள் அவ்வாறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்கள் இவைகளை அமைக்கவேண்டும். நான்காவதில் இருபத்தாறு லிங்கங்கள் பன்னிரண்டு பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்கள் இவைகளை அமைக்கவேண்டும். ஐந்தாவதில், இருபத்துநான்கு ருத்திரர்கள் ஒன்பது ஒன்பது ஸ்தானங்களுடன்கூடின இரண்டு பத்ரங்கள் இவைகளை அமைக்கவேண்டும். ஆறாவதில் பன்னிரண்டு லிங்கங்களும் அவ்வாறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களும் ஏழாவதில் பத்தொன்பது லிங்கங்களும் பன்னிரண்டு பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின பத்ரங்களும் மிருக்கவேண்டும். எட்டாவதில் பதினேழு ருத்திரர்கள் ஒன்பது ஒன்பது ஸ்லானங்களுடன் கூடின இரண்டுபத்ரங்கள் இவைகளை அமைக்கவேண்டும். ஒன்பதாவதில் பதினைந்து ருத்திரர்கள் பதினாறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்

கள் இவைகளை யமைக்கவேண்டும். பத்தாவதில் பன்னிரண்டுஸ்தானங்களுள்ள ருத்திரர்கள், பன்னிரண்டு பன்னிரண்டு ஸ்தானங்களுள்ள இரண்டு பத்ரங்க ளிருக்கவேண்டும். பதினொன்றாவதில் பத்து ருத்திரர்கள் ஒன்பது ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்கள் இவைகளை அமைக்கவேண்டும். பன்னிரண்டாவதில் ஏழு லிங்கங்கள் பதினாறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களிருக்கவேண்டும். பதின்மூன்றாவதில் ஐந்து ருத்திரர்கள் பன்னிரண்டு பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களிருக்கவேண்டும். பதினான்காவதில் மூன்று லிங்கங்கள் ஒன்பது ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்களிருக்க வேண்டும். கடைசியில் நடு ஸ்தானத்தில் சிலாக்கியமான ஸர்வதோ பத்ரத்தை எழுதவேண்டும். மூன்று ஸ்தானங்களுடன் கூடின சந்திரனும் உண்டு. ஆறு ஸ்தானங்களுடன் கூடின சங்கிலி, பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின கொடி, இருபத்தைந்து ஸ்தானங்களுடன் கூடின வாபி, மண்டலத்திற்கு மத்தியில் பதினாறு பதினாறு ஸ்தானங்களுடன் கூடின இரண்டு பத்ரங்கள், அதற்கு மத்தியில் ஐந்து ஐந்து ஸ்தானங்களுடன் கூடின பத்மம் இவைகளை அமைக்கவேண்டும். அந்தப் பத்மம் பலவித வர்ணமுள்ள சந்திரன் கறுப்பு வர்ணமுள்ள சங்கிலி, வெண்மை வர்ணமுள்ள வாபி, கறுப்பு வர்ணமுள்ள ருத்திரன், சிவப்பு வர்ணமுள்ள பத்மம் இவைகளை எழுதவேண்டும். கறுப்பு வர்ணமுள்ள கொடியும் ருத்திரரும் தோள்பக்க மிருக்கவேண்டும். மத்தியில் உள்ள ஸ்தானங்களைத் தன்னிஷ்டப்படி சித்திர வர்ணமுள்ளவைகளாக அமைத்துக்கொள்ளவேண்டும். பாக்கியுள்ள ஸ்தானங்களில் புத்திக்குத் தக்கபடி சங்கிலிகளை யமைக்க வேண்டும். வெண்மை, சிவப்பு, கறுப்பு இந்த வர்ணமுள்ள மூன்று மண்டலங்களைக் கடைசியில் அமைக்கவேண்டும். முன் பக்கத்தில் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலங்களை அமைத்துப் பின்பு முற்கூறிய மூன்று மண்டலங்களை அமைக்கலாம். இம்மாதிரி தெரிந்துகொண்டு விருத்தி செய்துகொள்ளவேண்டும். நான்கு மண்டலத்திலும் இவ்விதமே தெரிந்து கொள்ளவேண்

டும். இது ஆயிரத்தெட்டு லிங்கங்களிலுண்டானது என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது ஒருவிதம்; வேறுவிதம் கூறுகின்றேன் கேள்—

கிழக்கிலும் வடக்கிலும் இருநூற்று ஐம்பத்தேழு ரேகைகளும் ஆறுவது ஸ்தானத்தின் கடைசியில் மஞ்சள் வர்ணமுள்ள பதினேழு மண்டலங்களும் பதினேழு லிங்கங்களுமிருக்கவேண்டும். ஒன்றுவது இரண்டாவது ரேகைகளில் இருபத்தொன்பது மண்டலங்களும், மூன்றுவதில்இருபத்தேழு மண்டலங்களுமிருக்கவேண்டும். இனிச் சொல்லுவதைக் கவனித்துக்கேள். இருபத்தைந்து இருபத்துமூன்று; இருபத்திரண்டு, இருபது, பதினெட்டு, பதினேழு, பதினைந்து, பதின்மூன்று, பதினொன்று, பத்து, எட்டு, ஆறு, நான்கு, மூன்று, ஒன்று இம்மண்டலங்களை நான்காவது முதல் கிரமமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் லிங்கங்களைக்காட்டிலும் ஒரு வாபி அதிகமாக இருக்கவேண்டும். இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் கூடினது லிங்கம், பதினெட்டு ஸ்தானங்களுடன் கூடினது வாபி. பத்ரங்களின் எண்ணிக்கைகளின் கிரமத்தை அநுசரித்தே சொல்லப்போகிற விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒன்று, ஐந்து, ஒன்பது, பதின்மூன்று, பதினேழு இந்தப் பந்திகளில் நான்கு ஸ்தானங்களுடன் கூடின பத்ரமிருக்கவேண்டும். இரண்டாவது ஆறுவது பத்தாவது பதினுன்வது இவைகளில் இருபத்தைந்து ஸ்தானங்களுடன் கூடின பத்ர மிருக்க வேண்டும்.

மூன்று, ஏழு, பதினொன்று, பதினைந்து இந்த வரிசைகளில் முப்பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரமிருக்கவேண்டும். பிறகு நான்காவது வரிசையில் இருபத்தாறு ஸ்தானங்களுடன் கூடின பத்ரமும், 'எட்டு, பன்னிரண்டு, பதினாறு இவ்வரிசைகளில் பதினாறு ஸ்தானங்களுடன் கூடின பத்ரமும், எல்லா மூலைகளிலும் சங்கிலிகளுடன் ஸ்தானங்களு மிருக்கவேண்டும். இவைகளுடன் கூடினசந்திரனை அமைக்கவேண்டும். ஐந்து ஸ்தானங்களுடனும் பதினோரு ஸ்தானங்களுடனும் கூடின கொடியை மத்தியில்

அடைக்கவேண்டும். ஸர்வதோபத்ரம் இருபத்துநான்கு ஸ்தானங்களையுடைய வாபி, ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின வாபி, ஒன்பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரம் இவைகளை நான்கு பக்கங்களிலும் அமைக்கவேண்டும். மண்டலத்திற்கு மத்தியில் தன்னிஷ்டபடி சித்திர வர்ணமுள்ளதும், சிவந்த வர்ணமுள்ளதுமான பத்மத்தையும், கறுப்பு வர்ணமுள்ள லிங்கத்தையும், சங்கிலியையும், சிவப்பு வர்ணமுள்ள பத்ரம், வெண்மை வர்ணமுள்ள வாபி, வெண்மை வர்ணமுள்ள சந்திரன், கறுப்பு வர்ணமுள்ள கொடி இவைகளையும் அமைக்கவேண்டும். பாக்கியுள்ள ஸ்தானங்களை, பத்ரம் முதலியவைகளை அமைப்பதற்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கடைசியில் மஞ்சள், வெண்மை, கறுப்பு, சிவப்பு இவ்வர்ணங்களுள்ள மண்டலங்களை ஏற்படுத்தவேண்டும். இது ஆயிரத்தெட்டு நாமங்களடங்கிய லிங்கதோபத்ரம். இவ்விதம்விகற்பத்தினால் இந்த்ராசனையை இரண்டுவிதமாகக் கூறினேன். பிறகு உனக்கு வேறு விதமாக மற்றொரு விஷயம் சொல்லுகிறேன்—

நூற்றிருபத்தொரு லிங்கங்களுடன் கூடின லிங்கதோபத்ரம் என்பது கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு இத்திசைகளில் பதினாறு ரேகைகளையுடையது. லிங்கங்களுடைய எண்பத்தேழு ஸ்தானங்களில் ஐந்து வரிசைகளுண்டு இவ்வரிசைகளில் முதலாவது ரேகையின் விஸ்தாரத்தை நானுனக்குக் கூறுகிறேன்—

மூலைகளில் தனித்தனியாக மூன்று ஸ்தானங்களுடன் வெண்மை வர்ணமுள்ள சந்திரனும், அதற்கு முன்னால் கறுப்பு வர்ணமுள்ள ஐந்து ஸ்தானங்களுள்ள சங்கிலியும் அதற்கு இருபக்கங்களிலும் பதினொரு பதினொரு ஸ்தானங்களுள்ள பச்சை வர்ணமுள்ள கொடிகளும், பிறகு ஆறு ஸ்தானங்களுடன் மஞ்சள்வர்ணமுள்ள இரண்டு சங்கிலிகளும், பதினாறு ஸ்தானங்களுள்ள சிவப்பு வர்ணமுள்ள பத்ரமுமிருக்கவேண்டும். இருபக்கங்களிலும் பதினெட்டு ஸ்தானங்களுடன் வெண்மை வர்ணமுள்ள பத்து வாபிகளும், பதினெட்டு ஸ்தானங்களுடன் கறுப்பு வர்ணமுள்ள ஒன்பது லிங்கங்களுமிருக்கவேண்டும். பத்ரத்திற்குமேல் இரண்டு

ஸ்தானங்களுடன் கூடிய சிவப்பு வர்ணமுள்ள இரண்டு சங்கிலிக ளிருக்கவேண்டும். மத்தியில் பச்சை வர்ணமுள்ள சங்கிலி மூன்று ஸ்தானங்களுள்ளதா யிருக்கவேண்டும். வாபிகளுக்கு மேல் சிவப்பு வர்ண முள்ள இரண்டு ஸ்தானங்களும் பச்சைவர்ண முள்ள ஏழு ஸ்தான முமிருக்கவேண்டும். லிங்கத்தின்மேல் இரு பக்கங்களிலும் வெண்மை வர்ணமுள்ள ஸ்தானங்கள் இரண் டிருக்கவேண்டும். இவ்விதம் எங்கும் மஞ்சள் வர்ணமுள்ள மண் டலமென்றறியவேண்டும். இந்த முதல்வரிசை எண்பத்தேழு ஸ்தானங்களுடன் கூடியது. இரண்டாவது பந்தியானது எழு பத்து மூன்று ஸ்தானங்களுடன் கூடியது. அதைக் கூறுகிறேன்.

சந்திரன் சங்கிலி கொடி இரண்டு சங்கிலிகள் இவைகளை முன்போலமைத்துக்கொள்க. இருபது ஸ்தானங்களுடன் கூடின பத்ரம் பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின ஒன்பது வாபி கள் பதின்மூன்று ஸ்தானங்களுடன் கூடின எட்டு லிங்கங்கள் பத்ரங்களுக்குமேல் இரண்டு ஸ்தானங்களுள்ள இரண்டு சங் கிலிகள் இவைகள் சிவப்பு வர்ணமுள்ளவைகளாக இருக்க வேண்டும். மற்ற ஸ்தானங்களை உசிதம்போல் புத்திக்குகந்த படி அமைக்கவேண்டும். அல்லது நான்காவது மண்டலத்திற்கு மேல் பதினோராவது ஸ்தானத்திற்குப் பின் மத்தியில் மண்டலத் தை அமைக்கவேண்டும். மூலையில் முற்கூறியதுபோல் சந்திரனை அமைக்க வேண்டும். சங்கிலி பத்துஸ்தானங்க ளுள்ளதாவும் கொடி இருபத்தொரு ஸ்தானங்களுள்ள தாகவும் இருக்கவேண் டும். பன்னிரண்டு ஸ்தானங்களுடன் மற்றொருசங்கிலி, முப்பது ஸ்தானங்களுடன் கூடின மற்றொரு பத்ரம், அறுபத்தொரு ஸ்தானங்களுடன் கூடிய வாபி இவைகளை நன்றாக ஏற்படுத்த வேண்டும். அல்லது ஏழு எட்டு இந்த ஸ்தானங்களில் இரண்டு பத்ரங்களை அமைத்து அந்த ஸ்தானங்களில் லிங்கங்களின் வரிசை களைக் கிரமமாக ஏற்படுத்த வேண்டும். ஒன்பது, எட்டு, ஆறு, மூன்று, இந்தப் பந்திகளில் முற்கூறியவைகளை அமைக்க வேண்டும். பாக்கியுள்ளவைகளை முற் கூறிய படியே அமைத்துக்கொள்க. அவைகளிலுள்ள விசேஷங்களாவன - அந்த

அந்த பத்ரங்களில் பதினாறுஸ்தானங்களுடன் ஆறு பத்ரங்களும் ஸர்வதோ பத்ரமு மிருக்கவேண்டும். முன்போல் மஞ்சள் வெண் மை சிவப்பு கறுப்பு இந்தவர்ணமுள்ள மண்டலங்கள் வெளிப்பக் கத்தி லிருக்கவேண்டும். இது நூற்றெட்டு நாமங்க ளடங்கிய லிங்கதோபத்ரம். வேறு விதமாகவும் கூறுகிறேன், கேள்.—

அகலத்திலும் நீளத்திலும் ஏழு, பத்து, இரண்டு இந்த ரேகைகள் சிவப்புவர்ணமுள்ள வைகளாகவிருக்கவேண்டும். அந்த ரேகைகளுக்குள் இருக்கும் ஸ்தானங்களில் நான்கு இரண்டு மூன்று இந்த ஸ்தானங்களைப் புத்தியால் அறிந்து அமைக்க வேண்டும். நான்கு பக்கத்தில் மண்டலமும் இருக்கவேண்டும்.

பிறகு ஆறுவதின் கடைசியில் நான்கு மண்டலங்கள், அங்கு நான்கு பக்கங்களிலும் மூலையிலும் மூன்று ஸ்தானங்களுடன் கூடிய சங்கிலி, பதினொரு ஸ்தானங்களுடன் கூடிய கொடி இரு பத்து நான்கு ஸ்தானங்களுள்ள லிங்கம், பதினெட்டு ஸ்தானங் களுடன் கூடிய வாபி, ஒன்பது, ஏழு, ஐந்து, இரண்டு இரண்டு இக்கணக்குள்ள ருத்திரர்கள் இவைகளை யமைக்கவேண்டும். பிறகு ஐந்து பந்திகளும் அவைகளில் ஒருவாபி அதிகமாகவும் நான்கு லிங்கங்கள் பதின்மூன்று ஸ்தானங்களுடன் இரண்டு வாபிகளு மிருக்கவேண்டும். ஆறு ஒன்பது பன்னிரண்டு ஆறு ஆறு இந்த எண்ணிக்கையுள்ள பத்ரங்கள் கிரமமாக உண்டாகும். ஸர்வதோ பத்ரத்தில் நான்கு ஸ்தானங்களுடன் வாபியும் ஒன் பது ஸ்தானங்களுடன் கூடின பத்ரமும் பாக்கியுள்ளவைகளை முன்போலவும் அமைக்கவேண்டும். பிறகு மத்தியில் மண்டல மும் அம்மண்டலத்தில் பத்மமும் வெண்மைவர்ணமுள்ள சந்திர னும் கறுப்புவர்ணமுள்ள சங்கிலியும் கறுப்புவர்ணமுள்ள கொடி யும் சிவப்பு வர்ணமுள்ள பத்ரமும் வெண்மை வர்ணமுள்ள வாபி யும் கறுப்பு வர்ணமுள்ள லிங்கமும் கடைசியில் மஞ்சள் வெண் மை சிவப்பு கறுப்பவர்ணங்களுள்ள மண்டலங்களு மிருக்கவேண் டும். மத்தியிலுள்ள மண்டலங்கள் மஞ்சள் வர்ணமுள்ளவைகளா யிருக்கவேண்டும்.

நூற்றெட்டு லிங்கதோ பத்ரம் கூறுகிறேன்கேள்—அகலத்திலும் நீளத்திலும் சிவப்பு வர்ணமுள்ள ரேகைகளை அமைக்க வேண்டும். அவைகளுக்குள்ளே ஆறு மண்டலங்களும் அதற்கு மேல் மூன்று மண்டலங்களும் மூன்று இரண்டு ஒன்று லிங்கங்களின் அமைப்பும் நான்கு ஸ்தானங்களும் பதினெட்டு ஸ்தானங்களுடன் வாபியுமிருக்கவேண்டும். முப்பத்தாறு இருபது ஒன்று இந்த ஸ்தானங்களுடன் கூடிய பத்ரமும் அந்தப்பத்திரத்தின் பக்கத்தில் மஞ்சள் வர்ணமுள்ள மற்றொரு பத்திரமும் உண்டு. முதலாவது பத்ரம் ஒன்பது ஸ்தானமுள்ளது இரண்டாவது பத்ரம் ஆறு ஸ்தானங்களுடையது. வாபிக்குப் பக்கத்தில் ஆச்சரியமான ஸ்தானத்துடன் சங்கிலியும் உண்டு. ஒவ்வொருபக்கத்திலும் ஐந்து ஸ்தானமுள்ள சங்கிலி உண்டு. பதினொரு ஸ்தானங்களுடன் கொடியும் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரனும் இருபத்து நான்கு ஸ்தானங்களுடன் வெகு அழகான லிங்கமும் மத்தியில் சந்திரனும் விசித்திரமாகிய ஸ்தானத்துடன் சங்கிலியும் ஆறு ஆதானத்துடன் கொடியும்பன்னிரண்டு ஸ்தானத்துடன் பத்ரமும் இருபத்தெட்டு ஸ்தானத்துடன் லிங்கமும் லிங்கத்தின்மேல் இருபக்கங்களிலும் மஞ்சள் வர்ணமுள்ள ஸ்தானங்களும் கறுப்பு வர்ணமுள்ள லிங்கமும் வெண்மை வர்ணமுள்ள வாபியும் சிவப்புவணர்முள்ள பத்ரமும் வெண்மை வர்ணமுள்ள சந்திரனும் கறுப்புவர்ணமுள்ள சங்கிலியும் பச்சைவர்ணமுள்ள கொடியும் இருக்கவேண்டும். மண்டலம் மஞ்சள்வர்ணமுள்ளது. ஸ்தானங்கள் சிலாக்கிய மானவைகள். இருபத்தைந்து லிங்கங்களுக்குந் தன்னிஷ்டப்படி வர்ணங்களை அமைத்துக் கொள்ளலாம்! வெளியில் உள்ள மண்டலங்கள் மஞ்சள் வெண்மை சிவப்பு கறுப்பு இவ்வர்ணங்களுள்ளவைகளாக இருக்கவேண்டும்.

மாணவனே! வேறுவிதமுண்டு கூறுகின்றேன்கேள்—நாற்பத்தொரு ஸ்தானங்களில் இருபத்தைந்து லிங்கங்களின் ஆஸனங்களையும் ஆறுவரிசைகளுக்குமேல் இரண்டு மண்டலங்களையும் அவைகளுக்குக்கீழ் லிங்கங்களின் இரண்டுவரிசைகளையும் ஏற்படுத்தவேண்டும் பதினெட்டு ஸ்தானங்களுடன்லிங்கம்,பதின்மூன்று

ஸ்தானங்களுடன் வாபி மூன்று ஸ்தானங்களுடன் பத்மம், ஐந்து ஸ்தானங்களுடன் சங்கிலி; பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கொடி, இரண்டு லிங்கங்கள் உள்ள முதல்வரிசை இவைகளை ஏற்படுத்த வேண்டும். முதலாவது ஒன்பது ஸ்தானங்களுடன் ஒரு பத்ரத்தையும் ஆறு ஸ்தானங்களுடன் மற்றொரு பத்ரத்தையும் மண்டலங்களுக்குக் கடைசியில் முப்பத்துமூன்று உள்ள ஸ்தானங்களோடு லிங்கத்தையும் அமைக்கவேண்டும். அடியில் உள்ள ஸ்தானமும் தோள்பக்கத்திலுள்ள ஸ்தானமும் ஏழு ஏழு ஸ்தானங்களையுடையன. ஆறு ஸ்தானங்களுடன் கூடிய சிரசும், ஐந்து ஐந்து ஸ்தானங்களுடன் கூடிய இரண்டு பக்கங்களும், மூன்று ஸ்தானங்களை உடைய இடையுமிருக்கவேண்டும். ருத்திரனுடைய நான்கு திசைகளிலும் ஒன்பது ஸ்தானங்களுடன் நான்கு பத்ரம், மூன்று ஸ்தானங்களுடன் சந்திரன், இரண்டு ஸ்தானங்களுடன் சங்கிலி, ஐந்து ஸ்தானங்களுடன் கொடி. மூன்று ஸ்தானங்களுடன் மற்றொரு சங்கிலி இவைகளிருக்கவேண்டும். லிங்கத்தின் தோள்பக்கத்தில் உள்ள ஸ்தானங்கள் மஞ்சள் வர்ணமுள்ளவைகளாக இருக்கவேண்டும். மற்றுமுள்ள ஸ்தானங்களை இஷ்டப்படி பூர்த்தி செய்துகொள்ளலாம். வெளிப்பக்கத்தில் இருபத்தைந்து ருத்திரர்களுடன் நான்கு மண்டலங்களிருக்கவேண்டும். இவ்விரண்டும் பரமசிவனுக்கு மிகுந்த விருப்பத்தைக் கொடுக்கக் கூடியவைகள்.

மாணவனே! ஸம்ஸாரத்தை நிவிர்த்திசெய்ய வல்லமையுள்ள பிர்ம்ம சொரூபத்தையும் குருவின் பாதகமலங்களையும் வணங்கி அதியாத்ம சொரூபத்தை உண்டாக்குகிற கதையைக் கூறுகிறேன். இருபத்தைந்து எண்ணிக்கையுள்ள லிங்கதோபத்ரம் யாராலாவது கற்பிதமா அல்லது அநாதியா என்று சந்தேகமுண்டாயின் அதன் உண்மையைக் கூறுகிறேன். லிங்கதோபத்ரம் என்பது சப்தத்தின் அர்த்தத்தையுடையதாகவே ஆகும். லிங்கம் கமகம் என்றும், ஞானம் ஞாபகம் என்றும், அமிருதத்தைச் அளிப்பதால் வாபி என்றும், பத்ரங்களை அடைவதால் பத்ரமென்றும் சொல்லப்படுகிறது. வர்ணங்களும் பரமபுருஷனை உபாசிப்பதற்காகவே

ஏற்பட்டவைகள். அந்த லிங்கம் பரபிர்ம்மமென்றும், பத்ரம் மங்களம் என்றும் மங்களங்களுக்கு மங்களம் சிவம், சாந்தம் என்றும் வியக்தமாகத் தெரியவருகிறது. எந்தவிடத்தில் சகல பூதங்களும் லயத்தை அடைகின்றனவோ எந்த இடத்திலிருந்து ஸகல பூதங்களும் உண்டாகின்றனவோ அந்தக் காரணத்தினுல் பரமாகாசமென்றும் நிஷ்கள பரமசிவமென்றும் ஏற்படுகிறது. ஸத்துவம், இராஜஸம், தாமஸம் என்ற மூன்று குணங்களும் மாயையினுல் சூழப்பட் டிருக்கின்றன. மனதாகிற சந்திரன் மகா மோகமாகிற தடை, சிநேகமாகிற கொடி இவைகளால் இந்த பத்ரம் எங்கும் கடத்திலிருக்கும் ஆகாயம்போல் வியாபித்திருக்கின்றது. அங்கங்களும் வஸ்திரத்திலிருக்கும் நூல்போல் ஏங்கும் பரவியிருக்கிறது. அதனுல் பன்னிரண்டு லக்ஷம் ஸ்தானங்கள் உண்டாயின. அந்த ஸ்தானங்களில் சித்தரிக்கப்பட்ட வஸ்திரம்போல் குணங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். முன் தத்துவம் ஒன்றுதான் இருந்தது. அதற்கு நான் பலவிதமாக ஆக வேண்டுமென்கிற விருப்பம் உண்டாகிறது. "ஆத்மா ஒன்றாக இருந்தது" "தன்னைத்தான் செய்தார்" "பரமாத்மா மாயைகளுடன் சேர்ந்தது" "ஒருவிதமாக பலவிதமாக" என்றும் வேதம் முறையிடுகிறது. இன்னும் மற்றுமுள்ள சுருதியின் பலத்தினுல் பிர்ம்மத்தைத் தவிர வேறில்லை.

இவ்விதமிருந்தாலும் இவ்வுலகத்தில் உண்மை என்ற நினைவு மோகத்தினுல் ஏற்படுகிறது.எதுவரையில்அகங்காரமுடையவனுக இருக்கிருனே,அதுவரையில்ஸம்ஸாரம் என்பதுண்டு.அகங்காரம் என்ற இருதயத்திலிருக்கும் முடிச்சு பேதத்தைஅடைந்தால் ஸம்ஸாரபந்தம் இல்லையாம். இதற்காக வைராக்கியத்துடன் கடைத்தேறும் வழியைத் தேடிக்கொண்டு பிர்ம்ம சொரூபம் போன்ற சற்குருவை அடைந்து அந்தக் குருவினுல் அறிவை அடைந்தவனுகித் தன்னிடத்தில் பரமாத்மாவைத் தரிசித்து இந்த உலகத்தையும் மனதையும் எப்போதும் பிர்ம்மம் என்ற பாவனையுடன் பார்க்கவேண்டும். ஈசுவரன் ஸகல பூதங்களுடைய மனதிலும் இருக்கிருர். அவர் மலமற்றவர், ஒருவராக இருப்பவர், இரண்

டாவ தில்லாதவர், மேலானவர், முடிவில்லாதவர், பிரக்ஞை முத லிய இலக்ஷணங்களை உடையவர், நாசமில்லாதவர், ஸச்சிதானந் தர், அமரர், அஜரர், சுந்தர விக்ரகமுள்ளவர், விகாரமற்றவர், ஆகாரமில்லாதவர், வியாதி முதலியவைகளற்றவர், லிங்கம், ரூபம் இவைகளில்லாதவர், ஒன்று என்பதற்கும் வேறானவர், மாயை யினால் லிங்கரூபம் உள்ளவர்போலிருக்கிறார். புருஷன் பிரகிருதி, அவ்யக்தம், அகங்காரம் என்ற நான்கு லிங்கங்களும் சிவனுக்கு இலக்ஷணங்களாகவே கூறப்படுகின்றன. காரியம் காரணம்பூதங்கள் இவைகள் ஒன்றாகின்றன ; ஐந்தாகவும் ஆகின்றன. இவ்வைந்தும் ஸத்துவம், ராஜஸம் தாமஸம் ஆகிய எட்டுலிங்கங்களும் ஈசுவர னைச் சேர்ந்தவைகள், இந்திரியங்கள், மனம் புத்தி ஆகிய பன் னிரண்டு, இவைகளில் பரமேசுவரருடைய லிங்கங்களைத் தெரி ந்துகொள்ள மார்க்கம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் காரணலிங்கங்கள காரியலிங்கங்கள் நூறு, ஆயிரம், பதினாயிரம், கோடி இவ்விதக் கணக்காக இருக்கின்றன. எல்லா விஷயங்களும் பரமாத்மாவாகிய சிவனுக்கு ஞாபகமாகின்றன. உண்மையில் ஜாதி முதலியவைகளால் சூன்யமாயிற்று. பரதத்துவம் விசா ரிக்குமளவில், வஸ்திரத்தில் நூலிருப்பதுபோல், சிவனிடம் எல் லாம் நிறைந்திருக்கிறதென்று விளங்கும். பிந்துநாதம், அகாரம் முதலிய இந்த மூன்றும் பிர்ம்மா, சிவன், அரியெனப்படும். எல் லாம் பரமாத்மாதான். பிர்ம்மா, ருத்திரர் இவர்கள் தனித்தனி யாக ஸத்யோஜாதர் முதலிய ஐந்து பெயர்களுடன் கூடியவர்கள். சுத்தன், ஸாக்ஷி, பிராக்ஞன், தைஜஸன், விசுவன், ஸத், சித், ஆனந்தம், நாமம், ரூபம், இவைகள் பிர்ம்மத்தைத் தவிர வேறி ல்லை என்று வேதங்கூறுகிறது. பிரதானம், மகத்து, அகங் காரம், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இவ்வெட்டுப் பிரகிருதி யும் சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. இந்த எட்டு மூர்த்தி களை யுடைய சொரூபம் பவன், சர்வன் முதலான பெயர் களை அடைந்தது. இவைகள் எட்டு வசுக்களாக மாயையினால் எங்கும் விளங்குகின்றன. ஜோதி லிங்கத்தின் பன்னிரண்டும் பன்னிரண்டு சூரியர்களுடைய பெயரை யுண்டயன. பத்து இந்திரி

யங்கள் மனம், புத்தி, நாமங்களிவைகளால் சத்சொரூபம் வியக்த
மாகத் தெரியவருகின்றது. இந்திரியங்கள் பத்து, பிராணன்
ஐந்து, போக்கியங்கள் ஐந்து, மனம் நான்கு, ஆத்மா இந்த
இருபத்தைந்தும் தத்துவம் என்று பெரியோர்களால் நிச்சயிக்
கப்பட்டிருக்கிறது. போகத்தை அனுபவிப்பதற்குரிய பிராணிகள்
எண்பத்து நான்கு லக்ஷமெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.
குணங்களின் பேதத்தினாலும் மயக்கத்தினாலும் பிராணிகளுடைய
கர்மங்களாலும் ஜாக்ரம் ஸ்வப்னம் ஸுஷுப்தி முதலிய அவஸ்
தைகளில் போகத்திற்கு ஸ்தானங்கள் ஏற்படுகின்றன. போகம்
அநுபவிக்கிறவன் அநுபவிக்கும்படி செய்கிறவன் எல்லாம்பிர்ம்ம
சொரூபமே தவிர வேறில்லை. அத்தியாத்மம், அதிதைவம், அதி
பூதம், இம்மூன்றும் ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் என்ற பெயரு
ருடன் கூடியவைகள். எல்லாம் பிர்ம்மசொரூபமே தவிர வேறில்
லை. இந்த ஞானம், தியானம், விவேகம், வைராக்கியம், ஜீவன் ஈசு
வரன் ஜகத்து இவைகளுடைய தோற்றம் சகலமும் ஆத்மசொரூ
பமே தவிர வேறில்லை. "இது எல்லாம்" "எல்லாம் இது" "இந்த
ஆத்மா" "இது எல்லாம் பிர்ம்மம்" என்று அனேகம் சுருதிகள்
முறையிடுகின்றன. எங்கும் ஆத்ம சொரூபமாகக் காண்பது.
மேலான பதவியை அடையவேண்டுமென்ற எண்ணங்கொண்ட
வன், மனதின் ஒழிவுள்ளவன், இந்திரிய நிக்ரகம் உள்ளவன்,
ஸகலத்தையும்விட, விருப்பமுள்ளவனு யிருக்கவேண்டும். விஷ
யங்கள் மானிடர்களைச் சுவாதீனப் படுத்திக்கொள்கின்றன
மோக்ஷமடைய வேண்டுமென்ற எண்ண முள்ளவன் இவை
களைத் தியாகம் செய்யவேண்டும். ஏகாந்தமான இடத்திலிருப்
பவனாகவும், மிதமான ஆகாரமுடையவனாகவும் இருக்கவேண்டு
மென்று பகவான் கூறியிருப்பது போதுமானது. நிரம்பவும்
சொல்லவேண்டியதில்லை. சாஸ்திரத்தின் கருத்தை எடுத்துரைத்த
விஷயமிது. வர்ணிக்கமுடியாததும், ஜடமாகாததும், இரண்
டற்றதுமான ஒரு வஸ்துவானது எனக்கு குருவினால் கொடுக்
கப்பட்டது. அந்த வஸ்துவை சேவித்ததினால் எனக்கு நான்
நீ மற்றவை எல்லாம் அந்த வஸ்துவாகவே காணப்படுகின்றன.
சீக்கிரத்தில் அஞ்ஞானம் நீங்கிற்று. எங்கும் நிறைந்ததும், ஸத்

தியமும், கம்பீரமும், அவியாகிருதமும், சந்திரன், சூரியன், வாயு இவர்களுடன் கூடியதும் இப்பிரபஞ்சத்தை மூடிக்கொண்டிருப்பதுமான தேஜஸ் தோன்றியது.

அகலத்திலும் நீளத்திலும் நாற்பது ரேகைகள் சமமாகவும் அமைக்கவேண்டும். அவைகளுள் முப்பத்தொன்பதாவது ஸ்தானங்களில் இரண்டு மண்டலங்களைக் கற்பிக்கவேண்டும். ஏழாவது ரேகைக்குமேல் இரண்டு மண்டலமும் முதல்ரேகையைத் தவிர மற்ற ரேகைகளில் மண்டலங்களை இஷ்டப்படி செய்துகொள்ளவேண்டும். அவைகளுக்குமத்தியில் நூற்றிருபத்தொரு ஸ்தானங்களில் பதினெட்டு ஸ்தானங்களுடன் ஒரு லிங்கமிருக்கவேண்டும். நான்கு நான்கு ஸ்தானங்களுடன் கூடின அண்டம் வாபி இவைகளையும் நான்கு பக்கங்களிலும் எட்டு ஸ்தானங்களுடன் பத்ரத்தையும் இரண்டு ஸ்தானங்களுடன் கூடிய சங்கிலியையும், மூன்று ஸ்தானமுள்ள சந்திரனையும், மூன்று ஸ்தானங்களுடன் கூடிய கொடியையும் மூன்று பக்கங்களிலும் ஐந்து ஸ்தானங்களுடன் கூடிய கொடிகளையும் அமைக்கவேண்டும். இரண்டாவது ரேகையில் மூன்றுஸ்தானங்களுடன் சந்திரன், நான்கு ஸ்தானங்களுடன்சங்கிலி,ஒன்பது ஸ்தானங்களுடன் கொடி ஒன்பதுஸ்தானங்களுடன் மூன்றுபத்ரம்,பதின்மூன்றுஸ்தானங்களுடன் இரண்டு வாபிகள்,பக்கத்தில் இரண்டு ஸ்தானங்களுடன்சிவப்புவர்ணமுள்ள இரண்டு சங்கிலிகள், நான்கு ஸ்தானங்களுடன் பச்சை வர்ணமுள்ள பத்ரம் இவைகளை ஒவ்வொரு பக்கத்திலும் முதலாவது ரேகைமுதல் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு லிங்கங்கள், ஐந்து வாபிகள், பதினெட்டு ஸ்தானங்களுடன்கூடின லிங்கம் பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபி, ஆறு ஸ்தானங்களுடன் பத்ரம், பதினொரு ஸ்தானத்துடன் கொடி, ஐந்து ஸ்தானத்துடன் சங்கிலி, மூன்று ஸ்தானங்களுடன் சந்திரன்,லிங்கத்திற்குமேல் கறுப்பு வர்ணமுள்ள வீதி இவைகளைக் கொடிகளுடன் சேர்க்கவேண்டும். அல்லது ஆறு ஸ்தானங்களுக்கு மேல் மண்டலத்தை வரைந்து பிறகு, இரண்டு வீதிகளில் மூன்று லிங்கங்கள் ஒரு லிங்கம் இவைகளை அமைக்கவேண்டும்,

முதலாவது பதினாறு ஸ்தானங்களுடன் பத்ரமொன்றும், பன்னிரண்டு ஸ்தானங்களுடன் பத்ரம் ஒன்றும் ஐந்து ஸ்தானங்களுடன் சங்கிலியும், பதினேழு ஸ்தானங்களுடன் கொடியும் அமைக்கவேண்டும். பிறகு நான்கு வாபிகளும் பிறகு இரண்டு வாபிகளும், அமைக்கவேண்டும். மற்றவைகள் யாவும் முன்போலவேயாம். வெளிப்பக்கத்தில் உள்ள மண்டலங்கள் மஞ்சள் வெண்மை சிவப்பு கறுப்பு இவ்வர்ண முள்ளவைகளென்றும், ஒவ்வொரு பந்திக்கு ஒவ்வொரு மண்டலம் அதிகமென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். இது ஏழு சந்திரனுள்ள லிங்கமென்று பெயர் பெற்ற ஆஸனம். நான் இதை உனக்குக் கூறினேன். அல்லது இந்த ஆஸனத்தில் கிரமமாக மூன்று ஸ்தானங்களை ஏற்படுத்தி, ஆறுவது ஸ்தானத்தின் கடைசியில் இரண்டு மண்டலங்களையும் லிங்கங்களையும் சேர்க்க வேண்டும். முதலாவது மூன்று லிங்கங்களும் இரண்டாவதிலுள்ள ஒரு லிங்கமும், இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் கூடியவைகள். லிங்கம் பதினெட்டு ஸ்தானங்களுள்ளது. முதலாவது நான்கு வாபிகளும், இரண்டாவது இரண்டு வாபிகளு மிருக்கவேண்டும். முதலாவது ஒன்பது ஸ்தானத்துடன் பத்ரமும், இரண்டாவது பன்னிரண்டு ஸ்தானத்துடன் கூடின பத்ரமும் சந்திரன் கொடி இவைகள் முற்கூறியவைகள்போலுமிருக்கவேண்டும். மத்தியில் லிங்கத்தை ஏற்படுத்தவேண்டும். இருபத்தெட்டு ஸ்தானங்களுடன் கூடினது அந்த லிங்கம். சிரசும் இடையும் நான்கு ஸ்தானங்களுள்ளன. இரண்டு வாபிகளும் பன்னிரண்டு பன்னிரண்டுஸ்தானங்களுடன் கூடியவைகள். இரண்டு ஸ்தானங்களுடன் சங்கிலி, ஐந்து ஸ்தானங்களுடன் கொடி, மூன்று ஸ்தானங்களுடன் மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலி, நான்கு திசைகளிலும் மத்தியிலும் பன்னிரண்டு ஸ்தானங்களுடன் கூடிய நான்கு பத்ரம், மூலையில் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரன், ருத்திரருடைய சிரசுக்கு இருபக்கங்களிலும் நேத்திரங்கள், வெண்மை வர்ணமுள்ள இரண்டு ஸ்தானங்கள் இவைக ளிருக்கவேண்டும். பாக்கியுள்ள ஸ்தானங்களை இஷ்டப்படி லிங்கத்திற்குப் பக்கத்தில் பூர்த்தி செய்து

கொள்ளவேண்டும். வெளிப்பக்கத்தில் மஞ்சள், வெண்மை, சிவப்பு, கறுப்பு இவ்வர்ணங்களிருக்கவேண்டும். இது பதினேழு லிங்கங்களுடன் கூடிய லிங்கதோபத்ரம் என்று சொல்லப்படும். பத்து இந்திரியங்கள் ஐந்து பிராணன்கள் மனம் இந்தப் பதினாறும் கலைகள். பதினேழாவது ஸாக்ஷியாகிய ஆத்மா.

பன்னிரண்டுலிங்கங்களுடன்கூடினபத்ரத்தைச்சொல்லுகிறேன் கேள்—கிழக்கும் வடக்குமாக முப்பத்தாறுரேகைகளை ஏற்படுத்த வேண்டும். நூற்றுமுப்பத்தேழு ஸ்தானங்கள், மூன்று ஸ்தானகளுடன் சந்திரன், மூலையில் ஆறு ஸ்தானமுள்ள சங்கிலி, பதின்மூன்றுஸ்தானங்களுடன் கொடி, ஒன்பது ஸ்தானங்களுடன் பத்ரம், பத்ரத்திற்குமேல் மூன்று ஸ்தானங்களுடன் மஞ்சள் வர்ணமுள்ளசங்கிலி, பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபி, பதினெட்டு ஸ்தானங்களுடன் லிங்கம் இவைகளை ஏற்படுத்தி, லிங்கங்களமைத்திருக்கும் பந்தியில் அழகுள்ள ஸ்தானங்களைப் பதினொன்காக ஏற்படுத்தவேண்டும். அவைகளுக்கு மேல்வரிசையில் பதினேழு ஸ்தானங்களுடன் நான்கு பக்கங்களில் பூஜை செய்ய வேண்டிய பந்தியை வெண்மையாக அமைக்கவேண்டும். பூஜை செய்யும் வரிசைக்கு மத்தியில் உள்ள வரிசையில் எண்பது ஸ்தானங்களும் இரண்டு ஸ்தானங்களுக்கு மத்தியில் ஒரு மண்டலத்திற்குள்ளிருக்கும் ஸ்தானங்களின் ஸர்வதோபத்ரத்தையும் எழுதவேண்டும். இங்கு விஷயமாவது, ஆறு ஸ்தானமுள்ள சங்கிலி, பதின்மூன்று ஸ்தானமுள்ள கொடி, பன்னிரண்டு ஸ்தானத்துடன் பத்ரம், இருபத்தைந்து ஸ்தானங்களுடன் வாபி, பதினாறு ஸ்தானங்களுடன் மண்டலம் இவைகளை யமைக்கவேண்டும். மத்தியில் மொட்டு முதலிய வைகளுடன் பத்ரம் ஒன்பது ஸ்தானங்களுள்ளதா யிருக்கவேண்டும்.

ஸத்துவம்,இராஜஸம்,தாமஸம் இந்தமூன்று குணங்களின் வர்ணம்போன்ற மூன்றுமண்டலங்களை நான்குபக்கங்களிலும்அமைத்தல்வேண்டும் அங்கு துவாரங்களு மிருக்கவேண்டும். வெண்மை வர்ணமான சந்திரன் கறுப்பான சங்கிலி, நீலவர்ணமுள்ள கொடி, சிவப்புவர்ணமான பத்ரம், மஞ்சள் வர்ணமுள்ள மற்றொரு சங்

கிலி வெண்மை வர்ணமுள்ள வாபி, பக்கங்களில் கறுப்பு வர்ண முள்ள பன்னிரண்டு லிங்கங்கள், மஞ்சள் வர்ணமுள்ள மண்டலம், ஐந்துவர்ணமுள்ள கமலம் மஞ்சள் வர்ணமுள்ள பொட்டு முதலிய வைகளுட னிருக்கவேண்டும்.

பீடனை வேறுவிதமாகக் கூறுகிறேன். வடகிழக்குப் பாக மாக இருபத்தேழு ரேகைகள், முப்பத்தாறு ஸ்தானங்களில் ஸர்வதோ பத்ரம், முன்னூற்று இருபத்து நான்கு ஸ்தானங்க ளுடன் முன்போல் இருக்கவேண்டும். அதற்கு நான்கு பக்கங்களி லும் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலங்க ளிருக்கவேண்டும். நாற் றெட்டு லிங்கங்களுடன் கூடிய லிங்கதோபத்ரமென்பது இது. இதற்கு நான்கு பக்கங்களிலும் பன்னிரண்டு லிங்கங்களையும் ஒவ் வொரு மூலையிலும் மூன்று ஸ்தானங்களுடன் பத்மத்தையும் ஏழு ஸ்தானங்களுடன் சங்கிலியையும் பதினொன்று ஸ்தானங்களுடன் கொடியையும் ஆறு ஸ்தானங்களுடன் பத்ரத்தையும் மூன்று சந்திரனையும் வாபியையும் வாபிக்குமேல் இருபத்தாறு ஸ்தானங்க ளுடன் லிங்கத்தையும் பத்ரத்தையும் லிங்கத்திற்குப் பக்கத்தில் மஞ்சள் வர்ணமுள்ள ஆறு ஸ்தானங்களையும் லிங்கத்திற்கு மேல் கொடிகளில் கறுப்புவர்ணமுள்ள வீதியையும், நான்கு ஸ்தானங்க ளுடன் லிங்கத்தின் சிரசையும் அவ்விதமே வெளிப்பக்கத்தில் மண்டலங்களையும் அமைக்கவேண்டும். இவ்விதம் எல்லாவற்றை யும் முன்சொன்ன வர்ணங்களால் அமைக்கவேண்டும்.

கிழக்கும் தெற்குமாக இருபத்து நான்கு ரேகைகள், மூலை களில் ஐந்து ஸ்தானங்களுடன் சங்கலி, பக்கத்தில் ஒன்பது ஸ்தா னங்களுடன் கொடிகள் நான்கு ஸ்தானங்களுடன் இலகு சங் கிலிகள் ஆறு ஸ்தானங்களுடன் கொடிகள் பிறகு பதினெட்டு ஸ்தானங்களுடன் லிங்கங்கள் பதின்மூன்று ஸ்தானங்களுடன் மத்தியில் வாபிகள் பிறகு இரண்டு வீதியுடன் பீடம் இவைகளை ஏற்படுத்தவேண்டும். அந்தப்பீடத்தின் பாதங்கள் நான்காகும் அதற்கு துவாரங்களும் நான்காம்.

எண்பத்தொரு ஸ்தானங்களுடன் ஸ்வஸ்திகம் என்ற பத்ம மானது மூலைகளில் மூன்று ஸ்தானங்களுடன் கூடிய சங்கிலிக

ளுடன் இருக்கவேண்டும். இவைகளுக்கு நான்கு பக்கங்களிலும் நான்கு திசைகளிலும் பத்ரங்களிருக்கவேண்டும் பதினொரு ஸ்தானங்களுடன் இரண்டுகொடிகளும் மத்தியில் எட்டுஸ்தானங்களுடனாவது ஒன்பது ஸ்தானங்களுடனாவது பத்மத்தையும் எழுதவேண்டும். இதுலிங்கதோபத்ரம். கறுப்புவர்ணத்தினால்சங்கிலியையும் நீலவர்ணத்தினால் கொடியையும் சிவப்புவர்ணத்தினால் இலகுவான கொடியையும் அமைக்கவேண்டும். கறுப்புவர்ணமுள்ள லிங்கங்களும் வெண்மைவர்ணமுள்ள ஆஸனமும் வெண்மை வர்ணமுள்ள பாதங்களும் மஞ்சள் வர்ணதுவாரங்களும் மத்தியில்சங்கிலிகள் சிவப்பு வர்ணமுமுடையனவாம். கொடி நீலவர்ணமுடையதாயும் பத்ரங்கள் மஞ்சள் வர்ணமுள்ளதாயும் தளங்கள்வெண்மை அல்லது சித்ரவர்ண முள்ளவைகளாயும் மூன்று ரேகைகள் வெண்மை சிவப்பு கறுப்பு இவ்வர்ணங்களுள்ளவைகளாயும் இருக்கவேண்டும்.

உயரமான ஸ்தானத்திலிருக்கும் லிங்கங்களுடன்கூடிய எட்டு லிங்கதோ பத்ரம். வெகு அழகுள்ளவை. அவைகளைக் கூறுகிறேன். ஸந்தோஷத்துடன் கேள்.

அகலத்திலும் நீளத்திலும் நான்கு பக்கங்களிலும் இருபத்தெட்டுரேகைகளும் இருபத்தேழு ஸ்தானங்களில் ஆறாவது வரிசைக்குமேல் ஆறுமண்டலங்களும் மூலைகளில் மூன்று ஸ்தானங்களில் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரனும் ஐந்து ஸ்தானங்களுடன் சங்கிலியும் பன்னிரண்டு ஸ்தானங்களுடன் வாபியும் ஆறு ஸ்தானங்களுடன் ஆறுபத்ரமும் பன்னிரண்டு ஸ்தானங்களுடன் உயரத்தில் இரண்டு பத்ரங்களும் பதினெட்டு ஸ்தானங்களுடன் ருத்திரர்களும் தனக்குநேராக எட்டு ருத்திரர்களும் பதின்மூன்று ஸ்தானங்களுடன் வாபிகளும் மேற்பக்கத்தில் இருக்கவேண்டும். முதலாவது ஒரு வாபியையும் இரண்டு கண்டங்களையும் பாக்கியுள்ளவைகளை முன்போலவு மமைத்துக்கொள்க. குறுக்காகஉள்ள நான்கு ஸ்தானங்களுடன் மூன்று ஸ்தானங்களுள்ள கொடியைச் சேர்க்கவும். தெற்கு வடக்காக வாபிகள் எட்டும் இரண்டு லிங்கங்களின் ஐந்து ஸ்தானங்களுடன் ஒருமாலையும் எங்கும் தெற்கு

வடக்குகளில் மூன்றுஸ்தானங்களுடன் இரண்டு நேத்திரங்களும் தனித்தனியாக நான்கு பத்ரங்களும் கீழ்ப்பக்கத்தில் நான்கு ஸ்தானங்களுடன் இரண்டு பத்ரங்களும் தெற்குவடக்கு இந்தப் பிரதேசங்களில் முன்வரைந்த கொடிகளையும் சேர்க்கவேண்டும். மூன்றாவது ஸ்தானத்திற்குமேல் மத்தியில் மண்டலம், இருபத்தைந்து ஸ்தானங்களுடன் சங்கிலி, ஆறு ஸ்தானங்களுடன் கொடி, ஐந்து ஸ்தானங்களுடன் வாபிகள், நான்கு ஸ்தானங்களுடன் பத்ரம் இவைகளை அமைக்கவேண்டும். வாபி வெண்மை வர்ணம்; பத்மம் பத்ரம் இவைகள் சிவப்புவர்ணமுள்ளவைகள்; குறுக்காக இருக்கும் இரண்டு பத்ரங்களும் லிங்கமாலைகளும் இரண்டு மண்டலங்களும் மஞ்சள் வர்ணமுள்ளவைகள்; நேத்திரம் சந்திரன் இவைகளிரண்டும் வெண்மை வர்ணமுள்ளவைகள்; சங்கிலி கறுப்பு வர்ணமுள்ளது; வாபிகளுக்குமேல் மூன்று ஸ்தானங்களைத் தன்னிஷ்டப்படி பூர்த்திசெய்து கொள்ளவேண்டும். வெளிப்பக்கத்திலிருக்கும் மண்டலங்கள் மஞ்சள் வெண்மை சிவப்பு கறுப்பு இந்தவர்ணமுள்ளவைகள். எட்டு லிங்கங்களுடன் கூடியது லிங்கதோபத்ரம். வேறுவிதமான இரண்டுமார்க்கங்களுண்டு. அவைகளையும் கூறுகிறேன். முப்பத்திரண்டு ஸ்தானங்களிலும் நான்கு லிங்கங்கள் பிறகு எட்டு லிங்கங்கள் இவைகளை யுக்தியினால் ஏற்படுத்தவேண்டும். பிறகு விசேஷத்தைக் கூறுகிறேன். முதலாவது இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் லிங்கம். பதினெட்டு வாபிகள், இருபதுஸ்தானங்களுள்ள மற்றொருபத்ரம், பதினெட்டு ஸ்தானங்களுள்ள லிங்கம், ஒன்பது ஸ்தானங்களுடன் கூடிய பத்ரம் இவைகளை யமைக்கவேண்டும். பாக்கியுள்ளவைகளை ஸ்தானங்களுள்ளவரையில் சேர்க்கவேண்டும். நான்காவது லிங்கத்தின்ஸ்தானத்தில் பதினெட்டு ரேகைகளிருக்கவேண்டும். மூலைகளில் உள்ள சந்திரனும் மூன்று ஸ்தானங்களுடன் கூடியவைகள். அவைகள் வெண்மை வர்ணமுள்ளவைகள். மூன்று ஸ்தானங்களுடன் கூடிய கறுப்பு வர்ணமுள்ளது சங்கிலி. ஏழு ஸ்தானங்களுடன் கொடி, நீலவர்ணமுள்ள பத்ரம் நான்கு ஸ்தானங்களுள்ளது. பத்ரத்தின் பக்கத்தில் பதினெட்டு ஸ்தானங்களுடன் கருப்புவர்ணமுள்ள பெரியலிங்கத்தையும் ருத்திரருக்குப் பக்கத்தில் ஐந்து

ஸ்தானங்களுடன் வெண்மைவர்ணமுள்ள வாபியையும் அமைக்க வேண்டும். அவ்விதம் மஞ்சள்வர்ணமுள்ள ஒரு ஸ்தானமும் மத்தியில் பத்ரமும் வாபியும் உண்டு. சிரசில் சங்கிலிக்குப்பக்கத்தில் மஞ்சள் வர்ணமுள்ள மூன்று ஸ்தானங்களையும் அமைக்க வேண்டும். லிங்கங்களுக்குத் தோள் பக்கத்தில் சிவப்புவர்ணமுள்ள இருபது ஸ்தானங்களும் பதினாறு ஸ்தானங்களுடன் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலமும் பிறகு சித்ரவர்ணமுள்ள மொட்டுடன்கூடிய ஒன்பது ஸ்தானங்களு மிருக்கவேண்டும்.

அகலத்திலும் நீளத்திலும் பதின்மூன்று ஸ்தானங்களுடன் சந்திரனும் மூன்று ஸ்தானங்களுடன் சங்கிலியும் ஆறுஸ்தானங்களுடன் நீலவர்ணமுள்ள கொடியும் கிழக்கும் தெற்குமாகப்பன்னிரண்டு ஸ்தானங்களுடன் சிவப்புவர்ணமுள்ள பத்ரமும் மேற்குப் பக்கத்தில் இருபத்தெட்டாவது ஸ்தானத்தில் பெரிதாக ஒரு ருத்திரரும் லிங்கத்தின் பக்கத்தில் சிரசில் மஞ்சள்வர்ணமுள்ள எட்டு எட்டு ஸ்தானங்களும் இப்போது கூறின மண்டலத்தில்ஒருலிங்கமும் பார்வதிதேவியின் திலகமும் உண்டு. இந்த மண்டலத்தைப் பூஜிப்பவனுக்கு கௌரீதேவி அநுக்கிரகம் செய்கிறாள். வடகிழக்காகப்பத்தொன்பது ரேகைகளைப்போடவேண்டும். மூலையில் மூன்று ஸ்தானங்களுடன் சந்திரன், ஐந்து ஸ்தானங்களுடன் சங்கிலி, பதினொரு ஸ்தானங்களுடன் கொடி, ஒன்பது ஸ்தானங்களுடன் பத்ரம், இருபத்துநான்கு ஸ்தானங்களுடன் வாபி, இருபது ஸ்தானங்களுடன் மண்டலம், மத்தியில் பதினாறு ஸ்தானங்களுடன் எட்டு தளமுள்ள பத்மம் இவைகளை யமைக்கவேண்டும். வெண்மை வர்ணமுள்ள சந்திரன், கறுப்பு வர்ணமுள்ள சங்கிலி, நீலவர்ணமுள்ள கொடி, சிவப்பு வர்ணமுள்ள பத்ரம், வெண்மை வர்ணமுள்ள வாபி, மஞ்சள் வர்ணமுள்ள மண்டலம், சிவப்பு வர்ணமுள்ள அல்லது சித்ரவர்ணமுள்ள மொட்டுடன் கூடிய பத்மம் இவைகளை ஏற்படுத்தவேண்டும். வெளிப்பக்கத்தில் உள்ள மண்டலங்கள் யாவும் ஸாத்விகம், இராஜஸம், தாமஸம் இந்த குணங்களின் வர்ணங்கள்போலுள்ள வர்ணமுடையவைகளா யிருக்கவேண்டும். ஸகல காரியங்களிலும் இந்த

ஸர்வதோபத்ரத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் லிங்கதோபத்ரங்களின் அமைப்புகளைக் கூறினேன். இவைகள் சிவனைச் சேர்ந்த விஷயங்கள். விஷ்ணுவைப் பூஜிப்பதற்கு ஏற்றவைகளல்ல. நாராயணனைப் பூஜிப்பதற்கு இராமலிங்க பத்ரம் ஏற்பட்டது. பூஜிப்பதில் ஒன்றுதான் முக்கியமாகும். அதை விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். சிவனைப் பூஜிப்பதற்கு உபாஸிக்கவேண்டியது லிங்கம். இராம முத்திரையும் உபாஸிக்கத்தக்கது என்று நீ தெரிந்துகொள். லிங்கதோபத்ரம்போல் இராமதோ பத்ரத்தையும் புத்தியினால் அமைக்கவேண்டும். செய்த பத்ரத்தை இராம இராம என்னும் அடையாளம் செய்து அதைத் தேவியின் விஷயமென்று அறியவேண்டும். இந்தப் பத்ரத்தை ஸகல புண்ய காரியங்களிலும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இராமலிங்கதோபத்ரங்களின் அமைப்பைக் கூறும்

5-வது ஸருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

ஸர்வதோ பத்ரத்தையும்- அதன் தேவதைகளையும் இங்கே கூறுகிறேன்—

பிராணாயாமம் செய்து தேசங்களையும் காலங்களையும் ஸ்மரித்து இராமதோபத்ர தேவதைகளின் ஸ்தாபனத்தை அல்லது இராமலிங்கதோ பத்ரத்தின் தேவதைகளின் ஸ்தாபனத்தை அல்லது இராமநாமதோ பத்ரங்களின் தேவதைகளின் ஸ்தாபனத்தை அல்லது இராமராமதோ பத்ரங்களின் தேவதைகளின் ஸ்தாபனத்தைச் செய்கிறேன் என்று சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். பிர்ம்மர்ஞானம் என்ற மந்திரத்திற்கு வாமதேவர் ரிஷி, திருஷ்டுப் சந்தஸ். பிரம்மதேவர் தேவதை. பிர்ம்ம சொரூபத்தை ஸ்தாபிக்கும் விஷயத்தில் வினியோகம். பிர்ம்மஞானம் என்ற மந்திரத்தினால் ஸர்வதோ பத்ரத்தின் மத்தியில் பிர்ம்ம தேவரை ஆவாகனம் செய்யவேண்டும். வடபுறத்தில் வாபியின் ஓரங்களிலுள்ள பாகத்தில் ஆப்பாயஸ்வ என்ற மந்திரத்தினால் ஸோமனை ஆவாகனம் செய்யவேண்டும். ஸோமதேவதைக்கு நமஸ்காரம்.

வடகிழக்குப் பாகத்தில் தமீசானம் என்ற மந்திரத்தினால் சந்திரன் உள்ள ஸ்தானத்தில் ஈசானனை ஆவாகனம் செய்யவேண்டும். ஈசான தேவதைக்கு நமஸ்காரம்.

கிழ்ப்பாகத்தில் வாபியில் த்ருதாரம் என்ற மந்திரத்தினால் இந்திரனை ஆவாகனம் செய்யவேண்டும். இந்திர தேவதைக்கு நமஸ்காரம்.

தென்கிழக்கு பாகத்தில் சந்திரன் உள்ள விடத்தில் அக்னிந்தாதும் என்ற மந்திரத்தினால் அக்னியை ஆவாகனம் செய்யவேண்டும், அக்னிதேவதைக்கு நமஸ்காரம்.

தென்பக்கத்தில் வாபியில் யுமாயத்வா என்ற மந்திரத்தினால் யமனை ஆவாகனஞ்செய்யவேண்டும். யமதேவதைக்கு நமஸ்காரம்.

தென்மேற்கில் சந்திரன் உள்ள இடத்தில் அமுத்வம்தும் என்ற மந்திரத்தினால் நிருருதியை ஆவாகனம் செய்யவேண்டும். நிருருதிக்கு நமஸ்காரம்.,

மேற்பாகத்தில் வாபியில் தத்வாயாமி என்ற மந்திரத்தினால் வருணனை ஆவாகனம் செய்யவேண்டும். வருணதேவதைக்கு நமஸ்காரம்.

வடமேற்கில் சந்திரன் உள்ள விடத்தில் ஆனோநியுத்பி: என்ற மந்திரத்தினால் வாயுவை ஆவாகனம் செய்யவேண்டும். வாயுதேவதைக்கு நமஸ்காரம்.

வாயு, ஸோமன், இவர்களுக்கு மத்தியில் பத்ரத்தில் நிவேசனீ ஸங்கமனீ வசூனாம் என்ற மந்திரத்தினால் துருவன், அத்வரம், ஸோமன், ஜலம், அக்னி, வாயு, பிரத்தியூஷம், பிரபாஸம் என்ற எட்டு வசுக்களை ஆவாகனம் செய்யவேண்டும்.

ஸோமன் ஈசானன் இவர்களுக்கு மத்தியில் பத்ரத்தில் நமஸ்தேருத்ர என்ற மந்திரத்தினால் வீரபத்ரர், சம்பு, கிரீசர், அஜைகபாதர், அகிர்புத்தினியர், பினாகி, புவனாதீசுவரர், கபாலி, திக்பதி, ஸ்தாணு, ருத்திரர் இந்தப் பதினொரு ருத்திரர்களை ஆவாகனம் செய்யவேண்டும்.

ஈசானன் இந்திரன் இவர்களுக்கு மத்தியில் உள்ள பத்ரத்தில் ஆசிருஷ்ணேந என்ற மந்திரத்தினால் பகவன், வருணன், சூரியன், வேதாங்கன், பானு, ரவி, கபஸ்தி, ஹிரணியரேதஸ், திவாகரன், மித்ரன், ஆதித்தன், விஷ்ணு இந்தப் பன்னிரண்டு சூரியர்களை ஆவாகனம் செய்யவேண்டும்.

இந்திரன் அக்னி இவர்களுக்கு மத்தியிலுள்ள பத்ரத்தில் அசுவினாதேஜஸாசக்ஷும் என்ற மந்திரத்தினால் அசுவினீ தேவர்களை ஆவாகனம் செய்யவேண்டும். அசுவினி தேவர்கள் இருவருக்கும் நமஸ்காரம்

அக்னி யமன் இவர்களுக்கு மத்தியில் ஸமாச்சர்ஷணீதிருதோ என்ற மந்திரத்தினால் பிதிருக்களுடன் விசுவதேவர்களை ஆவாகனம் செய்யவேண்டும்.

யமன் நிருருதி இவர்களுக்கு மத்தியில் உள்ள பத்ரத்தில் அபீத்யம் தேவம் என்ற மந்திரத்தினால் யக்ஷர்களை ஆவாகனம் செய்யவேண்டும். யக்ஷர்களுக்கு நமஸ்காரம்.

நிருருதி வருணன் இவர்களுக்குமத்தியில் உள்ள பத்ரத்தில் ஆயம்கோ: என்ற மந்திரத்தினுல் பூதங்கள் நாகங்கள் இவர்களை ஆவாகனம் செய்யவேண்டும். பூதங்கள் நாகங்கள் இவர்களுக்கு நமஸ்காரம்.

வருணன் வாயு இவர்களுக்கு மத்தியில் உள்ள பத்ரத்தில் நதீப்பிய: பௌஷ்டம் என்ற மந்திரத்தினுல் கந்தர்வர்கள் அப்ஸரஸ்தீரீகள் இவர்களை ஆவாகனம் செய்யவேண்டும். கந்தர்வர்களுக்கும் அப்ஸரஸ் ஸ்திரீகளுக்கும் நமஸ்காரம்.

பிர்ம்மதேவர் ஸோமன் இவர்களுக்கு மத்தியில் வாபியில் யதக்ரந்த: பிரதமம் என்ற மந்திரத்தினுல் ஸ்கந்தரை ஆவாகனம் செய்யவேண்டும். ஸ்கந்தருக்கு நமஸ்காரம்.

நமச்சம்பவே என்ற மந்திரத்தினுல் நந்தீசுவரரை ஆவாகனம் செய்யவேண்டும். நந்திசுவரருக்கு நமஸ்காரம்.

பத்ரம் கர்ணேபி: என்ற மந்திரத்தினுல் சூலத்தை ஆவாகனம் செய்யவேண்டும். சூலத்திற்கு நமஸ்காரம்.

விசுவகர்மாஹியஜ என்ற மந்திரத்தினுல் மகாகாலரை ஆவாகனம் செய்யவேண்டும். மகா காலருக்கு நமஸ்காரம்.

பிர்மா ஈசானர் இவர்களுக்கு மத்தியில் கொடிகளில் அதிதிர்தியேன: என்ற மந்திரத்தினுல் ருக்ஷம் முதலியவைகளை ஆவாகனஞ் செய்யவேண்டும். பிர்ம்மதேவர் இந்திரன் இவர்களுக்கு மத்தியில் வாபியில் ஸ்ரீச்சதே என்ற மந்திரத்தினுல் தூர்க்கையை ஆவாகனம் செய்யவேண்டும். தூர்கைக்கு நமஸ்காரம்.

இதம்விஷ்ணு என்ற மந்திரத்தினுல் விஷ்ணுவை ஆவாகனம் செய்யவேண்டும். விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

பிர்ம்மா அக்கினி இவர்களுக்கு மத்தியில் கொடிகளில் உதீரதாம் என்ற மந்திரத்தினுல் ஸ்வதையை ஆவாகனம் செய்யவேண்டும். ஸ்வதைக்கு நமஸ்காரம்.

பிர்ம்மா யமன் இவர்களுக்கு மத்தியில் வாபியில் பரம்மிருத்யோ என்ற மந்திரத்தினுல் மிருத்யுவை ஆவாகனம் செய்யவேண்

டும். மிருத்யுவுக்கு நமஸ்காரம். பிர்ம்மா நிருருதி இவர்களுக்கு மத்தியில் கொடிகளில் கணாநாம்த்வா என்ற மந்திரத்தினால் கண பதியை ஆவாகனம் செய்யவேண்டும். கணபதி தேவதைக்கு நமஸ்காரம்.

பிர்ம்மா வருணன் இவர்களுக்கு மத்தியில் வாபியில் ஸன் னோதேவீ என்ற மந்திரத்தினால் ஜலதேவதைகளை ஆவாகனம் செய்யவேண்டும். ஜலதேவதைகளுக்கு நமஸ்காரம்.

பிர்ம்மா வாயு இவர்களின் மத்தியில் கொடிகளில் மாருதோ யஸ்ய என்ற மந்திரத்தினால் மருத் என்ற தேவதையை ஆவா கனம் செய்யவேண்டும். மருத்துக்கு நமஸ்காரம்.

பிர்ம்மாவின் பாதத்தின் மூலத்தில் ஸியோனாபிருதிவீ என்ற மந்திரத்தினால் பிருதிவீ தேவதையை ஆவாகனம் செய்யவேண் டும். பிருதிவி தேவதைக்கு நமஸ்காரம்.

அந்த விடத்திலேயே பஞ்சநதியஸ் ஸரஸ்வதி என்ற மந்தி ரத்தினால் கங்கை முதலிய நதிகளை ஆவாகனம் செய்யவேண்டும். அவைகளுக்கு நமஸ்காரம்.

அவ் விடத்திலேயே தாம்னோ தாம்னோ ராஜம்ஸ்தோருண என்ற மந்திரத்தினால் ஏழு ஸமுத்திரங்களை ஆவாகனம் செய்ய வேண்டும். இவைகளுக்கு நமஸ்காரம். பிறகு மொட்டுக்கு மேல் நாமமந்திரத்தினால் மேருவை ஆவாகனம் செய்யவேண்டும். மேருவுக்கு நமஸ்காரம்.

பிறகு மஞ்சள் வர்ணமுள்ள மண்டலத்தில் ஸோமன் முத லான தேவதைகளுக்குச் சமீபத்தில் கிரமமாக ஆயுதங்களை ஸ்தா பிக்கவேண்டும். ஸோமதேவதைக்குச் சமீபத்தில் கதையை ஆவாகனம் செய்யவேண்டும். கதைக்கு நமஸ்காரம்.

ஈசான தேவதைக்குச் சமீபத்தில் சூலத்தை ஆவாஹனம் செய்யவேண்டும். சூலத்திற்கு நம்ஸ்காரம்.

இந்திரனுக்குச் சமீபத்தில் வஜ்ராயுதத்தை ஆவாஹனம் செய்ய வேண்டும். வஜ்ராயுதத்திற்கு நமஸ்காரம்.

14, R. H. ROAD, MADRAS-4

அக்நிக்குச் சமீபத்தில் சக்தியை ஆவாகனம் செய்ய வேண்டும். சக்திக்கு நமஸ்காரம்.

யமனுக்குச் சமீபத்தில் தண்டத்தை ஆவாகனம் செய்ய வேண்டும். தண்டத்திற்கு நமஸ்காரம்.

நிருருதிக்குச் சமீபத்தில் கத்தியை ஆவாகனம் செய்ய வேண்டும். கத்திக்கு நமஸ்காரம்.

வருணனுக்குச் சமீபத்தில் பாசத்தை ஆவாகனம் செய்ய வேண்டும். பாசத்திற்கு நமஸ்காரம்.

வாயுவுக்குச் சமீபத்தில் அங்குசம் என்ற ஆயுதத்தை ஆவாகனம் செய்யவேண்டும். அங்குசத்திற்கு நமஸ்காரம்.

மறுபடி ஸோமதேவதைக்கு வடபாகத்தில் கதைக்குச் சமீபத்தில் கௌதமரை ஆவாகனம் செய்யவேண்டும். கௌதமருக்கு நமஸ்காரம்.

வடகிழக்கில் பரத்வாஜரை ஆவாகனம் செய்ய வேண்டும். பரத்வாஜருக்கு நமஸ்காரம்.

கீழ்த்திசையில் விசுவாமித்திரரை ஆவாகனம் செய்யவேண்டும். விசுவாமித்திரருக்கு நமஸ்காரம்.

தென்கிழக்கில் கசியப முனிவரை ஆவாகனம் செய்யவேண்டும். கசியப முனிவருக்கு நமஸ்காரம்.

தென்றிசையில் ஜமதக்னியை ஆவாகனம் செய்யவேண்டும். ஜமதக்னிக்கு நமஸ்காரம்.

தென்மேற்கில் வசிஷ்டரை ஆவாகனம் செய்ய வேண்டும். வசிஷ்டருக்கு நமஸ்காரம்.

மேற்றிசையில் அத்ரியை ஆவாகனம் செய்யவேண்டும். அத்ரிக்கு நமஸ்காரம்

வடமேற்கில் அருந்ததியை ஆவாகனம் செய்ய வேண்டும். அருந்ததிக்கு நமஸ்காரம்.

மறுபடி கிழக்குத்திசை முதல் கிரமமாக விசுவாமித்திரருக்குச் சமீபத்தில் இந்திரசக்தியையும் தென்கிழக்கில்குமாரசக்தியை

யும், தென்றிசையில் பிர்ம்ம சக்தியையும் தென்மேற்கில் வராக சக்தியையும் மேற்றிசையில், சாமுண்டியையும் வடமேற்கில் வைஷ்ணவ சக்தியையும் வடதிசையில் மஹேசுவர சக்தியையும் வடகிழக்கில் விநாயக சத்தியையுமாக ஆவாகனம் செய்யவேண்டும். இந்த எட்டு சக்திகளுக்கும் நமஸ்காரம்.

எட்டு தளங்களுக்கு மத்தியில் சூரியனை ஆவாகனம் செய்ய வேண்டும். சூரியனுக்கு நமஸ்காரம்.

வெளிப் பாகத்திலுள்ள எட்டுத் திசைகளிலும் கீழ்த்திசையில் ஸோமனையும் தென்கிழக்கில் அங்காரகனையும் தென்றிசையில் புதனையும், தென்மேற்கில் பிரகஸ்பதியையும், மேற்றிசையில் சுக்ரனையும், வடமேற்குத் திசையில் சனீசுவரனையும், வடதிசையில் இராகுவையும் வடகிழக்குத்திசையில் கேதுவையும் ஆவாகனம் செய்யவேண்டும். இந்தத் தேவதைகளுக்கு நமஸ்காரம்.

இந்தத் தேவதைகளை ஸர்வதோபத்ரத்தில் ஸ்தாபித்துப்பிறகு மண்டலம் ஏற்பட்டவரிசையில் சுஷேணனை ஆவாகனம் செய்ய வேண்டும். சுஷேணனுக்கு நமஸ்காரம்.

லிங்கங்கள் எல்லாவற்றிலும் ருத்திரரை ஆவாகனம் செய்ய வேண்டும். ருத்திரருக்கு நமஸ்காரம்.

வாபிகள் எல்லாவற்றிலும் நளனை ஆவாகனம் செய்யவேண்டும். நளனுக்கு நமஸ்காரம்.

பத்ரங்கள் எல்லாவற்றிலும் சுக்ரீவனை ஆவாகனம் செய்ய வேண்டும். சுக்ரீவனுக்கு நமஸ்காரம்.

குறுக்காகவுள்ள பத்ரங்கள் எல்லாவற்றிலும் கவயனை ஆவாகனம் செய்யவேண்டும். கவயனுக்கு நமஸ்காரம்.

மஞ்சள் வர்ணமுள்ள சங்கிலிகள் எல்லாவற்றிலும் அங்கதனை ஆவர்கனம் செய்ய வேண்டும். அங்கதனுக்கு நமஸ்காரம்.

கறுப்புவர்ணமுள்ள சங்கிலிகள் எல்லாவற்றிலும் விபீஷணனை ஆவாகனம் செய்யவேண்டும். விபீஷணனுக்கு நமஸ்காரம்.

கொடிகள் எல்லாவற்றிலும் ஜாம்பவானை ஆவாகனஞ்செய்ய வேண்டும். ஜாம்பவானுக்கு நமஸ்காரம்.

கண்டங்கள் எல்லாவற்றிலும் மைந்தனை ஆவாகனம் செய்ய வேண்டும். மைந்தனுக்கு நமஸ்காரம்.

மண்டலங்கள் எல்லாவற்றிலும் திவிவிதனை ஆவாகனம் செய்யவேண்டும். திவிவிதனுக்கு நமஸ்காரம்.

முத்திரையில் இராமரையும் ஜானகியையும் ஆவாகனம் செய்யவேண்டும். இராமர் ஜானகி இவர்களுக்கு நமஸ்காரம்.

முத்திரைக்கு மேற்பக்கத்தில் மஞ்சள் வர்ணமுள்ள மண்டலத்தில் இலக்ஷ்மணரை ஆவாகனம் செய்யவேண்டும். இலக்ஷ்மணருக்கு நமஸ்காரம்

முத்திரைக்கு வடபுறத்தில் பரதனை ஆவாகனம் செய்ய வேண்டும். பரதனுக்கு நமஸ்காரம்.

முத்திரைக்குத் தென்பாகத்தில் சத்ருக்னனை ஆவாகனம் செய்யவேண்டும். சத்ருக்னனுக்கு நமஸ்காரம்.

முத்திரைக்குக் கீழ்பக்கத்தில் அநுமாரை ஆவாகனம் செய்யவேண்டும். அநுமாருக்கு நமஸ்காரம்.

வெளிப்பக்கத்திலிருக்கும் மூன்று மண்டலங்களுக்குள் வெண்மையான மண்டலத்தில் கங்கையை ஆவாகனம் செய்யவேண்டும். கங்கைக்கு நமஸ்காரம்.

சிவப்பான மண்டலத்தில் ஸரஸ்வதிநதியை ஆவாகனம் செய்யவேண்டும். ஸரஸ்வதிக்கு நமஸ்காரம்.

கறுப்பு மண்டலத்தில் யமுனாநதியை ஆவாகனம் செய்யவேண்டும். பிறகு இலக்ஷ்மியை ஆவாகனம் செய்யவேண்டும்.

இவ்விதம் ஆவாகனத்தைச்செய்து பதினாறு உபசாரங்களால் பூஜையையுஞ் செய்யவேண்டும். மிஞ்சின அன்னத்தினால் திக்குகளில் பலிபோட வேண்டும்.

இராமதோபத்திரத்தின் தேவதைகளின்
ஸ்தானத்தைக்கூறும் பிரகரணம்
முற்றிற்று.

இராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! ஸ்ரீராமருக்கு எது பிரியமானதோ அதைக் கூறுகிறேன்:—

மாதங்களுக்குள் சைத்திரமாசம் இராமருக்கு வெகு பிரியமானது. இரண்டு பக்ஷங்களில் சுக்லபக்ஷம் இராகவருக்கு வெகு பிரியமானது. திதிகள் எல்லாவற்றிலும் நவமி திதி ஸீதாபதிக்கு சந்தோஷங் கொடுக்கத்தக்கது

கௌஸல்யா குமாரன் சூரிய வம்சத்தில் அவதாரம் செய்தமையால் சூரியனுடைய வாரமாகிய ஞாயிற்றுக்கிழமை அவருக்குப் பிரியமானது. நக்ஷத்திரங்களில் புனர்வசு நக்ஷத்திரம் தாசரதிக்குப் பிரியமுள்ளது. புஷ்பவகையில் சண்பகபுஷ்பமும் துளஸியும் அல்லது ஜாதிசண்பகம் மந்தாரம், முனி, மாலதி, தமனன், கேதகி, ஸிம்மீ முதலிய ஒன்பது புஷ்பங்களும் ஜானகி ரமணனுக்குப் பிரியமானவைகள். அவ்விதமே மோதகம் லட்டுகம் (இட்டிலி), மண்டம் (ஆடை), பூர்ணகர்ப்பை (பூரி), பேணிகை (பேணி), வடகம் (வடை), பர்படம் (அப்பளாம்), காத்தியம் (பற்களால் கடிக்கக்கூடியவை), இருதபக்வம் (நெய்யில் பாகமானது) முதலிய ஒன்பதுவகை பக்ஷியங்களுந் தசரதகுமாரனுக்குப் பிரியமானவை. இவ்வொன்பது பக்ஷியங்களும் அயோத்தியா பாலனுக்கு அதிக பிரீதியுள்ளவைகள். அல்லது வேறுவிதமான திவ்யான்னங்களில் ஒன்பது வகையைக்கூறுகிறேன்—மோதகம் லட்டுகம், மண்டம், வடகம், பேணி, வரான்னம், ஓதனம், சாகம், பாயஸம் இந்த ஒன்பதும் ஸீதாபதிக்குப்பிரியமானவை! வேறுவிதமான ஒன்பதுவகையைக்கேள்—எண்பத்தொரு (குடவம்) பசும்பால், அரிசி (இரண்டேகால்குடவம்) பாசிப்பயறு உமியில்லாததானியங்கள் இவைகள் வகைக்கு ஒரு குடவம், குட்வம் சர்க்கரை இவை பத்தும் ஸ்ரீராமசந்திரருக்கு பிரீதியானவை. குடவத்தில் எட்டில் ஓரம்சமாகிய பாகமிளகு நாரீபலம் (பழவகை) ஒரு குடவம்; ஜாதிபத்ரி இவைகளால் பக்குவப் படுத்திய ஒன்பது பக்ஷியங்களென்றறியவும். இவைகள் ஸ்ரீராமபிரபுவுக்கு மிகுதியான ஸந்தோஷத்தை எப்போதும் கொடுக்கக் கூடியவைகள்.

மாணவனே! எப்போதும் நைவேத்தியம் செய்வதற்கு இலகு நவான்னம் கூறுகிறேன்—புதிதான பசும்பால் அரிசி, தோல் இல்லாத பாசிப்பயிறு, சீனி, நெய், தேன், வில்வப்பழம், மிளகு ஜாதிபத்திரி இவைகள் இலகுநவான்னமாம். குடவம் என்பது பன்னிரண்டு டங்கம் எடையுள்ளது. டங்கம் என்பது நான்கு உளுந்து எடைகொண்டது. மா, எலுமிச்சை, விளா, கொய்யா, மாதுளை, பேரீச்சை, தேங்காய், வாழை, பலா இந்த ஒன்பது பழங்களும் இராமருக்கு மிகவும் இஷ்டமானவைகள். ஸ்ரீதாபலம், எலுமிச்சை, நார்த்தம்பழம், ஸ்னித்த மஜ்ஜகம் (பழவிசேஷம்), ஜாதீபலம், மாதுலிங்கம், திராக்ஷைப்பழம், வெள்ளரிப்பழம், நெல்லிக்கனி இவைகள் ஒன்பதும் தசரதகுமாரனைப் பூஜிப்பதில் நைவேத்தியம் செய்யச் சிலாக்கியமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஒன்பது விதமான உபசாரங்கள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, ஜாதிபத்திரி, லவங்கம், ஜாதிபலம், சாதிக்காய், ஏலக்காய் இவைகள் ஒன்பதும் தாம்பூலத்தைச்சேர்ந்தன வென்பது பெரியோர்களின் கொள்கை. ஒன்பது விதமான இராஜோபசாரங்களை இராகவருக்கு அர்ப்பிக்கவேண்டும். குடை, ஸிம்மாஸனம், யானம், சாமரம், விசிறி, பானம்பண்ணுவதற்குத் தாம்பூலம், உபயோகப்படுத்துவதற்குரிய பாத்திரங்கள், அதை உமிழும் பாத்திரம், வஸ்திரம் வைக்கும்பெட்டி இவைகள் ஒன்பதும் இராஜோபசாரங்களாம்.

பிறகு அநுபவிப்பதற்குரியவைகளை இராஜாதி ராஜனுக்குக் கொடுக்கவேண்டும். சந்தனம், புஷ்பமாலை, பரிமளதிரவியம், சிரோபூஷணம், பலம், சுகந்ததைலம், தாம்பூலம், கஸ்தூரி, சிவப்பு அக்ஷதைகள் இந்த ஒன்பது வஸ்துக்களை நிவேதனம் செய்யவேண்டும். படுக்கைக்குரிய ஒன்பது உபசாரங்களைஉத்தமனுக்குஅளிக்க வேண்டும். அவைகளாவன:—பரியங்கதூலிகை, விரிப்பு உபயர்கணம், கண்ணாடி, தீபம், ஜலபாத்திரம், திரை, விசிறி ஆகிய இவைகளை அர்ப்பணம் செய்யவேண்டும். பீதாம்பரம், உத்தரீயம் தலைப்பாகை, கஞ்சுகம், தலைப்பாகைக்குமேல் ஒருதிவ்யவஸ்திரம், இடையில் தரிக்கும் வஸ்திரம், முழங்கால்துடைக்கும் வஸ்திரம், மடியில்தரிக்க

யோக்கியமான மூன்றுமுழமுள்ள ஒருவஸ்திரம்போர்த்துகொள்ளத்தக்க திவ்யவஸ்திரம் இவ்விதம் வெகுசிலாக்கியமான ஒன்பது வஸ்திரங்களை இராமார்ப்பணம் செய்யவேண்டும். குண்டலங்கள், கங்கணங்கள், மாலை, தோள்வளைகள், தண்டைகள், பதக்கம், அரைஞாண் சங்கிலி முத்திரை முதலிய இந்த ஒன்பது அலங்காரங்களையும் பக்தியுடன் இராமார்ப்பணம் செய்யவேண்டும். இவ்விதம் ஒன்பது வகையான இராமபிரீதியுள்ள பதார்த்தங்களைக்கூறினேன். மற்றுமுள்ள பதார்த்தங்களில் சிலாக்கியமானவைகளை ஸ்ரீராமசந்திரரைப் பூஜிக்கும்போது நைவேத்தியம் செய்யவேண்டும். தினந்தோறும் மூன்றுகாலங்களிலும் ஸ்ரீராமரைப் பூஜிக்கவேண்டும். தன்னிடமிருக்கும் திரவியங்களுக்கு அனுகுணமாகச் செய்யலாம். கையிலுள்ள பொருளைச் செலவு செய்வதில் லோபகுணத்தினால் வஞ்சனைசெய்யக்கூடாது. பிரதமைதிதி முதல் நவமிதிதிவரையில் தினந்தோறும் விசேஷமாகவே ஸ்ரீராமரைப் பூஜைசெய்ய வேண்டும். விசித்திரமான மண்டபம் முதலியவைகளை ஏற்படுத்தி இரகுகுலதிலகனைப்பூஜை செய்து அவர்முன்னிலையில் ஒன்பது நாட்களிலும் ஆனந்தராமாயணம் முழுவதையும் பாராயணம் செய்யவேண்டும்

நவமிதிதியில் ஸ்ரீராமரை வாகனத்திலேற்றி மங்கள தூரியம் துந்துபிமுதலிய வாத்தியங்களுடன் இராமதீர்த்தம் கொண்டு வந்து, அங்கு ருத்திரசூக்தம் முதலியமந்திரங்களால் அபிஷேகம் செய்யவேண்டும். அவ்விதமே புருஷசூக்தம் ஸ்ரீசூக்தம் விஷ்ணு சூக்தம் இவைகளால் அபிஷேகஞ்செய்து பின்பு விஸ்தாரமாக பூஜையையுஞ்செய்து கிருகத்திற்கு அழைத்துவரவேண்டும். பிறகு ஹரி நாமங்களைத் தான் கீர்த்தனம் செய்யவேண்டும். அல்லதுமற்றவர்களைக்கொண்டாவது கீர்த்தனம் செய்யும்படிசெய்து கேட்கவேண்டும். பாட்டுக்காரர்களைப் பாடச்சொல்ல வேண்டும். வேசிகளை நர்த்தனம் செய்யும்படி செய்யவேண்டும். பிறகு தான் உபவாஸமிருந்து பக்தியுடன் பிராமணர்களைப் பூஜித்து விசேஷமாகப் பாடுகிறவர்களுக்கு ஸன்மானம் செய்யவேண்டும். இராத்திரியில் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டும் நிருத்தங்களைப் பார்த்துக்கொண்டுமிருந்து விழித்துக்கொண் டிருக்கவேண்டும்.

தசமியில் காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து ஸ்ரீரகுவீரரைப் பூஜித்து, மத்தியானத்தில் பிராம்மணர்களிடம் ஸ்ரீராம பூஜை யைச் செய்யவேண்டும். அதன் விதானத்தைக்கூறுகிறேன் கேள்.

ஒரு பிராம்மணனையாவது அல்லது இரண்டு பிராம்மணரை யாவது அல்லது எட்டுப் பிராம்மணரையாவது வரிக்கவேண்டும். பிறகு கோமயத்தினுல் கிருகத்தில் ஓரிடத்தில் வெகு விஸ்தார மான பூமியை ஏற்படுத்தவேண்டும். பிறகு கோலமிட்டுக் கறுப்பு மஞ்சள் முதலான வர்ணங்களால் நான்கு பக்கங்களிலும் பத்மங் களை அமைத்து மத்தியில் ஸிம்மாஸனத்தை அமைத்து அதில், பெரிய வஸ்திரத்தினுலாவது ஆஸனத்தை ஏற்படுத்தி ஆயிரத் தெட்டு இராம லிங்கத்தையாவது அல்லது நூற்றெட்டு இராம லிங்கத்தையாவது அல்லது ஆயிரத்தெட்டு இராமதோபத்ரத்தை யாவது அமைத்து, அந்தப்பத்திரத்திற்குமேல் பத்தினியுடன் கூடின பிராம்மணனை உட்காரவைக்கவேண்டும். மேற்குமுகமாக இடது பாகத்தில் அந்தப் பிராம்மணனுடைய மனைவியை உட்கார வைத்துஅந்தத்தம்பதிகளிடம் ஸீதாராமர்களை ஆவாகனஞ்செய்து பின்பு அவர்களுக்குப் பின் பக்கத்தில் ஒரு பிராம்மணனை உட்கார வைத்து இலக்ஷ்மணனையும் இடதுபக்கத்தில் பிராம்மணனை உட் காரவைத்துப்பரதனையும் வலதுபக்கத்தில் பிராம்மணனை உட்கார வைத்து சத்ருக்னனையும் முற்பக்கத்தில் பிராம்மணனை உட்கார வைத்து அநுமாரையும் வாயுமூலைமுதலிய நான்கு மூலைகளிலும் கிரமமாக சுக்ரீவன் விபீஷணன் அங்கதன் ஜாம்பவான் இவர்களை யும் அங்கங்கு பிராம்மணர்களையும் உட்காரவைத்து ஆவாகனம் செய்து பிறகு பூஜை செய்யத் தொடங்க வேண்டும்.

இது ஸ்ரீராமருடைய நவாயதன பூஜை என்று பெயர். அல் லது பஞ்சாயதன பூஜையாம் இதற்கு ஐந்துபிராமணர்களிடம் சக் திக்குறைவுள்ள மானிடன், ஸீதாராமரைப் பூஜிக்கவேண்டும். அல் லது ஒரு ஸன்னியாஸியை இராமருடைய ஸ்தானத்தில் உட்கார வைத்துப் பூஜிக்கவேண்டும். பாக்கைக்கொண்டு ஸீதையை ஏற் படுத்தி ஸன்னியாஸிக்குப் பக்கத்தில் அதை உட்காரவைத்து நன் ருகப் பூஜை செய்யவேண்டும். பிறகு ஒரு சுமங்கலியை ஸீதை

யாகப் பாவித்து போஜனம் செய்வித்து நமஸ்காரம் செய்து விஸ்தாரமாகப் பூஜை செய்யவேண்டும்.

முதலாவது ஸீதாராமர்களுக்கு ஸெளக்கியமான பூஜையைச் செய்து பிறகு எல்லோருக்கும் அனேகம் உபசாரங்களால் பூஜை செய்யவேண்டும். கிரமமாக இலக்ஷ்மணர் முதலியவர்களுக்கும் பதினாறு உபசாரங்களுடன் பூஜை செய்யவேண்டும். அல்லது தந்திரத்துடன் இராமபூஜையைச் செய்யலாம். முதலாவது பிராம்மணர்களிடம் ஆவாகனம் செய்து ஆஸனம் கொடுக்கவேண்டும். பிறகு எல்லோருக்கும் தனித்தனியாக, பாத பிரக்ஷாளனங்களைச் செய்யவேண்டும். உத்தம புருஷர்கள் ஸன்னியாஸியின் காலலம்பின ஜலத்தைமட்டிலும் தனியே வைத்திருக்கவேண்டும். பிறகு தனித்தனியாக சந்தனம் முதலியவைகளையும் அர்க்கியங்களையும் ஆசமனத்தையும் ஸ்நானத்திற்கு ஜலத்தையும் கொடுத்து வஸ்திரங்கள் ஆபரணங்கள் உபவீதங்கள் ஸெளக்கியமான அக்ஷதை சந்தனம் சிவப்பு வர்ணமுள்ள அக்ஷதை, சிறந்த புஷ்பமாலைகள், மங்கலவஸ்துக்கள், குடை, சாமரம், விசிறி, அம்புறை, பாணங்கள், விற்கள், வாசனை வஸ்துக்கள் போக்ய வஸ்துக்கள் தூபம் தீபம்நைவேத்தியம் அல்லது வேறு சர்க்கரைமுதலிய நைவேத்யம் அனேகவிதமான பழங்கள், தாம்பூலம், தக்ஷிணை, கண்ணாடி நீராஞ்சனம் மந்திரபுஷ்பங்கள். ஒன்பது பிரதக்ஷிணங்கள், ஒன்பது நமஸ்காரங்கள், நிருத்தம், கீதம் இவைகளைத் தனியாகச் சமர்ப்பித்து ஸ்ரீரகுநாதனைப் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். கைகளைக்கூப்பி ஸ்ரீராமருக்கு முன்னின்று இடது பக்கத்தில் ஸீதை, முன்னால் ஹநுமார், பின் பக்கத்தில் இலக்ஷ்மணர் இருமருங்கிலும் பரத சத்ருக்னர்கள் வாயுமூலை முதலியவைகளில் சுக்ரீவன் விபீஷணன் யுவராஜனாகிய அங்கதன் ஜாம்பவான் இவர்கள், மத்தியில் கருநெய்தல் மலர்போன்ற அழகான காந்தியை யுடைய சியாமள வர்ணமுள்ள ஸ்ரீராமர் இவர்களை ஏற்படுத்தி ஸேவிக்கவேண்டும்.

ஸ்ரீராமன் இராவணனைக் கொன்று பிராமணர்கள் வார்த்தையை மதித்து யாத்திரைகளையும் யாகங்களையும் செய்து

அநேக போகங்களை அனுபவித்து பூமிக்குள் சென்றவளான ஸீதையைக் கிரகித்துப் பிறகு அனேக மருமக்களை அடைந்து, பூமியிலுள்ள அரசர்களை ஜயித்து, அனேக உபதேசங்களைச் செய்து கஜபுரத்திற்குச் சமீபத்தில் தம்முலகம் சென்றார்.

இந்தச் சுலோகத்தில் ஒன்பது காண்டங்களின் அர்த்தம் அடங்கியுள்ளது. இந்தச்சுலோகத்தை ஸ்ரீராமருடையஸந்நிதியில் படித்து ஸ்ரீராமரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு செய்த பூஜையை ஸ்ரீராமருக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்.

ஏ ராமா! நான் மாதவிரதத்திலும் நவமியிலும் செய்த பூஜை பாராயணத்தையும் நவராத்திரியிலும் செய்த பூஜை பாரா யணத்தையும் தங்களுக்கு அர்ப்பணம் செய்தேன். பிரபுவே! அநுக்ரகம் செய்யவேண்டும்.

நவமீ தினத்தில் செய்த நவாபதன பூஜையையும் தங்களுக்கு அர்ப்பணம் செய்தேன். தாங்கள் ஒப்புக்கொண்டு எனக்கு அநு க்ரகம் செய்யவேண்டும். இவ்விதம் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து போஜனம் செய்யும் கிரமமாக உட்காரவைத்துப் போஜ னம் செய்விக்கவேண்டும். மறுபடி தாம்பூலம் தக்ஷிணைகளைக் கொடுக்கவேண்டும்.

பிறகு பிராம்மணர்கள் பாதங்களை அலம்பின ஜலத்தைக் கிர கித்து ஸன்னியாஸியின் பாதங்களை அலம்பின ஜலத்தைப் பானம் செய்து பிறகு தேவதீர்த்தத்தைப் பானம் செய்து சுகிருத்துக் களுடனும் மித்திரர்களுடனும் போஜனம் செய்யவேண்டும்.

ஸன்னியாஸிக்கும் பிறகு பிராம்மணனுக்கும் கொடுத்து உப வீதம் முதலியவைகளைத் தன்னுசாரியருக்குக் கொடுக்கவேண்டும். இவ்விதம் விரதத்தை ஒவ்வொரு பக்ஷத்திலும் செய்யவேண்டும். அல்லது சுக்லபக்ஷத்தில் இந்த விரதத்தைச் செய்யவேண்டும். ஸ்ரீராமனை உபாஸிக்கும் மானிடர்கள் எல்லோரும் மாதந்தோ றும் விரதம் செய்யவேண்டும்'

இவ்விதம் மாஸவிரதத்தைக் கூறினேன். பூமியில் புண் ணியத்தைக் கொடுக்கும் 'வெகு விரதங்கள் உண்டு. ஆனாலும்

அவைகள் இதற்குச் சமமான விரதமல்ல. இந்த விரதம் சிறந்தது; புக்தி, முக்தி இவைகளைக் கொடுக்கக்கூடியது. இராமரை உபாஸிக்கும் மானிடர்கள் அவசியம் செய்யவேண்டிய விரதம் இது. இவ்விதம் ஸ்ரீராமருக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதும் விரதங்களுக்குள் சிறந்ததுமான இந்த விரதத்தை விஸ்தாரமாக உனக்குக் கூறினேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஓ குருவே! ஸ்ரீராமநவமிவிரதம் மாஸவிரதம் இவைகளுடைய உத்தியாபனத்தின் கிரமத்தை என்பேரில் கிருபை கூர்ந்து எப்போதும் எப்படிச் செய்வது என்பதைச் சொல்ல வேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்

ஏ பாலக! நன்றாய்க் கேட்டாய்; ஸாவதானமான மனதுடன் கேள்:—

ஒவ்வொரு மாதத்திலும் நவமி விரதம் ஒன்பது வருஷம் வரையிலே செய்து சைத்ரமாதத்தில் ஸ்ரீராமஜனனமான நவமிதிதியில் உபவாஸமாக விருந்து உத்தியாபனம் செய்யவேண்டும். கிருகத்திலாவது கோக்கள் கட்டுமிடத்திலாவது தேவகிருகம் முதலியவைகளிலாவது கோமயத்தினாலேனும் அல்லது சந்தனம் முதலியவைகளாலேனும் மெழுகி பிறகு மணல்களால் பூமியில் கறுப்பு மஞ்சள் முதலிய வர்ணங்களோடு அனேகவித பத்மம் முதலியவைகளை எழுதவேண்டும்.

முற்கூறிய இராம பத்ரங்களுக்கு மத்தியில் சித்திர வர்ணத்துடன் சிரேஷ்டமான ஆஸனத்தை எழுதி அதையும் அழகுள்ளதாகச் செய்யவேண்டும். அதற்குமேல் பெரிதானதும் மனோக்ஞமானதும் சித்திர வர்ணமுள்ளதுமான மண்டலத்தை எழுதவேண்டும்; நான்கு துவாரங்களிலும் தோரணங்கள் வாழை கரும்புகள் அனேகவிதமான மணிகள் சலங்கைகள் அழகான கண்ணாடிகள், சித்திரமெழுதியுள்ள விரிப்புகள், முத்தாரங்கள் இவைகளை ஏற்படுத்தவேண்டும். பிறகு ஜலம் நிறைந்த

இராமபத்ரத்தில் வைக்கப்பட்டிருக்கும் தாம்பிரக்கலசத்தில் நவா யனத்தின் அமைப்புடன் ஸீதாராமசந்திரரை மிகுந்த உற்சா கத்துடன் இராத்திரியில் பூஜை செய்யவேண்டும்.

ஒன்பதுபலம் தங்கத்தால் இராமருடைய மூர்த்தியையும் எட்டுப்பலம் தங்கத்தினால் ஸீதாதேவியையும்ஒவ்வொருவருக்கும் ஐந்துபலம் வெள்ளி வீதம் இலக்ஷ்மணர் முதலியவர்களையும் சக் தியில்லாவிடில் இப்போது கூறியவைகளில் பாதி அல்லது கால் அல்லது அரைக்கால் அல்லது வீசம் அல்லது அரைவீசம் கணக் காகவாவது பிரதிமைகளைச் செய்து பூஜிக்கவேண்டும். பொருள் செலவிட வஞ்சனை செய்யக்கூடாது. பதினாறு உபசாரங்க ளுடன் பூஜை செய்யவேண்டும். இராத்திரியில் கண்விழிக்க வேண்டும். தசமியில் காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து இரா மரைப் பூஜித்து இராம மந்திரத்தினால் எள்ளு,பாயஸம், ஒன்பது விதமான அன்னம் இவைகளைக்கொண்டு ஒன்பதினாயிரம் ஹோ மம் செய்யவேண்டும். அவைகளில் பத்துமடங்கு அதிகமாகப் பாலினால் தர்ப்பணத்தைச் செய்யவேண்டும். அதற்குப் பத்து மடங்கு அதிகமாக ஸ்நானம் பிராம்மண போஜனம் இவைகளைச் செய்யவேண்டும்.

கர்மமுத்திரை, கைமுத்திரை, இரண்டு வஸ்திரங்கள், உப வீதம், சித்ரான்னம், உத்தரீயம், கிரீடம், சர்சரீ, ஒன்பது அன் னங்கள் நிறைந்த வெங்கலப் பாத்திரம் அவ்வொன்பது அன்னம் வைக்கும் பாத்திரத்திற்குமேல் வெங்கலமயமான நெய் பாத்திரம் பாதுகைகள், திவ்யமான புத்தகம், இவைகளையும் தாம்பூல தக்ஷிணையையும் ஸ்ரீராம பிரீதியின் பொருட்டுத் தனித்தனியாக பிராம்மணனுக்குக் கொடுத்து எல்லாவற்றையும் ஸ்ரீராமார்ப்ப ணம் செய்யவேண்டும்.

பிறகு குருவைப் பூஜித்து அவருக்கு கோவைத் தானம் செய்து தக்ஷிணையுடன் எல்லாவற்றையும் கொடுக்கவேண்டும். குருவை அடிக்கடி நமஸ்காரஞ்செய்து, பிரார்த்தனைசெய்து கொள்ளவேண்டும். "நான் ஒன்பது வருஷங்களாக மாதந்தோறும் நவமியில் உத்தியாபனத்துடன் விரதத்தைச்செய்ததினால் ஸ்ரீராக

வர் ஸந்தோஷமடையவேண்டும். இனிமேலும் எதுவரையில் உயிரோடு இருக்கிறேனோ அதுவரையிலும் ஸ்ரீராமசந்திரனுடைய ஸந்தோஷத்திற்காக விரதங்களுக்குள் சிறந்ததான இந்த விரதத்தைச் செய்கிறேன். ஏகுருவே! அதனால் ஸீதையுடன் ஸ்ரீராமபிரபு எனக்கு பிரஸன்னமாகித் தமது கிருபையினால் அநுக்கிரகஞ்செய்யவேண்டும்" என குருவைநோக்கி பிரார்த்தனை செய்து நமஸ்கரித்துப் பிறகு அவரையனுப்பிவிட்டு மித்திரர்கள் பந்துக்கள் இவர்களுடன் போஜனம் செய்யவேண்டும்.

இவ்விதம் உத்தியாபனத்தைச் செய்து பின்பும், மாதந்தோறும் விரதத்தை அநுஷ்டிக்கவேண்டும். மானிடர்கள் எவ்விதத்திலும் இந்த விரதத்தை விடக்கூடாது. ஏகாதசி விரதம் எப்படி நித்தியமோ அவ்விதம் இந்தமாத விரதமும் நித்தியமென்று வித்வான்கள் கூறுகிறார்கள்.

சக்தியில்லாதவன் தன்சக்திக்குத் தக்கபடி இந்த விரதத்தை உத்தியாபனம் செய்யவேண்டும். பூமியில் மானிடர்கள் சுக்லபக்ஷம் நவமியில் உபவாஸமிருக்கவேண்டும். சுக்லபக்ஷம் நவமியில் மூடபுத்தியுள்ள ஒருவன் போஜனம் செய்தால், அவன் ஒரு கற்பம்வரையில் ரௌரவநரகத்தில் வாசஞ் செய்யவேண்டிவரும்.

சிடனே! நீகேட்ட விஷயத்தைக் கூறினேன். வேறு நீ விரும்புவது யாது? அதைக்கேள்—நான் உனக்குக் கூறுகிறேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஆசாரியரே! நீர் மாதந்தோறும் ஸ்ரீராமபிரீதிக்கு நவமீ விரதம் செய்யவேண்டுமென்று எனக்குச் சொன்னீர் அந்த விரதத்தைச் செய்தவர் யார்? அதனால் அவர்கள் அடைந்திருக்கும் பலன்கள் யாவை? அவைகள் யாவற்றையும் கிருபைகூர்ந்து விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

மற்றொரு விஷயம் கேட்கவேண்டுமென்றிருக்கிறேன். அதன் உண்மையையும் எனக்குச் சொல்லவேண்டும். இந்தப்பெரிய விரதத்தைச் சக்தியில்லாதவன் எவ்விதம் செய்வது?

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

ஏ மாணவனே! நன்றாகக் கேட்டாய்; ஸாவதானமான மனதுடன் கேள்:—

முன் கேரளதேசத்தில் ஸ்ரீராமரிடம் பக்தியுள்ள பிராம்மணன் ஒருவனிருந்தான். வறியோனாகிய அந்தப் பிராம்மணனுக்குக் கலியாணமாகவில்லை. வீடு தாய் தந்தை ஒருவருமில்லை. அந்தத்தரித்திர பிராம்மணனுக்கு ஒரு நியமம் உண்டு. அதைக்கேள்- தினந்தோறும் காலையில் எழுந்து கிருதமாலை என்ற நதியில் ஸ்நானம் செய்து நதியின் மணலில் மணல்களால் ஒன்பது வேதிகைகளைக் கற்பித்து, இலைகளால் கற்பித்த ஸ்ரீராமஸிங்காஸனத்தில் மத்தியில் உள்ளவேதிகையில் தாதுக்களால் நிர்மாணம் செய்யப்பட்ட இராமசந்திரரை ஸீதையுடன் ஸ்தாபனம் செய்து, எட்டுத்திசைகளிலும் உள்ள வேதிகைகளில் மரத்தின் இலைகளால் ஏற்பட்ட ஆஸனத்தில் ஸ்ரீராமருக்கு நான்கு பக்கங்களிலும் இலக்ஷ்மணர் முதலியவர்களை ஸ்தாபனம் செய்வான்.

பிறகு அவன் தாமரைப்பூப்போன்ற நேத்திரங்களை உடைய இரகுகுலதிலகனை நோக்கிச் சொல்லுவான். "ஏ இராம! அவசியம் செய்யக்கூடிய காரியத்திற்காக விரைவாகச் செல்லவேண்டும்" என்று அவரைத்தன் முதுகில் வைத்துக்கொண்டு கொஞ்சதூரம் சென்று தனிமையாக ஒரு மரத்துக்கு அருகாமையில் புல்லுள்ளவிடத்தில் ஸ்தாபித்து, அவருக்கு முன்னால் ஜலம் நிறைந்த பாத்திரத்தையும் மிருத்திகையையும் ஸ்தாபித்து, பின்பு தான்மட்டும் கொஞ்சதூரம் சென்று கொஞ்சகாலம் இருந்து மறுபடி இராமர் சமீபம் வந்து அவரது கால்களை அலம்பி மண்ணால் சுத்தி செய்து மற்றொரு பாத்திரத்தி லிருக்கும் ஜலத்தினால் ஸ்ரீராமனுக்கு ஆசமனம் கொடுத்து பக்தியுடன் பல்லுக்குச்சியினால்பற்களைத்தேய்த்து, வாய் கொப்பளிப்பதற்கு கொஞ்சம் உஷ்ணமான ஜலத்தையும் குளிர்ந்த ஜலத்தைப்பிறகு ஆசமனத்திற்குக்கொடுத்து வஸ்திரத்தினால் முகத்தையும் கைகளையும் பாதங்களையும் துடைத்துப் பிறகு அவரை முதுகில் எடுத்துக்கொண்டு மெள்ள மெள்ள வணக்கத்துடன் முற்கூறிய மணல் வேதிகையின் கீழ்ப்பக்கத்திற் கொண்டு போய் வைப்பான்.

இவ்விதம் ஸீதை லக்ஷ்மணர் ஸுக்ரீவன் முதலியவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய், உபசாரங்களைச் செய்வான். பிறகு பெரும் தானியங்களைப் பாகம் செய்வான். பின்பு ஸ்நானஞ்செய்து, மத்தியானத்தில் செய்யவேண்டியதைச் செய்துமுடித்து மறுபடி ஸ்ரீராகவரைப் பூஜித்து நைவேத்தியம் செய்வான். பிறகு வைசுவதேவம் செய்து அதிதிக்குப் பிக்ஷைகொடுத்து மீன்கள் பசு பக்ஷிகளுக்கும் பிக்ஷைகொடுத்து ஸ்ரீராமருடைய உத்தரவின்பேரில் போஜனம் செய்வான். பிறகு இராமரை ஆதரவுடன் முதுகிமேலேற்றிக் கொள்வான். அப்பால் கிரமமாக ஸீதை இலக்ஷ்மணர் முதலிய எல்லோரையும் முதுகிமேலேற்றிக்கொள்வான். பூஜா திரவியங்களெல்லாவற்றையும் பெட்டியில் வைத்துக்கொண்டு அந்தப்பெட்டியைக் கரத்தில் இடுக்கிக் கொண்டு மெள்ளச்செல்வான்.

காட்டுக்கு அருகிலுள்ள தோட்டத்திற்குச் சென்று இராமரை நோக்கி, "இராமா! தாமரைக்கண்ணா! காட்டிலும் தோட்டத்திலும் உள்ள அநேகவித பக்ஷிகளையும் மிருகங்களையும் ஸீதையுடன் பாருங்கள்" என்று காட்டிப் பிறகு கிராமத்தில் உள்ள வீதிக்குச்சென்று, அங்குள்ள வைபவங்களையும் காண்பிப்பான். அப்போது அந்தவேடிக்கை பார்க்கவந்து, கூட்டமாகவிருக்கும் ஜனங்களைக் கையிலிருக்கும் தடியினால் இந்தப் பிராம்மணன் அடிப்பான். அடிபட்டாலும் அந்த ஜனங்கள் கோபங் கொள்ளார்கள். இவ்வாறு வெகுவிநோதங்களை ஸ்ரீராமருக்குக் காண்பித்துப் பிறகு ஒருவருமில்லாத சூனியகிருகத்திற்குச்சென்று அங்கு இராமரையும் மற்றவர்களையும் படுக்கையில் படுக்கவைத்து நித்திரை புரியும்படி செய்வான்.

பிறகு அந்தப் பிராமணன் விரைவாகத்தெருக்களிற்சென்று அரிசி எண்ணெய் கீரை பழங்கள் வெற்றிலை பாக்கு குங்குமம் முதலிய வஸ்துக்களையும் தாம்பிரக் காசுகளையும் யாசித்துக் கொண்டு ஸ்ரீ இராமர் சமீபம் வருவான்.

அந்த ஊரிலிருப்பவர்களும் வீதியிலிருப்பவர்களும் அந்தப் பிராம்மணனை இராமபக்தி நிறைந்தவனென் றறிந்து தங்க

ளுடைய வியாபாரத்திற்குரிய வஸ்துக்களை அவர் கேட்டவுடன் கொடுப்பார்கள்.

பிராம்மணன் இராமர் முதலியவர்களிருக்கும் சூன்ய கிருகத்தில் வந்து இராமருக்கு முன்னே தீபமேற்றி ஆலத்திசுற்றிச் சந்தனம் முதலியவைகளால் பூஜித்து ஸந்தோஷத்துடன் துளசி மாலை புனைந்து விசிறுதல் முதலிய உபசாரங்களைச் செய்வான்.

பிறகு அந்தப் பிராம்மணன் ஸ்தோத்திரம் செய்து அடிக்கடி ஜபித்து பிரதக்ஷிணம் செய்து விசேஷமந்திரங்களால் இராமரை ஸ்துதிப்பான். பிறகு தான் யாசித்த வஸ்துக்களையெல்லாம் கலந்து அவைகளை மூன்று பாகமாகச் செய்து இரண்டு பாகத்தைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு மற்றொரு பாகத்தைச் சினேகிதன் கிருகத்தில் நவமீதினத்திற்காக வைத்துப் பிறகு வாயிற்படிக்குப் பக்கத்திலே சயனம் செய்துகொள்வான்.

மறுபடி விடியற்காலத்தில் எழுந்து, ஆசமனஞ்செய்து கீதம் தாளம் வாத்தியங்கள் இவைகளால் ஸ்ரீராமர் முதலியவர்களை எழுப்பி, முன்போல் முதுகில் வைத்துக்கொண்டு நதிக்கரை சென்று முன்போலவே பூஜைசெய்வான்.

இவ்விதம் தினந்தோறும் நல்ல மனதுடன் பூஜை செய்து நவமியில் விசேஷமாகவே பூஜித்து உபவாஸமிருந்து ஸ்ரீராமனுடைய குணங்களைக் கீர்த்தனம்செய்வான். இராத்திரி தூக்கமில்லாமல் இராகவனைப் பூஜித்துக் கீர்த்தனங்களாலும் நர்த்தனங்களாலும் இராத்திரியைக் கழித்து, மறுநாள் காலையில் தசமியில் தாசரதியைப் பூஜித்து, பிரதமை முதல் நவமிவரையில் ஒன்பது நாளாகத் தான் செய்துவந்த ஆனந்த ராமாயண பாராயணத்தை முடித்துப் புஸ்தகத்தைப்பூஜித்துத் தன்னால் ஏற்கனவே பிரார்த்திக்கப்பட்ட ஒன்பது பிராம்மணர்களை அழைத்து, அவர்களுக்குள் ஒருவரை அவர் பத்தினியுடன் மணலால் ஏற்படுத்தப்பட்ட வேதிகையில் உட்காரவைத்து, பிறகு எட்டு மூலைகளிலும் எட்டுத் தம்பதிகளையும் உட்காரவைத்து, பதினாறு உபசாரங்களால் அவர்களைப் பூஜித்துப் பின்பு முன் சினேகிதன் வீட்டில் நவமி

தினத்திற்காக வேண்டுமென்று வைத்திருந்த ஒரு பாகத்தைச் சமையல்செய்து அகலமான வாழையிலைகளில் அந்த அன்னங்களைப் பரிமாறுவான்.

அந்தப் பிராம்மணர்கள் தங்கள் தங்கள் பத்னிகளுடன் இவனுடைய பக்தியில் ஸந்தோஷங் கொண்டவர்களாகிப் போஜனம் செய்வார்கள். பிறகு அந்தப் பிராம்மணன் அந்தத் தம்பதிகளுக்குத் தாம்பூலதக்ஷிணைகளைக் கொடுத்துபசரித்துப் பின் போஜனம் செய்வான்.

இவ்வாறு அந்தப் பிராம்மணன் மாதந்தோறும் நவாயதன பூஜையைச்செய்து விரதத்திற்கும் தசமியில் பாரணைக்கும் யாசித்தாவது ஒன்பது பிராம்மணர்களைப் பூஜிப்பான். இவ்வாறாக ஒன்பது வருஷங்கள் சென்றன.

ஒரு சமயத்தில் சிராவணமாதத்தில் அந்தக் கிராமத்தின் வழியாக ஓரரசன் சேனைகள் சூழச் சென்றான். அப்போது இந்தப் பிராம்மணன் இரவில் தரையிலே படுத்து நித்திரை புரிந்தான். இந்த ஸமயம் மழையினால் சிரமமடைந்த இராஜ சேவகர்கள் கிராமத்தில் உள்ள வீடுகளில் நுழையும்போது இந்த அந்தணனுடைய சூனிய கிருகத்திலும் பத்துப் பேர்கள் நுழைந்தார்கள். குதிரையின் மீதேறின ஆயுதங்களுடன் கூடின அந்தச் சேவகர்கள் வாயிற்படியின் மத்தியில் தரையில் தூங்கும் இந்த அந்தணனை நோக்கி "ஏ பிராம்மணா! விரைவாக எழுந்திரும்; நாங்கள் வெளியில் வெகுகாலமாக மழையினால் துன்பமடைந்தவர்கள். சூனிய கிருகமானாலும் இங்குச் சென்று குதிரைகளுடனும் சேவகர்களுடனும் சுகமாக இருக்கின்றோம். வழியை விடும்" என்றார்கள்.

சேவகர்கள் சொல்லைக்கேட்ட அந்தணன் "இங்கு ஸீதையுடன் இராமச்சந்திரரும் அவருடைய பந்துக்களும் நித்திரையிலிருக்கிறார்கள். இங்கு உங்களுக்கிருக்க இடமில்லை; இந்தக் கிராமத்தில் எவ்வளவோ இடமிருக்கின்றன. அங்கே செல்லலாம்" என்று கூறினான் இந்த அந்தணன் சொல்லைக்கேட்ட சேவகர்கள் "ஏ அந்தணரே! இங்கு ஸீதையுடன் இராமரும் அவருடைய பந்துக்களும் இருந்தால் அவர்களை வெளியில் போகச்சொல்லும், எங்களுக்கிருக்க ஸ்தலந்தாரும்" என்றார்கள்.

அந்த விப்ரன் "இராஜ சேவகர்களே! இரவில் தூங்கும் இராமர் முதலியவர்களை நான் எவ்வாறு எழுப்புவேன்? நான் உங்களை நிரம்பவும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இராமர் முதலியவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து வேறு ஸ்தலம் செல்லுங்கள்" என்றான்.

அப்பொழுது மழையினால் துன்பமடைந்த அந்தச் சேவகர்கள் இந்த அந்தணன் தடுத்தவுடன் கோபங்கொண்டு அவனை அடித்தார்கள். அப்போது விப்ரன் "என்னை அடிக்காதேயுங்கள்; இருங்கள்; இராமரை எழுப்பி வெளிப்படுத்துகிறேன்" என்று சொல்லி, ஆசமனம் செய்து ஸீதாபதியிடம் சென்று "ஏ தசரத குமாரா! எழுந்திரும்; வெளியில் குதிரையின்மேல் சேவகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கிருக்க இந்த இடத்தைக் கொடுத்து விட்டு நாம்வெளியிலே போவோம்" என்றுசொல்லி முன்போல் இராமர் முதலியவர்களை முதுகிலேற்றிக்கொண்டு பெருங் கூச்சலிட்டு வஸ்திரம் முதலியவைகளைக் கக்ஷத்திலும் இடது கையில் தடியையும் வைத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான். அந்தச் சேவகர்கள் இந்த விப்ரனைப்பார்த்து பைத்தியங் கொண்டவன் என்றெண்ணினார்கள். பிறகு அந்தணன் தன் வீட்டுவாயிலுக்கு வந்து மழையைப்பார்த்து தலைகுனிந்தவனாக நின்றான். அச்சமயம் துஷ்டர்கள் உட்புகுந்தார்கள். அந்தணன் மிகுந்த வருத்தங்கொண்டு மனதில் "வாயு குமாரனாகிய ஹநுமானுடைய பலத்தைக் கேட்டிருக்கிறேன்; அவையாவும் பொய்யாய்விட்டன இந்த ஸமயம்" என்றெண்ணி வெகுகோபத்துடன் விரைவாக ஜலபாத்திரத்தைப் பூமியில்வைத்து இடதுகையினால் ஆஞ்சனேயருடைய வாலைப்பிடித்து ஆகாயமார்க்கத்தில் உதறினான். அப்பொழுதுவாயு புத்திரனுடைய தாதுக்கள் அழகான மூர்த்தியாகி ஆகாயமார்க்கம் சென்று மிகுந்த பயத்துடன் கர்ஜனைசெய்தன. அந்தக் கர்ஜனையைக்கேட்டு மகாவீரர்களும் கிராமத்திலிருப்பவர்களும் பயந்து ஒரு க்ஷணத்தில் மரணமடைந்தார்கள். குதிரைகள், யானைகள், காளைகள் முதலியனவும் அந்தக்கிராமத்திலுள்ள புருஷர்கள் யாவரும் இறந்தார்கள். அப்போது அந்தப் பிராம்மணனைத்

தமன்மாத்திரம் ஸ்ரீராமருடைய கிருபையால் உயிரோடிருந்தான். ஆஞ்சநேயனுடைய கர்ச்சனையினுல் இறந்துபோன புருஷர்களுடைய மனைவிகள் காலையில் எழுந்து தங்கள் தங்கள் புருஷர்கள் மரணமடைந் திருப்பதைப் பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள். அந்த ஸ்திரீகளுக்கு அந்தச் சப்தம் செவியிற் படவில்லை.

அப்பொழுது அவர்கள் உயிரோடிருக்கும் அந்தணனையும் சேற்றில் விழுந்திருந்த மாருதியையும் நோக்கி வினவினர். பிராம்மணன் அந்தஸ்திரீகளுக்கு ஸகலவரலாற்றையும் தெரிவித்தான். பிறகு அந்தஸ்திரீகள் அந்தப் பிராம்மணனைப் பிரார்த்தனை செய்து அவனைத் தங்களுடைய பட்டணத்திற்கு அரசனுகக் கொண்டார்கள். பிராம்மணனும் ஸ்ரீராமருடைய ஆக்ஞையினுல் அரசாக்ஷி செய்தான். நகரத்திலிருக்கும் ஸ்திரீகளுக்கும் கணவனுகவே இருந்தான்.

மாருதியின் அந்தக்கர்ஜனை ஒவ்வொரு ஸமயத்தில் அந்த நகரத்தில் மேகசப்தம்போல் இப்போதும் கேட்கிறது. அந்தச் சப்தத்தைக்கேட்ட புருஷர்கள் சாகின்றனர். ஸ்திரீகள் மட்டிலும் விருத்தியடைந்து வருகிறுர்கள். ஸகல ஸ்திரீகளுக்கும் இந்த அந்தணன் ஒருவனே கணவன். அதுமுதல் அந்த இராஜ்யத்தை ஸ்திரீ ராஜ்யம் என்று மானிடர்களில் சிறந்தவர்கள் கூறுகிறுர்கள்.

பிறகு அந்த அந்தணன் வெகுகாலம் சென்றபின்பு மரணமடைந்து, முன்செய்த புண்ணியத்தினுல் விஷ்ணு ஸாயுஜ்யத்தை அடைந்தான்.

அப்பால் அந்த ஸ்திரீகள் வந்த வழிப்போக்கர்களைக் கணவனுகக்கொண்டு அவர்களுடன் வாழ்ந்து வந்தார்கள். அப்போது ஹநுமான் கர்ஜனை உண்டாகும் காலத்தை யறிந்து அப்புருஷர்களை இரகசியமான இடங்களில் இருக்கச்செய்து துந்துபி வாத்தியம் சங்கநாத முதலியவைகளை முழக்கி கர்ஜனை சப்தம் ஓய்ந்த பின்பு அவர்களைத் தங்களிருப்பிடத்திற்கு அழைத்து வருவார்கள். அப்பொழுது அவர்களை மறுபிறவி யடைந்ததாகவே கருதி அநேக உற்சவங்கள் 'செய்வார்கள்.' இவ்வாறு

அவர்களுடன் அந்த இராஜ்யத்தை எப்போதும் அரசாக்ஷி செய்து வந்தார்கள்.

ஏ விஷ்ணுதாஸ! அந்தத் தேசத்திலும் அதற்குச்சமீபத்திலு முள்ள தேசங்களிலும் ஸ்திரீபிரஜைகளே உற்பத்தியாகின்றன.

மாருதியின் கர்ஜனை கலந்த காற்றின் ஸ்பரிசத்தை அடைந்த வர்கள் சக்தியை இழக்கிறார்கள். அவர்களுக்குப் புருஷத் தன்மை குறைந்துபோகிறது அதனாலேதான் பெண்கள் உண் டாகின்றன. அபூர்வமாகப் புருஷப் பிரஜை உண்டாகும் ஸ்திரீக ளுடைய இரஜஸ் அதிகமானால் பெண்ணும் புருஷனுடைய சுக்லம் அதிகமானால் பிள்ளையும் இரஜஸ் சுக்லம் இரண்டும் ஸமமானால நபும்ஸகனும் பரமேசுவரனுடைய இச்சைப்படி ஏற்படுகின்றார்கள்.

ஏ விஷ்ணுதாஸ! பிள்ளை பிறக்காமலிருப்பதற்கு மற்றொரு காரணம் கூறுகிறேன் கேள்:—

அந்தத் தேசங்களில் ஸ்திரீகள் தங்களுக்கு இராஜ்யம் கிடைத்த மதத்தினால் சம்போக காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் மாறிக் கிரீடித்தார்கள் அச்சமயத்தில் ஸ்திரீகளுடைய முதுகு பூஸ்பரிசம் அடைவதில்லை. அதனால் புருஷனுடைய சுக்லம் வெளிப்பட்டு சூக்ஷ்மமான துவாரமுள்ள கர்ப்பஸ்தானத்தில் பிர வேசிப்பதில்லை. மூக்கு கண் காது இவைகளுக்கு இரண்டு துவா ரங்களுண்டு. ஆண்குறி குதஸ்தானம் இவைகளுக்கு ஒவ்வொரு துவாரம் ஏற்பட்டது. சிரசில் பத்தாவது துவாரம் ஏற்பட்டது. சிரசில் பத்தாவது துவாரம் புருஷர்களுக் குண்டென்று பெரி யோர் கூறுகிறார்கள்.

ஸ்திரீகளுக்கு மூன்று துவாரங்கள் அதிகம். அவைகளான— இரண்டு ஸ்தனங்கள், கர்ப்பஸ்தானம் ஆக மூன்றும். இம்மூன்று துவாரங்களும் ஊசிமுனைக்குச் சமமானவைகள். புருஷன் கிரீடிக் கும்போது கர்ப்பத்துவாரமானது கொஞ்சம் மலர்ந்து புருஷ னுடைய சுக்லத்திற்கு வழிகொடுக்கிறது. அந்த வழியாகப் புரு ஷனுடைய வீரியம் உள்ளே சென்றால் பிள்ளை உண்டாகும் என் பதில் சந்தேகமில்லை. சுக்லம் கொஞ்சம் பிரவேசித்தால் அப் போது பெண் பிறக்கிறது. அதாவது ஸ்திரீகளுடைய இர ஜஸ் அதிகப்படுவதினால் என்று நிச்சயிக்கப்பட் டிருக்கிறது.

ஆகையினால் எப்போது புருஷன் கீழே இராத்திகாலத்தில் சயனம் பண்ணுகிறானோ அப்போது அவனுடைய வீரியம் வீரத்திலிருக்கும் ஸ்திரீயின் கர்ப்பஸ்தானம் செல்கிறதில்லை. ஒருகால் தெய்வ வசத்தினால் ஊசி முனைபோன்ற கர்ப்பத்துவாரத்தில் கொஞ்ச மதிகமாகச் சென்றால், அப்போது பிள்ளையுண்டாகும். உண்டானாலும் நபும்ஸகன்போலத் தோன்றுவன். ஆகையினாலே தான் அந்தத் தேசங்களில் பெண்கள் அதிகமாக உண்டாகின்றனர். அந்தணர்களுக்குள் உயர்ந்தவனாகிய விஷ்ணுதாஸ! பெண் பிறப்பதற்குக் காரணங் கூறினேன்.

இவ்விதம் எல்லாத் தேசங்களிலும் ஸ்திரீயின் பலம் அதிகமானால் பெண்ணென்றும் புருஷன்பலம் அதிகமானால் பிள்ளையென்றும் ஏற்படும். ஆகையினால் பிள்ளையை அடையவேண்டுமென்ற ஆவலுடையவன் எப்போதும் ஸ்திரீயை மிகவும் போஷிக்கக் கூடாது. எப்போதும் அனேகவித ரஸபதார்த்தங்களால் தன்னையே போஷித்துக்கொள்ள வேண்டும்.

ஆகையினால் வைத்தியர்களை எப்போதும் காப்பாற்றவேண்டும். அவர்கள் புருஷனுடைய பலமும் பலமில்லாதவன் தன்மையையும் அறிவார்கள். ஒருவனுக்கு தேகம் பருமனாக விருந்தால் அதைக்கொண்டு பல முடையவனென்று நினைக்கக் கூடாது; வாதத்தினாலும் பெருத்திருக்கும். அந்த விஷயத்தை வைத்தியர்களைக் கொண்டுதான் தெரிந்துகொள்ள வேண்டும். எப்போதும் வைத்தியர்களை நம்பிக்கையுடன் கேட்கவேண்டும்.

மந்திரம், தீர்த்தம், பிராம்மணன், தேவர்கள், வைத்தியன், சோதிடன், குரு இவர்களிடம் எவ்வளவுக்கெவ்வளவு நம்பிக்கை ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு காரியசித்தி உண்டாகும். உத்தமனாகிய மானிடன் வைத்தியன் சொன்ன வழிப்படி நடப்பான் பத்துப்பெண்கள் பிறப்பதைக்காட்டிலும் ஒருபிள்ளை பிறந்தால் அப்பிள்ளை (பும்) என்ற நரகத்திலிருந்து குலத்தைக் கரையேற்றுகிறான். பெண்ணாயிருந்தால் தன்னுடைய கெட்ட நடவடிக்கையால் தன் கணவன் குலத்தையும் தன் தகப்பன் குலத்தையும் நரகத்தில் தள்ளிவிடுகிறாள்.

ஆகையால் மானிடர்கள் பிள்ளையை உண்டுபண்ண முயற்சிக்கவேண்டும். மானிடர்கள் அனேகம் புத்திரர்களை அடைய

வேண்டும். ஒருவனுகிலும் கயை செல்வான். அசுவமேதத்தி ஞலாவது யாகம் செய்யவேண்டும். கறுப்பு வர்ணமான காளையை விடவேண்டும். உயிரோடிருக்கும் தாய்தந்தையரின் வாக்பியத் தைக் கேட்பதினுலும், வருஷந்தோறும் பூரிபோஜனம் செய்வ தாலும், கயையில் பிண்டம் கொடுப்பதாலும் ஆக இம்மூன்று காரணங்களாலும் புத்திரர்களுக்குரிய தருமம் நிலைநிற்கும்.

ஏ மாணவனே! சக்தியில்லாதவன் எவ்விதம் அந்த விரதத் தைச் செய்கிறது என்று கேட்டதற்கு அந்தணன் கதையை உனக்குச் சந்தோஷமுண்டாகும்படி கூறினேன்.

தரித்திரனுகிய அந்தப் பிராம்மணன் அந்த விரதத்தின் மகி மையால் பெரிய இராஜ்யத்தை அடைந்து மிகுந்த சுகத்தை அனுபவித்து ஆயுள் முடியும் சமயத்தில் விஷ்ணு ஸாயுஜ்யமு மடைந்தான்.

இவ்வுலகத்தில் அனேக சுகங்களைக் கொடுப்பதும் பரலோ கத்தில் மோக்ஷத்தைக் கொடுப்பதுமாகிய இந்த விரதத்தை எவர் கள் தாம் அனுஷ்டிக்கமாட்டார்கள்?

இந்த விரதத்தைத் தேவர்கள், முனிவர்கள், நாகர்கள், கந்தர் வர்கள், கின்னரர்கள், அரசர்கள் எல்லோரும் செய்திருக்கிறார்கள். இவ்வுலகத்தில் ஸ்திரீகள், புத்திரர்கள், தனம் முதலிய சகல பாக்கியங்களையும் கொடுக்கக்கூடிய விரதமிது. பரலோகத்திலும் விஷ்ணு சாயுஜ்யத்தைக் கொடுக்கும்.

பூமி, அந்தரிட்சம், சொர்க்கம் இவ்வுலகங்களில் அனேக விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீராமநவமி விர தத்திற்குச் சமானமாகிய விரதம் ஏற்பட்டதுமில்லை ஏற்படப் போகிறதுமில்லை.

அந்தணர்களுக்குள் சிறந்தவனுகிய விஷ்ணுதாஸ! மிக சிலாக்கியமான இந்த விரதத்தை மானிடர்கள் எப்போதும் செய்யவேண்டும். நீ கேட்ட விஷயத்தைக் கூறினேன்.

இன்னமும் கேட்க விருப்பமுள்ள விஷயத்தைக் கேள்—

நவமி விரதத்தின் மகிமையைக்கூறும்

6-வது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

ஸ்ரீ விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

பரமகுருவே! ஸ்ரீராகவருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியவைகளைத் தயைசெய்து கூற வேண்டுகிறேன்:—

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! நான் கூறுவதைக் கேள்—ஸ்ரீராமச் சந்திரருடைய ஸந்தோஷத்திற்கு எப்போதும் மாணிடர்கள் பத்ரங்களில் (ஓலைகள்) ஸ்ரீராம நாமத்தை எழுதவேண்டும். தினந்தோறும் தொளாயிரம் நாமங்களை எழுதவேண்டும் இவ்வாறு கோடி நாமங்கள் அல்லது இலக்ஷம் நாமங்களை எழுதலாம்.

பத்து பாகங்களில் ஒரு பாகத்தினால் விதிப்படி ஹோமம் செய்யவேண்டும் இது விஷ்ணு என்ற மந்திரத்தினால் எள் முதலியவைகளால், அல்லதுபாயஸத்தினால், அல்லதுஒன்பதுவித சுன்னத்தினால் ஸ்ரீராகவரைப் பூஜித்து ஹோமம் நிறைவேற்றப்படவேண்டும். அப்படி ஹோமம் செய்வதற்கு அங்கமாகக் கொண்டு இராமர் முதலியவர்களைப் பூஜைசெய்வதற்குப் பிரயத்தினத்துடன் பத்ரத்தை ஸ்தாபிக்கவேண்டும். ஆயிரத்தெட்டு இராமலிங்கமாவது நூற்றெட்டு இராமலிங்கமாவது ஆயிரத்தெட்டு இராமதோ பத்ரமாவது நூற்றெட்டு இராமதோ பத்ரமாவது ஆஸனமாக அமைக்கப்படவேண்டும். இவ்விதம் ஹோமத்தையும் எழுதினதையும் பூஜையையும் மிகுந்த பக்தியுடன் ஸ்ரீராமார்ப்பணம் செய்யவேண்டும்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! இராம நாமங்கள் எழுதும் கிரமத்தைக் கூறினீர்கள். அதன் உத்தியாபனத்தின் கிரமத்தைச் சொல்லவில்லை; அதையும் அறியவேண்டுகிறேன்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

ஏ மாணவனே! இராமநாமங்களை உத்தியாபனம் செய்வதற்கு நடக்கப்போகிற கதையை நடந்ததுபோல விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் கேள்—

துவாபரயுகத்தில் மகாவீரனும் பாண்டுகுமாரனுமாகிய தருமபுத்திர மகாராஜன் இராஜ்யத்தை இழந்து பந்துக்களுடனும் திரௌபதியுடனும் வனத்தில் வாசம் செய்யப்போகிறார்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணன் தருமபுத்திரரைப் பார்ப்பதற்கு வனம் செல்லப்போகிறார். தருமபுத்திரர் அந்தக் கிருஷ்ணனைப் பூஜித்துக் கேட்கப்போகிறார்.

தருமபுத்திரர் வினவுகிறார்.

தேவர்களுக்குத் தேவரும், உலகங்களுக்கு நாதரும், பக்தர்களுக்கு வரமளிப்பவருமான உம்மை ஒரு விஷயம் கேட்கிறேன். நீர் என் விஷயத்தில் ஸந்தோஷித்திருப்பது உண்மையானால் இராஜ்யலக்ஷ்மியை அடையக்கூடியதும் புத்திரர்கள் பௌத்திரர்கள் இவர்களை விருத்திசெய்யக் கூடியதுமான ஒரு விரதத்தை இராஜ்யமிழந்த எனக்குக் கூறவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் உபதேசிக்கிறார்.

இரகசியங்களுக்குள் இரகசியமான விஷயத்தைக் கேட்க விருப்பமிருந்தால் ஆதரவுடன் நான் கூறுவதைக்கேளும். இராம நாமத்தைத் தவிர வேறு உபாயம் மோக்ஷலட்சுமியைக் கொடுக்கக்கூடியதல்ல. தேஜோரூபம் என்றும் அவியக்தம் என்றும் இராமநாமத்தைத்தான் சொல்லுகிறது. அந்த இராமநாமத்தை மானிடன் ஜபம் செய்தால் இராமராகவே ஆகிறான். இந்த உபாயம் தான் ஹநுமாருக்கு இராமச்சந்திரபிரபு சொன்னார்.

தருமபுத்திரர் கூறுகிறார்.

நல்ல புத்தியுள்ளவரும் ருக்மிணிக்குப் பதியுமாகிய கிருஷ்ணா! எந்த ஸமயத்தில் இராமர் ஆஞ்சனேயருக்கு உபதேசம் செய்தார். அந்த விஷயத்தை விஸ்தாரமாக எனக்குச் சொல்லவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறார்.

முன் இராமாவதாரத்தில் இராவணன் ஸீதையை அபகரித்தான். அப்போது இராமன் ஹநுமானை அழைத்துக்கூறுகிறார்—

ஸ்ரீராமபிரான் கூறுகிறார்.

வாயு குமாரனாகிய ஏ ஆஞ்சநேய! ஸீதையைத்தேடுவதற்குத் தென்றிசைமுழுதும் சென்று பார்த்துவா.

அநுமான் கூறுகிறார்.

உலகங்களுக்குப் பிரபுவாகிய ஏ இரகுநாத! தென்றிசையில் ஸமுத்திரமிருப்பதோடு அரக்கர்களும் இருக்கிறார்கள். அங்கு செல்ல எனக்குச் சக்தி எப்படி ஏற்படும்?

ஸ்ரீராமச்சந்திரர் கூறுகிறார்.

ஏ மாருதியே! இராவணன் முதலிய அரக்கர்களை நிவாரணம் செய்யும் சக்தியுள்ள மந்திரமிருக்கிறது. அதை உனக்கு உபதேசம் செய்கிறேன். அதனால் உனக்கு எல்லா விஷயங்களிலும் ஜயம் உண்டாகும்.

அநுமான் கூறுகிறார்.

மகாராஜனும் கிருபைக்குக் கடலும் தீனர்களைக்கரையேற்றுகிறவனுமாகிய மகாநுபாவா! அந்த மந்திரத்தின் தத்துவத்தை இப்போது உபதேசம் செய்யவேண்டும்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் மாருதியின் மொழிகேட்ட இராமர் அவரைத் தனியாக அழைத்து வலது செவியில் ஸ்ரீராம என்று உபதேசம் செய்தார்.

ஆஞ்சநேயர் உபதேசம் பெற்று இலக்ஷம் தடவை புரச்சரணை செய்து தென்றிசையை நோக்கிப்புறப்பட்டார். அந்த மந்திரத்தின் மகிமையினால் அநேகவித ஜந்துக்களால் நிறைந்ததும் கடக்கமுடியாததுமான சமுத்திரத்தைக்கடந்து இலங்கைக்கு வந்து ஸீதையைக்காணாமல் அசோகவனஞ்சென்று அங்கு விருக்ஷத்தின் அடியில் இருக்கும் ஸீதையைக்கண்டார்.

அங்கு ஸீதையைக் கண்டவுடன் அவள் சமீபம் சென்று வெகு சந்தோஷத்துடன் ஸீதையின் பாதங்களில் நமஸ்காரம்

செய்தார். மிகவும் சூக்ஷ்மமான சரீரம் உள்ளவரும் பாலசரீரி போன்றவரும் பூமியில்விழுந்து நமஸ்காரம் செய்தவருமாகிய ஹநுமாரை ஸீதாதேவிபார்த்து "ஏ பாலக! நீ யார் எங்கிருப்பவன்? உன் தந்தை பேரென்ன? எங்கு வந்தவன்?" என்று கேட்டாள்.

அநுமார் கூறுகிறார்.

எனக்குத் தாய் ஸீதை, தகப்பன் இராமர்; நான் இராமச்சந்திரருடைய சமீபத்திலிருந்துவந்தவன்; ஹநுமான் என்னும் பெயருள்ளவன்; இதோ மோதிரத்தை வாங்கிக்கொள்ளவேண்டும்-என்றார்.

ஸீதை சுத்தமான சொர்ணத்தினால் செய்யப்பட்ட இராம நாம அடையாளமுள்ள இராமருடைய மோதிரத்தை அடைந்து மிகுந்த ஸந்தோஷங் கொண்டாள். ஸீதாதேவியின் ஸந்தோஷத்தைத் பார்த்த அநுமான் "தாயே! எனக்குப் பசி உண்டாய் மிகவும் களைப்புண்டாக்குகிறது. இந்த அசோக வனத்திலிருக்கும் பலங்கள் கிடைப்பது அரிதாகும். தங்களுடைய உத்தரவினால் பழங்களைச் சாப்பிடுகிறேன். நிச்சயம்" என்றார்.

ஸீதாதேவி கூறுகிறாள்.

சூரனாகிய பாலகா! இந்த அசோகவனத்திற்கு யஜமானனாகிய இராவணனிருக்கிறான். அவனை வெல்லும் சக்தியாருக்குமிராது. உனக்கும் முடியாது. எவ்விதம் நீ பழங்களைப் புசிக்கப் போகிறாய்?

ஹநுமான் கூறுகிறார்.

அம்மா! என் மனதில் ஸ்ரீராம என்ற மந்திரமாகிய ஆயுதம் இருக்கிறது. அதனால் ஸகலராக்ஷசர்களும் இப்பொழு தெனக்குத் துரும்புபோலாவார்கள்—என்றுசொல்லி ஸீதையின் உத்தரவைப் பெற்று அசோகவனத்திலுள்ள விருக்ஷங்களை முறித்தார்.

அந்த அரவங்கேட்டு அரக்கர்கள் வந்தார்கள். யுத்தமும் உண்டாயிற்று. அநுமார் மந்திரத்தின் மகிமையினால் அரக்கர்களை நாசஞ்செய்தார். இலங்காபுரியைக்கொளுத்தினார். மறுபடி அசோக வனஞ்சென்று ஸீதையை நமஸ்காரம் செய்து ஸீதையினிடம் சூடாமணியைப் பெற்று ஸ்ரீராமச்சந்திரரிடம் வந்து மணியைக்

கொடுத்து அவருடைய பாதாரவிந்தத்திற்கு அருகே நின்றார். ஸீதாபதியும் சூடாமணியைப்பெற்று அந்த வரலாற்றைக் கேட்டு ஸந்தோஷ மடைந்தார்.

ஏ தருமபுத்திரா! இராமநாமத்தின் மகிமையைக்கூறினேன். ஆகையால் நீயும் இராமநாமத்தை ஜபம் செய்.

தருமபுத்திரர் கூறுகிறார்.

எவ்விதம் ஜபம் செய்வது? எவ்விதம் புரச்சரணை செய்வது? அதன் பலன் என்ன? உத்தியாபனம் செய்வது எப்படி? எல்லாவற்றையும் கூறவேண்டும்.

கிருஷ்ணன் கூறுகிறார்.

ஸ்நானம் செய்து பரிசுத்தமான ஸ்தலத்தில் துளஸிமாலையால் ஜபம் செய்யவேண்டும்; அல்லது புஸ்தகத்தில் எழுதவேண்டும்; அல்லது மனதில் ஸ்மரணம் செய்யலாம். கோடியாவது இலக்ஷமாவது கணக்காகவேண்டும். ஸ்ரீராமமந்திரங்கள் அநேகமுண்டு. அவைகளுக்குள் ஒரு மந்திரத்தை உமக்கு உபதேசம் செய்கிறேன். ஸ்ரீ என்ற சப்தத்தை முதலாவதும் ஜய என்ற சப்தத்தை மத்தியிலும் மறுபடி ஜய என்று இரண்டுதடவை சொல்லும் சப்தத்தையும் கூறி இரகுநாதனுடைய நாமங்களை இருபத்தொரு தடவை ஜபம்செய்தால் கோடிபிரம்மஹத்தி பாவங்களும் நீங்கும்.

நல்ல புத்தியுடையவன் இந்த மந்திரத்தை லக்ஷமுறை ஜபம் செய்து பிறகு உத்தியாபனம் செய்யவேண்டும். ஜபம் செய்வதைக் காட்டிலும் இராமநாமத்தை எழுதுவதில் நூறுமடங்கு அதிகமான புண்ணிய மேற்படும். லக்ஷம் தடவை தனித்தனியே சிறப்பாக உத்தியாபனம் செய்யவேண்டும். உத்தியாபனம் செய்யும் விதியைக் கூறுகிறேன் கேள் - முதல் நாள் உபவாஸமிருந்து இரவில் மண்டபத்தின் மத்தியில் இராமலிங்க பத்திரத்திலாவது ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டு பத்திரத்திலாவது தானியங்களைப் பரப்பி அதன்மத்தியில் கலசத்தை வைத்து அதற்கு மேல் நல்ல வஸ்திரத்தினால் விளங்கும் சொர்ண பாத்திரத்தில் உளுந்

தளவு எடைமுதல் ஒரு பலம் எடைவரையில் சொர்ணத்தினால் ஸீதை இலக்ஷ்மணர் ஸ்ரீ ராமர் இவர்களுடைய பிரதிமையை வைத்து மிகவும் ஜாக்கிரதையாகவிருந்து பதினாறு உபசாரங்களால் பூஜிக்கவேண்டும். அந்தப்பிரதிமை தன் சக்திக்குத்தக்கபடி வெள்ளியினாலோ தாம்பிரத்தினாலோ இருக்கலாம்.

இராம நாமம் எழுதப்பட்ட பத்ரத்தை அதற்குமுன் வைத்து பூஜைசெய்யவேண்டும். பிறகு அவருடைய கதையை சிரவணம் செய்து தேவதைகளுக்கும் தேவராகிய இரகுகுலதிலகரையும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

தீனர்களுக்கு நாதரும் கருணைக்குக் கடலுமாகிய இராமா! உம்முடைய பக்தியில் ஈடுபட்டவனாயினும் அபராதியாகிய என்னை ஸம்ஸாரமாகிய கடலிலிருந்து கரையேற்றிக் காக்கவேண்டும்—என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இராத்திரியில் கீதவாத்தியங்களுடன் விழித்துக்கொண்டிருந்து காலையில் ஸ்நானம் செய்து ஹோமத்தை ஆரம்பம் செய்யவேண்டும். பத்தில் ஓரம்சம் ஹோமம்; அதில் பத்தில் ஓரம்சம் தர்ப்பணம் பசுவின் பாலினால் செய்யவேண்டும். அதிலும் பத்தில் ஓரம்சம் பிராம்மணர்களுகுப் போஜனம் செய்விக்கவேண்டும்.

விரதம் ஸம்பூர்த்தி யடைவதற்குக் கன்றுடன் கூடியதும் அலங்கரிக்கப் பெற்றதும் வஸ்திரம் சொர்ணம் இவைகளுடன் கூடியதுமான கோவை குருவுக்குத் தானம் செய்யவேண்டும்.

இன்னும் மற்றுமுள்ள பொருளால் அந்தணர்களைச் சந்தோஷப்படுத்தினால் இராஜ்யத்தையும் இலக்ஷ்மியையும் அடையலாம். புத்திரனை விரும்புகிறவன் புத்திரனை அடைவான். பொருளை விரும்புகிறவன் பொருளை அடைவான்.

அனேகவித தானங்கள் தீர்த்தங்கள் பிரதக்ஷிணங்கள் தபஸ் இவைகள் இந்த விரதத்தின் இலக்ஷணத்தில் ஓரம்சத்துக்குச் சமமாகும். பலத்தை அபேக்ஷித்தோ அல்லது பலத்தை அபேக்ஷியாமலோ பக்தியுடன் இந்த விரதத்தைச் செய்வானாயின் அவனுக்கு ஸகல காரியங்களும் சித்திக்கின்றன.

இராமாயண புஸ்தகத்தை எழுதச்செய்தாலும் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் சுகமுண்டாகும். அதற்கும் இவ்விதமே உத்தியாபனமும் சுலோகங்களின் கணக்குப் பதில் ஓரம்சம் ஹோமமும் அதில் பத்தில் ஓரம்சம் தர்ப்பணமும் அதில் பத்தில் ஓரம்சம் பிராம்மண போஜனமும் செய்யவேண்டும். முற்கூறிய சுலோகத்திலாவது ஹோமம் முதலியவைகளைச் செய்யவேண்டும்.

அல்லது கிரந்தங்களில் உள்ள சுலோகங்களைக் கொண்டு கணக்கிட்டு பத்தில் ஓரசம்சமத்தினால் ஹோமம் செய்யலாம். அல்லது இனிக்கூறப்போகிறபடி சருணசுலோகத்தை மட்டிலும் எடுத்து அதன் கிரமப்படி ஹோமம் முதலியவைகளைச் செய்யவேண்டும். அல்லது இராமகாயத்ரியினாலாவது இராமமந்திரத்தினாலாவது செய்யலாம். சொர்ணமயமான பத்ரத்தில் ஒரே சுலோகத்தை எழுதவேண்டும். சுவனஞ்செய்யும் சக்தியை அடையவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் இந்த சுலோகமுள்ள பத்ரத்தை ஸ்ரீராமமூர்த்திக்கு முன்னாலே வைத்து இவ்விதம் உத்தியாபனம் செய்யவேண்டும்.

தேவாலயம் மாளிகை, குதிரை, விருக்ஷங்கள், வாபி, கிணறு, கடைத்தெருக்கள், கிரயவஸ்துக்கள், ஸ்திரீகள், புருஷர்கள், காவியங்கள், கவிகள், பசுக்கள், அரசர்கள், உப்பரிகைகள் வாஸ்துக்கள் இவைகளை ஸ்தாபனம் செய்யும்போது அவைகளுக்குப் பெயரைவைத்து இன்னமும் இலக்ஷம் புஷ்பங்களால் ஸ்ரீராகவரைப் பூஜித்து உத்யாபனமும் செய்யவேண்டும்.

ஏ அரசனே! இவ்விதம் உனக்கு எல்லாவற்றையும் கூறினேன். ஸ்ரீராமருடைய நாமத்தை ஜபம் உத்யாபனம் ஹோமம் தர்ப்பணம் பிராம்மண போஜனம் இவைகளால் பூஜிக்கின் நீ உன்னுடைய இராஜ்யத்தை அடைவாய்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

தருமபுத்திரர் அந்தவசனத்தைக்கேட்டு விதிப்படி செய்யப் போகிறார். பிறகு மூன்றுமாதத்தில் அவருக்கு இராஜ்யங்கிடைக்

கப் போகிறது. கடைசியில் அவர் நல்ல ஸ்தானத்தையும் அடையப்போகிறார். இவ்விதம் வரப்போகிற கதையை உனக்குக் கூறினேன்.

மானிடன் இந்த ஸ்ரீராமநாம மகிமையைக்கேட்டால், இராம பக்தியுடன் புத்திர பௌத்ரர்களையும் சுகத்தையும் அடைந்து பூமியில் அனேக போகங்களை யநுபவித்து உத்தமமான மோக்ஷம் அடைவான்.

ஸ்ரீராமருக்கு முன்னால் வெகு பக்தியுடன் இந்த ஆனந்த ராமாயணத்திற்கு அல்லது மற்ற புண்ணிய கிரந்தத்திற்கு விஸ்தாரமாக வியாக்கியானம் செய்யவேண்டும். இந்த ஆனந்தராமாயணத்தில் ஒரு சருக்கத்திற்காவது பாதி சருக்கத்திற்காவது கால் சருக்கத்திற்காவது ஒன்பது சுலோகத்திற்காவது ஒரு சுலோகத்திற்காவது பாதி சுலோகத்திற்காவது கால் சுலோகத்திற்காவது வியாக்கியானஞ்செய்து படிப்பவன், மோக்ஷத்துக்குரியவனாவான். எவர்கள் அரசு பொரசு இவைகளினடியிலும், துளஸிக்குச் சமீபத்திலும், புண்ணியஸ்தலத்திலும் சூரியனுக்கு முன்பும் பிராம்மணர்களுக் கெதிரிலும் ஸ்ரீராமருக்கு முன்னாலும் சபையில் பிராம்மணக்கூட்டத்தின் மத்தியிலும் நதிக்கரையிலும் ஆதரவுடன் ஆனந்தராமாயணத்தைப் படிப்பார்களோ அந்த மானிடர்கள் கிருதார்த்தர்களாவார்கள்.

இராமாயணம் முழுவதும் அல்லது ஒரு காண்டம் அல்லது சருக்கம் இவைகளை யெழுதி அந்தணனுக்குத் தானம் செய்ய வேண்டும். ஆனந்த ராமாயணத்தில் தினந்தோறும் ஒரு சருக்கம் எழுதிப் பூஜைசெய்து விப்பிரனுக்குத் தானம் செய்யலாம்.

சக்தியில்லாதவன் ஒன்பது சுலோகங்களை எழுதி பூஜைசெய்து இராமருடைய பிரீதிக்காகத் தானஞ்செய்யலாம். இந்தத் தானத்தை தினந்தோறும் மானிடர்கள் செய்யவேண்டும்.

தினந்தோறும் ஒரு சருக்கத்தை எழுதித் தானம் செய்தால் சொர்ணதானம் செய்த பலனை அடைவான்.

இதற்குச் சமமாய் ஸ்ரீ ராமச்சந்திரனுக்குப் பிரீதியுள்ள தானம் வேறொன்றுமில்லை. ஆகையினால் எப்போதும் இந்த

தானத்தைச் செய்யவேண்டும். இரண்டுபாக்குடன் ஒன்பது வெற்றிலையை ஒன்பது நாளைக்கு ஒன்பது அந்தணர்களுக்குத் தானம் செய்யவேண்டும். தக்ஷிணைகளுடன் தானம் செய்வது ஸ்ரீராமருக்கு பரமப்ரீதியைக் கொடுக்கும் சக்தியில்லாதவன் ஒரு தாம்பூலத்தையாவது, தானம் செய்யவேண்டும். தாம்பூலதானத்திற்குச் சமமானதானம் மூவுலகத்திலும் வேறில்லை தாம்பூலம் சுத்தியைக்கொடுக்கும்; மங்களத்தைக்கொடுக்கும். ஸ்திரீயை விருத்திசெய்யும். ஸீதாகாந்தனுக்குப் பிரீதியுள்ளது. ஆதலால் அவசியமாக முயற்சியுடன் தாம்பூலதானம் செய்யவேண்டும். எப்போதும் இராமரைப் பூஜை செய்வதும் தியானம் செய்வதும் ஸ்மரணம் செய்வதுமாக இருக்கவேண்டும். எவனுடைய வாக்கியத்தில் இராமனுடைய நாமம் பிரகாசிக்கின்றதோ எவன் கைகள் பிரபுவைப் பூஜிக்கின்றனவோ, எவன்காதுகள் ஸ்ரீராமர் சரித்திரத்தைக் கேட்கின்றனவோ, எவன் பாதங்கள் இராமதீர்த்தம் இராமேசுவரம், இராமக்ஷேத்திரம் இவைகளுக்குச் செல்லக்கூடியவைகளோ எவன் கண்கள் ஸ்ரீராமச்சந்திரன் பூஜையைப் பார்ப்பதற்குரியவைகளோ அந்தப் புருஷனைத் தன்னியன் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இராம இராம இராம என்று சொல்லும் ஜனங்கள் மஹாபாதகம் செய்தவர்களானாலும் மோக்ஷமடைகிறார்கள். சந்தேகமில்லை.

ஸ்ரீ ராமச்சந்திரனுடைய மந்திரமும் தனக்குச் சுவாதீனமான வாக்கும் இருக்கும்போது ஜனங்கள் நரகத்திற்குப் பாத்திரர்களாவது பெரிதான ஆச்சரியம்! ஸ்ரீராம நாமாமிருத மந்திரமாகிய ஸஞ்சீவினி மூலிகையானது மனதில் பிரவேசித்திருந்தால் ஆலாலவிஷம் பிரளயகாலாக்னி யமன்ஸந்நிதி இவ்விடங்களில் பிரவேசிப்பினும் பயம் ஏற்படாது.

உட்காரும்போதும் நித்திரை புரியும்போதும் போஜனம் செய்யும்போதும் விளையாடும்போதும் நடக்கும்போதும் எப்போதும் ஸ்ரீராமனைத் தியானம் செய்யவேண்டும். எப்போதும் இராமனுடைய குணங்களைச் சிரவணம் செய்வதோடு கீர்த்தனம் தியா

னம் கானம் உபதேசம் இவைகளையும் செய்யவேண்டும். தேவர்களுக்குத் தேவலோகத்தில் அமிருதம் எப்படிப்பட்டதோ அப்படியே மானிடர்களுக்குப் பூமியில் இராமநாமாமிருதமென்றறிக. அது ஒருகாலும் குறைவடைவதில்லை.

எந்த மானிடன் கோபிசந்தனம் தரித்து இராமமுத்திரையை அடைந்து ராமநாமத்தை உச்சாரணம் செய்து துளஸிமணியையும் சங்கம், சக்ரம், கதை, பத்மம் இவைகளையும் தரித்து இராமனை மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறானோ அவனே தன்னியன். மற்றவன் தன்னியனாகமாட்டான்.

எவன் இராமநாமத்தை எப்போதும் சொல்லுகிறானோ அவன்றான் புருஷர்களுக்குள் உயர்ந்தவன். எவன் இராமநாமத்தை நினைக்கவில்லையோ அவன்றான் நிந்தைக்குரியவன். சிவனிடம் பக்திசெய்து ஸ்ரீராகவனை நிந்தனை செய்கிறவர்களைக் கழுதைகளென்றறியவேண்டும். இராமர் தான் சிவன், சிவன் தான் இரகுபுங்கவன்; இவர்களுக்குள் பேதத்தைக் காண்கிறவன் நரகத்தை அடைவான். ராம என்ற இரண்டு அக்ஷரத்தை எவர்கள் கூறுகிறார்களோ அவர்களுக்கு எங்கும் பயமில்லை. அவர்கள் ஜீவன்முக்தர்களாவர்கள்.

இராமருக்கும் சிவனுக்கும் எவன் பேதத்தைக் காண்கிறானோ அவன் ஜன்மம் ஆட்டின் கழுத்தில் தொங்கும் ஸ்தனம் போன்ற சதைபோல் பிரயோஜனப்படாது. இராமர் பரமசிவனுடைய இருதயஸ்தானம். சிவன் இராமருடைய இருதயஸ்தானம். மனுஷியர்கள் வெகுவித குதர்க்கங்களால் பேதத்தை எண்ணக்கூடாது. இராமமுத்திரை அடையாளமுள்ள புருஷனைக் கண்ட யமபடர்கள் ஸிம்மத்தைக்கண்ட யானைகள்போல பத்துத் திசைகளிலும் ஓடுகின்றார்கள். நெற்றியிலும் முதுகிலும் இரண்டு விலாப்புறங்களிலும் வயிற்றிலும் இருதயத்திலும் இரு கைகளிலும் தலையிலும் ஆக ஒன்பது ஸ்தானங்களிலும் கோபீசந்தனத்தினால் இராம முத்திரைகளைத் தரிக்கவேண்டும். இராமமுத்திரை என்பது மிகவும் சிறந்தது. ஸகல தோஷங்களையும் போக்கக்கூடியது. கோபீசந்தனத்தை மானிடர்கள் எப்போதும்

தரிக்கவேண்டும். எவன் தேகத்தில் இராமமுத்திரை இருக்கிறதோ அவனிடம் பாபம் அணுகாது. எப்போதும் ஸ்தோத்திரங்களால் இராமரை ஸ்தோத்திரம் செய்யவேண்டும். முற்காலத்தில் செய்தவை இந்தக்காலத்தில் செய்தவை தன் புத்திபலத்தினால் செய்தவை ஆகிய இத்துதிகளை ஓதவேண்டும்.

எந்த சுலோகங்கள் அபத்தமுள்ளவைகளானாலும் ஸ்ரீராமனுடைய கீர்த்தியென்னும் அடையாளமுள்ள நாமங்களாகையாலும் ஸாதுக்கள் கேட்பதும்சொல்வதும் கானம் செய்வதுமாக இருப்பதாலும் அந்த சுலோகங்களை கௌரவமுடையவைகளாம்.

கவிகள் செய்திருக்கும் பதங்கள் மிகுந்த தோஷமுள்ளதானாலும், இராமநாமத்தால் அலங்கரிக்கப்பட்டால் அவைகளை வெகு சுத்தம் என்று அறியவேண்டும். சிரவணம் செய்யினும், பாபங்களைப் போக்கக்கூடியது.

எந்தக் கவிதையில் ஸ்ரீராம கிருஷ்ணர்களுடைய சரித்திரங்களிருக்கின்றனவோ அந்தக்கவிதை மிகவும் புண்ணியமானது. பெரியோர்கள் எப்போதும் கானம் செய்யக்கூடியது.

மாணவனே! கவிதை விஷயத்தில் ஸகல சந்தேகங்களையும் போக்கக்கூடிய இரகசியமான மற்றொரு விஷயம் கூறுகிறேன். அசுவத்தாமா, மகாபலி, வியாஸர், ஹநுமார், விபீஷணர், கிருபர், பரசுராமர் இவ்வேழு பேரும் சிரஞ்சீவிகள். இந்த வசனம் எப்போதும் கலியுகத்திலும் ஸத்தியமான தென்றறியவேண்டும். பூமியில் எந்த மானிடர்களிடம் மந்திரபல மிருக்கிறதோ அவர்களை அசுவத்தாமாவின் அம்சம் என்றறியவேண்டும்.

எந்த அரசர்கள் பூமியில் நியாயவழியில் ஸம்பாதித்தபொருளால் பூமியில் இராஜ்யபரிபாலனம் செய்கிறார்களோ அவ்வரசர்கள் மகாபலியின் அம்சமுள்ளவர்களாவர். பூமண்டலத்தில் எந்த மானிடர்கள் கவித்வத்தில் இராமரை ஸ்துதிசெய்து வர்ணிக்கிறார்களோ அவர்கள் வியாஸருடைய அம்சமுள்ளவர்களாவர். இந்த அவனிதனில் எவர்கள் வீரர்களாக இருக்கிறார்களோ அவர்கள் சிரஞ்சீவி என்ற தன்மையை யடைந்திருக்கும் மாருதியின் அம்சம் உள்ளவர்களாவர்.

எவர்கள் சாந்தர்களாகவும் இராம பக்தர்களாகவுமிருக்கிறார்களோ அவர்கள் விபீஷணனுடைய அம்சமுள்ளவர்கள். பூமியிலே எந்த மானிடர்கள் தைரியத்துடன் யுத்தம் செய்கிறார்களோ அவர்கள் கிருபாசாரியின் அம்சமுள்ளவர்கள். பூமியில் எந்த வீரர்கள் கோபத்துடன் கூடியவர்களோ அவர்கள் பரசுராமரின் அம்சமுள்ளவர்களாவர்.

வியாஸர் சிரஞ்சீவி என்று ஜனங்கள் எவ்விதம் தெரிந்துகொள்வதெனில், சொரூபம் கூறுகிறேன், ஸாவதான மனதுடன் கேள்—

எவர்கள் தேவபாஷையில் கவனம் செய்கிறார்களோ அவர்கள் வியாஸரின் அம்சமுள்ள பண்டிதர்களென்றறியவேண்டும். எவர்கள் இராமச்சந்திரர், சிவன், கிருஷ்ணன் இவர்களை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ அவர்கள் வியாஸரின் அம்சமுள்ளவர்களாவர்.

எவர்கள் அரசனையும் தாஸியையும் ஸ்திரீயையும் அரசர்களின் சபையையும் மானிடனையும் ஸ்தோத்திரம் செய்கிறார்களோ அவர்கள் வியாஸரின் அம்சமுள்ளவர்களாகார். எதுவரையில் இராமசரித்திர மிருக்கிறதோ அதுவரையில் வியாஸர் இருக்கிறார்; பிறகு மோக்ஷத்தை அடையப்போகிறார். இந்த விஷயத்தைப் படிப்பதால் இன்ன பலனுண்டென்பதைச் சொல்லுகிறேன். மாணவனே! நான் விஸ்தாரமாகக் கூறும் விஷயத்தைச் சாவதானமான மனதுடன் கேள்—

இராமநாமங்களுடைய இலக்ஷணத்தை உத்தியாபனம் செய்யும் கிரமம் முதலியவைகளைக் கூறும்

7-வது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

காயத்ரி என்பது சிரசு வியாகிருதியுடன் கூடியது. நூறு வேதாக்ஷரங்களுக்குச் சமமானது. பவமானம் என்னும் மிகச் சிறப்புள்ள சூக்தம் அறுநூறு ருக்குகள் சேர்ந்தது. நானூறு காயத்ரிக்குச் சமமானது. அதிக புண்ணியத்தைக் கொடுக்கக் கூடியது. அவ்விதமே இருபத்து நான்கு உபநிஷத்துக்களும் மற்றுமுள்ள புண்ணிய சூக்தங்களும் புண்ணியத்தைக்கொடுக் கக் கூடியவைகள்.

ஸம்ஹிதையைப் பாராயணம் செய்யும் பயனைக் காட்டிலும் பதத்தைப் பாராயணம் செய்வதில் இரண்டு மடங்குபலம் ஏற் படும். கிரமத்தைப் பாராயணம் செய்வதில் மூன்று மடங்கு புண்ணியமென்றும் ஜடையைப் பாராயணம் செய்வதில் ஆறு மடங்கு புண்ணியமென்றும் பெரியோர்கள் சொல்கிறார்கள்.

மகா பாரதத்தைப் பாராயணம் செய்வது வேதத்திற்குச் சமமாகும். புராணங்களையும் ஸ்மிருதிகளையும் பாராயணம் செய் வதில் அதிற் பாதி புண்ணியமென்றும், பாரதத்தில் கீதையையும் ஸஹஸ்ரநாமத்தையும் பாராயணம் செய்வது புண்ணியத்தை உண்டாக்குவதிலும் பாபங்களைப் போக்குவதிலும் காயத்ரிக்குச் சமமானதென்றும் இவ்விரண்டையும் பாராயணஞ் செய்வதில் எந்த பலம் கூறப்படுகிறதோ அதைக்காட்டிலும் அர்த்தம் தெரி ந்துகொள்வதில் நான்கு மடங்கு அதிகமாகப் புண்ணியம் ஏற்படு மென்றும் சொல்லப்படுகிறது. இவைகளை நல்ல பக்தர்களுக்குச் சிரவணம் செய்விப்பதில் பத்துமடங்கு அதிகமாகப் புண்ணியம் ஏற்படும் பூமி தானம் செய்வது உலகத்தில் மஹா தானமென்று ஏற்பட்டதுபோல, வித்தியாதானம் செய்வது மிகுதியான பலன் தரும் என்று பெரியோர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்கள்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

சொர்ணத்தையோ அல்லது மற்றவைகளையோ யாருக்கு எவ் விதம் தானம் செய்வது? அந்தணன் பாத்திரனுவனு? அல்லது மற்றவர்களா, இதை விளக்கவேண்டுகிறேன்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

குருகுலவாஸஞ் செய்து பிக்ஷை எடுத்து அந்த அன்னத்தைப் புசித்து வேதாத்தியயனம் செய்து ஒரு சாகையைப் பூர்ணமாக முடிப்பவனை உசிதமான பலனை அடைவான்.

ஸம்ஹிதையை அத்தியயனம் செய்யும் மாணவனுக்கு ஒவ்வொரு அக்ஷரத்திற்கு காயத்ரீஜபம் செய்த பலன் ஏற்படும். பதத்தைப் பாராயணம் செய்தால் அதில் பாதிபலனென்றும் கிரமத்தைப் பாராயணம் செய்தால் அதில் பாதிபலனென்றும் ஸம்கிதையைப் பாராயணம் செய்வதைக் காட்டிலும் ருக்குகளாகப் பாராயணம் செய்வதில் பலன் அதிகமென்றும், அதைக்காட்டிலும் உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்வதில் இரண்டு மடங்கு பலனென்றும், பாராயணம் செய்வதிலும் செய்விப்பதிலும் குரு சிஷ்யர்களுக்குச் சமமான பலனென்றும், மனதினாலேயே பாராயணம் செய்வதில் மூன்று மடங்கு பலனுண்டென்றும் புஸ்தகத்தில் எழுதியபடி பாராயணம் செய்தால் அதில் பாதி பலனென்றும் ஏற்பட்டிருக்கிறது. ஒருவன் அத்தியயனம் செய்து பிறகு நினைத்தாலும்,பாராயணம் செய்யத் தெய்வசங்கற்பத்தினால் தடையேற்படுமானாலும், அவன் பாராயணம் செய்யப் பாத்திரமாகிறான். தனக்கு அறிவிருந்தும் ஆசையில்லாமலோ அஜாக்ரதையாலோ அத்தியயனம் செய்த வேதத்தை மறந்தால் அவன் கழுதையாகப் பிறப்பான்; தான் அத்தியயனம் செய்த வேதத்தின் அக்ஷரங்கள் எவ்வளவோ அவ்வளவு வருஷங்கள் கழுதையாகப் பிறந்து பிறகு அத்தியயனம் செய்ததற்குப் புண்ணிய லோகங்களை அடைகிறான். தனக்குரிய வேதசாகையை முதலாவது அத்தியயனம் செய்து பின்பு மற்ற வேத சாகைகளை அத்தியயனம் செய்வானாயின், ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் காயத்ரி ஜபஞ் செய்த பலனில் இரண்டுமடங்கு ஏற்படும் வேத சாகையை அத்தியயனம் செய்து ஸ்ரீராமனுடைய மகிமை தெரிந்து கொள்ளாமல் இராம பூஜையைமட்டும் அனுசரிப்பவனாயினும் பாதி பலனை அடைகிறான்' எவன் இராமரிடம் பக்தியில்லாமல் வேதத்தைமட்டும் அத்தியயனம் செய்கிறானோ அவனுக்கு நான்

கில் ஒருமடங்கு புண்ணிய முண்டாகும். இராமரைத் துவேஷித்துக்கொண்டால் அத்தியயனம் செய்தது பலனில்லாமற்போகும். நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் மீமாம்ஸை தர்க்கசாஸ்திரம் புராணம் தருமசாஸ்திரம் ஆக இப்பதினான்கும் வித்தைகளென்று பெயருள்ளவைகள். ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் இவை நான்கும் உபவேதங்கள் எனப்படும். இவைகளையும் சேர்த்துப் பதினெட்டு வித்தைகளென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம் இவைகளாறும் அங்கங்கள். இவைகளை எவன் படிக்கிறானோ அவனுக்கு ஏற்பட்ட பலன்கள் யாவையெனில், ஸம்ஹிதையைப் பாராயணம் செய்வதில் உண்டாகும் பலத்தில் பாதி பலத்தை அடைவான். வேதத்திற்கு சிக்ஷை என்பது மூக்குப்போலாகிறது. கற்பம் என்பது கைகளாகிறது. வியாகரணம் முகமாகிறது. நிருத்தம் காதுகளாகிறது. சோதிடம் கண்களாகிறது. சந்தஸ் பாதங்களாகிறது. சிக்ஷை கற்பம் நிருத்தம் சந்தஸ் இவைகளின் அர்த்தம் தெரிந்துகொள்ள ஒரு தடவை யோகம் செய்பவனுக்கு நான்கு மடங்கு பலம் ஏற்படும். சோதிட சாஸ்திரத்தின் அர்த்தம் தெரிந்துகொண்டவனுக்கு ஸம்ஹிதையைப் பாராயணம் செய்த பலன் ஏற்படும். ஒளியுள்ள கிரகங்களின் சேர்க்கையைத் தெரிந்துகொண்டால், பாதிபலனை அடைகிறான். ஜாதகம் பிரச்னம் இவைகளை அறிந்ததினால் கொஞ்சமேனும் புண்ணியமுண்டாகாது. ஒருவன் வேதத்தை அத்தியயனம் செய்யாமல் ஜாதகம் பிரச்னம் இவைகளை மட்டிலும் தெரிந்துகொண்டு கணிதமறியாமற்போனால் அவனை நக்ஷத்திரம் பார்த்து ஆலோசனை செய்கிறவனென்று அறியவேண்டும் அவனுக்குத் தானம் செய்யக்கூடாது. எந்தக் காரியங்களுக்கும் முதலான தன்னுடைய வேதத்தில் ஒரு பிரிவையும் அத்தியயனம் செய்யாமல், வேதத்திற்கு அங்கங்களான சாஸ்திரங்களைப் படித்தால், அவனும் நீக்கப்பட்டவனாவன். தன் வேதத்தைக் கொஞ்சமேனும் அத்தியயனம் செய்து பிறகு உபநிஷத்துக்களைப்பாராயணஞ்செய்து அவைகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவோ வேதங்களின் அர்த்தங்களைத் தெரிந்து

கொள்ளவோ சாஸ்திரங்களைப் படிப்பவன் ஞானத்திற்குரியவனாக வும் மிகுந்த புண்ணியத்திற் குரியவனாகவும் ஆகிறான். அந்தணர் களுக்குள் ஞானமுள்ளவன் பெரியவன் பூஜ்யன் என்று ஸ்மிருதி களில் கூறப்பட்டிருக்கிறது. ஞானம் உயர்ந்தால் நல்ல பாத்திர மென்றும் குறைந்தால் நல்ல பாத்திரமல்லவென்றும் ஏற்படு கிறது.

பாராயணம் செய்பவர்களில் புண்ணிய மிகுந்தவன்நல்லபாத் திரமாவான். குறைந்தவன் நல்லபாத்திரமாகான் என்றும் ஏற்படு கிறது. ஞானமுள்ளவன் பாராயணம் செய்கிறவன் இவர்களுக் குள் ஞானமுள்ளவன் அதிக புண்ணியம் செய்தவனாகையால் ஞானமுள்ளவன் முதலாவது பூஜைக்குரியவ னென்பது எனதபிப் ராயம். ஞானத்திற்குச் சமமான பரிசுத்தமுள்ளது வேறொன்று மில்லை. ஸ்ரீராமசந்திரர் ஞானமுள்ளவனிடத்தில் வெகு பிரீ தியுள்ளவர். ஞானமுள்ளவனும் ஸ்ரீராமரிடம் பிரீதியுள்ளவன்.

எந்த மானிடனுக்கு வாதிகளை ஜயிப்பதற்குச்சக்தியேற்பட்டு அவன் வழியை அனுசரித்தே சமாதானம் செய்வானாயின் நூறு பாடகர்களைக் காட்டிலும் அவன் சிறந்தவனாகிறான். வேதம் முத லியவைகளின் பொருள் தெரிந்துகொள்ள எவன் வியாகரணம் படிக்கிறானோ அவன் வேதத்தை அத்தியயனம் செய்த பலனை அடைகிறான். அதன் ஞானம் அதிகமானால் வேதத்தின் அர்த் தம் தெரிந்துகொண்ட பலனை அடைவான். சருமத்தையும் பிரம் மத்தையும்கூறும் மீமாம்ஸை இரண்டு விதமாகும். அவை பூர்வமீ மாம்ஸை உத்தர மீமாம்ஸை என்று பெயருள்ளவை. முதலாவது மீமாம்ஸை வேதத்தின் அர்த்தம்; ஞானத்திற் கொப்பானது. இரண்டாவது மீமாம்ஸையின் பலனைக்கேள் - ஒவ்வொரு அக்ஷ ரந்தோறும் நூறு காயத்ரிக்குச் சமமான பலன் ஏற்படும். எந்த கிரந்தங்கள் உபயோகமுள்ளனவோ அவைகளைப் படித்தால் அர்த்தம் தெரிந்துகொண்ட பலன் ஏற்படும். உபயோகமில்லாத வைகளைப் படித்தால் நான்கில் ஒருமடங்கு பலன் ஏற்படும்.

வேதம் உபநிஷத்து இவைகளின் அர்த்தங்களையும் தருக்க நியாயங்களையும் ஞானம் அதிகமாவதன் நிமித்தம் படித்தால்

வேதத்தின் பொருளை முற்றும் தெரிந்து கொண்டபலனை உண்டாக்கும். பிர்ம்ம சொரூபம் தெரிந்துகொள்ளத் தருக்க சாஸ்திரத்தைப் படிக்காமல் பிழைப்பிற்காகப் படித்து ஹேதுவாதங்கள் செய்பவன் தான் படித்த அக்ஷரங்களின் கணக்குப்படி அவ்வளவு வருஷங்கள் நரியாகப் பிறப்பான்.

வைஷ்ணவம், மத்ஸியம், கூர்மம், பாகவதம், ஆதித்தியம், காருடம், ஸ்காந்தம், மார்க்கண்டேயம், பிராம்மம், பிர்ம்மாண்டம், லிங்கம், பிர்ம்மகைவர்த்தம், பவிஷியோத்தரம், ஆக்நேயம், பாத்மம், வாமனம், வாராகம், வாயவியம் இப்பதினெண் புராணங்களையும் முன் ஏற்பட்ட இராமாயணத்திலிருந்து வியாஸ முனிவர் பிரித்தபடியால் புராணங்களென்ற பெயருடன் பூமியில் விளங்குகின்றன. முதன் முதலில் செய்தபுராணங்கள் சிறந்தவைகள் என்பதற்கு மகாபுராணம் என்று சொல்லப்படுகின்றன. ஸகல புராணங்களுக்கும் பலனைக் கூறுகிறேன் கேள்.—

புராணங்களைப் படித்தால் வேதத்தைப் பாராயணம் செய்த பலன் உண்டாகும். கேட்டால் அதிலே பாதிபலன் ஏற்படும். பொருளைச் சிரவணம் செய்தால் பத்துமடங்கு புண்ணியம் அதிகமாகும். வாசிப்பவனுக்கு இரண்டுமடங்கு புண்ணியமும் வியாக்கியானம் செய்கிறவனுக்கு நூறுமடங்கு அதிகமான புண்ணியமும் ஏற்படும். இவைகளைத் தவிர உபபுராணங்கள் உண்டு. அவைகளின்பலனைக் கேள்.

விஷ்ணுதருமோத்தரம், சைவம், பிருகந்நாரதம், பகவதீ புராணம், இலகுநாரதம், பவிஷியத்பருவம், தந்திரபாகவதம் நாரஸிம்மம், ரேணுகம், தத்துவஸாரம், வாயுகூறின தத்துவ ஸாரம், நந்திகேசுவரர் கூறின தத்துவாஸாரம்-பாசுபதம், யமனுக்கும் நாரதருக்கும் ஸம்வாதம் நடந்த வரலாற்றைக் கூறும் ஹம்ஸபுராணம், விநாயகபுராணம், பிருகத், பிர்ம்மாண்டம், விஷ்ணுரகஸியம் இவைகள் உப்புராணங்கள். இவைகள் புராணங்களின் பாதி பலனைகொடுக்கக் கூடியவைகள். பாரதம் வேதத்திற்குச் சமமானது. பொருளுடன் அதிகபலன் கொடுக்கக் கூடியது. அதிலும் பகவத்கீதையும் விஷ்ணு ஸஹஸ்ரநாமமு

ம் பாரதத்திற்குள்ள பலனைக்காட்டிலும் பத்துமடங்கு அதிக பலனைக் கொடுக்கும்.

எவன் பக்தியுடன் சிரவணம் செய்கிறானோ அவன் பாதி பலனை அடைவான். பாரதம் இதிகாஸம் இவ்விரண்டும் இராமாயணத்திலிருந்துண்டாயின. வேதத்தைப் பாராயணம் செய்வதால் உண்டாகும் பலன் இராமாயணத்தைப் பாராயணம் செய்வதால் ஏற்படும். சிரவணம் செய்தால் அதில் பாதிபலனுண்டாகும். வியாக்கியானம் செய்பவனுக்குப் பத்துமடங்கு அதிகமான பலன் ஏற்படும். வான்மீகிமகாமுனிவர் செய்த நூறுகோடி கிரந்தமுள்ள இராமாயணம் ஸகல இராமாயணங்களுக்கும் ஆதியாக ஏற்பட்டது; மிகுந்த மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. அதிலிருந்து அநேக இராமாயணங்கள் ஏற்பட்டன. இருபத்து நாலாயிரம் கிரந்தங்களுள்ள இராமாயணம் முதலாவதாகக் கூறப்படுகிறது. அவ்விதமே யோகவாஸிஷ்டம், அதிபாத்மம், ஹநுமத்ராமாயணம், நாரதராமாயணம், இலகு ராமாயணம், பிருகத்ராமாயணம், அகஸ்திய ராமாயணம், ஸாரராமாயணம், தேகராமாயணம், விருத்த ராமாயணம், பிரும்ம ராமாயணம், பரத்வாஜ ராமாயணம், சிவராமாயணம், கிரௌஞ்ச ராமாயணம், பரதராமாயணம், ஜைமினி ராமாயணம்,ஜடாயுராமாயணம், புலஸ்திய ராமாயணம், விசுவாமித்ர ராமாயணம்,சுதீக்ஷ்ண ராமாயணம், ஆனந்த ராமாயணம் இவ்விதம் அநேக இராமாயணங்களிருக்கின்றன. இவைகளின் எண்ணிக்கையைச் சொல்ல எவன் சமர்த்தனாவான்? இவைகள் நூறுகோடி கிரந்தங்களடங்கிய இராமாயணத்திலிருந்துண்டானவைகள். இராமாயணங்கள் எல்லாவற்றுள்ளும்ஆனந்த ராமாயணம் சிறந்தது. இதைப்பாராயணம் செய்வதால் உண்டாகும் பலனைக்கேள். நூறுகோடி கிரந்தமுள்ள இராமாயணத்தைச் சிரவணம் செய்வதாலுண்டாகும் பலனில் பாதிபலன் உண்டென்றறிய வேண்டும். இந்த ஆனந்த ராமாயணத்தைச் சிரவணம் செய்வதால் இரண்டு மடங்கு பலனும் பாராயணம் செய்வதால் பத்துமடங்கு பலனும் ஏற்படும். அதனால் இது ஆனந்தமென்று சொல்லப்படுகிறது. எப்போதும் இதை மானிடர்கள் சிரவணம்

செய்யவேண்டும். இதற்குச்சமமாக ஒரு கிரந்தமும் ஏற்பட் டில்லை, ஏற்படப்போகிறதுமில்லை. சாஸ்திரங்கள் எல்லாவற்றுள் ளும் பாஞ்சராத்திர மென்னும் ஆகமசாஸ்திரம் அதிகம். அந்த ஆகமம் பகவத்கீதைக்குச் சமமானது பாரதக் கதை நல்ல பக்தி உண்டாவதற்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாரதக் கதையை முன்னோர்கள் காவியமாகச் செய்திருக்கிறார்கள். அதைப்படிப் பவன்பத்தில் ஒரு பங்கு பலனை அடைவான். நல்ல பக்தர்கள் செய்திருப்பதைப் பாராயணம் செய்தால், நூறில் ஒருபங்கு பலனை அடைவான்.

எவன் கதையைக் கற்பித்துக் காவியம் செய்கிறானோ அவ னுடைய சிரமம் வீணாகிறது. அதைப்படிக்கிறவன் தோஷத்துக் குரியவனாகின்றான். புராணம் பாகவதம் இராமாயணம் உப புராணங்கள் இவைகளிலிருக்கும் கதையைக் கவனம் செய்து கிரந்தம் எழுதுகிற இராமபக்தன் இந்திரலோக வாசத்தை அடைந்து அங்கு ஒவ்வொரு அக்ஷரத்திற்கு ஒவ்வொரு வருஷம் சுகத்தை அனுபவிப்பான். புராணங்களிலிருக்கும் கதையை மட்டும் எழுதும் இராமபக்தன் வியாஸருடைய சொரூபமுள்ள வன். அவன் பிருகஸ்பதிலோகத்தில் வசிப்பான். பெண்ணு டைய பிள்ளை, தன்னால் போஷிக்கப்பட்டவன், சீடன், புத்திரன் இவர்கள், சத்புத்திரர்களாவார்கள். உத்தியானம், தடாகம் இவை களை ஏற்படுத்தல், நல்ல கிரந்தங்களைச் செய்தல் இவைகளும் ஸத் புத்திரர்களுக்குச்சமானமாம். இவ்விதம் பூமியில் அசுவத்தாமா முதலிய ஏழு சிரஞ்சீவிகள் அம்சத்துடன் சஞ்சாரம் செய்கிறார் கள். ஸ்ரீராம பக்தர்கள் கவனம் செய்து ஸ்தோத்திரஞ் செய்த கிரந்தமும் பூஜை செய்யத்தக்கது; பாராயணம் செய்யத்தக்கது. பாரதத்திற்குள்ள பலனில் நூற்றில் ஒருபங்கு பலனுள்ளது. பக்தர்கள் செய்த கவிதையை நிந்தனை செய்பவர்கள் கழுதைக ளென்று சொல்லப்படுவார்கள்.

அந்தந்தப் பாஷைகளில் இராமவர்ணனையுடன் கூடின கவன மானது பாரதத்தில் சொன்ன பலனில் ஆயிரத்தில் ஒருபங்கு பலனைக்கொடுக்கும். ஸம்ஸ்கிருதத்தில்கவனம் செய்பவன் வியாச

முனிவரின அமச முளளவன. தஙகள தஙகள பாஷைகளில் கவனம் செய்யவர்கள் கவீஸ்வரர்கள் எனப்படுவார்கள். பதம் அந்வயம் அர்த்தம் பிரமாணம் இவைகளுடன் கூடின ஸம்ஸ்கிருத பாஷைதான் சிறந்தது.

எவன் பிழைப்புக்காக மானிடனைப் புகழ்ந்து கவனம் செய்கிறானோ அவன் சிரமம் பிரயோஜனமற்றதாம். அதைப் படிப்பவன் தோஷத்தை அடைவான். எவன் பைத்தியத்தினால் ஸ்திரீகளை வர்ணிக்கிறானோ அவன் ஒவ்வொரு அக்ஷரத்திற்கு ஒவ்வொரு வருஷமாக நாய் யோனியை அடைவான். மனுமுதலான பெரியோர்கள் வேதத்தில் இருக்கும் அர்த்தத்தை அநுசரித்து எழுதிய கிரந்தங்களுக்குத் தருமசாஸ்திரமென்றும் ஸ்மிருதிகளென்றும் பெயர் கூறப்படுகின்றன.

அவைகளில் வேதங்களில் சொன்ன காரியங்களைச் செய்பவர்கள் சிலர். வேதங்களில் சொன்ன விஷயத்தைச் செய்யாமல் மற்ற மந்திரங்களை ஜபம் செய்து காரியங்களைச் செய்கிறவர்கள் சிலர். இவர்கள் பசுவுக்குச் சமமாவார்கள். அவைகளில் மானிடர்களுக்கு அதிகாரமில்லை.

பிர்ம்மசாரி, கிருகஸ்தன், வானப்ரஸ்தன் ஸன்னியாஸி ஆக இந்நான்கு ஆசிரம நெறியுந் தவறாதிருப்பவர்கள் உலகத்திற்கு நண்பராவார்கள்; எப்போது எவ்விடத்தில் எதனால் எந்தக் காரியத்தை எப்படிச் செய்வது என்பதைத் தருமசாஸ்திரத்தில் நிர்ணயஞ் செய்தபடி நடத்தல் வேண்டும். மற்றப்படியாயின் தோஷத்திற்குரியவனாவான்.

தேசகாலத்தையனுசரியாமலும் அதிகாரியாகாமலும் செய்யும் காரியம் வியர்த்தமாகும். கெடுதியும் அதிகமாகும். ஆகையால் அந்தணர்களுக்கு இவைகளைக் கவனிக்கவேண்டிய அவசியமுண்டு.

ஸ்மிருதியின் பொருளானது, ஞானம், வேதத்தின் அர்த்தம் தெரிந்து கொண்ட ஞானம் இவைகளைக்காட்டிலும் அதிகமாகும். ருக்வேதத்திற்கு உபவேதம் ஆயுர்வேதமாகும்.

பிறருக்கு உபகாரம் செய்வதற்கும் தம் ஆரோக்கியத்தின் பொருட்டும் பிழைப்புக்காகவும் அந்தணர்கள் இந்த ஆயுர்வேதத்தை அத்தியயனம் செய்யவேண்டும்.

பிராம்மணன், ரோகிஷ்டன், க்ஷீணதசையை அடைந்தவன் இவர்களை உபசரிப்பவன் பிரம்மஹத்தி முதலான பாபங்களிலிருந்து விடுபடுவான். இது நிச்சயம்.

அவன், நான்கு கிருச்சிரங்களுக்குண்டான பலனையும் அந்தந்த வர்ணாசிரமத்துக்குத் தக்கபடி அடைவான். எந்த ரோகிஷ்டன் ஆயுளின் முடிவால், வைத்தியன் முயற்சிசெய்தும் உயிரை இழக்கிறானோ அவனும் வைத்தியனுக்கு ஏற்பட்ட முற்கூறிய பலனில் பாதியை அடைகிறான். இதில் ஐயமில்லை.

எவன் உபவேதம் நான்கையும் பிழைப்புக்காகப் படிக்கிறானோ அவன் இந்த லோகத்தில் புகழ்ச்சியை அடைவானேயொழிய பரலோகத்தில் பலனை அடையமாட்டான்.

ரோகமாகிற சமுத்திரத்தில் முழுகிய மானிடனை எவன் கரையேற்றுகிறானோ அவன் எந்த தருமத்தை அனுஷ்டித்தவனாகான்? எந்த பூஜையைத்தான் செய்தவனாகான்?

பணமிழந்தவன் கணக்கப்பிள்ளையைத் துவேஷிப்பான். ஆயுளை இழந்தவன் வைத்தியனைத் துவேஷிப்பான். பணம் ஆயுள் இவ்விரண்டையும் இழந்தவன் பிராம்மணனைத் துவேஷிப்பான். எவன் காந்தர்வ வேதத்தை அத்தியயனம் செய்து ஸ்ரீராமருக்கு முன்னால் கானம் செய்கிறானோ, அவன் உத்தமமான காந்தர்வ லோகமடைவான். தநுர்வேதம் தண்டநீதி இவ்விரண்டும் பிராம்மணர்களுக்கு ஜீவனோபாயமாக ஏற்பட்டவை. க்ஷத்திரியர்கள் இவ்விரண்டையும் படித்தால் பாதி பலனைப் பெறுவார்கள்.

அன்னத்தைத் தானஞ்செய்யப் பசியுள்ளவன் பாத்திரமாவான். நீரைத் தானம் செய்யத் தாகமுள்ளவன் பாத்திரமாவான். திரவியத்தைத் தானஞ்செய்ய விசேஷமாகப் பாத்திரந் தெரிந்து கொள்ளவேண்டும்.

பசுகெட்டதானாலும் பால்கொடுக்கிறது பாலானாலும் பாம்பிடம் விஷமாகிறது. இவ்விதம் பாத்ரம் அபாத்ரம் இவைகளை விசாரித்து நல்லபாத்திரத்தில் தானம் செய்வது உத்தமம். பாத்திரத்தின் புண்ணியத்துக்குத் தக்கபடி தானம் செய்த பலனும் அதிகமாகும். ஞானம் அதிகமானாலும் புண்ணியம் அதிகமானாலும் நல்ல பாத்ரமா வென்பதைக் கவனிக்க வேண்டும். இராமரிடம் பக்தியுள்ளவன் பாத்ரமாவான். பக்தியில்லாதவன் பாத்ரனல்லன்; இராமத் துவேஷியுடன் பேசக்கூடாது; அவனைப் பார்க்கவும் கூடாது. இராமத் துவேஷியாக இருப்பவன் இராம பக்தர்களுடைய சேர்க்கையால் பரிசுத்தனாவான். தன் சக்திக்கு அதிகமாகவே கொடுப்பது தானமென்று சொல்லப்படும். சக்தியிருந்தும் பொருளைச் செலவழியாமல், வஞ்சனையால் செய்யும் தானம் தானமாகாது. தேசம் காலம் பாத்திரம் இவைகளுடைய விசேஷத்தை அநுசரித்து தானத்திற்குப் பலன் அதிகமென்றும் குறைவென்றும் ஏற்படுகிறது.

எவன் தன்சக்திக்குத் தக்கபடி பிராம்மணர்களுக்கு வருஷ வெகுமானம் கொடுக்கவில்லையோ அவன் ஒவ்வொரு சொர்ணத்திற்கு ஒவ்வொரு தேவவருஷம் புழுவாகப் பிறப்பான். இதில் சந்தேகம் இல்லை.

ஞானத்துடன் செய்யும் காரியத்திற்கு ஞானமில்லாதவன் செய்யும் காரியத்தைக்காட்டிலும் மிகுதியான பலன் உண்டாகும். ஞானம் ஏற்படுவதற்குத் தக்கபடி பாபமும் பரிகாரமாகும். ஞானமுள்ளவன் பாபகாரியத்தைச் செய்வானாயின், ஞானமில்லாதவன் செய்த பாபத்திலும் கோடிதாகும். எவ்வளவுக்கெவ்வளவு ஞானம் அதிகமாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பாபம் குறைகின்றது. பிரகாசமுள்ள அக்னி விறகுகளை எவ்விதம் சாம்பலாகச் செய்கிறதோ அவ்விதம் ஞானமாகிற அக்னி ஸகல கருமங்களையும் சாம்பலாகச் செய்கிறது. தங்கத்திற்கு அக்னியின் சம்பந்தத்தால் வர்ணம் அதிகப்படுவதுபோல், ஞானியின் சேர்க்கையால் புண்ணியம் அதிகமாகிறது.

புண்ணியம் செய்வதால் புண்ணியம் விருத்தியாகிப் பாபஞ் செய்வதால் பாபம் விருத்தியாகிப் புண்ணியம் குறைவாகிறது. இந்த விசாரணை மிகவும் சூக்ஷ்மமானது. ஸ்தூலமாகப் பார்க்கிறவர்களுக்குப் பிரயாசத்தாலும் தெரிந்துகொள்ளக்கூடாதது. அவ்விதமானாலும் தத்துவஞானத்தை அனுசரித்து இவ்விதம் விசாரிக்க வேண்டும். எந்த மானிடன் பாராயணம் செய்வதற்கு அதிகார மிருக்கும்போது பிரயத்தினமில்லாதிருக்கிறானோ அவன் பசுவாகிறான். ஞானத்தாலும் அத்தியயனத்தாலும் அந்தணனுக்குப் புண்ணியம் விருத்தி அடைகிறது. இவ்விஷயத்தைச் சுருக்கமாக உனக்குக் கூறினேன். இதனால் புண்ணியத்தையும் பாவத்தையும் ஊகித்துக்கொள்ளலாம். தருமங்களும் அனேகம். பாபங்களும் அனேகம். அங்கங்கு பெரியோர்கள் சொல்லியிருக்கும் பிராயச் சித்தங்களை நன்றாக ஆராய்ந்து செய்யவேண்டும். உனக்கு எல்லாவற்றுள்ளும் ஸாரமானதையும் இரகசியமானதையும் கூறினேன். யத்தனத்துடன் கிரகித்துக்கொள். பக்தியில்லாதவனுக்கு உபதேசியாதே.

வேதம் முதலியவைகளின் பலசுருதியைக் கூறும்

8-வது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! ஸ்ரீ ராமசந்திரரைப் பூஜைசெய்யும் கிரமத்தை மற்றொரு விதமாகக் கூறவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! ஸ்ரீ ரகுவீரனைப் பூஜிப்பதற்கு விசேஷமான புண்ணிய காலத்தைக் கூறுகிறேன். மாகமாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமீ திதி புண்யமான திதியென்றும் ஸ்ரீ பஞ்சமீ யென்றும் மூவுலகத்திலும் பிரஸித்தியாயிருக்கிறது அது முதல் வைசாக மாஸம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமீவரையில் இரண்டரை மாஸமா கிறபடியால், அக்காலத்தில் மகோற்சவங்களுடன் ஸ்ரீ ராமரைப் பூஜிக்கவேண்டும். மாக மாஸம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தி திதி முதல் மதுமாஸம் சுக்லபக்ஷம் நவமீ திதிவரையில் எண்பத்தொரு நாள் வரையில் பழங்களை ஆகாரஞ் செய்துகொண்டு பூஜைசெய்ய வேண்டும். சிலர் ஸீதாதேவியுடன் கூடின இராமரை எப்போ தும் பூஜைசெய்கிறார்கள். பெரியோர்கள் பூர்ணிமை முடிய மாசம் என்று கருதியிருக்கிறார்கள். தினந்தோறும் இராமரை வாகனத் தின் மீதேற்றி பேரீ, துந்துபி முதலிய வாத்தியங்களுடனும் குடை, சாமரம், தோரணங்கள் முதலிய வைகளுடனும் அநேக வித ஸ்தோத்திரங்கள் அநேகவித வாஸனைத் திரவியங்கள், அநேகவித மங்களவஸ்துக்கள் அநேகவித புஷ்பாஸங்கள் இவைகளுடனும் வேதபாராயணத்துடனும் நீராஜனத்துடனும் தூபத்துடனும் மாந்தோட்டத்தின்நடுவேகொண்டுவந்து மாமரத் தில் கட்டியிருக்கும் ஊஞ்சலில் வைக்கவேண்டும்.

யானை, புஷ்பகம், ஆதிசேஷன், குதிரை, இரதம், கருடன், ஸிம்மாசனம், பல்லக்கு ஹநுமான் இந்த ஒன்பது வாகனங் களுக்குள் ஒரு வாகனத்தின் மீது ஸ்ரீராமரை, ஏற்றிவைத்து அழைத்து வரவேண்டும். கொடிகள் புஷ்பம் வனம் இவைகளு டன் கூடின, மாந்தோட்டத்தின் மத்தியில் ஓரிடத்தில் சந்தனத்

தால் மெழுகி அங்கே புஷ்பங்களைத்தூவி அநேக வஸ்திரங்களால் அலங்கரித்துச் சொர்ண சிம்மாஸனத்தில் ஊஞ்சலைக்கட்டி அதை மாமரத்தின் கிளையில் சங்கிலிகளைக்கொண்டு பிணைத்து அதில் ஸ்ரீராமசேதா பத்ரத்தை ஏற்படுத்தி அதன்மேல் ஸ்ரீ ரகுகுலபூஷணனை வைத்துப் பூஜிக்கவேண்டும்.

ஒன்பதுவகையான புஷ்பங்களாலும், பதினாறுவித உபசாரங்களாலும், ஸீதாதேவி பந்துக்கள் சுக்ரீவன் முதலான வானரர்கள் இவர்களுடன் பிரபுவைப் பூஜைசெய்து அந்த ஊஞ்சலை ஆட்ட வேண்டும். அந்த ஊஞ்சலுக்கு முன் தாசிகள் நடர்கள் நர்த்தனம் செய்யவேண்டும் ஸங்கீத வித்வான்கள் கானஞ்செய்யவேண்டும். வாத்தியம், தூபம் சாமரம், முதலிய உபசாரங்கள் நடக்க வேண்டும். அப்பொழுது இராமபக்தர்கள் இராமநாம கீர்த்தனம் செய்யவேண்டும்.

மறுபடியும் முன்போல ஸீதாராமர்களைப் பூஜித்து வாகனத்தின் மீதேற்றி, பூர்ணகும்பம் தீபம் மற்ற உபசாரங்கள் இவைகளுடன் வீட்டுக்கு அழைத்து வரவேண்டும்.

இவ்விதம் இரண்டரை மாதம் வரையில் இராமசந்திரரைப் பூஜிக்கவேண்டும். ஸீதாராமர்களை அழைத்துவரும்போது திருஷ்டிதோஷம் உண்டாகாம லிருப்பதற்கு கஸ்தூரியால் அவர்களுடைய கண்களுக்குக் கீழிமையில் பிந்துக்களையெழுதி அழைத்துவரவேண்டும். ஊஞ்சலில் வைத்து ஸ்ரீராமரைப் பூஜிக்கும் கிரமத்தைக் கூறினேன். வேறு விசேஷம் கூறுகிறேன்.

வசந்த மாஸத்தில் பூஜைசெய்வதற்குமுன் மாகமாஸம் சுக்லபக்ஷம் சதுர்த்தியில் விக்நேசுவரரைப் பூஜிக்கவேண்டும். எவர் மாகமாஸம் சுக்லபக்ஷம் சதுர்த்தியில் இரவில் விரதத்துடனிருந்துகொண்டு டுண்டி விக்நேசுவரரைப் பூஜைசெய்கிறார்களோ அவர்கள் தேவர்களாலும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள். அன்றையதினம் உபவாஸமிருந்து இரவில்விழித்துக்கொண்டிருக்கவேண்டும். இந்த சதுர்த்திக்கு குந்த சதுர்த்தி என்றுபெயர். ஆதலால் முல்லைப் புஷ்பங்களால் பூஜைசெய்யவேண்டும். மாகமாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமீ, ஸ்ரீபஞ்சமி என்ற பெயரையுடையது. அதில் நாரா

யணனே இலக்ஷ்மியுடன் பூஜிக்கவேண்டும். மாகமாஸம் சுக்ல பக்ஷம்சதுர்த்தியில் பூஜைசெய்து பஞ்சமியில் முல்லைப்புஷ்பங்களி ஞல் பூஜைசெய்தால் பொருள் உண்டாகும் ஸ்ரீராமச்சந்திரரை ஸீதையுடன் மாந்தோட்டத்தின் மத்தியில் மாமரத்தின் கிளையில் ஊஞ்சலில் பூஜிக்கவேண்டும் இல்லாவிடில் வீட்டிலாவது பூஜிக்க வேண்டும். வஸந்தமாஸம் பிரதமை திதி சூரியோதயத்தில் அவ சியம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து பிதிர்க்களைத் திருப்தி செய்வித்து ஸகல துக்கங்களும் நீங்குவதற்கு ஊஞ்சல் போட்டிருந்த பூமியை நமஸ்காரம் செய்யவேண்டும். "ஏ தேவி! நீ இந்திரன் பிரமதேவர் ருத்திரன் இவர்களால் வணங்கப்படுகிற வள்; ஆகையால் என்னைக் காக்கவேண்டும்; எனக்கு ஸம்பத்தை யும் கொடுக்கவேண்டும்" என்றுகூறிப்பிரார்த்திக்கவேண்டும். நாய் மாம்ஸம் தின்பவனைத் தொட்டவனுயினும் சைத்திரமாஸம் பிர தமையில் ஸ்நானம் செய்தால் பாபம் வியாதி முதலியவைகளி லிருந்து விடுபடுவான்.

மாகமாஸம் பூர்ணிமையிலும் வஸந்தமாஸம் பூர்ணிமையி லும் காலையில் சந்தனத்துடன் மாம்பூவைத் தின்றால் அநேக வருஷம் வரையில் சுகமாயிருப்பான் "ஏ கட்டு மாமரமே! வஸந்த மாஸத்தில் உன்னுடைய துளிரையும் பூவையும் சந்தனத்துடன் ஸகலமனோரதங்களும் நிறைவேறப் பக்ஷிக்கிறேன்" என்று கூற வேண்டும். மாகமாஸம் பஞ்சமியில் சந்தனத்துடன் மாம்பூவைத் தின்றால் நல்ல குரலுள்ள கண்டமுடையவனுவான். குயில் நல்ல குரலுடன் கூவுவது மாம்பூவைத் தின்பதாலேயாம். மானிடர் கள் மாம்பூவைத் தின்றாலும் குயில் போன்ற குரலுடையவர்க ளாவார்கள். தினந்தோறும் ஸீதாராமர்களை மாம்பூக்களாலும் மனோக்ஞமான துளிர்களாலும் பக்தியுடன் ஊஞ்சலி லிருக்கும் சமயத்தில் மஹோத்ஸவங்களுடன் பூஜை செய்யவேண்டும்.

சைத்திரமாஸம் கிருஷ்ணபக்ஷம் பிரதமையில் சந்தனத் துடன் மாம்பூவைப் புசித்து மஹோத்ஸவங்களுடன் ஸீதாராமர் களைப் பூஜிக்கவேண்டும். இவ்விதம் பிறகு மூன்று தினமுஞ்செய்து அநேக உத்ஸவங்களுடன் கானம் முதலியவைகளைச் செய்து சைத்திரமாஸம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமியில் ஸௌபாக்கிய திரவி

யங்களால் ஸ்நானம் செய்து பொரசம் பூவின் நிறம் போன்ற சிவப்பு வர்ணமுள்ள வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு அனேக வித சுகந்த தைலம் முதலியவைகளால் வாத்திய கோஷங்களுடன் ஸீதா ராமர்களுக்கு உபசாரஞ் செய்து, பரிசுத்தமான ஜலத்தால் ஸ்நானம் செய்வித்து, அனேகவித வர்ணமுள்ள வஸ்திரங்களை அணிந்து பூஜைசெய்ய வேண்டும். வசந்தகாலத்திலுண்டான புஷ்பங்களால் அர்ச்சனை செய்யவேண்டும். தனக்கு மங்கள முண்டாவதன் நிமித்தம் அனேக தானங்களைச் செய்ய வேண்டும். எல்லோரும் அனேகவித வாசனைத் திரவியங்களை ஒருவருக்கொருவர் இறைத்துக் கொள்ளவேண்டும். அந்தணர்களுக்குத் திவ்ய அன்னமிட்டுப் பந்துக்களுடன் போஜனம் செய்யவேண்டும்.

இந்தப்பஞ்சமி வஸந்த பஞ்சமீ என்று பெயர் பெறும். பெரும்புண்ணியம் உருக்கொண்டதற் கொப்பானது. மாகமாஸம் பஞ்சமிமுதல் பக்ஷந்தோறும் வைசாகமாசம் பஞ்சமிவரையில்இவ் விதமே பூஜை செய்யவேண்டும். பக்ஷந்தோறும் நவமியில் ஜானகீ ரமணனுக்கு விசேஷமாகப் பூஜையைச் செய்யவேண்டும். அல்லது மாகமாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமி கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி சைத்திரமாஸம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி வைசாகமாஸம் பஞ்சமி இந்த நாட்களில் ஸ்ரீரகுவீரனை ஊஞ்சலில் வைத்து மிகுந்த உற்சாகத்துடன் பூஜை செய்யவேண்டும். அல்லது சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் பிரதமையில் பூஜைசெய்பவன் அப்யங்க ஸ்நானம் செய்து, ஸ்ரீராமருக்கும் அப்பங்க ஸ்நானம் செய்விக்கவேண்டும். நவமீ திதிவரையிலும் ஒன்பதுநாள் பூஜைசெய்ய வேண்டும். வருஷத்தின் ஆரம்பத்திலும் வஸந்தருதுவின் ஆரம்பத்திலும் கார்த்திகையிலும் அப்யங்க ஸ்நானம் செய்யாதவன் நரக மடைவான். பால்குணமாஸம் சென்ற பின் சைத்திரமாஸம் வந்தவுடன் அந்தணர்கள் சொன்ன நல்லநாளில் காட்டிலாவது ஜலமில்லாத பிரதேசத்திலாவது கிராமத்திலாவது தண்ணீர்ப் பந்தல் ஏற்படுத்தவேண்டும். இந்தத் தண்ணீர்ப் பந்தல் ஸகலஜன ஸாமான்னியமாக பூதங்களெல்லாவற்றிற்கும் ஏற்பட்டது. இதில் ஜலம் கொடுப்பதினால் பிதிர்க்களும் பிதாமஹர்களும் திருப்தியை

அடைகிறார்கள். நான்கு மாதம்வரையில் தடையின்றி ஜலம் கொடுக்கவேண்டும். தேவாலயங்களில் லிங்கங்களுக்கு அபிஷேக பாத்திரங்கள் கொடுக்கவேண்டும். தண்ணீர்ப்பந்தலை வைத்து ஜலம் கொடுக்கச் சக்தியற்றவனாயிருந்து விசேஷமாகத் தருமத்தில் விருப்பமுள்ளவனாயின் அவன் தினந்தோறும் பிராம்மணன் வீட்டிலிருந்து தருமகடத்தினால் ஜலத்தைக் கொடுக்கவேண்டும். தாம்பூலம் பழம் தான்னியங்கள் தக்ஷிணை இவைகளுடன் கொடுக்கவேண்டும். இது தருமகடம் என்னும் பெயர்பெறும். இது பிரமதேவர் விஷ்ணு சிவன் என்னும் மும்மூர்த்திசொரூபமுமுடையது. இதைக்கொடுப்பதால் ஸகலமனோரதங்களும் நிறைவேறுகின்றன. சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் திருதியையில் ஸீதையுடன் இராமச்சந்திரரை குங்குமம், அகில், கர்ப்பூரம், இரத்தினம், வஸ்திரம், கந்தத்திரவியங்கள், தூபம், தீபம் இந்த உபசாரங்களால் பூஜைசெய்யவேண்டும். பிறகு ஊஞ்சலில் இருவரையும் எழுந்தருளப்பண்ணி ஊஞ்சலை அசைக்கவேண்டும்.

அந்தணர்களுக்குள் சிறந்த விஷ்ணுதாஸ! புத்திரஸம்பத்தையும் சுகத்தையும் விரும்புகிறவர்கள், ஸௌபாக்கியத்தைவிரும்புகிற ஸ்திரீகள் இவர்கள் வஸந்தமாஸம் திருதியையில் ஸௌபாக்கிய சயன விரதத்தைச் சுகமாக எப்போதும் செய்யவேண்டும். ஏ விஷ்ணுதாஸ! இந்தத் திருதியையில் உள்ள விசேஷத்தைக் கூறுகிறேன் கேள். புண்ணியத்தைக் கொடுக்கும் வஸந்தமாஸம் சுக்லபக்ஷம் திருதியையில் ஸ்திரீகள் ஸ்நானஞ்செய்து அனேக சித்திரங்களுடன் மண்ணால் கோட்டையை ஏற்படுத்தி அதில் பதினெட்டு தானியங்களை விதைக்கவேண்டும். அதற்கு நான்கு பக்கங்களிலும் அழகான புண்ணிய விருக்ஷங்களை வைத்து அதற்கருகாமையில் ஜலயந்திரங்களையும் அமைத்து சித்திரங்களையும் எழுதவேண்டும். முன்போல் நான்கு துவாரங்களையும் மண்டபம் முதலியவைகளையும் முற்கூறிய ஸ்ரீராம பூஜையில் சொன்னதுபோலச் செய்யவேண்டும்.

ஜலம் நிறைந்த குடத்தைப் புஷ்பத்தால் அலங்கரித்து அதைக் கோட்டைக்குமேல் வைத்து, அதற்குமேல் பெரிய

ஊஞ்சலை வைத்துச் சொர்ணத்தால் ஸீதாராமர்களுடைய மூர்த்தியைக் கற்பித்து பூஜைசெய்ய வேண்டும். ஊஞ்சலில் வைத்து ஒருமாஸம் வரையில் பூஜிக்கவேண்டும்.

சிலர் இந்த ஸ்தானத்தில் பார்வதியுடன் பரமசிவனை அமைத்துப் பூஜை செய்கிறார்கள். இவ்விஷயத்தில் முனிவர்கள் கூறும் நிர்ணயத்தைக் கூறுகிறேன் கேள்.—

ஸ்ரீராமருக்கு சிவன் இருதயமானர். சிவனுக்கு இராமர் இருதயமானவர். அவ்விதமே ஸீதாதேவிக்குப் பார்வதீதேவி இருதயமானவள். பார்வதீதேவிக்கு ஸீதாதேவி இருதயமானவள். ஆகையால், இராமர் சிவன் ஸீதை பார்வதி இவர்களுக்குள் எப்போதும் பேதமில்லை. எவர்கள் பேதமென்னுகிறார்களோ அவர்களுக்கு ரௌரவ நரகத்தில் வாசம் ஏற்படும். ஆகையால் சைத்திரமாஸம் திருதீயையில் ஸீதாராமர்களைப் பூஜிக்கவேண்டும். சக்தியில்லாவிடில் தாம்பிரம் முதலியவைகளால் செய்த மூர்த்தியிலும் செய்யலாம். ஸ்திரீகள் தினந்தோறும் மங்கள திரவியங்களால் பூஜை செய்யவேண்டும். ஸ்திரீகள் ஒருமாஸம் வரையில் ஸீதளம் என்று பெயருள்ள ஸீதா தீர்த்தத்தில் விசேஷமாக ஸ்நானம் செய்யவேண்டும். பூமியில் எவ்விடத்தில் இராம தீர்த்தம் இருக்கிறதோ அதற்கு இடது பாகம் ஸீதையால் உண்டாக்கப்பட்ட ஸீதாதீர்த்தம் எனப்படும். இதை அறிந்து கொள்க.

சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் திருதீயை முதல் வைசாக மாஸம் சுக்லபக்ஷம் திருதீயை வரையில் அக்ஷயை என்று பெயர். அதுவரையில் ஸ்திரீகள் எப்போதும் ஸீதாதேவியின் அநுக்கிரகத்தை அடைவதற்காக ஸீதளஸ்நானம் செய்யவேண்டும். சைத்திரமாஸம் சுத்த திருதீயையிலும் அக்ஷய திருதீயையிலும் ஸ்திரீகள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். மற்ற நாட்களில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதுகூடாது. தினந்தோறும் ஸீதாதேவிக்கு முன் உற்சவங்கள் செய்யவேண்டும். தினந்தோறும் சுமங்கலிகளையும் பூஜை செய்யவேண்டும். சுமங்கலிகளுக்கு வாயனங்களையும் கொடுக்கவேண்டும். எப்போ

தும் இம்மாதிரி பூஜை செய்ய முடியாவிடில், ஒருநாளாவது சுமங்கலிகளைப் பூஜிக்கவேண்டும். சுமங்கலிகளுக்குத் தினந்தோறும் சிலாக்கியமான போஜனம் செய்விக்கவேண்டும். அனேகவித அன்னங்கள் நெய் பாயஸம் இவைகளுடன் போஜனமளித்து, அலங்காரம் வஸ்திரம் இரவிக்கை முதலியவைகளைத் தன் கணவனுடைய ஆயுள் விருத்திக்காகக் கொடுக்கவேண்டும். இவ்விதம் ஒரு மாஸம் வரையில் ஸீதாஸ்நானம் செய்து அக்ஷய திருதீயையில் விசேஷமாகப் பூஜைசெய்து முப்பது சுமங்கலிகளுக்கு போஜனம் முதலியவைகளைச் செய்விக்கவேண்டும். குருவின் பத்தினியையும் பூஜித்து அவளிடம் ஸகல மங்கள வஸ்துக்களையும் கொடுக்கவேண்டும் இவ்விதம் ஒரு மாஸம் வரையில் ஸ்திரீகளுக்கு விரதம் ஏற்பட்டிருக்கிறது.

மற்றொரு விசேஷத்தையும் கூறுகிறேன் கேள்—சைத்திர மாஸம் சுக்லபக்ஷம் அஷ்டமியில் அசோகப் பூவின் மொட்டுகளால், மிகுந்த மங்கள காரியங்களுடன் ஸீதையையும் இராமரையும் பூஜிக்கவேண்டும். அவ்விதம் பூஜைசெய்து புனர்வசு நக்ஷத்திரத்தில் எட்டு அசோகமலரின் மொட்டுகளை எவர்கள் புசிக்கிறார்களோ அவர்கள் துக்கத்தை அடையமாட்டார்கள். "துக்கத்தை உண்டாக்காமல் அபீஷ்டங்களை உண்டுபண்ணக் கூடியதும் சித்திரைமாஸத்தி லுண்டானதுமான உன்னைச் சோகத்தால் தாபமடைந்த நான் புசிக்கிறேன். என்னைச் சோகமுறாமல் காக்க வேண்டும்" என்று கூறவேண்டும்.

சைத்திரமாஸம் புனர்வசு நக்ஷத்திரம் புதவாரம் சுக்லபக்ஷம் அஷ்டமி சேர்ந்த புண்ணியகால அதிகாலையில் ஸ்நானம் செய்தவன், வாஜபேயயாகம் செய்த பலனை அடைவான். சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் நவமிதிதி புனர்வசு நக்ஷத்திரம் பகலில் குரு சந்திரயோகம், ஐந்து கிருக உச்சம் இவைகளோடு சூரியன் மேஷராசியி லிருக்கும்போது கடகலக்னத்தில் பகலில் பரமபுருஷனாகிய மஹாவிஷ்ணு கௌஸல்யா தேவியிடம் ஆவிர்ப்பாவமடைந்தார். அந்தத் தினத்தில் மானிடர்கள் உபவாஸத்துடன் விரதத்தை அனுஷ்டானம் செய்யவேண்டும். இரவில்

விழித்திருக்கவேண்டும். சைத்திரமாஸம் சுத்த நவமி புனர்வசு நக்ஷத்திரத்துடன் கூடிய மத்தியான காலந்தான் புண்ணிய காலமென்று சொல்லப்படும். நவமி மட்டிலும் இருந்தாலும் உபவாஸமிருக்கவேண்டும். ஆகையால் எல்லோரும் நவமி விரதத்தைச் செய்யவேண்டும். ஸ்ரீராமநவமி என்பது கோடிசூரிய கிரஹண பலனைவிட அதிகமானது. பிர்ம சொரூபமடைய விருப்பமுள்ளவர்கள் அந்தத்தினத்தில் உபவாஸம் கண்விழிப்பு பிதிர்க்களை உத்தேசித்துத் தர்ப்பணம் செய்தல் இவைகளைச் செய்யவேண்டும். இந்தத் தருமம் எல்லோருக்கும் புக்திக்கும் முக்திக்கும் முக்கியமான சாதனமாக ஏற்பட்டது. அபரிசுத்தனுனும் பாபியானும் இந்த விரதத்தைச் செய்பவன் எல்லோருக்கும் மேற்பட்டவனாக ஆகிறான். எவன் ஸ்ரீராம நவமியில் மோகத்தால் போஜனம் செய்கிறானோ, அவன் கும்பீபாக நரகத்தில் வீழ்ந்து துன்பமடைவான். இதில் சந்தேகமில்லை. விரதங்களெல்லாவற்றிலும் சிறந்த இந்த இராம நவமிவிரதத்தைச் செய்யாமல் மற்ற விரதங்களைச் செய்பவர்கள் பலனை அடையமாட்டார்கள். ஆசாரியரைப் பூஜித்து அவரைநோக்கி "நான் இரவில் ஸ்ரீராமப் பிரதிமையைத் தானம் செய்கிறேன். நீர் ஸந்தோஷப்படவேண்டும். நீர் இராமருக்குச் சமமானவர்" என்று பிரார்த்தனை செய்யவேண்டும். தன் கிருகத்தில் உத்தமமான பிரதேசத்தில் ஒரு மண்டபத்தை அமைத்து அதன் கீழ்ப்பாகத்தில் ஹநுமாரையும் தென்பாகத்தில் சங்கு சக்ரத்தையும் மேற்பாகத்தில் கருடனையும் சார்ங்கத்தையும் வடபாகத்தில் கதை, கத்தி, அங்கதனையும் மத்தியில் பத்மம் ஸ்வஸ்திகம் நீலனையும் நான்கு கைப்பிரமாணமுள்ள வேதிகையையும் அதில் ஆயிரத்தெட்டு இராமலிங்க பத்ரத்தையும் இராமதோ பத்ரத்தையும் அமைத்து ஸ்ரீராமரை மனதில் நினைத்துப் பின்வருமாறு சங்கற்பம் செய்தல் வேண்டும்—

இந்த இராமநவமியில் எட்டு யாமங்களிலும் உபவாஸமிருந்து ஸ்ரீராமரை விதிப்படி பூஜைசெய்து சொர்ணத்தால் செய்த இராமப் பிரதிமையைப் புத்திசாலியும் இராமரிடம் பக்தியுள்ளவரு

மாகிய அந்தணருக்குக் கொடுக்கிறேன். அனேக ஜன்மங்களில் நான் செய்த அனேகவித பாபங்களை ஸ்ரீராமப் பிரபுவானவர் நிவிர்த்தி செய்யவேண்டும்" என்று சங்கற்பத்தைச் செய்து கொள்ளவேண்டும்

பிறகு ஒருபலம் சொர்ணத்தால் இரண்டு கைகளையும் இடது பக்கத்தில் ஸீதையையும் வலதுகையில் அழகான ஞானமுத்திரை யையும் இடதுகை ஸீதையை ஆலிங்கனம் செய்துகொண்டிருப் பதுபோலும் அமைத்துஅந்தப்பிரதிமையைஇரண்டுபலம்வெள்ளி யால் செய்யப்பட்ட சிம்மாஸனத்தில் வைத்துப் பூஜை செய்ய வேண்டும்; இப்படிச்செய்யச் சக்தியில்லாதவன் தன் சக்திக்குத் தக்கபடி ஒருபலம் அல்லது பாதி அல்லது காற்பலம் தங்கம் அதற்கும் சக்தியில்லாவிடில் வெள்ளியாலேனும் இரகுநந்தனரை அமைத்துஅவருக்குப்பக்கத்தில் குடையுடன் பரதசத்ருக்னர்களை யும் இரண்டு வில்லுடன் இலக்ஷ்மணரையும் தாயின்மடியில்இருக் கும் இந்திரநீலவர்ணம் போன்ற இராமரையும் அமைத்து இவர்க ளுக்குப்பஞ்சாமிருத ஸ்நானம்முதலிய பூஜைகளைச்செய்துஅசோ கபுஷ்பங்களுடன் அருக்கியம் கொடுக்கவேண்டும். இராவணனை வதம் செய்வதற்கும் தருமத்தை நிலைநிறுத்துவதற்கும் அரக்கர் களையும் கொடிய அசுரர்களையும் நாசம் செய்வதற்கும் ஸாதுக் களைக் காப்பதற்கும் ஸ்ரீமந்நாராயணன்றான் இராமராக உண் டானவர் "உடன் பிறந்தவர்களுடன் இராம! நான்கொடுக்கும் அருக்கியத்தைக் கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொள்ளவேண்டும். இவ்விதம் பகலிற்செய்து இரவில் விழித் திருக்கவேண்டும். பிறகு விடியற்காலமெழுந்து ஸ்நானம் ஸந் தியா வந்தனம் முதலியவைகளைச் செய்து விதிப்படி இராமரைப் பூஜிக்கவேண்டும். பிறகு முற்கூறிய மண்டபத்தில் குண்டம் ஏற் படுத்தி அதிலாவது பூமியிலாவது லௌகிகமான அக்னியை ஸ்தா பித்து மந்திரம் தெரிந்தவர் நெய்யுடன்கூடின பாயஸத்தால் இரா மரை ஸ்மரணஞ்செய்து வேறொன்றிலும் புத்தியைச் செலுத்தா மல் மூலமந்திரத்தால்நூற்றெட்டுத்தடவை ஹோமஞ்செய்யவேண் டும். பிறகு குருவை சந்தோஷப்படுத்தி, அவரைப்பூஜித்து இராம

ராகவே பாவனைசெய்து "ஏ. இராம! சித்திரமான இரண்டுவஸ்திரங்களுடனும் அற்புத அலங்காரத்துடனும் இந்தச் சொர்ணப் பிரதிமையை ஸ்ரீராமச்சந்திரருடைய பிரீதிக்குக் கொடுக்கிறேன். ஸ்ரீரகுவீரர் ஸந்தோஷத்தை அடையவேண்டும்" எனக்கூறும் இந்த மந்திரத்தைச்சொல்லி, விதிப்படி தானம் செய்து பூமியைத் தக்ஷிணையாகவும் கொடுத்தால் பிரம்மஹத்தி முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறேன். இதில் சந்தேகமில்லை. சீடனே! சைத்திரமாஸம் நவமியில் இராகவருடைய சந்தோஷத்திற்காக பிராம்மணனுக்கு இவ்விதம் தானஞ்செய்ய வேண்டும்.

சைத்திரமாஸத்தில் செய்யவேண்டிய மற்றொரு விசேஷம் சொல்லுகிறேன்.

மானிடன் சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் ஏகாதசியில் மாந்தோட்டத்திலிருக்கும் மாமரத்தின் கிளையில் ஊஞ்சலைக்கட்டி அதில் ஸ்ரீராமரைப் பக்தியுடன் பூஜைசெய்ய வேண்டும். அந்தப் புண்ணியகாலத்தில் வைஷ்ணவர்கள் மஹோத்ஸவங்களுடன் லக்ஷ்மீ நாராயணர்களைப் பூஜிக்கவேண்டும்.

சைத்திரமாஸம் சுக்லபக்ஷம் துவாதசியில் ஒவ்வொரு வருஷத்திலும் மகோற்சவஞ் செய்யவேண்டுமென்று போதாயனர் முதலிய பெரியோர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்கள்.

வஸந்தமாஸத்தில் ஊர்ஜ விரதத்தையும் தோளகவிரதத்தையும் சிராவண மாஸத்தில் தோரவிரதத்தையும் சைத்திரமாஸத்தில் தமனோத்ஸவத்தையும் செய்யாதவன் நரகமடைவான்.

அக்கினி, பிர்ம்மதேவன், பார்வதி விக்னேசுவரர், ஆதிசேஷன், சுப்ரமண்யர், சூரியன், மஹேசுவரர், துர்க்கை, யமன், விசுவநாதர், விஷ்ணு, மன்மதன், சர்வர், சந்திரன் இவர்களைப்பிரதமை முதலிய திதிகளில் பூஜிக்கவேண்டும்.

பிறகு சைத்திரமாஸம் பூர்ணிமையில் சீதாராமர்களைப் பக்தியுடன் ஊஞ்சலில்வைத்து மஹோத்ஸவங்களுடன் பூஜைசெய்ய வேண்டும். சைத்திரமாஸம் சித்திரை நக்ஷத்திரம் கூடிய பூர்ணிமை திதி புண்ணியத்தைக் கொடுக்கும் மஹா திதியாகும். ஸ்ர

னம் தானம் ஜபம் முதலியவைகளுக்கு உயர்ந்ததினம் என்றறிய வேண்டும். அன்றையதினம் ஸ்திரீகள் சௌபாக்கியத்தைக் கொடுக்கும் வஸ்திரதானஞ் செய்தல் வேண்டும். மஹோத்ஸவங்களுடன் ஸீதாராமர்களைச் சித்திரவஸ்திரங்களால் பூஜிக்க வேண்டும். இந்தச் சித்திராபூர்ணிமையானது சனி, ஆதி, குரு இந்த வாரங்களில் நேர்ந்து அப்போது ஸ்னானம் சிராத்தம் முதலியவைகளைச் செய்தால் அசுவமேதயாகம் செய்த பலனைக் காட்டிலும் அதிகமான பலன் ஏற்படும். சித்திரா பூர்ணிமையில் ஒரு வருஷம் வரையிற்செய்த பூஜையின் பிரயோஜனம் ஸித்திப்பதற்காக ஸகல தேவர்களையும் ஸ்ரீராமரையும் விசேஷமாக தமனோத்ஸவங் கொண்டாடிப் பூஜை செய்யவேண்டும்.

பிறகு சைத்திரமாஸம் ஸ்னானஞ் செய்து விரதத்தை அந்தத் திதியில் உத்தியாபனஞ் செய்யவேண்டும். மிகுந்த பலனை விரும்புகிறவர்கள் வைசாகமாஸம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமியில் பந்துக்களுடன் ஸீதாராமர்களை ஊஞ்சலில் வைத்து நன்றாகப் பூஜைசெய்து உத்தியாபனம் செய்யவேண்டும். வைசாகமாசம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தியில் உபவாஸமிருந்து இராத்திரியில் பரிசுத்தமான பிரதேசத்தில் முன்போல் மங்களமான மண்டபத்தைக் கற்பித்து அதில் இராமலிங்க பத்திரத்தில் தான்னியங்களைக் குவித்து, ஜலத்துடன் பெரிதான தாம்பிர பாத்திரத்தை வைத்து அதன் மேல் வஸ்திரம் அணிந்து அதில் ஸ்ரீராமச் சந்திரரைப் பூஜைசெய்ய வேண்டும்.

மூன்று பலம் தங்கத்தாலாவது வெள்ளியாலாவது ஊஞ்சலைச் செய்யவேண்டும். ஒரு பலம் சொர்ணத்தால் இராமருடைய மூர்த்தியையும் செய்து அநேகவித உபசாரங்களால் பூஜித்து இரவில் தூங்காமல் நிருத்தம் கீதம் மங்கள வாத்தியங்கள் புராண சிரவணம் முதலியவைகளால் காலங்கழித்து விடியற்காலையில் ஸீதாராமர்களை மறுபடி பூஜைசெய்து எள் நெய் பாயஸம் முதலியவைகளைக்கொண்டு இராம மந்திரத்தை உச்சரித்து ஆயிரந்தடவை ஹோமஞ்செய்து பாலினால் தர்ப்பணஞ் செய்ய வேண்டும். பிறகு பக்தியுடன் குருவுக்கு வஸ்திரம் முதலியவை

களை ஸம்மானஞ்செய்து ஸ்ரீராமரை உத்தேசித்துப் பிரார்த்தனை செய்து கொள்ளவேண்டும். "ஏ! இராமா! வஸந்த காலத்தில் இரண்டரை மாஸம்வரையில் ஸீதையுடன் விளங்கும் உம்மை ஊஞ்சலில் வைத்துச் சக்திக்குத்தக்கபடி பூஸஜ செய்தேன். இத ஞல் நீர் பிரஸன்னராகி என்னை ஸம்ஸாரக் கடலிலிருந்து கரை யேற்றவேண்டும்" என இவ்விதம் பிரார்த்தனை செய்து அந்தப்பிர திமையை குருவிடம் தானம் செய்து அடிக்கடி அவரை நமஸ் காரம் செய்யவேண்டும். எழுபத்தைந்து தம்பதிகள் அல்லது முப் பத்தெட்டு அல்லது பத்தொன்பது தம்பதிகளுக்குச் சக்திக்குத் தக்கபடி குருவுடன் போஜனம் செய்விக்க வேண்டும். பிறகு உறவினர்களுடன் போஜனம் செய்யவேண்டும்.

சக்தியற்றவனுனுலும் வஸந்த காலத்திலே செய்யவேண்டிய இந்தப் பூஜையைத் தன் சக்திக்குத் தக்கபடி எப்போதும் செய்ய வேண்டும்.

சிஷ்யனே! ஊஞ்சலில் ஸீதாராமர்களை வைத்துப் பூஜை செய் யும் விசேஷத்தை உனக்குக் கூறினேன்.

விஷ்ணுதாசர் வினவுகிறுர்.

ஏ குருவே! எந்த எந்த தேவதையைப் பூஜித்தால், என்ன என்னபலன் ஏற்படும் என்பதை என்மீது கருணைவைத்து, கேட்க விருப்பமுள்ள எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என் ருர்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறுர்.

அப்பா! நன்ருய்க்கேட்டாய்! ஸாவதானமான மனதுடன்கேள்— பிர்மதேஜஸ்ஸை விரும்புகிறவன் பிர்மதேவரைப் பூஜிக்க வேண்டும். இந்திரியங்களின் புஷ்டியை விரும்புகிறவன் இந்தி ரனைப் பூஜிக்கவேண்டும். பிரஜைகளை விரும்புகிறவன் பிரஜாபதி யையும், ஸ்ரீயைவிரும்புகிறவன் பராசக்தியையும், தேஜஸ்ஸை அபேக்ஷிக்கிறவன் அக்னியையும், திரவியங்களில் அன்புள்ளவன் வசுக்களையும், வீரியத்தில் விருப்பமுள்ளவன் ருத்திரனையும், அன்னம் முதலியவைகளில் அபிப்பிராயம் உள்ளவன் அதிதி

தேவியையும், சொர்க்க லோகத்தை அபேக்ஷிக்கிறவன் தேவர்களையும், இராஜ்யத்தை இச்சித்தவன் விச்வே தேவர்களையும், பிராணிகளை வசப்படுத்தப் பற்றுதலுடையவன் சாத்தியர்களையும், ஆயுளை அபேக்ஷித்தவன் அசுவினீ தேவர்களையும், புஷ்டியை விரும்பியவன் இளையையும், பிரதிஷ்டையை அபேக்ஷிக்கிறவன் உலகத்திற்குத்தாய்தந்தையராகிய ஆகாயபூமிகளையும், இலக்ஷணத்தை உத்தேசிக்கிறவன் கந்தர்வர்களையும் ஸ்திரீகளை அனுபவிக்க ஆசையுள்ளவன் ஊர்வசி என்ற அப்ஸரஸ் ஸ்திரீயையும், எல்லோருக்கு மேற்பட்ட தன்மையை எக்காலத்திலும் விரும்புகிறவன் பரமேஷ்டியையும், பெருமையை உத்தேசித்தவன் யாகத்தையும், பொக்கிஷத்தை விரும்புகிறவன் வருணனையும், வித்தையை விரும்புகிறவன் பரமசிவனையும், தாம்பத்தியம் நிலைபெற ஸதி என்ற பெயர்கொண்ட உமையையும், தருமத்தை அபேக்ஷித்தவன் நாராயணனையும், புத்திர ஸந்தானத்தை விரும்பியவன் பிதிர்க்களையும், இரக்ஷையை இச்சித்தவன் இராக்ஷஸர்களையும், * ஓஜஸ்ஸை விரும்பியவன் தேவகணங்களையும், இராஜ்யத்தை இச்சித்தவன் மக்களையும், ஆபிசாரத்தை அபேக்ஷித்தவன் நிருருதியையும், காமத்தை விரும்பியவன் ஸோம தேவதையையும், விருப்பமில்லாதவன் பரமபுருஷனையும், ஆசைகொண்டோ ஆசையில்லாமலோ மோக்ஷத்தை விரும்புகிறவன் தீவிரமான பக்தி யோகத்தால் இரகுநந்தனராகிய ஸ்ரீராமச் சந்திரப் பிரபுவையும் பூஜை செய்யவேண்டும்.

இராமருக்குச் சமமான தெய்வம் உண்டானதுமில்லை, உண்டாகப்போகிறதுமில்லை. ஆகையால், மிகவும் பிரயத்தினம் செய்து தசரதகுமாரனான இராமச்சந்திரரைப் பூஜிக்கவேண்டும். ஸ்ரீராமச்சந்திரருடைய பெயரில் முதல் வர்ணத்தின் பெருமையால் ர என்ற அக்ஷரத்தை முதற்கொண்ட வஸ்துயாவும் மிகவும் சிறந்தவைகள். நான் அதை விஸ்தாரமாகக் கூறுகிறேன். ருக்குமம், ரத்தினம், ரதம், ராமா, ராக்ஷஸன், ரஜதம், ரஜஸ்ஸு, ரக்ஷை, ரணம், ரமா, ரக்தம், ரஜகன், ராகம், ராமடம், ராஜன், ரோகம், ரவி, ராத்

* ஒருவித சக்தி.

திரி, ராஜ்யம், ரஜஸ்வலே இவைமுதலான சப்தங்கள் சிறந்தவைகள்.

ருக்மம் என்பது தங்கம், மஞ்சள் வர்ணமுள்ளது. விலையுயர்ந்தது. ரத்தினம் எங்கும் கிடைக்காதது; அழகுள்ளது. ரதம் வாகனமாக ஏற்பட்டது; அதனால் சிறந்தது. ரமா ஸ்திரீ என்று பொருள்பெறும்; அவளுக்கு இந்த உலகமெல்லாம் சுவாதீனமாக ஏற்படும். ராக்ஷஸன் தேவர்களுக்குப் பயத்தைக் கொடுக்கிறவன். ரஜதம் வெள்ளி; இதுவும் எங்கும் கிடைக்காது. ரஜஸ்ஸு என்பது தூளி; அதுதான் பரமாணுவாக ஏற்பட்டது; அது தான் நித்தியமென்று சொல்லப்படுகிறது. ரக்ஷை என்பது எல்லோரையும் காப்பாற்றுகிறது. ரணம் ஜயத்தைக்கொடுக்கிறது. ரமை என்பவள் லக்ஷ்மீதேவி. அவளநுக்கிரகம் எல்லோருக்குமரிது. ரக்தம் என்பதில் சிறந்த சிவப்பு வர்ணமிருக்கிறது.

ரஜகன் என்பவன் வண்ணான். அவன் அழுக்கற்றவைகளை உடையவன். ராகம் என்பது அன்பு; அது சுகத்தைக் கொடுக்கும். ராமடம் என்பது பெருங்காயம். அன்னத்திற்குச் சுத்தியையும் ருசியையும்கொடுக்கக்கூடியது. ராஜ்யம் சௌக்கியத்தைக் கொடுக்கும். ரஜஸ்வலே, இவளிடம் புத்திரனுண்டாவதால் சிறந்தவள்.

இவ்விதம் ர என்ற வர்ணத்தை ஆதியில் கொண்டசப்தம் யாவும் பூமியில் பிரசித்தி பெற்றவைகள். ஏ விஷ்ணுதாஸ! ர என்பது ராம என்னும் சப்தத்தில் உள்ள முதல் அக்ஷரமாதலால் பெருமையுள்ளது.

சீடனே! மற்றொரு விஷயம் கூறுகிறேன் கேள். நான் கூறின இராமமுத்திரைபோல் வேறு தேவதைகளுக்கு நாமமுத்திரை ஏற்படவில்லை. நாமமுத்திரையில் இராமநாமமில்லாவிடில், வியக்தமான அக்ஷரம் தெரியவராது. இதுதான் வெகு ஆச்சரியம். விஷ்ணுதாஸ! இவ்விஷயத்தில் இராமருடைய மகிமையை நீ தெரிந்துகொள். ஆகையால் விசுவேசுவரர் காசியில் எப்போதும் இராம நாமத்தை ஜபம் செய்து பிராணிகள் மோக்ஷமடைய அந்த இராம நாமத்தை உபதேசம் செய்கிறார்.

எந்தமந்திரம் ஸம்ஸாரமாகிய கடலில்மூழ்கினவனைக்கரை யேற்றுகிறதோ அதுதான் தாரகமந்திரம் ஸ்ரீராம மந்திரமே தாரக மந்திரமாகையால், விசுவநாதர் இதை உபதேசிக்கிறார். அந்தக்காலத்தில்ஸ்ரீராமருடைய ஸ்மரணம் வருவதன் பொருட்டு ஏற்கனவே இராமநாம ஜபம் செய்ய உபதேசம் செய்கிறார்கள்.

மற்றொரு விஷயங்கேள். சவம் தூக்குகிறவர்கள் அது முக்தி யடைவதன் பொருட்டு வழியில் இராமநாமத்தைச் சொல்லுகிறார்கள். இராம நாமத்தைத் தவிர வேறுமந்திரமுண்டானதுமில்லை உண்டாகப்போகிறதுமில்லை. பரமசிவன் எப்போதும் இராமநாம ஜபம் செய்து கொண்டே இருக்கிறார். பார்வதி நாரதர் அனுமான் இவர்களும் எப்போதும் ஜபம் செய்கிறார்கள்.

இராமர் ஜனங்களை இரமிக்கச் செய்கிறார். அவர்களிடம் இராமர் இரமிக்கிறார். அரக்கர்களை ஸம்ஹாரம் செய்கிறார். ஆகையால் இராமநாமம் மிகவும் உயர்ந்தது. பாதாளலோகத்திலிருந்து ர என்ற அக்ஷரமும் பூமியிலிருந்து ஆ என்ற அக்ஷரமும் மஹலோகத்திலிருந்து மகாரமுமாக மூன்று அக்ஷரங்கள் அடங்கியது ராமநாமம். ராமநாமம் ர என்பதால் தன்பக்தனைஸமஸாரக் கடலினின்றும் கரையேற்றுகிறது. ஆ என்பதால் சௌக்கியத்தைக் கொடுக்கிறது; ம என்பதால் மனோரதங்களை நிறைவேற்றுகிறது; மரணம் முதலிய துன்பத்தை நீக்குகிறது. அதனால் இராமநாமம் உயர்ந்தது. இந்த ராம நாமத்தை எப்போதும் ஜபம்செய்ய வேண்டும்.

ஸ்ரீராம பூஜையின் விஸ்தாரத்தைக் கூறும்

9 - வது சருக்கம்

முற்றிற்று.

10-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

சிடனே! நீ முன்கேட்ட கேள்விகளுக்கு இராமவிஷயமாக சகலத்தையும் மிகுந்த ஆதரவுடன் கூறினேன். இப்பொழுது நீ எதைக்கேட்க விரும்புகிறாயோ அதைத் தெரிவித்தால் நான் கூறுகிறேன்.

பரமசிவன் கூறுகிறார்.

இவ்விதம் குருவாகிய இராமதாஸர் சொல்லக்கேட்டு விஷ்ணுதாஸர் மறுபடியும் கூறுகிறார்

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஏ குருவே! அயோத்திமா நகரத்தையும் சைத்திரமாதத்தையும் பற்றிய பலனைக் கூறினீர் எதை தானம் செய்வது? தானம் செய்தால் பலன் என்ன? யாரை உத்தேசித்து விரதத்தைச்செய்வது? அதற்குஎன்ன விதி? எப்போது ஆரம்பம் செய்வது? இவைகளை விஸ்தாரமாக எனக்குக் கூறவேண்டும். சரயூநதியிலும் இராமதீர்த்தத்திலும் ஸ்னானம் செய்யும்கிரமத்தையும் கூறவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

புத்தியிற் சிறந்த மாணவனே! நிரம்பவும் நல்ல கேள்வி கேட்டாய்; இப்போது சைத்திர மாதத்தின் மகிமையைக் கூறுகிறேன். மாதங்களெல்லாவற்றுள்ளும் சைத்திரமாஸம் ஆதியானமாதம்; ஸகல ஜீவனுக்கும் தாய்போல் வேண்டிய பலனைக்கொடுக்கும்தன்மையுள்ளது. தானம், யாகம், விரதம் இவைகளுக்குச் சமமானது; ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது; தருமம், கிரியை, தவம் இவைகளின் ஸாரமாக ஏற்பட்டது. எப்போதும் பூஜிக்கக்கூடியது. வித்தைகளுக்குள் வேதம்போலவும், மந்திரங்களுக்குள் பிரணவம் போலவும் விருக்ஷங்களுக்குள் கற்பக விருக்ஷம் போலவும், கோக்களுக்குள் காமதேனுபோலவும் ஸர்ப்பங்களுக்குள் ஆதிசேடன் போலவும் பக்ஷிகளுக்குள் கருடன் போலவும், தேவர்களுக்குள் விஷ்ணு போலவும், வர்ணங்களுக்குள் பிராம்மண வர்ணம்போலவும், பிரியமுள்ள வஸ்துக்களுக்குள் பிராணன்போல

வும், சுகிருத்துக்களுக்குள் பாரியை போலவும் நதிகளுக்குள் கங்கா நதிபோலவும் தேஜஸ்ஸுகளுக்குள் சூரியன்போலவும் ஆயுதங்களுக்குள் வஜ்ரம்போலவும், தாதுகளுக்குள் சொர்ணம் போலவும், விஷ்ணுபக்தர்களுக்குள் ருத்திரன்போலவும், இரத்தினங்களுக்குள் கௌஸ்துபம் போலவும், புஷ்பங்களுக்குள் தாமரைபோலவும், ஸரஸ்ஸுகளுக்குள் மானஸஸரஸ்ஸுபோலவும், தருமங்கள்செய்யக் காரணமான மாதங்களுக்குள் சைத்திரமாஸம் சிறந்தது. இதற்குச் சமமாக விஷ்ணுவின் பிரீதியை உண்டுபண்ணும் மாதம் வேறில்லை.

சைத்திர ஸ்னானம் செய்யச் சமயம்வரும் முன்னமே பங்குனி மாஸம் கடைசியில் சைத்திரமாஸம் ஆதியில் அருணோதயத்திற்கு முன் ஸ்நானம் செய்பவனிடம் லெக்ஷ்மியுடன் நாராயணமூர்த்தி வெகுபிரீதியை அடைகிறார். பிராணிகளுக்கு அன்னத்தால் பிரீதி ஏற்படுவதுபோல விஷ்ணுவுக்குச் சைத்திரமாஸத்தில் ஸ்னானம் செய்வதால்தான் பிரீதி உண்டாகிறது. இதில் ஐயமில்லை. எந்த மானிடன் சைத்திரமாஸத்தில் ஸ்னானம் செய்பவர்களைக்கண்டு சந்தோஷிக்கிறானோ அவனும் பாபங்களெல்லாவற்றிலுமிருந்து விடுபட்டு விஷ்ணுவின் உலகத்தில் விளங்குவான்.

சூரியன் மீனராசியிலிருக்கும்போது ஒரு தடவை ஸ்னானம் செய்து, ஆன்ஹிகத்தைச் செய்பவன் மஹாபாபங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணுவின் ஸாயுஜ்ஜிய முக்தியை அடைவான். சைத்திரமாஸத்தில் ஸ்னானஞ் செய்ய வேண்டுமென்று எந்தமானிடன் ஓரடி எடுத்து வைக்கிறானோ அவன் அசுவமேத யாகம் செய்த பலனை அடைவான். கெட்ட எண்ணங் கொண்டவனானாலும் சைத்திரமாஸத்தில் ஸ்நானஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்டால் அவன் நூறுயாகஞ் செய்த பலனை அடைகிறான் என்பதில் சந்தேகமில்லை. எந்த மானிடன் சூரியன்மீனராசியிலிருக்கும் போதே ஸ்நானத்திற்குப் போவதாக ஒரு வில்லளவு தூரம் சொல்லுகிறானோ அவன் விஷ்ணுவின் சாயுஜ்யமடைவான்.

மூவுலகத்திலும் பிர்ம்மாண்டத்திலுமுள்ள பண்ணிய தீர்த்தங்கள் யாவும் அற்பமான ஸாமான்னிய ஜலத்தில் ஸான்னித்திய

மடைகின்றன. சைத்திரஸ்னானம் செய்கிறவரையில் யமலோகத்தில் ஸகலபாபங்களும் கர்ஜிக்கின்றன. குழந்தாய்! சைத்திரமாசத்தில் தீர்த்தம் முதலிய தேவதைகள் எல்லாம் ஜலத்தை ஆசிரயித்திருக்கின்றன.

மானிடர்களின் நன்மையின் பொருட்டு மஹாவிஷ்ணுவால் சூரியோதயம் முதல் ஆறுநாழிகைவரையில் ஸகல தீர்த்தங்களும் ஸான்னித்திய முள்ளவைகளாகின்றன.

அந்த ஸமயம் ஸ்னானம் செய்யாதவர்களுக்குப் புண்ணிய தீர்த்தங்கள் சாபம் கொடுத்துத் தம்மிருப்பிடம் செல்லுகின்றன. ஆதலால் உதயத்திலேயே ஸ்நானஞ் செய்யவேண்டும்.

சைத்திரமாஸத்திற்குச் சமமான மாஸமும், கிருதயுகத்திற்குச் சமமான யுகமும் வேதத்திற்குச் சமமான சாஸ்திரமும், கங்கைக்குச் சமமான தீர்த்தமும் இல்லை. ஜலதானத்திற்குச் சமமான தானமும் பத்தினியின் சுகத்திற்குச் சமமான சுகமும் சைத்திர மாஸத்திற்குச் சமமான மாஸமும் இல்லை. ஆகையால் கவிகள் இவைகளைப்பற்றிச் சிறப்பாகப் பேசுகிறார்கள். இந்த மாஸம் சேஷசயனராகிய விஷ்ணுவுக்குப் பிரியமுள்ளது.

எந்த மானிடன் இந்த விரதத்தைச் செய்யவில்லையோ அவன் சண்டாளனாவான். தன் வீடு அநேக வஸ்துக்களால் நிறைந்திருந்தாலும் அலங்காரம் செய்யாவிடில் எவ்விதம் சோபிக்காதோ, கன்னியானவள் சகல இலக்ஷணமும் நிறைந்தவளாயிருந்து உயிருடனிருக்கும் பதியில்லாவிடில் எவ்விதம் விளங்க மாட்டாளோ, கீரை முதலிய சாகம் குணமுள்ளதாயினும் உப்பில்லாவிடில் எவ்விதம் ருசியைத்தராதோ, அலங்காரமில்லாவிடில் சபை எப்படிச் சோபியாதோ, வஸ்திரமில்லாவிடில் ஸ்திரீ எவ்விதமோ அவ்விதமே சைத்திர மாதத்தைவிட்டு மற்ற மாதங்களில் செய்யும் தருமம் சோபியாது. ஆகையால் எந்த மானிடனும் மிகவும் பிரயத்தனத்துடன் இந்தச் சைத்திரமாதவிரதத்தைச் செய்யவேண்டும்.

நந்தன் குமாரனாகிய கிருஷ்ணனை யன்றி இராமர் வேறல்ல; இராமரை யன்றி கிருஷ்ணன் வேறில்லை. ஆகையால் அயோத்

திமா நகரில் வாசம் செய்யும் பிரபுவுக்கு சைத்திர மாஸத்தில் விதிப்படி பூஜை செய்ய வேண்டும்.

சூரியன் மீனராசியிலிருக்கும்போது இராமரை ஜானகியுடன் தியானித்து, காலையில் ஸ்நானம் செய்து ஜபம் செய்ய வேண்டும். இல்லாவிடில் நரகமடைவான். அந்த மாஸத்தில் செய்யும் விரதங்கள் யாவும் ஸ்ரீராமரை உத்தேசித்தே இருக்க வேண்டும். "ஜனக குமாரிக்குப்பதியும் இரகு குலத்தில் ஜனித்தவருமாகிய இராம! சூரியன் மீனராசியி லிருக்கும்போது சைத்திரமாஸபுண்ணியகால ஸ்நானம் செய்கிறேன். அந்தக் காரியத்திற்கு இடையூறுண்டாகாமல் காக்கவேண்டும் சைத்திரமாஸத்தில் ஸ்நானம் செய்வதில் சிரத்தையுள்ள நான் உமக்கு அருக்கியம் கொடுக்கிறேன். ஏ இரகு நாயக! கிரகிக்க வேண்டும். ஏ கங்கை முதலிய நதிகளே! புண்ணிய தீர்த்தங்களே! மேகங்களே! நதங்களே! நான் கொடுக்கும் அருக்கியத்தை நீங்கள் கிரகித்து எனக்கு நன்றாக அநுக்கிரகம் செய்யவேண்டும். பிரம்ம தேவர் முதலிய தேவர்களே! நதிகளே! விஷ்ணு பக்தர்களே! முனிவர்களே! நான் கொடுக்கும் அருக்கியத்தைப் பெற்று அநுக்கிரகம் செய்யவேண்டும். யமதரும ராஜனே! நீர் சிறந்தவர்; பாபிகளைச் சிக்ஷிக்கிறவர். எல்லோரையும் சமமாகப் பார்ப்பவர். நீர் நான் கொடுக்கும் அருக்கியத்தைப் பெற்று சாஸ்திரத்தில் கூறினபலனைக் கொடுக்கவேண்டும்" என்று கூறி அருக்கியம் கொடுத்து பிறகு ஸ்நானம் செய்ய வேண்டும். அதன் பின் வஸ்திரமுடுத்து, வஸந்தகாலத்தி லுண்டான புஷ்பங்களால் ஜானகீராமனைப் பூஜித்து இந்த சைத்திர மாஸத்தின் மகிமையைக் கொண்டாடும் இராம கதையைச் சிரவணம் செய்யவேண்டும். அப்பொழுது முன் கோடி ஜன்மத்தில் செய்த பாபங்களி லிருந்து விடுபடுகிறான்; கடைசியில் மோக்ஷத்தையு மடைகிறான். சைத்திர மாஸத்தில் வெங்கலப் பாத்திரத்தில் போஜனம் செய்பவனும், நல்ல கதைகளைக் கேட்காமலும் ஸ்நானம் செய்யாமலும் தானமும் செய்யாமலு மிருப்பவன் நரகங்களையே அடைவான்.

மகர மாஸத்தில் பிரயாகை க்ஷேத்திரத்திலும் கார்த்திகை மாஸத்தில் காசி, பஞ்சகங்கை முதலிய க்ஷேத்திரங்களிலும் வைசாகமாஸத்தில் துவாரகையிலும்சைத்திரமாஸத்தில் அயோத்தியிலும் இராம தீர்த்தம் சிறந்தது. பிரயாகை க்ஷேத்திரத்தில் ஒரு மாதம் வரையில் ஸ்நானஞ் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ அந்தப் பலன் அயோத்தியில் இராம தீர்த்தத்தில் ஒரு தடவை ஸ்னானம் செய்வதால் உண்டாகும். கோமதி நதியில் வைசாக மாஸத்தில் பன்னிரண்டு நாள் ஸ்னானம் செய்கிறவன் அடையும் பலனை அயோத்தியில் சரயூநதியில் சைத்திர மாஸத்தில் மூன்று நாள் ஸ்னானம் செய்வதாலடையலாம். பஞ்ச கங்கையில் பன்னிரண்டு வருஷம் கார்த்திகை மாஸத்தில் ஸ்னானம் செய்பவன் அடையும் பலனை அயோத்தியில் இராம தீர்த்தத்தில் சைத்திரமாஸத்தில் பதினைந்து நாள் ஸ்னானம் செய்பவன் அடைகிறான். பாபம் செய்தவர்கட்கு அயோத்தியாபுரி அரிதாகும். அயோத்தியைப் பார்க்கிற வரையில் பாபங்கள் சூழ்ந்து நிற்கும்.

பூமியில் ஸ்ரீ ராமரா லுண்டாக்கப்பட்ட புண்ணிய தீர்த்தங்களை அயோத்தியா புரியி லிருக்கும் தீர்த்தமாகவே கொண்டு அந்தத் தீர்த்தங்களில் ஸ்னானம் செய்யவேண்டும். அயோத்தியா புரியும் சரயூநதியும் இராம தீர்த்தமும் கிட்டாதபோது, தானிருக்குமிடத்துள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்ய வேண்டும்.

சைத்திர மாதத்தில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், பகலில் நித்திரை புரிதல், வெங்கலப் பாத்திரத்தில் போஜனம் செய்தல், படுக்கையில் சயனம் செய்து நித்திரை புரிதல், வீட்டிலேயே ஸ்னானம் செய்தல், தருமசாஸ்திரத்தில் நிஷேதம் செய்த வைகளைப் பக்ஷணம் செய்தல், இரண்டுவேளை போஜனம் செய்தல், இரவில் போஜனம் செய்தல் இவ்வெட்டுக் காரியங்களையும் விட்டுவிடவேண்டும். சைத்திர மாதத்தில் பகற்பொழுதில் சிரமத்தை அடைந்த அந்தணர்களுடைய பாதங்களை ஜலத்தாலலம்புகிற விரதம் விரதங்களுக்குள் சிறந்தது. சைத்திர மாதத்தில் வழி நடப்பவர்களுக்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்து, தாகத்துக்கு

நீர் கொடுத்து இருக்க நிழலையும் கொடுக்கிறவன் சொர்க்க லோகத்தில் சுகமடைவான். ஜலத்தில் விருப்பமுள்ளவன் ஜலத்தையும் நிழலை விரும்பியவன் நிழலையும் விசிறியை விரும்பியவன் விசிறியையும் சைத்திர மாதத்தில் தானம் செய்யவேண்டும் பங்குனி மாதத்தில ஜலம் குடை விசிறி இவைகளைத் தானம் செய்வது விசேஷமாகும். சைத்திர மாதத்தில் குடும்பியான அந்தணனுக்கு ஜலம் நிறைந்த பாத்திரத்தைத் தானம் செய்யாவிட்டால், சாதகபக்ஷியாகப் பிறப்பான். சைத்திர மாதத்தில் ஜலம் அன்னம் படுக்கை கண்ணாடி தாம்பூலம் வெல்லம் சோதுமை துவரை, தயிரன்னம், நெய்யுடன் வெங்கலப் பாத்திரம் கருப்பஞ்சார், வில்வப்பழம், மாம்பழம், மெலிந்தவஸ்திரம், மஞ்சம், பானபாத்திரம்,கமண்டலம், தண்டம் இவைகளை ஸன்னியாசிகளுக்குத் தானம் செய்யவேண்டும். மடங்களுக்கு எண்ணெய் கொடுப்பது மடங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வது மணிகள் செய்துகொடுப்பது, தேவர்களுக்கு ஆலயம் கட்டுவது வாபீ கூபங்களைத் தாபிப்பது, வழி நடப்பவர்களுக்குக் குடை கொடுப்பது, மத்தியானத்தில் அதிதிகளைப் பூஜிப்பது ஸன்னியாசிகளுக்குக் கமண்டலம் கொடுப்பது கோக்களுக்கு ஆகாரம் கொடுப்பது இந்தத் தானங்கள் சைத்திர மாஸத்திற் குரியனவாம் பழம், சாகம், கிழங்கு, காய், புஷ்பம், சந்தனம், விலாமிச்சை, சீதள திரவியம் கர்ப்பூரம்,நல்லகஸ்தூரி தீபம், பசு, கிருகம் கோரஸம் (பால் தயிர் நெய்) இவைகளைத் தானஞ் செய்யலாம். ஸன்னியாசிகளுக்கும் அந்தணர்களுக்கும் போஜனம் செய்விப்பது,சுமங்கலிகளைப்பூஜிப்பது, இராமநாமங்களெழுதுவது, புத்தகங்களைத் தானம் செய்வது இவைகளும் விசேஷம். குங்குமம், கிருசலகம். ஜாதிக்காய், லவங்கம், ஜாதிபத்திரி, வால்மிளகு, நெல்லிக்கனி, மாதலம்பழம், எலிமிச்சம்பழம், பலாப்பழம், விளாம்பழம், பூசினிக்காய் மற்றுமுள்ள பழங்கள் இவைகளைத் தானம் செய்யவேண்டும்.

உத்தியானவனம் கற்பிப்பது, வழிகளைச் சீர்திருத்துவது, பாதுகை, குதிரை, யானை இவைகளைத் தானம் செய்வது முதலியவைகளைச் சைத்திரமாதத்தில் அனுஷ்டிக்க வேண்டு

சைத்திரமாதத்தில் தள்ளுபடி செய்யவேண்டிய மூலவஸ்துக்களை நான் உனக்குக் கூறுகிறேன்.—

சைத்திரமாதத்தில் ஸ்நானம் செய்பவன் மாம்ஸங்களெல்லாவற்றையும் மதுகர வஸ்துக்களையும் மொச்சக் கொட்டை முதலியவைகளையும் தள்ளவேண்டும்.

சைத்திர மாஸத்தில் ஸ்நானம் செய்பவன், பரிசுத்தத்தினைக் கெடுக்கும் பிறர் வீட்டுப் போஜனம், பிறர் துரோகம் செய்வது, பரஸ்திரீகளிடம் புணர்ச்சி செய்வது முதலியவற்றைத் தள்ள வேண்டும். தேவர்கள அந்தணர்கள் வேதங்கள், குருக்கள் கோக்கள் விரத முள்ளவர்கள் ஸ்திரீகள் அரசர்கள் பெரியோர்கள் இவர்களை நிந்திக்கவும் கூடாது.

பிராணிகளின் அங்கம் ஒரு வஸ்துவின் பொடி இவையும் பழவகையில் எலுமிச்சம்பழமும், தான்னிய வகையில் சிறுகடலையும், அன்னவகையில் பழையதும், மாம்ஸம் என்று சொல்லப்படும். விரத நியமமுள்ளவன் பிரம்மசாரி நியமத்துடன் பூமியில் சயனம் செய்தல் தைத்த இலையில் நான்காவது காலத்தில் போஜனம் செய்தல் முதலியவைகளை அனுஷ்டிக்க வேண்டும். பிரதமை திதியில் எண்ணெய் தேய்த்துக்கொள்ள வேண்டுமே யொழிய மற்றக் காலங்களில் அப்பியங்கஸ்நானம் செய்யக் கூடாது. சுரைக்காய், கத்திரிக்காய், பூசினிக்காய், கண்டங்கத்திரிப் பழம், நறுவிளிப்பழம், வெண்பாலை யரிசி, விளாம்பழம் இவைகளைத் தள்ளவேண்டும்.

இரஜஸ்வலை சண்டாளன் மிலேச்சன் பதிதன் விராத்தியன் பிராம்மணத் துரோகம் செய்கிறவன் வேதங் கெட்டவன் இவர்களுடன் விரதநியமமுள்ளவன் பேசுவதுகூடாது. நீருள்ளி, வெள்ளைப்பூண்டு, சர்ப்பாட்சி, வெள்ளுள்ளி, முருங்கைக்காய் இவைகளைத் தள்ளவேண்டும். இவைகள் சேர்ந்ததும் நாய் காக்கைகள் தீண்டியதுமான அன்னத்தையும் தீண்ட லாகாதவர்களன்னத்தையும், இரண்டு தடவை பாகமான அன்னத்தையும், பொசுங்கிய அன்னத்தையும் தள்ள வேண்டும். தன் சக்திக்குத் தக்கபடி ஸ்ரீராமபிரானின் சந்தோஷத்திற்காக இருச்சிரம்

முதலியவைகளைச் செய்யவேண்டும். பிரதமை முதலிய திதிகளில் கிரமமாகப் பூசினிக்காய், கண்டங்கத்திரிப் பழம், சர்ப்பாட்சி, முள்ளங்கி, வில்வப்பழம், வெண்பாலை யரிசி, நெல்லிக்கனி' தேங்காய், சுரைக்காய், இலந்தைப்பழம். சர்மவிருந்தாகம் கொடி, கீரை, துளசி இவைகளை நீக்கவேண்டும். ஆதிவாரத்தில் கிரகஸ்தன் எப்போதும் நெல்லிக்கனியை நீக்க வேண்டும்.

இவைகளைக் காட்டிலும் மற்ற வஸ்துக்களிலும் ஏதாவது நீக்கினால் அந்த மானிடர்களிடம் ஸ்ரீராமர் பரம பிரீதியை அடைகிறார்.. அந்த வஸ்துவை விரதத்தின் முடிவில் பிராம்மணனுக்குத் தானம் செய்து தான் பிறகு புசிக்கவேண்டும்.

பங்குனி மாதம் பூர்ணிமை முதல் சித்திரை மாதம் பூர்ணிமை வரையில் சைத்திர ஸ்னானம் செய்யவேண்டும். அல்லது மீனராசியில் சூரியனிருக்கிற வரையில் செய்ய வேண்டும். பங்குனி மாதம் சுத்த தசமி முதல் சித்திரை மாதம் சுத்த தசமி வரையில் ஸ்னானம் செய்யவேண்டும். இவ்விதம் ஸ்னானத்திற்கு மூன்று பேதங்கள் சொல்லப்பட்டன.

சைத்திரமாதம் சுக்லபக்ஷம் திருதியைமுதல் வைகாசி மாதம் சுக்கிலபக்ஷம் திருதியை வரையில் அக்ஷய திருதியை என்று பெயர். அது வரையில் சீதளா கௌரீ ஸ்னானம் செய்யவேண்டியது. ஸ்திரீகள் ஸீதா தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து ஸீதா தேவியைப் பூஜிக்கவேண்டும். சீதளா கௌரீ விரதத்தையும் ஸ்னானத்தையும் செய்யக்கூடிய ஸ்திரீகள் சைத்திரமாதம் சுக்லபக்ஷம் திருதீயை வைகாசி மாதம் சுக்லபக்ஷம் திருதீயையாகிய அக்ஷய திருதீயை தினத்தில் எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்யவேண்டுமே ஒழிய மற்றத் தினங்களில் கூடாது. சைத்திர மாதத்தில் முப்பதுதிதிகளும்சிறந்தவைகளேயாம். ஆனாலும் சில திதிகளுக்கு விசேஷம் கூறுகிறேன். சைத்திரமாதம் கிருஷ்ண பக்ஷம் பஞ்சமீ, ஏகாதசி, துவாதசி, சிவராத்திரி அமாவாஸை இந்தத்திதிகள் மஹா பாபங்களைப் போக்கக் கூடியவைகள்.

மானிடர்கள் நன்மையைக் குறித்து சைத்திர மாதத்தில் சுக்கில பக்ஷத்திலுள்ள சிறந்த திதிகளைச் சொல்லுகிறேன் கேள்-

யுகாதிப் பிரதமை திதி முதல் தசமி திதிவரையில் ஸ்னை தானங்களைச் செய்யலாம். பிரதமையில் செய்த ஸ்னைம் தானம் விரதம் முதலியவைகளைவிடத் துவிதீயையில் இரண்டு பங்கதிக மாகவும் திருதீயையில் துவிதீயையில் செய்ததைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகவும் இவ்விதம் நாளுக்குநாள் அதிகப் படுத்திக்கொண்டே நவமிவரையில் செய்யவேண்டும். கரும்பங் குச்சியின் நுனியைவிட அடிக்கணுக்கள் சிறந்தவைகளாம். பாலைக்காட்டிலும் தயிர் சிறந்தது, தயிரைவிட வெண்ணெய் சிறந் தது, வெண்ணெயைக் காட்டிலும் நெய் சிறந்தது — இவைகளைப் போல் திதிகளில் மேலே போகப்போக விசேஷமென்றறிய வேண்டும். மாதங்களுக்குள் சைத்திரமாதம் சிறந்தது. அதில் சுக்ல பக்ஷம் சிறந்தது. அதில் பிரதமை முதல் நவமி வரையிலும் உயர்ந்தது. எல்லாவற்றைக் காட்டிலும் நவமி திதி மிகவும் உயர்ந் தது.

தருமத்தை ஸ்தாபனம் செய்வதற்காக ஏற்பட்டபடியால் ராமாவதார நவமிதிதி மிகவும் சிறந்தது; ஸகல கருமங் களையும் போக்கக்கூடியது. அன்றையதினம் செய்த தானம் ஹோமம் ஜபம் இவைகள் கொஞ்சமாயினும் அழிவற்றனவாகு மென்பதில் சந்தேகமில்லை. பிரதமை முதல் நவமிவரையில் உபவாஸமிருந்து ஸ்ரீராமரைப் பூஜிக்கவேண்டும் யுகாதிப் பிர தமையில் வீடு தோறும் உப்பரிகைகளின் மேல் துவஜங்களைக் கட்டி ஸ்ரீராமர் அவதாரம் செய்த காலத்தைச் சூசனை செய்யவேண்டும். அவைகளை வஸ்திரங்களாலும் புஷ்பங்களாலும் அலங்காரம் செய்து பூஜிக்கவேண்டும். கிருகத்திலும் தேவாலயத் திலும் பசுக்கொட்டடியிலும் பிருந்தாவனத்திலும் சந்தனம் கலந்த நீரால் மெழுகிக் கோலமிட்டு அனேகவித பத்மம் முத லியவைகளைக் கறுப்பு மஞ்சள் முதலிய வர்ணங்களால் அலங்கா ரம் செய்து ஆயிரத்தெட்டு இராமநாமத்தையாவது நூற் றெட்டு இராமநாமத்தையாவது அழகாக எழுதவேண்டும்,

அதற்கு மேல் சித்திர வர்ணத்துடன் அழகாகவும் பெரிதாகவும் மண்டபத்தையும் ஏற்படுத்தவேண்டும். தோரணங்கள் வாழை மரங்கள் கரும்புத்தடிகள் அநேக மணிகள் அழகான கண்ணாடிகள் சித்ர வர்ணமுள்ள விரிப்புகள் முத்தாரங்கள் இவைகளால் அலங்கரிக்க வேண்டும்.

அந்த மண்டலத்திற்கு மேல் சொர்ணம் இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு மஞ்சத்தையும் அதற்கு மேல் சிலாக்கியமான வஸ்திரங்களை விரித்து அதில் பதினாறு உளுந்து எடை தங்கத்தால் இரண்டு கைகளுடன் இலக்ஷணங்கள் பொருந்திய ஸ்ரீராமச் சந்திரப் பிரதிமையையும் இருபத்து நான்கு உளுந்து எடை வெள்ளியால் கௌஸல்லியையின் அழகான பிரதிமையையும் வைத்துத் தினந்தோறும் தன்சக்திக்குத்தக்கபடி பூஜைசெய்ய வேண்டும். பேரிகை முதலிய வாத்தியங்களை முழக்கவேண்டும். மிருதங்கம், தூரியம், கீதம் நிருத்தியம் இவைகளைச் செய்விக்க வேண்டும். அநேக விதமாகப் பக்குவம் செய்த அன்னங்களையும் நைவேத்தியம் செய்து பூஜிக்கவேண்டும்.

பிரதமை முதல் நவமிவரையில் இந்த இராமாயணத்தைப் பாராயணம் செய்யவேண்டும். வான்மீகி முனிவர் இயற்றியதும் சிரவணம் செய்தவுடன் மங்களத்தைக் கொடுக்கக் கூடியதுமான இந்த ஆனந்த ராமாயணத்தைத் தினம் ஒரு காண்டமாக ஒன்பது நாளில், பாராயணம் செய்யவேண்டும். அல்லது தினந்தோறும் பன்னிரண்டு சருக்கங்களைப் பாராயணம் செய்யவேண்டும். பாக்கியுள்ள சருக்கம் ஒன்றாக விருந்தாலும் அதையும் மத்தியில் பாராயணம் செய்ய வேண்டும். நூற்றெட்டுச் சருக்கங்களால் மேருவுடன் இராம கீர்த்தன மாலையை ஒன்பது தினம் வரையில் ஸ்ரீராமருக்கு முன்னிருந்து பாராயணம் செய்யவேண்டும். இவ்வொன்பது நாட்களில் பாராயணம் செய்பவனுக்குத் தீர்த்தஸ்நானம் தானம் இவைகளெல்லாவற்றிலும் உண்டாகும் பலன் ஏற்படும். சைத்திர மாஸத்தில் நவராத்திரியில் இராமாயணத்தில் ஒரு சுலோகமாவது பாதிசுலோகமாவது பாராயணம் செய்பவர்கள் மோட்ச மடைவார்கள்.

இவ்வாறு பெண்களுடன் கூடின ஸ்த்ரீகள் தினந்தோறும் கௌசல்யா தேவியையும் இராமரையும் பூஜிக்கவேண்டும். பிள்ளைகளுடன் கூடின அந்தணர்கள் இன்னும் விசேஷமாகப் பூஜை செய்யவேண்டும். வஸ்திரம் முதலிய அலங்காரத்துடனும் விசித்திரமான போஜனத்துடனும் அஷ்டமிவரையில் நவமியில் விசேஷமாக இந்த விதிப்படி பூஜித்து வாகனத்தின்மீதுள்ள ஸ்ரீராமச் சந்திரருக்கு உபசாரம் செய்ய வேண்டும்.

பேரீ, மிருதங்கம், தூரியம், துந்துபி, தாஸி முதலிய வாத்திய கோஷங்களையும் நர்த்தனம் கானம் முதலிய அனேக உற்சாஹங்களும் குடை சாமரங்களையும் உபயோகப்படுத்த வேண்டும்.

புஷ்பக விமானமென்ற வாஹனத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் இராமரை இராம தீர்த்தத்திற் கருகாமையில் அழைத்து வந்து பஞ்சாமிருதங்களால் ஸ்னானம் செய்வித்துப் பிறகு பரிசுத்த ஜலத்தாலும் மங்களத் திரவியம் கலந்த ஜலத்தாலும் ருத்திரசூக்தம் விஷ்ணுசூக்தம் ஸஹஸ்ரநாமம் இவைகளை ஜபம் செய்து இரகு வீரருக்கு ஸ்னானம் செய்விக்கவேண்டும். அதற்கு மங்கள ஸ்னானமென்று பெயர். இது சைத்திர மாஸத்தில் மானிடர்களுக்குக் கிடைப்பதரிது. அந்த பஞ்சாமிருத தீர்த்தத்தை இராம தீர்த்தத்தின் மத்தியில் விட்டுப் பிறகு அவ்விடத்தில் ஸ்னானம் செய்யவேண்டும். அதனால் ஆயிரம் அவபிருத ஸ்னானம் செய்த பலனுண்டாகும். அங்கு மங்கள ஸ்நானத்தைச் செய்தவன் புஷ்கரம் முதலிய தீர்த்தங்களில் கங்கை முதலிய நதிகளில் ஸ்நானம் செய்த பலனை அடைகிறான்.

இவ்விதம் இராமருக்கு ஸீதையுடன் ஸ்நானத்தையும் பூஜையையும் செய்வித்து மறுபடியும் முற்கூறியபடி மங்கள வாத்தியத்துடன் கிருகத்திற் கழைத்துவந்து மறுபடியும் பூஜை செய்து பிறகு, இராமாயணம் இயற்றிய கவியையும், இராமாயண புத்தகத்தையும் பூஜித்து அனேக உற்சவங்களுடன் பகலைக் கழித்து இரவில் கண் விழிக்கவேண்டும். தசமியில் காலையில் எழுந்து அனேகம் அந்தணர்களுக்குப் போஜனமளித்து மறுபடியும்பூஜை செய்து எல்லாவற்றையும் குருவிடம் தானம் செய்ய வேண்டும்.

பிறகு உறவினர்களுடனும் மித்திரர்களுடனும் தான் போஜனம் செய்ய வேண்டும்.

இவ்விதம் சைத்திர மாதத்தில் நவராத்திரி விரதத்தைக் கூறினேன். ஆகையால் சைத்திர மாதத்தில் நவராத்திரி விரதம் மிகவும் சிறந்தது. அந்த ஒன்பது திதிகளிலும் நவமி திதி மிகுதியான பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியது. சைத்திர மாதத்தில் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது ஒன்றுமில்லை. இதற்கு மேல் சைத்திர விரதத்தை உத்தியாபனம் செய்யும் விதியைக் கூறுகிறேன். அதைச் செய்தால் சைத்திர மாதத்திற் செய்த ஸ்நானம் பிரயோஜனப்படும். சைத்திர மாதம் சுக்ல பக்ஷத்தில் ஏகாதசி திதி, திதிக ளெல்லாவற்றிலும் சிலாக்கியமானது. அதில் விரதத்தை அநுஷ்டானம் செய்பவர்கள் உபவாச மிருக்கவேண்டும்.

அடுத்த திதியாகிய துவாதசியும் சிலாக்கியமானது. அதில் யமனைப் பூஜிக்க வேண்டும். தயிரன்னத்தையும் ஜலம் நிறைந்த பாத்திரத்தையும் தானம் செய்யவேண்டும். சைத்திர மாதத்தில் மூன்று திதிகளும் சிறந்தவைகள். திரயோதசியும் பூர்ணிமையும் சிறந்தன. அந்தத் திதிகளில் ஸ்நானம் செய்வது, தானம் செய்வதுயாவும் இஷ்டமெல்லாவற்றையும் கொடுக்கும். சைத்திர மாதத்திலும் நவராத்திரியிலும் ஸ்னானம் செய்யாதவர்கள் கடைசியில் ஒருநாள் ஸ்னானம் செய்தால் சைத்திர மாஸம் முழுவதும் ஸ்னானம் செய்தபலனை அடைவார்கள். அந்தத் திதிகளுக்குள் பூர்ணிமை மிகவும் சிலாக்கியமானது. சைத்திரஸ்னான பலனை அடைய அதில் உத்யாபனம் செய்யவேண்டும்.

சதுர்த்தசியில் உபவாஸமிருந்து முன்போல் மண்டல முதலியவைகளை ஏற்படுத்தி அதில் தானியங்களைக் குவித்து அதன் மேல் ஜலம் நிறைந்த கும்பத்தை ஸ்தாபித்து அதன்மேல் ஐந்து இரத்தினங்களுடன் கூடிய சுவர்ண பாத்திரத்தை வைத்து அதற்கு வஸ்திரம் புனைந்து சொர்ணத்தால் சீதா ராமர்களைச் செய்து அதில் வைத்துப் பூஜை செய்ய வேண்டும். அதில் பரதன் இலக்ஷ்மணன் சத்ருக்னன் அநுமான் சுக்ரீவன் விபீஷணன்

அங்கதன் ஜாம்பவான் இவர்களையும் ஸ்தாபித்துக் குருவின் உத்தரவின்படி எல்லோரையும் பூஜிக்கவேண்டும். பதினாறு உபசாரங்களுடன் அனேகவித பக்ஷியங்களைக் கொடுக்க வேண்டும். இரவில் கீதம் வாத்தியம் முதலிய மங்கள காரியங்களைச் செய்துகொண்டு விழித்திருக்க வேண்டும்.

பிறகு பூர்ணிமையில் பத்தினியுடன் கூடின முப்பது பிராம்மணர்களையாவது ஒரு பிராம்மணனையாவது சக்திக்குத் தக்கபடி வரணம் செய்து அவர்களுக்குப் பாயசம் அன்னம் முதலியவைகளால் போஜனங் கொடுத்து (அதோ தேவா:) என்ற இரண்டு மந்திரங்களை உச்சரித்து வெண்ணெய் நெய்களினால் ஹோமத்தையும் செய்து, தேவர்களுக்குத் தேவராகிய தசரத நந்தனனுடையவும் தேவர்களுடையவும் பிரீதிக்காக சக்திக்குத் தக்கபடி தக்ஷிணையைக் கொடுத்து பின் நமஸ்காரம் செய்யவேண்டும்.

மறுபடி தாசரதியையும் தேவர்களையும் துளஸியையும் பூஜித்துப் பிறகு விதிப்படி காரும் பசுவையும் பூஜிக்கவேண்டும்.

விரதத்தைச் செய்து வைதிக குருவையும் அவர் மனைவியையும் வஸ்திரம் அலங்காரம் முதலியவைகளாற் பூஜித்து அந்தணர்களை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

"உங்கள் அநுக்கிரகத்தால் தேவாதி தெவனாகிய இராமபிரான் அநுக்கிரகம் கிடைக்கவேண்டும். இந்த விரதத்தால் நான் ஏழு ஜன்மங்களிற் செய்த பாபங்கள் எல்லாம் நாசமடைந்து என் சந்ததியும் ஸ்திரமாக இருக்கவேண்டும். நான் பூஜிப்பதால் என் மனோரதம் யாவும் நிறைவேறவேண்டும். தேகாந்தத்தில் விஷ்ணுவின் ஸ்தானமும் கிடைக்கவேண்டும்." இவ்விதம் அந்தணர்களை மன்னிப்புக்கேட்டு அவர்களை ஸ்தோத்திரம் செய்தனுப்பவேண்டும். விரத நியமமுள்ளவன் தன் குருவிடம் இந்தப் பூஜையைக் கொடுக்கவேண்டும். பிறகு உறவினர்களுடனும் மித்திரர்களுடனும் பக்தியுடன் போஜனம் செய்யவேண்டும்.

சைத்திர ஸ்நானம் செய்த பலனை அடைய இந்த விரதத்தின் உத்தியாபனத்தை விஸ்தாரமாகச் செய்யவேண்டும்.

இவ்விதம் எவன் சைத்திர ஸ்நான விரதத்தை நன்றாக அநுஷ்டானம் செய்கிறானோ அவன் பாபங்கள் எல்லாவற்றிலுமிருந்து விடுபட்டு விஷ்ணுவின் சாயுச்சியத்தை அடைவான்.

இந்த விரதத்தை நன்றாக அநுஷ்டானம் செய்தால், விரதங்கள், தானங்கள், தீர்த்த ஸ்நானங்கள் எல்லாவற்றிலும் ஏற்படும் பலனைவிடக் கோடி மடங்கு அதிகமாகப் பலன் ஏற்படும்.

சைத்திர விரதத்தைச் செய்த மானிடனைப் பீடிக்கும் பாபங்கள் யாவும் அவனிடம் பயந்து நாம் எங்குச் செல்லுவோமெனக் கதறுகின்றன. ஆகையால் மானிடர்கள் அவசியம் இந்த விரதத்தைச் செய்யவேண்டும்.

ஸ்ரீ சைத்திர விரதத்தைப்பற்றிக் கூறும் பாகத்தைப் பாராயணம் செய்யும் அந்தணர்கள் ஸந்நியாசிகள் வைஷ்ணவர்கள் எல்லோரும் பாபங்களெல்லாவற்றிலுமிருந்து விடுபட்டு விரதம் செய்த பலனையு மடைகிறார்கள்.

சைத்திர விரதம் ஸ்நானம முதலியவற்றின் மஹிமையைக் கூறும்

10 - வது சருக்கம்

முற்றிற்று.

11 - வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! மாதங்களெல்லாவற்றிலும் சைத்திர மாதம் சிறந்தது என்று பெரியோர்கள் எதனால் கூறுகிறார்கள். அதன் காரணத்தை எனக்குச்சந்தோஷமுண்டாகச் சொல்லவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! புத்தியில் சிறந்தவனே! நீ நன்றாகக் கேட்டாய்!

அந்தணர்களுக்குள் சிறந்த விஷ்ணுதாஸ! மஹா விஷ்ணு பிரம்ம தேவரின் பிரார்த்தனையால் பூமியில் அயோத்தியா புரியை அரசாளும் தசரத மகாராஜாவினுடைய பட்ட மஹிஷியாகிய கௌஸல்யா தேவியிடம் சைத்திர மாதம் சுக்ல பக்ஷம் நவமி திதி புனர்வசு நக்ஷத்திரத்தில் ஐந்து கிரகங்கள் உச்சமா யிருக்கும்போது பகற்பொழுதில் ஜனனமாயினர். பூமியில் எங்கும் ஆனந்தம் உண்டாயிற்று. தேவ துந்துபி முழங்கிற்று. ஆகாய மார்க்கத்தி லிருந்து புஷ்ப வருஷம் வருஷித்தது தசரத மஹா ராஜன் அரண்மனையில் தனித்தனியாக வாத்தியங்கள் கோஷித்தன. தாஸிகள் நர்த்தனம் செய்தார்கள்; இனிமையான கானத்தையும் செய்தார்கள். அப்பொழுது பூமண்டத்தி லிருக்கும் ஜனங்களெல்லோரும் குழந்தையைப் பார்க்க வந்து தசரத பாலனைப் பார்த்துச் சந்தோஷ மடைந்தார்கள்.

அநேக இந்திராதி தேவர்கள் அநேகவித விமானமேறிக் கௌஸல்வியையின் கர்ப்பத்தி லிருந்துண்டான, ஸ்ரீராமனைப் பார்க்க ஆகாய மார்க்கமாக வந்து கூடினார்கள். பிரம்மதேவர், ருத்திரர், சூரியன், இந்திரன் முதலான தேவர்கள் ஸ்ரீராமர் அவதாரம் செய்த சமயத்தில் அநேகவித உற்சவங்களைச் செய்தார்கள். இவ்விதம் உற்சாகத்துட னிருக்கும் சமயத்தில் ஆகாயத்தி லிருக்கும் தேவர்கள் சந்தோஷத்தால் ஸ்ரீராம சந்திரரை நமஸ்காரம் செய்து அநேகவிதமாக ஸ்தோத்திரம் செய்தார்கள்.

அப்பொழுது தேவர்களெல்லோரும் சந்தோஷத்தால் இரகு சிரேஷ்டராகிய இராமரை நோக்கி "இராமசந்திரா! இப்போது

நாங்கள் எல்லோரும் கிருதார்த்தர்களானோம். அசுரர்கள் அரக்கர்கள் இவர்களால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து விடுபட்டோம். தாங்கள் அவதாரம் செய்த இந்தக் காலம் எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது. கருணாநிதியும் தேவ தேவருமாகிய தாங்கள் அவதாரம் செய்த இந்தக்காலம் சிரேஷ்டமாகவும் புண்ணிய தினமாகவும் ஏற்பட வேண்டும். தாங்களும் இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டு இந்தக் காலத்திற்கு வெகு வரங்களைக் கொடுக்க வேண்டும்'' என்றார்கள்.

இவ்விஷயத்தைக்கேட்டு மகா மகிமைபெற்ற விஷ்ணுவின் அவதாரமாகிய இராகவர் அந்தத் தேவர்களிடம் மிகுந்த சந்தோஷமடைந்து கூறுகிறார்—

தேவர்களே! நீங்கள் நன்றாகக் கூறினீர்கள். நல்லவேளையில் மூவுலகத்திற்கும் உபகாரமளிக்கக்கூடிய விஷயத்தை நீங்கள் கேட்டீர்கள். நான் சந்தோஷத்துடன் கூறுவதைக் கேளுங்கள்.

மாதங்களெல்லாவற்றிலும் சைத்திர மாதம் உயர்ந்ததாகும். வைசாகமாதத்தைவிட கார்த்திகை மாதம் உயர்ந்தது; கார்த்திகை மாதத்தைவிட மாசி மாதம் சிறந்தது. மாசி மாதத்தைக்காட்டிலும் சைத்திர மாதம் உயர்ந்ததாக ஆகப்போகிறது சைத்திர மாதத்தில் செய்யும் தானத்தையும் ஜபத்தையும் ஸ்நானத்தையும் ஹோமத்தையும் அயோத்தியில் செய்தால், ஒன்றுக்குக் கோடி மடங்கு அதிகமான புண்ணியம் ஏற்படும் அசுவமேத யாகத்தாலும் கோமேத யாகத்தாலும் சோமயாகத்தாலும் ஏற்படும் பலனைச் சைத்திர மாதத்தில் ஸ்நானம் செய்வதாலடைவான்.

தேவர்களிற் சிறந்தவர்கள் சூரியகிரகண புண்ணிய காலத்தில் குருக்ஷேத்திரத்தில் ஸ்நானம் தானம் செய்வதாலுண்டாகும் பலனைச் சைத்திர மாசத்தில் ஸ்நானம் செய்வதாலடைவான். இந்தச் சரயூ நதிக்கரையில் இனி இராவணனைக் கொன்றதாலுண்டாகும் பாபத்தைப்போக்கிக் கொள்வதற்கு நான் யாகம் செய்யப்போகிறேன். எந்த இடத்தில் யாகம் முடியப்போகிறதோ அந்த இடம் என் பெயரால் பெரிய பிரசித்தியை அடையப்போகிறது.

அயோத்தியில் சரயூ நதியின் மத்தியிலுள்ள இராமதீர்த்தத்தில் சைத்திர மாசத்தில் ஸ்நானம் செய்பவர்கள் மோக்ஷத்திற் குரியராவார்கள்.

சுகத்தை விரும்பியவனுக்குப் பிரயாகைக்ஷேத்திரத்தில் மாக மாச ஸ்நானமும் கார்த்திகை மாசத்தில் காசியில் பஞ்ச கங்கா ஜலத்திலும் வைகாசி மாதத்தில் துவாரகையிலும் எவ்வளவு விசேஷமோ அப்படியே சைத்திர மாஸத்தில் அயோத்தியில் இராம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது விசேஷமுள்ளதாகும். மாதங்க ளெல்லாவற்றிலும் முதலாவதாகிய சைத்திர மாதம் சிரேஷ்டமாகப்போகிறது

இந்திராதி தேவர்களே! சைத்திரமாசம் வந்தவுடன் நீங்க ளெல்லோரும் எங்கெங்கு தீர்த்த மிருக்கிறதோ அங்கங்கு ஸான னித்தியத்தை அடைந்திருக்கவேண்டும்" என்றார்.

இவ்விதம் இந்திரன் முதலான தேவர்களுக்குக் கட்டளை யிட்டு அவர்கள் வணங்கித் தொழும் மகிமையுடன் இராமசந்திரர் விளங்கினார். பரமசிவன் விருஷபவாகனத்துடன் தம்மிருப்பிடம் சென்றார்; தேவர்களும் தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

ஆகையால் மாஸங்களுக்குள் சைத்திர மாசம் சிறந்தது; இது விஷ்ணுவின் வரத்தால் சிறந்ததாக ஏற்பட்டது. மாணவனே! நீ கேட்டதற்கு ஸ்ரீ ராமசந்திரன் வரமளித்தது முதலான கார ணத்தைக் கூறினேன்.

விஷ்ணு தாசர் வினவுகிறார்.

குருவே! தாங்கள் சைத்திர ஸ்நானம் மிகவும் சிறந்த தெனக் கூறவில்லை. அந்த ஸ்நானத்தைச் செய்தவர் யாவர்? செய் தால் எந்தக் காரிய சித்தி ஏற்படும்? இதைத் தெரிவிக்கவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! நன்றாகக் கேட்டாய்; நான் சொல்வதை நீகேட்க வேண்டும். அப்ஜகம் என்னும் க்ஷேத்திரத்தில் அந்தணர்களுக் குள் சிறந்த என் தந்தை இருந்தார். அவர் பெயர் நரசிம்மர்.

அவர் அந்த அப்ஜக க்ஷேத்திரத்திலிருந்த ஒருவனுக்கு அவன் மருமகள், மனைவி, பிள்ளை, பேரன், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் இவர்களோடு (அதாவது குடும்பத்திற்கு) அன்னமிட்டு ஆதரித்துவந்தார். இலக்ஷ்மி என்னும் என் தாயுடன் நரசிம்மர் என்ற என் தந்தை இராமபக்தியிற் சிறந்து இவ்விதம் செய்து வந்தார்.

விருத்தாப்பியத்தை அடைந்த இருவரும் புத்திரோத்பத்தியில்லாமையால், தங்கள் தோஷத்தைப் போக்கிக்கொள்ள உபாயந் தேடி, நிவாசம் என்ற நகரத்தில் பிரவணை என்ற நதிக்கரையில் ஸான்னித்தியமாக விருக்கும் தங்களிஷ்ட தேவதையாகிய மோஹினியைத் தரிசனம் செய்து தினந்தோறும் சேவைசெய்து வந்தனர். வெகு காலம் சென்ற பின்பு அந்தத் தேவதை பிரஸன்னமாகி அந்தத் தோஷம் விலகக் காரணம் கூறிற்று.

"புத்தியிற் சிறந்த நரசிம்ம! நீ அயோத்தியாபுரி சென்று அங்குச் சரயூநதி ஜலத்தில் வரந்த காலத்தில் சைத்திர மாஸத்தில் இராம தீர்த்தத்தில் ஒரு மாதம் வரையில்ஸ்னானஞ்செய்யின், பாபங்களொழிந்து சிலாக்கியமான புத்திரனை அடைவாய்" என்று கூறிற்று.

அந்தத் தேவதையின் வசனத்தைக் கேட்டு அந்தணர் கவலையுடன் அயோத்தியை மனதில் தியானித்துப் புறப்பட்டனர்.

இங்கிருந்து அயோத்தியா பட்டணம் வெகு தூரத்திலிருக்கிறது. எவ்விதம் அங்குப் போகமுடியும் என்ற விசாரத்துடன் சில விடத்தில் நின்றும் சில விடத்தில் உட்கார்ந்தும் பத்தினியாகிய இலக்ஷ்மியின் கையைப்பிடித்துக் கொண்டும் நடந்து கோதாவரிக்கு வந்து ஸ்னானம் செய்து ஸ்ரீராம மூர்த்தியை முன்னால் வைத்துப் பக்தியுடன் பூஜித்தார்.

அப்போதே தேவியின் அநுக்கிரகத்தால் ஸ்ரீராமர் பிரசன்னமாகி "ஏ பிராம்மணோத்தமனாகிய நரசிம்ம! நீ அயோத்திக்குப் போகவேண்டாம். இந்தக் கோதாவரியின் வடகரையில் மூன்று யோசனை தூரத்தில் பிரதிஷ்டானம் என்னும் பெயருள்ள க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கு என் பெயருள்ள இராம தீர்த்தம்

இருக்கிறது. அங்கு நீ சென்று பத்தினியுடன் ஸ்நானம் செய்து கொண்டிரு; வசந்த காலத்தில் சைத்திர மாதத்தில் சூரியன் மீன ராசியிலிருக்கும்போது ஸ்நானத்தைச் செய்யும் நீ, செய்த பாபங்களிலிருந்து விடுபட்டும் புத்திரனை அடைவாய், சந்தேகமில்லை" என்று வாக்களித்து அந்தர்த்தான மடைந்தார்.

எந்த விடத்தில் இராமர் பிரஸன்னரானரோ அந்தவிடத்தை இராம ஹிருதயம் என்று பெரியோர்கள் இன்னமும் கூறுகிறார்கள். பிறகு நரசிம்மர் ஸ்ரீராம வசனத்தைக் கேட்டு பிரதிஷ்டானம் என்ற நகரத்திற்குப் பிரயாணமானார். அங்குச் சென்று ஒரு மாதம் வரையில் சைத்திர மாதத்தில் தினந்தோறும் சூரியோதயத்தில் எழுந்து சௌசம் முதலிய கிரியைகளை முடித்துக் கொண்டு அந்த இராம தீர்த்தத்தில் சரயூ சங்கம மாகுமிடத்தில் ஸ்நானம் செய்து சொர்ணகிரியில் பக்தியுடன் ஸ்ரீராமச்சந்திரரைப் பூஜித்து தினந்தோறும் சொர்ணகிரியை ஒன்பது முறை வலம் வந்து ஒன்பது வகைப் புஷ்பங்களாலும் நைவேத்தியங்களாலும் ஸ்ரீராமரைப் பூஜித்து வந்தார். சைத்திர மாசம் சுக்கில பக்ஷம் திருதீயை முதல் வைசாக மாஸம் திருதீயை வரையில் பத்தினியுடன் சீதளா கௌரீ ஸ்நானம் செய்தார்.

இவ்விதம் ஒரு மாசம் வரையிற் செய்து சந்தோஷமடைந்து பத்தினியான இலக்ஷ்மியுடன் அம்ஜகம் என்ற க்ஷேத்திரத்தை உத்தேசித்துப் புறப்பட்டார்.

மார்க்க மத்தியில் பசிதாகத்துடன் கூடின மூன்று பிசாசுகளைக் கண்டு அவைகளைக் கரையேற்றித் தமது நகரம் வந்து சேர்ந்தார்.

மாணவனே! சைத்திர ஸ்நானம் செய்த மஹிமையால் நான் அவருக்குப் புத்திரனாகப் பிறந்தேன். ஆகையால் வசந்த காலத்தில் அயோத்தியில் சரயூநதியிலுள்ள இராம தீர்த்தத்தில் சைத்திர மாஸத்தில் ஸ்நானம் செய்வது மிகவும் சிலாக்கியம். இகலோக போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடியது. இதை நான் உனக்குக் கூறினேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஆசாரியரே! மூன்று பிசாசுகளும் உம்முடைய தந்தையாகிய நரசிம்மரால் பிசாசு ஜன்மத்திலிருந்து எவ்விதம் விடுவிக்கப்பட்டன? என்ன பாபத்தால் பிசாசு ஜன்மமேற்பட்டது. இந்த விஷயம் யாவற்றையும் உம்முடைய முகமாகக் கேட்க விரும்புகிறேன்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்

மாணவனே! அரம்பை என்னும் அப்ஸரஸ்திரீ சைத்திர மாஸத்தில் அயோத்தியில் சரயூநதியில் நிர்மலமான இராம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஈரவஸ்திரத்துடனும் மனோக்ஞமான மந்தஹாஸத்துடனும் அலங்காரத்துடனும் இரத்தினம் சொர்ணம் இவைகளால் செய்த பாத்ரத்தில் சரயூ தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு சேதுவில் இராமேசுவரரைப் பார்க்க ஆகாய மார்க்கமாகச் சென்றாள். அப்போது அவளுடைய ஈர வஸ்திரத்திலிருந்து ஒருதுளி ஜலம் அந்தப் பிசாசுகளின் மீது விழுந்தது. உடனே பிசாசுகள் மூன்றும் தங்கள் கடுமையான சுபாவத்தை விட்டு, மிகுந்த ஆச்சரியமடைந்து, பூர்வ ஜன்மத்தின் ஞாபகம் பெற்று ஆகாய மார்க்கத்திற் செல்லும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு பலபடி பிரார்த்தனை செய்தன.

அந்த மூன்று பிசாசுகளையும் கண்ட அரம்பை "நீங்கள் என்னகாரணத்தால் பிசாசுகளானீர்கள். அதன் காரணத்தைச் சொல்லுங்கள்" என்று கைஜாடையாகக் கேட்டாள். அவைகளுக்குள் இரண்டு பிசாசுகள் சொல்ல ஆரம்பித்தன.

ஏ ஸ்திரீயே! நாங்களிருவரும் பூர்வ ஜன்மத்தில் விரஜை என்ற ஸ்திரீயிடம் ஹரசர்மா வென்ற பிராமணனுக் குண்டானவர்கள். நாங்களிருவரும் அத்தியயனம் செய்ய நாராயணர் என்ற பெயர்கொண்ட குருவை யடைந்து, சிசுருஷை செய்துகொண்டு அங்கு இருந்தோம். எங்கள் குருவாகிய நாராயணருக்கு ஒரு புத்திரி யிருந்தாள். அவள் அழகான சிரிப்புடன் சந்திரன் போன்ற முகமுள்ளவள். அக்கன்னிகையை நாங்க ளொருவருக்

கொருவர் சினேகத்துடன் பிரார்த்தித்து இருவரும் அப்பெண்ணை அனுப்பிவித்து வந்தோம்.

வெகுநாட் சென்றபின் இச்சமாசாரம் குருவுக்குத் தெரிந்தது. பிறகு சினமடைந்து "நீங்களும் இந்தப் பெண்ணும் பிசாசு ஜன்மத்தை அடையக் கடவீர்கள்" என்று சபித்தார். உடனே நாங்கள் மூவரும் அந்தக் குருவை பலமுறை வணங்கி வேண்டிக் கொண்டோம். அவர் மனமிரங்கிச் சாப முடிவு காலத்தைத் தெரிவித்தார். அதாவது, சைத்திர மாதத்தில் நரஸிம்மர் என்ற அந்தணன் காட்டில் வரும்போது அவர் தமது சைத்திர மாத ஸ்நான பலனை உங்களுக்குக் கொடுக்கப்போகிறார். அப்பொழுது நீங்கள் சாப விமோசன மடைவீர்கள்" என்றார். அவ்விதமே நாங்கள் பிசாசுகளாகப் பிறந்தோம். இப்பொழுது உன் வஸ்திர ஜலம்பட்டு அதனால் ஜென்மாந்திர ஞானத்தை அடைந்தோம் என்று தெரிவித்தார்கள்.

இந்த வசனத்தைக் கேட்ட அரம்பை அந்தப் பிசாசுகளின் சாபவிமோசன வரலாற்றைத் தெரிந்து தன் கையால் அந்தப் பிசாசுகளைத் தொட்டு "நரஸிம்மர் என்ற அந்தணன் தமது மனைவியுடன் வரப்போகிறார். கவலைப்பட வேண்டாம்" என்று கூறி, இராமேசுவரம் சென்று அங்கு ஸ்நானம் செய்து பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு சொர்க்கலோகம் சென்றாள்.

பிறகு, சைத்திரமாதத்தில் என் தந்தை நரஸிம்மர் தமது மனைவியுடன் வரும்போது, வெகு தூரத்திலிருந்த பிசாசுகள் கண்டு "நரஸிம்மரென்ற பிராமணோத்தமரே!" என்று கூப்பிட்டுத் தங்களுடைய வரலாற்றையும் சாபவிமோசன ஏதுவையும் தெரியப்படுத்தின.

அதைக் கேட்ட நரஸிம்மர் சந்தோஷத்துடன், "பிசாசுகளே நீங்கள் பயப்படவேண்டாம். சம்பு என்ற அந்தணனால் அரக்கன் விமோசன மடைந்ததுபோல் நான் உங்களை விடுவிக்கிறேன்" என்றார்.

பிசாசுகள் கேட்கின்றன.

சம்பு வென்பவன் யாவன்? இராக்ஷஸன் என்பவன் யாவன்? அந்தண சிரேஷ்டரே! இதை விஸ்தாரமாக எங்களிடம் கருணை கூர்ந்து சொல்லவேண்டும்.

நரஸிம்மர் கூறுகிறார்.

சிவ காஞ்சி என்னும் பட்டணத்தின் மத்தியில் பரிசுத்த மான விரத நியமமுடைய சம்பு வென்ற ஓர் அந்தணனிருந் தான்.

அவன் ஒரு சமயம் ஏகாம்பரேசுவர சுவாமிக்கு அருகாமை யிலுள்ள வனத்தில் ஒரு பௌராணிகரிடம் சைத்திர மாதத்தின் மகிமையை விளக்கும் கதையைக்கேட்டு அதில் மிகுந்த பலன் உண்டென்றறிந்து அதிலும் அயோத்தியில் சைத்திரமாச ஸ்நா னம் மிகவும் விசேஷ மென்று கேட்டு வீட்டுக்குச் சென்றார்.

பிறகு வெகு காலம் சென்ற பின்பு அக்கதையை நினைத்துக் கொண்டு சைத்திர மாசத்தில் தன் மனைவியுடன் கிருகத்தை விட் டுப் புறப்பட்டு மார்க்கத்தில் கங்கையைத் தாண்டிச் சென்றார்.

அந்த வழியில் சஞ்சரித்துக்கொண்டிருந்த கர்க்கசன் என்ற வேடன் ஒருவன் வில் பாணம் இவைகளோடு சம்பு வென்ற அந் தப் பிராம்மணனை வளைத்துக்கொண்டு இடுப்பு வஸ்திரம் நீங்க லாக அவன் கொண்டுவந்த சாமான்கள் யாவற்றையும் கிரகித்துக் கொண்டான். அப்பொழுது அந்தணன் கர்க்கசனை நோக்கி, "வஸ் திரம் முதலியவைகளை நீ எடுத்துக்கொண்டு அதில் இருக்குந்தின் பண்டங்களை மட்டும் கொடு" என்றார். இச்சொல்லைக்கேட்ட வேடன் அந்தணன் வஸ்திரத்தில் முடித்திருந்ததை அவிழ்த்து அதில் பலவித பக்ஷியங்களிருக்கக் கண்டான். இன்னொரு முடிச் சை அவிழ்க்க அதில் காயாக இருக்கும் தன்மையிலேயேகாய்ந்து போன பத்து வாழைப்பழங்க ளிருக்கக்கண்டு "இந்தப் பழங்க ளால் எனக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை; இவைகள் பசி தாகத் துடனிருக்கும் பிராம்மண சிரேஷ்டனுக்கிருக்கட்டும்" என்று நிச் சயித்து, அந்தப் பழங்களை அந்தணனிடம் கொடுத்தான். பத்தினி

யுடன் பிராம்மணன் வேடன் கொடுத்த பழங்களை அந்த வசந்த காலத்தில் புசித்தான். வனசரனாகிய வேடன் வாழைப்பழங்களைச் சைத்திர மாதம் முதல் தினத்தில் பிராம்மணனுக்குத் தானம் செய்தமையால் தன் கெட்ட எண்ணம் நீங்கி நல்ல சுவபாவத்தை யடைந்தான்.

ஏ பிசாசுகளே! அந்த கர்க்கசனிடம் சம்பு வென்ற அந்தணன் பின் வருமாறு கூறுகிறான்.

சம்பு கூறுகிறான்.

ஏ வேடா! நான் காஞ்சிமா நகரிலிருந்து புறப்பட்டு அயோத்தியா புரிக்குப் போகிறேன். சரயூநதியின் நிர்மலமான ஜலத்தில் சைத்திரமாதத்தில் ஸ்நானஞ் செய்ய உத்தேசித்துச் செல்லுகிறேன் என்றார்.

இப்படி அந்தணன் கூறியதும் கர்க்கசன் அங்கு ஸ்நானம் செய்வதால் என்னபலன் கிடைக்குமென்றும் அதை எனக்கு விஸ்தாரமாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் வேண்டினன்.

சம்புவானவர் மறுபடி கர்க்கசனை நோக்கி "பக்தியுடன் வசந்த மாசத்தில் சரயூ நதியில் ஸ்நானம் செய்தால், ஸ்ரீரகுநாதன் பிரசன்னமாவார்; அப்படி அவர் பிரஸன்னரான பின்பு மானிடர்கள் சகல போகங்களையும் பூமியில் அடைந்து கடைசியில் மோக்ஷத்தையும் அடைகிறார்கள்" என்று கூறினர்.

கர்க்கசன்:—ஏ பிராம்மணரே! என்னிடம் தயை செய்து மோட்ச சொரூபத்தைத் தெரிவிக்கவேண்டும்-என்றான்.

இவ்வசனங் கேட்டதும் சம்புவானவர் தன் மனைவியை அழைத்து "ஏ பிரியே! என்ன ஆச்சரிய மிது பார்த்தயா! சைத்திர மாதத்தில் வாழைப் பழங்களைத் தானம் செய்ததால் இந்த நல்ல எண்ணம் உண்டா யிருக்கிறது. வேடனெங்கே இவன் கேட்கும் கேள்வி எங்கே! தானம் செய்தால் மோட்ச சொரூபத்தை யறியலாம் என்று இப்பொழுது ஏற்பட்டது. ஆகையால் தானம், எல்லாவற்றிலும் சிறந்தது என்று சொல்லி அந்த வேடனைப் பார்த்து, ஆதரவுடன் கூறுகிறார்.

ஏ வேடனே! நல்ல கேள்வி கேட்டாய், மோக்ஷ சொரூபத்தை உனக்குக் கூறுகிறேன் கேள். மறுபடி ஜன்ம மில்லாமலிருப்பது தான் மோக்ஷம் என்றார்.

வேடன்:—அந்த மோக்ஷம் எனக்கு எவ்விதம் கிட்டும்? அதைச் சொல்லும் என்றான்.

சம்பு கூறுகிறார்

மோக்ஷமடையும் மார்க்கத்தைக் கூறுகிறேன் கேள். மக்கள் மனை வீடு முதலியவைகளை வெறுத்துச் சரீரம் யாவற்றையும் சலனம் செய்விக்கிற ஜனார்த்தனரைப் பகலிலும் இரவிலும் தியானம் செய்து வெகு புண்ணியம் பெற்று மனதைச் சுத்தப்படுத்திக்கொண்டு அந்த ஜனார்த்தன சொரூபத்தில் எப்போது மிருப்பவன் மோக்ஷமடைவான். மற்றவன் மோக்ஷமடைய மாட்டான்.

இவ்விதம் சம்பு சொன்னவுடன் வேடன் வில்லையும் பாணத்தையும் எறிந்துவிட்டு சம்புவின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு என் "ஐயனே! காக்கவேண்டும், என்னைக் கடைத்தேறச் செய்ய வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டான். இந்தச் சமயத்தில் இவர்களிருக்குமிடத்திற் பெரிய சப்தஞ்செய்துகொண்டு பயங்கரமான ரூபமுள்ள ஓரரக்கன் வந்தான். அப்பொழுது சம்பு அவர் மனைவி வேடன் மூவரும் அவ்வரக்கனைக்கண்டு ஓடினார்கள். அரக்கனும் அவர்களைப் பிடிக்கச் சமீபத்தில் ஓடித் தொடர்ந்தான். அதைக்கண்ட சம்பு தன் பாத்திரத்திலிருக்கும் ஜலத்தை எடுத்து ஸ்ரீராமசந்திரரை ஸ்மரித்து அவ்வரக்கன் முகத்தில் இறைத்தார். சைத்திர மாசத்தில் இராமநாம மந்திரத்தால் ஜபம் செய்யப்பட்ட தீர்த்தம் முகத்தில் விழுந்தவுடன், ஜன்மாந்திரத்தின் நினைவு அவ்வரக்கனுக்கு உண்டாயிற்று. பிறகு அவ்வரக்கன் எட்டி நின்று சம்புவைப்பார்த்துத் தெரிவிக்கிறான் "ஏ முனி சிரேஷ்டரே! அகோரமாகிய இராக்ஷச சரீரத்திலிருந்து விடுபட்டேன். எனக்குச் சென்ற ஜன்ம நினைவுண்டாயிருக்கிறது. உம்மைச் சரணமடைந்தேன்" என்றான். இவ்வாச்சரியத்தைக்

கண்ட பிராம்மணன் உனக்கு எதனால் இராட்சஸ ஜன்மம் ஏற்பட்டது? அதன் உண்மையை இப்போது எனக்குக் கூறவேண்டும் என்றார். இராக்ஷஸன் கூறுகிறான். "நான் முன் ஜன்மத்தில் ஜனஸ்தானத்தில் பிராம்மணனாகவிருந்தேன். பிராம்மணனுக்குரிய கருமத்தைச் செய்யாமல் எப்போதும் பிரதிக்கிரகத்தைச் செய்து கொண்டு பாபியாகவும் தௌர்ப்பாக்கியனாகவும் துக்க முள்ளவனாகவு மிருந்தேன். இந்தச்சமயத்தில் சைத்திரமாசத்தில் பதிவிரதையாகிய என் பத்தினி என்னிடம் சொல்லாமல் இராம தீர்த்தம் சென்றாள். அவ்விதம் அவள் செல்கையில் வழி நடுவிற்கண்டு, அவளைப்பிடித்து "ஏ பாபிஷ்டி! என்னிடம் சொல்லாமல் எங்கே போகிறாய்" என்று கேட்டேன். அப்போது அவள் "சைத்திர ஸ்னானத்திற்குப் போகிறேன், வேறு கெட்ட காரியம் ஒன்றும் மில்லை" என்று மிகவும் பயத்துடன் தெரிவித்தாள். இந்த வார்த்தையைக் கேட்டதும் நான் அவளை அடித்து வீட்டிற்கு அனுப்பினேன். பிறகு கொஞ்சகாலம் சென்ற பின்பு நான் மரணமடைந்து யமதூதர்களால் யமலோகம் கொண்டுபோகப்பட்டு, யமசபைக்குச் சென்றேன். அங்கு சித்திரகுப்தன் என்னைப் பார்த்து அடிக்கடி திக்காரம் செய்து பய முறுத்தியதுமன்றி யமதருமராஜனை நோக்கி "தருமராஜா! இவன் பாபி; சைத்திர மாசம் ஸ்னானம் செய்வதைத் தடை செய்வதவன்; முதலாவது இராக்ஷஸ ஜன்மத்தை அடைந்து பிறகு நரகங்களை அநுபவிக்க வேண்டியவன்" என்று சொன்னான். இதைக் கேட்ட தருமராஜன் தன் படர்களைப் பார்த்து "ஏ படர்களே! இவனுக்கு ஜனசஞ்சாரமில்லாத வனத்தில் இராக்ஷஸ ஜன்மத்தைக் கொடுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். அவன் ஆக்ஞைப்படி தூதர்கள் எனக்கு இந்த ஜன்மத்தைக் கொடுத்து இங்குவிட்டு யமனிடம் சென்றார்கள் அது முதல் பசிதாகத்துடன் முப்பத்தையாயிரம் வருஷமாக இங்கு இருக்கிறேன். நான் என்ன புண்ணியம் செய்தேனோ இந்த வனத்தில் தங்களுடைய தரிசனம் இன்று கிடைத்தது. சாதுக்களின் சேர்க்கை நல்ல கதியைக் கொடுக்குமல்லவா? என்று அரக்கன் சொன்னான். சம்பு ஒரு கணநேரம் மனதில் யோசித்து அவன் முன் செய்த புண்ணியத்தைச் சொல்லுகிறார்:—

ஏ அரக்கனே! நீ முன் செய்த புண்ணியத்தைக் கேள்: மனுஷிய சஞ்சாரமில்லாத காட்டில் என் சேர்க்கை ஏற்பட்டதல்லவா? சைத்திர மாஸம் சுக்கிலபக்ஷம் ஏகாதசியில் பிறனுடைய வீட்டில் நிமந்திரணம் புசித்து, அங்குப்பெற்ற தாம்பூல தக்ஷிணைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு, மறுநாள் துவாதசியன்று காலையில் கௌதமீநதியில் ஸ்னானம் செய்தாய்; அப்பொழுது இடுப்பிலிருந்த தாம்பூல தக்ஷிணையை மறந்து நதிக்கரையில் வைத்துவிட்டுச் சென்றாய். அந்தத் தாம்பூலத்தையும் தக்ஷிணையையும் மற்றொரு பிராம்மணன் எடுத்துக்கொண்டான். அந்த விஷயம் நியாயமாம்.

சிரேஷ்டமான சைத்திர மாஸத்தில் தாம்பூலதானம் செய்ததால், இந்த வனத்தில் என்னுடைய சேர்க்கை உனக்குண்டாயிற்று. ஆகையால், சைத்திர மாசத்தில் இராக்ஷசர்களும் மானிடர்களும் தாம்பூல தானம் செய்யவேண்டும் என்றுகூறி அவ்வரக்கனுக்கும் கர்க்கசன் என்ற வேடனுக்கும் சைத்திர ஸ்நானத்தின் மஹிமையை உபதேசித்தார்.

பிறகு கர்க்கசனை நோக்கி "ஏ கர்க்கச! நீ என்னுடன் அயோத்தியாபுரிக்கு வந்து, சைத்திர மாசத்தில் சரயூநதியில் ஸ்னானம் செய்த உடனே இப்பாபத்திலிருந்து விடுபடுவாய்" என்று சொல்லி, பிறகு இராக்ஷசனைப் பார்த்து, "ஏ இராக்ஷச! ஒரு மாசம் வரையில் நீ இங்குதானே இரு; அரக்கர்கள் அயோத்தியில் பிரவேசிக்கக்கூடாது, ஆகையால் நான் சைத்திர மாசத்தில் ஸ்னானம் செய்து காஞ்சிமா நகரம் போக இவ்வழிவருவேன் அப்பொழுது உன்னைக் கடைத்தேறச் செய்கிறேன். நீ சந்தேகப்படவேண்டாம்; உண்மையாகச் சொல்கிறேன். 'நான் உன்னை உத்தாரணம் செய்யாமற் போவேனேயாயின், பிரும்மஹத்தி கோநிந்தை சந்நியாசி நிந்தை இவைகளால் ஏற்படும் தோஷத்திற்குப் பாத்திரவானாகிறேன். அன்றியும் மதுபானம் செய்தல் சொர்ணம் திருடுதல் முதலியவைகளால் உண்டாகும் பாபம் எனக்குண்டாகட்டும். பிராம்மண ஹத்தி, சைத்திரஸ்னானம் செய்யாதிருத்தல் முதலியவற்றாலுண்டாகும் தோஷம் எனக்கு உண்டாகட்டும்"—இம்மாதிரி சபதங்கள் செய்யும்போது, இராக்ஷசனுக்கு

சந்தோஷம் உண்டாயிற்று. வேடனுக்குச் சைத்திரஸ்னான மஹிமையைக் கூறியதால் அவ்வனத்தில் நான்கு பக்கத்திலும் பத்து யோசனை தூரத்திற்கு எங்கு கண்டாலும் இலை புஷ்பம் பழம் இவைகளுடன் மரங்கள் வளர்ந்து செழித்தன. சுகந்தமான காற்று வீசிற்று. நதிகளின் ஜலம் தெளிவாயிருந்தது. மயில் கூட்டங்கள் கூத்தாடிக் கொண்டிருந்தன. இப்படி ரமணீகரமாக விளங்கும் வனத்தைக் கண்ட கர்க்கசன் சம்புவால் கூறப்பட்ட சைத்திரஸ்னான மகிமையால் இவ்வனம் செழிப்படைந்த தென்பதைப் பற்றிச் சைத்திரமாசம் சிறந்ததென்றெண்ணினன். பிறகு சம்பு, அவர் பத்தினி, கர்க்கசன் மூவரும் அவ்வனத்தினின்றும் வெளிப் புறப்பட்டு மெள்ள மெள்ள அயோத்திக்குச் சமீபம் வந்து அங்குள்ள வனத்தைக் கண்டார்கள்.

இப்பொழுது பெரும் சப்தம் உண்டாயிற்று. முன் பக்கத்தில் யானையும் பின்பக்கத்தில் சிம்மமும் சப்தம் செய்துகொண்டு ஒன்றுக்கொன்று கலகம் செய்துகொண்டு சம்புவுக்குச் சமீபம் வந்தன. மார்க்கத்தைத் தடுத்து நிற்கும் யானையையும் சிங்கத்தையும் பார்த்து சம்பு கர்க்கசனை நோக்கிச் சொல்லுகிறார்: —

"ஏ கர்க்கச! சைத்திர ஸ்நானத்திற்குச் செல்லும்போது அடிக்கடி உண்டாகும் இடையூறுகளைப்பார். ஆனால் விக்கினங்கள் உண்டாகின்றனவென்று சைத்திர ஸ்நானத்தை நிறுத்தக்கூடாது. காசி யாத்திரை, விவாகம், கீதை, கயையாத்திரை, இராமத்தியானம், சைத்திர ஸ்நானம், மஹாதானம் இவைகளுக்கு விக்கினங்கள் ஏற்படும்" என்றார்.

இவ்விதம் சம்பு சொன்னவுடன் துஷ்ட மிருகங்களாகிய யானை சிங்கம் இவ்விரண்டும் சைத்திர மாதத்தில் இராமநாமத்தைக் கேட்டபடியால் ஜன்மாந்திர ஞாபகத்தைப்பெற்று மிகுந்த ஆச்சரியமடைந்து "காக்கவேண்டும்! காக்கவேண்டும்!!" என்ற பெருத்த சப்தத்துடன் சம்புவைச் சரணம் புகுந்தன. தம்மைச் சரணமடையாநின்ற யானையையும் சிங்கத்தையும் சம்புவானவர் பார்த்து "உங்களுக்கு எதனால் இந்தத் துஷ்டஜன்ம முண்டாயிற்று" என்று வினவினார்.

சிங்கம் கூறுகிறது.

முன் ஜன்மத்திற் சேதுவில் இராமேசுவர க்ஷேத்திரத்தில் நான் பிராம்மண தருமங்கள் எல்லாவற்றையும் நிந்தனை செய்து கொண்டும் பாஷாண்டர்கள்போல் பேசிக்கொண்டும் இருந்தேன்.

இப்படியிருக்கையில் ஒரு சமயம் சைத்திர மாதத்தில் ஸ்ரீராம தீர்த்தத்தில் வெகு ஜனங்கள் கூடியிருக்கும்போது புராணம் சொல்லுகிற ஓர் அந்தணனிடம் சைத்திர ஸ்நான மகிமையைக் கூறும் கதையைக் கேட்டு அடிக்கடி அந்த விஷயத்தைப்பற்றி நிந்தனை செய்தேன்.

அப்பொழுது அங்குத்தவம் செய்துகொண்டிருந்த ஒரு பிராமணர் நான் நிந்தனை செய்வதைக் கேட்டு "இப்பொழுதே நீ சிங்கமாகப் பிறந்து பெரிய ஆரண்யத்தில் திரியக்கடவாய்" என்று சபித்தார். பிறகு உடனே "எப்போது சைத்திர மாதத்தில் ஸ்ரீராமருடைய நாமம் உன்னால் கேட்கப்படுகிறதோ அப்பொழுது சாபவிமோசனம் ஏற்படும்" என்று விமோசனத்தையும் கூறினார். அந்தச் சாபத்தால் எல்லோருக்கும் பயமுண்டுபண்ணுகிற சிங்கமானேன். இந்தச் சைத்திரமாதத்தில் ஸ்ரீராம சப்தத்தைக் கேட்டேன். அந்தத் தபசி கூறியபடி எனக்கு முன் ஜென்மத்தின் ஞானம் உண்டாயிற்று. இச்சென்மத்தினின்று என்னைக்கரையேற்றவேண்டும்" என்றது.

இப்படிக்கூறிய சிம்மத்தின் சொல்லைக்கேட்டுச் சம்புவானவர் யானையைப் பார்த்து, "ஏ யானையே! நீ என்ன பாபங்களைச் செய்து இப்படியானாய்" என்று வினவினார்.

யானை கூறுகிறது.

ஏ அந்தணரே! நான் இராமநாதபுரத்தில், காவேரியின் வடகரையில் வாசம் செய்துகொண்டிருந்த பிராம்மணன். சாஸ்திரங்களில் பிரீதியில்லாமல் நிரம்பவும் கெட்ட நடவடிக்கை உள்ளவனாகவும் தனமதத்தால் நிறைந்தவனாகவும் தாஸிகளின்கூட்டுறவுள்ளவனாகவும் இருந்தேன். ஒரு சமயம் என் சிநேகிதன் சைத்திரமாசம் சுக்லபக்ஷம் நவமியில் சிராத்தத்திற்கு என்னை வரணம் செய்தான். நான் அன்றையதினம் போஜனமும் செய்தேன்.

அந்தப் பாபத்தினாலே தான் யானைஜன்ம முண்டாயிற்று. இதிற் சந்தேகமில்லை. மாதந்தோறும் நவமியில் எப்போதும் போஜனம் செய்யக் கூடாதென்பதையும் அறிவேன். இப்போது எல்லோருடைய துக்கத்தையும் போக்கும் தங்களுடைய சேர்க்கை எனக்கு எந்தப் புண்ணியத்தால் உண்டாயிற்று என்பதை நானறியேன். தாங்கள் அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது.

சம்பு, யானை செய்த புண்ணியத்தைச் சற்றுத் தியானத்திலிருந்து தெரிந்துகொண்டு யானையை நோக்கிச் சொல்லுகிறார்.—

ஏ யானையே! என்னுடைய சேர்க்கை ஏற்பட்டதற்குள்ள முன் ஜன்மத்தின் புண்ணியத்தைக் கூறுகிறேன் கேள். உன்னை நான் கரையேற்றுகிறேன். நீ கொஞ்சமேனும் சந்தேகமடைய வேண்டாம். காவேரிக் கரையில் விளங்கும் இரம்மியமான இராமநாத புரத்தில் சைத்திரமாதம் நவமீ திதியில் இராம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இராமாயண கதையைக் கேட்டாய்; இராமேசுவரரையும் தரிசனம் செய்தாய்; அந்தப் புண்ணியத்தால் இந்த அரண்யத்தில் என்னுடைய சேர்க்கை உண்டாயிற்று. ஏ சிங்கமே யானையே! நீங்களிருவரும் கேளுங்கள்—

சைத்திர மாஸத்தில் அயோத்தியில் இராம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிறகு நான் வரும்போது உங்களை உத்தாரணம் செய்கிறேன். இவ்விஷத்தில் சந்தேகம் வேண்டாம். உங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாவதற்கு நான்செய்யும் சபதங்களைக் கூறுகிறேன் கேளுங்கள். நான் உங்களை உபேக்ஷித்துச் செல்வேனாயின் "பரஸ்திரீ கமனம் செய்வதாலும் மித்திரனை வதஞ்செய்வதாலு முண்டாகும் பாபமும், பிராம்மணன் தனத்தை அபகரிப்பதாலும் தாயை நிந்தனை செய்வதாலு முண்டாகும் தோஷமும் என்னை யடையட்டும்" என்று இவ்விதம் கூறி அந்தச் சம்புவானவர் தமது பத்தினியுடனும் கர்க்கசன் என்ற வேடனுடனும் புறப்பட்டு மெள்ள மெள்ள வழியில வரும்போது மற்றொரு மார்க்கமாக வரும் கார்ப்படிகனை (கிழிந்த துணி உடுப்போனைக்) கண்டார். கங்கைசென்று ஸ்நானம் செய்து கங்கா

தீர்த்தம் எடுத்துக்கொண்டு இராமலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதற்காகப் போகிற கார்ப்படிகனைச் சம்பு நமஸ்கரித்து வணக்கத்துடன், "ஏ பிராம்மணரே! எங்கிருந்து எங்கே போகிறீர்?" என்றார்.

கார்ப்படிகன் கூறுகிறான்.

பிராம்மண சிரேஷ்டரே! நான் பிரயாகையிலிருந்து அயோத்திக்குச் சைத்திர மாஸ ஸ்னானத்தை உத்தேசித்துச் செல்லுகிறேன். உம்முடைய வரலாறு யாதென்றான்.

சம்பு:—சைத்திர மாத ஸ்னானத்திற்காக சிவகாஞ்சியிலிருந்து அயோத்திக்குப் போகிறேன்.

கார்ப்படிகன்:—ஏ பிராம்மணா! சிவகாஞ்சியில் சம்புவென்ற பிராம்மணர் ஒருவருளர்; அவரைத் தெரியுமா?

சம்பு:—ஏ பிராம்மணா! சிவகாஞ்சியில் சம்புவென்று பெயர் கொண்டவர் அநேகருண்டு; நீர் யாரைக் கேட்கிறீர்? அவர் கோத்திரத்தையும் உபநாமத்தையும் சொல்லும் என்றார்.

கார்ப்படிகன்:—பாரத்துவாஜ குலத்திற் பிறந்தவர்; சக்ரகோபி என்று மற்றொரு நாமமுடையவர்; மஹாதேவருக்குக் குமாரர்; சம்புவென்ற பெயர் கொண்டவர்; வேதசாஸ்திரங்களை அறிந்துகொண்டவர்; இவரைத் தெரியுமா சொல்லும்.

சம்பு:—எதற்காக நீர் கேட்கிறீர்; அதை விஸ்தாரமாகச் சொல்லும். சந்தேகப்படவேண்டாம்.

கார்ப்படிகன்:—அந்தணரே! நான் கங்காநதி சமுத்திர சங்கமமாகுமிடத்தில் ஸ்னானம் செய்யப்போகும்போது, ஸீதா குண்டத்திற்குச் சமீபத்தில், கைகட தேசத்தில் வழி நடுவில் பயங்கரமான உருவத்துடன் ஒரு பிசாசைக் கண்டேன்.

அப்பிசாசு என்னைக் கொல்வதற்குச் சமீபத்தில் வந்தவுடன் நான் பயத்தால் நடு நடுங்கித் தீர்க்கமாக இராமநாம கீர்த்தனம் செய்தேன். இராம கீர்த்தனம் செய்தவுடன் என்னருகில் வந்த பிசாசு வெகு தூரம் ஓடி நின்று, இராமநாம கீர்த்தனத்தைக்

கேட்டுக்கொண்டிருந்தது. பிறகு அப்பிசாசிற்குச் சென்ற ஜன்ம ஞாபகம் உண்டாகி என்னை நோக்கி, "என்னைக்காக்கவேண்டும்" என்று அடிக்கடி சொல்லிற்று.

பிறகு நான் உனக்கு எதனால் பிசாசு ஜன்மம் ஏற்பட்டது? அதை விரைவாக எனக்குச் சொல்லென்று கேட்டேன். பிசாசு, மறுபடி என்னை நோக்கி "நான் காஞ்சீபுரியில் துண்டி என்ற பெயருள்ள பிராமணன். நான் ஒரு சமயமாவது அன்னதானம் செய்ததில்லை. ஆகையால் எனக்குப் பிசாசு ஜன்மம் வந்திருக்கிறது" என்று சொல்லிற்று. இதைக் கேட்டு "இனி உனக்கு எதனால் பிசாசு ஜன்மம் ஒழியப்போகிறது" என்று நான் வினவினேன். அதற்கு அப்பிசாசு "என் குமாரன் சைத்திர மாஸம் அமாவாசையில் என்னை உத்தேசித்து அன்னதானம் செய்வானேயாயின் எனக்கு நல்ல கதி உண்டாகும் சந்தேகமில்லை" என்றது. இதைக் கேட்டதும் நான் "உன் குமாரன் எங்கே இருக்கிறான், அவன் பெயர் என்ன, சொல்" என்று கேட்டேன்.

பிறகு அந்தப் பிசாசு, பாரத்துவாஜ குலம் முதலியவற்றை எனக்கெடுத்துக் கூறிற்று. இவ் விஷயம் உமக்குக் கூறினேன்.

நான் அந்தப் பிசாசினிடம் கருணையுடன் தெரிவித்ததை உமக்குச் சொல்லுகிறேன் கேளும்.—

ஏ" ஏ பிசாசமே! கங்கையின் ஜலத்தை எடுத்துக்கொண்டு இராமலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்யப்போகிறேன். அப்பொழுது காஞ்சீபுரிக்குப்போவேன். அங்கு உன் புத்திரனுக்கு இந்த வரலாற்றை அறிவிக்கிறேன்" என்றேன்.

இதைக்கேட்ட பிசாசு மிகவும் மகிழ்ந்து என்னை ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரித்து "என் குமாரனிடம் அவசியம் சொல்லவேண்டும்; மார்க்கமத்தியில் சந்தித்ததையும் நான் சொன்னதையும் விஸ்தாரமாகக் கூறவேண்டும்" என்று பிரார்த்தித்தது; "மற்றொரு விஷயம் கூறுகிறேன். இதையும் என் குமாரனுக்குச் சொல்லவேண்டும்—

சைத்திர மாதம் அமாவாசையில் அன்னதானஞ் செய்தல் சிறந்ததென்று சொர்க்கலோகத்தில் கூறப்படுகிறது. ஆகையால் என்னுத்தேசமாக அந்தப் புண்ணிய காலத்தில் அன்னதானம் செய்யவேண்டும் என்று கூறு. இந்த விஷயங்களை என் குமாரனுக்கு ஞாபகமாகச் சொல்லாவிடில் உன்னுடைய யாத்திரையின் பயன்யாவும் வீணாகும்" என்று சாபமுமிட்டது.

அந்தப் பிசாசுக்குச் சமாதானம் சொல்லி விட்டுச் சைத்திர ஸ்நானம் செய்ய அயோத்திக்குப் புறப்பட்டேன். நல்ல பலனைக் கொடுக்கும் சைத்திர ஸ்நானத்தைச் செய்து திரும்பி வரும்போது காஞ்சீபுரி சென்று அந்தச் சம்புவென்பவருக்குச் சொல்லப் போகிறேன். அதனாலே தான் உம்மைச் சம்புவென்ற அந்தணனுடைய கோத்திரம் முதலியவைகளைப் பற்றிக் கேட்டேன். உமக்குத் தெரிந்தால் சொல்லும்-என்று கூறினான்

இவ்விதம் கார்ப்படிகன் சொன்னதும் சம்புவானவர் ஆ! நம் தந்தையின் வரலாறு இவ்விதமாயிற்றுவென்று எண்ணி மூர்ச்சையடைந்தார். அருகேயிருந்த கர்க்கசன் அவரைச் சமாதானம் செய்து மூர்ச்சை தெளிவித்தான். பிறகு சம்பு கார்ப்படிகனைப் பார்த்து.—

ஏ கார்ப்படிக சிரேஷ்ட! என்னைவிட அதமனான மானிடன் வேறு ஒருவனுமில்லை. நீர் கேட்ட சம்புவென்பவன் நான்தான். சந்தேகமில்லை. புத்திரனாகப் பிறந்தும் தந்தைக்கு மோட்சமளிக்கும் அன்னதான முதலியவைகளைச் செய்யாத என்னைச் சுடவேண்டும்! சுடவேண்டும்!!.

என் ஜன்மம் வீணாயிற்று உம்முடைய வார்த்தைப்படி சைத்திர மாதத்தில் பிதாவை உத்தேசித்து அன்னதானம் செய்கிறேன்—எனச் சொல்லிப் புறப்பட்டு இரம்மியமான அயோத்தியைக் கண்டதும் சம்பு அவர் மனைவி, கார்ப்படிகன், கர்க்கசன் என்ற வேடன் இந்நால்வரும் நமஸ்காரம் செய்தார்கள்.

சம்பு கூறுகிறார்.

பிறகு சம்பு ஏ கர்க்கசனென்னும் வேடனே! சிலாக்கியமான அயோத்தியைப்பார். ஸ்நானம் செய்வதற்குக் கோடிக்

கணக்காக ஜனங்கள் கூடி யிருக்கின்றார்கள். இந்த ஜனங்களின் சப்தம் மேக சப்தம்போல் காதிலே படுகிறது பார். இன்னும் அனேகவித துவஜங்களும் தோரணைகளும் இந்திரன் வில்லைப் போலக் காணப்படுகின்றன. அனேகவித வாத்தியங்கள் சப்திக்கின்றன. அக்னி ஹோத்திரம் செய்வதாலுண்டாகும் புகை ஆகாய மார்க்கத்தை வியாபித்திருப்பதையும் பார். கைலாய மலைக்குச் சமமான உப்பரிகைகளையுங் காண். புதிதான வீதிகளைப் பார். மண்டலமாக வமைந்த அகழிகளாகிய அரைநூன் மாலையை உடையதும், உயர்ந்த உப்பரிகைகளுள்ளதும் ஜ்வலிக்கும் பதாகைகள் நிறைந்ததும் ஆகாயத்தை அளாவிய சிலாக்கியமான உப்பரிகைகளிலிருக்கும் சொர்ண கலசங்களால் பிரகாசிக்கப்பெற்றதும் சிறந்ததுமான அயோத்தியைப் பார். பரிசுத்தமான இந்த க்ஷேத்திரத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் இம்மூன்று தேவர்களும் முனிவர்களும் மறைந்து வாசம் செய்கிறார்கள். ஜனங்களெல்லோரும் தங்கள் தருமங்களைத் தவறாமல் நடத்திவருகிறார்கள். குபேரனிடம் பொறாமைகொண்டு தனங்களைச் சம்பாதிக்கின்றார்கள். இவ்வயோத்தியில் வீடு தோறும் ஆனந்தம் பெருகுகின்றது. அயோத்தியிலிருக்கும் அந்தணர்களுடைய பாதங்களை இந்திரன் முதலியவர்கள் அலம்புகிறார்கள். அந்த அந்தணர்களை வணங்காதவர் யாவர்?

உதாரத்தன்மையிற் கற்பகம் போன்றவர்களும் காம்பீரியத்தில் சமுத்திரம்போன்றவர்களும் பொறுமையில் பூமிக்குச் சமமானவர்களும் வேதங்கள் உருக்கொண்டு தனச்சஞ்சரிப்பவர்களும் முதலைகளுடன் கூடின பெருஞ் சமுத்திரத்தைப்பானம் செய்த அகஸ்திய முனிவருக்குச் சமானமானவர்களும் விளங்குகிற இந்த அயோத்தியா புரியிலுள்ள பிராம்மணர்கள், அரசர்களெல்லாராலும் நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள் இங்கு நான்கு வர்ணத்தவர்களு மிருக்கிறார்கள் சிறுகிருமிகள் புழுக்கள் பட்சிகள் இவைகளுக்கும் ஞானம் சமாதி இவைகளின்றி மோட்சமார்க்கம் சுலபமாகக்கிடைக்கும் இகத்தில் போகத்தையும் பரத்தில் மோட்சத்தையும் அடையச் சாதகமான சரயூநதியின் தீர்த்தம் பாபமாகிற

யானைகளை ஒழிப்பதற்கு அங்குசங்கள் போன்ற அலைகளைக் கொண்டிருக்கிறது.

ஸ்படிகமயமான படிக்கட்டில் உட்கார்ந்திருக்கும் முனிவர்களால் கொண்டாடப்படுகிற சரயூநதி உத்தரீயம் தரித்தமாதைப் போல் விளங்குவதைக் காண். இந்திர நீலமயமானதும் உன்னதமான தோரணமுள்ளதுமான இராமருடைய திவ்யகிருகத்தைப் பார். காச்மீர தேசத்துக்கற்களால் ஏற்பட்ட சுவர்களுடன்கூடின பெரிய ஸீதையின் கிருகத்தைப் பார்.

இராமதீர்த்தத்திற்குச் சமீபத்தில் அனேக ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும் சொர்ணத்தூண்கள் நாட்டப்பட்டதும் ஸ்படிகக் கற்களால் அமைக்கப் பட்டதும் சித்திர வர்ணமுள்ளதுமான இந்தக்கிருகம் ஸீதாராமர்கள் சரயூநதிக்கரையில் வசிப்பதன்பொருட்டு ஏற்பட்டது. உருக்கின தங்கத்தாலும் இரத்தினத்தாலும் அமைந்த கும்பங்கள் பவள வைடூரியங்களிழைத்த சொர்ணமயமான வீதிகள் இவைகளுடன் கூடிய இந்தக் கிருகம் இலக்ஷ்மணனுடையது.

விசுவகருமாவின் வேலைத்திறம் யாவும் அடங்கியஇந்தக்கிருகம் பரதனுடையது. அவ்விடமே இரத்தினச் சுவர்களால் பிரகாசத்துடன் மங்களத்தைக் கொடுக்கக்கூடிய படியமைக்கப்பட்ட இந்தக் கிருகம் சத்ருக்னனுடையது. ஸ்படிகச்சுவருடன் கூடியதும் மிகவும் உயர்ந்ததும் சொர்ணரேகைகளுடன் கூடியதும் மிகுந்த பிரகாசமுள்ளதுமான இந்தக் கிருகம் அநுமானைச் சேர்ந்தது. முத்துக்களிழைக்கப்பெற்றுப் பிரகாசியாநின்ற சக்ர அடையாளமுள்ளதும் கருடனைத் துவஜமாகக் கொண்டதும் அழகுள்ளதுமான பாலசூரியன் போன்ற இந்தக் கும்பம் குசன் கிருகத்தைச் சேர்ந்தது. அனேக ரத்தினங்களால் ஜ்வலிக்கும் இந்தக் கிருகம் லவனுடையது. யோகிகளின் மனதையும் மோகப்படுத்தும் அநேக சித்திரங்களுடன் கூடியதும் இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும் மிகுந்த காந்தியை யுடையதும் இரத்தினமயமான கிருகங்கள் உள்ளதும் சிறந்ததுமான அயோத்தியைப் பார். விலை மதிக்கத்தகாத இரத்தினங்களால் அலங்கரிக்கப்பெற்ற

தும் ஆகாயமார்க்கத்தை அளாவியிருப்பதும் சொர்ணகும்பங்களி ருந்து பிரகாசிப்பதும் சரயூநதியின் பாங்கர் விளங்குவதுமாகிய இந்தக் கிருகம் சித்திரகேதுவைச் சேர்ந்தது. திவ்வியமான பவனங்களால் அமைந்த கதவுகளுள்ள இந்தக் கிருகம் அங்கதனுடையது. கருடனுடைய வாஸ்து லக்ஷணம் உள்ள வீதியுடன் சோபிப்பதும் கண்களுக்கு ஆனந்தத்தை விளைக்கக்கூடியதுமான இந்தக் கிருகம் புஷ்கரனுடையது. சொர்ணலங்கார மணையைப் பெற்ற திவ்விய பூமியை யுடையதும் பிரகாசிக்கும் பதாகைகளுடன் கூடியதும் தேவர்களாலும் நமஸ்கரிக்கத் தக்கதும் சிரேஷ்டமானதும் மனோக்ஞமானதும் உயர்ந்ததுமான இந்தக் கிருகம் வீரனை தக்ஷனுடையது.

நவரத்தினங்களால் அமைக்கப்பட்ட இந்தச்சிம்மம் மூன்று பாதங்களைக் காட்டுவதால் "நான் மூன்று உலகங்களையும் ஜயித்தேன்; நான்காவது உலகத்தைக் காணேன்" என்பதை விளக்குவதுபோலக் காணப்படுகின்றது. மேலும் இதோ காணும் இந்த இரத்தின சிம்மம் பாபக்கூட்டமாகிற யானைகளின் மத்தகத்தைப் பிளக்கப் பாதத்தைத் தூக்கிக்கொண்டிருக்கிறதோ என்றாகிக்கும்படி விளங்குகிறது பார். இரத்தினச் சுவர்களுடன் கூடினதும் மிகவும் உயர்ந்ததுமான இந்தக் கிருகம் சுபாகுவுடையது.

இரத்தினம் பவளம் ஸ்படிகம் இந்திரநீலம் காச்மீரம் இவைகளால் ஏற்பட்ட பிரகாசமுள்ள இந்தக் கிருகம் யூபகேதுவைச் சேர்ந்தது.

கல்ஹாரம் கருநெய்தல் செந்தாமரை நூறு இதழ்களுள்ள புஷ்பங்கள் இவைகளால் நிறைந்ததும் பாபத்தைப் போக்குவதுமான இராமதீர்த்தத்தைப் பார். இந்தப் பிரதேசம் இராமதீர்த்தத்தால் கிரீஷ்மகாலத்தின் சந்தாபத்தை நிவிருத்தி செய்து இங்கு அதிகமாக அமைத்திருக்கும் குருவிந்தாமணிகளை மாதுளைவிரை யென்று கிளிகள் யோசிக்கும்படி விளங்குகின்றது. வேடனாகிய கர்க்கச! இரம்மியமானதும் பதாகைகளால் விளங்குவதும் அமராபதியைப்போ லுள்ளதும் சுபத்தைக் கொடுக்கக் கூடியதும் முக்திபுரியுமாகிய இந்த அயோத்தியைக் காண்.

ராமரைப்பாக்க வந்திருக்கும் ஜனங்கள் சூரியனைப்போல் விளங்குகிறார்கள். இந்த ஆச்சரியத்தைப் பார்.

நரசிம்மர் கூறுகிறார்.

இவ்விதம் பேசிக்கொண்டு கர்க்கசன் என்ற வேடனுடனும் தம் பத்னியுடனும் கார்ப்படிகனுடனும் சம்புவானவர் அயோத்திக்கு வந்தார். பிறகு இராமதீர்த்தம் சென்று க்ஷௌரம் முதலியவிதிகளைமுடித்துக்கொண்டே ஒருநாள் உபவாசமிருந்து இராமதீர்த்தத்தில் சிராத்தம் செய்தார். சைத்திரமாஸம் அமாவாசை வந்தவுடன் தமது பிதா மோக்ஷமடைவதன் பொருட்டு விதிப்படி அன்னதானம் செய்தார். சைத்திரமாஸம் அமாவாசையில் வழிப்போக்கன் வாக்கியப்படி அன்னதானம் செய்ததால் சம்புவின் தந்தை பிசாசு ஜன்மத்திலிருந்து விடுபட்டு தேவலோகம் சென்றான்.

பிறகு சம்பு அயோத்தியில் சைத்திர மாஸத்தில் ஸ்நானம் செய்து உத்தியா பனத்தையும் கிரமப்படி நடத்தி விரதத்தை முடித்தார். கர்க்கசன் என்ற வேடனும் சைத்திர ஸ்நானம் செய்து மலைபோன்ற பாபக்குவியலைத் தொலைத்து அயோத்தியின் மத்தியில் நல்ல நடத்தையுடன் வெகுகாலம் வாசஞ் செய்தான்; பிறகு சிலகாலஞ் சென்ற பின்பு ஸ்ரீராமரைத் தியானஞ் செய்யும்போதே மரணமடைந்தான்; அயோத்தியில் மரணமடைந்த மகிமையால் அவன் வைகுண்டம் சென்றான்.

சம்புவென்பவரும் சைத்திரஸ்னானம் செய்து ஸ்ரீராம சந்திரரையும் அயோத்தியையும் நமஸ்காரம் செய்து பத்தினியுடனும் கார்ப்படிகனுடனும் காஞ்சீபட்டணம் செல்லப் புறப்பட்டு யானையும் சிம்மமுமிருக்கும் இடத்தை நோக்கி வந்து சைத்திர மாசத்தில் இரண்டு நாள் ஸ்னானம் செய்த புண்ணியத்தை இரண்டுக்கும் கொடுத்து அவைகளின் கைகளில் ஜலம் விட்டார். உடனே அவைகள் மோக்ஷஸ்தானமடைய ஆகாயத்திலிருந்து விமானம் வர அந்த விமானத்தின் மீதேறி இரண்டும் விஷ்ணுலோகம் சென்றன.

பிறகுசம்பு தமது பத்தினியுடன் தாம் முந்திச் சபதம்செய்து கொடுத்து, அரண்ணியத்தில் இருக்கும்படி செய்துவந்த அரக்கனிடம் வந்து பத்தினியை நோக்கிச் சொல்லுகிறார்—

காசி யென்னும் பெயர் கொண்டவளே! நீ சரயூநதியில் சீதாள கௌரீஸ்னானம் செய்ததில் ஒருநாள் ஸ்னான பலனை என் சொற்படி இவ்வரக்கன் கையில் கொடுத்து இவனைக்கரையேற்று என்றார். இவ்விதம் கூறியதும் தாமரைப்பூப்போன்ற நேத்திர முடைய காசி என்ற அந்தண ஸ்திரீ தன்பதி சொன்னபடி தன் புண்ணியத்தை அரக்கனுக்குக் கொடுத்தாள். பிறகு அவ்வரக்கன் அழுக்கடைந்த அந்தச் சரீரமொழிந்து திவ்விய சரீரம் பெற்று விமானமேறிக் காசியுடன் கூடின சம்புவை நமஸ்கரித்து திவ்விய வஸ்திரங்களுடன் விஷ்ணுலோகம் சென்றான்.

சம்புவும் காசியுடன் சைத்திர மாசத்தின் மகிமையைக் கொண்டாடி அங்குள்ள ஜனங்களுக்கு யாவற்றையும் தெரிவித்துக்கொண்டு காஞ்சீநகரத்துக்குச் சென்றான்.

ஏ பிசாசமே! நீங்கள் கேட்டபடி நான் கதையை விஸ்தாரமாகத் தெரியப்படுத்தினேன்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் நரசிம்மர் என்ற அந்தணன் கதையைச் சொல்லி இருவர் கையிலும் ஜலம் விட்டு சைத்திர மாஸத்தில் இரண்டு நாள் ஸ்னானம் செய்த பலனைத் தானம்செய்து பிறகு பத்தினியை நோக்கி "அழகுள்ளவளே! சந்திரனுக்குச் சமமான முகமுள்ளவளே! பிரியமுள்ளவளே! நீ ஸீதாதேவியால் செய்யப்பட்ட சீதாள கௌரீ தீர்த்த ஸ்னான பலனில் ஒருநாள் ஸ்னான பலனை இப்பெண்பிசாசு கடைத்தேறுவதன் பொருட்டு கொடு. மனதில் வேறு ஒன்றும் ஆலோசனை செய்யாதே" என்று கூறினார். இவ்விதம் சொன்ன பதியின் வசனத்தைக்கேட்டு பங்கஜநேத்திர முடையவளாகிய இலட்சுமி என்ற என் தாயார் தன் புண்ணியத்தை அப்பெண் பிசாசுக்குக் கொடுத்தாள். உடனேமூன்று பிசாசுகளுக்கும் பிசாசு ஜன்மமொழிந்தது. முன்

அவைகட் கேற்பட்டிருந்த உருவம் ஏற்பட்டது. அவர்கள், பத்தினியுடன் கூடின நரசிம்மரைப் பன்முறைவணங்கி, ஸ்தோத்திரஞ் செய்து அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு தங்கள் குருவின் ஆச்சிரமம் சென்றார்கள்.

குரு இவர்களைக்கண்டு மிகுந்த சந்தோஷமடைந்து சீடர்களுக்குள் மூத்தவனுக்கு அந்தப் பெண்ணையும் மற்றொரு சீடனுக்கு மற்றொரு பெண்ணையும் தானம் செய்தார். பிறகு அவ்விருவரும் பரமசந்தோஷ மடைந்து பத்தினிகளுடன் தங்கள் தங்கள் தந்தையின் இருப்பிடம் சென்றார்கள்.

அவர்களின் தாய்தந்தையரும் புத்திரர்கள் தத்தம் மனைவிமாருடன் வந்ததைப் பார்த்துச் சந்தோஷ மடைந்தார்கள்.

நரசிம்மரும் தம் பத்தினியுடன் அப்ஜக மென்னும் க்ஷேத்திரத்திற்கு வந்தார். அவர்கள் சைத்திர ஸ்நானஞ் செய்த மகிமையால் இராமதாஸனென்ற பெயருள்ள நான் பிறந்தேன்.

என் தாய் தந்தையர் வெகு காலஞ் சென்ற பின்பு விஷ்ணுலோக மடைந்தார்கள். ஏ சீடனே! இவ்விதம் சைத்திரமாஸ ஸ்நானத்தின் மகிமையை முனிவர்கள் தேவர்கள் சித்தர்கள் கந்தர்வர்கள் எல்லோரும் விளக்கியிருக்கிறார்கள். ஆகையால் மானிடர்கள் அவசியம் சைத்திரஸ்நானம் செய்து ஸ்ரீராமசந்திரரைப் பூஜிக்கவேண்டும். நீ கேட்டபடியும் நான் உனக்கு விஸ்தாரமாகக் கூறினேன்.

உனக்கு இன்னும் ஏதாவது கேட்க விருப்ப மிருந்தால் சொல் நான் கூறுகிறேன்—என்றார்.

சைத்திரஸ்நானத்தின் மகிமையை விளக்கும்

11-வது சருக்கம்.

முற்றிற்று.

12-வது சருக்கம்

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! ஸ்ரீராமச்சந்திரருடைய மற்றொரு சரித்திரத்தைச் சொல்லவேண்டும். தங்களிடம் ஓயாமல் கதை கேட்டுக்கொண்டிருந்தாலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. இன்னமும் கேட்க ஆசைமேலிடுகிறது.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

ஏ சிடனே! நீ நன்றாக வினவினாய்; சாவதான மனதுடன் கேள்.

ஒரு சமயம் ஸ்ரீராமசந்திரன் குதிரைமீது ஏறிக்கொண்டு புத்திரர்கள் பந்துக்கள் இவர்களுடன் வனம் சென்றார்.

அங்கு இரகுநந்தனர் சிறந்த மிருக மொன்றைக் கண்டு அதைக்கொல்ல பாணத்தை இழுத்தார். அது கண்டு ஓடிய அம் மிருகத்தைத் தொடர்ந்து வேகமாகச் சென்றார்.

ஸ்ரீராமர் அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வனமாகச் சென்று பிறகு தனியே குதிரையின் மீதேறி அடர்ந்த காட்டில் பிரவேசித்தார். இலக்ஷ்மணர் முதலியவர்கள் இராமருக்குப் பிறகு வெகுதூரத்திற்கப்பால் சென்றார்கள். இராமச்சந்திரர் தமது பாணத்தால் மிருகத்தை அடித்து அதை எடுத்துக்கொண்டு ஜல மில்லாத பிரதேசத்தில் பசிதாகத்துடன் ஒரு மரத்தடியில் ஒரு க்ஷணநேரம் நின்றார். அச்சமயத்தில் ஒரு வேடஸ்திரீ சந்தோஷத்துடன் இராமரைப்பார்த்து அவரை அரசனென்றறிந்து வணங்கி அவருக்கு முன்சென்று வணக்கமாகநின்றாள் இராமபிரான் அந்த ஸ்திரீயைப்பார்த்து "நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேள். இலக்ஷ்மணர் முதலியவர்கள் வெகுதூரத்திற் கப்பால் வருகிறார்கள்; நான் பசிதாகத்தால் சிரமமடைந்தவனாக இருக்கிறேன் எனக்குச் சுகமுண்டாகும்படி கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொள்' என்றார்: வேடஸ்திரீ இந்த வசனத்தைக்கேட்டு "ஐயா சமீபத்தில் ஒரு தடாகத்தின் கரையில் துர்க்காதேவி சான்னித்யத்துடனிருக்கிறாள். இன்று செவ்வாய்க்கிழமை யாதலால் அங்கு பூஜை

செய்ய அனேகம் ஸ்திரீகள் வந்திருக்கிறார்கள். இப்போது என்னுடன் அங்கு வந்தால், ஒரு க்ஷணத்தில் விசித்திரமான அன்னமளித்துத் திருப்தி செய்விக்கிறேன்," என்றாள். இதைக்கேட்ட இராகவன் "வேடஸ்திரீயே! நான் இங்கேயே இருக்கிறேன். குசன் லவன் இலக்ஷ்மணர் முதலியவர்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ மட்டிலும் அங்குச் சென்று துர்க்கையிடத்திலும் ஸ்திரீகளிடத்திலும் தெரிவித்து ஏற்பாடு செய்" என்று கேட்டுக் கொண்டார். இவ்வசனம் கேட்டதும் வேடஸ்திரீ விரைவாக அந்த இடம் சென்று அங்கிருந்த ஸ்திரீகளைப் பார்த்து, "ஏ ஸ்திரீகளே! தாமரைப் பூப்போன்ற கண்ணுள்ள இராமர் வேட்டையாடவந்து பசியுடன் இதோ சமீபத்திலுள்ள மரத்தடியில் இருக்கிறார். உங்களிடம் தமது வரவைத் தெரியப்படுத்துவதற்கு என்னை அனுப்பினார். நான் அவரிடம் செல்கிறேன்" என்று தெரிவித்து விட்டுத் திரும்பிவிட்டாள். வேடஸ்திரீயின் சொல்லைக் கேட்ட அந்த ஸ்திரீகள் சந்தோஷமடைந்து பின்வருமாறு யோசித்தார்கள். ஸ்ரீராமச் சந்திரருக்குப் போஜனமளித்துத் திருப்தி செய்விக்கப் போகிறபடியால் இன்றையதினம் வெகு சிலாக்கியமானநாள் முதலாவது துர்க்கையைப் பூஜித்து நைவேத்தியம் செய்து பிறகு ஸ்ரீராமருக்குக் கொடுத்துப் பின்பு நாம் போஜனஞ் செய்வோம்" என்று இவ்விதம் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். சொர்ணமயமான ஆபரணங்களை யணிந்தவர்களும் மஞ்சள் பட்டுவஸ்திரம் தரித்தவர்களும் அழகான முகமுள்ளவர்களும் மான்விழிபோன்ற நேத்திர முள்ளவர்களும் அழகுள்ளவர்களுமான பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஸ்திரீகள் நைவேத்திய பாத்திரத்தை எடுத்துக்கொண்டு துர்க்கையின் சமீபம் சென்றார்கள். இச்சமயம் பார்த்து பருவதராஜ குமாரியாகிய துர்க்கை தன்னாலயத்திற்கு நான்கு பக்கத்திலுமுள்ள கதவுகளை மூடிக்கொண்டாள். அந்த ஸ்திரீகள் ஆலயத்திற்கு வந்து கதவு மூடியிருப்பதைப் பார்த்து, மற்ற மூன்று பக்கத்துக்கும் சென்று பார்த்தார்கள். எப்பக்கத்துக் கதவும் தாளிட்டிருக்கக் கண்டு தயங்கினார்கள்; ஆச்சர்யமடைந்து அங்கேயே நின்றார்கள். அப்போது தேவாலயத்திற்குள்ளிருந்து துர்க்காதேவி பின்வருமாறு கூறுகிறாள்.—

நான்தான், ஸீதை; பரமேசுவரர்தாம் இராமர். எனக்கும் ஸீதைக்கும் இராமருக்கும் பரமேசுவரருக்கும் பேதத்தை எவர்கள் எண்ணுகிறார்களோ, அவர்கள் கோடிகற்பம் வரையில் ரௌரவநரகத்தில் வீழ்ந்து வருந்துவார்கள். ஏ ஸ்திரீகளே! நீங்கள் உலகங்களுக்குப்பிரபுவும் என்னுடைய நாதருமாகிய இராமரிடம் சென்று சிரேஷ்டமான அன்னம் கொடுத்து சந்தோஷப் படுத்துங்கள்; பிறகு அந்த சேஷத்தை நான் புசித்துச் சந்தோஷிக்கிறேன்; பசியுடனிருக்கும் இரகு புங்கவரிடம் சீக்கிரமாகச் செல்லுங்கள்—என்றுரைத்தாள். இவ்விதம் துர்க்கை கூறியதைக் கேட்ட அந்த ஸ்திரீகள் ஆச்சரியமடைந்து வேடஸ்திரீயின் அடிச்சுவட்டைப் பின்பற்றி விரைந்து அவ்வேடஸ்திரீயைக் கண்டார்கள். வேடஸ்திரீ அவர்களுக்கு இராமரைக் காண்பித்தாள். அந்தஸ்திரீகள் தாமரைப் பூப்போன்ற தங்கள் நேத்திரங்களால் இரகுகுல திலகனைக்கண்டு வணங்கித் தாங்கள் கொண்டுவந்த திவ்யான்னங்களை அவர் முன்னிலை வைத்து சொர்ண பாத்திரங்களில் தீர்த்தத்தையும் வைத்து அங்கேயே நின்றுகொண்டு பின் வருமாறு பிரார்த்தனை செய்தார்கள்—ஏ இராம! நாங்களெல்லோரும் உம்மால் கடைத்தேறினோம். தாங்கள் இந்த வனத்தில் மிகுந்த ஆதரவுடன் வேடஸ்திரீயை எங்களிடம் அனுப்பியதற்கு மிகவும் சந்தோஷமடைந்தோம். துர்க்காதேவியும் தங்களுக்குத் திருப்தி செய்விக்கும்பொருட்டு எங்களை அனுப்பினாள். இவைகளை அங்கீகாரம் செய்துகொண்டு திருப்தியடைய வேண்டும்" என்றார்கள். இவ்விதம் அவர்கள் கூறியதைக் கேட்ட இராமர் புன்னகையுடன் கூறுகிறார்.

"ஏ ஸ்திரீகளே! துர்க்காதேவி தெரிவித்தது என்ன கூறுங்கள்" என்றார்.

ஸ்திரீகள் கூறுகிறார்கள்—இராம! துர்க்கையின் வசனத்தைக் கேளுங்கள்—நான்தான் ஸீதை, ஸ்ரீராமர்தான் பரமசிவன். இவ் விஷயத்தில் பேதமில்லை. பேதத்தை நினைப்பவர்கள் ரௌரவ நரகத்தில் விழுகிறார்கள். ஆகையால் இராமருக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணி வாருங்கள்; பின்பு அவர் புசித்த மீதியை நான்புசிக்

கிறேன்; நீங்கள் பசியுடனிருக்கும் இரகுநந்தனரிடம் செல்லுங்கள்”—என்று தெரிவித்தாள்.

அந்த வசனம் கேட்டு நாங்கள் தங்களிடம் வந்தோம். நாங்கள் முன் செய்த புண்ணியத்தால் தங்களுடைய தரிசனங்கிடைக்கப்பெற்றோம். இரகு சிரேஷ்டரே! முன்தாங்கள் போஜனம் செய்யவேண்டும்—என்று வேண்டிக்கொண்டார்கள். பிறகு இராமர் “ஸ்திரீகளே! தேவியின் வசனம் உண்மையானால், இந்த அடர்ந்த வனத்தில் அந்த தேவி ஸீதை வடிவத்துடன்என்னிடம் வரட்டும். உங்களில் ஒருவர் துர்க்கையிடஞ்சென்று நான் கூறியதைத் தெரிவியுங்கள்” என்றார்.

உடனே அப்பெண் கூட்டத்திலிருந்து ஒரு ஸ்திரீ துர்க்கா தேவியிடஞ்சென்று இராமச்சந்திரர் கூறியதைத் தெரியப்படுத்தினாள். துர்க்காதேவி அம்மொழியைக்கேட்டு, அவ்விதமே செய்கிறேனென்று வாக்களித்துக் கொஞ்சம் கதவைத்திறந்துகொண்டு ஸீதை வடிவத்துடன் வந்தாள். பிறகு கதவை நன்றாய் மூடிவிட்டு, ஜலபாத்திரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஸ்ரீராமச்சந்திரருடைய சமீபம் வந்து நமஸ்காரம் செய்து அவர்பக்கத்தில் யாவரும் ஆச்சரியப்படும்படி நின்றாள். பிறகு இராமர் அந்த ஸ்திரீகள் கொண்டுவந்த அன்னத்தைப்புசிக்க நினைத்து ஸ்னானம் செய்யும் பொருட்டு யோசித்தார்.

பிறகு உலகங்களை யாளும்பிரபு தமதுவில்லின் பாணத்தைச் சேர்த்து பூமியைப்பிளந்துபாதாளத்திலிருந்து ஜலம்வரவழைத்து அதில் ஸ்னானம் செய்து மாத்தியான்ஹிகத்தை முடித்துக்கொண்டு போஜனம் செய்வதற்கு யத்தனம் செய்தார் அச்சமயத்தில் குசன் முதலானவர்கள் சைன்னியத்துடன் ஸ்ரீராமருடைய குதிரையின் காலடியைத்தொடர்ந்து அங்கு வந்து அங்கு ஜனகன் பெண்ணாகிய ஸீதையைப்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள்.

பிறகு இராமர் குசன் முதலியவர்கள் சைன்னியங்கள் பந்துஜனங்கள் எல்லோருடனும் சேர்ந்து போஜனம் செய்து தாகசாந்தி செய்துகொண்டு களையாறினார்கள். பிறகு அந்த ஸ்திரீகளைப்

பார்த்து, ஆதரவுடன் "ஸ்திரீகளே! உங்களுக்கு வேண்டிய வரனைக்கேளுங்கள்" என்று கூறினர். உடனேஸ்திரீகள் "இராம! எங்களுக்கு நல்ல கீர்த்தி உண்டாகும்படியான வரம் கொடுக்க வேண்டும்" என்றார்கள்.

இராமர் அதைக்கேட்டுச் சந்தோஷமடைந்து "ஸ்திரீகளே! பூமியில் புருஷர்களைக்காட்டிலும் உங்களுக்கு என்னிடம் நல்ல பக்தி ஏற்படட்டும்; உங்களுக்குத்தேவர்களிடத்திலும் தருமத்திலும் பக்தி உண்டாகட்டும்; கணவனுடன் கூடிய நீங்கள் எப்போதும் பரிசுத்த முள்ளவர்களாக ஆகவேண்டும். என்பாணத்தால் ஏற்பட்ட இந்தத் தீர்த்தம் இராம தீர்த்தமென்னும் பெயர் பெறும்" என்று கூறினர்.

இதைக்கேட்ட ஸ்திரீகள் "இராம! மறுஜன்மத்திலும் உங்களுடைய தரிசனம் எங்களுக்குக் கிடைக்கவேண்டும்" என்றார்கள். ஸ்திரீகள் இவ்விதம் சொல்லக்கேட்ட இராமர், "துவாபர யுகத்தில் நான் கிருஷ்ணவதாரம் செய்யப்போகிறேன். அப்பொழுது உங்களுக்கு என் தரிசனம் கிடைக்கும்; நீங்கள் அந்தயுகத்தில் பிராம்மணருக்குப் பத்தினிகளாக இருக்கப்போகிறீர்கள். வனத்தில் யாகம் செய்யும் இடத்தில் நான் அன்னம் யாசிக்கும் சமயத்தில் உங்களைப்பார்ப்பேன். இந்த வேடஸ்திரீயும் பிராம்மணனுக்குப்பத்தினியாக இருக்கப்போகிறாள். அப்பொழுது என்னைத் தரிசனம்செய்ய முயற்சியுடன் வருவாள். அதையறிந்த இவளுடைய கணவன் இவளை வீட்டில் தூணில் கட்டி மிருந்த சிக்ஷைசெய்வான். அப்போது இந்த வேடஸ்திரீ என்னிடம் மனதைச்செலுத்தி வேறு தேகத்துடனும் என்னிடம் வரப் போகிறாள். அது மிகவும் வேடிக்கையாக விருக்கும்.

அப்போது நீங்கள் அந்த வேடிக்கையைப்பார்த்து என்னிடம் மனதைச் செலுத்தி எப்போதும் என்னைத் தியானித்துக் கடைசியில் என்னுடைய உலகம் வந்து சிறந்த சுகத்தை அடைவீர்கள். இராம! என்ற என்னுடைய தாரகநாமத்தை நீங்கள் எப்போதும் ஜபம் செய்யவேண்டும். அதனால் உங்களுக்கு உத்தமகதி கிடைக்கும்" என்று அந்த ஸ்திரீகளுக்கு வரம்

கொடுத்து முன்னால் நிற்கும் ஸீதையைப்பார்த்து "நீசுகமாக உன் னிருப்பிடம் செல்லலாம்" என்றார். உடனே தேவியானவள் ஸ்திரீ களுடன் மறுபடியும் தேவாலயம் வந்து சேர்ந்தாள். அங்கு வந்த வுடன் ஸீதையின் வடிவத்தைவிட்டு துர்க்கைவடிவத்தை அடைந் தாள். அதைக்கண்ட ஸ்திரீகள் மிகவும் ஆச்சர்ய மடைந்து கிரமப்படி துர்க்கையைப் பூஜித்துத் தங்களிருப்பிடம் சென்றார் கள்.

இராமரும் தமது பந்துக்களுடனும் பிள்ளைகளுடனும்தமது நகரம் வந்தார். இங்கு கிருகத்தில் குசன் தான் வனத்தில் பார்த் தவைகளைப் பற்றி ஸீதையைக் கேட்க ஸீதை குசனுக்கு விவரம் தெரிவித்தாள். பிறகு இலக்ஷ்மணர் முதலிய எல்லோரும் ஸ்ரீராம ரைச் சிவனாகவும் ஸீதையைத் துர்க்கையாகவும் நிச்சயித்துச் சந் தோஷ மடைந்தார்கள்.

ஏ சிடனே! பரமாத்மாவாகிய இராமர் இந்தவேடிக்கையைச் செய்து மானிடர்களுக்கு உண்டான துவைதபுத்தியைக் கண்ட னம் செய்தார்.

இவ்விதம் இரகுவீரர் ஸ்திரீகளுக்கு வரம் கொடுத்திருப்ப தால் ஸ்திரீகளை ராமைதளென்று கூறுகின்றார்கள். ஸ்திரீகளுக்கு ராம என்ற இரண்டு அக்ஷரமுள்ள மந்திரம் ஜபம் செய்ய ஏற்பட்டது. வேறு மந்திரம் ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் ஏற்படவில்லை. மந்திரங்களெல்லா வற்றிலும் ராம மந்திரம் சிறந்தது. நடுக்கத்திலும் பயத்திலும் பாபத்திலும் உபத்திர வத்திலும் மானிடர்கள் ராம என்று கூறுகிறார்கள். கோரமான பாபத்தைச் செய்த ஒருவன் தாபத்துடன் ஒரு தடவை ராம என்று கூறுவானாயின் அவன் அப்பாபத்திலிருந்து விடுபட்டுப்பரி சுத்தனாகிறான். இந்த ராம மந்திரத்தை நடக்கும் போதும் போஜனம் செய்யும்போதும் சயனத்திலும் கிரீடை செய்யும் போதும் ஜபம் செய்யவேண்டும். நான்கு வர்ணத்தார்களும் ஜபம் செய்யவேண்டும். காலசொரூபராகிய இராமருடைய மந்தி

ரத்தை ஜபஞ் செய்யக்காலம் இருமென்பதில்லை. ஆகையால் மானி டர்கள் எப்போதும் உத்தமமான இந்த மந்திரத்தைஜபிக்கவேண் டும்.

எவன் முகத்தில் இராம மந்திரமிருக்கின்றதோ எவன் தேகம் இராம முத்திரையின் அடையாளமுடையதோ எவன் இராம முத் திரையுள்ள வஸ்திரம் தரிக்கின்றனோ அவனை யமன் பார்க்கமாட் டான். இராம முத்திரையுள்ள வஸ்திரத்தை முத்திரையுள்ள வஸ் திரமென்று சொல்லப்படும். எந்த வேளையிலும் அந்த வஸ்திரம் சிறந்தது. பரிசுத்தமானது. பாவங்களைப் போக்கக் கூடியது.

மனிதர்களுக்குள் சிறந்தவன் தன் சரீரத்தில் முத்திரை யுள்ள வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டால் தாமரை இலைத் தண் ணீர் போல் அவன் செய்த பாவம் அவனை அணுகாது. முத் திரையுள்ள வஸ்திரமிப்பவனைப்பார்த்த யமதூதர்கள் சிங்கத்தைக் கண்ட மிருகங்களைப் போல தூரத்தில் ஓடிவிடுவார்கள். முன்னொரு சமயம் முனிவர்கள் ஆலோசனை செய்துகொண்டு இரகுசிரேஷ் டராகிய இராமரிடம் கூறலானார்கள் —

இராமா! இராமசந்திர மகாபிரபுவே! இனிக் கலியுகத்தில் பூலோகத்தில் பிராமணர்கள் அறிவுக் குறைவுடை யவர்களாகவும் விபரீத நடத்தையுள்ளவர்களாகவும் ஏழைகளா கள் தங்கள் வயிற்றை நிரப்புவதற்காக வீடுதோறும் சென்று திரிவார்கள். அப்போது தக்கபடி ஸ்நானம் செய்ய ஜலம் அவ காசம் ஏற்படப்போகிறது; ஆகையால் அவர்களுக்கு என்ன ஏற்படுமென்று இப்பொழுது நாங்கள் யாசிக்கிறோம். அதற் குத் தாங்கள் உபாயம் சொல்லவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

இராமர் அதைக்கேட்டுச் சந்தோஷங்கொண்டு சொல்லு கிறார் —

முனிசிரேஷ்டர்களே! நன்றாக வினவினீர்கள்; ஜனங்கள் என் முத்திரையுள்ளவஸ்திரத்தை உடுக்கவேண்டும். கலியுகத்தில்

என் முத்திரையுள்ள வஸ்திரம் உடுத்த மானிடனைப் பாபம் அணுகாது.

சங்கம் சக்ரம் கதை பத்மம் நாமம் முத்திரை இவ்வடையாளமுடைய வஸ்திரத்தை உடுக்கவேண்டும். அல்லது முத்திரை மட்டுமுள்ள வஸ்திரத்தையாவது உடுக்கவேண்டும். சங்கம் முதலிய ஐந்து அடையாளங்களுடன் கூடின வஸ்திரம் எனக்கு மிகவும் பிரியமானது. என் முத்திரையுள்ள வஸ்திரமானாலும் அது எனக்குப் பிரீதியுள்ளதேயாம். இவ்வஸ்திரத்தை ஸ்நானம் செய்தால் பின்பு ஜபம் செய்யும் காலத்தில் எப்போதும் விசேஷமாக உடுக்கவேண்டும். மலமூத்திர விசர்ஜனம் செய்யுங்காலத்திலும் சயனம் செய்யும்போதும் கிடக்கும்போதும் அசுத்தமான இடத்திலும் [illegible] போதும் வீதியிலும் இராஜசபையிலும் வழிநடையிலும் துஷ்டர்களின் சேர்க்கையிலும் முத்திரை போட்ட வஸ்திரத்தை உடுக்கக்கூடாது. அவ்விதமே போஜன காலத்திலும் விளையாட்டின் சமயத்திலும் உடுக்கக் கூடாது. ஸ்நானம் செய்யும் சமயத்திலும் விரதத்தை அநுஷ்டிக்கும் காலத்திலும் புண்ணிய தீர்த்தம் சென்றவிடத்திலும் பூஜை செய்கையிலும் பித்ருகாரியத்திலும் ஹோமம் தானம் ஜபம் கிருச்சிரம் சாந்திராயணம் விரதம் நித்திய கருமங்கள் காமிய கருமங்கள் நைமித்திக கருமங்கள் [illegible] செய்யும்போதும் என் முத்திரையுள்ள இந்த வஸ்திரத்தை உடுக்க வேண்டும். என் முத்திரையுள்ள வஸ்திரமுடையோனுக்கு நான் முக்தி கொடுக்கிறேன். முனிவர்களே! இது சத்தியம்—என்று இராமபிரானது வாக்கியத்தைக் கேட்டு அந்த முனிவர்கள் பரம சந்தோஷமடைந்து இராமபிரானை வணங்கிக்கொண்டு தங்கள் தங்களாச்சிரமம் சென்றார்கள்.

ஆகையால் நல்லமனிதர்கள் இராமமுத்திரை போட்ட வஸ்திரம் உடுக்கவேண்டும். ராம என்ற இரண்டக்ஷரங்களுள்ள மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும். கோபீசந்தனத்துடன் இராமமுத்திரையை எப்போதும் தரிக்கவேண்டும். எப்போதும் இராமனுக்குப் பூஜையைச் செய்யவேண்டும். இராமதீர்த்தத்தில்

ஸ்ஞானமும் செய்யவேண்டும். எப்போதும் இந்த ராமாயணத்தைச் சிரவணம் செய்விக்க வேண்டும். ஜனன மரணங்களை நிவர்த்தி செய்யும் இராமரை எப்போதும் ஸ்தோத்திரம் செய்யவும் இராம கீர்த்தனம் செய்யவும் நமஸ்காரம் செய்யவும் வேண்டும்.

முதலில் அநுமானுடைய கவசத்தைப்படித்துப்பிறகு இராம ருடைய கவசத்தைப் படிக்க வேண்டும்.

அநுமானுடைய கவசம படிககாமல ஸ்ரீராம கவசம் படித் தால் அது அரண்ணியத்தில் ரோதனம் செய்தது போலாம். ஸ்தோத்திரங்களுள் சிறந்தது இதுவேயாகும்.

இது பாபங்க ளெல்லாவற்றையும் நிவிருத்தி செய்யக் கூடி யது. ஆகையால் இந்த இராமகவசத்தைப் பூமியில் மானிடர்களனை வரும் படிக்க வேண்டும்.

விஷ்ணுதாஸன் வினவுகிறான்.

ஏ குருவே! அநுமானுடைய கவசத்தையும் ஸ்ரீராமருடைய கவசத்தையும் நான் கேட்க விரும்புகிறேன். என்னிடம் கிருபை செய்து சொல்லவேண்டும்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! நீ கேட்டது நல்லது. நான் அநுமானுடைய கவசத்தையும் ஸ்ரீராம கவசத்தையும் கூறுகிறேன். நீ சாவதானமான மனதுடன் கேள்.

ஸ்ரீராமபிரான் அத்துவைத விளக்கஞ்செய்த
பன்னிரண்டாவது சருக்கம்
முற்றிற்று.

13 - வது சருக்கம்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

ஒரு சமயம் பருவதராஜன் புத்திரியாகிய பார்வதி உலகங்களுக்கு க்ஷேமத்தைச் செய்பவரும் கர்ப்பூரம்போல் தவளவர்ணமுள்ளவரும் மங்கள சொரூபரும் தன் கணவனுமாகிய பரமேசுவரரைப் பார்த்துக் கேட்கிறாள்.

பார்வதி வினவுகிறாள்.

பகவானே! தேவர்களுக்கும் தேவர்களாகிய பிரபுவே! உலகங்களுக்கு நாதரே! துக்கத்தை அடைந்த ஜனங்களுக்கு எதனால் இரக்ஷை ஏற்படும்? யுத்தத்திலும் கோரமான சங்கடத்திலும் பூதப்பிரேதங்களாலுண்டான பயத்திலும் துக்கமாகிற காட்டுத்தீயால் தாபமடைந்தவர்கட்கு எதனால் நன்மை ஏற்படுமென்று வினவினாள்.

ஸ்ரீமஹாதேவர் கூறுகிறார்.

ஏ சுந்தரீ! இராமச்சந்திரர் விபீஷணனுக்கு புத்தியிற் சிறந்த வாயுகுமாரனாகிய அநுமானுடைய இரகசியமான கவசத்தை அன்புடன் உபதேசித்திருக்கிறார். அந்தக் கவசத்தை உலக நன்மையைக் கருதி நான் உனக்குக் கூறுகிறேன்.

உத்யதாதித்ய ஸங்காசம் உதார புஜ விக்ரமம் ।
கந்தர்ப கோடி லாவண்யம் ஸர்வ வித்யா விசாரதம் ॥
ஸ்ரீராம ஹ்ருதயானந்தம் பக்த கல்ப மஹீருஹம் ।
அபயம் வரதம் தோர்ப்யாம் கலயே மாருதாத்மஜம் ॥ உ

உதய சூரியனுக்குச் சமானமானவரும் உதாரமான புயபலமுள்ளவரும் கோடி மன்மதனுக்குச் சமமான லாவண்ணியமுள்ளவரும் வித்தைகளெல்லாவற்றிலும் சிறந்தவரும் ஸ்ரீராமருடைய இருதயத்திற்கு ஆனந்தமளிப்பவரும் பக்தர்களுக்குக் கற்பகவிருக்ஷம்போல் வேண்டியதைக் கொடுப்பவரும் அபயவரதஹஸ்தமுள்ளவருமாகிய மாருதாத்மஜனை ஆசிரயிக்கிறேன். (க—உ)

[illegible] ௩

[illegible] ௪

[illegible] ௫

[illegible] ௬

[illegible]

அநமோன், [illegible] ராமன், [illegible], [illegible] இராவணனைக் கொ[illegible], [illegible] நாமங்களை [illegible] போதும் [illegible] போதும் [illegible] போதும் [illegible]. அவனுக்கு [illegible] ஆவான். [illegible] போதும் [illegible].

(௩ - ௪ - ௫ - ௬)

யுத்த [illegible] இலங்கா [illegible] போகும் [illegible].

[illegible]

[illegible]

[illegible]

◆

(𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍)

𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍍𑌬𑌾𑌲𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌨𑌿𑌭𑌂 𑌦𑍇𑌵𑌾𑌰𑌿𑌦𑌰𑍍𑌪𑌾𑌪𑌹𑌂
𑌦𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍈𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌯𑌶𑌸𑌂 𑌦𑍇𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌰𑍁𑌚𑌾 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌦𑌿𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌾𑌨𑌰𑌯𑍁𑌤𑌂 𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌂
𑌸𑌂𑌰𑌕𑍍𑌤𑌾𑌰𑍁𑌣𑌲𑍋𑌚𑌨𑌂 𑌪𑌵𑌨𑌜𑌂 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌲𑌂𑌕𑍃𑌤𑌮𑍍 ॥
𑌉𑌦𑍍𑌯𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌕𑌟𑌰𑍁𑌚𑌿𑌯𑍁𑌤𑌂 𑌚𑌾𑌰𑍁𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂
𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌭𑌰𑌣𑌰𑍁𑌚𑌿𑌶𑌿𑌖𑌂 𑌶𑍋𑌭𑌿𑌤𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌙𑍍𑌕𑌮𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌿𑌷𑍍𑌟𑌦𑌂 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑌮𑍁𑌨𑌿𑌜𑌨𑌂 𑌵𑍇𑌦𑌨𑌾𑌦𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑌂
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑌂 𑌵𑌿𑌧𑍇𑌯𑌂 𑌪𑍍𑌲𑌵𑌗𑌕𑍁𑌲𑌪𑌤𑌿𑌂 𑌗𑍋𑌷𑍍𑌪𑌦𑍀𑌭𑍂𑌤𑌵𑌾𑌰𑍍𑌧𑌿𑌮𑍍 ॥
𑌵𑌜𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌪𑌿𑌙𑍍𑌗𑌕𑍇𑌶𑌾𑌢𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌿𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌕𑍁𑌶𑌲𑌂 𑌪𑌾𑌰𑌾𑌵𑌾𑌰𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

தியானம்.

பால சூரியனுடைய தீர்த்திபோன்றவரும், தேவ சத்துருக்கள் கொழுப்பைப் போக்குகிறவரும், தேவேந்திரனுக்கும் முதன்மை யாக இருப்பவரும், பிரசித்தமான கீர்த்தியை யுடையவரும், தன் காந்தியால் பிரகாசிப்பவரும், சுக்ரீவன் முதலிய வானரர்களுடன் கூடியவரும், வியக்தமான தத்துவ ஞானத்தில் பிரீதியையுடைய ரும், நிரம்பவும் சிவந்த கண்களை யுடையவரும், பீதாம்பர மணிந் தவரும், வாயுகுமாரனும். (௧)

உதயகாலத்தில் பிரகாசிக்கும் கோடி சூரியன்போல் பிரகா சிப்பவரும், அழகான வீராசனத்தில்வீற்றிருப்பவரும், மௌஞ்சி யஜ்ஞோபவீதம், ஆபரணம் இந்தக் காந்தியின் ஜ்வாலைகளுடன் கூடியவரும், சோலையுள்ளவரும், குண்டலங்களை அடையாள மாக உடையவரும், பக்தர்களுடைய இஷ்டத்தைக் கொடுப்பவ ரும், முனிஜனங்களால் நமஸ்கரிக்கத் தகுந்தவரும், வேதசப்தத் தில் மிகுதியான ஆனந்த முடையவரும், வானர குலத்திற்குப் பதியும், சமுத்திரத்தைப் பசுவின் குளம்படிபோல் செய்தவரு மாகிய அநுமானைத் தியானம் செய்ய வேண்டும். (௨)

வஜ்ரம்போன்ற அவயவமுள்ளவரும், பிங்கள வர்ணமுள்ள கேசம் நிறைந்தவரும், சுவர்ண குண்டல மணிந்தவரும், கொடுக் கும் இயல்புள்ளவரும், சமுத்திரத்தைப் பராக்ரமத்தால் கடந்த வரும். (௩)

ஸ்பாடிகாபம் ஸ்வர்ணகாந்திம் த்விபுஜம் ச க்ருதாஞ்ஜலிம் ।
குண்டலத்வயஸம்சோபி முகாம்போஜம் ஹரிம் பஜே ॥ ௪

ஸவ்யஹஸ்தே கதாயுக்தம் வா
உத்யத்தக்ஷிணதோர்தண்டம் ஹநூமந்தம் விசிந்தயே ॥ ௫

ஸ்படிகம்போன்ற வர்ணமுள்ளவரும், சொர்ணகாந்தியுள்ளவரும் இருகையுடையவரும் அஞ்சலியஸ்தரும் இருகுண்டலத்தால் விளங்கும் முகமலருடையவரும் வானரோத்தமருமாகிய அநுமானை பஜிக்கின்றேன். (௪)

வலது கையில் கதையும் இடது கையில் கமண்டலுவையும் தரித்தவரும் பிரகாசிக்கும் தண்டம்போன்ற வலதுகையையுடையவருமாகிய அநுமானை நான் பஜிக்கிறேன். (௫)

அத மந்த்ர:

ஓம் நமோ ஹநுமதே [illegible] க்ருதாய அஞ்ஜநாகர்பஸம்பூதாய ராமலக்ஷ்மணாநந்தகராய கபிஸைந்யப்ராகார [illegible] ஸுக்ரீவஸாஹாய்யகரண பரோச்சாடந குமார ப்ரஹ்மசர்ய கம்பீரசப்தோதய ஓம் ஹ்ரீம் ஸர்வதுஷ்டக்ரஹநிவாரணாய ஸ்வாஹா ॥ ஓம் நமோ ஹநுமதே ஏஹி ஏஹி ஸர்வக்ரஹபூதாநாம் சாகிநீ டாகிநீநாம் விஷமதுஷ்டாநாம் ஸர்வேஷாமாகர்ஷய ஆகர்ஷய மர்த்தய மர்த்தய சேதய சேதய மர்த்யாந் மாரய மாரய சோஷய சோஷய ப்ரஜ்வல ப்ரஜ்வல பூதமண்டல பிசாசமண்டல நிரஸநாய பூதஜ்வர ப்ரேதஜ்வர சாதுர்த்திகஜ்வர ப்ரஹ்மராக்ஷஸ பிசாச சேதந க்ரியா விஷ்ணுஜ்வர மஹேசஜ்வர சிந்தி சிந்தி பிந்தி பிந்தி அக்ஷிசூலே சிரோ[illegible] குக்ஷிசூலே [illegible]சூலே ப்ரஹ்மராக்ஷஸகுல ப்ரபல நாககுல விஷம் நிர்விஷம் ஜ்ஹடிதி ஜ்ஹடிதி॥ ஓம் ஹ்ரீம் பட் கேகே ஸ்வாஹா ॥

ௐ நமோ ஹநுமதே பலவதே ருத்ராவதாராய வாயுபுத்ராய வஜ்ரதேஹாய வஜ்ரநகாய ஹநுமதே ராமதூதாய ஸ்வாஹா ॥ ஸர்வஶத்ருஸம்ஹாரணாய ஸர்வரோகஹராய ஸர்வவஶீகரணாய ராமதூதாய ஸ்வாஹா ॥ ௐ ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் ஸ்வாஹா ॥

ஶ்ரீராமசந்த்ர உவாச

ஹநுமாந் பூர்வத: பாது தக்ஷிணே பவநாத்மஜ: ।
பாது ப்ரதீச்யாம் ரக்ஷோக்ந: பாது ஸாகரபாரக: ॥ க

உதீச்யாமூர்த்வக: பாது கேஸரீப்ரியநந்தந: ।
அதஸ்தாத் விஷ்ணுபக்தஸ்து பாது மத்யம் ச பாவநி: ॥ உ

லங்காவிதாஹக: பாது ஸர்வாபத்ப்யோ நிரந்தரம் ।
ஸுக்ரீவஸசிவ: பாது மஸ்தகம் வாயுநந்தந: ॥ ௩

பாலம் பாது மஹாவீரோ ப்ருவோர்மத்யே நிரந்தரம் ।
நேத்ரே சாயாபஹாரீ ச பாது ந: ப்லவகேஶ்வர: ॥ ௪

ஸ்ரீராமசந்த்ரர் கூறுகிறார்.

கீழ்த்திசையில் அநுமானும், தென் திசையில் பவனாத்மஜனும், மேற்றிசையில் இராக்ஷஸ சம்ஹாரம் செய்தவனும்.— (க)

வடதிசையில் சமுத்திரத்தின் கரைகண்டவனும், கேசரியின் பிரியகுமாரனும் மிகுந்த அன்புடையவனுமாகிய விஷ்ணுபக்தன் கீழ்ப்பக்கத்திலும், பவனகுமாரன் இடது பக்கத்திலும்.— (உ)

இலங்கையைத் தகனம் செய்தவன் எப்போதும் ஆபத்துக் களிலும், சுக்ரீவனுடைய மந்திரியாயிருந்தவன் சிரசிலும் (௩)

வாயுநந்தனன் நெற்றியிலும், மஹாவீரன் எப்போதும் புருவங்களின் மத்தியிலும், நிழலை இழுக்கும் இராக்ஷஸியை ஸம்ஹாரம் செய்தவன் கண்களிலும்— (௪)

கபோலௌ கர்ணமூலே ச பாது ஶ்ரீராமகிங்கர: ।
நாஸாக்ரமஞ்ஜனீஸூனு: பாது வக்த்ரம் ஹரீஶ்வர: ॥ ௫

வாசம் ருத்ரப்ரிய: பாது ஜிஹ்வாம் பிங்களலோசன: ।
பாது தேவ: பால்குனேஷ்டஶ்சிபுகம் தைத்யதர்பஹா ॥ ௬

பாது கண்டம் ச தைத்யாரி: ஸ்கந்தௌ பாது ஸுரார்சித: ।
புஜௌ பாது மஹாதேஜா: கரௌ ச சரணாயுத: ॥ ௭

நகாந்நகாயுத: பாது குக்ஷிம் பாது கபீஶ்வர: ।
வக்ஷோ முத்ராபஹாரீ ச பாது பார்ஶ்வே புஜாயுத: ॥ ௮

லங்காநிபஞ்ஜன: பாது ப்ருஷ்டதேஶே நிரந்தரம் ।
நாபிம் ச ராமதூதஸ்து கடிம் பாத்வனிலாத்மஜ: ॥ ௯

பிலவகேசுவரன், கன்னத்திலும், ஸ்ரீராம கிங்கரன் காது மூலத்திலும், அஞ்சனையின் குமாரன் மூக்கிலும் ஹரீசுவரன் முகத்திலும்,— (௫)

ருத்திரப் பிரியன் வாக்கிலும், பிங்களவர்ணமுள்ள கண்களையுடையவன் நாக்கிலும், அர்ஜுனனுக்கு இஷ்டனாகவிருப்பவன் தாவாக்கட்டையிலும்.— (௬)

அசுரர்கள் கொழுப்பைப் போக்கி அவர்களைக் கொன்றவன் கழுத்திலும் தேவர்களால் பூஜிக்கப்படுகிறவன் தோள்களிலும்.— (௭)

மஹாதேஜஸ்ஸையுடையவன் புஜங்களிலும், பாதங்களை ஆயுதமாக உபயோகிப்பவன் முன் கைகளிலும், நகங்களை ஆயுதமாகக் கொள்பவன் நகங்களிலும், கபீசுவரன் வயிற்றிலும்.— (௮)

முத்திரையை அடைந்தவன் மார்பிலும், புஜங்களை ஆயுதமாக அடைந்தவன் பக்கங்களிலும் இலங்காபஞ்ஜனன் பின் பக்கத்

இராமதூதன் நாபியிலும், அனிலாத்மஜன் இடையிலும், மஹாப்ராஜ்ஞன் குஹ்யஸ்தானத்திலும், சிவப்பிரியன் லிங்கஸ்தானத்தையும்.— (௯)

குஹ்யம் பாது மஹாப்ராஜ்ஞ: லிங்கம் பாது ஶிவப்ரிய: ।
ஊரூ ச ஜாநுநீ பாது லங்காப்ராஸாதபஞ்ஜந: ॥ ௰

ஜங்கே பாது கபிஶ்ரேஷ்ட: குல்ஃபௌ பாது மஹாபல: ।
அசலோத்தாரக: பாது பாதௌ பாஸ்கரஸந்நிப: ॥ ௧௧

அங்காந்யமிதஸத்வாட்ய: பாது பாதாங்குலீஸ்ஸதா ।
ஸர்வாங்காநி மஹாஶூர: பாது ரோமாணி ஆத்மவித் ॥ ௧௨

ஹநூமத்கவசம் யஸ்து படேத்வித்வாந்விசக்ஷண: ।
ஸ ஏவ புருஷஶ்ரேஷ்டோ புக்திம் முக்திம் ச விந்ததி ॥ ௧௩

த்ரிகாலமேககாலம் வா படேந்மாஸத்ரயம் நர: ।
ஸர்வாந்ரிபூந்க்ஷணாஜ்ஜித்வா ஸ புமாந்ஶ்ரியமாப்நுயாத் ॥

இலங்கையிலுள்ள இராஜ கிருகத்தை நாசஞ் செய்தவன் துடைகளிலும் முழங்கால்களிலும், கபிசிரேஷ்டன் கணைக்கால்களிலும், மஹாபலன் பின்னங்கால்களிலும்.— (௰)

ஓஷதிமலையை வஹித்தவர் பாதங்களிலும், சூரியனுக்குச் சமமாக விருப்பவர் அங்கங்களிலும், அளவற்ற ஆற்றலமைந்தவர் பாதத்தின் விரல்களிலும்.— (௧௧)

மஹாசூரன் அங்கமெல்லாவற்றிலும், ஆத்தும சொரூப மறிந்தவர், ரோமங்களிலும் இருந்து காப்பாற்றவேண்டும். (௧௨)

சாமர்த்தியம் உள்ள புருஷ சிரேஷ்டன் அநுமானுடைய கவசத்தைப் பாராயணம் செய்வானாயின், இகத்தில் போகத்தையும் பரத்தில் மோக்ஷ சுகத்தையும் அடைவான்.— (௧௩)

மானிடன் மூன்று காலமாவது ஒரு காலமாவது மூன்று மாசம் வரையில் பாராயணம் செய்தால், சத்ருக்களெல்லோரையும் ஜயித்து அதே க்ஷணத்தில் அந்த மானிடன் சம்பத்தை அடைவான். (௧௪)

அர்த்தராத்ரே ஜலே ஸ்தித்வா ஸப்தவாரம் படேத்யதி ।
க்ஷயாபஸ்மாரகுஷ்டாதி தாபத்ரயநிவாரணம் ॥ ௧௫

அஶ்வத்தமூலேऽர்கவாரே ஸ்தித்வா படதி ய: புமான் ।
அசலாம் ஶ்ரியமாப்னோதி ஸங்க்ராமே விஜயம் ததா ॥ ௧௬

புத்திர்பலம் யஶோ தைர்யம் நிர்பயத்வமரோகதா ।
ஸுதார்ட்யம் வாக்ஸ்புரத்வம் ச ஹனுமத்ஸ்மரணாத்பவேத் ॥ ௧௭

மாரணம் வைரிணாம் ஸத்ய: ஶரணம் ஸர்வஸம்பதாம் ।
ஶோகஸ்ய ஹரணே தக்ஷம் வந்தே தம் ரணதாருணம் ॥ ௧௮

லிகித்வா பூஜயேத்யஸ்து ஸர்வத்ர விஜயீ பவேத் ।
ய: கரே தாரயேந்நித்யம் ஸ புமான் ஶ்ரியமாப்னுயாத் ॥ ௧௯

இரவில் பதினைந்து நாழிகைக்கு ஜலத்தில் நின்று ஏழு தடவை பாராயணம் செய்தால், க்ஷயம் அபஸ்மாரம், குஷ்டம் முதலிய தாபத்திரயங்கள் நீங்கிச் சுகம் அடைவான். (௧௫)

ஞாயிற்றுக் கிழமையில் அரசமரத்தடியில் உட்கார்ந்து பாராயணம் செய்தவன் அழிவற்ற ஐசுவரியத்தையும் யுத்தத்தில் விஜயத்தையும் அடைவான். (௧௬)

அநுமானை ஸ்மரிப்பதால் புத்தி, பலம், கீர்த்தி, தைரியம், பயமில்லாமை, வியாதியில்லாமை, தொந்தரை யில்லாமை, வாக் சாதுரியம் இவைகளுண்டாகும். (௧௭)

சத்ருக்களைச் சம்ஹாரம் செய்பவரும் சம்பத்துகளை உடனே கொடுப்பவரும், சோகத்தைப் போக்குவதில் சாமர்த்திய முடையவரும் யுத்தத்தில் குரூரநுமாகிய அநுமானை நமஸ்கரிக்கின்றேன்.

இந்த ஹநுமத் கவசத்தை எழுதிப் பூஜைசெய்பவன் எங்கும் விஜயமடைவான்; எப்போதும் கையில் அநுமானுடைய கவச புஸ்தகத்தைத் தரிப்பவன் ஸ்ரீயை அடைவான். (௧௯)

விப்ரைஸ்து பந்தமோக்ஷாய ஜபம் காரயதே யதி।
தத்க்ஷணாந்முக்திமாப்நோதி நிகளாத்து ததைவ ச॥ ௨௦

ஈஶ்வர உவாச.

ஸூர்யசந்த்ராரவிந்தாஞ்சிதகரம் கௌபீநமௌஞ்ஜீதரம்
காஞ்சீஶ்ரேணீதரம் துகூலவஸநம் யஜ்ஞோபவீதாஜிநம்।
ஹஸ்தாப்யாம் த்ருதபுஸ்தகம் ச விலஸத்தாராவலிம் குண்டலம்
யஸ்யாலம்பிஶிகம் ப்ரஸந்நவதநம் ஶ்ரீவாயுபுத்ரம் பஜே॥ ௨௧

யோ வாராந்நிதிமல்பபல்வலமிவோல்லங்க்ய ப்ரதாபாந்விதோ
வைதேஹீகநஶோகதாபஹரணோ வைகுண்டபக்திப்ரிய:।
அக்ஷாத்யூர்ஜிதராக்ஷஸேஶ்வரமஹாதர்பாபஹாரீ ரணே
ஸோऽயம் வாநரபுங்கவோऽவது ஸதா யுஷ்மாந்ஸமீராத்மஜ:॥

பிராம்மணர்களைக் கொண்டு இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்வித்தால் சிறையிலிருப்பவன் அதிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தையும் அடைவான். ௨௦

ஈசுவரன் கூறுகிறார்.

சூரிய சந்திரர்களைச் சரணாரவிந்தங்களில் உடையவரும் கௌபீனம், மௌஞ்சி இவைகளைத் தரித்தவரும் அரைநூன் மாலையை அணிந்தவரும் வெண்பட்டாடை உடுத்தவரும், யஞ்ஞோபவீதம் மான்தோல் இவைகளைத் தரித்தவரும் கைகளில் புஸ்தகமுடையவரும், பிரகாசிக்கும் ஹாரமுடையவரும் குண்டல மணிந்தவரும் பிரஸன்னமுக முள்ளவருமாகிய வாயுபுத்திரனை நான் வணங்குகிறேன். ௨௧

எவர் பிரதாபத்துடன் சமுத்திரத்தைச் சிறிய குட்டையைக் கடப்பது போல் கடந்து வைதேஹியின் துக்கத்தையும் தாபத்தையும் போக்கி நாராயண பக்தியில் பிரீதியுடன் அக்ஷயன் முதலான அரக்கர்களின் கொழுப்பை அடக்கி வெற்றியடைந்தாரோ அந்த வானர சிரேஷ்டனாகிய வாயுபுத்திரன் எப்போதும் நம்மை இரக்ஷிக்கட்டும். ௨௨

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

வஜ்ரம்போன்ற சரீரமுள்ளவரும் பிங்களவர்ண முள்ள நேத்திர முடையவரும் சொர்ண மயமான குண்டல காந்தி தவழும் கபோல முள்ளவரும் வஜ்ரம்போன்ற பலமுள்ளவரும் யுத்தத்தில் சுவாதீனமான இராக்ஷஸ பதியாகிய இராவணனை உடையவரும் வாலை அசக்கியதால் ஏழுமலைகளையும் அசையும்படி செய்தவரும் பயங்கரமான சரீரமுள்ளவரும் கபிகளுக்குள் சிரேஷ்டரும் பலத்தின் ஸாராம்ச முடையவரும் பிரஸன்னரும் ஸ்ரீராமச் சந்திரரை ஆசிரயித்தவருமாகிய அநுமாரை நான் வணங்குகிறேன். ௨௩

வஜ்ரம்போன்ற அங்கம் படைத்தவரும் பிங்களவர்ண முள்ள கண்களை உடையவரும் சொர்ணப்பிரகாசமுள்ள குண்டலங்களால் விளங்குகிறவரும் வித்தைகளெல்லாவற்றையும் கற்றவரும் கையில் பூர்ணகும்ப முடையவரும் பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவரும் எப்போதும் பிரஸன்னரானவரும் வானரர்களுக்கு இராஜனும் மூவுலகங்களையும் இரக்ஷிக்க எண்ணமுள்ளவரும் எங்கும் இருப்பவருமாகிய ஸ்ரீராம தூதரை நமஸ்கரிக்கிறேன். ௨௪

சத்ருக்களைக் கருவறுக்கும் சிறந்த சூலத்தை இடது கையிலும் சங்கிலி ஹாரம் இவைகளைக் கழுத்திலும் அணிந்த

𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌂
𑌹𑍇𑌮𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌤𑍍𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌾𑌞𑍍𑌜𑌨𑍇𑌯𑌮𑍍 ॥ ௨௫

𑌪𑌦𑍍𑌮𑌰𑌾𑌗𑌮𑌣𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌤𑍍𑌵𑌿𑌷𑌾
𑌪𑌾𑌟𑌲𑍀𑌕𑍃𑌤𑌕𑌪𑍋𑌲𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑍇𑌹𑌕𑌦𑌲𑍀𑌵𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍇
𑌭𑌾𑌵𑌯𑌾𑌮𑌿 𑌪𑌵𑌮𑌾𑌨𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௨௬

𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂
𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑍍 ।
𑌬𑌾𑌷𑍍𑌪𑌵𑌾𑌰𑌿 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌲𑍋𑌚𑌨𑌂
𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌂 𑌨𑌮𑌤 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥ ௨௭

𑌮𑌨𑍋𑌜𑌵𑌂𑌮𑌾𑌰𑍁𑌤𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑍇𑌗𑌂𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 ।
𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌂 𑌵𑌾𑌨𑌰𑌯𑍂𑌥𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌦𑍂𑌤𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

வரும் சொர்ணம் போன்ற வர்ணமுடையவனும் பிரகாசிக்கும் குண்டலமுடையவனுமாகிய ஆஞ்சநேயரை நான் நமஸ்கரிக்கின்றேன்.

பத்மராகம்பதித்த குண்டலத்தின் காந்தியால் சிவந்த கன்னமுடையவனும் திவ்விய சரீரமுடையவனுமான வாயு நந்தனரை வாழைத் தோட்டத்தின் மத்தியில் இருப்பவராக எண்ணி நான் பஜிக்கிறேன். ௨௬

எந்த எந்த இடத்தில் இரகுநாதருடைய கீர்த்தனம் ஏற்படுகிறதோ அந்த அந்த இடத்தில் சிரசில் அஞ்சலிசெய்து கொண்டிருப்பவரும் ஆனந்த பாஷ்பத்தால் நிறைந்த கண்களையுடையவரும் அரக்கர்களுக்கு அந்தகநுமாகிய மாருதியை நமஸ்காரம் செய்யுங்கள். ௨௭

மனதின் வேகத்திற்குச் சமமான வேகமுள்ளவரும் வாயுவுக்கொப்பான வேகமுள்ளவரும் ஜிதேந்திரியரும் புத்திமான்களுக்குள் சிறந்தவரும் வாயுகுமாரனும் வானரக்கூட்டங்களுக்குள் முக்கியரும் ஸ்ரீராமதூதருமாகிய ஆஞ்சநேயரைச் சிரசால் நமஸ்கரிக்கின்றேன்.

விவாதே³ தி³வ்யகாலே ச உத்ஸவே ராஜகுலே ரணே ।
த³ஶவாரம் படே²த்³ராத்ரௌ நிராஹாரோ ஜிதேந்த்³ரிய: ॥ 29

விஜயம் லப⁴தே லோகே மாநவேஷு நரேஷு ச ।
பூ⁴தே ப்ரேதே மஹாது³ர்கே³ ரண்யே ஸாக³ரஸம்ப்லவே ॥ 30

ஸிம்ஹவ்யாக்⁴ரப⁴யே கோ⁴ரே ஶஸ்த்ராஸ்த்ரபாதநே ।
ஶ்ருங்க²லாப³ந்த⁴நே சைவ காராக்³ருஹநியந்த்ரணே ॥ 31

கோபஸ்தம்பே⁴ வஹ்நிசக்ரே க்ஷேத்ரே கோ⁴ரே ஸுதா³ருணே ।
ஶோகே மஹாரணே சைவ பா³லக்³ரஹநிவாரணே ॥ 32

ஸர்வதா³ பட²ந்நித்யம் ஜயம் ப்ராப்நோதி நிஶ்சிதம் ।
பூ⁴ர்ஜே வா வஸநே ரக்தே க்ஷௌமே வா தாலபத்ரகே ॥ 33

இந்தக்கவசத்தை வியவகாரத்திலும் திவ்விய உற்சவகாலங்களிலும் சூதாட்டத்திலும் ராஜகுலத்திலும் யுத்தத்திலும் ஜிதேந்திரியனாகவிருந்து பத்துத் தடவை இரவில் பாராயணம் செய்தால் உலகமெங்கும் ஜயமடைவான். 29

பிரேதபயத்திலும் மிகுதியான சங்கடத்திலும் ஆரண்ணியத்திலும் சமுத்திரப் பிரவாஹத்திலும், 30

சிங்கம் புலி இவைகளால் உண்டாகும் பயத்திலும் பாணம் ஆயுதங்கள் இவைகள் விழும்போதும் காராகிருகம் முதலியவைகளில் கட்டுப்பட்டிருக்கும்போதும், 31

கோபசமயத்திலும் தூணில் கட்டுப்பட்ட சமயத்திலும் அக்நி சக்ரத்திலும் பயங்கரமான க்ஷேத்திரத்திலும் சோககாலத்திலும் பெரும் யுத்தம் நேரும்போதும், 32

எப்பேதும் பாராயணம் செய்தால் எங்கும் ஜயமடைவான். பூவரசம் பட்டையாலாவது சிவப்பு வர்ணமுள்ள வஸ்திரத்திலாவது வெண்பட்டிலாவது பனை ஓலையிலாவது, 33

त्रिगन्धेनाथवा मष्या विलिख्य प्रयत्नतः ।
पञ्चसप्ततिश्लोकैस्तु बन्धनं कारयेद्बुधः ॥ 34
करे कट्यां पादमूले कण्ठे शिरसि धारितम् ।
सर्वान् कामानवाप्नोति सत्यं श्रीरामभाषितम् ॥ 35
अपराजित नमस्तेऽस्तु नमस्ते रामपूजित ।
प्रस्थानं च करिष्यामि सिद्धिर्भवतु मे सदा ॥ 36
इत्युक्त्वा यो व्रजेद्ग्रामं देशं तीर्थान्तरं रणम् ।
आयास्यति शीघ्रं स क्षेमेणैव गृहं पुनः ॥ 37
इति वदति विशेषाद्राघवे राक्षसेन्द्रः
प्रमुदितवरचित्तो रावणस्यानुजो हि ।
रघुवरपदपद्मं वन्दयामास भूयः
कुलसहितकृतार्थः शर्मदं मन्यमानः ॥ 38

மையினால் அல்லது திரிகந்தத்தால் எழுதி எழுபத்தைந்து ஸ்லோகங்களைக்கொண்டு பந்தனம் செய்து, 34

கையிலும் இடுப்பிலும் பாதமூலத்திலும் கழுத்திலும் தரித்துக்கொண்டால் மனோரதங்களெல்லாம் நிறைவேறும். ஸ்ரீராமன் சொன்னது சத்தியம். 35

அவமானத்தை அடையாதவரும் ராமரால் கொண்டாடப்பட்டவருமாகிய அநுமானே உமக்கு நமஸ்காரம். நான் இப்போது பயணமாகிறேன். எனக்கு எப்போதும் காரியசித்தியாகவேண்டும். 36

இவ்விதம் செல்லிக்கொண்டு கிராமம் தேசம் தீர்த்தங்கள் போர்க்களம் இவ்விடங்களுக்குச் சென்றால் சீக்கிரத்தில் க்ஷேமத்துடன் திரும்பிவருவான். 37

இவ்விதம் விசேஷித்துக்கூறும் ஸ்ரீராகவரிடம் சந்தோஷமுள்ளவனும் ராவணனுக்குத் தம்பியும் ராக்ஷஸ சிரேஷ்டனுமாகிய விபீஷணன் தன் வம்சத்துடன் கிருதார்த்தனாகி ஸ்ரீராமசந்திரன் சரணாரவிந்தம் சுகத்தை யளிக்கு மென்ற நம்பிக்கை கொண்டு அவரை அடிக்கடி நமஸ்காரஞ் செய்தான். 38

தம் வேதஶாஸ்த்ர பரிநிஷ்டித ஶுத்தபுத்திம்
சர்மாம்பரம் ஸுரமுநீந்த்ர நுதம் கவீந்த்ரம் |
க்ருஷ்ணத்வசம் கநகபிங்க ஜடாகலாபம்
வ்யாஸம் நமாமி ஶிரஸா திலகம் முநீநாம் || 39

ய இதம் ப்ராதருத்தாய படேத் கவசம் ஸதா |
ஆயுராரோக்ய ஸந்தாநைஸ் தஸ்ய ஸ்தவ்யஸ்தவோ பவேத் || 40

ஏவம் ப்ரீதிஜ ஶ்ரீஹநூமத்கவசம் ஶுபம் |
த்வயா ப்ருஷ்டம் மயா ப்ரீத்யா விஸ்தராத்விநிவேதிதம் || 41

ஶ்ரீராமதாஸ உவாச.

ஏவம் ஶிவமுகாச்ச்ருத்வா பார்வதீ கவசம் ஶுபம் |
ஹநூமத: ஸதா ஸக்த்யா பபாட தந்மநா ஸதா || 42

வேதசாஸ்திரங்களில் பயிற்சி பெற்ற புத்தியுள்ளவரும் தேவர்கள் முனிவர்களால் கொண்டாடப்படுகிறவரும் கவிசிரேஷ்டருமாகிய அநுமானையும் கறுப்பு வர்ணமுள்ள சர்மமுடையவரும் சொர்ணம்போல் பிங்களவர்ணமுள்ள ஜடைகளையுடையவரும் முனிவர்களுக்குத் திலகமாக விளங்குபவரும் தவமுடையவருமாகிய வியாச முனிவரையும் நான் நமஸ்காரஞ் செய்கிறேன். 39

எந்த மானிடன் காலையில் எழுந்து இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்கிறானோ அவன் ஆயுள் ஆரோக்கியம் சந்தானம் இவைகளை அடைவான்; அவனுடைய குணங்களை மற்றவர்கள் ஸ்தோத்திரம் செய்யத்தக்க கௌரவமடைவான். 40

ஏ பார்வதி! அநுமானுடைய கவசத்தை நான் பிரீதியுடன் உனக்குக் கூறினேன். 41

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதம் பார்வதி பரமசிவனிடம் கேட்டு அநுமானிடம் ஏற்பட்ட பக்தியால் அவரிடம் மனதைச் செலுத்தி எப்பொழுதும் இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்துகொண்டிருந்தாள். 42

ஏவம் ஶிஷ்ய த்வயா ப்ருஷ்டம் யதா ப்ருஷ்டம் ததோதிதம் ।
ஹநூமத்கவசம் ஶ்ரேஷ்டம் தவாக்ரே விநிவேதிதம் ॥ 43

இதம் பூர்வம் படித்வா து ராமஸ்ய கவசம் தத꞉ ।
படநீயம் நரைர்பக்த்யா நைகமேவ படேத்ததா ॥ 44

ஹநூமத்கவசம் சாத்ர ஶ்ரீராமகவசம் விநா ।
யே படந்தி நராஶ்சாத்ர படநம் தத் வ்ருதா பவேத் ॥ 45

தஸ்மாத்ஸர்வை꞉ படநீயம் ஸர்வதா கவசத்வயம் ।
ராமஸ்ய வாயுபுத்ரஸ்ய ஸத்பக்தைஶ்ச விஶேஷத꞉ ॥ 46

இதி ஹநூமத்கவசம்

இதாநீம் ராமகவசம் ஶ்ருணு ஶிஷ்ய வதாமி தே ।
பரம் ரஹஸ்யம் பவித்ரம் ச ஸர்வகாமப்ரதம் பரம் ॥ 47

மாணவனே! நீ கேட்டபடி நான் உனக்கு அநுமானுடைய கவசத்தைக் கூறினேன். 43

இந்த அநுமான் கவசத்தை மானிடர்கள் பக்தியுடன் முதலாவது பாராயணம் செய்து பின்பு ராம கவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். இந்த அநுமான் கவசத்தை மட்டிலுமாவது ராமகவசத்தை மட்டிலுமாவது எப்போதும் பாராயணம் செய்யக்கூடாது. அப்படிப் பாராயணம் செய்வது பிரயோஜனமில்லாமற்போகும். 44-45

ஆகையால் நல்ல பக்தர்கள் அநுமான் கவசம் ராமகவசம் இவ்விரண்டையும் விசேஷமாகப் பாராயணம் செய்யவேண்டும். 46

அநுமான் கவசம் முற்றிற்று.

சீடனே! பரமரகசியமும் பரிசுத்தமானதும் மனோரதம் எல்லாவற்றையும் கொடுக்கக்கூடியதுமான ராமகவசத்தை இப்போது நான் உனக்குக் கூறுகிறேன் கேள். 47

𑌸𑍁𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑍇𑌨𑍈𑌕𑌦𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌪𑍃𑌷𑍍𑌟 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌭𑌗𑌵𑌨𑍍 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑍇 ॥
𑌶𑍋𑌕𑌘𑍍𑌨𑌂 𑌮𑍇 𑌵𑌦𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌵𑌨𑌮𑍍 ॥ 48

𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯 𑌉𑌵𑌾𑌚.

𑌆𑌜𑌾𑌨𑍁𑌬𑌾𑌹𑍁𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌦𑌲𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑌮𑍍
𑌆𑌜𑌨𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌰𑌸𑌹𑌾𑌸𑌮𑍁𑌖𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑍍 ।
𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑌶𑌰𑌚𑌾𑌪𑌮𑍁𑌦𑌾𑌰𑌰𑍂𑌪𑌂
𑌰𑌾𑌮𑌂 𑌸𑌸𑍀𑌤𑌮𑌭𑌿𑌰𑌾𑌮𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌾𑌮𑌿 ॥ 49

𑌶𑍃𑌣𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌕𑌵𑌚𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ॥ 50

ஒரு சமயத்தில் அகஸ்திய மஹாமுனிவர் தனியே இருக்கும் போது சுதீக்ஷ்ண மஹாமுனிவர் அவரைப் பார்த்து, "ஏ பகவன்! பரமாநந்த சொரூபரும் தத்துவ மறிந்தவரும் கருணைக் கிருப்பிடமுமாகிய அகஸ்திய முனிவரே! ராமருடைய பரிசுத்தமான ஸ்தோத்திரத்தை எனக்குச் சொல்லவேண்டும். 48

அகஸ்திய மஹா முனிவர் கூறுகிறார்.

முழங்கால் வரையிலும் நீண்ட கைகளுள்ளவரும் தாமரைத் தளம்போன்ற நீண்ட கண்ணுள்ளவரும் ஜன்மம் அடைந்தது முதல் பரிசுத்தமான சிரிப்புடன் கூடிய முகமலர்ச்சியுடைய வரும் சியாமளவர்ணரும் பாணம் வில் இவைகளையுடையவரும் உதாரமாகிய உருவமுடையவரும் ஸீதையுடன் கூடியவரும் அபி ராமருமாகிய ராமரை நான் ஸ்மரணம் செய்கின்றேன். 49

முனிவர்களுக்குள் சிறந்தவராகிய சுதீக்ஷ்ண முனிவரே! மனதின் அபீஷ்டமெல்லாவற்றையும் கொடுக்கக்கூடிய புண்ணியமான ஸ்ரீராமகவசத்தில் எல்லா விஷயத்தையும் நான் கூறுகிறேன். 50

பிறகு மனோரதபலனைக் கொடுக்கும் த்யானத்தைச் சொல்லுகிறேன் கேள்.

அத்வைதாநந்த சைதந்ய ஶுத்தஸத்த்வைகலக்ஷண: ।
பஹிரந்தஶ்ச ஸுதீக்ஷ்ணாத்ர ராமசந்த்ர: ப்ரகாஶதே ॥ 51

தஸ்மிந்வித்யார்த்திநோ நித்யம் ரமந்தே தத்த்வவாதிந: ।
இதி ராமபதேநைதத் பரம் ப்ரஹ்மாபிதீயதே ॥ 52

ஜயராமேதி யந்நாம கீர்த்தயேத்யோ ஹிவந்தயேத் ।
ஸர்வபாபைர்விநிர்முக்தோ யாதி விஷ்ணோ: பரம்பதம் ॥

ஶ்ரீராமேதி பரம் மந்த்ரம் ததேவ பரமம்பதம்
ததேவ தாரகம் வித்தி ஜந்மம்ருத்யுபயாபஹம் ।
ஶ்ரீராமேதி வதந் ப்ரஹ்மபாவமாப்நோத்யஸம்ஶயம்
அஸ்ய ஶ்ரீராமகவசஸ்ய அகஸ்த்ய ருஷி: ॥ 54

அநுஷ்டுப் சந்த:। ஸீதாலக்ஷ்மணோபேத:
ஶ்ரீராமசந்த்ரோ தேவதா ॥ ஶ்ரீராமசந்த்ர

சுதீக்ஷ்ண முனிவரே! அத்துவைத சொரூபரும் ஆனந்த சொரூபரும் சைதன்னிய சொரூபரும் சுத்தசொரூபரும் சத்துவ சொரூபமாகிய ராமசந்திரர் உள்ளும் புறம்பும் பிரகாசிக்கின்றார்.

சிற்சுக சொரூபராகிய ராமரிடம் தத்துவ வித்தையை விரும்பியவர்கள் எப்போதும் ரமிக்கிறார்கள் என்று ராம என்ற பதத்தால் பரப்பிர்மமும் சொல்லப்படுகிறது. 52

ராமா! ஜயிக்க வேண்டும் என்று எவன் கீர்த்தனம் செய்கிறானோ அவன் பாபங்களெல்லாவற்றிலுமிருந்து விடுபட்டு விஷ்ணுவின் ஸ்தானமடைகிறான். 53

ஸ்ரீராம என்ற மந்திரமும் முக்கியமானது. இந்த மந்திரம் தான் சிறந்த பதம். இதுதான் ஜனனமரணபயத்தைப் போக்கும் தாரகம். ஸ்ரீராம என்று சொல்கிறவன் பிர்ம்மசொரூபத்தை அடைகிறான். இதிற் சந்தேகமில்லை. 54

प्रसादसिद्ध्यर्थं जपे विनियोगः ॥
अथ ध्यानं प्रवक्ष्यामि सर्वाभीष्टफलप्रदम् ।
नीलजीमूतसङ्काशं विद्युद्वर्णाम्बरावृतम् ॥ 55
कोमलाङ्गं विशालाक्षं यौवनाढ्यमतिसुन्दरम् ।
सीतासौमित्रिसहितं जटामकुटधारिणम् ॥ 56
सासितूणधनुर्बाणपाणिं दानवमर्दनम् ।
यथा चोरभये राजभये शत्रुभये तथा ॥ 57
ध्यात्वा रघुपतिं क्रुद्धं कालानलसमप्रभम् ।
चीरकृष्णाजिनधरं भस्मोद्धूलितविग्रहम् ॥ 58
आकर्णाकृष्टसशरकोदण्डभुजमण्डितम् ।
रणे रिपून् रावणादीन् तीक्ष्णमार्गणवृष्टिभिः ॥

கார்மேகம் போன்றவரும் மின்னல் போன்ற வஸ்திரமணிந்தவரும் 55

மனோக்ஞமான சரீரமுள்ளவரும் விலாசமான கண்ணுடையவரும் யௌவனமுள்ளவரும் அதி சுந்தரரும் ஸீதை லக்ஷ்மணன் இவர்களுடன் கூடியவரும் ஜடாமகுடங்களால் சோபிக்கிறவரும் 56

கத்தி அம்புறை வில் பாணம் இவைகளைக் கைகளில் உடையவரும் அசுரர்களைச் சங்கரிப்பவருமாகிய ராமரைத் திருட்டுப் பயத்திலும் அரசர்களால் ஏற்படும் பயத்திலும் சத்துருக்களின் பயத்திலும் 57

ரகுபதியும் கோபமடைந்தவரும் பிரளயகாலாக்கிபோன்ற காந்தியுள்ளவரும் மரவுரி மான்தோல் தரித்தவரும் விபூதிபூசிய சரீரமுடையவரும் 58

காதுவரையிலும் இழுக்கப்பட்ட பாணம் பூட்டிய வில்லுடன்கூடிய அழகான கையுள்ளவரும் தீக்ஷ்ணமான பாணவருஷத்தால் ராவணன் முதலிய சத்துருக்களைச் சங்கரிப்பவரும்

ஸம்ராஜம் மஹாவீரம் ஶக்ரஸ்யந்தனஸம்ஸ்திதம் ।
லக்ஷ்மணாத்யைஶ்ச மஹாவீரைர்வ்ருதம் ஹநூமதாதிபி:
ஸுக்ரீவாத்யைஶ்ச மஹாவீரை: ஶைலவ்ருக்ஷகராயு
தை: ।
பூத்காரக்ரூரஹுங்காரகாரகை: ஸமரோத்ஸவை: ॥
கச்சத்பி: பரிவாராத்யை: ஸ்வஸைன்யை ராவணம் ப்ரதி ।
ஸ்ரீராம ஶத்ரூன் ஸஞ்சிந்தி மர்த்தய காதய ॥ 62
பூதப்ரேதபிஶாசாதீன் ஸ்ரீராமாஶு விநாஶய ।
ஏவம் த்யாத்வா ஜபேத்ராமகவசம் ஸித்திதாயகம் ॥ 63
ஸுதீக்ஷ்ண வஜ்ரகவசம் ஶ்லாக்யம் ப்ரோக்தம் மயா தவ ।
ஸ்ரீராம: பாது மே மூர்த்னி பார்ஶ்வே ச ரகுவம்ஶஜ: ॥
தக்ஷிணே ச ரகுவர: பஶ்சிமே பாது பாவன: ।
உத்தரே ச ரகுபதி: பாலே தஶரதாத்மஜ: ॥ 65

மஹாவீரரும் இந்திரரதத்தில் இருப்பவரும் லக்ஷ்மணர் முதலிய சகோதரர்களும் ஹநுமான்முதலியவர்களும் சூழ விளங்குபவரும் 60

மலைமரங்களை ஆயுதமாகக் கையில் கொண்டு குரூரமான ஹுங்கார சப்தம் செய்கிறவர்களும் பூ! பூ! என்ற சப்தம் போடுகிறவர்களும் யுத்தத்தில் ராவணனைப் பிடிக்க ஓடுகிறவர்களுமாகிய சுக்ரீவன் முதலிய வானரர்களுடன் கூடிய ஸ்ரீராம! என் சத்ருக்கூட்டங்களைக் கொல்ல வேண்டும்; மர்த்தனம்செய்ய வேண்டும்; தொலைக்கவேண்டும். 61-62

பூதப்பிரேத பிசாசங்களைச் சீக்கிரமாக நாசம் செய்யவேண்டும்-என்று இவ்விதம் தியானம் செய்து சித்தியைக் கொடுக்கும் ராம கவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 63

சுதீக்ஷ்ண முனிவரே! சிலாக்கியமான இந்த வஜ்ரகவசத்தைக் கூறினேன். ஸ்ரீராமன் சிரசிலும் ரகுவம்சத்தில் ஜனித்தவர் கிழ்ப்பக்கத்திலும் 64

ரகுவீரர் தென்பாகத்திலும் பரிசுத்தன் மேற்புறத்திலும் ரகுபதி வடபுறத்திலும் தசரதாத்துமஜர் நெற்றியிலும், 65

𑌭𑍍𑌰𑍁𑌵𑍌 𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌦𑌲𑌶𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌤𑍁 𑌰𑌾𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌦𑍃𑌶𑍌 𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨𑌃 ॥

𑌘𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑍇 𑌪𑌾𑌤𑍁 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌗𑌣𑍍𑌡𑍌 𑌮𑍇 𑌜𑌾𑌨𑌕𑍀𑌪𑌤𑌿𑌃 ।
𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑍇 𑌖𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑍀 𑌭𑌾𑌲𑌂 𑌮𑍇 𑌰𑌘𑍁𑌵𑌲𑍍𑌲𑌭𑌃 ॥ ௬௭

𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌂 𑌮𑍇 𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑌿𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌦𑌨𑍍𑌤𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍌 𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌓𑌷𑍍𑌠𑍌 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑍇 𑌮𑍁𑌖𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌃 ॥ ௬௮

𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌜𑌗𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍌 𑌮𑍇 𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ।
𑌧𑌨𑍁𑌰𑍍𑌬𑌾𑌣𑌧𑌰𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌭𑍁𑌜𑍌 𑌮𑍇 𑌵𑌾𑌲𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑌃 ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌪𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌮𑍇 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ।
𑌵𑌕𑍍𑌷𑍋 𑌮𑍇 𑌪𑌾𑌤𑍁 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌹𑌰𑌿𑌃 ॥

𑌸𑍍𑌤𑌨𑍌 𑌸𑍀𑌤𑌾𑌪𑌤𑌿𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌮𑍇 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌮𑌧𑍍𑌯𑌂 𑌮𑍇 𑌪𑌾𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍋 𑌨𑌾𑌭𑌿𑌂 𑌮𑍇 𑌰𑌘𑍁𑌨𑌾𑌯𑌕𑌃 ॥ ௭௧

தூர்வாதளசியாமளர் புருவங்களிலும் ஜநார்த்தனர் புருவத்தின் மத்தியிலும் ராஜேந்திரர் காதுகளிலும் ராஜீவலோசனன் கண்களிலும் ராஜரிஷி மூக்கிலும் ஜானகீபதி கன்னத்திலும் கரனைக்கொன்றவர் காதுமூலத்திலும் ரகுசிரேஷ்டன் நெற்றியிலும் 66—67

வாக்குக்குப் பதியாகியவர் நாக்கிலும் ரகூத்தமர் பற்களிலும் ஸ்ரீராமசந்திரர் உதடுகளிலும் பராத்பரன் முகத்திலும் 68

உலகம் வணங்க விளங்குகிறவர் கழுத்திலும் ராவணாந்தகன் தோள்களிலும் வில் பாணங்களைத் தரிப்பவர் கைகளிலும் வாலிமர்த்தனன் விரல்களிலும் 69

ராக்ஷஸாந்தகன் முன் கைகளிலும் காகுஸ்தன் மார்பிலும் ஹரி ஹ்ருதயத்திலும் 70

ஸீதாபதி ஸ்தனங்களிலும் ஜகதீசுவரர் பக்கங்களிலும் லக்ஷ்மீசன் இடையிலும் ரகுநாயகர் நாபியிலும் 71

கௌஸல்யேய: கடிம் பாது ப்ருஷ்டம் துர்கதிநாஶந: |
குஹ்யம் பாது ஹ்ருஷீகேஶ: ஸக்திநீ ஸத்யவிக்ரம: || எ௨
ஊரூ ஶார்ங்கதர: பாது ஜாநுநீ ஹநுமத்ப்ரிய: |
ஜங்கே பாது ஜகத்வ்யாபீ பாதௌ ச தாடகாந்தக: || எ௩
ஸர்வாங்கம் பாது மே விஷ்ணு: ஸர்வஸந்தீநநாமய: |
ஜ்ஞாநேந்த்ரியாணி ப்ராணாதீந் பாது மே மதுஸூதந: ||
பாது ஶ்ரீராமபத்ரோ மே ஶப்தாதீந் விஷயாநபி |
த்விபதாதீநி யாநி ஸம்பந்தீநி யாநி ச || எ௫
ஜாமதக்ந்யமஹாதர்பதஹந: பாது தாநி மே |
ஸௌமித்ரிபூர்வஜ: பாது வாகாதீநீந்த்ரியாணி ச ||
ரோமாங்குராண்யஶேஷாணி பாது ஸுக்ரீவராஜ்யத: |
வாங்மநோபுத்த்யஹங்காரைர்ஜ்ஞாநாஜ்ஞாநக்ருதாநி ச ||

கௌஸல்யா குமாரன் இடுப்பிலும் தீராத ஈதிபாதையை நாசம் செய்பவர் பின்பக்கத்திலும் ஹ்ருஷீகேசர் இரகசிய ஸ்தானத்திலும் சத்தியவிக்ரமர் முழங்கால்களிலும் 72

சார்ங்க மென்கிற வில்லைத் தரித்தவர் தொடைகளிலும் அநுமானிடம் பிரீதியுள்ளவர் முழங்காலுக்கு மேற்புறத்திலும் உலகமெங்கும் வியாபித்தவர் கணைக்கால்களிலும் தாடகாந்தகன் பாதங்களிலும் 73

விஷ்ணு சர்வாங்கத்திலும் ரோகமற்றவர் சந்திகளெல்லாவற்றிலும் மதுசூதனன் ஞானேந்திரியம் பிராணன் முதலியவைகளிலும் 74

ஸ்ரீராமச்சந்திரன் சப்தம்முதலிய விஷயங்களிலும் பரசுராமருடைய கொழுப்பை நாசம் செய்தவர் என்னைச்சேர்ந்தவைகளெல்லாவற்றிலும் சௌமித்திரிக்கு முன்பிறந்தவர் வாய் முதலிய இந்திரியங்களிலும் 75—76

சுக்ரீவனுக்கு ராஜ்யம் கொடுத்தவர் மயிர்க் கால்கள் எல்லாவற்றிலும் ஸாந்நித்தியமாக இருந்துரக்ஷிக்கட்டும். பரமசிவன்வில்லைக் கண்டனம் செய்தவரும் சார்ங்கம்பாணங்கள் இவைகளைத் தரித்தவருமாகிய ராமர் வாக்கு, மனம், புத்தி 77

ஜந்மாந்தரக்ருதாநீஹ பாபாநி விவிதாநி ச |
தாநி ஸர்வாணி த்வம்ஸந்தே கோதண்டதாரிணஃ ||
பாதகாநாம் ஸர்வதோ ரக்ஷா ப்ராஜ்ஞோ பாணாயாஸ்து தா ||

இதி ஸ்ரீராமசந்த்ரஸ்ய கவசம் வஜ்ரஸம்மிதம் |
குஹ்யாத்குஹ்யதமம் திவ்யம் ஸுதீக்ஷ்ண முநிஸத்தம || ௭௯

யஃ படேச்ச்ருணுயாத்வாபி ஸ்ராவயேத ஸமாஹிதஃ |
ஸயாதி பரமம் ஸ்தாநம் ராமசந்த்ர ப்ரஸாததஃ || ௮௦

மஹாபாதகயுக்தோ வா கோக்நோ வா ப்ரூணஹா ததா |
ஸ்ரீராமசந்த்ர கவசபடநாச்சுத்திமாப்நுயாத் || ௮௧

ப்ரஹ்மஹத்யாதிபிஃ பாபைர்முச்யதே நாத்ர ஸம்ஸயஃ ||
போஃ ஸுதீக்ஷ்ண யதாப்ருஷ்டம் த்வயா மம புராசுபம் |
ததா ஸ்ரீராமகவசம் மயாதே விநிவேதிதம் || ௮௩

அகங்காரம் ஞானம் அக்ஞானம் இவைகளால் ஜன்மாந்தரத்திலும் செய்த அனேக பாபங்களைப் போக்கி எப்போதும் எங்கும் பாதுகாக்கட்டும். 78

வஜ்ரத்திற்குச் சமமானதும் ரகசியத்திற்கு ரகசியமானதும் திவ்யமுமான இந்த ஸ்ரீராம கவசத்தை எவன் கேட்கிறானோ எவன் படிக்கிறானோ எவன் கேட்கும்படி செய்கிறானோ அவன் ஸ்ரீராமச்சந்திரர் அநுக்கிரகத்தால் ஏ சுதீக்ஷண முனிவரே! உத்தமமான ஸ்தானமடைவான். 79—80

மஹா பாதகம் செய்தவனாயினும் கோஹத்தி செய்தவனாயினும் பிர்ம்மஹத்தி முதலிய பாபங்களைச் செய்தவனாயினும் ஸ்ரீராமசந்திர கவசத்தைப் பாராயணம் செய்தால் அப்பாபங்களினின்று விடுபட்டுப் பரிசுத்தனாவான். 81—82

ஏ சுதீக்ஷண முனிவரே! நீர் கேட்ட பிரகாரம் ஸ்ரீராமகவசமென்னும் சுபமான விஷயத்தைத் தெரிவித்தேன். 83

ராமதாஸ உவாச

ஏவம் ஶிஷ்யேண ப்ருஷ்டம் ஶ்ரீராமகவசம் மயா |
ஹநூமத்கவசஞ்சாபி ததா தே விநிவேதிதம் || ௮௪
பாராயணந்து ராமஸ்ய கவசேத்ர நமேரஹ்யபி |
விநா ஸீதாகவசேந படநீயம் ந சைவ கதா || ௮௫
ஆதௌ மாருதிகவசம் பாராயணஸ்ய யத்நத: |
படநீயம் தத: ஸீதாயா: கவசம் ஸௌபாக்யவர்தநம் || ௮௬
தத: ஶ்ரீராமகவசம் படநீயமநுத்தமம் |
ஏவமேவ ஹி ஸந்த்ராணஜ்ஞாதவ்யாஸ்த்ரய: க்ரமாத் || ௮௭

விஷ்ணுதாஸ உவாச

குரோஹம் ஶ்ரோதுமிச்சாமி ஸீதாயா: கவசம் ஶுபம் |
ததாந்யாந்யபி சைதாநி ஸ்தோத்ராணி விவக்ஷஸ்வ தத் ||
ஸீதாயாஸ்தோஷஸம்ஹ்ருஷ்டம் தத்ஸர்வம் விஸ்தரேண ச ||

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

சீடனே! நீ கேட்டபடி ஸ்ரீராம கவசத்தையும் அநுமானுடைய கவசத்தையும் தெரிவித்தேன். 84

இந்த இரண்டு கவசங்களையும் ஸீதா கவசமின்றி எப்போதும் பாராயணம் செய்யக்கூடாது. 85

முதலவது அநுமான் கவசத்தைப் பாராயணம் செய்து பிறகு சௌக்கியத்தை விருத்தி செய்யும் ஸீதையின் கவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 86

பிறகு மிகவும் சிறந்த ஸ்ரீராமகவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். இவ்விதம் மூன்று கவசங்களைக் கிரமமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். 87

விஷ்ணுதாஸர் வினவுகிறார்

ஏ குருவே! சுபமாகிய ஸீதா கவசத்தையும் கேட்க விரும்புகிறேன்; தவிர மற்ற ஸ்தோத்திரங்களையும் ஸீதைக்குத் திருப்தியுள்ளவைகளையும் சொல்லவேண்டும். 88

மஹாதேவ உவாச.

இதி தஸ்ய வசநம் ஶ்ருத்வா ராமதாஸோ வசோऽப்ரவீத் ॥

இதி ஶ்ரீ ஆநந்தராமாயணே மநோஹரகாண்டே

த்ரயோதஶஸ்ஸர்க: ॥ அசூ

மஹாதேவர் கூறுகிறார்,

இந்த வார்த்தையைக்கேட்ட இராமதாஸர் சொல்ல யத்தனித்தார். 89

அநுமான் ராமச்சந்திரர் இவர்களுடைய கவசங்களைக்கூறும்

13-வது சருக்கம்

(முற்றிற்று).

॥ ஶ்ரீராமதாஸ உவாச ॥

ஶ்ருணு வக்ஷ்யே ஶுபம் ஸீதாயா: கவசம் ஶுபம்।
புராऽகஸ்த்யேந ஸுதீக்ஷ்ணாய யதுக்தம் ஸுமநோஹரம்॥ க

ஏகதா ஸுமநோஹரம் ஸுதீக்ஷ்ண: ப்ரணிபத்ய முநி:।
ப்ரஹ்வ: ப்ரணம்ய பப்ரச்ச அகஸ்த்யம் புராணஸம்ஹிதாவிதம்॥ உ

14-வது சருக்கம்

ராமதாஸர் கூறுகிறார்

சீடனே! முன் அகஸ்திய முனிவர் சுதீக்ஷண முனிவருக்கு உபதேசம் செய்த ரம்மியமான ஸீதாகவசத்தைக் கூறுகிறேன் கேள். 1

ஒரு சமயம் ஏகாந்தத்திலிருக்கும் குருவாகிய அகஸ்திய மகா முனிவரை சுதீக்ஷண முனிவர் நமஸ்காரஞ் செய்து பக்தியுடன் வினவுகிறார். 2

ஸுதீக்ஷ்ண உவாச.

முநேऽதாஹம் ஶ்ரோதுமிச்சாமி ஸீதாயா: ஸ்துதிஹாநிதம்।
யாநி ஸ்தோத்ராணி கவசாநி தாநி ஸம்வக்துமர்ஹஸி॥

அகஸ்த்ய உவாச.

ஸம்யக்ப்ருஷ்டம் த்வயா வத்ஸ ஸாவதாநமநா: ஶ்ருணு।
ஆதௌ வக்ஷ்யாம்யஹம் ரம்யம் ஸீதாயா: கவசம் ஶுபம்॥ யா
ஸீதாவநிஸம்பவாத மிதிலாபாலேந ஸம்வர்திதா।
பத்மாக்ஷந்ருபதேஸ்ஸுதா நலகதா யா மாதுலுங்கோத்பவா॥
யா ரத்நே லயமாகதா ஜலநிதௌ யா வேதவாரங்கதா।
லங்காம் ஸா ம்ருகலோசநா ஶஶிமுகீ மாம் பாது ராமப்ரியா॥

அஸ்ய ஶ்ரீ ஸீதாகவசஸ்தோத்ரஸ்ய॥ அகஸ்த்ய
ருஷி:॥ ஶ்ரீ ஸீதா தேவதா॥ அநுஷ்டுப் சந்த:॥ ரமேதி
பீஜம்॥ ஜநகஜேதி ஶக்தி:॥ அவநிஜேதி கீலகம்॥ பத்மாக்ஷ
ஸுதேத்யஸ்த்ரம்॥ மாதுலிங்கீதி கவசம்॥ மூலகாஸுர

சுதீக்ஷ்ணமுனிவர் வினவுகிறார்.

குருவே! ஸீதைக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் ஸ்தோத்திரங்கள் யாவையும் நான் கேட்க விரும்புகிறேன். தாங்கள் உபதேசம் செய்யவேண்டும். 3

அகஸ்தியமுனிவர் கூறுகிறார்.

பாலக! நீ நன்றாக வினவினாய், முதலில் ரம்யமான ஸீதையின் கவசத்தையும் கூறுகிறேன். சாவதான மனதுடன்கேள். 4

பூமியில் பிறந்து மிதிலைக்கு அதிபனாகிய ஜனகமஹா ராஜனால் வளர்க்கப்பட்டவளும் பத்மாக்ஷன் என்ற அரசனுக்குப் பெண்ணாகி அக்நியில் பிரவேசம் செய்தவளும் மாதுளையில் உண்டானவளும் ரத்தினத்தில் லயமடைந்தவளும் சமுத்திரத்தில் மறைந்தவளும் இலங்கைக்கு நான்குதடவை வந்தவளும் மான்போன்ற விழியும் சந்திரன் போன்ற முகமுமுள்ளவளுமாகிய ராமப்பிரியை என்னை இரக்ஷிக்கட்டும். 5

வால்மீகி ருஷி: || ஶ்ரீ ஸீதாராமசந்த்ர ப்ரீத்யர்த்தம் ஸகல
காமநாஸித்த்யர்த்தம் ஜபே விநியோக: || அதகரந்யா
ஓம் ஹ்ராம் ஸீதாயை அங்குஷ்டாப்யாம் நம: || [ஸ: ||
ஓம் ஹ்ரீம் ராமாயை தர்ஜநீப்யாம் நம: ||
ஓம் ஹ்ரூம் ஜநகாத்மஜாயை மத்யமாப்யாம் நம: ||
ஓம் ஹ்ரைம் அவநிஜாயை அநாமிகாப்யாம் நம: ||
ஓம் ஹ்ரௌம் பத்மாக்ஷஸுதாயை கநிஷ்டிகாப்யாம் நம:
ஓம் ஹ்ர: பூமாத்மஜாயை கரதலகரப்ருஷ்டாப்யாம் நம: ||
ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ: கார்ய: ||

அத த்யாநம்.

ஸீதாம் கமலபத்ராக்ஷீம் வித்யுத்புஞ்ஜஸமப்ரபாம் |
த்விபுஜாம் ஸுகுமாராங்கீம் பீதகௌஶேயவாஸிநீம் ||
ஸிம்ஹாஸநே ராமசந்த்ர வாமபாகஸ்திதாம் வராம் |
நாநாலங்காரஸம்யுக்தாம் குண்டலத்வயதாரிணீம் || ௭
சூடாகங்கணகேயூர ரஶநாநூபுராந்விதாம் |
ஸீமந்தே ரவிசந்த்ராப்யாம் நிடிலே திலகேந ச || ௮
மயூராபரணேநாபி நாஸாயாம் ஶோபிதாம் ஶிவாம் |
ஹரித்ராம் கஜ்ஜலம் திவ்யம் கும்குமம் குஸுமாநி ச || ௯

பிறகு தியானம்.

தாமரைதளம் போன்ற கண்ணுள்ளவளும் மின்னற்கூட்டம் போன்ற ஒளியுள்ளவளும் இருகைகளையுடையவளும் சுகமான சரீரமுள்ளவளும் மஞ்சள்வர்ணமுள்ள பட்டாடைதரித்தவளும் 6

ஸிம்மாஸனத்தில் ஸ்ரீராமச்சந்திரருக்குஇடதுபக்கத்தில் வீற்றிருப்பவளும் சிரேஷ்டமானவளும் அனேக அலங்காரஞ் செய்துகொண்டவளும் இரண்டு குண்டலமணிந்தவளும் 7

சூடாமணி கங்கணம் கேயூரம் தண்டை இவைகளையணிந்தவளும் சந்திரப்பிறை சூரியப்பிறை தரித்தவளும் நெற்றியில் திலகமணிந்தவளும் 8

மூக்கில் மயில் போன்ற ஆபரணமணிந்தவளும் மங்களசொரூபியும் மஞ்சள், மை திவ்விய குங்குமம், புஷ்பம், 9

𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌂 𑌸𑌾𑌰𑌸𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌸𑍍𑌨𑍇𑌹𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌂 𑌗𑍌𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌕𑍁𑌸𑍁𑌮𑌂 𑌕𑌰𑍇 ॥ ௰

𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌂 𑌚 𑌪𑌰𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾𑌤𑍁𑌲𑍁𑌙𑍍𑌗𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌰𑌮𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑌾𑌞𑍍𑌚 𑌬𑌿𑌮𑍍𑌬𑍋𑌷𑍍𑌠𑍀𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌾𑌹𑌨𑌲𑍋𑌚𑌨𑌾𑌮𑍍 ॥

𑌕𑌲𑌾𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌕𑌲𑌕𑌣𑍍𑌠𑌮𑌨𑍋𑌰𑌮𑌾𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑍁𑌲𑍁𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 ॥

𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂 𑌰𑌾𑌮𑌦𑌯𑌿𑌤𑌾𑌂 𑌦𑌾𑌸𑍀𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍀𑌜𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌏𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌨𑌕𑌜𑌾𑌂 𑌹𑍇𑌮𑌕𑍁𑌮𑍍𑌭𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌮𑍍 ॥ ௧௧

𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌃 𑌕𑌵𑌚𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌪𑌠𑌨𑍀𑌯𑌂 𑌶𑍁𑌭𑌾𑌵𑌹𑌮𑍍 ।
𑌸𑍀𑌤𑌾 𑌮𑍇 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌽𑌵𑌤𑍁 𑌜𑌾𑌨𑌕𑍀 ॥
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌯𑌾𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌪𑌾𑌤𑍂𑌦𑍀𑌚𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 ॥

வாசனைத் திரவியம் சுகந்த தைலம் இவைகளைத் தரித்தவளும் கையில் மந்தாரமலர் அணிந்தவளும் வெண்மை வர்ணமுள்ளவளும் புன்னகை கொண்ட முகமுள்ளவளும் 10

மற்றொரு கையில் சிலாக்கியமான மாதுளையைத் தரித்தவளும் ரம்மியமான கைகளையுடையவளும் கோவைக்கனிபோன்ற உதடுகளுடன் கூடியவளும் மான் விழி போன்ற விழியுடையவளும் 11

சந்திரன் பேன்ற முகமுள்ளவளும் மனோக்ஞமானவளும் மதுரமொழி பகருகிறவளும் மாதுளையிலிருந் துண்டானவளும் தேவியானவளும் பத்மாக்ஷனுக்குப் பெண்ணானவளும் 12

மிதிலாபதிக்குக் குமாரியும் ராமருக்குப் பிரியமானவளும் சொர்ண கும்பத்திற்கு நேரான ஸ்தனமுள்ளவளுமாகிய ஸீதையைத் தியானம் செய்து மனோக்ஞமான இந்த ஸீதா கவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 13—14

ஸ்ரீஸீதாதேவி கீழ்ப்பக்கத்திலும் ஜனககுமாரி தென்பக்கத்திலும் வைதேஹி மேற்பக்கத்திலும் மைதிலி வடபுறத்திலும் 15

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

மாதுளையிலுண்டானவள் கீழ்ப்பக்கத்திலும் பத்மாக்ஷனுக்குண்டானவள் உயரத்திலும் பூமியின் பெண் மத்தியிலும் இலக்ஷ்மீதேவி எல்லா இடத்திலும் 16

புன்னகை கொண்ட முகங் கொண்டவள் சிரசிலும் ராஜகுமாரி நெற்றியிலும் பத்மை புருவங்களின் மத்தியிலும் மான் விழியுள்ளவள் நேத்திரங்களிலும் 17

ஸ்ரீராமபுத்திரி போலவும் செவி இவைகளின் அடிப்பிரதேசங்களிலும் சத்துவகுண முள்ளவள் மூக்கு நுனியிலும் ரஜோகுணமுள்ளவள் முகத்திலும் 18

தமோகுண முள்ளவள் என் வார்த்தையிலும் பதிவிரதா குணமுடையவள் நாக்கிலும் மஹா மாயை என் பற்களிலும் சொர்ண காந்தியுள்ளவள் மோவாக் கட்டையிலும் 19

பிரஸன்ன உருவமுடையவள் கழுத்திலும் தேவர்களால் பூஜிக்கத்தகுந்தவள் தோள்களிலும் வராரோஹை கைகளிலும் தங்கண மணிந்தவள் முன் கைகளிலும் 20

ரக்தநகா நகாந் பாது க்ருசோதரீ பாதூதரம் |
வக்ஷ: பாது ராமபத்நீ பார்ச்வே ராவணமோஹிநீ ||

ப்ருஷ்டதேசே வஹ்நிகுப்தா வதாத் ஸா ஸுகதேவ ஹி |
திவ்யப்ரதா பாது நாபிம் கடிம் ராக்ஷஸமோஹிநீ ||

குஹ்யம் பாது ரத்நகுப்தா லிங்கம் பாது ஹரிப்ரியா |
ஊரூ ரக்ஷது ரம்போரூ ஜாநுநீ ப்ரியபாஷிணீ ||

ஜங்கே பாது ஸதா ஸுப்ரூர் குல்பௌ சாமரவீஜிதா |
பாதௌ லவஸுதா பாது பாதாங்காநி குசாம்பிகா ||

பாதாங்குலீ: ஸதா பாது மம நூபுரநிஸ்வநா |
ரோமாண்யவது மே நித்யம் பீதகௌசேயவாஸிநீ ||

சிவந்த நகமுள்ளவள் நகங்களினும் சிறிதாகிய வயிறுள்ளவள் வயிற்றிலும் ராமபத்நினி மார்பிலும் ராவணனை மோகப் படுத்தியவள் பக்கங்களிலும். 21

அக்நியால் ரக்ஷிக்கப்பட்டவள் பின்புறத்திலும் திவ்விய சுகம் கொடுப்பவள் நாபியிலும் ராக்ஷஸர்களை மோகப்படுத்தியவள் இடுப்பிலும் 22

இரத்தினத்தில் அடங்கியவள் இரகசிய ஸ்தானத்திலும் விஷ்ணுவிடம் பிரீதியுள்ளவள் லிங்கத்திலும் வாழைமரம் போன்ற துடைகளுடையவள் துடைகளிலும் பிரியவசனம் பேசுகிறவள் முழங்கால்களிலும் 23

நல்ல புருவமுடையவள் கணைக்கால்களிலும் சாமரத்தால் வீசப்படுகிறவள் பின்னங்கால்களிலும் லவனைப் பிள்ளையாய் அடைந்தவள் பாதங்களிலும் குசனுக்குத் தாயானவள் அவயவங்களிலும் 24

ஒலிக்கும் தண்டைகளணிந்துள்ளவள் பாதத்தின் விரல்களிலும் மஞ்சட் பட்டுவஸ்திரம் தரிப்பவள் ரோமங்களிலும். 25

ராத்ரௌ பாது காலரூபா திநே தாநைகதத்பரா|
ஸர்வகாலேஷு மாம் பாது மூலகாஸுரகாதிநீ||

ஏவம் ஸுதீக்ஷ்ண ஸீதாயா: கவசம் தே மயேரிதம்|
இதம் ப்ராத: ஸமுத்தாய ஸ்நாத்வா நித்யம் படேத்து ய: || ௨௭

ஜாநகீம் பூஜயித்வா ஸ ஸர்வாந் காமாநவாப்நுயாத்|
தநார்தீ ப்ராப்நுயாத்த்ரவ்யம் புத்ரார்தீ புத்ரமாப்நுயாத்||
ஸ்த்ரீகாமார்தீ ஶுபாம் நாரீம் ஸுகார்தீ ஸௌக்யமாப்நுயாத்
அஷ்டவாரம் ஜபநீயம் ஸீதாயா: கவசம் ஸதா|| ௨௯

அஷ்டஸஹஸ்ர ஸீதாயை நமோ: ப்ரீத்யாப்ய தேயஸதா|
மேருவஷ்டாஜீகாதீநி யாநி தாநி ப்ரயச்சயேத்|| ௩௰

காலரூப முள்ளவள் இரவிலும் தானம் செய்வதில் கருத்துள்ளவள் பகலிலும் மூலகாசுர ஸம்ஹாரம் செய்தவள் எல்லா வேளையிலும் இருந்து காப்பாற்ற வேண்டும். 26

ஏ சுதீக்ஷ்ண முனிவரே! இவ்விதம் ஸீதாகவசம் கூறினேன். இந்த ஸீதா கவசத்தைக் காலையில் எழுந்து எவன் பாராயணம் செய்து ஸீதையையும் பூஜிக்கிறானோ அவன் மனோரதமெல்லாவற்றையு மடைவான். 27

பொருளை விரும்பியவன் பொருளையும், புத்திர ஸம்பத்தை விரும்பியவன் புத்திர ஸம்பத்தையும் அடைவான். ஸ்திரீயை விரும்பியவன் அழகான மனைவியையும், சுகத்தை விரும்பியவன் சௌக்கியத்தையும் அடைவான். 28-29

எப்போதும் ஸீதையின் கவசத்தை எட்டுத் தடவை பாராயணம் செய்து எட்டுப் பழம் எட்டுப் புஷ்பம் முதலியவைகளை ப்ரீதியுடன் ஸீதையின் ப்ரீதியை உத்தேசித்துத் தானஞ்செய்ய வேண்டும். 30

ஸீதாயா: கவசம் திவ்யம் ஸர்வபாதகநாஶநம் ।
யே படந்தி நரா பக்த்யா தே தந்யா மாநவா புவி ॥ ௧௧

படந்தி ராமகவசம் ஸீதாயா: கவசம் விநா ।
ததா விநா லக்ஷ்மணஸ்ய கவசேந வ்ருதா ஸ்ம்ருதம் ॥ ௧௨

தஸ்மாத் ஸதா நரைர்ஜாப்யம் கவசாநாம் சதுஷ்டயம் ।
ஆதௌ து வாயுபுத்ரஸ்ய லக்ஷ்மணஸ்ய தத: பரம் ॥

தத: படேச்ச ஸீதாயா: ஸ்ரீராமஸ்ய தத: பரம் ।
ஏவம் ஸதா ஜபநீயம் கவசாநாம் சதுஷ்டயம் ॥ ௧௪

இதி ஸீதாகவசம்

ஏவம் ஸுதீக்ஷ்ண ஸீதாயா: கவசம் தே மயேரிதம் ।
அத: பரம் ஶ்ருணுஷ்வ த்வம் ஸீதாயா: ஸ்தோத்ரமுத்தமம் ॥

பாபங்களைப் போக்கிப்புண்ணியத்தைவிருத்திசெய்யும் இந்த ஸீதா கவசத்தைப் பாராயணம் செய்பவர்கள் கிருதார்த்தர் களாவார்கள். 31

ஸீதையின் கவசத்தையும் லக்ஷ்மணன் கவசத்தையும் பாராயணஞ் செய்யாமல் ஸ்ரீராம கவசத்தை மட்டும் பாராயணம் செய்வது பயனற்றதாகும். 32

ஆகையால் மானிடர்கள் முதலில் அநுமானுடைய கவசத்தையும் பிறகு லக்ஷ்மணருடைய கவசத்தையும் பிறகு ஸீதையுடைய கவசத்தையும் பிறகு ஸ்ரீ ராமருடைய கவசத்தையும் பாராயணம் செய்யவேண்டும். 33–34

ஸீதாகவசம் முற்றிற்று.

சுதீக்ஷ்ண முனிவரே! இவ்விதம் ஸீதையின் கவசத்தை உனக்குக் கூறினேன். இனி, நான் கூறும் ஸீதையின் ஸ்தோத்திரத்தைக் கேளும். 35

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இந்த ஸ்தோத்திரத்தில் ஸீதையின் நாமதேயங்கள் நூற்றெட்டு அடங்கி யிருக்கின்றன. 36

எவர்கள் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்கிறார்களோ அவர்கள் ஜன்மந்தான் பிரயோஜனமுள்ளதாகும். அவர்கள் தாம் தன்னியர்கள். அவர்கள் வைகுண்டபதவி யடைவார்கள். 37

தியானம்.

ஸ்ரீராமச் சந்திரனுடைய அழகான இடது பக்கத்தில் இருப்பவளும் மங்கள சொரூப முள்ளவளும் பிராம்மணர்களுக்கு

வித்யுத்புஞ்ஜவிராஜமாநவஸநா ஹஸ்தாத்ரிஸம்ஸ்தேக்ஷணா
ஸ்ரீராமஸ்ய பதாப்ஜயோர்ஹி நிதராம் நேத்ரா ஸீதா ஸாऽவதாத் ||

ஸ்ரீ ஸீதா ஜாநகீ தேவீ வைதேஹீ ராகவப்ரியா |
ரமாவநிஸுதா ராமா ராக்ஷஸாந்தப்ரகாரிணீ || ௩௯

ரத்நகுப்தா மாதுலிங்கீ மைதிலீ பக்ததோஷதா |
பத்மாக்ஷஜா கஞ்ஜநேத்ரா ஸ்மிதாஸ்யா நூபுரஸ்வநா ||

வைகுண்டநிலயா மா ஸ்ரீ முக்திதா காமபூரணீ |
நிருபாத்மஜா ஹேமவர்ணா ம்ருதுலாங்கீ ஸுபாஷிணீ ||

குருவாகிய பிர்ம தேவரின் வாகனமாகிய ஹம்ஸ பக்ஷிக்கு இருப்பிடமான தாமரஸ புஷ்பம்போல் கண்ணழகுள்ளவளும் பிராமணர்களைப் பரிபாலிப்பவராகிய ராமரிடம் பார்வையுள்ளவளும் மின்னற் குவியல் போன்ற பிரகாசமுள்ள வஸ்திரமணிந்தவளும் பக்தர்களின் துக்கத்தைக் கண்டனம் செய்பவளும் ஸ்ரீராமச் சந்திரருடைய தாமரைப் பூப்போன்ற பாதங்களில் நேத்திரமுள்ளவளுமாகிய ஸீதை ரக்ஷிக்கவேண்டும். 38

ஸ்ரீ ஸீதை, ஜானகி, தேவி, வைதேஹி, ராகவப்பிரியை, ரமை, பூபுத்திரி, ராமை, ராக்ஷஸர்களை நாசம் செய்பவள், இரத்தினத்தில் அடங்கி வாசஞ் செய்தவள், மாதுளையில் உண்டானவள், மைதிலி, பக்தர்களுக்கு ஸந்தோஷமளிப்பவள், பத்மாக்ஷனிடம் உண்டானவள், தாமரைப் பூப்போன்ற கண்ணுள்ளவள், புன்னகைகொண்ட முகமுள்ளவள், ஒலிக்கும் தண்டை யணிந்தவள். 39-40

வைகுண்டவாஸி, லக்ஷ்மி (மா) என்ற பெயருள்ளவள், மோக்ஷ மளிப்பவள், இஷ்டத்தை நிறைவேற்றுகிறவள், ராஜ குமாரி, சொர்ண வர்ணமுள்ளவள், மிருதுவான சரீரமுள்ளவள், இனிய மொழியை உடையவள், 41

குஶாம்பிகா திவ்யஸுகதா லவமாதா மநோஹரா |
ஹநூமத்வந்திதபதா ஶுப்ரா கேயூரதாரிணீ || ௪௨

அஶோகவநமத்யஸ்தா ராவணாதிகமோஹிநீ |
விமாநஸம்ஸ்திதா ஸுப்ரூஸ்ஸுகேஶீ ரஶநாந்விதா ||

ரஜோரூபா ஸத்த்வரூபா தாமஸீ வஹ்நிவாஸிநீ |
ஹேமம்ருகாஸக்தசித்தா வால்மீக்யாஶ்ரமவாஸிநீ || ௪௪

பதிவ்ரதா மஹாமாயா பீதகௌஶேயவாஸிநீ |
ம்ருகநேத்ரா ச பிம்போஷ்டீ தநுர்வித்யாவிஶாரதா ||

ஸௌம்யரூபா தஶரதஸ்நுஷா சாமரவீஜிதா |
ஸுமேதாதுஹிதா திவ்யரூபா த்ரைலோக்யபாலிநீ ||

குசனுக்கு மாதாவானவள் திவ்விய சுகங்கொடுக்கும் மகிமையுள்ளவள், லவனுக்குத் தாயானவள், மனோஞ்ஞை, அநுமான் நமஸ்கரிக்கும் பாதமுள்ளவள், கேயூர மணிந்தவள், 42

அசோகவனத்தின் மத்தியி லிருப்பவள், ராவணன் முதலியவர்களை மோகப்படுத்தியவள், 43

விமானத்தி லிருப்பவள், நல்ல புருவமுடையவள், நல்ல கேசபாசமுடையவள், மேகலாபரண மணிந்தவள், ரஜோரூபமுள்ளவள், சத்துவரூபமுள்ளவள், தமோவடிவமுள்ளவள், அக்நியில் வசிப்பவள், சொர்ண மிருகத்திடம் செலுத்திய மனமுள்ளவள், வான்மீகிமுனிவ ராச்சிரமத்தில் வசித்தவள், 44

பதிவிரதை, மஹாமாயை, மஞ்சட் பட்டாடை யுடுப்பவள், மான் விழிபோன்ற விழியுடையவள், கோவைப்பழம் போன்ற உதடுகளுடையவள், தநுர் வித்தையிற் சிறந்தவள், சௌம்மிய ரூபமுடையவள், தசரத ராஜனுக்கு மருமகளானவள், சாமரம் வீசும் உபசாரமுடையவள், ஸுமேதைக்குப் புத்திரியானவள், திவ்விய ரூபமுள்ளவள், மூவுலகத்தையும் காப்பவள், 45-46

அந்நபூர்ணா மஹாலக்ஷ்மீர் புத்திர்லஜ்ஜா ஸரஸ்வதீ |
ஶாந்தி: புஷ்டி: ஸமா கௌரீ ப்ரபாऽயோத்யா நிவாஸிநீ ||
வஸந்த ஶீதலா கௌரீஸ்நாந ஸந்தோஷ மாநஸா |
ரமா நாம ஹ்ருத்ஸம்ஸ்தா ஹேமகும்ப பயோதரா || ௪௮
ஸுரார்சிதா த்ருதி: காந்தி: ஸ்ம்ருதிர்மேதா விபாவரீ |
க்ருஶோதரீ வராரோஹா ஹேமகங்கணமண்டிதா || ௪௯
முநிபத்நீவிதீர்ண நிஜவேஷா ராமதோஷிணீ |
ஶ்ரீராமஸேவநரதா ரத்நதாடங்கதாரிணீ || ௫௦
ராமவாமாங்கஸம்ஸ்தா ச ராமசந்த்ரப்ரரஞ்ஜிநீ |
ஸரயூஜலஸங்க்ரீடாகாரிணீ ராமமோஹிநீ || ௫௧

அன்னபூர்ணை, மஹாலக்ஷ்மி, புத்தி சொரூபமுடையவள், லஜ்ஜையே உருவமாக வுடையவள், ஸரஸ்வதி, சாந்தி, புஷ்டி, சமகுணமுள்ளவள், கௌரீ, பிரபை, அயோத்தியில் வசிப்பவள், வசந்த காலத்தில் சீதளா கௌரீஸ்நானஞ் செய்வதில் ஸந்தோஷ முள்ள மனமுடையவள், ரமை என்ற பதாத்திலிருப்பவள், சொர்ண கும்பம் போன்ற ஸ்தனபாரமுள்ளவள், 47-48-49

தேவர்களால் பூஜையை அடைகிறவள், தைரிய சொரூபமுள்ளவள், காந்தி, ஸ்மிருதி, மேதை, இராத்திரி, இளைத்த வயிறுள்ளவள், வராரோகை, சொர்ண கங்கணங்களை யணிந்தவள், 49

முனிபத்தினி கொடுத்த ஆபரணங்களால் ஸ்ரீராமரைச் சந்தோஷப் படுத்துகிறவள், ஸ்ரீராமருக்குப் பணிவிடை புரிவதில் ஆவலுள்ளவள், இரத்தினதாடங்க மணிந்தவள். 50

ஸ்ரீராமருடைய இடது பக்கத்தி லிருப்பவள், ஸ்ரீராமச்சந்திரரை முக்கியமாகத் திருப்தி செய்விப்பவள், சரயுவின் ஜலத்தில் கிரீடிப்பவள், ராமரை மோகப் படுத்தியவள், 51

ஸ்வர்ணப்ரபூதா புண்யரூபா புண்யகீர்த்தி: கலாவதீ |
கலகண்டா கம்புகண்டா ரம்போருர்கஜகாமிநீ || ௫௨

ராமார்ப்பிதமநா ராமவந்திதா ராமவல்லபா |
ஶ்ரீராமபதசிஹ்நாங்கா ராமராமேதிபாஷிணீ || ௫௩

ராமபர்யங்கஶயநா ராமாங்க்ரிக்ஷாலிநீ வரா |
காமதேந்வந்நஸந்துஷ்டா மாதுலுங்ககராத்ருதா || ௫௪

திவ்யசந்தநஸம்ஸ்தா ஶ்ரீ: மூலகாஸுரமர்திநீ |
ஏவமஷ்டோத்தரஶதம் ஸீதாநாம்நாம் ஸுவர்ணிதம் ||
யே படந்தி நரா பூம்யாம் தே தந்யா: ஸ்வர்ககாமிந: |
அஷ்டோத்தரஶதம் நாம்நாம் ஸீதாயா: ஸ்தோத்ரமுத்தமம் ||

சொர்ணத்துக் கொப்பானவள், புண்ணிய சொரூபமுள்ளவள், புண்ணிய கீர்த்தியுள்ளவள், கலாவதி, நல்ல குரலுடையவள், சங்கம் போன்ற கழுத்துடையவள், வாழைபோன்ற துடையுள்ளவள், யானைபோல் நடை யமைந்தவள். 52

ராமரிடம் மனதைச் செலுத்தியவள், ராமை, ராமரால் ஸ்துதிக்கப்படுகிறவள், ராமவல்லபை, ஸ்ரீராமருடைய பாதங்களின் அடையாளமுள்ள மடியை உடையவள், ராம ராம என்று சொல்லிக்கொண் டிருப்பவள். 53

ராமருடைய படுக்கையில் சயனிப்பவள், ராமருடைய பாதங்களை அலம்புகிறவள், காமதேநுவால் உண்டான அன்னமுண்டு சந்தோஷமடைந்தவள், கையில் மாதுளையைத் தரித்தவள், திவ்விய சந்தன வாசமுடையவள், மூலகாசுர சம்ஹாரிணி இவை முதலிய நூற்றெட்டு நாமங்கள் ஸீதைக்குரியன. இவைகள் மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கக் கூடியவைகள். 54-55

ஸீதையின் நூற்றெட்டு நாமதேயங்களடங்கிய இந்த ஸ்தோத்திரம் செய்பவர்கள் கிருதார்த்தர்கள். அவர்கள் தாம் சொர்க்கம் அடைகிறவர்கள். 56

ஜபநீயம் ப்ரயத்நேந ஸர்வதா பக்திபூர்வகம் ।
ஸந்தி ஸ்தோத்ராண்யநேகாநி புண்யதாநி மஹாந்தி ச ॥
நைதேந ஸத்ருஶாநீஹ தாநி ஸர்வாணி பூஸுர ।
ஸ்தோத்ராணாமுத்தமம் சேதம் புக்திமுக்திப்ரதம் ந்ருணாம் ॥
ஏவம் ஸுதீக்ஷ்ண தே ப்ரோக்தமஷ்டோத்தரஶதம் ஶுபம் ।
ஸீதாநாம்நாம் புண்யதம் ச ஶ்ரவணாந்மங்கலப்ரதம் ॥ ௫௯
நரை: ப்ராத: ஸமுத்தாய படிதவ்யம் ப்ரயத்நத: ।
ஸீதாபூஜநகாலேऽபி ஸர்வவாஞ்சிததாயகம் ॥' ௬௰

புண்ணியத்தைக் கொடுக்கும் ஸ்தோத்திர மனேக மிருக்கின்றன. ஆயினும் இதற்குச் சமமாகாது. ஆகையால் இந்த ஸீதா ஸ்தோத்திரத்தைப் பக்தியுடன் ஜபம் செய்யவேண்டும். இந்த ஸ்தோத்திரம் மற்ற ஸ்தோத்திரங்களைக் காட்டிலும் சிறந்தது. இகத்தில் போகத்தையும், பரத்தில் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடியது. 57-58

ஏ சுதீக்ஷ்ண முனிவரே! சிரவணம் செய்வதால் மங்களங்களைக் கொடுக்கும் ஸீதையின் நூற்றெட்டு நாமதேயங்களடங்கிய ஸ்தோத்திரத்தை உபதேசித்தேன். 59

மானிடர்கள் காலையிலும் ஸீதையைப் பூஜிக்குந் தருணத்திலும் மனோபீஷ்ட மெல்லாவற்றையும் பூர்த்திசெய்யு மிந்த ஸ்தோத்திரத்தைப் பிரயத்தினமெடுத்துக்கொண்டு பாராயணம் செய்யவேண்டும். 60

ஸீதாதேவிக்குச் ஸந்தோஷத்தைக் கொடுக்கும் சிறந்த விரதங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றை இப்போது சொல்லுகிறேன். ஸ்திரீகள் ஸீதையின் ஸந்தோஷத்திற்காக ஸீதையால் உண்டுபண்ணப்பட்ட ஸீதா தீர்த்தத்தில் வசந்த காலத்தில் சிதளா, கௌரீ ஸ்நானம் செய்யவேண்டும். எந்த விடத்தில் ஸீதாதீர்த்தமும் ராம தீர்த்தமும் இல்லையோ, அப்பொழுது லக்ஷ்மி, கௌரீ, ஸரஸ்வதி இவர்களின் தீர்த்தங்

அந்யதீர்த்தாதிதோஷாணி வ்ரதாநி நியமாநி ச |
யாநி ஸந்த்யஜ்யதே சிஷ்டாநி ஸர்வதாராதநாநி ச || ௬௧
நாரீபிஸ்ஸ்த்ரஸ்து ஸந்தாநகாமம் ஸீதாயாஸ்து விதீயதே |
வஸந்தசீதளா கௌரீஸ்நாநம் தீர்த்தே து தத்க்ருதே || ௬௨
யத்ர ஸீதாக்ருதம் தீர்த்தம் ராமதீர்த்தம் ந வர்த்ததே |
தத்ராகஸ்த்யஸ்ய ஜாயாயாஸ் ஸரஸ்வத்யாஸ் திதீயகா ||
தீர்த்தேஷு ச ஸநாகாமம் ததைவ நதீஷு ச |
யத்ர யத்ர ராமதீர்த்தம் தத்ர வை ஜாநகீக்ருதம் || ௬௪
ஸௌபாக்யம் தீர்த்தஸ்நாநம் ஸௌபாக்யஞ்ச ப்ரவர்த்ததே |
வஸந்தசீதளா கௌரீஸ்நாநம் ஸௌக்யப்ரதம் || ௬௫
நகுர்வந்த்யா நாரீ ஸ்நாநம் ஸ்நாநம் ஸப்தஜந்மஸு |
பவந்தி விதவாஸ்ஸ்த்ரீயோ ஸ்நாநம் ஸர்வத்ர ச ||

களில் ஸ்நானம் செய்யவேண்டும். இவைகளுமில்லாவிடில் நதிகளில் ஸ்னானம் செய்யவேண்டும். எந்தெந்தவிடத்தில் ராமதீர்த்தமிருக்கிறதோ அந்தந்த விடத்தில் இடதுபுறத்தில் ஸீதாதீர்த்தமிருப்பதாக அறியவேண்டும். ஸ்திரீகள், சௌபாக்கியத்தை விருத்திசெய்யும் வசந்த சீதளா கௌரிஸ்னானத்தைச் செய்யாவிடில் ஏழு ஜன்மம் வரையில் விதவைகளாவார்கள். ஆகையால் அவசியம் ஸ்னானம் செய்யவேண்டும். 60—65

சுதீக்ஷ்ணமுனிவர் வினவுகிறார்.

ஏ குருவே! ஸ்திரீகள் வசந்த சீதளா கௌரிஸ்னான விரதத்தின் உத்தியாபனத்தை எவ்விதம் செய்வது? அதை விஸ்தாரமாகத் தெரிவிக்கவேண்டும் என்று வினவினார்.

அகத்தியமுனிவர் கூறுகிறார்.

சுதீக்ஷ்ணமுனிவரே! நன்றாகக் கேட்பீர். ஆதரவுடன் கேளும். ஸ்திரீகள் சைத்திரமாசம் சுக்லபக்ஷம் திருதியை முதல் தினந்தோறும் முப்பதுநாள் வரையில் ஸ்னானம் செய்யவேண்

டும். வைசாகமாஸம் சுக்லபக்ஷம் திவிதீயையில் உபவாசமிருந்து முன் கூறியதுபோல் மண்டபம் முதலியவைகளை ஏற்படுத்தி இரவில் விதிப்படி அந்த மண்டபத்தில் ஆயிரத்தெட்டு நாமதேயங்களடங்கிய ராம மந்திரத்தையாவது அல்லது நூற்றெட்டு நாமதேயங்களடங்கிய பத்ரத்தையாவது ஸ்தாபித்து அதன் நடுவில் பத்மமெழுதித் தானியத்தைக் குவியலாகக்கொட்டி அதில் ஜலம் நிறைந்த குடத்தைவைத்து, அதன்மேல் அகலமான தாம்பிரபாத்திரத்தை வைத்து, அதைப் பட்டு வஸ்திரங்களாலலங்கரித்து அதன்மேல் சொர்ணத்தால் ஸீதா ராமர்களின் இரண்டு பிரதிமைகளை வைத்துப் பதினாறு உபசாரங்களால் பூஜைசெய்ய வேண்டும். ஒன்பது உளுந்து எடையுள்ள சொர்ணத்தால் ராமப் பிரதிமையையும் எட்டு உளுந்து எடையுள்ள சொர்ணத்தால் ஸீதையின் பிரதிமையையும் அல்லது தன் சக்தியை அநுசரித்து மூர்த்திகளில் இரண்டை வெள்ளியினாலாவது ஏற்படுத்திப் பூஜிக்க வேண்டும். ஸீதாதேவிக்குச் சந்தனம் புஷ்பம் தீபம் நைவேத்தியம் வஸ்திரம் முதலியவைகளைத் தனித்தனியாக எட்டுவகையாகவும் கொடுக்கவேண்டும். பிறகு ஸ்திரீகளுக்கு வஸ்திரம், அலங்கார வஸ்துக்கள், குங்குமம் முதலியவைகள் நிறைந்த வெண்கலப் பாத்திரங்களையும் பக்குவமான அன்னம் நிறைந்த வெண்கலப் பாத்திரங்களையும் முப்பத்துமூன்று அல்லது எட்டுப் பாத்திரங்களையாவது உபாயனமாகக் கொடுக்க வேண்டும்.

முப்பத்துமூன்று தம்பதிக்களுக்காவது எட்டுத்தம்பதிகளுக்காவது ஆறு இரஸத்துடன் கூடிய போஜனம் செய்விக்க வேண்டும். இரவில் கானம், வாத்தியம் முதலியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்து ஆனந்தமடைந்து காலங்கழிக்க வேண்டும்.

திருதீயையில் காலையில் ஸ்நானம்செய்து ஸீதையைப் பூஜித்து ஸீதாமந்திரத்தை ஜபம்செய்து பிராமணர்களைக் கொண்டு எள் நெய் பாயஸம் இவைகளால் ஆயிரத்தெட்டுத் தடவை ஹோமம் செய்து, பாசிப்பயறு நீங்கலாக மற்ற எட்டுவித தானியங்களையும் ஹோமம் செய்யவேண்டும். பிறகு உறவினர்க

ளுடன் சுகமாகப் போஜனம் செய்யவேண்டும். இவ்விதம் உத்தியாபனம் செய்யும் விதியைத் தெரிவித்தேன்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

அகத்திய முனிவர் சுதீக்ஷ்ண முனிவருக்கு உபதேசம் செய்த விவரம் கூறினேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஸ்திரீகள் பூஜைசெய்யத்தக்க ரமை நாமங்களடங்கிய பத்ரத்தை ஏற்படுத்துவது எங்ஙனம்? விஷயம் யாவற்றையும் விஸ்தாரமாகக் கூறவேண்டும் என்றார்.

ராமதாஸர் கூறுகிறார்.

சீடனே! முன்கூறிய ராமதோபத்ரம்போல் ரமா நாம பத்ரத்தையும் ஏற்படுத்தவேண்டும். ஆனால் கொஞ்சம் விசேஷமுண்டு; அதைக் கூறுகிறேன்.

லிங்கம் உள்ளவிடங்களில் முன்போல் வாபிகளை அமைக்க வேண்டும். முத்திரையில் தான் விசேஷம். ர என்ற அக்ஷரத்தையும் ம என்ற அக்ஷரத்தையும் கீழாக முன்போல் எழுதவேண்டும். உயரத்தில் ர மா என்ற அக்ஷரங்களை முன்போல் அமைக்க வேண்டும். இவ்விதம் செய்து ரமை என்பதை வெண்மை வர்ணமுள்ளதாகவே ஏற்படுத்தவேண்டும். தேவியைப் பூஜிக்கும் அநேகவித காரியங்களில் இந்த ரமா என்ற நாமங்களடங்கிய பத்ரத்தை ஏற்படுத்தவேண்டும்.

மானிடர்கள் தேவியைப் பூஜிக்கும்போது ரமாபத்ரமின்றிச் செய்யும் காரியங்கள் செய்யாததுபோலாம். ஆகையால் பிரயத்தின மெடுத்துக்கொண்டு இப் பத்திரத்தை ஏற்படுத்தவேண்டும். பூமியில் மானிடர்கள் இந்த ரமாபத்திரத்தில் செய்யும் தேவீ பூஜை தேவிக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் அவசியம் இப் பத்ரத்தை அமைக்கவேண்டும்.

முற்கூறிய பத்ரத்தின் தேவதைகளை இப் பத்ரத்தில் அமைக்கவேண்டும். முத்திரையில் ஸீதையையும் ராமரையும் ஆவாகனம் செய்யவேண்டும்.

சீடனே! ஸீதையையும் ராமரையும் பூஜிக்க மற்றொரு கிரமம் கேள்.

ரமா ராமதோ பத்ரத்தை முன்போல் தன் புத்தியை அநுசரித்து ஏற்படுத்தவேண்டும். எந்தப் பூஜையில் ரமை ராமர் இவ்விருவருடைய நாமம் அடங்கியபத்ரங்கள் ஏற்படுகின்றனவோ அந்தப் பூஜை மிகவும் சிறந்தது. இப்பத்திரந்திலும் ராமருடைய பத்திரத்திற்குக் கூறிய தேவதைகளையே அமைக்கவேண்டும்.

சீடனே! கேட்ட விஷயம் எல்லாவற்றிற்கும் பதிற்கூறினேன்; உனக்குக் கேட்க விருப்பமுள்ளது வேறெதுவாயினும் கேள்; நான் கூறுகிறேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! லக்ஷ்மணருடைய கவசத்தைப் பாராயணம் செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள். அதை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். பரதனுடைய கவசத்தையும் சத்ருக்னன் கவசத்தையும் சொல்லவேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

இவ்விதமே முந்தி சுதீக்ஷ்ணமுனிவர் அகத்திய முனிவரைக் கேட்டு, அகத்திய முனிவர் சொல்லியிருக்கிறார்; அதைச்சொல்லுகிறேன்.

சுதீக்ஷ்ணமுனிவர் கூறுகிறார்.

ஜனங்கள், பரத லக்ஷ்மண சத்ருக்நருடைய கவசங்களைப் பாராயணம் செய்யவேண்டுமென்று தெரிவித்தீர்கள். அதன் விவரத்தைக் கூறவேண்டும்.

அகஸ்தியமுனிவர் கூறுகிறார்.

ஏ! சுதீக்ஷ்ண முனிவரே! நன்றாக வினவினீர். முதலாவது லக்ஷ்மணர் கவசத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள்.

ஸீதாராம கவசங்களைக் கூறும்

14-வது சருக்கம்

முற்றிற்று.

15-வது சருக்கம்.

அகஸ்த்ய உவாச.

ஸௌமித்ரிம் ரகுநாயகஸ்ய சரணத்வந்த்வேக்ஷணம் ஶ்யாமலம் பிப்ராணம் ஸ்வகரேண ராமஶிரஸி ச்சத்ரம் விசித்ரம் வரம் । பிப்ராணம் ரகுநாயகஸ்ய மஹதோ கோதண்டபாணாஸனே தம் வந்தே கமலேக்ஷணம் ஜநகஜாவாக்யே ஸதா தத்பரம் ॥ 1

அஸ்ய ஶ்ரீ லக்ஷ்மணகவசஸ்ய । அகஸ்த்யருஷி: । அநுஷ்டுப் சந்த: । ஶ்ரீ லக்ஷ்மணோ தேவதா । ஶேஷ இதி பீஜம் । ஸௌமித்ராநந்தந இதி ஶக்தி: । ராமாநுஜ இதி கீலகம் । ராமதாஸ இத்யஸ்த்ரம் । ரகுவம்ஶஜ இதி கவசம் । ஸௌமித்ரிரிதி மந்த்ர: । ஶ்ரீ லக்ஷ்மணப்ரீத்யர்த்தம் ஸகலாபீஷ்டஸித்த்யர்த்தம் ஜபே விநியோக: । அத ந்யாஸ: ॥

ஓம் லக்ஷ்மணாய அங்குஷ்டாப்யாம் நம: । ஓம் ஶேஷாய தர்ஜநீப்யாம் நம: । ஓம் ஸௌமித்ராநந்தநாய மத்யமாப்யாம் நம: । ஓம் ராமாநுஜாய அநாமிகாப்யாம் நம: । ஓம் ராமதாஸாய கநிஷ்டிகாப்யாம் நம: । ஓம் ரகுவம்ஶஜாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம: । ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ: । ஓம் லக்ஷ்மணாய ஹ்ருதயாய நம: । ஓம் ஶேஷாய ஶிரஸே ஸ்வாஹா । ஓம் ஸௌமித்ராநந்தநாய ஶிகாயை வஷட் । ஓம் ராமாநுஜாய கவசாய ஹும் । ஓம் ராமதாஸாய அஸ்த்ராய பட் । ஓம் ஸௌமித்ரய இதி திக்பந்த: ॥

அகத்தியமுனிவர் கூறுகிறார்.

சுமித்திரையின் குமாரரும் ரகுநாயகரின் இரண்டு பாதங்களிலும் பார்வையுள்ளவரும் சியாமள வர்ணரும் விசித்திரமும் சிறந்ததுமான குடையைத் தமது கையால் ராமருடைய சிரசில் பிடிப்பவரும் மற்றொரு கையால் ஸ்ரீராமருடைய பெரிய வில்லையும் அம்புறையும் தாங்கிச் செல்பவரும் தாமரைக் கண்ண

த்யாநம்.

ராமப்ருஷ்டஸ்திதம் ராமம் ரத்நகுண்டலதாரிணம் |
நீலோத்பலதலச்யாமம் ரத்நகங்கணமண்டிதம் || ௨
ராமஸ்ய மஸ்தகே திவ்யம் பிப்ராணம் சத்ரமுத்தமம் |
வரபீதாம்பரதரம் மகுடேநாதிசோபிதம் || ௩
தூணீரசாபகோதண்டாந் பிப்ராணஞ்ச ஸ்மிதாநநம் |
ரத்நஹாராதரம் திவ்யம் புஷ்பஹாரவிராஜிதம் || ௪
ஏவம் த்யாத்வா லக்ஷ்மணஞ்ச ராகவந்யஸ்தலோசநம் |
கவசம் ஜபநீயம் ஹி ததோ பக்த்யா நரோத்தமை: || ௫
ஓம் லக்ஷ்மண: பாது மே பூர்வே தக்ஷிணே ராகவாநுஜ:
ப்ரதீச்யாம் பாது ஸௌமித்ரி: பாதூதீச்யாம் ரகூத்தம:

னும் ஜனகராஜன் குமாரியின் கட்டளையை நிறைவேற்றுவதில் தவறுதவறுமாகிய லட்சுமணருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். 1

தியானம்.

ராமருக்குப் பின்புறத்தி லிருப்பவரும் சந்தோஷமுள்ள மனமுடையவரும் இரத்தினகுண்டல மணிந்தவரும் கருநெய்தற் றளம்போன்றவரும் இரத்தின கங்கணங்களால் அலங்காரஞ் செய்துகொண்டிருப்பவரும் ராமருடைய சிரசில் சிலாக்கியமான குடை பிடிப்பவரும் சிரேஷ்டமான பீதாம்பரமணிந்தவரும் கிரீடத்தால் விளங்குகிறவரும் அம்புறை வில் இவைகளைத் தரித்தவரும் மந்தஹாச முகமுள்ளவரும் ரத்தினமாலை தரித்தவரும் திவ்விய சொரூபமுள்ளவரும் புஷ்பமாலையால் பிரகாசிப்பவரும் ராமரிடம் நேத்திரத்தைச் செலுத்தியவருமான இலட்சுமணரைத் தியானம் செய்து பிறகு கவசத்தை ஜபம் செய்தல் வேண்டும். 2-3-4-5

லக்ஷ்மணர் கீழ்ப்புறத்திலும் ராகவானுஜன் தென்புறத்திலும் சௌமித்திரி மேற்புறத்திலும் ரகூத்தமர் வடபுறத்திலும்,

𑌅𑌧𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌮𑌧𑍍𑌯𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌰𑌾𑌮𑌦𑌾𑌸𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌤𑍍𑌯𑌪𑌾𑌲𑌕𑌃 ॥ ௭

𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌶𑍍𑌶𑌿𑌰𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌭𑌾𑌲𑌂 𑌪𑌾𑌤𑍂𑌰𑍍𑌮𑌿𑌲𑌾𑌧𑌵𑌃 ।
𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌾𑌰𑍀 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌣𑍀
𑌕𑌪𑍋𑌲𑍇 𑌰𑌾𑌮𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍀 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌪𑌾𑌤𑍁 𑌵𑍈 𑌮𑌮 ।
𑌕𑌰𑍍𑌣𑍌 𑌮𑍇 𑌸𑌦𑌾 𑌪𑌾𑌤𑍁 𑌕𑌬𑌨𑍍𑌧𑌭𑍁𑌜𑌖𑌣𑍍𑌡𑌨𑌃 ॥ ௯

𑌨𑌾𑌸𑌾𑌗𑍍𑌰𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌾𑌤𑍁 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ।
𑌰𑌾𑌮𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌸𑌦𑌾 𑌮𑍇 𑌵𑌦𑌨𑌂 𑌹𑌰𑌿 ॥

𑌸𑍀𑌤𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌰𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌮𑌮 𑌵𑌾𑌣𑍀𑌂 𑌸𑌦𑌾 𑌹𑌰𑌿 ।
𑌸𑍌𑌮𑍍𑌯𑌰𑍂𑌪𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌦𑌶𑌨𑌾𑌨𑍍 ॥

𑌚𑍁𑌬𑍁𑌕𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌰𑌕𑍍𑌷𑍋𑌘𑍍𑌨𑌃 𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑌾𑌤𑍍𑌵𑌸𑍁𑌰𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ।
𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍌 𑌪𑌾𑌤𑍁 𑌜𑌿𑌤𑌾𑌰𑌾𑌤𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑍌 𑌪𑌙𑍍𑌕𑌜𑌲𑍋𑌚𑌨𑌃 ॥

மஹாவீரர் கீழ்ப்பக்கத்திலும் ராஜகுமாரன் உயரத்திலும் ராமதாஸர் மத்தியிலும் ஸத்தியபாலகர் எல்லாவிடத்திலும், 7

புன்னகைகொண்ட முகமுள்ளவர் சிரசிலும் ஊர்மிளையின் கணவன் நெற்றியிலும் வில்லைத் தரிப்பவர் புருவத்தின் மத்தியிலுஞ் சுமித்திராநந்தன் கண்களிலும், 8

ராமருக்கு மந்திரியானவர் கன்னங்களிலும் கபந்தன் கையைக் கண்டித்தவர் காதுகளிலும், 9

சுமித்திரானந்த வர்த்தனர் மூக்கு நுனியிலும் ராமரிடம் பார்வையுள்ளவர் முகத்திலும், 10

ஸீதையின் உத்தரவுப்படி நடப்பவர் என் வார்த்தையிலும் ஸௌம்ய ரூபமுடையவர் நாக்கிலும் அனந்தர் பற்களிலும், 11

ராக்ஷஸ ஸம்ஹாரஞ் செய்தவர் மோவாக் கட்டையிலும் அசுரர்களைச் சங்கரிப்பவர் கழுத்திலும் சத்ருக்களை ஜெயிப்பவர் தோள்களிலும் தாமரைக்கண்ணன் கைகளிலும், 12

கரௌ கங்கணதாரீ மே நகாந் ரக்தநகோऽவது |
குக்ஷிம் பாது விநித்ரோ மே வக்ஷ: பாது ஜிதேந்த்ரிய: ||

பார்ஶ்வே ராகவப்ருஷ்டஸ்த: ப்ருஷ்டதேஶம் மநோர்ஜ: |
நாபிம் கம்பீரநாபிஸ்து கடிஞ்ச ஸ்வர்ணமேகல: || ௧௪

குஹ்யம் பாது ஸஹஸ்ராஸ்ய: பாது லிங்கம் ஹரிப்ரிய: |
ஊரூ பாது விஷ்ணுதல்பஸ்ஸுமுகோऽவது ஜாநுநீ ||

நாகேந்த்ர: பாது மே ஜங்கே குல்பௌ நூபுரவாந்மம |
பாதாவங்கததாதோऽவ்யாத்ஸர்வாங்காநி ஸுலோசந: || ௧௬

சித்ரகேதுபிதா பாது மம பாதாங்குலீஸ்ததா |
ரோமாணி மே ஸதா பாது ரவிவம்ஶஸமுத்பவ: || ௧௭

தஶரதஸுத: பாது நிஶாயாம் மம ஸர்வதா |
பூகோலதாரீ மாம் பாது திவஸே திவஸே ஸதா ||

கங்கணந் தரித்தவர் முன்கைகளிலும் சிவந்த நகமுடையவர் நகங்களிலும் தூக்கமற்றவர் வயிற்றிலும் ஜிதேந்திரியன் மார்பிலும், 13

ராமருக்குப் பின்பக்கமிருப்பவர் பக்கங்களிலும் மனுக்குலன் பின் பக்கத்திலும் கம்பீர நாபியுடையவர் நாபியிலும் தங்க மேகலையணிந்தவர் இடையிலும், 14

ஆயிரம் முகமுடையவன் ரகசிய ஸ்தானத்திலும் ஹரிப்பிரியர் லிங்கத்திலும் விஷ்ணு சயனர் துடைகளிலும் பிரகாசமான முகமுடையவர் முழங்கால்களிலும், 15

சர்ப்பராஜன் என் கணைக்கால்களிலும் நூபுரம் தரித்தவர் புறங்கால்களிலும் அங்கதன் தந்தை பாதங்களிலும் நல்ல கண்ணையுடையவர் அவயவங்களிலும், 16

சித்திரகேதுவின் பிதா பாதவிரல்களிலும் சூரிய வம்சத்தில் பிறந்தவர் ரோமங்களிலும், 17

தசரதகுமாரன் இரவிலும் பூகோளத்தைத் தரிப்பவர் ஒவ்வொரு தினத்திலும், 18

ஸர்வகாலேஷு ராவணிஜித் ஸதாவது ஸர்வதா |
ஸர்வம் ஸௌமித்ரி கவசம் ஸுதீக்ஷ்ண கதிதம் மயா || 19 ||

இதம் ப்ராதஸ்ஸமுத்தாய யே பட²ந்தி ச மாநவா: |
தே தந்யா மாநவா லோகே தேஷாம் ஜந்ம ஸபலோ பவ: ||

ஸௌமித்ரே: கவசஸ்யாஸ்ய பட²நாந்நிஶ்சயேந ஹி |
புத்ரார்த்தீ லபதே புத்ராந் தநார்த்தீ தநவாந் பவேத் ||

பத்நீகாமோ லபேத்பத்நீம் கோதநார்த்தீ லபேத் கவாம் |
தாந்யார்த்தீ ப்ராப்நுயாத் தாந்யம் ராஜ்யார்த்தீ ராஜ்யமாப்நுயாத் ||

பட²ந் ராமகவசம் ஸௌமித்ரி கவசம் விநா |
வ்ருதா தேந ஹி நைவேத்யம் க்ருதம் தேந ந ஸம்ஶய: ||

இந்திரஜித்தை வதஞ்செய்தவர் எல்லாச் சமையங்களிலும் இருந்து காக்கவேண்டும். சுதீக்ஷ்ண முனிவரே! நான் லக்ஷ்மணர் கவசத்தைத் தெரிவித்தேன். 19

இந்தக் கவசத்தைக் காலையில் பாராயணம் செய்யும் மானிடர்கள் தன்னியர்களாவார்கள். அவர்கள் ஜன்மம் சபலமாய் விடும். 20

இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்தால் புத்திரனை விரும்புவோர் புத்திரனையும் தனத்தை விரும்புவோர் தனத்தையும் பத்தினியை விரும்புவோர் பத்தினியையும் பசுவின் அபிவிருத்தியை அபேக்ஷிப்பவர் பசுவையும் தான்னியத்தை விரும்பியவர் தான்னியத்தையும் அடைவார்கள். ராஜ்யத்தை விரும்பியவர்கள் ராஜ்யத்தையும் அடைவார்கள். 21—22

லக்ஷ்மண கவசமில்லாமல் ராமகவசத்தைப் பாராயணம் செய்தால் நெய்யில்லாமல் செய்த நைவேத்தியத்திற் கொப்பாகும். இதில் ஐயமில்லை. 23

𑌕𑍇𑌵𑌲𑌂 𑌰𑌾𑌮𑌕𑌵𑌚𑌂 𑌪𑌠𑌿𑌤𑌂 𑌚𑌾𑌨𑌪𑍇𑌯𑍁𑌹𑌿 ।
𑌤𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌨 𑌸 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ॥
𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌶𑍍𑌚𑍇𑌦𑌂 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌕𑌵𑌚𑌂 𑌨𑌰𑍈𑌃 ।
𑌪𑌠𑌨𑍀𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ॥ ௨௫

𑌇𑌤𑌿 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌕𑌵𑌚𑌮𑍍.

𑌭𑌰𑌤𑌕𑌵𑌚𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌅𑌤𑌃𑌪𑌰𑌂 𑌭𑌰𑌤𑌸𑍍𑌯 𑌕𑌵𑌚𑌂 𑌤𑍇 𑌵𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌹𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌭𑌕𑍍𑌤𑌿𑌦𑌮𑍍 ॥ ௨௬

𑌕𑍈𑌕𑍇𑌯𑍀𑌤𑌨𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌰𑌘𑍁𑌵𑌰𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌂 ।𑌸𑌪𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌦𑍇𑌹𑌤𑌨𑌯𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌰𑌤𑌮𑍍। 𑌶𑍍𑌰𑍀 𑌸𑍀𑌤𑌾𑌧𑌵𑌸𑌵𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌨𑌿𑌕𑌟𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌰𑌂 𑌚𑌾𑌮𑌰𑌂 𑌧𑍃𑌤𑍍𑌵𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑌤𑍍𑌕𑌰𑍇𑌣 𑌭𑌰𑌤𑌂 𑌤𑌂 𑌵𑍀𑌜𑌯𑌨𑍍𑌤𑌂 𑌭𑌜𑍇 ॥ ௨௭

ராமகவசத்தை மாத்திரம் பாராயணம் செய்தால் ராமச்சந்திரர் சந்தோஷமடையமாட்டார். 24

ஆகையால் மானிடர்கள் மனோரதம் எல்லாவற்றையும் கொடுக்கும் இந்தக் கவசத்தை எப்போதும் பிரயத்தினத்துடன் பாராயணம் செய்யவேண்டும். 25

லக்ஷ்மணகவசம் முற்றிற்று.

பாபங்களைப் போக்கி எப்போதும் ஸ்ரீராம பக்தியைக் கொடுக்கக்கூடிய புண்ணிய கவசமாகிய பரதகவசத்தை நான் உமக்குக் கூறுகின்றேன். 26

கைகேயின் குமாரனும் எப்போதும் ராமரிடம் நேத்திரத்தைச் செலுத்துபவனும் சியாமள வர்ணனும் ஏழு தீவுகளுக்கும் பதியாகிய வைதேஹிபதியின் சொல்லில் அன்புள்ளவனும் ஸ்ரீ ஸீதாகாந்தன் இடதுபுறத்திலிருந்து வலதுகையால் சாமரமெடுத்து உபசரிக்கிறவனுமாகிய பரதனைப் பஜிக்கின்றேன். 27

அஸ்ய ஶ்ரீ பரதகவசஸ்தோத்ரமந்த்ரஸ்ய | அகஸ்த்ய ருஷி: | பரதோ தேவதா | அநுஷ்டுப் சந்த: | ஶங்க இதி பீஜம் | கைகேயீநந்தந இதி ஶக்தி: | பக்தவத்ஸல இதி கீலகம் | ராமாநுஜ இத்யஸ்த்ரம் || ஸத்வஶீலஸ்வபாவ இதி கவசம் | ராமாம்ஶஜ இதி மந்த்ர: | ஶ்ரீ பரதப்ரீத்யர்த்தம் ஸகல மநோரதஸித்த்யர்த்தம் ஜபே விநியோக: | அதாங்கந்யாஸ: ||

ஓம் பரதாய அங்குஷ்டாப்யாம் நம: | ஓம் கைகேயீநந்தநாய மத்யமாப்யாம் நம: || ஓம் பக்தவத்ஸலாய அநாமிகாப்யாம் நம: || ஓம் ராமாநுஜாய கநிஷ்டிகாப்யாம் நம: | ஓம் ஸத்வஶீலஸ்வபாவாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம: ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ: || ஓம் பரதாய ஹ்ருதயாய நம: ஓம் ஶங்காய ஶிரஸே ஸ்வாஹா || ஓம் கைகேயீநந்தநாய ஶிகாயை வஷட் || ஓம் பக்தவத்ஸலாய கவசாய ஹும் | ஓம் ராமாநுஜாய நேத்ரத்ரயாய வௌஷட் | ஓம் ஸத்வஶீலஸ்வபாவாய அஸ்த்ராய பட் | ஓம் ராமாம்ஶஜாய இதி திக்பந்த:.

த்யாநம் |

ராமசந்த்ரஸவ்யபார்ஶ்வ ஸ்திதம் கேகயஜாஸுதம் |
ராமாய சாமரேணைவ வீஜயந்தம் மநோஹரம் || ௨௮

ரத்நகுண்டலகேயூரகங்கணாதிஸுபூஷிதம் |
பீதாம்பரபரீதாநம் வநமாலாவிராஜிதம் || ௨௯

தியானம்.

ஸ்ரீ ராமச்சந்திரருடைய இடது பக்கத்தில் இருப்பவரும் கைகேயிக்குக் குமாரரும் ராமருக்குச் சாமரத்தால் உபசாரம் செய்பவரும் மனோக்ஞரும் 28

இரத்தின குண்டலம் கேயூரம் கங்கணம் முதலியவைகளால் அலங்காரம் செய்துகொண்டவரும் மஞ்சள் பட்டுவஸ்திரம் தரித்தவரும் வனமாலையால் பிரகாசிப்பவரும் 29

மாண்ட³வீதௌ⁴தசரணம் ரஶநாதா³மதா⁴ரிணம் |
நீலோத்பலத³லஶ்யாமம் த்³விஜராஜஸமாநநம் || ௩௰

ஆஜாநுபா³ஹும் ப⁴ரதக²ண்ட³ஸ்ய ப்ரதிபாலகம் |
ராமாநுஜம் ஸ்மிதாஸ்யஞ்ச ஶத்ருக்⁴நபரிவந்தி³தம் || ௩௧

ராமந்யஸ்தேக்ஷணம் ஸௌம்யம் வித்³யுத்புஞ்ஜஸமப்ரப⁴ம் |
ராமப⁴க்தம் மஹாவீரம் வந்தே³ தம் ப⁴ரதம் ஶுப⁴ம் || ௩௨

ஏவம் த்⁴யாத்வா து ப⁴ரதம் ராமபாதே³க்ஷணம் ஹ்ருதி³ |
கவசம் பட²நீயம் ஹி ப⁴ரதஸ்யேத³முத்தமம் || ௩௩

பூர்வதோ ப⁴ரத꞉ பாது த³க்ஷிணே கைகயீஸுத꞉ |
ந்ருபாத்மஜ꞉ ப்ரதீச்யாம் ஹி பாதூதீ³ச்யாம் ரகூ⁴த்தம꞉ ||

மாண்டவியால் பாதப் பிரக்ஷாளனமடைந்தவரும் அரைஞாண் சங்கிலிகளைத் தரித்தவரும் கருநெய்தல் தளம்போல் சியாமளவர்ண முள்ளவரும் சந்திரனுக்குச் சமமான முகமுள்ளவரும் 30

முழங்கால்வரையில் நீண்ட கைகளை உடையவரும் பரத கண்டத்தைப் பரிபாலித்தவரும் ராமருக்கு அநுஜரும் புன்னகையுள்ள முகமுடையவரும் சத்ருக்னனுல் நமஸ்கரிக்கப்பட்டவரும் 31

ராமரிடம் பார்வையுள்ளவரும் சௌம்யரூபமுடையவரும் மின்னல் கூட்டம்போன்ற காந்தியுள்ளவரும் ராமபக்தரும் மஹாவீரரும் சுபரூபருமான அந்தப் பரதரை நான் நமஸ்கரிக்கின்றேன். 32

ராமருடைய பாதகமலங்களில் நேத்திரமுள்ள பரதரை இவ்விதம் தியானஞ் செய்து உத்தமமான இந்தப் பரதகவசத்தைப்பாராயணம் செய்யவேண்டும் 33

பரதன் கிழ்ப்பக்கத்திலும் கைகேயி குமாரன் தென்புறத்திலும் ராஜகுமாரன் மேற்புறத்திலும் ரகூத்தமர் வடபுறத்திலும் 34

அத⁴: பாது ஶ்யாமளாங்கோ ஹ்யூர்த்⁴வம் த³ஶரதா²த்மஜ: |
மத்⁴யே பா⁴ரதவர்ஷேஶ: ஸர்வத்ர ஸூர்யவம்ஶஜ: || ௩௫

ஶிரோ த³க்ஷபிதா பாது பா²லம் பாது ஹரிப்ரிய: |
ப்⁴ருவோர்மத்⁴யம் ஜநகஜாவாக்யக்ருதாத³ரோ'வது ||

பாது ஜநகஜாமாதா நேத்ரே [illegible] |
கபோலௌ மாண்ட³வீகாந்த: கர்ணமூலே ஶுபே⁴க்ஷண: || ௩௭

நாஸாக்³ரம் பாது கைகேயீதோஷவர்த⁴ந: |
உதா³ரகு³ணோ வக்த்ரம் பாது வாணீம் பாது ஜடாத⁴ர: ||

பாது புஷ்கரதாதோ த³ந்தாந் [illegible] |
சிபு³கம் வல்கலீ பாது கண்ட²ம் பாது வராநந: || ௩௯

ஸ்கந்தௌ⁴ பாது ஜிதாராதிர்ஹஸ்தௌ ஶத்ருக்⁴நவந்தி³த: |
கரௌ கவசதா⁴ரீ து நகா²ந் க²ட்³க³த⁴ரோ'வது || ௪௦

சியமளாங்கன் கீழ்ப்பிரதேசத்திலும் தசரதகுமாரன் மேலேயும் பரத வருஷத்திற்குப் பிரபுவானவர் மத்தியிலும் சூரியவம்சத்தில் பிறந்தவர் எல்லாவிடத்திலும் 35

தக்ஷனுக்குத் தந்தை சிரசிலும் ஹரிப்பிரியர் நெற்றியிலும் ஜனகமகாராஜன் கட்டளையிற் கருத்துள்ளவர் புருவத்தின் மத்தியிலும் 36

ஜனகன் மருமகன் கண்களிலும், மாண்டவீகாந்தன் கன்னங்களிலும், நல்ல நேத்திரமுள்ளவன் காது மூலத்திலும் 37

கைகேயிக்குச் சந்தோஷத்தை விருத்திசெய்பவன் மூக்கு நுனியிலும், உதாரகுணமுள்ளவன் முகத்திலும், சடைகளைத் தரித்தவன் வாக்கிலும், புஷ்கரன் தந்தை பற்களிலும், மரவுரி உடுத்தவன் மோவாக்கட்டையிலும், சிரேஷ்டமான முகமுள்ளவன் கழுத்திலும் 38—39

சத்ருக்களை ஜயித்தவர் தோள்களிலும் சத்ருக்னனால் நமஸ்கரிக்கப்படுகிறவன் கைகளிலும் கவசம் தரித்தவன் முன் கைகளிலும் கத்தியை உடையவன் நகங்களிலும் 40

குக்ஷிம் ராமாநுஜ: பாது வக்ஷ: ஶ்ரீராமபஶ்சக: |
பார்ஶ்வே ராமபார்ஶ்வஸ்த: பாது ப்ருஷ்டம் ஸுபாஷண: ||

ஜடரம் தநுர்தாரீ நாபிம் ஶரகரோऽவது |
கடிம் பத்மேக்ஷண: பாது குஹ்யம் ராமைகமாநஸ: ||

ராமமித்ர: பாது லிங்கமூரூ ஶ்ரீராமஸேவக: |
நந்திக்ராமஸ்தித: பாது ஜாநுநீ ராமபாதுகா || ௪௩

ஶ்ரீராமபாதுகாதாரீ பாது ஜங்கே ஸதா மம |
குல்பௌ ஶ்ரீராமபந்துஶ்ச பாதௌ பாது ஸுரார்சித: ||

ராமாஜ்ஞாபாலக: பாது மமாங்காந்யபி ஸர்வதா |
மமாங்குலீ: பாது ரகுவம்ஶவிபூஷண: || ௪௫

ராமானுஜன் வயிற்றிலும், ஸ்ரீராமருக்குப் பின்னாலிருப்பவன் மார்பிலும், ராமருக்குப் பக்கத்திலிருப்பவர் பக்கங்களிலும், நன்றாகப் பேசுகிறவர் பின் பக்கத்திலும் 41

வில்லைத்தரித்தவர் அடிவயிற்றிலும், பாணங்களைக் கையில் தரித்தவர் நாபியிலும், தாமரைக்கண்ணன் இடையிலும், ராமரிடம் மனதுள்ளவர் இரகசியப் பிரதேசத்திலும் 42

ராமமித்திரன் லிங்கத்திலும், ஸ்ரீராமசேவகன் தொடைகளிலும், நந்தி கிராமத்திலிருப்பவர் முழங்கால்களிலும், ஸ்ரீராமபாதுகைகளைத் தரித்தவர்கள் கணைக்கால்களிலும், ஸ்ரீராமபந்து புறங்கால்களிலும், தேவர்களுடைய பூஜையை அடைகிறவர் பாதங்களிலும் 43—44

ராமருடைய ஆஞ்ஞையைப் பரிபாலிப்பவர் அவயவமெல்லாவற்றிலும் ரகுவம்சத்திற்கு அலங்காரம் போன்றவர் பாதங்களின் விரல்களிலும் 45

ரோமாணி பாது மே ரம்ய: பாது ராத்ரௌ ஸதாயுத: |
தூணீரயாந்தி வஸதிஷு பாது மம ஸர்வதா || ௪௬

ஸர்வகாலேஷு மாம் பாது பாஞ்சஜந்யஸமாஹ்வய: |
ஏவம் ஶ்ரீபரதஸ்யேதம் ஸர்வதீக்ஷ்ணம் கவசம் ஶுபம் || ௪௭

ஸர்வஸ்தோத்ரோத்தமம் புண்யம் மஹாபாதகநாஶகம் |
ஸ்தோத்ராணாமுத்தமம் ஸ்தோத்ரமிதம் ஜ்ஞேயம் ஸுபுண்யதம் || ௪௮

வம்ஶீயம் ஸதா ஹ்ருத்யம் ராமசந்த்ரஸ்ய ஹர்ஷதம் |
பரிக்ஷா பரதஸ்யேதம் கவசம் பரமம் ந்ருணாம் || ௪௯

யதா யாதி பரஸந்தோஷம் ததா ஸ்வகவசேந ந |
தஸ்மாதேதத்ஸதா ஜப்யம் கவசாநாமநுத்தமம் || ௫௦

இரம்மிய சொரூபர் ரோமங்களிலும் நல்ல புத்தியையுடையவர் இரவிலும் அம்புறையைத் தரித்தவர் பிரதி தினமும், 46

சங்கத்தினுடைய அவதார புருஷர் காலமெல்லாவற்றிலும் இருந்து இரக்ஷிக்க வேண்டும்.

இந்தப்பரதகவசம் மங்களங்களைக் கொடுக்கக்கூடியது. இந்த ஸ்தோத்திரம் மற்ற ஸ்தோத்திரங்களைக் காட்டிலும் சிறந்தது. மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது. 48

ராமச்சந்திரருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது. ராமர் தமது கவசத்தைப் பாராயணம் செய்பவனிடம் சந்தோஷிப்பதைவிட, பரதனுடைய கவசத்தைப் பாராயணம் செய்பவர்களிடமும் சந்தோஷமடைகிறார். ஆகையால் இந்தப் பரதகவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 46—50

𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍀 𑌲𑌭𑌤𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍀 𑌲𑌭𑌤𑍇 𑌸𑍁𑌤𑌮𑍍 ॥
𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌾𑌮𑍋 𑌲𑌭𑌤𑍇 𑌪𑌤𑍍𑌨𑍀𑌂 𑌧𑌨𑌾𑌰𑍍𑌥𑍀 𑌧𑌨𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌯𑌦𑍍𑌯𑌨𑍍𑌮𑌨𑍋𑌭𑌿𑌲𑌷𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ॥ ௫௨
𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍋 𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌂 𑌜𑌪𑌨𑍀𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌰𑌾𑌮𑍋𑌪𑌾𑌸𑌕𑍈𑌰𑍍𑌨𑌰𑍈𑌃 ॥ ௫௩

𑌇𑌤𑌿 𑌭𑌰𑌤𑌕𑌵𑌚𑌮𑍍.

𑌅𑌥 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌕𑌵𑌚𑌂 𑌸𑍁𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣 𑌶𑍃𑌣𑍁 𑌸𑌾𑌦𑌰𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌂 𑌰𑌮𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ ௫௪

𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌂 𑌧𑍃𑌤𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌂 𑌧𑍃𑌤𑌮𑌹𑌾𑌤𑍂𑌣𑍀𑌰𑌬𑌾𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌮𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌮𑍍 । 𑌰𑌾𑌮𑌂 𑌸𑍍𑌵𑍀𑌯𑌕𑌰𑍇𑌣 𑌤𑌾𑌲𑌜𑌂 𑌧𑍃𑌤𑌚𑌾𑌰𑍁𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑌰𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌭𑌂 𑌵𑍍𑌯𑌜𑌨𑌂 𑌸𑌭𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌨𑌂 𑌤𑌂 𑌵𑍀𑌜𑌯𑌨𑍍𑌤𑌂 𑌭𑌜𑍇 ॥ ௫௫

மானிடன் இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்வதால் மனோரதமெல்லாவற்றையு மடைகிறான்; வித்தையை விரும்பினவன் வித்தையையும் புத்திரனை அபேக்ஷித்தவன் புத்திரனையும் பத்தினியைக் கோருகிறவன் பத்தினியையும் பொருளில் விருப்பமுள்ளவன் பொருளையும் எவன் எந்தக் கோரிக்கையை விரும்புகிறானோ அவன் அந்தக் கோரிக்கையையும் அடைவான். சந்தேகமில்லை. இது சத்தியம்! சத்தியம்! ஆகையால் ராமரை உபாசிப்பவர்கள் எப்போதும் ஜபம் செய்யவேண்டும். 51-52-53

பரதகவசம் முற்றிற்று.

ஏ சுதீக்ஷ்ண முனிவரே! சத்ருக்னனுடைய கவசத்தைக் கேளும்; இந்தக் கவசம் மனோரதங்களைக் கொடுக்கக்கூடியது; ராமரிடம் பக்தியை விருத்தி செய்யக்கூடியது.

வில்லைத் தரித்தவரும் பெரிதான அம்புறை பாணம் இவைகளைத் தரித்தவரும் ஸ்ரீரகுநந்தனரின் இடது பக்கத்தில் வணக்கத்துடனிருப்பவரும் சுந்தரரும், சித்திரநிறைந்ததும் சூரியனுக்குச் சமமான ஒளியுள்ளதுமான பனையோலை விசிறிகொண்டு ராமருக்கு உபசரிப்பவருமாகிய சத்ருக்னனை நான் வணங்குகிறேன்.

அஸ்ய ஸ்ரீ ஶத்ருக்நகவசஸ்தோத்ரமந்த்ரஸ்ய அகஸ்த்ய ருஷி: || ஸ்ரீ ஶத்ருக்நோ தேவதா || அநுஷ்டுப் சந்த: || ஸுதர்ஶந இதி பீஜம் || கைகேயீநந்தந இதி ஶக்தி: || ஸ்ரீ பரதாநுஜ இதி கீலகம் || பரததாஸ்யத்வம் || ஸ்ரீ ராமதாஸ இதி கவசம் || லக்ஷ்மணாம்ஶஜ இதி ஶஸ்த்ரம் || ஸ்ரீ ஶத்ருக்நப்ரீத்யர்த்தம் ஸகலதாந: காமநாஸித்த்யர்த்தம் ஜபே விநியோக: || அதாங்குலிந்யாஸ: ||

ஓம் ஶத்ருக்நாய அங்குஷ்டாப்யாம் நம: ||
ஓம் ஸுதர்ஶநாய தர்ஜநீப்யாம் நம: ||
ஓம் கைகேயீநந்தநாய மத்யமாப்யாம் நம: ||
ஓம் பரதாநுஜாய அநாமிகாப்யாம் நம: ||
ஓம் பரததாஸ்யை கநிஷ்டிகாப்யாம் நம: ||
ஓம் ஸ்ரீ ராமதாஸாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம: ||
ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ: ||
ஓம் லக்ஷ்மணாம்ஶஜாயேதி திக்பந்த: ||

அத த்யாநம்.

ராமஸ்ய ஸம்ஸ்திதம் வாமே பார்ஶ்வே விநயாந்விதம் |
கைகேயீநந்தநம் ஸௌம்யம் கிரீடேநாதிராஜிதம் || ௫௬
ரத்நகங்கணகேயூர வநமாலாவிராஜிதம் |
ரஸநாகுண்டலதரம் ரத்நஹாரஸநூபுரம் || ௫௭

தியானம்.

ராமருடைய இடது புறத்தில் வணக்கத்துடனிருப்பவரும் கைகேயியைச் சந்தோஷப்படுத்துகிறவரும் உக்ரத்தன்மையில்லாதவரும் கிரீடத்தால் பிரகாசிப்பவரும் 56

இரத்தின கங்கணம் கேயூரம் வஸ்திரம், வனமாலை இவைகளால் பிரகாசிப்பவரும் அரைஞாண் குண்டலம் இரத்தின ஹாரம் சலங்கைகள் இவைகளைத் தரித்தவரும் 57

व्यजनेन वीजयन्तं जानकीकान्तमादरात् ।
रामसम्प्रेक्षणं वीरं कैकेयीतोषवर्धनम् ॥

द्विभुजं कञ्जनयनं दिव्यपीताम्बरान्वितम् ।
सुभुजं सुन्दरं श्यामलं सुन्दराननम् ॥ ௫௯

रामाज्ञाकृष्टकर्णं च रक्षोघ्नं खड्गधारिणम् ।
धन्वबाणधरं श्रेष्ठं धृततूणीरसायकम् ॥ ௬௦

सभायां संस्थितं रम्यं कस्तूरीतिलकाञ्चितम् ।
किरीटाभरणोपेतं मन्दहासस्मिताननम् ॥ ௬௧

रविवंशोद्भवं दिव्यरूपं दशरथात्मजम् ।
मधुरावासिनं देवं लवणासुरघातिनम् ॥ ௬௨

ஜானகீ காந்தருக்கு விசிறியால் உபசரிப்பவரும் அவரிடம் நேத்திரமுள்ளவரும் கைகேயிக்குச் சந்தோஷத்தை விருத்தி பண்ணுகிறவரும், 58

இரண்டு கைகளுள்ளவரும் தாமரைப் பூப்போன்ற நேத்திர முள்ளவரும் திவ்விய பீதாம்பர மணிந்தவரும் நல்ல கைகளை யுடையவரும் அழகுள்ளவரும் சியாமளவர்ணமும் சுந்தரமுகமு முள்ளவரும், 59

ஸ்ரீராமருடைய கட்டளைக்குச் செவிகொடுத்து நிற்பவரும் இராக்ஷசர்களைச் சங்காரம் செய்பவரும் கத்தியைத் தரித்தவரும் சிறந்தவரும் அம்புடையவரும். 60

சபையிலிருப்பவரும் இரம்மியரும் கஸ்தூரி திலகமணிந்த வரும் ஆபரணங்கள் நிறைந்த கிரீடங்களால் பிரகாசிப்பவரும் மந்தஹாஸ முகமுள்ளவரும் 61

சூரிய வம்சத்தில் ஜனித்தவரும் திவ்விய ரூபரும் தசரத குமாரரும் மதுரையில் வாசம் செய்பவரும் தேவரும் லவணாசுர னைச் சங்கரித்தவரும் 62

ஏவம் த்யாத்வா து ஶத்ருக்நம் ராமபாதேக்ஷணம் ஹ்ருதி |
படேதிதம் பரஶ்ரேஷ்டம் கவசம் தஸ்ய பாவநம் || ௬௩
பூர்வே பாது ஶத்ருக்ந: பாது யாம்யே ஸுதர்ஶந: |
கைகேயீநந்தந: பாது ப்ரதீச்யாம் ஸர்வதா மம || ௬௪
பாதூதீச்யாம் ராமபந்து: ப்ராச்யாம் பரதாநுஜ: |
ரவிவம்ஶோத்பவஶ்சோர்த்வம் மத்யே தஶரதாத்மஜ: || ௬௫
ஸர்வத: பாது காத்ரம் கைகேயீதோஷவர்த்தந: |
ஶ்யாமாங்கஶ்ஶிர: பாது பாலம் லக்ஷ்மணாநுஜ: ||
ப்ருவோர்மத்யே ஸுமுக: பாது நேத்ரே ஸ்வாமீ ஸதா மம |
ஶ்ருதகீர்த்திபதிர்நேத்ரே கபோலௌ பாது ராகவ: || ௬௭
கர்ணௌ குண்டலகர்ணோ நாஸாக்ரம் ரகுவம்ஶஜ: | யுவா வக்த்ரம் பாது பாது வாணீம் ஸ்பஷ்டாக்ஷர: || ௬௮

ராமபாதங்களில் பார்வையுள்ளவருமாகிய சத்ருக்னனை இவ்விதம் மனதில் தியானம் செய்து அவருடைய சிரேஷ்டமான இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். 63

சத்ருக்னன் கிழ்ப்புறத்திலும் சுதர்சனன்தென்பாகத்திலும் கைகேயியை மகிழ்விப்பவன் மேற்புறத்திலும் 64

ராமபந்து வடப்புறத்திலும் பரதாநுஜன் கிழ்ப்புறத்திலும் சூரியவம்சத்தில் பிறந்தவன் மேலேயும் தசரதாத்துமஜன் மத்தியிலும் 65

கைகேயின் சந்தோஷத்தை அபிவிருத்தி செய்கிறவர் எல்லாவிடத்திலும் சியாமளாங்கன் சிரசிலும் லக்ஷ்மணாநுஜன் நெற்றியிலும் 66

நல்ல முகமுடையவன் புருவத்தின் மத்தியிலும் சுருதகிர்த்தியின் நாயகன் கண்களிலும் ராகவர் கன்னங்களிலும் 67

குண்டலந்தரித்த காதுள்ளவர் காதுகளிலும் ரகுவம்சத்தில் பிறந்தவர் மூக்கு நுனியிலும் யௌவன பருவமுள்ளவன் முகத்திலும் வியக்தமாகப் பேசுகிறவர் வார்த்தையிலும் 68

ஜிஹ்வாம் ஸுபாஹுதாதோ'வ்யாத் யூபகேதுபிதா ரதாந் | சிபுகம் ரம்யசிபுக: கண்டம் பாது ஸுபாஷண: || ௬௯

ஸ்கந்தௌ பாது மஹாதேஜா புஜௌ ராகவவாக்யக்ருத் | கராக்ரே கங்கணதர: பாது ஶஸ்த்ரவாந் நகாந் || ௭௰

குக்ஷிம் ராமப்ரிய: பாது பாது வக்ஷோ ரகூத்தம: | பார்ஶ்வே ஸுரார்சித: பாது பாது ப்ருஷ்டம் வராநந: || ௭௧

ஜகநம் பாது ரக்ஷோக்ந: பாது நாபிம் ஸுநாபக: | கடீ பரதமந்த்ரீ ச குஹ்யம் ஶ்ரீராமஸேவக: || ௭௨

ராமாவிஷ்டமநா: பாது லிங்கம் மந்தஸ்மிதாநந: | கோதண்டபாணி: பாத்வஷ்டௌ ஜாநுநீ ஸமஸந்துதா || ௭௩

சுபாஹுவின் தந்தை நாக்கிலும் யூபகேதுவின் தந்தை பற்களிலும் இரம்மியமான மோவாக்கட்டையுள்ளவன் மோவாக்கட்டையிலும் நல்லவார்த்தை பேசுகிறவன் கழுத்திலும் 69

மஹாதேஜஸுள்ளவர் தோள்களிலும் ராகவர் வாக்கியப்படிசெல்பவன் கைகளிலும் கங்கணம் தரித்தவன் முன் கைகளிலும் கத்திபுடையவன் நகங்களிலும் 70

ராமப்பிரியன் வயிற்றிலும் ரகூத்தமன் மார்பிலும் தேவர்களால் பூஜிக்கப்படுகிறவன் பக்கங்களிலும் சிறந்த முகமுள்ளவர் பின் புறத்திலும் 71

இராக்ஷஸஸம்ஹாரம் செய்தவன் அடிவயிற்றிலும் நல்ல சுண்ணுடையவன் நாபியிலும் பரதமந்திரி இடைகளிலும் ஸ்ரீராம சேவகன் இரகசியப் பிரதேசத்திலும் 72

ராமரிடம் மனதைச் செலுத்துகிறவன் லிங்கத்திலும் மந்தஹாசமுள்ளவன் துடைகளிலும் கோதண்டபாணி முழங்கால்களிலும் 73

𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌪𑌾𑌤𑍁 𑌜𑌙𑍍𑌘𑍇 𑌗𑍁𑌲𑍍𑌫𑍌 𑌪𑌾𑌤𑍁 𑌸𑍁𑌨𑍂𑌪𑍁𑌰𑌃 ।
𑌪𑌾𑌦𑍌 𑌨𑍃𑌪𑌤𑌿𑌭𑌿𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 [illegible] ॥
𑌪𑌾𑌤𑍍𑌵𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 [illegible] ।
𑌰𑍋𑌮𑌾𑌣𑌿 𑌰𑌮𑌣𑍀𑌯𑍋𑌵𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌪𑌾𑌤𑍁 𑌸𑍁𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑌃 ॥ ௭௫
𑌦𑌿𑌵𑌸𑍇 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑍋𑌵𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑍇 𑌬𑌾𑌣𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 ।
𑌗𑌤𑍌 𑌮𑌧𑍁𑌰𑌕𑌣𑍍𑌠𑍋𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌲𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ॥ ௭௬
𑌏𑌵𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌕𑌵𑌚𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇 𑌸𑌮𑍁𑌦𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑍇 𑌪𑌠𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍇 𑌨𑌰𑌾𑌃 𑌸𑍌𑌖𑍍𑌯𑌭𑌾𑌗𑌿𑌨𑌃 ॥ ௭௭
𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌕𑌵𑌚𑌂 𑌮𑌙𑍍𑌗𑌲𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 ।
𑌪𑌠𑌨𑍀𑌯𑌂 𑌨𑌰𑍈𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ ௭௮
𑌅𑌸𑍍𑌯 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑌾𑌠𑍇𑌨 𑌯𑌂 𑌯𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌨𑌰𑍋 [illegible] ।
𑌤𑌂 𑌤𑌂 𑌲𑌭𑍇𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌚𑍋 𑌮𑌮 ॥ ௭௯

ராமசந்திரன் கணைக்கால்களிலும் நல்ல சலங்கையையுடையவன் புறங்கால்களிலும் அரசர்களால் பூஜிக்கத்தகுந்தவன் பாதங்களிலும் விரல்களிலும் 74

உதாரமான அங்கமுள்ளவன் அவயவமெல்லாவற்றிலும் இரமணீயன் உரோமங்களிலும் சுதார்மிகன் இரவிலும் 75

சத்தியசந்தன் பகலிலும் பாணங்களைக் கையில் கொண்டவர் போஜனத்திலும் மதுரமான கண்டமுடையவன் நடையிலும் இலவணாசுரனுக்கந்தகன் எப்போதும் இரக்ஷிக்கவேண்டும் 76

சத்ருக்னனுடைய கவசம் கூறினேன். இதை பாராயணம் செய்பவர்கள் சௌக்கியமடைவார்கள். 77

மங்களத்தைக் கொடுக்கக்கூடியதும் புத்திர பௌத்திரர்களை விருத்தி செய்யக் கூடியதுமான இந்தக் கவசத்தை மானிடர்கள் பாராயணம் செய்யவேண்டும். 78

இந்த ஸ்தோத்திரத்தைப்பாராயணஞ்செய்பவனுக்கு அவன் விரும்பும் யாவும் கைகூடும். இந்தச் சொல் சத்தியம். 79

புத்ரார்தீ ப்ராப்நுயாத்புத்ரம் தநார்தீ ப்ராப்நுயாத்தநம்
யதேஷ்டம் காமம் காமார்தீ ப்ராப்நுயாத்தம் மநோரதாந் || ௮௰
கவசஸ்யாஸ்ய பாடேந ஹி ஶத்ருக்நஸ்ய விநிஶ்சயாத் |
தஸ்மாச்சைதத்ஸதா பக்த்யா படநீயஞ்ச ஸாதரம் || ௮௧
ஆதௌ நரைர்மாருதேஶ்ச கவசம் பக்த்யா படேத் ஸதா |
ததஶ்ஶத்ருக்நகவசம் படநீயம் ஸதா நரை: || ௮௨
படநீயம் பரதஸ்ய கவசம் பரமம் தத: |
ததோ லக்ஷ்மணகவசம் படநீயம் ஸதா நரை: || ௮௩
படநீயம் ததஸ்ஸீதாகவசம் ஸௌபாக்யவர்தநம் |
ததஶ்ஶ்ரீராமசந்த்ரஸ்ய கவசம் ஸர்வஶோபநம் || ௮௪
படநீயஞ்ச ஸர்வதா ஶுத்தபாவேந ஸாதகை: |
ஏவம் ஷட் கவசாந்யத்ர படநீயாநி ஸர்வதா || ௮௫

புத்திரனை அபேக்ஷிப்பவன் புத்திரனையும் பொருளை விரும்பியவன் பொருளையும், காமத்தை விரும்பியவன் காமத்தையும் தன்னிஷ்டப்படி மனோரதங்களையும் அடைவான். 80

இந்தச்சத்ருக்னகவசத்தைப் பாராயணம் செய்வதால் மனோரதங்களை அடைவது நிச்சயம். ஆகையால் பக்தியுடன் பாராயணம் செய்யவேண்டும். 81

மானிடர்கள் பக்தியுடன் ஆதியில் மாருதியின் கவசத்தையும் பிறகு சத்ருக்னன் கவசத்தையும் பாராயணஞ் செய்யவேண்டும். 82

பிறகு பரதகவசத்தையும் பிறகு இலக்குமண கவசத்தையும் பாராயணஞ் செய்யவேண்டும். 83

பிறகு பாக்கியத்தை உண்டுபண்ணும் ஸீதையின் கவசத்தையும் சிலாக்கியமான ராமச்சந்திர கவசத்தையும் பாராயணஞ் செய்யவேண்டும். 84

இவ்விதம் ஆறுகவசங்களையும் எப்போதும் பாராயணஞ் செய்யவேண்டும். 85

ஸம்ஸ்ருஷ்டகவசாநாம் ச ஷட்கோசே மோக்ஷஸாதநம் |
ஜ்ஞாத்வா த்வேநம் நரோ பக்த்யா குர்யாத் பாராயணம் ஸதா || 86

அஶக்தஶ்சேத் ஸமஸ்தாநி கவசாநி படிதும் |
ஹநுமல்லக்ஷ்மணஸ்யாபி ஸீதாராகவயோஸ் ததா |
ஏதாநி ஸம்யுக்தாநி சத்வாரி கவசாநி ஹி || 87

சதுர்ணாம் கவசாநாம் ச ஸம்படநாய ச |
யதி ந த்வவகாஶஸ்ஸ்யாத் த்ரீணி ஸமீரணே: |
ஹநூமதஸ் ஸீதாயாஸ் ததா ஶ்ரீராகவஸ்ய ச || 89

த்ரயாணாம் கவசாநாம் ச ஸம்பாடநாவஸரோ யதி |
ஸம்பாத்யம் ஹநுமதஸ்சைவ கவசே ப்ரபடேத் || 90

ஹநூமதோ ராமஸ்ய ஸீதாராகவஸ்ய வா |
நைகைகமேவ ஸம்பாட்யம் ஶ்ரீராமகவசம் ஸதா || 91

இவ்வாறு கவசங்களையும் சிறந்த மோக்ஷத்திற்கு முக்கிய மான சாதனம் என்று தெரிந்து மானிடர்கள் பக்தியுடன் பாராயணம் செய்யவேண்டும். 86

இவ்வாறு கவசங்களையும் பாராயணம் செய்யச் சக்தியில்லையாயின் அநுமான் இலக்குமணன் சீதை இராகவர் இந்நால்வருடைய கவசத்தையும் பாராயணஞ் செய்யவேண்டும். 87

இந்நான்கு கவசங்களையும் பாராயணம் செய்ய அவகாசமில்லாவிட்டால் அநுமான் சீதை இராமர் இம்மூவரின் கவசத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 88-89

இம்மூன்று கவசங்களையும் பாராயணம்செய்ய அவகாசமில்லாவிட்டால் அநுமான் இராமர் இவ்விருவருடைய கவசங்களைப் பாராயணம் செய்யவேண்டும். மங்களமான ஸ்ரீராமகவசத்தைத் தனித்துப் பாராயணம் செய்யக்கூடாது. 90-91

அவகாசே கவசானாம் ஷட்கஸ்யைவ ஸதா படேத் |
ஸம்க்ரீயம் க்ரமசோ நைவ கர்தவ்யோ நாருஸ꞉ கதா || ௯௨ ||
யதாவகாசோ நாஸ்தி சேத் தேஷாம் ஸர்வேஷு வை யதி |
ததா விசேஷ꞉ ப்ரோக்தோயம் நஸ்வேச்சாசயோதித꞉ ||

(இதி சத்ருக்னகவசம்.)

ஆறு கவசங்களைப் பாராயணஞ் செய்ய அவகாச மிருந்தால் கிரமமாக எல்லாவற்றையும் பாராயணம் செய்யவேண்டும், சோம்பல் கூடாது. 92

கவச மெல்லாவற்றையும் பாராயணம் செய்ய அவகாசமில்லாவிடில் அவர்களுக்கு மட்டும் விசேஷம் கூறினேன். மற்றவர்கள் கிரமமாகவே செய்யவேண்டும். 93

சத்ருக்ன கவசம்

முற்றிற்று.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

சிடனே! கேட்டவிஷயம் யாவற்றிற்கும் நான் கூறினேன். மற்றொரு விஷயம் கூறுகிறேன்.

இராமனைக் கானம் பிரபந்தம் இவைகளால் திருப்திசெய்விக்கவேண்டும். வீணை முதலிய வாத்தியங்களையும் நர்த்தனம் முதலியவற்றையும் செய்விக்கவேண்டும்.

“ தசரதநந்தந மேகச்யாம ரவிகுலமண்டந ராஜாராம ” “தசரதநந்தன மேகச்யாம ரவிகுலமண்டன ராஜாராம” என்னும் இவ்விருபத்திரண்டு அக்ஷரமுள்ள மந்திரத்தை வீணையுடன் இனிய குரலில் கானஞ் செய்யவேண்டும்.

இந்த மந்திரத்தைக் கீர்த்தனம் செய்வதில் அங்கந்யா சாந்யாசங்கள் கிடையா. இனிக் கூறும் மந்திரங்களிலும் ந்யாசமில்லை என்றறியவேண்டும்.

"𑌰𑌾𑌮𑌜𑌯𑌰𑌾𑌮𑌜𑌯 𑌰𑌾𑌮𑌜𑌯𑌰𑌾𑌮" "ராமஜய ராமஜய ராமஜயராம" என்னும் பதின்மூன்று அக்ஷரமுள்ள இந்த மந்திரத்தைக் கீர்த்தனம்செய்ய உனக்குக் கூறுகிறேன்.

மந்திர சாஸ்திரங்களில் கூறினபின்பு மந்திரங்கள் யாவும் ஜபம் செய்வதற்கு ஏற்பட்டவைகள். இங்குக் கூறும் இந்த மந்திரங்கள் கீர்த்தனம் செய்வதற் கென்றறியவேண்டும்.

இந்த மந்திரங்களைப் பக்தியுடன் ஜபம்செய்தால் செய்த பாவங்கள் யாவும் அந்த க்ஷணத்திலேயே சாம்பலாகின்றன.

பிராம்மணோத்தமனாகிய விஷ்ணுதாச! மற்றமந்திரங்களையும் கூறுகிறேன்.

"𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨 𑌮𑍇𑌘𑌶𑍍𑌯𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌞𑍍𑌜𑌨 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" இராஜீவலோசன மேகசியாம ஸீதாரஞ்ஜன ராஜராம், என்ற பத்தொன்பது அக்ஷரங்களுடன் கூடியது இம்மந்திரம். இதை நல்ல குரலோடு வீணையின் நாதத்துடன் உட்கார்ந்திருக்கும்போதும் நடக்கும்போதும் அடிக்கடி கீர்த்தனம் செய்யவேண்டும்.

ஸ்ரீசப்தத்தை முந்தியும் ஜய சப்தத்தை மத்தியிலும் மறுபடி ஜயவென்ற சப்தத்தை இரண்டு தடவையாகவும் சேர்த்து இந்த இரகுநாதனுடைய நாமத்தை இருபத்தொருமுறை ஜபம் செய்வானாகில், கோடி பிர்மஹத்தி தோஷம் நிவர்த்தியாகும். இந்த மந்திரம் பதின்மூன்று அக்ஷரமுள்ளது. மங்களங்களைக் கொடுக்கக்கூடியது. இந்தமந்திரத்தை எப்போதும் கீர்த்தனம் செய்யவும் ஜபம்செய்யவும் வேண்டும். "𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌜𑌯 𑌰𑌾𑌮𑌜𑌯 𑌜𑌯𑌰𑌾𑌮" இதுதான் மந்திரம்.

இந்த மந்திரத்தை வீணை முதலிய வாத்தியங்களோடு நல்ல குரலுடன் மானிடர்கள் சந்தோஷத்துடன் கீர்த்தனம் செய்யவேண்டும். மந்திர சாஸ்திரத்திலும் இந்த விஷயம் கூறியிருக்கிறது. இது சித்திகளெல்லாவற்றையும் கொடுக்கக் கூடியது.

விஷ்ணுதாச ! பதினெட்டக்ஷரமுள்ள மற்றொரு மந்திரம் கேள்.

"𑌸𑍀𑌤𑌾𑌰𑌂𑌜𑌨 𑌮𑍇𑌘𑌶𑍍𑌯𑌾𑌮 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌸𑍁𑌤 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" இந்தப் பதினெட்டு அக்ஷரமுள்ள மந்திரத்தை வீணையுடன் நல்ல குரலுடன் கானம் செய்யவேண்டும்.

சிரேஷ்டமான சூரிய வம்சத்தில் பிறந்து தேவர்களாலும் பிராம்மணர்களாலும் கானம் செய்யப்படுகிறவரை நமஸ்கரிக்கிறேன்.

"𑌰𑌵𑌿𑌵𑌰𑌕𑍁𑌲𑌜𑌾𑌤𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇𑌭𑍂𑌸𑍁𑌰𑌗𑍀𑌤𑌂" "இரவிவர குல்ஜாதம் வந்தேபூஸுரகீதம்" இது பதினேழு அக்ஷரமுள்ள மந்திரம். இதை ஸுஸ்வரத்துடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

விஷ்ணுதாச! மங்களத்தைக் கொடுக்கும் மற்ற ராமமந்திரங்களையும் கேள். அவைகளைக்கேட்ட மாத்திரத்தில் மஹாபாவங்கள் தொலைந்துவிடும்.

"𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌸𑍁𑌤 𑌰𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌂𑌜𑌨 𑌮𑍇𑌘𑌶𑍍𑌯𑌾𑌮" "கௌஸல்யா ஸுத ராம ஸீதாரஞ்சன மேகஸியாம" இந்தப்பதினாறு அக்ஷரமுள்ள மந்திரத்தை வீணையோடு நல்ல குரலுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். இந்த மந்திரம் பாவங்களைப் போக்கவும் மோக்ஷத்தை யளிக்கவும் கூடியது.

"𑌦𑌶𑌰𑌥𑌨𑌨𑍍𑌦𑌨 𑌮𑍇𑌘𑌶𑍍𑌯𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌂𑌜𑌨 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" "தசரதநந்தந மேகஸியாம ஸீதாரஞ்சன ராஜாராம" இந்த இருபது அக்ஷரமுள்ள மந்திரத்தை வீணையுடன் நல்லகுரலுடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

ரகுவீரரும் ஸீதையின் காந்தரும் யுத்தத்தில் தீரருமானவரை நமஸ்கரிக்கிறேன். "𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌘𑍁𑌵𑍀𑌰𑌂 𑌸𑍀𑌤𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌰𑌣𑌧𑍀𑌰𑌂" "வந்தே ரகுவீரம் ஸீதாகாந்தம் ரணதீரம்" இந்தப் பதினான்கு அக்ஷரமுள்ளதும் மங்களத்தை உண்டுபண்ணக் கூடியதுமான மந்திரத்தைக் கீர்த்தனம் செய்யவேண்டும்.

ராம! ஜயிக்கவேண்டுமென்று இரண்டுதடவையும் பிறகு ராமாவென்றும் கூறவேண்டும். "𑌜𑌯𑌰𑌾𑌮 𑌜𑌯𑌰𑌾𑌮 𑌜𑌯𑌜𑌯

ரா௦" "ஜாநராமஜயராம ஜயஜயராம" இது பதினொன்கு அக்ஷர முள்ள மந்திரம். இதைக் கீர்த்தனம் செய்யவேண்டும். "ஸீதா ராகவ" ஸீதாராகவ" என்ற ஐந்து அக்ஷரமுள்ள இந்த மந்தி ரத்தை வீணையுடன் ஸுஸ்வரமாகக் கானம் செய்யவேண்டும்.

"ஹஜஸீதாரா௦ மா நஸஹஜாராஜாரா௦" "பஜஸீதா ராமம் மானஸபஜராஜா ராமம்" இந்த மந்திரம் பதினைந்து அக்ஷர முள்ளது, இதை வீணையோடு நல்லகுரலுடன் கீர்த்தனம் செய்ய வேண்டும்.

"ஸ்ரீ ஸீதாரா௦ வந்தே ஸ்ரீ ராஜாரா௦" "ஸ்ரீஸீதாரா மம் வந்தேஸ்ரீ ராஜாராமம்" மனோரதங்க ளெல்லாவற்றையும் கொடுக்கும் புண்ணியமான இந்த மந்திரத்தை வீணைமுதலிய வாத்தியத்துடன் கீர்த்தனம் செய்யவேண்டும். இந்த மந்திரம் பனிரண்டக்ஷரமுள்ளது.

"ராவணமர்த்தந ரா௦ ராகவ வாலிமர்த்தநரா௦" "ராவணமர்த்தன ராகவ வாலிமர்த்தனராம" இந்த மந்திரம் பதினெட்டக்ஷர முள்ளது. இதை வீணையுடன் கீர்த்தனம் செய்ய வேண்டும். ராம "ஸ்ரீஸீதாரா௦ மாநஸஹஜாராஜாரா௦" "ஸ்ரீஸீதாராமம் மானஸபஜராஜாராமம்" இந்த மந்திரம் பதி னொன்கு அக்ஷரமுள்ளது. இதை வீணைமுதலிய வாத்தியத்தோடு நல்ல குரலுடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"ஸீதாரா௦ஜய ராஜாரா௦" "ஸீதாராமஜய ராஜாராம" இந்த மந்திரம் பத்தக்ஷரமுள்ளது. பாபங்களைப் போக்கக்கூடி யது. மானிடர்கள் எப்போதும் வீணைமுதலிய வாத்தியகோஷத் துடன் கீர்த்தனம் செய்யவேண்டும். "ஸ்ரீஸீதாரா௦ வந்தே ரா௦ஜயரா௦" "ஸ்ரீஸீதாராமம் வந்தேராமம் ஜயராமம்" இந்த மந்திரம் பதின்மூன் றக்ஷரமுள்ளது. பாபங்களைப் போக் கக்கூடியது. மானிடர்கள் எப்போதும் வீணைமுதலிய வாத்திய கோஷத்துடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌮𑌾𑌂𑌪𑌾𑌹𑍍𑌯𑌤𑌿𑌦𑍀𑌨𑌂 𑌰𑌾𑌘𑌵 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌦𑌯𑍁𑌗𑌲𑍀𑌨𑌂" "மாம்பாஹ்யதிதீனம் ராகவதுவத்பத யுகலீனம்" இந்த மந்திரம் பதினாறு அக்ஷரமுள்ளது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌜𑌯𑌜𑌯 𑌰𑌾𑌘𑌵" "ஜயஜயராகவ" இந்த மந்திரம் ஏழு அக்ஷரமுள்ளது. கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌜𑌯𑌜𑌯 𑌰𑌘𑍁𑌵𑌰" "ஜயஜய ரகுவர" இந்தமந்திரம் எட்டு அக்ஷரமுள்ளது. மானிடர்கள் எப்போதும் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌤𑍍𑌵𑌂𑌮𑌾𑌂𑌪𑌾𑌲𑌯𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮" "தவம் மாம்பாலய ஸீதாராம" இந்த மந்திரம் ஒன்பது அக்ஷரமுள்ளது மஹா பாபங்களை நாசம் செய்யக்கூடியது. வீணையுடன்கீர்த்தனம்செய்யவேண்டும்.

"𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮𑌜𑌯" "ஸீதாராமஜய" இந்த மந்திரம் ஆறு அக்ஷரமுள்ளது. மானிடர்கள் வீணையோடு நல்ல குரலுடன்கீர்த்தனம் செய்யவேண்டும். "𑌶𑍍𑌰𑍀𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮" "ஸ்ரீஸீதாராம்" இந்த மந்திரம் ஐந்து அக்ஷரமுள்ளது. மானிடர்கள் எப்போதும் கீர்த்தனம் செய்யவேண்டும். "𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮" "ஸீதாராம" இந்த மந்திரம் நான்கு அக்ஷரமுள்ளது. "𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮" இந்த மந்திரம் மூன்று அக்ஷரமுள்ளது. '𑌰𑌾𑌮' 'ராம' இந்தமந்திரம் இரண்டு அக்ஷரமுள்ளது. "𑌰𑌾𑌂" "ராம்" இந்தமந்திரம் பிந்துவுடன் ஓரக்ஷரமுள்ளது. இதைக் கீர்த்தனம் செய்யக்கூடாது. எப்போதும்ஜபம் செய்யவேண்டும். "𑌰𑌾𑌮𑌜𑌯𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮𑌰𑌾𑌘𑌵" "ராமஜயஸீதாராமராகவ" இந்த மந்திரம் பதினோரக்ஷர முள்ளது. "𑌦𑌶𑌰𑌥𑌨𑌨𑍍𑌦𑌨𑌰𑌘𑍁𑌕𑍁𑌲𑌭𑍂𑌷𑌣 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮𑌪𑌙𑍍𑌕𑌜𑌲𑍋𑌚𑌨𑌰𑌾𑌮" "தசரதநந்தன ரகுகுல பூஷண கௌஸல்யாவிச்ராமபங்கஜ லோசனராம" இந்த மந்திரம் இருபத்தெட்டக்ஷரமுள்ளது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். மஹா பாதகங்களைப் போக்கக்கூடியது. மனோரத மெல்லாவற்றையும் கொடுக்கக்கூடியது.

"𑌸𑍀𑌤𑌾𑌰𑌾𑌮𑌜𑌯𑌰𑌾𑌘𑌵𑌰𑌾𑌮" "ஸீதாராம ஜயராகவராம" இந்த மந்திரம் பதினொறு அக்ஷரமுள்ளது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌪𑌞𑍍𑌚𑌵𑌟𑍀𑌸𑍍𑌥𑌿𑌤 𑌰𑌾𑌮 𑌜𑌯𑌜𑌯 𑌦𑌶𑌰𑌥𑌨𑌨𑍍𑌦𑌨 𑌰𑌾𑌮"
"பஞ்சவடீஸ்தித ராம ஜயஜய தசரத நந்தந ராம" இந்த மந்திரம் இருபத்தொரு அக்ஷரமுள்ளது. மஹா பாபங்களைப்போக்கி மனோபீஷ்டமெல்லா வற்றையும் கொடுக்கக்கூடியது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும்.

"𑌦𑌶𑌰𑌥𑌸𑍁𑌤 𑌬𑌾𑌲𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌾𑌮𑌂 𑌘𑌨𑌨𑍀𑌲𑌂" "தசரதசுத பாலம் வந்தே ராமம் கனநீலம்" இந்த மந்திரம் பதினாறு அக்ஷரமுள்ளது. மஹா புண்ணியத்தை யளிக்கக்கூடியது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். "𑌕𑍋𑌦𑌣𑍍𑌡 𑌖𑌣𑍍𑌡𑌨 𑌦𑌶𑌶𑌿𑌰𑌮𑌰𑍍𑌦𑌨 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌸𑍁𑌤 𑌰𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌞𑍍𑌜𑌨 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" "கோதண்ட கண்டன தசசிரமர்த்தன கௌஸல்யாஸுத ராம ஸீதாரஞ்சன ராஜாராம" இந்த மந்திரம் இருபத்தொன்பது அக்ஷரமுள்ளது. வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். "𑌕𑍋𑌦𑌣𑍍𑌡𑌭𑌞𑍍𑌜𑌨 𑌰𑌾𑌵𑌣𑌮𑌰𑍍𑌦𑌨 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌞𑍍𑌜𑌨 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" "கோதண்டபஞ்ஜனராவணமர்த்தன கௌஸல்கியா விச்ராம ஸீதாரஞ்சன ராஜாராம" இந்த மந்திரம் இருபத்தேழு அக்ஷரமுள்ளது மங்களத்தைக் கொடுக்கக்கூடியது.

"𑌕𑍋𑌦𑌣𑍍𑌡 𑌖𑌣𑍍𑌡𑌨 𑌵𑌾𑌲𑌿𑌤𑌾𑌡𑌨 𑌲𑌙𑍍𑌕𑌾𑌦𑌾𑌹𑌨 𑌪𑌾𑌷𑌾𑌣𑌤𑌾𑌰𑌣 𑌰𑌾𑌵𑌣𑌮𑌰𑍍𑌦𑌨 𑌰𑌵𑌿𑌕𑍁𑌲𑌭𑍂𑌷𑌣 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮 𑌸𑍀𑌤𑌾𑌰𑌞𑍍𑌜𑌨 𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮" "கோதண்ட கண்டன வாலிதாடன லங்காதாஹன பாஷாணதாரண ராவணமர்த்தன ரவிகுல பூஷண கௌஸல்கியா விச்ராம ஸீதாரஞ்சன ராஜாராம" இந்த மந்திரம் ஐம்பது அக்ஷரமுள்ளது. மஹாபாதங்களைப் போக்கக்கூடியது. மந்திரங்களுக்குள் சிறந்தது. எப்போதும் வீணைவாத்தியத்துடன் கீரத்தனம் செய்யவேண்டும்.

சீடனே! இவ்விதம் அநேக மந்திரங்களிருக்கின்றன. ஆயிரம் வருஷம்வரையில் சொன்னாலும் எல்லாவற்றையும் சொல்லிவிட எவன் சக்தியுள்ளவன். இந்த மந்திரங்களை வீணையுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். ஜபம் செய்யக்கூடியவைக ளல்லவென்றறிய வேண்டும். மந்திர சாஸ்திரங்களில் கூறியவைகளைத்தான் ஜபம்செய்யவேண்டும். அவைகளைக் கீர்த்தனம் செய்யக்கூடாது.

ரேமான்கள் இந்த மந்திரங்களை முன்னிட்டு அனேக பாஷைகளில் ஆதரவுடன் கிரந்தங்கள் செய்யவேண்டும்.

நான் சொல்லாத மந்திரங்களை மானிடன் யுக்தியால் கற்பித்துக்கொள்ளவேண்டும். அப்படிக் கற்பிப்பதில் தோஷமில்லை. இதனால் விஷ்ணு சந்தோஷமடைகிறார்.

மானிடர்கள் எப்போதும் மந்திரம், பிரபந்தம், காவியம், ஸ்தோத்திரம் கீர்த்தனம் முன்னோர்கள் கூறியவைகள் தான் கற்ப்பித்தது. இவைகளுக்குள் எதனாலாவது இராமனை உபாசிக்க வேண்டும். எந்தவிதமாகவாவது ராமத்தியானம் செய்யவேண்டும். செய்தால் ஓர் க்ஷணத்தில் நெருப்பினால் பர்ணசாலை எரிவது போல் பாபக் குவியல் சாபலாய்விடும். சந்தேகமில்லை.

டம்பத்தாலாவது, மிகுதியான பக்தியாலாவது, ஆசையாலாவது, ஆசையில்லாமையாலாவது இராமனை ஸ்மரணம் செய்தால் பாபங்கள் பஞ்சுச்கூட்டத்தில் விழுந்த தீப்போல்சாம்பலாய் விடும். சந்தேகமில்லை. மந்திரம் பிரபந்தங்கள், காவியங்கள், இவைகள் அசுத்தமாயினும் ஸ்ரீராமனை ஸ்தோத்திரம் செய்யக் கூடியதானால் ஸ்ரீராமர் சந்தோஷமடைகிறார். சந்தேகமில்லை.

ராமனை ஆசிரயிக்காமல் ஸ்தோத்திரம் முதலியவைகளைச் செய்தாலும் ஸ்ரீராமர் சந்தோஷமடைகிறார். ராமனை ஆசிரயித்தும் நிந்திப்பவனாகில் நகரத்தையே அடைகிறான்.

ராமரிடம் பிரீதி உண்டாய் விட்டால், சாஸ்திரங்கள் புராணங்கள் அத்தியயனம் செய்வது செய்வித்தல் முதலியவைகள் அனாவசியம். மூர்க்கனாயினும் அவனிடம் ராமபக்தி யிருந்து, அவனுடைய பாஷையில் அவரை ஸ்தோத்திரம் செய்திருப்பானாயின் அதைக் கூறினால் பகவான் பிரசன்ன மாகிறார். ஸ்ரீராமசந்திரரை அடைய எந்தக்காரியம் செய்தாலும் ஸ்ரீராமர் சந்தோஷமடைகிறார். இராமர் கானம், தியானம், ஸ்தோத்திரம், சேவை; வந்தனம் இவைகளுக் குரியவர் பூதங்களெல்லாவற்றிலும் இருப்பவரென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

இலக்குமணர் முதலியவர்களின் கவசங்களைகூறும்

15-வது சருக்கம்

முற்றிற்று.

16-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

மாணவனே! நீ கேட்டவிஷயம் எல்லாவற்றிற்கும் சமாதானம் கூறினேன். மற்றப்படி எதைக்கேட்க விரும்புகிறாய் கேள்; கூறுகிறேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ராமாயணத்தைக் கேட்ட மானிடர்கள் படிப்பவர்களுக்கு என்ன சம்மானம் செய்யவேண்டும். மஹாபாக்கியம் பொருந்திய குருவே! அதன் உண்மையை விஸ்தாரமாகக் கூறவேண்டும் என்றார்.

ராமதாஸர் கூறுகிறார்.

ராமாயணத்தைச் சிரவணம் செய்தால் பட்டுத் துவஜத்துடன் கூடியதும் நான்குகுதிரைகள் பூட்டியதும் மணி ஓசையுள்ளதும் சொர்ணமயமாய் விளங்குவதுமாகிய இரதத்தையும் மிகுதியான பாலை உடைய தேநுவையும் கொடுக்கவேண்டும்.

நூற்றெட்டு அந்தணர்களுக்குப் போஜன மளிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் அந்த மஹா காவியம் மங்களங்களைக்கொடுக்கும்; மிகுந்த பலனைத் கொடுக்கும். எந்தக் கிரந்தத்தில் ராமருடைய சொரூபமிருக்கிறதோ அது ராமாயணமென்று சொல்லப்படும். நீகேட்ட விஷயத்திற்குச் சமாதானம் கூறினேன்.

அநுமானுடைய விரதத்தில் ஏதேனும் உபதேசம் செய்ய வேண்டுகிறேன் என்றார்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

ராமர், திரிகூட பர்வதத்தில் நாகபாசத்தால் துன்பமடைந்தபோது, நாரதமுனிவரின் உபதேசப்படி வினதையின் குமாரனாகிய கருடனை ஸ்மரித்தார்.

அப்பொழுது காசியபர் குமாரனாகிய கருடன் யுத்த பூமிக்கு வந்து நிகரற்ற தேஜஸுள்ள ஸ்ரீ ராகவருக்கு நமஸ்காரம் செய்

தார். நாகாஸ்திரத்தை நிவாரணம் செய்து லக்ஷ்மணன் சேனைகள் இவர்களுடன் கூடின ராமரை ஸ்தோத்திரஞ்செய்து அவரைப்பார்த்துக் கூறுகிறார்.

கருடன் கூறுகிறார்.

ராமச்சந்திர! பயங்கரரும் கூட்டத்தாருடன் கூடினவரும் வீரனுமான அநுமான் சுக்ரீவன் நளன் நீலன் சுஷேணன் ஜாம்ப வான் தரளன் மஹாவீர்யமுள்ள மைந்தன் இவர்களிருக்கும் போது என்னை எதன் பொருட்டுக் கருதியது?

ஸ்ரீராமர் கூறுகிறார்.

கருடனே! உன்னுடைய குரலைக்கேட்டவுடன் ஸர்ப்பங்கள் ஓடிவிட்டன.. இந்தச் சைன்யத்தைப் பீடித்தார்களா? இந்த வீரர்களிருந்து என்ன பிரயோஜனம்?

கருடன் கூறுகிறார்.

ஏ ராம! ஏ தேவ! மஹாபலசாலியே! கவிகளின் சரித்தி ரத்தைக்கேளும். இந்த வானரங்கள் உமக்கு வேண்டியவர்களா யினும் நிந்திப்பது கூடாது. தசரதகுமாரரே நீர் பிரத்தியக்ஷ விஷ்ணு. ஸீதை மஹாலக்ஷ்மி லக்ஷ்மணர் ஆதிசேஷன் வானரர்கள் ருத்திரர்கள் சுக்ரீவன் வீரபத்திரன்; நளன் சம்பு; நீலன் கிரிசன்; சுஷேணன் மஹாயசசு; ஜாம்பவான் அஜயேக பாத்; அங்கதன் அஹிர்புத்தினியன்; ததிவக்திரன் பினாகிருத்; தாரன் அயுதஜித்; தரளன் ஸ்தாணு; மைந்தன் பர்க்கன்; அநு மான் பிரத்தியக்ஷ பகவானாகிய ருத்திரர். இவர்கள் ஏ ரகுநந் தன! உமக்காக உண்டானவர்கள். தேசங்களிலும் பருவதத் தின் பிரதேசங்களிலும் வாசஞ்செய்தார்கள். இவர்கள் குரங்கு ரூபமடையக் காரணம் கூறுகிறேன்:—

முந்தி தேவாசுரர்கள் அமிர்தம் பெறுவதன் பொருட்டுக் கடலைக்கடைந்தபோது அநேக உபத்திரவங்களை உண்டுபண்ணும் சிரங்கு கொப்பளம் முதலிய வியாதிகள் உண்டாயின. அந்த வியாதிகளால் பூமண்டலம் யாவும் உபத்திரவமடைந்தன. அப்

பொழுது தேவர்களும் அரசர்களும் பிரம்மதேவரிடம் சரண மடைந்தார்கள்.

லோகநாதனுகிய பிரம்மதேவரே! இப்பூமியை வியாதிகளி னின்றுங் காக்கவேண்டும்; இப்பூமி கடுமையான தோஷத்தாலும் ஜ்வரம் முதலியவைகளாலும் அத்தியாத்துமம் அதிபூதம் அதி தைவம் என்ற மூன்று தோஷங்களாலும் மற்ற உபத்திரவங்களா லும் சீர்கெட்டிருக்கிறது. மூலிகைகள் சித்திக்கவில்லை. மந்திரம் யந்திரம் இவைகளும் பலிக்கவில்லை. நாசம் செய்யும் மஹாரோ கங்கள் மானிடர்களைப் பிடிக்கின்றன. புத்திசாலியாகிய பிரம்ம தேவரே! இவ்விஷயயாவற்றையும் கூறினோம்." என்றார்கள்.

இவ்வசனங்களைக்கேட்ட பிரமன் ருத்திரர்களைப் பிரார்த் தனை செய்தார். பதினொரு ருத்திரர்களும் பிர்ம்மாவின் வாக் கியத்தைக்கேட்டு பிர்ம்மதேவரைச் சமாதானப்படுத்தி வீரபத் திரர்முதலிய தேவர்களும் சேர்ந்து வானரர்களாக ஜனனமடைந் தார்கள். அவர்கள் தாம் சுக்ரீவன் முதலியவர்கள். இவர்கள் மலையின் சிகரங்களிலும் பூமண்டலத்திலும் சஞ்சாரஞ் செய்து கொண்டு அடிக்கடி செய்துவந்த கடுமையான பு! பு!! என்ற சப் தங்களாலும் கர்ஜனைகளாலும் விளையாட்டுக்களாலும் வியாதிக ளெல்லாம் நாசமடைந்தன. பிறகு பூமி எங்கும் வானரங்கள் சூழ்ந்திருப்பதைப் பார்த்துச் சந்தோஷ மடைந்துகுரங்குகளுக்கு வரங்கொடுக்க யத்தனித்தார்.

பிரம்மதேவர் கூறுகிறார்.

வானரங்களே! உங்களில் முத்திரைகள் ஏற்படட்டும். மிருத சஞ்சீவினி வித்தை, உலகெங்குஞ்செல்லும் ஆஞ்ஞை, மனசுக்குச் சமமான வேகம் இவை உங்களுக்குண்டாகட்டும். எந்த மானிடர் கள் உங்களை ஸ்மரணம் செய்கிறார்களோ பூஜை செய்கிறார்களோ அவர்கள் தந்நியர்களாவார்கள். விசித்திரத்தோரண துவசங்களை ஏற்படுத்தி, பக்ஷியம் போஜ்ஜியம் காந்தியம் லேஹியம் பேயம் முதலியவைகளை உங்களைஉத்தேசித்து அக்கினியில்ஹோமஞ்செய்து உபாசிக்கிறவர்களுக்குக் காரிய சித்தி உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. உங்கள் கூட்டத்தை, பாயசம் நெய் எள்ளு இவை

களால் பூஜிப்பவர்கள் பரமபதமடைவார்கள். இவ்விதம் ஸ்ரீ ருத்திர வைச்வானரருக்கு, மானஸ்தோகே என்ற மந்திரம் மஹோஜ்யோதி: என்ற மந்திரம் காயத்திரி மந்திரம் இவைகளில் எந்த மந்திரத்திலாவது பூஜைசெய்பவர்கள் வியாதியிலிருந்து விடுபட்டுச்சுகமாகவிருந்து முடிவில் அழிவற்ற ஸ்தானமடைவார்கள்.

கருடன்கூறுகிறார்.

ராம! இவ்விதம் வானரங்களின் வரலாற்றைக் கூறினேன். இந்த ருத்திரர்களுக்குள் அநுமான் பத்ரநாயகன். அநுமான் சரீரமிருக்கு மிடத்தில் பூஜைசெய்யவேண்டும். கோபுரத்தில் கல்லில் அநுமானுடைய மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து அங்குப் பூஜிக்கவேண்டும்.

ஸ்ரீராமர் கேட்கிறார்.

"எந்தப் பிரகாரமாக வானரங்களைப் பூஜிக்கவேண்டும்? துவசங்கள் எந்த மாதிரி இருக்கவேண்டும்? எவ்வளவு, எண்ணிக்கையுள்ள ஹோமம்செய்தல் வேண்டும்? திரவியம் என்ன? ஜபம் எவ்விதம்? தானம் எப்படி? எந்த விதியாகச் செய்கிறது? என்று வினவினார்.

கருடன் கூறுகிறார்.

ஏ ராஜனே! கிராமத்திலாவது பட்டணத்திலாவது ஜனங்களுக்கு மரணம் நேருஞ்சமயத்தில், அந்த வியாதிகளைப் போக்க ஒளஷதம் மணிமந்திரம் சக்தியற்றபோது ஏகாதசிதிதியில் பூஜையைச்செய்ய முயற்சிசெய்யவேண்டும்.

காலையில் எழுந்து பிராம்மண சிரேஷ்டனாகவிருப்பவன் சுத்திசெய்து கொண்டு நெல்லிக்காய்தேய்த்து கங்கையில் ஸ்நானஞ்செய்து உபவாசத்துடனிருக்கும் பதினொரு பிராம்மணர்களை வரித்து அநேக உபகரணங்களுடன் ஜாகரணம் (கண்விழித்தல்) செய்யவேண்டும். முதலாவது நான்குபக்கங்களிலும் பிரகாசமுள்ள மண்டபத்தை ஏற்படுத்தி, புஷ்பப்பந்தலைப்போட்டு, அதில் மண்டல மேற்படுத்தி, அதன் மத்தியில் வானரங்களை ஸ்தாபித்து, பஞ்சாமிருதஸ்நானம் செய்வித்து தாமரை முதலிய புஷ்பங்களாலும் பச்சைக்கர்ப்பூரம் கலந்த சந்தனத்தாலும் தசாங்க தூபத்தா

லும் தீபம் நீராஞ்சனம் அநேகவிதமான நைவேத்தியம் இவைக ளாலும் வஸ்திரங்களாகிய பதினொரு துவஜங்களையும் ஏற்படுத்தி எந்த எந்த தேவதைக்கு எந்த துவஜம் ஏற்பட்டதோ அதை அந்தந்த தேவதையை உத்தேசித்து அர்ப்பணம் செய்து பூஜை செய்யவேண்டும்.

பிறகு காலையில் ஸ்னானம் செய்து நியமத்துடனிருந்து நெய் பாயசத்துடன் பதினாயிரம் ஆவிருத்தி அக்கினியில் ஹோமம் செய்யவேண்டும். பிறகு மறுபடி பூஜையைச் செய்து வாசற்படி யில் 'அநுமான் துவஜத்தையும் ராஜதுவாரத்தில் சுக்ரீவ னுடைய துவஜத்தையும் கடைவீதியில் சுஷேணன் துவஜத்தை யும் சிவத்வாரத்தில் நளன் நீலன் இவர்களின் துவஜத்தையும் தாரன் தரளன் மைந்தன் அங்கதன் இவர்களின் துவஜங்களைக் கிராமத்தின் நான்கு திசைகளிலும் ஜலமுள்ள விடத்தில் ஜாம்ப வான் துவஜத்தையும் நாற்சந்தி கூடுமிடத்தில் ததிவக்திரன் துவ ஜத்தையும் மஹாவாத்தியம் முதலிய மங்கள சப்தங்களுடன் ஸ்தாபிக்கவேண்டும்.

அந்தணர்களுக்குத் தினந்தோறும் திருப்தி செய்துவைக்க வேண்டும். ரித்துவிக்குகளுக்கு வஸ்திரங்களையும் அலங்காரங் களையும் தானம் செய்யவேண்டும். குடை, விசிறி, பாதுகை, மிகுதி யான பால், காமதேநு, தக்ஷிணை, வஸ்திரம், அலங்காரம் இவை களை ஆசாரியருக்குக் கொடுக்கவேண்டும்.

மற்றுமுள்ள அந்தணர்களுக்கு உப்பு, நெய், எண்ணெய், வெல்லம், படுக்கை ஏழுவகைத் தானியங்களையும் தானம் செய்ய வேண்டும். இந்த விதிப்படி அரசன் செய்தால் க்ஷேமமடை வான். இதன்பொருட்டு ஜபம் செய்வதானால் ருத்திரரைத் தான் தேவனாக் கொள்ளவேண்டும் அல்லது (மானஸ்தோகே) என்ற மந்திரத்தினால் ஹவனம் (ஹோமம்) செய்வதும் சிறந்ததாகும்.

இது அநுமத்துவஜம் என்ற பெயருள்ள விரதம்.

அநுமத்துவஜத்தின் ஆரோபண விரதத்தைக் கூறும்

16-வது சருக்கம்

முற்றிற்று.

17-வது சருக்கம்.

ஸ்ரீ ராமதாசர் கூறுகிறார்.

ஏ விஷ்ணுதாசா! நீ கேட்ட விஷயம் யாவற்றையும் ஸ்ரீராமருடைய ஆஞ்ஞைப்படி கூறினேன்.

நீ முந்தி மிகுந்ததவம் செய்திருப்பதால், நான் பூஜைசெய்து முடிந்தவுடன் பிரத்தியக்ஷமாக ராமர் தரிசனந்தந்து, "ஏ ராமதாசா! மங்களத்தைக்கொடுக்கும் இந்த ஆனந்தராமாயணத்தை விஷ்ணுதாசனுக்குச் சொல்" என்று அடிக்கடி கட்டளையிட்டார். ராமர் உபதேசம் செய்த பிறகு நூற்றென்பது சுலோகமடங்கிய ஸாரராமாயணத்தின் விஷயம் ஞாபகத்துக்குவந்தது. அவ்விஷயத்தை ராமரும் உபதேசஞ்செய்தார். வான்மீகி முனிவர் முகமாகச் சொல்லப்பட்ட ராமகதையின் விஷயங்களும் நினைவுக்கு வந்தது. விஷ்ணுதாச! ஸ்ரீராமாஞ்ஞைப்படி நூறுகோடி கிரந்தங்களடங்கிய ராமாயணத்தின் ஸாரமாக இருப்பதை ஆலோசித்து உனக்குரைத்தேன்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! நீர் எனக்கு மனமகிழ்ச்சியுண்டாக, ஆனந்தராமாயணமென்னும் இச்சரித்திரத்தைத் தெரிவித்தீர். சதகோடி ராமாயணத்தினின்று விவேசனம் செய்துசாரமாகவிருப்பதென்று சொன்னீரே, அவ்விஷயமென்ன? அல்லது பரதகண்டத்தில் உள்ளபாகத்தை அநுசரித்தாவது எனக்குரைக்க வேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

மங்களகரமான சதகோடி ராமாயணம் முழுவதையும் ஞானதிருஷ்டியாலறிந்து இச்சரித்திரத்தை உரைத்தேன். அதில் ராமர் உபதேசம் செய்த ஸாரராமாயணத்தால் அநேக விசேஷங்கள் தெரியவந்தன. ஆதலாற்றான் ஞாபகத்திற்கு வந்ததெனக் கூறினேன்.

RESEARCH INSTITUTE,
14. R. H. ROAD, MADRAS-4

ஆசாரியரே! பாபங்களைப்போக்கும் சதகோடி ராமாயணத்தில் எவ்வளவு காண்டங்கள் எவ்வளவு சருக்கங்கள் உள்ளனவென்று சொல்லவேண்டும்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

சதகோடி ராமாயணத்தில் காண்டங்கள் ஒன்பது லக்ஷம். சருக்கங்கள் தொண்ணூறு லக்ஷம். சுலோகங்கள் நூறுகோடியுள்ளனவாம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! என் பொருட்டு ஸ்ரீராமன் உமக்கு உபதேசம் செய்த நூற்றொன்பது சுலோகமுள்ள ஸார ராமாயணமென்னும் மங்களகரமான சரித்திரத்தைக்கேட்கச் சந்தோஷமுள்ளவனாகவிருக்கிறேன், தயைபுரியவேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

சீடனே! நல்லது சாவதானமனதுடன் கேள்; நான் பூஜை செய்தபின்பு என்முன் தமது சகோதரர்களுடன் லக்ஷ்மியுடனும் ராமபிரான் பிரஸன்னமாகி இந்த ஸார ராமாயணத்தைக் கூறினார்.

ஸ்ரீராமச்சந்திரர் கூறுகிறார்.

ஏ ராமதாச! நான் விஸ்தாரமாகச் சொல்லும் ஸாரமான என் சரித்திரத்தைக்கேள்.

நான் உபதேசம் செய்யும் இச்சரித்திரத்தையும் நீ ஞான திருஷ்டியால் தெரிந்துகொண்ட விஷயத்தையும் என்பக்தியில் சிறந்த விஷ்ணுதாசனென்னும் உன் சிஷனுக் குபதேசஞ்செய். பரதகண்டத்திலுள்ள இக்கதையின் பாகங்கள் உனக்கு ஞாபகம் வருவதன் பொருட்டுச் சிறிது கூறுகிறேன்.

ஸாரகாண்ட விஷய சூசிகை.

பார்வதி பரமேசுவரசம்வாதம் (1) சூரிய வம்சத்தரசர்களில் பாதிப்பேர்களின் வரலாறு (2) என்தாய் தந்தைகளாகிய கௌஸல்லியைத் தசரதர்களை ராவணன் அபகரித்து இலங்கை சென்று அங்கு விடுதலை செய்தது (3) தசரதருடைய விவாகம் (4) கைகேயிக்குத் தசரதர் இரண்டு வரம் கொடுத்தல் (5) கைகேயிக்கு ஏற்பட்ட பிராம்மணசாப வரலாறு (6) வரங்கொடுத்த அரசனுக்குண்டான சாபம் (7) வைசியஹத்தி (8) ருசியசிருங்க முனிவரை அழைக்க முயற்சி செய்தல் (9) ருசிய சிருங்கமுனிவரின் அனுகிரகத்தினால் அக்கினிபகவான் அரசனுக்குப் பாயஸமளித்தல் (10) பாயசத்தைப் பிரிக்கும்போது ஒருபாகத்தைக் கழுகு மலையிற் கொண்டுபோடுதல் (கக) அரசன் மனைவிகள் கருப்பந்தரித்தல் (12) அவர்களுக்கு ஆசையுண்டாகுதல் (13) பிறகு பூமி பிரும்மதேவர் இருவரும் என்னைப் பிரார்த்தனைசெய்தல் (14) மந்தரையின் உற்பத்தி (.5) சைத்திர மாஸத்தில் நான் அவதாரம் செய்தது (16) பந்துக்களுடனும் நான் செய்த பாலக்ரீடை (17) எனக்கு விரதபந்த முண்டாகுதல்(18) வஸிஷ்ட முனிவரிடம் வேதாப்பியாசம் செய்தல் (19) பந்துக்களுடன் தீர்த்தயாத்திரை செய்தல் (20) விசுவாமித்திரரிடம் வில்வித்தைபயிலல் (21) வனத்தில் தாடகையைச் சங்காரம் செய்தல் (22) யுத்ததீக்ஷையில் ஆரம்பம் (23) யாகத்தில் சுபாஹுவை வதஞ்செய்தல் (24) மாரீசனைத்துரத்தியது (25) அஹல்லியை உத்தாரணம் செய்தல் (26) முனிபத்தினியின் சுவயம்வரத்தின் வரலாறு, சாபத்தின் வரலாறு (27) கங்காநதியின் ஓடக்காரன் என்பாதப்பிரக்ஷாளனம் செய்தல் (28) ஜமதக்னியர் கொடுத்த சிவன் வில்லைச்சபையில் முறித்தல் (29) ஸீதையின் உற்பத்தி (30) ஸீதை இலங்கைக்குச் சென்று வெளிப்புறப்படுதல் (31) எனக்கும் பந்துக்களுக்கும் நடந்த விவாஹம் (32) பரசுராமனுடைய பராஜயம் (33) தீபாவளிமஹோற்சவ வைபவம் அரசர்களுடன் மார்க்கத்தில் சண்டைசெய்தல் (34) பரதன் உயிர்பெறுதல் (35) முனிவர்கூறிய முன்னறிவிப்பு (34) பிருந்தையின் சாப வரலாறு (37) தந்தையின் புண்ணியகரும்ம் (38) கைகேயியின்

பூர்வகர்மம் பிறகு என்னுடைய தினசரியை (39) கர்ப்பாதான மஹோற்சவம் (40) நாரதர் முன்னிலையில் நான் செய்தபிரதிஞ்ஞை (41) யௌவராஜ்யத்தில் முடிசூட்டச்செய்யும் பிரயத்தினம் (42)கைகேயியிக்கு வரம் கொடுத்ததினால் நான் தண்டகாரண்ணியத்திற்கு யாத்திரைசெய்தது (43) குகனைச் சந்தித்தல் (44) கங்கையை ஸீதை பிரார்த்தித்தல் (45) பரத்துவாஜ முனிவர் வான்மீகமுனிவர் இருவர்களையும் தரிசனஞ்செய்தது (46) சித்திரகூடத்தில் வாசஞ்செய்தது (47) காக்கையின் கண்ணைப்போக்கியது (48) அயோத்தியில் தசரதர் மரணமடைந்தது (49) பரதனைப்பார்த்தது (50) பரதனை அயோத்திக்கனுப்பியது (51) அரண்ணியத்தில் ஸீதைக்குத் திலகமிட்டது (52) அநசூயை ஆபரணம் முதலியவைகளைக் கொடுத்தது (53) மார்க்கத்தில் விராதனை வதைத்தது (54) அனேக ஆச்சிரமங்களைப் பார்த்தது (55) அகஸ்தியமுனிவர் ஜடாயு இருவரையும் பார்த்தது (56) சாம்பனைவதம் செய்தது (57) சூர்ப்பணகியை அவமானப்படுத்தியது (58) கரன் முதலியவர்களைக்கொன்றது (59) ஸீதையின் சரீரத்தைப் பிரித்தது (60) நான் மாரீசனைவதம் செய்தது (61) ஸீதாபஹரணம் (62) ஜடாயுவின்யுத்தம் (63) இந்திரன் ஸீதைக்குப் பாயஸம் கொடுத்தது (64) பார்வதியைப் பார்த்தது (65) மார்க்கத்தில் கபந்தனைக் கொன்றது (66) நான்சபரியிடம் பூஜையை அடைந்தது (67) சுக்ரீவனுடன் ஸ்னேகம் செய்தல் (68) சிரசை எத்தியெறிந்தது (69) ஏழு சால் விருக்ஷங்களைப் பேதனம் செய்தது (70) ஸர்ப்பமாலையை அடைதல் (71) வாலிவதம் செய்தல் (72) ஸீதையைத்தேட யத்தினம் செய்தது (73) அநுமான் சமுத்திரத்தைத் தாண்டியது (74) இலங்கையில் ஸீதையைப்பார்த்தது (75) மந்தோதரியின் உற்பத்தியின் வரலாறு (76) அசோகவனத்தின் காவலாளிகள் (77) அக்ஷகுமாரன் முதலியவர்களை வதம் செய்தது (78) இலங்கையைத் தஹனம் செய்தல். (79) அநுமான் சரீரத்தைவிட முடிவுசெய்தது (80) ஜாம்பூனத விருக்ஷ சாகையின் கதை (81) சமுத்திரத்தைத்தாண்டியது (82) அநேக மோதிரங்களைப்பார்த்தது (83) சேதுபந்தனம் செய்தது விபீஷணனுக்கு அபிஷேகம் செய்தது (84) விசுவனுதகதை (85)

கந்தமாதனனேசுவரருடைய வரலாறு (86) யுத்தாரம்பம் (87) காலநேமிவதம் (88) ராவணன் வதம் (89) மைராவணமர்த்தனம் (90) நான்கட்டிலே பங்கம் செய்தது (91) கும்பகர்ணவதம் (92) மேகநாதவதம் (93) ஹோமத்தைக் கெடுத்தது (94) ராவணவதம், ஸீதைக்குத் திவ்வியதானம் செய்தது (95) நான் அயோத்திக்கு வந்தது (96) யுத்ததீக்ஷையை முடித்தது (97) நான் பட்டாபிஷேகம் செய்துகொண்டது (98) ராவணன் முதலியவர்களின் உற்பத்தி (99) இந்திரஜித்துடைய பராக்கிரமம் (100) ராவணனுடைய அவமான வரலாறு (101) வாலி சுக்ரீவர்களுடைய பிறப்பு (102) அநுமானுடைய பிறப்பு (103) அநுமானுடைய வரதானம் (104) அநுமானுக்கேற்பட்ட சாபம் (105) அகஸ்தியமுனிவரின் பிரயாணம். இந்தவிஷயங்கள் சாரகாண்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

யாத்திராகாண்ட விஷய சூசிகை.

கங்கா யாத்திரைக்கு முயற்சிசெய்தல் (1) சரயுவைப் பிரித்தல் (2) நான் பாணத்தால் ரேகைசெய்தது (3) ஸீதையின் வாக்கியத்தால் தியாகஞ்செய்தது (4) கும்போதரன் வாக்கியப்படி பூமியாத்திரை செய்தது (5) குமாரிகளுக்கு வரங்கொடுத்தது (6) பிரமதேவர் எனக்குக் காமதேநு கொடுத்தது (7) பரமசிவனிடமிருந்து சிந்தாமணியை அடைந்தது (8) அயோத்தியில் மறுபடியும் பிரவேசித்தது. இவைகள் யாத்திராகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

யாககாண்ட விஷய சூசிகை.

அசுவமேத யாகத்தின் ஆரம்பம் (1) பூமியில் குதிரையை விடுவித்தல் (2) சைன்னியத்துடன் குதிரைக்குக் கங்காநதி வழி கொடுப்பது (3) குதிரை பூமியைவலம்வந்து யாகசாலையில் பிரவேசம் செய்தல் (4) தமஸாநதிக்கரையில் யாகசாலை அமைப்பது (5) கும்போதரமுனிவர் பிரவேசம் செய்தது (6) முனிவர்கள் என்னுடைய நூற்றெட்டு நாமங்களைச் சொல்லி ஸ்தோத்திரஞ் செய்தல் (7) தினந்தோறும் ராமர் அநுஷ்டித்துவந்த செய்கை

(8) துவஜாரோபணம் (9) என் அவபிருதஸ்னானம் (10) ஸீதையைத் தானஞ்செய்தல் (11) ஸீதையை விடுதல் (12) ராமதீர்த்தம் முதலியவற்றை வர்ணித்தல் (13) யாகத்தின்முடிவு (14) பத்துயாகங்களைச் செய்தது (15) இவைகள் கூறப்பட்டிருக்கின்றன.

விலாசகாண்ட விஷய சூசிகை.

பிறகு என்னுடைய உத்தம ஸ்தோத்திரம் (1) கிரீடாசாலையை வர்ணித்தல் (2) பக்ஷிகளின் ஒன்பது ஸ்தோத்திரம் (3) நான் ஜானகியை வர்ணித்தது (4) நான் என்பத்தினிக்கு தேஹராமாயணத்தை வர்ணித்தது (5) என்னுடைய தினசரிச்செய்கை (6) ஸீதையின் அலங்காரத்தை வர்ணித்தல் (7) பக்குவமான அன்னங்களின் விஸ்தாரம் (8) ஸீதையுடன் ஜலக்கிரீடை (9) மந்திரியானத்தில் நான் செய்த கருமங்களை வர்ணித்தல் (10) போஜனம் முதலிய காரியங்களைக்கூறுதல் (11) ஸீதை பிராமண ஸ்திரீகளுக்கு ஆபரணதானம் செய்தது (12) இரவில் ஸீதையுடன் அனேகவிடங்களில் கிரீடைசெய்தது (13) வியாசமுனிவருக்கு முன்னிலையில் பதினாறு சொர்ணமூர்த்திகளைத் தானஞ்செய்தது. (14) நான் தேவபத்தினிகளுக்கு வரம் கொடுத்தது (15) குணவதிக்கு வரம்கொடுத்தது (16) பிங்களைக்கு வரங்கொடுத்தது (17) ஸீதையினுடைய நம்பிக்கைக்காக நான் ஸந்தோஷத்துடன் திவ்யவஸ்துக்களைத் தானஞ்செய்தது (18) குருக்ஷேத்திரத்தில் அகஸ்திய முனிவரின் பத்தினியுடன் ஸீதை ஸம்வாதம் செய்து ஜயம்பெற்றது. இவைகள் விலாச காண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ஜன்மகாண்ட விஷயசூசிகை.

ஸீதையின் ஆசைக்காக உத்தியான வனத்தில் செய்த கிரீடை (20) சீமந்தம்முதலியன (21) நான் ஜனக மஹாராஜாவை வான்மீகி முனிவராச்சிரமத்துக் கனுப்பியது, (22) என் சொற்படி ஸீதை இரண்டு உருவம் தரித்தல் (23) கைகேயி ராவணன் கட்டைவிரலுக்குச் சரியான ஆகிருதியுடன் அவனை எழுதியது (24) லோகத்திலுள்ள ஜனங்கள் வண்ணான் இவர்கள் சொன்ன

அபவாதத்தைக் கேட்டு நான் ரஜோகுணம் தமோகுணம் கலந்த ஸீதையைக் காட்டிற்கு அனுப்பி ஸீதையின் கையை வரவழைத்தது. (25) நான் உருமாறி வான்மீகியின் ஆச்சிரமம் சென்று குமாரனுக்கு ஜாதகருமம் செய்தது (26) கங்கைக்கரையில் நான் நூறு யாகம் செய்தது (27) வான்மீகி முனிவர் தருப்பைகளின் லவத்தால் (அடியால்) லவன் என்ற மற்றொரு பிள்ளையை உண்டு பண்ணியது (28) அவ்விருகுமாரருக்கும் ராமரக்ஷைபால் முனிவர் அபிமந்திரணம் செய்தது (29) தாமரைப்புட்பங்களை லவன் கொண்டுபோய் ஜயமடைந்தது (30) என்யாகத்தில் பிள்ளைகள் முகமாக ராமாயணத்தை சிரவணம் செய்தது (31) லவன் செய்த யுத்தம் (31a) ஜலத்தால் லவனுக் கபிஷேகம் செய்தல் (32) நான் குசனுடன் யுத்தம்செய்தது (33) ஸீதையின் சபதம் (34) பூமியில் பிரவேசித்த ஸீதையை யடைந்தது (34) யாகத்தின் முடிவு (35) பந்துக்களின் புத்திரர்கள் உற்பத்தி (36) பாலக்கிரீடை (37) உபநயனம் (38) வேதாத்தியயனம் செய்தது, (39) பாலர்களின் சுபசூசக சின்னங்கள் (40) ஸீதை புத்திரர்களை லாலனம் செய்தது (41) எல்லோருக்கும் விரதபந்தம் செய்தது (42) அவர்கள் யாத்திரை செய்தது. இவைகள் ஜன்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

விவாககாண்ட விஷய சூசிகை.

ஸ்ரீ கீர்த்தியின் பத்திரிகைப்படி லவன் நகரம் சென்றது. (1) என்னைப்பார்க்கப் பட்டணத்து ஸ்திரீகளுக்குண்டான ஆவல் (2) ராஜசபையில் அரசர்கள் யாவரும் என்னை நமஸ்காரம் செய்தது (3) கிரமமாக அரசர்களை வர்ணித்தது (4) சுநந்தை சுமதி இருவரும் இரத்தினமாலையை லவன் கழுத்தில் போட்டது (5) அனேகவித ஸம்மானத்துடன் விவாஹமஹோற்சவத்தின் உற்சாஹம் (6) இரண்டு மருமகள் ஸீதை இவர்களுடன் அயோத்திக்கு வந்தது (7) ஜலதேவிகளை நிக்ரகம் செய்தது (8) பாலர்களை விடுவித்தது (9) எல்லோருக்கும் நடந்த விவாஹமஹோற்சவத்தின் வரலாறு (10) புத்திரர்களுக்குத் தனித்தனியாக ஒருகங்கணமைந்த விவரம் (11) காந்திபுரியினின்று மதனசுந்தரியை அப

ஹரித்தது. (12) யூபகேதுவின் விவாஹம் (13) பேரன் பேத்தி களின் கணக்கு (14) நான் எல்லோருடனும் சௌக்கியமாக இருந் தது (15) இவைகள் விவாஹகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ராஜ்யகாண்ட முதற்பாக விஷய சூசிகை.

(1) என்னுடைய ஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் (2) கற்பக விருக்ஷம் சுரதரு இவ்விரண்டையும் துர்வாச மஹாமுனிவரின் அநுக்கிரகத்தினால் நான் சொர்க்கத்திலிருந்து வரவழைத்தது (3) என்னை உபாசிக்கிறவன் கிருஷ்ணனை உபாசிக்கிறவன் இரு வருக்கும் நடந்த சம்வாதம் (4) காக்கைக்கு வரம் கொடுத்தது (5) நூறு ஸ்திரீகளுக்கு வரம்கொடுத்தது (6) நித்திரைக்கு ஸ்தா னங்கள் கூறுதல் (7) தன்னை அநுசரிப்பவர்களிடம் கோபம் வரும் விஷயம் (8) நூறு தலையுள்ள ராவணன் வதம் (9) பௌ ண்ட்ரகவதம் (10) ஸீதைக்கு விரகம் உண்டானது (11) மூலகா சுரஸம்ஹாரம் (22) பிரமதேவர் ஸீதையை ஸ்துதிசெய்தது (13) இலங்கைக்கு நான்கு புறத்திலும் தன் வில்லைச் சுழலும்படி செய்து பட்டணத்துக்குள் சென்றது (15) கபிலவராஹமூர்த்தி யையடைந்தது. (16) அந்த மூர்த்தியைத் தன் பந்துவுக்குக்கொ டுத்தது (17) லவணாசுரசம்ஹாரம் (18) மதுரையில் அரசாக்ஷி யமைத்தது (19) புத்திரர்களுக்கு ராஜ்யத்தைப் பாகித்துக் கொடுத்தது (20) நான் ஏழுதீவுகளுக்குஞ்சென்று ஜயம் அடைந் தது (21) ஸன்னியாசி சூத்திரன் கழுகு இவர்களுக்கு ஏற்பட்ட சிக்ஷை (22) ஏழு பிரேதங்களைப் பிழைக்கச் செய்தது (23) சூத் திரர்களுக்கு வரம் கொடுத்தது (24) பிராம்மணஸ்திரீகளுக்கு வரம் கொடுத்தது (25) நான் வேட்டையாடிப் பதினாயிரம் ஸ்திரீ களுக்கு வரம் கொடுத்தது (26) காளிக்கு வரம் கொடுத்தது (27) அரசவிருக்ஷத்தைச் சேதிக்க முயற்சிசெய்தது. இவைகள் ராஜ்யகாண்டம் முதற்பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ராஜ்யகாண்ட உ-வது பாகவிஷய சூசிகை.

(1) வான்மீகி முனிவரின் வசனப்படி ஹாஸ்ய விஷயமாக ஜனங்களுக்கு ஆஞ்ஞைசெய்தது (2) அசுவினீதேவர்களின் குமா ரர்கள் ரூபம் கொடுத்தது (3) பிரமதேவர் என்னவதாரங்களைத்

தனித்தனியாக வர்ணித்தது (4) வான்மீகி முனிவரின் மூன்று ஜன்மத்தின் வரலாறு (5) நான் வரம்கொடுத்தது (6) என் ராஜ்யத்தை வர்ணித்தது (7) ஹேமையின் சுயம்வரம் (8) சித்திராங்கதனுடன் யுத்தம் (9) கங்கணங்களுடைய கதை (10) லவனுக்கு ஜீவதானம் செய்தது (11) விஸ்தாரமாக ராமமுத்திரையை வர்ணித்தது. (12) ராமநாதபுரத்தைத் தானம்செய்தது (13) அந்தணர்கள் அருமானைக்கண்டது. (14) என்னுடைய தினசரியை (15) சொற்பசந்ததிக்குக் காரணம் கூறல் (16) காதுசப்ததத்தின் கதை (17) என்னவதாரங்களில் கொடுத்தவரம் (18) காயிதத்தின் பக்கத்தில் ஸ்ரீராம என்று எழுதுவதற்குக்காரணம் கூறல், (19) சுருணைக்குவரம் கொடுத்தது (20) நான் இரண்டு ரூபந்தரித்தது (21) துளசியோடு அதன் இலைசேர்ந்தது (22) ராமாயண சிரவண பலன் (23) சுமந்திரனுக்கு ஜீவதானம் செய்தது (24) யமனுடன் யுத்தம் செய்தது (25) ஏழுதீவுகளெங்கும் நான் தருமசிக்ஷை செய்தது இவைகள் இராஜ்யகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

( ) நாரதமுனிவர் சொல்லிய பரிசுத்தமான நூறு சுலோக மடங்கிய என் சரித்திரம் (2) பட்டணத்து ஜனங்களுக்கு உபதேசம் செய்தல் (3) நகரிலுள்ளவர்களுக்கும் தன் தாய்மார்களுக்கும் பிறர்முகமாக உபதேசம் செய்தல் (4) மானஸிகபூஜை (5) பாஹ்யபூஜை நான் ஒன்பது உருவம் எடுத்துக்கொண்டது. (6) ராமலிங்கதோபத்ரங்களின் அனேக விதபேதங்கள் (7) மாச நவமியின் விஸ்தாரம் (8) ஸ்திரீ ராஜ்யத்தில் உண்டான கதை (8a) என்னுடைய நாமதேயங்களை எழுதி உத்தியாபனம் செய்தது (9) தானம் செய்வதின் விஸ்தாரம் (10) சிரஞ்சீவிகளின் வரலாறு (11) வேதம் முதலியவைகளைச் சிரவணஞ்செய்யும் பலன் (12) இரண்டரை மாதம் வரையில் செய்யும் என்னுடைய விரதத்தின் மகிமை (13) திதிகளின் விஸ்தாரம் (14) கௌரீவிரதத்தின் விஸ்தாரம் (15) என்னைத் தோளகத்தில் பூஜை செய்வது (16) நவமியில் என் மூர்த்தியைத் தானஞ்செய்தல் (17) தமனோத்ஸவத்தின் விஸ்தாரம் (18) காம்மியு தேவதைகளின் விஸ்தாரம் (19) ரகாரத்தை ஆதியிற்கொண்ட பதம் சிறந்ததென்கூணு

முள்ளது என்ற விஷயம் (20) என்னுடைய நாமத்தின் மகிமை (21) எந்நாமத்தின் அர்த்தம் (21a) சைத்திர விரதத்தின் விஸ்தாரம் (22) ராக்ஷஸர்கள் முதலியவர்களின் நல்லகதி (23) அத்வைத விளக்கம் செய்தல் (24) ஸ்திரீகளுக்கு வரம் கொடுத்தல் (25) என் முத்திரையுள்ள வஸ்திரத்தின் மகிமை (26) ஸீதை லக்ஷ்மணர் முதலியவர்களின் கவசத்தைத் தனித்தனியாகக் கூறுதல் (27) ஸீதளா விரதத்தின் மகிமை (28) அதன் உத்தியாபனம் ராம நாமஸ்தோ பத்ரம் (29) கீர்த்தனம் செய்ய மந்திரங்கள் (30) அநுமானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் பதாகாரோபண மென்னும் விரதம் (31) நான் உனக் குபதேசித்த ஸாரராமாயணம் (32) அநுமான் அர்ஜுனன் சரச்சேதுவைக் கண்டித்தது. இவைகள் மனோஹர காண்டத்தில் கூறப்பட் டிருக்கின்றன.

(1) வான்மீகி முனிவர் சந்திர வம்சத் தரசர்களைப் பற்றிய சரித்திரத்தைக் கூறுதல் (2) புத்திரர்களுக்கு அபிஷேகம் செய்வித்தல் (3) ஹஸ்தினபுரத்தை உத்தேசித்துப் பிரயாணமாகுதல் (4) பெரிய யுத்தம் (5) புத்திரர்களுக்கும் எனக்கும் நடந்த யுத்தத்தில் கங்கைவற்றல் (6) பிரமதேவர் வான்மீகி முனிவர் குசன் இவர்களுடைய பிரார்த்தனை (7) சத்ருஸ்திரீகளின் பிரார்த்தனையால் ஸீதையின் குமாரனைத் தடைசெய்தது (8) பிரமதேவருடைய வாக்கியப்படி வைகுண்டம் செல்ல முயற்சிசெய்தல் (9) சந்திர வம்சத்தி லுண்டானவர்க்கு ஹாஸ்தின ராஜ்யம் கொடுத்தது (10) ஆஜமீடனுக்கு அபிஷேம் செய்வித்தது (11) எல்லோரையும் விசர்ஜனம் செய்தது (12) குசன் தன்னகருக்குச் சென்று அரசாக்ஷி செய்தது (13) ஸர்ப்பராஜன் தங்கையாகிய குமுதவதிக்கு வீரபரம்பரை உண்டானது (14) நான் வானரர்களுக்கும் லக்ஷ்மணருக்கும் வரம் கொடுத்தது (15) அயோத்தியிலிருப்பவர்கள் தேகத்தியாகம் செய்தது (16) வானரர்கள் தேவர்களாகவும் ஸீதை லக்ஷ்மியாகவும் லக்ஷ்மணன் ஆதிசேஷனாகவும் பரதன் சங்கமாகவும் சத்ருக்னன் சுதர்சனமாகவும் நான் விஷ்ணுவாகவும் ஆனது (17) அப்பொழுது ஊர்மிளை முத

விய ஸகல ஸ்திரீகளும் பிரயாணமானது (18) தேவஸ்திரீகள் நீராஜனம் செய்தது (19) அவர்களுக்கு ஸாந்தானிகபதம் கிடைத்தது (20) என்னைப் பரமசிவன் ஸ்தோத்திரம் செய்தது (21) நான் கருடனை வாகனமாக அடைந்தது (22) புஷ்பவருஷ முண்டானது (23) அப்பொழுது நான் வைகுண்டம் சென்று அங்கு இலக்ஷ்மியுடன் இருந்துகொண்டு தேவர்களை அனுப்பியது (24) சூரிய வம்சத்தின் அநுக்கிரகம் (25) ஆநந்த ராமாயணத்தின் காண்டங்களின் எண்ணிக்கை (26) சருக்கக் கணக்குகள் (27) சுலோகக் கணக்குகள் (28, பல சுருதி (29) ராமாயண சிரவணத்தின் உத்தியாபனம் (30) கிரந்தங்களைத்தானஞ்செய்தது (31) அநுஷ்டானம் (32) ஐந்துவித பிரகாரங்கள் (33) அநுஷ்டானத்தின் உத்தியாபனம் (34) சகுனத்தின் விஸ்தாரம் (35) குரு சிஷர்களாகிய உங்களுடைய சம்வாதத்தின் முடிவு (36) தேவியின் சந்தேக நிவிர்த்தி (37) இதைப் பாராயணம் செய்வதின் பலன் (38) ராமாயண மகிமையை ஒரு சுலோகத்தால் தெரிவித்தல் (39) என் தியானம் (40) சிவனுக்கும் பார்வதிக்கும் உண்டான சம்வாதம் முடிவானது- இவைகள் பூர்ண காண்டத்தில் சொல்லப்படுகின்றன.

ஏ! ராமதாச! உனக்கு என் சரித்திரங்களின் நினைவுண்டாகும் பொருட்டு இந்த ஸார ராமாயணத்தை உபதேசஞ் செய்தேன். இது மிகவும் இரகசியமான விஷயம். மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது. நூறுகோடி கிரந்தம் உள்ள ராமாயணத்திலிருந்து மிகவும் ஸாரமாக இருப்பதை எடுத்து நான் உனக்குக் கூறினேன். இப்பூமியில் எல்லாவற்றையும் வர்ணித்த வான்மீகி முனிவரே கிருதார்த்தர். இந்த ஸாரராமாயணத்தைப் படிப்பவர்களுக்கு நான் ஸந்தோஷத்துடன் இஹத்தில் போகத்தையும் பரத்தில் மோக்ஷத்தையும் கொடுக்கிறேன். ராமாயணம் முழுவதையும் கேட்க அவகாச மில்லாவிடில், இந்த ஸாரராமாயணத்தைக் கேட்கவேண்டும். நான்செய்த மற்ற எந்தக் காரியங்களும் என்னிச்சைப்படி உன்முகமாக வெளிவரப் போகின்றன. என் சரித்திரமெல்லாம் உன் கண்ணுக்குப் புலப்படப்போகின்றன. அப்பொழுது விஷ்ணுதாசன் என்ற உன் சிஷனுக்கு இதைச்சொல்—என்று கூறினார்.

ராமதாசர் கூறுகிறார்.

விஷ்ணுதாச! ராமசந்திரர் எனக்குக் கூறிய ஸாரராமாயணத்தை உனக்குக் கூறினேன். இது ரம்மியமானது; பரிசுத்தமானது; மஹாபாதகங்களைநாசஞ்செய்யக்கூடியது; போகமோக்ஷங்களைக் கொடுக்கக்கூடியது. எப்போதும் மானிடர்கள் இதை ஜபஞ்செய்தல்வேண்டும். ராமாயணம் முழுவதையும் சிரவணஞ்செய்த பலனை இந்த ஸாரராமாயணத்தைப் பாராயணம் செய்பவர்களடைவார்கள். இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஆகையால் மானிடர்கள் சகல தோஷங்களையும் நிவிருத்திசெய்து புத்திரர்கள் பௌத்திரர்கள் ஸ்திரீகள் இவர்களைக் கொடுத்து மிகுந்த சுகத்தை விருத்தி செய்யும் இந்த ஸாரராமாயணத்தைப் பாராயணம் செய்யவேண்டும். சீடனே! ராமாயண மனேகம் பூமியிலிருக்கின்றன. ஆயினும் இதற்குச் சமமாக முன்னேற்பட்டதுமில்லை. இனி ஏற்படப்போகிறதுமில்லை. நிச்சயம்.

ராமச்சந்திரர் உபதேசஞ்செய்த

ஸாரராமாயணத்தைக்கூறும்

17-வது சருக்கம்

முற்றிற்று.

18-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஏ குருவே! முன்பு நான் அர்ஜுனன் அனுமத் துவஜ முடையவனென்று கேள்விப்பட்டேன். அதனால் கபித்துவஜன் என்ற பெயரும் அர்ஜுனனுக் குண்டென்று தெரிந்துகொண் டோம். அங்ஙனம் ஏற்பட்டதற்குக் காரணங் கூறவேண்டும்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

சீடனே! நன்றாக வினவுகிறாய்; சாவதான மனதுடன் கேள்; துவாபரயுகத்தின் கடைசியில் நடக்கப்போகிற கதையை நான் கூறுகிறேன்.

ஒரு சமயத்தில் அர்ஜுனன் கிருஷ்ணனின்றித் தேரின்மீ தேறிக்கொண்டு தென்றிசையிலுள்ள ஒரு பெரிய ஆரணியத்தில் வேட்டைக்காகச் சென்றான். தான் ஒருவனாகச் சாரதியிருக்கு மிடத்தில் உட்கார்ந்து தேரைச் செலுத்திக்கொண்டு பாணங்க ளால் மிருகங்களை அடித்து வரும்போது அன்று பகலில் ஸ்நா னம் செய்ய எண்ணி ராமேசுவரம் சென்று ஸேதுவில் ஸ்நா னம் செய்து மாத்தியான்னிகம் முதலிய கருமங்களை முடித்துக் கொண்டு மறுபடி தேரின் மீதேறிச் சமுத்திரக் கரையில் கொஞ்சம் கருவத்துடன் சஞ்சரித்தான். இச்சமயத்தில் அரண் ணியத்தில் பர்வதத்தின்மேல் சாமானியக் கபிபோல் வேடம் பூண்டு ராமராம என்று ஜபம் செய்து பிங்கள வர்ணமுள்ள ரோமங்களுடன் உட்கார்ந்திருக்கும் மங்கள சொரூபராகிய அனு மானைக் கண்டு அர்ஜுனன் ஏ குரங்கே! உன்பெயர் என்ன! என்று வினவினான்.

இவ்விதம் அர்ஜுனன் கேட்டதும் அனுமான் மந்தஹாஸம் செய்து "ஸ்ரீராமச்சந்திர பிரபு நூறுயோசனைதூரம் சமுத்திரத் தில் கற்களால் அணைகட்டியது எவனுடைய பிரதாபத்தாலோ அவன் நான். என் பெயர் அனுமான்; வாயுவின் குமாரன்" என்று பதிற் கூறினார்.

இப்படிக் கருவத்துடன் கூறின வார்த்தையைக் கேட்ட அர்ஜுனன் தானும் கருவத்துடன் சிறித்து முன்னால் நிற்கும் அநுமானை நோக்கி, முன் ராமன் கடலில் அணைகட்டியது வீண் சிரமம். இராமன் தன் பாணங்களாலேயே அணைகட்டி வன் காரியசித்தி யடைந்திருக்கலாகாது என்றான்.

உடனே ? அநுமான், "அர்ச்சுனா ! என்னைப்போன்ற கவிக ளின் பாரத்தினால் சரஸேது வானது சமுத்திரத்தில் அமிழ்ந்து விடுமென் றெண்ணி ரகுநந்தனன் அங்ஙனம் அணைகட்டவில்லை" என்றான்.

அர்ஜுனன் அநுமான் கூறியதைக் கேட்டு "ஆஞ்சனேய ! வானரசிரேஷ்டனே ! கவிகளின் பாரத்தினால் சரஸேது சமுத் திரத்தில் அமிழ்ந்துபோவதானால் வில்லாளியின் வில்வித்தைக்கு மகிமை என்ன இருக்கிறது? நான் உனக்கு முன்னால் இப்போது சரஸேதுவைக் கட்டுகிறேன். நீ அதன்மேல் நர்த்தனம் முதலிய வற்றை உன்னிஷ்டம்போல்செய் ; பிறகு என் வில்வித்தையைப் பார் என்றுரைத்தான். அநுமான் புன்னகைகொண்டு அர்ஜுனா! என்கால் கட்டைவிரல் பட்டவுடன் நீ கட்டும் சரஸேது சமுத் திரத்தில் முழுகிவிட்டால், நீ என்ன செய்கிறாய் சொல்" என்றார்.

அர்ஜுனன் ! ஆஞ்சனேய! உன் பாரத்தினால் என்சரஸேது ஜலத்தில் முழுகிவிட்டால், இவ்விடமே அக்கினிப்பிரவேசம் செய்துவிடுகிறேன். இது சத்தியம் ; முழுகச் செய்யாவிடில் நீ என்ன செய்கிறாய், உன் பந்தயத்தைத் தெரிவி என்றான்.

அநுமான் அர்ஜுனன் செய்த பிரதிஞ்கையைக் கேட்டு, அர்ச்சுனா ! உன் சரஸேதுவை நான் என்கால் கட்டைவிரலால் சமுத்திரத்தில் முழுகும்படி செய்யாவிடில், உன்னுடைய ரதத் தின் துவஜத்திலிருந்து உனக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன்" என்றார். அர்ஜுனன் "சரி அவ்விதமே யாகட்டும்" என்றுரைத்து, மஹத்தான வில்லை எடுத்து டணா ! என்றோசை யிடச் செய்து பாணங்களைப் பிரயோகித்து, நெருக்கமாகவும் கெட்டியாகவும் ஓர் ஸேதுவைக் கட்டினான்.

அநுமான் உடனே சமுத்திரத்திற்கு மேல் நூறுயோஜனை தூரம் உள்ள சரஸேதுவைப் பார்த்து, அர்ஜுனன் கண்முன்பாகவே ஒரு கணநேரத்தில் தமதுகால் கட்டை விரலால் சமுத்திரத்தில் அந்த சேதுவை முழுகும்படி செய்தார். அப்பொழுது தேவர்கள் கந்தருவர்கள் கின்னரர்கள் உரகர்கள் அரக்கர்கள் வித்தியாதரர்கள், அப்சரஸ்திரீகள் ஸித்தர்கள் எல்லோரும் ஆகாயமார்க்கத்தி லிருந்து புஷ்பமாரி பொழிந்தார்கள்.

அர்ஜுனன் இதைப் பார்த்துச் சமுத்திரக்கரையில் சிதையை அடுக்கித் தேகத்தைவிட நிச்சயம் செய்தான். அநுமான் வேண்டாமென்று தடுத்தும் கேட்கவில்லை. இந்தச் சமயத்தில் கிருஷ்ணபகவான் அர்ஜுனன் மூலமாக சரஸேதுவின் சம்பந்தமாய் நடந்த பந்தயம் முதலிவற்றைத் தெரிந்துகொண்டு பிரமசாரி வேடத்துடன் எதிர்தோன்றி நீங்களிருவரும் முன்செய்த காரியம் யாவும் வீண்தான். சாக்ஷியின்றிச் செய்யும் காரியம் பொய்யென்றும் உண்மை என்றும் தெரியவராது. நீங்களிருவரும் இப்போது முன்போல் செய்தால் நான் பார்வையிட்டு உண்மை பொய் என்பதைத் தெரிந்து சொல்லுகிறேன்" என்றார். அர்ஜுனன் அநுமான் இருவரும் பிரமசாரியின் சொல்லைக்கேட்டு "சரி அவ்விதமே செய்வோம் சம்மதம்" என்று கூறினார்கள்.

பிறகு காண்டீவம் என்ற தநுசால் முன்போல் சரஸேதுவைக் கட்டினான். அந்த ஸேதுவுக்கு மத்தியில் கிருஷ்ணன் சக்கிராயுதத்தை வைத்தார். பிறகு ஆஞ்சநேயர் தமது கால் பெருவிரலால் சரஸேதுவை அழுத்தினார். ஸேது அசையவில்லை. அது கண்டு பாதங்கள் முழங்கால்கள் கைகள் இவைகளைக் கொண்டு தமது முழுபலத்தாலும் அழுத்தினார். அப்படியும் அந்த ஸேது அசையவில்லை. அப்பொழுது வானரோத்தமன் பேசாமல் மனதில் ஆலோசனை செய்தார். முன் பெருவிரலால் சமுத்திரத்தில் முழுகின சேது, இப்பொழுது கைகால்களால் உதைத்தும் அசையவில்லை. இதற்குக் காரணம்: இந்த பிரம்மசாரியல்ல; ஸ்ரீமந் நாராயணன்தான். நான் கருவமடைந்தமையால், அற்புதமான செய்கையையுடைய ஸ்ரீகிருஷ்ணன் அதைப் பரிகாரம் செய்ய வந்திருக்கிறார்.

கிருஷ்ணனுக்கு முன்னிலையில் குரங்கின் பராக்கிரமமெங்கே?" என்றெண்ணி அர்ஜுனனை நோக்கிக் கூறுகிறார்.

ஏ அர்ஜுனா! நீ வென்றாய்; அது இந்த பிரமசாரியின் உதவியாலேயேயாம். இவர் பிரம்மசாரியல்ல; ஸேதுவில் சக்கிரத்தைப் பிரவேசிக்கச்செய்த கிருஷ்ணன். உன் உதவிக்காக வந்தவரென்பதை நானறிந்தேன். இது உண்மை. இவர் திரேதாயுகத்தில் ராமராக இருக்கும்போது எனக்கு துவாபரயுகத்தில் கிருஷ்ண வேஷத்துடன் தரிசனம் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். அந்தச்சொல்லை உண்மையாக்குவதற்கு உன் ஸேதுவைக் காரணமாகக் கொண்டு வந்திருக்கிறார்" என்று அர்ஜுனனிடம் அநுமான் பேசிக்கொண்டிருக்கும்போதே பகவான் பிரமசாரி வேடத்தை விட்டுக் கிருஷ்ண ரூபத்துடன் தரிசனம் கொடுத்தார். ஆஞ்சனேயர், பீதாம்பரதரனும் நீலமேகவர்ணனுமாகிய கிருஷ்ணனைப் பார்த்தவுடன் புளகாங்கிதமுற்று, வணங்கினார். கிருஷ்ணன் மாருதாத்மஜனை ஆலிங்கனம் செய்துகொண்டார். மாருதாத்மஜர் தன்னை கிருதகிருத்தியனாகக் கருதிச் சந்தோஷித்தார். பிறகு ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரவினால் சக்ரம் இருப்பிடம் சென்றது. சமுத்திரத்தின் அலைகளால் சரஸேதுவுங் கலைந்து போய்விட்டது. அப்போது அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனால்பிழைத்தோமென் றெண்ணிக் கர்வமடங்கினான். கிருஷ்ண பகவான் அப்போது அர்ஜுனனைப் பார்த்து "நீ ராமரைத் தூஷித்தாய்? அதனால் அநுமான் உன் வில்வித்தையைப் பொய்யாக்கினார்" என்றார்.

"ஏ ஆஞ்சனேய! நீ எவன் பிரதாபத்தால் ராமர் கடலில் அணைகட்டினாரோவென்று ராமரைத் தாழ்த்திப் பேசியதால் அர்ஜுனனால் சயிக்கப்பட்டாய். இனி கருவமில்லாமல் எப்போதும் என்னைப் பஜனம் செய்" என்று மாருதிக்குச் சொல்லி அர்ஜுனனுடன் அவன் பட்டணம் சென்றார். ஆகையால் அர்ஜுனன் கபிதுவஜமுடையவனென்று எல்லோரும் கூறுகிறார்கள்.

விஷ்ணுதாஸ! இவ்விதம் வரப்போகிற வரலாற்றைக் கூறினேனே இன்னமும் என்னகேட்க விரும்புகிறாய்? கேள்—

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

ஏ குருவே! இப்பொழுது ராகவன் வைகுண்டாரோஹணம் செய்த உற்சவத்தை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும். அதனால் நான் சந்தோஷமடைவேன்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! ஸ்ரீராமச்சந்திரன்வைகுண்டாரோஹணோற்சவம் செய்யும் வரலாற்றைக் கூறும் பூர்ணகாண்டத்தைக் கூறுகிறேன்; அதைக்கேள். இந்த மனோஹரகாண்டத்தைக் கேட்பவர்களுக்கு ராமரிடம் பக்தியும் புத்திரன் பொருள் மற்றுமுள்ள மனோபீஷ்டங்கள் யாவுமுண்டாகும். சந்தேகமில்லை. இது பரிசுத்தமானது; இரம்மியமானது; சிரவணஞ்செய்தால் மங்களமுண்டாகும். இது ராமபக்தியை விருத்திசெய்யக் கூடியது. ஆனந்தராமாயணத்தின் மத்தியிலிருக்கக் கூடிய இந்த மனோஹரகாண்டத்தைப் படிப்பவர்களும் சிரவணம் செய்பவர்களும் கீர்த்தனம் செய்பவர்களும் மனோரத மெல்லாவற்றையும் அடைவார்கள். ஆகையால் மானிடர்கள் அவசியம் எப்போதும் ஸந்தோஷத்துடன் அனேக சரித்திர மடங்கிய இந்தக் காண்டத்தைச் சிரவணம் செய்யவேண்டும்.

அநுமான் சரஸேது பங்கம் செய்ததைக் கூறும்

பதினெட்டாவது சருக்கம் முற்றிற்று.

மனோகரகாண்டம்.

முற்றிற்று.

பூர்ணகாண்டம்.

ராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ஸீதையுடன் ராஜ ஸ்ரேஷ்டராகிய ராமர் அரசு புரிந்து வந்தார். அப்போது சபையில் அத்தினாபுரியிலிருந்து சுஷேணனனுப்பிய தூதனொருவன் இழந்த அவயவங்களுடன் அவரது சபைக்கு வந்து நமஸ்கரித்து, "ராஜீவபத்ராக்ஷ! ராம! சந்திரவம்சத் தரசர்கள் அத்தினாபுரியை முற்றுகை செய்திருக்கின்றனர்" என்று தெரிவித்தான். அந்தத் தூதனுடைய வசனத்தைக்கேட்ட ராகவர் மிகவும் ஆச்சரியமடைந்து, வசிஷ்டமுனிவரைநோக்கி, "குருவே! என் இராஜ்யத்தில் எப்போதும் என்னுடன் போர்புரிய அரசர்கள் வருகிற வழக்கமில்லை. இப்போது வந்தகாரணம் தெரியவில்லை. இவ் விஷயத்தை நன்றாக விசாரிக்க வேண்டும்" என்றார்.

இதைக்கேட்ட வஸிஷ்டமுனிவர் "ராம! "உன் சரித்திரத்தை எழுதிய வான்மீகி முனிவரைக் கேட்டால் தெரியவரும்" என்றுகூறினார். உடனே ரகுவீரன் லக்ஷ்மணரை அழைத்து, வான்மீகி முனிவரை அழைத்துவரக் கட்டளையிட்டார். அம்முனிவர் வந்தவுடன், ராமர் ஸீதையுடன் அவருக்குச் பூஜை செய்து இவ்விஷயத்தைப்பற்றி விசாரித்தார். வான்மீகிமுனிவர் அதைக் கேட்டதும் புன்முறுவல்செய்து "ராம! தங்களுக்குத் யாத விஷயமில்லை. என்னைக் கேட்பது விநோதமாக ஆயினும் நான் சொல்லுகிறேன். எல்லாரும் கேட்கட்டும்! ராமசந்திர! தாங்கள் அவதாரம் செய்வதற்கு முன்னமேயே நான் செய்த கிரந்த விஸ்தாரமான சதகோடி ராமாயணத்தில் தங்களுடைய ராஜ்யத்தின் காலவரையறையை நிச்சயம் செய்திருப்பது பதினோராயிரம் வருஷம். பிறகு பதினொருவருஷம் பதினொரு மாதம் பதினொருநாள் பதினொருநாழிகை பதினொருநிமிஷம் ஏற்பட்டதுண்டு. வருஷங்கள் யாவும் கழிந்தன. பாக்கியுள்ளது மாத கணக்குத்தான். அதில் பதினெட்டுநாள் குறைவாக ஒரு வருஷம் பாக்கியுள்ளது. இந்தக் காலமும் யுத்தத்திலேயே செல்லப்போகிறது. ராம! குறிப்பிடப்பட்டகாலம் முடிவாகிவிட்டது.

தங்களுடைய முன்னோர்கள் இந்தப் பூமிக்குக் கொண்டு வந்த கங்காநதி சென்று விதிப்படி ஸ்னானஞ்செய்து பிரம்மாதிகள் ஸ்தோத்திரஞ் செய்யத் தங்கள் ஸ்தானமடையப் போகிறீர்கள் ” என்றார். இந்த வாக்கியத்தைக் கேட்ட ராமர் “ முனிவரே இப்போது கஜபுரியை முற்றுகைசெய்த நளன் முதலியவர்கள் இதுவரையில் எங்கிருந்தார்கள் ? இப்போது எதன் பொருட்டு வந்தார்கள்? இவ்விஷயத்தை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்” என்று வினவினார்.

வான்மீகி முனிவர் கூறுகிறார்.

மஹா பாஹுவாகிய ராம ! முன் கிருதயுகத்தில் அத்திரி முனிவர் வைசாக பூர்ணிமையில் ஸ்திரீமுகம் போன்ற சந்திரனைக் கண்டு மோஹங்கொண்டார். உடனே அவர் வீரியம் நழுவி பூமியில் விழுந்தது. அதிலிருந்து ஒரு புத்திரனுண்டானான். ஸோமனைப் பார்த்ததன் காரணமாக உண்டான புத்திரனானகையால், அவன் ஸோமன் என்ற பெயரை அடைந்தான். அந்த ஸோமன் கங்கைக் கரையிலுள்ள ஓர் அரண்யத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தான். இச்சமயத்தில் ஒரு யானை அங்குவந்து பக்ஷிகளால் அடிபட்டிறந்தது. இந்த வேடிக்கையைப் பார்த்த ஸோமன் ஆலோசித்து, “பக்ஷிகளால் யானை நாசமடைவது மிகவும் ஆச்சரியம். இது இந்தப் பூமியின் மகிமை” என்று நிச்சயம் செய்துகொண்டு அங்கு ஒரு நகரமமைத்தான். யானையின் ஹஸ்தி நாசமடைந்தவிடமாகையால் அந்நகரத்திற்கு ஹஸ்தினாபுரி என்று பெயர் ஏற்பட்டது. ஏ ரகூத்தம ! அங்குள்ளவர்கள் இந்த ஸோமனையே அந்நகருக் கரசனாகச் செய்துகொண்டார்கள். அந்த ஸோமனுக்குப் புதன் என்ற புத்திரன் உண்டானான். அவ்விருவரும் தீவுகளுடன் பூமண்டலத்தைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு பிறகு தேவலோகம் சென்று தேவர்களனைவரையும் ஜயித்து தேவஸ்திரீகளுடன் சுகமாக ரமித்து வசித்தார்கள். இவ்விருவரும் தேவர்களை விடுவித்தபோது பிரம்மதேவர் இவர்களுக்கு அநேக வரங்கள் அளித்தார்.

அவை வருமாறு:— ஏ ஸோம ! ஏ புத! நீங்களிருவரும் என் வம்சத்தில் பிறந்தவர்கள். உங்களால் நானும் தேவர்களும்

விடுதலையை அடைந்தோம். வரனைக்கேளுங்கள் கொடுக்கிறேன் என்றுகூறி "உங்கள் வம்சத்தில் மூன்று தலைமுறைக்கு மேல் ஏழுதலைமுறை வரையிலுள்ள அரசர்கள் பிறரால் அவமானமடையாமலிருப்பார்கள்" என்று வரம் கொடுத்துத் தமதிருப்பிடம் சென்றார்.

பிறகு தேவேந்திரன் ஸோமனுக்குத் தன் பெண்ணுக்குப் பெண்ணாகிய பத்மாவதியை விவாஹம் செய்துகொடுத்தான். ஸோமன் புதன் இருவரும் இச்சைப்படி சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். புதனுக்குப் புரூரவசு என்ற குமாரன் தோன்றி மிகுந்த கீர்த்தியை அடைந்து அஸ்திநாபுரியில் அரசு புரிந்து வந்தான். அவனுடைய புத்திரன் கவ்வியன், அவன் குமாரன் அல்பன்; அல்பனுடைய குமாரன் நளன்; அந்நளன் ஸ்ரீமானாக விருந்து திக்பாலர்களை ஜயிக்க முயற்சிசெய்து தன் முன்னோர்களாகிய புரூரவசு கவ்வியன் அல்பன் இம்மூவரையும் ராஜ்யத்தில் வைத்து ஏழு தீவுகளில் உள்ள அரசர்களுடன் உன்னதமான மேருபர்வதத்தை யுத்தேசித்துச் சென்றான். முதலாவது அக்நி, பிறகு யமன் நிருருதி இவர்களைஜயித்துக்கொண்டு ராவணன் முதலியவர்களுடன் வருணனிடம் சென்றான். இச்சமயத்தில் ராவணன் வெகு விரைவாகச் சேனையுடன் சொர்க்கலோகம் சென்று இந்திரன் முதலிய அமரர்களை வென்று தன் னகரமாகிய இலங்கைக்கு அந்தத் தேவர்களைக் கொண்டுவந்தான். இதைக்கண்ட ஸோமன் கோபங்கொண்டு புத்திரர்களுடன் புறப்பட்டுத் தன் பந்துக்களாகிய இந்திரன் முதலிய தேவர்களை விடுவிக்க இலங்கைக்கு ராவணனிடம் செல்ல முயற்சி செய்தபோது பிர்ம்மதேவர் பரபரப்புடன் ஸோமனிடம்வந்து, "மஹா விஷ்ணு மானிட வடிவத்துடன் அவதரித்து ராவணனைச் சங்கரிக்கப் போகிறார். நீ இப்போது அவனிடம் செல்லாதே. நான் அவனுக்கு வரம் கொடுத்திருக்கிறேன்" என்றுகூறித்தடுத்தார். ஸோமன் தன் பிரயாணத்தை நிறுத்திவிட்டு அமராவதிக்குச் சென்றான்.

பிறகு பூமியில் நளன் அரசனாகி வருணன் வாயு குபேரன் ஈசானன் இவர்களை ஜயித்துத் தன்னைக் கிருதகிருத்தியனாக என்

ணிக்கொண்டு கடைசியில் சொர்க்கம் சென்று இந்திரனை ஜயிக்க
முயற்சிசெய்தான். அச்சமயம் கிருதயுகம் முடிந்தது.

பிறகு திரேதாயுகம் முடியுங்காலத்தில் சைன்னியத்தைப்
பார்த்தான். ராவணனைக்காணாமையால் அதைப்பற்றி விசாரித்து,
ராவணன் தேவர்களுடன் இந்திரனையும் ஜயித்து இலங்கைக்குச்
சென்றான் என்பதைத் தூதன் மூலமாகவறிந்து மார்க்கத்தில்
வெகுநாள் சஞ்சாரஞ்செய்துகொண்டிருந்தான். பிறகு நளனுக்கு
நந்தியுகன் என்ற குமாரனும் நந்தியுகனுக்கு ஜாதிகாரனும் ஜாதி
காரனுக்கு வசுதேவனும் வசுதேவனுக்கு லகுசுருதனும்லகுசுருத
னுக்கு சுரதனும் சுரதனுக்கு அஜமீடனுமாகப் பிறந்தனர். பிறகு
நளன் மந்திரிகளுடனிருந்து நாம் எதற்காக இந்திரலோகம்
செல்லவேண்டும். ராவணன் தேவர்களை ஜயித்து இலங்கைக்கு
வந்திருப்பதால் தேவர்கள் பூமியிலிருப்பதாகத் தெரியவருகிறது.
ராவணனே நமக்குக் கப்பம் கட்டுகிறவன். நாம் வெகுநாளாகத்
திக்குகளில் சஞ்சாரம் செய்தே காலத்தைக் கழித்தோம். புரூர
வசு முதலிய நம்முன்னோர்களின் வரலாறு ஒன்றுந்தெரியவில்லை.
ஆகையால் நம்முன்னோர்களாகிய மூவர்களையும் பார்க்கவேண்டு
மென்கிற ஆவலிருக்கிறது. ராவணன் அவ்விருவரையும் வென்று
பிடித்துக்கொண்டு போனானோ அல்லது அவ்விருவரைத் தவிர
மற்றத் தேவர்களை மாத்திரங் கொண்டு போனானோ தெரியவில்லை.
அதற்கு நாம் ஹஸ்தினாபுரிக்குச்சென்றால் வரலாறுதெரியவரும்.
பிறகு எவ்விதம் செய்யவேண்டுமோ அவ்விதம் செய்வோம்'—
என்று நிச்சயித்துக்கொண்டு நளன் தன்னகரம் வந்தான்.

ராம! இச்சமயத்தில் நீர் பூமியில் அவதாரம் செய்து ராவ
ணனைக்கொன்று தேவர்களை விடுவித்தீர்கள்; தேவர்கள் சொர்க்
கஞ்சென்றார்கள். பிறகு நீர் ஏழு தீவுகளிலுள்ள அரசர்களைத்
சுவாதீனப்படுத்திக்கொண்டீர். ஹஸ்தினாபுரியிலிருக்கும் புரூர
வசு முதலிய அரசர்களைப் பட்டணத்திலிருந்து வெளிப்படுத்தி
வானரர்களுடன் சுஷேணனை ஸ்தாபித்து வந்தீர். புரூரவசு முத
லியவர்கள் சிலகாலஞ் சென்ற பின்பு மரணமடைந்தார்கள். இப்
பொழுது ஸோமவம்சத்திலுண்டான நளன் முதலிய ஏழு பேர்

கள் ஏழுதீவுகளிலுள்ள அரசர்களுடன் தன்னகரம் வந்திருக்கிறார்கள். ராம! அந்த அரசர்கள் உம்மால் ஏற்கனவே ஜயிக்கப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் தங்கள் ஸேனைகளுடனும் நளன் முதலானவர்களுடனும் சேர்ந்து கஜபுரிக்கு வந்திருக்கிறார்கள். ராமசந்திரபிரபுவே! உமக்கும் அவ்வரசர்களுக்கும் யுத்தம் நடக்கப்போகிறது. சண்டை நடக்கும்போது பிரமதேவர் வந்து நளன் முதலியவர்களை உம்முடைய பாதங்களில் விழும்படி செய்யப்போகின்றார். பிரமதேவர் உம்மை மிகவும் பிரார்த்தனை செய்து வைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டு போகப்போகிறார்.

ராம! நளன் முதலியவர்களைப்பற்றி நீர் கேட்ட பிரகாரம் விஸ்தாரமாகக் கூறினேன். ராஜசிரேஷ்ட! விவாஹகாண்ட முதல் உம்முடைய குமாரர்களுக்குச் சிரவணஞ் செய்வித்திருக்கின்றேன். நீர் கேளும்'' என்றுரைத்துக் குசலவர்களுக்கு வான்மீகி ஆஞ்ஞை செய்ய, விவாஹகாண்டம் முதல் நான்கு காண்டங்களைக் குசலவர்கள் கானம் செய்தார்கள். ராகவர் கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்தார். ஜனங்கள் யாவரும் பிரபுவின் வைகுண்டாரோகண வரலாற்றை நன்றாகத் தெரிந்து கொண்டார்கள்.

ஸோமவம்சத்தார்களின் வரலாற்றை
விஸ்தாரமாகக் கூறும்
1-வது சருக்கம்
முற்றிற்று.

2-வது சருக்கம்.

ராமதாசர் கூறுகிறார்.

பிறகு ராமசந்திரன் முனிவர்களிற் சிறந்த வான்மீகி முனிவரை நோக்கி "முனிவரே! நீர் முனிவர்களுடன் ஹஸ்தினாபுரிக்கு வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

வான்மீகி முனிவர் பக்தவத்ஸலனாகிய ராகவரிடம் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார். பிறகு ராமபிரான் லட்சுமணரைப் பார்த்து "ராஜ்யபரிபாலனம் செய்யும் குமாரர்களுக்குப் பத்திரிகைகளனுப்பி அவர்களை அவரவர்கள் ராஜ்யத்தில் மந்திரிகளை ஏற்படுத்திவிட்டுத் தங்கள் தங்கள் சேனையுடன் இங்கு வரும்படி செய். பிறகு இவ்விதமே ஜம்பூத்வீபத்திற் கரசர்களாகிய க்ஷத்திரியர்களையும் மற்றத் தீவிலுள்ளவர்களையும் வரவழைக்கத் தூதர்களைச் சீக்கிரமாக அனுப்பு" என்று ஆஞ்ஞைசெய்தார். லக்ஷ்மணர் சபையின் மத்தியில் வான்மீகி முனிவரின் ஸந்நிதியில் ராமசந்திரருடைய ஆஞ்ஞைப்படித் தூதர்களை யனுப்பினர். பிறகு ராமபிரான் லக்ஷ்மணரை நோக்கி மனமகிழ்ச்சியுடன் "கூடாரங்களை முந்தி யனுப்பவேண்டியது. நாளையதினமே நல்ல சுபதினமாக விருக்கிறது. சேனையை விரைவாக அனுப்பவேண்டும். நம்முன்னோர்களால் பரிபாலிக்கப்பட்ட ஆயுதங்கள் யந்திரங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்த வேண்டும். அவைகளுக்கு இது நல்ல சமயம். என் அந்தப்புரத்திலுள்ளவர்கள் யாவரும் புறப்படவேண்டும். ஸீதை அக்நிஹோத்திரத்துடன் புறப்படட்டும். பொக்கிஷங் கூடவே வரட்டும். ரதகஜதுரகபதாதிகளும் வெளிப்புறப்படட்டும்" என்று உத்தரவு செய்தார். பிறகு வணக்கத்துடன் நிற்கும் லக்ஷ்மணன் மந்திரிமார்கள் பிரதானபுருஷர்கள் வஸிஷ்டர் இவர்களை நோக்கி, "ஏழு தீவுகளுக்கும் பிரபுத் தன்மையில் பரதனுக்கு அபிஷேகம் செய்கிறேன். லக்ஷ்மணன் நானில்லாமல் பூமியில் வாசம் செய்யமாட்டான்" என்றுரைத்தார்.

இதைக்கேட்டவுடன் ஜனங்கள் யாவரும் பயந்து வேரற்ற மரம்போலத் தளர்ந்தவர்களாகித் துக்கத்துடன் தரையில்விழுந் தார்கள். ராமர் கூறியதைக் கேட்ட பரதனும் மூர்ச்சை அடைந்தான்; தனக்கு ராஜ்யங்கிடைப்பதைப் பற்றி நிந்தித் துக்கொண்டு மிகவும் வருத்தமுற்று ரகுவீரரைப் பார்த்துச் சொல்லுகிறான்—

பிரபுவாகிய ராம! உம்மை யன்றி இந்தப் புவியிலோ சொர்க்கத்திலோ நான் ராஜ்யத்தைப் பெற விரும்பேன். இது ஸத்தியம். உம்முடைய பாதாரவிந்தங்களில் சபதஞ்செய்துசொல் லுகிறேன். ஏழு தீவுகளுக்கும் பதியாக இருக்குந் தன்மையில் இந்தக் குசன் வல்லமையுள்ளவன். ஆகையால் அவனுக்குஅயோ த்தியில் அபிஷேகம் செய்யுங்கள். லவனுக்கு ஏற்கனவே ஜம்பூதி பத்திற்குப் பதியாக விருக்கும் உத்தர குருக்ஷேத்திரத்தில் அபி ஷேகம் ஆயிருக்கிறது. அவனை அங்குச் செல்லட்டும்—எனப் பகர்ந்தான்.

ராமவிரஹத்தைச் சகிக்க முடியாத பயத்தால் பூமியில் விழு ந்துகிடக்கும் ஜனங்களின்பொருட்டுப் பகவானாகிய வஸிஷ்டமுனி வர் தலை கூர்ந்து ராமரிடம் கூறுகிறார்— “ராம! இந்தப் பிர ஜைகள் பூமியில் விழுந்திருப்பதைநோக்கி இவர்களின் கருத்தை அநுசரித்து அநுக்கிரகம் செய்யவேண்டும்” என்றார். ராமபிரபு மகிழ்ந்து பிரஜைகளை எழுப்பி அவர்களைப்புகழ்ந்து “அன்புடன் நான் செய்யவேண்டியது யாது?” என்று வினவினார். பிரஜைகள் பக்தியுடன் ரகுசிரேஷ்டரைப் பார்த்து அஞ்சலி செய்துகொண்டு “பிரபுவே! தாங்கள் வைகுண்டம் செல்வதானால் நாங்களும் வருகிறோம். நீங்கள் எங்குச் சென்றாலும் கூடவருவதற்குச் சந் தேகமில்லை. எங்களுடைய மனம் தங்களைப் பின்பற்றுவதிலேயே விருப்பங்கொண்டிருக்கிறது. இது அழிவற்ற தருமம். உம்மை அநுசரிப்பதில் எங்கள் உறவினர் நண்பர்கள் மனைவிமார்கள் எல்லோருடனும் தபோவனமோ சொர்க்கமோ பட்டணமோ அல் லது தங்கள் எங்கேசெல்லுகிறீர்களோ அங்கே வருகிறோம்”

என்றார்கள். இவ்விதம் ஜனங்களுரைத்ததைக்கேட்டு ரகுநாயகர் அவர்களின் மனவுறுதியை அறிந்து அவ்விதமே யாகட்டும் என்று நிச்சயித்தார். பிறகு பிரபுவாகிய ராமர் அதே தினத்திற் குசனுக்கு அபிஷேகஞ்செய்ய லக்ஷ்மணருக்கு ஆஞ்ஞை செய்தார். லக்ஷ்மணர் குருவாகிய வஸிஷ்ட முனிவர் அந்தணர்கள் நகரத்திலிருப்பவர்கள் இவர்களுடன் ஏற்கனவே அலங்காரம் செய்யப்பட்டிருந்த அயோத்தியில் குசனுக்கு அபிஷேகம் செய்வித்தார். அப்பொழுது எல்லாரும் உற்சாகம் கொண்டாடினார்கள். ராமருடைய அந்தப்புரத்திலும் பெரிய கோலாஹலம் ஏற்பட்டது. சிங்காசனத்தில் குடைசாமரம் முதலிய உபசாரங்கள் செய்யப் பெற்று விளங்குகிற குசமஹாராஜனுக்கு நகரிலுள்ளவர்களும் மற்றவர்களும் நமஸ்காரம் செய்தார்கள். குசன் அப்பொழுது அந்தணர்களுக்கு அளவற்ற பொருளைக்கொடுத்தான். பிரஜைகள் குசனுக்கு வஸ்திரம் அலங்காரம் சந்தனம் முதலியவைகளைக் கொடுத்துபசரித்தார்கள். குசனும் அவர்களைப் பெருமைப் படுத்தினான்; கோடிக்கணக்கான பிராம்மணர்களுக்கு அன்னமளித்தான்.

பிறகு சுமித்திரையின் புத்திரனாகிய லட்சுமணர் ஸ்ரீராமராஞ்ஞைப்படி ராமருடைய அந்தப்புர ஸ்திரீகளை ஸீதையுடன் அநேகவித வாத்தியகோஷத்துடன் வாகனங்களின் மீதேற்றி நகரத்திலிருந்து புறப்படும்படி செய்தார்.

பிறகு ராமச்சந்திரன் பந்துக்கள் புத்திரர்கள் முனிவர்கள் பௌரர்கள் மாகதர்கள் இவர்கள் சூழ ஜயசப்தத்துடனும் மங்கள வாத்திய முழக்கத்துடனும் பட்டணத்திலுள்ளவர்களையும் அழைத்துக்கொண்டு ரதத்திலேறி இருமருங்கும் சாமரம் வீச மெள்ளச் சந்தோஷத்துடன் கூடாரங்களில் பிரவேசித்தார்கள். பிறகு அந்நகரிலிருந்து சண்டாளன் வரையிலுள்ள ஜனங்கள் யாவரும் புறப்பட்டார்கள். அவர்களுடன் அந்நகரத்திருந்த நாய் வரையிலுள்ள நான்குகாற் பிராணிகள்யாவும் புறப்பட்டன. பக்ஷிகளும் வெளிப்பட்டன. அந்நகரத்தில் இப்பொழுது யாருமில்லை. நகரம் சூனியமாய்விட்டது. அயோத்தியாபுரி யானை புசித்த

விளாம்பழம்போலாய் விட்டது. இச்சமயத்தில் தீபாந்தரங்களில் வசித்த அரசர்களும் ஜம்பூத்வீபத்திலுள்ள அரசர்களும் சேனைகளுடன் வந்து ராமரை நமஸ்கரித்துப் பிறகு குசமஹா ராஜனுக்கும் நமஸ்காரஞ்செய்து முதலாவது ராமசந்திர மஹாராஜாவுக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவர்கள் ராமசந்திரமூர்த்தியாலும் குசனாலும் சம்மானிக்கப்பட்டார்கள். பிறகு அங்கதன் சித்திரகேது புஷ்கரன் தக்ஷன் சுபாகு யூபகேது இவர்கள் தத்தம் மனைவிகளுடனும் புத்திர பௌத்திரர்களுடனும் மருமக்களுடனும் வந்து ராமர் முதலியவர்களையும் ஸீதை முதலியவர்களையும் அன்புடன் வணங்கினார்கள். ராமசந்திரன் அவர்கள் எல்லோரையும் ஆலிங்கனம் செய்துகொள்ள ஸீதை போஜனம் செய்விக்கத் தங்கள் தங்கள் பட்டணத்து ஜனங்களுடன் எல்லோரும் சபையில் இருந்தார்கள். அப்பொழுது ரகுபுங்கவர் அந்த அரசர்களை நோக்கி "அரசர்களே! ஹஸ்தினாபுரியில் உங்களுடைய முன்னோர்கள் வந்திருக்கிறார்கள். உங்களுக்கு அவர்களுடன் யுத்தம் செய்ய அபிப்பிராயம் இருந்தால் என்னுடன் ஹஸ்தினாபுரிக்கு வாருங்கள். இல்லாவிட்டால் உங்களுடைய இருப்பிடம் செல்லுங்கள். என்கூட வரவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை" என்று கூறினார்.

இதைக்கேட்டதும் பாலர்கள், மஹா மகாபராக்ரமசாலியாகிய ராம! ராம! நாங்கள் எல்லோரும் தங்களை யநுசரித்தவர்கள்; தங்களுடைய வீரர்கள்; க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவர்கள்; யுத்தத்தில் சத்ருக்களைச் சங்கரிப்பவர்கள். தங்களுடைய உத்தரவைப்பெற்றுத் தந்தையாயினும் பிள்ளையாயினும் சரி, இரக்கமில்லாமல் கொல்லுகிறோம். யஜமானன் காரியத்தில் நோக்கமில்லாதவர்களென்று எங்களைக் கருதவேண்டாம்" என வணக்கத்துடன் தெரிவித்தார்கள். உடனே ஸீதாகாந்தன் அவர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு அவர்களுக்கு வஸ்திராபரணங்களைச் சம்மானஞ்செய்து அன்று சுகமாக ஸீதையுடன் நித்திரை புரிந்தார்.

பிறகு விடியற்காலையில் ஸீதையுடன் சரயூநதிக்குச் சென்று தீர்த்தமாடி விதிப்படி தானஞ்செய்து சரயூவை வணங்கித் தாம் யுத்தத்திற்குப் பிரயாணப்படப் பலவிதமாகக் கேட்டார். சரயூ

தாசரதியைப் பார்த்துச் சொல்லுகிறாள்—"ஏ தசரதகுமாரனே! நான் இதுவரையில் தங்களுடையதரிசனத்தை விரும்பிருந்தேன். இப்பொழுது தங்களுடன் நானும் வருகிறேன்" என்று சொல்லினள். ராமபிரான் சரயூவைப் பார்த்துக் கூறுகிறார்—

"ஏ நதியே! பாபங்களைப் போக்கும் என் கதை பூமியில் எதுவரையில் இருக்கிறதோ அதுவரையில் ஜனங்களின் பாபங்களைப் போக்கும்பொருட்டு ஓரம்சத்துடன் இங்கு நீ வாசம் செய்யவேண்டும்" என்றாஞ்ஞாபித்தார்.

சரயூநதி அவ்விதமே ஆகட்டுமென்று சொல்லி ஓரம்சத்தை அயோத்தியில் வைத்துவிட்டுப் பூர்ணரூபத்துடன் ராமரோடு புறப்பட்டாள்.

பிறகு ராமசந்திரன் சரயூநதியுடன் தமதுநகரமாகிய அயோத்தியைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிப் பூசித்து "ஏ அயோத்தியே! உனக்கு நமஸ்காரம். ஏ அம்மா! உன்னால் நான் காக்கப்பட்டேன். நான் இப்போது என் ஸ்தானத்திற்குச் செல்ல யத்தனித்திருக்கிறேன். அதற்காக விடை கேட்கிறேன். உத்தரவு கொடுக்கவேண்டும் நான் செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டும். மறுபடி உன் தரிசனம் எனக்குக் கிடைக்கவேண்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார்.

இந்த வார்த்தையைக்கேட்ட அயோத்தியாபுரி, "ராமா! இதுவரையில் உன் தரிசனத்தை விரும்பியிருந்தேன். உன் விரகத்தை என்னால் சகிக்கமுடியாது. ஆகையால் உன்னுடன்கூட வருகிறேன்" என்றுரைத்தது. இதைக்கேட்ட தசரதநந்தனர் 'ஏ புரியே பாபங்களைத் தொலைக்கும் என் கதை உள்ளவரையில் மண்ணுருவத்துடன் ஓரம்சமாக நீ இங்கு வாசம்செய்" என்றார். அப்புரி அவ்விதமேயென ஒப்புக்கொண்டு மண்ணுருவத்துடன் ஓரம்சமாக அயோத்தியிலிருக்க நிச்சயித்து ஸ்வர்ண உருவத்துடன் ராமரை அனுசரித்தது.

ராமசந்திரன் அயோத்தியுடனும் சரயூவுடனும் சேனைகளிருக்குமிடம் வந்தார். அதுமுதல் அவ்விடத்தில் சரயூவுடையவும் அயோத்தியுடையவும் மகிமை தங்கியிருந்தன.

பிறகு ஸீதை தோழிகளுடன் பெண் யானையின் மீதேறிக் கொண்டாள். ஊர்மிளை முதலியவர்கள் தனித்தனியாக யானைகளின் மீதேறிக்கொண்டார்கள். அப்பால், ஸீதாகாந்தன் யானையின் மீதேறிக்கொண்டு சந்தோஷத்துடன் லக்ஷ்மணனை அழைத்துப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் எல்லோரையும் அவரவர்கள் பந்துக்களுடன் புஷ்பகவிமானத்திலேற்றி வைத்துயானையின்மீது புத்திரர் முதலிய பந்துக்களுடன் நீயும் ஏறிக்கொண்டு எனக்குப் பின்புறத்தில் அனுசரித்துவா” என்று கட்டளையிட்டார். லக்ஷ்மணர் அவ்வாறே செய்தார். பிறகு அரசர்கள் யாவரும் பலவாறான வாகனங்களிலேறிக்கொண்டு தங்கள் சேனைகளுடன் ஸ்ரீராமன் பக்கத்தில் சென்றார்கள். முன்னே, குந்தலந்தரித்தவர்கள், கல்லை உடைப்பவர்கள்; சச்சரர்கள் முதலியவர்கள் கூடாரமுளைகளைஎடுத்துக்கொண்டு சென்றார்கள். பிறகு யானைகள் சென்றன. அதன் பின் யந்திரந் தரித்தவர்கள் அநேகவித வாகனங்களிலேறிச் சென்றார்கள். பிறகு சதக்னி என்ற ஆயுதம் நிறைந்த வண்டிகள் சென்றன. பின்பு குதிரையின்மீது வாத்தியங்களை முழக்கிக் கொண்டு படர்கள் சென்றனர். பிறகு குதிரை வீரர்கள் பிரம்பு பிடித்துக்கொண்டு சேனையை நடத்தினார்கள். பிறகு வாஹனத்தின்மீதேறி மாகதர்கள் சென்றார்கள். பிறகு அலங்காரஞ்செய்து கொண்டு நடர்களும் சாரணர்களும் சென்றார்கள். பிறகு தாஸிகள் நர்த்தனம் செய்துகொண்டு போனார்கள். அப்பால் ஸ்ரீராமருடைய குதிரைகள் அலங்காரத்துடன் சென்றன. அதன்பின் தருணிகளான ஸ்திரீகள் புருஷவேஷம் பூண்டு அநேகவிதமாக அலங்கரித்துக்கொண்டும் ஆயுதங்களைக் கையிற்பிடித்துக் கஞ்சுகந் தரித்துக் குதிரை முதலிய வாகனங்களின் மீதேறிச் சென்றார்கள். அதற்குப் பிறகு தாஸி புத்திரர்கள் நன்றாக அலங்கரித்துக்கொண்டு சென்றார்கள்.

பிறகு ராமசந்திரனும் அவர்க்குப் பிறகு லக்ஷ்மணனும் பிறகு பரதனும் பின் சத்ருக்னனும் பின் குசன் லவன் அங்கதன் சித்திரகேது புஷ்கரன் தக்ஷன் சுபாஹு யூபகேது இவர்களும் இவர்களுக்குப் பிறகு ஸீதை ஊர்மிளை மாண்டவி சுருதகீர்த்தி இவர்களும் வரிசையாகவும் சென்றார்கள். பிறகு மந்திரிகள்

132

யாவரும் பல்லக்கில் ஏறிப் பின் சென்றனர். அமைச்சர்களுக்குப் பிறகு பருவதத்திற்குச் சமமான கோடிக்கணக்கான வானரங்களும் பிறகு யானையின் மீதேறிச்செல்லும் அரசர்களும் பிறகு குதிரையின் மீதேறிச் செல்லும் அரசர்களின் சைன்னியங்களும் பிறகு கோடிக்கணக்கான யந்திர வண்டிகளும் சதக்னி கத்தி கேடயம் முதலியவைகள் நிறைந்த வண்டிகளும் பிறகு ஒன்பது வித வாத்தியங்களுடன்கூடின யானைகளும் பிறகு ஒட்டகைகளும் அவைகளுக்குப் பிறகு கோவேறுகழுதைகளும் சென்றன. சாமரம் முதலிய உபசாரங்களுடன் மாகதர்கள் வந்திகள் ஸ்தோத்திரஞ் செய்யவும் அப்ஸரஸ்கள் நர்த்தனம் செய்யவும் காயர்கள் பாடவும் சீதாராமர்கள் சென்றார்கள்.

நான் யாத்திரா காண்டத்தில் முன்கூறிய சேனைகளின் அமைப்பு இங்கும் ஏற்பட்டது.

ராமர் பிரயாணப் படுவதைக் கூறும்

2-வது சருக்கம்

முற்றிற்று.

3-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

பிறகு ராமர் மார்க்கத்தில் மெள்ள நடந்து அநேக தேசங்களைக் கடந்து பதினேழாவது நாளில் சேனைகளுடன் ஹஸ்தினாபுரி வந்தார். இதை அறிந்த சுஷேணன் மிகவேகமாக இருபது லக்ஷம் வானரர்களுடன் எதிர்கொண்டு ஸீதை ராமர் இருவரையும் நமஸ்கரித்து "ஹே ராம ராம மஹாபாஹுவே! தங்களுடைய பராக்கிரமத்தைக்கொண்டு இவர்களுடன் பதினொன்று நாள் வரையில் கடும்போர் புரிந்தேன். இப்பொழுது தாங்கள் வந்திருக்கிறீர்கள். இனி இவர்கள் எவ்விதம் பூமியிலிருக்கப் போகிறார்கள்?" என்றுகேட்டான். ராமபிரான் சுஷேணனைச் சமாதானம் செய்து கங்கையின் வடகரையில் சேனையை நிறுத்திப் பகைவர்களுடைய சைன்னியத்தைப் பார்த்து அன்றிரவு சென்ற பின்பு மறுநாட் காலையில் யுத்தம்செய்ய வானராகளுக்கு ஆஞ்ஞை செய்தார்.

பிறகு வானரர்கள் கங்கையில் ஸ்நானஞ்செய்து ராமரையும் ஸீதையையும் நமஸ்காரஞ் செய்துவிட்டு யுத்தஞ் செய்யப் பிரயாணமானார்கள். ஆரம்பத்தில் வானரர்கள் பயங்கரமான சிங்கநாதம் செய்தார்கள்; வாத்திய கோஷஞ் செய்தார்கள். இவைகளன்றி இன்னும் பலவித உற்சாகமுங் கொண்டாடிப் பகைவர்களுடைய சைன்னியத்தை நோக்கிச் சென்றார்கள்.

நளன் முதலியவர்களும் ராமருடைய சேனையைப்பார்த்து, மிகுந்த ஆச்சரியமடைந்து பெரும் பயத்தால் நடுக்கங்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள்.

பிறகு வானரர்கள் கங்கையைக் கடந்துசென்று கல், மலை, விருக்ஷம் பெரும்பாறை, முஷ்டி பாதங்கள் இவைகளால் ராம நாம கீர்த்தனம் செய்துகொண்டு சத்ருக்களை அடித்தார்கள்; நளனைச் சேர்ந்த சூரர்களும் தீக்ஷண்யமான ஆயுதங்களால்வானரவீரர்களை அடித்தார்கள். இவ்வாறு கூச்சல் பலத்தது. பிறகு வானரர்கள்

மரங்களை எடுத்து அடிக்க நளனுடையசைன்னியங்கள்உபத்திரவ மடைந்து யுத்தஞ் செய்வதிலிருந்து பின் வாங்கியவர்களாகி வெருண்டோடினார்கள். இதைப்பார்த்த நளன் முதலியவர்கள் அநேக அரசர்களை அனுப்பினார்கள். ஜம்பூத்வீபத்தரசர்களும் மற்றத் தீவுகளிலுள்ள அரசர்களும் யுத்தஞ் செய்ய ஸந்நத்தர்க ளாகி அநேக வாகனங்களின் மீதேறிக்கொண்டு வந்தார்களு. இவர்களைக் கண்டதும் ஸ்ரீராமருடைய சேனைகளும் கிளம்பின. அநேக வாகனங்களின் மீது ஜம்பூத்வீபத்தரசர்கள் தீவாந்தரத்தி லிருப்பவர்கள். சுக்ரீவன், அங்கதன், அநுமான், விபீஷணன், ஜாம்பவான், சுஷேணன், சம்பாதி, மகரத்வஜன் குசன், பூரி கீர்த்தி, கம்புகண்டன் இன்னும் மற்றுமுள்ள ஜனகன் முதலிய வர்களும் யுத்த பூமிக்கு வந்தார்கள். பின்னர் இருபக்கத்துச் சைன்னியங்களுக்குள்ளும் வீரவாதம் உண்டாயிற்று. ஒன்பது விதவாத்தியங்களும் முழங்கின. பிரமன் முதலிய தேவர்களும் பரமசிவன், ஸோமனுடன் புதன், தேவேந்திரன் இவர்களும் பற்பல விதமான வாகனங்களிலேறிக்கொண்டுயுத்தத்தின்வேடிக் கையைப் பார்த்தார்கள். இங்கு இப்படியிருக்கையில் சந்திரன் முதலிய தேவர்கள் ஒருங்கு சேர்ந்து "மகாபயம் ஏற்பட்டிருக் கிறது. இப்பொழுது பிரளயம் உண்டானாலும் உண்டாகும். இந்த ஸோமவம்சத் தரசர்கள் பிர்ம்ம தேவரிடம் வரப் பிரஸாத மடைந்தவர்கள். ராமரோ பிரத்திய விஷ்ணு. இதில் எப்படி ஜயாபஜயம் ஏற்படும். இந்த யுத்தத்தை நடைபெறாமல் நிறுத் துவதெப்படி? என்ன செய்யலாம்" என்று யோசனை செய்தார் கள்.

அப்பொழுது பிரம்மதேவர் "தேவர்களே! இச்சண்டையின் வேடிக்கையைச் சிறிது நேரம் பார்த்த பிறகு ராமருக்கும் சோம வம்சத்தவருக்கும் சிநேகமுண்டாக்கி விடுவோம்" என்றுகூறி யுத்தத்தின் வேடிக்கையைப் பார்த்தார். பிறகு இரண்டு சைன் னியங்களிலும் யந்திரங்களின் ஓசையுண்டாயிற்று. அந்த யந் திரங்களி லிருந்துண்டான அக்நிஜ்வாலைகளால் பத்துத் திசை களும் பிரகாசித்தன. யந்திரங்களிலிருந்துண்டான குளிகைகளால் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள்; வண்டிகளிலிருக்

கும்சதக்னிகளாலும் அடித்துக்கொண்டார்கள். அவ்விதமே வீரர்கள் பாணங்கள் சக்திகள் கண்டரகோடரிகள் தோமரங்கள் பிண்டி பாலங்கள், முத்கரங்கள், பரிகங்கள், சக்கிரங்கள், பாணங்கள், குந்தங்கள், சூலங்கள், பட்டிசங்கள் இவைகளால் அடித்துக் கொண்டார்கள். அச்சண்டையில் தந்தையைத் தநயனும் தநயன் தந்தையும் பிதாமகன் பௌத்திரனையும் பௌத்திரன் பிதா மகனையுமாகக் குலம் ஜாதி முதலியவற்றைக் கூறிக்கொண்டே யுத்தம் செய்தார்கள். அவ்விதமே பிரபிதாமஹன் பௌத்திர னையும், பிரபௌத்திரன் பிரபிதாமஹனையும், தௌஹித்திரன் மாதாமஹனையும், மாதாமஹன் தௌஹித்திரனையும் பாணங்க ளால் அடித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு பார்த்தவர் புளகாங்கிதமடையும்படி சண்டை நடந்தது. ராம சேவகர்களாகிய மஹா வீரர்கள் யுத்தத்தில் சிரமமடையும் சமயத்தில் அநுமான் துரோண மலையிலிருந்து ஓஷதிகளைக் கொணர்ந்து அடிக்கடி மூர்ச்சை தெளிவித்து வந்தார். பகைவர்களுடைய சைன்னியத்திலோ மரணமடைந்தவர் எழுந்திருக்கவேயில்லை. ஆகவே ஸோம வம்சத்தைச்சேர்ந்த அரசர்கள் க்ஷீணகதியை அடைந்தார்கள். அந்த யுத்தத்தில் ஆகாய நதி இரத்தப் பிரவாகமாய் விட்டது. நளனுடைய பன்னி ரண்டு பத்மம் சேனைகளும் ராகவரைச் சேர்ந்த அரசர்களால் நிர்மூலமாக்கப்பட்டன. இவ்விதம் அஸ்திநபுரியில் ஆறுமாதம் வரையில் சண்டை நடந்தது. பிறகு சோம வம்சத்தவர்கள் சிறு சைன்னிய பலத்துடன் மறுபடியும் யுத்தத்திற்குச் சென் றூர்கள். இவர்களைப் பார்த்தவுடன் குசன் முதலியவர்கள் ராமர் முதலியவர்களுக்கு முந்தி யுத்த பூமிக்குச் சென்றூர்கள். குசன் நளனையும் லவன் நதியுகனையும் அங்கதன் ஜாதிகரனையும் சித்திர கேது வசுதனையும் புஷ்கரன் லகு சுருதனையும் தக்ஷகன் சுரதனை யும் சுபாகு அஜமீடனையும் யூபகேது சைன்னியத்தையுமாக எதிர்த்து யுத்தம் செய்தார்கள்.

அப்போது யூபகேது தன் பாணங்களால் சைன்னியம் யாவற்றையும் கண்ணுக்குப் புலப்படாமல் மறைத்தான். லவன்

அந்தச் சைன்னியத்தை சமுத்திரத்தில் வாயுவாஸ்திரத்தினால் தள்ளினான். அச்சமயத்தில் நளன் முதலிய ஏழு வீரர்களும் பருவதங்கள்போல் ரகுவீர குமாரர்களுடன் யுத்தம் செய்தார்கள். ஆயினும் சைன்னியமில்லாமையால் இலையற்ற மரங்கள் போல் விளங்காமலிருந்தார்கள். அப்பொழுது குசன் பாணங்களால் நளனை அடித்து நளனுடைய மார்பைப் பிளந்தான். அப்படியடிபட்டும் நளன் தன் பாணங்களாலே குசனைத் தூரத்தினான். பிறகு குசன் தன் பாணங்களால் நளனுடைய துவஜம் வில் குடை சாரதி இவைகளைச் சேதித்து நளனையும் அடித்தான்.

லவன் பாண வருஷத்தால் நதியுகனை அடிக்க நதியுகன் லவனைப் பாணங்களால் துன்புறுத்தினான். அப்பொழுது லவன் நதியுகனுடைய தேரை உடைத்தான். இவ்விதமே ஜாதீகரனை அங்கதன் அடித்தான். அங்கதனை ஜாதீகரன் பரிகாயுதத்தால் அடித்தான். அங்கதன் தன் பாணங்களால் ஜாதீகரனை அடித்துப் பூமியில் தள்ளினான். சித்திரகேது தன் பாணக்கூட்டங்களால் வசுதனைத் தேரிலிருந்து அதிவிரைவில் கூப்பிடு தூரத்திற்கப்பால் எற்றித் தள்ளினான். இது மிகவும் ஆச்சரியமாயிருந்தது. பிறகு லகுசுருதன் பாணங்களால் புஷ்கரனை மார்பிலடித்தான். புஷ்கரன் கோபங்கொண்டு பாணங்களால் அடித்து லகுசுருதனைத் தேர்த் தட்டில் எழுதிய சித்திரம்போற் செய்து துந்துபிவாத்தியத்தைக் கோஷித்தான். சுரதனும் தக்ஷனிடம் பாணங்களை வருஷித்தான். பிறகு தக்ஷன் தன் பாணக்கூட்டத்தால் சுரதனைத் தேருடன் ஆகாயமார்க்கத்தில் உலர்ந்த காற்றில் சருகுசுற்றுவது போலச் சுற்றும்படி செய்தான்.

அஜமீடன் தன் முன்னோர்கள் ராம புத்திரன் முதலியவர்களால் வியாகுலப்படுவதைப் பார்த்து பாணங்களை வருஷித்தான். அப்போது சுபாகு சரவருஷத்தால் தேரை உடைத்தான். அஜமீடன் மறுபடியும் வேறுரதமேறி குசன் முதலியவர்களை அதஞ் செய்வதற்காக வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தான். இதைக் கண்ட யூபகேது கருடாஸ்திரப் பிரயோகம் செய்தான். அந்த அஸ்திரத்திலிருந்து கோடிக்கணக்கான ஸர்ப்பங்கள் கிளம்பி

வாயுவைப் பானம் செய்தன. தேரிலிருக்கும் நளன் ஸர்ப்பங்களைக் கண்டு உத்தமமான காருடாஸ்திரப் பிரயோகம் செய்தான். உடனே குசன் பயத்தைக்கொடுக்கும் ராக்ஷஸாஸ்திரத்தைப் பிரயோகித்தான். நதியுகன் வேகமாக ஆக்நேயாஸ்திரத்தை விட்டான். பிறகு லவன் கோபங்கொண்டு மேகாஸ்திரத்தைப் பொழிந்தான். அப்பொழுது லகுசுருதனும் வாயுவஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிறகு ஆஞ்சநேயன் வக்கிரமான வாயைத் திறந்து கொண்டு வாயுவைக்குடித்து மேகம் போல் கர்ஜனை செய்தான். இவ்வாறு அகோர யுத்தம் நடப்பதை ஸீதை ராமர் இருவரும் லக்ஷ்மணர் முதலியவர்களுடன் பார்த்து வியந்தார்கள். இப்படி ஐந்து மாதம் பதினொரு நாள் வரையில் யுத்தம் நடந்தது. மார்க்கத்தில் பதினொரு நாள் சென்றன வென்று முன் கூறப்பட்டிருக்கிறது. திரேதாயுகக் கணக்குப்படி பதினொரு மாதம் பதினொரு நாளில் யுத்தத்திற்கு முடிவாம். இச்சமயத்தில் குசன் விரைவாக பிர்ம்மாஸ்திரத்தை ஸந்தானம் செய்தான்.

ஸோம வம்சத்தவரின் யுத்த வரலாற்றைக் கூறும்

3-வது சருக்கம்

முற்றிற்று.

4-வது சருக்கம்.

ஸ்ரீ ராமதாசர் கூறுகிறார்.

குசன் பிர்ம்மாஸ்திரத்தை ஸந்தானம் செய்தவுடன் பிர்ம்ம தேவர், தேவர்கள், ஸோமன், புதன் இவர்களுடன் விமான மேறிப்பூமிக்கு வந்து விமானத்திலிருந்திறங்கிக்குசனிடம் வந்து "ஏ குச! இப்பொழுது பிர்ம்மாஸ்திரத்தை விடாதே. இந்த ஸோமனுக்குத் துவாபரயுக முடிவுவரையில் சொர்க்க வாசமும் அவன் வம்சத்திற் பிறந்த நளன் முதலியவர்களுக்கு யுத்தத்தில் பிறரால் ஜயிக்க முடியாத வன்மையும் தேவர்கள் முன்னிலையில் ஒரு காரணத்தை முன்னிட்டு என்னால் கொடுக்கப் பட்டிருக்கின் றன. ஆகையால் என்னைச்சேர்ந்த நளன் முதலியவர்களிடம் அஸ் திரத்தைப் பிரயோகம் செய்யாதே" என்றுரைத்தார்.

இவ்விதம் பிர்ம்மதேவர் கூறியதைக் கேட்ட குசன் "பிர்ம்மதேவரே! இப்பொழுது ஒரு க்ஷணத்தில் எல்லோரையும் சாம்பலாகச் செய்கிறேன். இல்லாவிடில் நீர் இந்த வரலாற்றை என் தந்தையாகிய ராமரிடம் சொல்லும். அவர் உத்தரவின்படி நடக்கிறேன். நீர் இந்த நளன் முதலியவர்களுக்கு வரம் கொடுத்த சமயத்தில் ஸ்ரீ ராமச்சந்திரருடைய சாமர்த்தியத்தை அறியாதவரோ? இப்போது வந்து வீணுகக் கெஞ்சுகிறீர். உமக்கு வன்மை இருக்குமாயின் நளன் முதலியவர்களுக்காகத் தேவர்க ளுடன் சேர்ந்து என்னுடன் யுத்தம் செய்யவாரும். நாமிருவரும் யுத்தம் செய்வதை ராமர் பார்க்கட்டும். புஷ்பகத்திலிருக்கும் ஸீதை சாளர வாயில் மூலகமாகப் பார்க்கட்டும்" என்று வீரா வேசத்துடன் பேசினான்.

இவ்விதம் குசன் சொன்னதும் பிர்ம்மதேவர் வெட்கங் கொ ண்டு, உடனே ஸோமனையும் புதனையும் கூட்டிக்கொண்டு நளன் முதலியவர்களின் சமீபஞ் சென்று "ஆயுள் முடிந்த மூடர்களே! நான் சொல்லுவதைக் கேளுங்கள்; சாக்ஷாத் நாராயணனுடைய அவதாரமாகிய ராமரிடம் சண்டை செய்ய முன் வந்தீர்களே!

இந்தப் புத்தியை உபதேசம் செய்தவன் யாவன்? எல்லோருக்கும் தீங்கு உண்டாக்கக்கூடியதாயிற்றே. நீங்கள் எல்லோரும் ராமரைச் சரணமென்றடையுங்கள். இல்லாவிடில் மரணமடைவீர்கள். இந்த ரகுவீரன் எனக்குத் தகப்பன். விஷ்ணுவே இவர்'' என்று கூறிக் குசனிடம் வந்து கூறுகிறார்.—

ஏ பாலகனாகிய குச! நான் ராமரிடஞ்சென்று வருவதற்குள் பாணத்தைப் பிரயோகம் செய்தால், என்னைக் கொன்ற தோஷத்தை அடைவாய்—என்று சொல்லி நளன் முதலியவர்களுடன் தேவர்களோடு விருஷபத்வஜராகிய பரமசிவனை முன்னிட்டுக்கொண்டு ராமரிடம் வந்தார். தசரதாத்துமஜன் பரமசிவன் வருவதைப்பார்த்துப் புஷ்பக விமானத்திலிருந்து இறங்கி எதிர்கொண்டு வந்து பரமசிவனை நமஸ்கரித்துப் பின் பிர்ம்மதேவரையும் பணிந்து அவர்களைக் கிரமப்படி பூஜித்தார். பிறகு பிர்ம்மதேவர் சபையில் நளன் முதலியவர்களை ராமருக்கு வந்தனம் செய்யும்படி செய்தார். நமஸ்கரித்த ஸோமன், புதன், நளன் முதலியவர்களை ஸீதாகாந்தன் தமது கையால் ஸ்பரிசித்தார். பிர்ம்மதேவர் அவர்களின் பெயரைத் தனித்தனியே ராமருக்குத் தெரிவித்தார். அதைக்கேட்ட ராமச்சந்திரன் முன்னால் நிற்கும் பிர்மதேவரை நோக்கி "எதற்காக ஸோமவம்சத்தவர்களை இங்கு அழைத்து வந்தீர்? அதன் காரணத்தை உண்மையாக என் முன்னிலையில் கூறவேண்டும்'' என்றார்.

பிர்ம்மதேவர், மகா பாகுவே! ராம ராம! என் சொல்லைக் காப்பாற்ற வேண்டும் இவ்வரசர்களைக் காப்பாற்ற வேண்டும். பிரபுவே! இவர்களுக்குத் துவாபரயுகம் முடியும் வரையில் ஒருவராலும் அபஜயமடையாத தன்மையை முன்பு நான் வரமாகக் கொடுத்து விட்டேன். இப்பொழுது உம்முடைய குமாரன் குசன் என் அஸ்திரத்தை ஸந்தானம் செய்கிறான். அவனைத் தடுத்து ஆதரிக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

இதைக்கேட்டதும் ரகுநாயகன் சபையில் நகைத்து "நீர் கொடுத்த வரத்தால் அபஜயமடையாததன்மை இப்போது எங்குப் போயிற்று? ஏன் இங்கு இவர்களைக் கூட்டிக்கொண்டு வரவேண்

டும்" என்று கேட்டார். இதற்குப் பிரமன் பிரவுவை நோக்கி, "ஸீதாரமணா! எல்லோரிடத்திலும் என் பலம் செல்லும். உம்மிடத்திற் செல்லாது. நீர் எனக்குத் தந்தை; ஆகையால் உம்மைப் பிரார்த்திக்கின்றேன்" என்றார். தாசரதி, மந்தஹாஸம் செய்து, நான்முகனைப்பார்த்து, "வாலிபப் பருவத்தினனாகிய குசன் என் வார்த்தையைக் கேட்கமாட்டான். பெரும்பாலும் சிறுவர்கள் பெரியோர்களின் சொல்லைக் கேட்பதில்லை. சாஸ்திரத்தில் கூறிய மற்றொரு சமாதானத்தையும் கேளும்—ஐந்து வருஷம் வரையில் பிள்ளைகளை லாலனை செய்தல்வேண்டும். பிறகு பத்து வருடம் வரையில் அடிக்கவேண்டும். பதினாறுவது வயசு வந்தது முதல், புத்திரனை மித்திரனைப்போல் பார்க்கவேண்டும்—ஆகையால் குசன் முதலியவர்கள் என் சொல்லைக் கேட்க மாட்டார்கள். அவர்கள் சுவப்பிரயோசனத்திலேயே கண்ணுள்ளவர்கள். ஆகையால் அவர்களிடமே சென்று கேட்டுக் கொள்ளும்—என்றார். பிரமதேவன், "ராம! அவர்கள் யுத்தத்திலுண்டான கோபத்தால் என்னுடன் அன்போடு பேசமாட்டார்கள்" என்றார். ராமர், "பிரம்மதேவரே! வான்மீகிமுனிவரிடம் சென்று கேட்டால் அவர் உமக்கு யுக்தி சொல்வார்" என்று விநோதமாகச் சொல்ல, பிரம்மா உடனே புஷ்பக விமானத்தில் முனிவர்களிருக்கும் சாலையில் முனிவர்களுடனுட்கார்ந்திருக்கும் வான்மீகியிடம் நளன் முதலியவர்களுடன் சென்று வரலாறு யாவற்றையும் தெரிவித்தார்.

அதைக்கேட்டதும் வான்மீகி முனிவர் ராமர் மனதில் நினைத்திருப்பதைத் தெரிந்துகொண்டு, "சதுர்முகனே! இவர்கள் ஸ்திரீகளால் உயிரை அடையவேண்டும். நளன் முதலியவர்களின் ஸ்திரீகள் யாவரும் ஸீதாதேவியைப் பிரார்த்தனை செய்து கொள்ளவேண்டும். பிறகு குசன் ஸீதையின் சொற்படி சாந்தமடைவான்" என்றார். இதைக்கேட்ட நளன் முதலியவர்கள் தூதர்களை விரைவாக அனுப்பித் தங்களுடைய மனைவிகளை வரவழைத்து ஸீதையிடம் அனுப்ப அவ்வரச ஸ்திரீகள் காணிக்கைகளை எடுத்துக்கொண்டு ஸ்திரீகள் வாசஞ்செய்யும் சாலைக்குச் சென்று அங்குத்தோழிமார்கள் சூழச் சந்தோஷமாக மஞ்சத்தில் சயனம் செய்துகொண்டிருக்கும் ஸீதையைக்கண்டு நமஸ்கரித்தார்கள்.

அப்பொழுது ஸீதா தேவியின் சிவப்பு வர்ணமுள்ள வஸ்துக்கள் பூசிய இரு பாதங்களும் ராஜ ஸ்திரீகளின் சிரசில் இருக்கும் இரத்தினக் கூட்டத்தின் ஒளியால் மிகவும் பிரகாசித்தன. அந்த ஸ்திரீகள் தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளை ஸீதா தேவியிடம் கொடுத்தார்கள். அவைகளை, தேவி அங்கீகாரஞ் செய்துகொண்டு "ஸ்திரீகளே! என்ன காரியத்தை உத்தேசித்து வந்தீர்கள்? நீங்கள் இனிப்பயப்படவேண்டாம். உங்களிஷ்டத்தைச் சொல்லுங்கள். அதை நான் நிறைவேற்றுகிறேன்" என்றாள். ராஜ ஸ்திரீகள் தங்கள் வரலாறு யாவற்றையும் தெரிவித்து "அம்மணி! எங்களுக்குக் கங்கணதானங்களைச் செய்து குசனை யுத்தம் செய்வதிலிருந்து நிறுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். இதைக் கேட்டதும் ஸீதை "ராமர் நமது மனதில் நினைத்துக்கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டு நம் கையால் இவர்களை விடுவிக்கவேண்டுமென்று நிச்சயித்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் உடனே செல்லுவோம்" என்று நினைத்துப் பல்லக்கில் ஏறி அந்த ஸ்திரீகளுடன் குசனிடம் வந்து "ஏ குச! பாலக! கோபியாதே! யுத்தத்தை நிறுத்தி விடு; என்சொல்லைக் கேள்" என்று கூறினாள். குசன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, நமஸ்காரஞ் செய்து தன் தாய் உறவினர், சைன்னியம் இவர்களுடன் திரும்பினான். ஸீதை அந்த ஸ்திரீகளுடன் புஷ்பக விமானத்திலேறித் திரும்பி வந்தாள். குசன் முதலிய குமாரர்கள் சபையிலிருக்கும் ராமரிடம் வந்தார்கள்.

பிறகு வான்மீக முனிவர் பிர்ம்மதேவர் நளன் முதலியவர்கள் தேவர்கள் எல்லோரும் சபைக்கு வந்து ஸ்ரீராகவரின்முன் வந்தார்கள். குசன் முதலியவர்கள் ஸ்ரீராமரை நமஸ்கரித்தார்கள். ஸ்ரீராகவன் குமாரர்களை ஆலிங்கனம் செய்து கொண்டார். பிறகு அவர்கள் நீராஜனத்திற்காகப் பிதாவின் சமீபத்திலிருந்தார்கள். அப்பொழுது ராமச்சந்திரன் சபையிலிருக்கும் பிர்ம்மாவைப் பார்த்து 'ஏ பிர்ம்மதேவரே! என் குழந்தைகள் யுத்தத்திலிருந்து திரும்பிவிட்டார்கள். இனி உமக்கு என்ன கோரிக்கை;

என் ராஜ்யத்தில் இரண்டாவது சக்ரபதி வேறுயாருமில்லை. நளன் முதலியவர்கள் செய்யப்போவதென்ன ?” என்று கேட்டார்.

அப்போது பிரமன் ஆசனத்தை விட்டெழுந்து “ஏ ராம ராம ! மஹாபாஹோவே ! தாங்கள் பூபாரத்தைக் குறைத்து விட்டீர்கள். வெகு நாள் ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்தாயிற்று. இப்பொழுது வைகுண்டத்தைப் பரிபாலிக்கவேண்டும். என் வாக்குப்பிழைபடாதபடி நளன் முதலியவர்களுக்கு அஸ்திநாபுரியைக் கொடுக்கவேண்டும். குசன் அயோத்தியில் அரசு செய்யட்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

அப்பொழுது ராமர் “பிர்ம்மதேவரே ! எனக்கு இது தான் எண்ணம். ஸீதையுடனும் உறவினர்களுடனும் நான் வைகுண்டம் செல்லுகிறேன். இந்தத் திரேதாயுகத்திற்குப் பதினாயிரம் வருஷம் கணக்கு ஏற்பட்டது. பிர்ம்மனே ! என் சாமர்த்தியத்தால் அதைப் பொய்யாக்கினேன்.

பதினோராயிரத்துப் பதினொரு வருஷம் பதினொரு மாதம் பதினொரு நாள் சென்றன. மிச்சமாகவுள்ள காலம் கொஞ்சந் தான். அது நாளைய தினம் பன்னிரண்டு நாழிகைக்கு முடிகிறது. பின் வைகுண்டம் செல்கிறேன்” என்று சொன்னார்.

அப்பொழுது குசன் “பிர்ம்மதேவரே ! இந்த நளன் முதலியவர்கள் எனக்குத் திறை செலுத்திவருவார்களாயின் இந்த ஹஸ்திநாபுரியிலிருக்கட்டும். என்னுத்தரவை அநுசரித்து நடக்கவேண்டும். குடையில்லாமலு மிருக்கவேண்டும். அப்படியானால் சுகமாக இங்கு வசிக்கட்டும்” என்றான்.

இதைக் கேட்ட பிரமதேவன் “ஏ குச ! இவர்களுக்கு குடை மட்டும் இருக்கட்டும். உன் ஆஞ்ஞையை அநுசரித்து உனக்கு இவர்கள் கப்பம் கட்டுவார்கள். என் சொல்லை நீ பரிபாலிக்க வேண்டும்” என்றார். அதற்குக் குசன் மந்தஹாஸமுகத்துடன் அவ்விதமே ஆகட்டுமென்றான்.

பிறகு ஸோம வம்சத்தரசர்கள் யாவரும் "ஏ பிர்ம்ம தேவரே! நாங்கள் எங்கள் ஸ்திரீகளுடன் சொர்க்கம் செல்லுகிறோம். அஜமீடன் ஹஸ்தினபுரிக்கு அரசனாகட்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள் பிர்ம்மா அவ்விதமே என்றுரைத்துச் சபையில் உட்கார்ந்தார்.

பிறகு சதுர்முகன் ராமாஞ்ஞையால் பிராம்மணர்களுடனிருந்து அஜமீடனுக்கு அபிஷேகம் செய்து அவனை ஹஸ்தின புரிக்கு அரசனாக்கினர்.

ஸோம வம்சம் சூரியவம்சத்தவர்களோடு நட்புக்கொண்ட வரலாற்றைக் கூறும்

4-வது சருக்கம்.

முற்றிற்று.

5-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

பிறகு சுஷேணன் சுக்ரீவன் விபீஷணன் வானரர்கள் எல்லோரும் "ஏ ராம! நாங்களும் உம்முடன் சொர்க்கம்வருகிறோம். நீங்களில்லாமல் இப்பூமியில் ஜீவித்திருக்க மாட்டோம். ஆகையால் உம்முடன் வர உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

ஸ்ரீராமசந்திரன் "விபீஷணா! நீ என் சொற்படி இலங்கை சென்று என் நாமம் எது வரையில் பூமியில் இருக்கிறதோ அது வரையில் அதைப் பரிபாலித்து வரவேண்டும். இப்பொழுதே இலங்கைக்குச் செல்" என்றார். விபீஷணன் அப்படியே ஆகட்டுமென்று ஸ்ரீ ராமருடைய பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்து அவரால் ஸம்மானம் செய்யப்பெற்று இலங்காபுரி சென்றான்.

பிறகு ரகுவீரன், "ஏ ஜாம்பவானே பூமண்டலத்தில் என் கதை விளங்குகிற வரையில் நீ இருக்கவேண்டும். துவாபர யுகத்தின் கடைசியில் மறுபடியும் நீ என்னைப் பார்ப்பாய்; நீ சுகமாகவிரு, நீ இலங்கையில் செய்த உதவியும் வனத்தில் செய்த உதவியும் கொண்டாடத் தக்கவைகளாம். ஆகையால் துவாபர யுகத்தில் எனக்கு மாமனாராக வந்து பிரசித்தி அடைவாய்" என்று கூறினார். ஜாம்பவான் ஒப்புக்கொண்டு ஸீதையையும் ராமரையும் நமஸ்கரித்து ராமரால் கொண்டாடப்பட்டு சீக்கிரமாகவே புறப்பட்டார்.

பிறகு ரகுசிரேஷ்டன் "ஏ ஆஞ்சநேய! நீயும் சென்று சுகமாகவிரு. எந்தச் சமயத்தில் சேதுவில் சரங்களால் சேது கட்ட அர்ஜுனனுடன் உனக்குப் பந்தயம் ஏற்படுகிறதோ அந்தச்சமயத்தில் அதாவது துவாபர யுகத்தின் முடிவில் என் தரிசனம் உனக்குக் கிடைக்கும். இப்பொழுது சுகமாகச் சென்று, என்னைப் பஜனம் செய்துகொண்டிரு" என்று கட்டளையிட்டவுடன் அநுமான் ராமரையும் லக்ஷ்மணரையும் ஸீதா தேவியையும் நமஸ்

கரித்துப் புறப்படுவதற்கு யத்தினப்பட்டார். அப்பொழுது தாசரதி தன் கழுத்திலிருந்து நவரத்தினங்களிழைத்த ஹாரத்தைத்தந்தார். ஸீதையும் அதிதமாதிரி ஹாரத்தையும் பாஹுபூஷணங்களையும் ஸம்மானம் செய்தாள். மாருதி கண்களிலே நீர்பெருக ஸீதா ராமர்களைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து இமயமலைக்குச் சென்றார்.

பிறகு ராமச்சந்திரன் அங்கதனுக்கு வஸ்திரம் முதலியவைகளை வெகுமானமாகக் கொடுத்து, அவனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்பினார். மகரத்துவஜனைப் பாதாளலோக மனுப்பினார். சுகிருத்துக்களை வஸ்திரம் முதலியவற்றால் பெருமைப் படுத்தித் தங்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அனுப்பினார்.

பிறகு ரகுபதி யூபகேதுவை அழைத்து, வஸ்திரம் முதலியவைகளால் சந்தோஷப்படுத்தி விதிசாநகருக்கனுப்ப அவன் சேனையுடன் ஸீதையையும் ராமரையும் நமஸ்கரித்துவிட்டுத் தன் மனைவிகளுடனும் புத்திரர்களுடனும் விதிசை சென்றான். இம்மாதிரியே சுபாகுவை மதுரைக்கும் புஷ்கரன் என்ற பாலனைச் சேனையுடன் புஷ்கராவதிக்கும் தக்ஷனை தக்ஷசிலைக்கும் சித்திரகேதுவை ஸ்திரீ புத்திரர்களுடன் அவனது பட்டணத்திற்கும் அனுப்பினார்.

பிறகு ஸீதை ராமர் இருவரும் லவனை அழைத்து லவனுக்கும் அவன் மனைவிகள் புத்திரர்களுக்கும் வஸ்திரம் அலங்காரம் இவைகளளித்து, சேனையுடன் உத்தர குருக்ஷேத்திரத்திற்கு அனுப்பினார். ஸீதை ஸந்தோஷத்துடன் காமதேநுவையும் கொடுத்தாள். பிறகு ரகுநந்தனன் குசனை அழைத்து அவன் மனைவிகளுக்கும் புத்திரர்களுக்கும் அவனுக்கும் தமது அலங்காரங்களையும் வஸ்திரம் முதலிய ஆபரணங்களையும் கொடுத்து, தமது ஆயுதங்கள் வில் அநேகவித வாகனங்கள் வஸ்திரங்கள் சிந்தாமணி இவைகளையும் கொடுத்து "பாலக! நீ அரசர்களுடனும் உன் மனைவிகள் குமாரர்களுடனும் அயோத்தி சென்று சுகமாகவும் தருமமாகவும் பூமியைப் பரிபாலனம் செய்; ஜம்பூத்தீவி

லும்மற்றத்தீவுகளிலுமுள்ள அரசர்களைப்பிள்ளைபோல எண்ணிப் பாதுகாத்துவார்" என்று சொல்லி அரசர்களை நோக்கி, நீங்களெல்லோரும் குசனை என் ஸ்தானத்தில் எப்போதும் கொண்டாட வேண்டும்" என்றார். இதைக்கேட்ட அரசர்கள் "ரகூத்தம! தங்களுடைய தேஜஸ் நிறைந்த இந்தக் குசன் பாலனாயினும் எங்களிடத்தில் தங்களைவிட நூறுமடங்கு விசுவாசமுள்ளவன். இதில் சந்தேகமில்லை. இதைச் சத்திய மென்றறிந்து கொள்ளவேண்டும். நீங்கள் எவ்விதம் பரிபாலனம் செய்தீர்களோ அதுபோல் மிகுதியான பராக்கிரமமுள்ள இந்தக் குசன் எப்போதும் எங்களைக் காப்பாற்றுவான்" என்று ராஜசிரேஷ்டர்கள் தெரிவித்து ராமரை நமஸ்கரித்தார்கள். ராமச்சந்திரர் அவ்வரசர்களுக்கு வஸ்திரம் அலங்காரம் வாஹனம் இவைகளளித்து உபசரித்தார். பிறகு ராஜாக்கள் அனைவரும் தங்கள் தங்கள் சேனையுடன் குசனை முன்னிட்டுக்கொண்டு பிரயாணமானார்கள்.

குசன் ராகவரை நமஸ்கரித்தான். ஸீதை குசனின் உச்சி மோந்து மகிழ்ந்தாள். பிறகு குசன், வஸிஷ்டமுனிவருடன் ரதமேறிப் புறப்பட்டான். அப்பொழுது ராமர் வண்ணானையும், மந்தரையையும் குசனுடன் பட்டணத்திற்கனுப்பினார். அவ்விருவரும் ராமருக்கு முன் விரோதம் செய்தவர்களாகையால் சொர்க்கம் செல்லவில்லை. இவ்விருவரே கிருஷ்ணாவதாரத்தில் ரஜனாகவும் பூதனையாகவும் அவதரிக்கப் போகிறார்கள்.

பிறகு குசன் கண்ணீருங் கண்ணுமாக ரதத்தில் ஏறிக்கொண்டு செல்லும்போது முகத்தைத் திருப்பிக்கொண்டு அடிக்கடி ராமரையும் ஸீதையையும் பார்த்தான். ஸீதாராமர்களிருவரும் தமது கைகளால் போ! போ!! வென்று குசனை செய்தார்கள். குசன் சேனைகள்சூழ, ஸ்ரீராம விரஹத்தால் துயரமுறும் சூனியமான அயோத்தியிற் பிரவேசித்து மஹோற்சாஹத்துடன் தன் சிங்காஸனத்தில் அமர்ந்து, ராஜாக்களெல்லோரையும் பூஜித்து, அவர்களை அவரவர்களுடைய தேசங்களுக்குச் செல்ல உத்தரவு கொடுத்தான். அவ்வரசர்களும் குசனை நமஸ்கரித்துத் தங்கள் தங்கள் தேசங்களுக்குச் சென்று, குகமஹாராஜனுக்குக்

கப்பங் கட்டினார்கள்; குசனுடைய ஆஜ்ஞையை எப்போதும் அநுசரித்து நடந்து வந்தார்கள்.

கூனியும் ரஜகனும் அயோத்திக்கு வெளிப்பிரதேசத்திலேயே தெய்வசங்கற்பத்தால் மரணமடைந்து மறுபடியும் அயோத்தியில் ஜன்மமடைந்தார்கள். அயோத்தியில் மரணமடைந்தவர்கள் மறுபடியும் ஜென்மமடைவதில்லை. அதனாலேதான் கூனியும் வண்ணானும் அயோத்தியில் ஈசுவராஜ்ஞையால் மரணமடையவில்லை.

பிறகு ரகுவீரர் வானரர்களை நோக்கி "ஏகவிகளே! நீங்கள் என் விஷயத்தில் மிகவும் சிரமமடைந்தவர்கள்; துவாபரயுகத்தில் நீங்கள் எல்லோரும் இடைச்சேரியில் கோபாலர்களாகப் பிறக்கப்போகிறீர்கள்; அப்போது நான் கிருஷ்ணவதாரம் செய்து, உங்களுடன் போஜன முதலியவற்றைச் செய்யப்போகிறேன்" என்றுரைத்தார்.

பிறகு சுமித்திரையின் புத்திரனைப் பார்த்து "லக்ஷ்மணா! நீ எனக்காகத் தண்டகாரண்யத்தில் மிகவும் சிரமமடைந்தாய். துவாபரயுகத்தில் நீ எனக்குத் தமயனாக அவதாரம் செய்; நான் உனக்கு சுசுருஷை செய்கிறேன்" என்றார். பின்பு பட்டணத்திலுள்ளவர்கள் எல்லோரையும் பார்த்து நீங்கள் யாவரும் என்னுடன் வாருங்களென்று தயவுடன் கூறினார். பிறகு கற்பக விருக்ஷம் பாரிஜாதம் இவ்விரண்டையும் தேவேந்திரனிடம் அனுப்பினார். புஷ்பக விமானத்தைப்பார்த்து "நீ குபேரனிடம் இப்போதே விரைவாகச் செல்" என்று உத்தரவு செய்தார். உடனே புஷ்பக விமானம் ராமச்சந்திரப் பிரபுவை நமஸ்கரிக்க, ராகவர் அதனைப் புகழ்ந்து சம்மானமளித்தார். பிறகு விமானம் ஸீதாதேவியிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றது.

ரகு சிரேஷ்டன் ஊர்மிளை மாண்டவி சுருதகீர்த்தி இவர்களைப் பார்த்து வான்மீகி முனிவரின் ஸந்நிதானத்தில் சொல்லுகிறார்—"நீங்கள் நாளையதினம் உங்களுடைய கணவன்மார்களுடன் அக்நிப்பிரவேசம் செய்து என் வாக்கியப்படி ஸ்வர்க்க

லோகம் செல்லவேண்டும்" என்றார். அவர்கள் அனைவரும் அதற்கிணங்கி, ராமருக்கு நமஸ்காரம் செய்து தங்களுடைய கூடாரம் சென்றார்கள். பிறகு ராமரும் ஸீதையுடன் தங்கமய மான படுக்கையில் அன்றிரவு முழுதும் கழித்தார். பரமசிவன் முதலிய தேவர்கள் முநீசுவ்ரர்களுடன் அங்கிருந்தார்கள். லக்ஷ்மணர் முதலிய எல்லோரும் தங்களுடைய மனைவிகளுடன் சுகம் தவறாமல் கிரீடை செய்தார்கள்.

எல்லோரையும் அவரவர்களிருப்பிடம் செல்லும்படி
ராமர் உத்தரவு செய்ததைக் கூறும்

5-வது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

ஸ்ரீராமதாஸர் கூறுகிறார்.

பிறகு விடியற்காலையில் ராமர் ஸீதையுடனெழுந்து, அஜமீடனை அழைத்துக் கூறுகிறார்—அஜமீட! நான் இப்போது ஸீதை பந்துக்கள் வானரர்கள் பட்டணத்து ஜனங்கள் இவர்களுடன் என் ஸ்தானம் போகிறேன். நீ ஸ்தாவரசொத்துக்களாகிய கூடாரம் முதலியவற்றைக் குசனுக்கு அனுப்பிவிடு. பூச்சிவரையிலுள்ள ஜங்கம வஸ்துக்கள் யாவும் ஸ்வர்க்கத்திற்குச் செல்லப் போகின்றன. ஆகையால் நீ குசனிடம் சென்று விஷயங்களைத் தெரிவித்துவிடு. குசன் எங்களுக்கு உத்தரக்கிரியை செய்வான். எங்களைப்பற்றிக் குசன் விசனப்படாமலிருக்கும்படிசெய்" என்றார். இப்படிக் கூறியதைக்கேட்டு அஜமீடன் கண்ணீர் சொரியக் கை கட்டி நின்று 'அவ்விதமே செய்கிறேன்' என்று சொல்லி ரகுநாதரை நமஸ்கரித்தான். பிறகு ராமர் பட்டணத்தில் வசிப்பவர்களுடன் கங்கையில் ஸ்நானஞ்செய்து, மெள்ள நித்திய கருமாநுஷ்டானத்தை முடித்துவிட்டு அக்நியில் ஹோமம் செய்து கங்கையின் மணலில் நின்றுகொண்டு அநேக தானங்கள் செய்தார்.

அதன்பின்பு ப்பயணத்திற்குரிய காரியத்தை விதிப்படிசெய்து முடித்து அக்நிபகவானை வைகுண்டம் செல்லும்படி அனுப்பினார். அப்பொழுது மஹாலட்சுமி ராமருடைய வலது பக்கம் வந்து நின்றாள். வேதங்கள் உருவத்துடன் வைகுண்டம் சென்றன. மூன்று பதமுள்ள காயத்திரி பிரணவத்துடன் ஸ்ரீராமருடைய முகத்திலிருந்து வெளிப்பட்டு ராமரை நமஸ்கரித்து முந்திச் சென்றது. சாந்தி, பொறுமை, மேதை, திருதி, தயை, தேஜஸ், பலம், பெருமை இவைகளும் முந்திச் சென்றன. பின்பு பௌரர்களும் வானரர்களும் கங்கையில் ஸ்நானம் செய்து பாபத்தைத் தொலைத்து மூச்சை அடக்கிக்கொண்டு சரீரத்தை விட்டார்கள். அதற்குப் பிறகு ராமர் சந்தோஷமாக ஸீதையுடன் கங்கையில் ஆசமனம் செய்து தருப்பைகளைக் கையில் வைத்துக்கொண்டு

தருப்பாஸனத்தில் வடதிசையை நோக்கி உட்கார்ந்தார். அப்பொழுது தேவர்களெல்லோரும் வீற்றிருக்கும் ராமரை நான்கு புஜமுடையவரும் நீலவர்ணரும் மஞ்சள் பட்டாடைதரித்தவரும், கௌஸ்துபரத்தினத்தின் அடையாளமுள்ள ஹிருதயமுடையவரும் ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளத்தால் பிரகாசம் அடைந்தவருமாகிய மஹாவிஷ்ணுவாகப் பார்த்தார்கள். அந்த மஹாவிஷ்ணுவின் இடதுபக்கத்தில் ஸீதை மஹாலட்சுமியாகத் தோன்றினாள். ஸௌமித்திரியாகிய லட்சுமணர் படங்களுடன் கூடிய ஆதிசேஷனாகவும், விஷ்ணுவின் வலதுகையில் பரதன் சங்கமாகவும், இடதுகையில் சத்ருக்னன் சுதரிசனமாகவும் தோன்றினார்கள். அப்பொழுது வானரர்கள் யாவரும் தேவர்களிடம் பிரவேசித்தார்கள். அயோத்தியிலிருக்கும் சண்டாளன் முதலிய புழுப்பூச்சிகள் யாவும் திவ்யசரீரமடைந்து விமானத்தில் விளங்கினார்கள். அப்பொழுது ஆகாயமார்க்கத்தில் தேவவாத்தியங்கள் சப்தித்தன. தேவபத்தினிகள் புஷ்பமாரி பொழிந்தார்கள். கந்தருவகின்னரர்கள் பாடினார்கள். சூரியன்போன்ற காந்தியுள்ள விஷ்ணுவைக் கருடன் நமஸ்கரித்தான். ஸோமன் முதலிய எல்லோரும் தேகத்தை விட்டார்கள். ஊர்மிளை முதலிய மூவரும் அழகான கங்கைக்கரையில் கணவன்மார்களுடைய சரீரத்தைக்கட்டிக்கொண்டு தங்கள் சரீரத்தை அக்கினியில் தியாகம் செய்தார்கள். மஹாலட்சுமியுடன் கூடிய மஹாவிஷ்ணுவுக்குத் தேவபத்தினிகள் நீராஜனம் செய்தார்கள்.

பிறகு மஹாவிஷ்ணு அன்போடு பிர்மமாவை அழைத்துத் "திரியக்ஜாதியில் சேர்ந்த அயோத்தியா வாசிகளுக்கு வாசம் செய்யும் இடம் எது கூறும்" என்று கேட்டார்.

பிர்மதேவர், "என் லோகத்திற்கு மேற்பட்ட சாந்தானிகமென்னும் உலகத்தில் உங்கள் தரிசனம் செய்துகொண்டு விளங்கக்கடவர்" என்றார். பிறகு விஷ்ணு பிர்மனைப் பார்த்து "இனி அயோத்தியில் மரணமடைபவர்களும் சாந்தானிக லோகத்திலேயே வாசம் செய்யக்கடவர்" என்றார். பிரமன் "அவ்விதமே ஆகுக" என்றார். அயோத்தியில் வாசம் செய்யும் யாவரும் திவ்ய தேகம் பெற்று அநேகவித விமானங்களி லேறிக்கொண்டு

திவ்யாலங்காரங்களுடனும் அப்ஸரஸ்திரீகள் சந்தனம் பூசவும் திவ்யசாமரம் வீசவும் சந்திரமண்டலம் போன்ற முகமுடையவர்களாகிச் சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டு ஆகாயமார்க்கத்தில் விளங்கினார்கள்.

பிறகு பிர்ம்மா முதலான தேவர்கள் விஷ்ணுவை அன்புடன் நமஸ்கரித்து நாநாவிதமாக ஸ்தோத்தரித்தார்கள். முநீசுவரர்கள் வேத கோஷங்களாலும் ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்பொழுது மூவுலகங்களைப் பரிபாலிப்பவரும் வனமாலையைத் தரித்தவருமாகிய மஹாவிஷ்ணுவைப் பரமசிவன் ஸ்தோத்திரம் செய்தார்.

ஶம்புருவாச.

ராகவம் கருணாகரம் பவநாஶநம் துரிதாபஹம்
மாதவம் கககாமிநம் ஜலரூபிணம் பரமேஶ்வரம் ।
பாலகம் ஜநதாரகம் பவஹாரகம் ரிபுமாரகம்
த்வாம் நமாமி ஜகத்பதிம் நரரூபிணம் ரகுநந்தநம் ॥
அகிலேஶம் வநமாலிநம் கநவர்ணிநம் தரணீதரம்
ஶ்ரீஹரிம் த்ரிகுணாத்மகம் துலஸீதரம் மதுரஸ்வரம் ।
ஶ்ரீகரம் ஶரணப்ரதம் மதுமாரகம் வ்ரஜபாலகம்
த்வாம் நமாமி ஜகத்பதிம் நரரூபிணம் ரகுநந்தநம் ॥ ௨

சம்பு கூறுகிறார்.

ராகவரும் கருணைக்கிடனும் பவபந்தத்தை நாசஞ்செய்பவரும், துக்கத்தைப் போக்குகிறவரும் மாதவரும் கருடவாகனரும் தீர்த்தசொரூபரும் பரமேசுவரரும் பரிபாலனம் செய்கிறவரும், ஜனங்களுக்குத் தாரகரும் ஸம்ஸாரத்தைப் போக்குகிறவரும் சத்ருக்களை நாசஞ்செய்தவரும் ஜகதீசுவரரும் ரகுநந்தனரும் மானிடவேடங் கொண்டவருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 1

அகிலநாதரும் வனமாலையுடையவரும் மேகவர்ணரும், பூமியை ஆதரித்தவரும், ஸ்ரீ ஹரியும் முக்குணவடிவமானவரும், துளசிமாலை யணிந்தவரும், மதுரமான குரலுடையவரும் அழகான கரங்களுள்ளவரும் அபயமளிப்பவரும், மதுவென்ற அசுரனைச் சங்கரித்தவரும் இடைச்சேரியைக் காப்பாற்றுகிறவரும் ஜகதீசுவரரும் மானிடவடிவங் கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 2

विह्वलं मथुरास्थितं रजकान्तकं गजमारकं
मन्नुतं बकमारकं [illegible] ।
नन्दजं वसुदेवजं [illegible] सुरपालकं
[illegible] जगदीश्वरं नरवेषिणं रघुनन्दनम् ॥ ३ ॥
केशवं कपिवेष्टितं कपिमारकं मृगमर्दनं
सुन्दरं द्विजपालकं दितिजार्दनं दनुजार्दनम् ।
बालकं खरमर्दनं ऋषिपूजितं मुनिचिन्तितं
[illegible] जगदीश्वरं नरवेषिणं रघुनन्दनम् ॥ ४ ॥
शङ्करं जलशायिनं कुशबालकं रथवाहनं
सरयूनतं प्रियपुष्पकं प्रियभूसुरं लवबालकं

ஒரு காரணநிமித்தம் தளர்ச்சியடைந்தவரும் மதுராநகரிலிருப்பவரும், ரஜகனுக்கு அந்தகரும் கஜாசுரனைக் கொன்றவரும் என்னால் நமஸ்கரிக்கப்படுகிறவரும் பகாசுரனைக் கொன்றவரும் நந்தனுடைய பாலனத்திலிருந்தவரும் வசுதேவகுமாரரும் தேவபாலகரும் ஜகதீசுவரரும் மானிட வடிவங் கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மை பஜிக்கிறேன். 3

கேசவரும் கபிகள் சூழ விளங்குகிறவரும் வாலியை வதைத்தவரும், மாரீசனைச் சங்கரித்தவரும் சுந்தரசொரூபரும் அந்தணர்களைக் காத்தவரும் திதியின் குமாரர்களைக் கொன்றவரும் தனு வம்சத்தில் பிறந்தவர்களை நாசம் செய்தவரும் பால சொரூபரும் கரனைக் கொன்றவரும் ரிஷிகளால் சம்மானிக்கப்பட்டவரும் முனிவர்களால் தியானஞ் செய்யப்பட்டவரும் ஜகதீசுவரரும் மானிட வடிவங் கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 4

சுகத்தை உண்டுபண்ணுகிறவரும் ஜலத்தில் சயனம் செய்பவரும் குசனைப் பாலகனாக உடையவரும் ரதாரூடரும் சரயூவால் வணங்கப்படுகிறவரும் புஷ்பக விமானத்தில் பிரியமுள்ளவரும் பிராம்மணர்களிடம் பிரியமுள்ளவரும், லவனைப் பாலகனாக உடையவரும் ஸ்ரீதரரும் மதுசூதனரும் பரதாக்ரஜரும், கருடத்வஜரும்

𑌶𑍍𑌰𑍀 [illegible]
𑌅𑌹𑌂 𑌭𑌜𑍇 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌨𑌰𑌰𑍂𑌪𑌿𑌣𑌂 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௫

𑌗𑍋𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌗𑍁𑌰𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌂 𑌵𑌦𑌤𑌾𑌂 𑌵𑌰𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍
𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌂 𑌜𑌨𑌤𑍋𑌷𑌦𑌂 𑌸𑍁𑌰𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃𑌸𑍍𑌤𑍁𑌤𑌮𑍍 ।
𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌂 𑌜𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌂 𑌜𑌨𑌰𑌞𑍍𑌜𑌨𑌂 𑌨𑍃𑌪𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍
𑌅𑌹𑌂 𑌭𑌜𑍇 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌨𑌰𑌰𑍂𑌪𑌿𑌣𑌂 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௬

𑌚𑌿𑌦𑍍𑌘𑌨𑌂 𑌚𑌿𑌰𑌜𑍀𑌵𑌿𑌨𑌂 𑌮𑌣𑌿𑌮𑌾𑌲𑌿𑌨𑌂 𑌵𑌰𑌦𑍋𑌨𑍍𑌮𑍁𑌖𑌮𑍍
𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌂 𑌧𑍃𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌂 𑌬𑌲𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌗𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑌂 𑌜𑌨𑌤𑌾𑌰𑌕𑌂 𑌶𑌰𑌪𑌾𑌣𑌿𑌨𑌂 𑌗𑌜𑌗𑌾𑌮𑌿𑌨𑌮𑍍
𑌅𑌹𑌂 𑌭𑌜𑍇 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌨𑌰𑌰𑍂𑌪𑌿𑌣𑌂 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௭

𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌿𑌣𑌂 𑌕𑌮𑌲𑌾𑌨𑌨𑌂 𑌕𑌮𑌲𑌾𑌦𑍃𑌶𑌂 𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍
𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌂 𑌰𑌵𑌿𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑌂 𑌶𑌶𑌿𑌸𑍌𑌮𑍍𑌯𑌕𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।

ஜகதீசுவரரும் மானிட வடிவங்கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மைப் பஜிக்கிறேன். 5

கோக்களிடம் பிரியமுள்ளவரும் குருவுக்குப் புத்திர சம்பத்தளித்தவரும் பேச்சுக்காரர்களுக்குள் சிறந்தவரும் கருணாநிதியும் பக்தர்களைப் பாலிப்பவரும், ஜனங்களுக்குச் சந்தோஷம் கொடுப்பவரும் தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும் வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவரும் ஜனங்களுக்குப் புத்தி முக்தியைக் கொடுப்பவரும் ஜனரஞ்சனரும் நிருபநந்தனரும் ஜகதீசுவரரும் மானிட வடிவங்கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 6

சித்கனரும் சிரஞ்சீவியும் மணிமாலை யணிந்தவரும் வரங்கொடுப்பதில் நோக்கமுள்ளவரும் ஸ்ரீதரரும் தைரியமளிப்பவரும் பலத்தை விருத்தி பண்ணுகிறவரும் நல்ல கதியைக் கொடுப்பவரும் சாந்தியைக் கொடுப்பவரும் ஜனங்களுக்குத் தாரகரும் பாணங்களைத் தரித்தவரும், ஜகதீசுவரரும் மானிட வடிவங்கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 7

சார்ங்க மென்ற வில்லைத் தரித்தவரும் தாமரைபோன்ற முகமுள்ளவரும், லக்ஷ்மியிடம் கண்ணுள்ளவரும் பங்கஜம் போன்ற

பாதமுள்ளவரும், சியாமள வர்ணரும் சூரியன் போன்றவரும்,

ஸத்பதிம் ந்ருபபாலகம் ந்ருபவந்திதம் ந்ருபதிப்ரியம்
த்வாம் பஜே ஜகதீச்வரம் நரரூபிணம் ரகுநந்தனம் ॥ ௮
நிர்குணம் ஸகுணாத்மகம் ந்ருபமண்டனம் மதிவர்த்தனம்
அச்யுதம் புருஷோத்தமம் பரமேஷ்டினம் ஸ்மிதஹாஸினம் ।
ஈச்வரம் ஹனுமந்நதம் கமலாபதிம் ஜனஸாக்ஷிணம்
த்வாம் பஜே ஜகதீச்வரம் நரரூபிணம் ரகுநந்தனம் ॥ ௯
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

சந்திரனுக்கு சௌக்கியம் கொடுத்தவரும் கருணைக் கடலும் சத்பதியும் நிருபபாலகரும் நிருபவந்திதரும் நிருபதிப்பிரியரும் ஜகதீசுவரரும் மானிட வடிவங்கொண்டவரும் ரகுநந்தனருமாகிய உம்மைப் பஜிக்கிறேன். 8

நிர்க்குணரும் சகுண வடிவங்கொண்டவரும் புத்தியை விருத்தி செய்தவரும் அச்சுதரும் புருஷோத்தமரும் பரமேஷ்டியும் மந்தஹாஸமுள்ள முகமுடையவரும் ஈசுவரரும் அநுமானால் நமஸ்காரம் செய்யப்பட்டவரும் லட்சுமீகாந்தரும் ஜனங்களுக்குச் சாக்ஷியும் ஜகதீசுவரரும் மானிடவடிவங்கொண்டவரும் ரகுநந்தருமாகிய உம்மை நான் பஜிக்கிறேன். 9

சூரியோதய காலத்தில் அநேக நாமதேயங்களடங்கிய உத்தமமான இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்யும் மானிடர்கள் தங்கள் உறவினர் மனைவிமக்கள் இவர்களுடன் சீக்கிரத்தில் உம்முடைய சரணாரவிந்த சமீபம் வந்து, உமக்குச் சிசுருஷை செய்பவராவார்கள். 10

இவ்விதம் பார்வதீபதி மஹாவிஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்து, "ஏ லக்ஷ்மீநாத! கருடன் மீது சீக்கிரமாக ஏறும். வைகுண்டாரோஹணத்திற்கு இதுவே காலம்; வான்மீகி கூறிய

பதினோராயிரத்துப் பதினொரு வருஷம் பதினொரு மாதம் பதினொரு நாள் பதினொரு நாழிகை பதினொரு க்ஷணமும் இப்பூமியில் கழிந்தன. இந்தத்தினம் சைத்திர சுக்ல பஞ்சமீ திதியாகிறது; வஸந்த பஞ்சமி எனப்படுவது. இந்தப் புண்ணிய தினத்தில் உங்களிருப்பிடம் செல்லவேண்டும்—என்றார்.

அப்பொழுது மஹாவிஷ்ணு மந்தஹாஸம் செய்துகொண்டு, வான்மீகி முனிவரை ஆலிங்கனம் செய்து மற்ற முனிவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கருட வாஹனத்தின் மீதேறினார். அப்பொழுது தேவ வாத்தியங்கள் சப்தித்தன. நாரதர் முதலியவர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். நான்கு பக்கமும் விமானம் சூழ்ந்திருந்தது.

இப்படியிருக்க விமானக் கூட்டத்துடன் மஹாவிஷ்ணு புறப்பட்டு உலகங்களை மெள்ளப் பார்த்துக்கொண்டு வைகுண்டம் சென்று அங்குத் தன் ஸ்தானத்திலிருந்துகொண்டு பரமசிவன் முதலியவர்களை அவரவர்களிருப்பிடத்திற்கனுப்பினார். ஆதிசேஷமயமான தல்பத்தில் கருடன் பாதங்களில் சேவிக்கப் பரிபூர்ண மனோரத முடையவராய் ஆனந்தத்துடன் இலட்சுமியோடு வாசம் செய்தார். அயோத்தியில் வசிப்பவர் யாவரும் சாந்தானிக பதஞ் சென்றார்கள். பிறகு முனிவர்கள் யாவரும் தங்களிருப்பிடம் சென்றார்கள். அஜமீடன் ராமருடைய உத்தரவுப்படி குசனிடம் சென்று அவனைச் சமாதானப்படுத்தி ஸ்வர்க்காரோஹண வரலாற்றை விவரமாகக் கூறினான்.

பிறகு குசன் அஜமீடனுக்குச் சம்மானம் செய்ய அஜமீடன் அஸ்தினபுரி சென்றான்.

குசன் குமுதவதியை அடைந்து அவளிடம் பிள்ளைகளை உண்டு பண்ணினான்.

இவ்விதம் ஸ்ரீராமர் ஸ்வர்க்காரோஹணம் செய்த வரலாற்றைப் பக்தியுடன் கேட்பவர்கள் ஸ்வர்க்கலோக மடைவார்கள்.

வைகுண்டாரோஹணம் செய்த இவ்வரலாற்றைக் கூறும் இவ்வத்தியாயத்தைத் தினந்தோறும் காலையில் பாராயணம் செய்பவனும் செய்வித்துக் கேட்பவனும் பிறர் கேட்கும்படி செய்பவனும் பூலோகத்தில் புத்திர பௌத்திரர்களை யடைந்து சுகபோகங்களை யநுபவித்து நீண்ட ஆயுளுட னிருப்பார்கள். பிறகு அவர்கள் ராமச்சந்திரருடைய அநுக்கிரகத்தால் வைகுண்டமடைவார்கள்.

வைகுண்டாரோஹண வரலாற்றைக் கூறும்

6-வது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

சிஷ்யனே! நீ கேட்டபடி ராமச்சந்திர மூர்த்தி வைகுண்டாரோஹணம் செய்த மங்களத்தைக் கூறினேன். இன்னும் உனக்குக் கேட்க விருப்பமுள்ளதைக் கேள். நான் கூறுகிறேன்-என்று சொன்னதைக் கேட்ட விஷ்ணுதாஸர் கேட்கிறார்.

விஷ்ணுதாஸர் கேட்கிறார்.

குருவே! சூரிய பரம்பரையைப்பற்றிக் குசன் வரையில் நீங்கள் முன் கூறினீர்கள். குசனுக்குப் பின்பும் சூரிய பரம்பரையைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன் என்றான்.

ஸ்ரீ ராமதாஸர் கூறுகிறார்.

விஷ்ணுதாஸ! முன் விஷ்ணு முதல் அறுபத்தொரு தலைமுறை யரசர்களைக் கூறினேன். இன்னும் அறுபத்தொரு அரசர்களைப் பற்றி விஸ்தாரமாகக் கூறுகிறேன். ஸ்ரீராமருக்குக் குசன் புத்திரன், குசனுக்கு அதிதி, அதிதிக்கு நிஷதன், நிஷதனுக்கு நபன், நபனுக்குப் புண்டரீகன், புண்டரீகனுக்கு க்ஷேமதன்வா, க்ஷேமதன்வாவுக்கு தேவானீகன், தேவானீகனுக்கு அஹீனன், அஹீனனுக்குப் பாரியாத்திரன், பாரியாத்திரனுக்குப் பலன், பலனுக்கு ஸ்தலன், ஸ்தலனுக்கு வஜ்ரநாபன், வஜ்ரநாபனுக்குக் ககணன், ககணனுக்கு விதிருதி, விதிருதிக்கு ஹிரண்யநாபன், ஹிரண்யநாபனுக்குப் புஷ்பன், புஷ்பனுக்கு துருவசந்தி, துருவசந்திக்கு சுதருசனன், சுதருசனனுக்கு அக்னிவர்ணன், அக்னிவர்ணனுக்கு சீக்ரன், சீக்ரனுக்கு மரு, மருவுக்கு பிரசுருதன், பிரசுருதனுக்கு சந்தி, சந்திக்கு மருஷணன், மருஷணனுக்கு நபஸ்வான், நபஸ்வானுக்கு விசுவவாஹன், விசுவவாஹனுக்குப் பிரஸேனஜித், பிரஸேனஜித்துக்குத் தக்ஷகன், தக்ஷகனுக்கு பிருஹத்பலன், பிருஹத்பலனுக்குப் பிருஹத்ரணன், பிருஹத்ரணனுக்கு உருக்கிரியன், உருக்கிரிய

னுக்கு வத்ஸவிருத்தன், வத்ஸவிருத்தனுக்கு வியோமன், வியோம னுக்கு பானு, பானுவுக்கு திவாகன், திவாகனுக்கு ஸஹதேவன், ஸஹதேவனுக்கு வீரன், வீரனுக்கு பிருஹதசுவன், பிருஹதசுவ னுக்கு பானுமான், பானுமானுக்குப் பிரதீகாசன், பிரதீகாசனுக்கு சுப்பிரதீகன், சுப்பிரதீகனுக்கு மருதேவன், மருதேவனுக்கு சுந க்ஷத்திரன், சுநக்ஷத்திரனுக்கு புஷ்கரன், புஷ்கரனுக்கு அந்தரி க்ஷன், அந்தரிக்ஷனுக்கு சுதபச், சுதபசுக்கு மித்திரன், மித்திர னுக்கு மித்திரஜித், மித்திரஜித்துக்கு பிருஹத்ராஜன், பிருஹத் ராஜனுக்கு பர்ஹி, பர்ஹிக்கு கிருதஞ்சயன், கிருதஞ்சயனுக்கு ரணஞ்ஜயன், ரணஞ்ஜயனுக்கு ஸஞ்ஜயன், ஸஞ்ஜயனுக்கு சாக்கி யன், சாக்கியனுக்கு சுத்தோதகன், சுத்தோதனுக்கு லாங்கலன், லாங்கலனுக்குப் பிரஸேனஜித், பிரஸேனஜித்துக்கு க்ஷுத்ரகன், க்ஷுத்ரகனுக்கு ரணகன், ரணகனுக்கு ஸுரதன், ஸுரதனுக்கு தனயன், தனயனுக்கு சுமித்திரன், சுமித்திரனுக்குப் பரமன், இப்படியாக சூரிய வம்சம் முடிவு பெற்றது.

ஹிமோத்பர்வதத்தின் ஸமீபத்திலுள்ளது வதரிகாசிரமம். அதற்குச் சமீபத்தில் கலாபகிராமம் என்று ஓர் ஊர் உளது. அதில் முன் நான் கூறிய மநு என்னும் அரசன் ஒரே மனதோடு வெகு காலம் தவம்புரிந்து வருகிறான். மறுபடியும் கிருதயுகம் வரும்போது, சூரிய வம்சத்தை யுண்டுபண்ணப்போகிறான். இவ் விதம் மனதிற்கு இன்பமளிக்கும் சூரிய வம்சத்தை யுனக்குக் கூறினேன். ஸ்ரீ மஹாவிஷ்ணு முதல் ஸ்ரீராமன் ஜனனகாலம் வரையில் சூரிய வம்சம் அறுபத்தொரு தலைமுறையாகும். ஸ்ரீ ராமருக்குப் பின் அறுபத்தொரு தலைமுறை ஸ்ரீராமனுள்பட நூற்றிருபத்து மூன்று தலைமுறையாம்.

சீடனே! சூரியவம்சத்தின் விவரத்தை நீ கேட்டபடி உனக் குக் கூறினேன். இதைக் கேட்டதினாலேயே புண்யமுண்டாகும்.

விஷ்ணுதாஸர் வினவுகிறார்.

குருவே! இதற்கு முன் ஒரு ரிஷியினிடத்தில் ஸ்ரீராமாயணத் தை விஸ்தாரமாக நான் கேட்டிருக்கிறேன். அவரால் இவ்விஷயம்

விளக்கப்படவில்லை. தவிரவும் அதற்கும் இப்பொழுது தாங்கள் சொல்லியதற்கும் பலவிடங்களில் பேதமிருக்கிறது. ஆகையால் எனக்குச் சந்தேகமுண்டாயிருக்கிறது. அச்சந்தேக நிவர்த்தி செய்யவேண்டும்.

ராமதாஸர் கூறுகிறார்.

கற்பங்கள் தோறும் ஸ்ரீராமருடைய அவதாரங்கள் கோடிக் கணக்காக ஏற்படுகின்றன. அவைகளில் ஸ்ரீராமனே! ஒவ்வொரு அவதாரங்களிலும் பேதத்தைக் காட்டியிருக்கிறார்.

எல்லா அவதாரங்களிலும் ஒரேமாதிரி நடக்கவில்லை. வான்மீகி மஹாரிஷியும் ராமாயணங்களைச் செய்து ஒவ்வொன்றிற்கும் பேதத்தைக் காட்டியிருக்கிறார். மொத்தத்தில் ஸ்ரீ மத்ராமாயணத்தின் எண்ணிக்கை நூறுகோடி கிரந்தங்கள். ஏ புத்திசாலியான சிடனே! இவ்விஷயத்தில் நீ ஸந்தேகப்படவேண்டாம். நான் உனக்குக்கூறியவைகளெல்லாம் உண்மையே யல்லது பொய்யல்ல. இப்பாதகண்டத்திலுள்ள ராமாயணத்தின் ஒரு பாகத்திலிருந்தே முன் வியாசமுனிவர் நாரதம் முதலிய புராணங்களைச் செய்தார். அப்புராணங்களில் நான் கூறியவைகளெல்லாம் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இக்கதைகளின் பேதத்தால் உனக்குச் சந்தேகம் உண்டானதுபோல் மற்ற ஜனங்களுக்கும் சந்தேகம் உண்டானால் அவர்கள் நாரதீயம் முதலிய புராணங்களால் தெரிந்துகொள்ள வேண்டும். பண்டிதர்கள் நான் சொல்லியவைகளில் ஸந்தேகம் கொண்டால், மற்றப் புராணங்களில் பார்த்து அவர்களுடைய சந்தேகங்களைத் தெளிந்துகொள்ளல் வேண்டும். நான் கூறியது ஸத்தியமாம்.

சூரியவம்சத்தின் வர்ணனையைக் கூறும்

7-வது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

விஷ்ணுதாஸர் கேட்கிறார்.

குருவே! ஒவ்வொரு சருக்கத்திலும் கதையின் வரிசையையும் அதைப் பாராயணம் முதலியவற்றைச் செய்வதால் ஏற்படும் பலனையும் காண்டங்களின் எண்ணிக்கையையும் சருக்கங்களின் கணக்கையும் சுலோகங்களின் எண்ணிக்கையையும் உத்தியாபனத்தையும் கிரந்தங்களின் தானத்தையும் அவைகளின் பலனையும் சகுனம் பார்ப்பதையும் அநுஷ்டானத்தின் விதானத்தையும் சிரவணஞ்செய்யக் கால நிர்ணயத்தையும் காண்டங்களின் தனிக் கணக்கையும் சொல்லவேண்டும்.

ஸ்ரீராமதாசர் கூறுகிறார்.

சீடனே! சருக்கங்களின் வரிசையைப் பற்றி முந்திக் கூறுகிறேன். அதைக்கேட்ட மாத்திரத்தில் கிரந்தங்களெல்லாவற்றையும் கேட்ட பலனுண்டாகும். முதல் சருக்கத்தில் கௌஸல்யா சுயம்வரம். இரண்டாவது சருக்கத்தில் ராமர் முதலியவர்களின் அவதாரம். மூன்றாவதில் மிதிலாநகரில் நடந்த ஸீதையின் சுயம்வர வரலாறு. நான்காவதில் முத்கலமுனிவர் கூறிய பிருந்தாசாபம் முதலிய கதைகள். ஐந்தாவதில் தசரதருடையவும் கைகேயியினுடையவும் பூர்வஜன்ம சமாசாரம். ஆறாவதில் ராமர் வனத்திற்குப் பிரயாணமான கதை. ஏழாவதில் விராதன், ஜடாயு, மாரீசன் இவர்களுடைய தவமும் வரலாறும் சொல்லப்படுகின்றன. எட்டாவதில் ராமர் வாலியை வதம் செய்தது. ஒன்பதில் அநுமான் ஸீதையைக் கண்டது; லங்காதஹனம். பத்தாவதில் ஸேது மாகாத்மியம். காசிவிச்வேசுவரர்களின் வரவு. பதினொன்றில் ராகவன் செய்த ராவணுதி வதம். பன்னிரண்டில் ராமசந்திரன் ஸீதையுடன் அயோத்திக்கு வந்து அரசனானது. பதின்மூன்றில் ராமன் அநுமான் இவர்களின் பராக்கிரமவர்ணனை—இவ்விதம் ஸாரகாண்டம் முடிந்திருக்கிறது.

யாத்திராகாண்டம்.

யாத்திரா காண்டம் முதல சருக்கத்தில் வானம் முனிவரி டம் சுலோகம் உண்டானதைக் கூறுகிறது. இரண்டாவதில் ராமா யணவிபாகம் செய்தது. மூன்றாவதில் ஸீதை யாத்திரைசெய்ய ராமரைப் பிரார்த்தித்தது. நான்காவதில் ராகவன் கங்கையை உத் தேசித்து யாத்திரை செய்தது. ஐந்தாவதில் முனியின் வசனப் படி யாத்திரை செய்ய நிச்சயிப்பது. ஆறாவதில் கிழக்குத் தேசங் களிலுள்ள தீர்த்த யாத்திரையை விஸ்தாரமாகக் கூறியது. ஏழா வதில் தென்றிசையிலுள்ள தீர்த்த யாத்திரை விவரம். எட்டாவ தில் மேற்றிசையில் தீர்த்த யாத்திரை செய்தது. ஒன்பதாவதில் வடதிசையில் யாத்திரை செய்த வரலாறு. யாத்திரா காண்டம் இவ்விதம் முடிந்திருக்கிறது.

யாககாண்டம்.

முதற் சருக்கத்தில் வஸிஷ்ட முனிவர் யாக சாமான்களைக் கூறுவது. இரண்டாவதில் ராமசந்திரன் யாகம் செய்ய ஆரம் பம் செய்தது. மூன்றாவதில் அசுவமேதக்குதிரை பூமியை வலம் வந்தது.

நான்காவதில் அகஸ்தியருக்கும் ராமருக்கும் சம்வாதம். ஐந்தாவதில் ராம நாமங்கள் நூற்றெட்டைக் கூறியது.

ஆறாவதில் அசுவமேதத்தில் எல்லோருடைய ஆந்ஹிகத் தைக் கூறியது. ஏழாவதில் துவஜாரோகணம். எட்டாவதில் அவபிருதஸ்னானம். ஒன்பதாவதில் அசுவமேதயாகத்தின் முடிவு—இவ்விதம் யாக காண்டத்தில் முடிந்திருக்கிறது.

விலாஸகாண்டம்.

முதலாவது சருக்கத்தில் ராமஸ்தோத்திரம். இரண்டாவதில் இரதசாலையையும் ஸீதையையும் வர்ணித்தல், மூன்றாவதில் இர கூத்தமன் தேகராமாயணம் கூறியது. நான்காவதில் தினசரியை; ஸீதையின் ஆபரணவரலாறு. ஐந்தாவதில் ஜலயந்திரத்தில் கிரீ டை செய்ததும் ஆந்ஹிகம் செய்தவரலாறும். ஆறாவதில் உப் பரிகையிலிருந்த பிராமண பத்தினிக்கு அலங்காரம் செய்த வர

லாறு. ஏழாவதில் மூர்த்திகளைத்தானம் செய்ததும் தேவஸ்திரிகளுக்கு வரம்கொடுத்ததும். எட்டாவதில் குணவதிக்கும் பிள்ளைகளுக்கும் வரம் கொடுத்தது. ஒன்பதாவதில் குரு க்ஷேத்திர யாத்திரையில் ஜானகிக்கு ஜயம் கிடைத்தது. இவ்விதம் விலாஸ காண்டம் முடிந்திருக்கிறது.

ஜன்மகாண்டம்.

முதலாவது சருக்கத்தில் கர்ப்பிணியாகிய ஸீதை தோட்டத்தில் அன்புடன் கிரீடை செய்தது. இரண்டாவதில் அநேகவிளையாட்டுகளும் ஸீமந்தோந்யன மஹோற்சவமும். மூன்றாவதில்வண்ணான் சொல்லைக்கேட்டு ஸீதையைத்தியாகம் செய்தது. நான்காவதில் குசலவர்களின் உற்பத்தி. ஐந்தாவதில் ராமரக்ஷை. ஆறாவதில் தாமரைப் பூவைக்கொண்டுவரும் பொழுதும் லவன் ஜயம் பெற்றது. ஏழாவதில் ராமருக்கும் புத்திரர்களாகிய குசலவர்களுக்கும் யுத்தம் நடந்தவரலாறு. எட்டாவதில் ஸீதை முதலியவர்களுக்கு மண்டபத்தில் கிடைத்தபெருமை. ஒன்பதாவதில் பாலர்களுக்கு உபனயனம் முதலிய உற்சவங்கள். இவ்விதம் ஜன்மகாண்டம் முடிந்திருக்கிறது.

விவாககாண்டம்.

முதலாவது சருக்கத்தில் சுயம்வரத்திற்கு ராமரிடம் செல்லுதல். இரண்டாவதில் சம்பிகையின் சுயம்வரம். மூன்றாவதில் சுமதியின் சுய்ம்வரம். நான்காவதில் குசலவர்களின் விவாஹம். ஐந்தாவதில் கந்தருவகன்னிகளையும் நாக கன்னிகளையும் மோசனம் செய்தது. ஆறாவதில் அவர்களுடைய விவாஹ நிச்சயம். ஏழாவதில் பன்னிரண்டு விவாஹங்களைக் கூறியது. எட்டாவது யூபகேதுவின் பராக்ரமத்தை வர்ணித்தல். ஒன்பதாவதில் மதனசுந்தரியின் விவாஹ வரலாறு.

ராஜ்ய காண்டம்.

முதலாவது சருக்கத்தில் ராமஸஹஸ்ரநாமம். இரண்டாவதில் தேவவிருக்ஷங்களிரண்டையும் பூமியில்வரவழைத்தது. மூன்றாவதில் ராமோபாஸகனுக்கும் கிருஷ்ணோபாஸகனுக்கும் சம்வா

தம். நான்காவதில் நூறு ஸ்திரீகளுக்கும் நித்திரைக்கும் வரமளித்தல், ஐந்தாவதில் ஸீதையின் பிரிவால் உண்டாகும் உபத்திரவம், ஆறாவதில்மூலகாசுரவதமும்,ராஜீயக் கணக்கும் கூறியிருக்கின்றது. ஏழாவதில் பரதகண்டத்தை ராமர் ஜயித்தது. எட்டாவதில் ராமச்சந்திரன் ஜம்பூத்வீபத்தை ஜயித்தது. ஒன்பதில் ராகவன் ஆறுதீவுகளையும் ஜயித்தது. பத்தாவதில் சன்னியாசி சூத்திரர்கள் கழுகுகள் இவர்களுக்குச் செய்த சிக்ஷை. பதினொன்றாவதில் ராமர் நான்கு ஸ்திரீகளுக்கு வரம் கொடுத்தது. பன்னிரண்டாவதில் பதினாயிரம்ஸ்திரீகளுக்கு வரம் கொடுத்தது. பதின்மூன்றாவதில் ஹாஸ்யம் கூடாதென்று ஆஞ்ஞைசெய்தது. பதினான்காவதில் வான்மீகி முனிவர் தம் ஜன்மத்தின் வரலாற்றைக் கூறியது. பதினைந்தாவதில் விஸ்தாரமாக ராம ராஜ்யத்தைப்பற்றி வர்ணித்தல். பதினாறாவதில் ஸ்ரீராகவன் ராஜநீதி வர்ணித்தல். பதினேழாவதில் குசன் கன்னிகையயின் சுயம்வரம். பதினெட்டாவதில் அந்தணர்களுக்கு ராமநாதபுரத்தைத் தானமாகக் கொடுத்தது. பத்தொன்பதில் ராமச்சந்திரன் தினசரியையின் வர்ணனை. இருபதில் ராஜாக்களுக்கு அவதாரங்களில் இந்த அவதாரம் சிறந்தது என்பதைக் கூறியது. இருபத்தொன்றில் ராமர் தாசிக்கு இரண்டு வரம் கொடுத்தது.

இருபத்திரண்டில் ஸீதை துளசீதளத்தைச் சேர்ந்தது. இருபத்துமூன்றில் ஆனந்தராமாயணத்தின் பலசுருதி. இருபத்துநான்கில் யமனுடைய சிக்ஷை பூமியில் தருமசிக்ஷை. இவ்விதம் ராஜ்யகாண்டம் முடிந்திருக்கும்.

மனோகரகாண்டம்.

முதலாவது சருக்கத்தில் இலகு ராமாயணம். இரண்டாவதில் நகரிலுள்ளோருக்கும் தாய்மார்களுக்கும் உபதேசம் செய்தது. மூன்றாவதில் ராமபூஜை உபாஸனை இவைகளின் விஸ்தாரமிருக்கிறது. நான்காவதில் ராமஸ்தோத்திரத்தின் விஸ்தாரம். ஐந்தாவதில் ராமலிங்கங்களின் பேதங்கள். ஆறாவதில் நவமீ விரதத்தின் விரிவும் அதன்கதையும். ஏழாவதில் ராமநாம லக்ஷத்தின் உத்தியாபனம். எட்டாவதில் வேதம் முதலிய எல்லாவற்றின்

பலனைக் கூறியது. ஒன்பதில் இரண்டரைமாதம் வரையில் செய்யும் பூஜையின் விதி. பத்தாவதில் சைத்திரமாஸத்தின் மகிமை; பதினொன்றில் சைத்திரஸ்நானம் செய்பவர்களின் நல்லகதியைக் கூறியது. பன்னிரண்டில் ஸ்திரீகளின் கூட்டத்திற்கு ராமன் அத்வைதம் காட்டியது; பதின்மூன்றில் ஹநுமான் ராமர் இவர்களின் இரண்டு கவசங்களும் கூறப்பட்டிருக்கின்றன. பதினான்கில்ஸீதையின் கவசம் முதலியவைகள். பதினைந்தில் லக்ஷ்மணர் முதலியவர்களின் கவசங்கள். பதினாறில் ஹநுமானுடைய பதாகைவிரதம். பதினேழில் ஸாரராமாயணம். பதினெட்டில் ஹநுமான் சரஸேதுவை உடைத்தது. இவ்விதம் மனோகரகாண்டம் முடிந்திருக்கிறது.

பூர்ணகாண்டம்.

முதலாவது சருக்கத்தில் வான்மீகிமுனிவர் ஸோமவம்சத்தரசர்களின் வரலாற்றைக் கூறியது. இரண்டாவதில் ராமச்சந்திரன் ஹஸ்தினபுரிக்குப் பிரயாணமானது மூன்றாவதில் சூரியவம்சத்தவர்கள் ஸோமவம்சத்தார்களின் யுத்த சமாசாரம். நான்காவதில் இருவம்சத்தார்களுக்கும் சிநேகமான வரலாறு. ஐந்தாவதில் ஸீதாபதி குசன் முதலியவர்களை அவரவர்களிருப்பிடத்திற்கனுப்பியது. ஆறாவதில் கங்கையில் வைகுண்டாரோஹணம் செய்தது. ஏழாவதில் சூரியவம்சத்தரசர்களைப் பற்றிய வர்ணனை. எட்டாவதில் சருக்கங்களின் வரிசையைக் கூறுதல். ஒன்பதில் கிரந்தங்களின் கணக்கு, சிரவணம் செய்யும் பலன்—ஆக ஒன்பது சருக்கத்துடன் இந்தப் பூர்ணகாண்டம் முடிவாகிறது. சிடனே! இந்த அநுக்கிரமணியைக் கூறினேன். இதைக் கேட்டமாத்திரத்தில் ராமாயணத்தைச் சிரவணம் செய்த பலன் ஏற்படும். ராமாயண புஸ்தகத்தை எப்போதும் பூஜைசெய்ய வேண்டும். பூஜிப்பதில் உள்ள விசேஷங்களையும் கூறுகிறேன் கேள்—நவாயதனரீதிக்கு பிரபு ராமருடைய ஸ்தானத்தில் ஸாரகாண்டத்தையும் லக்ஷ்மணன் ஸ்தானத்தில் இரண்டாவது காண்டத்தையும் இவ்விதம் கிரமப்படி பாக்கியுள்ளவைகளையும் அமைக்க வேண்டும். பிறகு அவைகளைப் பூஜிக்க வேண்டும்.

அல்லது ராஜ்யகாண்டத்தின் பூர்வார்த்தத்தை இராம லக்ஷ்மணருடைய ஸ்தானத்திலும் ஸாரகாண்டத்தையும் பாக்கி யுள்ளவைகளைக் கிரமப்படி ஸ்தாபித்துப் பூஜிக்கவேண்டும். இவ் விதம் பூஜை செய்யின் அளவில்லாத புண்ணிய பலனுண்டாகும். நினைத்த காரியம் அநுகூலமாகும். பூவுலகில் சகல சம்பத்துடன் வாழ்ந்து மகாதவம் செய்ததா லடையக் கூடிய முத்தியின்பமும் கைகூடும்.

அநுக்கிரமணிகையைக் கூறும்

எட்டாவது சருக்கம்

முற்றிற்று.

ஒன்பதாவது சருக்கம்.

ராமதாஸர் கூறுகிறார்.

ஆனந்த ராமாயணத்தில் ஸாரகாண்டம் யாத்திராகாண்டம், யாக காண்டம் விலாஸ காண்டம் ஜன்ம காண்டம் விவாஹ காண்டம் ராஜ்ய காண்டம் மனோஹர காண்டம் பூர்ணகாண்டம் என ஒன்பது காண்டங்கள் அடங்கியிருக்கின்றன. ஸாரகாண்டத்தில் பதின்மூன்று சருக்கங்களும் யாத்திரா காண்டத்தில் ஒன்பது சருக்கங்களும் யாக காண்டத்தில் ஒன்பது சருக்கங்களும் விலாஸ காண்டத்தில் ஒன்பது சருக்கங்களும் ஜன்ம காண்டத்தில் ஒன்பது சருக்கங்களும் விவாஹ காண்டத்தில் ஒன்பது சருக்கங்களும் ராஜ்ய காண்டத்தில் இருபத்துநான்கு சருக்கங்களும் மனோஹர காண்டத்தில் பதினெட்டுச் சருக்கங்களும் பூர்ண காண்டத்தில் ஒன்பது சருக்கங்களுமாக நூற்றொன்பது சருக்கங்களடங்கியிருக்கின்றன.

ஸார காண்டத்தில் 2500 சுலோகங்களும் யாத்திரா காண்டத்தில் 735 சுலோகங்களும் யாக காண்டத்தில் 625 சுலோகங்களும் விலாஸ காண்டத்தில் 674 சுலோகங்களும் ஜன்ம காண்டத்தில் 802 சுலோகங்களும் விவாஹ காண்டத்தில் 537 சுலோகங்களும் ராஜ்ய காண்டத்தில் 2622 சுலோகங்களும் மனோஹர காண்டத்தில் 3100 சுலோகங்களும் பூர்ண காண்டத்தில் 511 சுலோகங்களுமாக மொத்தம் சுலோகங்கள் 12252 அடங்கியிருக்கின்றன.

சிடனே! சிரவணம் செய்தவுடன் பாபங்களைப் போக்கும் ஸ்ரீராமனுடைய சந்தோஷகரமான சரித்திரத்தை நீ கேட்டபடி கூறினேன்.

இந்தப் பூர்ணகாண்டம் சிரவணம் செய்தவுடன் புண்ணியத்தை விருத்திசெய்யக் கூடியது.

ஸார காண்டம் சிரவணம் செய்வதால் ஸம்ஸாரபந்தத்தை நீக்கும். யாத்திரா காண்டத்தைச் சிரவணம் செய்வதால் யாத்திரைசெய்த பலன் ஏற்படும். யாக காண்டத்தைச் சிரவணம் செய்வதால் யாகம் செய்த பலன் உண்டாகும். விலாஸ காண்டத்தைச் சிரவணம் செய்தால் அப்ஸர ஸ்திரீகளுடன் ஸந்தோஷிப்பான். ஜன்ம காண்டத்தைச் சிரவணம் செய்தால் புத்திர பௌத்திர சம்ருத்தியை அடைவான். விவாஹ காண்டத்தைச் சிரவணம் செய்தால் அழகுள்ள ஸ்திரீ கிடைப்பாள். ராஜ்யகாண்டத்தைச் சிரவணம் செய்தால் மானிடர்களுக்கு ராஜ்யம் கிடைக்கும். மனோஹர காண்டத்தைச் சிரவணம் செய்தால் மனக்கோரிக்கை யாவற்றையு மடைவான். பூர்ணகாண்டத்தைச் சிரவணம் செய்தால் விஷ்ணுவின் ஸ்தானம் அடைவான்.

இவ்விதம் இந்த ஆனந்த ராமாயணம் முழுவதையும் விஸ்தாரமாகச் சிரவணம் செய்தால் சச்சிதானந்த ஸ்வரூபத்தில் லயமடைவான். மானிடர்கள் ராமாயணத்தைச் சிரவணம் செய்து உத்தியாபனம் செய்யவேண்டும். நல்ல புத்தியுள்ள மானிடன் ராமாயணத்தைச் சிரவணம் செய்தவுடன் ஸ்வர்ணமயமும் நான்கு குதிரைகளுடன் கூடியதும் பட்டுத் துவஜம் கட்டியதும் யந்திரங்களுடன் கூடியதும் மணிகள் கட்டியதுமான இரதத்தையும், பாலுள்ள நல்ல பசுவையும் தானம் செய்யவேண்டும். பிறகு நூற்றெட்டுப் பிராமணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். இவ்விதஞ் செய்தால் மஹாகார்யம் பலனைக் கொடுக்குமென்பது நிச்சயம். இவ்விஷயத்தில் விசாரிக்கவேண்டாம். எந்தக் கிரந்தத்தில் ராமருடைய ஸ்வரூபமிருக்கிறதோ அந்தக் கிரந்தம் ராமாயணமென்று சொல்லப்படும். காலையில் எழுந்து ஆனந்த ராமாயணத்தைப் பாராயணம் செய்கிற மானுடன் ஸ்வர்க்கத்திலும் கிடைக்காத சுகங்களை அடைவான். சைத்திர மாஸம் சுக்லபக்ஷம் நவமியில் ராமர் அவதாரம் செய்த காலத்தில் நூறு உளுந்து எடை ஸ்வர்ணத்தால் ஹநுமானைச் செய்து அல்லது இருபத்தொரு உளுந்து எடை ஸ்வர்ணத்தாலாவது அல்லது தன் சக்திக்குத் தக்கபடியாவது செய்து, இந்த ஆனந்த ராமாயணத்தை இதரர்களைக்கொண்டு

கிரயம் கொடுத்து எழுதியோ அல்லது தன் கையால் எழுதியோ புஸ்தகமாக்கி அதைக் கோலம் முதலியவற்றால் அலங்கரித்த இடத்தில் வைத்துப் பூஜைசெய்து, முன்செய்த சுவர்ண ஹநுமான் தோளில் வைத்து மத்தியானத்தில் அநேக சாஸ்திரங்களில் அறிவுள்ள அந்தணனையும் பூஜித்து ஹநுமானுள்பட தக்ஷிணை வைத்துத் தானம் செய்யவேண்டும். இவ்விதம் தானம் செய்பவனுடையும் புண்ணியத்தைக் கூறுகிறேன். கேள்—குருக்ஷேத்திரத்தில் சூரிய கிரஹண புண்ணிய காலத்தில் கோடிபாரம்ஸ்வர்ணத்தைத் தானம்செய்த பலனை அடைவான். இந்த ஆனந்த ராமாயணத்தில் எவ்வளவு அக்ஷரங்களிருக்கின்றனவோ அவ்வளவு ஆயிரம் யுகம் வரையில் வைகுண்டத்திலிருந்து சுகமுறுவான். பிறகு வேதத்தின் கரைகண்ட பிராம்மண ஜன்ம மடைவான்.

இந்த ஆனந்த ராமாயணம் இரம்மியமானது; பரிசுத்தமளிக்கக் கூடியது; ஆனந்தமளிக்கக் கூடியது. மனோஹரமானது ஆனந்தமென்று பெயருள்ளது; புண்ணியத்தை விருத்தி செய்யக்கூடியது. இதைச் சிரவணம் செய்யும் மானிட சிரேஷ்டர்கள் புத்திர பௌத்திரர்களுடனும சுஹிருத்துக்களுடனும் வியோகத்தை அடைய மாட்டார்கள்.

இதைக் கேட்பவர்களுக்கு ஸ்திரீ வியோகம் எப்போதும் ஏற்படாது. ஸ்திரீகள் இதைச் சிரவணம் செய்தால் தங்கள் கணவனைவிட்டுப் பிரியவே மாட்டார்கள்; லக்ஷ்மி தேவியைப்போல் விளங்குவார்கள். கிராமம் தேசாந்தரம் புண்ணிய தீர்த்தம் இவைகளுக்குச் சென்று வெகுநாள் வாராமலிருப்பவர்கள் சீக்கிரத்தில் வரவேண்டுமென்றால், இந்த ஆனந்தராமாயணத்தை எப்போதும் பாராயணம் செய்ய வேண்டும். இனிச் செய்யப்போகும் ஒரு செய்கை சீக்கிரத்தில் முடிய வேண்டுமானால் இந்த ஆனந்த ராமாயணத்தைப் பாராயணம் செய்யின் கைகூடும். முதல் நாளில் முதற் காண்டத்தையும் இரண்டாவது தினத்தில் முதல் இரண்டு காண்டங்களையுமாக உயர்த்திக்கொண்டேபோய் ஒன்பதாவது நாளில் ஒன்பது காண்டங்களையும் பாராயணம் செய்யவேண்டும். பத்தா

வது தினத்தில் எட்டுக் காண்டங்களையும் பதினோராவது தினத்தில் ஏழுகாண்டங்களையும் ஒவ்வொன்று குறைத்துக் கிரமப்படி பாராயணம் செய்யவேண்டும். இந்த அநுஷ்டானம் பதினேழு நாளில் முடிவுபெறக் கூடியது. மிகவும் சிறந்தது. அல்லது கிரமமாக முதல்நாளில் முதல் சருக்கத்தையும் பின் இரண்டாவது சருக்கத்தையும் ஒன்பதாவது நாளில் ஒன்பதாவது சருக்கத்தையும் பிறகு பத்தாவது நாளில் எட்டாவது சருக்கத்தையும் பதினோராவது நாளில் ஏழாவது சருக்கத்தையும் இவ்விதம் குறைத்துக்கொண்டே வந்து பதினேழு நாளில் பாராயணம் செய்வது மங்களத்தைக் கொடுக்கும். அல்லது ஒவ்வொரு காண்டத்திலும் தினம் ஒன்றுக்கு ஒரு சருக்கமாகப் பாராயணம் செய்து காண்ட முடிந்தவுடன் கடைசியிலிருந்து ஒவ்வொரு சருக்கம் குறைத்துப் பாராயணம் செய்யலாம். இப்படிப் பாராயணம் செய்யின் இருநூற்று ஒன்பது நாளில் முடிவாகும். அல்லது முதல்நாளில் முதல் சருக்கம் இரண்டாவது நாளில் இரண்டாவது சருக்கம் இப்படி விருத்திசெய்துகொண்டே பாராயணம் செய்துவந்தால் மொத்தம் ஏழுமாதம் ஏழுநாளில் அதாவது (218) நாளில் முடிவாகும். இவ்விதம் பாராயணம் செய்வதால், காரியங்கள் யாவும் சாதகமாகும். அல்லது முதல்நாளில் முதல் சருக்கம் இரண்டாவது நாளில் இரண்டாவது சருக்கம்: மூன்றாவதுநாளில் மூன்றாவது சருக்கம் இப்படிக் கிரமமாக நூற்றொன்பதாவது நாளில் கடைசிச் சருக்கத்தையும் நூற்றுப்பத்தாவது தினத்தில் நூற்றெட்டாவது சருக்கத்தையும் பாராயணம் செய்யவேண்டும். இந்தப் பாராயணம் ஏழுமாதம் ஏழுநாளில் ஸாதாரணமாகச் செய்யக்கூடியது. சீடனே இவ்விதம் ஐந்துவித பேதம் காட்டினேன்.

பாராயணம்சமாப்தியானவுடன் விதிப்படி ஹோமம் செய்தல் வேண்டும். ஒவ்வொரு சுலோகத்தையும் சொல்லி அதன் கடைசியில் (ஸ்வாஹா) என்று சொல்லி பாயஸத்தாலாவது பழங்களாலாவது ஒன்பதுவித அன்னங்களாலாவது பிராமணர்களைக் கொண்டு ஹோமம் செய்விக்க வேண்டும். எவ்வளவு தினம் பாராயணம் செய்கிறேனோ அவ்வளவு கணக்குள்ள அந்தணர்களுக்கு

போஜனம் செய்விக்க வேண்டும். மானிடர்கள் சுபமான இந்த ஆனந்தராமாயணத்தைக் காலையிலெழுந்து பாராயணம்செய்வார்களாயின் சுகமடைவார்கள். துவாதசியில் இதை அவசியம் பாராயணஞ் செய்யவேண்டும். ஒன்பதுநாளும் முழுவதையும் பாராயணஞ் செய்யலாம். காண்டத்தையாவது அல்லது சருக்கத்தையாவது சுலோகத்தையாவது பாராயணஞ் செய்யாத மானிடர்களின் ஜன்மம் வீணாகும். புத்திரனில்லாதவன் இரவில் தன் ஸ்திரீயுடன் சயன ஸ்தலத்திலிருந்து சிரவணஞ் செய்தால், புத்திர சம்பத்தை அடைவான்.

ஒன்பது ராசிகளிலும் தன் காரியத்தை நினைத்துக்கொண்டு தானியங்களை வைத்து நான்கு பாக்குகளை வைத்து முதலாவது காண்டம் இரண்டாவது சருக்கம் மூன்றாவது பத்து சுலோகம் நான்காவது சுலோகம் இவ்விதம் கீழ்ராசி முதல் கணக்குத் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவிடங்களிலும் கடைசியிலுள்ள சுலோகத்தால் விபரீத பலனுண்டாகும். இவ்விதம் சுபசகுனத்தையும் அசுபசகுனத்தையுந் தெரிந்துகொள்ள வேண்டும். ஏ சிடனே! நீ கேட்ட விஷயம் யாவற்றையுங் கூறினேன். ஏ விஷ்ணுதாஸ! நூற்றொன்பது சருக்கங்களும் ஒன்பது காண்டங்களுமடங்கிய பாபஹாரமும் மனோஹாரமுமான இந்த ஆனந்தராமாயணத்தை உனக்குக் கூறினேன். ஒவ்வொரு தினத்திலுங் கணக்கற்ற பாபத்தைச் செய்பவனும் பக்தியுடன் ஒரு சுலோகத்தையாவது பாராயணஞ்செய்தால்,பாபங்களிலிருந்து விடுபட்டு மற்றவர்களடையக் கூடாத ஸ்ரீராமருடைய ஸாலோக்கிய மடைவான். உத்தமமும் ஜனங்களின் பாபங்களைப் போக்கக் கூடியதும் அனேக சரித்திரங்களாலும் நாநாவித வேடிக்கையாலும் நிறைந்ததுமானஇந்தக்கிரந்தம் மகிமையுள்ளது. கவீசுவரராகிய வான்மீகி முனிவரே தன்னியர். நூறுகோடி கிரந்தமுள்ள ராமசரித்திரத்தை விஸ்தாரமாக அவரன்றோ தெரிவித்தார்? அதிலிருந்து ஸாரமான பாகத்தை எடுத்து உனக்குரைத்தேன். ஜனகமகாராஜன் குமாரியின் கிரீடா விசேஷங்களைக் கூறும் இந்த ஆனந்தராமாயணத்தைச் சிரவணம் செய்பவர்களும் பிறருக்குப் படிப்பிப்பவர்களும் பாராய

ணஞ் செய்பவர்களும் பத்திமான்களுக்குள் உயர்ந்த புத்திரர்களை யும் ஸ்திரீகளையும் பௌத்திரர்களையும் தன தான்னியங்களையும் அடைந்து கடைசியில் ஸ்ரீ ராமருடைய பதமடைவார்கள்.

இந்த ஆனந்தராமாயணத்தை எப்போதும் பக்தியுடன் பாராயண சிரவணம் எழுதுதல் இவைகளைச் செய்பவனுக்கு ஸீதாஸமேதரான ஸ்ரீராமசந்திரன் சமீபத்திலிருந்து அநுக்கிர கஞ்செய்துகொண்டு ஸ்ரீயை விருத்தி செய்வார்.

இந்த ஆனந்தராமாயணமே கங்கை. இதுவே பாபத்தைப் போக்கக்கூடியது. இந்த ஆனந்தராமாயணமே காமதேநு. ஜனங்களுக்கு மனோரதங்களை நிறைவேற்றக் கூடியது.

ஜனங்களுக்கு மனோஹரமானது பிர்ம்மன் முதலிய தேவர் களாலும் கொண்டாடத்தகுந்தது. ஆதிகாவியமான இந்தக் கிரந் தத்தைச் சிரத்தையுடன் பாராயணம் சிரவணம் செய்பவன் பரி சுத்தமான சரீரத்துடன் விஷ்ணுவுக்கு இருப்பிடமாகிய வை குண்டமடைவன்.

சிடனே! நூற்றொன்பது சருக்கங்களால் ராமரைப் பற் றிக்கீர்த்தனம் செய்த இந்த மாலையை நீ தரித்துக்கொண்டு சுக மாக வாழ்ந்திருப்பாயாக.

சிவன் கூறுகிறார்.

ஏ பார்வதி! விஷ்ணுதாஸன் தன் குரு முகமாக இக்கதை யைச் சிரவணஞ் செய்து குருவைப் பூஜித்துப் பன்முறை நமஸ் கரித்தான்.

ராமதாஸனும் தன் சிஷ்யனுக்கு இந்தச் சரித்திரத்தைச் சொன்ன பின்பு ஸந்தியாவந்தனம் செய்யக் கோதாவரி செல்லப் போகிறார். சிரவணம் செய்த மாத்திரத்தில் புண்ணியத்தை விரு த்தி செய்யும் இந்த ஆனந்தராமாயண சரித்திரத்தை நானும் உனக்குக்கூறினேன். ராம கீர்த்தனமாகிய மாலைக்கு நடுநாயக மாகிய மேரு இருக்கும் ஸ்தானத்தில் இந்தச் சருக்கத்தைச் சொன்னேன். இதைச்சிரவணம் செய்தவுடன் மங்களங்களைக் கொடுக்கும்.

ஸ்ரீ பார்வதீ தேவி வினவுகிறாள்.

லோக நாத! பரமசிவ! எப்போது வான்மீகி முனிவர் ராமாயணம் செய்தார். அச்சமயம் ராமதஸாஸர் விஷ்ணு தாஸர் இவ்விருவரும் எங்கிருந்தார்கள்? அவ்விருவருடைய சம்வாதத்தைத் தாங்கள் தெரிவித்தீர்களோ! இது விஷயத்தில் சந்தேகம் எனக்குண்டாகிறது.

பரமசிவன் கூறுகிறார்.

ஏ பர்வத ராஜ புத்திரியே! வான்மீகி முனிவர் முக்காலங்களையும் அறியவல்ல தமது ஞானக்கண்ணால் இந்தக் கதையில் இனி நடக்கப்போகிற ராமதாஸ விஷ்ணுதாஸ ஸம்வாதத்தையும் வர்ணித்தார். ராமர் அவதாரஞ் செய்வதற்கு முந்தியே ராமாயணத்தை வர்ணித்ததுபோல் வர்ணித்தார். இது விஷயத்தில் நீ சிறிதும் சந்தேக மடையவேண்டாம். இச்சரித்திரம் ராம தாஸராலும் ஸ்ரீ ராகவராலும் வர்ணிக்கப்பட்டது.

ஸ்ரீ ராமசந்திரராலும் வான்மீகி முனிவராலும் ராம தாஸராலும் உபந்யாஸம் செய்யப்பட்ட இந்த ஆனந்தராமாயணம் போக மோக்ஷங்களைக் கொடுக்கும். இந்த ஆனந்தராமாணத்தை புத்திரோத்பத்தி காலத்திலும் விருதபந்த காலத்திலும் பருவ காலத்திலும் சிராத்த காலத்திலும் மங்கள காரியம் நடக்கும் சமயத்திலும் பாராயணம் செய்யவேண்டும்.

காராகிருகத்திலிருப்பவன் விடுதலையை யடையவேண்டுமானாலும் உத்பாதங்கள் நீங்க வேண்டுமானாலும் பிரபுவின் தயை வேண்டுமானாலும் இந்தச் சரித்திரத்தை அன்புடன் சிரவணம் செய்யினும் சிரவணம் செய்யும்படி செய்விப்பினும் தன் விருப்பங்களை அடைந்து வைகுண்ட லோகமடைவன்.

தீர்த்தங்கள் விஷ்ணுவின் ஸ்தலங்கள் க்ஷேத்திரங்கள், தானங்கள், புண்ணியத்தைக் கொடுக்கும் புராணங்கள் மற்றெவையும் இந்த ஆனந்தராமாயணத்திற் கீடாகா. ஏ பார்வதி! உத்தமமான இந்த ஆனந்தராமாணத்தை விஸ்தாரமாக உனக்குக் கூறினேன்.

இது மனோஹரமானது; பாபத்தைப் போக்கக்கூடியது. சரித்திரத்தை இடைவிடாமல் நீ தியானம் செய்துகொண்டிருந்தால், ராமசந்திரரிடம் நன்மதிப்புண்டாகும்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧

𑌵𑌾𑌮𑍇 𑌭𑍂𑌮𑌿𑌸𑍁𑌤𑌾 𑌪𑍁𑌰𑌶𑍍𑌚 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑍁𑌤𑌃
𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌭𑌰𑌤𑌶𑍍𑌚 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑌳𑌯𑍋𑌃
𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑍋𑌣𑍇𑌷𑍁 𑌚 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌶𑍍𑌚 𑌯𑍁𑌵𑌰𑌾𑌟𑍍
𑌤𑌾𑌰𑌾𑌸𑍁𑌤𑍋 𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌾𑌨𑍍
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑍀𑌲𑌸𑌰𑍋𑌜𑌕𑍋𑌮𑌲𑌰𑍁𑌚𑌿𑌂
𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇 𑌶𑍍𑌯𑌾𑌮𑌳𑌮𑍍 ॥ ௨

ராமர் முதலாவது தசவதனனை வதம் செய்து பிராம்மணர்களுடைய நல்ல மதிப்புடையவராகையால் யாத்திரைகளையும் யாகங்களையும் செய்து சுகங்களை யநுபவித்தார், பூமியில் பிரவேசித்த ஸீதையைக் கிரகித்துக்கொண்டார். பிறகு அனேக மருமகள்களை யடைந்து பூமியிலுள்ள அரசர்களை ஜயித்து எல்லோருக்கும் உபதேசம் செய்து ஹஸ்தினபுரிக்கு அருகாமையில் தன்னைச் சேர்ந்தவர்களுடன் வைகுண்டமடைந்தார்.

இடது பக்கத்தில் ஸீதை முன்னால் ஹநுமான் பின்புறத்தில் லக்ஷ்மணர் சத்ருக்னன் பரதன் இருவரும் இருபக்கங்களிலும் சுக்ரீவன் விபீஷணன் யுவராஜனாகிய அங்கதன் ஜாம்பவான் இவர்

கள் வாயு முதலிய மூலைகளிலும் இருக்க மத்தியில் வீற்றிருக்கும் நீலவர்ணமுள்ள ராமரை போன்ற காந்தியுள்ள சியாமள வர்ணராகிய ராமரைப் பஜிக்கிறேன்.

ஆனந்தராமாயணத்திற்கு ஹாரம் போன்ற இந்தப் பூர்ண காண்டத்தைப் பாராயணம் சிரவணம் செய்பவர்கள் உத்தமமான ஸ்தானமடைந்து பூர்ண மனோரதத்தையு மடைவார்கள். இந்த ஆனந்தராமாயணம் உத்தமமானது. ஜபம் செய்யத்தக்கது. பவித்ரமானது. கேட்கத்தக்கது.

மங்களம் கொடுக்கக்கூடியது. இந்த ஆனந்தராமாயணத்தை நான் எப்போதும் ஸ்மரணம் செய்கிறேன். அன்புடன் நமஸ்காரம் செய்கிறேன்.

கிரந்தங்களின் பல சுருதிகைக்கூறும்

9-வது சருக்கம்

முற்றிற்று.

பூர்ணகாண்டம்

முற்றிற்று.

சதகோடி ராமாயணத்தில் ஒன்றும் வான்மீகி முனிவர்
செய்ததும் ஆதிகாவியமானதும் உமாமகேச்வர
சம்வாதமும் அவ்விதமே ராமதாஸ
விஷ்ணுதாஸ சம்வாதமுமாகிய
ஆனந்தராமாயணம்

முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE.
64, R. H. ROAD. MADRAS - 4